D
V2ll,51 N70
31N71.29;2
61482

# Tamil Nadu Legislative Assembly Debates

3897

Seventh Session of the Fourth Legislative Assembly under the Constitution of India.

(*16th to 18th and 20th March* 1970.)

(Volume XXVIII—Nos. 1 to 4.)

*TABLE OF CONTENTS.*

***Monday, 16th March*** **1970.**


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... ... | |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... ... | |
| 1. Questions and Answers ... ... ... ... | 1–24 |
| 2. Statements by Ministers— | |
| (i) Constitution of a Special Welfare Fund out of the income from the Raffles Scheme ... | 24 |
| (ii) Acton taken on Wallajah Panchayat Union President ... ... ... ... ... | 25 |
| (iii) Hunger strike by Livestock Assistants before the Secretariat premises ... ... ... | 99 |
| 3. Presentation of Report— | |
| Estimates Committee Report on Stationery and Printing Deparment ... ... ... | 25 |
| 4. Voting on Demands for Grants for the year 1970–71—*cont.* | |
| Demand No. 25—Welfare of Scheduled Tribes Castes and Other Backward Classes ... ... | 26–98 |
| 5. Papers laid on the Table ... ... ... | 100 |

PAGES

*Tuesday, 17th March 1970.*

1. Questions and Answers ... ... ... ... 125-148
2. Personal Explanation—
   By the Leader of the Opposition Thiru P. G. Karuthiruman *re.* allegation against Minister for Co-operation ... ... ... ... 149
3. Speakers Ruling on the allegation made by the Leader of the Opposition against Minister for Co-operaton ... ... ... ... ... 149-152
4. Calling Attention—
   (i) Attack on a group of farmers of Madurai at Malleswaram ... ... ... ... 153-154
   (ii) Damages caused to Tamil Nadu Tourist bus in Mysore State and the necessity to protect Tamilians in Mysore State ... ... ... 154
5. Statement by Minister—
   Correction to an answer to a supplementary question regarding supply of wheat ... ... 155
6. Voting on Demands for Grants for the year 1970-71—*cont.*
   (i) Demand No. 5—Registration Department ... 155-178
   (ii) Demand No. 34—Stationery and Printing.
   (iii) Demand No. 6—State Legislature ... ... 178-217
7. Papers laid on the Table ... ... ... 217

*Wednesday, 18th March 1970.*

1. Questions and Answers ... ... ... ... 239-261
2. Calling Attention—
   (i) Alleged appointment of a Commission by Andhra Government for annexing certain areas of Tamil Nadu ... ... ... ... 261-262
   (ii) Situation due to non-appointment of Executive Officer for Ammur Town Panchayat ... 262-264
3. Voting on Demands for Grants for the year 1970-71—*cont.*
   (i) Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration ... 264-285
   (ii) Demand No. 8A—Milk Supply Scheme ...
   (iii) Demand No. 18—Animal Husbandry ...
   (iv) Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading ... ... ... 285-331



PAGES

*Wednesday, 18th March 1970—cont.*

4. Statement by Minister—
   Concessions on Taxation proposals announced in Budget ... ... ... ... ... ... 284-285
5. Papers laid on the Table ... ... ... 331-398

*Friday, 20th March 1970.*

1. Obituary Reference—
   Thiru P. Veerappa Gounder, former M.L.A. ... 399
2. Questions and Answers ... ... ... ... 399-423
3. Announcement—
   Arrest and release of some Members in Coimbatore district ... ... ... ... 423-424
4. Adjournment Motion—
   Arrest of some Members and agriculturists in Coimbatore district ... ... ... ... 424-433
5. Calling Attention—
   Inconvenience caused to the Public due to rationalisation of bus routes ... ... ... 434-436
6. Presentation of Report—
   Estimates Committee Report on Women's Welfare Department ... ... ... 436
7. Voting on Demands for Grants for the year 1970-71—*cont.*
   (i) Demand No. 20—Industries ... ... 436-437
   (ii) Demand No. 40—Capital Outlay on Industrial Development ... ... ... 438-497
8. Papers laid on the Table ... ... ... 497

*How to use the index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g. (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill (s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', Corporation(s) ', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers laid on the Table ".

Rulings and observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... | Adjournment Motion. |
| Ann. ... ... ... | Announcement. |
| B.O.H. ... ... ... | Business of the House. |
| C.A. ... ... ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. ... ... ... | Calling Attention Statement. |
| Consid. ... ... ... | Consideration stage of a Bill. This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. ... ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. ... ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D.D.S.D. ... ... | Discussion of Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. ... ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. ... ... ... | Governor's Address. |
| L.C. ... ... ... | Legislative Council. |
| H.A.H. Dis./H.H.D. ... | Half-hour Discussion. |
| Int. ... ... ... | Introduction stage of a Bill |
| L.A. ... ... ... | Legislative Council. |
| G.D. ... ... ... | General Discussion. |
| M. ... ... ... | Motion. |
| P.M. ... ... ... | Privilege Motion. |
| R/Res. ... ... ... | Resolution. |
| St. ... ... ... ... | Statement. |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

சர்தார் உஜ்ஜல் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், உணவு உற்பத்தி, பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

2. மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் (கல்வி-சுகாதார அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் . தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, பொதுச் சுகாதாரம், மருத்துவம், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர் : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

4. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (வேளாண்மை அரிசன நல அமைச்சர்) . கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், சுற்றுலா.

5. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பிற்பட்டோர் நலன், பத்திரப் பதிவு, எழுது பொருள்-அச்சுத்துறை, அரசாங்க அச்சகம்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு வணிக வரித் துறை அமைச்சர்) . கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, வணிக வரிகள், கால்நடை வளர்ப்பு, பால் வழங்கு துறை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் அமைச்சர்) . கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் ( Waqfs ), போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான, கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சிரணி.

10. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் கூட்டுறவு, வேளாண்மை, மறுநிதி உதவி, துறைமுகங்கள்

11. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலையத் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள் சின்கோனா.

13. மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் (தொழிலாளர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர். எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரங்கள், இரவலர்கள், அனாதை இல்லங்கள்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

### SARDAR UJJAL SINGH

---

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. The HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister): Minister in-charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and Deputy Collector's Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Food Production, Passports and Newsprint Control and Prices and Supplies of Goods Act.

The HON. THIRU V. R. NADUNCHAZHIYAN (Minister for Education and Health): Minister in-charge of Education including Technical Education, Official Lalnguage, Public Health and Medicine and Legislature.

3. The HON. THIRU K. A. MATHIALAGAN (Minister for Finance): Minister in-charge of Finance, Planning, Revenue Board of Revenue, District Revenue Establishments, Indian Overseas, Refugees and Evacuees.

4. The HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Agriculture and Harijan Welfare): Minister in-charge of Agriculture, Harijan Welfare, Women's and Children's Welfare Fisheries and Tourism.

5 The HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes): Minister in charge of Backward Classes, Registration, Stationery and Printing and Government Press.

6 The HON. THIRU P. U. SHANMUGHAM (Minister for Food and Commercial Taxes): Minister in-charge of Food, Commercial Taxes, Animal Husbandry and Milk.

7. The HON. THIRU S. MADHAVAN (Minister for Industries): Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. The HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works): Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

9 The HON. THIRU M. MUTHUSWAMY (Minister for Local Administration): Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project, Ex servicemen and Prosperity Brigade.

10. The Hon. Thiru Si. Pa. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Agricultural Refinance and Ports.

11. The Hon. Thiru K. V. SUBBIAH (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Housing, Accomodation Control, Approved Schools and Vigilance Services.

12. The Hon. Thiru O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forests and Cinchona.

13. The Hon. Thiru K. VEZHAVENDAN (Minister for Labour): Minister in-charge of Labour, Legislation on Weights and Measures and Statistics, Beggars and Orphanages.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. ந. தருமலிங்கம்.
திரு. ஆர். என். அரங்கநாதன்.
திரு. என். எஸ். வி. சித்தன்.
திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்.
திரு. எம். சுரேந்திரன்.
திரு. வி. டி. அண்ணாமலை.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. ஜி. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பட்டியல்.

| தொடர் எண். (1) | உறுப்பினர்கள் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை |
| 2 | ஆதித்தனார், சி. பா. (அமைச்சர்) | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்கினிராஜு, எஸ், | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்கத் தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்) | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி (செ. வ.) |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ. வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ) |
| 10 | அண்ணாமலை, சி.வி.எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர். (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ் | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, எ. வி. பி. | எழும்பூர், (சென்னை மாநகரம்). |
| 19 | பாலன், எம். சி. | நாகர்கோவில். |
| 20 | பாலகிருஷ்ணன், எ. கோ. | வானூர் (செ. வ.) |
| 21 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 22 | பாலசுப்பிரமணியன், எ. | திண்டுக்கல். |
| 23 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர் |
| 24 | பாரதிமோகன், கோ. | குத்தாலம். |
| 25 | பூபதி, எம். | கோயம்புத்தூர்—கிழக்கு. |
| 26 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 27 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 28 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 29 | சின்னராஜி, சி. கே. | திருப்பத்தூர். |
| 30 | சின்னச்சாமி, மு. | ஈரோடு |
| 31 | சின்னச்சாமி, வி. | ஏர்க்காடு (ஆ. வா.) |
| 32 | சித்தன், என். எஸ். வி. | திருமங்கலம் |
| 33 | தனுஷ்கோடி, பி. எஸ். | திருவாரூர் (செ. வ.) |
| 34 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |
| 35 | துரைராஜ், சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 36 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 37 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில். |
| 38 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 39 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 40 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர். |
| 41 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 42 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 43 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 44 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 45 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 46 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 47 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 48 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.). |
| 49 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 50 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 51 | கோவிந்தராசன், ம. சொ. | மதுரை சென்ட்ரல். |
| 52 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 53 | கோவிந்தராஜன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 54 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 55 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 56 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 57 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 58 | இளஞ்செழியன், வீ. சா. | விராலிமலை |
| 59 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 60 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 61 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு. |
| 62 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ. வ.). |
| 63 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 64 | ஜெயராமன், பி. | பேர்ணம்பட்டு (செ. வ.) |
| 65 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ. வ.) |
| 66 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 67 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 68 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 69 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 70 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 71 | கண்ணப்பன், எம். | கிணத்துக்கடவு. |
| 72 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 73 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 74 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ. வ.). |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 75 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 76 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 77 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 78 | கதிரவன், க. மு. | தென்காசி. |
| 79 | கேசவலு, தே. | கள்ளக்குறிச்சி. |
| 80 | இட்டப்பா, என். | மாயூரம். |
| 81 | கொளத்தூர் கோதண்டம் | மதுராந்தகம். |
| 82 | கோதண்டராமன், வி. கே. | குடியாத்தம். |
| 83 | கோதண்டராமையா, கே. எஸ். | உத்தனப்பள்ளி. |
| 84 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ.வ.). |
| 85 | கிருஷ்ணமூர்த்தி, சி. | கொடவாசல். |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 87 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ.) |
| 88 | கிருஷ்ணன், ஈ. ஆர். | சேலம்-2. |
| 89 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 90 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. | அவினாசி. |
| 91 | குமாரசாமி, கே. என். | பல்லடம். |
| 92 | குப்பம்மாள், திருமதி சு. | போளூர். |
| 93 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 94 | மகாதேவன், ப. | கன்யாகுமரி. |
| 95 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 96 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 97 | மணி, கே.பி.எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 98 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி-1. |
| 99 | மணி, வி. எஸ். எஸ். | ஆத்தூர். |
| 100 | மாணிக்கவாசகம், இரா. | தொண்டாமுத்தூர். |
| 101 | மணியன், பி.எஸ். | சோழவந்தான். |
| 102 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 103 | மாரிமுத்து, ஏ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 104 | மாரிமுத்து, மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 105 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 106 | மருதாசலம், என். | பேரூர் (செ.வ.). |
| 107 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 108 | மெய்யப்பன், சா. | காரைக்குடி. |
| 109 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 110 | மூக்கையா தேவர், பி.கே. | உசிலம்பட்டி. |
| 111 | முனுசாமி கௌண்டர், பி.எம். | கிருஷ்ணகிரி. |
| 112 | முனுசாமி, ரா.ரா. | மேல்மலையனூர். |
| 113 | முனியாண்டி, அ. | நிலக்கோட்டை [செ.வ.] |
| 114 | முனு. ஆதி | திருப்போரூர். |
| 115 | முருகையன், புலவர் க. | திருவையாறு. |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர் (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 116 | முருகையன், எஸ். | கலசபாக்கம் |
| 117 | முருகேசன், க. | பாலக்கோடு |
| 118 | செஞ்சி முனுசாமி, வெ. | செஞ்சி. |
| 119 | முத்தையா, கே. கே. | கடலூர். |
| 120 | முத்தையா. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 121 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ.வ.) |
| 122 | முத்துசாமி, பா. கசி. | பெண்ணாகரம். |
| 123 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல். |
| 124 | முத்துச்செல்வன், பு.செ. | முசிறி. |
| 125 | நாச்சிமுத்து, நா. | ஒட்டன்சத்திரம. |
| 126 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ.வ.) |
| 127 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 128 | நல்லசிவன், க. ர. | மொடக்குறிச்சி. |
| 129 | நல்லசாமி, தோ. மு. | கரூர். |
| 130 | நஞ்சன், சி. | கடலூர் (செ.வ.). |
| 131 | நரசிம்மன், ஏ. சி. | ஆரணி. |
| 132 | நாராயணன், இரா. | வரகூர். |
| 133 | நடராசன், மு. க. து. | லால்குடி. |
| 134 | நடராஜன், ஜி. | காட்பாடி. |
| 135 | நடராசன், ஈ. எம். | அந்தியூர். |
| 136 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 137 | பச்சையப்பன், எஸ். பி. | சங்கராபுரம். |
| 138 | பத்மாவதி, திருமதி, ஜி. | முகையூர். |
| 139 | பழனி, சி. | ஓமலூர் (செ.வ.). |
| 140 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம் (செ.வ.) |
| 141 | பழனிவேல் ராஜன் | தேனி. |
| 142 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ.வ.) |
| 143 | பரமசிவம் பி. என். | பொங்களூர். |
| 144 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 145 | பரிசுத்த நாடார், ஏ. ஒய். எஸ். | தஞ்சாவூர். |
| 146 | பட்டாபி நாயுடு, எ. | காவேரிப்பட்டணம். |
| 147 | பீர் முஹம்மது, ஹாஜி. ம. மு. | மேலப்பாளையம். |
| 148 | பெரியசாமி, பெ. | ராசிபுரம். |
| 149 | பெருமாள், ஏ. ஆர். | கரியாப்பட்டி. |
| 150 | பொன்னம்பலம், புலவர் பொ. | திருமயம். |
| 151 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு. |
| 152 | பொன்னு மலை, தி. | பனமரத்துப்பட்டி. |
| 153 | இராஜா, வ. எம். | பவானி. |
| 154 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 155 | ராஜமன்னார், எஸ். ஏ. | வாணியம்பாடி. |
| 156 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 157 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ.வ) |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர் | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 158 | ராஜவேலு, டி. ஏ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 159 | ராமச்சந்திர துரை, ரா. .. .. .. | கந்தர்வக்கோட்டை. |
| 160 | இராமச்சந்திரன், க. ந. .. .. | ஆண்டிமடம். |
| 161 | ராமச்சந்திரன், எம். ஜி. .. .. | பரங்கிமலை. |
| 162 | இராமச்சந்திரன், எஸ். .. .. .. | பண்ருட்டி. |
| 163 | ராமலிங்கம், எஸ். .. .. .. | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 164 | இராமமூர்த்தி, க. .. .. .. | திண்டிவனம். |
| 165 | இராமன், மு. .. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 166 | இராமன், ஓ. பி. (அமைச்சர்) .. .. | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 167 | இராமராசன், வ.க. .. .. .. | பவானிசாகர் (செ.வ.) |
| 168 | இராமசாமி, இ. .. .. .. | வால்பாறை (செ.வ.) |
| 169 | ராமசாமி கவுண்டர், கே.எம். .. | கோபிசெட்டிப்பாளையம். |
| 170 | ராமசாமி, எஸ்.ஜே. .. .. .. | அரக்கோணம். |
| 171 | இராசு, ஜே.எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 172 | இரத்தினசபாபதி, மு. .. .. .. | விளாத்திகுளம். |
| 173 | ரெத்தினதேவர், ரா. .. .. | முதுகுளத்தூர். |
| 174 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 175 | சகாதேவக் கண்டர், கே. .. .. | தண்டராம்பட்டு. |
| 176 | சாமிநாதன், கே. என். .. .. | வெள்ளக்கோயில். |
| 177 | சங்கரய்யா, என். .. .. .. | மதுரை—மேற்கு. |
| 178 | சந்தானம், பி.எஸ். .. .. | செங்கம் (செ.வ.) |
| 179 | சாரதி, மா.பா. .. .. .. | வேலூர். |
| 180 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 181 | சீனிவாச நாயக்கர், ஆர். .. .. | சாத்தூர். |
| 182 | சீனிவாசன், பெ. .. .. .. | விருதுநகர். |
| 183 | செல்லக் கவுண்டர், அ. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 184 | சேனுபதி, அ. .. .. .. .. | காங்கேயம். |
| 185 | சேதுராமன், சி. .. .. .. | சிவகங்கை. |
| 186 | சண்முகம், எம் .. .. .. | விழுப்புரம். |
| 187 | சண்முகசுந்தரம், அ.ப. .. .. | பொள்ளாச்சி. |
| 188 | சிறைமீட்டான், தொ.க. .. .. | பரமக்குடி (செ.வ.). |
| 189 | சிவஞானம், ம. பொ. .. .. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 190 | சிவபெருமாள், க.ந. .. .. .. | ஆத்தூர். |
| 191 | சிவசாமி, மு.ச. .. .. .. | தூத்துக்குடி. |
| 192 | சிவசுப்பிரமணியன், எஸ். .. .. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 193 | சோமசுந்தரம், ந. .. .. .. | இளங்கைமான் (செ.வ.) |
| 194 | சௌந்தரபாண்டியன், நா. .. .. | ராதாபுரம். |
| 195 | சௌந்தரபாண்டியன், பெ. .. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 196 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. .. | பாபநாசம். |
| 197 | சுந்தர பாரதி, சௌடி எஸ். .. | அருப்புக்கோட்டை. |
| 198 | சீனிவாசன், சு. .. .. .. | போடிநாயக்கனூர். |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 199 | சுவாரெஸ், திருமதி ஏ. .. .. | நியமன உறுப்பினர் |
| 200 | சுப்பராஜா, ஏ.அ. .. .. .. | இராஜபாளையம். |
| 201 | சுப்பையா, ஆ.கு. .. .. .. | கோட்டூர் (செ.வ.) |
| 202 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) .. | ஆலங்குடி. |
| 203 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். .. | கடையநல்லூர். |
| 204 | சுப்பிரமணியம், அ.லெ. .. .. | திருநெல்வேலி. |
| 205 | சுப்பிரமணிய கவுண்டர், எம். .. | தர்மபுரி. |
| 206 | சுப்பிரமணியம், இ.எம். .. .. | திருக்கோவிலூர். |
| 207 | சுரேந்திரன், எம். .. .. .. | மேட்டூர். |
| 208 | சுவாமிநாத உடையார், த.சி. .. | மன்னார்குடி. |
| 209 | சுவாமிநாதன், வை. .. .. | திருவெறும்பூர். |
| 210 | தம்பி நாயக்கர். பா. .. .. .. | வடமதுரை. |
| 211 | தங்கப்பன், டி. .. .. .. | இராமநாதபுரம். |
| 212 | தவமணி தேவர், வி. .. .. .. | சேடப்பட்டி. |
| 213 | தீர்த்தகிரி, ந. .. .. .. | ஹரூர் (செ.வ.) |
| 214 | தீர்த்தகிரி கவுண்டர், தி. .. .. | ஊத்தங்கரை. |
| 215 | திம்மராய கவுண்டர், தி. சி. .. .. | நாட்றாம்பள்ளி. |
| 216 | திப்பையா, டி.டி.எஸ். .. .. .. | மேட்டுப்பாளையம். |
| 217 | வடிவேலு, எஸ்.கே. .. .. | தொட்டியம். |
| 218 | வரதராஜன், என். .. .. | வேடசந்தூர். |
| 219 | வேதாசலம், மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம் |
| 220 | வீரமணி, சி. .. .. .. .. | சங்கரி (செ.வ.) |
| 221 | வீராசாமி, ந. .. .. .. | ஆர்க்காடு. |
| 222 | வேலப்பன், சி. வே. .. .. .. | கபிலமலை. |
| 223 | வெள்ளத்துரை, ஏ. .. .. .. | வாசுதேவநல்லூர். |
| 224 | வேலுசாமி, பி. .. .. .. | சிங்காநல்லூர். |
| 225 | வெங்கடாசல தேவர், பெ. .. .. | வேதாரண்யம். |
| 226 | வெங்கடசாமி, பி. .. .. .. | ஹோசூர். |
| 227 | வேழவேந்தன், கா. (அமைச்சர்) .. | கும்மிடிப்பூண்டி |
| 228 | விஜய ரகுநாத தொண்டமான், மா.ஆர். | புதுக்கோட்டை. |
| 229 | விஜயராஜ், தா. .. .. .. | திருவண்ணாமலை. |
| 230 | விநயகம், கே. .. .. .. | திருத்தணி. |
| 231 | விசுவநாதன், செ. கோ. .. .. | செங்கற்பட்டு. |
| 232 | வில்லியம், எம். .. .. .. | இள்ளியூர். |
| 233 | வெற்றிடம் .. .. .. .. | பெருந்துறை |
| 234 | வெற்றிடம் .. .. .. .. | கொளச்சல் |
| 235 | வெற்றிடம் .. | சேரன்மகாதேவி. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். | பெயர். | |
|---|---|---|
| (1) | (2) | |
| 1 | திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர். |
| 2 | திரு. ப. உ. சண்முகம் .. .. | அமைச்சர் |
| 3 | திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

### திங்கட்கிழமை, 1970 மார்ச் 16.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Nationalised text books.*

* 389 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether nationalised text books are to be sold through co-opperatives in this State in future?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 1970-71-ஆம் கல்வி ஆண்டிலிருந்து, தனிப்பட்ட பிறவிற்பனையாளர்களுடன், கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளும், தங்களது ஒப்பந்தப்புள்ளி விவரங்களை அனுப்ப அனுமதிக்கப் பட்டுள்ளது. அவர்களது ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக இருப்பின், அவர்களை விற்பனையாளர்களாக நியமனம் செய்ய முடியும்.

**திரு. கே. வினயகம்:** தேசியமயமாக்கப்பட்ட புத்தகங்களில் பல தவறுகள் நம்மையும் அறியாமலேயே புகுத்தப்படுகின்றன என்று சொல்லப்படுகிற புகார்கள் இப்போது நீக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் குறிப்பிட்ட முறையில் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வில்லை. அப்படிக் கொண்டுவரப்பட்டால், அதுபற்றி தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. எ. சி. நரசிம்மன்:** எவ்வளவு ஆண்டுகளுக்குள்ளாக இந்தப் புத்தகங்கள் எல்லாம் தேசியமயமாக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்போதுதான் அதற்கான டெக்ஸ்ட் புக்ஸ் கார்ப்பரேஷன் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு மூன்றாவது வகுப்பு முதல் பத்தாவது வகுப்பு வரை உள்ள கணக்குப் புத்தகங்களை தேசியமயமாக்கயிருக்கிறோம். ஒன்பது, பத்து, வகுப்புகளுக்குள்ள ஆங்கில, தமிழ் பாடப் புத்தகங்களை அடுத்த ஆண்டு வெளியிடுவதாக இருக்கிறோம். அச்சடிப்பதற்கான வாய்ப்பு வசதிகளைப் பொறுத்து அடுத்த ஆண்டு எவை எவற்றை எடுத்துக் கொள்ளலாம் என்ற வகையில் முடிவு செய்யப்படும். எல்லாப் புத்தகங்களையும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக தேசியமயமாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் முயற்சிகளை மேற்கொண்டு வரு

கிறோம். அதற்காக ஒரு பெரிய அச்சகம் நிறுவ முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்: அந்த அச்சகம் நிறுவப்பட்டால் மிக விரைவில் இந்தப் புத்தகங்கள் எல்லாம் வந்துவிடும்.

**திரு. டி. மார்டின் :** சென்னையில் சில பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களை அந்தப் பள்ளிகளில் படிக்கிற மாணவர்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்று லாபநோக்கோடு இல்லாமல் பள்ளிக்கூடத்தில் ஸ்டோர் வைத்துக் கொடுக்கிறார்கள். இதற்கும் சேல்ஸ் டாக்ஸ் கட்ட வேண்டுமென்று சேல்ஸ டாக்ஸ் அதிகாரிகள் அவர்களை, தொந்தரவுபடுத்தி வருகிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற குறிப்புகள் என்னிடம் இல்லை. அதுபற்றிய குறிப்புகளை அனுப்பி வைப்பார்களேயானால் அதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம்.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** இப்படிப் புத்தகங்களை தேசியமயமாக்குவது அரசினர் பள்ளிகளில் மட்டுமா அல்லது தனியார் பள்ளிகளுக்கும் கூடவா? மேலும் இந்தப் புத்தகங்கள் மலிவுப் பதிப்பில் வெளியிடப்படுமா அல்லது எப்போதும் போல் வெளியிடப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** புத்தகங்களை தேசியமயமாக்குவது எல்லாப் பள்ளிகளுக்கும்தான். அதில் அரசாங்கப் பள்ளிகள், தனியார் துறை பள்ளிகள் என்று பிரித்து வைப்பதற்கில்லை. கூடுமானவரையில் அவற்றை அடக்க விலையில் தரவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இருக்கிறோம். அப்படியே ஓரளவிற்கு இலாபம் வைத்தாலும் அதில் வருகிற லாபத்தை மதிய உணவுத் திட்டம் போன்ற வகைகளில் கல்வித் துறைக்கே பயன்படுத்துகிற நோக்கத்தின் அடிப்படையில்தான் இருக்கிறது. விலை பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. கூடுமான வரைக்கும் அடக்க விலைக்கே தர வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** ஏற்கனவே தனியார் துறை பள்ளிகளுக்காக பாட நூல்களை எழுதி வரும் அனுபவம் உள்ளவர்களுக்கு அரசாங்கப் பாட நூல்களை எழுதுவதற்கு வாய்ப்புத்தரப்படுமா? அப்படி பாட நூல்கள் எழுவதற்குத் தரப்படும் ஊதியம் தனியார் துறையில் கொடுத்து வந்ததை விட குறையாமல் இருக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கனவே பாடநூல்களை எழுதி புழக்கப்பட்ட ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிற முறையில்தான் இப்போது தேர்ந்தெடுத்துவரப்படுகிறது. வேறு யாரையும் கொண்டு எழுத முடியாது. ஏனெனில் ஒவ்வொரு துறையிலும் அனுபவம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தேர்ந்தெடுத்து இரண்டு மூன்று புத்தகங்கள் என்ற அளவில் ஒரு வகையில் இரண்டு இரண்டு புத்தகங்கள் போடும்படிச் சொல்லியிருக்கிறோம். அதில் நான்கு ஆதர்களிடம் எழுதச் சொல்லி இரண்டைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அரசாங்கம் கொடுக்கிற கட்டணமும் தனியார் துறையில் கொடுப்பதைவிட அதிகமாகத்தான் இருக்கும்.



THIRU K. S. KOTHANDARAMIAH: With regard to the text-books for the students of linguistic minorities, may I know what arrangements have been made in that direction?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய குறிப்பு இல்லை. ஒருசில பள்ளிகளில் அதை தேசியமயமாக்கி நாம் புத்தகங்கள் வெளியிடுகிற நிலை வருமா என்று தெரியவில்லை. ஆனால் ஆந்திராவிலிருந்து வெளியிடப்படுகிற அந்தப் புத்தகங்களை இங்கு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்தச் செயலை எளிதாக ஆக்கலாம். அதுபற்றிய தன்மைகளை ஆராய வேண்டும்.

## பள்ளித் துணை இன்ஸ்பெக்டர்கள் அலுவலகங்கள்

* 390 வினா—**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

நெல்லிக்குப்பத்திலிருக்க வேண்டிய பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகத்தை கடலூரிலிருந்து நெல்லிக்குப்பத்திற்கு மாற்ற அரசாங்க உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த விஷயம் அரசாங்க பரிசீலனையிலிருக்கிறது.

* 391 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள பொன்னமராவதியில் பள்ளித்துணை ஆய்வர் (Deputy Inspector) அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** பொன்னமராவதிப் பகுதியில் ஏறக்குறைய 87 தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகள் இருப்பதனால் அங்கு ஒரு பள்ளிக்கூட துணை ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றித்தான் இப்போது இல்லை என்று விடையிறுத்தேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தையும் ஒவ்வொரு ரேஞ்சாக அமைத்து அதற்கு ஒரு டெப்டி இன்ஸ்பெக்டர் நியமிக்க வேண்டுமென்ற கருத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. 344 துணை ஆய்வாளர்கள் இருந்து வருகிறார்கள். 374 ஒன்றியங்கள் இருந்து வருகின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு துணை ஆய்வாளர் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு அரசு அதை நடைமுறைப்படுத்துகிற நிலை இருந்து வருகிறது. திருமயம் ஒன்றியத்தில் 68-ம் அறிமளத்தில் 62 பள்ளிகளும் இருக்கின்றன. இதில் ஒரு ஜூனியர் டெப்டி இன்ஸ்பெக்டர் இருந்து வருகிறார். பொன்னமராவதி ஒன்றியத்தில் ஒரு துணை ஆய்வாளரை ஏற்படுத்த வேண்டுமென்ற குறிப்பு இயக்குனரிடம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. திருப்பூர்க்

முறை காரணமாக இந்த ஆண்டு 'டெஃபர்' செய்யப்பட்டிருக்கிறது. 1970-71-ல் வருவதற்கில்லை. ஆனால் திட்டம் இருக்கிறது. பிறகு முறைப்படி மேற்கொள்ளப்படும்.

திரு. வை. சுவாமிநாதன்: வருங்காலத்தில் பஞ்சாயத்து யூனியன் விஸ்தரிப்பு அதிகாரியையே டெப்டி இன்ஸ்பெக்டராக நியமிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய குறிப்பு இல்லை. ஆனால் டெப்டி இன்ஸ்பெக்டராக நியமிக்கப்படுவதற்கான தகுதி இருக்குமானால் அப்படிப்பட்டவர்களை நியமிப்பதில் ஆட்சேபனை இருக்க முடியாது.

### மாணவர்களுக்கென இரகசியப் பதிவேடுகள்

* 392 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களுக்கென இரகசியப் பதிவேடுகள் வைத்து வருவது குறித்து கல்வி நிறுவனங்களுக்கு இம் மாநில அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, if it is not possible to maintain confidential records of students, will the Government think of reviving the system that was in vogue which has now been given up, *viz.*, of sending progress reports of students to parents, so that it may give an idea to the parents about the progress, the backwardness or forwardness of the students' career inside the school?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ப்ராக்ரஸ் ரிப்போர்ட் என்பது பல பள்ளிக்கூடங்களில் இருந்து வருகிறது. தனியார் பள்ளிகள், கல்வி நிலையங்களில் எல்லாம் அது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கப் பள்ளிகளில் இருக்கிறதா இல்லையா என்பதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும். அதற்கான முயற்சிகளில் கூட எதிர்காலத்தில் ஈடுபடலாம்.

THIRU T. MARTIN: Sir, sometime back we were given to understand by the Hon. Minister for Education that the performance of the students in the examinations conducted in schools will be taken into consideration along with the performance in the public examination. So, may I request him to state whether such a scheme is under contemplation and if so, when it will be given effect to?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒரு கருத்து இருந்து வருகிறது. அதைப்பற்றிக் கூட நான் வெளியிட்டேன். பள்ளியாண்டின் இறுதித் தேர்வு நடத்தப்படும்பொழுது, மனப்பாடம் செய்து



எழுதிவிட்டுப்போவதைவிட, அந்த முறையில் மேல்வகுப்பிற்கு அனுப்புவதைவிட, ஆண்டு முழுவதும் அவர்களின் பணித்திறம் எப்படியிருக்கின்றது என்பதற்காக 50 சத விகிதம் ஒதுக்கி, பள்ளியிறுதித் தேர்வுக்கு 50 சத விகிதம் என்று ஒதுக்கலாம் என்ற கருத்து இருந்து வருகிறது. அதைப்பற்றிக் கல்வித்துறை ஆலோசனைக் குழுவிலே, கன்சல்டேட்டிவ் கமிட்டியிலே வைத்து எல்லோருடைய கருத்தும் தெரிந்தபிறகு நடைமுறைப்படுத்தலாம் என்ற எண்ணம்இருக்கிறது. 'இண்டர்னல் அசெஸ்மெண்ட்' என்ற முறை இருக்க வேண்டுமென்று ஆசிரியர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை ஆராய வேண்டியிருக்கிறது. திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லை அப்படிப்பட்ட கருத்து இருக்கிறது. கல்வி ஆலோசனைக் குழுவிலே வைத்து முடிவு எடுக்கலாம் என்று இருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவரவர்களே, கல்லூரிகள் அளவிலாவது இந்த 'கான்ஃபிடென்ஷியல் ரிக்கார்ட்' வைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மேல்நாடுகளில் சிலபல நாடுகளில் கல்லூரிகளில் இத்தகைய முறைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலை இங்கு இல்லை. இதையும் கல்வி ஆலோசனைக் குழுவில் வைத்து நடைமுறைப்படுத்தலாம் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் இப்பொழுது எந்தத் திட்டமும் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in schools especially in high schools, authorities are maintaining progress records and it is good. But to think of introducing confidential records for students is a dangerous thing because it creates a feeling of fearconsciousness in the minds of the pupils and also curbs their enthusiasm. Therefore, even if there is any such proposal, may I request the Hon. Minister to drop it?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அந்தத் திட்டம் இப்பொழுது இல்லை என்று குறிப்பிட்டேன். இரண்டுவிதமான கருத்துக்கள் உண்டு. ஆகவேதான் இதை ஆராய வேண்டுமென்று சொன்னேன்.

திரு. ஆர். கருப்பையா: தலைவரவர்களே, மாணவர்களுக்கென தனிக் கோர்ட் அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் வெளியில் சொன்னார்கள். அது இந்த ஆண்டு இல்லை என்று சொன்னாலும், வருகின்ற ஆண்டிலேயாவது மாணவர்கள் கோர்ட் அமைக்க அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதுபற்றித் திட்டவட்டமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. நான் மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும்பொழுது எந்தக் கருத்துக்களைத் தெரிவித்தேன். இப்பொழுது அண்மையில் கூடிய கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் கூட்டத்தில் அந்தக் கருத்தை ஆராயும்படி கேட்டுக்கொண்டிருக்கிறேன். மாணவர் கோர்ட் என்ற முறையில், மாணவர் பிரதிநிதிகள், அந்தக் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்களோடு இணங்கிவரும் அவர்களுக்கு விருப்பமான ஆசிரியர்கள் 3 பேர்களும், பெற்றோர்கள் 3 பேர்களும் அந்தக் குழுவில் இருந்தால் எந்தவொரு பிரச்னையாக இருந்தாலும், அந்தக்

குழுவினர் ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை எடுப்பார்கள். அதற்குள்ளாக மாணவர்கள், மற்றவர்களின் குறைகளைப் போக்க அரசாங்கமோ, முதல்வர்களோ நடவடிக்கை எடுக்க முடியும். இப்பொழுது பல கல்லூரிகளில் வேலை நிறுத்தம் ஏற்பட்டால், அதற்கான காரணங்களைச் சிந்தித்துப் பார்க்க நேரமில்லாமல் இருக்கிறது. திடீரென்று வேலைநிறுத்தங்கள் ஆரம்பாகிவிடுகின்றன. எனவே, அதற்காக இரண்டு மூன்று நாட்கள் உட்கார்ந்து பேசி முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு எந்தக் குறைகள் இருந்தாலும் இந்தக் குழுவினர் ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து, முதல்வரை அணுகியோ அல்லது அரசாங்கத்தை, கல்வி அதிகாரிகளை அணுகியோ ஒரு வார காலத்திற்குள் வேலை நிறுத்தத்திற்குக் காரணமான பிரச்னைகளைத் தீர்க்க முடியும். ஆகையால் ஸ்டுடன்ட்ஸ் கோர்ட் அமைப்பது நல்லது என்ற கருத்தை நான் தெரிவித்திருக்கிறேன். அதுபற்றித் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை. கல்லூரி முதல்வர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களின் இசைவோடு நிறுவப்பட வேண்டும். அவர்களின் கருத்து தெரிய வேண்டியிருக்கிறது.. அவர்களிடமிருந்து கருத்து தெரிந்த பிறகு, அந்தத் திட்டம் உருக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, பாடங்களில் குறிப்பிட்ட மதிப்பெண்கள் பெற்றால் மட்டும் மேல் வகுப்பிற்குச் செல்லலாம் என்று விதியிருப்பதைப்போல், மாணவர்களின் ஒழுக்கம், மாணவர்களின் நடத்தை போன்றவைகளுக்கும் குறிப்பிட்ட மதிப்பெண்கள் வைக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஒரு கருத்தின் அடிப்படையிலேதான் இப்பொழுது இரண்டு பள்ளிக்கூடங்களில் அதை பரீட்சார்த்தமாக வைக்க முயற்சி இந்த ஆண்டு எடுக்கப்பட்டிருக்கிறது. சைதாப்பேட்டையில் உள்ள மாடல் ஸ்கூலில், அரசாங்கத்தின் சார்பில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் புகுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நடைமுறையிலும் வெற்றிகரமாக இருந்துகொண்டு வருகிறது என்று அங்கிருக்கும் தலைமையாசிரியர் சொல்லியிருக்கிறார். சாதாரணமாக, பாடங்களுக்காக ஒதுக்கப்படும் மார்க்குகள் 600 என்றால், மேற்கொண்டு 200 மார்க்குகள் ஒதுக்கி,

| | | |
|---|---|---|
| Games and Sports-க்கு | — | 50 எண்களும் |
| Conduct and Charector-க்கு | — | 50 எண்களும் |
| Expression in writing-க்கு | — | 50 எண்களும் |
| Library Reading-க்கு | — | 50 எண்களும் |

என்று நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டு, அது பரீட்சார்த்தமாக அந்த மாடல் ஸ்கூலில் மேற்கொண்டு வருகிறார்கள். அதைப்போன்றே கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள பேத்துநாயக்கன்பாளையத்தில் உள்ள ஸ்கூலில் உள்ள அந்தத் தலைமையாசிரியரும் நடைமுறைப்படுத்தி வருகிறார். இந்த இரண்டு பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்துவதன் விளைவுகளைக் கண்டு, அது நல்ல முறையில் உருவாக்கப்படலாம் என்று ஏற்பட்டால் அதை மற்ற பள்ளிகளுக்கும் பரப்பலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.



திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, வேலை கிடைக்காத நிலைமையும், வாழ்க்கைப் பளுவும் சேர்ந்து, மாணவர்களிடம் அமைதியின்மை ஏற்படக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. அது தமிழகத்திலே மட்டும் அல்ல, இந்தியா பூராவும் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்ற நேரத்திலே, தேர்வு என்பது ஒரு தண்டனையாக மாறக் கூடாது என்ற உணர்வு இருக்கும் நேரத்தில், இந்த இரகசியக் குறிப்பேடு முறையைப் புகுத்துவது சரியா? அந்த ஆலோசனையை மேற்கொள்வதுகூட தவறு அல்லவா என்று அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இப்பொழுது இல்லை என்று. அந்தக் கருத்து தெரிவிக்கப்படுகிறதே தவிர அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. அப்படியே வந்தாலும் அந்தக் கருத்து ஆலோசனைக் குழுவிலே வைத்து விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று. இப்பொழுது அப்படிப்பட்ட திட்டம் எதுவுமில்லை.

### ஆஸ்டின்பட்டி க்ஷயரோக மருத்துவமனை

* 393 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆஸ்டின்பட்டியிலுள்ள க்ஷயரோக மருத்துவ மனையில் நோயாளிகளை அனுமதிப்பதில் எந்த முறை பின்பற்றப்படுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நோயாளிகளின் காத்திருக்கைப் பட்டியல் வரிசை எண்படி அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மோசமான நிலையிலுள்ள நோயாளிகள் எர்ஸகின் ஆஸ்பத்திரியில் க்ஷயரோக நோயாளிகளின் பகுதியில் உடனடியாக அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரு. மா. இராசாங்கம்: தலைவரவர்களே, இந்த ஆஸ்டின்பட்டியிலுள்ள க்ஷயரோக மருத்துவ மனையில் வைப்புப் பட்டியலில் ஏராளமான நோயாளிகள் இருப்பதால், அவர்கள் ஆரம்பக்காலத்தில் இடம் கிடைக்காது கடைசியில், கைவிடுகிற கட்டத்தில் இடம் கிடைக்கிறது என்று கூறப்படுகிறது. எனவே அதை விரிவுபடுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மதுரை மாவட்டம் ஆஸ்டின்பட்டியில் இப்பொழுது 102 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக அது விளங்குகிறது. அதில் மெற்கொண்டு 60 படுக்கைகள் தருகின்ற ஒரு வரைவுத் திட்டம் தலைமைப் பொறியாளரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அது இயக்குனர் அவர்களுக்கு வந்தபின் அரசாங்கத்திற்கு அனுப்பி வைப்பார்கள். அதன்மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவரவர்களே, சுமார் 30 லட்சம் மக்கள் இருக்கும் மதுரை மாவட்டத்திற்கு ஒரேயொரு டி.பி. சானடோரியம், ஆஸ்டின் பட்டியில் இருக்கிறது. அதிகமான அளவில், ஆயிரம்பேர்களுக்கு மேல் இருப்பதால், டி.பி. பேஷண்டுகளுக்கு இடம் கிடைக்காமல் வெயிட்டிங் லிஸ்ட்டில்

இருக்கிறார்கள். இந்த நிலைமையில் ஆஸ்டின்பட்டியில் மேற்கொண்டு 60 படுக்கைகள் அதிகப்படுத்துவதால் மட்டும் அது போதுமானதாக இருக்காது. சுமார் 200 படுக்கைகள் கொண்டதாக அதை விஸ்தரிக்க செயற்குறிப்பு உடனடியாகத் தயாரிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உடனடியாக, 30, 30 படுக்கைகள் கொண்ட இரண்டு வார்டுகள் ஏற்படுத்தக்கூடிய அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு இது குறைவுகள்தான் என்றாலும், இருக்கின்ற நிதிநிலையைப் பார்த்து உடனடியாக 60 படுக்கைகள் மேற்கொண்டு தருகின்ற நிலைமை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகு, படிப்படியாக ஏற்படுத்த வேண்டும். ஆனால் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதை உணர்ந்து, விரைவில் விரிவுபடுத்த முயற்சிக்கப்படுகின்றது. எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் 20 படுக்கைகள் இருந்து வருகின்றன. மோசமான நிலையிலுள்ள நோயாளிகளை உடனடியாகச் சேர்ப்பதற்கு அந்தப் படுக்கைகள்எல்லாம் பயன்பட்டு வருகின்றன.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்தக் கொடூரமான தொற்று நோய் இன்றையத்தினம் மேலும் பெருகிக்கொண்டு இருப்பதனால், தாலுக்கா அளவிலே குறைந்தபட்சம், 5 படுக்கைகள் தனியாக ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முதலிலே மாவட்ட மருத்துமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, அது வெற்றிகண்ட பிறகு வட்ட மருத்துவ மனைகளில் இந்தப் பிரிவுகளை மேற்கொள்ள முயற்சி செய்யலாம்.

## *Artificial Limb Centres*

* 394 Q.—Thiru K. VINAYAKAM :
Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR :
Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Government have sanctioned two sub-Centres of the Artificial Limb Centre in the Government General Hospital; and

(b) if so, where they are to be opened?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மதுரை, கோயம்புத்தூர்.

திரு. கே. விநாயகம் : நமது சென்னை அரசாங்க ஆஸ்பத்திரியில் இது மாதிரி அமைக்குவதற்கு ஏற்பாடு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை பெரிய மருத்துவ மனையில் ஆர்டிபிஷியல் லிம்பு சென்டர் இருந்துவருகிறது. 1964 லிருந்து இது செயல்பட்டுவருகிறது. அது சிறந்த பலனை அளிக்கின்றது.



என்ற நோக்கத்தின் அடிப்படையில் மேலும் இரண்டு இடங்களுக்கு, மதுரைக் கும், கோயம்பத்தூருக்கும் விரிவுபடுத்த முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக் கிறது. ஆராய்ச்சி, செயல்முறைத் திட்டம் (ரிசர்ச் அண்டு டெமான்ஸ் டிரேஷன்)-க்காக, அமெரிக்க சுகாதார, கல்வி நல்வாழ்வுத் துறையின் மறு வாழ்வு அளிக்கும் பிரிவு உதவி அளிக்க முன்வந்திருக்கிறது. Vocational Rehabilitation Administration of the Department of Health Education and Welfare of U.S.A. முன்வந்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் தான் மதுரை, கோயம்பத்தூர் ஆகிய இரண்டு இடங் களிலும் துணை மருத்துவ இயற்கை உறுப்புநிலையம் ஏற்படுத்துவதன் மூலம் தென் மாவட்டங்கள், மேற்கு மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு உதவியாக அமையும் என்ற கருத்தின் அடிப்படையில், அதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அதற்கான முயற்சி இப்பொழுது மேற்கொள்ளப்பட்டிருக் கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : பாளையங்கோட்டை மருத்துவ நிலையம் இப்பொழுது வளர்ந்துவருகிற நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட சிறப்புப் பிரிவுகளை பாளையங்கோட்டை மருத்துவமனையில் துவக்குவதன் மூலம், அந்த முறை வளர்வதற்கும், இந்தத் துறையில் பலர் பாண்டித்தியம் பெறுவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே, பாளையங்கோட்டையில் இத்தகைய பிரிவை நிறுவுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது மதுரை, கோவை ஆகிய இரண்டு இடங்களில் நிறைவேற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. அடுத்த முயற்சி தஞ்சாவூரில் மேற்கொள்ளப்பட இருக்கிறது. அடுத்த முயற்சியில் தான் திருநெல்வேலிக்குப் போகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : 395, 396 எண்ணுள்ள கேள்விகள் பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

## *Polyester fibre factory*

* 397 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether licence for starting a polyester fibre plant has been granted to the private sector near Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சென்னையில் பத்து கோடி ரூபாய் மூலதனத்துடன் ஆண்டொன்றுக்கு 6,100 மெட்ரிக் டன் பாலிஸ்டர் இழை Polyster fibre உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்காக பம்பாயைச் சேர்ந்த தி இண்டியன் ஆர்கானிக் கெமிக் கல்ஸ் லிமிடெட் என்ற தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மத்திய அரசு பூர்வாங்க அனுமதி அளித்துள்ளது. மணலியில் அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்திருக் கின்ற பகுதியில் 205 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தைத் தொழிற்சாலையை நிறுவுவதற்கேற்ற இடமாக அந்த நிறுவனம் தேர்ந்தெடுத்திருக்கிறது அரசாங்கம் அந்த இடத்தை அந்த நிறுவனத்திற்குக் கொடுத்து விடுவதென்று முடிவு செய்திருக்கிறது. நிலத்தை நிறுவனத்திடம் ஒப்படைக்கும் வேலை விரை வில் முடிவடையும்.

## *Assistance for erecting Cement Plant at Indonesia*

*398 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Indonesian Government has placed orders with the State Government for setting up a Cement Plant in that Country; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) இந்தோனேசியா அரசின் கட்டளைப்படி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள டால்மியாபுரம் சிமெண்ட் தயாரிப்பு முன்னோடித் தொழிற்சாலையை ஆய்வு செய்வதற்கென இந்தோனேசிய பொதுப்பணி அமைச்சகத்தின் இயக்குநர் இந்தியாவிற்கு வந்தார். அவர் தமது நாட்டில் அத்தகைய தொழிற் பிரிவுகளை நிறுவுவதற்கான தொழில் நுட்ப பொருளாதாரத் தேவை குறித்து முழுமன நிறைவு அடைந்தார்.

அதன்பிறகு, கொழும்புத் திட்டத்தின் கீழ் இந்தோனேசியாவில் சிறிய சிமெண்டு தயாரிப்புத் தொழிற்சாலை (Micro Cement Plant) ஒன்றை நிறுவுவதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திலிருந்து இரண்டு வல்லுநர்களை அனுப்புமாறு இந்தோனேசிய அரசு இந்திய அரசைச் கேட்டுக் கொண்டது. இருப்பினும், தற்போது, இத்துறையில் உள்ள வல்லுநர் ஒருவரை மட்டும் அனுப்புவது என்று இந்திய அரசு கருதி, இந்தோனேசிய அரசுக்கு முகமையில் அனுப்புவதற்கு ஒரு வல்லுநரின் பெயரைப் பரிந்துரைக் குமாறு இந்த அரசை எழுதிக் கேட்டுள்ளது. இந்தோனேசியாவிற்கு முகமையில் அனுப்புவதற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த தலைமைப் பொறியாளராகிய (திட்ட அமைப்பு) - (Chief Engineer, Project Planning) மேஜர் என். இராமச்சந்திரன் அவர்களை இந்த அரசு பரிந்துரைசெய்துள்ளது.

THIRU K. VINAYAKAM: What is the object of deputing this expert from the Industrial Development Corporation of our State? Is it just to give advice or to encourage installing of an industry in the public sector in Indonesia or in any private sector in Indonesia with the help of Dalmia Company from our country?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறு அளவிலே மூலப்பொருள் கிடைக் கிற இடங்களில் சிறிய தொழிற்சாலையை அமைக்க முடியும் என்று ஒரு பைலட் ஸ்கீம் நம்முடைய தமிழ் நாட்டின் சார்பிலே வெற்றியாக நடத்தி முடித்திருக் கிறார்கள். அதைச் செய்து முடித்தவர் இந்தப் பொறியியல் வல்லுநர் என்ஜி னியர் திரு. ராமசந்திரன் அவர்கள். வெளிநாடுகளில் இப்படிப்பட்ட இயந்திர சாதனங்கள் வேண்டும் என்று அவர்கள் கேட்டிருந்தார்கள். இண்தோனே ஷியா நாட்டில் இது போன்ற சிறிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், அங்கே அவர்கள் சென்று அந்தத் தொழிற்சாலையை





அமைப்பதற்கு யோசனை கூற இருக்கிறார்கள். அவர்கள் யோசனை கூறியதற் குப் பின்னால் நாம் இங்கே தோற்றுவித்தால் புதிய இயந்திரசாதனம் அவர் களுக்குத் தரப்படும். அதனுடைய விலையை நமக்குத் தருவார்கள்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த பைலட் ஸ்கீம், டால்மியா புரத்திற்குப் பக்கத்தில் அமைந்துள்ள தொழிற்சாலையில் உற்பத்திசெய்த சிமெண்டு தரமாக இல்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 399.**

## *Coir industry*

*399 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government propose to set up six coir industrial centres or factories in our State; and

(*b*) if so, in what places; and at what cost?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம். இதற்கான திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

(இ) இந்த இடங்கள் தஞ்சாவூர், திருச்சி, தென்-ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் தென்னந்தோப்புகள் அதிக மாக உள்ள இடங்களில் நிறுவலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திட்டவட்டமான இடங்கள் இன்னும் குறிக்கப்படவில்லை. ஒவ்வொரு நிறு வனமும் நிலம், கட்டிடங்கள் இயந்திரங்களுக்காக ரூ. 60,000 மதிப்பீடு உள்ளவை.

திரு. கே. விநாயகம் : இந்தக் கயிறு திரிக்கின்ற வேலை—நம்முடைய மாவட்டத்திலும்—உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** செங்கற்பட்டு மாவட்டத்தில் கனம் அங்கத் தினர் தொகுதியில் கயிறு திரிக்கும் வேலை வேண்டும் என்று அவர்கள் ஆசைப் படுகிறார்கள். அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கான திட்டம் தயாரித்து கயிறு திரிப்பதற்கான வேலையைப் பற்றி அவர்கள் ஆலோசனை கூறலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி ஜில்லாவில் ஈத்தா மொழியில் இப்பொழுது ஒரு டிரெயினிங் சென்டர் இருந்துகொண்டிருக்கிறது. அங்கே கயிறுப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கிறது. ஆகவே, அந்த நிறு வனத்தை அங்கு தொடங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப் படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படுத் துவது பற்றியும் நம்முடைய பரிசிலனையில் இருக்கிறது. நாம் மொத்தம் 20 மாண்புயாக்சரிங் யூனிட்களும் ஒரு மத்திய சங்கமும் அமைக்கவேண்டும் என்று

முடிவு செய்திருக்கிறோம். இதிலே கன்னியாகுமரி மாவட்டத்தையும் இணைப்பதற்கு ஏற்கெனவே பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். மொத்தத் திட்டத்தினுடைய செலவு கிட்டத்தட்ட ரூ. 23.85 லட்சமாகும். இதிலே அரசாங்கம் முடிவெடுத்த பின்னாலே எந்தெந்த மாவட்டங்கள் என்று நாம் முடிவு எடுக்கலாம்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: செங்கற்பட்டு மாவட்டத்தில் இடைக்கநாடு என்ற இடத்தில் கூட்டுறவு கயிறு உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு முன்னால் கூட அதைப்பற்றி ஒரு பரிசீலனை நடைபெற்றிருப்பதாக அறிகிறேன். இந்த கயிறு உற்பத்தித் தொழிற்சாலையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்கள் அங்கு இது மாதிரி ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிச் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு சங்கம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களேயானால், அரசாங்கம் அதற்கு நிச்சயம் உதவி செய்யும்.

திரு. எம். சுரேந்திரன்: ஸார், இந்த கயிறு தொழிற்சாலை என்று சொல்வது, சென்னை மரத்திலிருந்து கிடைக்கிற எல்லா பொருள்களையும் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டும். ஓமலூரில் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ் பிராஜெக்ட்டின்கீழ் இம்மாதிரி ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காக ஒரு தீர்மானம் போட்டு, சிபார்சு செய்து அனுப்பப்பட்டிருக்கிறது. சேலம் ஜில்லாவில் தென்னந்தோப்புகள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியிலே இந்தக் காரியத்தை நடத்துவதற்கான ஒத்தாசை, உதவி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்னாலே அளித்த பதிலில் சேலம் மாவட்டமும் சேர்ந்திருக்கிறது.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, கயிறு தொழிற்சாலை கோவையிலே ஆரம்பிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது தான் இந்தத் திட்டத்தை நம்முடைய இயக்குனர் அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி அரசாங்கம் அனுமதி கொடுத்தவுடன் அதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: கன்னியாகுமரி மாவட்டத்தில் ஈத்தன்குழியில் கயிறு பயிற்சி தொழிற்சாலையில் பயிற்சி பெற்ற மாணவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். பல மாவட்டங்களில் கயிறு தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்பொழுது இந்தப் பயிற்சி பெற்ற மாணவர்களின் நிலைமையை பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பயிற்சி கொடுக்கின்ற திட்டத்தில் வேலையும் சேர்த்துக் கொடுக்கவேண்டும் என்பதல்ல. நாம் இதிலே பயிற்சி கொடுக்கிற காரணம் அவர்கள் தனியாக தொழிலைத் துவங்குவதற்கு வாய்ப்பு இருக்





கிறது. அம்மாதிரி அவர்கள் தொழில் தொடங்குவதற்கு அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய அத்தனை உதவியும் செய்கிறது. அதனால் அந்தத் தொழில் வளரவேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கம்.

திரு. எஸ். அக்னிராஜு: மதுரை மாவட்டத்தில் வைகை ஓரத்தில் கரைப் பகுதியில் லட்சக்கணக்கான மரங்கள் இருக்கின்றன. அந்த மாவட்டம் பற்றி பரிசீலனையில் இருக்கிறதா? அப்படியில்லை என்றால், அங்கே கயிறு திரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்காததின் நோக்கம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்னால் குறிப்பிட்டபடி எந்தெந்த மாவட்டங்களில் முயற்சிகள் எடுக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் உதவி செய்யவேண்டும் என்பது தான் இந்தத் திட்டத்தின் குறிக்கோள். கிட்டத்தட்ட, ரூ. 82,000-ல், ரூ. 70,000 கடனாகக் கொடுக்கிறோம். ஸ்டேட் எய்டு இன்டஸ்ட்ரீஸ் ஆக்டின் கீழ் கடனாகக் கொடுக்கிறோம். எந்தெந்த இடத்தில் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் இருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் அரசாங்கம் உதவி செய்யும். கனம் அங்கத்தினர்கள் ஆர்வத்தோடு இந்தத் தொழிலில் ஈடுபட்ட மக்களை ஒன்றாகத் திரட்டி கூட்டுறவு சங்கம் அமைப்பதிலே ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே இந்தக் கயிறு திரிக்கும் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசாங்கம் ஊக்கம் கொடுக்கிறதா அல்லது தடுத்து நிறுத்துகிறதா என்று அறியலாமா?

(பதில் இல்லை.)

## *Mulberry plantation in Hosur taluk*

*400 Q.—Thiru B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Indsustries be pleased to state—

(a) Whether any scheme was introduced in the year 1967–68 to give poramboke lands for lease to plant mulberry plantation in Hosur taluk;

(b) if so, the extent given for lease; and

(c) the extent in which mulberry has been raised so far?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 20.70 ஏக்கர்.

(உ) 9.50 ஏக்கர்.

Thiru K. S. KOTHANDARAMIAH: Some years back about eleven thousand acres of poramboke lands were set apart for giving to those who come forward to take up mulberry cultivation. It was entrusted to the Revenue Department, but it has not done anything. During the last budget session I suggested that a committee may be formed with the Sub-Collector, the Sericulture Expert and the local M.L. As. to make arrangements for giving the lands quickly. But so far no action has been taken. May I request the Hon. Minister to take early steps?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நேற்று முன் தினம்தான் இதற்காக அப்படிப்பட்ட விவசாயிகளைச் சார்ந்த மாநாடு ஹோசூரில் நடத்தப்பட்டது. இந்த 11,000 எக்கர் சொச்சம் புறம்போக்காக, தனிப்பட்டவர்கள் ஆக்ரமிப்பில் இருக்கிறது. இதைத் திருத்தி பட்டா செய்து கொடுங்கள், மல்பெரி செடியை உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய கருத்திற்கு ஏற்ப அந்தப்பகுதியில் அரசாங்கத்தின் சார்பில் கிட்டத்தட்ட 2,400 ஏக்கரில் இந்தச் செடிகளை உற்பத்திசெய்வதற்காக தனிப்பட்ட நபர்கள் அனுபவிக்கும் நிலங்களில் அவர்களுக்கே பட்டா கொடுத்து, அந்தச் செடியைப் பயிர்செய்ய உதவி செய்ய வேண்டும் என்று நேற்று முன் தினம் கூறிய ஆலோசனைகளை அரசாங்கம் பரிசீலிக்கும்.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** தலைவர் அவர்களே, தற்சமயம் பட்டின் விலை அதிகமாக இருப்பதால், இந்த முசுக்கட்டை மரங்களை அதிகமாக உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய பட்டுத் தொழில் எவ்வளவு அதிகமாக நடைபெற்றாலும், நமக்குக் கிடைக்கக் கூடிய [illegible] என்ற மூலப் பொருள் கர்நாடகத்திலிருந்துதான் கிடைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே தான் அதற்கான முயற்சியை ஹோசூரில் ஒரு பகுதியில் தொடங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

### சிறுவாணி குடிநீர்த் திட்டம்

* 401 **வினா—திரு. க. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சிறுவாணி குடிதண்ணீர் திட்டத்திற்காக அணைகள் கட்டும் வேலை எப்போது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது குறித்து கேரள அரசுடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

**திரு. க. துரைசாமி :** பேரவைத்தலைவர் அவர்களே, கோவையில் எப்ரல்-மே மாதங்களில் மிகுந்த தண்ணீர்க் கஷ்டம் வரும். ஆகவே, மிக விரைவில் வேலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ? எவ்வளவு காலத்தில் இது முடியும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எப்ரல்-மே மாதங்களில் வருகிற தண்ணீர் தட்டுப்பாட்டை இந்த திட்டத்தை நிறைவேற்றினாலும் தீர்க்க முடியாது. மற்ற திட்டமும் நடைபெறவேண்டும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கேரள அரசின் ஒப்புதல் பெற்றவுடன் வேலைகள் தொடங்கப்படும்.

### பூம்புகாருக்கும் சென்னைக்குமிடையே பேருந்து பணி

* 402 **வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னையிலிருந்து பூம்புகாருக்கு அரசுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசுக்கு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.





**திரு. எஸ். கணேசன் :** தலைவர் அவர்களே, பூம்புகார் நகரம் இலக்கியச் சிறப்புப் பெற்றிருக்கிறது என்பதை அறிந்து இப்பொழுது பயணிகள் அதிகமாக அங்கே வருகிறார்கள். அரசும் கிட்டதட்ட 3.5 லட்சம் ரூபாய் செலவில் ஒரு கலைக்கூடம் கட்டி வருகிறது. இனிமேலாவது, அந்த இடத்திற்கு அரசாங்க பஸ் விடும் உத்தேசம் அரசுக்குண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாயவரத்திலிருந்து பூம்புகாருக்கு உள்ள தூரம் 21 கிலோ மீட்டர்கள்தான். பூம்புகாருக்கு இருக்கும் சாலை போக்குவரத்துக்கு அவ்வளவு வசதியாக இருக்கவில்லை. ஆகவே, தற்போது எக்ஸ்பிரஸ் பஸ் விட செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, பூம்புகாரின் சிறப்பை நிலை நாட்ட அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, ரெகுலர் பஸ் விடுவதற்கு இப்பொழுது வசதிப்படாவிட்டாலும், மாமல்லபுரத்திற்கு ஸ்பெஷல் பஸ் விடுவதுபோல், பூம்புகாருக்கும் அத்தகைய பேருந்து விடுவதற்கு முயற்சி செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினருடைய கருத்து ஏற்கப்பட்டு, பரிசீலிக்கப்படும்.

### *Malur—Hosur Railway line*

*403 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) Whether this Government has recommended to the Southern Railway authorities at Madras, to extend the Broad-gauge Railway line from Malur Railway Station on Madras—Bangalore Broad guage Railway line to Hosur on the Salem—Bangalore Railway line; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** (அ) & (இ) சேலம் மாவட்டத்திலுள்ள ஹோசூரிலிருந்து மைசூர் மாநிலத்தின் கோலார் மாவட்டத்திலுள்ள மாலூர் வரையில் இருப்புப்பாதை அமைப்பதை நான்காவது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி மாநில அரசு பரிந்துரைத்துள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Salem-Bangalore meter gauge line and the Madras-Bangalore broad gauge line run parallel to each other and do not meet. Somewhere they should be connected to increase the profit of the Salem–Bangalore railway. The best place for that is Hosur, because the distance between them is only twenty miles. This link has a vast hinterland. The Rayalaseem district; The Kalan district; The East South Bangalore district with the Rayalaseema districts, will have access to the Salem-Bangalore railway. Out of these twenty miles, nine miles lie in Mysore State and eleven miles lie in Tamil Nadu State. I have sent a memorandum to the Mysore Government and they are considering it. May I request the Hon. Minister to take necessary steps in the matter?

The HON. THIRU S. J. SADIQ PASHA : We have already taken necessary steps in the matter.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** சார், வேறு எந்தெந்த வேலைகள் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன? திண்டுக்கல்-கூடலூர் இரயில் பாதை சர்வே செய்யப்பட்டும், வேலை நடக்கவில்லை. இப்பொழுது அதைப் பற்றி பரிந்துரை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கனம் உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், பதில் அளிக்கலாம்.

### ஆஸ்டின்பட்டிக்கு உபபாதை

*404 வினு—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆஸ்டின்பட்டியிலுள்ள காசநோய் மருத்துவ மனைக்கு கணக்கன்குளத்துக்குத் தெற்கே மதுரை—திருமங்கலம் சாலையில் புதிதாக உபாதை ( by pass ) போடுவதற்கான செலவு எவ்வளவு?

(இ) அந்தப் பாதை இப்போது போக்குவரத்துக்குப் பயன்படுத்தப் படுகிறதா?

(உ) இல்லையென்றால் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ. ஜே. சாதிக் பாட்சா:** (அ) ரூபாய் 1,07,069.

(இ) மேற்படி பாதையின் குறுக்கே உயர் அழுத்த மின்விசைக் கம்பிகள், 5 அடி முதல் 16 அடி உயரத்தில் செல்வதால் நிறைந்த பளுவுடைய லாரிகள் தவிர மற்ற எல்லா லாரிகளும் செல்கின்றன.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். அக்னிராஜு:** தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆஸ்டின்பட்டியிலுள்ள மருத்துவமனைக்கு வழித்தடம் இருக்கிறது. தற்சமயம் கேட்கக் கூடிய இந்தப்பாதை, அவசியமான திட்டமாக இருக்கிறது. மின்சாரக் கம்பிகள் இருக்கிறது என்று ஏற்கனவே தெரிந்திருந்தும் இந்தப் பாதை அமைக்கப் பட்டிருக்கிறது. அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மின் கம்பிகள் தரை மட்டத்திலிருந்து 20 அடி உயர்த்துவது பற்றி மாநில மின்சாரக் குழுவின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

### *Tiruthani-Podaturpet road*

*405 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal with the Highways Department to form and reconstruct the road between Tiruthani and Podaturpet (via) Ramasamudram and Keechalam?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இல்லை.



**திரு. கே. விநாயகம்:** சார், இப்பொழுது இருக்கிற பாதை திருத்தணியிலிருந்து போத்தூர்பேட்டைக்கு போகவேண்டும் என்றும் ராமகிருஷ்ண ராஜுப் பேட்டைக்குப் போய் இந்த ஊருக்கு வர நீளம் 28 மைல், ஆனால் நான் சொல்லுகிறபடி குறுக்கே போடுவதானல் 15 மைல்தான் போகவேண்டும் அதில் 10 மைல் கூடுதல், ஆகவே இந்தப்பாதையைப் போடவேண்டும் என்று பல ஆண்டுகளாக முயற்சித்தும், இந்தப்பாதை மூன்று பஞ்சாயத்து யூனியன் களில் கலந்து போவதால், அவர்களிடம் போதிய பணம் இல்லாததால், கைவிட்டு இருக்கிறார்கள். நம்முடைய அரசின் ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் எடுத்துச் செய்ய, ஆராய அமைச்சர் அமைச்சர் உத்தரவு போடுவார்களா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இந்தப் பாதையின் மேம்பாட்டிற்கு தோராயமாக செலவுத்தொகை ரூ. 7 லட்சம் இசைவு அளிக் கப்பட்ட திட்டத்திலோ அல்லது நான்காவது திட்டத்திலோ இந்தப் பணி சேர்க்கப்படவில்லை. மேலும் மாண்புமிகு உறுப்பினர் உள்ளடக்கிய செங்கை மாவட்ட வளர்ச்சி மன்றம் இசைவு கொடுத்தவற்றில் இது இடம் பெறவில்லை. ஆகவே, நிதி நிலை சீராகும் வரையில் காத்திருக்க வேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** இந்த போதட்டூர்பேட்டைக்கு பாதை போடுவது அவசியம். இதை அதிகமாக நெசவாளிகள்தான் உபயோகிக்கிறார்கள் நூல்களை எடுத்துப்போவது, கைத்தறித் துணிகள் வியாபாரம் முதலிய காரியங்களுக்கு. இதனல், இந்தப் பாதையை, செலவைப் பார்க்காமல், ஸ்டெப் ஸ்டெப் ஆக, கொஞ்சம் கொஞ்சமாகப் போட அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் சாலைகளைச் சீராக்க, செப்பனிட வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அதற்கு மாவட்ட வளர்ச்சி மன்றம் முதலிடம் கொடுத்து எந்தத் திட்டத்தை அனுப்புகிறதோ அப்படிப்பட்ட திட்டங்களை வரிசைப்படுத்தி அவைகளுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. குறிப்பிட்ட பணி அப்படி மாவட்ட வளர்ச்சி மன்ற இசைவுபெற்ற திட்டங்களில் இடம் பெறவில்லை. இதற்கும் அவசியம் என்றாலும், இதைவிட அவசரமும், அவசியமும் என்ற பணிகள் முதலிடம் பெறுகின்றன. ஆகவேதான், நிதிநிலை சீராகும் வரையில் காத்திருக்க வேண்டும் என்று சொன்னேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்கள் பலவற்றில் போதட்டூர்பேட்டை பாதை இடம் பெறுவதற்கு நிதிநிலைமை இடந் தாவில்லை, சூழ்நிலை சரியாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னாலும், போதட்டூர்பேட்டை நீண்டநாட்களாக ஆந்திர மாநிலத்தில் இருந்து, அதிக அதிகமான அளவிலும், கொடுமையாகவும் புறக்கணிக்கப்பட்டு, பின் நம் நாட்டோடு சேர்ந்திருக்கிறது. நம் நாட்டுடன் சேர்ந்து சுமார் பத்தாண்டு காலம் ஆகியும் இன்னும் போக்குவரத்து சீர்திருத்தப்படாமல் இருப்பதால், அதற்கு விசேஷ தன்மை காட்டி, அரசு அதை முன் வரிசையில் வைத்து அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அது தமிழகத்துடன் சேர்ந்த பிறகு, உரிய இடத்தை, உரிய காலத்தில் பெற முடியாமல் போய்விட்டது என்பது நியாயமாக இருக்குமானல், நம்முடைய சிலம்புச் செல்வர் கூறியதுபோல், அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை பெற்று, தேவையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படலாம்.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, இந்தப் பாதை போடுவதால் 7 லட்சம் ரூபாய் செலவாகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நிதி நிலைமை சரியாக இல்லையென்று சொல்வது நியாயமாக இருந்தாலும், டெல்லியிலிருந்து 17 கோடி ரூபாயை வாங்கினீர்களே, அதை வைத்துக்கொண்டு பஞ்ச நிவாரண வேலையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சிபாரிசு செய்தும், அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சொல்லியும், பஞ்ச நிவாரணக் கமிஷன் அதை சேர்த்துக்கொள்ளாமல் விட்டுவிட்டதே, அதற்கு ஏதாவது அரசியல் காரணம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதற்கு அரசியல் காரணம் எதுவும் இல்லை. அப்படி அரசியல் காரணம் எதுவாகிலும் இருந்திருக்குமானால், கனம் உறுப்பினர் அவர்களுடைய தொகுதியான திருத்தணி தொகுதிக்கு வறட்சி நிவாரணத் தொகை அதிக அளவில் ஒதுக்கப்பட்டிருக்காதே என்பதையும் உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, அரசியல் காரணம் எதுவும் இல்லை.

### அறந்தாங்கி பேரூராட்சி

* 406 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி பேரூராட்சியை நகரசபையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இல்லை.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அம்மாதிரி மகஜர் ஏதாவது பேரூராட்சியிலிருந்து வந்ததா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் தலைமைச் செயலகத்தில் இல்லை. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், ஊர் வளர்ச்சி இயக்குனர், நகராட்சி இயக்குனர் ஆகியோர்களிடம் இதுபற்றி கேட்கப்பட்டது. அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லையென்று அறிவித்துவிட்டனர். மேலும் அண்மையில் அறந்தாங்கி பேரூராட்சி மன்றம், தன் 31—12—1969-ம் தேதிய 200-ம் எண் தீர்மானத்தில் தற்பொழுது நகராட்சியாக மாற்றத் தேவையில்லையென்று தீர்மானிக்கப்பட்டது என்று தீர்மானித்துள்ளது.

திரு. ஆர். நாகசுந்தரம்: தலைவர் அவர்களே, நகரப் பஞ்சாயத்துக்களை நகராட்சியாக உயர்த்துவதற்குத் தேவையான மக்கள் தொகை, வருமானம் இருந்தும் பல நகரப் பஞ்சாயத்துக்கள் நகராட்சியாக உயர்த்தப்படவில்லையே, அடுத்த ஏப்ரலிலிருந்தாவது அவைகளை உயர்த்தும் திட்டம் அமுலுக்கு வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களுடைய கூற்று தவறானதாகும். ஓராண்டு வருமானத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நகராட்சியாக மாற்றுவது அல்ல. மூன்று ஆண்டுகளில் கிடைக்கும் நிலையான வருமானத்தை அடிப்படையாக வைத்துத்தான் நகரப் பஞ்சாயத்துக்கள் நகராட்சியாக மாற்றப்படுகின்றன. தற்போது



வருகின்றவைகளை மட்டும் வைத்துக் கணக்கிட்டால், ஆண்டுக்காண்டு நகராட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகிவிடும். கிராம வளர்ச்சித்துறையில் இயக்குநர் அவர்களின் குறிப்பு பெறப்பட்டு, தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரியகாலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Fire accident in Ennore Thermal Power Station*

* 407 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there was a fire accident in the Ennore Thermal Power Station on 13th September 1969;

(*b*) if so, the reasons therefor and the action taken thereon; and

(*c*) the extent of loss incurred?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) எண்ணூர் அனல் மின்சார நிலையத்தில் 13—9—1969 அன்று பிற்பகல் ஒரு சிறு தீ விபத்து ஏற்பட்டது. கட்டுமான உருக்குப் பணியில் உருக்குப் பாளங்களை ஆக்சி-அசிடிலின் வாயுவைக் கொண்டு வெட்டுகையில் உருகிய இரும்புத்துண்டு ஒன்று யூனிட் ஸ்விட்சி கியரில் வைக்கப்பட்டிருந்த தேவதாரு மரத்தாலான பெட்டியின் மீது விழுந்ததனால் அந்த தீ விபத்து நிகழ்ந்தது. அத் தீ விபத்து சிறியதேயாகும். அது உடனடியாக அணைக்கப்பட்டுவிட்டது.

(உ) தீ உடனடியாக அணைக்கப்பட்டுவிட்டதால், கருவிகளுக்குச் சேதம் எதும் ஏற்படவில்லை.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின்சார நிலையத்திலே ஏற்பட்ட தீ விபத்தை உடனடியாக நிறுத்த முடியாத அளவிற்கு தீயணைக்கும் என்ஜின் பக்கத்திலே இல்லாமல் வெகுதூரத்திலேயிருந்து அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? தீயணைக்கும் நிலையத்தை பக்கத்திலே நிறுவ முயற்சி எடுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, உண்மை அல்ல.

### *Beggar Homes*

* 408 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have any proposal to increase the number of beggar homes in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: (அ) & (இ) ஆம். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் இத்திட்டம் பற்றி அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. உரிய நடவடிக்கை பற்றி ஆராய தமிழக முதல்வர் விரைவில் ஒரு கூட்டம் கூட்டுவதற்கு திட்டமிட்டுள்ளார்.

திரு. பி. எஸ். தனுஸ்கோடி: தலைவர் அவர்களே, இந்தப் பிச்சைக்காரர்கள் விடுதியை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கிற தற்போதைய சட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் நகரசபைகள் பிச்சைக்கார விடுதிகளை நடத்துவதற்கு அரசாங்கம் பிச்சைக்காரர் ஒருவருக்கு 15 ரூபாய் வீதம் மான்யம் அளித்து வருகிறது. பல நகரசபைகள் நடத்திவந்தாலும், சிறப்பாக, இன்னும் சீரிய முறையில் நடைபெறவில்லை யென்று 'மதிப்பீட்டுக் குழு' தன்னுடைய அறிக்கையில் சொல்லியிருக்கிறது. இவற்றைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் கூட்டும் கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்படும்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பிச்சைக்கார, அனாதை விடுதிகளை தனியார் துறையினர் நடத்த அரசு அனுமதி தருமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே தனியார் இதை நடத்தி வருகிறார்கள். ஓட்டேரியிலுள்ள 'தயாசதனம்' என்ற விடுதியில் 600 பிச்சைக்காரர்களை வைத்து நடத்தி வருகிறார்கள்.

## *Staff of Revenue Department in Coimbatore*

* 395 Q.—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the staff of Revenue Department observed 'demands day' at Coimbatore about 14th November 1969; and

(b) if so, the details of their demands?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) அவர்களது கோரிக்கைகளின் விபரங்கள் பின்வருமாறு:—

(1) சம்பள ஆணைக்குழுவில் அவர்களது சங்கத்திற்குப் பிரதிநிதித்துவம் அளித்தல்.

(2) இடைக்கால நிவாரணம் அளித்தல்.

(3) அலுவலர் அந்தரங்க கோப்பு முறையை நீக்குதல்.

(4) ஆட்குறைப்பு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வேலை கொடுத்தல்.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, அவர்கள் தெரிவித்த கோரிக்கைகள் எவ்வளவு நியாயமானது என்பதை உணர்ந்து அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அமல் செய்வதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்று, அவ்வப்போது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் எப்போதும் முயற்சி செய்து வருகிறது. இப்போது இடைக்கால நிவாரணம் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அதேமாதிரியாக மற்றக் கோரிக்கைகளையும் பல்வேறு கட்டங்களிலே எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ, அப்படிச் செய்ய அரசு முயற்சிக்கும்.



திரு. அ. லெ. சுப்ரமணியம்: தலைவர் அவர்களே, இந்தச் சம்பள ஆணைக் குழுவிலே என்.ஜி.ஓ. க்கள் பிரதிநிதி ஒருவர் இடம் பெற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் அப்படி அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் சார்பில் அரசுச் செயலாளர் ஒருவர் இடம் பெற்றிருக்கிறார். அதேபோல ஊழியர்கள் சார்பில் ஒருவர் இடம் பெற வழிவகை செய்யப்படுமா? இது நியாயமான வாதம் அல்லவா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு என்.ஜி.ஓ க்கள் சார்பில் ஒருவர் சம்பள ஆணைக்குழுவில் இடம்பெற வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அண்டை மாநிலத்தில் அப்படி இருப்பதாக உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அண்டை மாநிலத்தில் இருந்தால், அதையெல்லாம் நாமும் பின்பற்ற வேண்டுமென்ற நியதி இல்லை. அந்தந்த மாநிலங்களின் தேவைக்கேற்ப செயல்படுகிறோம். மேலும் அந்தப் பிரதிநிதி அங்கே போய் உட்கார்ந்துகொண்டுதான் செய்ய வேண்டும் என்பதல்ல. நியாயத்தினுடைய அடிப்படையைப்பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நியாயத்தை அழித்துவிட்டு இந்த அரசாங்கம் எதுவும் செய்யவில்லை. நியாயமான கோரிக்கைகளை சம்பளக் கமிஷன் முன்பு கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். என்.ஜி.ஓ. க்களுக்காக சிலபல நன்மைகளைச் செய்யலாம் என்பதற்காக சம்பள ஆணைக்குழு அமைக்கப்பட்டு, கோரிக்கைகள் கொடுக்கலாம் என்ற வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் இடம் அளிப்பதற்கு இது மகாசபை அல்ல.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதி இப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறதா? இதற்கு முன்னால் இருந்த அரசாங்கத்தில் இப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, 1967-க்கு முன்னால் இருந்த நிலவரம்பற்றி எனக்குத் தெரியாது. ஒரு நிர்வாக இயந்திரத்திலே அச்சாணி போன்றவர்கள் அரசாங்க அலுவலர்கள். அவர்களுடைய நியாயமான தேவைகளை நிறைவேற்றுவதிலும், நல்ல வகையிலே பரிவுணர்ச்சி காட்டுவதிலும் இந்த அரசு எந்த அரசுக்கும் பின்வாங்கியதில்லை.

Thiru K. VINAYAKAM: One of their persistent demands seems to be to give up or not to maintain confidential files regarding them. What is the attitude of this Government on this particular subject? Has the Government taken any decision over this issue or is this issue to be referred to the Pay Commission, which has no jurisdiction over this aspect?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பர்சனல் பைல் முறையை அறவே எடுத்துவிடுவதா, இருக்கவேண்டும் என்றே வைத்திருப்பதா என்கிற பிரச்சினை இல்லை. இதில் இருக்கும்படியான குறைபாடுகள், பலவீனங்கள் இவற்றை எப்படி நீக்கலாம் என்பதுபற்றி பப்ளிக் டிபார்ட்மெண்டு இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. என். வரதராஜன் :** ஏற்கெனவே வேலையில் இருந்து எடுக்கப்பட்டிருப்பவர்களின் கோரிக்கையைப் பரிசீலிக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வேலையில் இருந்து இடம் இல்லாத காரணத்தினால், நீக்கப்பட்டவர்களின் நிலையைக் கவனித்து அவர்களுக்கு மீண்டும் வேலை அளிக்க வசதிகள், விதிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

According to instructions, Collectors should prepare a list of probationers and approved probationers discharged for want of vacancies in the revenue district concerned and allot those persons to the various offices of the different departments in the district where there may be vacancies or where non T.N.P.S. Candidates are working.

இந்தமாதிரி வேறுதுறைகளில் இடம் காலி இருக்குமானால் அதில் இவர்களைப் போடுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

In making such allotment among the several offices, Collectors have been asked to use their discretion and to see that undue hardship to any person is avoided. The appointing authority from the several departments in the districts have been instructed to apply to the Collector for allotment of persons to fill up temporary vacancies from the surplus persons of the Revenue department of that district.

இதேமாதிரி சிவில் சப்ளை டிபார்ட்மெண்டில் இருந்து வேலை இழக்கும்படியானவர்களுக்கும் மற்ற இடங்களில் காலி விழும்போது வேலை கொடுக்க முதல் வாய்ப்பளிக்கவேண்டும் என்று அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது.

### அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரிக்கு இடம்

*** 396 வினா—திரு. இரா. மாணிக்கவாசகம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரிக்கு இடம் கேட்டு விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர் அவினாசிலிங்கம் கல்வி பொறுப்பாண்மைக் கழகம் கேட்டுள்ள நிலங்கள், கோயம்புத்தூரில் உள்ளதும், இந்திய அரசினால் நடத்தப்பட்டு வருவதுமான தென் பகுதி வனச்சரகர்கள் கல்லூரியின் பொறுப்பில் உள்ளதால் இது குறித்து மத்திய அரசின் அமைச்சகத்துடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசிலிங்கம் கலைக் கல்லூரிக்கு இடம் இல்லாது பெரும் நெருக்கடியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் மிகவிரைவில் இந்த இடத்தை வாங்கிக் கொடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பழங்காலத்தில நம்மிடம் இருந்த ஏராளமான நிலங்களை அவர்களிடம் கொடுத்துவிட்டோம். தற்போது அவினாசிலிங்கம் கலைக் கல்லூரியினர் 3 ஏக்கர் நிலம் வேண்டும் என்று நம்மிடத்தில் விண்ணப்பித்துக்கொண்டார்கள். வனக் கல்லூரிக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அவர்கள் கல்லூரியையும் வைக்கவில்லை. ஆகவே அந்த நிலத்தில் இருந்து 3 ஏக்கர் நிலம் இவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்தினோம். முதலில் ஒரு இஞ்சு கூட கொடுக்கமாட்டேன் என்றவர்கள் திரு. ஜகஜ்ஜீவன்ராமிடம் நம்முடைய நியாயமான கோரிக்கையை எடுத்து வைத்ததன் காரணமாக இப்போது 1 ஏக்கர் நிலம் தர முன்வந்திருக்கிறார்கள். மூன்று ஏக்கர் நிலத்தையும் பெற நாம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. விநாயகம் :** பழங்காலத்தில் தாராளமாக மத்திய சர்க்காரிடம் மாட்டிக்கொண்டோம் என்றார்கள். இப்போது கழட்டிக்கொள்ள வழி ஏதாவது உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கழட்டிக்கொள்வது, கயிறு திரிப்பது இவைகளில் எல்லாம் கனம் உறுப்பினருக்கு எப்படி அபாரமான பற்றுதல் ஏற்பட்டது என்று தெரியவில்லை. (சிரிப்பு)

**திரு. எம். பூபதி :** வனக் கல்லூரிக்கு அளவு கடந்த நிலம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். குறைந்த பட்சம் இந்த 3 ஏக்கரா நிலத்தையாவது திரும்பப்பெற்று அவினாசி கலைக் கல்லூரிக்கு அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் முன்பு குறிப்பிட்டேன். திரு. ஜகஜ்ஜீவன்ராம் அவர்களுக்கு 23—7—1969-இல் கடிதம் எழுதினேன். முன்பு ஏதோ வெளிநாட்டுக்காரருக்கு மறுப்பதுபோல ஒரு இஞ்சு நிலம் கூடக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். பையப் பைய இப்போது ஒரு ஏக்கரா கொடுக்க இசைந்துள்ளார்கள். திரும்பவும் நம் நிலையை வற்புறுத்தி வருகிறோம். அவர்கள் மனம் திரும்பும் என்றே எதிர்பார்க்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** அமைச்சர் அவர்கள் பதில் அளித்தது போல வனக் கல்லூரிக்கு அதிக இடம் இருப்பதாகச் சொன்னார்கள். வனக் கல்லூரி அதிகாரிகள் அங்கிருந்த பயிற்சிக் கல்லூரியை டேராடுனுக்கு மாற்றிவிட்டார்கள். ஆகவே, அந்தப் பயிற்சிக் கல்லூரியை அங்கே கொண்டுவர வேண்டும், இல்லாவிட்டால் அந்த முழு இடத்தையும் திரும்பக்கொடுத்துவிட வேண்டுமென்று இந்த அரசு கேட்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பயிற்சிக் கல்லூரியை டேராடுனுக்குக் கொண்டுபோய்விட்டார்கள். இடத்தைக் கொண்டுபோக முடியவில்லை. திரும்ப அந்த ட்ரெயினிங் கல்லூரியை இங்கே கொண்டுவரவேண்டும் என்று வற்புறுத்தவேண்டும் என்கிற கருத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆயினும் கோவையில் ஏற்படுத்த இருக்கிற விவசாயப் பல்கலைக் கழகத்துடன் இந்தக் கல்லூரியையும் சேர்த்து, மத்திய அரசிடம் இருக்கிற கல்லூரியையும் சேர்த்து அமைக்க வற்புறுத்துவதாக இருக்கிறது.

மு.ப. 10-00 **மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

அடுத்ததாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி 82-இன் கீழ் இந்த அவைக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக்' குறிக்கும்.

## (2) அமைச்சர்களின் விளக்க உரைகள்

### (அ) தமிழக பரிசுச் சீட்டின் மூலம் வரும் வருவாயைக் கொண்டு "தமிழ் நாடு சிறப்பு நலநிதி" என்ற நிதி அமைப்பு.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: In the second half of the year 1968, Tamil Nadu Government introduced the State Raffle Scheme. The response to the scheme has been heartening and is an indication of the keenness of the people of Tamil Nadu to participate in the Scheme which the Government have formulated for the benefit of the people at large. The transactions relating to the State Raffle Scheme have so far been part and parcel of the State's public account. A suggestion was made that if the proceeds from the Raffle were segregated and constituted into a Fund and the accretions in the Fund utilised to finance specific and identifiable projects for the benefit of people, those who participate in the scheme would have the satisfaction of knowing what precise projects their contributions are being utilised for. Government feel that there is considerable force in this suggestion and have therefore decided to accept it. Government have therefore ordered the constitution of a Special Fund called "The Tamil Nadu Special Welfare Fund" (தமிழ்நாடு சிறப்பு நலநிதி) All transactions relating to the Tamil Nadu Raffle Scheme will, with effect from 1st April 1970 be routed through this Fund. The accretions in the Fund will be utilised for the following purposes:

(i) Provision and expansion of medical facilities.

(ii) Elementary school buildings.

(iii) Slum clearance.

(iv) Any other developmental programmes approved by Government.

This fund will be administered by the Government in the Finance Department. It is hoped that this step will be welcomed by all sections of the people.



### (ஆ) வாலாசா ஊராட்சி ஒன்றியத் தலைவர்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் ஓர் அறிக்கையளிப்பார்கள்.

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மு.ப. 10-00
"வாலாசா ஊராட்சி ஒன்றியத் தலைவர் கையாடல் செய்துள்ளார். அவர்
மீது போலீஸ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. போலீஸ்
நடவடிக்கை எடுக்கும் முன்னாலே சர்க்கார் ஸ்டே கொடுக்கக்கூடிய
நிலைமையைச் சொல்கிறேன்." இந்தக் கருத்துக்களை எதிர்க் கட்சித்
தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில் கூறியுள்ளார்கள். இந்தக் குற்றச்
சாட்டுக்கு ஆதாரம் இருக்கின்றதா எனத் தலைவர் அவர்கள் கேட்டார்கள்.
ஆதாரம் தந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று மாண்புமிகு
முதல்வரவர்கள் இந்த மன்றத்தில் உறுதி கூறினார்கள்.

இது சம்பந்தப்பட்ட விவரங்கள் விசாரிக்கப்பட்டது. வட ஆற்காடு
மாவட்டம் அம்மூர் ஊராட்சி மன்றத் தலைவர் கையாடல் வழக்கில் நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்
களுக்குத் தந்திவந்தது. அந்தத் தந்தியிலே உடனடியாக விசாரித்து
நடவடிக்கை எடுக்க வேண்மென்று அண்ணா அவர்கள் 9—12—1967-ம் தேதி
உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த
ஊராட்சி மன்றத் தலைவர் 24—10—1968-ம் தேதி கைது செய்யப்பட்டார்.
வழக்குப் பதிவுசெய்து புலன் விசாரணை தொடங்கியது. இவர்மீது வழக்குத்
தொடர்வதற்கு அரசாங்கத்தின் அனுமதியை 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச்
சட்டம் 169-ஆம் பிரிவுப்படி பெறுதல் வேண்டுமா வேண்டாமா என்ற சட்டப்
பிரச்சினை எழுப்பப்பட்டது. இந்த வழக்குப் போன்ற பிற வழக்கு ஒன்றில்
அரசாங்கம் மேற்படி 169-ஆம் பிரிவுப்படி நடவடிக்கை எடுத்ததை எதிர்த்து
உயர்நீதி மன்றத்தில் அரசாங்கத்தின்மீது வழக்குப் போடப்பட்டிருந்தது.
அந்த வழக்கில் அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் கிரிமினல் வழக்குப் போட
லாம் என்று 22—7—1969-ம் தேதி தீர்ப்பளிக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்தில்
இந்தச் சட்டப் பிரச்சனை பரிசீலனையில் இருந்ததால் அரசாங்கம் அனுமதி
கொடுக்க இயலவில்லை. இந்தத் தீர்ப்புக் கிடைத்ததற்குப் பின்னர் மேற்படி
வாலாசா பஞ்சாயத்து யூனியன் தலைவர்மீது கிரிமினல் வழக்கை நடத்தும்
படி உத்திரவிட அரசாங்கம் அண்மையில் முடிவெடுத்துள்ளது. போலீஸ்
நடவடிக்கை எடுக்கவில்லையென்றும், அரசாங்கம் தடையுத்திரவு பிறப்பித்
துள்ளதென்றும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது முற்றிலும் தவறான
தகவல்களாகும். ஆதாரமில்லாமல் உண்மைக்குப் புறம்பான குற்றச் சாட்டு
களை அரசாங்கத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில்
கூறியது வருந்தத்தக்கதாகும்.

## (3) அறிக்கை அளித்தல்.

### எழுதுபொருள் அச்சுத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஏ.வி.பி. ஆசைத்தம்பி
அவர்கள் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளிப்பார்கள்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** தலைவர் அவர்களே, எழுதுபொருள், அச்சுத்
துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை பேரவைமுன் வைக்கி
றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 81-வது விதியின்கீழ் அறிக்கை கொடுக்க இருக்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாளை அல்லது மறுநாள் செவ்வாய்க் கிழமை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். எனவே நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

**(4) 1970-71-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—**

கோரிக்கை எண் 25—பழங்குடிமக்கள் அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—**

"நிதிக் கோரிக்கை எண். 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் * என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,85,17,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. VINAYAKAM : Sir, to discuss the policy and the desirability of giving as much facilities in the field of "Education" and "Government appointments" to the Backward Classes as given to the Scheduled Classes, I move the cut motion standing in my name—

That the allotment of Rs. 8,85,17,900 under Demand No. 25–Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes—be reduced by Rs. 100.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள், **பிற்பட்ட மக்கள் ஆகியோர் சிறுதொழில்கள் நடத்தக் கடன் வழங்குவது,** அல்லது கூட்டுறவு முறையில் நடத்த உதவுவது, அத்தொழில்களில் உற்பத்தியாகும் பொருள்களைச் சர்க்காரே கொள்முதல் செய்து மாநில அரசு விற்பனை நிலையம் மூலம் நியாய விலைக்கு விற்க ஏற்பாடு செய்ய வேண்டியது பற்றி **விவாதிக்க—**

"நிதிக் கோரிக்கை எண். 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,85,17,900-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை **முன்மொழிகிறேன்.**

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, அரிசனங்களின் வீட்டுமனைகள், பாதை வசதி போன்றவைகளை ஆராய்ந்து அறிந்து, அதைத் தீர்த்து வைப்பதில் காலவரையறை நிர்ணயித்துச் செயல்பட வேண்டுமென்பதை வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய **பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற** ரூ. 8,85,17,900-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை **முன்மொழிகிறேன்.**

---

* 101–123-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



DR. H. V. HANDE : Sir, to discuss the urgency in providing a pathway to the burial ground for the Harijan Colony in Thurinjapuram village in Thiruvannamalai taluk, North Arcot district, I move the cut motion standing in my name—

"That the allotment of Rs. 8,85,17,900 under Demand No. 25–Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes—be reduced by Rs. 100."

**திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் மதுக்கரை** பஞ்சாயத்து யூனியன் பகுதியில் அரிசனங்களுக்குக் குடிதண்ணீர் வசதி **செய்வதைப்பற்றி விவாதிக்க—**

"நிதிக் கோரிக்கை எண். 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய **பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற** ரூ. 8,85,17,900-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை **முன்மொழிகிறேன்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் **பேரவையின் விவாதத்திற்கு வருகின்றன.**

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த அரிசன நலத்துறை, **பின்தங்கிய வகுப்பினர் நலன் ஆகிய இரண்டு துறைகளுக்குமான மானியங்**களின்மீது என்னுடைய கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்துச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்த வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில் கொடுக்கப்பட்டிருப்பது தொகையைக் குறைக்க வேண்டுமென்று இருந்தாலுங்கூட உண்மையாகவே ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை போதாது, அதிகப்படியாக தொகையை ஒதுக்க வேண்டுமென்றும் பல இனங்களிலே செலவுகள் அல்லது ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகள் வெறும் பெயரளவிலே இருந்து கொண்டிருக்கின்றனவே தவிர, செயல்பூர்வமாக ஆக்க பூர்வமாக எந்த வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதோ, அந்த வேலைகளுக்குச் செலவு செய்யப்படவில்லை என்ற எங்கள் விளக்கத்தைக் கொடுப்பதற்காகத்தான் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறோம்.

இந்தத் துறை சமுதாயத்திலே மிகமிகத் தேவைப்படுகின்ற தமிழகத்தின் **ஆணிவேராக இருந்துகொண்டிருக்கின்ற பெரும்பகுதியான மக்களுக்கு உதவு**கின்ற துறையாகும். இதிலே கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். பிற்பட்டோர் **மொத்த ஜனத்தொகையில் 65 சதவிதம் பேர்கள் இருக்கிறார்கள் என்பதற்காகக்** கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பெருந்தொகையளவுக்கு உள்ள மக்களுக்கு **இந்தத் துறை என்ன என்ன வகையிலே நலன் காணவிழைகிறது என்பதைப்** பார்க்கின்ற நோக்கிலே இந்தத் துறை ஆக்கபூர்வமாகச் செயல்படவில்லை என்பதை மிகுந்த வேதனையோடு சொல்ல வேண்டியிருக்கிறது. புதிய நிலைமைகளை இதிலே சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறையை எப்படி விரிவுபடுத்துவது எப்படித் தெளிவுபடுத்துவது, புதிய சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது என்பதற்காக கன்சல்டேடிவ் கமிட்டி அதாவது ஆலோசனைக் குழு இருந்து கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆலோசனைக் குழு எந்த அளவிலே அமைக்கப்படுகிறது, என்ன என்ன யோசனைகளைச் **சொல்லியிருக்கிறது என்பதைச் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற**

நமக்கே தெரியவில்லை. இந்தக் குழு என்ன வேலை செய்கிறது, எப்படி இதனை அமைத்திருக்கிறார்கள் என்ற விவரமும் இன்றைய வரையில் தெரியவில்லை. பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக புதியதொரு குழுவை நியமித்திருக்கிறார்கள். இந்தக் குழுவினைப் பொறுத்தவரையிலும் இந்தக் குழு ஏற்றுக்கொண்டிருக்கின்ற பணி வரவேற்கத்தக்க பணியென்றாலும் கூட இந்தக் குழு எப்படி இயங்குகிறது என்பதைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே அதனுடைய காரியங்களை நல்லமுறையிலே அது செயலபடுத்துமா என்ற அச்சம் தோன்றியிருக்கிறது. இன்றைய தினம் நாம் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறோம். இந்தக் குழு மாநிலம் முழுமையும் சென்று பிற்பட்ட வகுப்பினர் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காகச் சுற்றிக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரதிநிதிகளை விட்டுவிட்டு வேறு எந்தப் பிரதிநிதிகளைக் காணவிரும்புகிறார்கள் என்பது தெரியவில்லை. இந்தக் குழு திண்டிவனத்திற்கு வந்தது. எங்கே தங்குவார்கள் என்ற விவரம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே தெரியவில்லை. பொதுவாக திண்டிவனம் என்றுதான் இருந்தது. எத்தனை மணிக்கு வருகிறார்கள் என்று இல்லை, சௌகரியம்போல் வருவார்கள் என்ற விவரம்தான் இருந்தது. எங்கு தங்குவார்கள் என்றும் தெரிவிக்கப்படவில்லை. திண்டிவனத்திலே ஊருக்கு வெளியே சாரம் மில்லில் இரவு 9 மணிக்கு வந்திருக்கிறது. இங்கேயிருந்து அவர்களைச் சந்திப்பதற்காகச் சென்ற என்னைப்போன்றவர்களுக்கு சந்தேகம், பிற்பட்ட மக்களைச் சந்தித்து உண்மையாகவே குறைகளை அறிவதற்காக வந்தார்களா என்ற ஐயப்பாடு இருக்கிறது. திண்டிவனத்திலிருந்து அடுத்த நாள் காலையிலேயே செஞ்சிக்குச் சென்றுவிட்டது. வெறும் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காகத்தான் செல்கிறதே தவிர, பிற்பட்டவர்களுடைய நலனைப்பற்றி விசாரிப்பதற்காகச் செல்வதாகத் தெரியவில்லை. இனி மேலாவது இந்தக் குழு நல்லமுறையிலே செயல்படும் என்பதற்கு இந்த மன்றத்திலே தெளிவாக அதைப்பற்றிச் சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

இன்னொன்று. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கல்வி அமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். நீதிமன்றத்தில் ஒரு வழக்கின் அடிப்படையில் ஏற்பட்ட தீர்ப்பின் காரணமாக மாவட்ட ரீதியாக மாவட்டங்களுக்கு என்று தனியாக அங்குள்ள பிற்படுத்தப்பட்ட அல்லது ஹரிஜன மாணவர்களுக்கு என்ஜினியரிங் காலேஜ், மெடிக்கல் காலேஜ் போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் எடுக்கப்பட்டு விட்டன. அவ்வாறு மாவட்டரீதியில் ஒதுக்கக்கூடாது, அது தவறு என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததால் அந்த முறையை எடுத்து விட்டால் கூட அன்றைபதினம் கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு உறுதிமொழி தந்தார்கள். எந்தவிதத்திலும் அந்தந்த மாவட்டங்களில் நலன்கள் பாதுகாக்கப்படும், மாவட்டங்களுக்குள்ள பிரதிநிதித்துவம் குறையாத அளவில் பார்த்துக் கொள்வோம் என்று சொன்னார்கள். ஆனால் சென்ற ஆண்டு நடைபெற்றிருக்கிற தேர்வு முறையைப் பார்க்கும்போது அது கையாளப்படவில்லை என்பதோடு கூட இந்த நிலை நீடிக்குமானால், பிற்படுத்தப்பட்ட மக்களிடையே இன்னொரு பிற்படுத்தப்பட்ட வாய்ப்பு உருவாகிவிடும் என்ற நிலைமை உண்டாக்கப்படும். அந்நிலை நீடிக்கப்படுமானால் நகரங்களில் அல்லது பிற இடங்களிலுள்ள பிற்பட்ட வகுப்பு மக்கள் முன்னேற முடியாத ஒரு நிலை ஏற்படும். ஆகவே கல்வி அமைச்சர் அவர்களின் உறுதிமொழி நிறைவேற்றித் தரப்படவேண்டும் என்ற முறையில் ஹரிஜன நல இலாகாவும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலஇலாகாவும், அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.



பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் அவர்களின் படிப்பை முடித்து விட்ட பிறகு வேலை தேடிச் செல்லும்போது—எங்கள் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் கூறியுள்ள யோசனை ஒன்றை இந்த அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பின்தங்கிய வகுப்பு மாணவர்களிடையே வேலை வாய்ப்பு தேடித் தரும்போது அவர்களுடைய பொருளாதார நிலைமையை உத்தேசித்து அதில் மிகுந்த ஏழைகளாக இருப்பவர்களுக்கு முதல் சலுகை அளித்து அவர்களுக்கு முதல் வாய்ப்பளித்து மற்றவர்களுக்கு அடுத்த வாய்ப்பை அளிக்க வேண்டும். ஆகவே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு தேடித் தரும்போது தகுதி ஒன்றாக இருந்தாலும், பொருளாதார ரீதியில் அவர்களின் தகுதியை எடைபோட்டு அந்த முறையில் வேலை வாய்ப்பு தேடித் தர வேண்டுமென்று பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை அரசு பரிசிலனை செய்யவேண்டும். இது காமராஜ் அவர்களின் வாயிலிருந்து வந்தது என்பதற்காக அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்துவிடக் கூடாது. இந்த நல்ல கருத்தை அரசு நிச்சயம் ஏற்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படுகிறது. ஹரிஜனங்களுக்கு வீட்டு மனை வழங்கி அவர்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டும் என்பதை எல்லா அரசியல் கட்சிகளும் ஒப்புக்கொண்ட பிறகு அதைச் செயலில் நிறைவேற்றும்போது அதற்கு தக்க மரியாதை அளிக்கப்படுகிறதா, அந்தப் பலனை அந்த மக்கள் நன்கு உணருகிறார்களா என்பதை எண்ணிப் பார்க்கும்போது நான் வேதனைப்படுகிறேன். அதற்குரிய முக்கியத்துவம் தரப்படவில்லை. அதற்கு மரியாதை தரப்படவில்லை. அதை மதிக்காத நிலைதான் இருக்கிறது என்பது கடந்த நான்கு வருடங்களில் நடந்து வருவது காட்டுகிறது. 1967-68-ல் இதற்காக ரூ. 29,83,000 ஒதுக்கப்பட்டது. 1968-69-ல் ரூ. 16,92,000 ஒதுக்கப்பட்டது. 1969-70-ல் ரூ. 22,00,000 ஒதுக்கப்பட்டது. 1970-71-ல் கோரியுள்ள தொகை ரூ. 13,00,000. ஆக, ஹரிஜன குடியிருப்புகள் பொறுத்தவரையில் அவர்கள் மிக நெருக்கமான இடங்களில், நெருக்குறைவான இடங்களில், சுகாதாரக்கேடான இடங்களில்தான் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை தேர்தல் நேரங்களில் நாம் சொல்லிச் சொல்லிக் காட்டுகிறோம். உங்களுக்கு தேவையானதை நாங்கள் செய்து கொடுக்கிறோம் என்று அத்தனை கட்சிகளும் போட்டி போட்டுக்கொண்டு வாக்குறுதிகளைத் தந்துவிட்டு வருகிறோம். ஆனால் இங்கு வந்து விட்ட பிறகு அதில் எந்தவிதமான கவனமும் செலுத்துவதில்லை என்பது அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுவரும் தொகை வருடாவருடம் குறைந்து வருவது எடுத்துக்காட்டுகிறது. அதனால் அவர்களின் தேவைகளை நாம் குறைத்து மதிப்பிடும் நிலை இருப்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

பல காரியங்கள் செய்கிறோம் என்று சொல்லப்படுகிறது. மோட்டார் இயந்திரங்கள் ரிப்பேர் செய்வது, அச்சுத் தொழில், காலணி செய்யும் தொழில், சைக்கிள் கடை போன்றவற்றிற்காக அரசாங்கம் கடன் கொடுக்கிறது. அதற்காக ரூ. 250-ல் இருந்து ரூ. 5,000 வரை கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் கொடுக்கப்படுகிற கடன்கள் பெயரளவில்தான் கொடுக்கப்படுகிறதே தவிர, இத்தனை குறைகளுக்காக நாங்கள் கடன் கொடுக்கிறோம் என்ற அளவில் அமைந்திருக்கிறதே தவிர, போதுமான அளவில் இக்கடன்கள் கொடுக்கப்படுகின்றனவா என்று பார்த்தால், ஆயிரக்கணக்கானவர்கள் இந்தக் கடன்களுக்

**காக விண்ணப்பம் செய்திருக்கும் நிலையில் தாலுகாவிற்கு ஒன்று, இரண்டு,** மூன்று பேர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிற நிலை இருக்குமேயானால், இது வெறும் கண் துடைப்பாக, பெயரளவில் இவ்வளவு திட்டங்களுக்கு நாங்கள் வசதி செய்து தருகிறோம் என்று சொல்வதற்காகத்தான் பயன்படுமே தவிர, உண்மையிலேயே இத்திட்டங்கள் ஹரிஜன மக்களை முன்னேற்றுவிக்க முடியாது என்று சொல்லிக்கொள்வதோடு ஹரிஜன மக்களை ஏமாற்றுவதற்காகத்தான் இத்திட்டங்கள் பயன்படுகிறதே தவிர, அவர்களை முன்னேற்றுவிப்பதற்காக **இவை பயன்படவில்லை.**

கிணறு மானியம் என்று ஹரிஜனங்களுக்கு ரூ. 1,500 வரையில் கொடுத்து வரப்படுகிறது. "இந்த முறை உங்கள் ஆட்சிக் காலத்திலேயே இருந்து வந்திருக்கிறது" என்று சொன்னாலும் இது அவ்வளவு நல்லமுறையா **என்று** பார்க்க வேண்டும். ஏன்று கிணறுகள் வெட்டிக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த ரூ. 1,500 என்பது ஒவ்வொரு ஜில்லாவிலும் 12 அல்லது 13 பேர்களுக்குத்தான் கிடைக்கிறது. இப்படி ஒரு வருடத்தில் ஒரு ஜில்லாவில் 13 பேர்களுக்குக் கொடுத்துவிட்டால், ஹரிஜனங்கள் முன்னேறி **விடுவார்களா ? அது ஹரிஜனங்களை முன்னேற்றிவிட்டதாக பொருள்** படுமா?

**அடுத்தபடியாக, ஹரிஜன மாணவர்களும், பிற்பட்ட வருப்பு மாணவர்களும்** தங்கிப் படிக்கும் ஹாஸ்டல்களைப் பொறுத்தவரையில், ஒன்று கூற விரும்பு**றேன். அவை மிக மிக நெருக்கடியாக இருக்கின்றன என்பதோடு மட்டு மல்லாமல் அதிகப்படியான மாணவர்களை தன்னகத்தே கொள்ளும் சிறிய வீடு களில் அவை அமைந்திருக்கின்றன. அவர்களின் தேவைகளை சரியான** முறையில் நாம் பூர்த்தி செய்யாத அளவில் அவர்கள் கல்வியை **நல்லமுறையில்** ஏற்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. இந்த ஹாஸ்டல்களுக்கு நியமிக்கப் படுகிற வார்டர்கள் எந்தப் பள்ளிக்கூடத்திலும் தொடர்பு கொண்டவர்களாக இல்லாமலிருக்கிறார்கள் சில நேரங்களில். அவர்கள் நேரடியாக ஹரிஜன நல இலாகாவின்கீழ் இயங்குகிற காரணத்தால் மாணவர்கள் ஒழுங்காகப் படிக்கிறார்களா அவர்களது நிலைமை என்ன, எந்த எந்த மாணவன் எப்படி எப்படி படிக்கிறான் என்று பார்த்து சரியாக கண்காணிப்பு செய்ய முடிவதில்லை. ஆகவே நல்ல முறையில் பார்த்து வார்டர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஹரிஜன மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் இவர் **களுக்கு அளிக்கப்படும் ஸ்காலர்ஷிப் பொறுத்தவரையில் வருடா வருடம் அதிகப்படியான தொகை ஒதுக்குகிறோம் என்று சொன்னாலும் இம்மக்களின்** எண்ணிக்கை உயர்ந்து வருகிற அளவில் அந்த சதவிகிதத்திற்கு தகுந்தாற் போல் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். போன **ஆண்டை விட இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கிவிட்டோம் என்று சொல்லி விட்டால் மட்டும் போதாது. அம்மக்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிற** வகையில் அந்த சதவிகிதத்திற்கு ஏற்றாற்போல் தொகை ஒதுக்கப்பட்டிருக் கிறதா என்று பார்க்க வேண்டும். **ஆகவே அந்த சதவீதத்திற்கு தக்கபடி** உயர்த்த வேண்டும்.

அதோடு இந்த ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிற முறையும் எளிதாக்கப்பட **வேண்டும். எம். எல். ஏ. க்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது செல்வாக்கு படைத்தவர்கள் சென்றால்தான் இந்த ஸ்காலர்ஷிப் கிடைக்கும்**





என்ற எண்ணம் நிலவிக் கொண்டு இருக்கிறது. ஆகவே இந்த நிலை மாறி இந்த ஸ்காலர்ஷிப் தேவைப்பட்டவர்களுக்குக் கேட்டவுடனேயே கொடுப்பதற்கு உரிய வகையில் சிபார்சின் மூலமாகத்தான் கிடைக்கும் என்ற நிலை மாறி கேட்டவுடன் கிடைப்பதற்குரிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கூறி என் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரேரணைகளை **ஆதரிக்கிறேன்.** வணக்கம்.

* திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் **வைக்கப்பட்டிருக்கும் அரிசன நலத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.**

**முதலாவதாக, இருபதாண்டுக் காலமாக ஆண்டுகொண்டிருந்த காங்கிரஸ் ஆட்சியில இல்லாத ஒன்றை, நல்லதொரு வாய்ப்பினை, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு அளிக்கும் வகையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரவர்களும், நமது அமைச்சரவையும், பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு ஒன்றை உருவாக்கி, அதற்கென தனி அமைச்சரையும் நியமித்து, பிற்படுத்தப் பட்ட மக்களின் முன்னேற்றத்திலே அக்கறை செலுத்தியிருக்கிறார்கள். இதற் காக மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அத்தனைபேரும் நிச்சயமாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.**

இந்த மானியக் கோரிக்கையின் மொத்த ஒதுக்கீடு 885.18 இலட்சம் ரூபாயாகும். இதிலே தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 551.13 இலட்சமும் **பின் தங்கியோருக்கு 334.05 லட்சமும் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க** தாகும். 1970-71 இல் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கல்வி முன்னேற்றத்திற் காக நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டது ரூ. 415.47 இலட்சமாகும். கூடுத லாக ஆசிரியர் நியமனம்—பள்ளிகளில் வசதிகள் பெருக்கம்—மதிய உணவு விஸ்தரிப்பு—புதிதாக 22 அரசு மாணவர் இல்லங்களைத் திறத்தல்—தனியார் துறையினால் நடத்தப்பட்டு வரும் மானியம் பெறும் 20 மாணவர் இல்லங்களை அரசாங்கமே எடுத்துக்கொண்டு நடத்தல்—குடியிருப்பு மனைக்கட்டுகள் வழங் **கல்—குடியிருப்புகளில் வசதிகள் பெருக்கம் ஆகிய இவைகளையெல்லாம்** கண்ணுறும்போது, நமது அரசு எந்த அளவுக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் **முன்னேற்றத்தில் பரிவு காட்டி வருகிறது என்பதை நிச்சயமாக, மாற்றாரும் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவர்களாவார்கள்.**

**அதேநேரத்தில், சிலபல இலட்ச ரூபாய்களை ஆண்டு ஒன்றுக்கு இம்மாதிரி யாக நிதிநிலை அறிக்கையிலும், அதைப்போலவே மானியக் கோரிக்கையிலும் ஒதுக்கிவிடுவதால் மட்டும், தாழ்த்தப்பட்ட சமுதாயம் உயர்ந்து விடுமென்றோ** அல்லது சமுதாயத்தில் அவர்களுக்குச் சம அந்தஸ்து கிடைத்து விடுமென்றோ இன்றைய நமது அரசாங்கம் நம்பத் தயாராக இல்லை. சமுதாயத்தில் புரை யோடிவிட்டிருக்கும் சாதி, சமய வர்ணாச்சிரம தர்மம் என்னும் தொழுநோயை அழிப்பதால் மட்டுமே சமதர்ம சமுதாயம் எழ முடியுமென்பதில் இன்றைய நமது அரசுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. **இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள், கலப்புத் திருமணங்களை** ஊக்குவிக்கும் வகையில், அத்தகைய கலப்புத் திருமணம் செய்து கொள்வதால் **மட்டுமே சாதி பேதத்தை அகற்ற முடியுமென்ற அடிப்படையில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் உள்ளவர்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டால், அவர்**

களுக்குத் தங்கப் பதக்கம் வழங்க வேண்டுமென்று திட்டத்தை, முன் உதாரணமாக, வேறு எந்த மாநிலத்து முதல்வர்களும் அறிவிக்காத காலத்திலே, நமது தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணு அவர்கள் அறிவித்தார்கள். சாதிகள் ஒழிய, சமூக ஏற்றத் தாழ்வுகள் நீங்க, கலப்புத் திருமணங்கள் நூற்றுக் கணக்கில், ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் நாட்டில் நாள்தோறும் நடத்தப்படுவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். வெறும் சட்டத்தை மட்டும் வைத்துக் கொண்டு சமுதாயத்தில் மறுமலர்ச்சி கண்டு விட முடியாது. மக்களின் மனநிலையும் மாறியாக வேண்டும். அதற்குரிய பிரசாரம் தேவை என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் தமது படைப்பான 'வேலைக்காரி' திரைப்படத்தின் வாயிலாக பிரசாரம் செய்தார்கள். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற திருமூலரின் வாசகத்தை எடுத்துக்காட்டி, சாதி பேதத்தை அகற்றுவதற்கான மூலமந்திரத்தை நாட்டிற்கெல்லாம் எடுத்துக் காட்டினுர்கள்.

(திரு. ந. தருமலிங்கம்—தலைமை.)

இப்பொழுது நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது அரசாங்கத்தின் சார்பில், 'கிட்டே வராதே, எட்டி நில் இப்படிச் சொன்னுல் சட்டப்படி இது கிடைக்கும்' என்று வால்போஸ்டர்கள் போடப்பட்டு தமிழகமெங்கும் ஒட்டப்பட்டன. அதிலே ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவரை, கிட்டே வராதே என்று சொல்வது போலவும், இப்படிச் சொன்னுல் என்று முதல் கட்டத்திலே போட்டு, அடுத்து இன்னெரு கட்டத்திலே, இது கிடைக்கும் என்று சிறைச்சாலையில் இருப்பதைப் போன்று படம் போட்டுக் காட்டினுர்கள். மிகமிக வேகமாக, தமிழ்நாடெங்கும் முக்கிய இடங்களிலெல்லாம் அரசாங்கத்தின் சார்பில், அன்றிருந்த அரசாங்கத்தின் சார்பில், திரு. காமராஜர் முதலமைச்சராக இருந்தபொழுது அது ஒட்டப்பட்டது. அப்படி எவ்வளவு விரைவாக ஒட்டப்பட்டதோ, அதைவிட மிகவும் வேகமாக அது அப்புறப்படுத்தப்பட்டது சிலபல நாட்களுக்குள்ளேயே. சாதி முறைகளில் நம்பிக்கையுள்ளவர்கள், வர்ணுச்ரம தர்மம் போன்றவற்றில் நம்பிக்கையுள்ளவர்கள் எதிர்ப்பார்கள் என்று அஞ்சி அன்றைய அரசாங்கம், மதிப்பிற்குரிய நமது காமராஜர் முதலமைச்சராக இருந்தபொழுது நீக்கிவிட்ட தன்மையைப் பார்த்தோம். ஆனுல் அதே நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மன்றத்திலே எதிர்க் கட்சியாக இருந்தபோதும் கூட, அரசாங்கம் அஞ்சி, வெளியிட்டதை வாபஸ் வாங்கிக்கொண்ட நேரத்திலே, எதிர்க் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் அதே வால்போஸ்டர்களை இலட்சக் கணக்கில் அச்சிட்டு தமிழகத்தில் ஒட்டிக் காட்டியதை நாம் மறக்க முடியாது. அந்தக் கட்சி இன்று ஆளுங்கட்சியாக இருக்கிறது.

காங்கிரஸார் ஆலயப் பிரவேசம் நடத்திக் காட்டினுர்கள். அதற்காக மிக மிகப் பெருமைப் பட்டுக்கொள்ளுகிறுர்கள். நான் அதை மறுக்கவில்லை. ஆலயப் பிரவேசம் என்பது, குறிப்பிட்ட கட்டத்தோடு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டது. வெளியிலே நின்றுகொண்டிருந்தவர்களை உள்ளே அழைத்துச் சென்றுர்களே தவிர, மக்களின் மனம் மாறவில்லை. நாட்டு மக்களின் மனநிலை மாற காங்கிரஸ் சர்க்கார் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபோது மக்களின் மனமாற்றத்திற்குத் தேவையான காரியங்களைச் செய்துவந்தார்களா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை என்றே சொல்லலாம். இது நாட்களுக்கு முன்னுல், மதிப்பிற்குரிய நமது முதல்வர் கலைஞர் அவர்கள் இங்கு ஒன்றை அறிவித்தார்கள்.



பிற்படுத்தப்பட்டவர்களும், ஜாதி வித்தியாசமில்லாமல், அர்ச்சகத் தொழிலைச் செய்யவும், இந்த அரசு அதனை நடைமுறையிலே சாத்தியக் கூறுகுவதற்கான நிலைமையை உருவாக்கும், தயங்காது என்பதைச் சுட்டிக் காட்டினுர்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் என்னவென்ருல், ஹரிஜன என்ற பெயரை அவர்களுக்கு இட்டதனுலேயே, அவர்கள் திருமாலின் மைந்தர்களாக ஆகிவிடவில்லை. உலக உத்தமர் காந்தியார் அவர்கள் மிகவும் நல்லெண்ணத்தோடு, தூய்மையான உள்ளத்தோடு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு ஹரிஜன் என்று பெயரிட்டு அழைத்தார்கள். அந்தத் தூய உள்ளம், காந்தியாருக்கு இருந்த அந்த உள்ளம், அவருக்குப் பின்னுல் வந்த காங்கிரஸ்காரர்களுக்கு இருந்ததா என்ருல், ஓட்டு வேட்டை ஆடுவதற்காக அந்தச் சொல் பயன்பட்டிருக்கலாமே தவிர, மற்றபடி அந்த நல்லெண்ணம் அவர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. அவர்களையும் சகோதரர்களாகப் பாவித்து, ஏனைய தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களையும் சகோதரர்களாகப் பாவித்து நடக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை அறிஞர் அண்ணு அவர்கள் மட்டுமே உருவாக்கிக் காட்டினுர்கள்.

தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்த காலத்தில் அவர்களை அணுகி சிலர் கேட்டார்கள், ஆதி திராவிட சமுதாயத்திற்கு உங்களால், உங்கள் இயக்கத்தால் என்ன லாபம் என்று கேட்டார்கள். அதற்குப் பெரியார் அவர்கள், இலாபம் ஒன்றும் இல்லை; நஷ்டம் தான் என்று பதிலளித்தார்கள். 'ஆதி' என்ற சொல் போய்விடும், எல்லோரும் "திராவிடர்கள்" ஆகிவிடுவார்கள், சாதிபேதமற்ற தமிழ் மக்கள் ஆகிவிடுவார்கள் என்று சொன்னுர்கள். தாழ்த்தப்பட்டோர் என்ற நிலை ஒரு பக்கத்தில், உயர்த்தப்பட்டோர் என்ற நிலை ஒரு பக்கத்தில் இருக்க முடியாது, அதற்காகத்தான் நான் பாடுபடுகிறேன் என்று சுட்டிக் காட்டினுர்கள்.

இன்றையதினம் அரிசன வார விழாக்கள் நடைபெறுகின்றன. காங்கிரஸார் ஆட்சிக் காலத்திலிருந்து அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்த அரிசன விழாக்கள் நடத்தப்படும் முறையைப்பற்றி இதே மாமன்றத்தில் பேரறிஞர் அண்ணு அவர்கள் சுட்டிக் காட்டினுர்கள், அரிஜன வார விழாவை, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் சேரிப் பகுதியிலேயே நடத்துவதற்குப் பதில், மேல் ஜாதிக்காரர்கள் வசிக்கும் பகுதிகளில் நடத்தித் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்தால், நல்ல பலன் கிடைக்கும் என்று கூறியிருக்கிறுர்கள். மேல் ஜாதிக்காரர்கள் வசிக்கும் பகுதிகளில், ஜாதி வித்தியாசம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் உள்ளவர்கள் வசிக்கும் பகுதிகளில் அரிசன வார விழா நடத்தப்பட வேண்டுமென்று பேரறிஞர் அண்ணு அவர்கள் இந்த மாமன்றத்தில், எதிர்க்கட்சியாக இருந்தபொழுது சுட்டிக்காட்டினுர்கள். அதை நாம் கூர்ந்துநோக்க நிச்சயமாகக் கடமைப்பட்டிருக்கிறேம்.

அதைப்போலவே, குடியமர்த்தும்போது, ஜாதி இந்துக்களும், தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களும் ஒரே சமுதாயமாக, ஒரே ஒட்டுமொத்தமான சமுதாயமாக எண்ணக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கி ஜாதி இந்துக்கள் வசிக்கும் இடங்களில் அவர்களுக்கு இடம் தர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களாகிய, சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், இந்த மூன்று பிரிவினருக்கும் சாதாரணமாக ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில், உள்ளாட்சி மன்ற, நகராட்சி மன்றத் தேர்தல்களில் அவர்களுக்கு ஓரளவுக்கு தனித் தொகுதிகளை ஒதுக்கி, அவர்களுக்கு அந்த இடங்களிலே வாய்ப்பு பெறுவதற்கு நமது அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய நகராட்சிச் சட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த உறுப்பினர்கள் நான்கில் ஒரு பகுதியினரை தாழ்த்தப்பட்டவர்களாகத் தேர்ந்தெடுக்கலாம் 'மே பி எலெக்டட்' என்று சட்ட விதிகளிலே இருக்கிறது. நகராட்சிச் சட்டம் மிகமிகப் பழமையான சட்டமாகும். அந்தச் சட்டத்திலே உள்ள வரிகள், தேர்ந்தெடுக்கப்படும் மொத்த உறுப்பினர்களில், நகராட்சியின் மொத்த உறுப்பினர்களில் நான்கில் ஒரு பகுதியினர் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கலாம் என்றுதான் இருக்கிறது. "தாழ்த்தப்பட்டவர்கள் நான்கில் ஒரு பகுதியினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் ( shall be elected ) என்று இல்லை. அந்தச் சட்ட நிலை இன்று தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. அண்மையில் நமது அரசு அத்தகைய சட்டத்தைத் திருத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையை பார்க்கிறபொழுது நான்கில் ஒரு பகுதி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் இருக்கலாம். 'மே பி எலக்டெட்' என்றிருப்பதைவிட one-fourth of the members shall be elected from the Scheduled Castes' என்று மிகத் தீவிரமாக செயல்படுத்துவார்கள் என்று நிச்சயமாக நான் நம்பக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, நமது அரசு அறிவித்திருக்கும் புரட்சிகரமான நில உச்சவரம்புச் சட்டத்தை, செயலுக்குக் கொண்டுவரும்போது, உச்சவரம்பில் மிச்சப்படும் நிலத்தினை, முதல் சலுகை அளித்து, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் உள்ளவர்களுக்குச் அளிக்கவேண்டும். கோவில்கள், மடங்கள், ஆதினங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான மனைக்கட்டுகளில் தற்போது குடியிருந்துவரும் ஆதித்திராவிடர்கட்கு, அந்த இடங்களை அவர்களுக்கே இலவசப்பட்டா செய்து கொடுக்க வழிவகை காணப்படும் என்று நான் நிச்சயமாக நம்பக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 1972-க்குள் தமிழகத்தில் எங்கும் மின்சார வசதி இல்லாத கிராமமே இல்லை என்று ஆகப்போகிறது என்று நல்ல கருத்தினை வெளியிட்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் எல்லோரும் அதைப் போற்றி வருகிறார்கள். நிச்சயம் கலைஞர் அவர்களால் மட்டும் தான் அது முடியும். கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற காலத்தில் இத்தகைய தீவிர திட்டம் நிறைவேற இருக்கிறது என நாம் நம்புகிறோம். சில எதிர்க்கட்சிக்காரர்கள் செய்ய முடியாது என்று மறுத்தாலும், நாட்டு மக்கள் நிச்சயம் அதை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நானும் சொல்வேன், 1972-க்குள் ஆதித் திராவிட குடும்பத்தைச் சேர்ந்த எந்தக் குடும்பத்திற்கும் குடியிருப்பு





மனையே இல்லாமல் இல்லை, எல்லோருக்கும் கிடைத்துவிட்டது என்ற ஒரு நல்ல நிலையை ஏற்படுத்த, மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் அண்மையிலே அறிவிக்காமல் இருக்கமாட்டார்கள். அறிவிக்க இருக்கிறார்கள் என்று திட்டவட்டமாக என்னைப்போல் ஒத்தவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இறுதியாக என்னுடைய தொகுதியைப்பற்றி சில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாயூரத்தில் காவிரி நதியின் குறுக்கே ஏறத்தாழ ரூ. 3 லட்சம் செலவில் "அஞ்சுகத்தம்மையார் பாலம்" ஒன்று கட்டப்பட்டு வருகிறது. அது துரிதமாகக் கட்டப்பட்டு வருவது குறித்து நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கால் நூற்றாண்டுக் காலமாக பாலம் பாலம் என்று கபாலம் சூடேறுகிற வகையிலே காங்கிரஸ் கட்சியினர் ஆட்சியிலிருந்த போது கோரிக்கைவிடுத்தும் மாயூரத்தில் ரயில்வே மேம்பாலம் கட்டப்படவில்லை. நாம் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள், "பல கோடி ரூபாய்க்குத் திட்டம்—நாட்டில் பசி—பஞ்சம்—பட்டினிச் சாவு தான் மிச்சம்" என்று காங்கிரஸ் ஆட்சி காலத்தில். இப்பொழுது, அப்படியில்லாமல் கலைஞர் ஆட்சிக் காலத்தில் "அரை கோடி ரூபாய்க்கு மேம்பாலத் திட்டம், அடியோடு ஒழிந்தது வழிப்போக்கர் கஷ்டம்" என்ற ஒரு நல்ல நிலை உருவாகியிருக்கிறது. இப்பொழுது ரயில்வே மேம்பாலத் திட்டம் ரூ. 44 லட்சத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்காக எனது மாவட்ட மக்கள் சார்பாகவும், வழிப்போக்கர்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவன்னியில், ஒரு லட்சத்து எழு தாயிரம் ரூபாய் செலவில் மயூரம் அரசு மருத்துவ மனை விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட இருக்கிறது. 30 படுக்கைகள் கொண்ட புதிய வார்ட் கட்டப்பட்டிருக்கிறது. நீண்டகாலம் கோரிக்கையாகிய மாயூரம் பாதாளச்சாக்கடைத் திட்டம் ரூ. 1.25 கோடி மதிப்பீட்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து விரைந்து செயல்படுத்த ஆணையிட வேண்டுமென்று வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். வெல்பேர் ஹாஸ்டல்களைப் பொறுத்த மட்டில் சென்ற ஆண்டு கூட கேட்டேன். 22 புதிய மாணவ விடுதிகள் தமிழ் நாடு எங்கும் ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாயூரத்தில் மணல் மேட்டில் ஒரு வெல்பேர் ஹாஸ்டல் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டேன். இந்த 22 ஹாஸ்டல்களில் அதுவும் ஒன்றாக செயல்படுத்தப்பட்டு, துவக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து மானியக் கோரிக்கையினை ஆதரித்து உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. த. தருமலிங்கம்: இன்னும் 15 உறுப்பினர்கள் உரையாற்ற இருக்கிறார்கள். இனி உறுப்பினர் ஒவ்வொருவரும் 6 நிமிடங்களில் தன்னுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் உள்ள வெட்டுப் பிரரேணையைக் குறித்து என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். இராமநாதபுரம் ஜில்லா, திருவாடானை தாலுகாவில் தேமண்டதாவு கிராமத்தில், அரிசன குடியிருப்பித்

காக 17—2—1965-ல் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. இது காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நில ஆர்ஜிதம் செய்யக்கூடாது என்று அப்பொழுது பல எதிர்ப்புகள் வந்து, மதிப்பிற்குரிய கக்கன் அவர்கள் மந்திரியாக இருந்தபொழுது பல தடவை நானும் அவர்களைப் பார்த்துச் சொல்லி, அதற்குப் பிறகு 18—3—1965ல் பட்டாக்கள் வழங்கப்பட்டன. அப்படி பட்டா வழங்கப்பட்டவுடன் அந்த நிலச்சொந்தக்காரர்கள் வசதி படைத்தவர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் போட்டு, 4—3—1965-ல் ரிட் மனு போட்டு அதை ஸ்டே செய்து வைத்தார்கள். அதற்குப் பிறகு 1—12—1967-ல் ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகும் அந்த அரிசனங்களை அங்கே வீடு கட்ட விடவில்லை அவர்கள். அவர்கள் வீடுகட்டப் போனவர்களை தொந்தரவு செய்துவிட்டு, போலீஸில் பொய்யான மனுவை அவர்கள்மீது கொடுத்து, பெண்கள், கர்ப்ப ஸ்திரீகள் உள்பட பல பேர்கள் மீது பொய்க் கேஸ் போட்டு, கோர்ட்டில் நிறுத்தினார்கள். அந்தக் கேஸும் தள்ளுபடியாகிவிட்டது. அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை 4, 5 தடவை நான் நேரில் பார்த்துச் சொன்னேன். எப்படியாவது அவர்கள் வீடு கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னேன். அவர்கள் அதற்கு கலெக்டர் அவர்களை ரிபோர்ட்டு கேட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இரண்டு கலெக்டர்கள் அங்கிருந்து ரிபோர்ட்டு அனுப்பினார்கள். அதற்குப் பிறகும்கூட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆர்டர் கொடுத்துவிட்டோம், இனி கட்டிவிடலாம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நான் ஜில்லா கலெக்டர் ஆபீஸில் போய் பார்த்தபொழுது, பேப்பர் அங்கே வரவில்லை என்று சொன்னார்கள். மறுபடியும் அமைச்சரைப் பார்த்து, 'ஜில்லா கலெக்டர் ஆபீசுக்குப் பேப்பர் வரவில்லையே, அதுமாதிரி என்னிடம் சொன்னீர்களே,' என்று கேட்டேன். 'மறுபடியும் கலெக்டரை நேரில் விசாரித்து ரிபோர்ட்டு அனுப்பச் சொல்லியிருக்கிறேன், அது வந்த பிறகு தான் முடியும்' என்று சொன்னார்கள். இப்படி இத்தனை வருடங்களாகக் கடந்து கொண்டே போகிறது, அரிசனங்கள் குடியிருக்கக்கூடிய ஒரு வீட்டுமனை கொடுக்கும் திட்டம் இப்படி இருக்கிறது. அதற்குக் காரணம் அந்த ஊரில் ஒரு வக்கீல் இருக்கிறார். அவர் தான் அரிசனங்களுக்கு ஏற்கனவே உதவியாக இருந்து அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று மனு போட்டு ஏற்பாடு செய்தவர். அதற்குப் பிறகு நிலச் சொந்தக்காரர்கள் பக்கமாக மாறி கொண்டு, அரிசனங்களுக்கு எதிராக செயல்படுகிறார். இப்பொழுது அவர் எம்.பி.யாக இருக்கிறார். அவர் அரிசனங்களை வீடு கட்ட முடியாமல் தடுத்துக் கொண்டே வந்தார். அதற்குப் பிறகு அதுபற்றி விசாரித்த பொழுது, 2, 3 பேர்களிடம் வீடு வேண்டாம் என்று எழுதி வாங்கி அனுப்பி, அது விசாரணைக்கு வந்தது. அம்மாதிரி எழுதிக்கொடுத்ததை ஜில்லா அரிசன நல இலாகா அதிகாரி எடுத்துக்கொண்டு வந்து ஸ்தலத்தில் என் முன்னிலையில் விசாரித்தார்கள். 'வக்கீல் அவர்கள் அதை வேறு ஒரு மனை என்று சொல்லி எங்களிடம் கையெழுத்து வாங்கிவிட்டார்கள்' என்று அரிசனங்கள் ஸ்டேட்மெண்டு கொடுத்தார்கள். அதற்குப் பிறகு அந்த வக்கீல்மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். நடவடிக்கை எடுக்காமல், அந்த அரிசன நல இலாகா அதிகாரியை; அந்த ரிபோர்ட்டைப் பற்றி விசாரித்தவரை உடனே மாற்றிவிட்டார்கள். அதற்குப் பிறகு இவ்வளவு காலம் ஆகியும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவர்கள் இன்னும் வீடு கட்டிக்கொள்ள முடியாத நிலை தான் இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்கள் ஹைகோர்ட்டிற்குச் சென்று, அவர்களுக்குப் பிரதிகூலமாக ஜட்ஜ்மெண்டு கிடைத்தபிறகும்கூட இந்த அரசாங்கம் ஏன் இதை நிறுத்திவைத்திருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன். அந்த நிலச் சொந்தக்காரர்கள் மிகவும் வசதி படைத்தவர்கள், எனது பக்கத்து ஊரில் இருப்பவர்கள். அவர்கள் இதுவரையில் ரூ. 15,000 வரையில் ஹரிஜனங்கள் வீடு கட்டாமல் நிறுத்துவதற்காக செலவு செய்ததாகச் சொல்லப்படுகிறது. இனியாவது இத்தனை காலம் கடந்தாவது, அந்த அரிசனங்கள் உடனே வீடுகளை கட்டிக்கொண்டு குடியேறுவதற்கு அமைச்சர் அவர்கள் துரிதமாக ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



* திரு. எஸ். முத்துலிங்கம்: தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான அரிசன நலத் துறை மானியத்தை ஆதரித்து நான் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். பொதுவாக அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதில் மிகவும் கால தாமதம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம், அதிக அதிகாரிகள் நியமிக்கப்படாததுதான். மூன்று தாலுக்காக்களுக்கு ஒரு தாசில்தாரை நியமிக்கிறார்கள், அவர்கள் அந்த வேலைகளை அவ்வப்போது கவனிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் ஒரு தாலூகாவுக்கு ஒரு தாசில்தார் வீதம் நியமித்தால் குறைபாடுகள் வராமல் வீட்டு மனைகளுக்கான வசதிகளை கூடிய சீக்கிரம் செய்து தர ஏதுவாக இருக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதைப்போலவே, குறைந்த அளவில்தான் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களையும் நியமிக்கிறார்கள். அந்த ரெவினியூ இன்ஸ்பெக்டர்களையும் 6 மாதம், 1 வருஷத்துக்குள்ளாக மாற்றி விடுகிறார்கள். அப்படி மாற்றுவதால் அங்கேயுள்ள வேலைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. அப்படிப் பாதிக்கப்படாமலிருக்க அவர்களை நிரந்தரமாக மூன்று ஆண்டுகளுக்குப் பணியாற்ற வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரிசன ஹாஸ்டல்கள் பொதுவாக வாடகைக் கட்டடங்களில் இருந்து வருகின்றன. அப்படிப்பட்ட வாடகைக் கட்டடங்களில் இருக்கிற ஹாஸ்டல்களில் இருக்கிற அரிசன மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கே இடவசதியும் போதவில்லை. ஆகையால் சர்க்காரிலிருந்து சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அரிசன ஹாஸ்டல்களின் வார்டன்களைப் பார்த்தால், அவர்கள் வார்டன்களா, மாணவர்களா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே அரிசன மாணவர் விடுதிகளுக்கு வார்டன்களை நியமிக்கும்போது 40 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் பார்த்து அமர்த்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆதி திராவிட வகுப்பில் கிறிஸ்தவர்களும் மதம் மாறிய கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். அரிசனங்களுக்கு அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் சலுகைகளைப் போல் கிறிஸ்தவர்களுக்குக் கிடைப்பதில்லை. கிறிஸ்தவர்கள் முற்போக்கு ஜாதியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். பெருவாரியான அரிசன ஏழைகள்கூட கிறிஸ்தவர்களாக இருந்து வருகிறார்கள். ஆகையால் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி அல்லது மதம் மாறிய கிறிஸ்தவர்களானாலும் சரி

அவர்களுக்கும் ஆதி திராவிட மக்களுக்கு அளிப்பது போன்ற சலுகைகள் எல்லாம் அளிக்க அரசு வழிவகை செய்ய வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் முஸ்லீம் சமுதாயத்திலேயுள்ள உருது பேசும் மக்களை முற்போக்கு வகுப்பினரோடு சேர்த்திருக்கிறார்கள். உருது பேசாத லெப்பை என்று சொல்லக்கூடிய முஸ்லீம்கள் மட்டும் பிற்பட்ட ஜாதியினரோடு சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த இரு பிரிவினர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்த முஸ்லீம்கள் ஆவார்கள். ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒரு சிலரைத் தவிர பெரும்பாலான மக்கள் ஏழை முஸ்லீம்களாக இருக்கிறார்கள். ஆகவே இதை அரசு நல்ல முறையில் பரிசீலனை செய்து முற்போக்கு லிஸ்டில் உள்ள முஸ்லீம்களையும் பிற்பட்ட இனத்தில் சேர்த்து அவர்களுக்கும் எல்லாவித சலுகைகளும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வந்தவாசி வட்டம் எப்போதும் புறக்கணிக்கப்பட்டுவரும் வட்டமாக இருந்து வருகிறது. குறிப்பாக எங்கள் வட்டத்தில் இன்றுவரை ஒருவித தொழிற்சாலையும் இல்லாமல் வேலை வாய்ப்பு இன்றி ஹரிசன மக்கள் பின்தங்கிய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். ஆகவே வந்தவாசி வட்டத்திலுள்ள அரிசனங்களும் பின் தங்கிய மக்களும் முன்னேற ஒரு தொழிற்சாலை அல்லது சர்க்கரை ஆலை நிறுவிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வந்தவாசி தாலூக்காவில் பல லட்சக்கணக்கான பனைமரங்கள் இருக்கின்றன; பெருவாரியான அரிசனங்களும் பின் தங்கிய மக்களும் ஓலைப்பாய் பின்னுதல், ஓலைக் கூடைகள் முடைதல் போன்ற சிறு கைத்தொழில்கள் செய்து முன்னேற, அந்தப் பகுதியில் பனைத் தொழில் நிலையம், பனைப்பொருள் கூட்டுறவு சங்கம், பனை ஓலைத் தொழில் பயிற்சி நிலையம் போன்ற ஏதாவது ஒன்றை அமைத்துத் தர வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்.கொள்கிறேன். அரசாங்கம் சுமார் 20 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து அரிசனங்களுக்கும் பின் தங்கிய மக்களுக்கும் உதவியாக வந்தவாசி குடிதண்ணீர்த் திட்டத்தை உருவாக்கி செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. குறிப்பாக, பின் தங்கிய மக்கள் குடியிருக்கும் வீடுகளுக்கும் அரிசனங்கள் குடியிருக்கும் வீடுகளுக்கும் குழாய்கள் அமைத்துக் கொடுக்க நகர பஞ்சாயத்து முயற்சி செய்யாததால் பொது சுகாதாரத் துறையும் காலதாமதம் செய்து வருகிறது. ஆகவே உடனடியாக அரிசனங்கள் பின் தங்கிய மக்கள் வாழும் வீடுகளுக்கு இலவசமாக குழாய்கள் அமைத்துக் கொடுத்து அவர்களுக்கு குடிதண்ணீர் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் பெருவாரியான வீடுகள் ஓலைக் குடிசை வீடுகளாக இருக்கின்றன. அதனால் அடிக்கடி தீ விபத்துகள் ஏற்பட்டு அரிசன மக்களும் பின் தங்கிய மக்களும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். மேற்படி ஏழை மக்கள் தீ விபத்தினால் அதிகமாகப் பாதிக்கப்படாமலிருக்க அரசு வந்தவாசியில் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து பெருவாரியான ஏழை மக்கள் அரிசனங்களும், பின் தங்கிய மக்களும் ஏழை முஸ்லீம்களும் கோரைப் பாய் நெய்து பிழைத்து வருகிறார்கள். திடீரென்று கடந்த ஆண்டில் கோரைக்கு, வரி விதிக்கப்பட்டு அதனால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அதை அறிந்த நம் சர்க்கார் கோரைக்கு வரிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நான் அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, பல ஆண்டுகளாக வந்தவாசியிலுள்ள வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் செயல்படாமல் இருந்து வருகிறது. அதனால் ஏழை மக்கள் கடன் வாங்கி வீடு கட்டிக் கொள்ள முடியாமல் பாதிக்கப் படுகிறார்கள். பாதிக்கப்படும் ஏழை மக்கள் வீடு கட்டிக்கொள்ளத்தக்க முறையில் அரசாங்கம் மேற்படி சங்கத்தைப் புதுப்பித்து உடனடியாகச் செயல்படுத்த வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, வந்தவாசியில் கூட்டுறவு பாய் சங்கம் ஒன்று இயங்கி வருகிறது. மேற்படி சங்கத்தில் அரிசனங்களும் முஸ்லீம்களும் அதிகமாகப் போய்ச் சேர்ந்து தொழில் செய்து பிழைத்து வருகிறார்கள். அந்தச் சங்கத்துக்கு அதிக பொருளாதார வசதி செய்து கொடுத்து நவீன ஜப்பான் மெஷின்கள் வாங்கிக் கொள்ள அரசு ஆதரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. பி. எஸ். தனுஷ்கோடி: மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, 1970-71-ம் வருஷத்தினுடைய அரிசனங்கள் பிற்பட்ட வகுப்பினர் மானியத்தின்மீது பேசுகிற நேரத்தில் சில விஷயங்களை இந்த அரசின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் தாழ்த்தப்பட்டோர் என்று ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய நிலை இன்னமும் நீடிக்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கூட என்று நான் கூறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாகக் குறிப்பிட வேண்டுமென்றால், என்னுடைய தொகுதி தாழ்த்தப்பட்டோர் தொகுதி. என்னுடைய தொகுதியிலே கடந்த ஜனவரி மாதம் 30-ந் தேதியன்று திருக்குவளை கிராமத்தில் அரிசன தின விழா கொண்டாடப்பட்டது. அந்த விழாவை நடத்திய தாலூகா தாசில்தார் அவர்கள் நோட்டீஸ் போட்டு மற்றவர்களை எல்லாம் அழைத்தவர் எனக்கு எந்தவித தகவலும் இல்லாமல் என்னை ஒதுக்கி வைத்து விட்டு விழா நடத்தியிருக்கிறார். நான் அந்த அதிகாரியைச் சந்தித்துக் கேட்ட நேரத்தில், என் மீது கோபப்படாதீர்கள், என்னுடைய நிலை அப்படி இருக்கிறது, ஆகவே நான் உங்களைக் கூப்பிட முடியவில்லை என்று சொன்னார். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், பொது விவாதம் நடக்கிற நேரத்தில், அமைச்சர் அவர்கள், இப்படி நாங்கள் செய்ய மாட்டோம், இப்படி நடக்காது என்று சொன்னார்கள். இனிமேல் இந்த நிலை நீடிக்கக் கூடாது, அந்தந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இந்த மாதிரி நிகழ்ச்சிகளில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல; சென்ற டிசம்பர் மாதத்தில் என்று நினைக்கிறேன், சட்ட அமைச்சர் அவர்கள் அரசினர் கலைக் கல்லூரி அடிக்கல் நாட்டுவிழா நிறந்து வைக்கிற நேரத்தில் நானும் அழைக்கப்பட்டுச் சென்றிருந்தேன். என் தொகு

தியில் நடக்கும் கல்லூரி அடிக்கல் நாட்டு திறப்பு விழாவில் வரவேற்றுப் பேசக்கூட எனக்கு அனுமதி கிடையாது. மாவட்ட ஆட்சித் தலைவர் மறுத்து விட்டார்கள். என்னுடைய தொகுதியிலே நில அடைமான பாங்கு ஆண்டு விழா நடக்கிற நேரத்தில் எனக்கு அழைப்பும் கிடையாது, என் பெயரும் அங்கு இல்லை. முதலமைச்சர் அவர்கள் ஆண்டு விழாவிற்கு வரும் அந்தச் செய்தியைக் கேட்டு, அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரான எனக்கு பொது நிகழ்ச்சியில் இடம் அளிக்கப்படவில்லை, இதைக் கவனிக்க வேண்டும் என்று தந்தி கூட கொடுத்திருக்கிறேன். என்ன காரணத்தாலோ என் போன்றவர்களுக்கு பொது நிகழ்ச்சிகளில்கூட இடம் மறுக்கப்படுகிறது என்பதை அரசின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு பிரச்சாரத்துக்கும் மேலும் தீவிர சாகுபடித் திட்டம் பற்றிய பிரச்சாரத்துக்கு மட்டும் என்னை அழைக்கிறார்கள். வேறு நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் வரும் அந்த மாதிரி பொது நிகழ்ச்சிகளில் என் போன்றவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை; இனிமேலாவது தயவுசெய்து இப்படி இருக்கக் கூடாது என்று அந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று டீ கடைகள் ஒதுக்கப் பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில், திருமங்கலத்தில், உசிலம்பட்டியில், 20 ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் நிலப் பிரபுக்களுக்கு உதவியாக நடக்கவில்லை என்று கூறி, அவர்களைத் தெருவிலே நடக்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். குழந்தைகளுக்கு சர்ட்டிபிகேட் வாங்கப்பட வேண்டியிருந்தால், அந்த கிராம அதிகாரிகள்கூட, என்னுடைய தகப்பன் முன்னால் தவறு செய்தான், ஆகவே, கிடையாது போ, என்று கிராம அதிகாரிகளும் சொல்லும் நிலைமை இருக்கிறது. இதன் மேல் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே போல், அரிசனங்கள் சர்க்கார் ரோடில்கூட பிரேதங்கள் எடுத்துப் போக முடியாத நிலை இருக்கிறது. இதை நீக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்கிறேன், அமைச்சரைக் கேட்கிறேன். பல தெருக்களில் நடக்கக் கூட உரிமையற்ற நிலை இருக்கிறது. மயானத்திற்குப் பாதை போடுவது இருக்கட்டும், அந்தச் செலவைச் செய்ய வேண்டாம், அரசினர் சாலைகளில் அரிசனங்கள் பிரேதம் எடுத்துச் செல்ல அனுமதி கொடுத்தாலே போதும். மயானத்திற்குத் தனியாக ரோடு அமைத்துக் கொடுப்பதை விடுத்து அந்தத் தொகையை வைத்துக்கொண்டு, வேறு காரியங்கள் செய்ய முடியும். இது சம்பந்தமாக அதிகாரிகளுக்கு உத்தரவு போடவேண்டும், இந்த ரோட்டில் அவர்களைத் தடை செய்ய உங்களுக்கு அதிகாரம் கிடையாது என்று சொல்ல வேண்டும். இந்த மாதிரியான நடவடிக்கை மாயவரம் தாலுகாவில் இரண்டு வாரத்திற்கு முன்பு நடந்திருக்கிறது. இந்தமாதிரி இடங்களில் தக்க நடவடிக்கை எடுத்து உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான இடங்களில் பிணங்களை எடுத்துச் செல்லக் கூடாது என்கிற தகராறு வருவதாக அரசாங்கத்திற்குப் புகார்கள் வந்திருக்கின்றன.



ஆனால், சர்க்காருடைய பொது வழிகளிலே பிணங்கள் எடுத்துப் போகக் கூடாது என்று தகராறு வந்ததாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட தகராறு எந்த இடத்தில், எந்தக் கிராமத்தில், எப்பொழுது நடந்தது என்கிற தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** தலைவர் அவர்களே, வேலங்குடி, கீழப்படுகை போன்ற இடங்களில் அரிசனங்கள் அவதிப்படுவதைப் பார்த்தோம். சர்க்கார் ரோடிலே பிரேதம் எடுத்து அவர்கள் போகும்போது, போலீசார் தலையிட்டு, அதிகாரிகள் தலையிட்டு, 'இந்த வழியில் செல்லக் கூடாது' என்று தடுத்துவிட்டார்கள். போலீசார் கேஸ் போட்டு இது கோர்ட்டில் தள்ளுபடி செய்து விடுதலை ஆகியிருக்கிறது என்று குறுக்கிட்டு விட்டார்கள். அரிசன நலத் துறை டைரக்டர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகிய, திரு. சங்கரன் அவர்கள் இருந்தார்கள். கிராமத்தில் வந்து பார்த்தார்கள். ரோடில் இன்னமும் நடக்கக்கூடாது என்று தடுத்து விட்டார்கள் என்பதை அமைச்சர் தெரிந்துக் கொள்ளட்டும்.

அடுத்து, குடியிருப்பு மனைகள் சம்பந்தமாக, காங்கிரஸ் ஆட்சியில், பல இடங்களை வாங்கிப் போட்டார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில், கொத்தங்குடி, வளத்தூர், குரமங்கலம், தலைஞாயர், திருமாளம் முதலிய கிராமங்களில் ஆழமான, பள்ளமான இடங்களைக் கொடுத்ததால், அதைத் தூர்த்துக்கட்ட 500, 600 ரூபாய் அளவில் செலவு செய்ய தேவைப்படுகிறது. இந்த மாதிரி இடங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தூர்த்துக் கொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மனைக்கட்டுகள் வாங்கும்போது, சிறு விவசாயிகளுடைய நிலத்தை தயவு செய்து வாங்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வசதி படைத்தவர்களுடைய நிலத்தை எடுத்துக் கொடுக்கவேண்டும். அதிலும், ரோடு ஓரத்தில் எடுக்க வேண்டும். பள்ளத்தை விட்டு நல்ல இடங்களை எடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் சர்க்கார் புறம் போக்கு தரிசு நிலங்கள் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. நத்தம்சாரி, புறம் போக்கு, சேரிப் புறம்போக்கு என்றெல்லாம் இருக்கின்றன. மனுநீதி விசாரணையில் அந்த இடங்களைப் பார்த்து, எதெல்லாம் சர்க்கார் நிலங்களாக இருக்கின்றனவோ, இந்த நிலங்களை எடுக்க உத்தரவு போட்டு, பட்டா செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்தால், மனைக்கட்டு விஷயத்தில் ஒரு தீர்வு காண முடியும்.

நடைபாதை போடுவதற்கு ஸ்தலஸ்தாபனமும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அறநிலைய பாதுகாப்பு அமைச்சரும் கோவில் நிலங்களில் ரோடு போட ஆவன செய்யவேண்டும். அப்படிப் பட்ட நிலங்களில் வேலைசெய்ய அதிகாரிகள் தயங்குகிறார்கள். கோவிலுக்கு அந்த இடம் தேவையில்லை என்றால், எண்டோமெண்டு போர்டுக்கு எழுதி, நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கல்விக்கு போதுமான பணத்தை ஒதுக்க வேண்டும். படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கும்போது, அதிகமான பணம் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மதிய உணவில் 14 கிராம் அரிசிதான் போடப் படுகிறது. அதை அதிகப்படுத்த வேண்டும்.

என்னுடைய தொகுதியில், திருவாரூரில், 10, 8 மைல்கள் பெண்கள் நடந்து போகிறார்கள். மாணவியர் இல்லம் ஒன்று அமைத்துக் கொடுத்தால் நலமாக இருக்கும். வேதாரண்யம் தொகுதியைச் சேர்ந்த உம்பளாச்சேரி கிராமத்தில் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. அதில் பிற்பட்ட வகுப்பினர்தான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஒரு மாணவர் இல்லம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அரிசன நல தாசில்தார்களை 6 மாதத்திற்கு ஒரு முறை மாற்றிவிடுகிறார்கள். இதனால் கஷ்டம் அதிகமாகிறது. ஸ்பெஷல் தாசில்தார்கள் குறைந்தது மூன்று வருஷமாவது ஒரே இடத்தில் இருக்கவேண்டும். ஆறு மாதத்தில் மாறும்போது, பேப்பர்களும் மாறிவிடுகின்றன. 10, 15 வருஷங்களாக ரோடுகள் போடப்படாமல் தடைபட்டிருக்கிறது. அதில் கவனம் செலுத்தி, மூன்று வருஷத்தில் தாசில்தாரை மாற்றாமல் இருந்து, ஒரு தாலுகாவிற்கு ஒரு அதிகாரி யாவது போடவேண்டும். அல்லது தாலுகாவிற்கு ஒரு தாசில்தார் போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நடைபாதை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, திருத்துறைப் பூண்டி தாலுக்கா, மணலி கிராமத்தில் அரிசனங்கள் வீட்டிற்கு முள் வேலிவைக்கப்பட்டிருக்கிறது. உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. பி. எஸ். சந்தானம்:** மதிப்பிற்குரிய சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய அரிசன நல இலாகாவிற்கு ஒதுக்க வேண்டும் என்று கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது தமிழக அரசு அரிசன நல இலாகாவிற்கு அளவிற்கு மீறிய பணங்களை வழங்கவேண்டும் என்று முன்வந்திருப்பதை பாராட்டுகிறேன், பூரிப்பு அடைகிறேன். இந்தத் துறைக்குச் செலவிடப்படும் தொகையானது, அரிசன மக்களுக்கு கல்வித் துறையில், மற்ற மற்ற துறைகளில் அளிக்கப்படும் வாய்ப்பினைக் குறிக்கிறது. கல்விச்சாலையில் வெற்றி பெற்றுவிட்டால் மட்டும் போதாது. அவர்கள் பொருளாதாரத் துறையிலும் முன்னேறவேண்டும். அப்படி முன்னேறி வந்தாலொழிய, அவர்களுடைய குழந்தைகளை சீரும் சிறப்புமாக நல்ல முறையில் படிக்கவைக்க முடியாது. அவர்களுக்கு தொழில் வளத்தை ஏற்படுத்தும் இந்த இலாகா, தொழிலுக்காக ஒதுக்கப் பட்டிருப்பது, சிறு சிறு தொழில்களுக்கு என்றிருப்பது, சரியான வழியிலே போகவேண்டும். எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள், இந்த நிதியானது பல கோணங்களில், கூட்டுறவுச் சங்கங்கள், சிறு சிறு தொழில்களுக்குக் கொடுக்கும் உதவியாக இருக்கிறது. அத்தகைய வழியில் இருப்பது கண் துடைப்புப் போல இருக்கிறது என்று சொன்னார்கள். அதையும் பார்க்கும் போது, இந்தச் சலுகையானது ஏதோ ஒரு கிராமத்திற்கு, ஒரு வட்டத்திற்கு இரண்டு மூன்று பேருக்கு செருப்புத் தைக்க, இன்னும் இப்படிப்பட்ட வேலைகளுக்குக் கொடுப்பதால் மட்டும் அந்தச் சமுதாயம் முன்னுக்கு வரும் என்று நினைப்பது சரியில்லை என்கிற நிலை இருக்கிறது.

பால் பண்ணை என்று ஒரு சொசைடி ஏற்படுத்தியிருக்கிறார்கள், அங்கே கிராமங்களில் பால் வழங்க நல்லதொரு உதவி செய்வதில்லை. ரூபாய் 10.25 சேரசு சேரவேண்டும் என்றும், 20 பேர்கள் இருக்கவேண்டும் என்று சொல்லி பணம் வாங்கினார்கள். ஆனாலும் ஏறத்தாழ இரண்டு மூன்று ஆண்டுகளாகி





யும் ஒன்றும் நடப்பதில்லை, மக்கள் இலவு காத்த கிளிபோல் ஆகிறார்கள். புதுப்பாளையம் கிராமத்தில் இரண்டரை ஆண்டுகளுக்கு முன் 10.25 ரூபாய் செலுத்தி சேர்கள் வாங்கினால்தான் பால் பண்ணைத் திட்டத்தை அமுல் நடத்தமுடியும் என்று வாங்கினார்கள். அது என்னவாயிற்று என்று கேட்பாரில்லை.

அடுத்தபடியாக அரிசன மக்கள் சிறுதொழில்களை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு, முற்போக்கடையாமல் இருப்பதற்கு அரசியல் காரணம் ஒன்று ஆகும். இன்றைக்கு சர்க்காரால் வழங்கப்பட்டிருக்கிற திட்டத்தின்படி நம் மாநிலத்தில் 24 ஆயிரம் அரிசன காலனிகள் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ இரண்டாயிரம் காலனிகளுக்கு மேல் தண்ணீர் வசதியில்லையென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் இணைப்புப் பாதைகள் இல்லையென்று சொல்லப்படுகிறது. கடந்த இருபதாண்டுக் காலத்தில் குடிதண்ணீர் இன்றியும், பாதையின்றியும் தவித்த அரிசன மக்களுக்கு இந்த மூன்று ஆண்டுக் காலத்திலேயாவது அந்தக் குறைகளைப் போக்கியிருக்கலாம். இன்னும் இரண்டாயிரம் காலனிகளுக்கு இந்த வசதி செய்யவில்லையென்பது குறிப்பேட்டில் இருப்பதைக் கண்டு உள்ளபடியே வருத்தம் அடைகிறேன். காலையில் கோழி கூவுவதிலிருந்து மாலையில் கோட்டான் கூவுகின்ற வரையில் உழைத்து உழைத்து ஓடாகிப் போகும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த மூன்று ஆண்டுக் காலத்திலேயும் வழிவகை செய்யவில்லை, செய்யமுடியவில்லை என்ற நிலையைப் போக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, ஏறத்தாழ 24, 409 அரிசன காலனிகளில் இன்னும் 2124 காலனிகளுக்குத்தான் குடிதண்ணீர் வசதி செய்துதர வேண்டும். அதையும் விரைவிலே செய்து கொடுப்போம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. பி. எஸ். சந்தானம்:** தலைவர் அவர்களே, அவர்கள் கடந்த இருபதாண்டுகளாகக் கஷ்டப்படுகிறார்கள். இப்போதாகிலும் அந்தக் குறைகளைப் போக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அரிசன மக்கள் ஒதுக்கப்பட்டவர்களாய், நசுக்கப்பட்டவர்களாய், புறக்கணிக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். அந்தக் குடியிருப்புப் பகுதிகளுக்குச் செல்ல பாதை வசதிகள் இல்லை. வயல் வரப்புகளில்தான் செல்கிற நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றை மட்டும்சொல்ல விரும்புகிறேன். வந்தவாசி கிராமத்திற்கு அருகில் வைலாமூர் என்ற கிராமம் இருக்கிறது. நான் ஒரு தடவை அங்கு சென்றிருந்தேன். அரிசனக் காலனி எங்கே இருக்கிறது என்று அங்கே கேட்டேன். அவர்கள் காட்டிய வழியே போகின்ற நேரத்தில் வயல் வரப்புகளைத் தாண்டித்தான் போக வேண்டியிருந்தது. அங்கு நாற்பது, ஐம்பது குடிசைகள்தான் இருந்தன. அங்கே உள்ளவர்களைக் கேட்டதில், அந்த நிலக்காரர்களுக்கு அடிமையாக இருக்கவேண்டும், அவர்கள் கூப்பிடுகின்ற நேரத்தில் போகவில்லையென்றால், அந்தப் பக்கம் போவதற்கு வழி கிடையாது. இதைப் பற்றி நான் அங்குள்ள அரிசன இலாகா அதிகாரிக்கு ரிப்போர்ட் செய்தேன். ஆனால் அதைப்பற்றி இதுவரைக்கும் பதில் இல்லை. இந்தமாதிரியான குறைகளை உடனடியாகப் போக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீடு வழங்கும் திட்டத்தை வரவேற்கிறேன். ஏழை, பாமர மக்களுக்கு வீடு வழங்குவதைப் பாராட்டுகின்ற நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரிசன

மக்களுக்கு வீடு வழங்குவது கஷ்டமாக இருக்கிறது. மாவட்ட நல அதிகாரியை இதுபற்றிக் கேட்டால், நகராட்சிக்கு உட்பட்டிருக்கிற காரணத்தினால், ஆகும் செலவில் மூன்றில் ஒரு பங்கை நகராட்சி ஏற்றால், அரசாங்கம் பாக்கியைக் கொடுத்து உதவி செய்யும் என்று கூறிவருகிறார். நகராட்சியைக் கேட்டால் நாங்கள் ஏற்கனவே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்ற வகையில் சொல்கிறார்கள். ஐம்பதாயிரம், அறுபதாயிரம் மக்கள் வாழ்கின்ற நகரத்தில் இவர்கள் வசதியில்லாதவர்களாக இருக்கின்ற அவலநிலைமை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருமண மண்டபங்கள் கட்டப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாவட்டத்திற்கு பத்து இருக்கிறது என்பதற்காக அதை மனமாரப் பாராட்டுகிறேன். இதை உடனடியாகச் செய்ய வேண்டும். இந்துக்கள் வாழ்கின்ற பகுதியில் ஜாதியின்பெயரால் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு செயல்படுகின்றன. ஆனால் ஆதிதிராவிட மக்கள் வாழும் சேரிகளில் நடுத்தெருவிலேயே பந்தல்போடுகிற காட்சியை அனைவரும் பார்த்திருப்பீர்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பத்து திருமண மண்டபங்கள் என்று இருப்பதில் உடனடியாக ஐந்தையாவது நகராட்சி மன்றங்கள் இருக்கிற இடங்களில் கட்டிக்கொடுப்பதற்கான முயற்சியில் இறங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சி மன்றங்கள் இதைக் கட்டிக்கொடுத்து, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வசிக்கும் குடியிருப்புகளை மேனிலைக்கு கொண்டுவர வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கிணங்க அவர்கள் நல்ல வாழ்வு வாழ வேண்டியவற்றைச் செய்யுதாவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். இ. ராமலிங்கம்: பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து இந்த அரிசன மானியக் கோரிக்கையைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். "உடுக்கவோ ஓர் கந்தைக்கும் மேலில்லை, உண்ணவோ உணவுக்கும் வழியில்லை, படுக்கவோ பழம்பாய்க்கும் கதியில்லை . . ." என்று இராமலிங்க சுவாமிகள் பாடியிருக்கிறார்கள். நூறு ஆண்டுகளுக்கு முன்னதாக தமிழகத்திலே குறிப்பாக, அரிசனங்கள் வாழ்கின்ற பகுதிகள் எப்படியிருந்தனவோ அதே நிலைமையில்தான் இன்னும் இருந்துவருகின்றன. வெள்ளையர் காலத்தில் இதற்கென்று ஒரு டிபார்ட்மெண்டை ஏற்படுத்தி ஏதோ உதவி செய்தார்கள். அடுத்து காங்கிரஸ் அரசு வந்தபிறகு ஷேமநல சர்க்காராக இருக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு மகாத்மா காந்தியடிகளுடைய திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எங்களுடைய பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் ஒரு திட்டத்தைப்போட்டு இந்த இலாகாவைப் பெரியதாக்கி, 'பேஸ்டு ப்ரோகிராம்' அடிப்படையில் ஒரு திட்டமாக நிறைவேற்றி வைத்தார்கள். இது வெறும் மானியப் பிரச்சினை மட்டும் அல்ல, சமூகத்தின் மானப் பிரச்சினையும் அடங்கியிருக்கிறது என்பதைச் சொல்லி அரிசன முன்னேற்றத்திற்கு வழி செய்தார்கள். இப்போது எதிர்பார்த்த அளவிற்கு இந்தப் பிரச்சினையில் தீர்வு காண முடியவில்லை. சமுதாயத்திலே ஏற்றத் தாழ்வுகள், பொருளாதாரச் சிக்கல்கள், மூடப் பழக்கவழக்கங்கள் பின்னிப்



பிணைந்திருக்கின்றன. அதைப் போக்க முடியவில்லையென்று எங்கள் பெருந்தலைவர் வருத்தப்படுகிறார்கள். கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்கியும் எங்களால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லையே என்று வருத்தப்படுகிறார்கள். உயர்ந்த ஜாதி இந்துக்களின் போக்கு மாறவில்லை.

நாங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடுகிறோம், நாங்கள் முழுமையாக தீண்டாமையை ஒழித்துக்காட்டுகிறோம், நாங்கள் அரிசனங்களை மேல் தளத்திற்குக் கொண்டுவந்து காட்டுகிறோம் என்று முன்னேற்றக் கழகம் சவால் எடுத்துக்கொண்டது. இப்படிச்சொல்லித்தான் அவர்கள் இன்று அரசாளுகின்றவர்களாக அமர்ந்திருக்கிறார்கள். அன்றைக்கு அப்படிச் சொல்லிய நீங்கள் இப்பொது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? இப்போது நீங்கள் இந்த அரசை 'நலம் கெழு அரசு' என்று சொல்கிறீர்கள். ஆனால் கிராமப்பகுதிகளில் அன்றைக்கு இராமலிங்க சுவாமிகள் பாடிய அதே நிலைமைதான் இருக்கிறது. இதை அரிசன அங்கத்தினர்களாவது தயவுசெய்து தங்கள் நெஞ்சில் கைவைத்துப் பார்க்க வேண்டும். இருக்கிற நிலைமையை எடுத்துச்சொன்னால் அடுத்த தடவை சீட்டு கிடைக்காது. வாக்குறுதி கொடுத்தோமே, அதைநிறைவேற்றினோமா என்பதை நீங்கள் வெளியே சொல்ல வேண்டாம், உங்களுடைய மனச்சாட்சியிடத்திலாவது சொன்னால் போதும்.,

திரு. ஜே. கருணாநாதன்: தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் பேசும்போது நீங்கள் நீங்கள் என்றே குறிப்பிடுகிறார். அவர் தங்களைக் குறிப்பிடுகிறாரா என்று அறியவிரும்புகிறேன்.

திரு. எஸ். இராமலிங்கம்: நான் ஆளும் கட்சியினர்களிடம் கேட்டுக் கொள்வது நீங்கள் நலன் கெழு அரசு என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே, இது நலன் கெடு அரசாக இருக்கக் கூடாது என்பதுதான்.

தலைவர் திரு. காமராசர் அவர்கள் ஒரு குறைந்த பட்சத் திட்டத்தைக் கொடுத்தார்கள். ஒவ்வொரு அரிசன குடும்பத்திற்கும் மனைக்கட்டாவது கொடுக்கவேண்டும். தன்மான உணர்ச்சி அதில் அடங்கியிருக்கிறது. 'எனக்கு 3 சென்ட் நிலம் இருக்கிறது' என்று சொல்லிக்கொள்ளவாவது வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு குடும்பத்திற்கும் மனைக்கட்டு வழங்கியாகவேண்டும் என்ற அடிப்படையில் முன்னாள் அமைச்சர் பரமேசுவரன் தலைமையில் ஒரு கமிட்டியை போட்டார்கள். அவர்கள் பல மாவட்டங்களுக்கும் நேரில் சென்று பார்த்து வந்து 15 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தார்கள். அந்தத் திட்டம் என்ன ஆயிற்று?

மாண்புமிகு (திருமதி) டாக்டர் சத்தியவாணிமுத்து: அவரது அறிக்கை காங்கிரஸ் ஆட்சியின் காலத்திலேயே வந்துவிட்டது. காங்கிரஸ் அரசாங்கம் அதன்மீது என்ன செய்தது என்று சொல்லிவிட்டு இந்த அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. எஸ். இராமலிங்கம்: 1966-ஆம் ஆண்டு அந்த ரிப்போர்ட் வந்தது. ப்ளானிங் கமிஷன் கூட நாங்கள் 10 கோடி தருகிறோம், மாநில அரசாங்கத்தில் 5 கோடி என்று போட்டு அதை நிறைவேற்றுங்கள் என்று சொல்கிற நிலையில் இருந்தது. 1967 தேர்தலில் நீங்கள் வந்துவிட்டீர்கள். அவர்கள் என்ன செய்தார்கள் என்பதாக சாக்குப்போக்குச் சொல்லி தப்பி

கொள்வதில் லாபம் இல்லை. இது ஒரு கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் உள்ள பிரச்சினை அல்ல. ஒரு பெரிய சமுதாயப் பிரச்சினை. நாங்கள் வந்திருந்தால் கண்டிப்பாக நிறைவேற்றியிருப்போம். நீங்கள் ஏன் நிறைவேற்றவில்லை?

இவ்வளவு ரூபாய் செலவு செய்தும் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற இந்த அரிசன மக்களது பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை என்று வருத்தத்துடன் தலைவர் திரு. காமராசர் சொன்னாரே. நாற்காலியைப் பிடிக்க நீங்கள் என்ன என்னமோ சொன்னீர்கள். இது விக்கிரமாதித்தியன் சிம்மாசனம் போல இருக்கிறது. இங்கே வந்து உட்கார்ந்தவுடன் எங்களது வாய் அடைக்கப்படுகிறது, கை கட்டப்படுகிறது, மனச்சாட்சி மறைக்கப்படுகிறது என்பதாக தயவு செய்து—ஒரு சிக்ரெட்—வருத்தம் என் தெரிவித்துக் கொள்ளக் கூடாது?

அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க இப்போது உங்களுக்கு நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது. மத்திய சர்க்காரிடத்தில் உங்களுக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது. அதைப் பயன்படுத்தி இதை 3 ஆண்டுகளிலாவது நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறுதொழில்களைத் துவக்குவதற்கு நாங்கள் வட்டியில்லாக் கடனை அரிசன மக்களுக்கு அளிக்கப்போகிறோம் என்பதாக பெரிய விளம்பரத்தைச் செய்துவிட்டீர்கள். அதன்காரணமாக இன்றைக்குக் கிராமங்களில் உள்ள அரிசன மக்கள் தங்கள் கைப்பணத்தையும் செலவழித்துக்கொண்டு அலைகிற அலைச்சல் கணக்கில்லை. அம்மையார் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் ஒரு சமயம் தாலியைவிற்றுக்கூட அவர்கள் அலைகிறார்கள் என்று சொன்னது நினைவு இருக்கிறது. அப்படி இப்போது தாலியை விற்றுக்கூட அலைந்தும் லாபம் என்ன? 200 ரூபாய் கடன் கிடைக்க நூறு, நூற்றைம்பது என்று அவர்களே செலவு செய்திருக்கிறார்கள். ஏன் இப்படி மலிவான வாக்குறுதிகளைக் கொடுக்கவேண்டும்? 1972-க்குள் மின்சாரத்தைக் கொண்டுவந்துவிடுவோம் என்பது, ரூபாய்க்கு 3 படி போடுகிறேன் என்பது இப்படி எல்லாம் அரசியல் லாப நோக்கோடு மலிவான வாக்குறுதிகளைக் கொடுப்பதனால் உங்களுக்கு லாபம் இருக்கலாம். ஆனால் பாமர ஜனங்கள் அடைகிற ஏமாற்றம், நஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. ஆயிரம் ரூபாய் நஷ்டம் வந்தாலும் உங்களைப் பாதிக்காது. ஒரு ரூபாய் நஷ்டம் என்றால் அன்றைக்கு அவன் பட்டினி. இப்படி இது அவர்களது நலன் கெடு அரசாக இருக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தீண்டாமை ஒழிப்பு. எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் உங்களது அடிப்படைக் கொள்கையாக இருந்ததே இதுதான்.

சாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி இகழ்ச்சி சொல்லல் பாவம்

என்று பாரதியார் பாடினார். இன்றைக்குப் பாவம் என்ற நிலைமாறி சாதி ...யச் சொல்வது லாபம் என்கிற நிலைக்குக் கொண்டுவந்துவிட்டீர்கள். ...புமிகு அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் முன்பு எங்கள் கிராமத் ... வந்து இந்த அரிசன மக்களோடு சாப்பிட்டார். சாதி இந்துக்களும் ...டி போட்டுக்கொண்டு சாப்பிட்டார்கள், எதிர்க்கட்சியில் இருந்தபோது





சாதிகளை ஒழிக்கவேண்டும் என்றிருந்த வேகம் இன்றைக்கு என்ன ஆயிற்று? சாதி ஒழிப்புப் பிரச்சினை, தீண்டாமைப் பிரச்சினை வோட்டைப் பிடிக்கும் அளவுக்குத்தான் இருந்தது, இன்று இல்லை.

மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் கரூர் மாணவர்களிடையே பேசும்போது, "ஜாதியை ஒழிக்க நினைத்தால் வளரும் நிலையில்தான் இருக்கிறது. எங்களால் எதுவும் செய்ய முடியவில்லையே" என்று வருத்தப்பட்டுப் பேசியதாகப் பத்திரிகையில் வந்திருந்ததைப் பார்த்தேன்.

கட்சியில் 3 ஆண்டு சாதனை விழாவில் அம்மையார் அவர்கள் பேசும் போது கூட மனம் உருகியிருக்கிறார்.

மாண்புமிகு (திருமதி) டாக்டர் சத்தியவாணிமுத்து: நான் என்ன பேசினேன் என்பதை விளக்கமாகச் சொல்லவேண்டும்.

திரு. எஸ். இராமலிங்கம்: நான் விளக்கமாக ஒன்றும் சொல்லவில்லை. ஆட்சிக்கு வந்த பிறகு உங்களுக்கிருந்த வேகம் குறைந்து போய்விட்டது. நீங்களே மனம் வெதும்பிப் பேசியிருக்கிறீர்கள் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு (திருமதி) டாக்டர் சத்தியவாணிமுத்து: மூன்று ஆண்டுச் சாதனை விழாவில் நான் ஆதிக்கம் அற்ற சமுதாயம் என்கிற தலைப்பில்தான் பேசினேன். ஆதிக்கம் என்பது வீட்டில் இருக்கிறது, நாட்டில் இருக்கிறது, ஆணிடத்தில் இருக்கிறது, பெண்ணிடத்தில் இருக்கிறது, எங்கே யாரிடத்தில் ஆதிக்கம் இருந்தாலும் அதை ஒழித்தேயாகவேண்டும் என்பதாகப் பேசினேனே தவிர மனம் உருகிப்பேசவில்லை. சாதிக்குச் சாதி ஆதிக்கம் இருக்கிறது, ஆகவே எல்லாவிதமான ஆதிக்கியமும் ஒழிக்கப்படவேண்டும் என்று பேசினேனே தவிர வேறில்லை. கனம் உறுப்பினர் அவலை நினைத்து உரலை இடிக்க வேண்டாம். (சிரிப்பு).

திரு. எஸ். இராமலிங்கம்: ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டிய பொறுப்பு உங்களுடையதுதான். ஏன் தயங்குகிறீர்கள்? "ஆதிக்கத்தை வெறும் பிரச்சாரத்தால் எப்படி ஒழிக்க முடியும்? அதிகாரம் வேண்டாமா? காங்கிரஸ்காரர்களை விரட்டுங்கள். நாங்கள் செய்கிறோம்" என்று சொன்னீர்கள். இப்போது நீங்கள் அரசாள்கிறீர்கள். எல்லாவிதமான அதிகாரங்களும் இப்போது உங்களிடத்தில் இருக்கின்றன. உங்களிடம் போலீஸ் இருக்கிறது. எல்லாவிதமான அதிகாரங்களும் இருக்கின்றன. இப்போது ஒழிப்பதுதானே, வெறும் திசை திருப்பிவிடுவதால் பயன் இல்லை. தயவு செய்து நான் முன்பே சொன்னது போல இது ஒரு கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் உள்ள பிரச்சினை அல்ல. சமுதாயப் பிரச்சினை. இதில் ஏன் இத்தனை தயக்கம் காட்டுகிறீர்கள்?

அடுத்தபடியாக, மதிப்பிற்குரிய திரு. கிட்டப்பா அவர்கள் ஆளும் கட்சியில் இருந்தாலும் நல்ல ஆலோசனை சொன்னார்கள். அரிசன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்குவது, மற்ற வசதி செய்துகொடுப்பது என்பது மட்டும் போதாது. அந்தச் சமூகத்தினரை பொருளாதார ரீதியில் உயர்த்திவிடுவதற்கு உச்சவரம்புச் சட்டத்தினால் வருகிற நிலங்களை எல்லாம் பிரித்துக்கொடுக்கும் போது ஏழை ஹரிசன மக்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து நிலம் வழங்கவேண்டும் என்றார்கள். இதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்து, உங்களது கொள்கையில் மிகவும் உறுதியான ஒன்று இப்போது வேகமற்று இருக்கிறது. கோவில் நிலங்களையும் எடுத்துக் கொடுக்கவேண்டும் என்று திரு. கிட்டப்பா சொன்னார்கள். அவற்றை எடுத்து சொந்தமாகவோ, குத்தகைக்கோ இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றார்கள். இதுதான் உங்களது அடிப்படையான—அடித்தளத்தில் எதிர்க் கட்சியாக செயல்பட்டு வந்தபோது இருந்த கொள்கை. வோட்டு உள்ள சாதாரண விவசாயிகள் நிலத்தை எடுக்கிறீர்கள். பயப்படவில்லை? சாமிக்கு வோட்டா இருக்கிறது? சாமியிடம் வோட்டு இல்லையே, உங்களுக்கு என் பயம்? காங்கிரஸ்காரர்களைக் கிண்டல் செய்தீர்களே, சாமியிடம், மடாதிபதிகளிடம் போவதற்கு என்ன தடை? போகாததற்குக் காரணம் என்ன? காமராசர் கையைப் பிடித்துத் தடுத்தாரா? காங்கிரஸ்காரர்கள் தடுத்தார்களா? கம்யூனிஸ்டுகள் தடுத்தார்களா? நீங்கள் நாற்காலியை மனதில் பிடித்துக்கொள்ளாமல்—சொன்ன கொள்கைகளை உறுதியாக மனதில் பிடித்து—இந்த நிலங்களை எல்லாம் எடுத்து ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுத்து—அந்தச் சமூகத்தைப் பொருளாதார ரீதியிலும் உயர்த்தி, தீண்டாமை ஒழிப்பிலும் தீவிரம் காட்டி நல்ல முன்னேற்றம் காண வேண்டுமென்று சொல்லி என் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. ஜெயராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்று ஆதி திராவிட மானியக் கோரிக்கையின்மீது அதைப் பாராட்டி என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் ஆதி திராவிட மக்களைப்பற்றி அனைவரும் சிறப்பாக வாயளவிலே பேசுவதைத்தான் நாம் பார்க்கிறோமே தவிர, அந்த மக்கள் வாழுகின்ற பகுதிக்குச் சென்று அவர்கள் உடன் பிறப்பு என்று சொல்லி அந்த மக்களோடு உறவாடுகிறவர்களைப் பார்க்கமுடியாது. சட்டமன்றத்திலே அவர்களைப்பற்றிச் சொல்லலாம், ஆனால் அந்த மக்களுடைய கண்ணீரைத் துடைக்க நல்ல உள்ளத்தோடு அணுகுகின்றவர்களை அதிகமாகப் பார்க்கமுடியாது. இருபது ஆண்டுக் காலத்தில் அவர்கள் சாதிக்கமுடியாததை இந்த அரசு சாதித்திருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் ஆண்ட காலத்தில், 1966-67 இல் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் போன்றது அல்ல இது. இன்றைக்கு நடக்கிற பட்ஜெட் கூட்டத்திலே ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் 314 லட்சம் ரூபாய், ஆனால் அன்றைக்கு 1966-67-இல் ஒதுக்கப்பட்டது 184 லட்சம்தான். அன்றைக்கு ஒதுக்கிய தொகைக்கும், இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகைக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது என்பதை வெட்டுத் தீர்மானங்களின் மூலமாகக் குறைக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்களே அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே ஆதிதிராவிட மக்கள் படுகின்ற கொடுமை, சொல்லமுடியாத கொடுமை இருக்கிறது ஒப்புக்கொள்கிறோம். அந்த மக்களை முன்னேற்றுவதற்காக உலகத்தின் பேரொளி அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு ஆட்சியை அமைத்து, அந்த மக்கள் நல்ல வாழ்வு வாழச் செய்யவேண்டுமென்று எண்ணினார்கள். அந்த எண்ணப்படி அதிகமான தொகை இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆட்சிக்கும் இந்த ஆட்சிக்கும் உள்ள வித்தியாசத்தை 314-க்கும் 184-க்கும் உள்ள வித்தியாசத்தை அவர்கள் உணரவேண்டும்.



இந்த ஆட்சி வருவாய்க்கு ஏற்றபடி ஆட்சியை நடத்துகிறது, பல நல்லவர்கள் உணர்வார்கள், வருவாய்க்குத் தகுந்தபடி வாழ்க்கையை நடத்துகின்ற குடும்பத்தை நடத்துகின்ற மனைவியைத்தான் பாராட்டுவார்கள்; அந்த முறையிலேதான் இந்த ஆட்சி தங்கள் கையிலே உள்ள பணத்தை வைத்து இந்த நாட்டு மக்களைப் படிப்படியாக முன்னேற்ற வேண்டுமென்று எண்ணி அந்த மக்களுக்குத் தங்கள் சக்தி முழுமையும் பயன்படுத்தி ஆதிதிராவிட மக்களுக்கு அதிகமான பணத்தை ஒதுக்கியிருக்கிறது. நல்லவர்களாக இருக்கின்றவர்கள் வருவாய்க்கு ஏற்றபடி, வருவாயை வைத்து நல்லமுறையிலே குடும்பம் நடத்துகின்ற மனைவியைப் போல் நடந்துவருகிறது என்பதைப் பாராட்டுவார்கள். வருவாயை வைத்து நடத்தமுடியாத மனைவியை எந்த ஒரு கணவனும் வருத்தத்தோடு தான் வைத்துக்கொண்டிருப்பானே தவிர, மகிழ்ச்சியோடு வைத்துக்கொண்டு இருக்கமாட்டான். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நல்ல குடும்பம் நடத்துகின்ற மனைவியாகவும் மக்களையெல்லாம் கணவனாகவும் மதித்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி குடும்பப் பெண்ணைப்போல் வருவாய்க்கு ஏற்றபடி குடும்பத்தை நடத்துகிறது என்பதால் பாராட்ட வேண்டும்.

ஆதித் திராவிட மக்களுக்குக் குறைகள் இருக்கின்றன. பணம் எங்கே இருக்கிறது, வாயளவிலே பேசலாம். இருக்கின்ற பணத்தை வைத்து ஆதி திராவிட மக்களுக்கு முடிந்த அளவிற்கு உதவி செய்யலாம் என்று இந்த அரசு முன்வந்திருக்கிறது. இதைவிட மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்யக்கூடிய நிர்வாகமுள்ள ஆட்சியை இந்த மாநிலத்திலே உள்ள ஆட்சியை விட வேறு எங்கும் பார்க்கமுடியாது. முடிந்த அளவுக்கு ஆதி திராவிட மக்களுக்கு நன்மைகளைச் செய்துகொண்டுவருகிறார்கள். அவர்கள் அதிகாரிகளைக் குற்றம் சொல்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் மாவட்டத்திற்கு வருகிறது, சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிறவர்கள் அந்த மக்களுக்கு எந்த எந்த ஊர்களிலே எந்த எந்தக் கிராமங்களிலே வீட்டுமனைகள் இல்லை என்று சொல்லி பார்த்து அனுதினமும் முயற்சியெடுத்து அதிகாரிகளைச் சந்தித்து வீட்டுமனைகளை வாங்கிக்கொடுக்கின்ற அளவில் முயற்சிகள் எடுக்கவேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகள் எடுக்கப்படவில்லை பல தொகுதிகளிலே, அவர்கள்தான் அந்த மக்களைப்பற்றி அதிகம் பேசுவதைப் பார்க்கிறோம். ஆதி திராவிட மக்களுக்கு என்ன என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று சட்ட மன்ற உறுப்பினர்கள் கேட்டு அதிகாரிகளை அழைத்துச் சென்று குறைபாடுகளை நீக்குவதற்குப் பணியாற்ற வேண்டுமென்று நான் தோழமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமானால், அங்கங்கே உள்ள சேரியில் வாழுகின்ற மக்களையும் மற்றவர்களையும் சேர்த்து கூட்டு மனப்பான்மை உருவாக்கக்கூடிய அளவிலே செய்யவேண்டும். எத்தனை பேர்கள் அதைச் செய்திருக்கிறார்கள்? இங்கே பேசுகிறார்களே, எத்தனை பேர்கள் மனமார மகிழ்ச்சியோடு அவர்களுடைய வீடுகளிலே நுழைந்திருக்கிறார்கள்? சென்ற பட்ஜெட் கூட்டத்தின்போதுகூட நான் இதைக் கேட்டேன். அவர்களுடைய வீடுகளிலே நுழைந்தவர்கள் எத்தனை பேர்கள், தின்னவர்கள் எத்தனைபேர்கள் இருக்கிறார்கள், தீண்டாமையைப்

போக்குவதற்கு எத்தனை பேர்கள் பாடுபட்டிருக்கிறார்கள்? ஆதி திராவிட மக்களை நிச்சயமாக மதிக்கின்றவர்கள் ஒருசிலர்தான். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் இருக்கின்ற அத்தனை அமைச்சர்களும் தலைவர்களாக இருக்கும்பொழுது என்னுடைய வீட்டிலே வந்து தின்னிருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் உறுப்பினர் அவர்கள் என்னை அழைத்தால் நானும் சாப்பிடத் தயாராக இருக்கிறேன்.

**திரு. பி. ஜெயராமன்:** நான் அழைக்கத் தேவையில்லை, உங்கள் ஊரிலே, உன்னைக் கூப்பிட்டால் அங்கே சாப்பிடவேண்டும், அதைத்தான் நான் சொல்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பி. ஜி. மாணிக்கம் என்ற அரிசன் வந்து என்னைக் கூப்பிட்டு நான் வீட்டுக்குள்ளே சமையலறை வரையில்போய் சாப்பிட்டு இருக்கிறேன். அதற்காக 'நீ' 'நான்' என்று பேசவேண்டிய தில்லை, அழைத்தால் வருகிறேன், அழைக்கிறார்களா இல்லையா?

**திரு. பி. ஜெயராமன்:** அவர்களுடைய ஊரிலே அங்கே வாழுகின்ற . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நீங்கள் அழைத்தால் நான் வரத்தயாராக இருக்கிறேன். அரிசனங்களைப் பொறுத்தவரையில் எல்லாக் கட்சிகளுக்கும் ஒன்றுதான், எல்லோரும் சேர்ந்து எந்தக் கட்சியாக இருந்தாலும், அவர்களுடைய நிலையை உயர்த்தவேண்டுமென்ற எண்ணம்தான் இருக்கிறது, எல்லோருக்கும் தெரியும்.

**திரு. பி. ஜெயராமன்:** உங்களுடைய தொகுதியிலே நீங்கள் அந்தக் காரியத்தைச் செய்தால்தான் உங்களுக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான் ஏற்கனவே சொன்னேன். திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டால் பிரச்சாரம் ஆகிவிடுமா? அவர்கள் சொன்ன அந்தச் சவாலை, செலஞ்சை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் அழைத்தால், இந்த சட்டமன்றத்திலே உள்ள நாங்கள் 40 பேர்களும் வந்து சாப்பிடு கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. தி. பொன்னுமலை:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பத்து ஆண்டுக் காலமாக என்னுடைய ஊரிலே காங்கிரஸ்காரர்களை அழைக்கிறேன், அவர்கள் வரவே மாட்டேன் என்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்):** இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. நேரம் ஆகிவிட்டது. உறுப்பினர் அவர்கள் விரைவில் முடித்துவிடவேண்டும்.

**திரு. பி. ஜெயராமன்:** எதிர்க்கட்சித் தலைவர் எங்கள் வீட்டுக்கு வந்தால் நல்ல உணவு கிடைக்கும் என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரிய வில்லை. நேரமில்லை.



பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்து முடித்துக்கொள்கிறேன். பேரணம்பட்டிலே பத்திரப்பள்ளி, மோர் தானு அணைக்கட்டுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது, உடனடியாக அவற்றைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், எடுத்து அந்த மக்களின் நல்ல எண்ணத்தைப் பெறவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மானியத்தில் குடியிருப்புக்காக தொகை 13 லட்சம் ஒதுக்கப்பட்டிருக் கிறது. 1967-68-ல் 29.88 லட்சம், 1968-69-லே 16.95 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் 1970-71-லே 13 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம்? இவ்வளவு சீக்கிரம் முன்னேறிவிட்டோம் என்ற சந்தேகம் வந்துவிட்டதா? முதலிலே கொஞ்சம் அதிகமாக இருந்தது, இந்த ஆண்டிலே குறைந்துவிட்டதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. இருந்தாலும் எல்லோரும் பேசிவிட்டார்கள் ஆதிதிராவிட மக்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஏன் இன்னும் ஒழியாதா? இருபது ஆண்டு என்று அவர்கள் சொல்கிறார்கள், மூன்று ஆண்டு என்று இவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். எப்பொழுது முடியப்போகிறது என்பதற்கு கால வரையறையே கிடையாதா? இப்படிச் சொல்லிக் கொண்டே மு.ப.
போனால் எங்களுடைய மானம் மரியாதை எவ்வளவு தூரம் போகிறது 11-30
என்பதை ஜாதி இந்துக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இங்கு ஒரு அமைச்சர் அல்லது இரண்டு அமைச்சர்கள் அரிசன வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்துவிட்டால் போதாது. இந்த நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்கக்கூடிய அளவுக்கு ஒரு முடிவு காண வேண்டும்; வழி காண வேண்டும். அதற்காகக் குறைந்த பட்சத் திட்டம் இவ்வளவு கோடி ரூபாய் என்று ஒதுக்கிவிட வேண்டும். அப்படி ஒரு திட்டத்தை 1972-ம் ஆண்டுக் குள் முடிவு செய்தால் எங்களுடைய குறைகள் போய்விடும். ஆனால் அவர்களுடைய முன்னேற்றத்திற்காகச் செலவழிக்கப்படுகின்ற பணம் மேலே இருந்து கீழே வருகிறதே தவிர, கீழே இருந்து மேலே போகவில்லை. அவர்கள்தான் இந்த நாட்டுக்காக உழைக்கிறவர்கள். இந்த நாட்டைச் செப்பனிடு பவர்கள்; சீர்திருத்தம் செய்யும் சிற்பிகள். அந்தச் சிற்பிகளுக்கே இந்தக் கதியா? அப்படி உழைக்கின்ற மக்கள் கீழேயும், உழைக்காதவர்கள் மேலேயும் போய்க்கொண்டிருந்தால், எந்த ஆட்சியும் உருப்படாது. இதற்கு ஒரு வழியை இந்த ஆண்டில் செய்யாவிட்டாலும் வருகின்ற 1971-72-ம் ஆண்டிலாவது ஒரு திட்டத்தைப் போடுங்கள். அப்படி இல்லாமல் சாப்பிடக் கூப்பிடுகிறார்கள்? என்னய்யா சாப்பாடு? அந்தச் சாப்பாட்டுக்காக யார் உழைக்கிறான்? யார் மண் வெட்டிப் போடுகிறான்? யார் கல் வெட்டி போடுகிறான். எங்கள் வீட்டுக்குச் சாப்பிட வா என்று கூப்பிட்டு, வர ஆரம்பித்தால் பிறகு தினம் வர ஆரம்பித்து விடுவார்கள். சாப்பாடு போடுவதாக இருந்தால், பயந்து கொண்டு சுகஜீவி போல் தயாரித்துப் போடுவார்கள். பிறகு தினம் வர ஆரம்பித்துவிட்டால், அவனுடைய நிலைமை என்னவது?

ஜாதி இந்துக்கள் இந்த மக்களை நிலையாக உயர்த்துவதற்கு என்ன வழி என்பதற்குத் திட்டம் போட வேண்டும். இதுவரை பேசியவர்கள் யாரும் அப்படி ஒரு திட்டத்தைக் கொடுக்கவில்லை. திட்டம் போட்டு ஐநூறு கோடி, ஆயிரம் கோடி என்று ஒதுக்கி விடுங்கள். இப்போது லட்சத்திலே தான் உங்களுடைய லட்சியம் சென்று கொண்டிருக்கிறது. கோடியிலே நீங்கள் வழி காண வேண்டும்.

அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதிலே எவ்வளவு கஷ்டம்? அவனுக்கு வீடு கட்டிக் கொள்ள மூன்று சென்ட் நிலந்தான் கொடுக்கிறார்கள். விளக்கு வசதி, தண்ணீர் வசதி, ரோடு வசதி எல்லாம் பிறகு. முதலிலே வீட்டு வசதிக்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது? சிதம்பரம் தாலுகாவிலே ஒரு அரிசன்-தானும் ஆதி திராவிடன்-அரிசனத் தெருவிலே 60, 70 வருஷமாகக் குடியிருந்து வருகிறான். அவன் பெயர் நாராயணசாமி. மிராசுதார் என்ன பண்ணுகிறார்? ஜாதி இந்து, உயர்ந்தவர் என்ன சொல்லுகிறார்? 'நீ வெளியே போ, வீட்டைப் பிரி' என்று சொல்லுகிறார். அந்த அரிசனக் குடிமகனுக்குப் 13 பிள்ளைகள்; இரண்டு சம்சாரம். அவர்களை வெளியே கொண்டு போக வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறான். அவன் எங்கே போவான்? 'உன் பையனை வேலைக்கு அனுப்ப மாட்டேன் என்கிறாய், அவன் பண்ணையாளாக வரமாட்டேன் என்கிறான்; ஆகவே நீ வீட்டை விட்டுப் போ' என்று சொல்லுகிறான். அவருடைய கோரிக்கையிலே ஏதோ ஓரளவு நியாயம் இருப்பதாகத் தோன்றும். ஆனால் அந்த அரிசனக் குடிமகன் எத்தனை வருஷங்களாக அங்கே இருக்கிறான்? 60 வருஷங்களுக்கு மேலாக அங்கேயே இருக்கிறான். இதுபோன்ற மனைகளிலும் யார் இருக்கிறார்கள் என்று சர்வே செய்ய வேண்டும். அரிசனத் தெருவில் ஜாதி இந்துக்கள் எப்படி மனைக்கட்டு வாங்குகிறார்கள்? பத்து ரூபாய், இரண்டு ரூபாய் கொடுத்துவிட்டு வாங்கிவிடுகிறார்கள். கள்ளுக்கடை காலத்தில் கள்ளை வாங்கிக் கொடுத்துவிட்டு வீட்டு மனையை வாங்கிக் கொண்டார்கள். சபாநாயகர் அவர்கள் எனக்குக் கொஞ்சம் நேரம் அதிகமாகக் கொடுக்கவேண்டும். இது போன்று நிலங்களில் குடியிருப்பவர்கள் ஒரு வழி காண வேண்டும். குறைந்தபட்சம் 10 வருஷம், இல்லாவிட்டால் 5 வருஷம், இல்லாவிட்டால் 1967-ம் ஆண்டுக்கு முன்னாலாவது அவன் குடியிருக்கிறானா, 1960-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டப்படி பார்த்தால், அவன் குடியிருந்தானா என்று பார்த்து அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் அந்த அரிசன மக்களுக்கே ஜாரி செய்து கொடுக்க அரசாங்கம் நல்லதொரு முடிவு எடுக்கவேண்டும்.

அரிசனங்களுக்கு மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுக்கும்போது சிலர் கோர்ட்டுக்குச் சென்று விடுகிறார்கள். ரிட் போடுகிறார்கள். இந்த மாதிரி ரிட் போடக்கூடாது என்றே ஒரு சட்டத்தை உருவாக்க வேண்டும். நாம்தானே சட்டத்தைப் போடுகிறோம். ரிட்டுக்குப் போன கேஸ்களையும் எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க ஆவன செய்ய வேண்டும்.

தென்னாற்காடு ஜில்லாவில் வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் இரண்டு லட்சம் ரூபாய் 1968-69-ம் ஆண்டு சரண்டர் ஆகியிருக்கிறது. நாங்கள் படுகிற கஷ்டம் எவ்வளவு? அதை நினைத்துப் பார்க்காமல் இரண்டு லட்சம் ரூபாய் சரண்டர் ஆகியிருக்கிறது என்றால், ...



நிலைமை? சோஷல் வெல்பேர் டிபார்ட்மெண்ட் செயலாளர், அரிசன நல டைரக்டர் முதலியவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். அந்த இரண்டு லட்சம் ரூபாய் சர்க்காருக்கே திருப்பித் தரும்படியான நிலையை ஏற்படுத்தியவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் உளுந்தூர்ப்பேட்டை பக்கத்தில் கீரனூர் கிராமத்தில் வீடுகட்டும் திட்டத்தை நிறைவேற்றுகையில் அந்த வேலையை டெண்டருக்கு விடாமல் அதிகாரிகளே மரத்தை வாங்கி, மண்ணைக் கொட்டி வீட்டைக் கட்டினார்கள். அந்த வீடுகள் விழுந்து பழுதாகிவிட்டன. அதிகாரிகள் காண்டிராக்டர்களாக மாறி மரத்தை வாங்கி, மண்ணைக் குழைத்து வீட்டைக் கட்டுவதானால் இது என்ன நிலை? இந்த நிலையை நிச்சயமாக அனுமதிக்கக்கூடாது. அமைச்சர் அவர்கள் யார் அப்படிச் செய்தது என்று பார்த்து சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். வீடு கட்டுவதற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். அந்த ரூபாய் வேண்டவே வேண்டாம். அரசாங்கத்திற்கு எவ்வளவோ செலவாகிற நேரத்தில் 5,000 ரூபாய் கொடுக்கக்கூடாதா? இந்த நாட்டைச் செப்பனிடுகிறவர்களுக்கு, இந்த நாட்டைச் சீர்திருத்தும் சிற்பிகளுக்கு, இந்த நாட்டுக்காக உழைக்கிறவர்களுக்கு குறைந்தபட்சம் 5,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று திட்டமிடக் கூடாதா?

காஞ்சிபுரம் அருகில் வேலியூர் என்ற கிராமத்தில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நிலத்தை வாங்கி அரிசனங்களுக்கு மனைக்கட்டுகளாக கொடுப்பதற்காகக் கல் போட்டார்கள். இப்பொழுது அது என்னவாயிற்று? கல்லைப் பிடுங்கிவிட்டு அந்த நிலத்தை மிராசுதாருக்கே திரும்பிக் கொடுக்க வேண்டுமென்று முடிவு எடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. இதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அந்தக் கிராமத்தின் பெயர் என்ன?

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** வேலியூர் என்ற கிராமம். அரிசனங்கள் மாறிவிட்டால் அவர்களுக்கு உதவிப்பணம், சலுகைகள் வழங்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரிசனப் பழங்குடி மாணவர்களுக்கும், மதம் மாறிய மாணவர்களுக்கும் உதவிப் பணம் வழங்கப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா ஸ்காலர்ஷிப் கொடுக்கவில்லையே. அவர்கள் மதம் மாறினாலும் ஒரே வீட்டில் தான் இருக்கிறார்கள். ஒரே வீட்டில் அண்ணன் ஆதித் திராவிடன்/இந்து, தம்பி கிறிஸ்தவன்; மச்சான் கிறிஸ்தவன்; சம்சாரம் இந்து. இந்தக் குடும்பம் பூராவும் ஒரே வீட்டில். ஒரே தெருவிலே, ஒரே வீட்டிலே. ஒரே குடும்பத்திலே இருந்தாலும் ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை. அவர்கள் தங்களை மறுபடியும் இந்து ஆக்கிவிடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. அமைச்சர் அவர்களுக்கு எழுதி இருக்கிறேன். அதற்கு என்ன வழி என்று தெரியவில்லை. [மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆரிய சமாஜம் மூலம் இந்துவாக மாறிவிடலாம்] மதம் மாறிய கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அரிசன மக்களுக்கு உண்டான எல்லாச் சலுகைகளையும் வழங்கும் ...யில் அமைச்சர் அவர்கள் முடிவு எடுக்க வேண்டும்.

ஸ்காலர்ஷிப் சரியான நேரத்தில் கிடைப்பதில்லை என்ற புகார் பரவலாக இருக்கிறது. கொடுத்து வந்த பணத்தைக் கூட நிறுத்திவைக்க உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இப்படி அவரவர்கள் நினைத்தபடி உத்தரவை மாற்றிக் கொண்டிருக்கக் கூடாது. ஹாஸ்டலில் படிக்கும் மற்றப் பிள்ளைகளுக்குச் சாப்பாட்டுக்காக எவ்வளவு பணம் ஒதுக்குகிறார்களோ, அதே பணத்தை அரிசன பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். முன்பு காங்கிரஸ் காரர்கள் கொடுத்து வந்தார்கள். அதை மாற்ற வேண்டாம். அதனால் லட்சம் ரூபாய் செலவாகுமா அல்லது இரண்டு லட்சம் ரூபாய் செலவாகுமா? அந்தப் பணத்தைக் குறைக்காமல் அப்படியே ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது) தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்லூரியில் 150 ரூபாயில் இருந்து 250 ரூபாய் வரை சம்பளம் வாங்குகிறார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இன்றையதினம் அரிசன நல அமைச்சர் அவர்களாலும், பின்தங்கிய அமைச்சர் அவர்களாலும் இம் மன்றத்தில் வைத்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து இந்த இரண்டு துறைகளுக்குமே அதிகப்படியான நிதி ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிற வகையில் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். இன்றையதினம் பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்காக என்று ரூ. 334 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோல் அரிசன மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக ரூ. 551.13 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக் கிறார்கள். இந்த நிதிகள் எவ்வளவு செலவுச் செய்யப்படுகின்றன என்பது பற்றி அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள் சமுதாயத்தில் உள்ள எல்லா ஜாதியினருக்கும் சரியாகக் கிடைக்கிறதா என்று கணக்கு எடுத்துப் பார்க்கவேண்டும்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நல்ல ஆலோசனைகளைச் சொல்வார்கள், அவர் களுக்கு நல்ல அனுபவம் இருக்கிறது, அவர்கள் ஆலோசனைகள் தருவார் களானால் நாம் நிர்வாகத்திற்குப் புதியவர்களாக இருப்பதினால், அவ்வா லோசனைகளை ஏற்றுக் கொண்டு செயல்படலாம் என்று யோசித்தோம். ஆனால் அப்படிப்பட்ட நல்ல ஆலோசனைகளை அவர்கள் தரவில்லை, தர மாட்டார்கள். அரிசனங்களுக்காக நாங்கள் எவ்வளவோ செய்திருக் கிறோம் என்று சொல்லி, அரிசன மக்களின் வீடுகளுக்கு சாப்பிடப் போகத் தயார் என்று கூறி குடிசையில் வாழும் குப்பன் வீட்டுக்குச் செல்லாமல் உறுப்பினர் ஜயராமன் வீட்டுக்கு வருகிறேன் என்று சொன்னதற்காக அவர்களது பரந்த உள்ளத்தை நான் பாராட்டுகிறேன்.

பன்னெடுங் காலமாக சமுதாயத்தில் பறையோடிக் கொண்டிருந்த இந்த பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக என்று முதல் அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி பிற்பட்ட வகுப்பினரின் நலனைக் கவனிப்பதற்காக என்று ஒரு அமைச்சரையும் கொடுத்திருக்கிறார்கள். அரிசன நலன் பற்றியும், பிற்பட்ட வகுப்பினர் நலன் பற்றியும் உள்ள இந்த இரண்டு இனங்களையும் ஒரே அமைச்சர்தான் கொண்டு வந்திருக்கிறார்கள், ஒரே மானியக் கோரிக்கையாக. [illegible]





பின்தங்கிய வகுப்பினர் நல மானியக் கோரிக்கையை தனியாக பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து அதற்கு ஒரு நாள் தனியாக விவாதத்திற்காக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் இல்லங்கள் ஏற்படுத்த ரூ. 10.83 லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது மிகமிக பின்தங்கிய வகுப்பினர் பெரும்பான்மையாக வசிக்கக் கூடிய ஒரு மாவட்டம். அங்குள்ள ஏழை எளிய மாணவர்கள் படிக்க வசதியில்லாமல், கல்வித் துறையில் முன்னேறுவதற்கு வசதியில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே சேலம் மாவட்டத்தில் எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி, ஆட்டையாம்பட்டி போன்ற இடங்களிலும் சேலம் கல்லூரிக்கும் பின்தங்கிய மாணவர்கள் இல்லங்களைத் திறக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்படித் திறப்பதாக அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதை நிறை வேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1953-ல் பின்தங்கிய வகுப்பினர் கமிஷன் ஒன்றை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஏற்படுத்தி அந்தக் கமிஷன் 1955-ல் அறிக்கை ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அதில் எந்த எந்த மாநிலங்களில் பின்தங்கிய வகுப்பினருக்காக அரசாங்கம் உதவி செய்து வருகிறது என்பதை எடுத்துக் காட்டுகிற வகையில் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் அந்த அறிக்கை யின்படி, திருவிதாங்கூர்-கொச்சி, மைசூர் ஆகிய அரசாங்கங்கள் அந்தந்த மாநிலங்களில் வாழும் பின்தங்கிய மக்களுக்காக அவர்களின் மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் உத்தியோகத் துறைகள், மற்றும் துறைகளில் அவர்களுக்கு சலுகைகள் கொடுத்து வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் 70 சத விகிதத்திற்கு மேற்பட்ட பிற்பட்ட வகுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை முன்னேற்ற வேண்டு மென்றால், அந்த அந்த ஜாதி மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உத்தி யோகங்கள் கொடுப்பது, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற வைகளில் இடங்கள் ஒதுக்குவது போன்றவற்றைச் செய்ய வேண்டும். இந்த அளவோடு நம் பணி தீர்ந்து விட்டது என்று சொல்லமுடியாது.

இந்தியாவில் 8,000 ஜாதிகள் இருப்பதாக கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளாக இந்த ஹரிஜன மக்கள், பிற்பட்ட வகுப்பு மக்கள் இவர்களுக்காக காங்கிரஸ் அரசாங்கம் என்ன செய்துள்ளது என்பதைப் பற்றி ராமலிங்கம் அவர்களைப் போன்றவர்கள் ஒன்றும் சொல்ல வில்லை. ரோமானியர்கள் ஸ்பார்ட்டன்ஸ் ஹெலட்டுகளை அடிமைகளாக வைத் திருந்ததைப் போல், ஜெர்மன்ஸ் ஜூஸ்களை அடிமைகளாக வைத்திருந்ததைப் போல், அமெரிக்கா நீக்ரோக்களை அடிமைகளாக வைத்திருந்ததைப் போல், பிரிட்டிஷ்காரர்கள் வில்லியன்களை அடிமைகளாக வைத்திருந்ததைப் போல் இந்த ஹரிஜனங்களையும், பின்தங்கிய வகுப்பினர்களையும் இருபது ஆண்டுக் காலமாக நீங்கள் உங்கள் ஆட்சிக் காலத்தில் அடிமைகளாக வைத்திருந்தீர் கள். அந்த ஏழை மக்களுக்காக உருப்படியான எந்தக் காரியத்தையாவது நீங்கள் செய்தீர்களா? தமிழகத்தில் பின்தங்கிய வகுப்பினர்கள் 157 வகுப் பினர்கள் இருக்கிறார்கள். மிகமிகப் பின்தங்கிய வகுப்பினர்கள் 57 வகுப்பினர்

கள் இருக்கிறார்கள். அவர்களின் மக்கள் சதவிகித அடிப்படையில் என்னென்ன உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன சென்ற இருபது ஆண்டு களில் என்றால் ஒன்றுமே செய்யப்படவில்லை. இந்தப் பின்தங்கிய மக்களின் நலனுக்காக, அவர்கள் சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிக் கிடக்கிறார்கள், அவர்கள் மிகவும் ஒடுக்கப்பட்டு கிடக்கிறார்கள், அவர்கள் முன்னேறியுள்ள ஜாதிகளுக்குச் சமமாக வரவேண்டும் என்பதற்காக நமது முதல் அமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். இந்த பிற்பட்ட மக்களை வாழ்க்கையில் முன்னேற்றமடையச் செய்தால்தான் சமுதாயத்தில் சமத்துவ சமதர்மத்தைக் காணமுடியும். என்பதற்காகத்தான் இந்தக் குழுவை அமைத்திருக்கிறார்கள்.

நமது மாநிலத்தின் நிதி நிலைமை போதுமா என்று பார்க்கிறபோது ஏற்கனவே இருந்த காங்கிரஸ் கட்சி ஆட்சி பெரியதொரு கடன் பளுவை இந்த ஆட்சி மீது சுமத்திவிட்டுப் போய் இருக்கிறது. இந்த பிற்பட்ட வகுப்பினரை முன்னேற்றம் அடையச் செய்ய ஒரு ஐந்தாண்டுத் திட்டம் அல்லது இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு அதற்காக மத்திய அரசு 200 கோடி ரூபாய் ஒதுக்கவேண்டுமென்று அவர்களை நம் அரசு வற்புறுத்த வேண்டும். அந்த அளவிற்கு மத்திய அரசிடம் இருந்து பெற்று இந்த பிற் பட்ட வகுப்புகளுக்கு உதவிகள் புரியவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று யார் யாரோ எப்படி எப்படியெல்லாமோ பேசிக்கொண்டிருக் கிறார்கள். காங்கிரஸ் தரப்பில் புழுக்கம் இருக்கிறது. இன்னும் சில பேர் களிடமும் இந்தப் புழுக்கம் இருக்கிறது. ஆனால் அதை வெளியே காட்ட பயப்படுகிறார்கள். நான் மிகமிகப் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவன் என்று முதல் அமைச்சர் அவர்களே கூறியுள்ளார்கள். அது அவர்களது உயர்ந்த உள்ளத்தைக் காட்டுகிறது. எதிர்தரப்பில் உள்ளவர்கள் மனதில் புழுக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பின்தங்கிய வகுப்பினர்களை முன்னேற்றம் அடையச் செய்யத்தான் அதற்காக ஒரு தனி இலாகாவையே அமைத்திருக்கிறார்கள் நம் முதல் அமைச்சர் அவர்கள். அதற்காக ஒரு தனி அமைச்சரையும் போட்டிருக்கிறார்கள். வன்னியர், மறவர், நாவிதல் சலவைத் தொழிலாளிகள், லப்பை முஸ்லீம் என்ற !மிகவும் பின்ததங்கிய வகுப்பினரின் நலனில் அக்கறைக்கொண்டு நம் முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுக்காக அதிகச் சலுகைகள் செய்து வருகிறார்கள் என்ற உணர்வை எதிர்தரப்பினர் உள்ளத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தைரியம் இருந்தால் அதை வெளியே சொல்லட்டும்.

இப்படிச் சமூகத்திலேயிருக்கும்பொழுது, நம்முடைய முதலமைச்சரவர் கள், தைரியமாக, அப்பட்டமாகச் சொன்னார்கள், நான் மிகமிகப் பின் தங்கிய வகுப்பைச் சார்ந்தவன் என்று. அந்த நல்லெண்ணம் கொண்டவரை, அத்தகைய உள்ளம் கொண்டவரை நாம் முதலமைச்சராகப் பெற்றிருக் கிறோம். அவருக்கு, நான் 60 சத விகிதம், 70 சத விகிதம் உள்ள பின்தங்கிய மக்களின் சார்பாகச் சொல்லிக் கொள்ளுகின்றேன், உங்களுடைய நல் லெண்ணம், உங்களைத் தமிழகத்திலே இருக்கும் அத்தனை பின்தங்கிய வகுப் பினர்களும் தங்களின் இதய தெய்வமாகப் பூசித்து வருகிறார்கள். ஆகவே, உங்கள் நல்லெண்ணம் மேலும் மேலும் வளர்ந்து, பின் தங்கிய சமுதாயத்தைச்



சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, ஹரிஜன மக்களாக இருந்தாலும் சரி, அவர்கள் அத்தனைபேருக்கும் நான் பாதுகாப்பு அளிப்பேன், அவர்களை வாழ்வில் முன்னேறச் செய்வேன் என்ற இலட்சியத்தை நீங்கள் உறுதியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முதலமைச்சரவர்களையும், இத்துறையின் பணியை ஏற்றுக்கொண்டிருக்கும் அமைச்சரவர்களையும் கேட்டுக்கொண்டு, அதற்கான முயற்சிகளில் எவ்வளவு விரைவில் காரியங்கள் ஆற்ற முடியுமோ அவ்வளவு விரைவில் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, இதற்கு இன்னமும் அதிகத் தொகை ஒதுக்க வேண்டும், இதற்குத் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவார்கள் என்று கருதி முடிக் கிறேன்.

திரு. மு. முத்தையா : மாண்புமிகு தலைவரவர்களே, ஹரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலக்குழு ஆகிய இந்த மானியங்களை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன்.

ஹரிசன நலத்துறைக்காக ஒரு அமைச்சர், பிற்பட்டோர் நலத்துறைக்காக ஒரு அமைச்சர் என்று இரண்டு அமைச்சர்கள் இருப்பதற்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஹரிசன நலத்துறையில் இருக்கக்கூடிய அமைச்சரவர்களும், பிற்பட்டோர் நலக் குழுவிலே இருக்கக்கூடிய அமைச்சரவர் களும் இருக்கிறார்கள். ஆனால் இந்தக் குழு எந்தவிதத்திலே அமைக்கப்பட்டு, எந்த முறையிலே செயல்படுகிறது எகிறே தெரியவில்லை. மாவட்டங்கள் தோறும் இந்தப் பிற்பட்டோர் நலக் குழு சென்று ஆங்காங்குள்ள இடத்தை நேரில் சென்று பார்த்து, அந்தந்த மாவட்டத்திலுள்ள பிற்பட்டோர்களைப் பிரதிநிதிகளாகத் தேர்தெடுத்தது அல்ல. அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப் பினர்களைப் பிற்பட்டோர் நலக் குழுவில் சேர்த்து. அந்தக் குழு வந்தால் அது நல்லமுறையாக அமையும், அவர்கள் சொல்லும் குறைபாடுகளைச் சொல்ல முடியும். இந்தக் குழு அப்படி அல்ல. நான் சொல்லுவதற்காக அமைச்சரோ முடியும். இந்தக் குழு அப்படி அல்ல. எதோ நான் சொல்லுவதற்காக அமைச்சரவர்கள், பிற்பட்டோர் நலக்குழு என்று, அமைச்சர் பதவி கொடுக்க வேண்டுமென்று பொறுப்புதந்து கொடுத்திருக்கிறார்களோ தவிர, மற்ற படி எந்த ஒரு கருத்தோடு இந்தக்குழுவை நடத்த வேண்டுமென்ற பொறுப்பை இன்னும் அவர்கள் கொடுக்கவில்லை. நான் இப்படிச் சொல்வதற்காக அமைச்சரவர்கள் வருத்தப்படக்கூடாது. ஏனென்றால், ஒவ்வொரு மாவட்டந்தோறும் சென்று, அந்தக் குழு இன்னின்ன நடக்க வேண்டும் என்ற அந்த முறையில் நடக்க வேண்டும். எப்படி இயங்க வேண்டுமென்றால், அந்த வட்டாரத்திலுள்ள அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களையும் அந்தக் குழுவில் சேர்க்க வேண்டும். ஹரிஜன நலத்துறையில் நான் கூட அந்தக் குழுவில் சேரவில்லை. எனது கருத்துக்களை நான் எப்படிச் சொல்ல முடியும்? இதை அமைச்சரவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். எனவே, இதைக் கட்டாயமாகப் பரிசீலனை செய்து எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் பிற்பட்டோர் நலக்குழுவில் அங்கத் தினராகச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த அரசாங்கத்துறையில் வேலை ஒதுக்கீடு இல்லை 16 சத விகிதம் ஹரிசனங் களுக்கு என்றிருக்கிறது. ஆனால் அந்த முறையில் நடக்கிறதா என்றால், இல்லை

[திரு. ஆண்டி என்கிற குருசாமி] [1970 மார்ச் 16

ஹாஸ்டல்கள் இருக்கின்றன; 2 பெண்கள் ஹாஸ்டல், 2 அரிசன ஹாஸ்டல். வத்திராயிருப்பிலும் திருவில்லிபுத்தூரிலும் இன்னொரு இடத்திலும் இருக்கிறது. அங்கு இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மேலும் புதிய கட்டிடம் ஹாஸ்டலுக்குக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதில், எங்கள் தொகுதியில் பல கிராமங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு இன்னும் பட்டா கொடுக்காமல் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அரிசனங்களை விவசாயத்தில் ஈடுபடுத்தி முன்னேற்றம் அளிப்பதற்காக உழவு கருவிகள் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அரிசனங்களுக்காக பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் போக்குவரத்துக் கூட்டுறவு சங்கங்களும்* நிறுவப்படுகின்றன.

மோட்டார் பழுது பார்க்கும் தொழில், அச்சுத் தொழில், காலணிகள் செய்தல், உணவு விடுதிகள் நடத்துதல், சைக்கிள் கடைகள் நடத்துதல் இவற்றில் அரிசனங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ரூபாய் 250 முதல் ரூபாய் 5,000 வரை கடன் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இந்தத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தி அரிசன மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்புக்காக கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தினால் தீண்டாமை ஒழியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் புழவுக்கால் திட்டம் 1952-லேயே ஆரம்பிக்கப்பட்டு 20 ஆண்டு காலமாகியும், அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்கள் முதல் மந்திரிகளாக இருந்தும்கூட, இன்னமும் நிறைவேறாமல் இருக்கிறது. மதிப்புக்குரிய கலைஞர் அவர்கள் தலைமையில் அரசு அமைந்ததற்குப் பிறகு அந்தத் திட்டத்திற்கு 75.60 லட்சம் ஒதுக்கி வேலைக்கு எடுத்துக் கொண்டதற்காக என் தொகுதி மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வத்திராயிருப்பு—அழகாபுரி, கிளாலூர் செல்லும் சாலையில் பாலங்கள் இல்லாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறோம். 4 அல்லது 5 இடங்களில் பாலங்கள் அவசியமாக வேண்டும். அவைகளைக் கட்டிக் கொடுத்தால், நலமாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் ரோட் போக்குவரத்து சாலை இல்லாமல் இருப்பதை மாற்றி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன நல மானியத்திலிருந்து நீரேற்றும் பம்பு செட்டுகள் அமைத்தும் வாங்கி ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுகளாகியும் அந்தந்த ஊருக்கு தண்ணீர் சப்ளை செய்யாமல் கவனக் குறைவாக இருக்கிறார்கள். உடனடியாக தண்ணீர் சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அரிசன நலத்துறை மானியத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



1970 மார்ச் 16]

## பழங்குடிமக்கள், அரிசனங்கள் ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்

* திரு. மு. இராமன்: சட்டப் பேரவை தாற்காலிக தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை மானியத்தின்மீது பேச எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரிசன நல மாணவர்—மாணவியர் விடுதிகளில் உள்ள மாணவர்கள், மாணவிகள் சொந்த செலவுக்காக—சீப்பு, சோப்பு, எண்ணெய் போன்ற பொருட்கள் வாங்கிக் கொள்வதற்காக—ஆண்பிள்ளைகளுக்கு ஒரு ரூபாயும், பெண் குழந்தைகளுக்கு இரண்டு ரூபாயுமாக மானியம் வழங்கப்பட்டு வருகிறது. உண்மையிலேயே பெண் குழந்தைகளுக்கு இரண்டு ரூபாய் நிச்சயமாகப் போதாது. ஆகவே மாணவியருக்கு மூன்று ரூபாயாகவும், மாணவர்களுக்கு இரண்டு ரூபாயாகவும் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட காலமாக அரிசன பள்ளிக்கூடங்களில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. அது 15 பைசா திட்டத்தில் நடந்து வருகிறது. 15 பலம் சாதம் 10 பலம் சாம்பார் என்ற திட்டத்தில் போடுவதாகச் சொன்னாலும், உண்மையிலேயே இரண்டும் சேர்ந்து 25 பலம் போடுவதாக இல்லை. இதையும் கவனித்து 25 பைசாவாக அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாணவர்களுக்கு உடை வசதி செய்து தரப்படவில்லை; பெண் குழந்தைகளுக்கு மட்டும் தான் உடை வசதி பொங்கல், தீபாவளி நேரங்களில் கொடுக்கப்படுகிறது. மாணவர்களுக்கும் அந்த சலுகையை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியத்தில் 551.13 இலட்ச ரூபாய் அரிசன நலத் துறைக்கும் 334.05 இலட்ச ரூபாய் பின்தங்கிய வகுப்பினர் நலத் துறைக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை முழுவதும் அரிசன மக்களுக்கும் பின்தங்கிய வகுப்பு மக்களுக்கும் தான் செலவழிக்கப்படுகிறதா, அல்லது அந்தத் துறையில் வேலை செய்கிற ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள், இயக்குநர், மற்ற அதிகாரிகள் அரசு பணியாளர்களுக்கும் இந்தத் தொகையிலிருந்து தான் செலவழிக்கப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து விளக்க வேண்டும். அரசு அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் ஆகும் செலவைத் தனியாக ஒதுக்கீடு மூலம் கேட்டால் நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன். அது பற்றிய விளக்கம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை. அதை விளக்க வேண்டும் என்ற அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன நலத் துறை ஆசிரியர்களுக்கு தேவையான குடியிருப்பு வசதி அமைச் செய்து தரவேண்டும். அவர்களை 20, 30 மைலுக்கு அப்பால் மாற்ற வேண்டியிருக்கிறது. ஆகையினால் அரிசன நலத் துறைப் பள்ளிகள் இருக்கிற இடங்களில் அந்த ஆசிரியர்களுக்கு சுமார் 1,000 ரூபாய் அளவில் வீடு கட்டி குடியிருப்பு வசதி செய்து கொடுத்தால், அவர்கள் நல்ல முறையில் வேலை செய்ய வாய்ப்பாக இருக்கும். அரிசன நலத் துறை ஆசிரியர்களுக்கு மேலும் உற்சாகம் அளிப்பதற்கு, ஹாஸ்டல்களில் பரிசு வழங்குவது போல், எந்தப் பள்ளியில் உள்ள பிள்ளைகள் நல்ல முறையில் தேர்ச்சி அடைகிறார்களோ, அந்தப் பள்ளி தலைமை ஆசிரியர், மற்ற ஆசிரியர்களுக்கு பரிசுகள் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. ஆண்டி என்கிற குருசாமி] [1970 மார்ச் 16

ஹாஸ்டல்கள் இருக்கின்றன; 2 பெண்கள் ஹாஸ்டல், 2 அரிசன ஹாஸ்டல். வத்திராயிருப்பிலும் திருவில்லிபுத்தூரிலும் இன்னொரு இடத்திலும் இருக்கிறது. அங்கு இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மேலும் புதிய கட்டிடம் ஹாஸ்டலுக்குக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதில், எங்கள் தொகுதியில் பல கிராமங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு இன்னும் பட்டா கொடுக்காமல் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அரிசனங்களை விவசாயத்தில் ஈடுபடுத்தி முன்னேற்றம் அளிப்பதற்காக உழவு கருவிகள் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அரிசனங்களுக்காக பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் போக்குவரத்துக் கூட்டுறவு சங்கங்களும்* நிறுவப்படுகின்றன.

மோட்டார் பழுது பார்க்கும் தொழில், அச்சுத் தொழில், காலணிகள் செய்தல், உணவு விடுதிகள் நடத்துதல், சைக்கிள் கடைகள் நடத்துதல் இவற்றில் அரிசனங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ரூபாய் 250 முதல் ரூபாய் 5,000 வரை கடன் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இந்தத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தி அரிசன மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்புக்காக கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தினால் தீண்டாமை ஒழியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் புழவுக்கால் திட்டம் 1952-லேயே ஆரம்பிக்கப்பட்டு 20 ஆண்டு காலமாகியும், அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேர்கள் முதல் மந்திரிகளாக இருந்தும்கூட, இன்னமும் நிறைவேறாமல் இருக்கிறது மதிப்புக்குரிய கலைஞர் அவர்கள் தலைமையில் அரசு அமைந்ததற்குப் பிறகு அந்தத் திட்டத்திற்கு 75.60 லட்சம் ஒதுக்கி வேலைக்கு எடுத்துக் கொண்டதற்காக என் தொகுதி மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வத்திராயிருப்பு—அழகாபுரி, கிளாலூர் செல்லும் சாலையில் பாலங்கள் இல்லாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறோம். 4 அல்லது 5 இடங்களில் பாலங்கள் அவசியமாக வேண்டும். அவைகளைக் கட்டிக் கொடுத்தால், நலமாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் ரோட் போக்குவரத்து சாலை இல்லாமல் இருப்பதை மாற்றி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன நல மானியத்திலிருந்து நீரேற்றும் பம்பு செட்டுகள் அமைத்தும், வாங்கி ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுகளாகியும் அந்தந்த ஊருக்கு தண்ணீர் சப்ளை செய்யாமல் கவனக் குறைவாக இருக்கிறார்கள். உடனடியாக தண்ணீர் சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அரிசன நலத்துறை மானியத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



1970 மார்ச் 16]

## பழங்குடிமக்கள், அரிசனங்கள் ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்

* திரு. மு. இராமன்: சட்டப் பேரவை தாற்காலிக தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை மானியத்தின்மீது பேச எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரிசன நல மாணவர்—மாணவியர் விடுதிகளில் உள்ள மாணவர்கள், மாணவிகள் சொந்த செலவுக்காக—சீப்பு, சோப்பு, எண்ணெய் போன்ற பொருட்கள் வாங்கிக் கொள்வதற்காக—ஆண்பிள்ளைகளுக்கு ஒரு ரூபாயும், பெண் குழந்தைகளுக்கு இரண்டு ரூபாயுமாக மானியம் வழங்கப்பட்டு வருகிறது. உண்மையிலேயே பெண் குழந்தைகளுக்கு இரண்டு ரூபாய் நிச்சயமாகப் போதாது. ஆகவே மாணவியருக்கு மூன்று ரூபாயாகவும், மாணவர்களுக்கு இரண்டு ரூபாயாகவும் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட காலமாக அரிசன பள்ளிக்கூடங்களில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. அது 15 பைசா திட்டத்தில் நடந்து வருகிறது. 15 பலம் சாதம் 10 பலம் சாம்பார் என்ற திட்டத்தில் போடுவதாகச் சொன்னாலும், உண்மையிலேயே இரண்டும் சேர்ந்து 25 பலம் போடுவதாக இல்லை. இதையும் கவனித்து 25 பைசாவாக அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாணவர்களுக்கு உடை வசதி செய்து தரப்படவில்லை; பெண் குழந்தைகளுக்கு மட்டும் தான் உடை வசதி பொங்கல், தீபாவளி நேரங்களில் கொடுக்கப்படுகிறது. மாணவர்களுக்கும் அந்த சலுகையை அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியத்தில் 551.13 இலட்ச ரூபாய் அரிசன நலத் துறைக்கும் 334.05 இலட்ச ரூபாய் பின்தங்கிய வகுப்பினர் நலத் துறைக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை முழுவதும் அரிசன மக்களுக்கும் பின்தங்கிய வகுப்பு மக்களுக்கும் தான் செலவழிக்கப்படுகிறதா, அல்லது அந்தத் துறையில் வேலை செய்கிற ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள், இயக்குநர், மற்ற அதிகாரிகள் அரசு பணியாளர்களுக்கும் இந்தத் தொகையிலிருந்து தான் செலவழிக்கப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து விளக்க வேண்டும். அரசு அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் ஆகும் செலவைத் தனியாக ஒதுக்கீடு மூலம் கேட்டால் நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன். அது பற்றிய விளக்கம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை. அதை விளக்க வேண்டும் என்ற அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன நலத் துறை ஆசிரியர்களுக்கு தேவையான குடியிருப்பு வசதிகளைச் செய்து தரவேண்டும். அவர்களை 20, 30 மைலுக்கு அப்பால் மாற்ற வேண்டியிருக்கிறது. ஆகையினால் அரிசன நலத் துறைப் பள்ளிகள் இருக்கிற இடங்களில் அந்த ஆசிரியர்களுக்கு சுமார் 1,000 ரூபாய் அளவில் வீடு கட்டி குடியிருப்பு வசதி செய்து கொடுத்தால், அவர்கள் நல்ல முறையில் வேலை செய்ய வாய்ப்பாக இருக்கும். அரிசன நலத் துறை ஆசிரியர்களுக்கு மேலும் உற்சாகம் அளிப்பதற்கு, ஹாஸ்டல்களில் பரிசு வழங்குவது போல், எந்தப் பள்ளியில் உள்ள பிள்ளைகள் நல்ல முறையில் தேர்ச்சி அடைகிறார்களோ, அந்தப் பள்ளி தலைமை ஆசிரியர், மற்ற ஆசிரியர்களுக்கு பரிசுகள் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த விடுதிகளில் சமையல்காரர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு மாதம் 25 அல்லது 20 ரூபாய் என்று சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்தக் குறைந்த சம்பளத்தை வைத்துக் கொண்டு அவர்கள் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது. இது நீண்ட காலமாக இருக்கிற பிரச்சினை. அவர்கள் சம்பளத்தை குறைந்தது 35 ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் வழுதாலூர், சித்தலம்பட்டு என்ற ஊர்களில் அரசினர் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே விடுதிகள் தேவை என்று இரண்டு ஆண்டுகளாக இங்கே வற்புறுத்தி வருகிறேன். இதை அமைச்சர் அவர்கள் கவனித்து இந்த ஆண்டிலாவது விடுதிகள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பின்தங்கிய வகுப்பு, ஆதித்திராவிட மாணவர்கள் 10 மைலுக்கு அப்பாலிருந்து நடந்து வந்து படிக்கிறார்கள். அவர்களுடைய அவல நிலையைப் போக்குவதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் பகுதியில் வழுதாலூர், சாலியாம்பாளையம், வளவனூர் அரிசன காலனிகள் 1962-ல் ஏற்பட்டு, உயர்நீதி மன்றத்தில் போடப்பட்ட வழக்கு காரணமாக, இன்னமும் அரிசன மக்களுக்கு குடியிருப்பு மனை கொடுக்கப்படவில்லை. இதை நிவர்த்தி செய்வதற்கு, அரிசன நலத் துறை வழக்குகள் சம்பந்தப்பட்டவரை, ஒரு தனி உயர்நீதி மன்ற நீதிபதியை ஏற்படுத்தியாவது இரண்டாண்டுகளுக்குள் அந்த வழக்குகளைப் பைசல் செய்வதற்கான முடிவை அரசு எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாநில சர்க்கார் நிதி எவ்வளவு, மத்திய சர்க்கார் நிதி எவ்வளவு என்பது இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை. ஆதித் திராவிட சமூகத்திற்காக மத்திய அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது, அரிசன மேம்பாட்டிற்காக, கல்வித் துறைக்காக, மற்ற துறைக்காக எவ்வளவு மான்யத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றிய குறிப்புகள் இல்லை. அவற்றை தயவு செய்து தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் நல்கிய தலைவர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு, முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** மன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவாதத்தில் இருந்து கொண்டிருக்கிற அரிச இலாகா மானியம் சம்பந்தமாக எனது கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன். அரிசனங்களுக்காகவும், பின்தங்கிய வகுப்பினர்களுக்காகவும் சேர்த்து ரூ. 8,85,00,000 அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. இதைப் பார்க்கிறபொழுது மொத்த ஜனத் தொகையிலே 65 சதவிகிதத்தினர் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். ஏறத்தாழ 20 அல்லது 15 சதமானம் அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். மொத்த ஜனத்தொகையில் 80 சதவிகிதத்தினராகிய இந்த மக்களுக்கு ஒதுக்கியிருக்கிற தொகையைப் பார்த்தால், மொத்தத்தில் 2% [illegible] ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது புலனாகிறது. இது



மிகமிகக் குறைவான தொகை. இம்மாதிரி மிகவும் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைக் கொண்டு அரிசன மக்கள் பின்தங்கிய மக்கள் முன்னேற்றம் அடைந்துவிடுவார்கள் என்று சொன்னால், அது நடக்காத காரியமாகத்தான் இருக்க முடியும். ஆகவேதான் இன்றையதினம் உதவி செய்கின்ற காலத்தில் ஏற்படுகிற குறைபாடுகளை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது மிக உதவியாக இருக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். அரசுக்கு நல்ல எண்ணம் இருக்கிறது. அரிசன மக்கள் முன்னேற வேண்டும், அரிசன மக்களுக்கு இழைக்கப்படுகிற தீமைகள் அகற்றப்பட வேண்டும் என்று அக்கறையோடு அமைச்சர் அவர்கள் செயல்பட்டு வந்தாலும், நடைமுறையில் இருக்கிற சில குறைபாடுகளை நீக்குவதற்கு, அரசு விரிவான ஒரு திட்டத்தைத் தயார் பண்ண வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாணவர்களுக்கு உதவித் தொகை அளித்து வருவது மிகமிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால், அரிசன மாணவர்கள் போதிய அளவிலே கல்லூரிகளிலே படிக்க முடியாத நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் விடுதிகளுக்கு பாக்கி கொடுக்க வேண்டும் என்று திருப்பிக் கேட்கிற காலத்தில், கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய தொகை செலுத்த முடியாத நிலை இருப்பதன் காரணத்தினால், கல்லூரியிலிருந்து அவர்கள் வெளியேற வேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே, மாணவர்களுக்கு இந்த உணவுக்கான தொகை முழுவதையும் அரசாங்கப் பொறுப்பிலே கொடுப்பதுதான் சகல மாணவர்களும் கல்லூரிகளில் படித்து, தேர்வில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு அளிப்பதாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதிய உணவுத் திட்டம் அரிசன நலத் துறை பள்ளிகளில் நடத்தப்பட்டு வருகிறது. 15 காசு கொடுக்கிறார்கள். 15 காசுக்கு ஒரு மாணவன் அல்லது மாணவிக்கு உணவு அளிக்க முடியுமா என்பதை கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். மிகக் குறைவான தொகையை அதற்காக ஒதுக்கிக் கொடுத்திருப்பதால், உணவுப் பங்கீடு செய்யக்கூடிய ஒப்பந்தக்காரர்கள், அதை ஏற்றுக்கொள்வதற்கு மறுக்கிறார்கள், 15 காசுக்கு உணவு அளிக்க முடியாது என்று பல இடங்களில் காண்டிராக்ட்காரர்கள் நிறுத்தி விடுகிறார்கள். ஒழுங்காக நடப்பதில்லை என்பதற்காக அதிகாரிகள் காண்டிராக்டை ரத்து செய்து விடுகிறார்கள். இந்த நிலையில் தொடர்ந்து இந்த மாணவர்களுக்கு 15 காசு செலவில் உணவு அளிக்க முடியாது. ஆகவே, குறைந்தபட்சம் ஒரு மாணவனுக்கு 25 காசு என்ற அளவிலாவது பணம் ஒதுக்க வேண்டும். அவ்வாறு ஒதுக்குவதன் மூலம், ஏழை மாணவர்கள், அரிசன வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பதற்கு கொஞ்சம் ஊக்கமாக இருக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்கள் அரிசன நல இலாகாவினரால் நடத்தப்படும் பள்ளிகளை எடுத்துக் கொள்ளலாம் என்ற ஆலோசனையைப் பற்றி எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும், பஞ்சாயத்து கட்டு மன்ற உறுப்பினர்களையும் அபிப்பிராயம் கேட்டிருக்கிறார்கள். இது மிக மிக

ஆபத்தானது. அரிசன நல இலாகாவினால் நடத்தப்படும் பள்ளிகளில் அரிசனப் பிள்ளைகளுக்குப் பல்வேறு வகையிலே இப்பொழுது உதவி செய்யப்பட்டு வருகிறது. வருஷத்திற்கு இரண்டு முறை ஆடைகள் கொடுக்கிறார்கள். குறைவாக கொடுத்தால்கூட, உணவு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வசதிகளையெல்லாம் நிறுத்திவிடுவார்கள். ஆகவே, தயவு செய்து அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பள்ளிகளை பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற யோசனை இருந்தாலும், அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது. அரிசன நலத் துறை தான் அந்தப் பள்ளிகளை நடத்தியாக வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்,

குடியிருப்பு மனை நில ஆர்ஜித விஷயங்களை எடுத்துக் கொண்டால், அது ஆமை வேகத்தில்தான் போய்க் கொண்டிருக்கிறது. தனியாக இதற்கு ஒரு சட்டம் இருந்தாலொழிய குடியிருப்பு மனைக்காக நில ஆர்ஜிதம் செய்ய முடியாது. ஒரு கிராமத்திற்குச் சென்று, கிராமத்திலுள்ள அரிசனங்களுக்காக மனை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகள் நடவடிக்கை ஆரம்பித்த உடனேயே, நான்கு பேர்கள் அந்த ஜனங்களுக்கு விரோதமாக மனு எழுதி விட்டார்களேயானால், எடுத்த நடவடிக்கை நின்றுபோய் விடுகிறது. இல்லையென்று சொன்னால், ரூ. 15, 20 வக்கீலுக்குக் கொடுத்து, கோர்ட்டில் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். ஹைகோர்ட்டுக்கு கேஸ் போனால், அந்தக் கேஸை பைசல் செய்வதற்கு 3, 4 ஆண்டுகள் ஆகிவிடுகிறது. அரிசனங்களுக்கு, சமுதாயத்திலே இருக்கிற மிகவும் பின்தங்கிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, கருணை காட்டி, அவர்களுடைய நன்மையை மனதில் கொண்டு, அவர்களுக்குத் தகுந்த முறையில் தீர்ப்பு வழங்கப்படுவதில்லை. எடுப்பதே தவறு என்ற முறையில் தான் தீர்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் சட்டத்தை தேவைப்படுகிற மாதிரி மாற்றி அமைத்தால்தான், இதற்கு இடம் அளிக்க முடியும். நில ஆர்ஜித சட்டத்தை திருத்தியாக வேண்டும். அந்த சட்டம் வெள்ளையன் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சட்டம் தான். ஆகவே, இன்றைய நிலைக்கு ஏற்ற வகையில் அந்தச் சட்டத்தை மாற்[றி] அமைத்து, எந்தவிதமான தடையும் இல்லாத அளவில் ஏழை அரிசனங்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, குடியிருப்பு மனைகளுக்காக நில ஆர்ஜிதம் செய்யக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். அதற்குரிய ரூபாய் கூட போதுமானதாக இல்லை. மேலும், அதற்குத் தகுந்த அளவில் அரசாங்கம் சிப்பந்திகளை நியமனம் செய்ய வேண்டும். ஒரு தாசில்தாருக்கு நான்கு தாலுக்காக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றால், அந்த தாசில்தார் நான்கு தாலுக்காக்களுக்கும் சென்று எப்படி ஏழை அரிசனங்களின் நிலையைக் கண்டறிந்து, அரசாங்கத்தினுடைய அனுமதி கேட்டு, இந்தக் காரியங்களையெல்லாம் துரிதமாகச் செய்ய முடியும் என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, குறைந்தபட்சமாக ஒரு தாலுகாவிற்கு ஒரு தாசில்தார் என்ற அளவிலாவது நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எதெதற்கோ தாசில்தார்களை நியமனம் செய்கிறார்கள். ஸிவில் சப்ளை தாசில்தார் என்று சொல்கிறார்கள். என்னதான் நடக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே, ஒரு சமுதாய முன்னேற்றத்திற்கு, ஒரு தாலுகாவிற்கு ஒரு தாசில்தார், ஒரு பிர்காவிற்கு ஒரு ரெவின்யூ



இன்ஸ்பெக்டர் ஆகியோர்களை நியமனம் செய்து, இப்படிப்பட்ட நில ஆர்ஜித வேலைகளை திறமையாக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன சேரிகளுக்கு குடிதண்ணீர் வசதி என்று சொல்கிற காலத்தில் இந்த இலாகாவின் மூலமே இவைகளை ஏன் செய்யக்கூடாது என்பது கேள்வி. பஞ்சாயத்து போர்டுகள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவைகளிடம் இந்த வேலைகள் ஒப்படைக்கப்பட்டு, அவர்களுடைய கருணையில்தான் குடித்தண்ணீர் கிணறுகள் வெட்டப்பட வேண்டும் என்று சொன்னால், அது நடக்காத காரியம். அது தீவிரமாக செயல்பட முடியவில்லை. அதைப்போல இன்றையதினம் அரிசன நல இலாகாவிலிருந்து மின்சார விஸ்தரிப்புக்காக பணம் ஒதுக்கப்படுகிறது. ஆனால், மின்சார இலாகாவை எடுத்துக் கொண்டாலும், அதே நிலைதான். சமுதாயத்தில் தீண்டப்படாதவர்கள் என்று அவர்கள் எந்த அளவுக்கு ஒதுக்கப்படுகிறார்களோ, அதே நிலையில்தான் அவர்களுடைய நன்மைக்காக செய்யக்கூடிய காரியங்களும் ஒதுக்கித் தள்ளப்படுகிறது. மின்சார இலாகாவை எடுத்துக்கொண்டால், அப்படித்தான செய்கிறார்கள், சுகாதார இலாகாவை எடுத்துக்கொண்டாலும் அப்படித்தான் செய்கிறார்கள். இது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய முறையில், அரசாங்கமே நேரடியாக இந்த இலாகாவின் மூலம் சகல காரியங்களையும் செய்யக்கூடிய ஒரு முறையைக் கையாள வேண்டும், அம்மாதிரி நிலை ஏற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலில் முன்னேற வேண்டும் என்பதற்காக கூட்டுறவு முறையில் பால் விநியோகத்திற்காக சங்கங்கள் அமைப்பதற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சில சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. புதிதாக சங்கங்கள் அமைத்துக் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். டி.ஆர்.ஐக் கேட்டால் கமிஷனரைக் கேளுங்கள் என்கிறார்கள். கமிஷனரைக் கேட்டால், கமிஷனர் என்ன ஆணை பிறப்பிக்கிறார் என்றால், அந்த இடத்திலேயே பாலைக் கொண்டுவந்து கொடுக்க வேண்டும். அதற்கான ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்தால்தான் அனுமதி கொடுக்கப்படும் என்கிறார். ஒரு தாலுகா எல்லைக்கோடியிலிருந்து தலைநகரத்தில் இருக்கக்கூடிய பால் பண்ணைக்கு பாலைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்றால், அது எப்படி முடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அரிசனங்களுக்கு உதவி செய்யக் கூடிய வேலைகள் இப்படி செய்ய முடியாமல் தடைப்படுகிறது. பால் பண்ணை சம்பந்தமாக அப்படிப்பட்ட விதிமுறைகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தீண்டாமையை ஒழிப்பது பற்றி பிரசாரம் செய்கிறோம். இன்றைக்கு இருக்கக்கூடிய பிரசாரம் போதுமான அளவுக்கு இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். சட்டம் போட்டுக் கூட, சட்டத்தை அமல் படுத்தும் அதிகாரிகள் இதில் அவ்வளவு சுறுசுறுப்பாக இல்லை என்பது ஒரு புறம் இருக்கட்டும். இருந்தபோதிலும், ஒரு தனி போலீஸ் படையையே வைத்து நடத்தலாமா என்றாலும் அதுவும் சிக்கலாக இருக்கும். ஆகவே, மனமாற்றம் ஏற்பட வேண்டும். ஜாதி இந்துக்களிடம் மனமாற்றம் ஏற்பட

வேண்டும். அவர்கள் மனம் மாறவேண்டும். தீண்டாமை ஒழிப்பில் ஜாதி இந்துக்கள் முன்னணியில் இருக்கவேண்டும். அந்த முறையில் முயற்சிகள் செய்யவேண்டும்.

அரிசன மக்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. தமிழக அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு அரிசனங்களுக்கு முன் சலுகை அளிக்க வேண்டும். எல்லோருக்கும் பொதுவாகச் செய்யக் கூடாது. நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பது என்பதில், எல்லா ஜாதிக்காரர்களும், எல்லா ஆள்களும் வாங்குகிறார்கள். சென்னையிலே இருப்பவர் கூட நகரத்தில் வாழ்கிறவர்கள் கூட, கிராமத்தில் இருக்கும் நிலத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த நிலைகளை மாற்ற வேண்டும். அந்தக் கிராமத்தில் இருக்கும் அரிசனங்களுக்குப் பூராவாக. அந்த மண்ணிலே உழைத்தவர்களாக இருப்பவர்கள். அந்த மண்ணிலேயே அதைப் பண்படுத்தி, விவசாயம் செய்த மக்களுக்கு முதலிடம் கொடுத்துவிட்டு, முதல் சலுகை கொடுத்து விட்டு, மற்றவர்களுக்கு இரண்டாவதாகத்தான் இடம் கொடுக்கவேண்டும். அதே போல, அரசாங்க சிப்பந்திகளை அமர்த்தும்போது, பணிமனைகளில் வேலைக்கு அமர்த்தும்போது, முதலிடம் கொடுத்து ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். மாநில ஆலோசனைக் குழு ஒவ்வொரு இலாகாவிலும், எத்தனை பேர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டதற்கு, போலீஸ் இலாகாவிலிருந்துதான் பதில் வந்திருக்கிறது என்றும், மற்ற இலாகாக்கள் கொடுக்கவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் சொன்னார்கள். அவர்களுக்கு உரிய முறையில், 16 சதவிகிதம், அவர்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை என்றுதான் நாங்கள் அச்சப்படும் நிலையில் இருக்கிறது. ஒவ்வொரு இலாகாவிலும், கல்வி இலாகாவாக இருந்தாலும் சரி, சுகாதார இலாகாவாக இருந்தாலும் சரி, மின்சார இலாகாவாக இருந்தாலும் சரி, மருத்துவ இலாகாவாக இருந்தாலும் சரி, பொதுப்பணித் துறையாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு இலாகாவிலும் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட அளவில் நியமிக்கப்பட்டிருக்கிறதா, அத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அது மாத்திரமல்ல, மத்திய சர்க்காரில் இப்பொழுது சொல்கிறார்கள். ஜனத்தொகை அடிப்படையில் சலுகைகள் வழங்கப் போகிறார்கள் என்று. ஜனத்தொகை அடிப்படை என்பதைவிட, ஒரு 50 சதவிகிதம் அவர்களுக்கு என்று ஒதுக்குவதுதான், மேலும் அரசாங்க வேலைகளில், அவர்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். இம்மாதிரி பல்வேறு சலுகைகள் கொடுப்பதால் மட்டும், தீண்டாமை என்கிற பேய் இருக்கிறதே, அதை விரட்ட முடியும் என்று நினைக்கவில்லை. சும்மா பெயரளவில் செய்யும் இம்மாதிரியான காரியங்கள் மூலமாக அது போகாது என்பதுதான் என்னுடைய சொந்த அபிப்பிராயமாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்வதற்கு விரும்புகிறேன்.

பிற்பட்ட மக்களுக்கு என்று, அவர்களுடைய நலனுக்காக ஒரு அமைச்சரைப் போட்டு, அந்த மக்களுடைய குறைகளை ஆராயவேண்டும் என்று செய்திருக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையைப் பாராட்ட வேண்டும். அது போற்றத்தக்க ஒன்று. அதற்காக என்று ஒரு கமிஷன் போட்டிருக்கிறார்கள், பிற்பட்டோர் நலக் கமிஷன் என்று. அதைப் போலவே, அரிசனங்களுக்கு என்று ஒரு தனிக் கமிஷனைப் போடவேண்டும், அதையும் அரசாங்கம் ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



பிற்பட்டோர்கள் என்று சொல்லும்போது, பொருளாதாரத்தில் பிற்பட்டு இருந்தாலும், சமூகத்தில் அந்தஸ்து இருக்கிறவர்கள். ஆனால் இந்த அரிசனங்கள் என்பவர்கள் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும், இவர்களும் முன்னுக்கு வருகிறார்களே என்று மற்றவர்கள் பொறாமைப்படுகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

அமைச்சராக வந்திருக்கிறார்களே, அதிகாரிகளாக வந்திருக்கிறார்களே, ஐ.ஏ.எஸ். பாஸ் செய்திருக்கிறார்களே என்றெல்லாம் பொறாமைப்படுகிறார்கள். அதைப் போக்கவேண்டும் என்று சொன்னால், அந்த அளவிற்கு அவர்களுக்குரிய ஸ்தானங்கள், விகிதங்கள் ஒதுக்குவதன் மூலம், பொருளாதார வசதிகளைப் பெருக்குவதன் மூலம் செய்யலாம். இன்றைக்கு தொழில்களை நடத்துவதற்காக மூன்று லட்சம் ரூபாய் இந்த வருஷம் கொடுக்கப் போவதாகச் சொல்கிறார்கள். அதுபோதுமானது அல்ல. மூன்று கோடி ரூபாய் ஒதுக்கினாலும் போதாது. இம்மாதிரி தொழில்கள் நடத்துவதன் மூலம் தீண்டாமையை ஒழிக்கமுடியும்; பல்வேறு வியாபாரத் துறைகளில் ஈடுபடுவதன் மூலம் தீண்டாமையை ஒழிக்கமுடியும். அந்த முறையில் தீவிரமான திட்டத்தை புதியமுறையில் தயார் செய்து செயல்படவேண்டும். இன்றைக்கு இருக்கும் நிர்வாக முறைகளை மாற்றி அமைக்க வேண்டும். பிரிட்டிஷ் காலத்து அமைப்பே, அந்த முறையே இன்றைக்கும் இருக்கிறது. சிகப்பு நாடா வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதெல்லாம் போகவேண்டும் என்று சொன்னால், அரசாங்கம் புதிய முறையில் நிர்வாகச் சீர்திருத்தம் செய்து, அந்த மக்களுக்குரிய சலுகைகளைக் கொடுக்க, அவர்களுக்கு அவை கிடைக்கும் அளவில் உதவிகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* திரு. எம். சுரேந்திரன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற அரிசன நல மானியக் கோரிக்கையின் மீது ஒரு கருத்துக்களைச் சொல்வதற்கு நிற்கிறேன். சமுதாயத்தில் இருக்கிற வசதி படைத்தவர்கள், தங்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள, குறைகளைத் தீர்த்துக் கொள்ள எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. தங்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகக் கருதினால், அதைப் போக்கிக்கொள்ள நீதி மன்றத்திலே சென்று நீதியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால், சமுதாயத்தில் இருக்கின்ற பெரும் பகுதி மக்கள், ஏழ்மையில் இருக்கும் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், தீண்டப்படாதவர்கள் என்று கருதப்படுவோர், இவர்களுக்கு நியாயம் கிடைக்க, இது போன்ற சபைகளின் மூலந்தான் உண்டாக்கித்தர முடியும். அப்படி உண்டாக்கித் தருவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வதுதான் இந்த மானியத்தின் நோக்கம் என்று நான் கருதுகிறேன். அப்படிக் கருதும்போது, இந்த மானியக் கோரிக்கையின் விவரங்களைப் பார்த்தால், கல்வியைத்தான் பிரதானமாகக் காட்டப் பட்டிருக்கிறது.

கல்வி மிகவும் பிரதானமானதுதான். அவசியம் தான். அது மேலும் மேலும் அதிகப்படுத்திக் கொண்டு வரவேண்டிய ஒன்றுதான். ஆனால், இந்த மக்களை முன்னேற்றுவது என்பது கல்வியினால் மட்டும் நடக்கும் காரியம் அல்ல. ஒரு சமுதாயத்தில் இருக்கின்ற மிகத் தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்றுவது என்றால்,

அவர்கள் ஒவ்வொரு அம்சங்களிலும் முன்னேறுவதைப் பொறுத்து இருக்கிறது. குறிப்பாக அரிசனங்களையும் மற்றவர்களையும் எடுத்துக்கொண்டால், எப்படித் தாழ்த்தப்பட்டிருந்தாலும், பொருளாதாரத்தில் இருக்கும் நிலையை முதன்மையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூற விரும்புகிறேன். பொருளாதாரத்தில் தாழ்ந்தவர்கள் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களானாலும், சமூகத்தில் மதிக்கப்படுவதில்லை. அந்த நிலையில், அரிசனங்களுக்கு, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு என்னென்ன செய்யப்படுகிறது என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. தொழில்களுக்கு வாய்ப்புக்கள், வேலைகளுக்கு வாய்ப்புக்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தொழில் வாய்ப்புக்கள் என்று சொன்னால், படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லோரும் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் நாம் இன்றைக்கு இருக்கிறோம். அரிசனங்கள் என்பவர்கள் தொழில்களைவிட, நிலத்தோடு ஒன்றிப்போனவர்கள்நிலத்திலேயே வேலைசெய்து, பண்ணை அடிமைகளாக, கூலி விவசாயிகளாக, அவர்கள் இருந்து கொண்டிருந்திருக்கிறார்கள். அப்படி இருந்திருக்கிறவர்களை, தொழில் வசதிகள் தருகிறோம் என்று சொல்லுவதைவிட, அவர்களுக்கு நிலம் அளித்து, நிலத்தைப் பண்படுத்திச் செயல்பட வசதிகளைச் செய்து கொடுத்து, அவர்களை முன்னுக்குக் கொண்டுவருவது நல்லதாக இருக்கும். வேறு எந்தத் தொழிலில் ஈடுபடுவதாக இருந்தாலும், அதிகமான பேர்களை ஈடுபடுத்த முடியாது. அவர்கள் தொழிலில் திறமையாகச் செயல்படுவதைவிட, நிலத்தை உழுது அதில் திறமையாகச் செயல்படுவார்கள். அதைக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த அரசு பல இடங்களில் புறம்போக்கு நிலங்களை நிலமில்லாதவர்களுக்குக் கொடுப்பது என்கிற கொள்கையைக் கடைபிடிக்கிறது. அப்படிக் கடைபிடிக்கும் கொள்கையில், அரிசனங்களுக்கு இவ்வளவு சதவிகிதம், இவ்வளவு விகிதாசாரம் என்று மற்றதில் போல் ஒதுக்கிவிடுவது, அவர்கள் முன்னேற்றத்திற்கு உதவும் என்று அந்த ஏற்பாடு மிகவும் நல்லது என்று கருதுகிறேன். அவர்களுடைய வீடுகள் சம்பந்தப்பட்ட வரையில் ஆங்காங்கு வீடுகள் கட்டப்படுவதற்குப் பணம் ஒதுக்கப்படுகிறது. ஆனால், வீடுகள் எத்தனை கட்டப்பட்டிருக்கின்றன, எத்தனை கட்டிக்கொண்டு வரப்படுகின்றன, அதனுடைய நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்தால், ஓரிடத்தில் வீடு கட்டப்படுவதற்கு நிலத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடும் போது, அந்த நிலத்தின் உரிமையாளர் உடனே கோர்ட்டுக்குச் சென்று அங்கே தடைப்படுத்திப் பல வருஷங்கள் அது அப்படியே கிடக்கும்படியாக வைத்துவிடுகிறார்கள். உதாரணமாக, என்னுடைய தொகுதியில் சூரப்பள்ளி பஞ்சாயத்தில் குப்பம்பட்டி என்ற பகுதியில் இருக்கும் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக ஓரிடம் ஒதுக்கப்பட்டது. அது புறம்போக்கு நிலம். ஒதுக்கப்பட்ட இடத்தில் உடனே வீடு கட்டுவது என்று வேலை துவங்கியிருந்தால், உடனே செய்திருக்க முடியும். ஆனால், இம்மாதிரி ஒரு ஆலோசனை இருக்கிறது என்று கேள்விப்பட்டவுடனே, வசதி படைத்த ஒருவனுக்கு அந்நிலத்தை விற்று விட்டு, அந்த வசதி படைத்த ஒருவன் அந்த இடத்தைச் சுற்றிலும் சுவர்கட்டி, அதிலே பெரிய கிணறு வெட்டி, இன்றைக்கு அந்த நிலத்தில் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார். இது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் கலெக்டரு-





டைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டதற்குப் பின்னால், இப்பொழுது கலெக்டருடைய தடையாணையில் இருந்து கொண்டிருக்கிறது. பல வருஷங்களாக இருக்கும் பிரச்சினை அது. அது உடனுக்குடனுக்குத் தீர்க்கப்பட்டது என்று சொன்னால், இந்தத் தடையை ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ள முடியும். நான் மிகவும் வேதனைபட்டு சொல்லுகிறேன். அரிசன நல இலாக்காவிலே இருக்கின்றவர்கள் அரிசன நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்றாலும் கூட, அவர்கள் போதுமான அக்கறை கொள்ளுகிறார்கள் என்று சொல்ல முடியாது. நாம் வீடு கட்டுவதற்காக அல்லது பாதை அமைப்பதற்காக என்று எடுத்துக்கொள்ளுகின்ற நிலம் ஒரு உயர்ந்த ஜாதிக்காரனுடைய நிலமாக இருக்கும். அந்த ஜாதிக்காரன் தன்னுடைய நிலம் எடுத்துக்கொண்டு விடப்படாமல் தடுப்பதற்காக ஏதோ குறுக்கு வழிகளை, ஏதோ சட்டபூர்வமான வழிகளைக் கையாளுகிறார்கள். அப்படி கையாளும்போது, அவர்களுக்கு எதிராக அரிசன நல இலாக்காவில் உறுதியாக நின்று, அதை எதிர்த்து, அந்த அரிசனங்களுக்கு உடனே பலம் அளிக்கும்படியான காரியத்தைச் செய்வதற்குப் பதிலாக, அவர்களுடைய பக்கத்திலே நின்று, தாமதப்படுத்துகின்ற முறைகளுக்கு அனுசரணையாகப் பல பேர்கள் காரியங்கள் செய்துகொண்டு போவதன் காரணத்தால் பல வருஷங்களாகப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது.

என்னுடைய தொகுதியில் தங்கவள்ளி என்ற பகுதி இருக்கிறது. அந்த தங்கவள்ளியில் ஒரு அரிசனக் காலனி இருக்கிறது. அவர்கள் 100 வருஷங்களாக நடந்துகொண்டுவரக்கூடிய பாதை ஒன்று இருக்கிறது. அந்தப் பாதையை அவர்களுக்கு உரிமையாக்கித் தருவதற்காக அரசாங்கத்திலிருந்து உத்தரவு போட்டார்கள். அங்கே சர்வே செய்யப்பட்டு, கல் போடப்பட்டு, எல்லாம் முடிந்து விட்டது. பிறகு, நில உடைமையாளர் ஹைகோர்ட்டுக்குச் சென்று, அங்கே அவர்களுக்குச் சாதகம் இல்லாத தீர்ப்புப் பெற்றார்கள். மீண்டும் அங்கிருந்து விண்ணப்பத்தை எடுத்துக்கொண்டு, அரசாங்கத்தை அணுகி நான் இனாமாக இன்னொரு பக்கத்தில் பாதைக்கு இடம் தருகிறேன் என்று சொல்ல அதைக் கேட்டு, அந்த முடிவான, உயர்நீதி மன்றத்தில் அரிசனங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கப்பட்ட பாதையை நிறுத்தி வைக்கும்படி அரசாங்கம் தடையாணை பிறப்பித்தது. அதற்குப் பிறகு நில உடைமையாளர் இனாமாகத் தருவதாகக் கூறிய இடத்தில் ரோடு போடுவதற்கு உத்தரவும் பிறப்பித்துவிட்டார்கள். அப்படி உத்தரவு பிறப்பித்துவிட்டதற்குப் பின்னால் அந்த அரிசனங்கள், அந்த ரோடு எங்களுக்கு வேண்டாம், நாங்கள் 100 வருஷங்களாக, பாரம்பரியமாக நடந்துகொண்டிருக்கும் ரோடு உள்ள இடம் எங்களுக்கு உரிமையாக்கப்படவேண்டும் என்று கேட்டு கிளர்ச்சி செய்வதென்று முடிவு செய்தார்கள். அவர்கள் ஒரு பண்டிகைக்கு, எருதாட்டுவதற்கு மாடுகளை பழைய பாதையில் கொண்டு சென்றபோது வழியில் போலீசார் அவர்களைத் தடுத்து, அவர்களில் ஐந்து பேர்களைக் கைது செய்து, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அது தள்ளுபடி செய்யப்பட்டது. புதிய பாதை போடக்கூடாது என்று அரிசன வாலிபர்கள் உண்ணாவிரதம் தொடங்கினார்கள். இதை அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டு வந்து உத்தரவு போடப்பட்ட புதிய பாதைக்குத் தடையாணை பெறப்பட்டது. இப்படி அமைச்சரிடத்தில் சொல்லியும் பிரச்சினை இப்பொழுது அப்படியே இருந்துகொண்டிருக்

கிறது. ஓரிடத்தைப் பார்த்து முடிவு செய்ததற்குப் பின்னால், அது சரியானது என்று ஒத்துக்கொள்ளவேண்டியிருக்க, மீண்டும் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவர்கள் அந்த இடத்தை மாற்றிக்கொண்டு இன்னொரிடத்திற்குக் கொண்டு போகிறார்கள் என்று சொன்னால், அங்கே அரிசன இலாக்கா யாருக்கு உதவி செய்வதற்காக இருக்கிறது என்ற கேள்வி உண்டாகிறது. மேல் வகுப்பாருக்கு அனுசரணையாக கீழ் வகுப்பார் செல்லவேண்டும் என்று பாரம்பரியமாக இருக்கின்ற நிலை இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அந்த நிலையில் இன்னும் மாற்றம் ஏற்படவில்லை. மேல் வகுப்பார் ''இந்த வழியில்தான் நீ செல்ல வேண்டும்'' என்று அரிசன மகனைப் பார்த்துச் சொன்னால், அவன் அந்த வழியில்தான் செல்லவேண்டும் என்ற நிலை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது.

இதுபோன்று என்னுடைய தொகுதியில் குஞ்சாண்டியூர் என்கிற இடத்தில் 50 வீடுகள் இருக்கின்றன. அது மிகத் தாழ்வான இடம். அங்கே விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். மழை காலத்தில் அங்கே தண்ணீர் தேங்கி நிற்கின்றது. அந்தத் தண்ணீர் வீடுகளில் வந்துவிடுவதோடு பாம்புத் தொல்லையும் ஏற்படுகிறது. காவேரிபுரம் பகுதியிலும், தண்டா என்ற பகுதியிலும் இப்படி இருக்கிறது. ஆக, வீடுகள் சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்சினைகளையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், நீண்ட நாளாக 1967-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து இந்தச் சபையில் நான் வற்புறுத்திக்கொண்டிருக்கிறேன். அரிசன நல அதிகாரியிடமும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறேன். கலெக்டரிடமும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறேன். ஆனால், இந்தப் பிரச்சினை இன்னும் தீரவில்லை. எப்படியும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டிய ஒன்று, விரைவாகத் தீர்க்கப்படவேண்டிய ஒன்று என்று நாம் ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இது இத்தனை வருஷங்களுக்குள்ளாகத் தீர்க்கப்படும், இந்த முறையில் தீர்க்கப்படும். இன்ன இடத்திலே முதன்மையாகத் தீர்க்கப்படும் என்று வரையறை செய்து நிச்சயிப்பதற்கு மிகவும் தேவையானது என்று நான் இந்த சபையிலே அறிவித்துக்கொள்ளுகிறேன்.

பழங்குடி மக்கள், இந்த அரிசனங்களைவிட இன்னும் கேவலமான நிலையில் இருக்கக்கூடியவர்கள். அவர்கள் மலைமீது இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் பாலமலையில் இருக்கின்ற பழங்குடி மக்கள் நடந்துசெல்வதற்குப் பாதை இல்லை. அங்கே காப்பியை நாம் உண்டாக்கலாம். பழவகைகளை உண்டாக்கலாம். புறம்போக்கு நிலங்களை அங்கே அவர்களுக்கு அளித்தால் நல்ல மாதிரியாக அவர்கள் விவசாயம் செய்ய முடியும். அப்படியிருக்கின்ற ஒரு பகுதியில் ஒரு பாதை போடவேண்டும் என்று இந்தச் சபையில் மூன்று வருஷங்களாகக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டும் ஒரு பாதை கூடப் போடவில்லை. இவ்வளவு கஷ்டமான நிலைமை அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் இருக்கிறது என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்து என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. விநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே இப்பொழுது சபையின் முன் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மான்யக் கோரிக்கையைப்பற்றி ஒரு சில கருத்துக்கள் சொல்ல முன்வந்திருக்கிறேன். அதித் திராவிட சமூகம், இதரப் பிற்பட்ட இனத்தவர்கள் ஆகியவர்களுடைய முன்னேற்றத்தைப் பற்றி [illegible] இப்பொழுது அபிப்பிராய பேதம் இருக்க முடி-



யாது. ஒருவேளை காங்கிரஸ்காரர்கள் அவர்களுக்கு 'ஹரிஜனங்கள்' என்று பெயர் கொடுத்திருக்கலாம். இப்பொழுது ஆட்சியிலிருப்பவர்கள் அவர்களைப் பார்த்து, 'பெருங்குடி மக்கள்' என்று சொல்லுகிறார்கள். (குறுக்கீடு) பழங்குடி மக்கள் என்று சொல்லுகிறார்கள். இப்படியெல்லாம் இருக்கிறது. ஆதலால், ஏதோ முன்பு இருந்தவர்கள் இதில் அதிகமாகச் செய்யவில்லை, இப்பொழுது வந்தவர்கள்தான் அதிலே அக்கறை அதிகமாகக் காட்டுகிறார்கள் என்றெல்லாம், வாதிப்பதற்கு வேண்டுமென்றால், சொல்லிவிடலாமே தவிர, ஆரம்ப காலத்திலே என்ன தவறு நடந்ததோ, அந்தத் தவறைத் திருத்துவதற்கு யார் முயற்சித்தார்கள், அதற்கு எடுத்த அடிப்படையான கொள்கை என்ன என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த மானியக் கோரிக்கையை நமக்கு அறிமுகப்படுத்தும்போது, நமது அமைச்சரவர்கள் இதுமாதிரியோர் அறிக்கையைத் தயார் செய்து தந்தது வரவேற்கத்தகுந்தது. கொள்கை விளக்கம் இப்படித்தான் இருக்கவேண்டும். இதை நான் படித்துப் பார்த்தேன். முன்பு ஒரு அமைச்சர், பிறகு ஒரு அமைச்சர். அப்படித் தான் இருக்கவேண்டும். தவறு ஒன்றும் இல்லை. நான் இருந்திருந்தாலும் அப்படித்தான் செய்வேன். கலப்புத் திருமணப் படத்தைக் கொள்கை விளக்கக் குறிப்பின் அட்டையில் போட்டு விளம்பரப்படுத்துகிறார்கள். மக்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு, குறிப்பாக ஏழை மக்களுடைய பொருளாதாரத்தை உயர்த்த நாங்கள் பல காரியங்கள் செய்தோம். ஆனால் விளம்பரம் தேடிக்கொள்ளவில்லை. அந்தத் தவறைத்தான் நாங்கள் செய்தோம். நாங்கள் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்தோமே தவிர, விளம்பரம் தேடிக்கொள்ளவில்லை. பிற்போக்கு சமுதாயத்தினருக்கு நாங்கள் அதிகமாகச் செய்யவில்லை என்று சொல்லமுடியாது. இந்த அறிக்கையை நான் ஆழ்ந்து கவனித்தேன். ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கிய தொகையை விட இப்பொழுது தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் வளரும் சமுதாயம் என்பது. வளருகிற சமுதாயத்தில் இப்படித்தான் இருக்கும். நீங்கள் இவ்வளவு தொகை இதற்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். உங்களுக்குப்பின் நாளைக்கு இருப்பினும்—இருந்தால்—இல்லை, நீங்களே வந்தாலும்—இப்பொழுது ஒதுக்கியுள்ள தொகையை ஏற்றிக்கொண்டுதான் போவோமே தவிர, இதைக் குறைக்கவா போகிறோம்? இது ஒரு சமுதாயப் பிரச்சினை. இட் ஈஸ் எ சோஷல் ப்ராப்ளெம். இதை எப்படியும் தீர்க்கவேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை எவருக்குமே இருக்க முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டும் என்று நாங்களும் சொல்லுகிறோம். நீங்களும் சொல்லுகிறீர்கள். இதிலே பாதை வேறாக இருக்க முடியாது. ஆனால், இதெல்லாம் நம்முடைய வசதிகளைப் பொருத்திருக்கிறது. நமக்கு அதிகமாகப் பொருளாதார வசதி இப்பொழுது இருந்தால் எட்டு கோடி என்ன, இருபத்தைந்து கோடி தர வேண்டும் என்று கலைஞரைக் கேட்டிருப்பேன். அவரும் தாராளமாகத் தந்திருப்பார். எங்கே இருக்கிறது பணம்? ஏற்றவேண்டும் வரியை, அல்லது, மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டும். ஆதலால், எங்களை நீங்கள் குறை சொல்லிக்கொண்டிருப்பதிலோ அல்லது உங்களை நாங்கள் குறை சொல்வதிலோ அர்த்தம் இல்லை. இட் ஈஸ் எ சோஷல் ப்ராப்ளெம் விச் ஹாஸ் பீன் தேர் ஃபார் மெனி செஞ்சரீஸ். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒரு வருப் [illegible] என்று எந்தக் காரணத்திற்காக எவர் சொன்னா

களோ அந்தச் சனியன் இன்னும் விடவில்லை. ஆனால், தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலைக்குக் காங்கிரஸ்காரர்கள் வழிகாட்டியது அல்லவா? அதைக் கொஞ்சம் தாராளமாக நீங்கள் ஒத்துக்கொள்ளவேண்டும். காங்கிரஸ்காரர்கள் செய்யாததைப் போலவும், நீங்கள்தான் புதிதாகச் செய்தது போலவும் பேசக்கூடாது. நீங்கள் புதிதாகச் செய்ததைப்பற்றி நான் பேசப் போகிறேன். என்றாலும், வழிகாட்டியவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதை நீங்கள் மனச்சாட்சியிலே கொஞ்சம் ஒத்துக்கொள்ளவேண்டும்.

ஆதித் திராவிட மக்களுக்கோ அல்லது பழங்குடி மக்களுக்கோ அல்லது ஷெட்யூல்டு ட்ரைபினருக்கோ செய்கிற சலுகை போற்றத்தக்கதுதான். இன்னும் போதாது என்றுதான் சொல்லுகிறோம். நிதிநிலை வசதிக்கேற்பத்தான் செய்ய முடியும் என்பதிலே கருத்து வேற்றுமை இருக்க முடியாது. பத்து கோடி என்று இருந்தால், அதைப் போகப் போக 20 கோடி 30 கோடி என்று உயர்த்திக்கொண்டு போகலாம். இப்படி மெல்ல மெல்லத்தான் உயர்த்திக் கொண்டு போக முடியுமே தவிர, பொருளாதார நெருக்கடியில் அதிகமாக உயர்வதற்கில்லை. ஆனால், மன மாற்றம் இப்போதே வேண்டும். மன மாற்றத்திற்குப் பொருளாதாரம் வேண்டியதில்லை. நாம் அனைவரும் சேர்ந்தே சொல்லுகிறோம். தீண்டாமை இருக்கவேண்டும் என்று யார் சொல்லுவார்கள்? யாரும் சொல்ல மாட்டார்கள். தீண்டாமை ஒழிப்பு வேண்டாம் என்று நாங்கள் சொல்வது போலவும், நீங்கள்தான் தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்று சொல்வதுபோலவும் இதுபோன்ற பிரச்சினையை நீங்கள் கிளப்புவதுதான் எங்களுக்கு வேதனையைத் தருகிறது. இதுமாதிரி ஒரு அறிக்கை தயார் செய்து, அதில் ஒரு படத்தைப் போட்டு, இப்படியெல்லாம் தீண்டாமை என்பது ஒரு காலத்தில் இருந்தது, தீண்டாமையை அனுசரித்தால் அது 'அஃபென்ஸ்' ஆகும், சிறையில் போடுவோம் என்று சொன்னால், யாரோ மறைத்து வைத்ததாகவும், நீங்கள்தான் வெளியே கொண்டுவந்ததாகவும் ஆகும். இதெல்லாம் நம் இயக்கத்திற்கே அவ்வளவு பெருமை தராது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் பேசும்போது நானும் இருந்தேன். அவர் சொன்னது—அப்படிச் சுவர்களிலே ஒட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த சுவரொட்டிகள் பல இடங்களில் ஒட்டப்பட்டு, பிறகு அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள் என்பதே தவிர, தீண்டாமை ஒழிப்பிலே உங்களுக்கு ஆர்வம் இல்லை என்று அவர்கள் சொல்லவில்லை. நீங்களாகவே ஏதோ ஒன்றைப் பேசுவதற்காக, அப்படி யாரோ பேசியதாகக் கற்பனை பண்ணிக்கொண்டு பேசுவது நல்லதல்ல.

**திரு. கே. விநாயகம்:** முதலமைச்சர் அவர்கள் வந்தாலே தகராறுதான். (சிரிப்பு) தலைவர் அவர்களே, ஷெட்யூல்ட் வகுப்பினர், பழங்குடி மக்கள் ஆகியோருக்கு இன்னும் அதிகமாகச் சலுகைகள் தரவேண்டும். தட்டுத்தடங்கலில்லாமல் கல்விச் சலுகை, உத்யோகச் சலுகை, குடியிருப்புக்கான வசதி, மற்ற பொருளாதாரத்திலே வளர்ச்சி என்ன என்ன வேண்டுமோ, உங்களால் முடிந்த அளவிற்குச் செய்து கொடுக்க வேண்டும். நாங்கள் அதை ஆதரிக்கிறோம். அது தவறு என்று நாங்கள் சொல்ல மாட்டோம்.

அடுத்து, எனக்குக் கிடைத்த ஒன்றிரண்டு தகவல்களைக் கூற விரும்புகிறேன். மாணவர்களுக்கு 400 ரூபாய் ஸ்காலர்ஷிப்பாகத் தரப்போகிறோம் என்று முதலில் கடிதம் போகிறது. பின்னர் ஸ்காலர்ஷிப் கொடுக்கும்போது 100



ரூபாயைப் பிடித்துக்கொள்வதாக ஓர் இரு மாணவர்களிடமிருந்து எனக்குத் தகவல் கடிதம் வந்திருக்கிறது. மாணவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தை இந்த மன்றத்தில் கொண்டுவந்து ஃப்ரூப் செய்ய நான் இப்பொழுது தயாராக இல்லை. கடிதம் இம்மாதிரி போகிறது சரியா, உங்கள் ஆட்சியாக இருந்தாலும் சரி, எங்கள் ஆட்சியாக இருந்தாலும் தவறு தவறுதான். எங்கு தவறு இருந்தாலும் தவறுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆதாரத்தோடு பேசுகிறீர்களா? கடிதம் யார் எழுதினார்கள்? எங்கிருந்து வந்தது?

**திரு. கே. விநாயகம்:** அந்தக் கடிதம் பாளையங்கோட்டையிலிருந்து வந்தது. அதைக் கொண்டுவந்து இந்த மன்றத்தில் காட்டலாம். ஆனால் இதெல்லாம் வேண்டாம் என்பதற்காகத்தான் நான் காட்டவில்லையென்பதை நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அந்த மாணவர்களுக்குக் கடிதம் எழுதி, நேரில் வரச்சொன்னால், அப்படிப்பட்ட புகார் இருக்கிறதா இல்லையா என்பதை விசாரணை செய்து அதன் மீது நடவடிக்கை எடுக்கச் சர்க்கார் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம்:** இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைதான். நாம் எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். சமுதாயத்திலே எண்ணப் புரட்சி ஏற்பட வேண்டும். பழைய எண்ணங்களை மாற்றிக்கொள்ள மக்களே பக்குவப்பட வேண்டும். எந்தவிதமான சட்டம் போட்டும் இதை மாற்ற முடியாது. இருபதாண்டுகளுக்கு முன்னர் அறிஞர் அண்ணா அவர்கள் வேலைக்காரி கதை எழுதாத நேரத்தில் ஜாதிக் கொடுமை எப்படி இருந்தது என்பதைப் பார்க்க வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் வேலைக்காரி கதை எழுதி, நமது கலைஞர் போன்றவர்கள் எல்லாம் நாடகம் நடித்ததற்குப் பிறகு சமுதாயம் மாறியது. அவரவர்கள் தத்தம் பணிகளைச் செய்தால், இந்தத் துறையே மெல்ல மெல்ல மாறும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். நான் உயிரோடு ஐம்பது வருஷம் இருந்தால்—இருப்பேன் என்று நினைக்கிறேன்—(சிரிப்பு) இந்தத் தீண்டாமை என்ற பேய் அப்போது இருக்கவே இருக்காது, அனைவரும் சேர்ந்து இந்தப் பேயை ஓட்டவேண்டும். ஏதோ 'நாங்கள் குறைவாகச் செய்தோம், நீங்கள் அதிகமாகச் செய்கிறீர்கள், நாங்கள் குறைவாகப் பணம் ஒதுக்கினோம், நீங்கள் அதிகமாகச் செய்கிறீர்கள்' என்றெல்லாம் சொல்லத் தேவையில்லை. பிற்பட்ட இனத்தவர் பகுதி என்று இன்று நீங்கள் சொல்லியிருக்கலாம். நாங்கள் இதை முன்பே எடுத்து இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறோம். நானே, திருமதி அனந்தநாயகி அவர்களோ சட்டசபையில் இருக்கும்போது இந்த விஷயத்திற்கு வெட்டுப்பிரேரணை கொடுத்திருக்கிறோம். 'அந்தச் சர்க்கார் ஏன் கொடுக்கவில்லை' என்று நீங்கள் கேட்பதிலே பொருள் இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நீங்கள் ஆளும் கட்சியாக இருந்தபோது எப்படி வெட்டுப்பிரேரணைகளைத் தந்தீர்கள்? (சிரிப்பு)

திரு. கே. விநாயகம்: திருமதி அனந்தநாயகி அவர்கள் கொடுத்தார்களே, வெட்டுப் பிரேரணைகளைக் கொடுக்காவிட்டாலும் கூட . . . (சிரிப்பு) நான் கொடுத்ததாக எனக்கு ஞாபகம் . . . (சிரிப்பு) நான் பலமுறை எதிர்க்கட்சியில் இருந்திருக்கிறேன் (பலத்த சிரிப்பு). நாங்கள் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம். ஒரே அமைச்சர், இரண்டு துறைகளையும் பார்ப்பது கஷ்டம். உங்களுக்குப் பரந்த மனப்பான்மை இல்லையென்று நான் சொல்லவில்லை. ஷெட்யூல்ட் வகுப்பினர் நலனைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு துறை, அதேநேரத்தில் பிற்பட்ட இனத்தவர் நலனைக் கவனித்துக்கொள்ள ஒரு துறை. இந்த இரண்டு துறைகளையும ஒரே அமைச்சர் பார்ப்பது என்றால் வேலைப்பளு உயரும் என்று நான் தான் வற்புறுத்தி வந்தேன். அதற்கென்று புதிதாக அமைச்சரைப் போட வேண்டும் என்றுதான் நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதேநேரத்தில் இலாகாவைத் தனியாகப் பிரிக்க வேண்டும். இயக்குநரைத் தனியாக வைக்க வேண்டும். 'ஒரு காலத்திலே இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீரும்' என்று நான் போன ஆண்டே நான் வெட்டுப் பிரேரணையில் சொல்லியிருந்தேன். அதற்கிசைந்து நமது கலைஞர் அவர்களுடைய தலைமையின்கீழ் நமக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது. With no mental reservation I pay my high tribute to "மிஸ்டர் கலைஞர்" ஆமாம். இதிலே தவறு இல்லை. நல்லது செய்வதைப் பாராட்டுவதில் ஏன் கஞ்சத்தனம் காட்ட வேண்டும்? (சிரிப்பு) எத்தனையோ நேரத்தில் நாம் சண்டை போடுகிறோம். இண்டஸ்ட்ரீஸ டிமாண்ட் வந்தால் சண்டை போடுகிறோம், மற்ற டிமாண்டுகள் வரும்போது சண்டை போடுகிறோம். நல்லது செய்வதைப் பாராட்ட வேண்டும் என்பதே என் கொள்கை. இதற்கு தனியாக ஒரு அமைச்சரைப் போட்டு இருக்கிறார்கள். இதெல்லாம் உங்கள் ப்ராப்ளம். உயர்திரு. என். வி. நடராசனுக்கு அந்த அமைச்சர் பதவியைக் கொடுத்திருக்கிறீர்கள். அவர் பல்லாண்டுகளாகக் கழகத்திற்குப் பாடுபட்டு வந்தவர். அவருக்கும் எதாவது செய்ய வேண்டும் அல்லவா? (எதிர்க்கட்சித் தரப்பில் சிரிப்பு).

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் விநாயகம் அவர்கள் இந்தப் பக்கத்திற்கு வந்தால், என்னுடைய அமைச்சர் பதவியை அவருக்குத் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சிபார்சு செய்ய முயற்சிக்கிறேன். (ஆளும் கட்சித்தரப்பில் சிரிப்பு).

திரு. கே. விநாயகம்: நான் நல்ல எண்ணத்தோடுதான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த விஷயத்தில் நான் அவசரப்பட்டு திரு. என். வி. நடராசன் அவர்கள் செய்த சிபாரிசை ஏற்றுக்கொள்வதாக இல்லை. (சிரிப்பு).

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, பிற்பட்ட இனத்தவர் இலாகாவுக்கு நமது அமைச்சரைப் போட்டிருக்கிறீர்கள். அவர்களும் முடிந்த அளவிற்கு வேலை செய்கிறார்கள். இதுமாத்திரம் செய்துவிட்டதோடு நின்றுவிடக் கூடாது. அரசியல் சட்டத்தில் 340-வது விதிப்படி மத்திய சர்க்காரே ஒரு குழுவைப் போடவேண்டும் என்று இருக்கிறது. பிரசிடெண்டே ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும் பிற்பட்ட இனத்தவர் நலனைப்பற்றி விசாரிக்க என்று இருக்கிறது. அந்தக் கமிஷன் ரிப்போர்ட் வந்த பிறகு அதன்மீது நடவடிக்கை எடுக்க, அதை பாராளுமன்றத்திற்கு அறிக்கை வைக்க வேண்டும் என்று தெள்ளத் தெளிவாக 340-வது விதி சொல்லுகிறது. நம்முடைய அங்கத்தினர்கள் அங்கே இருந்தார்கள். தாதாசாகேப் கலேல்கர் என்பவருடைய தலைமையில் ஒரு கமிஷனைப் போட்டார்கள். எவ்வளவு செலவானது? தேசம் பூராவும் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் சுற்றுப்பிரயாணம் செய்து ரிப்போர்ட் தயாரானது. இரண்டு ஆண்டுக் காலம் எடுத்துக்கொள்ளப்பட்டு, 500 பக்கங்களுக்கு மேல் அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள் அறிக்கை என்ன ஆனது. பண்டித நேரு அவர்கள் டில்லியில் இருந்து ஏரோப்ளேனில் பம்பாய்க்குப் போகிற நேரத்தில் படித்தாராம். இதைப்பற்றிப் பத்திரிகை நிருபர்கள் கேட்டார்களாம். "What are you going to do with Backward Classes Commission Report?" என்று நிருபர்கள் கேட்டதற்கு, "Just now I have seen it. I shall take action in due course" என்று நேரு அவர்கள் பதிலளித்தார்களாம். இது என்ன ஆனது,



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஸ்டேட் பட்ஜெட் இதைப்பற்றிப் பேசுங்கள்.

திரு. கே. விநாயகம்: நான் அதைச் சொல்லி இங்கே வருகிறேன். அந்த அறிக்கை என்ன ஆனது? 'It was shelved in cold storage in Central Secretariat." அறிக்கை வைக்க வேண்டுமென்று இருந்தும் கூட அதைத் தள்ளிவிட்டார்கள். தாதாசாகேப் கலேல்கதார் ஒரு வாக்கியத்தை எழுதியிருக்கிறார்கள். அதை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார்கள். அதைப் படிக்கிறேன்.

"A disgruntled Backward Class man is a source of national danger and capable of potential revolution if his legitimate needs are not accepted."

இது நான் எழுதியது அல்ல. தாதாசாகேப் கலேல்காரே எழுதியிருக்கிறார் மிகுந்த அதிருப்தியுடன் பலகாலமாக வாழ்ந்து வருகிற இந்த மக்கள் மேலும் அழுத்தி வைக்கப்பட்டிருந்தால் அவன் ஒரு நாள் He will prove a national source of danger இந்த நாட்டுக்கே அபாயகரமான விளைவை உண்டாக்கும். He is capable of potential revolution. எதிர்த்து நிற்பான் என்று சொல்கிறார்.

இப்படியெல்லாம் செய்தோமானால், எவ்வளவோ கோடி பணம் வேண்டும். ஆதலால் இப்போது வேண்டாம் என்று மத்திய அரசு தள்ளிவிட்டிருக்கலாம்.

இங்கே நம் மாநிலத்திலே ஒரு கமிஷனைப் போடவேண்டும் என்று நாங்கள் கேட்டோம். இன்னும் எல்லோரும் சொன்னார்கள். நான் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவன். அண்ணா நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இன்னும் தலைவர்—தலைவரைச் சொல்லக் கூடாது. (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மத்திய அரசாங்கத்தில் பாக்வர்ட் பொறுத்தவரையில் தனியே ஷெட்யூல்ட் காஸ்ட் என்று அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தனியே ஷெட்யூல்ட் காஸ்ட் என்று போடு

வதே கிடையாது. மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டிலும் பாக்வர்ட் க்ளாஸ் என்று வரும் தனியே ஷெட்யூல்ட் காஸ்ட் வருவது கிடையாது. ஆகவே அப்போது போடப்பட்ட கமிஷன் ஷெட்யூல்ட் காஸ்டையும் சேர்த்துப் பரிசீலனை செய்தார்களா ? அல்லது பாக்வர்டு க்ளாசுக்கு மாத்திரம் பரிசீலனை செய்தார்களா என்கிற விளக்கத்தையும் தெரிவிக்கவேண்டும்.

திரு. கே. விநாயகம் : ஓ.பி.ஸி என்பதாக அதர் பாக்வர்ட் க்ளாஸ் மட்டும் தான் பரிசீலனை செய்யப்பட்டது. அரசியல் அமைப்பு விதி 340 தெளிவாக இவர்களுக்கு மட்டும் தான். ஷெட்யூல்ட் காஸ்டை உள்ளிட்டு அல்ல.

பாக்வர்டு க்ளாசுக்கு மட்டும் ஒரு கமிஷனைப் போடவேண்டும் என்று சொன்னோம். கலைஞர் இசைந்தார்கள். அது அவர்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. அதற்காகப் பாராட்டுச் சொல்லிக்கொள்கிறேன்.

கமிஷன் என்று போட்டார்களே, அதுவும் எவ்வளவு சாமர்த்தியமாகப் போட்டார்கள் தெரியுமா? அப்படிச் சிந்தித்து அமைப்பதற்கு அவர்களால் தான் முடியும். அதை நான் பாராட்டுகிறேன். 3 மெம்பர்கள் என்றால் அவர்களிலே ஒருவர் கிருஸ்துவர், ஒருவர் முஸ்லிம். ஒருவர் இந்து. கிருஸ்துவர் என்றால் அதிலே கான்வர்ட்ஸ் இருக்கிறார்கள். கான்வர்ட்ஸ் என்பதற்காகவே அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் இல்லை என்று சொல்கிறார்கள். அது பரிசீலிக்கப்பட வேண்டும். முஸ்லிம் என்றால் லப்பை—பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். இப்படி ஒரு இந்து, ஒரு முஸ்லிம், ஒரு கிருஸ்துவர் என்றில்லாது ஒரு செங்குந்தர், ஒரு வன்னியர் என்று இப்படிப் போட்டிருந்தால் பலவிதமான தகராறுகள் கூட ஏற்படக்கூடும். அதற்கெல்லாம் இடமில்லாது நல்லமுறையில் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. பாராட்டுகிறேன். நாங்கள் எல்லாம் கூடச் சாட்சியம் சொல்லிவிட்டு வந்திருக்கிறோம். ஜூலை மாதத்தில் பர்ஸ்ட் ரிப்போர்ட் வர வேண்டும். நாடு பூராவும் சுற்றி வருகிறார்கள். எல்லா பிற்பட்ட இனத்தவர்களையும் சேர்ந்து ஒரு அறிக்கை தருவார்கள். மத்திய சர்க்காரைப் போல அல்லாமல்—இந்த அறிக்கை வந்தவுடனேயே அதை இந்த டேபிள் மேல் வைத்து, அவர்களுடைய சிபார்சுகள் என்ன, அவற்றை நிறைவேற்ற எவ்வளவு செலவாகும், போதுமான நிதி ஆதாரங்களை எந்தவகையில் பெறலாம் என்பதுபற்றியெல்லாம் எல்லோருடனும் கலந்து ஆலோசித்து அதை நிறைவேற்றுகிற நல்ல பணியை இந்த அரசு செய்தால் ஆண்டவன் என்ன—மக்களே வாழ்த்துவார்கள்.

That report which is to be produced by this Backward Class Commission should not be shelved and put in cold storage as they had done. You have got to show a lead to other States. அது மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக அமையும். இப்போதே நம்மைப் போல மற்ற மாநிலங்களிலும் கமிஷன் போடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதே சில நல்ல சலுகைகளைத் தந்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

என்ன சார், இதிலே கூட கஞ்சத்தனமா—கஞ்சத்தனம் என்று சொல்லவில்லை. வைண்டிங் அப் பண்ணுவது என்றால் ஒன் அவர் வேண்டும்.

I am winding up. I am paying a tribute to Government. Why should the Hon. Speaker be so niggardly in regard to time when I am paying tribute to the Government.



முன்பு, 1,500 ரூபாய் வருமான வரம்பு இருந்தது. அதற்குள் வருமானம் உள்ளவர்களுக்கு உதவிச் சம்பளம் தரப்படும் என்று வைத்திருந்தார்கள். இந்தச் சர்க்கார் அந்த விதியைத் தளர்த்தி 2,000 ரூபாய் வரை தரப்படும் என்று செய்திருக்கிறார்கள். இது ஒரு தாராளமான செய்கை தான். இது மாத்திரம் போதுமா? ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியர் என்று வைத்துக்கொள்ளுங்கள். மாதம் 180, 200 சம்பளம் வரும். அப்படிப்பார்க்கிறபோது ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரத்திற்கு மேலே போகிறது. அதன் காரணமாக ஆசிரியர்களுடைய பிள்ளைகள் கல்லூரியில் படிக்க சலுகை வசதி இல்லை. (மாண்புமிகு திரு. மா முத்துசாமி : அவர்கள் என்.ஜி.ஓ.க்களைப் போன்ற சலுகைகளைப் பெறுகிறார்கள்.) எல்லா ஆசிரியர்களும் இல்லை. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகை கிடையாது என்று நினைக்கிறேன். I am subject to correction. நான் என்ன அங்கா உட்கார்ந்திருக்கிறேன். அங்கே உட்கார வைத்துப்பாருங்கள். எல்லா இன்பர்மேஷன்களையும் கொண்டுவந்துவிடமாட்டேனா? (சிரிப்பு) இங்கே இருப்பதனாலே I cannot meet all the points. கொடுக்கிறது கொடுக்கிறீர்கள். உங்களுக்கு நல்ல மனதும் இருக்கிறது. ஆகவே, அந்த வருமான வரம்பை 5,000 ஆக உயர்த்தித்தரவேண்டும். இந்த ஆண்டில் இசைவு தருவது என்பது சந்தேகமாக இருந்தாலும், வருகிற ஆண்டாவது கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்பத்திலே பாக்வர்டு க்ளாசாக இருப்பான், பிறகு கிருஸ்துவனாகப்போகிறான். இப்படி மதம் மாறியவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் தரவேண்டும். ஷெட்யூல் காஸ்டுக்குத் தருகிறோம். மதம் மாறினாலும் பொருளாதாரத்தில் உயரவில்லை என்ற காரணத்தினால், இவர்களுக்கும் தரவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம், அதையும் யோசிக்கவேண்டும்.

ஐ.எ.எஸ். பரிட்சைக்கு ஷெட்யூல்ட் காஸ்ட்டைச் சேர்ந்த மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு அதிகாரியைப்போட்டுப் பயிற்சி அளிக்கிறோம். இருந்தும் இதுவரை யாரும் தேர்ச்சி அடையவில்லை என்று நினைக்கிறேன். ஷெட்யூல்ட் காஸ்டுக்கு இந்தச் சலுகை கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. இதே சலுகை பாக்வர்டு க்ளாசுக்கும் கொடுக்கப்படவேண்டும். அதையும் இந்தச் சர்க்கார் யோசிக்கவேண்டும். Give the devil its due என்று சொல்லக்கூடாது என்று இருந்தேன். ஆங்கிலத்தில் பேசியிருந்தால் சொல்லியிருப்பேன். யாராக இருந்தாலும் நல்ல காரியத்தைச் செய்கிறபோது பாராட்டத்தான் வேண்டும். தவறு என்றால் அது கலைஞராக இருந்தாலும், அண்ணாவாக இருந்தாலும் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். எனக்கு வேறு மானியத்தில் இப்படி வைன்டப் பண்ண சந்தர்ப்பம் கொடுத்திருந்தால். வேறு விதத்திலே பேசியிருப்பேன். இதிலே பேசுகிறபோது பாராட்டத்தான் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மானியத்தில் உங்களைப்போட்டது உங்கள் கட்சித் தலைவர்தான்.

திரு. கே. விநாயகம் : இன்னும் ஆர்பனேஜ் சம்பந்தப்பட்டவரை அதிகக் கவனம் செலுத்தப்படவேண்டும். சென்னையில் அந்தோணி ஆர்பனேஜ் என்று கூடத் வைக்கியிருக்கிறார்கள். அதற்கு ரெகக்னிஷன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நில ஆர்ஜிதம் செய்வதில் யாருக்கும் அபிப்பிராயபேதம் இல்லை. ஏழை ஆதித்திராவிட மக்களுக்கு நிலம் கொடுக்க ஆர்ஜிதம் செய்யத்தான் வேண்டும். ஆனால் முதலில் காம்பு நிலமாக, சர்க்கார் புறம்போக்கு நிலமாகப் பார்த்துக் கொடுத்துவிட்டு வெட் லாண்டுக்கு வரவேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு சிறிய விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே அப்புக்கல் என்ற கிராமத்திலே—சென்ற ஆண்டிலே கூட இந்த டிமாண்டிலே பேசும்பொழுது நான் இதைப்பற்றி அம்மா அவர்களுக்குச் சொன்னேன்—ஏழை விவசாயி வன்னிய இனத்தைச் சேர்ந்தவர் மலேயாவுக்குப்போய்ச் சம்பாதித்து 1,000 ரூபாய் வசூல்செய்து இங்கே வந்து இரண்டு ஏக்கரா நிலத்தை வாங்கி விவசாயம் பண்ணி வருகிறார். அவருக்குப் படிக்கத் தெரியாது, யாரோ வந்து காகிதம் கொடுத்து உங்கள் ஊருக்குச் சர்க்கரை கொடுக்கிறோம் கையெழுத்துப் போடுங்கள் என்று சொல்லி கையெழுத்து வாங்கி விட்டார்களாம். இப்பொழுது நிலமே அவருக்கு இல்லை என்று சொல்கிறார்கள். உண்மை என்னவென்றால், அவருக்கும் அந்த ஊரிலே உள்ள அவரது பங்காளிக்கும் தகராறு அவர் விரோதி. அவர் அந்த கிராம முன்சீப். வெளியே சம்பாதித்து நிலத்தை வாங்கி குடியானவன் ஆவதா என்று அவர் அந்த ஆள்மேல் கங்கணம் வைத்து இந்த ஊருக்குச் சர்க்கரை கொடுக்கிறோம் என்று சொல்லி கையெழுத்து வாங்கிவிட்டிருக்கிறார்கள். அது கன்சென்ட் மெமோவாம், நிலத்தை விடப்போகிறேன் என்று கொடுத்துவிட்டானும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவன் இப்பொழுது காலில் விழுகிறான், இரண்டே இரண்டு ஏக்கர்தானே வைத்திருக்கிறேன் நான் என்ன செய்வேன் என்று சொல்கிறான். நான் முதலிலே சொன்னமாதிரி காம்பு நிலத்தைப் பாருங்கள், இல்லாவிட்டால் புறம்போக்கு நிலத்தைப் பாருங்கள், அதற்குப் பிறகு டிரை லேண்டைப் பாருங்கள், வெட் லேண்ட்சுக்கு அப்புறம் வாருங்கள் என்று சொன்னேன். அவர்களுக்குச் சேரிக்குப் பக்கத்திலேதான் நிலத்தைக் கொடுக்கவேண்டும். அவனுக்கு அதைப் பார்த்து என்னவாகிலும் செய்ய வேண்டும். நிலத்தை அவன்தான் வைத்திருக்கிறான். உண்மையான நிலைமை அதுதான். ஆர்ஜிதம் பண்ணிவிட்டோம், பணம்தான் கொடுக்கவேண்டுமென்று உங்களுக்கு பைலில் தகவல் வருகிறது. அது அல்ல உண்மை. அவனேதான் நிலத்தைப் பயிர்செய்துகொண்டிருக்கிறான். நேற்றுவரை பயிர்செய்திருக்கிறான். இந்தப் பசலிக்குத் தீர்வையை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வந்து வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்.

The land has been handed over to the department and there is no case for dropping this acquisition.

என்று சொல்கிறார்கள். இதைக் கொஞ்சம் தயவுசெய்து அம்மா அவர்கள் கவனிக்க வேண்டும். போன ஆண்டும் கேட்டேன், இந்த ஆண்டும் கேட்கிறேன், எந்த ஆண்டு மனம் இரங்குமோ, தயவுசெய்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரி அங்கங்கே தப்பு எல்லாம் இருக்கிறது, இவற்றைத் திருத்திவிட்டால் போதும். பேக்வர்ட் கிளாஸ் என்பது, தலைவர் அவர்களே, எப்பொழுது வந்தது? நாம் இருக்கிறபொழுது அல்ல. ஜி.டி. போக் அவர்கள் சீப் செகரட்டரியாக இருந்தபோது சி. டி. முதலியார் அவர்களைப் போட்டு அவர்தான் இதையெல்லாம் யார் யார் என்று லிஸ்ட் தயார்செய்தார்கள். துளுவ வெள்ளாளர் என்று புகுத்திவிட்டார்கள், செட்டி பலிஜா என்று புகுத்திவிட்டார்கள். தமிழ் பேசினால் துளுவ வெள்ளாளர் என்றும் தெலுங்கு



பேசினால் செட்டி பலிஜா என்றும் வந்துவிட்டார்கள். பாவம் பிராமணன் ஒருவன்தான் பேக்வர்டிலே வரமுடியவில்லை. மீதி எல்லோரும் பேக்வர்டிலே வந்து இருக்கிறார்கள். இந்த லிஸ்ட் பயனில்லை, most archaic, out moded. யார் உண்மையிலேயே பேக்வர்ட் என்பதைப் பார்க்கவேண்டும். நீங்கள் அமைத்திருக்கிற குழுவிலே டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் to revise the list. இதைப்பற்றிக் கொடுக்கவில்லை. To see how you can improve the status of the Backward Classes என்று கொடுத்திருப்பதாகத்தான் கேள்வி. இந்த லிஸ்ட் சரியா என்று பார்க்கவேண்டும். எங்கள் இனம்கூட முன்னேறியிருக்கிறது என்று—சபாநாயகர் நினைப்பாரேயானால், அவர் நம்மைப்போல் தான்—நினைத்தால் வேண்டாம் என்று சொல்லிவிடலாம். அரிசன் ஒரு இடத்திலே உழுதுகொண்டிருப்பான், அதற்குப் பக்கத்திலேயே வன்னியன் உழுது கொண்டு இருப்பான், எல்லோரும் திராவிடன்தான், எல்லாம் கறுப்பு ஆகத் தான் இருப்பார்கள். எனவே வன்னியர் செங்குந்த முதலியார் என்று . .

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சண்டை வந்தால்.

திரு. கே. விநாயகம்: சண்டை வந்தால்தான் அது எல்லாம் வருகிறது, தலைவர் அவர்கள் எனக்கு ஞாபகப்படுத்தினார்கள். வட ஆற்காடு, கள்ளக்குறிச்சியிலே அரிசனுக்கும், வன்னியருக்கும் தகராறு என்று கிளப்பிவிடுகிறார்கள், ஒன்றும் இல்லை. அந்த மாதிரியெல்லாம் புகார் எல்லாம் வருகிறது. இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து திருத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் அதிகமான பணம் ஒதுக்கவேண்டுமென்றுதான் பேசுவேன். ஆனால் கட்மோஷனிலே 100 ரூபாய் குறைக்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறேன்.

It is an anomaly in parliamentary practice. I am going against my own thesis. இல்லிங்களா?

கட்டுக்கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கவேண்டுமென்று சொல்லி விட்டு அதிலே 100 ரூபாய் குறைக்கவேண்டுமென்று சொல்வதெல்லாம் பார்லிமெண்டரி புரசீஜர் என்ன என்ன பண்ணச் சொல்கிறீர்கள், அது எல்லாம் மேல் காலத்திலிருந்து வருகிறது. 100 குறைக்கவேண்டுமென்று, கொடுக்கவேண்டுமென்று விதிகள் இருப்பதாலேதான் அப்படிச் செய்தேன்.

I would rather move an 'add' motion and not a cut motion. Add one hundred rupees more to this. Demand என்றுதான் சொல்வேன். இந்தக் கருத்துக்களையெல்லாம் மனத்திலே கொண்டு அமைச்சர் அவர்கள் திருத்தியமைப்பார்கள் என்று நம்பி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை மானியத்தைக் குறித்து அவையுறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களையும், யோசனைகளையும் எடுத்து வழங்கியிருக்கிறார்கள். அதில் சிறப்பாக மாண்புமிகு திரு. விநாயகம் அவர்கள் இன்று கொஞ்சம் மனச்சாட்சியோடு பேசியிருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். காரணம், பிற்பட்டோர் நலத்துறைப் பணி சமுதாயத்தினுடைய பிரச்சினையாக இருப்பதாலே, அவர்கள் இருக்கும்படியான உண்மையை எடுத்துக்கூறி முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசினையும் பாராட்டியிருப்பது வரவேற்கவேண்டிய ஒன்றாகும். அவர்கள் சொன்னார்கள், யார் நல்லது செய்தாலும் அதைக் குறிப்பிட்டுப் பாராட்டுவது நம்முடைய பண்பாக

இருக்கவேண்டுமென்று. அந்த அளவில் நம்முடைய நாட்டிலே அரசியல் நடப்பதால்தான் பல மாநிலங்களிலே நிலைமை வேறுமாதிரியாக இருந்தாலும் நமது மாநிலத்தில் கூடுமான அளவு நல்லமுறையிலே அரசு நடைபெற்று வருகிறது. சமுதாய விடுதலை பெறவும் மக்கள் சம உரிமைகள் பெறவும் திராவிட முன்னேற்றக் கழகமும், அதனுடைய தாய்க் கழகமும்தான் காரணம் என்பதை இந்த நேரத்திலே பெருமையாகவும் பணிவாகவும் சொல்லிக்கொள்கிறேன்.

தேசீய விடுதலை காங்கிரஸ் இயக்கம்தான் பாடுபட்டது என்று எப்படி அந்தக் கட்சியின் உறுப்பினர்களும் தலைவர்களும் பெருமைப்படுகிறார்களோ அந்த முறையிலே சமுதாயத்தில் உள்ள மேடு பள்ளங்களை நிரப்பப் பாடுபட்டது திராவிட முன்னேற்றக் கழகமும் அதனுடைய தாய்க் கழகமான நீதிக் கட்சியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நீதிக் கட்சி அரசியலில் சற்று நிதானமானது என்றாலும், சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை ஒழித்து, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சம நீதியை வழங்கி அவர்களுக்கு எல்லா உரிமைகளையும் கொடுக்க வேண்டுமென்று ஆக்க முறையிலே பாடுபட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் சொன்னார்—காங்கிரஸ் ஆட்சியிலே நாங்கள் செய்தோம், அதை தி.மு.க. அரசு விரிவுபடுத்தியிருக்கிறார்கள் என்று ஆனால் நாங்கள் பெயரளவுக்கு என்று இல்லாமல் ஆக்கபூர்வமாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே பிற்பட்டோர் நலனைப் பாதுகாக்க தனியாக அமைச்சு ஏற்படுத்தப்பட்டு, மூவர் குழுவொன்றும் அமைக்கப்பட்டு நாடெங்கிலும் அக்குழு கருத்துக்களைத் திரட்டும் பெரும் பணியிலே ஈடுபட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு குழுவின் சுற்றுப் பயணத்தைப்பற்றித் தெரிவிக்கப்படவில்லை என்று சொன்னார். திரு. விநாயகம் அவர்களே தமது உரையில் அதற்கு மறுதளித்துப் பதில் சொன்னதற்காகப் பெருமைபடுகிறேன. குழு விரிவாக விசாரணை நடத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் தங்கள் கேள்வித்தாள்களைப் பெற்றுப் பதில்களை அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார்கள். எனவே மூவர் குழு நல்லமுறையிலே பணியாற்றி வருகிறது என்று அறிய அரசு மகிழ்வு கொள்கிறது.

திரு. இராமமூர்த்தி: பர்சனல் எக்ஸ்ப்ளநேஷன் சார். அந்தக் குழுவினர் எப்பொழுது எந்த இடத்திலே விசாரணை செய்கிறார்கள் என்று கேட்டேன். திண்டிவனத்திற்கு வருகிறார்கள் என்றால் எந்த நேரத்திற்கு வருகிறார்கள், எங்கே பிரதிநிதிகளைச் சந்திக்கப் போகிறார்கள், எங்கே தங்குகிறார்கள் என்ற விவரங்கள் இல்லை. திண்டிவனத்திற்கு வருகிறோம் என்று சொல்லிவிட்டு அங்கேயிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள சாரம் கிராமத்திலுள்ள மில்லில் அங்கே ஏர் கண்டிஷனில் தங்கியிருக்கிறார்கள், திண்டிவனத்தில் உள்ள டி.பி.யில் தங்கவில்லை. எனவே எங்கே தங்குகிறார்கள், எந்த நேரத்தில் சந்திக்கிறார்கள் என்ற விவரங்கள் என்பதைப்பற்றித்தான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: 10-ம் தேதி இரவு சாரத்திலே தங்கிவிட்டு 11—2—1970 தேதியன்று அந்தக் குழுவின் வேலைகள் திண்டிவனத்திலேதான் நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. இராமமூர்த்தி அவர்கள் சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிறபோது அந்தக் குழு சுற்றுப் பயணம் செய்வதால் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க சாத்தியமாக இல்லையென்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவை நேரில் சந்தித்துக் கருத்துக்களைக் கூற வேண்டுமென்று விரும்பினால், அதற்காக ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களை ஒதுக்கி அந்தக் குழுவிடம் உங்களுடைய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள அரசு ஆவன செய்யும்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எத்தனை மாணவர்கள் உதவிச் சம்பளத்தைப் பெற்றார்கள் என்ற எண்ணிக்கையைக் கேட்டார்கள். 1969-70-ல் ஜனவரி வரை உதவித் தொகை பெற்றவர்கள் 88,119 மாணவர்கள். கூடுமான அளவிற்கு யார் யார் விண்ணப்பித்திருக்கிறார்களோ, அவர்கள் அத்தனை பேருக்கும் உடனடியாக உதவிச் சம்பளத்தை அனுமதிப்பதிலே இந்த அரசு தயக்கம் காட்டாமல் தாப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவு தொகை இதுவரை செலவாகியிருக்கிறது என்று பார்த்தால், இன்னும் இரண்டு மாதம் இருக்கிறது—ரூ.1,53,81,000 இது வரை உதவிச் சம்பளத்திற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட விரிவடைந்திருக்கிறது என்று சொல்லவிரும்புகிறேன். அன்று இருந்த நிலையிலே அந்த அளவுக்குச் செய்ய முடிந்தது; இன்று தான் ஒதுக்கும் உதவித்தொகை விரிவடைந்திருப்பதற்காக அரசைப் பாராட்டுகிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள், அதற்காக மிகவும் நன்றி.

மாண்புமிகு உறுப்பினர்கள் மேலும் சில பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்கள். குறிப்பாக, மதம் மாறிய பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு ஏற்கனவே அளித்துவந்த சலுகைகளை நீடித்துத் தரவேண்டுமென்று தெரிவித்தார்கள். இன்னும் சில வகுப்பாரை மோஸ்ட் பாக்வர்ட்—அதாவது மிகமிக பிற்படுத்தப்பட்ட லிஸ்டில் சேர்க்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். இதற்காகத்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் மூவர் குழுவை நியமித்துள்ளார்கள். அக்குழுவினர் இதுபோன்ற பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுடைய அறிக்கையைக் கொடுத்தபிறகு அதன்மீது அரசு ஆராய்ந்து அதற்கேற்ப மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்க பூர்வமான யோசனைகளை அறிவிக்க வாய்ப்பு அளித்து, அதற்கேற்ப நடைமுறையில் ஆவன செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப் போலவே, இந்த அரசு பிற்படுத்தப்பட்ட மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றுவதில் தீவிரமான எண்ணம் கொண்டிருக்கிறது. மத்திய அரசால் நியமிக்கப்பட்ட கமிஷனின் சிபாரிசுகள் தூங்கிக் கிடக்கின்றன, அதுபோன்ற நிலை இதற்கு ஏற்படக்கூடாது என்று உறுப்பினர்கள் கூறினார்கள். நான் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது-பிற்படுத்தப்பட்ட மக்களை முன்னேற்றுவதற்காக ஆக்க பூர்வமான, திட்டவட்டமான பணிகளைச் செய்ய இந்த அரசு என்றென்றும் தயாராக இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், முன்னேற்றம் அடைந்த மக்கள் என்ற அவல நிலை அகன்று எல்லோரும் சமுதாயத்தில் [illegible]றப்பட்ட மக்கள் என்ற நிலையை அடைய வேண்டுமென்பதுதான் இந்த அரசின் உறுதியான லட்சியம். இதை யாரும் சந்தேகிக்க வேண்டாம்.

மூவர் குழுவின் அறிக்கை எப்போது வரும் என்று கேட்டார்கள். சில பேர் இடைக்கால ரிப்போர்ட் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இடைக்கால அறிக்கை அவசியம் என்று பட்டால், குழுத் தலைவரிடம் இடைக்கால அறிக்கையைப் பெற்று, ஆவன செய்யப்படும்.

உறுப்பினர்கள் அவ்வளவு பேரும், இந்தத் துறையிலே இன்னும் அதிகமான கவனத்தைச் செலுத்தி, அதிகமான தொகையை ஒதுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். அரசு இந்தப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருவதிலே யாருக்கும் ஐயப்பாடு இல்லை என்பதை அறிய மகிழ்ச்சியடைகிறேன். எனவே வெட்டுப் பிரேரணையைக் கொடுத்த எல்லோருமே அதைத் திரும்பப் பெறுவார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் சொன்னதைப் போல் சமுதாய மறுமலர்ச்சிப்பணி என்ற அடிப்படையில் சமுதாயத்தில் மலிந்துள்ள பேதா பேதங்கள் அகற்றப்பட வேண்டுமென்ற தத்துவத்தில் யாருக்குமே அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. அதை நிறைவேற்றுவதில் உள்ள உறுதி சிலருக்கு அதிகமாக இருக்கலாம், சிலருக்குக் குறைவாக இருக்கலாமே தவிர, பொதுவாக மாறுபட்ட கருத்து எவருக்கும் இருப்பதற்கில்லை.

முற்போக்கு அடைந்த சமுதாயத்திலும் பொருளாதாரத் துறையில் தாழ்ந்தவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் நிலைமையையும் நான் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சொல்லியிருக்கிறார்கள். முற்போக்கடைந்த சமுதாயத்தில் பொருளாதாரத் துறையில் தாழ்ந்துள்ளவர்களுடைய பிரச்னைகளைக் கவனிக்க வேண்டியதை இந்த அரசு தனது கடமைகளில் ஒன்றாக உணர்ந்துள்ளது. எனவே, ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். ஏற்கனவே மிகவும் இளைத்து இருப்பவர்களுக்கு உதாரணமாக நான் இளைத்து இருக்கிறேன்; மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் பருமனாக இருக்கிறார்கள். இரண்டு பேருக்கும் ஒரே விதமான பராமரிப்பு என்றால், அவர் மேலும் பருத்துக் கொண்டே போவார், அதிகச் சலுகை இளைத்திருப்பவருக்குக் கொடுக்க வேண்டும். குதிரைப் பந்தய ஓட்டத்தில் கூட 'ஹாண்டிகாப்' என்று பின்பற்றப்படுகிறது. எனவே பிற்படுத்தப்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் ஏற்கனவே முன்னேறியுள்ள சமூகத்தோடு உயர்ந்து நிற்கும் நிலை பெற்ற பிறகு இந்தச் சலுகைகளை மற்றவர்களுக்கும் வழங்குவது பற்றி யோசித்து ஆவன செய்யலாம். சமுதாயத்தில் உள்ள அத்தனை பேருக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் மறைந்து அத்தனை பேரும் ஏறத்தாழ ஒன்று என்ற நிலை வளர்ந்து மொத்தமான நன்மைகளைச் செய்யக்கூடிய நாள் எதிர்காலத்தில் நிச்சயம் வரும். அப்போது உள்ளபடியே நம்முடைய, தமிழ் நாட்டைப் பொறுத்தவரை மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் அளவுக்குப் பெருமையோடு சமுதாய மறுமலர்ச்சிப் பணியில் வெற்றி பெறுவோம். ஆதலாலே உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் நினைவில் கொண்டு மூவர் குழுவின் அறிக்கை வந்த பிறகு முறையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மீண்டும் கூற விரும்புகிறேன்.

பிற்பட்டோர் நலத்துறை தனியாக இயங்க வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றியும் முதல்வர் அவர்கள் கருத்தில் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறையை விரிவுபடுத்தி தனியாக இயங்கச் செய்ய ஆவன செய்யப்படும் என்பதையும்



தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்போதே மாநில அளவிலே இயக்குநர் தனியாகத்தான் இருக்கிறார். மாவட்ட அளவில் இல்லாவிட்டாலும் மாநில அளவிலே இருக்கிறார். மாவட்ட அளவிலே ஏற்கனவே உள்ள டி.டபிள்யூ.ஓ-வின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிக் கொண்டு வருகிறது. மாவட்டங்களிலும் தனியாகப் பிரிப்பதற்கான நடவடிக்கைகள் நிதி அடிப்படையில் வாய்ப்பு ஏற்பட்டதும் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலத்துறையில் பணியாற்றும்படியான செயலாளர் அவர்கள், இயக்குநர் அவர்கள், மற்ற அலுவலாளர்கள் அனைவரும் ஏதோ உத்தியோகம் செய்கிறோம் என்ற நினைப்பில் இல்லாமல் சமுதாயத் தொண்டு புரிகிறோம் என்ற அடிப்படையில் அக்கறையோடும், கண்காணிப்போடும் செயலாற்றி வருவதற்காக அவர்களைப் பாராட்டி, கனம் உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணைகளை திரும்பப் பெற்றுக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் பதினைந்து நிமிடங்கள்தான் இருக்கின்றன. தொடர்ந்து நான் பேச கொஞ்சம் நேரத்தை உயர்த்தித் தருமாறு முதலிலேயே கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த மானியத்தின் மீது பல பேர் பல கருத்துக்களைக் கூறி இருக்கிறார்கள். 65 சதவிகிதத்தினர் பின்தங்கிய சமுதாயத்தினர். 17 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், 18 சதவிகிதத்தினர் முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வாறு குறிப்புகள் இருக்கின்றன. 65 சதவிகிதத்தினரை 17 சதவிகிதத்தினர் தாழ்த்துகிறார்கள். இவர்கள் இருவரையும் சேர்த்து அதாவது 82 சதவிகிதத்தினரை 18 சதவித முற்போக்கு மக்கள் குறைவாக, தாழ்வாகக் கருதி வந்ததன் விளைவாகத்தான் இந்த ஏற்றத் தாழ்வுகள் இன்றைக்கும் சமுதாயத்தில் நிலைத்து நிற்கின்றன. இதை நீக்குகின்ற வேறுபாடுகளை நீக்க வேண்டுவதற்காகத்தான் எல்லாத் துறையிலும் இருக்கின்ற வேறுபாடுகளை நீக்க வேண்டுமென்று இந்த அரசு சமுதாயக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு மாத்திரமல்ல, இந்தக் கட்சி உருவான காலத்தில் இருந்து இதைச் சமுதாயக் கொள்கையாக வைத்து இன்னும் அதற்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. ஜாதியில் இருக்கும் ஏற்றத்தாழ்வு மாத்திரமல்லாமல் இந்த ஆதிக்கம் இன்று எந்த உருவில் இருந்தாலும் அத்தனையும் நீக்கப்பட வேண்டும்; ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் தொடர்ந்து இந்த அரசு பணியாற்றிக் கொண்டு வருகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மானியத்தின் மீது பேசிய அவ்வளவு பேரும் இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கி இருக்கும் தொகை போதாது; மேலும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். இதிலிருந்து ஒவ்வொருவர் உள்ளுணர்விலும் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றுவதற்காக இன்னும் அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்ற அக்கறையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஆனால் ஒதுக்கப்படுகிற தொகை அதிகமாக இல்லை, மேலும் அதிகமாக ஒதுக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டிருப்பதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திட்டப்பட்ட திட்டங்கள் எல்லாம் ஒழுங்கான முறையில் சரியான முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை முதலில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 1970-71-ல் மட்டும் புதிய திட்டங்கள் என்ன என்ன குறிப்பாக நான் பொறுப்பேற்றிருக்கிற ஹரிஜன நலத் துறையில் அதிகமாக உருவாக்கியிருக்கிறோம் என்று சொன்னால், ஏறத்தாழ ஒன்பது புதிய திட்டங்களை நாம் இந்த ஆண்டு உருவாக்கி, அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடும் செய்திருக்கிறோம்.

உபகாரச் சம்பளத்தைப் பற்றி பலர் பேசினார்கள், அதிகப்படியான தொகை கொடுக்கவில்லையே என்று. துரதிருஷ்டவசமாக 1969-70-ம் ஆண்டு வரையில் மத்திய அரசு மேல் படிப்பிற்காக உபகாரச் சம்பளம் எல்லாவற்றையும் சேர்த்து 55 லட்சம் ரூபாய் கொடுத்து வந்தார்கள். ஆனால் 1969-70-க்கு முன்னாலேயே அதைக் கொடுக்க மறுத்துவிட்டது. ஒட்டுமொத்தமாக ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்துவிடுவோம், அதை யாருக்காவது எப்படியாவது எந்த மாணவருக்காவது உபகாரச் சம்பளமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஐந்து லட்சம் ரூபாய்தான் கொடுப்போம் என்று அவர்கள் முடிவு எடுத்து விட்டார்கள். எனவே, இந்த ஆண்டு 55 லட்சம் ரூபாயை இந்த மாநில அரசாங்கமே ஏற்றுச் செய்யவேண்டியிருக்கிறது. கடந்த ஆண்டு வரையில் கொடுத்துக் கொண்டு வந்த அந்த நிதி ஒதுக்கீடு நிறுத்தப்பட்டு விட்டதன் காரணமாக, இந்த ஆண்டு அந்த 50 லட்சம் ரூபாயை மாநில அரசே போட்டாக வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். இதைக் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட டெல்லியில் கேட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கமும் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறது. தொடர்ந்து கொடுத்து வந்த உபகாரச் சம்பள உதவியை நிறுத்தி விடவேண்டாம் என்றும், ஏற்கனவே கொடுத்து வந்ததை விட அதிகப்படியாகக் கொடுக்கவேண்டும் என்றும் நாம் மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். மாநில அரசின் இந்த ஒரு இக்கட்டான நிலையை ஒவ்வொரு உறுப்பினருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவது வகுப்பிலிருந்து மேல் படிப்பு வரையில் ஹரிஜன மாணவர்கள் பள்ளிகளில் மாணவர்களுக்கு ஆங்கிலம் சொல்லித் தரவேண்டுமென்று ஏறத்தாழ 517 ஆசிரியர்களையும், பழங்குடி மக்கள் பகுதிகளில் 19 ஆசிரியர்களையும் நியமித்து, 11 லட்சத்து 14 ஆயிரத்துச் சொச்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்த வகையில் புதிய ஒரு திட்டத்தை இந்த ஆண்டு கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு முன்னால் இந்தத் திட்டம் இருக்கவில்லை. இந்த வருடம் தான் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.

அடுத்து, 20 புதிய விடுதிகள் திறக்க இருக்கிறோம். அப்படி 20 விடுதிகள் திறப்பதோடு மட்டுமல்லாமல் 20 பழைய விடுதிகளையும் அரசாங்கமே ஏற்று நடத்த இருக்கிறது. இதற்குக் காரணம், 60, 67 விடுதிகளை தனியார் துறையில் நடத்தி வருகிறார்கள் அரசாங்க மானியம் பெற்று. அந்த மானியத்தை வைத்துக் கொண்டு தனியார் துறையினர் நடத்தி வருகிறார்கள். சரியான முறையில் மாணவர்களுக்கு உணவு மற்ற வசதிகள் செய்து தராத காரணத்தி



னால் கொஞ்சம் கொஞ்சமாக அந்த விடுதிகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொண்டு அரசாங்க பராமரிப்பில் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில்தான். எல்லாவற்றையும் மொத்தமாக எடுத்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு நிதி வசதி இந்த ஆண்டு இல்லாததால், இந்த ஆண்டு 20 பழைய விடுதிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவும், புதிதாக 20 விடுதிகள் திறக்கவும் அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

வீடுகள் கட்டுவதுபற்றிச் சொன்னார்கள். நில ஆர்ஜிதம் செய்வதற்காக படிப்படியாக தொகை குறைக்கப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். உண்மை. கடந்த ஆண்டு 20 லட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு அது 13 லட்சமாக குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம், நில ஆர்ஜிதம் செய்கிறோம். சில பட்டா நிலங்களை அரசாங்கம் வாங்குகிறது. அப்போது அந்த நிலச் சொந்தக்காரர்கள் வழக்குமன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். வழக்காடுகிறார்கள். நிலத்தை எடுத்து பணம் கொடுக்கும்போது கூட பணம் வாங்க சில நிலச்சொந்தக்காரர்கள் மறுக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கூறியதுபோல் பாலான பிறகு கூட பணம் வாங்க மறுக்கிறார்கள். பலயிடங்களில் நிலத்தை எடுத்து ஹரிஜனங்களுக்குக் கொடுத்த பிறகு அவர்கள் அங்கு வீடு கட்டமுடியாத அளவிற்கு நிலச் சொந்தக்காரர்கள் ஹரிஜனங்களை அருகில் வர விட முடியாமல் விரட்டி அடிக்கிறார்கள். மீண்டும் அவர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்று நினைத்து நிலம் எடுக்கும்போது, அர்ஜன்ஸி கிளாஸில் எடுக்கிறார்கள். ஹரிஜனங்கள் சுகாதாரமற்ற முறையில் வாழ்கிறார்கள் என்று சொல்லி வாதாடுகிறார்கள். நிலத்தை எடுத்து விட்டு பல ஆண்டுகள் ஆன பிறகும் யாரும் குடியிருக்க வரவில்லை, எனவே எங்கள் நிலத்தை பிடுங்கி எடுத்துக் கொள்வது தவறு என்று நீதிமன்றத்தில் வாதாடுகிறார்கள். ஏன் அரசாங்கம் நிலத்தை அர்ஜன்ஸி கிளாஸ் போட்டு எடுக்கவேண்டும்? அப்படி எடுத்த பிறகு ஏன் ஹரிஜனங்களுக்கு கொடுக்கவில்லை, அதில் தடை ஏற்படும்போது ஏன் கவனிக்கவில்லை என்றும், இப்படி அர்ஜன்ஸி கிளாஸ் மூலம் நிலத்தை ஆர்ஜிதம் செய்யாதீர்கள் என்றெல்லாம் சொல்லும்பொழுது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே இப்படி பல சிக்கல்கள் காரணமாக அவர்கள் வீடுகள் கட்டமுடியவில்லை. திட்டங்கள் போடப்பட்டு அதை படிப்படியாக செயலாற்றி வரும்போது உடனடியாக வழக்குமன்றத்திற்கு சென்றுவிடுகிறார்கள். ஆகவே ஆர்ஜிதம் செய்வதற்காக ஒதுக்கப்படும் தொகை சரியான முறையில் செலவு செய்யப்படாமல் இருக்கிறது.

இங்கு கூட சுரேந்திரன் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் கூறியபடி செய்யவேண்டிய நிலை வருகிறது. ஆகவே அந்த நிலை இந்த வருடம் வரக் கூடாது என்பதற்காகத்தான் கடந்த ஆண்டு 20 லட்சம் ஒதுக்கப்பட்டது, இந்த ஆண்டு 13 லட்சம் என்று குறைந்திருப்பது. வீடுகள் கட்டிக் கொடுக்கிற நிலையில் பல கோளாறுகள் வருகின்றன. யார் கட்டுவது என்ற சிக்கல் ஏற்படுகிறது. 86,000 மனைக்கட்டுகள் கொடுக்கப்பட்டு வீடுகள் கட்டாமல் வைத்திருந்தார்கள். நிலம் கொடுத்தால் போதும், வீடு கட்டிக் கொள்கிறோம் என்று மனை வாங்கும்போது சொல்கிறார்கள், நிலத்தைக் கொடுத்துவிட்ட பிறகு ஐயோ, பணம் இல்லையே, எப்படி வீடு கட்டுவது என்று சொல்கிறார்கள்.

உண்மையும் அதுதான். சர்க்கார் பணம் செலவழிந்து மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுத்த பிறகு வீடுகள் கட்டவில்லை என்று சொன்னால் பணம்தானே செலவாகிறது?

எனவே, ஆர்ஜிதம் செய்வதில் அதிகப்படியான பணத்தை ஒதுக்குவதை விட, நிலத்தை ஆர்ஜிதம் செய்து வீடுகளை அரசாங்கமே கட்ட வேண்டும் என்ற ஒரு புதுத் திட்டத்திற்காக 5.12 லட்சம் ரூபாய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆயிரம் ரூபாயில் ஒரு வீடு கட்டித் தருவதாக இருக்கிறது. ஏற்கனவே நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டவர்கள் முதல் இடம் பெறுவார்கள். பிறகு படிப்படியாக அதற்கு அடுத்த ஆண்டு அதற்கு அடுத்த ஆண்டு என்று வருகிற வர்கள் இடம் பெறுவார்கள். கடந்த முறை ஆயிரம் ரூபாய் செலவு செய்து கட்டிய வீடுகள் இடிந்துவிழுந்து விட்டன, ஆயிரம் ரூபாயில் என்ன வீடு கட்ட முடியும் என்று கேட்கப்பட்டது. அவர்கள் கொடுத்துக் கொண்டிருந்தபோது ரூ. 750-ம், உடல் உழைப்பு என்ற முறையில் ரூ. 250 என்ற அளவிலும் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் கொடுத்து வந்திருந்தார்கள். அந்த வீடுகளை அரசாங்கம் கட்டவில்லை. ஆயிரம் ரூபாய்க்கு வீடு கட்டுங்கள் என்று காண்ட் ராக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அப்படி ரூ. 750, உடல் உழைப்பின் மூலம் ரூ. 250 என்று வாங்கிக்கொண்டு, ஆயிரம் ரூபாயில் 500 ரூபாய் கூட பெறாத அளவிற்கு மலிவான சாமான்களை வைத்து கட்டப்பட்டன. அப்படிக் கட்டப்பட்டதன் விளைவாக கடந்த ஆட்சி காலத்தில் அப்படிக் கட்டப்பட்ட வீடுகள் இடிந்து விழுந்துவிட்டன. 'பெனிபிஷியரில்' ரூ. 250 பெறுமான அளவில் உடல் உழைப்பு தரவேண்டும் என்ற அந்த முறையை வைத்திருந்தார் கள். இதன்படி நல்ல முறையில் வீடுகள் கட்ட பயன்படவில்லை. அதை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்துதான் ஆயிரம் ரூபாய் செலவழித்து அரசாங்கமே இந்த வீடுகளைக் கட்டுவது என்றிருக்கிறது. ஒப்படைக்காரர்கள் கையில் கொடுக்கக் கூடாது. தீப்பற்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு எரியாத வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குக் கூட ரூ. 800, ரூ. 900 தான் செலவாகிறது. ஆகவே ஆயிரம் ரூபாய் செலவு செய்து, அரசாங்கமே வீடு கட்டவேண்டும் என்று திட்டம் போட்டு, ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டு, ஏற்கனவே நிலம் கொடுக் கப்பட்டு வீடு கட்டாமல் வைத்திருக்கக் கூடியவர்களுக்கும் கொஞ்சம் கூட வசதியில்லாதவர்களுக்கும்தான் முதல் இடம் தரவேண்டும் என்று இத்திட் டத்தை அரசாங்கம் உருவாக்கியிருக்கிறது.

ஆயிரம் ரூபாய் போதாது, 5,000 ரூபாய் வேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்த மன்றத்தில் நான் பலமுறை கேள்வி நேரத்தின்போது கூறியிருக்கிறேன். 3,000 ரூபாயில் வீடுகள் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக் கிறது. அந்த வீடுகளுக்கான நிதி உதவியை மத்திய அரசு தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். இதுவரையில் அதற்கு ஒப்புதல் தரவில்லை. 3,000 ரூபாயில் வீடுகள் கட்டுவதற்குப் பதிலாக, ரூ. 5,000-ல் வீடு கள் கட்டுங்கள் என்று அங்கிருந்து கடிதப் போக்குவரத்து செய்து கொண் டிருக்கிறது. ஐயாயிரம் ரூபாய்க்கான வீடுகளை எப்படிக் கட்டுவது? கடனாகக் கொடுப்பதா, மானியமாகக் கொடுப்பதா, யார் யாருக்குக் கொடுப்பது, எவ்வளவு பேர்களுக்குக் கொடுப்பது, மத்திய அரசின் பங்குத் தொகை என்ன, மாநில அரசு எவ்வளவு போடவேண்டிவரும் என்பதைப் போன்ற பிரச்சினைகள்



இருப்பதால், நாம் சொல்லி வருகிற மூவாயிரம் ரூபாய் வீடுகளுக்கு அவர்கள் ஒத்துக்கொள்ளாததாலும், எது நடைமுறையில் வரப்போகிறது என்பது பரி சீலனையில் இருப்பதால் அதைப் பற்றி நான் மேற்கொண்டு எதுவும் இப்போது கூறவிரும்பவில்லை. நிச்சயமாக ஆயிரம் ரூபாய் வீடுகளை ரூ. 5.12 லட்சம் செலவில் இந்த அரசு செய்ய இருக்கிறது.

ஐந்தாவது ஒரு நல்ல திட்டம். இப்போது சாதாரணமாக பஞ்சாயத்து யூனியன்களுக்கெல்லாம் வில்லேஜ் கிராண்ட் என்று சொல்லி கிராமப் பணிகளைப் பஞ்சாயத்து யூனியன்கள் செய்யும்போது மக்கள் பகுதி என்று ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை பொது மக்கள் தரவேண்டும் என்று விதி இருக்கிறது. அந்த விதிப்படி அரிசன மக்களால் அந்தப் பணத்தை பஞ்சாயத்துக்குக் கட்ட முடி யாது, அதைக் கொடுக்கும் நிலையில் அவர்கள் இல்லாத காரணத்தால் இந்த ஆண்டிலிருந்து பொதுமக்கள் தரவேண்டிய அந்த கன்ட்ரிபியூஷன்—ஈவுத் தொகை எவ்வளவோ, அதை இந்த இலாகாவிலிருந்து தந்து விடுவது என்று ஏற்கனவே நடந்து வருகிறது. அந்த வகையிலே இந்த ஆண்டு 6 லட்ச ரூபாய் பொது மக்கள் ஈவுத்தொகையாக பஞ்சாயத்து யூனியனுக்கு ஒதுக்கீடு செய்து கிராமப் பணிகள் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

இதுவல்லாமல் மேலும் பஞ்சாயத்து மூலமாக மக்களுக்குக் குடிதண்ணீர் வசதி, பாதை வசதி, இன்ன பிற வசதிகளைச் செய்யும்போது, இன்னும் 25 லட்ச ரூபாயைத் தனியாக ஒதுக்கி, அதை வைத்து அரிசனங்கள் வாழுகிற கிராமங் களில், பகுதிகளில் குடிதண்ணீர் திட்டத்தை அமல் படுத்தவும் புதிய பாதைகள் போடவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலே தான் சமூகக் கட்டடங்கள் வருகின்றன. அந்த 25 லட்சம் ரூபாயிலே தான் சமூகக் கட்டடங்கள்— கல்யாணம் செய்வதற்கும் வேறு பல நல்ல காரியங்கள் செய்வதற்கும், ஆண்டு தோறும் கூடி மகிழ்வதற்கும், விழாக்கள் கொண்டாடவும் இன்ன பிற காரியங் களுக்காவும் ஒவ்வொரு அரிசன காலனியிலேயும் ஒரு சமூகக் கட்டடம் கட்டு வது என்ற முறையில், மாவட்டத்துக்கு 10 சமூகக் கட்டடங்கள் கட்டுவதற்காக இந்த 25 லட்ச ரூபாயிலிருந்து தனியாக ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இவை களை எல்லாம் இந்த ஆண்டில் புதிதாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

மேலும் பல அரிசன வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள்; அதிகம் படிப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் வேறு வேலை பார்க்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு பேருந்து வண்டிகளை ஓட்டும் பயிற்சி—டிரைவராக பயிற்சி அளிக்க 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். அதன் மூலமாக அவர்களுக்கு டிரைவிங் டிரைனிங் கொடுத்து அதன் மூலம் அவர் களுக்கு வேலை கிடைத்தால் அப்படி கொஞ்சம் பேர்களுக்கு வேலை கொடுக்க லாம் என்ற திட்டத்தை இந்த ஆண்டில் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இன்னொன்று. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அரிசன மக்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் அமைத்துக் கொடுக்கிற முறையில், அவர்கள் பங்குத் தொகையாக, அவர்களுக்கு வட்டியில்லாத கடனாக அரசு கொடுக்கும் திட்டம் ஒன்று இருக்கிறது. மேலும் கூட்டுறவுத் துறை மூலமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு—அரிசனங்கள் மட்டுமல்ல—எல்லா மக்களுக்கும்

குடிசைத் தொழில் ஆரம்பிக்க வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்றை அந்த இலாகா உருவாக்கியிருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் அரிசன மக்களுக்கும் சில குடிசைத் தொழில் கூட்டுறவு சங்கங்களை ஆரம்பித்துக் கொடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய மூலதனத்தை இந்த இலாகாவே கொடுக்க வேண்டும். அந்தப் பணத்தை அவர்களுக்கு வட்டியில்லாத கடனாகத் தரவேண்டும் என்று திட்டமிட்டு, 26,620 ரூபாய் மூலதனமாகக் கொடுத்து இந்த இலாகா மூலமாக 61 சங்கங்கள் உண்டாக்க வேண்டும் என்று ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இதுவும் இந்த ஆண்டில் எடுத்துக் கொண்டிருக்கிற புதிய திட்டமாகும்.

இத்துடன் தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகம்--டி.பி.எஸ்.சி.— மூலமாகத் தேர்வு நடப்பதில் பங்கு கொள்வதற்குத் தேவையான பயிற்சி அளிக்கும் நிலையங்களை மதுரை, திருச்சி, கோவை, சென்னை ஆகிய இடங்களில் ஏற்படுத்தி, 50 பேர்கள் பயிற்சி பெறுகிற அளவில் நான்கு நிலையங்களை 2 அல்லது 3 லட்ச ரூபாய் செலவில் ஏற்படுத்த ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். பரீட்சைக்குச் செல்லுகிறவர்களுக்கு எப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பார்கள், எப்படி பதில் சொல்லுவது என்ற இப்படிப்பட்ட பயிற்சி அளிப்பதற்கு இந்த நான்கு இடங்களிலேயும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. இதுவும் அரசு இந்த ஆண்டில் எடுத்துக் கொண்டிருக்கிற புதிய திட்டமாகும்.

பொதுவாக இன்றைக்கு தமிழ்நாட்டில் 24,409 அரிசன காலனிகள் கிராமங்களாக இருக்கின்றன. முனிசிபல் எல்லை, பிற நகர எல்லை இல்லாமல், வெறும் கிராமங்களாக இருப்பது 24,409. இவைகளில் எல்லாம் ஏறத்தாழ எல்லா வசதிகளும் பாதை இணைப்பு, சுடுகாட்டுப் பாதை, குடிதண்ணீர் போன்றவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன, ஒரு சிலவற்றில் இல்லாமல் இருக்கலாம். இணைப்புப் பாதை இல்லாத கிராமங்கள் 2,355 தான்; சுடுகாட்டுப் பாதை இல்லாத கிராமங்கள் 1,768 தான்; குடிதண்ணீர் வசதி இல்லாத கிராமங்கள் 2,124 தான்; சுடுகாட்டுக்கு நிலம்—பரியல் கிரவுண்ட்—இல்லாத கிராமங்கள் 713 தான். ஆக இவை அத்தனையும் செய்து கொடுக்க இணைப்பு பாதைக்கு 100.39 லட்சம்; சுடுகாட்டுப் பாதைக்கு 35.07 லட்சம்; குடிதண்ணீருக்கு 73.59 லட்சம்; சுடுகாட்டு நிலம் ஆர்ஜிதம் செய்ய 13.03 லட்சம் என்று ஏறத்தாழ 222.08 லட்சம் ரூபாய் இவைகளுக்குத் தேவைப்படுகிறது. இதிலே 1970-71-க்கு 25 லட்சம் எடுத்த பிறகு 197 லட்சம் தான் தேவை. இதை அடுத்தடுத்த ஆண்டுகளில் நிறைவேற்ற முடியும். எனவே நிச்சயமாக 1972-க்குள்ளாக எல்லா அரிசன காலனிகளுக்கும் இணைப்புப் பாதை வசதி, சுடுகாட்டுக்குப் பாதை, குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மேலும் மின்சார இணைப்பைப்பற்றிச் சொல்லும்போது எல்லா கிராமங்களுக்கும் இணைப்பு கொடுக்கிறோம் என்று சொன்னால், அரிசன காலனிகளைப் பொறுத்தவரை 1970-71-க்குள் எல்லா காரியங்களும் செய்யமுடியும்; காரணம் நிதி ஒன்றும் அதிகம் தேவையில்லை. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் தான். நிச்சயமாகச் செய்து கொடுக்க முடியும் என்ற உறுதியை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சிலவற்றைப் பேசினார்கள். மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள்—தாரிஞ்சாபுரத்தில் சுடுகாட்டுக்கு பாதையே இல்லை என்று. கடந்த ஆண்டிலேயும் அவர்கள் பேசினார்கள், நான் பதிலும் சொல்லியிருக்கிறேன். சுடுகாட்டுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது; சுடுகாட்டுக்கு வழியும் இருக்கிறது. புதிய காலனியும் கட்டப்பட்டிருக்கிறது. தனியாக பள்ளிக்கூடம், குடிதண்ணீர் வசதி எல்லாம் இருக்கிறது. எப்போதோ யாரோ சொன்னார்கள் என்பதற்காக அதை எடுத்து வைத்துக் கொண்டு, பஜார் நியூஸுக்கெல்லாம் அதிக முக்கியத்துவம் கொடுத்து, அது இல்லை, இது இல்லை என்று சொல்வது முறையல்ல. உண்மையான குறைகளைச் சொன்னால் ஏற்றுக் கொள்கிறோம்.

இங்கே மதிப்பிற்குரிய திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள் கடந்த ஆண்டு 20 லட்சம் ரூபாயாக இருந்தது இந்த ஆண்டு 13 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று. அப்படிக் குறைந்ததற்கான விளக்கம் நான் சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட நியாயமான குறைகளைச் சொன்னால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கரியமாணிக்கம் அவர்கள் சொன்னார்கள். தேபண்டதாவு கிராமத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்த நிலம் ஆர்ஜிதம் செய்து அரிசன மக்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேல் ஜாதிக்காரர்களுக்கும் அரிசனங்களுக்கும் இடையிலிருக்கிற மாறுபட்ட உணர்வுகளின் காரணமாக அங்கே குடியிருக்கவிடாமல் தடுக்கிறார்கள். இதற்கு என்ன செய்வது? போலீசை வைத்து அடிக்க முடியுமா; வழக்கு போட முடியுமா? மன மாற்றம் ஏற்பட்டு எல்லோரும் ஒன்றாக வாழவேண்டுமென்ற எண்ணம் வர வேண்டுமே தவிர, சட்டத்தைப் பயன்படுத்தி, போலீசை வைத்து துரத்துகிறோம், அடிக்கிறோம் என்றால் அரிசனங்களை போலீஸ் வந்து அடிக்கக் கூடாது என்று பிரசாரம் செய்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் அஞ்சித் தான் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்குகிறதே தவிர வேறொன்றும் இல்லை. எந்தெந்த உறுப்பினர்கள் அரிசனங்களுக்காகப் பேசுகிறார்களோ அவர்களே அரிசன மக்களின் பாதைக்கு இடம் கொடுக்க முன்வராத நிலைமைகளைக் காணுகிறோம்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: 5 வருஷம் ஆகிவிட்டது. இந்த நில ஆர்ஜிதத்துக்குப் பிறகு கோர்ட்டுக்குப் போனார்கள்; அங்கேயும் அவர்களுக்கு பிரதிகூலமாகி விட்டது. இப்போது அரசாங்கம் நிறுத்தி வைத்து இருக்கிறது, அது ஏன்? ஆர்டர் போட்டால் கட்டி விடுவார்கள். கலெக்டரிடமிருந்து ரிப்போர்ட் வேண்டுமென்றார்கள்; அதுவும் இரண்டு கலெக்டர்களின் ரிப்போர்ட் வந்தாகிவிட்டது. ஏன் அரசாங்கம் நிறுத்தி வைத்திருக்கிறது என்பது தான் என் கம்பிளெயிண்ட்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அரசாங்கம் நிறுத்தி வைக்கவில்லை. வர விடாமல் தடுக்கிறார்கள்; இவர்களும் அங்கே போக அஞ்சுகிறார்கள். அவர்களே எங்களுக்கு வேறு இடம் கொடுங்கள், அங்கே போக முடியாது என்று சொல்கிறார்கள். இப்படி பல எடுத்துக் காட்டுகளைச் சொல்ல முடியும். எத்தனையோ இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுத்து விட்டிருந்தும் கூட அரிசனங்கள் அங்கே போய் குடியிருக்க முடியவில்லை. இவர்களே

அஞ்சுகிறார்கள். சிலமுறைகூட எடுத்துப் பேசப்பட்டது. ஏன் ஒன்றாக வைக்கக்கூடாது. வெவ்வேறாக வைக்க வேண்டுமா என்று. ஒன்றாகவே வைக்கலாம். அதுதான் அரசாங்கத்தின் கொள்கையும். ஆனால் ஒத்துப்போக முடியாத அளவுக்கு சமுதாயத்தில் மற்ற உணர்வுகள் இருப்பதால், அவர்களின் உணர்வுகளையும் சற்று மதிக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் அரசாங்கம் கலெக்டரிடம் இப்பொழுது மீண்டும் கேட்டுப் பாருங்கள் என்று சொல்லியிருக்கிறது. ஒத்துக்கொள்கிறார்களா, வேறு இடம் இருக்கிறதா என்று கேட்டு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இரண்டு பேர்களையும் சமாதானம் செய்யக்கூடிய பொறுப்பை மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏற்றுக்கொள்வாரானால், நாளைக்கே அதைச் செய்துவிட முடியும். அரசாங்கம் அதற்கு ஆதரவு தந்து, ஒத்துழைப்பு தரும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துலிங்கம் அவர்கள் சொன்னார்கள், கிறித்தவ ஹரிஜனங்களுக்குச் சலுகை தேவை என்று. இப்பொழுதும் கிறித்தவ மதத்திற்கு மாறிய கிறித்தவர்களுக்குச் சலுகை கொடுத்துக்கொண்டு வருகிறது. ஆனால் ரிசர்வேஷன் போன்ற நன்மைகள் கிடைப்பதில்லை. அவைகளெல்லாம் மத்திய அரசாங்கம் செய்யக் கூடியவை. பின் தங்கிய சமுதாய மக்களைப்பற்றி இந்தச் சலுகை வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் ஹரிஜனங்கள் கிறித்தவர்களாக ஆகிவிட்டால் அவர்களுக்கு மாநில அரசாங்கத்தின் சலுகைகள் அத்தனையும் உண்டு. பின் தங்கிய சமுதாயத்தினர் கிறித்தவர்களாக ஆகிவிட்டால் அவர்கள் முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்துவிடுகிறார்கள். மத்திய அரசாங்கம் கொடுக்க மறுக்கிறது. ஆனால் மாநில அரசாங்கம், அவர்கள் மதம் மாறியபிறகும் வாழ்க்கைதரத்தில் முன்னேறவில்லை என்பதைக் கண்கூடாக அறிந்து, மதம் மாறிய கிறித்தவர்களுக்கு மாநில அரசாங்கத்தின் சலுகைகளைக் கொடுத்துக்கொண்டு வருகிறோமே தவிர, மத்திய அரசாங்கத்தின் திட்டங்களிலே அவர்களுக்குப் பங்கு இல்லை. அதற்கு எங்களால் ஒன்றும் செய்யமுடியாது. நாங்கள் மேலிடத்திற்கு எழுதிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் ஒப்புதல் கொடுத்தால்தான் முடியும்.

திரு. எம். சுரேந்திரன்: மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு கருவிகள் கொடுப்பதில்லை என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி ஒவ்வொருவராகக் கேட்டுக் கொண்டிருந்தால் எப்பொழுது விவாதம் முடிவது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மதம் மாறிய ஹரிஜனங்களுக்குக் கருவிகள் கொடுக்கிறோம் என்றால், அவர்களிலே மருத்துவத் தொழில் செய்யக்கூடியவர்கள், சலவைத் தொழில் செய்யக்கூடியவர்கள் அந்தச் சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு, அந்தத் தொழில் செய்யக் கூடியவர்களுக்கு கருவிகள் கொடுத்துக்கொண்டு வருகிறோம், இன்றைக்கும் கொடுக்கிறோம். யாருக்காவது கிடைக்கவில்லை என்றால், அதைப்பற்றித் தனியாகக் கவனிக்கலாமே தவிர, இன்னமும் மாநில அரசாங்கம் கொடுக்கக்கூடிய சலுகைகள் மதம் மாறிய கிறித்தவர்களுக்கு உண்டு. ஆனால் அந்தத் தொழிலைச் செய்பவர்கள் குறைவு. ஹரிஜன சமுதாயத்தில் இருப்பவர்களின் சலவைத் தொழிலாளர்கள் குறைவு, ஹரிஜன சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்களில்



மருத்துவத் தொழிலாளர்கள் குறைவு, ஹரிஜன சமுதாயத்தில் இருப்பவர்களில் வேறு பல தொழில் செய்பவர்கள் மிகமிகக் குறைவாக இருப்பதனால்தான் அவர்களுக்கு உரிய கருவிகள் குறைவாகப் போகிறது. அருந்ததியர்களுக்கு கருவிகள் அதிகமாகக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். குறிப்பிட்டு, சிலருக்கு இல்லை என்ற நிலைமை இருக்கலாம். பொதுவான கொள்கை அவர்களுக்கும் தர வேண்டுமென்றுதான். குறைபாடுகள், தவறுகள் எங்கும் இருக்கும், அதைச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதைப்போல, தனிப்பட்ட வகையில், வேலங்குடி, கீழப்படுகை பற்றி திரு. தனுஷ்கோடி அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

தஞ்சை மாவட்டத்தில் நஞ்சையைக் கொடுத்துவிட்டிருக்கிறார்கள், அதை உயர்த்தி சமப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இதுகூட இந்த அரசு செய்த தவறு அல்ல. ஆனால் தஞ்சை மாவட்டத்தில், நஞ்சை தான் கிடைக்குமே தவிர, புஞ்சை கிடைப்பதில்லை. ஆகவே, நஞ்சை நிலத்தை எடுத்துவிட்டார்கள். அதற்கு உயர்த்துவது என்றால் அதிகப் பணம் ஆகும். ஆனால் அப்பொழுதிருந்த சட்டம், ஹரிஜன மக்கள், இந்த நிலத்திலும்கூட நாங்கள் சமப்படுத்தி கட்டிக் கொள்கிறோம் என்ற ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டுதான் வாங்குகிறார்கள். நிலத்தை எடுத்துக் கொண்ட பிறகு, பள்ளமாக இருக்கிறது என்ன செய்வது என்று சொல்வது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து, நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, நீங்கள் உயர்த்திக் கட்டுவது இல்லை என்றால் நாங்கள் திரும்ப எடுத்துக்கொள்ளுவோம் என்று எச்சரிக்கை செய்த பிறகு, 13 கிராமங்களில், நஞ்சையில் பள்ளமாக இருந்ததை, 8 கிராமங்களிலே அவர்களாகவே உயர்த்திக்கொண்டார்கள். இன்னும் 5 கிராமங்களில் உயர்த்த வேண்டியது பாக்கியிருக்கிறது. இந்த 8 கிராமங்களில் உள்ளதைப்போல் 5 கிராமங்களிலும் உயர்த்தக்கூடும் என்ற அளவுக்கு விட்டு வைக்கப்படுகிறது. அது வெற்றி பெறும். எனவே, தனியாக அதற்கு எந்தவிதக் கவனமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

திரு. ராமலிங்கம் அவர்கள் பரமேஸ்வரன் ரிப்போர்ட் பற்றிச் சொன்னார்கள். வரவேற்கிறேன். ஏன் செய்யவில்லை என்றால் 5 செண்ட். நிலம் கொடுக்க சிபார்சு செய்திருக்கிறார்கள். அப்படியென்றால் 15 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும். 15 கோடி ரூபாய் என்றுகூட ஒதுக்கி செய்யலாம் என்றாலும், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் கூறியதுபோல, எவ்வளவு பணம் போட்டாலும் இந்தப் பள்ளத்தைத் தூர்க்க முடியாது. அத்தனை படுபாதாளமாக இருக்கிறது. பணம் இருந்தால் சாதிக்க முடியும். எனவே கொஞ்சம் கொஞ்சமாகத்தான் செய்யமுடியும். மத்திய சர்க்காரிலே நல்ல உறவு இருக்கிறதே, ஏன் அவர்களிடம் வாங்கக்கூடாது என்று சொல்கிறார்கள். வாங்க வேண்டியவைகளுக்கு வாங்குகிறோம். வறட்சி நிவாரணத்திற்கென்று 14 கோடி ரூபாய் வாங்கினோமே அது அந்த உறவை வைத்துக்கொண்டுதான், வாங்கினோம், வாங்க முடியும். எனவே, வாங்க வேண்டுமென்ற அவசியம் வரும்பொழுது கட்டாயம் வாங்குவோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வட்டியில்லாத கடன்களாக 250 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரைதான் என்று கேட்கிறார்கள். சிறியசிறிய வெற்றிலை பாக்குக்கடை, பழக்கடை, காய்கறிக் கடை இப்படிப்பட்ட கடைகள் வைப்பதற்குத்தான் இந்தத் தொகை. 250 ரூபாய் ஒரு வெற்றிலை பாக்குக் கடை வைப்பதற்குப் போதாதா? 500 ரூபாய் பழம் வாங்கி வைக்கப் போதாதா? பெரிய பெரிய மளிகைக்கடைகள், ஜெனரல் ஸ்டோர்ஸ் போன்றவைகள் வேண்டுமானால் வைக்க முடியாது. ஆனால் கிராமங்களில் ஹரிஜன மக்கள் வாழும் பகுதிகளில் சின்னச்சின்னக் கடைகளை வைத்து, ஒரு வெற்றிலை பாக்குக் கடை, டீக்கடை போன்ற கடைகளை வைத்து, ஜீவனம் செய்யத்தான் இந்தத் தொகை. சின்ன வியாபாரம் செய்ய இந்தத் தொகை போதும். செலவழிக்க, மேலும் வாங்க அவர்கள் பணம் கேட்கிறார்கள் என்றால் அவர்கள் அந்தத் தவறைச் செய்யக்கூடாது. மாவட்ட நல அதிகாரிகள், வெல்ஃபேர் தாசில்தார்கள் இருக்கிறார்கள். இவர்கள் நன்மை செய்வதற்காக இருக்கிறார்கள். தவறாகத் தாசர்களிடம் பணத்தைக் கொடுத்து ஏமாந்து விடக்கூடாது. 1969-70-இல் ஒதுக்கப்பட்டிருந்த 3 லட்சம் ரூபாயில் பிறகு இன்னும் 1 லட்சம் கூட்டிக் கொடுத்தது. இந்த ஆண்டும் அதிகமாக மக்கள் வரவேற்பார்கள், ஹரிஜன மக்கள் முன்னேற்றம் காண நம்பிக்கையோடு இருப்பதால் இந்தத் திட்டம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. ராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள், பெண் குழந்தைகளுக்கு 2 ரூபாயும், ஆண் குழந்தைகளுக்கு 1 ரூபாயும் கொடுப்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு 'டாய்லெட்' மற்றும் மேல் செலவுகளுக்குக் கொடுப்பதை உயர்த்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இதைக் கொடுப்பதே, பெண் குழந்தைகள் சோப்பு, சீப்பு, எண்ணெய் வாங்கிக்கொள்வார்கள் என்ற எண்ணத்தில்தான். ஆண் குழந்தைகளுக்கு கிராப் வெட்டிக் கொள்வதற்குத்தான் கொடுக்கப்படுகிறது. இதை இன்னும் ஒரு ரூபாய் உயர்த்தினால் இப்பொழுதிருக்கும் எண்ணிக்கைக்கு 5, 6 லட்சம் ஆகும். 2 ரூபாய் ஒதுக்கினாலும் 2 ரூபாய் போதாது என்று சொல்லக்கூடும். எனவே, இதைப் பற்றிப் பின்னாலே கவனிக்கலாம் என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

இந்த 551 லட்சத்தில், அதிகாரிகளுக்கும் சேர்த்துச் செலவு செய்யப்படுகிறதா என்றால், இது எல்லா இலாக்காவிலும், அந்த இலாக்காவின் நிர்வாகச் செலவுகளையும் சேர்த்துத்தான் இந்த ஒதுக்கீடே தவிர இதுமட்டும் தனியாக அல்ல. 551 லட்சத்தில் இலாக்கா செலவுகளும், நிர்வாகச் செலவும் சேர்த்துத் தான் இந்தத் தொகை என்று நான் கூறிக்கொள்ளுகின்றேன்.

மதிப்பிற்குரிய திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள், 15 பைசா மதிய உணவுக்காக அரிசன நல இலாக்கா நடத்தும் பள்ளிக்கூடங்களில் கொடுக்கிறார்கள், இது போதாது என்று சொன்னார்கள். இன்றைக்குக் கல்வி இலாக்கா நடத்தும் பள்ளி மாணவர்களுக்கு 10 பைசாதான் கொடுக்கப்பட்டு வருகிறது. பொதுவே அவர்கள் 10 பைசா வீதத்திலே, கல்வி இலாக்கா நடத்தும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு, தலா 10 பைசா மதிய உணவுக்குத் தரப்படுகிறது. ஆனால் இன்றைக்கு ஹரிஜன நல இலாக்கா நடத்தும் பள்ளிகளில், 15 பைசா மதிய உணவுக்குக் கொடுக்கிறோம். இப்பொழுது 5 பைசா அதிகமாகும். இன்னமும் அதிகமாகத் தர நிதி இடம் தரவில்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



நில ஆர்ஜிதம் ஆமை வேகத்தில் இருப்பதாகக் கூறினார்கள். அதற்குக் காரணம் வழக்குக்குப் போகிறார்கள். எல்லாவற்றிற்கும் அதிகமாக நிதி ஒதுக்கம் செய்யவேண்டுமென்று சொன்னதை வரவேற்கிறேன். ஆனால் நிதி நெருக்கடியாக இருப்பதால் ஒதுக்க முடியவில்லை.

நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் வழங்கப்படும்பொழுது அரிசனங்களுக்கு முதலிடம் தர வேண்டுமென்று கூறப்பட்டது. சட்டமிருக்கிறது, முதலில் எக்ஸ்-சர்விஸ்மென், இராணுவத்தில் பணி புரிந்தவர்கள், இப்பொழுது பணி புரிந்து கொண்டிருப்பவர்கள், அடுத்த கட்டம் மூன்றாவது பணி புரிந்த இராணுவ வீரர்கள் என்று இருக்கிறது. மூன்றாவது, நான்காவதாகத்தான் அரிசனங்கள் வருகிறார்கள். எனவே, இராணுவத்திலே கை, கால் இழந்தவர்கள், இராணுவத்தைச் சேர்ந்த குடும்பம், இப்பொழுது இராணுவத்தில் இருப்பவர்கள் அந்தத் தொகையில் அதிகமாக இருக்காது. இன்னமும் அதை செவின்யூ இலாக்கா, அரிசனங்களுக்கு முதலிடம் காட்ட வேண்டுமென்று பரிசிலனை செய்கிறார்கள். அந்த வகையில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு நிலம் தரப்பட்டது, எப்படித் தரப்பட்டது என்பதைப்பற்றிக் கேள்வி நேரத்தில் கேட்டால் தனியாகப் பதில் சொல்லுகிறேன். இப்பொழுது அதற்குரிய சரியான விவரங்கள் இல்லை என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிறகு இந்த 16 சதவிகிதம் பற்றி சொன்னார்கள். 16 சதவிகிதம் பூர்த்தியாக முடியாத நிலையில் தான் இன்றைக்கும் இருக்கிறோம். 4½ சத விகிதம் பூர்த்தியாக்கப்பட்டிருக்கிறது அரசாங்கப் பணிகளிலே. இதற்குக் காரணம் ஏற்கனவே அரசாங்கப் பணிகள், அரசாங்க இயந்திரம், அரசாங்கப் பணிமனைகள் உருவாக்கப்பட்டுவிட்டன. பல பேர்கள் பல சமுதாயத்து மக்கள் இடம் பிடித்துக்கொண்டார்கள். இடம் பிடித்துக் கொண்டவர்களை நகர்த்திவிட்டு, 16 சதவிகிதம் கொடுத்து விடுங்கள், 25 சதவிகிதம் கொடுத்துவிடுங்கள் என்று இப்பொழுது கூறு போடமுடியாது. மேலும் மேலும் எப்பொழுது காலி இடங்கள் ஏற்படுகின்றனவோ, வேகன்சிகள் எழுகின்றனவோ, அந்தக் காலி இடங்களுக்கு இந்த சமுதாயத்தினரைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியும். இந்தக் காலி இடங்கள் எழும்பொழுது, எந்த சமுதாயத்தில் விடுபட்டுப் போனது என்று பார்த்து, யார் தகுதியானவர்கள் என்றெல்லாம் பார்த்து போடவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. இந்த ஆண்டு பூர்த்தி செய்ய அரிசன சமுதாயத்தினர் கிடைக்கவில்லை என்றால், வேறு சமுதாயத்தினரைக் கொண்டு பூர்த்தி செய்யாமலேயே நிறுத்திவிட்டு, அடுத்த ஆண்டு யாராவது கிடைத்தால் பூர்த்தி செய்யலாம் என்ற இதற்கான கமிட்டி சிபார்சு செய்து, அதை அரசாங்கம் ஒத்துக்கொண்டு, அந்த வகையிலே செய்துகொண்டு வருகிறோம். நான் டெல்லிக்குப் போனபோது கூட சொல்லியிருக்கிறேன். 16 சதவிகிதம் அரிசனங்களைக் கொண்டு பூர்த்திசெய்யவேண்டும், பின்தங்கிய வகுப்பினர்களைக் கொண்டு 25 சதவிகிதம் பூர்த்திசெய்யவேண்டும் என்று சொன்னேன். கொஞ்ச நாட்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளையெல்லாம் நிறுத்திவைத்துவிட்டு, எவ்வளவு நாட்களுக்கு ... இதற்கு ஆட்களை அமர்த்துகிறபொழுது, இந்தெந்த வற்றையும் சேர்த்து, அவைகளுக்கு ஆட்களை அமர்த்துகிறபொழுது, இந்தெந்த சமுதாய மக்களை இன்னின்ன சதவிகிதத்தில் உயர்த்தவேண்டும் என்று உயர்த்தினால்தான், ஏதாவது கொஞ்சமாவது இந்த சதவிகிதத்தை உயர்த்திக் கொடுக்க முடியுமே தவிர, அவ்வப்பொழுது ஏற்படுகிற 1, 2 காலி இடங்களில்

மட்டும் இந்த சமுதாயத்தினரை அமர்த்தினால், இந்த சதவிகிதத்தை பூர்த்தி செய்துவிட முடியாது. 20, 30, 50 என்று வரும்பொழுது இந்த சதவிகிதத்தை பூர்த்திசெய்துவிட முடியாது. 100, 200 காலி இடங்கள் ஏற்படுவதற்கு நாம் என்ன புதிய இலாகாவையா துவக்குகிறோம், புதிய அரசாங்கத்தையா உருவாக்குகிறோம், புதிய பணி மனைகளையா நாம் ஏற்படுத்துகிறோம் இப்படிப்பட்ட நிலை வரும்பொழுது, 100, 50 என்று காலி இடங்கள் ஏற்படும்பொழுது, அதில் 16 சதவிகிதம் இன்றைக்கும் பூர்த்தி செய்துகொண்டு தான் வருகிறோம். எனவே, ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்வதில் பயனில்லை. அரசாங்கப் பணிமனைகளில் இடங்கள் காலி ஏற்படாததினால் தான் இதைத் துரிதப்படுத்த முடியவில்லை. இதை மத்திய அரசாங்கமும் உணர்கிறது. மாநில அரசாங்கமும் உணர்கிறது. அவ்வப்பொழுது நிலைமைகளைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். நம்முடைய மாநிலத்து முதல்வர் தான் ஹை பவர் கமிட்டிக்குத் தலைவர் : இந்த நலத் துறை அமைச்சர் தான் செயலாளராக இருக்கிறார்கள். அவ்வப்பொழுது கமிட்டி கூடுகிறது. கூடி பரிசீலனை செய்கிறது என்பதை நான் கனம் உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி கொறடா மாண்புமிகு திரு. விநாயகம் அவர்கள் ஐ.ஏ.எஸ். டிரையினிங் அரிசன மக்களுக்குக் கொடுப்பதைப்போல, பின்தங்கிய மக்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். இது மத்திய அரசாங்கத்தின் திட்டம். மாநில அரசாங்கத்தின் திட்டம் அல்ல. மத்திய அரசாங்கம் பின்தங்கிய மக்களுக்கு இதுபோன்று ஐ.ஏ.எஸ். டிரையினிங் ஸ்கூல் ஆரம்பித்தால் அதை மாநில அரசு வரவேற்கும், மாநில அரசு அது சம்பந்தமாக பரிந்துரைக்கும். குறிப்பாக இதுபற்றி பிற்பட்டோர் நலக் குழு சிபார்சு செய்து அனுப்பினால், மத்திய அரசாங்கம் அதை கவனிக்கும் என்று கருதுகிறேன். இதிலே தேர்ச்சி பெற்று அனுப்புகிற மாணவர்கள் குறிப்பாக ரிட்டன் டெஸ்டு எழுதி அந்த ரிட்டன் டெஸ்டில் தேர்ச்சி பெறுகிறார்கள். பிறகு அவர்களை இண்டர்வியூவிற்கு அனுப்புகிறோம். யு.பி.எஸ்.ஸி-க்கு இண்டர்வியூவிற்கு அனுப்புகிறார்கள். அப்படிப் போகும்பொழுது எல்லா மாநிலங்களிலும் இருக்கிற மாணவர்கள் அங்கே வருகிறார்கள். அங்கே வரும்பொழுது நமது மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் அதிகப்படியாக தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆளைப் பார்த்தோ, நிறத்தைப் பார்த்தோ, அவர்களுடைய அளவைப் பார்த்தோ, எதைப் பார்த்தோ தள்ளப்பட்டுவிடுகிறார்கள். அதையும் தப்பித் தவறி இதுவரையில் 3 பேர்கள், ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ்., இன்கம் டாக்ஸ் ஆபீசர் ஆகிய கேடரில் ரொம்பப் பிரயத்தனப்பட்டு மூன்று பேர்கள் தான் வந்தார்களே தவிர, இன்னும் அதிகமாக வரமுடியவில்லை. மத்திய அரசாங்கம் நடத்தியாகவேண்டும் என்று கூறுகிற காரணத்தினால், நமக்குக் கூட இதை நடத்துவதில் பயன் இல்லை என்ற எண்ணம் இருந்தாலும், மத்திய சர்க்கார் நடத்தியாகவேண்டும் என்று கூறுகிற காரணத்தால் நடத்திக்கொண்டு வருகிறோம். இண்டர்வியூவிற்குச் செல்லுபவர்களுக்கும் பயிற்சி அளிக்கவேண்டும். டி. பி. எஸ். ஸி. [illegible] பயிற்சி அளிப்பதுபோல், ரூ. 2 லட்சம் ஒதுக்கி, இதற்காக ஒரு [illegible] இண்டர்வியூக்குச் செல்லுபவர்களுக்கு, என்னென்ன [illegible] டெல்லிப் பட்டணத்தில் கேட்கக்கூடும், எப்படி எப்படி [illegible] என்பது பற்றியும், பொது அறிவைப்பற்றியும் கருத்



துக்களை எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு டிரையினிங் கொடுப்பதற்கு மத்திய சர்க்கார் வழி செய்து கொண்டிருக்கிறது. அதையும் செய்துகொண்டு வருகிறோம் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அப்புக்கல் நில ஆர்ஜிதம்பற்றி சொன்னார்கள். அது முடிந்துபோன கதை. 1962-ம் ஆண்டின் நில ஆர்ஜிதம் செய்துவிட்டார்கள். கோர்ட்டில் பணம கட்டினார்கள். அந்தச் சொந்தக்காரர்கள் பணத்தை வாங்கிக்கொள்ளவில்லை. வாங்க மறுக்கிறார்கள். அவர்கள் பணம் வாங்க மறுத்தால் அரசாங்கம் என்ன செய்வது? கட்டாயமாக வாங்கித்தான் ஆகவேண்டும் என்று சொல்வதற்கில்லை. நிலத்தை எடுக்கலாம் என்று தான் சட்டத்தில் இருக்கிறது. நிலம் அரிசன மக்களுக்கு கைமாறிவிட்டதா, இல்லையா என்று பார்க்கவேண்டும். எனவே கலெக்டர் அவர்களைக் கேட்டிருக்கிறேன். நிலம் அரிசன மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா, அல்லது இவர்கள் கையிலே தான் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேழ்வரகு பயிரிடுகிறார்கள் என்று கூறினார்கள். கலெக்டரிடமிருந்தும் கேழ்வரகு பயிரிடுகிறார்கள் என்று ரிப்போர்ட்டு வந்தால், அது பற்றி ஆலோசனை செய்து, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பார்த்து, நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறிக் கொள்கிறேன்.

பொதுவாக, அவர்கள் கூறுவதைப் போல கறுப்பாக இருந்தாலும், குள்ளமாக இருந்தாலும், எந்த வகையில் இருந்தாலும், ஏழ்மையாக இருந்தாலும், குடிசையில் வாழ்ந்தாலும், எப்படிப்பட்ட நிலைமையில் இருந்தாலும், அவர்களுக்குள்ளே இருக்கிற உணர்வு தான் இதற்கெல்லாம் காரணம். தன்னைத்தானே உயர்த்திக்கொண்டு, பிறரைத் தாழ்த்திக்கொள்ளவேண்டும் என்ற மனப்போக்கு மாறவில்லை. இது சம்பந்தமாக நல்ல பிரசாரம் செய்துவருகிறோம். மன மாறுதல் பணிகளில் ஈடுபட்டிருக்கிறோம். அதை அனைவரும் செய்ய வேண்டும். கிராமங்களுக்குச் சென்று அப்படிப்பட்ட நல்ல கருத்துக்களை எடுத்துரைத்து மக்கள் மனம் மாறுகின்ற அளவுக்கு துணையாக பிரசாரம் செய்ய வேண்டும். அரிசன மக்கள், பிற்பட்ட மக்கள் நலனுக்காக இந்த அரசாங்கம் அதிகப்படியான பணம் ஒதுக்கி, தகுந்த அக்கரையோடு பணியாற்றி வருகிறது என்பதை நினைவுபடுத்துகிறேன்.

ஸ்காலர்ஷிப் பற்றிச்சொன்னார்கள். அண்மையில் மனுப் போட்ட எல்லா மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாருக்கும் அதில் தடை இல்லை. ஆனால், சில மனுக்கள் திருப்பி அனுப்பப்படுகின்றன. காரணம், அவர்கள் வருமானத்தைத் தவறாகக் காட்டியிருப்பார்கள். குறிப்பாக அதிகப்படியான மனுக்கள் தள்ளுபடியாவதற்குக் காரணம், சர்க்கார் சிப்பந்திகள், சர்க்கார் பணிமனைகளில் பணியாற்றக்கூடியவர்கள் இவர்கள் சம்பந்தமாக என்ன வருமானம் என்பதை அரசாங்கம் தெரிந்துகொண்டிருப்பதால், அப்படிப்பட்ட மனுக்களில் வருமானம் தவறாகக் குறிப்பிட்டிருப்பதால், அந்த மனுக்கள் திருப்பி அனுப்பப்படுகின்றன. வேறு துறையிலுள்ளவர்கள் அம்மாதிரி கணக்கு காட்டினாலும், கூலி வேலை, ஒரு காணி இரண்டு காணி நிலம் என்று போட்டிருந்தாலும், அது அதிகமாக இருந்தாலும், செகவரியின் போது தான் தெரியும். அப்படிப்பட்ட மனுக்களை திருப்ப முடியாது, அவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் எவ்வளவு வருமானம் என்று அரசாங்கத்திற்கு முன்கூட்டியே தெரியாது. ஆகவே, நான் சொல்லியபடி அரசாங்கப் பணியில் இருப்பவர்

களுடைய வருமானம் தவருகப் போடப்பட்டிருந்தால், அம்மாதிரி மனுக்கள் திருப்பப்படுகின்றன என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். பொதுவாக மனுப் போட்ட எந்த மாணவருக்கும் இல்லை என்று சொல்லாமல், உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத்தான் சொல்லிக் கொள்கிறேன்.

வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருப்பவர்கள் அனைவரும் ஏதோ ஒரு பார்லிமெண்டரி முறைக்காகத் தான் கொடுத்திருப்பார்கள். எனவே வெட்டுப் பிரேரணைகளை யாரும் வற்புறுத்தமாட்டார்கள் என்றே கருதுகிறேன். அப்படி வற்புறுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு, அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இந்த ஸ்காலர்ஷிப் கொடுப்பதிலே சில புகார்கள் வருகின்றன அதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டுமென்பதற்காகத் தான் சொல்கிறேன். சில மாணவர்களுக்கு ரூ. 543 கொடுக்கப்படும் என்று கார்டுகள் வந்தன. ஆனால், அங்கே சென்றால் அந்த இலாகாவினர் ரூ. 300 கொடுப்பதாக சில புகார்கள் வருகின்றன. ரூ. 543 என்று கார்டுகளில் போட்டுவிட்டு, அதிலே குறைத்துக்கொண்டு கொடுக்கிறார்கள் என்று புகார்கள் வருகின்றன. பாக்கி அடுத்த தவணையில் கொடுக்கப்படுமா? கார்டில் என்ன தொகை போடப்பட்டிருக்கிறதோ அந்தத் தொகை கொடுப்பதற்கு என்ன தடங்கல்? இது சம்பந்தமாக அந்த இலாகாவிற்கு சரியான தகவல் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அவர்கள் ஒதுக்கிற தொகையை மொத்தமாக தெரிவித்துவிடுகிறார்கள். அதற்குப் பிறகு ட்யூஷன் பீஸ எக்ஸாமினேஷன் பீஸ் இவைகளுக்கான பணத்தையெல்லாம் குறைத்துக் கொண்டு, மிச்சத் தொகையைக் கொடுக்கிறார்கள். முதலில் இவ்வளவு தொகை மொத்தமாக ஒதுக்கப்படுகிறது என்று தகவல் கொடுக்கிறார்கள். அதற்குப் பிறகு ட்யூஷன் பீஸ், எக்ஸாமினேஷன் பீஸ், இதர செலவுகள் இவைகளையெல்லாம் பிடித்துக்கொண்டு மிச்சப் பணத்தைக் கையிலே கொடுப்பதினால், அவர்களுக்குக் குறைவாகத் தெரிகிறது. எந்தக் காரணத்தைக்கொண்டும், தாரதம்மியம் இல்லாத வகையில்தான், ஏற்றத் தாழ்வுகள் இல்லாதவகையில் தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விளக்கத்திற்கு நன்றி. அப்பொழுது டைரக்டர் சொல்லவேண்டும், இந்தெந்த வகைகளுக்காக இவ்வளவு ரூபாய் பிடித்துக் கொண்டோம் என்று அறிவித்தால் நன்றாக இருக்கும். ரூ. 543 என்று கார்டில் போடப்பட்டிருந்தால், இவ்வளவு டிவிஷன் பீஸ் காலேஜுக்கு அனுப்பிவிட்டோம், இவ்வளவு எக்ஸாமினேஷன் பீஸ், மிச்சம் இவ்வளவு தொகை என்று விளக்கமாகச் சொல்லிவிட்டால் மிகவும் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரசாங்கம் கொடுக்கும் மெயின்டனன்ஸ் பணம், போர்டிங் கிராண்டு கொடுப்பதில் நாம் ஒரு தொகை கொடுக்கிறோம். மாணவர்கள் சொந்த மெனுவைத் தயார் செய்துகொள்கிறார்கள். கல்லூரி அதிகாரிகள் அவர்களே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நாம் கொடுக்கின்ற உபகாரச் சம்பளத்தின் அளவுக்கு அவர்கள்



உணவுப் பட்டியலைத் தயார் செய்து கொடுக்கிறார்கள். அதனால் தவறு எதுவும் நடக்க முடியாது. ஆனால் மாணவர்கள் தங்கள் விருப்பப்படி மெனு தயார் செய்துகொள்கிறார்கள். அதனால் ஒவ்வொருவருக்கும் கொடுக்கவேண்டிய தொகையில் வித்தியாசம் வருகிறது. அப்படி வித்தியாசம் வரும்பொழுது அதிகமாகத்தான் வருகிறது. ஒரு சிலரால்தான் அந்தத் தொகை கையைவிட்டு கொடுக்க முடிகிறது. மற்றவர்களால் கொடுக்க முடியவில்லை. நாம் கொடுக்கிற தொகையை வைத்துக்கொண்டு தான் அவர்கள் சம்பளம் கொடுக்கிறார்கள். எல்லா மாணவர்களும் சேர்ந்து, கோழி பிரியாணி, முட்டை புரோட்டா வேண்டும் என்று மெனு தயாரித்தால், அதைச் சாப்பிட்டுவிட்ட பிறகு அதிகப் பணமாகிறது. உபகாரச் சம்பளத்தில் அதை ஈடுகட்ட முடியவில்லை. மேற்கொண்டு தொகை கட்ட முடியவில்லை. கல்லூரி அதிகாரிகள் பாக்கி இருக்கிற பணத்தைக் கட்டிவிட்டு ஹால் டிக்கெட்டை வாங்கிக்கொள்ளவேண்டும் என்று சொல்லிவிடுகிறார்கள். வார்டனைக் கேட்டால், காய்கறிகளை நான் கடனாகத் தானே வாங்கவேண்டியிருக்கிறது என்று அவர் கூறுகிறார். ஆகவே, எல்லோருமே கலந்து பேசி ஒரு வழிசெய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குறைபாடுகளையும் கூட கவனிக்கலாம். அப்படிப் பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. மாணவர்களும் குறைபடுகிறார்கள். ஆகவே, எல்லோருமே கலந்து பேசி, கல்லூரி அதிகாரிகள், விடுதி அதிகாரிகள், மாணவர்கள் எல்லோரும், அரசாங்கம் கொடுக்கும் உபகாரச் சம்பளத்தில் குறைந்த அளவு பி.ப. 2-00
'மெனு' தயார்செய்து குறிப்பிட்ட உணவுப் பொருள்களைத் தரவேண்டும் என்றும், மேற்கொண்டு யாராவது வேண்டுமென்று கேட்டால், பணம் இருக்கிறவர்கள் அதை வாங்கி பயன் அடையட்டும் என்றும் ஏற்பாடுகள் செய்தால் நலமாக இருக்கும். அதைவிட்டு விட்டு, இதைக் கட்சித் தலைவர்களிடம் சொல்லி, இதையும் கட்சிக்காரர்கள் வெவ்வேறு விதமாக அதையெல்லாம் எடுத்துக் கொள்கிறார்கள். உண்மையாகவே பல புகார்கள் வருகின்றன. ஆகவே நாம் கலந்து பேசிச் செய்வது நலமாக இருக்கும். கனம் எதிர்கட்சித் தலைவரும் இப்படிப் பட்ட செயலில் ஈடுபட்டு, நல்ல முறையை உருவாக்குவதற்கு துணை புரியவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** விவாதம் முடிவுற்றது. ..

THIRU K. VINAYAKAM : On a point of clarification. . . .

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** விவாதம் முடிவுற்றது என்று சொல்லி விட்டேன்.

**திரு. கே. விநாயகம்:** நான் என் விளக்கத்தைச் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** நீங்கள் எழுந்துக்கொள்வதற்கு முன்பே விவாதம் முடிவுற்றது என்று சொல்லிவிட்டேன்.

### வெட்டுத் தீர்மானங்கள்

**திரு. கே. விநாயகம் :** இப்பொழுதாவது எழுந்திருக்கலாமா?

As a mark of chivalry, especially since the Hon. Minister happens to be a lady member who moved this Demand, . . . .

THE HON. THIRU P. U. SHANMUGHAM: I rise to strongly protest. The hon. Member shou d not say that. He must withdraw that.

TIRU K. VINAYAKAM: It is quite parliamentary. What is wrong in that?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அவர்கள் பெண் உறுப்பினராக இருப்பதால் என்று சொன்னது . . .

THIRU K. VINAYAKAM: I am used to English mehcds of debate. If our Members are getting. . . .

THIRU J. JAMES: On a point of order.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** என்ன?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாண்புமிகு உணவு அமைச்சர் ஆட்சேபனை செய்ய தன்னுடைய இருப்பிடத்தில் இருக்க வேண்டும். அவர்கள் தன்னுடைய ஆஸனத்தில் இல்லாததால், இடம் மாறியிருப்பதால், I raise that point of order.

**திரு. கே. விநயகம் :** சண்டை போடுவதற்கா நாம் இருக்கிறோம். அமைச்சர் கொண்டு வந்த டிமாண்டில் எங்கள் கட் மோஷனை பிரஸ் செய்வதாக இல்லை. ஆதலால் விட்டு விடுகிறேன்.

திரு. விநயகத்தின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. என். வரதராஜன், திரு. எம். சுரேந்திரன், திரு என் மருதாசலம் ஆகியோரது வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே தன் இடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டு தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** பேரவைமுன் உள்ள கேள்வி—

"நிதிக்கோரிக்கை 25 பழங்குடி மக்கள், அரிசனங்கள் ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,85,17,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



## (2) அமைச்சர்களின் விளக்க உரைகள்—தொடர்ச்சி

### (இ) கால் நடை உதவியாளர்கள் தலைமைச் செயலகத்திற்கு முன் தொடங்க இருக்கும் உண்ணாவிரதம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கையை அவைக்குச் சமர்ப்பிப்பார்கள்.

*** மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அரசு, கால் 9-01
நடை உதவியாளர்கள் தங்களுக்குச் சில கோரிக்கைகள் இருப்பதாக சுவரொட்டிகளும், துண்டறிக்கைகளும் வெளியிட்டு, 'அறப்போர்' நடத்தப் போவதாகவும், தலைமைச் செயலகத்துக்கு முன்பு உண்ணாவிரதம் மேற்கொள்ள 16—3—1970 என்று நாள் நிர்ணயித்திருப்பதாகவும் செய்திகள் வெளியிட்டனர். அவர்கள் கோரிக்கைகள் எதுவாயினும், அவைபற்றி என்னிடம் நேரில் சந்தித்துப் பேசலாமென்றும், இதுவரையில் அவர்களில் யாரும் என்னை சந்தித்து எந்தவிதக் கோரிக்கை முறையீடுகளையும் தரவில்லை யென்றும் இப்போதாவது என்னைச் சந்திக்க அவர்கள் வரட்டும் என்றும் நேற்று 15—3—1970 அன்று அவர்களுக்குச் சொல்லியனுப்பினேன். அவர்கள் யாரும் வரவில்லை. இன்று 16—3—1970 காலையிலும் அவர்கள் உண்ணாவிரதம் தொடங்குவதற்கு முன்பு என்னை வந்து சந்திக்கலாம் என்று சொல்லியனுப்பினேன். அவர்கள் அந்த அழைப்பையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் பிரச்சினைகள், குறைபாடுகள் பற்றி என்னிடம் எதுவும் கலந்து பேசாமலும், அல்லது அவர்கள் கோட்டை முன்பு உண்ணாவிரதம் தொடங்குவது பற்றிக் கூட முன்கூட்டி என்னிடம் அறிவிக்காமலும் திடீரென இந்த 'அறப்போரில்' இறங்கியிருப்பது வருந்தத்தக்கதாகும்.

அவர்கள் பிரச்சினையை எடுத்துவைக்கிற வாய்ப்பை அவர்களும் ஏற்படுத்திக் கொள்ளாமல், அதுபற்றி அவர்களோடு விவாதிக்க எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க விரும்பாமல், வேண்டுமென்றே இப்படிப் பட்ட தேவையற்ற கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளார்கள். வெளியூர்களில் உள்ள அரசு கால் நடை உதவி அலுவலாளர்களும் இதற்கென சென்னைக்கு வந்துள்ளார்கள்.

பிரச்சினைகளை அரசு அனுதாபத்துடன் கவனிப்பது என்பது வேறு, அரசு அலுவலாளர்கள் இது போன்ற காரியங்களில் ஈடுபடுவது, அரசின் விதிகளின்படி சரிதானா என்று ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பது என்பது வேறு. பிரச்சினைகளில் அனுதாபங்காட்டவும், விதிமுறைகளை மீறும் போது நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசு சிறிதும் தயங்காது.

இந்த விளக்கத்தை மட்டும் அவைக்கு அறிவிப்பதை என் கடமையாகக் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சி இன்று இந்த அளவோடு முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A *Statutory Rules and Orders.*

' Nil '

B. *Reports, Notifications and other papers.*

@ 70. Policy Note on Demand No. 26 Welfare of the Scheduled Tribes, Castes and Other Backward Classes. (1970-71) (Tamil).

71. Report of the Committee on Estimates on Stationery and Printing Department (Twelfth Report).

---

* Cut motions circulated separately.

@ Despatched to Members on 14-3-1970.



[ 26-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

**அரிசன நலத்துறை மானியம்.**

**கொள்கை விளக்கக் குறிப்பு.**

*(1970-71.)*

அரிசன, பழங்குடி மக்கள், ஏனைய பின் தங்கிய வகுப்பினர் ஆகியோர் நலன் என்பதன்கீழ் 1970-71-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையை இப்பேரவையின் முன் வைத்து, ரூபாய் 885-18 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய, இந்த அவையின் ஒப்புதலைக் கோருகின்றேன்.

இத்தொகையில் 551-13 இலட்ச ரூபாய் அரிசன நலத்துறைக்கும், 334-05 இலட்ச ரூபாய் பின்தங்கிய வகுப்பினர் நலத் துறைக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு இந்த மானியக் கோரிக்கை இப்பேரவை முன்பு வைக்கப் பட்ட பின்பு, பின் தங்கிய வகுப்பினர் நலனைத் தனியாகவும், சிறப்பபாகவும், பேணுவதற்காகப் பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை ஒன்று தனியாக திறுவ படடுள்ளது. அனைத்திந்திய நிர்வாகப் பணி அமைப்பைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் இத்துறைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கை இப்பேரவை உறுப்பினர்களாலும், பொதுமக்களாலும் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

அரிசன, பழங்குடி மக்கள் ஆகியோர் நலனைப் பேணும் முயற்சிகளை இந்த அரசு ஆழ்ந்த ஈடுபாட்டுடனும் அக்கறையுடனும் [illegible]டனும் மேற்கொண்டு வந்துள்ளது என்பது, கீழே குறிப்[illegible]ள்ள புள்ளி-வி[illegible]லிருந்து தெளிவாகும்.

கல்[illegible]

அரிசன, பழங்குடி மக்கள் ஆகியோ[illegible] கல்வி உயர்வு பெற வழிவ[illegible]கள் செய்வதற்கு 1970-71-ஆம் ஆண்டு வர[illegible]செலவுத் திட்டத்தில் 415.47 [illegible]ட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வ[illegible]புகளைச் சேர்ந்த மாண[illegible]க்குத் தொடக்க வகுப்புகளிலிருந்து பட்டம் பெ[illegible] மேல் படிப்பு[illegible] உதவிப் பணம் வழங்குவதில் அரசு மிகுந்த ஆர்வம் காட்[illegible]. அ[illegible], பழங்குடி, மாணவர்களுக்கும், இவ்வகுப்புகளைச் சேர்ந்த, சமயம் மாறிய மாணவர்களுக்கும் இச்சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1969-70-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய 3,43,318 மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்கப்பட்டுள்ளது. சென்ற மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ள உதவித் தொகைகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

61482

D

V211.31 N70

31 N71 · 2852

| ஆண்டு. | அரிசன மாணவர்கள். | | பழங்குடி மாணவர்கள். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | ரூ. | | ரூ. | | ரூ. |
| 1967-68 .. | 261,736 | 56,30,152 | 5,664 | 14,29,461 | 267,400 | 7,59,613 |
| 1968-69 .. | 283,809 | 59,20,935 | 6,167 | 14,82,276 | 289,976 | 74,02,211 |
| 1969-70 (டிசம்பர் 1969 வரை.) | 339,701 | 61,81,123 | 3,517 | 12,25,924 | 343,318 | 74,07,047 |
| 1969-70 (1970 பிப்ரவரி 15-ஆம் தேதி வரை.) | 346,024 | 62,27,751 | 4,790 | 14,23,702 | 350,814 | 76,51,453 |

குறிப்பு:—பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்படும் படிப்பு உதவிப் பணம் இப்பட்டியலில் அடங்கவில்லை.

### மேல்படிப்புக்கு உதவி.

மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கப்படும் உதவித் தொகைக்கு மேலாக, பட்டம் பெற்றபின் படிப்புக்கு மத்திய அரசு வழங்கும் உதவித் தொகைகளும் அரிசன நலத்துறையின் மூலமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க 8.71 லட்சம் ரூபாயும், பழங்குடி மாணவர்களுக்கு 0.12 லட்சம் ரூபாயும் ஆண்டுதோறும் மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டு வந்தன. இதற்குமேல் தேவைப்படும் தொகையை மாநில அரசு தன்னுடைய நிதியிலிருந்து அளித்து வந்தது.

1969-70 முதற்கொண்டு மத்திய அரசிலிருந்து இத்திட்டத்தின்கீழ் 5 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்படும் என்றும், அதற்குமேல் தேவைப்படும் தொகையை மாநில அரசே ஒதுக்கவேண்டுமென்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் செலவிடப்பட வேண்டிய தொகை ஆண்டு தோறும் உயர்ந்து வரும் காரணத்தால், மத்திய அரசு இப்பொறுப்பை பெரும் அளவில் ஏற்றுக் கொண்டு, இன்னும் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று வற்புறுத்த, இந்த அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்.

சென்ற மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ், பட்டம் பெற்றபின் மேல் படிப்புப் பயில் விரும்பும் அரிசன பழங்குடி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகைகள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | அரிசன மாணவர்கள். | | பழங்குடி மாணவர்கள். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | | ரூ. |
| 1967-68 .. | 7,575 | 38,39,580 | 98 | 58,998 |
| 1968-69 .. | 9,374 | 45,93,387 | 98 | 55,065 |
| 1969-70 (டிசம்பர் 1969 வரை.) | 10,132 | 50,08,834 | 91 | 52,449 |



### அரிசன நலத்துறைப் பள்ளிகள்.

அரிசன மாணவர்க்காக 851 பள்ளிகளை அரிசன நலத் துறை நடத்தி வருகிறது. அவற்றில் தொடக்கப்பள்ளிகள் 745, நடுநிலைப்பள்ளிகள் 80, உயர் நிலைப்பள்ளிகள் 8, இரவுப்பள்ளிகள் 17, திண்ணைப்பள்ளி 1.

பழங்குடி மாணவர்களுக்காக 62 தொடக்கப்பள்ளிகளையும், 4 நடுநிலைப்பள்ளிகளையும், ஒரு உயர்நிலைப் பள்ளியையும், ஆக மொத்தம் 67 பள்ளிகளை, இத்துறை நடத்தி வருகிறது.

நடப்பு ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் பெண்ணாத்தூரில் ஊராட்சி ஒன்றியம் நடத்தி வந்த பள்ளிக்கூடத்தை அரிசன நலத்துறை தன்னுடைய நிர்வாகத்தின்கீழ் எடுத்துக் கொண்டுள்ளது.

நெல்லை மாவட்டில் நல்லாம்புரத்தில் இருந்த தொடக்கப்பள்ளி நடுநிலைப் பள்ளியாக 1969-70-ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டது. சென்னை நகரத்தில் கன்னிகாபுரத்திலும், தஞ்சை மாவட்டில் கீழ்ப் புள்ளவாசலிலும் இயங்கி வந்த அரிசன நலத்துறை நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப் பட்டன.

1969-70-ஆண்டில் கோவை மாவட்டத்தில் கத்தேசல், காட்டூர், கல்லூர் ஆகிய இடங்களில் பழங்குடி மாணவர்களுக்காக மாணவர்கள் தங்கிப் பயிலும் பள்ளிகள் மூன்று திறக்கப்பட்டன. தென்னார்க்காடு மாவட்டத்தில் சேப்பாக்கம் உயர் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாகவும், திருச்சி மாவட்டத்தில் காட்டுப் பாப்பாக் குறிச்சியில் இயங்கி வந்த நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டு, இதற்கான நிதி ஒதுக்கீடு 1970--71--ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் பள்ளிகளுக்கு ஒழுங்காக வருவதற்கு ஊக்கம் அளிக்கும் முறையில், ஒவ்வொரு பள்ளியிலும் வகுப்புகளுக்குத் தவறாமல் வரும் மாணவர்களுக்குப் பரிசுகளாக ஆடைகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் எந்தப் பள்ளிக்கூடத்தில் அதிக மாணவர்கள் ஒழுங்காக வகுப்புகளுக்கு வருகின்றார்களோ, அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியருக்கு வெள்ளிப்பதக்கம் பரிசாக அளிக்கப்படுகின்றது. எஸ்.எஸ்.எல்.சி. பொது தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மிக உயர்ந்த தேர்வு எண்கள் பெறும் முதல் இரண்டு அரிசன மாணவர்களுக்கு முறையே ரூ. 50, ரூ. 10, மதிப்புள்ள தேசிய சேமிப்புப் பத்திரங்கள் பரிசாக அளிக்கப் பட்டுள்ளன. அது போலவே ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த அரிசன நலப் பள்ளியில் 5-ஆவது அல்லது 8-ஆவது வகுப்பில் மிக அதிகப்படியான மாணவர்கள் தேர்வு பெறுகின்றனரோ, அந்தப் பள்ளிக்குச் சுற்றுலாவும் வெள்ளிக் கேடயம் ஒன்றும் பரிசாக வழங்கும் திட்டம் 1969-70-ஆம் ஆண்டு முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது.

### கூடுதலாக ஆசிரியர்கள் நியமனம்.

இப்போது 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் தேர்ச்சியில் இன்னும் அதிகக் கவனம் செலுத்துவதற்கு வசதி செய்யும் பொருட்டு, 25 மாணவர்களுக்கு ஒரு

ஆசிரியர் என்ற விகிதத்தில் கூடுதலாகச் சில ஆசிரியர்களை நியமிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் 1968-69-ஆம் ஆண்டில் பழங்குடி மாணவர்கள் பள்ளிகளில் அதிகப்படியாக 14 ஆசிரியர்களும், 1969-70-ஆம் ஆண்டில் அரிசன மாணவர்கள் பள்ளிகளில் அதிகப் படியாக 33 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்றும் வகுப்பிலிருந்து மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பிப்பதற்காக இடைநிலை ஆசிரியர்களை (செகண்டரி கிரேடு) அதிகப்படியாக நியமிப்பதற்கும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், 1970-71-ஆம் ஆண்டில் 11,14,000 ரூபாய் செலவில் 517 ஆசிரியர்களை அதிகப்படியாக அரிசன நலப் பள்ளிகளிலும், 37,500 ரூபாய் செலவில் 18 ஆசிரியர்களை அதிகப்படியாகப் பழங்குடி மாணவர்கள் பள்ளிகளிலும் நியமிக்கத் திட்டம் உள்ளது.

### பள்ளிகளில் வசதிகள் பெருக்கம்.

இப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பொது அறிவை வளர்ப்பதற்காக, அவர்களைப் பல்வேறு ஊர்களுக்கும் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. நூல் நிலைய வசதிகளைப் பெருக்கவும், கல்விப் பயிற்சி சாதனங்கள், அறிவியல் ஆய்வுக்கூட சாதனங்கள், ஆகியவற்றை இப் பள்ளிகளுக்கு மேலும் அதிக அளவில் அளிப்பதற்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இச்சாதனங்களை வாங்குவதற்கு 1969-70-இல் அரிசன நலப் பள்ளிகளுக்கு 4.51 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. 1970-71-இல் 5.51 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பழங்குடி மாணவர் பள்ளிகளுக்கு 1969-70-இல் 40,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. 1970-71-இலும் 40,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப் பள்ளிகளுக்குச் சொந்தமான கட்டிடங்கள் கட்டுவதற்கும், இப்பொழுதுள்ள கட்டிடங்களை மேற்கொண்டு பழுது பார்ப்பதற்கும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அரிசனப் பள்ளிகளுக்குச் சொந்தமான கட்டிடங்கள் கட்டவும், பழுதுபார்க்கவும் 1970-71-இல் 5.8 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருத்தலையூரில் அரிசன நல உயர்நிலைப் பள்ளிக்கு 3.03 லட்சம் ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் கட்டும் வேலை நடந்துவருகிறது. பழங்குடி மாணவர்கள் பள்ளிகளுக்கு 1970-71-இல் 0.60 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடி மாணவர்கள் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தருவதற்கு ஒரு திட்டம் செயல்பட்டுவருகிறது. இத் திட்டத்தின்கீழ் 1967-68-இல் 11,000 ரூபாய் செலவில் இரண்டு விடுதிகளும், 1968-69-இல் 2,0000 ரூபாய் செலவில் ஒரு வீடும் கட்டப்பட்டன. 1969-70-இல் இத் திட்டத்திற்கு 20,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. 1970-71-ஆம் ஆண்டு இத் திட்டத்திற்கு 20,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு 4 குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரிசன நல பள்ளிகளில் முதல் 3 வகுப்புகளில் பயிலும் மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒரு உடுப்பு வழங்கும் திட்டம் செயல்பட்டு வந்தது. நடப்பு ஆண்டில் 4-ஆவது 5-ஆவது வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கும் இத் திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது.



### மதிய உணவு.

அரிசன நலப் பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படுகிறது. 1969-70ஆ-ம் ஆண்டில் 833 பள்ளிகளில் பயின்ற ஏறத்தாழ 1.20 லட்சம் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வந்தது. இதைத்தவிர, பொதுப் பணிகளில் பயிலும் அரிசன மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்க அரிசன நலத்துறை உதவி செய்துவருகிறது. 1969-70-ஆம் ஆண்டில் பொதுப் பள்ளிகளில் பயின்ற ஏறத்தாழ 32,000 அரிசன மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வந்தது. 1970-71-ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்காக 33.70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### மாணாக்கர் விடுதிகள்.

அரிசன, பழங்குடி மாணவர்களுக்காகப் புது விடுதிகள் திறக்கவும், ஏற்கனவே இயங்கிவரும் தனியார் விடுதிகளைப் படிப்படியாக அரசு நிர்வாகத்தின் கீழ் நேரடியாக எடுத்துக்கொள்ளவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்காக 3.5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் கல்லூரி மாணவர்களுக்காக 3 விடுதிகளும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக 9 விடுதிகளும் புதிதாகத் திறக்கப்பட்டன. இவற்றைத் தவிர மேலும் 3 விடுதிகள் திறப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தனியார் நடத்திவந்த ஒரு விடுதி அரசு நிர்வாகத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது. இவை தவிர பழங்குடி மாணவிகள் விடுதி ஒன்றும் புதிதாகத் திறக்கப்பட்டது. இதன்கீழ் 1970-71-ஆம் ஆண்டில் 22 புதிய விடுதிகளைத் திறக்கவும், 20 பழைய தனியார் விடுதிகளை அரசு நிர்வாகத்தின்கீழ் எடுத்துக் கொள்ளவும் வசதி இருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

புதிதாகத் திறக்கப்பட்ட விடுதிகள் உட்பட, இப்போது இயங்கிவரும் விடுதிகளும், அவற்றில் பயிலும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கையும், பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| இனம். | விடுதிகளின் எண்ணிக்கை. | | | தங்குபவர் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். | ஆண். | பெண். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| அரிசன வகுப்பினர். | 305 | 125 | 430 | 20,928 | 7,560 | 28,488 |
| பழங்குடி | 12 | 4 | 16 | 570 | 130 | 700 |
| மொத்தம் .. | 317 | 129 | 446 | 21,498 | 7,690 | 29,188 |

அரிசன, பழங்குடி மாணவர்களிடையேயும், மற்ற வகுப்பு மாணவர்களிடையேயும் இணக்கமான உறவை ஏற்படுத்துவதற்காக, மற்ற வகுப்பு மாணவர்களையும் இந்த விடுதிகளில் சேர்க்க வசதி செய்யப்பட்டுள்ளது. அரிசன நல மாணவர்கள் விடுதியில் நூற்றுக்கு 75 அரிசன மாணவர்களையும், 20 பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களையும், 5 மேல் வகுப்பு மாணவர்களையும்

அனுமதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. அது போலவே பழங்குடி மாணவர்கள் விடுதியில் நூற்றுக்கு 60 பழங்குடி மாணவர்களையும், 30 அரிசன மாணவர்களையும், 10 பின் தங்கிய வகுப்பு மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

இப்போது இயங்கி வரும் விடுதிகளை நிர்வகிப்பதற்கு 1970-71-ஆம் ஆண்டில் 72.57 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, புதிய விடுதிகள் திறப்பதற்கும், தனியார் விடுதிகளை அரசு நிர்வாகத்தினர் எடுத்துக்கொள்வதற்கும், 3.50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு உதவியுடன் நடக்கும் தனியார் விடுதிகள் [illegible] இப்போது இயங்கி வருகின்றன.

இந்த விடுதிகளில் தங்கும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக இந்த விடுதிகளில் பகுதிநேர ஆசிரியர்களை நியமிக்க ஒரு திட்டம் உள்ளது. இத் திட்டத்தின்கீழ், 1968-69-ஆம் ஆண்டில் அரிசன மாணவர்கள் விடுதிகளில் 74 ஆசிரியர்களும், பழங்குடி மாணவர்கள் விடுதிகளில் 4 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 1969-70-ஆம் ஆண்டில் அரிசன மாணவர்கள் விடுதிகளில் 124 ஆசிரியர்களும், பழங்குடி மாணவர்கள் விடுதிகளில் 4 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 1970-71-ஆம் ஆண்டில் அரிசன மாணவர்கள் விடுதிகளில் 1.96 லட்சம் ரூபாய் செலவில் 152 ஆசிரியர்களை நியமிக்கவும், பழங்குடி மாணவர்கள் விடுதிகளில் 14,000 ரூபாய் செலவில் 3 ஆசிரியர்களை நியமிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், எந்த விடுதியில் அதிகப்படியான மாணவர்கள் தேர்வு பெறுகின்றனரோ, அந்த விடுதியின் பொறுப்பாளருக்குப் பரிசளிக்கும் திட்டமும் தொடர்ந்து செயல்பட்டுவருகிறது.

அரிசன நலத் துறையில் நடத்தப்படும் விடுதிகள் பெரும் பாலும் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கட்டித்தர வேண்டுமென்று அரசுக்கு ஆர்வம் அதிகம் உள்ள போதிலும், நிதி நிலைமை காரணமாக, விரும்பிய அளவு அதில் முயற்சி எடுத்துக்கொள்ள வசதி இல்லாமல் போயிற்று. இருந்த போதிலும் 1967-68-ஆம் ஆண்டில் இரண்டு பழங்குடி மாணவர்கள் விடுதிகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1968-69-இல் இரண்டு அரிசன மாணவர்கள் விடுதிகளுக்குப் புதிய கட்டிடங்களும், இரண்டு பழங்குடி மாணவர் விடுதிகளுக்குப் புதிய கட்டிடங்களும் கட்டப்பட்டன. 1969-70-இல் ஒரு அரிசன மாணவர்கள் விடுதிக்குப் புதிய கட்டிடம் கட்டப்பட்டது. 1970-71-இல் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள கட்டிடங்களை நிறைவு செய்வதற்கும், புதிதாகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் 3.02 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்குப் புத்தகங்கள், கரும் பலகைகள், எழுதுபொருள்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இவை தவிர, தொடக்கப்பள்ளி, உயர்நிலை தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கும், அரசு விடுதிகளில் உள்ள மாணவிகளுக்கும், [illegible] இருமுறை பொங்கல், தீபாவளி, திருநாட்கள் அன்று, புத்தாடைகள் [illegible]ன்றன. இந்த உதவிகளைச் செய்வதற்கு 1970-71-ஆம் ஆண்டில் [illegible] பட்டுள்ளது. இது தவிர, பழங்குடி மாண





வர்கள் விடுதிகளில் மாணவர்களுக்குப் படுக்கைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அரிசன மாணவர்கள் விடுதிகளில் மாணவர்களுக்குப் பாய்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

அரிசன நலத் துறை நடத்தும் விடுதிகளில் தங்கும் மாணவ மாணவிகளின் உடல் நலனைப் பேணும்பொருட்டு, அவ்வப்போது மருத்துவப் பரிசோதனை செய்வதற்கும், உரிய ஆலோசனைகள் கூறுவதற்கும், வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத் திட்டத்தின்கீழ், ஏறக்குறைய 900 பள்ளிகளில் பயிலும் மாணவர்களும், 446 விடுதிகளில் தங்கும் மாணவ மாணவிகளும் உட்பட, சுமார் 1½ லட்சம் மாணவ மாணவிகள் இம் மருத்துவ பராமரிப்புத் திட்டத்தினால் பலன் பெறுகின்றனர்.

## குடியிருப்புகள்.

அரிசனங்களுக்குக் குடியிருப்பு இடம் வழங்குவதற்காக அரசு நில ஆர்ஜித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 1967-68-ஆம் ஆண்டில் 11,841 மனைகள் வழங்கப்பட்டன. 773.83 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. இத் திட்டத்திற்கு 29.68 லட்சம் ரூபாய் செலவாயிற்று. 1968-69-ஆம் ஆண்டில் 7,938 மனைகள் வழங்கப்பட்டன. 327 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. இந்த இனத்தின்கீழ் 16.95 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. 1969-70-ஆம் ஆண்டில் இந்த இனத்தின்கீழ், 32 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1970-71-ஆம் ஆண்டுக்கு இத் திட்டத்தின்கீழ் 13 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மனைகள் வழங்கப்பட்ட பின்பும் வீடுகள் கட்டுவதற்கு வசதி இல்லாத அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்காக ஆயிரம் ரூபாய் மானியம் அளித்து, சென்னை நகரில் கட்டப்படும் தீப்பிடிக்காத [illegible] வீடுகள் கட்டித்தருவதுபற்றி ஆலோசனை நடந்துவருகிறது. இதற்காக 1970-71-ஆம் ஆண்டில் 5.12 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

குடியிருப்புகளில் வசதிகள்.

நம் மாநிலத்தில் சுமார் இருபத்துநாலாயிரம் அரிசன காலனிகள் உள்ளன. இவற்றில் குடிநீர்க் கிணறுகள் இல்லாத காலனிகள் சுமார் 2,124. இணைப்புப் பாதைகள் இல்லாத காலனிகள் சுமார் 2,365. இப் பணிகள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும், அரிசன நலத் துறையின் மூலமாகவும் நிறைவேற்றப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களின் நிதியிலிருந்து ஒரு பகுதி செலவு செய்யப்படுகையில், மக்கள் ஒரு பகுதியைத் தரவேண்டுமென்பது திட்டம். வசதியில்லாத அரிசன மக்கள் இந்தச் செலவை மேற்கொள்ள முடியாதென்ற காரணத்தினால், அவர் மக்கள் பங்கை அரிசன நலத் துறையினரே ஏற்றுக்கொள்வதற்காக, சென்ற சில ஆண்டுகளாக ஒவ்வோர் ஆண்டும் 6 லட்சம் ரூபாய் அரிசன நலத் துறை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டும் அவ்வாறே ஒதுக்கப்படும். அதற்குமேலாக 1970-71-ஆம் ஆண்டில் உள்ளூர் முன்னேற்றப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் ஒரு கோடி ரூபாயில் 20 லட்சம் ரூபாய் அரிசனக் காலனிகளின் முன்னேற்றப் பணிகளுக்குச் செலவு

செய்ய ஒதுக்கப்படும். இந்த நிதி வசதியைப் பயன்படுத்தி, அடுத்த ஆண்டில் அரிசனக் காலனிகளில் குடிநீர் வசதிகளை குறிப்பிடத்தக்க அளவு பெருக்க முடியும் என்று எதிர்பார்க்கிறோம். குடிநீர்க் கிணறுகள் இல்லாத அரிசனக் காலனி ஒன்றுகூட இல்லை என்று சொல்லக்கூடிய நிலையை வெகுவிரைவிலேயே எய்தவேண்டுமென்பதுதான் அரசின் அவா. நிதி நிலையை அனுசரித்து இக் குறிக்கோளை நிறைவேற்ற மிகத் துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரிசனக் காலனிகளில் மின் இணைப்பு வசதி செய்து தருவதில் அரசு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. இதுவரை சுமார் 3,900 காலனிகளில் மின் இணைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத் திட்டங்களுக்காக 1968-69-ஆம் ஆண்டில் மட்டும் 5.67 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. 1970-71-ஆம் ஆண்டில் இத் திட்டங்களுக்காக 3.00 லட்சம் ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

மலைப்பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் ஆங்காங்கே சிதறிய குடியிருப்புகளில் வாழும் பழங்குடி மக்களுக்கு இலவச மருத்துவ வசதிகள் செய்து தருவதற்காக நான்கு சுற்றுலா மருத்துவ ஊர்திகள் இயங்குகின்றன. வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வரும் இத் திட்டம் நல்ல பலன் அளித்துள்ளது. இந்த ஆண்டு தர்மபுரி மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவ ஊர்தி அளிக்க முடிவு செய்துள்ளோம்.

### தொழிலில் ஆக்கம் பெற வாய்ப்புகள்.

வேளாண்மையில் அரிசனங்களை ஈடுபடுத்த, உழவு மாடுகளும் திருந்திய உழவுக் கருவிகளும் அரிசனங்களுக்கு வழங்கும் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த முடிவு செய்துள்ளோம். இது தவிர, பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கு கிணறு ஒன்றுக்கு 1,500 ரூபாய் மானியம் வழங்கவும் ஒரு திட்டமுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 1968-69-ஆம் ஆண்டுவரை 513 புதிய பாசனக் கிணறுகள் அரிசனக் குடியிருப்புகளிலும், 136 பாசனக் கிணறுகள் பழங்குடி மக்கள் குடியிருப்புகளிலும் தோண்டப்பட்டுள்ளன. முன்பு மேற்கொள்ளப்பட்டு நிறைவு பெறாமலிருந்த 190 கிணறுகளையும் விரைவில் முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த இனத்தில் 1969-70-ஆம் ஆண்டில் அரிசனங்களுக்காக 8 லட்சம் ரூபாயும், பழங்குடி மக்களுக்காக 2 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1970-71-ஆம் ஆண்டிலும் அவ்விதமே அரிசனங்களுக்காக 8 லட்சம் ரூபாயும், பழங்குடி மக்களுக்காக 2 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்படும்.

தொழில் துறையில் அரிசனத் தொழிலாளர்கள் முன்னேற்றம் காண வகை செய்யும் முறையிலே, கூட்டுறவுத் தொழிற் சங்கங்களைப் புதிதாக அமைக்கவும், இயங்கிவரும் சங்கங்களைப் பலப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழில் வர்த்தகத் துறை, மகளிர் நலத் துறை, தமிழ் நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம், போன்ற அமைப்புகளின் நேரடி நிர்வாகத்தில் இக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்ற போதிலும், அவற்றிற்குத் தேவையான நிதி வசதியை அரிசன நலத் துறை அளிக்கிறது. இப்போது 128 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அரிசனங்களுக்காகப் பணியாற்றி வருகின்றன. இவை தவிர உற்பத்தி-தொழிற் பயிற்சி நிலையங்கள் 27 இயங்குகின்றன.





8 தொழில் நிலையங்கள் இயங்குகின்றன. 1970-71-இல் புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தவிர, அடுத்த ஆண்டிலிருந்து அரிசன இளைஞர்களுக்கும் பழங்குடி இளைஞர்களுக்கும் பேருந்து வண்டிகளை ஓட்டுவதற்குத் தகுந்த பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக முப்பதினாயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அரிசனங்களுக்காக இயங்கி வருகின்றன. 1969-70-இல் இச் சங்கங்களை நிறுவுவதற்காக 4 லட்சம் ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச் சங்கங்கள் பால் உற்பத்தி ஆணையாளரின் நேரடிப் பார்வையில் இயங்கி வருகின்றன.

போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதற்கும் அரிசனங்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டு வருகின்றது. ஈரோட்டிலும் மதுரையிலும் இத்தகைய சங்கம் ஒன்று ஏற்கனவே இயங்கி வருகின்றது. அண்மையில் தர்மபுரியில் ஒரு சங்கம் நிறுவப்பட்டது. தஞ்சை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும் இத்தகைய சங்கங்களை நிறுவுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காட்டுப் பகுதிகளிலும் மலைப் பகுதிகளிலும் வாழும் பழங்குடி மக்கள் காட்டு வளங்களைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட உதவியாகக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. காட்டுப் பகுதிகளில் கூட்டுறவு முறையில் தொழில் நடத்துவதற்கு வகை செய்யும் முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு, அவற்றிற்குச் சிறப்பான சில சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இத்தகைய சங்கங்கள் 17 இயங்குகின்றன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரிசன மக்களைக் கொண்டு குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்வதற்கும், மூலதனம் போடுவதற்கும், வசதியில்லாத அரிசனங்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குவது பற்றியும் அரசு ஆலோசித்து வருகின்றது.

கூட்டுறவு நிதி சங்கங்களில் அரிசனங்கள் உறுப்பினராகச் சேர்ந்து கடன்கள் பெறுவதற்கு வசதி செய்யும் முறையில், உறுப்பினர் மூலதனப் பங்குத் தொகையைச் செலுத்த அரிசனங்களுக்குக் கடன் வழங்கப்படும். தென்னார்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களில் 61 சங்கங்களில் அரிசன உறுப்பினர்களுக்குப் பங்குத் தொகைக் கடன் வழங்க, 1970-71-ஆம் ஆண்டில் 26,620 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் பழுது பார்க்கும் தொழில், அச்சுத் தொழில், காலணிகள் செய்தல், உணவு விடுதிகள் நடத்துதல், சைக்கிள் கடைகள் நடத்துதல், ஆகியவற்றிலும் அரிசனங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ரூபாய் 250 முதல் 5,000 வரை கடன் வழங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. 1968-69-இல் 100 அரிசனங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் இவ்வாறு கடனாக வழங்கப்பட்டது. 1969-70-இல் இந்த இனத்தில் செலவு செய்ய ஒதுக்கப்பட்டிருந்த

2 இலட்சம் ரூபாய் தொகை பின்பு 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. 1970-71-இல் இந்த இனத்தில் செலவு செய்ய 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தவிர, தமிழ் நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகம், அரசு அலுவலர்களைத் தேர்ந்தெடுக்க நடத்தும் தேர்வுகளில், அரிசனங்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்த, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையங்களை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் நான்கு நிலையங்கள் அமைத்து அவற்றிலே 50 அரிசனங்களுக்கு ஒவ்வொரு நிலையத்திலும் பயிற்சி தர வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக 1970-71-ஆம் ஆண்டில் 2.37 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து இந்திய நிர்வாகப் பணி அமைப்பில், அரிசன, பழங்குடி, மாணவர்கள் இடம் பெறுவதற்கு, அவர்களுக்குப் போதிய பயிற்சி அளித்துத் தேர்வுக்கு அவர்களைத் தயார் செய்ய, சென்னையில் ஒரு பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. இந்த நிலையம் இதுவரை சுமார் 131 மாணவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

தொழில் பயிற்சி நிலையங்களில் சேர்ந்துள்ள அரிசன, பழங்குடி, மாணவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி நிலையங்களையொட்டி, அரிசன மாணவர்களுக்குத் தனியாக விடுதிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

### தீண்டாமை ஒழிப்புப் பிரசார நடவடிக்கைகள்.

தீண்டாமை ஒழிப்புக்காக சட்டங்கள் இயற்றப்பட்டுள்ள போதிலும், மக்கள் மனப்பான்மையிலே முன்னேற்றம் ஏற்பட்டால்தான், சமுதாய அமைப்பிலும் நியதிகளிலும் நிலையான மாறுதலும் முன்னேற்றமும் காண முடியும். இதை உணர்ந்து அரிசன நலனில் பொது மக்களுக்கு ஆர்வமும் அக்கறையும் உண்டாகும் பொருட்டு பிரச்சாரம் மேற் கொள்ளப்பட்டது. தீண்டாமை ஒழிப்பதில் சிறந்த சாதனைகளைச் செய்துள்ள கிராமங்கள் இரண்டிற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வோர் ஆண்டும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்புப் பணியில் சிறந்த தொண்டாற்றியுள்ள தொண்டர்களுக்குப் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பு முறையில் கலப்பு மணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. 1968-69-இல் இத் தங்கப் பதக்கங்கள் 48 தம்பதிகளுக்கு வழங்கப்பட்டன. 1969-70-இல் 31 தம்பதிகளுக்குப் பதக்கங்கள் வழங்கப்படும். சுத்தமும் சுகாதாரமும் நிறைந்த அரிசனக் காலனிகளுக்கு ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு கிராமத்திற்கு 300 ரூபாய் மதிப்புள்ள வானொலி அல்லது அம்பர் சர்க்கா பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு மாதமும் தீண்டாமை ஒழிப்பு தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.



அரிசனக் காலனிகளில், திருமணம், திருவிழா போன்ற நல்ல காரியங்களுக்கும், சமுதாயப் பொதுக் காரியங்களுக்கும் பயன்படக்கூடிய வகையில், ஊர் பொதுக் கூடம் கட்டும் திட்டமும் செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 10 இடங்களில் இத்தகைய பொதுக் கூடங்கள் எழுப்பும் கருத்து ஆலோசனையில் உள்ளது.

ஊரைச் சுத்தப்படுத்தும் சுகாதாரத் தொழிலாளர்கள் நலனை முன்னிட்டு, அவர்கள் கழிவுப் பொருள்களைக் கூடையில வைத்துத் தலையில் தூக்கிச் செல்வதற்குப் பதிலாக கைவண்டியில் எடுத்துச் செல்வதற்கு வசதியான முறையில், ஊராட்சிகள் மூலமாகவும், நகராட்சிகள் மூலமாகவும் கைவண்டிகள் வழங்கப்படுகின்றன. ஊர் சுத்தம் செய் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவும் ஒரு திட்டமுள்ளது.

### ஆலோசனைக் குழுக்கள்.

அரிசன முன்னேற்றப் பணியில் அரசிற்கு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் கூறுவதற்கும், திட்டங்களைத் திறமையாக இயக்குவதில் பொது மக்கள் ஆதரவைத் திரட்டும் வகையிலும், மாநில அரிசன நலக் குழு ஒன்றும், தமிழ் நாடு பழங்குடி மக்கள் ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் மாவட்ட அரிசன நலக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அரசுப் பணிமனைகளில் அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் தரும் வழிவகைகளை ஆராயும் பொருட்டு, உயர்மட்ட ஆலோசனைக் குழு ஒன்று முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அரிசன, பழங்குடி மக்கள், பெருமளவில் அரசுப் பதவிகளில் இடம் பெறுவதற்கு வாய்ப்பு வசதிகளைப் பெருக்கித் தருவதில் இக் குழு ஆழ்ந்த அக்கறை எடுத்துக் கொள்ளும்.

அரசு அலுவலர்களில் அரிசனங்களுக்கும் பழங்குடி வகுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்குத் தகுதி பெற்ற அலுவலர் போதிய அளவில் ஓராண்டில் கிடைக்காவிட்டால், அடுத்த இரண்டு ஆண்டுகளில் அலுவலர் தேர்வு நடக்கும்பொழுது, முன்பு நிறைவு செய்யப்படாமல் இருந்த இடங்களுக்கும் சேர்த்து, அலுவலர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அரசு அண்மையில் உத்தரவிட்டுள்ளது.

## 11

### மிகப் பிற்பட்ட வகுப்பினர் நலம்.

பின் தங்கிய வகுப்பினரின் தொகை, தோராயமாக, இம் மாநில மக்கள் தொகையில் 65 விழுக்காடு ஆகும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நலனையும் பின் தங்கிய வகுப்பினர் நலனையும் ஒரே துறை இதுவரை கவனித்து வந்தது. பின் தங்கிய வகுப்பினருக்கென தனித் துறையை இந்த நிதி ஆண்டின் துவக்கத்தில் இவ்வரசு நிறுவியது. இந்தப் புதிய துறை எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும், வருகின்ற ஆண்டில் எடுக்க முற்பட்டுள்ள நடவடிக்கைகளையும், பற்றிய விவரங்களை இப்பேரவையின் முன் வைக்க விழைகின்றேன்.

பின் தங்கிய வகுப்பினர் நலத்திற்கும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் பட்டோரின் நலத்திற்கும் வகுக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்ட தொகை பின் வருமாறு :—

#### கல்வி.

##### படிப்பு உதவிப் பணம்.

பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதல் முதலில் படிப்பு உதவிப்பணம் வழங்கும் திட்டம் 1948-49-ஆம் ஆண்டு, ஒரு இலட்சம் ரூபாய் அளவில் துவக்கப்பட்டது. பின்னர் 1949-50-ஆம் ஆண்டு இத் தொகை ஐந்து இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1960-61-ஆம் ஆண்டு மெட்ரிக் படிப்பிற்கு மேல், உயர் கல்விக்காக வழங்கப்படும் உதவிப் பணம் வழங்கும் முறை திருத்தி அமைக்கப்பட்டு, குறைந்தது 50 விழுக்காடு மதிப்பு எண் பெற்ற பின்தங்கிய மாணவர்களுக்கும், 45 விழுக்காடு மதிப்பு எண் பெற்ற மிகப் பின் தங்கிய மாணவர்களுக்கும், உதவிப் பணம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆயினும் 1960-61-ஆம் ஆண்டிற்குப்பின் பணம் பற்றாக் குறையினால் இவ்வாணையை முழுமையாகச் செயற்படுத்த முடியவில்லை.

பெருமளவு மாணவர்கள் பயன் பெற வேண்டும் என்ற நோக்குடன் குறைந்த அளவு 40 விழுக்காடு மதிப்பு எண் பெற்று, ஆண்டு வருமானம் ரூ. 3,000 பெறும் குடும்பத்திலிருந்துவரும் பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் அனைவருக்கும் படிப்பு உதவிப்பணம் வழங்க இவ்வரசு இவ்வாண்டு ஆணை பிறப்பித்துள்ளது. இதுவரையில் சில பாடப்பிரிவுகளில் உதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டு இருந்தது. ஆனால், இந்த ஆண்டு பட்ட மேற்படிப்பு, சட்டம், பட்டம் பெற்ற ஆசிரியர் பயிற்சி, தொழில் நுணுக்கத் துறைக் கல்வி, தமிழ்ப் புலவர், போன்ற பிரிவுகளில் படிக்கும் தகுதி பெற்ற எல்லாப் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும் உதவிப்பணம் வழங்க வகை செய்யும் முறையில் வரையறையை நீக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலம் பட்டப்படிப்பிற்குப் பிறகு, மேல் படிப்பு படிப்பதற்கு ஏராளமான பின் தங்கிய வகுப்பு மாணவர்கள் முன் வருவார்கள் என எதிர்பார்க்கலாம். இந்த மாறுதலால் ஏற்பட்ட சிறப்பான முன்னேற்றத்தை அட்டவணை 'அ' வில் காணலாம்.



#### பள்ளிக் கட்டணச் சலுகை.

1948-49-ஆம் ஆண்டு, பிற்பட்ட வகுப்பினருக்குப் படிப்பு உதவிப் பணம் வழங்குவதற்கு முன்பே, தமிழ் நாடு கல்வித் துறையினரின் விதிப்படி, குறிப் பிட்ட வருவாய்க்குட்பட்ட பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு அரைச் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டது. 1957-58 முதல், அரிசனங்களைப்போல், மிகப் பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்தவர்களுக்கும் முழுச்சம்பளச் சலுகை அளிக்கப்பட்டது. ஆண்டுக்கு ரூ. 1,500-க்கு குறைந்த வருமானம் உடைய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இச்சலுகைக்கு உரியவர்கள்.

##### படிப்பு உதவிப் பண விதம்.

பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை வெளியிட்டுள்ள விதிகளின்படி, படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரைச் சம்பளச் சலுகை, புத்தகச் செலவு, சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம், ஆகியவை படிப்பு உதவித் தொகையில் அடங்கும். உணவு, உறைவிட செலவு ஆகியவைகளுக்கான பொருள் உதவித் தொகை, அங்கீகரிக்கப்பட்ட இல்லங்களில் தங்கியுள்ள மாண வர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த உதவி சென்னை நகர விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 40 வீதமும், இதர விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 35 வீதமும் வழங்கப்படுகிறது.

ஆனால் மருத்துவர், வண்ணார், பர்வதராஜகுலம், பட்டணவன், செம்படவர் ஆகியோருக்கு, உணவு, உறை விடச் செலவுகள் அரிசனங்களுக்கு வழங்கப்படு வது போல், வழங்கப்படுகிறது. இது சென்னையில் மாதமொன்றுக்கு ரூ. 60 ஆகவும், பிற பகுதிகளில் ரூ. 50 ஆகவும் வழங்கப்படுகிறது. இதே விதப்படி குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் வழங்கப்படு கிறது. முதல் வகுப்பு முதற்கொண்டு எட்டாவது வகுப்பு வரை படிக்கும் பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்கு, படிப்பு உதவிப்பணம் வழங்கப்படுவதில்லை. ஆனால் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர் களுக்கு அரிசனங்களைப்போல் கீழ் வகுப்புகளில் உதவிப்பணம் வழங்கப்படு கிறது. ஒன்பதாவது வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை படிக்கும், பிற்பட்ட, மிகப்பிற்பட்ட மாணவர்களுக்குச் சிறப்புக் கட்டணத்திற்கும் புத்த கம் வாங்கவும், படிப்பு உதவிப்பணம் வழங்கப்படுகிறது. 1970-71-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 225 லட்சம் பிற்பட்ட வகுப்பினருக்கும், ரூ. 20.20 லட்சம் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் வழங்கப்பட்ட படிப்பு உதவிப்பணம், பெற்றவர் களின் எண்ணிக்கை, அவற்றிற்கான தொகை, ஆகியவை கீழே கொடுக்கப்பட் டுள்ளன :—

| ஆண்டு. | மெட்ரிக்குக்கு முன். | | மெட்ரிக்குக்குப் பின். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| 1960-61 .. | 2,176 | 0.84 | 595 | 2.96 | 2,771 | 3.70 |
| 1961-62 .. | 4,988 | 1.45 | 715 | 3.56 | 5,703 | 5.01 |
| 1962-63 .. | 6,664 | 2.25 | 829 | 4.17 | 7,493 | 6.42 |
| 1963-64 .. | 5,640 | 2.33 | 823 | 3.84 | 6,463 | 6.27 |

| ஆண்டு. | மெட்ரிக்குக்கு முன். எண்ணிக்கை. | மெட்ரிக்குக்கு முன். தொகை. | மெட்ரிக்குக்குப் பின். எண்ணிக்கை. | மெட்ரிக்குக்குப் பின். தொகை. | மொத்தம். எண்ணிக்கை. | மொத்தம். தொகை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| 1964-65 .. | 15,100 | 6.45 | 1,300 | 0.19 | 16,400 | 6.64 |
| 1965-66 .. | 20,666 | 5.29 | 1,394 | 6.38 | 22,060 | 11.67 |
| 1966-67 .. | 24,745 | 6.10 | 1,619 | 7.61 | 26,364 | 13.71 |
| 1967-68 .. | 27,967 | 6.33 | 1,941 | 8.17 | 29,908 | 14.50 |
| 1968-69 .. | 32,347 | 6.94 | 2,122 | 9.77 | 34,469 | 16.71 |
| 1969-70 | 41,196 | 8.84 | 2,698 | 11.73 | 43,894 | 20.57 |

(சனவரி வரை).

ஏனைய பின்தங்கிய வகுப்பினர்.

| ஆண்டு. | மெட்ரிக்குக்கு முன். எண்ணிக்கை. | மெட்ரிக்குக்கு முன். தொகை. | மெட்ரிக்குக்குப் பின். எண்ணிக்கை. | மெட்ரிக்குக்குப் பின். தொகை. | மொத்தம். எண்ணிக்கை. | மொத்தம். தொகை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1960-61 .. | 10,621 | 4.03 | 9,235 | 36.86 | 19,856 | 40.89 |
| 1961-62 .. | 14,874 | 5.22 | 11,167 | 42.19 | 26,041 | 47.41 |
| 1962-63 .. | 18,954 | 6.08 | 13,612 | 49.05 | 31,566 | 55.13 |
| 1963-64 .. | 17,200 | 4.72 | 14,600 | 58.11 | 31,800 | 62.83 |
| 1964-65 .. | 14,300 | 4.51 | 17,100 | 65.59 | 31,400 | 70.10 |
| 1965-66 .. | 12,944 | 4.57 | 18,431 | 68.47 | 31,375 | 73.04 |
| 1966-67 .. | 10,306 | 3.66 | 21,099 | 79.24 | 31,405 | 82.90 |
| 1967-68 .. | 10,075 | 3.70 | 25,260 | 88.08 | 35,335 | 91.78 |
| 1968-69 .. | 20,375 | 6.54 | 33,162 | 1,06.53 | 53,537 | 1,13.07 |
| 1969-70 .. | 41,682 | 14.37 | 46,437 | 1,39.44 | 88,119 | 1,53.81 |

(சனவரி வரை).





**இந்திய அரசின் படிப்பு உதவிப் பணம்.**

மாநில நிதிகளிலிருந்து வழங்கப்படும் படிப்பு உதவித் தொகையைத் தவிர, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள வகுப்பினைச் சேர்ந்த (குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் உட்பட) மாணவர்களுக்கு, இந்திய அரசுத் திட்டத்தின்கீழ், மேற்படிப்புக்காக உதவித் தொகை வழங்கும் பொருட்டு, ஒவ்வோர் ஆண்டும் இந்திய அரசு ரூ. 14.61 இலட்சம் ஒதுக்கி வந்தது. ஆனால் 1969-70-ஆம் ஆண்டு முதல், மேற்குறிப்பிட்ட உதவித் தொகை இந்திய அரசால் வழங்கப்படவில்லை. இத்தொகையை இவ்வரசு தனது நிதியிலிருந்து ஒதுக்கியது. 1970-71-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 14.94 இலட்சம் இத்திட்டத்திற்காக மாநில அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்ற பத்து ஆண்டுகளில் படிப்பு உதவிப் பணம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட படிப்பு உதவித் தொகை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | உதவிப் பணம் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள். | வழங்கப்பட்ட உதவித் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1960-61 .. .. | 1,679 | 14,84,130 |
| 1961-62 .. .. | 1,676 | 14,94,124 |
| 1962-63 .. .. | 1,635 | 14,84,172 |
| 1963-64 .. .. | 1,731 | 14,84,072 |
| 1964-65 .. .. | 1,895 | 14,83,914 |
| 1965-66 .. .. | 2,260 | 14,83,919 |
| 1966-67 .. .. | 2,294 | 14,81,813 |
| 1967-68 .. .. | 2,452 | 14,83,100 |
| 1968-69 .. .. | 2,695 | 14,82,718 |
| 1969-70 .. .. | 2,543 | 14,78,767 |

(சனவரி வரை).

**உரிய காலத்தில் உதவிப் பணம் வழங்குதல்.**

முந்தைய ஆண்டுகளில் உரிய காலத்தில் படிப்பு உதவிப் பணம் வழங்காமை குறித்துப் பலர் குறை தெரிவித்து இருந்தனர். இதை நிவர்த்தி செய்ய, இவ்வாண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, முந்தைய ஆண்டுகளில் இருந்த தாமதம் குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டுள்ளது.

[illegible] பின்தங்கிய வகுப்பினர் நலத் துறையினரால் வழங்கப்பட்ட படிப்பு உதவித் தொகை, செலவழிக்கப்பட்ட தொகை, இவைகளைக் குறித்து அரசுத் துறை வெளியாரால் ஆய்வுகள் நடத்தப்பட்டு அவ்வப்போது சரிபார்த்தவைகளுக்கான அறிக்கைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளால் வருகிற ஆண்டில் படிப்பு உதவிப் பணம் உரிய காலத்தில் வழங்கப்படும் என எதிர் பார்க்கிறோம்.

**உணவு மானியம்.**

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி வகுப்பு, மற்றைய பின்தங்கிய வகுப்பு மாணவர்கள், தனியார் நிர்வகிக்கும் மாணவர் இல்லங்களில் தங்கிப் படித்தால், அரசின் நிதி வசதிக்கேற்பவும், ஒவ்வோரில்லத்திலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பவும், மானியத் தொகை ரொக்கமாக வழங்கப்படுகிறது. இந்த மானியம் மாணவர் ஒருவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் அளிக்கப்படுகிறது. இத்தகைய உணவு மானியங்கள் வழங்குவதற்காக, 1970-71-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ரூ. 0.58 இலட்சம் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கும், ரூ. 4.63 லட்சம் பிற்பட்ட வகுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மாணவர் இல்லங்கள்.**

வெகு தொலைவிலுள்ள கிராமங்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் வந்து, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட, மற்றும் ஏனைய பின்தங்கிய வகுப்பு மாணவ மாணவிகளுக்கு, மாணவர் இல்லங்கள் அரசினரால் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பினருக்காகவும் நடத்தப்படும் மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை, அவற்றில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| | இல்லங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் .. | 29 | 8 | 37 |
| ஏனைய பின்தங்கிய வகுப்பினர் .. .. .. | 9 | 2 | 11 |

| | மாணவர்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | ஆண். | பெண். | மொத்தம். |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் .. | 2,809 | 810 | 3,619 |
| ஏனைய பின்தங்கிய வகுப்பினர் .. .. .. | 754 | 225 | 979 |

தேவைப்படுமிடங்களிலெல்லாம் புதிய இல்லங்கள் ஆண்டுதோறும் தொடங்கப்படுகின்றன. வருகிற ஆண்டு பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கென, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த கிராமியம், வடக்கு சமுத்திரம், மேட்டுப்பாளையம், குன்னக்குடி, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறந்தாங்கி, பேராவூரணி, முகவை மாவட்டத்தைச் சேர்ந்த வண்ட மாணிக்கம், பாலகோரி, தர்மபுரி மாவட்டத் தின்தர் ஆகிய 9 இடங்களில் மாணவர் இல்லங்களைத் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதேபோல், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு மேல மாயனூர், மேலக்கோட்டை [illegible] இடங்களில் புதிய மாணவரில்லங்கள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. [illegible] தவிர, மதுரை மாவட்டத்தில் உள்ள 3 மாணவரில்லங்களில்



மாணவர் எண்ணிக்கையை உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள உணவு இல்லங்களைப் பராமரிக்கவும், இனித் தொடங்கவிருக்கும் மாணவர் இல்லங்களுக்காகவும், ரூ. 10.89 இலட்சம் 1970-71-ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பள்ளிகள்.**

பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்களுக்குத் தனியாகப் பள்ளிகள் ஏதும் நடத்தப்படவில்லை. குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்களுக்காக 270 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. கள்ளர் பள்ளிகளும், குறவர் பள்ளிகளும் உட்பட, இப்பள்ளிகளில் 30,149 மாணவ, மாணவிகள் பயில்கின்றனர்.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மக்கள் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கும் பொருட்டு, 1970-71-ஆம் ஆண்டிலும் ஏழு வீடுகள் கட்ட, திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.35 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கல்லூரிக் கட்டிட மானியம்.**

மதுரை மாவட்டத்தில் பிற்பட்ட மக்களின் ஒரு பிரிவினராகிய பிரமலைக் கள்ளர் வகுப்பினர் பெருமளவில் வாழ்கின்றனர். இவர்கள் வாழும் பகுதிகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகும். இந்தப் பகுதிகளில் ஒரு கல்லூரி இல்லாத குறையை உணர்ந்த இம்மக்கள் தங்கள் விடாமுயற்சியினால் பணம் [illegible] 1969-ஆம் ஆண்டில் ஒரு கல்லூரியை உசிலம்பட்டியில் நிறுவினர். இந்தக் கல்லூரிக்குப் போதுமான கட்டிடங்கள் இல்லாத குறை உணரப்பட்டு வந்தது. பிற்பட்ட மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, பிற்பட்ட மக்களுக்காகத் துவக்கப்பட்ட கல்லூரி வெற்றிகரமாகச் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தில், இவ்வாண்டு இந்தக் கல்லூரிக்கு ரூ. 2,00 இலட்சம் சிறப்பு மானியமாக வழங்கியுள்ளது.

**பள்ளி இறுதித் தேர்வு.**

சென்ற 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடந்த பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில் 450 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுத் தேர்ச்சி பெற்ற பின்தங்கிய மாணவர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :—

| மதிப்பு எண் விவரம். | மொத்த மாணவர்கள். | பின்தங்கிய வகுப்பினர். | முன்னேறிய வகுப்பினர். |
|---|---|---|---|
| 551—560 | 1 | .. | 1 |
| 541—550 | 3 | 1 | 2 |
| 531—540 | 10 | 1 | 9 |
| 521—530 | 35 | 6 | 29 |

| மதிப்பு எண் விகிதம். | மொத்த மாணவர்கள். | பின்தங்கிய வகுப்பினர். | முன்னேறிய வகுப்பினர். |
|---|---|---|---|
| 511—520 | 82 | 16 | 66 |
| 501—510 | 127 | 36 | 91 |
| 491—500 | 211 | 53 | 158 |
| 481—490 | 346 | 100 | 246 |
| 471—480 | 495 | 139 | 356 |
| 461—470 | 677 | 213 | 464 |
| 451—460 | 882 | 283 | 599 |
| 450 | 105 | 28 | 77 |

**நண்பகல் உணவு.**

பள்ளிச் சிறுவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கும் திட்டம் வெற்றிகரமான வகையில் செயல்படுத்தப்பட்டு, 1970-71- இலும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வரும். 1969-70-ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீட்டில் ரூ. 8.44 லட்சமும், 1970-71-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 8.44 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**சீருடை வழங்கல்.**

அரசினர் விடுதிகளில் தங்கிப் பயிலும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி வகுப்பு மாணவ மாணவிகளுக்கு ஆண்டு தோறும், இரண்டு சீருடைகள் வழங்கப்படுகின்றன. இத்துடன் நடப்பு ஆண்டில் புதிய முறை ஏற்பட்டபின், மதுரை மாவட்டத்தில் உள்ள எல்லா கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் முதல் இரண்டு வகுப்பு மாணவ மாணவிகளுக்கும் சேர்த்துச் சீருடை வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டிலும் இத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**பொருளாதாரம்—தொழில்.**

நாவிதர், வண்ணார் ஆகியோருக்குக் கருவிகள் வாங்க உதவித்தொகை வழங்கப்படுகிறது. மாவட்டந்தோறும் 60 நாவிதர்கள் ரூபாய் 75 வீதமும், 60 வண்ணார்கள் ரூபாய் 110 வீதமும் இத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் உதவி பெறுகிறார்கள். இத் திட்டம் சென்னை நகரில் நடத்தப்படவில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில், பாலோடு, பூதபாண்டி ஆகிய இடங்களில், பிரம்புப் பயிற்சித் தொழிற்சாலை பின்தங்கிய வகுப்பினரால் நடத்தப்பட்டு வருகிறது.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் பொறியியல் பட்டறை நடத்தப்படுகிறது.





**தொழிற் கல்வி.**

1968-69-ஆம் ஆண்டுகளில் பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் தொழிற் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட விவரம் பின் வருமாறு:—

| பிரிவும் ஆண்டும். | மொத்த எண்ணிக்கை. | பின்தங்கிய வகுப்பினரிடமிருந்து வரப்பெற்ற தகுதியுள்ள விண்ணப்பங்கள். | அனுமதிக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பினர். | | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | | | பொதுப் பங்கிலிருந்து. | ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து. | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| மருத்துவம்— | | | | | |
| 1968 .. | 1,125 | 3,982 | 222 | 276 | 498 |
| 1969 .. | 1,125 | 3,547 | 276 | 276 | 552 |
| பொறியியல்— | | | | | |
| 1968 .. | 1,191 | 529 | 195 | 298 | 493 |
| 1969 .. | 1,056 | 48[illegible] | 247 | 179 | 426 |
| சட்டம்— | | | | | |
| 1968 .. | .. | 121 | 121 | .. | 121 |
| 1969 .. | .. | 112 | 112 | .. | 121 |
| வேளாண்மை— | | | | | |
| 1968 .. | 242 | 1,090 | 16 | 55 | 71 |
| கால்நடை மருத்துவம்— | | | | | |
| 1968 .. | 136 | 433 | 35 | 30 | 65 |
| 1969 .. | 120 | 315 | 38 | 30 | 68 |

தமிழக மக்களின் எண்ணிக்கையில் மிகப் பெரும்பான்மையினரான பிற்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கையுடன், மேற் கூறியுள்ள முறையில் தேர்வு பெற்ற பின்தங்கிய வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில், நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்பதை உணரலாம். பின்தங்கிய வகுப்பினரின் கல்வி முன்னேற்றம் மேலும் உயர உருவான நடவடிக்கைகள் தேவை என்பதை மேற்கண்ட புள்ளி விவரங்கள் வலியுறுத்துகின்றன.

**வேளாண்மை.**

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு, நடப்பு ஆண்டில் 81 இணை மாடுகள் வாங்க ரூ. 33,400 ஒதுக்கப்பட்டது. விவசாய வேலைகள் செய்ய மாடுகள் வாங்க ரூ. 33,400 ஒதுக்கப்பட்டது. விவசாய வேலைகள் செய்ய மாடுகள் வாங்கவும் ரூ. 2,58 லட்சம், 1970-71-ஆம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை "அ"

சென்ற ஆண்டுகளை எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டு இவ்வாண்டு முதல் அது தளர்த்தப்பட்ட சில பிரிவுகளில் வழங்கப்பட்ட படிப்பு உதவித் தொகைகளின் விவரம் :—

| படிப்பு விவரம். | 1966–67. | | 1968–69. | | 1969–70. | |
|---|---|---|---|---|---|---|
| | எண். | தொகை. | எண். | தொகை. | எண். | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | ரூ. | | ரூ. | | ரூ. |
| 1 பட்டமேற்படிப்பு. | 175 | 1,00,806 | 160 | 1,03,147 | 698 | 3,86,519 |
| 2 காமர்சியல் .. | 30 | 1,556 | 30 | 1,566 | 130 | 4,694 |
| 3 பி. டெக்னாலஜி. | 8 | 5,336 | 27 | 21,572 | 49 | 37,384 |
| 4 புலவர் .. .. | 28 | 7,025 | 57 | 15,293 | 288 | 56,980 |
| 5 சட்டம் .. .. | 64 | 31,276 | 89 | 44,016 | 119 | 59,844 |
| 6 கூட்டுறவு மேற்பார்வையாளர். | 14 | 4,685 | 14 | 3,070 | 277 | 46,850 |
| 7 பி. டி. பார்மஸி. | 11 | 3,681 | 7 | 2,448 | 47 | 24,987 |
| 8 பி. டி. எஸ். .. | 10 | 5,442 | 30 | 14,613 | 42 | 21,226 |
| 9 பி. டி. .. .. | 50 | 20,080 | 56 | 19,750 | 501 | 1,68,372 |
| 10 இண்டஸ்ட்ரியல்/ டெக்னிக்கல். | 1985 | 7,93,055 | 1791 | 6,29,688 | 2151 | 7,47,977 |





## அட்டவணை "ஆ"

### 1970-71-ஆம் ஆண்டிற்குப் பின்தங்கிய வகுப்பினர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகையும் அதன் விவரங்களும்

(ரூபாய் லட்சத்தில்.)

**மொத்த ஒதுக்கீடு—ரூ. 3,34·05**

நிர்வாகம்—ரூ. 3·09 திட்டங்கள்—ரூ. 3,30·96

| | ஐந்தாண்டுத் திட்டத்தில் சேராதவை. ரூ. 1,65·00 | | | ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ந்தவை. ரூ. 1,65·96 | |
|---|---|---|---|---|---|
| | பின்தங்கிய வகுப்பினர் | குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டோர். | பொருளாதாரத்தில் பின்தங்கியவர். | குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டோர் (100 சதவிகித மத்திய மானியம்). | பிற்பட்ட வகுப்பினர் (50 சதவிகித மத்திய மானியம்). |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| படிப்பு உதவிப்பணம் .. | 85·00 | 11·41 | 14·84 | 5·76 | 1,40·00 |
| பள்ளிகள் .. .. | .. | 23·74 | .. | 0·26 | .. |
| நன்கொடை உதவி .. | .. | 7·31 | .. | 1·13 | .. |
| புத்தகங்கள், சீருடைகள். | .. | 0·20 | .. | 2·05 | .. |
| உணவு மானியம் .. | 4·68 | 0·58 | .. | .. | .. |
| மாணவர் இல்லங்கள். | 1·89 | 6·81 | .. | 0·77 | 1·62 |
| பல்கலை கழகங்களுக்கு ஈட்டுத் தொகை. | 1·90 | .. | .. | .. | .. |
| ஆசிரியர் வீட்டு வசதி. | .. | .. | .. | 0·35 | .. |
| மாணவர் இல்லங்களைக் கட்டுதல். | .. | .. | .. | 2·40 | 1·00 |
| வயது வந்தோர் கல்வி நிலையங்கள். | .. | 1·45 | .. | 0·64 | .. |
| வேளாண்மை .. | 0·38 | .. | .. | 2·58 | .. |
| கைத்தொழில் .. | 0·28 | .. | .. | 2·14 | .. |
| தொழிற்கருவிகள் .. | .. | .. | .. | .. | 1·43 |
| வீட்டு வசதி .. | .. | .. | .. | 3·83 | .. |
| குடிநீர் வசதி . | .. | 0·01 | .. | .. | .. |
| அதில் நகர் குடியிருப்பு. | .. | 1·49 | .. | .. | .. |
| மொத்தம் .. | 94·13 | 56·03 | 14·84 | 21·91 | 1,44·05 |

செவ்வாய்க்கிழமை, 1970 மார்ச் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத்தலைவர் **புலவர் நா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) **வினாக்கள்—விடைகள்**

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

*Udayarpalayam Police firing*

* 409 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to place on the Table of the House a copy of the report of the Enquiry Commission on the Udayarpalayam Police firing?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்த நிகழ்ச்சியின் விளைவான சில வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு நடவடிக்கை தொடரப்பட்டுவருவதால், விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையை இம்மன்றத்தின் முன் வைப்பது தள்ளிப் போடப்படுகிறது.

**திரு. ஆர். கருப்பையா:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் எத்தனை பேர்? அப்படி துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு அரசாங்கத்தால் ஏதேனும நட்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு அரசாங்க உதவித் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. தங்காரஜ் என்பவருடைய குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாயும், சுந்தரமூர்த்தி என்பவருடைய குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாயும், வெள்ளையப்படையாச்சி என்பவருடைய குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாயும், வடிவேலு என்பவருடைய குடும்பத்திற்கு 500 ரூபாயும் அரசு 19—11—1969 அன்று அளித்திருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** தலைவர் அவர்களே, போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு முன்னாலே அவர்கள் ஊர்வலம் வந்தார்கள் என்று சொல்லப்படுகிறதே அவர்கள் எந்தக் கோரிக்கைக்காக வந்தார்கள்? அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, உடையார்பாளையம் தாலுக்காவை ஜெயங்கொண்டம், அரியலூர் தாலுக்காக்களாகப் பிரிப்பதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். அரசு திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரையும், வருவாய்த் துறை வாரியத்தையும் கலந்து, ஜெயங்கொண்டம் தாலுக்கா என்பதைத் திரும்பவும் பழையபடியே உடையார்பாளையம் தாலுக்கா என்று மாற்றி 6—12—1968 அன்று உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த விசாரணை அங்கு நடைபெற்றபோது, இது சம்பந்தமாக அதிகாரி யாராவது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டாரா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. ராமய்யன் என்ற டெப்டி போலீஸ் சூப்பிரெண்ட், வழக்கு விசாரணை நல்ல முறையில் நடைபெறவேண்டுமென்பதற்காகத் துப்பாக்கிச்சூடு நடந்தவுடன் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டார்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சர்க்கார் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தினால்தானே இந்தக் கிளர்ச்சி நடந்தது? இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் எந்தெந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள்? அல்லது அவர்கள் எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வாக்குறுதியை அரசு நிறைவேற்றும் என்று முன்கூட்டியே தெரிந்துதான் கிளர்ச்சி நடைபெற்றது. உடனே கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Chief Minister whether the finding of the Enquiry Commission was that the firing was justified?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வழக்குமன்றத்திலே இருக்கின்ற காரணத்தால் அதை இப்போது இம்மன்றத்தின் முன் வைப்பதற்கில்லை.

## ஆபாசச் சுவரொட்டிகள்

*410 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் ஒட்டப்பட்டுள்ள ஆபாசச் சுவரொட்டிகளை அகற்றுவது போல் தமிழகத்தில் ஏனைய ஊர்களிலும் இந்த முயற்சி மேற்கொள்ளும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம். தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

திருகு கொடவாசல் கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, தேர்தல் நேரங்களில் தலைவர்களைப்பற்றி ஆபாசமாக சுவரொட்டிகள் ஒட்டப்படுகிறதே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்கள்மீது பொதுமக்களே ஜனநாயக ரீதியில் நடவடிக்கை எடுத்துவிடுகிறார்கள்.

THIRU T. MARTIN : Mr. Speaker, sometimes the posters which are pasted on the walls do not represent the actual scenes that we see in the picture for which advertisement is sought





to be made. May I know from the Hon'ble Minister whether any such instances have been brought to the notice of the Hon. Chief Minister and if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சுவர்களிலே ஒட்டப்படுகின்ற சுவரொட்டிக் காட்சிக்கும், படத்திலே வருகின்ற காட்சிக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கலாம். படம் தணிக்கை செய்யப்படுவதற்கு முன்பே சுவரொட்டிகளை அச்சடித்து ஒட்டிவிடுகிறார்கள். படம் தணிக்கை செய்யப்படும்போது அந்தக் காட்சி வெட்டப்பட்டிருக்கலாம். இதுகுறித்து அரசாங்கத்திற்கு எந்தப் புகாரும் வரவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு இருக்கிற பண்பாடு இந்தப் பண்பாடு ஒன்றுதான். இந்தப் பண்பாட்டைச் சீர்குலைக்கும் வகையில் விளம்பரங்களும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றனவே, அவற்றைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள், ஆபாசங்கள் என்று கருதப்படுவை, அருவருக்கத்தக்கவை இவைகளெல்லாம் நடைபெறாவண்ணம் அரசு கவனித்து வருகிறது. அதற்கு நல்ல முடிவு காட்ட பொதுமக்களின் ஒத்துழைப்பும் தேவை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, சுவர்களிலே, மற்றவர்களைப் புண்படுத்தக்கூடிய வாசகங்கள் எழுதுகிறார்கள். அது மிகவும் மனச் சங்கடத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்கிறது. அப்படி எழுதுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எந்த நிலையில், யாரை, எப்படிப் புண்படுத்துகிறது என்பவை எல்லாம் ஆராய்வதற்கு உள்ள விஷயம்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, திரைப்படங்களில் எது ஆபாசம் என்று ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருந்ததே, அந்தக் குழு ஏதேனும் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறதா? அந்த அறிக்கை வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்கள் படத் தயாரிப்பாளர்களுடன் பேசி வருகிறார்கள். அது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு எந்த அறிக்கையும் அண்மையில் வரவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஆபாச சுவரொட்டி என்று அகற்றப்படுவையான அதே படங்கள், ஆங்கில, தமிழ்ப் படங்களிலும், செய்தித் தாட்களில் சினிமா விளம்பரமாகவும் வருகின்றனவே, அதைத் தடுக்க அரசாங்கத்தினர் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவை சினிமா விளம்பரங்களாகவும், பத்திரிகைகளிலும் வருகின்றன. சுவரொட்டி வருவதை ஆபாசம் என்று சொல்லப்படும்போது அதுவே சினிமா விளம்பரமாக பத்திரிகைகளில் வருகின்றது. ஆபாசம் என்று சொல்லப்படுபவைகளை

மூடுருவிச்சென்று பார்க்கப்படும்போது 'எது ஆபாசம்?' 'இது ஆபாசம் தானா?' என்ற கேள்வி எழுகிறது. எது ஆபாசம் என்பது அவரவர்கள் வியாக்கியானம் செய்வதில்தான் இருக்கிறது. ஆபாசம் என்பது ஒவ்வொருவருடைய மனப்பக்குவத்தைப் பொறுத்திருக்கிறது.

**ஹாஜி ம. மு. பீர்முகம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து நெரிசல் உள்ள இடங்களில் ஆபாசமான பாலுணர்ச்சியை ஊட்டக் கூடிய விளம்பரங்கள் இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் நேரிடுகின்றன என்ற குறைபாடு இருக்கிறதே, அதை அரசு அறியுமா? போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள இடங்களில் இதுபோன்ற விளம்பரங்கள் வைப்பதை அரசு தடை செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவைகளை தடை செய்ய வேண்டியது முக்கியம். அதுபற்றிக் காவல் துறையினருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. கூடுமானவரையில் கனம் உறுப்பினர் அப்பேர்பட்ட இடங்களுக்கு போவதைத் தவிர்ப்பது நல்லது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** தலைவர் அவர்களே, அமெரிக்கா போன்ற வெளிநாட்டு ஆபாச நாகரீகம் நிறைந்த படங்கள், தமிழ் நாட்டு பண்பாட்டிற்கு விரோதமாக இருப்பவையான படங்கள் சுவர்களில் ஒட்டப் படுகிறதே, அதைத் தடை செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்பே பதில் சொன்னேன். ஆபாசம் என்பதை அவரவர்களுடைய மனப் பக்குவத்தின் அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. நம்மால் ஆபாசம் என்று கூறப்படுவை, நீதிமன்றத்தின் துணைக்கொண்டு, ஆபாச மற்றவை என்று நிலைநாட்டினாலும் ஆச்சிரியப்படுவதற்கில்லை. ஒருவருக்கு ஆபாசம் என்று தோன்றுபவை இன்னொருவருக்கு ஆபாச மற்றதாகத் தோன்றுகிறது. அவரவர்களின் மனப்பக்குவத்தைக் கொண்டுதான் ஆபாசம், ஆபாசமில்லை என்று சொல்கிறார்கள். அதற்காகத்தான் படத் தணிக்கை செய்யப் பட்டு வருகிறது. இதை முழுமையாகச் செய்ய நல்ல எண்ணத்தின் அடிப் படையில் அமைந்த பொது மக்களின் ஒத்துழைப்பு இந்த அரசுக்குத் தேவை.

## சித்த மருத்துவ முறை

* 411 வினா.—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும் சித்த வைத்தியப் பிரிவு ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(இ) இதுவரை எந்தெந்த மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன?

(உ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரில் எப்போது ஏற்படுத்தப் படும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) உண்டு.



(இ) & (உ) 1967-ஆம் ஆண்டில் முதன் முதலாக திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஒன்று தொடங்கப் பட்டது. 1969-70-ஆம் ஆண்டில் மேலும் வேலூர், கடலூர், சேலம், கோயம் புத்தூர், இராமநாதபுரம் ஆகிய ஐந்து ஊர்களிலுள்ள மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்க அண்மையில் ஆணை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

■ 412 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியாகச் சித்த முறையில் பயிற்சி பெற்றோருக்கு அரசாங்கம் தேர்வு நடத்திப் பதிவு வழங்குவதை எவ்வளவு காலத்திற்கு நீட்டித்துள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 1—9—1967-ல் இருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு நீட்டித்துள்ளது.

* 413 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசாங்கப் பதிவு பெற்றுச் சித்த முறையைக் கற்றுக்கொடுக்கும் தனியார் கல்வி நிலையங்கள் எத்தனை எங்கெங்கே இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அரசு பதிவு பெற்றுச் சித்த முறையைக் கற்றுக்கொடுக்கும் தனியார் கல்வி நிலையங்கள் தற்சமயம் தமிழகத்தில் எங்கும் இல்லை.

* 414 வினா—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாளையங்கோட்டை அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களை அரசு எந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள உத்தேசித்துள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** சென்னை அரும்பாக்கத்தில் உள்ள இந்திய மருத்துவ மனையிலும் நகராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங்களாலும் நடத்தப்படும் இந்திய மருத்துவ மனைகளிலும், மாவட்ட மருத்துவ மனைகளில் தொடங்கப்படும் சித்த மருத்துவப் பிரிவுகளிலும் மருத்துவர்களாக நியமிக்கப்படுவர். பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் போதனா ஆசிரியர்களாகவும் நியமிக்கப்படுவார்கள்.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சித்த வைத்திய அதாவது நாட்டு வைத்திய முறைக்கு மத்திய அரசு எவ்வளவு நிதி ஒதுக்கித் தருகிறது? அந்த நிதி சரிவர பயன்படுத்தப் படுகிறதா என்பதை அறியவிழைகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதுவரை சித்த வைத்திய முறைக்கு மத்திய அரசு பணம் தந்ததாகத் தகவல் இல்லை. தமிழக அரசே தன் நிதியில் இருந்து இதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றன.

**திரு. பெ. மலைச்சாமி :** பாளையங்கோட்டை கல்லூரியில் மாணவர்கள் எத்தனை ஆண்டு படிக்கிறார்கள்? இதுவரை எத்தனை மாணவர்கள் வெளியேறி இருக்கிறார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான்காண்டு காலம் படிக்கிறார்கள். இதுவரை எத்தனை மாணவர்கள் வெளியேறி இருக்கிறார்கள் என்கிற தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் அளிக்கிறேன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இந்த ஆண்டு கிட்டத்தட்ட 20 மாணவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். அவர்களை பஞ்சாயத்து ஒன்றியங்களில் வேலைக்கு அமர்த்துவதாகச் சொன்னார்கள். இன்றைக்கு பஞ்சாயத்து ஒன்றியங்களில் வேலை செய்கிற எல்.ஐ.எம். டாக்டர்கள் போஸ்ட் மார்டம் சர்டிபிகேட் கொடுக்கத் தகுதி இருக்கிறது. இவர்கள் அந்தத் தகுதியைப் பெறாமல் இருந்தாலும் ஏனைய பணிகளைப் புரியலாம் என்கிற உத்தரவைக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பாளையங்கோட்டை சித்த வைத்தியக் கல்லூரியில் படித்து வெளிவருகிறவர்களை நகராட்சி சித்த வைத்தியசாலைகளிலும், அரும்பாக்கத்தில் அமைய இருக்கிற மருத்துவ மனையிலும் வேலைக்கமர்த்த உத்தேசம் இருக்கிறது. எல்.ஐ.எம். டாக்டர்களுக்கு உள்ள தகுதியைச் சொன்னார்கள். அதுபற்றிய விவரம் இல்லை. அத்தகைய தகுதி இவர்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என்கிற விவரங்கள் கொண்டு வரப்பட்டால் அதுபற்றி பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். பூபதி :** சித்த மருத்துவத்துறையில் பயிற்சி பெற்றவர்கள் நகராட்சி மன்ற மருத்துவ மனைகளில், கிராமங்களில் பணியாற்றுகிறார்களே, அவர்களுடைய சம்பளத்தை அனுதாபத்துடன் கவனித்து நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா?

அடுத்து ஜி. டி. நாயுடு அவர்கள் சித்த வைத்தியசாலை ஒன்றை நடத்துகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவியை அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சித்த வைத்தியர்களுடைய சம்பளத்தைப் பொறுத்தவரை—இரண்டாவது பே கமிஷன் சிபார்சை கவனித்துத்தான் ஆராயவேண்டும்.

அடுத்து கோயம்பத்தூர் ஜி. டி. நாயுடு அவர்கள் நாம் நடத்துகிற சித்த வைத்தியசாலைக்கு எத்தகைய உதவிகளைக் கோருகிறார்கள் என்பதைக் கவனித்து நம்மால் முடிகிற அளவுக்கு உதவி செய்ய அவர்கள் கோரிக்கை அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

**திரு. வை. சுவாமிநாதன் :** திருச்சி மருத்துவ மனையில் அதிகாரியாக சித்த வைத்தியரைப் போட்டதற்கு மிகுந்த ஆதரவு இருந்தது. அதுபோல மற்ற மாவட்ட மருத்துவ மனை அதிகாரிகளாக சித்த வைத்தியர்களைத் தொடர்ந்து போட அரசு முன்வருமா?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மற்ற ஐந்து மாவட்ட தலை நகரங்களில் போடுவதற்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்ட மருத்துவ மனைகளிலும் சித்த மருத்துவப் பிரிவை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** அலபதி டாக்டர்களிடம் சிகிச்சை பெறுகிறவர்கள் மெடிகல் சர்டிபிகேட் கொடுத்தால் இப்போது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதுபோல சித்த வைத்திய டாக்டர்கள் சர்டிபிகேட் கொடுத்தாலும் அதை அதிகாரபூர்வமானதாக ஏற்றுக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விதிமுறைகள் என்ன என்கிற தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சித்தவைத்தியக் கல்லூரியை ஏற்படுத்திச் சொல்லித்தர முன்வந்தால் இந்தக் கல்லூரியில் படித்து வெளி வருகிறவர்களுக்கும் அரசு மருத்துவ மனைகளில் வேலைவாய்ப்பு அளிக்க முயற்சிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதுவரை தனியார் துறையில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த விண்ணப்பம் ஏதும் அனுப்பவில்லை. அனுப்பப்பட்டால் மற்ற துறைக் கல்லூரிகளைப்போல, நாம் வைத்திருக்கிற நிபந்தனைகளை முழுதாக நிறைவேற்ற முன்வந்தால் அதுபற்றி அனுமதிப்பதில் ஆட்சேபணை இருக்காது. இங்கே படித்து வெளிவருகிறவர்களுக்கு வேலை அளிப்பதிலும் சங்கடம் இருக்காது.

**திரு. நா. வீராசாமி :** இந்த சித்த வைத்திய முறையை ஐந்து மாவட்டத்தில் ஏற்படுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். வேலூரில் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிப்பார்களா? அடுத்து, பாளையங்கோட்டை மருத்துவ கல்லூரியில் ஆண்டுதோறும் குறைந்த மாணவர்களே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 7—1—1970-லேயே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வேலூர் மருத்துவ மனையில் சீக்கிரமே துவங்கப்பட்டு செயல்படும்.

பாளையங்கோட்டையில் இப்போதே படித்து வெளிவருகிறவர்களுக்கு போதுமான வேலைவாய்ப்பை உண்டாக்க முடியவில்லை. இந்த வாய்ப்புக்களை அதிகப்படுத்திவிட்டு, அங்கே எண்ணிக்கையை அதிகப்படுத்தினால் நன்றாக இருக்கும். இப்போது எண்ணிக்கை போதுமான அளவுக்கு இருக்கிறது.

**திரு. சி. கோவிந்தராஜன் :** எல்.ஐ.எம். பி.ஐ.எம். போன்ற பட்டம் பெறாமலேயே சிறந்த முறையில் வைத்தியம் செய்து வருகிற சித்த மருத்துவர்கள் கிராமங்களில் இருக்கிறார்கள். அவர்களின் சிறந்த ஆலோசனைகளைப் பெறவும் அவர்களுடைய திறமைகளை பயன்படுத்திக்கொள்ளவும் அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1970 மார்ச் 17

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவர்கள் ரிஜிஸ்தர் செய்து கொண்டு, சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்ற விதி இருக்கிறது. எத்தனை ஆண்டுகளாக தாங்கள் வைத்தியம் செய்து வருகிறார்கள் என்கிற குறிப்பை எல்லாம் தாசில்தாருக்கு அனுப்பினால்—அவர் ஐந்தாண்டாக பணியாற்றி வருகிறார், பத்தாண்டாகப் பணியாற்றி வருகிறார் என்கிற விவரங்களைச் சேகரித்து போர்டுக்கு அனுப்புவார்கள். அவர்கள் ப்ராக்டீஸ் செய்ய சர்டிபிகேட் வழங்கி அனுமதிப்பார்கள்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, சித்த மருத்துவத் துறையில் அறுவை சிகிச்சை உண்டா? ஆம் எனில் திரும்பக் கொடுவர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அறுவை சிகிச்சை முறை ஏற்கனவே இருந்ததாகத் தெரிகிறது.

கருவியிட்டு ஆட்டுவார், புண்வைத்து, மூடுவார் பரிந்து என்கிற பாடலைப் பார்க்கிறபோது பழங்காலத்தில் அத்துறையில் அறுவை சிகிச்சை இருந்திருக்கிறது என்று ஊகிக்க இடமிருக்கிறது. ஆனால் தற்போது மருந்து கொடுப்பது, எண்ணெ கொடுப்பது போன்ற முறையில்தான் சிகிச்சை இருந்து வருகிறது. இத்துறையில் மேலும் மேலும் ஆராய்ச்சிகள் விரிவடைகிறபோது அறுவை சிகிச்சை முறையையும் கொண்டுவரலாம் என்று நினைக்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** இந்த சித்த வைத்திய முறைக்கு வரையறுக்கப்பட்ட டெக்ஸ்ட் புக்ஸ் இருக்கின்றனவா? அலபதி முறையைவிட இந்த சித்த வைத்திய முறைதான் நம்முடைய நாட்டுக்குச் சரியானது என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சித்த வைத்தியக் கல்லூரியில் மாணவர்களுக்குப் பாடம் போதிக்க பிரஸ்க்ரைப்ட் செலபஸ் டெக்ஸ்ட் புக்குகள் இருக்கின்றன. அதுபற்றிய நூல்கள் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன, தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்த முறை இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளாக நம் நாட்டில் இருந்து வருகிற ஒன்று. நம்நாட்டு தட்ப வெப்ப நிலை, உண்ணுகின்ற உணவு, உடல் உழைப்பு, பருவ நிலை மாற்றங்கள்—இவை எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கிறபோது—வெளிநாட்டு அலபதி மருந்தைவிட இது நம் நாட்டுக்குப் பொருத்தமானதாக இருக்கலாம். இதுபற்றிய விரிவான ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்கள் எல்லாம் எதிர்காலத்தில் மிக்க பயன் அளிக்கக் கூடியதாக இருக்கும். அதனால்தான் அதற்கு ஆக்கம் தருகிற முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சார், சித்த வைத்தியத்திற்கு தேவைப்படுகின்ற மூலிகைகளைத் தயாரிப்பதற்காக அரசாங்கத் தரப்பிலிருந்து மூலிகைத் தோட்டங்கள் நிறுவப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதற்காகத் தேவைப்படுகின்ற மூலிகைகளை அரும்பாக்கத்திலேயும் குற்றாலத்திலேயும் தோட்டங்கள் வைக்கப்படுகின்ற முயற்சியில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.



1970 மார்ச் 17]

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு தேர்வுக் குழுக்கள்

*** 415 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களை சேர்க்கும் குழுக்களில் சம்மந்தப்பட்ட தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர்களும் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, அந்த அந்த பயிற்சிப் பள்ளிகள் இருக்கும் வட்டாரத்திலே வசிக்கும் மாணவ மாணவியர்களுக்கு முன் சலுகைகள் அளித்து இப்பொழுது தரப்படுவதைவிட அதிக இடங்கள் ஒதுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கின்ற எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்ற எண்ணம் இல்லை என்று கல்வி மானியத்தின்மீது பேசும்பொழுதே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. புதிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் புதிய இடங்களையும் ஏற்படுத்துகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை. கூடுமானவரையிலும் ஆசிரியர் பயிற்சிகள் உள்ள இடங்களிலே இருக்கிறவர்களுக்குச் சலுகைகள் தருகின்ற வகையிலேதான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் குழுவுக்கு குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், 1967-68-ஆம் ஆண்டிலே இது போன்ற பயிற்சியில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக குறிப்பிட்ட சட்டசபை உறுப்பினர்களை நியமிக்கப்பட்டது. இப்பொழுது இல்லை என்று சொல்கிறீர்களே, அதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1967-68-ஆம் ஆண்டிலே சட்டசபை உறுப்பினர்கள் என்று அல்ல நான்-அபிஷியல்-உத்தியோகப் பற்றற்ற ஒருவர் என்று முறையிலே நியமிக்கப்பட்டு நடத்தக் கூடிய நிலைமை இருந்தது. ஆனால் அதிலே பல சங்கடங்கள் இருந்த காரணத்தினாலும் அதிகாரிகள் இருந்தால் கண்டிப்பாக இருக்கமுடியும் என்ற காரணத்தினாலும் 1968-69 முதல் இந்த முறை கொண்டு வரப்பட்டது. 1968-69 ஆம் ஆண்டிலே பயிற்சிப் பள்ளிகளில் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அவர்கள் தேர்ந்தெடுக்கின்ற நிலையை ஸ்க்ருட்டினி செய்வதற்காக உத்தியோகப்பற்றற்ற ஒருவரும் இருக்க வேண்டுமென்ற முறையிலே மாவட்ட தலைமை அதிகாரியும் அவற்றைப் பரிசிலனை செய்ததற்குப் பிறகுதான் அறிவிக்க வேண்டுமென்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆர். கருப்பையா :** பொதுவாக இந்த ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளிலே அந்த அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறாததால் பல இடங்களிலே முறையாகத் தேர்வு நடைபெறவில்லை. திருச்சியிலே பல பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. குறிப்பாக தந்தை பெரியார் நடத்தும் பள்ளியிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது தனிப்பட்ட நிறுவனம். சர்க்காரால் நடத்தப்படுவதில்லை.

**திரு. ஆர். கருப்பையா :** தனிப்பட்ட நிறுவனம் என்றாலும் கவர்ன்மெண்ட் பணத்திலே நடக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சாதாரணமாக அரசாங்கத்தின் சார்பாக நடக்கின்ற பயிற்சிப் பள்ளிகளுக்குத்தான் குழுக்களை அமைத்துத் தேர்ந்தெடுக்கின்றோம். மற்ற பள்ளிகளில் அவர்களே தேர்ந்தெடுப்பார்கள். மாவட்டத்திற்கு ஒன்றிரண்டு பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. அதனால் எந்தச் சட்டமன்ற உறுப்பினர்களைப் போடுவது என்று தகராறு இருக்கிறது. சென்னையிலே இரண்டு பள்ளிகள்தான் இருக்கின்றன, ஆனால் 12 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதனால் பல சங்கடங்கள் வருகின்றன கூடுமானவரையில் ஆசிரியர் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும்பொழுது தகுதி, திறமையின் அடிப்படையிலே அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, தேர்வு பெற்று மாணவர்கள் ஏராளமாக வந்து வேலை கிடைக்காமல் இருந்துகொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு பயிற்சிப் பள்ளியிலும் இருந்து 50, 100 என்று மாணவர்களைக் குறைத்துக்கொள்வதற்கு இரண்டு ஆண்டு காலத்திற்கு அப்படிச் செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்வி மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வந்தபொழுது நான் குறிப்பிட்டபடி 1972-73-க்குள் ஆசிரியர்கள் அத்தனை பேர்களையும் ஈர்த்துக்கொள்கின்ற வாய்ப்புகள் படிப்படியாக ஏற்படும். ஹையர்கிரேடிலே 52-ஐ சென்ற ஆண்டிலே குறைத்திருக்கிறோம். இந்த ஆண்டு 41 குறைத்துவிடலாம். பிறகு முழுமையும் செகண்டரி கிரேடு ஆகவே இருக்கும். புதிய பள்ளிகளும் துவக்குவதாக இல்லை. எனவே இருக்கின்றவர்களை வைத்து விரைவிலே வாய்ப்புகள் கொடுத்து சமாளிக்கமுடியும் என்று அரசாங்கம் முயற்சிக்கிறது.

**ஹாஜி ம. மூ. பீர்முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஆசிரியர் பயிற்சிப்பள்ளித் தேர்வில் அரசாங்கம் நியமித்த ஸ்குருட்டினி குழுவிலே நானும் ஒருவர். சென்ற தடவை நடத்திய அந்த முறை சிறந்த முறைதான். இந்த ஆண்டும் அதேமுறையை மேற்கொள்ள அரசாங்கம் முயற்சிக்குமா? சென்ற ஆண்டு ஒன்றிரண்டு பள்ளிகளில் அரசினுடைய தேர்வு முறை சரியல்ல என்று கோர்ட்டுக்கு போய் சரியில்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு அரசு புதிதாக என்ன திட்டம் வைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்ற ஆண்டு எந்த முறை இருந்ததோ அந்த முறைதான் இப்பொழுது இருக்கிறது. எந்த முறையைக் கையாளவேண்டும் என்பது இனிமேல் தான் முடிவு செய்யப்படவேண்டும். கோர்ட்டிலே போய் இருக்கின்ற அந்தத்தன்மையும் ஆராய்ந்து எந்த அடிப்படையை வைத்தால் நல்ல முறையிலே செய்யலாம் என்று முடிவு செய்யலாம். எந்த முறை நல்ல முறையோ அந்த முறையை மேற்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கும்.





**திரு. எஸ். முருகையன் :** சென்ற ஆண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் கையாண்ட முறையிலே அதிகப்படியான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்குதான் இடம் கொடுத்திருக்கிறார்கள். குறைந்த மதிப்பெண்களைப் பெற்றவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. கல்லூரிகளிலும் அவர்களுக்கு இடம் இல்லை, இல்லை என்கிறார்கள். ஆசிரியர் பயிற்சி பள்ளிகளிலும் அவர்களுக்கு இடம் இல்லை என்கிறார்கள். எனவே குறைந்த மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் நிர்ணயித்து அந்த அளவிற்கு ஒதுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, குறைந்த மதிப்பெண் வாங்கியவர்களுக்கு இடம் கொடுத்தால் அதிக மதிப்பெண்கள் வாங்கியவர்கள் எங்களுக்கில்லாமல் குறைந்த மதிப்பெண்கள் பெற்றிருப்பவர்களுக்குக் கொடுப்பது நியாயம் ஆகாது என்று வாதாடுவார்கள். பல்வேறு காரணங்களைக் கவனித்து தகுதி, திறமை, உடைமை, ஏழ்மை இவற்றைக் கணக்கில் எடுத்துத்தான்—தேர்வுக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது—அந்தக் குழு தேர்ந்தெடுக்கிறது. நியாயத்தை வலியுறுத்துகின்ற முறையில் தான் நாம் நடத்திக்கொண்டு வருகிறோம்.

### மேட்டூர் வேளாண்மைப் பள்ளி

*** 416 வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் உள்ள வேளாண்மை பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

(இ) ஆம் எனில், எத்தனை பேர் அதிகப்படுத்துவதாக உத்தேசம்?

(உ) இந்த பள்ளியில் சேருவதற்கு வேண்டிய தகுதிகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) இவ் வினாவுக்கு இடமில்லை.

(உ) (1) மாணவர்கள் 18 முதல் 30 வயதிற்குட்பட்டும், உழவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

(2) மூன்றாம் படிவம் அல்லது 8-ம் வகுப்பு தேறியிருக்க வேண்டும்.

(3) உழவுத் தொழிலில் குறைந்தது இரண்டு ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(4) சொந்த நிலங்களில் அல்லது வேளாண்மைப் பண்ணைகளில் வேலை செய்திருக்க வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இந்தப் பயிற்சிப் பள்ளிகளிலே பயிற்சி பெறும் மாணவர்களுக்கு அவர்கள் சுயேச்சையாக விவசாயம் செய்வதற்கான வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** பயிற்சி பெற்ற பிறகு அவர்களுக்குத் தனியாகச் சில பண்ணைகளிலே வேலை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கமே வேலைக்கமர்த்துவதில்லை. பொதுவாக அவர்கள் உழவுத் தொழிலில் ஈடுபடும்பொழுது எந்த விதமாக உரம்போட வேண்டும், பூச்சி மருந்து எப்படித் தெளிக்கப்பட வேண்டும், எப்படித் தண்ணீர் பாய்ச்சலாம் என்பதுபற்றி முறையாகக் கற்பிக்கப்படுவதால் உழவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், நிலம் சொந்தமாக வைத்திருக்கிறவர்களும் பெற்ற பயிற்சியை நல்ல முறையிலே தாங்களே பயன்படுத்திக் கொள்கிறார்கள். எனவே அவர்களை வேலைக்கமர்த்த வேண்டியதில்லை. தனியாகப் பயிற்சி பெற்றவர்களை அரசாங்கப் பண்ணைகளிலே அமர்த்த முயற்சிக்கலாம்.

**திரு. இல. பலராமன்:** இந்தப் பயிற்சி எத்தனை மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்தப் பயிற்சிக் காலத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று அந்தப் பகுதியிலேலிருந்து விண்ணப்பம் வந்ததா? இந்தப் பயிற்சிப் பள்ளிகள் மாநில அளவிலே எத்தனை இருக்கின்றன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இது மாவட்டத்திற்கொன்றாக 14 பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஒரு ஆண்டுக் காலம் பயிற்சியளிக்கப்படுகிறது. மாணவர்களைத் தேர்ந்தெடுக்கப்படுவது பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசரும், டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சர் ஆபீசரும், இயக்குநர் ஒப்புதலைப்பெற்ற அக்ரிகல்சர் கெஜடட் ஆபீசரும் தேர்ந்து எடுக்கிறார்கள். அவர்களுக்கு 35 ரூபாய் உதவிப் பணமும், 5 ரூபாய் மேல்செலவிற்காகவும் கொடுக்கப்படுகிறது. ஒரு ஆண்டுக் காலம் பயிற்சி கொடுக்கப்பட்ட பிறகு அவர்கள் வேறு பல வேலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்தப் பயிற்சியை இன்னும் நீடிப்பதாக இல்லை. ஒரு ஆண்டுகாலத்திற்குத்தான் இப்பொழுது பயிற்சியளிக்கப்படுகிறது. நீட்டிக்கவேண்டுமென்று எந்த விதமான விண்ணப்பமும் எனக்கு வரவில்லை. அதிகாரிகள் மட்டத்தில் ஒருவேளை இருக்கலாம் அல்லது வராமலேகூட இருக்கலாம்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** வருங்கால சந்ததியினரை இந்த வேளாண்மைத் துறையில் ஊக்குவிக்கும்பொருட்டு, மாவட்டங்கள்தோறும் நடத்தி வரும் பள்ளிகளில் தற்பொழுது இருபது பேர்கள்தான் சேர்க்கப்படுகிறார்கள், அதை அதிகப்படுத்தி குறைந்தது நூறு மாணவர்களையாவது சேர்ப்பதற்கு இந்த அரசாங்கம் முற்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்போது அப்படிப்பட்ட ஆலோசனை எதுவும் இல்லை. வருங்காலத்தில் யோசிக்கலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** இந்த மாதிரிப் பள்ளிகள் எந்தெந்த மாவட்டங்களில் நடைபெறுகின்றன. எந்த மாவட்டத்திலாவது நடக்கிற எந்தப் பள்ளியையாவது அமைச்சர் அவர்கள் சென்று பார்வையிட்டுள்ளார்களா? அப்படி சென்று அவர்கள் ஏதாவது ஸஜஷன்ஸ் கொடுத்திருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** எல்லா மாவட்டங்களிலும் நடைபெறுகின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் காட்பாடியில் இந்தப் பள்ளி இருக்கிறது. அமைச்சர் அவர்கள் போய் பார்வையிட்டி





ருக்கிறார்களா என்று கேட்கிற நேரத்தில் உறுப்பினர் அவர்கள் எந்தப் பள்ளியையும் சென்று பார்க்கவில்லை என்று கருதுகிறேன். முதலில் உறுப்பினர் அவர்கள் காட்பாடிக்குப் போய் பார்த்த பிறகு எப்படி அது இயங்குகிறது என்று சொல்லலாம். நானும் வாய்ப்புகள் கிடைக்கும்போது அவைகளைப் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன்.

### நன்னிலத்தில் மாணவியர்களுக்கு அரசு விடுதி

***417 வினா—திரு. பி. ஜயராஜ்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலத்தில் சர்க்காரால் மாணவியர் விடுதி ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் என்றால், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா:** 1970-71-ல் புதிதாக துவக்கப்பட இருக்கிற 22 மாணவியர் விடுதிகள் எந்தெந்த இடங்களில் ஏற்படுத்தப்பட இருக்கின்றன? இதற்கு முன்னால் அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறபடி மாயூரம் தொகுதியில் மணல்மேட்டிலும் ஒன்று அமைக்கப்படவிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** விடுதிகள், எந்தெந்தப் பள்ளிகளில் எவ்வளவு மாணவியர் இருக்கிறார்கள், அவர்களில் எவ்வளவு பேர்கள் ஐந்து மைல்களுக்கு அப்பாலிருந்து வருகிறார்கள். அவர்களின் எண்ணிக்கை என்ன, ஒரு விடுதியைத் துவக்குகிற அளவிற்கு மாணவியர்கள் இருக்கிறார்களா, என்று இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து மாவட்ட நல அதிகாரி அவர்கள் அரசாங்கத்திற்கு செயற்குறிப்பு அனுப்பவேண்டும். மேற்சொன்னபடி எல்லாம் இருக்குமானால் நிச்சயமாக அந்த இடத்தில் ஒரு விடுதி துவங்கப்படும். அந்த வகையில் அரசாங்கத்திற்கு மாவட்ட நல அதிகாரிகளிடம் இருந்து வந்திருக்கிற செயற்குறிப்புகளை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மணல்மேட்டில் அப்படிப்பட்ட சாத்தியக்கூறுகள் இருந்து அவசியம் என்று மாவட்ட நல அதிகாரி அரசாங்கத்திற்கு செயற்குறிப்பு அனுப்பியிருப்பார்களேயானால் நிச்சயமாக அதை இந்த வருடம் எடுத்துக் கொள்ள முடியும்.

### கேளிக்கை வரி

***418 வினா—திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு உணவு, வாணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சினிமா தியேட்டர்களில் கேளிக்கை வரி ஏய்ப்பு இருக்கிறதா என்று கண்டுபிடிக்க கூடுதலாக சிப்பந்திகளை நியமிக்க அரசு அனுமதி வழங்கியதா?

(இ) ஆம் என்றால், விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்கீழ் கொடுக்க வேண்டிய வரியையும், தமிழ்நாடு 1961-ம் ஆண்டு உள்ளாட்சி நிறுவனங்கள் நிதிச் சட்டத்தின்கீழ் கொடுக்க வேண்டிய மேல் வரியையும் ஏய்ப்பதைக் கண்டுபிடிக்கும் பொருட்டு, திரைப்பட மாளிகைகளில் திடீர் சோதனைக்கு ஏற்பாடு செய்ய, சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை முதலிய 4 வணிக வரி கோட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் வணிகவரி துணை அதிகாரிகள் இருவர், வணிகவரி உதவி அதிகாரிகள் இருவர், கடைநிலை ஊழியர்கள் நால்வர் கொண்ட கூடுதல் பணியாளரை நியமிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, எவ்வளவுதான் சிப்பந்திகளை அதிகப்படுத்தினாலும் வரி ஏய்த்துக் கொண்டிருக்கிறவர்கள், ட்யூப்ளிகேட் டிக்கட்ஸ் போட்டுக் கொண்டிருக்கிறவர்கள் அதைத் தொடர்ந்து செய்து கொண்டுதானிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அதிகாரிகளும் அதிகாரப் பற்றற்றவர்களும் சேர்ந்த கமிட்டி ஒன்றை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த வரி ஏய்ப்பதைக் கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கைகள் எடுத்து தண்டிப்பதற்காக இதுபற்றி ஒரு புதுச் சட்டம்கூட இந்த மன்றத்தில் கொண்டுவருவதாக இருக்கிறோம். அது வந்த பிறகு எல்லாம் சரியாகிவிடும் என்று நம்புகிறோம்.

திரு. எம். பூபதி: இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட கமிட்டி இதுவரையிலும் பரிசீலனை செய்து எவ்வளவு புகார்களை சர்க்காருக்கு அனுப்பியுள்ளது? அதன் விளைவாக சர்க்காருக்கு எவ்வளவு கூடுதலாக வருவாய் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தத் தகவல் இல்லை. பொதுவாக தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் போன்ற நான்கு டிவிஷன்களில் மொத்தம் 15--9--1969 வரையில் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் எவ்வளவு முறை சோதனையிடப்பட்டது என்பது, 4,116 முறை சோதனையிடப்பட்டது, கண்டுபிடிக்கப்பட்ட தவறுகள் 416, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது 390, வரியாகப் போட்டிருக்கிற பணம் ரூ. 91,162, மேல் வரி ரூ. 90,492, அபராதம் ரூ. 2,89,800.

திரு. டி. மார்டின்: மோட்டார் வாகனங்களுக்கு சீட்டுக்கு (seat) என்று வரி நிர்ணயம் செய்து வாங்குவது போல் தியேட்டர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும் போது அந்த ஸீட்களை நிர்ணயம் செய்து கொடுக்கிறார்கள். எனவே அவைகளுக்கும் ஸீட் அடிப்படையில் டாக்ஸ் வசூலிக்கும் செயற்குறிப்பு ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படி ஒன்றும் இப்போது இல்லை.

திரு. எஸ். கணேசன்: திரைப்பட அரங்குகளில் திடீரென்று சோதனை நடத்துவதற்கு பறக்கும் படைகளை மாவட்டங்கள்தோறும் நியமிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா? மேலும் வரி ஏய்ப்பு செய்து கண்டு பிடிக்கப்பட்டவர்களின் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாவட்டங்கள்தோறும் இதுபோன்ற பறக்கும் படைகள் ஏற்பாடு செய்வதற்கில்லை. ஆனால் மாவட்டங்கள்தோறும் இருக்கும் அதிகாரிகளுக்கு ஜீப் கொடுத்து சோதனையிடச் செய்திருக்கிறோம். வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவர இருப்பதாக கூறியிருக்கிறேன்.

## *Die-heads of Japanese make*

* 419 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state;

(a) whether used die-heads Japanese make were sold by the Tamil Nadu Small Industries Corporation Limited, in 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஈரோடு, திருகு, மறை உற்பத்திப் பிரிவில் ( Bolts and Nuts Unit ) உள்ள, பழையதும், தேய்ந்து போனதும், பயன்படத் தகுதியற்றதென ஒதுக்கப்பட்டதுமான ஜப்பானிய வார்ப்பு அச்சு ஒன்றுதான் ( Die-head ) தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தினால், 1969 ம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டது.

(இ) திருகு மறை போடும் பொறியுடன் (Bolt Threading Machine ) மேற்குறிப்பிட்ட உபயோகமற்ற வார்ப்பு அச்சும் Die-head ) பெறப்பட்டது. அப்பிரிவின் கண்காணிப்பாளர் உபயோகமற்ற இயந்திரம் அங்கு இருப்பதை 1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கழகத்திற்கு அறிவித்தார். முறைப்படியாக ஒப்பந்தப் புள்ளி விவர நடைமுறைகளைக் கடைப்பிடித்த பிறகு, அப்பொறி, திண்டுக்கல்லில் உள்ள கணபதி மெக்கானிக்கல் புரோடக்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 2,001-க்கு விற்கப்பட்டது.

## *Ceramic factory at Vridhachalam*

* 420 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether the production of sanitary-wares has been started at the Ceramic Factory Limited, Vridhachalam; and

(b) the steps taken to find market for them ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தமிழ்நாடு சிறு தொழில் கூட்டு நிறுவனத்தின் ஒரு பிரிவாகிய விருத்தாசலம் மட்பாண்டத் தொழிற்சாலை 1960 மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியது.

(இ) தமிழ்நாடு சிறுதொழில் கூட்டு நிறுவனம், சென்னை, வேலூர், தஞ்சாவூர், மதுரை, திருச்சிராப்பள்ளி பகுதிகளில் துப்புரவுச் சாதனங்களுக்கான ஒன்பது மொத்த விற்பனையாளரை ( Stockists ) நியமித்துள்ளது. ஆந்திரப் பிரதேசத்துக்காக, ராஜமந்திரியில் மொத்த சில்லரை விற்பனையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம் ஆகிய மாநிலங்களின் பிற மாவட்டங்களில் மொத்த விற்பனையாளரை நியமிப்பதற்காக இத்தொழில் நிறுவனத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மைசூர் மாநிலத்திலும், கோவாவிலும் இப்பொருட்களை விற்பதற்காகச் சேலத்தைச் சேர்ந்த வணிகர் ஒருவர் பெங்களூரில்

நியமிக்கப்பட்டுள்ளார். இத்தொழில் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொருட்களை வாங்குவதற்காக, மாநில வீட்டு வசதி வாரியத்துடனும் தென் பகுதி மாநிலங்களிலுள்ள பிற முக்கிய பொதுத்துறை நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** இம்மாதிரி உற்பத்தி செய்யக்கூடிய துப்புரவு? சாதனங்கள் நல்லமுறையில் செய்யப்படுகிறதா? அவைகளை நம் தமிழ்நாட்டிலுள்ள சானிட்டரி சம்பந்தமான நிலையங்கள் வாங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம் விற்பனையை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் வெளிச் சந்தையில் இருக்கக்கூடிய போட்டி காரணமாக இப்போது விற்பனை குறைந்து வருகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** களிமண்ணால் செய்யக்கூடிய இந்த மட்பாண்டங்களை மாற்றி க்ளே என்ற மண் இருக்கிறது, பீங்கான் செய்யக்கூடிய மண் இருக்கிறது. அதில் இவற்றைச் செய்வதற்கான எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா? அதற்கு வேண்டிய சாதனங்களை அவர்களுக்கு அளித்து அவற்றை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா? "மாயனார் குயவன் செய்த மண்பாண்டம் ஓடடா" என்பதில் ஓடடா என்பதை விட்டுவிட்டு நான் மேற்சொன்னபடி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மண்ணில் பல வகை உண்டு. மட்பாண்டத் தொழிலில் எந்தெந்த மண் வகைகளைப் பயன்படுத்தலாமோ அதைப் பயன்படுத்தி வெளிச்சந்தையில் நன்கு விற்பனை செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## *Sub-Magistrate Courts*

* 421 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to shift the Sub-Magistrate Court in Tenkasi in Tirunelveli district to the compound of the District Munsif's Court in Tenkasi?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

* 422 வினா—திரு. பி. ஜயராஜ் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூ மாவட்டம், நன்னிலம் தாலுக்கா தலைநகரில் Sub-Magistrate Court ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. டி. மார்டின் :** நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியிலிருந்து இது போன்றதொரு கோரிக்கையும் அதுபோல் திருநெல்வேலியிலிருந்து ஒரு கோரிக்கையும் அந்த பார் அஸோஸியேஷன்கள் ரெஸல்யூஷன் மூலம் இந்த சர்க்காருக்கு தெரிவித்ததுண்டா? ஆமெனில், அந்தவிதமாக பார் அசோஸியேஷன் வழக்கறிஞர்கள் கொடுத்துள்ள கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இந்த





மாஜிட்ரேட் கோர்ட்டையும், மாவட்ட முன்சிப் கோர்ட்டையும் ஓரேயிடத்தில் வைப்பதற்கான செயற்குறிப்பை வருகிற ஆண்டிலாவது அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பொதுவாக வழக்கறிஞர் சங்கம், நீதி மன்றங்கள் ஓரேயிடத்தில் இருந்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும், பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் என்ற கோரிக்கையைக் கொடுத்து வருகிறார்கள். எங்கெங்கு செயல்படுத்த முடியுமோ, அங்கு செயல்பட வைத்தது. பண வசதிக்கு ஏற்றவாறுதான் கோரிக்கைகளை ஏற்க முடியும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, நன்னிலம் தாலுக்காவிலிருந்து திருவாரூருக்கு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, நன்னிலத்திலே அப்படி ஆரம்பிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் வந்தனவா? அது சம்பந்தமாக என்ன பரிசீலனை செய்தார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முன்னரே இதைப்பற்றி பரிசீலிக்கப்பட்டபொழுது அரசாங்கம் இதைத் தள்ளுபடி செய்திருக்கிறது.

**கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே இந்த நன்னிலம், தாலுக்கா தலைநகரம். மேலும் ஏற்கெனவே, இங்கு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருந்திருக்கிறது. ஏற்கெனவே, பழைய சர்க்கார் நிராகரித்த காரணத்தால், இந்த அரசாங்கமாவது அதை அனுதாபத்தோடு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நன்னிலத்திற்கும், திருவாரூருக்கும் பல பிரச்சினைகள் இருந்திருக்கின்றன. ஆனால் அன்றைக்கு திருவாரூரில் மட்டும் போதும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். மறுபடியும் உயர்நீதிமன்றம் நன்னிலத்தில் வைத்தாலும் வேலை இருக்கும் என்ற புள்ளி விவரங்களைத் தருவார்களானால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

## அரசுப் பேருந்துகளுக்கான டயர்கள்.

* 423 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சர்க்கார் பஸ்களின் டயர்களைப் புதுப்பிக்கச் செய்ய Retread எந்தெந்த கம்பெனிகளிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறையின் பேருந்துகளின் டயர்களை புதுப்பிக்க தனியார் கம்பெனிகளிடம் கொடுக்கப்படுவதில்லை. டயர்கள் புதுப்பிக்கும் வேலை போக்குவரத்துத் துறையிலேயே செய்யப்படுகிறது.

* 424 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துத் துறையில் பல உந்து வண்டிகள் டயர்கள் இல்லாத காரணத்தால் அடிக்கடி நின்று போவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** குறிப்பிட்ட பேருந்துப் பயணம் எதுவும் டயர் இல்லாததால் இதுவரை ரத்தானதில்லை, எனவே, இவ்வாறு பயணம் ரத்தாவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பது பற்றிய வினாவிற்கே இடமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், இப்பொழுதுதான் அந்த முறை இல்லையா? ஏற்கெனவே இதுபோன்ற தனியார் கம்பெனிகளிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருந்தது அல்லவா? அப்படி எந்தெந்த கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது? எந்தத் தேதி யிலிருந்து இது மாற்றப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** என்னிடத்தில் இருக்கின்ற விவரக் குறிப்பு 1967-ஆம் ஆண்டிலிருந்து இல்லை. அதற்கு முன்னாலும் தனியாரிடம் கொடுத்ததற்கான புள்ளிவரங்கள் இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவரவர்களே, டயர்கள் இல்லாததால் எந்தப் பயணமும் நிறுத்தப்படவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். புதிய டயர்களுக்குப் பதிலாக 'ரிட்ரீட்' செய்யப்பட்ட டயர்கள் அதிகமாக உபயோகப்படுத்தப்படுவதால் அதிகமான அளவில் பஞ்சராகி அடிக்கடி நின்று விடுகிறது. அதுமட்டுமல்லாமல், உந்து வண்டியில் ஸ்டெப்னி டயர் இல்லாமல் இருக்கிறது. இதைத் தடுக்க புதிய டயர்களை ஃப்ரெண்ட் சிலிலாவது போட அரசாங்கம் இனிமேலாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 1968-ஆம் ஆண்டில் சில மாதங்களில் டயர்கள் கிடைப்பதில் கஷ்டம் ஏற்பட்டிருந்தது. அதற்குப் பிறகு அந்த நிலை சமாளிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது டயர்கள் இல்லை என்ற பிரச்சினையே இல்லை.

**திரு. கே. விநாயகம்:** போக்குவரத்துத் துறையிலே இருக்கிற பழுது பட்டுப்போன டயர்களை 'ரிட்ரீட்' செய்ய ஆனமலை ரிட்ரீடிங் கம்பெனிக்குக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறதே, அப்படியானால் எந்த ஆண்டு, எத்தனை டயர்களுக்கு அம்மாதிரி ஆர்டர் கொடுத்தார்கள்? அதற்கான செலவு என்ன? அப்படிக் கொடுக்கவில்லையென்றால் பழுதுபட்டுப்போன டயர்களை எங்கு 'ரிட்ரீட்' செய்தார்கள்? ஒர்க்ஷாப்பிலேயே 'ரிட்ரீட் யூனிட்' இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: எத்தனை கேள்விகள்?**

**திரு. கே. விநாயகம்:** ஒரே கேள்விதான்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனித்தனியாகக் கேள்வி போட்டால் தனித்தனியாக விவரம் சேகரித்துக் கொடுக்கிறேன்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அரசாங்க போக்குவரத்து பஸ்களுக்கு எவ்வளவு டயர்கள் ஆண்டு ஒன்றுக்கு தேவைப் படுகின்றன? எவ்வளவு டயர்கள் ஆண்டு ஒன்றுக்கு புதுப்பிக்கப்படுகின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆண்டு ஒன்றுக்கு 35,000 டயர்கள் புதுப்பிக்க வேண்டியிருக்கிறது. தற்பொழுது, சென்னையிலும், நாகர்கோயிலும் 28,512 டயர்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், வெகுதூரம் போகும் பஸ்களிலே கூட ஸ்பேர் டயர் வைக்கப்படுவதில்லை என்பது உண்மையா? அதற்கான காரணம் என்ன? இனிமேலாவது ஸ்பேர் டயர்களை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பில்லாத காரணத்தால் பதில் சொல்ல இயலவில்லை.

**திரு. எம். எஸ். மணி:** தலைவரவர்களே, ஒரு புதிய டயர் எவ்வளவு மைல் ஓட வேண்டுமென்று கணக்கிடப்படுகிறதா? அவ்வாறு ஓட்டப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** புதிய டயர் பற்றிய விவரம் இல்லை. ஆனால் புதுப்பித்த டயரை 12,000 மைல்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது.

### ஆத்தூர்-காயல்பட்டினம் சாலை

*425 வினா.—**திரு. எம். அப்துல் கபூர் சாகிப்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுக்கா, ஆத்தூர் முக்காணி பாலத்திலிருந்து பெருஞ்சாலையை புன்னக்காயல் கிராமத்துக்கு விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், மேற்படி கிராமத்தில் இருந்து சுமார் ¾ (முக்கால்) மைல்தொலைவில் உள்ள காயல்பட்டினம் மேஜர் பஞ்சாயத்து பெருஞ்சாலையுடன் கடலோரமாக மேலும் விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) முக்காணி பாலத்திற்கும் புன்னக்காயல் கிராமத்திற்கும் இடையே ஏற்கெனவே ஒரு சாலை உள்ளது.

(இ) இல்லை.

### *Irrigation Projects in Hosur taluk*

*426 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to take up the following irrigation project in Hosur taluk:

(1) Doddahalla Project near Anchetty;

(2) Byragondapally Project near Thally; and

(3) Kodiyalam Project near Bagalur; and

(*b*) if so, when they will be taken up?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) ஆம். இத் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

THIRU K. S. KOTHANDARAMIAH: These small schemes have been kept pending for decades. I hear that plans and estimates have been submitted to the Government. May I know at what stage the schemes stand?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: So far as the Doddahalla Project near Anchetty is concerned, we have forwarded the pro-forma particulars to the Central Water and Power Commission. The preliminary comments of the Central Water and Power Commission have been replied to. Its technical clearance is awaited.

So far as the Byrakondapalli Project near Thally is concerned, a proposal was to form a tank across Chinnar river near Byrakondapalli village of Hosur taluk at a cost of Rs. 5.15 lakhs to benefit 205 acres was contemplated. This proposal involved acquisition of costly lands at an estimated value of Rs. 2.89 lakhs. Further the cost per ton worked out to Rs. 6,887 which is probibitively costly. Hence a proposal for construction of an anicut across Chinnar near Bairakondapalli village, instead of a tank scheme at an estimated cost of about Rs. 1,55,000 for benefiting a new area of 93 acres is under examination by the local officers.

So far as the Kodiyalam Project near Bagalur is concerned, a proposal for restoration of Kodiyalam Anicut in Kodiyalam village at an estimated cost of about Rs. 1,80,000 for benefiting a new area of 102 acres is under examination with the local officers.

*'Ways and Means' advance to Corporation*

* 427 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Corporation of Madras has been sanctioned a 'Ways and Means' advance of rupees 50 lakhs by the Government to help stablise its critical financial position; and

(b) whether a similar loan was granted on any previous occasion?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. கே. விநயகம்:** சார், கார்ப்பொரேஷனுக்கு இதுமாதிரி 'வேஸ் அண்ட் மீன்ஸ்' அடிப்படையில் 50 இலட்சம் கடன் கொடுக்க வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது? வருகின்ற வருவாய், அங்கிருக்கின்ற உத்தியோகஸ்தர்களுக்கு மாதம் தோறும் சம்பளம் கொடுப்பதற்குப் போதாது என்று கவலைப்பட்டு அந்தத் தொகையைக் கேட்டார்களா? இப்படி ஒவ்வொரு ஆண்டும் சிக்கல் வரும் நேரத்தில் கொடுத்துக்கொண்டு வந்தால் நிதிநிலை எப்பொழுதுதான் சீர்ப்படும்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவரவர்களே, பல்வேறு வேலைகளுக்கு நிதி போதவில்லை என்பதும், அன்றாடச் செலவுகளுக்கு நிதி கடவில்லை என்பதும் எடுத்துக் காட்டப்பட்டு இரண்டு கோடி ரூபாய்



நகராட்சிக்குக் கடனாக வழங்க வேண்டுமென்று மாநகராட்சிப் பொறுப்பு அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது. அதற்குமேலே, அமைச்சு அறையில் 23—6—1969 அன்று முதலமைச்சர் தலைமையில் நடந்த கூட்டத்தில் இவைகளைப்பற்றி விவாதிக்கப்பட்டு, வழிவகை முன்பணமாக 50 இலட்சம் ரூபாய் தரப்பட்டது. நகராட்சியில் உள்ள நிதிநிலை சிக்கல்களை ஆராய்ந்து தக்க முடிவுகளைக் கூற அதிகாரிகளைக் கொண்ட உயர்மட்டக் குழு பரிசிலனை செய்து வருகிறது. அதனுடைய அறிக்கைகள் கிடைத்த பிறகு, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள முயற்சிக்கலாம்.

**திரு. கே. விநயகம்:** மாநகராட்சியின் வருவாய் முன்பெல்லாம் மூன்று கோடியாக இருந்தபொழுது, நல்ல பணிகள் செய்யப்பட்டன என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது 9 ½ கோடி ரூபாயாக உயர்ந்தும்கூட, அதிகமான உத்தியோகஸ்தர்களைப் பெருக்கிவிட்டதால், எல்லா கவுன்சிலர்களும் அவர்களுக்கு வேண்டியவர்களை வேலைக்கு அமர்த்தியதால் top heavy administration வந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவரவர்களே, மாநகராட்சியினுடைய வருமானம் மூன்று கோடியிலிருந்து 9½ கோடியாக உயர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, வருமானம் உயரும் அளவுக்கு வேலைகளும் நிச்சயமாக அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது. வேலைகள் அதிகரிக்கத்தக்க அளவுக்கு பணியாளர்களை நியமிக்க வேண்டிய பொறுப்புமிருக்கிறது. பணியாளர்களை கவுன்சிலர்கள் நியமிப்பதில்லை. அதற்குரிய மேலதிகாரிகள் பரிசீலித்துத் தேவையான அதிகாரிகளை நியமிக்கிறார்கள். பணியாளர்கள் அதிகரித்துவிட்டதால் நிதிநிலையில் பற்றுக்குறை ஏற்படவில்லை. பல்வேறு ஆக்க வேலைகள் எடுத்துக் கொள்ளப்படுவதால் பற்றுக்குறை ஏற்படுவது இயற்கையாக இருந்து வருகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** மாநகராட்சியினுடைய வருமானம் மூன்று கோடியாக இருந்த காலத்தில் தமிழ் நாடு அரசாங்கத்தினுடைய மொத்த வருமானம் ரூ. 60 கோடியாக இருந்தது என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ரூபாய் 60 கோடியா என்பது தெரியாது. எப்படி மாநகராட்சியினுடைய வருமானம் ரூபாய் மூன்று கோடியிலிருந்து மூன்று மடங்கு அதிகமாகி இருக்கிறதோ, அதைப்போல தமிழ் நாடு அரசாங்கத்தினுடைய வருமானமும் மூன்று மடங்குக்கு மேலாக அதிகமாகி இருக்கிறது.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற நகராட்சி மன்றங்களுக்கு விசேஷமான நிதி உதவி மத்திய அரசாங்கத்தினிடமிருந்து கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட உதவி சென்னை மாநகராட்சிக்கும் கிடைக்கிறதா? அப்படி கிடைக்காததினால்தான் இப்படிப்பட்ட கடனுக்கு மாநகராட்சி உட்பட்டது என்று சொல்கிறார்கள். மத்திய அரசிடம் விசேட நிதி பெற மாநில அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஏனைய மாநகராட்சி மன்றங்களுக்கு சிலபல இனங்களில் மத்திய அரசு உதவி செய்வதைச் சுட்டிக்காட்டி, நமக்கும் தரவேண்டும் என்று வற்புறுத்தி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மத்திய அரசு இங்கே வைத்திருக்கக்கூடிய அலுவலகங்களுக்கு சர்வீஸ் சார்ஜஸ், அவர்களுக்கு செய்துகொடுக்கிற அடிப்படை தேவைகளுக்கான பாக்கியை இன்னும் முழுமையாக நமக்குத் தராமல் இருந்துகொண்டு இருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, whenever the Government give grants to the Corporation, is there any rule or bye-law by which the Government can exercise some control to find out whether the amount has been properly spent or not in view of the fact that a large sum of money has been granted by the Government for the past six years successively and with regard to the working of the Departments of the Corporation particularly the Public Health Department, a large number of complaints have been pouring in. So, is there any co-ordination between the Government and the Corporation in regard to this matter?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாநகராட்சிக்கு என்று சில இனங்களில் செலவழிக்கப்படுகிற அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இனங்களில் செலவழிக்கப்படுகிற தொகை முறையாக செலவழிக்கப்படுகிறதா என்பதை மேற்பார்வையிடுகிற அல்லது கட்டளையிடுகிற பொறுப்புகளை அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் கொடுக்கக் கூடிய தொகைகள் சரியான முறையில் செலவழிக்கப்படவேண்டும் என்றும், அதற்கான மதிப்பீடுகளை தயாரித்து, அரசாங்கம் ஒப்புதலைப் பெற்று, அவைகளைச் செய்ய வேண்டும் என்பதையும் வற்புறுத்திக் கூறிக்கொண்டிருக்கிறோம். ஏதாவது ஓரிரு இடங்களிலே குறைபாடுகள் இருக்குமானால், அவைகள் நிர்வாகத்தில் இருக்கிற சிறு குறைகளாக இருக்குமே தவிர, அப்படிக் கொடுப்பதை துஷ்பிரயோகம் செய்ய வேண்டும் என்று செய்யப்படுவது அல்ல. அப்படிக் குறைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டினால், எந்த இடத்தில் குறை இருக்கிறது என்று தெரிந்து அதை நிவர்த்திக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**திரு. எம். எஸ். மணி :** மாநகராட்சிக்கு மூன்று கோடி ரூபாய் வருமானம் வருகிறபொழுது, சென்னையினுடைய ஜனத்தொகை என்ன? அப்பொழுது மாநகராட்சியில் பணியாற்றிய பணியாளர்களின் ஜனத்தொகை என்ன? இன்றையதினம் என்ன என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** திட்டவட்டமான விவரம் இல்லை. ஆனால், கடந்த காலத்தில் ஆறு லட்சம் பேர்கள் இருந்தபொழுது இருந்த நிலைமையும் இப்பொழுது 20 லட்சத்திற்கு மேற்பட்டு இருக்கிற நிலைமையும் இருக்கிறது. ஆகவேதான் மக்கள் தொகை பல மடங்காக பெருகியிருக்கிற சூழ்நிலையில் நாம் பல வேலைகளை எடுத்துச்செய்வதற்கு முற்படும்பொழுது மாநகராட்சி துன்பப்படுகிற சூழ்நிலை இருக்கிறது.

*Central Co-operative Printing Works Limited.*

* 428 Q.—DR H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether a number of irregularities have been pointed out by the Co-operative Audit Officer in his inspection reports for the years 1961–62, 1962–63 and 1963–64 on the working of the Central Co-operative Printing Works Limited;





(b) whether any enquiry was conducted into the affairs of the printing works ;

(c) the findings of the enquiry, and

(d) the action taken thereon ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) சென்னையிலுள்ள மத்தியக் கூட்டுறவு அரசுப் பணிகள் நிறுவனத்தின் செயலாளருடைய நிர்வாக ஊழல் காரணமாக, பல்வேறு இனங்களில் ரூ. 10,657 வரை சங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டதாக விசாரணை அதிகாரி அறிவித்தார்.

(எ) அந்தச் செயலாளர் மீது வழக்கு தொடரப்பட்டு, ஒரு வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அப்பீலில் அவர் விடுதலை செய்யப்பட்டார். அவரிடமிருந்து ரூ. 10,657 வசூலிக்கப்பட்டுவிட்டது.

DR. H. V. HANDE : Sir, whether there have been successive reports by the Deputy Registrar, Madras regarding the irregularities committed in respect of the Printing Press ? Also three more reports were submitted. It is not a fact that there was a report by the District Co-operative Audit Officer, and subsequently there was a report by the Deputy Registrar (Non-Credit), Madras and finally there was a report by Dr. Vijayalakshmi, a Government Director and if so, what are the findings of the report and what is the total amount that this Printing Press has lost Will the Hon. Minister be pleased to furnish all these particulars?

THE HON. THIRU SI. PA. ADITANAR : : Sir I do not have a copy of these reports with me but I may say that the Government appointed an officer, Co-operative Sub-Registrar, to manage this Co-operative Printing Press and, as on 30th June 1969, that is, at the end of the last Co-operative year there was a surplus of Rs. 10,000 in the working of this co-operative society.

THIRU K. VINAYAKAM : Sir, is it not a fact that the society has incurred a heavy loss, amounting ti about Rs. 3 lakhs during the period 1961–68, that is, during the span of 7 years—and if so, why no action has been taken by the Government to recover this amount of Rs. 3 lakhs and not about Rs. 10,000 which the Hon. Minister has referred ?

THE HON. THIRU SI PA ADITANAR : Sir, I answered that up to 30th June 1969. . . .

THIRU K. VINAYAKAM : I referred to the loss of Rs. 3 lakhs incurred during the span of 7 years, 1961–68. . .

THE HON THIRU SI. PA. ADITANAR : An enquiry was held in the year 1963 and the previous Secretary was removed. Actually he was convicted and a Governmtnt Officer, Co-operative Sub-Registrar, has been appointed. Ever since his appointment, there is a steady improvement and up-to-date there is a surplus of Rs. 10,000.

திரு. வி. கே. கோதண்டராமன் : பல முறைகேடுகளில் ஈடுபட்ட இப் பேர்ப்பட்ட பெரிய மனிதர்கள் ஹைகோர்ட்டு வரைக்கும் போய், கீழ் கோர்ட்டு தண்டனை கொடுத்தாலும் மேல் கோர்ட்டுக்குப் போய், அங்கே தள்ளுபடி செய்யக்கூடிய அளவுக்குத்தான் தொடர்ந்து நடப்பதை அமைச்சர் அவர்கள் சொல்லிவரக்கூடிய பதிலிலிருந்து பார்க்கிறோம். நாம் சாதாரண மக்களுக்காக வேண்டியிருக்கக்கூடிய அரசு என்று சொல்லிக்கொண்டு பெரிய மனிதர்களெல்லாம் இப்படி தப்பித்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு இருக்கிறதே, இது கூட்டுறவு சட்டத்தில் இருக்கக்கூடிய கோளாறு?

* * * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோதண்டராமன் அவர்கள் நீண்ட நாட்களாக உறுப்பினராக இருந்துவருபவர். எப்படி, எதைப் பேசுவது என்று தெரியாமல் பேசுவது முறையல்ல. . . . நாம் இந்த இடத்தில் குறை கூறுவது முறையாகாது. ஆகவே, இந்தப் பகுதியை பேரவை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். பத்திரிகையாளரும் அதை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சார், நான் குறிப்பிட்ட அந்த சபை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். பத்திரிகைகளிலும் வெளியிட வேண்டாம் என்று தீர்ப்பளிக்கிறேன்.

* * * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே துணைக் கேள்வியைக் கேட்பார்கள்.

Dr. H. V. HANDE : Coming back the Central Co-operative Printing Works, may I know from the Hon. Minister whether it is not a fact that the society had not convened the general body meeting from May 1963 to 17th August 1969 and the funds of the Society had been mismanaged even without the General Body's sanction for 6 years ? If so, is it not a violation of the Act and the rules? What is the action the Government have taken on this non-convening of General Body meeting ? Why have not the Government considered it fit to supercede this Co-operative Society and take necessary action.

The Hon. Thiru Si. Pa. ADITANAR : I have no particulars on hand at the moment.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

---

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



(2) தன்னிலை விளக்கம்

எதிர்க்கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் கூட்டுறவுத்துறை அமைச்சர் மீது சாட்டிய குற்றச்சாட்டு குறித்து, 81-ம் விதியின் கீழ் அளித்த தன்னிலை விளக்கம்.

Thiru P. G. KARUTHIRUMAN : Sir, I do make the following statement under Rule 81 of the Assembly Rules, with reference to the above letter under reference (D.O. No. 5783 A 70-1 TNL (B), dated 11th March 1970 from Assembly Secretary) regarding the production of documents to substantiate my charge against the Hon'ble Minister for Co-operation.

After the letter of the Hon'ble the Speaker, I went to my advocate to request him to get copies of documents about Thanthi Trust for which Thiru Si. Pa. Adithanar is founder of the trust along with sons who are members of the said trust. My advocate advised me that as there is a case pending in the High Court about this Trust and the assessment of income-tax, it would not be proper for me to make statement of facts about the Trust at this stage, while the case is pending in the High Court, since Thiru B. S. Adityan, son of Thiru Si. Pa. Adithanar filed a writ petition No. 611 of 1969 as one of the trustees of the trust. Further there are series of writ petitions in the High Court, i.e., W.P. 1557, 1558, 1559 of 1969, C.M.P. Nos. 6807, 6808, 6809 of 1969 filed by Thanthi Trust represented by Thiru B. S. Adityan and others (Thiru Si. Pa. Adithanar, Founder Trustee) before the Hon'ble Justice Thiru Palaniswamy at Vacation Court and got stay on 27th May 1969. As the case is pending in the High Court, the matter is sub judice. So, I am limiting my accusation against the Hon'ble Minister Thiru Si. Pa. Adithanar to his suppression of the connection of himself and his family with the Trust in his return of Assets submitted in the Assembly. மு.ப. 10-00

**(3) கூட்டுறவுத்துறை அமைச்சர் மீது எதிர்க்கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் சாட்டிய குற்றச்சாட்டின் மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு.**

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** 1970, ஜனவரி, 28-ம் நாளன்று ஆளுநர் உரையின் மீது நடந்த விவாதத்தின்போது, அதில் கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனுர் அவர்கள் 85 லட்சம் ரூபாய் வருமான வரி கட்டவில்லை, அதற்காக அவர்மீது உயர்நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது. அதற்கான ஆதாரம் இருக்கிறது என்று சொன்னுர்கள். அப்பொழுது பேரவைத் தலைவர், ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு முறையற்றது, இப்பொழுது இல்லை என்றாலும், ஒரு மாதம் கழித்துக் கூடப்போகும் தொடர்க் கூட்டத்திலாவது அதற்குரிய ஆதாரங்களைத்தாருங்கள் என்று அன்றைய நிகழ்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

பிறகு, 6—3—1970 அன்று நிதி நிலை அறிக்கையின் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு முதல் அமைச்சர்

எழுந்து, 'கூட்டுறவு அமைச்சர் 85 லட்சம் ரூபாய் வருமான வரி கட்டாதது பற்றி நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது, நிரூபிக்கிறேன் என்று சொன்னார்கள். இதுவரையில் நிரூபிக்கவில்லை. இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் முடிவதற்குள்ளாவது நிரூபிப்பாரா?' என்று கேட்டார்கள்.

அதற்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், "அவருடைய மகன் பெயரில் ஹைகோர்ட்டில் கேஸ் போடப்பட்டிருக்கிறது. மகன் இவர்கள் வழியாக வந்த மகன்தானே? வேறு வழியாக வந்த மகனா? இந்த ஆதித்தன் யார்? அவருடைய குடும்பத்தின் வழி வந்த ஆதித்தன் என்ற பெயரில்தான் இருக்கிறது. தன் பெயரில் இல்லை என்று வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். உண்டா, இல்லையா? நாளைக்குக் கேள்வி நேரம் முடிந்தபிறகு சட்டசபையில் அதற்கான ஆதாரத்தை கொண்டுவந்து சமர்ப்பிக்கிறேன் என்று சொன்னார்கள்.

7—3—1970-ம் நாளன்று, பேரவைத் தலைவரின் அனுமதி பெறாமலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு அறிக்கையைப் படிக்கத் தொடங்கினார்கள். பேரவைத் தலைவர் இதற்கு அனுமதி தரவில்லையென்று கூறியபிறகு, அடுத்த நாள் அதற்கான ஒரு ஆதாரத்தைக் கொடுப்பதாகக் கூறினார்கள்.

10—3—1970-ம் நாளன்று பேரவைத் தலைவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் ஒரு காகிதம் கொடுக்கப்பட்டது. அந்தக் காகிதத்தில் 85 லட்சம் ரூபாய் வரி ஏய்ப்பை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் செய்தார் என்பதற்கான ஆதாரம் இல்லை. எண்பத்தைந்து லட்சம் ரூபாய் 6—3—1970-ல் குறிப்பிட்டபடி அவர் பெயரிலோ, அல்லது அவருடைய மகன் பெயரிலோ வரி ஏய்ப்பு செய்திருக்கிறார் என்பதற்கான ஆதாரமும் அதில் இல்லை. தினத்தந்தியின் பெயரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் டிரஸ்ட் 1959-60, 1960-61, 1961-62 ஆண்டுகளில் செலுத்த வேண்டிய வருமான வரிக்கு, வருமான வரித் துறையினர் கொடுத்திருக்கும் நோட்டீஸ் 1955-56, 1956-57, 1957-58, 1958-59 ஆண்டுக்கான வருமான வரி விதிப்புப் பற்றிய மறு ஆய்வு முயற்சிகளை எதிர்த்து, அந்த டிரஸ்ட் உயர்நீதி மன்றத்தில் தொடுத்திருக்கும் வழக்கு பற்றியது. டிரஸ்ட் மீதான வழக்கு அன்று. டிரஸ்ட் தொடுத்திருக்கும் வழக்கு. மேலும் அந்த வழக்கில், வருமான வரித் துறையினர் எடுத்திருக்கும் நடவடிக்கைகளைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும் எதிர்க்கட்சித் தலைவர் இடைச்செருகலாக, 55 லட்சம் ரூபாய்க்கு வருமான வரி விதித்துள்ளது என்ற தொடரையும் சேர்த்திருக்கிறார். "இது ஒரு டாகுமெண்ட் ஆகாது. ஒரு வெற்றுக் காகிதம்; ஆகவே மேலும் ஒரு வாய்ப்புத் தருகிறேன். ஆதாரம் தாருங்கள்" என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாய்ப்புக் கொடுத்தார். மேலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் 14—3—1970-க்குள் தக்க ஆதாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று 11—3—1970-ம் தேதி பேரவைத் தலைவர் கடிதம் எழுதி வாய்ப்புக் கொடுத்தார். அதற்குப் பதில் கொடுக்கும் முறையில் 13—3—1970-ம் தேதியன்று எதிர்க் கட்சித் தலைவர் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அதைத் தான் இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் படித்தது. அது அறிக்கை [illegible] இது [illegible] விதியின் கீழ் தன்னிலை விளக்கம். அறிக்கை அல்ல.



நாம் கேட்டது டாக்குமெண்ட் ஆதாரம். கொடுத்திருப்பது தன்னிலை விளக்கம் முதல் குற்றச்சாட்டான, கூட்டுறவு அமைச்சர் 85 லட்சம் ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்திருக்கிறார் என்பதற்கு ஆதாரம் இல்லை. அவருடைய மகனாவது 85 லட்சம் ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்தார் என்பதற்கு தக்க ஆதாரம் இல்லை டிரஸ்டின் மீது 55 லட்சம் ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்களே அதற்காவது தன்னிலை விளக்கத்தில் ஆதாரம் இருக்கிறதா என்றால் இல்லை. டிரஸ்ட் வழக்குமன்றத்தில் தொடுத்திருக்கும் வழக்குத்தான். வருமான வரித் துறையினர் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு உள்ள குறிப்புகள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் தொடர்புள்ள ஒரு டிரஸ்ட் பற்றி தன் சொத்துக் கணக்கில் குறிப்பிடவில்லையென்று புதிதாக குற்றச்சாட்டு கூறியிருக்கிறார்கள். இதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சொத்துக் கணக்கு கொடுக்கின்ற நிலையிலே விவரமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

Details of trust with which the member has any connection என்று இருப்பதில்

கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் பவுண்டராக இருக்கலாம். அவருக்கு இப்போது தொடர்பு உண்டா என்று சொன்னால் அது இல்லை. 'தொடர்பு இருக்கிறது' என்ற ஆதாரத்தையாவது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டினார்களா என்றால் இல்லை.

அடுத்து அவருடைய குடும்பத்தினுடைய சொத்துபற்றிச் சொன்னார்கள். Member of family என்று சொல்கின்ற நேரத்தில் Member of family means any person related, whether by blood or marriage to a member of the legislature or to his wife or her husband and wholly dependent on the member of the legislature.

உறுப்பினருடைய குடும்பத்தோடு ஒன்றுபட்டு, அவருடைய தயவிலே வாழ்கின்ற நிலையிலே இருக்கின்றவர்கள் குடும்பத்துச் சொத்தைக் காட்ட வேண்டும் என்றிருக்கிறது. திரு. சி. பா. ஆதித்தனாருடைய மகன், சி. பா. ஆதித்தனாருடைய டிபெண்டெண்டாக இருக்கக்கூடிய நிலையில் இருக்கிறார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்லவில்லை. ஏகக்குடும்பமா, பிரிந்து போன குடும்பமா என்று விளக்கம் இல்லை. பிரிந்துபோன குடும்பம், அதைப் பற்றிய விளக்கம், எந்த அளவில் உரிமை என்பவையெல்லாம் அறிக்கையில் கொடுக்கப்படவில்லை. இது ஆதாரமற்ற குற்றச்சாட்டாக, ஏற்றுக்கொள்ளக் கூடாத குற்றச்சாட்டாக இருக்கிறது. மூலக் குற்றம் நிரூபிக்கப்படவில்லை. மகன் மீதான குற்றமும் அதாவது 55 லட்சம் ரூபாய் வரி விதிக்கப்பட்டது என்ற குற்றமும் நிரூபிக்கப்படவில்லை. குற்றச்சாட்டுக்கான ஆதாரம் தரப்படவில்லை. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடுக்கடுக்காகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் உறுப்பினர்களுக்கு பேச்சுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அது கட்டுப்பாடற்ற பேச்சுரிமையன்று, வரையறுக்கப்பட்ட பேச்சுரிமை என்பதை உறுப்பினர்கள் அனைவரும், குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறுவது உரிமை மீறிய குற்றச்

சாட்டு ஆகும். நமது இந்திய நாட்டிலே இருக்கிற இந்தியப் பாராளுமன்றத்திற்கே வழிகாட்டியாக இருக்கக்கூடிய இலண்டன் பாராளுமன்றத்திலும் உரிமை மீறிய குற்றச்சாட்டுக்காக, ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை கூறினால் தண்டித்துவிடுதல், சிறைத் தண்டனை அளித்தல், வெளியேற்றுதல் போன்ற தண்டனைகள் அளிக்கப்படுவதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன.

15—6—1957-ல் அசாம் மாநிலச் சட்டசபையில் ஓர் உறுப்பினர் எழுந்து, விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் ஒருவரிடமிருந்து 30 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிக்கொண்டு, ஒரு நிறுவனத்திற்கு பூச்சிகொல்லி மருந்துகள் வழங்க ஏற்பாடு செய்தார் என்று குற்றம் சாட்டினார். பேரவைத் தலைவர் அவர்கள் உடனே, பேசுகின்ற உறுப்பினர் தன் பொறுப்புணர்ந்து பேசுகிறாரா என்று கேட்டார். உறுப்பினர் பொறுப்புணர்ந்து பேசுகிறேன் என்று சொல்லிவிடவே, அதுபற்றி 26—6—1967-ல் அதற்கான ஆதாரங்களை பேரவைத் தலைவர் வரவழைத்துப் பார்த்ததில் குற்றச் சாட்டுக்கு ஆதாரம் இல்லையென்பதைக் கண்டு அறிவித்தார். 28—6—1967-ல் குற்றம் சாட்டிய உறுப்பினர் எழுந்து, வருத்தம் தெரிவித்து, மன்னிப்புக் கோரினார். ஓர் உறுப்பினர் எழுந்து ஓராண்டுக் காலத்திற்கு இந்த அவையிலிருந்து ஆதாரமற்ற குற்றச்சாட்டு கூறிய உறுப்பினரை நீக்கிவைக்க வேண்டுமென்று தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரவே, அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. அதன் பின்னர் 30—6—1967-ல் அந்த உறுப்பினருக்கு ஓராண்டுக் காலம் நீண்டதாக இருக்கிறது, ஆகவே, இந்தத் தொடர்க்கூட்டம் வரையிலும் நீக்கி வைக்கலாம் என்று ஒரு உறுப்பினர் கேட்டுக்கொள்ளவே, அந்தத் தொடர்க்கூட்டம் வரையிலும் அவை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளக்கூடாது என்று இறுதியில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. ஆகவே, ஆதாரமற்ற குற்றச் சாட்டைக் கூறுவது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவேதான் இதைக் கூறியிருக்கிறேன். அப்படிப்பட்ட குற்றச்சாட்டிற்குக்கொடுக்கப்பட வேண்டிய தண்டனை எவ்வளவு கடுமையான தண்டனையாக இருக்கும் என்பதைச் சொல்கிறேன்.

“கடிதோச்சி மெல்லவெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்”

என்று வள்ளுவப் பெருந்தகையார் வழிவகுத்திருக்கிறார். தண்டனை விதிக்கின்ற நேரத்தில் கடுமையான தண்டனையாக இருக்கலாம். ஆனால் அதை நிறைவேற்றுகின்ற நேரத்தில் மெல்ல கொடுங்கள் என்ற கொள்கையைத் தான் வள்ளுவர் வழிகாட்டியிருக்கிறார். ஆகவே இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைக் கூறக்கூடாது. இனி அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களைக் கூறாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைக் கூறாமல் இருக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை எச்சரித்து, இந்த நிகழ்ச்சிக்கு இத்துடன் முற்றுப் புள்ளி வைக்கின்றேன்.



**(4) பங்களூர், மல்லீசுவரத்தில் மதுரை உழவர்கள் தாக்கப்பட்டது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து, டாக்டர் ஹாண்டே, அவர்கள் விதி 41-ன்கீழ் அவசரப் பொது முக்கியமான ஒரு விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே**: தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ்

‘1970-ம் ஆண்டு சனவரி திங்கள், 31-ம் நாள் சனிக்கிழமையன்று பங்களூர், மல்லீசுவரத்தில் ஆயிரம் பேர்கொண்ட கூட்டமொன்றினால் மதுரையைச் சேர்ந்த உழவர்கள் தாக்கப்பட்டது குறித்து அவசரப் பொது முக்கியமான காரியத்தை’ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: மதுரையைச் சேர்ந்த 61 உழவர் பெருமக்கள் தமிழ்நாட்டிலிருந்து சிறுலாப் பேருந்து ஒன்றில், சிறுலா சென்றனர். அவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து 1970 ஜனவரித் திங்கள் 31-ஆம் நாள் சனிக்கிழமையன்று பங்களூர், மல்லிசுவரத்தில் கன்னடியக் கிளர்ச்சிக்காரர்களால் தாக்கப்பட்டது. உழவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மல்லிசுவரத்தை அடைந்தபொழுது, சுமார் 1,000 பேர் கொண்ட கூட்டத்தினர் அப் பேருந்தை வளைத்துக்கொண்டு “தீவிர விவசாயிகள் சுற்றுலா” என்று தமிழில் எழுதப்பட்ட துணிக்கொடியைத் துண்டு துண்டாகக் கிழித்து எறிந்தனர். கிளர்ச்சிக்காரர்கள் பேருந்தின்மீது கற்களை வீசிக் கண்ணாடிச் சாளரங்களை உடைத்தனர். அதனால் சில பிரயாணிகளுக்குக் காயங்கள் ஏற்பட்டன. மேலும் அவர்கள் அந்த வண்டியை எரித்துவிடுவதாகவும் அச்சுறுத்தினர். ஆயினும், அக்குடியானவர்கள் தப்பி ஓடி மல்லீசுவரம் காவல் நிலையத்தை அடைந்து அங்கு புகார் ஒன்றைத் தாக்கல் செய்தனர். முதலுதவிச் சிகிச்சை பெற்ற பின்னர், அவர்கள் சென்னைக்குத் திரும்பினர். இச்சம்பவத்தில் நான்கு குடியானவர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

இக்குடியானவர்களில் சிலர் மேற்சொன்ன நிகழ்ச்சியை விவரித்து 1970, பெப்ரவரி 2-ஆம் நாளன்று சென்னையில் முதலமைச்சரிடம் முறையீடு ஒன்றைக் கொடுத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் 3—2—1970 அன்று மைசூர் முதலமைச்சருக்கு எழுதிய நேர்முகக் கடிதத்தில் மேற்சொன்ன நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மைசூரிலுள்ள தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளிக்கவும், மக்களிடையே அன்பும், அமைதியும் ஏற்படும் இயல்பான நிலை மீண்டும் நிலவவும் அவசியமான நடவடிக்கைகளை மைசூர் முதலமைச்சர் எடுத்திருப்பார் என்ற நம்பிக்கை அதில் தெரிவிக்கப் பட்டது.

**Dr. H. V. HANDE**: Was the reply given by the Chief Minister of Mysore ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : மைசூர் முதல்வரிடம் இருந்தும் பதில் வந்தது. அங்குள்ளவர்களுக்குப்போதுமான பாதுகாப்பு அளிக்கப்படும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் பதில் வந்திருக்கிறது.

(ஆ) மைசூர் மாநிலத்திற்குச் சென்ற தமிழர்களின் பேருந்து தாக்கப் பட்டதும், மைசூர் வாழ் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் குறித்து

**திரு. பெ. மலைச்சாமி** : தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ்—

'தமிழகத்திலிருந்து அண்மையில் மைசூர் மாநிலத்திற்குச் சென்ற தமிழர்கள் பேருந்துவைத் தாக்கிச் சேதப்படுத்தியதுபற்றியும் மைசூர் மாநிலத்தில் பல்லாண்டுகளாகக் குடியேறி, வாழ்ந்தும் வருகின்ற தமிழர் களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும்' என்கிற அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : திருப்பரங்குன்றம் பங்களூருக்கும் இடையே ஓடும் எம்.எஸ்.ஆர். 8755 எண்ணுள்ள தமிழ்நாடு அரசுப் போக்கு வரத்துப் பேருந்து, 1—2—1970-ல் பெங்களூரில் ஏற்பட்ட கலவரத்தின் காரண மாக 2—2—1970-ம் நாளன்று மைசூர் மாநில எல்லைக்குள் அமைந்த அத்திப் பள்ளி என்னுமிடத்தில் பயணிகளை இறக்கிவிட்டு விட்டு ஓசூர் நோக்கித் திரும்பிவந்து கொண்டிருந்தது. மைசூர் மாநில எல்லைக்குள் பயணிகளை இப் பேருந்து ஏற்றிக் கொள்ளக்கூடாதென்று பேருந்துப் பயணிகளை தடை செய் தனர். கறுப்புக்கொடி தாங்கிய ஒருவர் இப்பேருந்து நகர்ந்துகொண் டிருக்கும் போது அதன் முன்னால் படுத்துக்கொண்டார்; மற்றும் இருவர் பேருந்தின் முட்டுத் தாங்கியில் ( Bumper ) ஏறி உட்கார்ந்துகொண்டனர். அவர்களுக்கு அறிவுரை கூறித் திருத்த வலவர் முயன்று கொண்டிருந்த போது, அருகிலிருந்த திராட்சைத் தோட்டத்திலிருந்து கலகக்காரர்கள் சிலர் ஓடிவந்து பேருந்துமீது கற்களை வீசினர்; இதனால் ரூ. 300 மதிப்புள்ள முகப்புக் கண்ணாடி சேதமடைந்தது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 147, 336, 427-வது பிரிவுகளின்கீழ், இது சம்பந்தமாக ஓசூர் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு (குற்றம்) எண் 30/70 பதிவு செய்யப்பட்டது; அதிகார வரம்பு காரணங்காட்டி, இந்த வழக்கு மைசூர் மாநிலத்திலுள்ள சர்ஜாபூர் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது.

**திரு. பெ. மலைச்சாமி** : தலைவர் அவர்களே, மைசூர் மாநிலத்தில் வாழ்கிற தமிழர்களைத் தாக்க அங்கே தனியாக ஒரு அணி இருப்பதாகச் சொல்லப் படுகிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தனியாக இருப்பது அணி அல்ல. ஒரு பிணி.



(5) அமைச்சர் அறிக்கை.

**கோதுமை வழங்கல்குறித்து துணை வினாவிற்கு (எண் 109) அளித்த விடையைச் சரிசெய்து உணவு அமைச்சர் அளித்த அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்ததாக 25—8—1969 அன்று 109-ஆம் எண்ணுள்ள கேள்வியின் துணைக்கேள்வி ஒன்றுக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அளித்த பதில்குறித்து ஒரு விளக்க அறிக்கை சமர்ப் பிப்பார்கள்.

* **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையில் 25—8—1969 அன்று 103 ஆம் எண்ணுள்ள வினா விற்கு திரு. நா. வீராசாமி அவர்களால் விடுக்கப்பட்ட துணை வினா ஒன்றுக்கு விடை அளிக்கையில் பொதுமக்களிடையே கோதுமை உணவைப் பரப்புவ தற்காக அவர்களுக்கு இலவசமாகக் கோதுமை வழங்க ஆயிரம் டன் கோதுமை வழங்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது என்று நான் பேரவைக்குத் தெரிவித்தேன். சரியான நிலை என்னவெனில், வறட்சியால் தாக்குண்ட பகுதி களில் துயர் தணிப்புப் பணியில் பணிபுரிய இயலாத மூப்பால தளர்ச்சி யுற்றவர்களுக்குக் கருணை உதவியாக வழங்குவதற்கு வேண்டி நன்கொடை கோதுமை 100 டன் மட்டுமே இந்திய அரசின் உணவு வேளாண்மை அமைச்சகம் ஒதுக்கியுள்ளது. கோதுமை உணவுப் பண்டங்களைப் பரப்பு வதற்காகச் சிறப்புக் கட்புல விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்யும் நோக்கத்துடன் மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திற்கும் 100 டன் நன்கொடை கோதுமை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. வறட்சியால் தாக் குண்ட பகுதிகளில் துயர் தணிப்புப் புணியில் பணிபுரிய இயலாத ஏழை மக்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் நன்கொடை கோதுமையி லிருந்து தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்கள் வழங்கப்படுவது குறித்தும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(6) 1970-71-ஆம் ஆண்டுக்கான நீதிக் கோரிக்கைகள்மீது விவாதம் (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இன்று பத்திரப்பதிவுத்துறை, எழுது பொருள் அச்சுத்துறை, மாநிலச் சட்டமன்றம் ஆகிய மூன்று மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. நேரத்தை எபபடி ஒதுக்கிக்கொள்ளலாம்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : முதல் இரண்டுக்கும் ஒரு மணி நேரம் ஒதுக்கி விட்டு, பாக்கி நேரத்தைச் சட்டமன்ற மானியத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : 11-30 மணி வரை பத்திரப் பதிவுத்துறை, எழுதுபொருள் அச்சுத்துறை மானியக் கோரிக்கைகள்; அதற் குப்பிறகு மாநிலச் சட்டமன்ற மானியக் கோரிக்கையை எடுத்துக் கொள் வோம்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்** : எழுதுபொருள் அச்சுத்துறைபற்றி சொல்ல வேண்டியவை இருக்கின்றன. ஆகவே மொத்தமுள்ள நேரத்தை இதற்குப் பாதி, அதற்குப் பாதியாக ஒதுக்கிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : முதலாவதாக பத்திரப் பதிவுத்துறை எழுதுபொருள் அச்சுத்துறை மானியங்களை எடுத்துக் கொள்வோம். 12 மணி வரை இவற்றுக்கு நேரம் ஒதுக்கப்படுகிறது.

(அ) நிதிக் கோரிக்கை எண் 5—பத்திரப்பதிவுத்துறை

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத்துறை * என்ற தலைப்பின் கீழ் ரூ. 93,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்.

DR. H. V. HANDE: Sir, to discuss policy I move the cut motion standing in my name, viz.

That the allotment of Rs. 93,53,000 under Demand No. 5—Registration Department be reduced by Rs. 100.

THIRU K. RAMAMOORTHY: Sir, to discuss policy I move the cut motion standing in my name, viz., "That the allotment of Rs. 93,53,000 under Demand No. 5–Registration Department–the reduced by Rs. 100.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, பத்திரப்பதிவு செய்ய சொத்தின் மதிப்பை நிர்ணயிக்கும்பொழுது ஏற்படும் காலதாமதத்தை நீக்க வழிவகை காணுவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 93,53,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

திரு. ரா. கனகசபை: பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமாகப்பத்திரப் பதிவு நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 93,53,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 34—எழுதுபொருள்-அச்சுத்துறை

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 34—எழுதுபொருள்—அச்சுத்துறை * என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,77,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

DR. H. V. HANDE: Sir, to discuss policy I move the cut motion standing in my name viz.

"That the allotment of Rs. 2,77, 73,000 under Demand No. 34 Stationery and Printing be reduced by Rs 100.

* 94-98-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது. 99-114-ம் பக்கங்களில் ஆய்வுரை இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு மேலும் சிறப்பான முறையில் பல வண்ணங்களையும், படங்களையும் கொண்டு அச்சிட்டு மலிவான விலையில் வழங்குதல் மிக அவசியம் என்பதைக் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 34—எழுதுபொருள்-அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,77,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, அரசாங்கப் பாடபுத்தகங்கள் அச்சிடுவதில் ஏற்படும் காலதாமதத்தை நீக்குவதுகுறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 34—எழுதுபொருள்-அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,77,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, அச்சுத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு, வீடு கட்டிக் கொடுப்பது முதலிய கோரிக்கைகளைத் தீர்த்து வைக்காததைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 34—எழுதுபொருள்-அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,77,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வருகின்றன. முதலாவதாக திரு. க. இராமமூர்த்தி பேசுவார்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பத்திரப் பதிவுத்துறையைப் பொறுத்த வரையிலும்—பத்திரம் பதிவு செய்வதற்கு முன்பாகப் பதிவு செய்யப்படுகிற நிலம், வீடு அல்லது மற்ற சொத்துக்களின் மதிப்பை மதிப்பிடுகிற முறையைப் பற்றி அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

இந்தச் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு இன்றைய தினம் தனி அதிகாரிகள் ஆங்காங்கு இருக்கிற சம்பந்தப்பட்ட பகுதிகளில் இருக்கிற உத்தியோகஸ்தர்கள் நினைத்த அளவில் மேலெழுந்தவாரியாக மேல்போக்காக அன்றயதினம் இருக்கிற மார்க்கெட் வேல்யூவை வைத்து மதிப்பீடு செய்கிறார்கள். அதன் விளைவாக நிலம் என்றால் பயிரிடுகின்ற நிலத்திற்குத் தீர்வையின் அடிப்படையிலே இதுவரையிலும் செய்யப்பட்டுவந்த பத்திரம் வாங்குவதற்கான மதிப்பீட்டு முறை மாற்றப்பட்டு அந்த நிலத்திற்கு இத்தனை ஆயிரம் ரூபாய் மதிப்பு என்ற அடிப்படையிலேயும் வீட்டு மனையென்றால் அந்த வீட்டுமனைக்கு இத்தனை ஆயிரம் ரூபாய் மதிப்பு என்ற அடிப்படையிலேயும் பத்திரங்கள் வாங்கிப் பதிவு செய்யப்படுகின்றன. இந்த மதிப்பீடு முறையினால் பெருமளவிலே எந்தப் பகுதி மக்கள் தங்கள் சொத்தைப் பரிமாற்றம் செய்துகொள்கிறார்களோ அந்தப் பகுதி மக்களுக்கு மதிப்புத் தெரிவிக்கப்படுவதில்லை. பத்திரம் பதிவு செய்யப்படுகின்ற நேரத்திலேதான் அங்கே சென்றாலும் பிறகுதான் அவர்கள் ஒரு விலையை வைத்து அதிகமான

விலைக்குப் பத்திரம் வாங்கவேண்டுமென்று சொல்கிற நிலைமை இருக்கிறது. அதற்குப் பிறகுதான் அவர்களுடைய சொத்து எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரிகிறது. அங்கங்கே அந்த அந்தப் பகுதி மக்களிடையேயும் கிராம உத்தியோகஸ்தர்களிடையேயும் வெறுப்பு என்றால் வெறுப்பின் அடிப்படையிலேயும் நெருக்கம் என்றால் நெருக்கத்தின் அடிப்படையிலேயும் அந்த விகிதாசாரம், மதிப்பீடு செய்யப்படுகிறது. இந்த மதிப்பீடு தவறானது என்று சொல்வதற்கும் பரிகாரம் தேடவேண்டுவதற்கும் அங்கங்கே இருக்கின்ற கோட்டாட்சித் தலைவர்களிடத்திலே விண்ணப்பித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கான பரிகாரம், முடிவு, தீர்ப்பு, உடனடியாகக் கிடைக்கிறதா என்றால் இல்லை என்பதை மிகுந்த வேதனையோடு சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு மனுவை அங்கே சென்று கொடுத்தால் குறிப்பிட்ட நிலத்தைப்பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கொடுத்தால் கொடுத்து நின்று மாதங்கள் ஆகியும் என்ன விவரம், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற விவரம்கூட எனக்குக் கிடைக்கவில்லை. இப்படிப் பல மாதங்கள், ஒரு ஆண்டு காலத்திற்கு நீடித்துக் கொண்டே போகுமானால் என்ன காரணத்திற்கான மதிப்பீடு முறையை உண்டாக்கினோமோ அதிலே பயன் இல்லாது போய்விடுகிறது. மதிப்பீடு முறையை எந்த அடிப்படையிலே அன்றைய தினம் கொண்டு வந்தார்கள் என்பது தெரியவில்லையென்றாலும் இப்பொழுது உச்சவரம்பு கொண்டுவரப்படுகின்ற நேரத்திலே அரசாங்கம் மிச்சம் நிலம் இருந்து எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டால் இந்த மார்க்கெட் வேல்யூவினுடைய மரியாதை என்ன என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும். அப்படிச செய்யும்பொழுது மதிப்பீட்டு விலை கொடுப்பார்களா அல்லது பத்திரம் வாங்கிய அடிப்படை வைத்துக்கொண்டு கொடுப்பார்களா, மார்க்கெட் நிலவரம் உங்களுக்குத்தானே தவிர அரசுக்கல்ல என்று சொல்கிறார்களா என்பது தெரியவில்லை. பூல்டிங் ஆப் வேல்யூ எந்த அளவுக்கு என்பதை அரசு பரிசிலனை செய்து மதிப்பீட்டு முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே உணர்த்த விரும்புகிறேன்.

பத்திரப் பதிவு செய்யப்படுகின்ற முறை மிக மிகச் சுலபமாக்கப்பட்டிருக்கிறது இது வரவேற்கத் தக்கது என்றாலும்கூட பத்திரங்களை வாங்கியபிறகு பட்டா மாற்றுச் சுலபமாக செய்யப்பட்டாலும்கூட புதிய முறைக்கு முன்பாக பதிவு செய்யப்பட்ட பட்டாக்கள் மாற்றப்படாமல் இருக்கின்றன. அவற்றையும் அந்தப் பழைய பட்டாக்களையும் மாற்றுவதற்கு ரெவின்யூ இலாகாவோடு சேர்ந்து ஒத்துழைத்து இந்தத் துறை விரைவிலே செயல்பட வேண்டும். புதிய பதிவு முறையின் காரணமாகப் பல இடங்களிலே வேலை வாய்ப்பினை இழந்திருக்கிறார்கள். திண்டிவனம் பகுதியிலே உள்ள பதிவு செய்யும் துறையிலே இடம் போதா நிலைமையும் பதிவு செய்து கொள்கிறவர்கள் வந்தால், இருக்க இடம் போதாத நிலைமையும் வந்தவர்கள் உட்காருவதற்கு பெஞ்ச் இல்லாத நிலைமையும் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும். அலுவலகத்தில் சௌகரியமான முறையிலே வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

பல்வேறு நேரங்களிலே புதிய மதிப்பீடு முறையின் காரணமாக நிலத்தை மாற்றிக் கொள்கிற முறையும் பரிமாற்றம் செய்து கொள்கிற முறையும் ஒப்பந்தம் செய்கின்ற முறையும், பாகப் பிரிவினை செய்து கொள்கின்ற



முறையும் சிரமமாக இருக்கின்றது. பத்திரப் பதிவாளர் அலுவலகத்திலே பணிபுரிகின்றவர்கள் பதிவு செய்ய வருகின்றவர்களை திரும்பத் திரும்பச் சென்று வருமாறு சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. பத்திரத் துறையைப் பொறுத்தவரையில் பத்திரத்திலேதான் கவனம் இருக்கவேண்டுமே தவிர, என்ன காரணத்திற்காகப் பத்திரம் பதிவு செய்கிறார்கள் என்பதைச் சட்டப்படியுள்ள ஒன்றிரண்டு காரணங்களைக் கேட்பதைத் தவிர, மற்ற என்ன காரணங்களுக்காகப் பதிவு செய்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற முறையில் திரும்பத் திரும்ப அவர்களைப் போய்வரச் சொல்வது சரியல்ல என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அச்சுத்துறையைப் பொறுத்தவரையிலும் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எடுத்துக் கொண்டிருக்கின்ற பணி போதாது என்பதோடு மட்டுமல்ல; இன்னும் சிறப்பாக மாற்றியமைக்கப்பட வேண்டும். ஆனால் இன்றைய தினம் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் பாடப் புத்தகங்களை அவர்களே அச்சடித்துத் தருகின்ற பொறுப்பினை எடுத்துக் கொள்ளவேண்டும். அச்சுத் துறையைப் பொறுத்தவரையிலும் மிகுந்த காலதாமதத்தோடு வேலை செய்வதைப் பார்க்கிறோம்.

லாட்டரி டிக்கட்கள் அச்சடிக்கக்கப்படுகின்ற முறையைப் பார்க்கிறோம். அதிலே குறைகள் இருக்கின்றன என்பதை ஆரம்பத்திலேயே பார்த்தோம். பல லாட்டரி டிக்கட்டுகளில் நம்பர் சரியில்லாத நிலைமையும் ஒரே நம்பர் இரண்டு இடங்களிலே இருக்கிற நிலைமையும் பார்த்தோம்.

அச்சுத் துறைக்குப் புதிய இயந்திரங்களை வரவழைத்து நவீனப்படுத்துகின்ற நிலைமையை அரசு சொல்லியிருக்கிறது. அதற்கு மேல் என்ன என்ன வேலைகளை எடுத்துக் கொள்கிறோம் என்பதையும் அரசு நிர்ணயிக்கவேண்டும். பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் அரசு தானே பாடப்புத்தகங்களை அச்சடித்துத் தருகின்ற பொறுப்பினை ஏற்றுக் கொள்ளவேண்டும். இது மிகப் பெரிய பொறுப்பு. அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, இந்த அச்சுத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் நல்ல முறையிலே செலவழிக்கப்பட வேண்டுமென்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடங்கள் மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

■ திரு. அ. லெ. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆவணப் பதிவுத் துறை மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைப் பேரவைமுன் வைக்கிறேன். ஆவணப் பதிவுத் துறைக்கு அமைச்சர் அவர்கள் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். பொறுப்பேற்றதற்குப் பிறகு மெட்ராஸ் சிட் பண்ட்ஸ் ஆக்ட் என்று திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும், சென்னை நகரத்திலுமே அமலில் இருந்து வந்ததை இப்பொழுது 1969-ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து தமிழக முழுவதும் விரிவுபடுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஒரு சில குறைபாடுகளை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த சிட் பண்ட் ஆக்டை மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்துவதற்கு முன்னால் இதற்கென ஒரு மாநாட்டை நாங்கள் கூட்டியிருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பதிவுத்

துறை அமைச்சர் அவர்களும், சிட்டுநிதித் துறை அமைச்சரவர்களும் சட்டப் பிரச்னைகள் வரலாமென்பதால் சட்டத் துறை அமைச்சர் அவர்களும் இதிலே கலந்துகொண்டார்கள். விதிமுறைகளிலும், சட்டத்திலும் இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, சிட்டுத் தொழில் சிறப்பாக நடக்க, குறைபாடுகளைப் போக்கக்கூடிய வகையில் திருத்தங்களைச் செய்யவேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்தோம். ஆனால் அதற்கான திருத்தங்கள் செய்யப்படவில்லையென்பதை மிக வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். அதிலே பங்கெடுத்துக் கொண்ட அமைச்சர் கோரிக்கைகள் நியாயமாக இருப்பதாகவும் சட்டத் திருத்தங்கள் விரைவிலே செய்யப்படும் என்றும் உறுதிமொழி தந்தார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகு இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களும், வருவாய்த் துறை அதிகாரிகளும் சிட்டுத்துறையைச் சேர்ந்தவர்களிடம் கூடிப் பேசியிருக்கிறார்கள். அதிலே சில திருத்தங்களை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இன்றைக்கிருக்கிற சிக்கல் என்னவென்றால், இந்த ரூல்ஸ்-ஐ அமெண்ட் செய்ய வேண்டுமா அல்லது ஆக்ட்-ஐ அமெண்ட் செய்ய வேண்டுமா என்ற பிரச்னையில் இங்கே இருக்கிற அதிகாரிகள் இன்னும் முடிவு எடுக்காமல் இருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ரூல்ஸ்-ஐ அமெண்ட் செய்வதை விட சட்டத்தில் திருத்தங்கள் செய்தால் கோர்ட்டு முதலிய நடவடிக்கைகளுக்கு இடமில்லாமல் இருக்கும். அதை விரைவாகச் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். 1969 டிசம்பரிலிருந்து இந்தச் சிட்டு சட்டத்தை தமிழ்நாடு முழுவதற்கும் விரிவுபடுத்தியிருக்கிறார்கள். முதலில் சட்டத்தில் இருக்கிற குறைகளை எல்லாம் நீக்கிவிட்டுத் தான் விரிவுப்படுத்தப் போவதாக எங்களிடம் கூறப்பட்டது. சட்டத்திலுள்ள குறைகளை எல்லாம் நீக்கவில்லை என்றாலும், திடீரென்று இந்தச் சட்டத்தை தமிழ்நாடு முழுவதற்கும் விரிவுபடுத்தியிருக்கிறார்கள். அதற்கு இந்த ரிஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டு அதிகாரிகள் தயார் செய்யப்பட்டிருக்கிறார்களா என்றால் உறுதியாக இல்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதுபற்றி அமைச்சர் அவர்களிடம் கூட இரண்டு முறை விவாதித்திருக்கிறேன். சட்டத்தை மாநில முழுவதற்கும் விரிவுபடுத்தியிருக்கிறார்களே தவிர, அந்தச் சட்டத்தின் நகல் அல்லது ரூல்ஸ்-இன் படிவம் ஸப் ரிஜிஸ்டிரார்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், இதுவரை இல்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதுபற்றிக் கேட்கப்பட்ட நேரத்தில், ஐ.ஜி. ஆபீசில் விளக்கம் சொல்லுகிறார்கள், எங்களிடம் போதிய அளவு காப்பி இல்லாத காரணத்தால் ஸப் ரிஜிட்திரார்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் இன்னமும் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். இன்னமும் நம்முடைய அச்சகத்திலிருந்து அச்சாகி வரவில்லை என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் காலதாமதம் ஏற்படுமானால், இதை அச்சடிக்கிற பொறுப்பை வேறு நிறுவனத்திடம் கொடுத்தாவது, விரைவாக சட்டம், விதிகள் படிவங்களை இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கெல்லாம் கொடுத்தால், இந்தச் சிட்டுத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு உதவியாக இருக்கும். மேலும் சட்டத் திருத்தத்தை விரைவிலேயே கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் பத்திரப் பதிவில் பைலிங் ஸிஸ்டம் கொண்டுவரப்பட்டது. அதிலே சில குறைபாடுகள் இருப்பதைப் பார்க்கிறோம். பைலிங் ஸிஸ்டம் வந்ததற்குப் பிறகு காப்பி காகிதத்துக்காக பத்திரம் பதிவு செய்கிறவர்களிடம் 5 பைசா வாங்குகிறோம். இது தவிர்க்கப்படவேண்டும். இலவசமாக காப்பிக் காகிதம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என் தொகுதியைப் பொருத்தவரை, ஸ்டாம்ப் டூடியிலே இருந்து ஒரு சில நிறுவனங்களுக்கு விதிவிலக்கு வந்திருக்கிறது. என்.ஜி.ஓ-க்கள் சார்பாகக் கட்டப்படுகிற வீட்டு மனைகளுக்கு, அரிசன காலனிகளுக்கு, கூலியவர்கள் ஸொசைடிக்கு எல்லாம் ஸ்டாம்ப் டூடி எக்ஸெம்ப்ஷன் தரப்பட்டிருக்கிறது. ஆனால் எலக்டிரிசிடி போர்டிலே வேலை செய்கிறவர்கள் காலனி அமைத்துக் கொண்டால் அதற்கு இதுவரை ஸ்டாம்ப் டூடி எக்ஸெம்ஷன் தரப்படவில்லை ஆயினும் திருநெல்வேலி காலனிக்கு அளித்ததற்காக இந்த அரசாங்கத்தைப் பாராட்டி அந்தச் சலுகையை இன்னும் விரிவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கே. எம். இராமசாமி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத்துறை மானியத்தின்மீதும், அச்சுத் துறை மானியத்தின்மீதும் பேசும் வாய்ப்பை எனக்கு அளித்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பத்திரப் பதிவுத்துறை மிகப் பழம் பெரும் இலாகா. அப்படியிருந்தாலும் கூட அந்தத் துறையிலே உள்ள சப் ரிஜிஸ்திரார் ஆபீசுகள் இன்னும் பல இடங்களில் நிரந்தரமான கட்டிடங்கள் இல்லாமல் வாடகைக் கட்டிடங்களிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன; அதனால் நிரந்தரமான தஸ்தாவேசுகளை பாதுகாக்கப் போதிய வசதி இல்லாமல். அவைகள் கறையான் அரிக்கப்படுவதும், செல்லரிக்கப்படுவதுமான நிலைமை இருக்கிறது. பத்திரப் பதிவுத்துறை ஸப் ரிஜிஸ்திரார் ஆபீஸ்கள் அத்தனைக்கும் நிரந்தரமான கட்டடங்கள் ஒரு ஐந்தாண்டு காலத்துக்குள்ளாகவாவது அமைத்துக் கொடுப்பதற்கு நம் மாநில அரசு ஒரு திட்டம் வகுக்க வேண்டும்.

அந்த இலாகாவிலே வேலை செய்து வரும் எழுத்தர்கள் ஒரு சங்கம் அமைத்து அதன் மூலமாக தங்களுக்குள்ள குறைகளை கனம் அமைச்சரிடம் ஒரு கோரிக்கையாகத் தந்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையைக் கவனித்து வேண்டுவன செய்ய வேண்டும், துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையில் வேலை பார்க்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும்கூட, அவர்கள் தகுதி பெற்றிருந்தும்கூட, சாதாரணமாக, உத்தியோக உயர்வு கொடுப்பதில்லை. அப்படி உயர்வு கொடுத்தாலும்கூட, அவர்கள் அமைச்சர்களுக்கு வேண்டியவர்கள் என்பதாலோ அல்லது வேறு சிபாரிசுகள் கொண்டு வந்தார்கள் என்பதாலோ கொடுக்கப்படுகிறதே தவிர, முறையாக உயர்வு பெற வேண்டியவர்கள் பெறுவதில்லை என்ற காரணத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மனம் புழுங்கிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலையில்லாமல், நடுநிலையில் நின்று, கம்யூனல் ஜி.ஓ.வை ஒட்டி, அந்த விகிதாசாரத்தில், தகுதியுள்ளவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்க அமைச்சர் அவர்கள் வழி வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய மாநில பத்திரக் காகிதப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. அதிலும் நில உச்சவரம்பு வந்ததற்குப் பிறகு மற்ற இடங்களைவிட இதிலே கருப்புச் சந்தை---பிளாக் மார்க்கெட்---அதிகமாகிவிட்டது. உச்சவரம்பை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படுகிற பத்திரப் பதிவுகள் செல்லுமோ, சொல்லாதோ, எப்படி இருப்பினும், தேவையான சாப்பா காகிதத்தை ஸ்டாம்ப் பேப்பரை விற்பனை செய்தால் அரசுக்கும் லாபகரமாக இருக்கும்; இதிலே இருக்கிற கருப்புச் சந்தையும் குறையும். பத்திரம் இல்லை என்ற பஞ்சம் இன்று நேற்றல்ல—பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. சாதாரண காகிதத்தில் எழுதுவதும், பிறகு ஸ்டாம்புக்குள்ள பணத்தை ஸப் ரிஜிஸ்டிராரரிடம் கட்டுவது பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. வெகு விரைவிலே அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அச்சுத் துறையை எடுத்துக் கொள்ளுவோம். கவர்மெண்ட் பிரஸ் எவ்வளவோ கவர்மெண்ட் பப்ளிகேஷன்ஸ் போட வேண்டியிருக்கிறது. கிராண்ட்-இன்-எய்ட் கோடு. எம்.இ.ஆர். போன்றவைகள். இப்போது கவர்மெண்ட் பப்ளிகேஷன்ஸ்-வெளியீடுகள் எங்கே கேட்டாலும் அவுட் ஆப் பிரிண்ட், அவுட் ஆப் ஸ்டாக் என்று சொல்லிவிடுகிறார்கள். இந்த மாதிரியான அரசாங்க முக்கிய வெளியீடுகள் மிக மிக அவசியமாக எல்லா கல்வி ஸ்தாபனங்களுக்கும் வேண்டியிருக்கிறது. வருஷக்கணக்காக இந்தக் குறை இருந்து வருகிறது. இனி பள்ளிக்கூட பாடப்புத்தகங்களை தேசியமயமாக்கி அவைகளை அரசு அச்சிட்டுக் காலாகாலத்தில் வழங்க வேண்டும். கவர்மெண்டு வெளியீடுகளைப் பொருத்தவரை இனிமேல் ஷார்டேஜ் என்ற குறை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பாடப் புத்தகங்கள் அச்சடிக்க வேண்டியிருபகிறது, அச்சு இயந்திரங்கள் அத்தனையும் புதிதாக வாங்கி அச்சு இயந்திர சாலைகளைச் சர்க்காரே உடனடியாக ஏற்படுத்த முடியாது என்றால், தகுதியுள்ள அச்சகத்தாருக்கு கூலிக்கு கொடுத்து அச்சடித்தாவது, வேண்டிய நேரத்தில் வேண்டிய அளவு கிடைக்க வழி செய்ய வேண்டும். இது மிகவும் முக்கியம். இன்னோரன்ன குறைபாடுகளை எல்லாம் புதிதாக இப்போது இந்தத் துறையை ஏற்றுக் கொண்டிருக்கிற கனம் அமைச்சர் அவர்கள் நன்கு கவனித்து துரித ஏற்பாடுகளை அவ்வப்பொழுது செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

■ திரு. ஆர். நாகசுந்தரம் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, நமது அச்சகம் தன்னுடைய அன்றாட அலுவல்களோடுகூட, 1967-68 தென் சென்னை பாராளுமன்ற வாக்காளர் பட்டியலை இருபது நாட்களில் அச்சடித்துக் கொடுத்திருக்கிறது. 1968-ம் ஆண்டு முதல் மாநில குலுக்கல் சீட்டுக்கான டிசைனிங் பெயிண்டிங், டிஸ்ட்ரிபியூடிங்—வினியோகித்தல் அத்தனை பணிகளையும் திறம்பட நம் அரசு அச்சகம் செய்திருக்கிறது. 1970 ஜனவரியில் 4 லட்சம் டிக்கெட்டு அட்டைகளை மிகக் குறுகிய நாட்களில் அச்சிட்டுக் கொடுத்து உதவியிருக்கிறது. சென்ற ஜனவரியில் ரூபாய் 25 லட்சம் மதிப்புள்ள இயந்திரங்களும் கருவிகளும் புதிய கட்டடத்தில் குலுக்கல் சீட்டு அச்சிடுவதற்காக நம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் இயக்குவிக்கப்பட்டன. சமீபத்தில் அங்கே மலைபோல் குவித்து வைக்கப்பட்டிருந்த குப்பை கூளங்கள்—வேஸ்ட் பேப்பர்கள்----அப்புறப்படுத்தப்பட்டு அந்த இடங்கள் தூய்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன.



நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள், கலைஞர் அவர்கள், இத்துறையின் பொறுப்பேற்றிருக்கும் அமைச்சர் என்.வி.என். அவர்கள் ஆகிய அத்தனை பேரும் அச்சுத் தொழிலிலே மிகவும் நெருங்கிய தொடர்புடையவர்கள். இவர்களால் அச்சகத் தொழிலாளர்கள் நிச்சயமாகப் பயன்பெறுவார்கள். ஒரு காலத்தில் 50 ரூபாய் 60 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் தங்களுடைய உரிமையைக் கேட்டவர்களை தங்களுக்கு உடன்படாதவர்களைத் துன்புறுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு மாமனார் தொகுதிக்கு ஒன்று, மருமகன் தொகுதிக்கு ஒன்று என்று பிராந்திய அச்சகங்களை ஏற்படுத்தி அடிமைகளை ஏற்றுமதி செய்வது போல் இங்குள்ள தொழிலாளர்களை அங்கு மாற்றி துன்புறுத்தினார்கள். அவர்களை எல்லாம் மறுபடியும் சென்னைக்கு மாற்ற ஏற்பாடு செய்த நமது அரசையும், குறிப்பாக முன்னாள் அச்சக அமைச்சர் மாண்புமிகு திருமதி அம்மையார் அவர்களையும் தொழிலாளர்கள் யாரும் மறக்க மாட்டார்கள். இப்போது அந்தந்த வட்டத்திலே இருப்பவர்களுக்கே வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

1960-ம் ஆண்டில் இருந்து அச்சகத் தொழிலாளர்கள் கேட்டுக் கேட்டுச் சலித்துவிட்ட நிலையில் "குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தை" 1967-ம் ஆண்டு மறைந்த அண்ணா அவர்கள் தமிழ்நாடு அரசு பொறுப்பேற்ற நான்கே மாதங்களில் அளித்திருக்கிறார்கள். இரவு நேரப்படி 50 காசாக இருந்ததை 75 காசாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். ஷிப்ட் முறையில் அமர்த்தப்பட்ட ஆயிரம் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கியிருக்கிறார்கள். நமது அரசினர் இயந்திரப் பகுதியில் சமீபகாலங்களில் நவீனரக அச்சு இயந்திரங்கள் வாங்கப்பட்டு அதற்கேற்ப தொழிலாளர்களை சீனியர் மெஷின் மைண்டர்களாகவும், மெஷின் ஆப்பரேட்டர்களாகவும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. ஏனைய அரசாங்க சிப்பந்திகளுக்கு அளிக்கப்படுவது போல் இவர்களுக்கும் "சரண்டர் லீவ்" அளிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊதியக் குழு அச்சகத் தொழிலாளர்களின் வாழ்வை மலரச் செய்யும் என்று தொழிலாளர்கள் நம்புகிறார்கள்.

இயக்குநர், உதவி இயக்குநர் ஆகியவர்களை நியமிக்கும்போது குறைந்தது மூன்று ஆண்டு காலமாவது பணிபுரிய வாய்ப்பளிக்க வேண்டும். அவர்கள் "டெக்னிகலி குவாலிபைட்" ஆக இருத்தல் வேண்டும்.

அச்சகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கடிகாரம் பழமையாகவும், சரிவர மணியைக் காண்பிக்காத நிலையிலும் இருப்பதால் தொழிலாளர்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, அங்கு நவீன மின்விசைக் கடிகாரத்தைப் பொருத்த வேண்டும்.

தற்சமயம் உதவி இயக்குநருக்குத் தொழிலாளர் கூட்டுறவு வங்கி, பண்டக சாலை, சிற்றுண்டிச் சாலை ஆகிய பல பொறுப்புகள் இருப்பதால் அச்சக நிர்வாக வேலைகளைச் சரிவரக் கவனிக்க முடியவில்லை. ஆகவே, அவருக்குக் கீழே உள்ள எல்லா நிர்வாக அதிகாரிகளுக்கும் அந்தப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்து அவருடைய வேலைப் பளுவைக் குறைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் நிர்வாகம் சரிவரச் செயல்பட முடியும்.

லைனோ மெஷினில் பொருத்தப்பட்டிருக்கும் சாதாரண மின் விளக்குகள் கெட்டுவிட்டால் அல்லது இயந்திரப்பிரிவில் உள்ள பல பிரிண்டிங் மெஷினுக்கு

போதிய வெளிச்சம் கொடுக்கும் மின் விளக்குகள் கெட்டுப் போய்விட்டாலோ மெஷினுக்கு வெளிச்சம் தரும் விளக்குகளுக்குப் பதிலாக அவைகளுக்கு புது விளக்குகள் போடப்படுவதில்லை. இதனால் இயந்திரங்களை நிறுத்திவிட வேண்டியதாகிறது. உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இம்மாதிரி சமயங்களில் சம்பிரதாய முறையைப் பின்பற்றாமல் உடனடியாக போட்டுக் கொள்வதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும்.

அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு N.G.O.- க்களுக்கு அளிக்கப்படுவது போல வீடுவசதிகள் செய்து தரவேண்டும்.

ஓய்வுபெற்ற அல்லது இறந்துபோன பதவி உயர்வு பெற்றுப் போன ஸ்கில்டு ஒர்க்கர்ஸ் இடங்கள் பல நிரப்பப்படவில்லை. இவைகள் உடனடியாக நிரப்பப் படவேண்டும்.

அரசாங்க அச்சகங்களில் பயிற்சி முடித்து வெற்றிகரமாக வெளிவந்தவர்களை முதலில் காலி ஏற்படும் இடங்களுக்கு நியமிக்க வேண்டும். இல்லையேல் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்ததற்கு அர்த்தமேயில்லை. இவர்களை வரிசைப்படுத்தி ஒரு பட்டியலை வைத்துக் கொண்டு அதிலிருந்துதான் ஆட்களை நியமிக்க வேண்டும்.

அங்கு பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் அல்லது பணிபுரிபவர்களது குழந்தைகளுக்கு வேலை கொடுப்பதில் சலுகை தரவேண்டும்.

மவுண்ட்ரோடு கிளை மிக மோசமாக இருக்கிறது. உடனடியாக புதுப்பிக்கக் கேட்டுக் கொள்கிறேன். அதில் பணிபுரியும் பெண்களைத் தலைமை அச்சகத்திற்கு மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.
(மணி அடிக்கப்பட்டது)

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருக்கக்கூடிய மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். பத்திரப் பதிவுத் துறையைப் பொருத்தவரை நல்ல முறையில் திருத்தியமைத்து வேலை நடந்து கொண்டு வருகிறது. அவ்வாறு நடந்து வருகின்ற சந்தர்ப்பத்தில் அரசாங்கம் நில உச்சவரம்புச் சட்டத்தைப் 15 ஏக்கராகத் திருத்தப் போவதாக அறிவித்த பிறகு பலர் ஸ்டாம்புகள் கிடைக்காமல் பல ஊர்களில் சென்று ஸ்டாம்புகளை வாங்கிக் கொண்டு வருகிறார்கள். ஸ்டாம்புகள் கிடைக்காமல் போனதற்கு என்ன காரணம்? பழைய தேதி போட்டு ஸ்டாம்பு விற்பனையாளர்களிடத்தில் இருந்து வாங்கி புதிதாக நிலங்களைப் பராதீனம் செய்யப் பெருமுயற்சி நடந்து கொண்டிருக்கிறது. ஸ்டாம்பு விலை கூட இரட்டிப்பாக உயர்ந்து கொண்டு வருகிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தனியார் ஸ்டாம்ப் விற்பனை செய்வதன் மூலம் கணக்கு வழக்கு இல்லாமல் எப்போதும் விற்கக் கூடிய நிலைமை இருப்பதால் முன்தேதி போட்டு விற்பனை செய்ததாக எழுதுகிறார்கள். அவர்கள் எவ்வளவு விற்கிறார்கள் என்பதற்கான ஆடிட் கிடையாது. ஆகையால் இந்த மாதிரி நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கமே நேரடியாக இந்த ஸ்டாம்புகளை விற்பனை செய்யும் நிலையை ஏற்படுத்தினால் இம்மாதிரியான தவறுகள் நேராத வண்ணம் [illegible] வைக்க முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். [illegible] இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சப்



ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் எல்லைக்குள் எவ்வளவு ஸ்டாம்ப் தேவை என்று கேட்டு அவர்களிடம் ஸ்டாம்பைக் கொடுத்து விற்பனை செய்யும் நிலைமை ஏற்பட்டால் அவை அரசாங்கத்தின் கணக்கில் வரும். எவ்வளவு விற்பனை ஆகியிருக்கிறது, எவ்வளவு இருப்பில் இருக்கிறது என்ற கணக்கு இருக்குமாகையால் தவறாக ஸ்டாம்பை வாங்கி உபயோகப்படுத்துபவர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலையை ஏற்படுத்த முடியும்.

என்னுடைய தொகுதியில் களப்பாடியில் ஒரு சப்-ரிஜிஸ்டிரார் ஆபிஸ் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக காங்கிரஸ் அரசாங்கம் இருந்த நேரத்திலேயே சர்வே செய்யப்பட்டு ஆரம்பிக்கலாம் என்று அரசாங்கத்திற்கு எழுதிய பிறகு மூன்று நான்கு ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஆரம்பிக்கவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அது ஒரு தனிப் பிரதேசமாக இருந்து கொண்டிருக்கிறது. போக்குவரத்து வசதி இல்லாத பிரதேசம், சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்குப் போக வேண்டுமென்றால், முத்துப்பேட்டை, திருத்துறைப் பூண்டி அல்லது மன்னார்குடிக்குச் செல்லவேண்டும் கிட்டத்திட்ட 15 மைல் அல்லது 20 மைல் செல்ல வேண்டியிருக்கிறது.

சென்ற ஆண்டு நான் மதிப்பீடு கமிட்டியில் இருந்தேன். அப்போது வெளி மாநிலங்களுக்குச் சென்று அச்சுத் துறை எப்படி வேலை செய்து வருகிறது என்று பார்க்கும்போது நம்முடைய மாநிலத்தை விட மற்ற மாநிலங்களில் மிக நல்ல முறையில் நடந்து வருகிறது. பம்பாயில் அச்சகத்தை மிகச் சுத்தமாக வைத்திருக்கிறார்கள், மிக மிக நல்ல முறையில் இருந்து கொண்டிருக்கிறது. அங்கிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் நல்ல ஆடைகளை அணிந்து கொண்டு வேலையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் இருப்பவர்களைப் பார்த்தால் சகிக்க முடியவில்லை. அவர்களுடைய ஆடைகளும், கொடுத்திருக்கக் கூடிய வசதிகளும் மிகமிக மோசம், குறைவு. அந்தத் தொழிலாளர்கள் நல்ல சுகாதாரமான முறையில் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது சரியாக இருக்கும். சென்னையில் இருக்கக்கூடிய அச்சகத்திற்குப் போய்ப் பார்த்தால் முனிசிபாலிடி குப்பை மாதிரி குவித்து வைத்திருந்தார்கள். அரசு அதைப் பற்றி எழுதி, அமைச்சர்கள் நேராகச் சென்று பார்த்து அவற்றை அகற்ற ஏற்பாடு செய்தார்கள். நம்முடைய அச்சகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அரசாங்க தஸ்தாவேஜுகள் தற்போது தனியார் அச்சகங்களிலும் அச்சிடப்படுகிறது. அதற்காக நம்முடைய ராஜ்யத்தில் வருஷத்திற்கு நாற்பது ஐம்பது லட்சம் ரூபாய் செலவாகிறது. தனியாருக்கு எதற்காகக் கொடுக்க வேண்டும்? குறிப்பிட்ட அச்சகங்களுக்கு ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் என்று கொடுப்பதன் காரணமாக ஆதாயத்தை அவர்கள்தான் அடைகிறார்கள். இவ்வாறு தனியார் அச்சகத்திற்குக் கொடுக்காமல் அரசாங்க அச்சகத்திலேயே அடிக்க வேண்டும். இன்னும் புதிய அச்சகங்களை மாவட்டத்திற்கு ஒன்றாக தேவையான இடங்களில் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதனால் இன்னும் அதிகப் பேருக்கு வேலை வாய்ப்பும் அளிக்க முடியும்.

அச்சகத்தில் ஒரு கோவாப்பரேட்டிவ் கான்டீன் இருக்கிறது. அதிலே இருந்த நிர்வாகஸ்தர்கள் தவறு செய்ததன் காரணமாக தற்போது அதை ஸ்பெஷல் ஆபீசர் போட்டு நடத்துகிறார்கள். அது தற்போது ரொம்ப

நஷ்டத்தில் நடக்கிறது என்று கேள்விபடுகிறேன். ஸ்பெஷல் ஆபீசர் போட்டும் நஷ்டத்தில் நடக்கிறது என்றால் அதற்கு என்ன காரணம் என்று ஆராய வேண்டும்.

அச்சகத்தில் ஆட்களை நியமிக்கின்ற நேரத்தில் தற்போது அரிசனங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட புகார் இருந்து கொண்டிருக்கிறது. புதிய நியமனங்களைச் செய்யும்போது அரிசனங்களுக்கு உரிய சதவிகிதத்தை ஒதுக்க வேண்டுமென்றும் அவர்களை நியமனம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. எ. பட்டாபி நாயுடு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது என் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த பத்திரப் பதிவுத் துறையானது பழமையானதொரு துறையாகும். இந்த துறை மக்களுடைய சொத்து உரிமைகளைப் பாதுகாக்கக் கூடியதொரு துறையாகும். அத்தகைய துறையானது இன்றையதினம் பல இடங்களில் சொந்தக் கட்டிடங்கள் இல்லாமல் வாடகைக்கட்டிடங்களில் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்த வாடகைக் கட்டிடங்கள் எல்லாம், அவர்கள் குடியிருப்பதற்காக கட்டப்பட்ட கட்டிடங்கள். ஆதலால் அவைகள் தகுந்த பாதுகாப்பு இல்லாத முறையில் இத்துறை செயல்பட்டு வருகின்றன. ஆகவே மக்கள் சொத்து உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய ஒரு உயர்ந்த நிலை இந்தத் துறைக்கு இருப்பதால் தகுந்த பந்தோபஸ்து தேவை என்ற முறையில் அவைகள் எல்லாம் அரசாங்கக் கட்டிடங்களில் அமையும் முறையில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இத்துறையில் சப்-ரெஜிஸ்ட்ரார்களுக்கு ப்ரமோஷன் கொடுக்கவேண்டுமென்றால் அதற்காக சில விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த விதிகளை மீறி இன்றைக்கு இந்த அரசாங்கம் செயல்பட்டு வரவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 4—10—1969-ல் சப்-ரெஜிஸ்ட்ரார்கள் பதவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சப்-ரிஜிஸ்ட்ரார் பதவியில் எப்படி நியமிக்க வேண்டுமென்றால் லோயர் டிவிஷன் கிளார்க்காக ஆறு ஆண்டுகள் பணியாற்றவேண்டும். அதற்குப் பிறகு அப்பர் டிவிஷன் கிளார்க்காக இரண்டு ஆண்டுக் காலம் வேலை பார்த்த பிறகு ஆக எட்டு ஆண்டுகள் பணியாற்றிய பிறகுதான் சப்-ரிஜிஸ்ட்ரார் பதவி வழங்குவது என்ற ஒரு விதி நம்முடைய சட்டத்தில் இருக்கிறது. அப்படியிருக்கும்போது அதை மீறி இந்த அரசாங்கம் தங்களுக்கு வேண்டியவர்களுக்காக பல பதவிகளைக் கொடுத்திருக்கிறது என்பது வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** உறுப்பினர் அவர்கள் தம்முடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும், விளக்குவதற்கும் உரிமை உண்டு. ஆனால் அரசுக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று கற்பனை செய்து சொல்வது அவ்வளவு முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. பட்டாபி நாயுடு:** நான் கற்பனையாக ஒன்றும் சொல்லவில்லை என்பதை இந்த இடத்தில் நான் நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன் என்று எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். 4—10—1969-ல் திரு. என். ராஜகோபால்



என்பவருக்கு சப்-ரிஜிஸ்டிரார் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. திருமதி ஆர் அனுசுயா என்ற ஒரு அம்மையாருக்கும் சப்-ரிஜிஸ்ட்ரார் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. இவை நமது சட்டவரம்பிற்கு உட்படவில்லை என்பதைத்தான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல. திண்டுக்கல்லில் ஒரு ஜூனியர் மோஸ்ட் எழுத்தாளரை சப்-ரிஜிஸ்டராராக நியமித்திருக்கிறார்கள். அதுவும் அவரை வேறு ஒரு இடத்திற்குப் போட்டிருந்தால் கூட அங்குள்ளவர்களுக்கு குறைபாடு இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் அதே திண்டுக்கல்லில் அந்த ஜூனியர் மோஸ்ட் எழுத்தாளர் சப்-ரிஜிஸ்ட்ராராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதினால் அங்குள்ள ஸீனியர் எழுத்தாளர்கள் எல்லாம் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்று ஆயிரக்கணக்கான எழுத்தாளர்கள் வேலை செய்ய சோர்வுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பத்து பதினைந்து ஆண்டுகள் வேலை செய்தும் கூட ப்ரமோஷன் கிடைப்பதில்லையே என்ற வருத்தம் எழுத்தாளர்களிடையே பரவி வருகிறது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியாக சில ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யப்பட்டிருந்தபோதிலும் இந்த சர்க்கார் அதையும் மீறி அப்படி ஒதுக்கப்பட்ட அந்த இடங்களை தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்காமல் விட்டு விட்டிருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது.) நான் இன்னும் நிறைய பேச வேண்டியிருக்கிறது. எப்படி முடிக்கவேண்டுமென்று புரியவில்லை.

அடுத்தபடியாக, இன்னும் நிறைய பேசவேண்டியிருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தினால் கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டு நான்கு தலைமை அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஒரு துறைக்கு ஒரு அதிகாரி பதவிக்கு வந்து அதன் செயலைப் பார்க்கிறபோது குறைந்தது நான்கு அல்லது ஐந்து மாதங்கள் சென்றால்தான் அங்குள்ள எல்லா ஃபைல்களையும் பார்த்து ஓரளவிற்கு புரிந்து கொள்ள முடிகிற நிலைமை இருக்கிறது. அப்படி இருக்கும்போது நான்கு தலைமை அதிகாரிகள் ஒரு வருடத்திலேயே மாற்றப்பட்டிருப்பார்களானால் அந்தத் துறை எப்படிச் செயல்படும் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

(மணியடிக்கப்பட்டு திரு. பாலசுப்பிரமணியன் அழைக்கப்பட்டார்.)

* **திரு. எ. பாலசுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, அரசு அச்சகத்தின் அபிவிருத்திகளைப் பற்றி நாம் அதிகமாகப் பேசி வரக்கூடிய நேரம் இது. ஆனால் ஏராளமான வேலைகள் இன்னும் வெளியே தரப்பட்டுவருகின்றன. உதாரணமாகச் சொல்கிறேன். மேழிச்செல்வம், கிராம நலம், பாடப் புத்தகங்கள், மதறாஸ் இன்பர்மேஷன், சிராணி, இவை எல்லாம் வெளி அச்சகங்களில் கொடுக்கப்பட்டு அச்சடிக்கப்படுகிறது. 40 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அளவிற்கு இவ்வாறு வெளியே வேலைகள் போவதை இனிமேலும் நாம் அனுமதிக்கக்கூடாது. ஏராளமான, நல்ல அழகான மெஷின்கள் எல்லாம் நம் அச்சகத்தில் இருப்பதால் இந்த வேலைகள் எல்லாம் அங்கேயே சிறப்பாக நடைபெறவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

அடுத்து, மூன்று வருடங்களாக பேசிவருகிறேன். அதை மீண்டும் நான் வற்புறுத்துகிறேன். சில பேர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டு, வெறும் ரௌவுடிகள் அங்கே சுற்றி வரும் நிலை நீடிக்கிறது. அவர்களை சில காரியங்களுக்காக நிர்வாகத்தில் இருப்பவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் சம்பளம் வாங்கிக் கொள்கிறார்கள், ஆனால் வேலை செய்வதில்லை. 20—11—1969-ல் மௌண்ட் ரோட் பாடப் புத்தகப் பிரிவில் அஸிஸ்டன்ட் வொர்க்ஸ் மானேஜர் வேலை செய்யும் இடத்தில் நான்கு நாட்கள் தொடர்ச்சியாக கதவுகளை உடைத்து உள்ளே புகுந்து தொலைபேசிகளை அறுத்தெறிந்து கலாட்டா செய்து அவரை அநேகமாக அடித்தே விட்டார்கள் என்று சொல்லலாம். இதை நான் நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன். அதன்பேரில் டெப்டி என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள்? இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை?

அங்குள்ள கான்டீன் ஊழல்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே அமைச்சராக இருந்தவர் அதைநடத்தினார், எஸ்.கே.ஸ்டோர்ஸ், கான்டீனுக்கு கொடுத்த சப்ளைக்காக கிட்டத்திட்ட ரூ. 12,500-க்கு இப்போது வக்கீல் நோட்டீஸ் வந்திருக்கிறது. பணம் கொடுக்கப்படவில்லை என்று. மூன்று ஆண்டுகளாக ஆடிட் செக் நடக்கவில்லை. இது ஒழுங்கீனமில்லையா, இதைத் திருத்த வேண்டாமா?

சர்வீஸ் அடிப்படையில் இன்க்ரிமென்ட்ஸ் கொடுப்பதில்லை. நேரம் இல்லாததால் ஒவ்வொன்றாகத் தொட்டு விட்டுப் போக வேண்டியிருக்கிறது. மோனோ பிரிவில் 2600 ஸ்பூல்ஸ் பஞ்ச் செய்து ரெடியாக இருக்கிறது. ஆனால் காஸ்டிங் நடக்கவில்லை. அதனால் இன்க்ரிமென்ட் கிடைக்கவேண்டியவர்களுக்கு கிடைக்காமல் அவர்கள் வயிற்றெரிச்சல் கொண்டிருக்கிறார்கள்.

வேலைக்கு ஆட்களை எடுக்கும்விதத்திலும் ஒழுங்கீனங்கள் நிலவுகின்றன. அது பற்றி ஆதாரபூர்வமான புகார்கள் என்னிடம் வந்துள்ளன. ஆட்களை எடுப்பதற்கு ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு இல்லாமலேயே ஆட்களை வேலைக்கு அமர்த்தல் நடக்கிறது. பெயர்களை சொல்ல விரும்புகிறேன். வி. டி. பேபி, திரிபுரசுந்தரி ஆகியோர் அப்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சின் மூலம் ஸ்பான்ஸர் செய்யப்பட்டு அடுத்த செலக்ஷனில் தாப்படும் என்ற நிலையில் உள்ளவர்கள் இருக்கிறார்கள். அதை விட்டுவிட்டு, இம்மாதிரி நியமனங்கள் நடைபெற்றிருக்கிறது அச்சகத்தில். இது தவிர எம்.வி. பாலகிருஷ்ணன், காபி ஹோல்டர், ஏ.எம். நெடுமாறன், காபி ஹோல்டர், டி. பாண்டியன், ஜூனியர் பைண்டர், மெட்டல்லா, அக்கவுண்ட்ஸ் செக்ஷன் டெஸ்பாச்சர் என்ற இவர்கள் இந்தக் கமிட்டிக்குப் போகாமல் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அக்கவுண்ட்ஸ் செக்ஷன் டெஸ்பாச்சர் பதவி சர்வீஸ் கமிஷன் மூலம் செய்யவேண்டிய பதவி. இப்படி ஒழுங்கற்ற முறையில் குழுவிற்குப் போகாமல் நேரடியாக நியமிக்கப்பட்டிருக்கிற கேஸ்கள் ஒருபுறமிருக்க, இன்னொருபக்கத்தில் குழுவின் மூலம் நடத்துவதும் ஒழுங்காக இல்லை. ஏற்கனவே இங்கு ஊழியர்களாக இருப்பவர்களின் பிள்ளைகள் நான்கு மாத காலம் அங்கு சம்பளம் இல்லாமல் பயிற்சி பெற்று வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இடம் தராமல் 57, 60 பேர்களின் பெயர் பட்டியல் இருக்கிறது. 60 பேர்களைப் போட்டிருக்கிறார்கள். இதில் 57 வது நம்பர்



ஆர். சுப்பிரமணியம், 60 வது நம்பர், பூலோகம். இவர்கள் அங்கு பயிற்சி பெறாதவர்கள். ஆனால் நேரடியாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே நான்கு மாத காலம் சம்பளம் இல்லாமல் பயிற்சி பெற்றிருக்கும் அங்குள்ள ஊழியர்களின் பிள்ளைகள், அவர்கள் வேலைக்காக காத்திருக்க இப்படிப் பட்டவர்களுக்கு வேலை அளித்திருப்பது அவர்களிடையே மன எரிச்சலை ஏற்படுத்தும் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அது தவிர இன்னுமொரு விஷயம். சொல்வதற்கே கொஞ்சம் சங்கடமானதுதான். மாண்புமிகு திரு. முனு ஆதி அவர்கள் ஒரு சங்கத்தின் தலைவர் அந்த அச்சகத்திலே. மாண்புமிகு திரு. இராமச்சந்திரன், திரு. வீராசாமி போன்றவர்கள் துணைத் தலைவர்கள். இது ஒரு சங்கம். இன்னொரு சங்கத்திலே, மைனர் மோசஸ் என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவர் அவர் தலைமையில் ஒரு சங்கம். அதுவும் இந்த அச்சகத்திலே. இன்னொரு பக்கத்தில் மாண்புமிகு திரு. நாகசுந்தரம், திரு. சி. வி. எம். அண்ணாமலை போன்றவர்கள் தலைமையில் ஒரு சங்கம். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன், அமைச்சரவர்களின் மகன் திரு. சோமு என்பவர், அவர் ஒரு தலைவர். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று சொல்லுகின்ற நேரத்தில் . . . .

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அமைச்சர்களின் உற்றாராகவோ, அல்லது அவர்களிடத்திலே பணியாற்றுபவர்களாகவோ இருந்தால் அவர்களுக்கு நாட்டிலே வாழ்வே இருக்கக்கூடாது என்று, அதுவும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக உள்ள மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் சொல்வது நியாயம் அல்ல. சோமு தலைவராக இருந்தார் என்று சொல்லுகிறார்கள். ஏன் இருக்கக் கூடாதா? இருந்தால், தவறு என்று கூற முடியுமா? மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் இப்படிப் பேசக் கூடும் என்பதிலே சோமு அப்பொறுப்பிலிருந்து விலகி எத்தனையோ நாட்களாகிவிட்டன என்பதை உறுப்பினரவர்கள் அறிய வேண்டுகிறேன்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம்:** அமைச்சரவர்களுக்கு உறவினர்கள் தலைவராக இருக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. வேலை நல்ல முறையில் இருக்க வேண்டும். அரசு அச்சகத்திலே கூட ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று சொல்லுகிறோம். பல்வேறு கட்சிக்காரர்களைக் கொண்டு தனிச்சங்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. காங்கிரஸ் கட்சிக்குத் தனி சங்கம். நாங்களும் வலது சாரியும் ஒன்றாக இருப்போமா என்பது சந்தேகம். ஆனால் நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரே சங்கம் அமைத்தாலும் கூட பரவாயில்லை. அமைச்சர் மகன் என்பதற்காகக் கூறவில்லை. ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், கடமை கண்ணியம், கட்டுப்பாடு என்று சொல்லக்கூடியவர்கள், அந்தக் கட்டுப்பாடு என்பதை நீங்கள் விட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

அம்மையார் அவர்கள்கூட சென்ற முறை சொன்னார்கள். வோட்டு எடுத்து, எந்தச் சங்கத்திற்கு மெஜாரிட்டி இருக்கிறதோ அந்தச் சங்கத்தை ஏற்படுத்துவது என்ற யோசனையை ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள். அது நல்ல யோசனைதான். அப்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அனைவரும் சேர்ந்து ஒரு சங்கம் என்று ஏற்படுத்த வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். 4 எம். எல். ஏக்கள், அதுவும் ஒரே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களைக்கொண்டு 4 விதமான சங்கங்கள் ஏற்படுகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. அப்படியிருந்தால் நிர்வாகம் ஒழுங்காக வேலைசெய்ய உதவி

செய்யாது, தொழிலாளர்களுக்கு நன்மை தராது. எனவே, அந்த நிலைமைகள் இருக்கக்கூடாது. நான் கூறியதை அமைச்சரவர்கள் தவறாகப் புரிந்துகொள்ள மாட்டார் என்று கருதுகிறேன். வேறு எங்கு சொல்வது? தற்சமயம் அவர்கள் மகன் விலகியிருக்கிறார் என்று கேட்க மிக்க மகிழ்ச்சி. லேபர் டிமாண்ட் வரும் பொழுது வேறுபலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். அச்சகத்திலே 4,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், அங்கு ஒரே சங்கமாக இருக்க வேண்டும். நிர்வாகத்திலே சொளடிந்தனம் புரியும் காலிகள் வந்துவிடுகிறார்கள். அது இன்னும் மறையவில்லை. இப்படியிருந்தால் நிர்வாகம் எப்படி நடக்கும் என்பதை யோசிக்க வேண்டும். இது நிர்வாகத்திற்குத் தொந்தரவாக இருக்கும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வேலைக்கு எடுப்பதிலுள்ள ஒழுங்கீனங்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். தொழிலாளர்களின் கோரிக்கைகள் வரும்பொழுது கவனிக்க வேண்டும். கம்பா சிட்டார்கள் 1000 இன்ஸ் பார்ப்பது என்பது நான் விசாரித்த மட்டும் சரியல்ல. பல வெளி அச்சகங்களிலே 500 இன்ஸ்தான் வைத்திருக்கிறார்கள். இங்கு 1000 இன்ஸ் என்று வைத்து அவர்களுக்கு வேலைப் பளு உண்டாகி, அவர்கள் துன்பங்களுக்கு, தொல்லைகளுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதை கட்டாயமாக மறுபரிசீலனை செய்து, அந்தக் குறைகளுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். வெளியிலே உள்ள அச்சகங்களின் நிலைமைகளைப் பரிசீலித்து, அதற்குத் தகுந்த முறையில் வேலைப் பேரளவை குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு வேலையே இதுவரை அங்கு இல்லை என்பதை, பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த அமைச்சரவர்கள், ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்களின் துறையிலிருந்து வந்த பிரிவை கையில் வைத்திருப்பவர்கள், கட்டாயமாக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து இங்கு பேச விரும்புகிறேன்.

பத்திரப் பதிவு பற்றிப் பேசும் நேரத்தில், பாரம்பரியமாக வந்த தனிப்பட்ட உரிமைகளைக் காப்பாற்ற வேண்டும், சொத்துக்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்ற முறையில், ஓலைச் சுவடிலிருந்து இன்றையதினம் காகிதங்கள் மூலம் உருவாகியிருப்பதால், அந்தக் காகிதங்களை நல்ல முறையில் காப்பாற்றப்பட வேண்டுமென்ற முறையில் இன்றையதினம் காப்பாற்றப்படவில்லை என்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம். ஒவ்வொரு பதிவு அலுவலகத்திற்கும் கட்டிடம் இல்லை என்று மாநில அளவில் எல்லா அங்கத்தினர்களும் வலியுறுத்தினார்கள். அரசாங்கம் அதுகுறித்து வெகுதீவிரமாக நடவடிக்கை எடுத்து, யார் யாருடைய பதிவுகள், எந்த எழுத்து அளவுகள் பாதிக்கப்படும் என்பதை அரசாங்கம் உணர வேண்டுமென்று இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். இதனால் சில பதிவேடுகள் மழையினாலும், தனிப்பட்டவர்களின் கட்டிடங்களில் இருப்பதனால் மற்றக் காரணங்களினாலும் அழிக்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. சில அலுவலகங்களுக்கு நல்ல கட்டிடம் இல்லாமல் இருப்பதால் திருட்டுக்கள் ஏற்படுகின்றன என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.



தற்போது இந்தப் பதிவு அலுவலங்கள் மூலமாக 'பைலிங் சிஸ்டம்' ஏற்படுத்துவதனால், மாநில அளவில் பெரிய வேலை நீக்கம் ஏற்பட்டாலும், மேலதிகாரிகள்தான் உயர்ந்திருக்கிறார்கள். அதனால் அரசாங்கத்திற்கு என்ன நன்மை என்று புரியவில்லை. கீழேயுள்ள எழுத்தர்களை எடுத்துவிட்டால் அரசாங்கத்திற்கு லாபமா, அல்லது மேலதிகாரிகளை அதிகமாக நியமித்தால் அரசாங்கத்திற்கு லாபமா என்ற நிலையில் கீழேயுள்ள எழுத்தர்களை நீக்கிவிட்டால் அரசாங்கத்திற்கு எந்தவிதமான லாபமும் இல்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இன்றைக்குக் கடன்களை அரசாங்கத்தின் மூலமும், வங்கிகள் மூலமும் கொடுக்க வில்லங்கம் வாங்க வேண்டிய நடைமுறை இன்று நாட்டிலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. ஒரு வில்லங்கத்தை எடுக்க, பதிவு அலுவலகத்திலே 5 மணி நேரம் ஒதுக்குகிறார்கள். ஆனால் 5 மணி நேரம் என்றால் ஒரு நாளைக்கு இரண்டு என்று பார்த்தால் கூட ஒரு எழுத்தர் இரண்டுதான் முடிக்க முடியுமே தவிர, வரக்கூடிய கோரிக்கைகள், விண்ணப்பங்களுக்குச் சரியான முறையில் இந்த வில்லங்கத்தை எடுத்துக் கொடுக்கமுடியாது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதனால் அதிகமான எழுத்தர்கள் கீழ் மட்டத்திலே மிகமிக அவசியம் என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

இந்தப் பதிவு நிலங்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டிருப்பது இன்றைக்கு மக்களுக்குத் தெரியாமலிருக்கிறது. ஏதோ மார்க்கெட் மதிப்பு வேல்யூ என்று அரசாங்கம் நிர்ணயித்து விலையை மறுபரிசீலனை செய்தால் நல்ல முறையில் இருக்கும். அதோடு மட்டுமல்ல, பத்திர விற்பனையாளர்களுக்கும், அரசாங்கத்திற்கும் கமிஷன் முறையில் தகராறு ஏற்பட்டு, நீண்ட நாட்களாகப் பல கோரிக்கைகள் வந்து பரிசீலனை செய்யாமல் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேறாத அளவில் மிகவும் வருத்தமுற்றிருக்கிறார்கள். உரிய முறையில் அதையும் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று இங்கே, நான் இந்த அவைத் தலைவர் மூலமாக அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனது தொகுதியாகிய கணியம்பாடி தொகுதியிலே கண்ணமங்கலம் என்ற இடத்திலே பதிவு அலுவலகம் இருந்தது. வேலூரிலிருந்து 12 மைல் தூரம் இருக்கும். ஆனால் 52 மைல் தூரத்திலிருக்கும் திருவண்ணாமலையில் ஜில்லா தலைமையிடத்தை மாற்றியிருப்பது வருந்தத் தக்கதாகும். வேலூருக்கு செல்லாமல் திருவண்ணாமலைக்குச் செல்வது பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கிறது. அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

உத்தியோக உயர்வு பற்றி மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இங்கே குறைகூறியபடி பல தவறுகள் ஏற்பட்டிருப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. எனவே, பத்திரப் பதிவு அலுவலங்களிலே இருக்கக் கூடியவர்களைச் சீரும் சிறப்புமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அச்சுத்துறையிலே, ஜி.டி.ஆர்., அதாவது ஜெர்மன் அரசாங்கம் ஒரு கோடி ரூபாய் இலவசமாகத் தந்தது. ஏழை எளிய மக்களுக்கு புத்தகங்கள் வாங்கித் தர வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்வதுபற்றி விளக்கமே இல்லாமல் இருக்கிறது. எனவே, இதனால் ஏழை எளிய மக்களுக்கு இலவச புத்தகங்கள் வாங்கித் தர நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இன்றைக்குக் கொடுக்கக்கூடிய புத்தகங்களும் கிராமபுறங்களிலே ஆரம்பப் பள்ளியிலே படிப்பவர்களுக்குத் தான் தரப்படுகிறது. அதை எட்டாவது வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கு இந்தப் புத்தகங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தனியார் துறையில் இருக்கும் அச்சகங்களிடம் அரசாங்க ரெக்கார்டுகளை அச்சிட கொடுப்பது மிகமிக வருந்தத்தக்கது. மாவட்டந்தோறும் ஒரு அச்சு அலுவலகம் ஏற்படுத்த வேண்டுமென்ற நிலை ஏற்பட்டது, அது எந்த வகையிலேயும் பரிசீலனையில் இல்லாமல், காலம் கடத்துவது அசாங்கத்திற்குப் பெருவாரியான இழப்புதான் என்பதை வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

வேலூரிலே ஏற்கெனவே அரசாங்க அச்சகம் ஏற்படுத்த வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தி, அதற்கான தீவிரமான திட்டத்தையும் அரசு ஏற்படுத்தி, அது மத்தியிலே காலதாமதமானது ஏன் என்பது தெரியாமல் இருக்கிறது. மேலும் குழந்தைகளுக்கு அச்சிட்டுக் கொடுக்கக்கூடிய புத்தகங்கள் மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கவேண்டும். கவர்ச்சியாக இருந்தால் தான் கல்வி போதிக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் குழந்தைகளுக்கு நல்ல முறையில் போதிப்பதற்கு சௌகரியமாக இருக்கும். குழந்தைகள் நன்றாகப் படிக்கவேண்டுமென்றால், புத்தகங்கள் கவர்ச்சிகரமாக இருக்க வேண்டும். பழைய பாணியிலேயே கவர்ச்சி இல்லாமல் சாதாரணத் தாளில் அச்சிட்டுத் தருவதில் பயனில்லை. அழகான புத்தகங்களை கவர்ச்சியான முறையிலே வண்ணப் படங்களோடு அச்சிட்டுக் கொடுத்தால், குழந்தைகளின் கல்விக்கு அது ஒரு எடுத்துக்காட்டாக அமையும், குழந்தைகளும் ஆர்வத்தோடு படிக்கக்கூடும். ஆகவே, அவர்களுக்கு ஆர்வம் ஊட்டக்கூடிய கவர்ச்சிகரமான புத்தகங்களை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வரக்கூடிய சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள் காலம் தாழ்த்தி வருவதைத் தவிர்ப்பதற்கு அரசு விரிவான நடவடிக்கை எடுத்து, பரிசீலனை செய்யவேண்டும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

■ **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பத்திரப் பதிவுத்துறை பற்றியும், எழுதுபொருள், அச்சுத்துறை பற்றியும் பலவிதக் கருத்துக்களை இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் பலவும் இந்த இரண்டு துறைகளும் இன்னும் திறமையாகச் செயல்படுவதற்குத் துணையாக இருக்கின்றன என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே பேசிய நமது கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அரசு அச்சகத்தைப் பற்றி சில விவரங்களைக் குறிப்பிட்டார்கள். நான் அதற்கு ஓரளவு பதில் அளித்திருக்கிறேன் என்றாலும், சிலவற்றை விளக்கமாகச் சொல்லவேண்டியது அரசின் கடமையாகும். சாதாரணமாக இப்பொழுது அரசியல் துறையில் ஒரு எண்ணம் பரவியிருக்கிறது. அது நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் நன்மை பயக்காது என்பது என்னுடைய எண்ணமாகும். அமைச்சர்களுடைய உற்றார், உறவினர் அல்லது அமைச்சர்களிடத்தில் பணியாற்றக்கூடியவர்கள் இந்த நாட்டில் வாழவே கூடாதா? சாதாரணமான மனித உரிமைகள் என்பதைக்கூட அவர்கள்



பெறக்கூடாதா? எந்த ஒரு உரிமையையும் அவர்கள் பெறக்கூடாது என்ற மனோபாவம் வளர்ந்து வருகிறது. அந்த மனோபாவம் சமுதாயத்திற்கே கேடு பயப்பதாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு தவறு செய்திருக்கிறது என்பதைத் திட்டவட்டமாகச் சொன்னால், அதைத் திருத்திக்கொள்ள நாங்கள் சற்றும் பின்வாங்கமாட்டோம் என்பதை உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவ்விதம் சொல்வதற்கு ஒன்றுமில்லை என்பதற்காக எதை எதையோ பேசுவது நியாயமாகாது.

இங்கே அரசு அச்சகத் துறையிலே பல சங்கங்கள் இருப்பதாக மாண்புமிகு பாலசுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நாங்கள் அரசுப் பொறுப்பை ஏற்றவுடனேயே, அதற்கு முன்பே கூட, இந்த அரசின் சார்பாக மட்டுமின்றி, எங்களுடைய கழகத்தின் சார்பாகவும் ஒரு தொழில் நிறுவனத்திற்கு ஒரு சங்கம் இருக்கவேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தி வந்திருக்கிறோம். பேறிஞர் அண்ணா அவர்கள் இதைப் பல முறை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியத்திற்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். சென்னையிலே உள்ள பக்கிங்ஹாம் கர்நாடிக் மில்லில் நீண்ட காலமாக ஒரு தொழிற்சங்கம் தான் அதாவது மெட்ராஸ் லேபர் யூனியன் என்ற தொழிற்சங்கம், காலம் சென்ற தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்களின் தலைமையிலே இயங்கிவந்து, அதைத் தொடர்ந்து பலரும் அதன் நிர்வாகத்தை ஏற்றுவந்தார்கள். அந்தத் தொழிற்சங்கத்தை இரண்டாக்கவேண்டும் என்று நம்முடைய தோழர் பாலசுப்பிரமண்யத்தின் இயக்கத்தைச் சேர்ந்தவர் அண்ணா அவர்களைக் கேட்டார்கள். எப்படியாவது அந்தச் சங்கத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று அவர்கள் சொன்னபொழுது, அண்ணா அவர்கள் சொன்னார்கள். 'அந்த நிலைக்கு நான் ஆளாக மாட்டேன், அந்தச் சங்கத்தை முறைப்படி வேண்டுமானால் கைப்பற்ற வேண்டுமே தவிர, அதற்காகப் போட்டிச் சங்கத்தை வைப்பதற்கு என்னுடைய கழகம் துணை இருக்காது' என்று சொல்லியிருப்பதை கனம் உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். மற்றும் இங்கே 4, 5 சங்கங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். முதல்வர் அவர்களும், நானும் கவர்ன்மெண்டு பிரஸில் ஒரு விழாவிற்குப் போயிருந்த பொழுது நாங்கள் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தது இது தான். 'பல சங்கங்கள் இங்கே இருப்பது உங்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு ஏற்றதாக அமையாது.. எல்லோரும் சேர்ந்து ஒரே சங்கத்தை நிறுவ ஒரு பொதுத் தேர்தலை நீங்கள் நடத்த வேண்டும்' என்றுதான் நாங்கள் அங்கே எடுத்துக் கூறி வந்திருக்கிறோம். ஆதலால், ஒரு தொழில், நிறுவனத்திற்கு ஒரு தொழிற்சங்கம் என்பது, கம்யூனிஸ்டுகளை விட எங்களுக்கு அந்தத் தத்துவத்தில் அழுத்தமான நம்பிக்கையும், தூய்மையான எண்ணமும் இருக்கிறது என்று இங்கே விளக்க ஆசைப்படுகிறேன்.

எனது மகன் சோமு அச்சுத் துறையில் ஒரு சங்கத்தின் தலைவராக இருப்பது பற்றிக் குறிப்பிட்டார். பொது வாழ்விலே அவனுக்குப் பொதுவான [illegible] உண்டு. தோழர் பாலசுப்பிரமணியம் அவர்களின் மகன் அல்லது [illegible]ற்றார், உறவினர் எல்லாம் பொது வாழ்விலே இடம் பெற்றிருக்கவில்லையா [illegible] அறிய விரும்புகிறேன். அவர்கள் அப்படிச் சொன்னது அந்தக் கட்சியி[illegible]டைய தத்துவத்துக்குக் கூடச் சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு

கிறேன். ஆனால், நான் இதைக் கேள்விப்பட்ட பிறகு, கம்யூனிஸ்டுகள் இப்படிச் சொல்லக்கூடும் என்று நான் சந்தேகப்பட்டுத்தான், உடனே அந்தச் சங்கத்தின் தலைமைப் பதவியிலிருந்து விலகுமாறு சொல்லி, திரு சோமுவும் உடனே விலகி விட்டார் என்பதை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். திரு சோமு தொழிற் சங்கத்திலிருந்து விலக வேண்டிய அவசியமேயில்லை என்றாலும், கம்யூனிஸ்ட் தலைவர் பாலசுப்ரமண்யம் போன்றவர்கள் மனோபாவம் திருந்த வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்தான்.

அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு, உற்றார், உறவினருக்கு வேலை வாய்ப்புத் தருவதில் நியாயம் நடைபெறவில்லை என்று சொன்னார். அவருக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அங்கே பணியாற்றுகிறவர்களுடைய உறவினர்களுக்குத் தரப்பட்ட வேலை வாய்ப்பு எண்ணிக்கை 1965-ம் ஆண்டில் 9 சதவிகிதம், 1966-ம் ஆண்டில் 19 சத விகிதம், 1968-ம் ஆண்டில் 46 சதவிகிதம், 1969-ம் ஆண்டில் 50, 33 சதவிகிதம், 1970-ம் ஆண்டில் 60 சதவிகிதம். யாருக்கு? அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுடைய குடும்பத்தினருக்கு. நான் இன்னமும் அதை விளக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், 1970-ல் 74 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், பல இலாகாக்களின் பணியாளர்களாக, அதிலே அங்கே பணியாற்றுகிறவர்களுடைய குடும்பத்தினர் அல்லது உற்றார், உறவினர்களுக்கு தரப்பட்டிருப்பது 45, 74 பணியாளர்களிலே 45 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது 60 சதவிகிதம், எனவே மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்ரமண்யம் அவரது எண்ணத்தை மாற்றிக்கொள்வார் என்று நான் நம்புகிறேன்.

அதைப்போலவே, தொழிலாளர்களுக்கு அங்கு கான்டீன் நடத்தப்படு வதைப் பற்றி குறிப்பிட்டார்கள். நான் பொறுப்பு ஏற்றவுடன் நான் பல முறை சர்பிரைஸ் விஸிட் என்ற முறையில் திடீரென்று அச்சகத்திற்குச் சென்ற பொழுது கான்டீன் ஒழுங்கான முறையில் சுகாதார முறையில் நடத்தப்படாத தை அறிந்தேன். உடனே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, இப்பொழுது ஓரளவுக்கு கான்டீன் சுகாதார முறையில் நடத்தப்பட்டுவருகிறது என்பதை இந்த அவைக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல அங்கு வேஸ்டு பேப்பர் பெரிய வைக்கோல் போர் போல அடுக்கியிருந்தது. அதற்குள்ளே யாராவது ஒளிந்து கொண்டிருந்தால்கூட தெரியாது. அப்படியிருந்தது. உடனே நான் டைரக்டர் அவர்களை அழைத்து, ஏன் இப்படிக் குவிந்திருக்கவேண்டும், இதற்குள் அச்சு இருந்தாலும் தெரியாதே, ஆள் இருந்தாலும் தெரியாதே, ஏன் அதை அப்புறப்படுத்தவில்லை என்று கேட்டு, உடனே தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்பொழுது அவ்வப்பொழுது வேஸ்டு பேப்பரை உடனே எடுத்துக்கொண்டு போகவேண்டும் என்று டெண்டர் எடுப்பவர்களுக்குக் கடுமையாக உத்தரவிடப்பட்டு, அதன்படி செயல்பட்டு வருகிறது.

தகாத வழியில் சிலர் மவுண்ட்ரோட் அச்சகப்பிரிவில் ரகளை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அப்பேர்ப்பட்ட குறைபாடு களைப்பற்றி விசாரித்து, அது உண்மையாயிருக்குமானால், அதைத் தடுப்ப தற்கு, அரசு ஆவன செய்யும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அரசு அச்சகத்திலேதான் அரசு சம்பந்தப்பட்ட எல்லா அச்சுப் பணிகளும் நடைபெறவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. மாண்பு மிகு முதல்வர் அவர்களிடம் இதைப் பற்றிக் கலந்து உரையாடியபொழுது கூட, அவர்கள் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் சர்க்கார் அச்சகம் அமைய வேண்டும் என்பதையும் கொள்கை அளவில் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், நிதிநிலை நமக்கு வசதியாக அமையும்பொழுது அரசு சொந்த அச்சகங்கள் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் அமைக்கும். அதே சமயத்தில் தனியார் அச்சகத்திற்கு, அச்சுப் பணிக்கு எவ்வளவு தந்து வந்திருக்கிறோம் என்பதற்கும் உங்களுக்கு தான் சில புள்ளிவிவரங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். 1966-67ம் ஆண்டில் தனியார் அச்சகத்தில் செய்த வேலையின் மதிப்பு ரூ. 20,16,096. அதாவது, மொத்தப் பணியில் இது 16.45 சதவிகிதம். 1967-68-ல் இதுவே 4.96 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. ஆக, 1966-67-ல் 16.45 சத விகிதமாக இருந்தது, 1967-68ல் கிட்டத்தட்ட 5 சத விகிதமாகக் குறைந்திருக் கிறதென உறுப்பினரவர்கள் நினைவில் கொள்ள வேண்டுகிறேன். 1968-68-ல் இப் பொழுது 2.36 சதவிகிதம் தான் அந்த அளவிற்கு தனியார் அச்சகங்களுக்குக் கொடுக்கப்படும் வேலையின் அளவு குறைந்திருக்கிறது. தனியார் அச்சகங் களிலே கொடுக்கப்படும் வேலைகளைக் குறைப்பதற்குக் காரணம், அரசின் எல்லா வேலைகளும் அரசு அச்சகத்திலேயே நடைபெற்றால் பலருக்கு வேலைவாய்ப்புகள் தந்து, வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கும் வகையில் ஆவனசெய்ய வேண்டும் என்பதுதான். அதே நேரத்தில், சென்னையிலேயிருந்து மாநிலம் முழுவதிற்கும், அச்சடிக்கப்பட்ட புத்தகங்கள், அரசுக்குறிப்புத் தாள்கள் மற்ற வைகள் திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற இடங்களுக்கு அனுப்புவதில், போக்குவரத்துச் செலவும் அதிகமாக ஆகிறது; வசதிக் குறைவும் ஏற்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு அச்சகம் இருந்தால், சென்னையிலே யிருந்து அனுப்புவதில் ஏற்படும் செலவு குறைக்கப்படுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொண்டு நடைமுறையில் அதைச் செய்ய நிதிநிலை அனுமதித்தவுடன் அது நிச்சயமாக நிறைவேறும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அப்படி அமைக்கும்போது, மதுரையில் முதலாவதாக ஒரு அச்சகம் நிறுவப்படும். மற்ற இடங்களுக்கும் நிதிநிலை வசதிக்கேற்ப அமைப் பதற்கு ஆவன செய்யப்படும்.

தொழிலாளர்களுக்கு கான்டீனில் கொடுக்கப்படும் டீ, பன் போன்றவைகள் பற்றி எடுத்துக் கூறினார்கள். நானே நேரில் சென்று சாப்பிட்டுப் பார்த்தேன். எனக்குக் குமட்டுவது போல் இருந்தது. உடனடியாக நல்ல ரொட்டியையும், தேனீரையும் தருவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, கவர்ன்மெண்ட் ப்ரஸ் மெயின் கேட்டிலிருந்து அரை பர்லாங்கு தூரம், பெரிய மண்டபம், ஓய்வு நேரத்தில் தொழிலாளர்கள் உட்கார்ந்து இளைப்பாறுவதற்கு அமைக்கப்பட்டது. ஆனால் அந்த மண்டபம் போன்ற இடத்தில், பொதுவீதி போல வெளியாரும் நடமாடிக்கொண்டு இருப்பார்கள். நான் திடீர் சோதனை யிட்டதன் காரணமாக இப்பொழுது வெளி கேட்டில் தொழிலாளர்களைத் தவிர யாரும் போகக் கூடாது என்று உத்தரவு போட்டு ஒழுங்குப்படுத்தப்பட்டிருக் கிறது. இதையெல்லாம் சொல்லுவதற்குக் காரணம் அரசு ஏற்கனவே அரசு அச்சுத் துறை நல்ல முறையில் இயங்க நடவடிக்கை எடுத்திருக்கிறது

என்பதை விளக்கவேயாகும். என்றாலும், நீங்கள் சொன்ன பல யோசனைகளையும் நினைவில் வைத்து ஆவனசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது அரசு வெளியிடும் பரிசுச் சீட்டில் இரண்டொரு தவறுகள் ஏற்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். இதுவரையில் ஏற்பட்ட தவறுகள் என்று எடுத்துக் கொண்டால் இரண்டொன்றுதான் இருக்கும். பொதுவாக அச்சகத்தில் பழக்கம் உள்ளவர்களுக்குத் தெரியும். எவ்வளவு கண்காணிப்பாகயிருந்தாலும் அச்சகத்துறையில் பிழை ஏற்படும் என்று. மை அதிகமாக விழுந்து, ஒரு தாள் மற்றொரு தாளில் ஒட்டிக்கொண்டு கெட்டுவிடுகிறது. அப்படியிருப்பதை எவ்வளவு எடுத்துவிட முடியுமோ அவ்வளவுக்கு எடுத்து அழித்துவிடுகிறார்கள். ஆனாலும் அதையும் மீறி ஒன்றிரண்டு தவறு ஏற்பட்டுவிடுகிறது. அந்தத் தவறுகூட ஏற்படக்கூடாது என்பது தான் அரசின் எண்ணமாகும். எனவே அரசு அச்சகத்தின் இயக்குனருக்கு இது பற்றி எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான பரிசுச் சீட்டுகள் அச்சிடப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரப்பதிவுத்துறையில் பதவிகள் கொடுப்பதில் தவறுகள் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அதற்குத் தக்க ஆதாரங்களைச் சொல்லவில்லை. எனினும் நான் அது குறித்து விசாரிக்கிறேன். தவறு இருக்குமானால் இனி ஏற்படாத வண்ணம் கண்காணிக்கப்படும். தவறு இல்லை என்றால், அரசு நல்ல முறையில் நடக்கிறது என்கிற எண்ணத்தை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

பதிவுத் துறையை எடுத்துக் கொண்டால், பல உறுப்பினர்கள் நல்ல பல யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். சொந்தமாகக் கட்டடத்தில் அலுவலகங்கள் இயங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அரசின் எண்ணமும் அதுவேதான். ஆண்டுக்கு ஒரு முறை இது பரிசீலிக்கப்பட்டு, ஆறு புதிய துணைப்பதிவு அலுவலகங்கள் சொந்தமாக இருக்கும் வகையில் ஏற்பாடு செய்யப் பட்டுவருகிறது. அதற்கான திட்டமும் இருக்கிறது. சாதாரணமாக வாடகைக் கட்டடங்களுக்கு மாத வாடகை 600, 700 ரூபாய் என்று தரப்பட்டு வருகிறது. இதுவே ஆண்டுக்கு ஏறத்தாழ ஒரு துணைப்பதிவாளர், அலுவலக வாடகை ரூ. 10,000 என்று ஆகிவிடுகிறது. மூன்று ஆண்டு வாடகையைக் கணக்கிட்டால் அரசே சொந்தமாகவே கட்டடம் அமைத்துவிடலாம். அது அரசின் உடைமையாகவும் சேரும். ஆகவே, பதிவாளர் அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள அரசு யோசித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நில மதிப்பீடு செய்வதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். சிலபேர் மதிப்பீட்டை எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துச் சொல்ல வேண்டுமோ அவ்வளவு சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லும் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தற்போதுள்ள மதிப்பையும் பரிசீலனை செய்து பார்க்கிறார்கள். மதிப்பீடு மிகவும் குறைவாகயிருந்தால், தக்க மதிப்பீட்டுக்கேற்ப கட்டணம் உயர்த்தப்படுகிறது. அப்படி உயர்த்தப்படுவது நியாயமாகயில்லையென்று நில உரிமையாளர்கள் எண்ணுவார்களேயானால் அவர்கள் [illegible]ட்ட ஆட்சித் தலைவருக்கு எடுத்துக்கூறி நியாயம் பெறுவதற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.



திரு. இராமமூர்த்தி அவர்கள் நியாயம் பெறுவதில் தாமதம் என்று சொன்னார்கள். தாமதத்தைத் தவிர்த்து, எந்த முறையில் துரிதப்படுத்தமுடியுமோ அந்த முறையில் செய்யப்படும் என்று அரசு சார்பில் தெரிவிக்கிறேன்.

திரு. பட்டாபிராமன் 4, 5 பெயர்களைச் சொல்லி ப்ரமோஷன் முறைப்படி தரப்படவில்லை, சர்க்காருக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். முறைப்படி தரப்படவில்லை என்று சொல்வதோடு இருந்தால் அது வேறு. அதைப் பரிசீலனை செய்யலாம்.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

ஆனால், சர்க்காருக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சேர்த்துச் சொல்வதுதான் வருத்தமாக இருக்கிறது. எல்லோரும் அரசுக்கு வேண்டியவர்கள்தான். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்பது அரசுக்கு இல்லை. பத்திரப்பதிவுத் துறையில் பணியாளர்களை நியமிக்கும்போது, தாழ்த்தப்பட்டவர்களை அதிகமாக நியமிக்கவில்லை என்று சுதந்திராக் கட்சி உறுப்பினர் திரு. ராமசாமி கவுண்டரும், மற்றும் பல உறுப்பினர்களும் எடுத்துக் கூறினார்கள். விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை விசாரிக்கிறேன். அரசின் நோக்கம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்புக்கள் அதிகம் கொடுக்க வேண்டும் என்பதுதான். இந்தத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அரசு புதிய சலுகைகள் தந்துள்ளன. எனவே பொது மக்களுக்கும் இந்தத் துறை பணியாளர்களுக்கும் நன்மை பயக்கும் அளவில் இயங்க சொன்ன கருத்துக்களை கவனத்தில் கொண்டு மேலும் ஆவன செய்யப்படும்.

சிட் பண்ட் பற்றி திரு. ஏ. எல். சுப்பிரமணியம் கூறினார்கள். விதிமுறைகள் சட்டத்திலே இடம் பெறச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அதைப் பற்றி இலாகாவின் அதிகாரிகளைக் கலந்து பேசி விரைவில் ஆவன செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிட் பண்ட் பற்றிய விதிமுறைப் புத்தகங்கள் கிடைக்கவில்லை, அச்சகத்தில் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். தாமதம் இல்லாமல் உடனடியாக வழங்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து திரு. ஏ. பாலசுப்பிரமணியம் அவர்கள், 'சிரணி' 'மேழிச்செல்வம்' போன்ற புத்தகங்கள் எல்லாம் வெளியே அச்சடிக்கப்படுகின்றன என்று தெரிவித்தார். கெஜட் நாள் தவறாமல் வெளிவருவதற்காகத்தான் இந்த வேலைகள் வெளியார் அச்சகங்களில் அச்சடிக்கப்படுகின்றன. எனினும் எல்லா வேலைகளையும் அரசாங்க அச்சகத்திலே அச்சடிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மானியத்தின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இன்னும் அதிகமான வசதிகளைச் செய்ய வேண்டும் என்றுதான் கூறியிருக்கிறார்கள். அது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆகவே, வெட்டுப்பிரேரணைகளைக் கொடுத்திருக்கிற உறுப்பினர்கள் அருள்கூர்ந்து திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

நிதிக்கோரிக்கை எண். 5-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. க. ராமமூர்த்தி, திரு. ஏ. அ. சுப்பாராஜா, திரு. ஆர். கனகசபை ஆகியோருடைய

வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக்கோரிக்கை எண். 5 பத்திரப் பதிவுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 93,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை 34-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. இல. பலராமன், திரு. ஏ. அ. சுப்பராஜா, ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —

"நிதிக் கோரிக்கை எண். 34—பெருதுபொருள்—அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 277,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண். 6—மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண். 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,55,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU K. VINAYAKAM: Sir, to discuss about the desirability of permitting the members to tour our State in particular and the country in general to gain first hand knowledge, I move the cut motion standing in my name, viz.

"That the allotment of Rs. 23,55.600 under Demand No. 6 State Legislature—be reduced by Rs. 100.".

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை கூடும் தினங்களில் சட்டமன்ற உறுப்பினர் அளிக்கக்கூடிய குறிப்புகளைக் கொண்டு வெட்டுத் தீர்மானங்களோ அல்லது கேள்விகளோ, ஏனைய தீர்மானங்களையோ தயாரித்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உறுதுணையாக இருக்கத்தக்க தேர்ச்சி பெற்ற நபர்களைக் கொண்டு ஒரு தனி இலாகா அமைப்பது குறித்து விவாதிக்க—

I move cut motion standing in my name, viz.

"That the allotment of Rs. 23,55,600 under Demand No. 6 State Legislature—Be reduced by Rs. 100."





திரு. ரா. கனகசபை: தலைவர் அவர்களே, சட்டமன்றம், பாராளுமன்றம் போல் என்னென்ன காலங்களில் குறிப்பிட்ட தேதிகளில் கூடுவது முன் கூட்டியே தேதியை நிர்ணயித்து செயல்பட வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 23,55,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர்களுக்கு மேலும் வசதிகளை அதிகரிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 23,55,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, ஆண்டுக்கு 100 நாட்களுக்குக் குறைவாமல் சட்டமன்றக் கூட்டம் நடத்த வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 23,55,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சட்டமன்றக் கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் ஒரு ஆண்டில் குறைந்தது 100 நாட்கள் சட்டப் பேரவைக் கூட்டம் நடத்த உத்திரவாதப்படுத்தவேண்டும் என்றும் வற்புறுத்த—

"நிதிக் கோரிக்கை எண். 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 23,55,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, உறுப்பினர்களால் அனுப்பி வைக்கப்படும் கேள்விகளுக்கு காலாகாலத்தில் பதில் வாராதது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 23,55,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் சமயம் காலை 9 மணியிலிருந்து பகல் 1-30 மணி வரை ஆவதால் மக்களின் நலனை ஒத்த பல பிரச்சினைகளை விவாதிக்கும் நேரத்தில் உற்சாகத்தோடு விவாதிக்க காபி, போன்ற இலவச பானங்கள் அளிக்காதது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 23,55,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும், பேரவையின்முன் விவாதத்திற்கு வருகின்றன.

**திரு. ப. மகாதேவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டசபை பற்றிய மானியக் கோரிக்கையின்மேல் என் கட்சியின் சார்பாக கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி மிகவும் பொறுப்பு வாய்ந்தது, சக்தி வாய்ந்தது, பலமுறையிலும் அதனுடைய வளர்ச்சிக்கு ஆளும் கட்சியினர் உதவிபுரிய வேண்டுமென்று சொல்வது மரபாக இருக்கிறது. தேர் ஓடுவதற்கு எப்படி அச்சாணி உறுதுணையாக இருக்கிறதோ, அதேபோல அரசு சரியாகச் செல்வதற்கு எதிர்க்கட்சி அச்சாணியாக இருக்கிறதென்று சொல்வார்கள். மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் 'பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' பார்க்கக்கூடிய உதாரணத்தை அடிக்கடி சொல்வார்கள். பானையில் இருக்கும் சோற்றை அகப்பையிலே எடுக்கிறோம். பானையிலிருந்து சோற்றை எடுக்கிற அகப்பையாக எதிர்க்கட்சி இருக்க வேண்டுமென்று மறைந்த அண்ணா அவர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இன்றுள்ள நிலையில் எதிர்க்கட்சிகளுக்கு--அதிகாரபூர்வமான எதிர்க்கட்சிக்கும்--எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் அதிகாரங்களும், உரிமைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று ஆராய வேண்டியிருக்கிறது.

ஜனநாயகப் பண்பாட்டிலே நம்முடைய மாமன்றம் நடைபெறுகிறது என்று சொல்வதிலே வியப்பு இல்லை. மற்ற மாநிலங்களிலுள்ள சட்டசபைகளில் காலில் இருக்க வேண்டியது கைக்கு வருகின்ற அளவில் அசம்பாவிதங்கள் நடப்பதையெல்லாம் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். நம்முடைய சட்டமன்றம் மிகவும் நல்ல பண்பாட்டோடு, தமிழர்களின் பண்பாட்டிலே, அழகான முறையில்தான் நடைபெறுகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த மன்றத்திலே எதிர்க்கட்சிக்காரர்களுக்கு பேசும் உரிமை அதிகம் இருக்கிறதா, அவர்களுக்கு அளிக்கப்படும் காலம் அதிகம் இருக்கிறதா என்பதையெல்லாம் பார்த்தால், வர வர குறைந்துகொண்டே வருகிறது என்பது தெரிகிறது. முன்பெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு கூடுதலான நேரம் வேண்டுமென்று, அன்று எதிர்க்கட்சியாக இருந்த ஆளும் கட்சியினர் கேட்டார்கள். இப்போது ப்ரபோர்ஷனேட் என்ற முறையிலே அந்த அளவிற்குக் கொடுக்கப்படவில்லை. உதாரணமாக சப்ளிமென்டரி கேள்விகளுக்கு நாம் அவைத் தலைவருடைய கண்ணின் பார்வையை, கண்ணின் கடாட்சத்தை ஈர்க்க வேண்டியிருக்கிறது. அங்கத்தினர்கள் அவருடைய பார்வையைக் கவர வேண்டியிருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சபையின் எல்லா உறுப்பினர்களையும் பார்க்கும்படியான நிலைமையை நான் உண்டாக்கவில்லையா?

**திரு. ப. மகாதேவன்:** தாங்கள் எவ்வளவோ ஆர்வம் காட்டவேண்டும் என்றிருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் கூட்டிய நேரத்தில் ப்ரபோர்ஷனேட் முறையில் வாய்ப்பு தரவேண்டுமென்று சொல்லி, வாய்ப்பு தருகிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு கேள்வி என்றால், எதிர்க்கட்சியில் இருக்கிற சுதந்திராவுக்கு ஒன்று, இன்னொன்றுக்கு ஒன்று என்று வரிசைக்கிரமமாகக் கொடுக்கிறீர்கள். அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில் இருக்கும் நிலைமையைப் பார்த்தால், எப்படியாவது அவைத் தலைவரின் கண்ணைக் கவருவதற்கு கையைத் தூக்குவார்கள், இடத்திலிருந்து எழுந்து நிற்பார்கள். எப்படியாவது அவைத் தலைவரின் கவனத்தை இழுக்க வேண்டுமென்பதுதான் அவர்களுடைய குறிக்கோள். சில அங்கத்தினர்கள் அவைத் தலைவரின் தயவுக்



காக, இப்படி, அப்படி அசைந்து அவரின் கவனத்தை ஈர்ப்பார்கள், சிலர் பரதநாட்டியத்தில் கெஞ்சுவதற்கென்றிருக்கிற முத்திரை போல் விரலை மடக்கி கையைத் தூக்கியபடியே இருப்பார்கள், சிலர் கையைத் தூக்கியபடியே இருந்தால், வலி எடுக்கும். அவர்களுக்கு பழங்காலத்து முனிவர்கள் தண்டம் வைத்துக்கொள்வார்களே அம்மாதிரி ஏதாவது கொடுத்தால் சௌகரியமாக இருக்கும். இப்படியாக எவ்வளவோ முயற்சி எடுத்து அவைத் தலைவரின் கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பார்கள். நம்முடைய அமைப்பே இதற்குக் காரணமாக இருக்கிறது. இந்த அமைப்பை மாற்றினால் நலமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு நாள் நிகழ்ச்சியிலும் திரு. மார்டின் எந்த இடத்தில் இருக்கிறார், எவ்வளவு கேள்விகள் அவருக்கு வந்திருக்கின்றன என்பதைப் பார்த்தால், அந்தப் பார்வை உங்கள் பக்கம் வந்திருக்கிறதா இல்லையா என்பது தெரியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இந்த மானியத்தின்மீது இதைப்பற்றிப் பேசும் உரிமையைக்கூட ஏன் பறிக்கிறீர்கள்? இதற்குக்கூட நீங்கள் தீர்ப்புக் கொடுத்தால் என்ன ஆவது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அவைத் தலைவர் அவர்கள் இதில் முடிவுரை கூற முடியாது; நானும் இதுபற்றி முடிவுரை கூற முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஐயப்பாட்டுக்கு காரணம் இல்லை என்கிற விளக்கத்தைத்தான் கொடுத்தார்கள்.

**திரு. ப. மகாதேவன்:** நான் குறைபாடாகச் சொல்லவில்லை. திரு. மார்டின் அவர்களுக்குக் கொடுப்பது வரவேற்கத்தக்கது. எங்களுக்கும் மகிழ்ச்சிதான். எங்கள் எல்லோர் மீதும் தங்களுடைய கடாக்ஷம் விழவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து புள்ளி விவரங்கள் சரியாகத் தரப்படாத காரணத்தினால் சில சச்சரவுகள்—சங்கடங்கள் ஏற்படுவதைப் பார்க்கிறோம். எங்களுக்குக் கிடைக்கிற புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டுதான் பேச வேண்டியிருக்கிறது. ஒரு ஏக்கர் என்று சொல்லிவிடுகிறோம். அமைச்சர் அவர்கள் பிறகு ஒரு சென்ட் நிலம் தான் என்று விளக்குகிறார்கள். ஒரு நபருக்கு என்று நாங்கள் சொல்ல ஒரு நபருக்கு அல்ல, ஒரு நிர்வாகத்திற்கு என்று விளக்குகிறார்கள். முதலில் எங்களுக்குச் சரியான புள்ளிவிவரங்கள் கிடைத்துவிட்டால் நாங்களும் அது போல தவறுகிற செய்திகளைச் சொல்லாமல் இருக்க முடியும். அநேகவிதமான குழப்பங்களும் வராமல் இருக்கும். ஆகவே சரியான முறையில் நாங்கள் கேட்கிற விஷயங்களில் சரியான புள்ளிவிவரங்களைச் சேகரித்துக் கொடுப்பதற்குத் தகுந்த பணியாளர்கள் ஏற்பாடு செய்தால் அது மிகவும் நன்றாக இருக்கும். அது சட்டமன்ற இலாக்காவில் இருக்கிற பணியாளர்களின் குறைகளையும் ஓரளவு நீக்கக் கூடியதாக இருக்கும்.

குறிப்பாக சட்டமன்ற இலாக்காவில் ப்ரமோஷன் வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன. சூப்பிரண்டு போஸ்டு கிடைப்பதற்கே மிகுந்த கால தாமதமாகிறது என்று இங்குள்ளவர்கள் குறைபட்டுக்கொள்கிறார்கள். ஜூனியர் அசிஸ்டெண்டாக வருவதற்கு மினிமம் கவாலிபிகேஷன் க்ராஜ்வேட்டாக இருக்கவேண்டும். ஒரு க்ராஜ்வேட் ஜூனியர் அசிஸ்டெண்டாக இந்த இலாக்காவில் சேர்ந்தால் சீனியர் அசிஸ்டெண்ட் ஆவதற்கு இரண்டு மூன்று

[திரு. ப். மகாதேவன்] [1970 மார்ச் 17

ஆண்டுகள் ஆகிவிடும். சீனியர் அசிஸ்டெண்டாக 10 வருடங்கள் பணியாற்றி னாலும்கூட சூப்பிரண்டு ஆவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. அந்தப் பதவி உயர்வு அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. தற்போது கூட அப்படி பத்துப் பேர்கள் ப்ரமோஷனில் வர முடியாமல் இருக்கிறார்கள். இதற்குப் பல காரணங்கள் சொல்கிறார்கள்.

முன்பு அசிஸ்டெண்ட் செக்ரட்ரீஸ் போஸ்டுக்கு ஜுடிஷியல் டிபார்ட் மெண்டில் இருந்து—வெளியில் இருந்து நபர்களை எடுத்துவிட்டார்கள். அதனால் இங்குள்ளவர்களுக்கு ப்ரமோஷன் தடைபட்டிருக்கிறது. அப்படி எடுத்ததற்குக் காரணம்—இந்த இலாக்காவில் லா க்ராஜுவேட்ஸ் இல்லை என்பதாகும். இப் போது அப்படியில்லை. நான்கைந்து லா க்ராஜுவேட்சுகளே இருக்கிறார்கள்.

இவர்களுக்கும் ப்ரமோஷன்—சூப்பிரண்டாக ஆவதற்கும்—உறுப்பினர் களுடைய குறைபாடுகள் தீருவதற்கும் உதவியாக எங்களுக்கு வேண்டிய புள்ளிவிவரங்களைச் சேகரித்து அபிஷியலாகவே கொடுக்க ஒரு தனி பிரிவு ஏற்படுத்தவேண்டும்.

இன்னும் உறுப்பினர்கள் கேள்விகள் எல்லாம் காலதாமதமாக வருகின்றன என்று சொல்கிறார்கள். இப்போதுள்ள கேள்விப் பிரிவையும் பைபர்கேட் செய்து . . .
இன்னொரு சூப்பிரண்டு போட்டு—கேள்விகள் உடனுக்குடன் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

இன்னும் எஸ்டிமேட்ஸ் கமிட்டி, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி போன்று பல கமிட்டிகள் இருக்கின்றன. கமிட்டி பிரிவை எடுத்துக்கொண்டால் இவை அனைத்தையும் ஒரு சூப்பிரண்டு தான் பார்த்து வருகிறார். அதையும் பைபர் கேட் செய்து இன்னொரு சூப்பிரண்டைப் போட்டு கமிட்டி வேலைகள் சீராக நடைபெறவும் வசதி செய்யலாம்.

அடுத்து, ஹாஸ்டலை எடுத்துக்கொண்டாலும் இப்போது அசிஸ்டெண்ட் செக்ரடரிதான் இருக்கிறார். அங்கே ஒரு சூப்பிரண்டு போடலாம். அங்குள்ள வேலைகள் சீராக நடைபெற வசதி ஏற்படும். அதேநேரத்தில் இந்த இலாக்காவில் உள்ள ஏழை ஊழியர்களின் பதவி உயர்வுக்கான வாய்ப்பும் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பாராளுமன்றத்தில் இருப்பதுபோல நல்ல பே ஸ்கேலும் இவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹாஸ்டலில் இப்போது நிறைய ட்ரங்கால்கள் போடப்படுகின்றன. உறுப்பினர்களுக்கே தெரியாது யார் யாரோ போட்டுவிட்டுப்போய்விடுகிறார்கள். அப்படியின்றி—டிரங்க்கால்கள் போடும்போது எக்ஸ்சேன்ஜ் மூலமாகவே அது போடப்படும்படியாகச் செய்யவேண்டும். ரூமுக்கு ஒரு டெலிபோன் வைக்க வேண்டுமென்று சொல்லாவிட்டாலும்—ஒன்றுவது யூனிட் போர்டு அமைத்து நல்லமுறையில் இந்த மாதிரியாக அமைக்கப்படவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஹாஸ்டலில் மாத வாடகை 50 என்று இருந்தது. அதை இப் போது 60 என்று கூட்டியிருக்கிறார்கள். அதையும் கவனிக்கவேண்டும்.

உறுப்பினர்களுக்கு தம் மாநிலத்திற்குள்ளேயே போய்வர இலவச ரயில்வே பாஸ் வாங்கித்தர மத்திய சர்க்காருக்கு எழுதுவதாக அண்ணா அவர்களே



1970 மார்ச் 17] [திரு. ப. மகாதேவன்]

சொன்னார்கள். அந்த வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதாகவும் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் டேப்ரெக்கார்டிங் சிஸ்டம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து டிரான்ஸ்போர்ட் பஸ்களில்—மீட்டிங் நாட்களில் வசதி கொடுக்கப் படுகிறது. மற்ற நேரங்களிலும் ஒரு சலுகை இருந்தால் நன்றாக இருக்கும். திரு. சௌந்தரபாண்டியனைப் போன்றவர்கள் வள்ளியூரில் மவுரிக்கலாக்காகத் தவம் நிற்கவேண்டிய நிலை இருக்காது என்று சொல்லிக்கொண்டு, வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனி பேசும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 6 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

*** திரு. கொளத்தூர் கோதண்டம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக்கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். குறிப்பாக ஆசியா வில் இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழகச் சட்டமன்றம் தான் நியாய மாகவும், நேர்மையாகவும் ஜனநாயக முறையில் செவ்வையாக நடைபெறுகிறது என்பதை மற்றவர்கள் பார்த்துப் பாராட்டுகின்ற அளவுக்குச் செயல்பட்டு வரு வதை நாம் அறிவோம்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன குறிப்பிட்டிருந்தாலும் இப்போது நடைபெறுகிற நிகழ்ச்சிகளைக்கொண்டே பார்க்கலாம். குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன சொன்னாலும் —இன்று நடந்த நிகழ்ச்சிகளே மற்ற சட்டமன்றங்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும்.

அடுத்தபடியாக இன்றையதினம் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டைவிட அதிகமாக ஏழு நாட்கள் இந்த செஷனில் அதிகரிக்கப் பட்டிருக்கிறது. இருந்தும் இப்போதுதான் தாங்கள் உறுப்பினர்களுக்கு ஆறு நிமிடம் அளிக்கப்படும் என்று சொன்னீர்கள். ஓரளவு உறுப்பினர்களுக்குக் கொடுக்கக்கூடிய இந்த நேரத்தை அதிகப்படுத்தினால் உறுப்பினர்கள் தங்க ளுடைய தொகுதி பிரச்சினைகளை இந்த மாமன்றத்தின் முன்னால் வைப்பதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த இலாக்காவில் இருக்கக்கூடிய அலுவலர்களின் எண்ணிக்கையும் குறைவு. அவர்களுக்கு இருக்கிற வசதி வாய்ப்புகளும் குறைவு. இருந்தும் இருக்கிற வசதியை வைத்துக்கொண்டு செய்யவேண்டிய காரியங்களை செய்யவேண்டிய நேரத்தில் செய்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆடம்பர வாழ்வுக்கான வசதிகள் செய்து தரப்படவேண்டும் என்று இல்லாவிட்டாலும்; தேவைப்படுகிற அவசியமான சில வசதிகளைக் கண்டிப்பாகச் செய்து தரவேண்டுமென்று கூறுகிறேன். குறிப் பாகச் சொல்ல வேண்டுமானால் வீடுகளுக்கு தொலைபேசி வசதி, சர்வீஸ் தபால் தலைகள் அளித்தல் போன்றவை நிச்சயமாகச் செய்துதரப்படவேண்டும். சம்பளத்தை அதிகமாக்கத் தேவையில்லை என்று சொல்லிக்கொண்டாலும், தொகுதி மக்களுடைய நலனுக்காக அடிக்கடி எழுதப்படுகிற கடிதங்களுக்கு

அதிகமான பணத்தைச் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதற் கான சர்வீஸ் தபால்தலை வசதிகளைச் செய்துதரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக பாராளுமன்றத்தில் இருக்கிற உறுப்பினர் ஒருவர் ஒரு கடிதம் எழுதினால் ஏழு நாட்களுக்குள் இலாக்காவில் இருந்து பதில் தரப்படுகிறது. பதினைந்து நாட்களுக்குள் முடிவு ஏற்பட்டுவிடுகிறது. எங்களுக்கு 15 நாட்கள் வேண்டாம்—ஒரு மாதத்திற்குள்ளாகவாவது நாங்கள் எழுதுகிற தபால் களுக்குப் பதில் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது மூன்று மாதங்கள், ஆறு மாதங்கள், ஒரு வருஷம் ஆனாலும் பதில் வராத நிலைதான் இருக்கிறது. எங்களுடைய தபால்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் தந்தாக வேண்டுமென்ற உத்தரவைப்போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்றத்திலே உறுப்பினர்களாகிய நாங்கள் சில எண்ணங்களைச் சொல்லுகிறோம். அவற்றுக்கு அமைச்சர்கள் சில உறுதி மொழிகளைத் தருகிறார்கள். அந்த உறுதிகள் உடனடியாக நிறைவேற்றப் படுகின்றனவா என்று எண்ணிப்பார்க்கிற நேரத்தில், நிச்சயமாக சில காரியங் கள் நடைபெறுவதில்லை. அதற்காக ஒரு பாலோ-அப் இருக்க வேண்டும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த ஆண்டில் அரிசன மானியத் தில் அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்ட உறுதிமொழிகள் ஓராண்டுக்குப் பின்னாலேயும் கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை. முன்பு இருந்ததை விட மாற்றம் இருக்கிறது என்றாலும், போதிய அளவு இல்லை; இன்னும் சற்று வேக மாக இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். அஷூரன்ஸ் குழு விலே அங்கம் வகிப்பவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, சட்ட மன்ற விடுதியைப் பொறுத்தவரை, நாங்கள் தொல்லை களுக்கும் அல்லல்களுக்கும் ஆட்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தான் நாங்கள் சொல்லிக் கொள்ள முடியும். ஆகவே சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தனிக் குழுவை அமைத்து அங்கே இருக்கிற சங்கடங்கள், தேவைகள்—நாங்கள் ஆடம்பர வாழ்வுக்கான வசதிகள் செய்து தரவேண்டும் என்று கேட்கவில்லை—சாதாரண வசதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களுக்குத் தேவையான வசதிகளை ஆராய்ந்து செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மாநிலச் சட்ட மன்ற மானியக் கோரிக்கையின் மீது என் கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்ட மன்றம் கூடுகிற நாட்களிலே சட்ட மன்ற பிரதிநிதிகளைப் பார்த்து சில காரியங்களைச் செய்து கொள்வதற்காக பல பேர்கள் வெளியூர்களிலிருந்து வருகிறார்கள். நாங்கள் அமைச்சர்களை அணுகி அவைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. நான்கு, ஐந்து நாட்கள் தேடிப் பார்த்தாலும் கூட அமைச்சர்களை அணுகுவது கஷ்டமாக இருக்கிறது. அவர் களை அதிகம் பேர்கள் பார்த்துக் கொண்டு இருப்பதால் சிரமமாக இருக்கிறது. ஆகவே சட்ட மன்றம் கூடுகிற நாட்களில் அமைச்சர்கள் சட்ட மன்ற உறுப் பினர்களைப் பார்க்க என்று ஒரு தனி நேரத்தை ஒதுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



அமைச்சர்கள் சுற்றுப் பயணத்தின் போது சில சமயங்களில் டூர் புரோ கிராம் வரும்போது தான் அமைச்சர்கள் வரப்போகிறார்கள் என்று செய்தி சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிகிறது. ஒரு தொகுதியில் டூர் பிரோ கிராம் போடுகிறார்கள் என்றால், அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து, அவர் சொல்லும் இடங்களையும் அதிலே சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அமைச்சர்கள் வரும்போது. சட்ட மன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களைத் தனியாகச் சந்தித்துப் பேச ஒரு பத்து நிமிஷமாவது ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் கூட்டத்திலே பக்கத்தில் அதிகாரி கள் இருக்கிறார்கள்; பொதுமக்கள் இருக்கிறார்கள். அந்த இடங்களில் அதிகாரிகளைப் பற்றி பேசுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே 10 நிமிஷம் தனியாக சட்ட மன்ற உறுப்பினர்களைப் பார்த்துப் பேச அமைச்சர்கள் நேரம் ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க துரித வண்டிகள் போய்க் கொண்டிருக்கின்றன. அதிலே சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எந்த வித முதல் பிரெபரன்ஸ் இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை. ஆகவே என்னுடைய யோசனை, துரித பஸ் போகிற ரூட்டில் சட்ட மன்ற உறுப்பினர்களுடைய வீடு இருந்தால், அங்கு சட்ட மன்ற உறுப்பினர் கை காட்டி நிறுத்தினால் ஏற்றிக் கொண்டு போவ தற்காவது குறைந்த பட்சம் ஏற்பாடு செய்ய வேண்டும்; அதற்கான உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். வேண்டுமென்றால் அரசாங்க துரித வண்டிகள் போகும் ரூட்டின் மீது இருக்கிறவர்கள், இன்ன இடத்தில் நாங்கள் குடியிருக்கிறோம், அங்கே நிறுத்த வேண்டும் என்று எழுதிக் கொடுக்கிறோம். அதைச் செய்து கொடுத்தால் போதும் என்று சொல்லிக் கொள்கிறேன். துரித பஸ்களில் கடைசி நேரம் வரையில் சட்ட மன்ற உறுப் பினர்களுக்காக இரண்டு இடம் வைத்திருந்து அவர்கள் வந்தால் கொடுப்ப தற்கான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களில் பலர் கிராமங்களில் குடியிருக்கிறார்கள். அவர் களுக்கு டெலிபோன் வசதி இருந்தால் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தொகுதி மக்களின் வேலைகளைத் துரிதமாகச் செய்ய முடியும். ஆகவே கிராமங் களிலே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தின் செல விலேயே டெலிபோன் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுடைய மனைவி மக்களுக்கெல்லாம் அந்த வசதி கிடையாது. ஆகவே சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இருப்பது போல் அவர்களுடைய மனைவி மக்களுக்கும் ப்ரீயாக வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்ட மன்ற விடுதிக்குச் செல்ல வேண்டுமென்றால், டாக்சிக்காரர்கள் வேறு இடத்துக்குப் போகிறோம் என்று சொல்லி மறுத்து விடுகிறார்கள். நேற்று காலையில் கூட எனது சக நண்பர் சட்ட மன்ற உறுப்பினர் திரு. மலைக்கண்ணன் அவர்களும் நானும் சுமார் 10 டாக்சிகளைக் கூப்பிட்டுப் பார்த்து, சட்ட மன்ற விடுதிக்குச் செல்ல வேண்டும்

என்று சொல்லிய உடன், வர மாட்டேன் என்று சொல்லி விட்டு போய் விட்டார்கள். ஏனென்றால் தூரம் குறைவாக இருக்கிறது என்ற காரணம். இதை நீக்க சரியான உத்தரவைப் பிறப்பித்து, சட்ட மன்ற விடுதிக்குப் போக வேண்டும் என்றால், டாக்சிக் காரர்கள் தடை சொல்லக் கூடாது என்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்ட மன்றம் நடக்கிற காலங்களில் கூட கோட்டையிலிருந்து விடுதிக்குப் போகும் பஸ் கூட்டம் முடிந்தவுடன் நிறுத்தப்பட்டு விடுகிறது. மந்தியானம் சட்ட மன்ற உறுப்பினர் பஸ் நின்று விடுவதால், சாயங்காலம் கோட்டைக்கு வர வேண்டுமென்றால் முடியாத நிலைமை இருக்கிறது. அடிக்கடி இல்லா விட்டாலும் கொஞ்ச நேரத்துக்கு ஒரு முறையாவது அந்த பஸ் ஓடிக்கொண்டு இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அசெம்பிளித் தொடர் கலைக்கப்படுகிறது என்ற உடனே நாங்கள் கொடுத்த கேள்விகளை எல்லாம் புதுப்பிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படியில்லாமல் அந்தக் கேள்விகளையே மறுபடியும் எடுத்துக் கொள்ளலாம் என்று செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த சட்ட மன்ற டிபார்ட் மென்டில் வேலை செய்கிறவர்களுக்கு உத்தியோக உயர்வு, சம்பள உயர்வு, அவர்களை நியமிப்பது போன்ற காரியங்களில் சில குறைபாடுகள் இருப்பதாகச் சொன்னார்கள். அவைகளை அகற்றி அவர்களுக்கு நல்ல முறையில் உத்தியோக உயர்வு சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** மன்றத் தலைவர் அவர்களே, சட்ட மன்றம் சம்பந்தப்பட்ட விவாதத்தில் நானும் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சட்ட மன்றக் கூட்டம் சுமார் நான்கு மாதக்காலம் நடத்தப்பட வேண்டும் என்பது என் அபிப்பிராயம் ஆகும். காரணம் என்னவென்றால், நாட்டில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளை அங்கத்தினர்கள் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்து பைசல் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். அதற்காக அடிக்கடி சட்ட மன்றம் கூடினால், அதன் மூலம் நாட்டில் நடக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றி அரசாங்கத்துக்கு தகவல் கொடுத்து, பரிகாரம் காண முடியும். அந்த் முறையில் வருஷத்துக்கு நான்கு மாதமாவது சட்ட மன்றக் கூட்டம் நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்தச் சட்ட மன்றத்தில் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு மூன்று மாதத்திற்குள்ளாவது பதில் சொல்லியாக வேண்டும் என்ற கண்டிப்பான நிலை இருக்க வேண்டும். வருஷக் கணக்கில் எங்கள் கேள்விகளுக்குப் பதில் கிடைப்பதில்லை. ஏன் கிடைக்கவில்லை என்றால், டிபார்ட்மென்டிலிருந்து வரவில்லை என்கிறார்கள். அப்படி பதில் வந்தும் கேள்விகள் எடுத்துக் கொள்ளப்படாமலிருந்து, கவர்னர் சபையைக் கலைத்த பிறகு, மறுபடியும் புதுப்பிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மறுபடியும் டிபார்ட்மென்டுக்கு பதில் கேட்டுப் போகும் நிலைமையும் வருகிறது. ஆகவே எனக்கு முன்பு பேசிய நண்பர் சொன்னது போல், பதில் சொல்லும் வரையில், கேள்விகள் நிரந்தரமாக இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நானும் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து டிபார்ட்மென்டுகள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் பதில் கொடுத்துத் திர வேண்டும் என்று ஆணையிட வேண்டும் என்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சட்ட மன்றத் துறையைப் பொறுத்தவரை நிறைய அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கிறது, ஒழுங்குபடுத்தப்பட வேண்டியிருக்கிறது. நாங்கள் கேட்கிற கேள்வி---பதில்களை டைப் செய்து வருகிற நகலைப் பார்த்தால், சரியாகப் படிக்க முடியவில்லை; தேய்ந்த டைப்ரைட்டர், பழைய சாமான்களை வைத்துக் கொண்டு வேலை செய்வதன் காரணமாக இந்த மாதிரி நிலைமை இருக்கிறது. புதிய மெஷின்கள் வாங்கிக் கொடுக்க வகை செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, இங்கே எட்டு அல்லது 10 வருஷம் வேலை செய்கிற பியூன்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டும். அப்படி நிரந்தரமாக்குவதன் மூலமாக அவர்களை பல்வேறு வகைகளிலும் அரசாங்கத்துக்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பழைய ஹாஸ்டலில் வாச்மேன் தான் போடுகிறார்கள். ஹாஸ்டலில் வேலை செய்வதற்கு பியூன்கள் போடப்படுவதில்லை. ஒரு வாச்மேன் இருந்துகொண்டு பல பேர்களுக்கு வேலை செய்வது என்பது சாத்தியமல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்த ஹாஸ்டலுக்கும் பியூன்கள் போட்டால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எம்.எல்.ஏ.-க்களுக்குச் சட்டசபை நடக்கக்கூடிய காலங்களில் ஹாஸ்டல்களில் வாடகையில்லாமல் இருக்கலாம் என்று இருக்கிறது. எம்.எல்.ஏ.-க்கள் சென்னைக்கு வருகின்ற சமயத்திலே சென்னையிலே தங்குகின்ற நேரத்திலே தங்கவேண்டுமென்றால் வாடகை வசூலிக்கப்படுகிறது, அப்படிப்பட்ட காலங்களிலும் வாடகையில்லாமல் தங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் வராத காலங்களிலே யாருக்காவது வீட்டு வாடகை வசூல் செய்துகொள்ளலாம்.

மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டுக் கூட்டத்திலே ஒவ்வொரு ரூமுக்கும் ஒரு போன் வைத்துத் தருவதாகச் சொன்னார்கள். போன் வைப்பது அவசியமாக இருப்பதால் அதையும் விரைவிலே செய்ய வேண்டும்.

சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இலவசச் சிகிச்சை என்று தரப்படும் பொழுது அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களைச் சார்ந்த குடும்பத்திலிருக்கும் இலவசச் சிகிச்சை செய்வதற்கு அரசு உத்தரவிடவேண்டும்.

குறைந்தபட்சம் பஸ்களிலே செல்வதற்கு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பாஸ் இருக்கவேண்டும். மற்ற மாநிலங்களிலே கொடுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வசதிகள் கம்மியாக இருக்கிறது. மற்ற மாநிலங்களிலே அப்படி வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கும் பொழுது ஏன் நம்முடைய மாநிலத்திலேயும் செய்யக்கூடாது என்ற கேள்வி எழுகிறது. பல்வேறு வேலைகளைப் பொதுமக்களுக்காகச் செய்யவேண்டிய நிலையும் அந்தந்தத் தொகுதிகளுக்குச் சென்று ஜனங்களைச் சந்திக்கவேண்டுமென்ற அவசியமும் ஏற்படுவதால் அப்படிப்பட்ட வசதிகளை செய்தால்தான் பொது மக்களோடு தொடர்புகொள்ளமுடியும், தொடர்பு கொண்டு அரசாங்கத்திடம் அவற்றை பிரதிநிதிகள் என்ற முறையில் எடுத்துச் சொல்லமுடியும். குறைந்த

பட்சம் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பஸ் பாஸ்களைக் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU K. VINAYAKAM : Sir, I am really proud of our Legislature. We have to our credit one of the best well-educated and well-maintained Legislative Assemblies. Many a time I have resisted the temptation to overlook the Rules because I want to maintain the dignity of the Tamil Nadu Legislative Assembly and I leave it at that.

Now, Sri I want to claim the attention of the Hon. Cheif Minister to a point which I am going to develop. Recently a Seminar was held at Ootacamund for the benefit of the Legislators from different States like Gujarat, Andhra Pradesh, Himachal Pradesh and Kerala. The consensus of opinion in the Seminar was that we have got to re-educate our own legislators. It does not mean that a Legislator knows everything in the world. Of cuorse we have got the support of the people and we get elected but that does not mean that we know everything in the world. So, a legislator should be given an opportunity to learn many things by going about not only in his own State but also in the rest of the country so that he should have first-hand knowledge about the things happening in the country.

For instance, we talk so much about the Salem Steel Plant. How many people have seen a steel plant and we talk only in the air. May be some Ministers have had opportunities to seed the Tata Steel Plant and the Steel Plant at Bhilai. We talk about the steel plant but do we know what exactly is the steel plant and how it is worked and whether a steel plant is economically viable. We do not know all these things. So, my plea to the Hon. Chief Minister is that he should enable the legistators to go about the country and see things for themselves. For instance, we talk to much about the Aarey Milk Project in Bombay. It is a wellmaintained project and it is of so much utility value to the country. (Interruption). Of course we have got our Madhavaram Milk Project. Only a few Members are in the Committee on Estimates and so my point is that all the legislators should be given opportunities to learn all the things. Sir, there are about eight committees of the Legislature and how many Members are there ? About 102 Members constitute all these committees. I am talking about the Committee on Estimates, Committee on Public Accounts, Committee on Assurances, House Committee, etc. In all these committees there are only about 102 Members. All these Members should be enabled to go about the country and see things for themselves.

For instance they can see the Aarey Milk Project in Bombay, then go to Delhi and then cut across to Calcutta and see the Steel Plants at Jamshedpur and Bhilai. (Interruption.) It is not a fantastic idea and I have roughly calculated the expenditure to be



incurred on that account. Even if we give first-class railway fare and D.A. of Rs. 20 or Rs. 25 to the legislators, it does not work out to more than Rs. 1 lakh and ten thousand. It is not such a big amount. After all, what is our budget, it is about Rs. 300 crores. What would it matter if Rs. 1 lakh is spent out of Rs. 300 crores. It is not as if everybody is a Minister. Most of us are dumb people but they are very good competent and honest people (Interruption). They would not talk and I talk for them. You have got a very fine set of legislators—I am voicing the feelings of the Members of the Ruling Party and the Opposition Party— and please give them an opportunity to see things for themselves.

Now, I tell you that a legislator born in Chingleput knows only about the Araniyar Project and he does not know about the Manimuthar Project and he has no opportunity to visit other projects. After all, a legislator worth his name, must not only have first-hand knowledge of his own State but must also have facilities to go about the rest of the country and see things for himself. Do you mean to say we have no other job. I am an advocate and I can earn Rs. 1,000 in the court. Here I am getting a pittance of only Rs. 20 or Rs. 25 per day. But having taken up this work, I have got to justify my job. It is not as if I want to travel in the first-class by rail and go about from Kashmir to Delhi and then to Calcutta and then return to Madras. Don't I have any other work? But my point is that during the five years of existence, we have to do our job and we do not know how many of us will return again to this House (Interruption)—including myself. I do not speak for myself alone but I speak for the entire House. After all, our State is a well-maintained State and the Hon. Chief Minister can be liberal enough to throw away about Rs. 3 lakhs for us. So, please give an opportunity to all the Members to get themselves better equipped and better informed about the things obtaining in the country. That is my suggestion.

Then, I have got to express an honest grievance of our own staff. Opportunities must be given for the staff working in the lower ranks to get promotion and I leave it to the Government for their decision. I do not know the rules pertaining to their promotion but they must be treated on a par with the Central Secretariat Service. We have got our own Secretariat Service and there are different sets of rules governing their promotion. I suggest that the same set of rules may govern our own Legislature staff. I think you, sir.

*திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கின்ற பெரிய பொறுப்பிலே ஈடுபட்டிருக்கிற நம்முடைய பேரவை யின் தொடர்பு குறித்த மானியத்தின் மீது காங்கிரஸ் கட்சியின் 'ஒபீடியன்ட் பாய்ஸ்' என்ற முறையில் அந்தக் கட்சியின் உறுப்பினர் திரு. விநாயகம் அவர் கள் பல கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். அவர்களுடைய ஒபீடியன்ஸ்— அடக்கம் எவ்வளவு பண்பட்டு வந்திருக்கிறது என்பதைக் கடந்த 15, 20

[திரு. இராம. அரங்கண்ணல்] [1970 மார்ச் 17

ஆண்டுகாலமாக அவருடைய அரசியல் வாழ்க்கையைப் பார்த்துக் கொண் டிருக்கின்ற நான் அறிவேன். அவர்கள் பல கருத்துக்களை எல்லாம் சொன்னார் கள்.

அதிலே ஒன்று, சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் எல்லா இடங் களுக்கும் போக வேண்டும்; கமிட்டியில் இருப்பவர்கள் எல்லா இடங்களுக்கும் போவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். வரவேற்கக் கூடிய கருத்துத்தான். திரு. விநாயகம் அவர்கள் இப்போது அஷ்யூரன்ஸ் கமிட்டி சேர்மனாக இருப்பார்கள் என்று கருதுகிறேன். கடந்த காலத்தில் நானும் அஷ்யூரன்ஸ் கமிட்டி சேர்மனாக இருந்தேன். சட்டமன்றத்தில் இருக் கின்ற எல்லாக் கமிட்டிகளும், சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி உட்பட வெளியிலே போகலாம்; ஆனால் அஷ்யூரன்ஸ் கமிட்டி மட்டும் வெளியிலே போகக் கூடாது. சென்னையிலே உட்கார்ந்து கொண்டுதான் அமைச்சர்களின் அஷ்யூரன்ஸைப் பார்க்க வேண்டும். நான் அந்தக் கமிட்டியின் தலைவராக இருந்த நேரத்தில் அப்போது சபையின் முன்னவராக இருந்த திரு. பக்தவத்சலம்---கோபித்துக் கொள்ளாதீர்கள்---அவர்களிடத்தில் நிலைமையை எடுத்துச் சொன்னதும் அவர்கள் நான் சொன்னதை ஏற்றுக் கொண்டு அஷ்யூ ரன்ஸ் கமிட்டி தமிழ்நாட்டுக்குள்ளே எங்கே வேண்டுமென்றாலும் சென்று வர லாம் என்ற விதியைக் கொண்டு வந்து அனுமதித்தார்கள். இப்போது எங்களுடைய சர்க்கார் வந்த பிறகு---ஒபீடியன்ட் பாய்ஸ் ; மக்களுக்கு நாங்கள் மிகமிக ஒபீடியன்ட் பாய்ஸ்; அவர்கள் எங்களுடைய அண்ணன் தம்பிகள்--- நம்முடைய விநாயகம் அவர்கள் அஷ்யூரன்ஸ் கமிட்டி தலைவராகுவார்கள். அவர் கள் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கக்கூடியவர்கள் என்று சொன்னார்கள். அவர்கள் வசதி படைத்தவர்கள் என்பது எனக்கு மிகவும் நன்றாகத் தெரியும். மிக மிக வசதி படைத்தவர்கள்; அவரும் சரி அவருடைய மாமனாரும் சரி அந்த கோடம்பாக்கம் வரலாறு தெரியாதா? அவர்கள் அஷ்யூரன்ஸ் கமிட்டி தமிழ் நாட்டிலே சுற்றினாலும் மட்டும் போதாது; இமாசலம் இருக்கிறது அல்லவா, அதற்கு அருகிலே உள்ள பத்ரிநாத்துக்குப் போக வேண்டுமென்று கேட்டார் கள். திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரின் முதல்வராக பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்தில் அந்த ஃபைல் வந்த நேரத்தில் அவர்கள் மன முவந்து சென்று வர வேண்டுமென்ற உத்தரவைத்தான் தந்தார்கள். அதனுடைய நோக்கம்---சட்டமன்ற உறுப்பினர்கள் தெளிவான, கட்டுக்கோப் பான முறையில் எல்லா இடங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காண வேண்டுமென்பதுதான். மாதவரம் மில்க் காலனிக்குப் போக என்ன செய்வது என்று கேட்டார்கள். நம்முடைய விநாயகம் அவர்கள் நீண்ட நாளைய உறுப்பினர். பத்து உறுப்பினர்கள் சேர்ந்து இன்ன இடத்திற்குப் போக வேண்டுமென்று சபாநாயகர் அவர்களிடம் எழுதிக் கொடுத்தால் அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான சூழ்நிலைகள் இப்போதே இருக்கின்றன.

அவர்கள் சம்பள விகிதத்தைப் பற்றிச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப் பினர்களின் சம்பளம் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் 150 ரூபாயாக இருந்தது. பிறகு முன்பு இருந்த சர்க்காரிலேயே 250 ரூபாய் ஆக்கப்பட்டது. அதற்குப் பிறகு எங்களுடைய சர்க்கார் வந்தது. இந்தச் சம்பளத்தை அதிகமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை பொருத்த அளவில்



1970 மார்ச் 17] [திரு. இராம. அரங்கண்ணல்]

ஒரு சிறு கருத்து வேறுபாடு இருக்கிறது. மக்கள் சார்பில் மக்களுக்காகப் பாடுபட வந்தவர்கள், தங்கள் அரசியலில் ஆகட்டும் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் ஆகட்டும், உதாரண புருஷர்களாக இருந்தாகவேண்டும். காந்தி யடிகளுடைய திருநாமத்தையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை யும், அரசியலில் உத்தமர்களுடைய பெயர்களையும் மட்டும் சொல்லி காலத்தைப் போக்கிவிட முடியாது. 'நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எப்படி இருக்கிறார்கள் தெரியுமா? மாதம் ஒருநூறு ஆயிரம் ரூபாய் என்று சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்' என்ற எண்ணம் மக்கள் மத்தியில் வந்துவிடுவது நல்லதல்ல. நான் காங்கிரஸ், தி.மு.க., கம்யூனிஸ்டு என்று பிரித்துப் பார்க்கவில்லை. ஜனநாயகத்தை வளர்க்கின்ற உணர்வு எல்லாக் கட்சிகளுக்கும் இருக்கிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுபவர்களுக்கும் இருக்கிறது. அதனால் வேண்டுமென்று சொன்னால் மக்களுக்கு நாம் உதாரண புருஷர்களாக இருக்கவேண்டும். அந்த நோக்கத் தோடுதான் சம்பளத்தை உயர்த்தக் கூடாது என்று சொல்கிறோம். சம்பளத்தை உயர்த்தக்கூடாது என்று சொல்லும் அதே நேரத்தில் வசதிகளை உயர்த்த வேண்டுமென்றுதான் 15 ரூபாய் படி 20 ரூபாயாக ஆக்கப்பட்டது. இன்னும் சில வசதிகளும் தேவைப்படுகின்றன. உதாரணமாக, முன்பெல்லாம் லெட்டர் பேட் அதிகமாகக் கொடுக்க மாட்டார்கள்; மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். இப்போது ஒவ்வொரு ஆண்டும் தேவையான அளவுக்கு லெட்டர் பேட் தருகிறார்கள். கார்ப்பரேஷனில் இருக்கக்கூடிய 120 கவுன்சிலர் களின் லெட்டர் பாடைப் பார்த்தால் உறுப்பினர்களுடைய பெயர்களை எல்லாம் போட்டு அச்சடித்துத் தருகிறார்கள். அதையும் செய்யலாம், அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டெலிபோன் வசதி பற்றிச் சொன் னார்கள். டெலிபோன் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தேவைப்படு கிறது. டெலிபோனை இன்றையதினம் ஆடம்பரப் பொருள் என்று சொல்ல முடியாது. அது இன்று தேவையான பொருளாகிவிட்டது. ஆனால் டெலி போன் கட்டணம் செலுத்துவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அது மிக வும் அதிகமாக இருக்கிறது. மாதத்திற்கு இத்தனை 'கால்கள்' செய்யலாம், இத்தனை 'ட்ரங்க் கால்கள்' செய்யலாம் என்று விதித்து உறுப்பினர்களுக்கு டெலிபோன் வசதியும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

இன்னும் ஒரு கருத்து; ஆலோசிக்கப்படவேண்டிய கருத்து. மூன்று தடவை ஒரே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் பென்ஷன் வழங்குவதைப் பற்றியும் யோசிக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவருடைய நேரத்தையே தரத் தயாராக இருக்கிறார்கள். ஒரே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் யோக்கியப் பொறுப்பாக இருந்தால் தான் தேர்ந்தெடுக்கப்பட முடியும். இல்லையென்றால் மக்கள் தள்ளிவிடுவார்கள் என்பதை விநாயகம் அவர்கள் அறிவார்கள். மூன்று தடவை தொடர்ந்து ஒரே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க வழி இருக்கிறதா என்பதை யோசிக்கவேண்டும்.

மேல்சபையில் தற்போது 63 பேர் இருக்கிறார்கள். இப்போதுள்ள உரிமைப் படி கிட்டத்தட்ட 78 இடங்கள் இருக்கவேண்டும். நேற்றைய தினம் டெல்லி பாராளுமன்றத்தில் மேல் [illegible] அதிகப்படுத்துவது இல்லையென்ற

ஆண்டுகாலமாக அவருடைய அரசியல் வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற நான் அறிவேன். அவர்கள் பல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள்.

அதிலே ஒன்று, சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் எல்லா இடங்களுக்கும் போக வேண்டும்; கமிட்டியில் இருப்பவர்கள் எல்லா இடங்களுக்கும் போவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். வரவேற்கக் கூடிய கருத்துத்தான். திரு. விநாயகம் அவர்கள் இப்போது அஷ்யூரன்ஸ் கமிட்டி சேர்மனாக இருப்பார்கள் என்று கருதுகிறேன். கடந்த காலத்தில் நானும் அஷ்யூரன்ஸ் கமிட்டி சேர்மனாக இருந்தேன். சட்டமன்றத்தில் இருக்கின்ற எல்லாக் கமிட்டிகளும், சப்பார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி உட்பட வெளியிலே போகலாம்; ஆனால் அஷ்யூரன்ஸ் கமிட்டி மட்டும் வெளியிலே போகக் கூடாது. சென்னையிலே உட்கார்ந்து கொண்டுதான் அமைச்சர்களின் அஷ்யூரன்ஸைப் பார்க்க வேண்டும். நான் அந்தக் கமிட்டியின் தலைவராக இருந்த நேரத்தில் அப்போது சபையின் முன்னவராக இருந்த திரு. பக்தவத்சலம்---கோபித்துக் கொள்ளாதீர்கள்---அவர்களிடத்தில் நிலைமையை எடுத்துச் சொன்னதும் அவர்கள் நான் சொன்னதை ஏற்றுக் கொண்டு அஷ்யூரன்ஸ் கமிட்டி தமிழ்நாட்டுக்குள்ளே எங்கே வேண்டுமென்றாலும் சென்று வரலாம் என்ற விதியைக் கொண்டு வந்து அனுமதித்தார்கள். இப்போது எங்களுடைய சர்க்கார் வந்த பிறகு---ஒபீடியன்ட் பாய்ஸ் ; மக்களுக்கு நாங்கள் மிகமிக ஒபீடியன்ட் பாய்ஸ்; அவர்கள் எங்களுடைய அண்ணன் தம்பிகள்---நம்முடைய விநாயகம் அவர்கள் அஷ்யூரன்ஸ் கமிட்டி தலைவராவார்கள். அவர்கள் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கக்கூடியவர்கள் என்று சொன்னார்கள். அவர்கள் வசதி படைத்தவர்கள் என்பது எனக்கு மிகவும் நன்றாகத் தெரியும். மிக மிக வசதி படைத்தவர்கள்; அவரும் சரி அவருடைய மாமனாரும் சரி அந்த கோடம்பாக்கம் வரலாறு தெரியாதா? அவர்கள் அஷ்யூரன்ஸ் கமிட்டி தமிழ்நாட்டிலே சுற்றினாலும் மட்டும் போதாது; இமாசலம் இருக்கிறது அல்லவா, அதற்கு அருகிலே உள்ள பதிரிநாத்துக்குப் போக வேண்டுமென்று கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரின் முதல்வராக பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்தில் அந்த ஃபைல் வந்த நேரத்தில் அவர்கள் மனமுவந்து சென்று வர வேண்டுமென்ற உத்தரவைத்தான் தந்தார்கள். அதனுடைய நோக்கம்---சட்டமன்ற உறுப்பினர்கள் தெளிவான, கட்டுக்கோப்பான முறையில் எல்லா இடங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காண வேண்டுமென்பதுதான். மாதவரம் மில்க் காலனிக்குப் போக என்ன செய்வது என்று கேட்டார்கள். நம்முடைய விநாயகம் அவர்கள் நீண்ட நாளைய உறுப்பினர். பத்து உறுப்பினர்கள் சேர்ந்து இன்ன இடத்திற்குப் போக வேண்டுமென்று சபாநாயகர் அவர்களிடம் எழுதிக் கொடுத்தால் அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான சூழ்நிலைகள் இப்போதே இருக்கின்றன.

அவர்கள் சம்பள விகிதத்தைப் பற்றிச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளம் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் 150 ரூபாயாக இருந்தது. பிறகு முன்பு இருந்த சர்க்காரிலேயே 250 ரூபாய் ஆக்கப்பட்டது. அதற்குப் பிறகு எங்களுடைய சர்க்கார் வந்தது. இந்தச் சம்பளத்தை அதிகமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை பொறுத்த அளவில்





ஒரு சிறு கருத்து வேறுபாடு இருக்கிறது. மக்கள் சார்பில் மக்களுக்காகப் பாடுபடுகின்றவர்கள், தங்கள் அரசியலில் ஆகட்டும் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் ஆகட்டும், உதாரண புருஷர்களாக இருந்தாகவேண்டும். காந்தியடிகளுடைய திருநாமத்தையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரையும், அரசியலில் உத்தமர்களுடைய பெயர்களையும் மட்டும் சொல்லி காலத்தைப் போக்கிவிட முடியாது. 'நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எப்படி இருக்கிறார்கள் தெரியுமா? மாதம் ஐநூறு, ஆயிரம் ரூபாய் என்று சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்' என்ற எண்ணம் மக்கள் மத்தியில் வந்துவிடுவது நல்லதல்ல. நான் காங்கிரஸ், தி.மு.க., கம்யூனிஸ்டு என்று பிரித்துப் பார்க்கவில்லை. ஜனநாயகத்தை வளர்க்கின்ற உணர்வு எல்லாக் கட்சிகளுக்கும் இருக்கிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுபவர்களுக்கும் இருக்கிறது. அது வளர வேண்டுமென்று சொன்னால் மக்களுக்கு நாம் உதாரண புருஷர்களாக இருக்கவேண்டும். அந்த நோக்கத்தோடுதான் சம்பளத்தை உயர்த்தக் கூடாது என்று சொல்கிறோம். சம்பளத்தை உயர்த்தக்கூடாது என்று சொல்லும் அதே நேரத்தில் வசதிகளை உயர்த்த வேண்டுமென்றுதான் 15 ரூபாய் படி 20 ரூபாயாக ஆக்கப்பட்டது. இன்னும் சில வசதிகளும் தேவைப்படுகின்றன. உதாரணமாக, முன்பெல்லாம் லெட்டர் பேட் அதிகமாகக் கொடுக்க மாட்டார்கள்; மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். இப்போது ஒவ்வொரு ஆண்டும் தேவையான அளவுக்கு லெட்டர் பேட் தருகிறார்கள். கார்ப்பரேஷனில் இருக்கக்கூடிய 120 கவுன்சிலர்களின் லெட்டர் பாடைப் பார்த்தால் உறுப்பினர்களுடைய பெயர்களை எல்லாம் போட்டு அச்சடித்துத் தருகிறார்கள். அதையும் செய்யலாம், அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டெலிபோன் வசதி பற்றிச் சொன்னார்கள். டெலிபோன் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தேவைப்படுகிறது. டெலிபோனை இன்றையதினம் ஆடம்பரப் பொருள் என்று சொல்ல முடியாது. அது இன்று தேவையான பொருளாகிவிட்டது. ஆனால் டெலிபோன் கட்டணம் செலுத்துவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அது மிகவும் அதிகமாக இருக்கிறது. மாதத்திற்கு இத்தனை 'கால்கள்' செய்யலாம், இத்தனை 'டிரங்க் கால்கள்' செய்யலாம் என்று விதித்து உறுப்பினர்களுக்கு டெலிபோன் வசதியும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்

இன்னும் ஒரு கருத்து; ஆலோசிக்கப்படவேண்டிய கருத்து. மூன்று தடவை ஒரே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் பென்ஷன் வழங்குவதைப் பற்றியும் யோசிக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவருடைய நேரத்தையே தரத் தயாராக இருக்கிறார்கள். ஒரே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் யோக்கியப் பொறுப்பாக இருந்தால் தான் தேர்ந்தெடுக்கப்பட முடியும். இல்லையென்றால் மக்கள் தள்ளிவிடுவார்கள் என்பதை விநாயகம் அவர்கள் அறிவார்கள். மூன்று தடவை தொடர்ந்து ஒரே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க வழி இருக்கிறதா என்பதை யோசிக்கவேண்டும்.

மேல்சபையில் தற்போது 63 பேர் இருக்கிறார்கள். இப்போதுள்ள உரிமைப்படி கிட்டத்தட்ட 78 இடங்கள் இருக்கவேண்டும். நேற்றைய தினம் டெல்லி பாராளுமன்றத்தில் மேல் [illegible] அதிகப்படுத்துவது இல்லையென்ற

[திரு. இராம. அரங்கண்ணல்] [1970 மார்ச் 17

ஆண்டுகாலமாக அவருடைய அரசியல் வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற நான் அறிவேன். அவர்கள் பல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள்.

அதிலே ஒன்று, சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் எல்லா இடங்களுக்கும் போக வேண்டும்; கமிட்டியில் இருப்பவர்கள் எல்லா இடங்களுக்கும் போவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். வரவேற்கக் கூடிய கருத்துத்தான். திரு. விநாயகம் அவர்கள் இப்போது அஷ்யூரன்ஸ் கமிட்டி சேர்மனாக இருப்பார்கள் என்று கருதுகிறேன். கடந்த காலத்தில் நானும் அஷ்யூரன்ஸ் கமிட்டி சேர்மனாக இருந்தேன். சட்டமன்றத்தில் இருக்கின்ற எல்லாக் கமிட்டிகளும், சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி உட்பட வெளியிலே போகலாம்; ஆனால் அஷ்யூரன்ஸ் கமிட்டி மட்டும் வெளியிலே போகக் கூடாது. சென்னையிலே உட்கார்ந்து கொண்டுதான் அமைச்சர்களின் அஷ்யூரன்ஸைப் பார்க்க வேண்டும். நான் அந்தக் கமிட்டியின் தலைவராக இருந்த நேரத்தில் அப்போது சபையின் முன்னவராக இருந்த திரு. பக்தவத்சலம்---கோபித்துக் கொள்ளாதீர்கள்---அவர்களிடத்தில் நிலைமையை எடுத்துச் சொன்னதும் அவர்கள் நான் சொன்னதை ஏற்றுக் கொண்டு அஷ்யூரன்ஸ் கமிட்டி தமிழ்நாட்டுக்குள்ளே எங்கே வேண்டுமென்றாலும் சென்று வரலாம் என்ற விதியைக் கொண்டு வந்து அனுமதித்தார்கள். இப்போது எங்களுடைய சர்க்கார் வந்த பிறகு---ஓபீடியன்ட் பாய்ஸ்; மக்களுக்கு நாங்கள் மிகமிக ஓபீடியன்ட் பாய்ஸ்; அவர்கள் எங்களுடைய அண்ணன் தம்பிகள்---நம்முடைய விநாயகம் அவர்கள் அஷ்யூரன்ஸ் கமிட்டி தலைவராகுகின்றார்கள். அவர்கள் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கக்கூடியவர்கள் என்று சொன்னார்கள். அவர்கள் வசதி படைத்தவர்கள் என்பது எனக்கு மிகவும் நன்றாகத் தெரியும். மிக மிக வசதி படைத்தவர்கள்; அவரும் சரி அவருடைய மாமனாரும் சரி அந்த கோடம்பாக்கம் வரலாறு தெரியாதா? அவர்கள் அஷ்யூரன்ஸ் கமிட்டி தமிழ் நாட்டிலே சுற்றினாலும் மட்டும் போதாது; இமாசலம் இருக்கிறது அல்லவா, அதற்கு அருகிலே உள்ள பதிரிநாத்துக்குப் போக வேண்டுமென்று கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரின் முதல்வராக பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்தில் அந்த ஃபைல் வந்த நேரத்தில் அவர்கள் மனமுவந்து சென்று வர வேண்டுமென்ற உத்தரவைத்தான் தந்தார்கள். அதனுடைய நோக்கம்---சட்டமன்ற உறுப்பினர்கள் தெளிவான, கட்டுக்கோப்பான முறையில் எல்லா இடங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காண வேண்டுமென்பதுதான். மாதவரம் மில்க் காலனிக்குப் போக என்ன செய்வது என்று கேட்டார்கள். நம்முடைய விநாயகம் அவர்கள் நீண்ட நாளைய உறுப்பினர். பத்து உறுப்பினர்கள் சேர்ந்து இன்ன இடத்திற்குப் போக வேண்டுமென்று சபாநாயகர் அவர்களிடம் எழுதிக் கொடுத்தால் அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான சூழ்நிலைகள் இப்போதே இருக்கின்றன.

அவர்கள் சம்பள விகிதத்தைப் பற்றிச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளம் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் 150 ரூபாயாக இருந்தது. பிறகு முன்பு இருந்த சர்க்காராலேயே 250 ரூபாய் ஆக்கப்பட்டது. அதற்குப் பிறகு எங்களுடைய சர்க்கார் வந்தது. இந்தச் சம்பளத்தை அதிகமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை பொறுத்த அளவில்



1970 மார்ச் 17] [திரு. இராம. அரங்கண்ணல்]

ஒரு சிறு கருத்து வேறுபாடு இருக்கிறது. மக்கள் சார்பில் மக்களுக்காகப் பாடுபடுகிறவர்கள், தங்கள் அரசியலில் ஆகட்டும் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் ஆகட்டும், உதாரண புருஷர்களாக இருந்தாகவேண்டும். காந்தியடிகளுடைய திருநாமத்தையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரையும், அரசியலில் உத்தமர்களுடைய பெயர்களையும் மட்டும் சொல்லி காலத்தைப் போக்கிவிட முடியாது. 'நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எப்படி இருக்கிறார்கள் தெரியுமா? மாதம் ஐநூறு, ஆயிரம் ரூபாய் என்று சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்' என்ற எண்ணம் மக்கள் மத்தியில் வந்துவிடுவது நல்லதல்ல. நான் காங்கிரஸ், தி.மு.க., கம்யூனிஸ்டு என்று பிரித்துப் பார்க்கவில்லை. ஜனநாயகத்தை வளர்க்கின்ற உணர்வு எல்லாக் கட்சிகளுக்கும் இருக்கிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுபவர்களுக்கும் இருக்கிறது. அது வளர வேண்டுமென்று சொன்னால் மக்களுக்கு நாம் உதாரண புருஷர்களாக இருக்கவேண்டும். அந்த நோக்கத்தோடுதான் சம்பளத்தை உயர்த்தக் கூடாது என்று சொல்கிறோம். சம்பளத்தை உயர்த்தக்கூடாது என்று சொல்லும் அதே நேரத்தில் வசதிகளை உயர்த்த வேண்டுமென்றுதான் 15 ரூபாய் படி 20 ரூபாயாக ஆக்கப்பட்டது. இன்னும் சில வசதிகளும் தேவைப்படுகின்றன. உதாரணமாக, முன்பெல்லாம் லெட்டர் பேட் அதிகமாகக் கொடுக்க மாட்டார்கள்; மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். இப்போது ஒவ்வொரு ஆண்டும் தேவையான அளவுக்கு லெட்டர் பேட் தருகிறார்கள். கார்ப்பரேஷனில் இருக்கக்கூடிய 120 கவுன்சிலர்களின் லெட்டர் பாடைப் பார்த்தால் உறுப்பினர்களுடைய பெயர்களை எல்லாம் போட்டு அச்சடித்துத் தருகிறார்கள். அதையும் செய்யலாம், அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டெலிபோன் வசதி பற்றிச் சொன்னார்கள். டெலிபோன் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தேவைப்படுகிறது. டெலிபோனை இன்றையதினம் ஆடம்பரப் பொருள் என்று சொல்ல முடியாது. அது இன்று தேவையான பொருளாகிவிட்டது. ஆனால் டெலிபோன் கட்டணம் செலுத்துவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அது மிகவும் அதிகமாக இருக்கிறது. மாதத்திற்கு இத்தனை 'கால்கள்' செய்யலாம், இத்தனை 'டிரங்க் கால்கள்' செய்யலாம் என்று விதித்து உறுப்பினர்களுக்கு டெலிபோன் வசதியும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்

இன்னும் ஒரு கருத்து; ஆலோசிக்கப்படவேண்டிய கருத்து. மூன்று தடவை ஒரே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் பென்ஷன் வழங்குவதைப் பற்றியும் யோசிக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவருடைய நேரத்தையே தரத் தயாராக இருக்கிறார்கள். ஒரே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் யோக்கியப் பொறுப்பாக இருந்தால்தான் தேர்ந்தெடுக்கப்பட முடியும். இல்லையென்றால் மக்கள் தள்ளிவிடுவார்கள் என்பதை விநாயகம் அவர்கள் அறிவார்கள். மூன்று தடவை தொடர்ந்து ஒரே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க வழி இருக்கிறதா என்பதை யோசிக்கவேண்டும்.

மேல்சபையில் தற்போது 63 பேர் இருக்கிறார்கள். இப்போதுள்ள உரிமைப்படி கிட்டத்தட்ட 78 இடங்கள் இருக்கவேண்டும். நேற்றைய தினம் டெல்லி பார்லிமென்றத்தில் மேல்சபை இடங்களை அதிகப்படுத்துவது இல்லையென்ற

கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசு தொடர்ந்து எழுதி வருகிறது. அவ்வாறு அதிகப்படுத்த வேண்டுமென்று சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து---மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று கருதுகிறேன்---எல்லோரும் சேர்ந்து நிறைவேற்ற வேண்டும்.

கடைசியாக, இந்தச் சட்டமன்றத்திற்கு ஒரு பெருமை இருக்கிறது. உலகத்திலேயே புகழப்படுகிறது. அது ஆளும் கட்சியாக வந்திருக்கிற எங்களால் மட்டுமல்ல; அந்தப் பெருமை எதிர்க்கட்சியைத்தான் சேரும். திரு. விநாயகம் அவர்களும் சரி, திரு. கருத்திருமன் அவர்களும் சரி, அந்நிலே அண்ணன்மார்கள் என்ற நிலையில் தம்பிமார்களாகிய நாங்கள் ஆள வந்திருக்கிறோம். அவர்களுக்கு நாங்கள் அடக்கத்தைப் போதிக்கின்ற வயது இல்லையென்றாலும், பெரியவர்களாக இருக்கின்றவர்கள் எந்த அளவுக்கு அடக்கத்தைக் காண்பித்து வழிகாட்டுகிறார்களோ அதுதான் தமிழ்நாடு மட்டும் புகழும் பெருமை அல்ல; உலகமே புகழக் கூடிய பெருமையாகும். கனம் விநாயகம் அவர்கள் இல்லையென்றால் நாம் சில சுவைகளைப் பெற முடியாது. நமக்குக் கோப உணர்வுகள் வந்தாலும்---சபாநாயகர் அவர்கள் மன்னிக்க வேண்டும்---பல நேரங்களில் சபாநாயகர் அவர்கள்தான் காரணமோ என்று நினைக்கும் நிலைமை வந்துவிடுகிறது. ரூல்ஸ் கமிட்டி இருக்கிறது; நீங்கள் விதிகளை மாற்ற வேண்டுமென்று சொன்னால் எல்லோரும் சேர்ந்து அந்த அடிப்படையில் விதிகளை மாற்ற வழி இருக்கிறது. எல்லோரும் சேர்ந்து விதிகளைச் செய்தால் சபாநாயகர் அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள். உலகம் என்றே நான் குறிப்பிடுகிறேன்---உலகத்திற்கே புகழைத் தந்து கொண்டிருக்கின்ற நம்முடைய சட்டமன்றத்தின் பாரம்பரியத்தைக் காக்கும் வகையில் தமிழ்நாடு என்றையதினமும் ஜனநாயக உணர்வோடு, அண்ணாவின் தமிழ் உணர்வோடு, அரசியல் மாச்சரியங்கள் இன்றி எல்லா அரசியல் கட்சிகளும் பாசத்தையும், கண்ணியத்தையும், கடமையையும், கட்டுப்பாட்டையும் இழக்காமல் வாழும் என்ற உறுதியை நிலைநாட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

THIRU K. VINAYAKAM : He has dragged my name, Sir. Be just and give me some time to clarify. When I was Chairman of the Assurance Committee, of course I took my Committee Members to Haridwar and not to Badrinath. The hon. Member Thiru Rama Arangannal must correct his statement. I took the Committee Members not for anything else but to inspect and study the working of the Anti-Biotic Institute run by the Government of India, which is situated on the banks of the Ganges in Haridwar. I took permission for that from the then Chief Minister, viz. Thiru Anna, who passed such instructions on the file and only after getting written permission, we undertook that tour. Let there be no mistake in this matter.

திரு. இராம. அரங்கண்ணல்: ஆன் எ பாயின்ட் ஆப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன், சார். நான் குறிப்பிட வந்தது, அஷ்யூரன்ஸ் கமிட்டித் தலைவராக இருக்கின்றவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவரை இந்தச் சர்க்கார் மதிக்கிறார்கள். அவர்கள் விருப்பத்தையெல்லாம் பூர்த்தி செய்யும் என்பதை எடுத்துச் சொல்வதற்காகவே தவிர, வேறொன்றுமில்லை.



*திரு. கோ. பாரதி மோகன்: தலைவர் அவர்களே, நான்கு கோடித் தமிழர்கள் வாழக்கூடிய இந்தத் தமிழகத்தில் ஏராளமான பிரச்சினைகள் எழும்புவது இயல்பாக இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளையெல்லாம் விரிவாக விவாதம் செய்து, அவைபற்றி தெளிவான கருத்துக்களையெல்லாம் சட்ட மன்றத்திலே கூறவேண்டியிருக்கிறது. அப்படிக் கூறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய முறையில் நம்முடைய சட்ட மன்றக் கூட்டத்தைக் குறைந்தது 100 நாட்களாவது நாம் நடத்துவது நலமாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். மேலும், இது ஒரேயடியாக 100 நாட்கள் என்றில்லாமல், மூன்று மாதங்களுக்கொரு தடவை இந்தச் சட்ட மன்றக் கூட்டத்தை நடத்துவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதும் எங்களுடைய கருத்தாகும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பிரயாணம் செய்வதற்குப் பல வசதிகள் தேவைப்படுகின்றன. உதாரணமாக, அரசினுடைய பேருந்துகளிலும் புகை வண்டிகளிலும்கூடப் பிரயாணம் செய்வதற்கான அனுமதிச் சீட்டுக்கள் வழங்குவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்கவேண்டும் என்று கருதுகிறேன்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தம்முடைய அலுவலகத்தை வைத்துக் கொள்ளுவதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுடனும் இணங்கிச் செயல்படுவதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலும் சட்டமன்ற உறுப்பினருக்கென்று ஓர் அறை ஒதுக்கிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் சாதாரணமாக மாதத்திற்கு இரண்டு தடவை ஜீப்களை உபயோகப்படுத்த முடிகிறது. ஆனால், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் சில நேரங்களில் எதாவது சாக்குப்போக்குச் சொல்லி, ஜீப்களை சட்டமன்ற உறுப்பினர்கள் உபயோகப்படுத்த முடியாமல் செய்து விடுகிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர், குறைந்தபட்சம் மாதத்திற்கு நான்கு நாட்களாவது பஞ்சாயத்து யூனியன் ஜீப்களை உபயோகப்படுத்தி, தன்னுடைய தொகுதி வேலைகளைச் செய்வதற்கு ஆக்கம் அளிக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் கடமைகளைப்பற்றிக் கூறும்போது உதாரணத்திற்கு நான் ஒன்றை விளக்க விரும்புகிறேன். குத்தாலம் தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர், முன்பு பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த காலத்தில், காலையிலிருந்து மாலை வரை என்னுடைய தொகுதியில் சுற்றுப் பயணம் செய்தார்கள். ஆனால், சுற்றுப்பயணத் திட்டத்தை ஏற்பாடு செய்த பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் அவர்கள் என்னுடைய பெயரை விட்டுவிட்டார். அதை நானும் பொருட்படுத்தவில்லை. ஆனால், கலைஞர் அவர்கள், இது மிகவும் தவறானது, கண்டிக்கத்தக்கது என்று கூட்டத்தில் பேசிவிட்டு வந்தார்கள். இது, அவர் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த காலத்தில்.

பிறகு, மாண்புமிகு விவசாய-அரிசன நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தார்கள். அவர் வருவதைக்கூட எனக்கு அறிக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், என்னுடைய பெயரையே அங்கே குறிப்பிடவில்லை.

அடுத்து, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் காலையிலிருந்து மாலை வரை சுற்றுப்பயணம் செய்தார்கள். ஆனால், ஆறு நிகழ்ச்சிகளிலும் என்னுடைய பெயரை ஆணையர் அவர்கள் குறிப்பிட்டிருக்கவில்லை. கடைசியில் ஒரே ஒரு நிகழ்ச்சியில்—கோனேரிராஜபுரம் நிகழ்ச்சியில்தான்—அமைச்சரை நான் சந்திக்க முடிந்தது. அதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவாவர்களுக்கும், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட ஆணையாளர் அவர்களுக்கும், அமைச்சருக்கும்கூட எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆனால், இவை சம்பந்தமாக எந்தவிதமான பதிலும் இன்றுவரை இல்லை.

சட்டமன்ற உறுப்பினருக்குள்ள உரிமை என்பது சட்டமன்றத்தில் மட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினருக்குள்ள உரிமை என்பது வெளியிலே நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தும்படியாக இருக்கவேண்டும். வெளியிலே நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினருக்குள்ள கடமைகளை ஆற்றமுடியாமல் தடுத்து நிறுத்தக்கூடிய அளவுக்குப் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், கலெக்டர் ஆகியோர் நடந்துகொண்டால் அதையெல்லாம் அனுமதிக்க முடியாது. அப்படித் தடுத்து நிறுத்தக்கூடிய நிலைமை இருப்பதன் மூலமாக என்ன ஏற்படும்? மாவட்டத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய கட்சியைப் பின்பற்றுகிற மக்களுடைய அதிருப்திக்கு இலக்காகக்கூடிய சூழ்நிலையும், விரும்பத்தகாத சூழ்நிலையும் ஏற்படும் என்று நான் கருதுகிறேன். அது போன்ற முறைகளைத் தவிர்ப்பதற்கும், அவர்கள் மிகவும் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளுவதற்காகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளில் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்படுகின்றன. அவசரமும் பொது முக்கியமுமான விஷயத்தைப் பற்றித்தான் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் சாதாரணமாகக் கொண்டுவரப்படுகின்றன. அப்படி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்படும்போது, சட்டவிதிகள் என்ற பெயராலும், மரபு என்ற பெயராலும் பேரவைத் தலைவருடைய அறையிலேகூட நீக்கப்படுகின்றன; அவை அனுமதிக்கப்படுவதில்லை. இந்த முறையைப்பற்றிக் கொஞ்சம் பரிசீலனை செய்து, நாட்டு மக்களுடைய தேவைக்கு அவசியமாக இருக்கும் பிரச்சினைகளைப் பொருத்தவரையிலாவது, குறைந்தபட்சம் சட்டமன்றத்திலே படிப்பதற்கும், அதைப்பற்றி உறுப்பினர் கூறவும், அதன்மீது அமைச்சர்கள் சொல்ல வேண்டிய பதிலைக் கூறவும், அதற்குப்பிறகு அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நிராகரிப்பதும் பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

உதாரணமாக, கீழ்வெண்மணி சம்பவத்தைக் கூறலாம். இந்திய நாடு மட்டுமல்ல; உலகமே அதிர்ச்சி அடையக்கூடிய சம்பவம், கீழ்வெண்மணி சம்பவம்; 44 பேர்கள் இறந்த சம்பவம். அது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் நாங்கள் கொண்டுவந்த நேரத்தில், அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நாங்கள் இங்கே படிக்கக்கூட முடியாத அளவுக்கு, அறையிலேயே அன்று அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. இதுபோன்ற முறைகளையெல்லாம் தவிர்த்து, ஒத்திவைப்புத் தீர்மானங்களை இங்கே எடுத்துக் கூறுவதற்கும்,



விரிவான முறையில் கருத்துத் தெரிவிப்பதற்கும், சரியான முறையில் எங்களுக்கு உரிமை வழங்கவேண்டுமென்று நான் அமைச்சர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினருடைய குடும்பத்தினருக்கும் வைத்திய சிகிச்சை வசதிகளெல்லாம் அளிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்டமன்றத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களில் பல பேர் இன்றையதினம் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கீழ்வெண்மணி நிகழ்ச்சியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்றபோது, அது குறித்து இந்த மன்றத்தில் பேசுவதற்கான வாய்ப்பே இல்லாத அளவுக்குத் தடுக்கப்பட்டது என்ற அளவில் குறிப்பிட்டார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் இந்த மன்றத்தில் அனுமதிக்கப்படவில்லையே தவிர, அதற்காகத் தனியாக ஒரு நேரம் ஒதுக்கப்பட்டுக்கூட, முழு விவாதம் மேற்கொள்ளப்பட்டு, மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பும், அந்த நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தி, அவைப்பற்றிய நிலைமையை விளக்குவதற்கான வாய்ப்பும் அளிக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

**திரு. கோ. பாரதிமோகன் :** அங்கு சம்பவம் நடந்தவுடனேயே, அந்தச் சூடான நேரத்திலே, தமிழக மக்களுடைய உணர்ச்சி வேகத்தைப் பிரதிபலிக்கக்கூடிய முறையில், அந்த நிலைமையை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தோம். ஆனால், ஒத்திவைப்பு, தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதென்பது உண்மை. அதன்பிறகு, வேறு ஏற்பாடுகள் செய்துகொண்டோம். ஆனால், அந்த முறை வேண்டாம். ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரக்கூடிய நேரத்தில், அவை எவ்வளவு தூரம் முக்கியமானவை என்பதைக் கொஞ்சம் படிப்பதற்காவது அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கால்நடை உதவியாளர்கள் பிரச்சினை சம்பந்தமாக, அவர்கள் ஊர்வலம் வருவதற்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் பெயரால் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தவுடனேயே அது நிராகரிக்கப்பட்டது. ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது அமைச்சரவர்கள் அது சம்பந்தமான விபரங்களை முன்னுடியே கூறியிருந்தால், அது சம்பந்தமாக அரசின் நிலைமைகளைத் தெளிவாக அறிந்து கொண்டு இருப்பார்கள்; வீறுனை நிலைமையைத் தவிர்த்திருக்க முடியும் என்பது எங்களுடைய அபிப்பிராயமாகும். முன்னுடியே சபைக்குக் கொண்டு வந்தும்கூட அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாத நிலையை, இனி வரக்கூடிய நேரங்களிலாவது தவிர்ப்பது நல்லது என்பதும் எங்களுடைய அபிப்பிராயம் ஆகும்.

**திரு. ரா. கனகசபை :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவை நல்ல முறையில் நடந்து வருகின்றது என்று எல்லோரும் ஒருமுகமாகச் சொன்னார்கள். இது, இன்னும் திறம்பட மக்களுக்குச் சேவை செய்யும்படி

யான முறையில் நடக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் சில யோசனைகள் கூற விரும்புகிறேன்.

இந்தப் பேரவையில் முக்கியமான நேரம், கேள்வி நேரமாகும். அந்தக் கேள்வி நேரத்திலேயே அங்கத்தினர்கள் பலர் தங்களிடத்திலும் புகார் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது, அவர்கள் போடுகின்ற கேள்விகள் விடையளிப்பதற்கு வருவதே இல்லை. அவற்றிற்குப் பதில் வரவில்லை யென்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக நான் என்ன சொல்லு கிறேன் என்றால், நமது லோக சபாவில் என்ன முறை கையாளப்படுகிறதோ அந்த முறை இங்கேயும் கையாளப்பட்டால் சுலபமாக எல்லோருடைய கேள்விகளுக்கும் பதில்கள் வந்துவிடும். கேள்விகள் கொடுப்பது என்றால், உறுப்பினர்களும், அவர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்களும் அந்தப் பிரச்சினை குறித்து விவரம் அறிந்து கொள்ள அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதாகும். அப்படியிருக்க அந்தக் கேள்விக்குப் பத்து நாட்களுக்குள் அந்த அங்கத்தினருக்குப் பதில் வந்துதான் ஆகவேண்டும். லோக் சபாவில் நாளொன்றுக்கு சராசரி ஐம்பது கேள்விகள் அச்சடிக்கப்பட்டிருக்கும். ஆனால், கேள்விகளுக்குப் பதில் சொல்லப்படுவது பத்து அல்லது பன்னி ரண்டு கேள்விகளுக்கு மேல் வராது. ஆனால், மற்றவைகளுக்கெல்லாம் பதில்கள் அச்சிடப்பட்டு அங்கே வைக்கப்பட்டிருப்பதால் அங்கத்தினர்கள் தங்களுடைய கேள்விகளுக்குரிய பதில் என்ன என்பதைப் போய் பார்த்துக் கொள்ளலாம். ப்ரொசீடிங்ஸில் வந்துவிடும். அந்த முறையைக் கையாண்டால் எல்லா கேள்விக்கும் விடையளிப்பதற்கு வந்துவிடும். ஒரு கேள்வியும், பதில் சொல்லவில்லை என்கின்ற நிலையில் இருக்காது. அந்த எண்ணமும் அங்கத் தினர்களுக்கு உண்டாகாது:

அநேக சமயங்களில் நான் இங்கே பார்த்துக் கொண்டிருக்கிறேன். கேள்வி நேரத்தில் அமைச்சர்களில் சிலர் வருவதில்லை. ஆகையால், அவர்களுக்குரிய கேள்விகள் தள்ளிவைக்கப்பட்டு, பிறகு கடைசியில் பதில் சொல்லும்படியான சந்தர்ப்பமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், லோக சபையில் வாரத்திற்கு ஒரு நாள்தான் ஒரு அமைச்சருக்கு முறை வரும். அம்மாதிரி இல்லாமல், வாரத்திற்கு இரண்டு நாள் ஒரு அமைச்சர் பதில் சொல்லும் படியாக வைத்துவிட்டால், அந்த நேரத்தில் அவர்கள் வந்திருந்து 15 கேள்விகள் வரையிலும்கூட பதிலளிக்கப்படும்படியான நிலை வந்துவிடும்.

ஏனென்றால் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள காங்கிரசில் இம்மாதிரி யான ஒரு ஆயுதம் கிடையாது. இந்த ஆயுதத்தை, பிரிட்டிஷ் பார்லி மெண்டில் இருப்பதையொட்டி நாம் வைத்திருப்பதால் இந்த ஆயுதத்தை நல்ல முறையில் பயன்படுத்தி அது உபயோகமுள்ளதாக இருக்கும் அளவிற்கு நாம் வழிவகைகளைச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, தங்களுக்கு முன்னால் இருந்த அவைத் தலைவர் அவர் களிடம் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். அதை மீண்டும் சொல் கிறேன். அந்த விதிகளை திருத்தும்படிக் கேட்டுக்கொள்கிறேன். பில்ஸ் வரும் போது நம் சட்டத்தை எடுத்து பார்த்தால், அதை வோட்டுக்கு விடும்போது அதை எதிர்ப்பவர்களுக்கு அதன்மீது பேசுவதற்கு அவகாசம் கொடுத்து அதை வோட்டுக்கு விடவேண்டும். அதுதான் பர்ஸ்ட் ரீடிங் என்று சட்டசபை விதிகளில் இருக்கிறது. ஆனால் இங்கு ஏற்கெனவே கெஜட்டில்



வந்தாலொழிய பில்லை முதலில் அங்கத்தினர்களுக்குக் கொடுப்பதில்லை. என்ன காரணத்தை வைத்துக் கொண்டு அதை எதிர்ப்பது? அப்படி எதிர்ப்பது என்றால் பில்லைப் பார்க்காமல் என்ன பேசுவது? அப்படி எதிர்க்கும் மரபு இங்கு இல்லை என்று சொல்லலாம். அதில் சில சமயங்களில் தவறுகள் ஏற்பட்டுவிடலாம். அது கான்ஸ்டிட்யூஷனுக்கு விரோதமாக இருக்கலாம். இது மாதிரி ஒரு ஸப்ஸ்டான்ஷியல் லெஜிஸ்லேஷன் முன்பே இருந்திருக்க லாம். ஆகவே பர்ஸ்ட் ரீடிங்கில் மெம்பர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது பில்லில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் எப்படி அதை எதிர்த்துப் பேசுவது? லோக் சபாவில் என்ன பழக்கம் என்றால் 'கான்ஃபிடென்ஷியல்' என்று போட்டுவிட்டு மெம்பர்களின் உபயோகத்திற்காக முதல் நாளே இந்த பில் எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டு விடுகிறது. அந்த முறையை இங்கும் கையாளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை அம்மாதிரிப் பழக்கம் இல்லை என்று சொன்னார்கள். ஆகவே அந்த விதியைத் திருத்தி பர்ஸ்ட் ரீடிங்கில் அந்த பில்மீது வோட்டளிக்க எதில் என்ன இருக்கிறது என்று பார்த்துப் பேசக்கூடிய விதத்தில் விதியைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜில்' கொடுக்கவேண்டுமென்று சொல்கிறீர்களா? அப்போது விவாதம் கிடையாதே.

**திரு. ரா. கனகசபை:** அந்த ஸ்டேஜில் அதைப்பற்றிப் பேசவேண்டு மென்றால் அல்லது அதை எதிர்ப்பது என்றால் என்ன காரணங்களைச் சொல்லி எதிர்ப்பது என்பதற்கு அந்த பில்லைப் பார்க்காமல் எப்படிச் சொல்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்ட்ரட்யூஸ் செய்த பிறகுதான் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** Leave to introduce the Bill அதை இன்ட்ரட்யூஸ் செய்யலாமா, கூடாதா என்பதுபற்றிய விவாதம் இங்கு இல்லை என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜில் விவாதம் கிடையாது. முதலில் இன்ட்ரட்யூஸ் செய்கிறோம். பிறகு பில் எல்லோருக்கும் வழங்கப்படுகிறது. பிறகு மற்றொரு நாள் விவாதத்திற்கு வருகிறது. அப்படி விவாதத்திற்கு வரும்போது கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்த பிறகுதான் வாக்கெடுப்பு நடைபெறுகிறது. நீங்கள் என்ன வேண்டுமென்று சொல் கிறீர்கள்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இன்ட்ரட்யூஸ் செய்யலாமா, கூடாதா என்பது பற்றி விவாதம் வேண்டும் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜில் அது தேவையா?

**திரு. ரா. கனகசபை:** "லீவ் டு இன்ட்ரெட்யூஸ்" என்பது வோட்டுக்கு விடப்படுகிறது. Leave to introduce is first reading

அதை எதிர்ப்பதாக இருந்தால் அந்த பில்லின் உள்ளே இருப்பது என்னவென்று தெரியாமல் அதை எப்படி எதிர்த்துப் பேச முடியும்? லோக் சபாவில் முதல்நாள் தபாலிலேயே பில்லைக் கொடுத்து விடுகிறார்கள். என்ன இருக்கிறது என்பது தெரியாமல் எப்படி வோட்டு அளிப்பது? லோக் சபாவில் 'வோட் டவுன்' செய்யலாம். ஆனால் இங்கே அது கிடையாது. ஆகவே லோக் சபாவிலிருந்து வரவழைத்துக்கூடப் பார்க்கலாம். அதைப் பார்த்து அதன்படி நம் விதிகளைத் திருத்தி உறுப்பினர்கள் பில்லில் உள்ளதை அறிந்து செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தை அளிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, சட்டமன்றம் அதிக நாள்கள் கூட வேண்டும் என்று சொன்னார்கள் ஜனநாயகம் உள்ள எல்லா நாடுகளையும் பார்தால் அநேகமாக இங்கிலாந்தில் எட்டு மாத காலத்திற்கு மேலாகவே பார்லிமெண்ட் அங்கு நடக்கும் போல் இருக்கிறது. பார்லிமெண்ட் கூடாத நாட்களை ரிஸெஸ் என்று கூறுவதிலிருந்து பார்லிமெண்ட் எப்போதும் இருக்கும் போல் இருக்கிறது. நமது பாராளுமன்றம் சராசரியாக 180 முதல் 200 நாட்கள் வரை கூடுகிறது. ஆகவே இங்கும் அதிக நாள்கள் கூட வேண்டும் என்பது மட்டுமல்லாமல்—லோக் சபாவில் எப்பொது அது கூடுகிறது என்பது முதலிலேயே தெரிகிறது. மூன்று செஷன்; பட்ஜெட் செஷன் பெப்ரவரியில் ஆரம்பிக்கிறது. பின்னர் ஆட்டம் செஷன், விண்டர் செஷன் என்ற வரையறை இருக்கிறது. இங்கு நம் சட்டசபையில் அப்படி எந்தவிதமான வரையறையும் இல்லாமலிருக்கிறது. ஆகவே அம்மாதிரி ஒன்றை வகுத்துக் கொள்வது நல்லது.

திரு. அரங்கண்ணல் பேசினார்கள். நாம் பொறுப்பு வாய்ந்தவர்கள். நமக்குள்ளேயே ஒரு கட்டுப்பாடு வேண்டும். தலைவர் அவர்கள் சொல்லும் போது, ஸ்பீக்கர்ஸ் கான்பரன்ஸில் ஒருவரைப் பற்றிக் குற்றம்சாட்டும்போது என்ன செய்யவேண்டுமென்று விவாதித்ததாகச் சொன்னதாகச் சொன்னார்கள். அது விதியில் இருப்பது நல்லது. யாரைப் பற்றியும் குற்றஞ்சாட்டலாம். ஆனால் அதை முன்னாலேயே அறிவித்துவிட்டால்—மகாதேவன் பிள்ளை அவர்கள் சொல்லும்போது ஏதோ ஒரு எக்கர். ஒரு சென்ட் என்று சொன்னார்கள். முன்பே அதைப் பற்றித் தெரிவித்து விட்டால் அதுபற்றி இங்கேயே உடனே தெரிவித்துவிடுவார்கள். இங்கு பேசுவதற்கு நமக்கு இம்யூனிட்டி இருக்கிறது. அதையே நாம் வெளியே பேசினால் நம்மீது நடவடிக்கை எடுக்க யாருக்கும் உரிமை இருக்கிறது. நமக்கு சுதந்திரம் வேண்டும் என்று சொல்லும்போது பிறரது சுதந்திரத்தைப் பறிக்காமல் அதை அனுபவிக்கவேண்டும். அதுபோல் 'இம்யூனிட்டி' என்று வரும்போது 'ரெஸ்பான்ஸிபிலிட்டியும்' கூடவே வருகிறது. ஆகவே பொறுப்பு உணர்ச்சியோடு, சபையில் கண்ணியத்தைக் காப்பாற்றுகிற வகையில் நமக்குள்ளேயே நாம் ஒரு கட்டுப்பாட்டை வைத்துக் கொள்ளவேண்டும். பிறகுதான் தலைவர் அவர்களிடம் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி:** தலைவர் அவர்களே, நம் அவைபற்றியும், அவை நடவடிக்கைகள் பற்றியும் சொல்லும்போது மற்ற மாநிலங்களை விட நம் அவை சிறப்பாக சீராக நடக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இருந்த போதிலும் சில பிரச்னைகளில் பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதுபோல்



உறுப்பினர்களுக்கு பல்வேறு கருத்துக்கள் இருந்தாலும் அவற்றைச் சொல்லலாமா கூடாதா, சொன்னால் தவறு ஏற்பட்டுவிடுமோ, குறைபாடு ஏற்பட்டுவிடுமோ என்று விழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்று அவர்களுடைய சம்பளப் பிரச்னை. மற்ற மாநிலங்களை விட மிகச் சீரும் சிறப்புமாக நடக்கிற இந்த சபையில் அங்கத்தினர்களுடைய சம்பளம் குறைவாகவே இருக்கிறது. இதைப் பற்றி கடந்த கால காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சொல்லும்போது பவரில் இருக்கும்போது நாங்கள் கொண்டுவரலாமா, மக்கள் என்ன நினைப்பார்களோ என்று பயப்பட்டார்கள். ஜனநாயகத்தைக் கண்டு பயப்படுகிறவர்கள் மாதிரி சம்பளத்தை உயர்த்தினால் ஜனங்களை ஏமாற்றிவிடுவது போலாகும் என்ற போலி நடிப்பே தவிர அது வேறு ஒன்றுமில்லை. வசதியுள்ள அங்கத்தினர்களும் இருக்கிறார்கள், வசதி இல்லாத அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் கஜானாவைத் திற, திறந்து வாரி இறை என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். அதேசமயத்தில் ஏழை எளியவர்கள், நடுத்தர வகுப்பினர், மிகவும் கஷ்டப்படுகிற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போன்ற நிலையில் உள்ள உறுப்பினர்கள் தங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லட்டும் சம்பளம் வேண்டாமென்று? ஏதோ ஒரு பயம். சட்டசபையில் அப்படி வேண்டுமென்று சொன்னால் பத்திரிகைகளில் வந்துவிடுமே, பார்த்தாயா சம்பளம் கூடுதல் வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று பத்திரிகைகளில் வந்துவிடுமே என்று பயத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். மைசூரில் சட்டமன்ற உறுப்பினர்களின் அறைகளைப் பார்த்தாலே, இங்கே அதைப்பற்றிப் பேசுவதற்கே வெட்கமாக இருக்கிறது. மராட்டிய மாநிலத்திலும் அப்படியே. உறுப்பினர்களுக்கு சௌகரியமாக இருந்தால்தான் அவர்கள் வேலை செய்ய முடியும். பொது நல ஊழியன், சமூக ஊழியன் என்றால் என்ன? அவன் தூக்கா மாட்டிக் கொள்ள வேண்டும்? ஏழைக்கு உதவி செய்யக் கூடியவன் என்றால் பட்டினியா கிடக்க வேண்டும்? எனவே, தயவு செய்து அவர்களுக்குச் சில வசதிகளைச் செய்தால்தான், சமுதாயப் பிரச்னைகளிலே கவனம் செலுத்த முடியும். பவர் பார்ட்டியிலே இருக்கிறோமே, இதைக் கொண்டுவந்தால் ஜனங்கள் சண்டைக்கு வந்துவிடுவார்களோ என்ற பயமில்லாமல் சம்பள விகிதத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அமைச்சர்கள் ஆளும்கட்சியிலேயிருந்துதான் வருகிறார்கள். அதனால் அந்த அமைச்சர்களெல்லாம் அந்தக் கட்சிக்குத்தான் சொந்தம் என்று ரொம்பப் பேர் நினைக்கிறார்கள், அது தப்பு. அமைச்சர்கள் அப்படி நினைக்கவில்லை, அந்தக் கட்சியிலே இருப்பவர்கள், இந்த நாடே அவர்களுக்குத்தான் சொந்தம் என்று நினைக்கிறார்கள். ஏனென்றால், என்னுடைய தொகுதியிலே அமைச்சர்கள் வந்தால் எனக்குத் தெரியவில்லை. நான் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருக்கிறேன், எம்.எல்.ஏ. வாகவும் இருக்கிறேன். எனக்கே தெரியாமல் அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால் ரொம்பவும் மனக்கஷ்டமாக இருக்கிறது. ஏன் இந்த நிலை? ஏதோ கட்சிக்காரர்கள் கூப்பிட்டது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது என்றால், இதேபோலத்தான் 19 வருஷ காலமாக ஏகதேசமாக இருந்தவர்கள் செய்து கொண்டு வந்தார்கள். புரோக்ராம் வரும். ஆனால் நிகழ்ச்சி அமைக்க வேண்டியவன் எம்.எல்.ஏ., பொறுப்பை ஏற்றுக்கொள்வது யூனியன் சேர்மன். புரோக்ராமைப் போட்டு விட்டு எம்.எல்.ஏ. க்களுக்குச் சொல்வது மக்கள் பிரதிநிதிகளுக்குச் செய்யக் கூடிய ஜனநாயக முறையல்ல

யிலே இருக்கும்படியான அமைச்சர்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. எதிர்க் கட்சி ஒரு வேலையும் கொடுக்கவில்லை, கொடுக்கவில்லை என்று சொன்னால் நாங்கள் பில்லைக்கொண்டு வந்து ஆராயவா போகிறோம். ஆகவே, சட்டமன்றம் அதிக நாட்களுக்குக் கூட வேண்டும், அதிக நாட்கள் பணிபுரிந்தால்தான் நன்றாக இருக்கும். இதில் அவர்கள் கொடுத்த வாக்குறுதியைத்தான் நிறை வேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் கூறிய சமயத்தில், மிகவும் அமைதி யாக, நமது இந்திய நாட்டிலேயே இந்தச் சட்டமன்றம்தான் ஒழுக்கமாக, கண்ணியமாக நடைபெற்று வருகிறது என்று அவர்கள் கொடுத்த அத்தாட்சிக்கு மிகவும் நன்றி. அடிக்கடி சபாநாயகரவர்கள் மட்டும், கண்ணியம் இருக்க வேண்டும், கண்ணியம் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். கண்ணியக் குறைவாக நடந்து, அதனால் சபாநாயகரவர்கள் சொல்கிறார்களா? திரு அரங்கண்ணல் அவர்கள், அத்தாட்சி கொடுத்ததற்கான நன்றியைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், தலைவரவர்களே, மிகவும் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன், சபையினுடைய இந்த விவாதத்தில் தங்களுடைய பெயரையோ அல்லது தங்களையோ இழுத்துப் பேசுவதோ நல்லது அல்ல என்பது எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்குத் தெரியும். தங்களை இழுக்காமல் பேசுவது நல்லது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் கண்ணியமுள்ளவர்களாக, எவ்வளவு பண்புள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, எவ்வளவுதூரம் சகித்துக் கொண்டு, எவ்வளவு தூரம் பொறுமையாக, எவ்வளவு தூரம் தமிழர்களின் பண்பாட்டுடன், நடந்து கொள்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால் தான் தமிழக சட்டமன்றம் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறது. ஏனைய சட்டமன்றங்களைப்போல், லாம்பன் ஆரம்பிதால் என்னவாகும்? அப்படி ஆரம்பித்தால் இன்னும் அதைவிட மோசமாக இது தமிழ்நாட்டிலே இருக்கும். எனவே, இப்படி நல்ல முறையில் இருப்பதற்குக் காரணம், எங்களுடைய சகிப்புத்தன்மை, பொறுமை, எதிர்க்கட்சியின் திறமை என்பதை உணரவேண்டுமென்றுதான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொறுமையை இழக்காமல், சகித்துக் கொண்டு பணி புரிவதால்தான் மிகவும் நல்லமுறையில் இருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக திரு. விநயகம் அவர்கள் சொன்ன மாதிரி சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று சுற்றிப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் வேண்டும். மறைந்த முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் காலத்தில் பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி டெல்லிக்குப் போகவேண்டும் என்று கேட்டபொழுது, அனுமதி மறுக்கப்பட்டது. இப்பொழுது இருக்கும் படியான முதல் அமைச்சர் அவர்களும் அம்மாதிரி போகவேண்டும் என்று கேட்டதற்கு, அனுமதி அளிக்கவில்லை. பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டியில் எல்லா அங்கத்தினர்களும் கேட்டு, ஏகமானதாகத் தீர்மானம் போட்டு, முதல் அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்தோம். எஸ்டிமேட் கமிட்டி இப்பொழுது வெளிமாநிலங்களுக்கு போய்க்கொண்டிருக்கிறது அங்கத்தினர்கள் சொல் கிறார்கள் எனக்கு சக்தி இல்லை என்று. நான் சொல்கிறேன், உங்கள் சர்க்கார் தானே, உங்கள் முதல் அமைச்சர் தானே என்று நான் சொல்கிறேன். நான் முதல் அமைச்சருக்கு கடிதம் எழுதினால் கூட, எனக்கு அனுமதி மறுக்கப்பட்டு கடிதம் வந்தது. மறுபடியும் கேட்டேன். அப்பொழுதும் கூட அனுமதி கொடுக்கப்படவில்லை. நான் கோறடாவாக இருந்த சமயத்தில் சட்டமன்ற உறுப்பினர்களை எல்லா இடங்களுக்கும் அழைத்துக் கொண்டுபோய், அங்கெல் லாம் கமிட்டி நடவடிக்கைகள் எப்படி நடக்கின்றன, அந்தக் கமிட்டி எப்படி நடத்தப்படுகிறது என்பதையெல்லாம் காட்டியதற்குப் பின்னால், அது அவர் களுக்கு ஒரு பாடமாக அமைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அப்படிச் செய்தால் வெளி மாநிலங்களில் நடக்கக்கூடிய உத்திகளைக் கண்டறிவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். பி.ஏ.ஸி. வெளி மாநிலங்களுக்குப் போகவேண்டும் என்று நான் சொன்னபொழுது, முன்னால் இருந்த சபாநாயகர் அவர்கள் அனுதாபத்தின் பேரிலோ என்னவோ வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய சபாநாயகர் அவர்கள் அதற்கு அனுமதி தரவில்லை என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதற்கு மேலே முதல் அமைச்சர் அவர்களும் உத்தரவு போட்டுவிட்டார்கள். நான் சொல்வது என்னவென்றால், பி.ஏ.ஸி. மட்டுமல்ல, கமிட்டிகள் மட்டுமல்ல, அங்கத்தினர்கள் அனைவரும் நமது நாடு பூராவும் சுற்றி வருவதற்கு ஒரு ஏற்பாடு செய்தால் மிகவும் நலமாக இருக்கும். செலவைப்பற்றி அக்கறை இடையாது. நம்முடைய நாட்டி னுடைய ஒருமைப்பாட்டிற்கும், நாடு சுதந்திரத்திற்குப் பின்னால் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத் திற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதையெல்லாம் பார்த்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.



அடுத்தபடியாக, சட்டமன்றத்தில் நடக்கும்படியான நிகழ்ச்சிகளை இப் பொழுது சுருக்கெழுத்தாளர்கள் சுருக்கெழுத்தில் எழுதுகிறார்கள். பேச்சுக் கள் அங்கத்தினர்களுக்கு திருத்துவதற்கு இரண்டு, மூன்று நாள் கழித்துத் தான் வருகின்றன. இப்பொழுது என்ன முறை கையாளப்படுகிறதோ தெரிய வில்லை. குறுக்கீடுகளெல்லாம் சேர்ந்து வருவதில்லை. குறுக்கீடுகளை யெல்லாம் கத்திரித்துவிட்டு, துண்டு துண்டுகளாகக் கொடுக்கிறார்கள். என்ன கேட்டார் கள், அதற்கு நாம் என்ன பதில் சொன்னோம் என்பது தெரிவதில்லை. இங்கே நடந்ததை அப்படியே எழுதி, அங்கத்தினர்களுடைய பேச்சு, குறுக்கீடுகளுடன் பூரணமாக வந்தால் தான் சரியான முறையில் இருக்க முடியும். ஆகவே, நான் இதை வன்மையாகக் கண்டிக்கிறேன். எப்படி இதைப் படிக்கிறது ? இப்படித் தான் கட் பண்ணி கட் பண்ணி வருகிறது. எத்தனை கட்டிங்குகள்? இதை எப்படித் திருத்துவது? 35 கட்டிங்குகள் தனித்தனியாக இருந்துகொண்டிருக் கிறது. அது அப்படியே தொடர்ந்து இருந்தால் படித்துத் திருத்துவதற்கு வசதியாக இருக்கும். வேறு யாராவது குறுக்கீடு செய்திருந்தால் அதை நாங்கள் திருத்தப்போவதில்லை. நாங்கள் எங்களுடைய பேச்சைத் தான் திருத்துவோம். இப்படி தனித்தனியாக கட் பண்ணி அனுப்பக் கூடாது. நான் இது பற்றி பல முறை கூறியிருக்கிறேன். ஆனால் நடவடிக்கை எடுக்கப் படவில்லை. நடவடிக்கை எடுக்காததற்கு காரணம். அதைத் திருத்துகிறார் களோ என்னவோ என்ற ஒரு நிலை கூட ஏற்படுகிறது. அதற்காகத் தான் டேப் ரிகார்டு வேண்டுமென்று சொல்கிறேன் சில சமயங்களில் . . .

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்த காலத்தில் கூட இதே மாதிரி தான் வந்தது. தொடர்ந்து அது நடைப்பெற்றுக் கொண்டு வருகிறது. இப்பொழுது மட்டும் நடைபெறவில்லை. அதிலும் குறிப்புகளை மறைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் வெட்டித் தரப்படுகிறது என்று பொருள் படச் சொன்னார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவராக ஐந்து ஆண்டுகள் இருந்தபொழுது என்னுடைய பேச்சு தான் எனக்கு வரும். மற்றவர்கள் குறுக்கிடு இருந்தால், அந்த அளவுக்கு நறுக்கப்பட்டு தான் வரும். இப்பொழுது முழுவதும் வரவேண்டும், முன்பின் தேவை, முன்பின் தெரிய வேண்டும் என்ற நிலைமை இருந்தால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் சட்டமன்ற உறுப்பினராக 10 வருஷங்கள் இருந்திருக்கிறேன். அப்பொழுது இப்படி கிடையாது. நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபொழுது வற்புறுத்தவில்லை. நீங்கள் ஏன் வற்புறுத்தவில்லை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இவர்கள் ஆட்சி இருந்தபொழுதே இருந்தது தான். அதற்குப் பின்பும் அந்த முறை தொடர்ந்து வருகிறது. நாங்கள் வந்ததற்குப் பிறகு ஏன் அதை நறுக்க வேண்டும்? ஏன் இது மாதிரி கொடுக்க வேண்டும்? முன்னால் இருந்தது தான் தொடர்ந்து நடந்துகொண்டு வருகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது அப்பொழுதிருந்த எதிர்க்கட்சித் தலைவருடைய பொறுப்பு. இதற்கு முன்னால் இப்படிக் கொடுத்திருந்தால் நீங்கள் வற்புறுத்தியிருக்க வேண்டும். அன்று இருந்த முதல் அமைச்சர் உங்களுக்கு வேண்டியவரோ என்னவோ, நீங்கள் அதை ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள் . . .

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த முதல் அமைச்சர் கருத்திருமன் அவர்களுக்குத் தான் வேண்டியவராக இருந்தார். எங்களுக்கு வேண்டியவர் இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்களுக்கு வேண்டியவரா, உங்களுக்கு வேண்டியவரா என்பதை உங்களிடையே நெருக்கமாக இருந்த பேச்சு மூலம் உணர்ந்து கொள்ள சக்தி இருக்கிறது.

ஆகவே, டேப் ரிகார்டர் வேண்டுமென்று நான் சொல்கிறேன். டேப் ரிகார்டு இருந்தால் மறுபடியும் கம்பேர் பண்ணிக்கொள்ளலாம்.

அடுத்தபடியாக, இரண்டு நாளைக்கு முன்னால் நான் சில பேச்சுக்களைப் பார்க்கவேண்டுமென்று சொன்னேன். ஒரு பேச்சு வேண்டும் என்று இங்கிருந்து சொன்னேன். காரியதரிசிக்கு விண்ணப்பம் போட்டு, அவர் உத்தரவிட்ட பிறகு இங்கு வரும் என்று சொல்லப்பட்டது. இங்கிருந்து கொண்டு பேச்சு வேண்டும் என்று சொன்னால், உடனே அந்தப் பேச்சு கிடைக்க வேண்டும். நான் காரியதரிசியிடம் போய் உட்கார்ந்து, கேட்டு, விண்ணப்பம் போட்டு, அனுமதி அளிக்கப்பட்டு பிறகு தான் வரும் என்றால், இதற்கெல்லாம் நேரம் எங்கே எங்களுக்கு, எங்களுக்கு என்ன சௌகரியம் இருக்கிறது, யாரிடம் சொல்லி அனுப்புவது, யார் மூலம் எழுதிக் கொடுப்பது ?



ஆகவே, இங்கு இன்று நடைபெற்ற நிகழ்ச்சி குறிப்பெல்லாம் மாலையிலேயே லைபாரிக்கு வந்துவிடவேண்டும். யாரும் போய் பார்த்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கவேண்டும். திருத்தப்பட்ட உடன் தான் லைப்ராரியில் வைக்கப்படும் என்று சொன்னால், மூன்று நாட்கள் கழித்துத் தான் திருத்தி வருகிறது. திருத்தி வந்தபிறகு தான் [illegible] முடியும் என்றால், உரிமைப் பிரச்னை எழுப்பவேண்டுமென்றால், எழுப்ப முடியும்? என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியவேண்டும். இப்பொழுது இருக்கும்படியான நிலை, சீர்கேடான நிலையாக இருக்கிறது. நாளுக்கு நாள் சீர்கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. இரண்டு, மூன்று வருஷங்களாக நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். ஏகாதிபத்திய முறையில் நடக்கிற மாதிரி நடக்கிறது. எதற்கெடுத்தாலும் பெர்மிஷன் வாங்க வேண்டுமென்று சொன்னால், இது கூட அங்கத்தினர்களுக்கு உரிமை கிடையாதா ? சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்கு இந்த உரிமை கூட கிடையாதா? பல தாம் கேட்டிருக்கிறேன். எனக்குப் பேச்சு வேண்டுமென்று, இது வரையில் உடனே வந்தது கிடையாது. இதனால் மிகவும் சிரமமாக இருக்கிறது. இதில் தயவு தாட்சண்யம் ஒன்றுமில்லை. எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது, எங்களுக்கு உரிமை இருக்கிறது என்று இப்படி செய்யப்படுகிறதா ? நான் ஒரு பேச்சு வேண்டுமென்று கேட்டால், இதுவரைக்கும் உடனே வந்தது கிடையாது. ஒரு ஸ்பீச் வேண்டுமென்று சொன்னால், ஏதோ தங்க பிளேட்டில் வைத்துக் கொடுக்கிறமாதிரி ஜாக்கிரதையாக போட்டுக் கொடுப்பதற்கு என்ன காரணம்? லோக் சபாவில் பார்த்தால், அன்று சாயந்திரமே பேச்சுக்கள் வந்துவிடும். இங்கு ஸினாப்ஸிஸ் வருவதற்கு கூட மூன்று நாட்கள் ஆகிறது. மூன்று நாள் கழித்துத் தான் யார் யார் பேசியிருக்கிறார்கள் என்பது கூடத் தெரியும். பணியாளர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அவர்கள் திறம்பட வேலை செய்யவேண்டும், வேலை நன்றாக நடக்கவேண்டும், துரிதமாக நடக்கவேண்டும் என்பதை அவர்களுடைய கடமையாக உணரவேண்டும் என்று நான் கண்டிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரைக்கும் சட்டமன்றத்தில், எது வேண்டுமென்றாலும் நமக்கு உடனே கிடைப்பது கிடையாது. சில சமயங்களிலே நோட்டீஸ் வருகிறது. நீங்கள் இதைச் சொன்னீர்களே, அதைச் சொன்னீர்களே என்று கேட்கப்படுகிறது. நீங்கள் கேட்பதற்கு பதில் சொல்வதற்கு ஆதாரம் வேண்டியிருக்கிறது. ஆதாரம் இல்லாத நிலையில் என்ன சொல்ல முடியும் ? எங்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவில், கோர்ட்டு மாதிரி, கோர்ட்டுக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்துவது மாதிரி, எங்களை அவமானப்படுத்தக்கூடிய அளவில் இருக்கக்கூடிய நிலைமையில், நாங்கள் சில நிகழ்ச்சிக் குறிப்புகள் வேண்டுமென்று கேட்கக்கூடிய உரிமை கூட இல்லையா? அதற்கு வேண்டிய வசதிகளை எங்களுக்குச் செய்து தரவேண்டாமா? அதற்கு வேண்டிய குறிப்புகள் இருந்தால் தானே, நாங்கள் அது பற்றி பதில் கூறமுடியும், விளக்கம் தர முடியும்? கோர்ட்டில் கூட இம்மாதிரி நடப்பது கிடையாது. அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி எங்களுக்குக் குறிப்புகள் கிடைக்காமல், சந்தர்ப்பம் கொடுக்காத நிலையில் எங்களை விட்டுவிட்டால் பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள்? நாங்களெல்லாம் பொறுப்பு இல்லாமல் இருக்கிறமாதிரியும், அவர்களுக்கு மட்டும் தான் பொறுப்பு இருக்கிற மாதிரியும் பொது மக்கள் நினைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படு

கிறது. ஆகவே, இந்த நிலையிலே இந்தச் சபையில் நடக்கும்படியான நிகழ்ச்சியின் குறிப்புகள் அனைத்தும் மாலையிலேயே நூலகத்திற்கு வந்துவிட வேண்டும். அதற்குச் சர்க்கார் பொறுப்பு ஏற்கவேண்டும். அந்த நிலை இல்லையென்று சொன்னால் நாங்கள் எங்கள் பொறுப்புகளை, கடமைகளை சரிவர ஆற்ற முடியாது. அதற்கு வேண்டிய செக்ரடரி அல்லது மற்ற சிப்பந்திகளை தயாராக வைத்துக்கொள்ள வேண்டும். எத்தனை ஸ்டெனோ டைபிஸ்டு வேண்டுமானாலும், 10 பேர்கள் வேண்டுமானாலும் போடட்டும்; பாதகம் இல்லை. இங்கே காலையில் நடந்தது, நான்கு மணி நேரத்தில் மாலையில் லைப்ரரிககு வந்துவிட வேண்டும். திருத்தங்கள் வந்த பிறகு, மறுபடியும் திருத்தப்பட்ட குறிப்புகள் லைப்ரரிக்கு வந்துவிட வேண்டும். அப்படியில்லையென்றால் நாங்கள் இந்தச் சபையில் பணியாற்றுவது மிகவும் கஷ்டமாக இருக்கும் என்பதை மிகவும் கஷ்டத்தோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக எவ்வளவோ வசதிகள் வேண்டும் என்று கேட்டார்கள். வசதிகள் ஒவ்வொரு இடத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. அண்ணாதுரை அவர்கள் முதல் அமைச்சராக இருந்த சமயத்தில் கூட அங்கத்தினர்களுக்கு ரயில்வே பாஸ்கள் கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்ற தொடங்கிய பகுதியிலிருந்து, இந்தப் பகுதிவரையில் நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து எடுத்து விடவேண்டும் என்றும், பத்திரிகையாளர்களும் வெளியிடவேண்டாம் என்றும் கட்டளையிடுகிறேன். அதை விட்டு, மேற்கொண்டு பேசலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** போக்குவரத்தில் தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நான் இதைத் தனிப்பட்டவர்களுக்காகச் சொல்லவில்லை. எல்லோருக்கும் நல்லது. எல்லோருடைய வசதிக்காகவும்தான் இதைச் சொல்கிறேன். முதல் வகுப்பில் போய்வந்தால் இங்கே பில் தயார் செய்வதற்கும் சௌகரியமாக இருக்கும். எல்லோருக்கும் முதல் வகுப்பு பாஸ் கொடுப்பதற்கான ஒரு முயற்சி நடந்து வந்தது. இந்த மாநிலத்திலுள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும் முதல் வகுப்பு பாஸ் கொடுக்க வேண்டும். ஏதோ மத்திய சர்க்காருக்கு பத்து லட்சம் ரூபாய் கொடுத்துவிட்டால் இதைச் செய்து கொடுக்கும் என்று கேள்விப்பட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் அதிகமாகிறது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** காலம் அதிகமாகிறது என்றால் என்ன செய்வது? நான் பேசிவிட்டுத்தான் உட்காருவேன். எல்லா அங்கத்தினர்களுக்கும் இலவச பாஸ் கொடுக்கும் முயற்சியை காங்கிரஸ் சர்க்கார் தான் செய்யவில்லை, மறைந்த அண்ணா அவர்கள்தான் செய்யவில்லை. என்றாலும், அவருடைய தம்பி கலைஞர் கருணாநிதியாவது செய்தால் நன்றாக இருக்கும் (ஓர் உறுப்பினர்: யாருக்குத் தம்பி?) எல்லோருக்கும் தம்பிதான். திரு. பூனச்சா ரயில்வே மந்திரியாக இருந்தபோது கேட்டேன். பத்து லட்சம் ரூபாய் கொடுத்தால் செய்துவிடுவதாகச் சொன்னார்கள். சட்டமன்ற அங்கத்தினர்கள் சட்டமன்றத்திற்கு

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



வருவது மட்டுமல்ல, தங்களுடைய தொகுதி பூராவும் சுற்றி, அங்குள்ள குறைபாடுகளை அறிந்துகொள்ளவும், அங்குள்ள மக்களுடன் தொடர்புகொள்ளவும் வேண்டியிருப்பதால், இரயில்வே முதல் வகுப்பு இலவச பாஸ் வாங்கிக் கொடுப்பது சௌகரியமாக இருக்கும். இரண்டு மூன்று மாதங்களில் இதைச் செய்தால் நலமாக இருக்கும். எத்தனையோ சாதனைகளைப்பற்றி எடுத்துச் சொல்கிறார்கள். அந்தச் சாதனைகளில் இதுவும் ஒன்றாக—நல்ல சாதனையில் ஒன்றாக—சேரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்ற அங்கத்தினர்களுக்காக வைத்திய வசதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது ஹாஸ்டல்களின் டாக்டர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் வருகிறார். சட்டமன்றக் கூட்டம் நடக்கும்போதாவது காலையில் ஒரு டாக்டர், மாலையில் ஒரு டாக்டர் என்ற அளவில் வசதி செய்து கொடுத்தால் அங்கத்தினர்கள் சரியாக வைத்திய வசதி செய்துகொள்ள முடியும். மக்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய சட்டமன்ற அங்கத்தினர்களுக்குச் செய்துகொடுக்கப்படும் செலவுகள் எல்லாம் பெரிய செலவு அல்ல. தாராளமாக அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தால்தான், அவர்கள் நல்ல பணிகளை மேலும் செய்ய முடியும்.

அடுத்தபடியாக, இந்த மன்றத்தில் பேசப்படும் பேச்சுக்கள் எல்லாம் அன்றன்றைக்கே மாலை மூன்று மணிக்குள்ளாக வந்தாக வேண்டும். லைப்ரரியில் திருத்தப்படாத நகல் வைக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்திலும் அப்படித்தான் 'அன்-கரெக்டெட் ப்ரொசீடிங்ஸ்' என்றும், பிறகு 'கரெக்டெட் ப்ரொசீடிங்ஸ்' என்றும் வைக்கிறார்கள். அப்பொழுதுதான் அங்கத்தினர்கள் எப்படி எப்படிப் பேசியிருக்கிறார்கள், எப்படி எப்படி கரெக்ட் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். நீங்கள் எதிர்த்தரப்பில் இருந்தபோது என்னென்ன வேண்டும் என்று கேட்டீர்களோ, அவையெல்லாம் செய்ய வேண்டும். அங்கத்தினர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பது இந்த அரசாங்கத்தின் இன்றியமையாப் பிரச்சினை, தலையாய பிரச்சினை, நியாயமான பிரச்சினை, உறுதியான பிரச்சினை. இந்த வசதிகளையெல்லாம் முதலமைச்சர் மூலமாகப் பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எங்கள் தரப்பில் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகப் பண்பாட்டையும், ஜனநாயக மரபையும் தொடர்ந்து காப்பாற்றி வருகின்ற சட்டப் பேரவைகளில் தலைசிறந்ததாக தமிழகச் சட்டப் பேரவை நின்று நிலவி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சுட்டிக் காட்டினார்கள். நல்லதொரு மரபை காத்துவரும் பேரவையில் நாமெல்லாம் இடம் பெற்றிருக்கிறோம் என்பதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். சிலபல காலமாக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் நடைபெறுகின்ற பேரவை நடவடிக்கைகளையும், இந்தியப் பாராளுமன்ற நடவடிக்கைகளையும் கண்ணுறுகிறவர்கள் தமிழகச் சட்டப் பேரவை எவ்வளவு கண்ணியத்தின் அடிப்படையில் தன்னுடைய நீங்கா மரபுவழிகளைக் கடைப்பிடித்து, சிறப்புற நடந்து வருகிறது என்பதையும், எந்த அளவிற்குக் கண்ணுங்கருத்துமாக நடவடிக்கைகளை ஆற்றி வருகிறது என்பதையும், இந்த மன்றத்தில் இடம்

பெற்றிருக்கிற கடமைப்பாடுள்ள உறுப்பினர்கள் பலரும் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். இது தொடர்ந்து நடைபெற வேண்டுமென்ற கடமையையும், பொறுப்பையும் நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். வாதங்கள் நடப்பதற்காகத்தான் சட்டமன்றங்கள் இருக்கின்றன. ஆளும் கட்சி என்றும், எதிர்க் கட்சி என்றும் செயல்பட்டு, ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கையை நிறைவேற்றத்தான் இந்த மன்றம் இருக்கிறது. "The Ruling Party has its way The Opposition has has its say". என்று பெரியவர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் குறைபாடுகளை எடுத்துச் சொல்கின்ற வகையிலும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவற்றை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையிலேதான் இருக்க வேண்டும். இந்த முறையிலேதான் ஜனநாயக முறையில் வாதங்கள் நடைபெறவேண்டும். ஜனநாயக முறையில் கருத்துக்களிலே ஒளி வீசத்தக்க அளவிலே வாதம் நடைபெற வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் நாம் எல்லோரும் நல்ல மரபுகளை பொறுப்புணர்ச்சியோடு கடைப்பிடித்து வாதம் செய்வது பாராட்டக்கூடியதாக இருக்கும்.

வாதம் செய்யும்போது, வாதத்தில் ஒளி இருக்க வேண்டுமே தவிர, அதில் சூடு வரக் கூடாது. சூடு வரும்போது அதைச் சிறிதுநேரம் நிறுத்திவிட்டால் சூடு தணிந்துவிடும். எல்லாச் சமயங்களிலும் பேரொளியை எதிர்பார்க்கலாம். சிலசமயங்களில் சூடு வந்துவிடுகிறது. அதை ஓரளவுக்குத் தணித்துவிடுகின்ற பாங்கினைத்தான் இந்த மன்றக் காவலர் செய்து வருகிறார். சூடு நெருப்பாக மாறினால் பொறிவாணங்கள் பல்வேறு விபரீத விளைவுகளை ஏற்படுத்திவிடும். இந்தச் சூடு சிலசமயங்களில் பறக்கிறதே தவிர, பின்னர் சூடு தணிந்துவிடுகிறது, நெருப்பாக மாறவில்லை. இதுதான் தமிழ்நாட்டின் பண்பாடு, தமிழ் மக்களுடைய பண்பாடாக இருந்து வருகிறது. பல நூற்றாண்டுக் காலமாகவே தமிழ்நாட்டினுடைய பண்பாட்டையும், தமிழர்களின் நாகரிகத்தையும் எடுத்துக் காட்டும் வகையில் இந்த மரபு தொடர்ந்து காப்பாற்றப்படுகிறது, கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அனைவரும் உணர்ந்து, மேலும் அதில் ஈடுபடுவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. இந்த மன்றம் சிறப்பாக நடைபெற்று வருவதற்கு பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் தங்களின் மூலமாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மன்றத்தினுடைய கண்ணியத்தையும் மரபையும் காப்பாற்றுவதில் எதிர்க்கட்சிகளுக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் பெரும் பொறுப்பு அமைந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர்தான் மற்றவர்களுக்கு, ஏன் அமைச்சர்களாக இருக்கின்ற எங்களுக்குக்கூட எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக்காட்டாக இருந்துவிட்டால், மற்றவர்கள் அதைக் கடைப்பிடிக்க வழியாக இருக்கும். ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று இருந்தாலும்கூட, நல்லிணக்கத்தின் அடிப்படையில்தான் இந்த மன்றம் நடைபெறுகிறது.

அடுத்து, கேள்விநேரத்தைப் பற்றி பல உறுப்பினர்கள் சொன்னார்கள். எவ்வளவுக்கெவ்வளவு விடைகள் விவரமாக வரவேண்டுமென்பதிலே அமைச்சர்களாக இருக்கின்ற நாங்களும் உன்னிப்பாக இருக்கின்றோம். கேள்விகள்





கேட்கப்படும்போது எங்கள் எங்கள் குறையைப்பற்றியும் தெளிவாக, நுட்பமாக அறிந்து கொள்ள முடிகிறது. மன்ற உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்க கேட்கத்தான், விடைகளையெல்லாம் நாங்கள் தயாரிக்கும்போதுதான் அதனுடைய சூழ்நிலைகள் அத்தனையையும் தெரிந்துகொள்ள வழி கிடைக்கிறது. விடைகள் தயாரிக்கப்படும்போதுதான் நாங்களே பயிற்சி பெறுகிறோம். ஆகவே, கேள்வி நேரம் என்பது எதிர்க்கட்சிக்கு மட்டுமல்லாமல் ஆளும் கட்சிக்கும் பயன்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேள்விகள் வரக் கூடாது, அதனால்தான் தடுக்கிறோம் என்று யாரும் தவறாக எண்ணக்கூடாது. ஏனென்றால் அது எங்களுக்கும் பயன்படுகிறது. பல கேள்விகளை உறுப்பினர்கள் கேட்கிறார்கள், அமைச்சர்கள் எல்லாம் விடை அளிக்கிறார்கள். துணைக் கேள்விகளைக் கேட்க, நாங்கள் விடையளிக்க பயன் கிடைக்கிறது. மேலும் நாட்டு நிலைமையும் கருத்திற்கொண்டு, நாங்கள் கூற வேண்டிய கருத்துக்களையும் இந்த விடையின் மூலமாகவே சொல்லிவருகிறோம். இது அரசாங்கத்தின் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் வாய்ப்பாகவும் அமைந்திருக்கிறது. இதில் ஏதாவது குறைபாடு இருந்தால் சுட்டிக்காட்டும் நிலைமை இருக்கிறது. குறைபாடுகளைக் களைந்தெறிய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பல கேள்விகள் விடையளிக்காமல் இருப்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள்கூட எங்களுக்கு உணர்த்தி வருகிறார்கள். நாங்கள் அவற்றை அதிகாரிகளுக்கு உணர்த்தி வருகிறோம். விடைகள் துறைகளிலிருந்து வந்தாக வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உணர்த்தி பல கேள்விகளுக்கு விடையளிக்கக்கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே உறுப்பினர்களுக்கு தகவல் தெரிந்து கொள்ள வசதி வாய்ப்புகள் இல்லை என்று கூறினார்கள். ரெபரன்ஸ் அண்ட் ரிசர்ச் செக்ஷன் என்று ஒன்று பி ப 1-30
ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மன்ற உறுப்பினர்களில் பெரும்பாலோர் அதைப் பயன்படுத்திக் கொள்வதில்லை; ஒரு சிலர் தான் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பலரும் பயன்படுத்திக் கொண்டால் அவர்கள் விரும்புகிற புள்ளிவிவரங்களை பெறமுடியும். குறிப்பிட்ட ஆராய்ச்சிப் பிரிவில் ஸூபரிண்டென்டென்டு ஒருவர், அசிஸ்டன்ட் ஒருவர், ஜூனியர் அசிஸ்டென்டு ஒருவர், தமிழும் ஆங்கிலமும் தெரிந்த டைபிஸ்ட் ஒருவர் ஆகியோர் இருக்கின்றனர். அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் முன்வருவார்களானால், புள்ளி விவரம் திரட்டித் தருவதில் அந்தப் பிரிவு அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும். இலாகாவிலிருந்து தேவைப்படுகிற விஷயங்களைக் கூட அவர்கள் திரட்டித் தருகிறார்கள். கொடுக்கப்பட வேண்டியவைகள், கொடுக்கப்படக் கூடாதவைகள் என்றிருக்கின்றன. கொடுக்கப்படக் கூடாதவைகளைக் கொடுக்க மாட்டார்கள். கொடுக்கப்படக் கூடிய புள்ளிவிவரங்களை கொடுக்க அந்தப் பிரிவினர் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பேச்சுக்கள் உடனுக்குடன் உறுப்பினர்களுக்கு வரவேண்டும் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் கூட எல்லாக் கட்சித் தலைவர்களும் இருந்து அது பற்றி ஒரு முடிவே சில காலத்துக்கு முன்னால் எடுத்தோம். அதிலே எடுக்கப்பட்ட முடிவு: 3 நாட்களுக்குள்ளாக நூலகத்தில் வைக்கப்பட வேண்டும்; 3 நாட்களுக்குள்ளாக திருத்திக் கொடுக்கப்படாவிட்டால் திருத்தப்படாத நிலையிலும் அங்கே வைக்க வேண்டும்; மறு நாள் காலை 9 மணிக்குள் வைக்க வேண்டும்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 மார்ச் 17

என்ற நிலை மேற்கொள்ளப்பட வேண்டுமானால், இன்னும் விரைவு படுத்த வேண்டிய நிலை ஏற்படும். மறுபடியும் பிஸினெஸ் அட்வைஸரி கமிட்டியில் வைத்து ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று பார்த்து முடிவு செய்ய வேண்டும். ஏற்கனவே செய்த முடிவின்படி 3 நாட்களில் திருத்திக் கொடுக்க வேண்டும், திருத்தப்பட்ட படிகள் அங்கே வைக்கப்படவேண்டும் என்றிருக்கிறது. 7, 8 நாட்கள் என்று காலத்தாழ்வு ஏற்படுத்த வேண்டாம் என்ற முறையில் தான் அப்படி முடிவு எடுத்து நடந்து வருகிறது. உடனுக்குடன் தரவேண்டும் என்று முயற்சி எடுக்க வேண்டுமென்றால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அது பற்றி முடிவு எடுக்க வேண்டும்.

ரயிலில் அங்கத்தினர்களுக்கு பாஸ் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். இது போன்ற வசதி பல்வேறு மாநிலங்களிலும் இருக்கிறதா என்று பார்த்தால், வேறு எங்கேயும் அப்படி இல்லை. அதனால் வசதி ஏற்படுமா என்றால், ஏற்படும். இந்தக் கோரிக்கையில் நியாயம் இல்லையா என்றால், நியாயமும் இருக்கிறது. ஆனால் நிதி தான் இல்லை.

அப்படியிருந்தும் உறுப்பினர்களுக்கு வசதிகளை தொடர்ந்து பெருக்கிக் கொண்டு வந்திருக்கிறோம். அன்று இருந்தது போல வசதிகள் அப்படியே இல்லை. நான் எதிர்க் கட்சித் தலைவனாக இருந்தபோது, நாங்கள் எல்லாம் எதிர்க் கட்சி வரிசையில் இருந்தபோது தரப்படாத வசதிகள் பல இந்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக தரப்பட்டு வந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உணருவார்கள். நான் எதிர்க் கட்சித் தலைவனாக இருந்தபோது ஒரு பணியாளன் கூட எனக்குக் கிடையாது. நான் ..இருக்கிறேன் என்று சொல்லவோ, எதாவது ஒன்றைப் பெற வேண்டும் என்றால் பெற்றுத் தரவோ பணியாளன் கிடையாது. நானே தான் போக வேண்டும் வாங்க வேண்டும், எல்லாம் நானே தான் செய்ய வேண்டும் என்ற நிலைமை இருந்தது. இப்போது அப்படிப்பட்ட நிலைமை இல்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு பணியாளரும், ஒரு உதவியாளரும் தரப்பட்டு, அவர்களுக்கு கார் ஒன்று தரவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கத் தயாராக இருந்தும் அவர்கள் தான் பெற்றுக் கொள்ளவில்லை என்று நான் அறிகிறேன். அவர்களும் என்ன என்னவோ காரணங்களால் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறார்களே தவிர, அவர்கள் முகத்தைப் பார்த்தால் பெற்றுக் கொள்ள மாட்டேன் என்று கூறுகிற மாதிரி இல்லை, ஏற்றுக் கொள்கிற மாதிரி தான் இருக்கிறது. துணை சபாநாயகராக இருக்கிறவருக்குக் கூட வசதிகள் இல்லாமலிருந்து இப்போது இருக்கிற தன்மையில் வசதிகள் தரப்பட்டிருக்கின்றன. மன்ற உறுப்பினர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் விடுதியில் செய்து தரப்பட்டிருக்கின்றன. அந்த வசதிகளை விரிவாக்கும் முறையில் எண்ணமும் கருத்துமாக இருந்து வருகிறோம்.

மேலும் அவர்களுக்கு தொலைபேசி வசதி வேண்டும் என்று கோரிக்கை தரப்பட்டது. இப்போது பழைய விடுதியில் 20 இணைப்புகள் பொருத்தமான இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. புதிய விடுதியில் அலுவலகம், வரவேற்பறை இவற்றிலுள்ள 6 தொலைபேசிகளோடு மொத்தம் 30 இணைப்புகள் இருக்கின்றன. 300 இணைப்புகள் கொண்ட ஒரு இணைப்பகம் வைக்கும் யோசனை அரசாங்கத்தில் இருந்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க முற்பட்டிருக்கிறோம். தொலைபேசித் துறை தான் தாமதப்படுத்தி வருகிறது. அதை விரைவு படுத்த வேண்டும் என்று எழுதியிருக்கிறோம். போதிய சாதனங்கள் இல்லை என்று சொல்லி அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். இந்தத் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 300 இணைப்புகள் கொண்ட ஒரு இணைப்பகம் அங்கே வைக்கப்பட்டு ஒவ்வொரு அறைக்கும் தொலைபேசி வைத்துக் கொடுக்க வேண்டும் என்ற திட்டம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. காலத்தாழ்வு தொலைபேசித் துறையினால் தான் ஏற்படுகிறது. அறைக்கு அறை தொலைபேசி வைக்கும் முறையை மேற்கொண்ட பிறகு இந்தப் பேரவை உறுப்பினர்களுக்கு இருக்கிற அந்த வசதிக் குறைவு நாளடைவில் நீங்கிவிடும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1970 மார்ச் 17]

உறுப்பினர்களுக்கு நிலையாக அறைகளை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அண்மையில் சட்டமன்றங்கள் நடைபெறுகிற காலங்களில் அவர்களுக்கு அறைக் கட்டணம் இல்லை என்ற வசதி செய்யப்பட்டிருக்கிறது. சட்டமன்றம் நடைபெறாத நாட்களில் தான் கட்டணம் செலுத்த வேண்டும். நிலையாக இடம் பெறுகிறவர்கள், சட்ட மன்றம் நடைபெறாத நாட்களில், 30 நாட்களுக்கு 60 ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருந்து வருகிறது. நிலையான கட்டணத்துக்கு அறை ஒதுக்கக்கூடாது என்ற நிலைமை இல்லை. என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவ வசதி வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களைப் பொருத்தவரை மற்றவர்களுக்குத் தரப்படுகிற மருத்துவ வசதி அனைத்தும் தர வசதி செய்யப்பட்டிருக்கிறது. மருத்துவ மனையில் 'பி' வகுப்பு வசதி தரப்பட்டிருக்கிறது. 'ஏ' வகுப்பு வேண்டுமென்று விரும்புகிறவர்கள் அதற்கான கூடுதல் கட்டணத்தை அவர்கள் தனியாகச் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் குடும்பத்தினருக்கும் வசதி செய்து தரவேண்டும் என்று கேட்கிறார்கள். இந்த நிலை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை. மற்ற மாநிலங்களிலும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் தான் மருத்துவ வசதி அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர அவர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்படவில்லை.

ரயில் பயணத்தைப் பற்றியும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக இந்த மாநில அரசு மத்திய அரசுக்கு பல தடவை எழுதியிருக்கிறோம். மாநில அரசு செலவுப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் தரத் தயார் என்று கூறுகிறார்கள். மாநில அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத்தக்க நிதி வசதியைப் பெறாத நிலையில் அந்த வசதிகளை அளிக்க முடியவில்லை என்று முன்பே நான் குறிப்பிட்டுள்ளபடி இப்போதும் கூறுகிறேன்.

சட்டமன்ற கூட்ட நாட்களை அதிகப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறினார்கள். எந்த அளவுக்கு விரிவு படுத்த முடியுமோ அந்த அளவுக்கு விரிவு படுத்தும் எண்ணம் எங்களுக்கும் இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த ஆண்டில் மார்ச் 31-ம் தேதியோடு முடியும் நிலையை மாற்றி ஓரளவுக்கு 6 நாட்கள் அதிகமாக்கலாம் என்று செய்திருக்கிறோம். பொதுவாக பாராளுமன்றத்தில் நான் குறிப்பிட்டு அந்தத்

தேதியில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு இத்தனை நாட்களில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று இருக்கிறது. அந்த மாதிரி நாட்கள் குறிப்பிடப்படவில்லையே தவிர, பெரும்பாலும் ஜனவரி திங்களில் கவர்னர் பேருரையும் அதை ஒட்டிய விவாதமும் வைத்துக்கொள்கிறது என்ற முறையும், பிப்ரவரி 3 வது அல்லது 4 வது வாரத்தில் தொடங்கி மார்ச் திங்கள் முடிய நடக்கிற சட்டமன்றக் கூட்டம் இந்த ஆண்டில் ஏப்ரல் மாதமும் சில நாட்களில் நடக்கிற அளவில், இந்த நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதமும், ஜூலை-ஆகஸ்டில் ஒரு தொடரும், நவம்பர்-டிசம்பரில் ஒரு தொடரும் வைத்துக்கொள்வது என்று 3 தடவை கூடுகிறது என்ற அடிப்படையில் இப்போது சட்ட மன்ற நடவடிக்கைகளை நடத்தி வருகிறோம். இன்னும் அதிக நாட்கள் தேவைப்பட்டால் அதற்கான பர்பஸ்—தேவை இருந்தால் அதிக நாட்கள் வைத்துக்கொள்வதில் அதிக ஆட்சேபணை இருக்க முடியாது. பிஸினெஸ் அட்வைஸரி கமிட்டியில் அவ்வப்போது ஆராய்ந்து தக்க முடிவுகளை மேற்கொள்ளலாம் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று இங்கே குறிப்பிட்டார்கள். முன்பே அந்தப் பிரச்னை வந்தபோது முன்னாள் முதல்வர் அண்ணா அவர்கள் அதற்கு விளக்கம் தந்தார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் இந்தச் சம்பளத்தை வாங்கி தங்கள் வாழ்க்கை நடத்த முடியும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்படவில்லை. அவர்கள் தங்கள் தொகுதிப் பணிகள் மற்றவைகளை ஆற்ற ஏற்படுகிற செலவுகளைச் சமாளிப்பதற்கு இந்தச் சம்பளம் வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் சம்பளத்தை விட படியை உயர்த்தலாம் என்று 15 ரூபாயை 20 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். பல்வேறு மாநில சட்ட மன்றங்களில் பெரும்பாலானவைகளில் 250, அல்லது 200 என்று தான் இருக்கிறது. இங்கேயும் அந்த நியாயமான அடிப்படையில் தான் கொடுக்கப்படுகிறது.

சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கிற ஏடுகள், குறிப்புகள் மற்றவைகள் விரைவாக அச்சிடப்பட்டு வருவதில்லை என்ற குறைபாடு சொல்லப்பட்டது. அச்சகத் துறையுடன் தொடர்பு கொண்டு, சட்ட மன்ற நடவடிக்கைகளுக்கு முதலிடம் கொடுத்து அச்சடித்துத் தரவேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்க ஒரு கூட்டம் கூட்டுவதாக இருக்கிறோம். அச்சகத் துறை அமைச்சர் அவர்களும் நானும் இருந்து சட்ட மன்ற பேரவைத் தலைவர் அனைவரும் இருந்து இதை விரைவுபடுத்த என்னென்ன செய்யலாம் என்று முடிவெடுக்க ஒரு கூட்டம் கூட்ட இருந்தோம். அது ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுத்து எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்வோம் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தம்முடைய பதவிக்காலம் முடிவதற்குள் இடையில் காலமாகிவிட்டால் அவருடைய பாக்கி பதவிக்காலம் முடியும் வரை அவருடைய குடும்பத்திற்கு உதவித் தொகை தர வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பீரியட் முடியும் வரை உதவித்தொகை அளிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Retrospective effect should be



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1967 தொடங்கி அதற்குப் பிறகு இறந்துபட்டவர்களுடைய குடும்பத்திற்கு இந்தப் பதவிக்காலம் முடியும்வரை உதவித்தொகை அளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். வாழ்நாள் முழுவதும் இல்லை. இந்த பீரியட் வரைத்தான் அளிக்கப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்று வந்தால் நல்ல விளக்கம் பெற முடியும் என்ற கருத்தை திரு. விநாயகம் அவர்கள் தெரிவித்தார்கள். வேறு மாநிலங்களுக்குச் செல்கிற நிலையே இந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகத்தான் இருந்து வருகிறது. பொதுக்கணக்குக் குழுவோ, வேறு குழுவோ இந்த மாநிலத்திற்குள் சுற்றுப்பயணம் செய்யலாம், வெளி மாநிலத்திற்குப்போகக் கூடாது என்று அப்போதிருந்த முதல் அமைச்சர் அவர்கள் தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சைனா அக்ரஷன் இருந்த சமயத்தில்தான் அப்படி நிறுத்தப்பட்டது. அதற்கு முன்னால் அப்படியில்லை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த ஆட்சி வந்த பிறகுதான் மதிப்பீட்டுக் குழு சென்று வரலாம் என்று செய்தோம். திரு. விநாயகம் குழுவினர்கூடச் சென்றுவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏற்று இருக்கிற பணிக்கு வேறு மாநிலங்களுக்குச் சென்று விளக்கம்பெறுவது அவசியம் என்று கருதப் பட்டால் அப்படி அனுமதிப்பதுபற்றி யோசிக்கலாம். அனுமதி வழங்குவதற்கும் ஆட்சேபனை இல்லை.

இந்த மாநிலத்திற்குள்ளேயே ஒரு 30 பேர்கள், 40 பேர்கள், 50 பேர்கள் சென்று சுற்றிப்பார்த்து இருக்கக்கூடிய நிலவரங்களை நேரில்கண்டு அறிந்துவர வேண்டுமென்றால் அதற்கான ஏற்பாடுகளையும் செய்யலாம். 1961 இல் அப்படி இந்த மாநிலத்திற்குள்ளேயே உறுப்பினர்கள் சென்று சுற்றிப் பார்த்து வந்திருக்கிறார்கள். இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் ஆட்சேபனை இல்லை. வெளி மாநிலங்களுக்கு எல்லாம் குறிப்பிட்ட குழுவினர், குறிப்பிட்ட காரியத்திற்காகச் செல்வதற்கும் தடை வைக்கவில்லை. அதையும் கவனிக்க ஆயத்தமாக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல்துறையினரைப் பொறுத்தவரையில் பல வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்று சென்ற ஆண்டும் கூறினார்கள். அதுபற்றியும் அரசு பரிசீலித்து அவர்களுடைய அலவன்சை அதிகப்படுத்த 22—9—1969 லேயே உத்தரவு போடப்பட்டிருக்கிறது. சப் இன்ஸ்பெக்டர், சார்ஜண்ட் இவர்களுடைய அலவன்சை 2½ ரூபாயாகவும், ஹெட் கான்ஸ்டபிள் அலவன்சை 2 ரூபாயாகவும், கான்ஸ்டபிள் அலவன்சை 1½ ரூபாயாகவும், ஆக்கியிருக்கிறோம். இன்னும் பூட்சுகள், உடைகள் அளிப்பதற்காக 2 ஆயிரம் ரூபாய் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆக அவர்களுடைய விஷயத்திலும் இந்த அரசு கவனம் செலுத்தியிருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தத்துறையில் பணிபுரிகிறவர்களுடைய சம்பளக்கோரிக்கைகளைப் பற்றிச் சொன்னார்கள். இரண்டாவது சம்பளக் கமிஷன் இதுபற்றி ஆராய்ந்து தக்க முடிவுக்கு வந்தபிறகு அந்த முடிவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்

மாண்புமிகு உறுப்பினர் திரு. கனகசபை அவர்கள் எடுத்துச் சொல்லும் போது- மசோதாக்கள் வருகிறபோது 3 நிலைகள் இருக்கின்றன. முதல் நிலை அறிமுகப்படுத்துவது, இரண்டாவது விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது, நிறைவேற்றும் மூன்றாவது நிலை. அறிமுகப்படுத்தி விவாதத்திற்கு வருவதற்கு நான்கைந்து நாட்கள் ஆகிவிடுகின்றன. அதற்குள் அந்த மசோதா பற்றி நல்ல தெளிவு, விளக்கத்தை உறுப்பினர்கள் பெறவேண்டும் என்பது. அறிமுகப்படுத்துவதற்கு முன்பே அதைப்பற்றிய விவாதம் இருந்தால் அதுபற்றி நன்று தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும், பாராளுமன்றத்தில் அப்படித்தான் செய்கிறார்கள்—என்று திரு. கனகசபை குறிப்பிட்டார்கள். அந்த நிலையை ஆராய்ந்து அது வசதியாக இருக்குமானால் அப்படிச் செய்வதற்கு ஆட்சேபனை ஒன்றும் இருக்காது என்றே நினைக்கிறேன். அதுபற்றியும் ஆராய்வதற்கு இந்த அரசு முன்வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்களது சுற்றுப்பயணத்தின்போது தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து மரியாதைக்குரிய நிகழ்ச்சிகளில் எல்லாம் பங்கு பெறச் செய்யவேண்டுமென்று திரு. பாரதிமோகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிகாரபூர்வமான அபிஷியல் என்கேஜ்மெண்டு சம்பந்தமாக செல்கிற இடங்களில் தொகுதி உறுப்பினர்களும் வந்து கலந்துகொள்வதுதான் எங்களுக்கும் அனுகூலமானது. தொகுதி நிலவரங்களை அந்த இடத்திலேயே அவர்கள் மூலமாக நன்கு தெரிந்து அதிகாரிகளிடம் சொல்ல வேண்டியவைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அநேகமாக அதிகாரபூர்வமான நிகழ்ச்சிகளுக்கு அமைச்சர்கள் செல்கிறபோது தொகுதி உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப் படுகிறது. சில நேரங்களில் 24 மணி நேரம், 36 மணி நேரத்திற்குள் ஒரு நிகழ்ச்சியோடு இன்னொரு நிகழ்ச்சி தொடர்ந்தாற்போல அமைக்கப்படுகிற நேரத்தில் அழைப்பு அனுப்ப முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. பொதுவாக அவர்களும் வந்து கலந்துகொள்வதையே விரும்புகிறோம். அவர்களும் வந்து கலந்துகொண்டு ஒத்துழைப்பை நல்கவேண்டுமென்று விரும்புகிறோம்.

சட்டமன்ற மேல் அவை 63 உறுப்பினர்களைக் கொண்ட அவையாக இருக்கிறது. அது 78 உறுப்பினர்கள் கொண்டதாக அமையவேண்டும், மேற்கொண்டு 15 இடங்கள் வேண்டுமென்று இந்திய அரசினிடம் தெரிவித்திருக்கிறோம். அதை அவர்கள் விரைவுபடுத்தவில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதை வற்புறுத்தி வருகிறார்கள். மேற்கொண்டு அதைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து உதகை கருத்தரங்கைப் பற்றி திரு. விநயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மன்ற உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். காமன்வெல்த் பார்லிமெண்டரி போர்டு என்று வைத்திருக்கிறோம். அதில் உறுப்பினர்களுக்கு நல்ல விளக்கம் அளிக்கவும், தெளிவை ஏற்படுத்தவும் பல நல்ல சொற்பொழிவுகளை வழங்க வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. அதைச் சரியாக நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லை. பயன்படுத்திக்கொள்ள முன்வந்தால் உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கிற சொற்பொழிவுகள் பலவற்றுக்கு ஏற்பாடு செய்யலாம். கருத்தரங்கின் நோக்கத்தை அது ஏற்படுத்துமாறு காணலாம்.





சட்டமன்ற உறுப்பினர்களை ஏற்றிக்கொள்ள டாக்சிக்காரர்கள் மறுக்கிறார்கள் என்று திரு. கரியமாணிக்கம் அம்பலம் குறிப்பிட்டார்கள். அப்படி யாரையும் ஏற்ற மறுத்தால் இப்போது இருக்கிற நிலையிலேயே அந்த டாக்சிக்காரர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வழியிருக்கிறது. ஆயினும் இந்தப் புகாரும் கவனிக்கப்பட்டு அதற்கான வசதி செய்யப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சட்டமன்ற விடுதியில் நூல் நிலையம் வைக்கவேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இப்போதே இரண்டு இடங்களில் வைத்திருக்கிறோம். கோட்டையில் நல்லதொரு நூல் நிலையம் இருக்கிறது. ராஜாஜி மண்டபத்திற்குக் கீழே ஒரு நூல் நிலையம் இருக்கிறது. இரண்டிலும் இருக்கிற அவசியமான, நல்ல புத்தகங்களை எடுத்து விடுதியில் இடவசதி இருந்தால் அங்கே வைப்பதற்கான யோசனையும் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம், இடம் இருக்கிறதா என்று பார்த்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். இங்கே இருக்கின்ற நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு உறுப்பினர்களுக்கு இருக்கின்ற நேரம் வாய்ப்பைவிட விடுதியிலே நூல்நிலையம் இருக்குமானால் அங்கே அவர்கள் பயன்படுத்துகின்ற வாய்ப்பு அதிகமாகத்தான் இருக்கும். இங்கே இருக்கின்ற நூல் நிலையம் வேறு சட்டமன்ற நூல்நிலையங்களை விடச் சிறப்பு வாய்ந்த ஒன்றாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் வேறு பல நூல்நிலையங்களிலே கிடைக்காத அருமையான நூல்கள் இங்கே இருக்கின்றன. நான் அண்மையிலே மைசூர் சென்றிருந்தபொழுது மைசூர் மாநில சட்டமன்றத்தைப் பார்த்தேன். அங்கே சட்டமன்றத் துறைச் செயலாளராக இங்கே பல ஆண்டுக்காலமாக இருந்தவர்தான் இருக்கிறார். தமிழ்நாட்டுச் சட்டப்பேரவை நூல்நிலையத்தின் சிறப்பு இங்கே இல்லை என்று அவர்களே குறிப்பிட்டார்கள். ஆகவே உறுப்பினர்கள் நல்ல முறையிலேதான் நிலையங்களைப் பயன்படுத்திக்கொள்ளுகின்ற வகையிலே விடுதியிலே நூல்நிலையம் அமைக்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் செய்யப்படவேண்டிய வசதிகளைப்பற்றி யெல்லாம் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆராய்ந்து பார்த்து தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைச் சொல்லி, இந்தப் பேரவையின் மரபு காப்பாற்றப்படவும், இப்பேரவையின் பெருமையை நிலைநாட்டுகின்ற தன்மையைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் பேரவை உறுப்பினர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் என்றென்றும் இருக்கும் என்று நம்புகிறேன். உறுப்பினர்களுக்கு அத்தனைபேர்களுக்கும் தங்களின்மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்லமுறையிலே இந்தத் துறையை நடத்தி வருகின்ற செயலாளர் அவர்களுக்கும் மற்றைய அலுவலர்கள் அத்தனை பேர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து உரையை முடித்துக்கொள்கிறேன். பொதுவாக வெட்டுத் தீர்மானங்களைத்திரும்பப் பெறுவதுதான் வழக்கம் என்றாலும் குறிப்பாகப் பேரவைத் தலைவர் அவர்கள் நடத்திவருகின்ற இந்தத் துறையின் மானியத்திற்குக் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்துவதில்லை; அந்த மரபைக் கையாண்டு வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தமாட்டார்கள் என்று நம்புகிறேன், வற்புறுத்தவேண்டாமென்று விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM: On a point of clarification, Sir, while introducing the Bill, the procedure adopted in the matter of Parliament is to give along with introduction a "Dummy Bill", with the heading of the Bill and main contents and not clause by clause, would it be possible to introduce that kind of procedure in our House also?

அவர்கள் எல்லாம் எதிர்க்கட்சியில் இருந்தபொழுது அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்ததை நான் கேட்டிருக்கிறேன். சட்டசபையை மாதம் இருமுறை கூட்டவேண்டும், மக்கள் குறைகளைக் கேட்கவேண்டும் என்று சொன்னார்கள். அது வெறும் பேச்சா? நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு கூட்டமுடியாதா? அது வெறும் பேச்சா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி மசோதாவைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருந்தால் அதாவது டம்மி பில்லைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருந்தால் ஆட்சேபணையில்லை. முயற்சிகளை மேற்கொள்ளலாம், மற்றப் பாராளுமன்றங்களிலே அப்படியிருக்கிறது என்றால் அந்த வாய்ப்பும் வசதியும் இங்கே இருக்குமானால் அதற்கான முயற்சிகளை எடுக்கலாம்.

மாதம் இருமுறைகள் கூட்டவேண்டுமென்று யாரும் சொன்னதாக நினைவில்லை. நான் அப்படிச் சொல்லவில்லை. மாதம் இருமுறை கூட்டவேண்டுமென்று யாருமே சொல்லமாட்டார்கள். பாராளுமன்றத்திலேகூட அப்படிக் கூட்டவில்லை. மதர் ஆப் பார்லிமெண்ட் ஆக இருக்கிற பிரிட்டனிலேகூட அப்படியில்லை. மூன்று சீசன்களிலேதான் கூட்டுகிறார்கள். இங்கே நாட்களை அதிகப்படுத்தவேண்டுமென்றுசொன்னால் அதைப் பரிசீலிக்கலாம். மாதம் மும்மாரி பெய்யவேண்டுமென்று பழமொழி சொல்வார்கள். மாதம் இருமுறை கூட்டினால் உறுப்பினர்கள் எந்த அளவுக்கு இருக்கிறார்கள் என்பதையும் காண்கிறோம். உறுப்பினர்கள் இல்லாமல் போனால் நீங்களும் நாங்களும்தான் இருக்கவேண்டிய நிலைமை இருக்கும். நாட்களை அதிகப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளலாம். இந்த ஆண்டே 10, 15 நாட்களுக்கு அதிகமாக வைத்துக்கொள்ளலாம் என்றுதான் நினைத்தோம். ஆனால் சிலபல சூழ்நிலைகளின் காரணமாக ஆறாம்தேதி வரை என்று வைத்திருக்கிறோம். ஜூலை, ஆகஸ்டு மாதங்களிலே 10 நாட்கள் கூட்டுகிறோம், அதிலே கொஞ்சம் நாள் அதிகப்படுத்துவதிலே சிரமம் இருக்காது. வருடம் மூன்று முறையே போதுமான அளவுக்கு நாட்களை அதிகப்படுத்திக் கூட்டுகிற நிலைமைக்குப் பேரவை உறுப்பினர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்குமானால் முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம், திரு. கே. பி. எஸ். மணி, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. எஸ். வரதராஜன், திரு. எ. அ. சுப்பராஜா ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஆர். கனகசபை, திரு. எம். சுரேந்திரன் ஆகியவர்கள் இருப்பிடங்களில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டனவாகக் கருதப்பட்டன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண்: 6-மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,55,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும். [illegible]

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

**பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

A. *Statutory Rules and Orders.*

162. Notification issued with the G.O. Ms. No. 63, Legislative Assembly, dated the 26th September, 1969 in regard to certain amendments to the Tamil Nadu Legislature Travelling Allowance Rules, 1955. [*(Laid on the Table of the House under Section* 14 (3) *of the Tamil Nadu Payment of Salaries Act*, 1951 *(Tamil Nadu Act*, XX *of* 1951)].

163. Notification issued with G.O. Ms. No. 66, Legislative Assembly, dated the 4th October, 1969 in regard to certain amendments to the Tamil Nadu Legislative Travelling Allowance Rules, II of the *Fort St. George Gazette*, dated the 27th July, 1955 [*(Laid on the Table of the House under Section* 14 (3) *of the Tamil Nadu Payment of Salaries Act*, 1951 *(Tamil Nadu Act* XX *of* 1951)].

B. *Reports, notifications and Other papers.*

'*Nil.*'.

## இணைப்பு I

[32-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண்-5

ஆவணப் பதிவுத்துறை கொள்கை விளக்க குறிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இக் கோரிக்கையை முன்மொழியும் வகையில் எமது அரசு, 1967-ல் பதவி ஏற்றது முதல், மேற்கொள்ளப்பட்டிருக்கும் முன்னேற்றம் வாய்ந்த கொள்கைகளைப் பற்றிய விளக்கம் ஒன்றை பேரவை முன் வைக்க விரும்புகிறேன். இத்துறை இம் மாநிலத்தில் மிகத் தொன்மை வாய்ந்த துறைகளுள் ஒன்று எனவும், மிக இன்றியமையாத பணியை நிறைவேற்றி வருகின்றது எனவும், மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். 1968-69-ல் இத் துறை ஈட்டிய வருவாய் ரூ. 14.93 கோடி ஆகும். இதன் செலவினம் 81.56 லட்சமாகும் இத் துறைக்குக் கிட்டிய வருவாய் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். முத்திரைத்தாள் தீர்வையின்கீழ் ரூ. 11.47 கோடியும், ஆவணப் பதிவுக் கட்டணங்களின்கீழ் ரூ. 2.46 கோடியும் கிடைத்தன.

### 2. ஆவணங்களை கோத்து வைக்கும் முறை

பதிவுத் துறையின் ஆவணங்களைக் கோத்துவைக்கும் முறை ( filing system ) 1967 ஏப்ரல் 1-ம் நாள் முதல் நாட்டில் கொண்டுவரப்பட்டது. அந்நாள் வரையில் நகல் எடுக்கும் திட்டம் நடைமுறையில் இருந்தது. இந்தத் திட்டம் நடைமுறையில் இருந்தபோது ஆவணப்பதிவு செய்துகொள்வோர் தங்கள் ஆவணங்களை மீண்டும் அடைவதற்குப் பல நாட்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஆவணங்கள் கோத்து வைக்கப்படும் முறையின் கீழ், பதிவு செய்யப்படும் நாளன்றே பதிவு செய்துகொள்வோருக்கு நகல் கொடுக்கப்படுகிறது. ஆவணங்கள் கோத்து வைக்கும் முறையை மேம்படுத்தும்பொருட்டு அரசு நகல்களுக்கெனவே பயன்படுத்தப்படும் சீரான அளவும் பருமனும் உடைய தாள்களை நிர்ணயித்துள்ளது. ஆவணங்களின் நகல்கள் கோப்புப் புத்தகங்களில் ஒட்டப்படுவதற்குப் பதிலாக அட்டைகளில் கோத்துத் தைக்கப்பட்டு நன்கு பாதுகாக்கப்படுகின்றன. துணைப்பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கப்படும் நகல்களில் தரத்தை சீர்படுத்துவதன்பொருட்டு உரிமம் ( licence ) பெற்ற நகல்படி எடுப்பவர்களை நியமிக்கும் முறையை அரசு ஏற்றுக்கொண்டது: இத்தகைய மாறுதல்கள் விரைவிலேயே நிறைவேற்றப்படும்.

2. பதிவு நகல்களைத் தயாரிப்பதற்காக தட்டச்சு தெரிந்த உரிமம் பெற்ற நகல்படி எடுப்பவர்களுக்கு உதவியாயிருக்கும்பொருட்டு மாவட்ட அலுவலகங்களில் தமிழ்த் தட்டச்சுப் பொறிகளுக்கு வகை செய்யவும் கருதப்பட்டுள்ளது. நாளாவட்டத்தில் எல்லாத் துணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கும் இந்த ஏற்பாடு விரிவுபடுத்தப்படும்.





### 4. ஆவணக்கோப்பு முறையினால் ஏற்படும் நன்மைகளாவன

ஆவணப் பதிவுத் துறையில் எழுத்தர்களின் அளவு கடந்த வேலைச்சுமை தவிர்க்கப்படுகிறது. பத்திரப்பதிவு அலுவலகங்களில் எழுது பொருள்களுக்கான செலவு குறைகிறது. பதிவு செய்வோர் (தட்டச்சு செய்து தரும்) பதிவு நகல்கள் பதிவு அலுவலகங்களில் பணியாளர் தயாரிக்கும் நகல்களை விட ஒழுங்காகவும் தெளிவாகவும் இருக்கும்.

### 5. இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டம் 1967.

இந்திய முத்திரைத்தாள் சட்டம் திருத்தப்பட்டது. இத் திருத்தம 1968 ஏப்ரல் 2-ம் நாள் முதற்கொண்டு செயலுக்கு வந்தது. இதில் இரண்டு முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டன. சொத்துரிமை மாற்ற ஆவணங்கள், சொத்துப் பரிமாற்ற ஆவணங்கள் அல்லது கொடை ஆவணங்களுக்கு சொத்துக்களின் நிலவர மதிப்பின் மேல் (முத்திரைத்தாள் தீர்வை) விதிக்கப்பட்டது. (அது வரையில் இந்த வகை ஆவணங்களில் என்ன மதிப்பு எழுதப்பட்டிருந்ததோ அந்த மதிப்பின் பேரிலேயே முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்பட்டு வந்தது. இதனால் சொத்து குறைத்து மதிப்பிடுவதற்கு இடமேற்பட்டது.) இரண்டாவதாக, சொத்துரிமை மாற்ற ஆவணம், பரிமாற்ற ஆவணம் அல்லது கொடை ஆவணத்தைப் பதிவு செய்கையில் நிலவர மதிப்பு சரிவர உண்மையாக எழுதப்படவில்லை என பதிவு அலுவர் நம்ப நியாயமிருந்தால் ஆவணம் பதிவான பிறகு அவர் சொத்தின் நிலவர மதிப்பை முடிவு செய்து செலுத்த வேண்டிய உரிய தீர்வையையும் முடிவு செய்து அனுப்புமாறு அதனை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம். இத்தகைய விதித்துறை இதற்கு முன்னர் இல்லை. இத் திருத்தத்தின் விளைவாக, முத்திரைத்தாள் தீர்வை வரவு அதிகரித்தது. எடுத்துக்காட்டாக, 1966-67-ல் முத்திரைத் தீர்வை வரவு ரூ. 11.08 கோடியாக இருந்தது. 1968-69-ல் இது ரூ. 11.47 கோடியாக உயர்ந்தது. சொத்துக்களைச் சரிவர மதிப்பிட துணைப் பதிவாளர்க்கு உதவியாக இருக்கும்பொருட்டு, வருவாய்த் துறை பெரும்பாலான மாவட்டங்களில் சொத்து மதிப்பிடுவது பற்றிய வழிமுறைக் கோட்பாடுகளை வழங்கியுள்ளது. வேளாண்மை நிலங்களைக் குறித்த வழி முறைகளைப் பொறுத்தவரையில் நிலவர மதிப்பு அடிக்கடி மாறுவதற்கு உட்பட்டதாகும். கட்டிடங்களை மதிப்பிடுவது குறித்து துணைப் பதிவாளர்களுக்கு வழிமுறைக் கோட்பாடுகள் எவையும் வழங்கப்படவில்லை.

6. இவ்வாறு சொத்து மதிப்பிடும் முறையை மேம்படுத்தும்பொருட்டு சென்னை தஞ்சாவூர் கோவை மாவட்டங்களுக்காக சிறப்புப் பணியாளரை அரசு 1968 அக்டோபரில் நியமித்தது. இத்துடன் மாவட்ட வருவாய் அதிகாரி ஒருவரையும், நிர்வாகப் பொறியாளர் ஒருவரையும் 1-ம் தர துணைப் பதிவாளர் ஒருவரையும் கொண்ட சிறப்புக்குழு ஒன்றை ஆவணப் பதிவுத் துறைத் தலைவர் பொறுப்பின்கீழ் அரசு நியமித்தது. இக் குழு சொத்து மதிப்பிடுவது குறித்துப் பொது மக்களுக்கு உதவியாக இருக்கும்.

### (7) தணிக்கை

துணைப் பதிவாளர் அலுவலகங்களில் குறியீட்டு எண்கள் சொத்து மதிப்பீடுகள் இவற்றை கட்டாயமாக 100-க்கு 100 சரியாகச் சரிபார்த்து கணக்குகளைத் தணிக்கை செய்யும் முறையை செயலுக்குக் கொண்டுவருவது மற்றொரு முடிவாகும். இந்த முறையைக் கொண்டு வரப்பட்ட நாள்வரை சொற்ப சத வீதம் மட்டுமே, குறிப்பாக 5 சத வீதம் மட்டுமே மாவட்ட பதிவாளர்

[1970 மார்ச் 17

அலுவலகங்களைப் பார்வையிடும்போது தணிக்கைக்கு உட்பட்டிருந்தது. இது திரிந்தமாக, 10 பதிவு மாவட்டங்களில் 1-ம் தரத் துணைப் பதிவாளர் ஒருவரையும் எழுத்தர், தட்டச்சர் ஆகியோரும், சென்னை மாவட்டத்தில் 1-ம் தரத் துணைப் பதிவாளர்கள் இருவர், உதவியாளர்கள் இருவர், தட்டச்சர்கள் இருவர் ஆகியோரும் நியமிக்கப்படுவதற்கு 1969 ஆகஸ்டில் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. தணிக்கைப் பிரிவினர் எந்தெந்த மாவட்டங்களில் நியமிக்கப்பட்டனரோ அந்தந்த மாவட்டங்களில் தணிக்கையைத் தொடங்கினர். இத் திட்டம் அடுத்த ஆண்டில் எல்லாப் பதிவு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

8. பொது மக்களுக்குக் கிடைக்கும் வசதிகளைப் பெருக்கும்பொருட்டு, முக்கிய ஆவணங்களில் பதிவு செய்துகொள்வோரிடமிருந்து ரொக்கமாகவே முத்திரைத்தாள் தீர்வை வசூலிப்பதற்கு துணைப் பதிவாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். முத்திரைத்தாள் பற்றாக்குறை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டது.

9. சிறப்புத் திருமணங்கள் சட்டத்தின்கீழ் திருமணப் பதிவாளராக எல்லா துணைப் பதிவாளர்களும் நியமிக்கப்பட்டனர். விரைவில் பதிவு செய்வதற்கு வசதியாக, மிகுந்த வேலையுள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் துணைப் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த மூன்றாண்டுகளில் கீழ்க்காணும் இடங்களில் 16 புதிய துணைப்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்பட்டன. இவற்றுடன் மொத்தம் 396 துணைப் பதிவாளர் அலுவலங்கள் உள்ளன :—

1. விருதுநகர் (ராமநாதபுரம் மேற்கு மாவட்டம்).
2. திண்டுக்கல் (திண்டுக்கல் மாவட்டம்).
3. திருவண்ணாமலை (திருவண்ணாமலை மாவட்டம்).
4. காஞ்சீபுரம் (காஞ்சீபுரம் மாவட்டம்).
5. தல்லாகுளம் (மதுரை மாவட்டம்).
6. கோடம்பாக்கம் (சென்னை மாவட்டம்).
7. துவரங்குறிச்சி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).
8. வடக்குநந்தல் (சிதம்பரம் மாவட்டம்).
9. வீர சோழன் (ராமநாதபுரம் மாவட்டம்).
10. சிவகங்கை (ராமநாதபுரம் மாவட்டம்).
11. மேலப்பாளையம் (பாளயங்கோட்டை மாவட்டம்).
12. ஆலந்தூர் (சென்னை மாவட்டம்).
13. புரசைப்பாக்கம் (சென்னை மாவட்டம்).
14. ஜோலார்பேட்டை (வேலூர் மாவட்டம்).
15. கீழ்கொடுங்களூர் (திருவண்ணாமலை மாவட்ட).
16. மிமிசால் (புதுக்கோட்டை மாவட்ட).

அடுத்த ஆண்டில் கீழ்க்காணும் இடங்களில் 6 புது அலுவலகங்கள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. காயல்பட்டினம் (திருநெல்வேலி மாவட்டம்).
2. மகுடஞ்சாவடி (சேலம் மாவட்டம்).
3. ராஜசிங்கமங்கலம் (ராமநாதபுரம் மாவட்டம்).
4. குஜிலியம்பாறை (திண்டுக்கல் மாவட்டம்).
5. மணவாளக்குறிச்சி (கன்னியாகுமரி மாவட்டம்).
6. திருவெறும்பூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).



1970 மார்ச் 17]

10. எல்லா துணைப் பதிவாளர் அலுவலங்களிலும் குடிநீர் வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

11. பொது மக்கள் எவ்வித இடர்பாட்டிற்கும் உட்படாதவாறு பத்திரப் பதிவு அலுவலகங்களில் போதிய மேசை, நாற்காலிகள் வகை செய்யப்படும்.

12. பொது மக்கள் கொடுக்கின்ற தட்டச்சு நகல்களை நேர்ப் படிகளென பதிவு அதிகாரி சான்றிடலாம்.

13. பதிவுத்துறை நடைமுறை நூலைத் திருத்தியமைத்து அவற்றை நாளது தேதி வரையில் ஒழுங்குபடுத்துவதற்கு மாவட்டப் பதிவாளர் ஒருவரும் தேவையான பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

14. எல்லா அலுவலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் புத்தகங்களும் படிவங்களும் தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

## ஊழிய பணி நிலைமைகளை மேம்படுத்துதல்

15. பதிவுத் துறைப் பணியாளர்கள் ஊழிய நலன் கவனிப்பாரற்றுக் கிடந்தது. இத் துறையின் பணியை மேம்படுத்துவதற்கான குறிப்பாக நடவடிக்கைகளை எமது அரசு எடுத்துக்கொண்டது. இத் துறையாற்றும் பணியை மேம்படுத்த உதவி ஆவணப் பதிவுத் துறைத் தலைவர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1967-ல் கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு, 4 இன்ஸ்பெக்டர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. மாவட்டப் பதிவாளர்களின் மேற்பார்வைப் பணியைச் சீர்படுத்தும் நோக்கத்துடன் வேலைச் சுமை மிகுந்த மதுரை இராமநாதபுரம் வட ஆற்காடு, சென்னை--செங்கற்பட்டு பதிவு மாவட்டங்கள் ஒவ்வொன்றும் இரு கூறாகப் பிரிக்கப்பட்டன.

16. இத் துறையின் கீழ்க்காணும் விவரப்படி அதிகாரிகளின் சம்பள வீதம் மாற்றியமைக்கப்பட்டது :—

| | பழைய சம்பள வீதம். | புதிய சம்பள வீதம். |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| மாவட்டப் பதிவாளர்கள் .. | 300—25—600 | 350—25—600 |
| துணைப் பதிவாளர்கள்— | | |
| தரம் 1 .. .. | 200—10—300 | 250—10—350 |
| தரம் 2 .. .. | 150—5—175—10—225 | 175—10—275 |
| தற்காலிகப் பிரிவு எழுத்தர்கள். | 70 (நிலையானது) | 70—2—100 (5 ஆண்டுக் காலத்திற்கு தொடர்ந்து பணி செய்து வருவோருக்கு). |

இச் சம்பள உயர்வினால் மாவட்டப் பதிவாளர்கள் பலரும் தற்காலிகப் பிரிவு எழுத்தர்கள் பலரும் பலனடைவாரென எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் 1-ம் தர துணைப் பதிவாளர்கள் 160 பேரும் 2-ம் தர துணைப் பதிவாளர்கள் 323 பேரும் இதனால் பலனடைவர்.

17. மேலும் 2-ம் தரத் துணைப் பதிவாளர், 1-ம் தரத்துணைப் பதிவாளராக தற்காலிகமாக பதவி உயர்வு பெறவும் அரசு அனுமதித்தது. இதற்கு முன்னர் இத் தரத்தில் நிலையான பதவி உயர்விற்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டிருந்தது. பட்டியலின்கீழ் வராத பிரிவு எழுத்தர்கள் வேலைக்கமர்த்துவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டது.

18. ஆண்டொன்றுக்கு 4,200 ஆவணங்களுக்கு மேல் பதிவு செய்யப்படும் பதிவு அலுவலங்களில் 29 கூடுதல் துணைப் பதிவாளர்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 10 மாவட்டங்களில் உள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரடித் தொலைபேசித் தொடர்பு அமைக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் ஏனைய அலுவலங்களுக்கும் இந்த வசதி விரிவுபடுத்தப்படும்.

19. இரு வார காலத்தில் பதிவு செய்யப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை 175-க்கு மேற்படுகின்றன எல்லாப் பதிவு அலுவலங்களுக்கும் கூடுதல் துணைப் பதிவாளர்கள் பதவிக்கு ஒப்பளிப்பு வழங்க ஆவணத் துறைத்தலைவருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 20. சீட்டு நிதிகள்

இத் துறையின் மற்றொரு இன்றியமையாத பொறுப்பு தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டத்தை நிர்வகித்தலாகும் இதனைப் பதிவு அலுவலங்கள் கவனித்து வருகின்றன. போலி சீட்டு நிதிகளைத் தடை செய்யவும் பொது மக்களின் நலனைக் காக்கவும் கருதி இயற்றப்பட்ட இச் சட்டம் 1969 டிசம்பரில் மாநிலம் முழுவதற்கும் விரிவு படுத்தப்பட்டது. சீட்டு நிதி வேலையைக் கவனிக்க எல்லா அலுவலங்களுக்கும் சிறப்புப் பணியாளர்களை அமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இன்ஸ்பெக்டர் பதவித் தரத்தில் சீட்டு நிதி இயக்குநர் பதவி ஒன்றுக்கும் ஒப்பளிப்பு வழங்கப்படும்.

## 21. கட்டிடங்கள் கட்டுதல்

(திருவண்ணாமலை மாவட்டம்) களம்பூரில் துணைப் பதிவு அலுவலகத்திற்கென்று புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது. கிருஷ்ணகிரி, மயிலாப்பூர், டி. பழூர், கொட்டாரம் ஆகிய ஊர்களில் புதிய அரசுக் கட்டிடங்கள் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

22. பத்திரப் பதிவுத் துறையின் வேலைத்திறத்தை மேம்படுத்துவதற்கு இவ்வரசு எவ்வாறு பெரு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்று நான் எடுத்துக் காட்டியுள்ளேன். அரசினர் கட்டிடங்களில் அமைந்திராத இந்த அலுவலகங்களுக்குப் போதிய கட்டிட வசதிகளுக்கு வகை செய்வது இன்றியமையாததாகும். இத்தகைய அலுவலங்கள் தற்போது 130 உள்ளன. அடுத்த ஐந்தாண்டுக் கால அளவில் இவற்றைச் செய்து முடிப்பதற்கான பணித் திட்டம் ஒன்றை உருவாக்க நான் கருதுகிறேன்.

23. இத் துறையின் திறமையையும், வருவாயையும் மேம்படுத்தவும் அதே நேரத்தில், பொது மக்களுக்கு முழு அளவு வசதிகளை உறுதியாகத்தரவும்; எமது அரசு பெரு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## இணைப்பு II

[32-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### எழுதுபொருள்-அச்சுத்துறை

### 1969-70-ல் எழுதுபொருள் அச்சுத்துறையின் பணியினைக் குறித்த ஆய்வுரை

அமைப்பு.—எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர் அரசு எழுது பொருள் பண்ட சாலைக்கு அரசு அச்சகத்திற்கும் பொறுப்புடையவர் ஆவார். நிர்வாகப் பிரிவில் அச்சகத் துணை இயக்குநரும், தொழில் நுட்பப் பிரிவில் பணி மேலாளரும் இயக்குநரின் உதவியாளராகச் செயல்படுகின்றனர்.

### அச்சகப் பிரிவு

2. அச்சகப் பிரிவு.—தமிழ் நாடு அரசு அச்சகம் 1831-ஆம் ஆண்டில் ஒரு சில பழைய அச்சுக்களுடனும், 10 தொழிலாளர்களுடனும் தொடங்கப்பட்டது. தற்போது கிழக்கு ஆசிய நாடுகளிலேயே மிகப் பெரிய அச்சக நிறுவனமாக இது வளர்ந்துள்ளது. இதில் இப்போது ஏறக்குறைய 4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

தொழிலாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் தொடர்ந்து நல்ல உறவு முறை நீடித்துவருகிறது.

எழுது பொருள்-அச்சுத்துறையின் அச்சகப் பிரிவிலே கடந்த மூன்றாண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

முதலீடு செய்துள்ள மூலதனம்.

(மத்திய அச்சகம், அரசுப் பாட நூல்கள் அச்சகம், வட்டார, கிளை அச்சகங்கள் உட்பட.)

அறிக்கை I

(இயந்திரங்களும் தளவாடங்களும்)

| ஆண்டு. (1) | தொடக்க இருப்பு. (2) ரூ. | ஆண்டில் சேர்க்கை. (3) ரூ. | இறுதி இருப்பு. (4) ரூ. |
|---|---|---|---|
| 1966-67 .. .. | 39,71,620 | 11,07,743 | 48,78,581 |
| 1967-68 .. .. | 48,78,581 | 3,24,831 | 49,02,999 |
| 1968-69 .. .. | 49,02,999 | 2,15,762 | 47,40,249 |

அறிக்கை II.

| ஆண்டு. | மொத்த வருவாய். (5) ரூ. | மொத்தச் செலவு. (6) ரூ. | தேய்மான சேம நிதிக்கு வழங்கிய தொகை. (7) ரூ. |
|---|---|---|---|
| 1966-67 .. .. | 55,29,639 | 1,45,15,326 | 2,50,528 |
| 1967-68 .. .. | 68,93,979 | 1,31,16,604 | 3,00,413 |
| 1968-69 .. .. | 50,68,371 | 1,75,63,402 | 3,78,512 |

குறிப்பு.—வணிக முறையில் இயங்காத அரசுத் துறைகளுக்கு இந்த அச்சகத்தில் இலவசமாக அச்சுப்பணி செய்து தரப்படுகிறது. எனவே, ஆதாய நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளாமல் பணி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளதால், இத் துறையில் வருவாயைவிட செலவு மிகுந்துள்ளது.

மொத்தச் செலவு விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | | வருவாய்க் கணக்கில் செலவு (ஆதாயம் தரும் துறைகள் —அச்சுக் கோப்புப் பிரிவு, இயந்திரப் பிரிவு, பைண்டிங் பிரிவு). | ஏனைய இனங்கள் (ஆதாயம் தராதவையும் பணி இயல் பானவையும், இயந்திரப் பிரிவு, அச்சு வார்ப்புப் பிரிவு, படிவங்கள் அனுப் புதல், பொதுவாக அனுப் பும் வேலையைக் கவனிக் கும் பிரிவு). | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1966–67 | .. | 1,08,86,494 | 36,28,832 | 1,45,15,326 |
| 1967–68 | .. | 98,37,128 | 32,79,476 | 1,31,16,664 |
| 1968–69 | .. | 1,31,72,987 | 43,90,415 | 1,75,63,402 |

கடந்த மூன்றுண்டுகளில் இம்மாநில அரசுத்துறைகளுக்கும், ஏனைய நிறுவனங்களுக்கும் செய்துகொடுத்த பணிகளின் மதிப்பு கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| | 1966–67 ரூ. | 1967–68 ரூ. | 1968–69 ரூ. |
|---|---|---|---|
| 1 இலவசமாக அச்சிட்டுப் பெறுவதற்கு உரிமை யுள்ள அதிகாரிகள். | 1,02,38,735·73 | 87,86,270·96 | 1,08,58,511·76 |
| 2 தொகை கொடுப்பதன் மேல் வழங்கப்பெற்ற உரிமையுள்ள மத்திய அரசு அதிகாரிகள்— | | | |
| (i) ஆயத்துறை .. | .. | .. | .. |
| (ii) நிறுவன வரி நீங்க லான வருமான வரி. | .. | .. | .. |
| (iii) தணிக்கை .. | 80,220·54 | 1,12,896·48 | 1,25,240·41 |
| (iv) எழுது பொருள் அச்சகப்பணி. | 6,926·94 | 13,466·83 | 182·02 |
| (v) அறிவியல் பணி கள். | .. | .. | .. |
| 3 இந்திய அஞ்சல்-தந்தித் துறை. | .. | 402·94 | .. |
| 4 தொகை கொடுப்பதன் மேல் வழங்கப்பெற உரிமையுள்ள அதி கள்— | | | |
| (i) தனியார் நிறு வனங்கள். | ?,10,280·19 | 2,96,442·85 | 1,99,894·19 |
| (ii) வாணிக நிறு வனங்களும், துறைகளும். | 3,50,192·53 | 6,19,456·37 | 8,22,661·05 |
| (iii) உள்ளாட்சி மன் றங்களுக்காகச் செய்த தேர்தல் பணி. | 138·07 | 8,191·57 | 3,769·12 |
| (iv) பரிசுச் சீட்டு .. | .. | .. | 11,62,728·12 |
| மொத்தம் .. | 1,08,86,494·00 | 98,37,128·00 | 1,31,72,987·00 |



*1970 மார்ச் 17]*

3. அச்சகத் தேய்மானச் சேமநிதியின் இருப்பு.—அச்சகத்தைச் சேர்ந்த இயந்திர தளவாடங்களையும், மேசை, நாற்காலி போன்ற பொருள்களையும் புதுப் பிப்பிப்பதற்காகவும், புதிதாக வாங்குவதற்காகவும் தேய்மானச் சேமநிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அச்சகத்திலுள்ள இயந்திர தளவாடங்கள், மற்றும் மேசை, நாற்காலி போன்ற பொருள்களுக்கு ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் உள்ள மதிப் பின்படிக் கணக்கிடப்படுகிற தேய்மானத்தொகை (ஆண்டில் புதிதாக வாங்கப் படும் பொருள்கள், இயந்திரங்கள் இதில் அடங்கா) குறைந்து வரும் மதிப்பின் அடிப்படையில் குறிப்பிட்ட விதத்தில் ஆண்டுதோறும் இந்த நிதிக்குச் செலுத் தப்படும்.

இருப்புப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்ட பயன்படுத்த இயலாத, அச்சுப் பொறி, கருவிகள், மேசை, நாற்காலி பொருள்களின் புத்தக மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | ரூ. |
|---|---|
| 1966-ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் 1-ஆம் தேதியில் இந்த நிதியிலிருந்த தொகை. | 14,53,368 |
| 1969-70-ஆம் ஆண்டில் சேர்க்கப்படுமென்று மதிப் பிட்டுள்ள தொகை. | 3,65,400 |
| 1969-70-இல் செலவிடப்படும் என்று மதிப்பிடப் பட்டுள்ள தொகை. | 3,36,887 |
| 1970-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் தேதி யில் எதிர் பார்க்கப்படும் மிச்சத்தொகை. | 14,81,881 |

4. வாங்கப்பட்ட இயந்திரங்களும், கருவிகளும்.—1969-70-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இயந்திரங்கள், கருவிகள், உலோகங்கள் ஆகியவை வாங்கப்பட்டன. அவற்றின் மதிப்பு அவற்றிற்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஜெர்மனியில் தயாராகும் பதின்மூன்று எழுத்து அழுத்தும் தானியங்கி உருளை அச்சுப் பொறிகள் ( Letter Press Cylinder Printing Machines வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. (தொடர் எண் 9-ஐக் காண்க). ஜெர்மனியில் தயாராகும் இரண்டு சமதள எதிரிட்டு இயந்திரங்களும் Offset Machines வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. (தொடர் எண் 12-ஐக் காண்க).

| வாங்கப்பட்ட இயந்திரங்கள், கருவிகளின் விவரம். (1) | அளவு. (2) | செலவு. ரூ (3) |
|---|---|---|
| 1 தனியச்சு உலோகம் .. | 4,989 கிலோ கிராம். | 29,80·428 |
| 2 வரியச்சு உலோகம் .. | 99,77,200 கி.கி. | 47,476·81 |
| 3 ' டிரிப் பான் ' (Drip Pan). | 9 | 6,396·30 |
| 4 அவற்றிற்கு படிவமுருக்கு ஆப்பு இயந்திர சாவிகள் .. | 120 } 10 } | 659·20 |
| 5 கை வண்டி .. .. | 8 | 5,356·00 |
| 6 அச்சுப்படிமம் தயாரிக்கும் சக்கரம் | 1 | 285·25 |
| 7 இரண்டு சுழல் புதிய அச்சு இயந்திரம் P.D. 5. | 1 | 82,655·44 |

| வாங்கப்பட்ட இயந்திரங்கள், கருவிகளின் விவரம். | அளவு. | செலவு. ரூ |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 8 'பிரமர்' கம்பி— | | |
| (a) தைக்கும் இயந்திரம். | 3 | 50,486·41 |
| (b) அதற்கான மோட்டார். | 3 | 2,396·25 |
| 9 உருளை அச்சுப் பொறி .. | 13 | 14,86,189·00 |
| 10 காகிதம் வெட்டும் இயந்திரம். | 2 | 1,68,496·90 |
| 11 புதிய செதுப்புப் படிம இயந்திரம். | 1 | 3,010·70 |
| 12 'பிளானடா' சமதள எதிரீட்டு அச்சுப்பொறி | 2 | 4,01,612·27 |
| 13 அச்சு இயந்திரம் .. .. | 2 | 2,92,520·00 |
| 14 குளிர் சாதனப் பெட்டி .. | 1 | 2,300·70 |
| 15 நுண் நோக்கி .. .. | 1 | 1,236·00 |
| மொத்தம் .. | | 25,80,881·51 |

குறிப்பு.—தொடர் எண் 14, 15 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளவை அரசு அச்சகத்தில் உள்ள மருந்தகத்தில் பயன்படுத்தப்படும்.

அரசு அச்சகத்தில் உள்ள பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்களைப் படிப்படியாக மாற்றுவதைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டில் ரூ. 37.52 லட்சம் செலவில் 24 புதிய இயந்திரங்களை வாங்குவதற்கு அண்மையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நவீன இயந்திரங்களை [முவும் திட்டத்தினால் அரசு அச்சகத்தின் செயல்தரம் மேம்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

5. அந்நியச் செலாவணி.—கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான அந்நியச் செலாவணி குறித்த புள்ளி விவரம் தவிர, செலவாகுமென்று எதிர்பார்க்கப்பட்டு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, பயன் படுத்தப்பட்ட, எஞ்சியுள்ள அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகள் குறித்து விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | | ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. | பயன்படுத்தப் பட்டது. | நிலுவை. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1967-68 | .. | 95,714 | 95,714 | .. |
| 1968-69 | .. | 2,47,050 | 2,47,050 | .. |
| 1969-70 | .. | 3,56,021 | 3,56,021 | .. |

6. கட்டிடங்கள்.—(i) அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.—திருச்சிராப்பள்ளி தொழிற்பேட்டையில் வகைப் பிரிவை எழுதுபொருள் அச்சுத் துறைக்கு ஒதுக்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ii) அரசு வட்டார அச்சகம், சேலம்.—இந்த அச்சகம் தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த அச்சகத்திற்கு அரசுச் செலவில் கட்டிடம் கட்டுவதற்காக தகுந்த மனை ஒன்றைத் தேர்ந்தெடுத்து கட்டிடங்கள் கட்டுவதற்காக, சேலத்தில் தகுந்த மனைகளை, எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரும், அண்மையில் சேர்ந்து பார்வையிட்டுள்ளனர். இது குறித்து, எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரின் இறுதி அறிக்கை அச்சினால் எதிர்பார்க்கப்படுகின்றது.





(iii) அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.—இந்த அச்சகமும் தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவருகின்றது. இந்த வட்டார அச்சகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்வது, கடலூர் மாவட்ட வருவாய் அதிகாரியுடன் கடிதத் தொடர்பில் இருந்து வருகிறது.

7. அரசு அச்சகத்தில் கீழ்க்காணும் பிரிவுகள் அடங்கியுள்ளன :—

(1) மைய அச்சகம், தங்கசாலைக் கட்டிடம், சென்னை-1.

(2) அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், மலைச்சாலை, சென்னை-2.

(3) பாடப்புத்தகக் கிளை அச்சகம், சென்னை-2.

(4) உயர் நீதிமன்றக் கிளை அச்சகம், சென்னை-1.

(5) மையச் சிறைச்சாலையிலுள்ள கிளை அச்சகம், சென்னை-3.

(6) கிளை அச்சகம், புதுக்கோட்டை.

(7) அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.

(8) அரசு வட்டார அச்சகம், சேலம்.

(9) அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.

இந்த அச்சகங்கள் செயல்படும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. மைய அச்சகம்.—மைய அச்சகத்தின் சுமார் 2,715 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். வழக்கமாகச் செய்யும் அச்சுப் பணியுடன் கீழ்க்கண்ட பணிகளையும் இந்த அச்சகம் நிறைவேற்றியுள்ளது :—

(i) விரைவாக இயங்கும் அச்சு இயந்திரங்கள் பலவற்றில், பல லட்சக் கணக்கான பரிசுச் சீட்டுகளை அச்சிடும் பணியில் இயந்திரப் பிரிவு ஈடுபட்டிருந்தது.

(ii) பத்திரப்பதிவுத் துறைக்காக, நகல் எடுக்கும் புதியவகைப் பத்திரத்தாள்கள் விலையுயர்ந்த காகிதத்தில் அச்சடிக்கும் பணி விரைவுபடுத்தப் பட்டது.

(iii) பல்வேறு அரசு விழாக்கள் தொடர்பான அழைப்பிதழ்கள், சிறு வெளியீடுகள், துண்டு வெளியீடுகள், உறைகள் ஆகியவை ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன.

(iv) "சிறு சேமிப்புத் திட்டம்" "கோதுமை பற்றிய பிரசாரம்" "அனைத்திந்திய வானொலி கருத்தரங்கு" ஆகியவை குறித்து பல வண்ணங்களில் சிறு புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டன.

(v) சென்னை மாநகரில் சட்டப்படியான உணவுப் பங்கீட்டு முறை ரத்து செய்யப்பட்டதனால் குறைந்த வருமானத் தொகுதியினருக்காக அரசினால் அண்மையில் கொண்டுவரப்பட்ட திட்டப்படி உணவுப் பங்கீடு அட்டைகள் குறுகிய காலத்திற்குள் அச்சிட்டு வழங்கப்பட்டது.

[1970 மார்ச் 17

(v) அரசிதழ், சட்டமன்றப் பேரவை, மேலவையின் நடவடிக்கைகள், 1970-ஆம் ஆண்டுக்கான நாட்குறிப்பு, சிறப்புப் புத்தகங்கள், பால் கூப்பன்கள், அரசுப் போக்குவரத்துப் பேருந்துப் பயணச் சீட்டுகள், துறை அறிக்கைகள், மாதாந்திர வெளியீடுகள், பல்வேறு அரசுத் தேர்வுகளுக்கான பட்டியல்கள், மதிப்பெண் புத்தகங்கள், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கைகள் போன்ற வழக்கமான வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

(vi) 1970-ஆம் ஆண்டுக்கான பொது மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் படிவங்கள்—1970-ஆம் ஆண்டில் நடக்கவிருக்கும் ஊராட்சித் தேர்தலுக்கான படிவங்கள், ஏனைய பதிவேடுகளும் இத் துறையினால் அச்சிடப்பட்டன.

(vii) புதிய தானியங்கி அச்சுப் பொறிகள் பல இத் துறையில் நிறுவப்பட்டுள்ளன. பரிசுச் சீட்டு அச்சிடுதல், மற்றும் இந்த அலுவலகத்திற்கு வரும் ஏனைய சிறப்பான பணிகளை விரைவு படுத்துவதற்காக 11 கிலோ வாட் மின்மாற்றக் கருவி ( transformer ) நிறுவப்பட்டு மேற்படி இயந்திரங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த அச்சகம் தனது முழுத்திறன் கொண்டு செயல்பட்டு வருகிறது. என்றாலும் சில பணிகளின் அவசரப் பாங்கினையொட்டி அவற்றை உள்ளூரில் தனியார் அச்சகங்களில் அச்சிட வேண்டியுள்ளது.

அரசு அச்சகத்தில் நடந்த வேலைகளின் மதிப்பும், தனியார் அச்சகங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளின் மதிப்பும், கடந்த மூன்றாண்டுகளில் அவற்றின் சத விதமும், கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | வேலையின் மொத்த மதிப்பு. | அரசு அச்சகத்தில் செய்த வேலையின் மதிப்பு. | தனியார் அச்சகத்தில் செய்த வேலையின் மதிப்பு. | மொத்த மதிப்பின் சத வீதம். அரசு அச்சகம். | மொத்த மதிப்பின் சத வீதம். தனியார் அச்சகம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | ரூ. | ரூ. | ரூ. | | |
| 1966–67 | 1,22,54,832 | 1,09,37,736 | 20,16,096 | 83·55 | 16·45 |
| 1967–68 | 92,44,780 | 87,86,271 | 4,58,509 | 95·04 | 4·96 |
| 1968–69 | 1,11,20,763 | 1,08,58,512 | 2,62,251 | 97·64 | 2·36 |

கடந்த மூன்றாண்டுகளில் அச்சிடப்பட்டு, வழங்கப்பட்ட பேருந்துப் பயணச் சீட்டுகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | | | அச்சிடப்பட்ட பயணச் சீட்டுகளின் எண்ணிக்கை. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1966–67 | .. | .. | 6,887·24 |
| 1967–68 | .. | .. | 4,098·70 |
| 1968–69 | .. | .. | 4,378·24 |

2. அரசு வெளியீடுகள் நிலையம், சென்னை-2.—சென்னை மலைச்சாலையிலுள்ள அரசு வெளியீடுகள் நிலையத்தின் விற்பனைப் பிரிவில் தமிழ் நாடு அரசு வெளியீடுகளும், இந்திய அரசு வெளியீடுகளும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறு நேரில் விற்பதைத் தவிர, பண அஞ்சல் மூலம் அல்லது



1970 மார்ச் 17]

கருவூலச் செலுத்துச் சீட்டு மூலம் பணம் அனுப்புபவர்களுக்கும் இந்த வெளியீடுகள் அஞ்சலில் அனுப்பிவைக்கப்படுகின்றன. மேலும் சென்னை மாநகரிலும், வெளியூர்களிலும் அதிகாரம் பெற்ற முகவர்கள் வாயிலாகவும் இவ்வெளியீடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் கணக்குப்படி, மொத்தம் 47 முகவர்கள் உள்ளனர். 1969-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1-ஆம் நாள் முதல் டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரையில், பண அஞ்சல் மூலம் அஞ்சலில் விற்றவையும், விலைப்பட்டியல் அனுப்பப்பட்டதன் மூலம் விற்கப்பட்டவையும் உட்பட, விற்பனைப் பிரிவில் அரசு வெளியீடுகளை விற்றதன் மூலம் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 2,25,548.36 ஆகும்.

அரசு வெளியீடுகளைப் பொதுமக்களுக்கு பார்வைக்கு வைப்பதற்காக நல்ல காட்சி அறை கட்டுவதற்கான கருத்துருவை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

3. பாடப் புத்தகக் கிளை அச்சகம், மலைச்சாலை, சென்னை-2.—பணி உதவி மேலாளரின் மேற்பார்வையின்கீழ் இந்த அச்சகம் இரு முறை மாற்றுகளில் ( Two Shifts ) செயல்படுகிறது. இதில் 500 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

1970-71-ஆம் ஆண்டில் 69.40 இலட்சம் பாடப் புத்தகங்களை அச்சிட்டு அனுப்புமாறு ஆணை பெறப்பட்டுள்ளன.

மலைச்சாலையிலுள்ள பாடப் புத்தக அச்சகத்தில் சிற்றுண்டிசாலை ஒன்று திறப்பதற்காக வட்டியில்லாக் கடனாக ரூ. 3,000 வழங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தேவையான ஏனங்களும், மேசை நாற்காலிகளும் வாங்கப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் அச்சடிக்கப்பட்ட பாடப் புத்தகங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | | | புத்தகங்களின் எண்ணிக்கை. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1966–67 | .. | .. | 70·45 |
| 1967–68 | .. | .. | 90·50 |
| 1968–69 | .. | .. | 67·50 |

நிர்வாகப் பொறியாளரும், எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநரும் அச்சகக் கட்டிடத்தைப் (பாடபுத்தக அச்சகம்) பார்வையிட்டு, தற்போதுள்ள கட்டிடத்தை இடித்துவிட்டு பல மாடிகள் கொண்ட கட்டிடம் கட்டப்படவேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளனர். இது குறித்து, எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநருக்கும், செங்கற்பட்டு கோட்டக் கண்காணிப்புப் பொறியாளருக்குமிடையே கடிதப்போக்குவரவு நடந்து வருகிறது.

4. உயர் நீதிமன்றத்திலுள்ள கிளை அச்சகம்.—உயர் நீதிமன்ற வளவுகளில் அமைந்துள்ள கிளை அச்சகம் ஒருசிறு பிரிவாகும். இதில் நீதிமன்றத்துக்கு அன்றாடம் தேவைப்படும் வழக்குப் பட்டியல்கள் அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் இரு முறை மாற்றுப் பணிகளில் செயல்பட்டு வருகிறது. இதைத் தவிர தேவைப்படும் தரப்படுத்திய படிவங்களும், சாதாரணப் படிவங்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

A. 236—14

உயர் நீதிமன்ற வழக்குகள், இந்தியச் சட்ட அறிக்கைகள் ஆகியவைகளை அச்சிடும் வகையில் இந்த அச்சகத்தை விரிவுபடுத்தும் பொருட்டு, இக்கிளை அச்சகத்திற்கு அடுக்குப் பக்கத்தில் உள்ள 2090 ச. அடி. இடத்தை அச்சகம் தன் பயனுக்கு எடுத்துக்கொள்ள அரசு அச்சகத்திற்கு அனுமதியளித்துள்ளது. உயர் நீதிமன்ற வழக்குகளை அச்சிடுவதற்காக, மத்திய அச்சகத்திலிருந்து வரி யச்சுப் பொறி ஒன்றும், அச்சு இயந்திரம் ஒன்றும் வழக்குப் பட்டியல் அச்சகத் துக்கு மாற்றப்பட்டுள்ளன.

இக்கிளை அச்சகம், மத்திய அச்சகத்தின் பணி மேலாளர் ஒருவரின் கண்கா ணிப்பில் உள்ளது.

5. மத்தியச் சிறைச் சாலையிலுள்ள கிளை அச்சகம், சென்னை-3.---மத்தியச் சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு வேலையளிக்கும் நோக்கத்துடன் இந்தக் கிளை அச்சகம் நிறுவப்பட்டுள்ளது. இதில் ஏறக்குறைய 200 கைதிகள் பணி யாற்றுகின்றனர். மத்திய அச்சகத்திலிருந்து அனுப்பப்பட்ட மேற்பார்வைப் பணியாளர்கள் இக் கைதிகளின் பணியை மேற்பார்வையிடுகின்றனர். தரப் படுத்திய படிவங்களை அச்சிடும் வேலை மிகப் பெரிய அளவினதாகும். எனவே அது கைதிகளுக்கு முழுநேர வேலை அளிப்பதற்குப் போதுமானதாக உள்ளது. வருவாய்ப் படிவங்களும் அச்சிடப்பட்டு வருகின்றன. அரசு அச்சகத்தின் 31 தொழில் நுட்பப் பணியாளர் மத்திய சிறைச்சாலை அச்சகத்தில் பணியாற்று கின்றனர்.

மத்திய அச்சகத்தின் பணி உதவி மேலாளர் ஒருவரின் பொறுப்பின்கீழ் இக்கிளை அச்சகம் உள்ளது.

6. கிளை அச்சகம், புதுக்கோட்டை.—பணி உதவி மேலாளர் ஒருவரின் நேரடி மேற்பார்வையின்கீழ் இக் கிளை அச்சகம் செயல்படுகின்றது. இது இரு முறை மாற்றுகளில் செயல்படுகிறது. இந்த அச்சகத்தில் மொத்தம் 192 பேர் பணியாற்றுகின்றனர். கீழ்க்கண்ட வகைப் பணிகள் இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டன :—

( i ) குறிப்பிட்ட கால அளவிற்குள் 13 மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 890 சிறப்பு வெளியீடுகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்பட்டன.

(ii ) மதுரை-வடக்கு, மதுரை நகரம், இராமநாதபுரம் மாவட்டம் சம்பந் தமாக வாராந்திரக் குற்ற அறிக்கைகள், குற்ற நிகழ்வுத் தாள்கள், மாதாந்திரக் குற்ற ஆய்வு, மதுவிலக்கு ஆய்வு போன்ற மாவட்டப் புலனாய்வு நிலையத்தின் பணி குறித்த அச்சு வேலைகள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன.

( iii) கல்லூரிகளுக்கான நாட்குறிப்போடுகள் (26 இனங்கள்) அச்சி டப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன.

( iv) தலைமைச் செயலகத்தின் 316 அரசாணை அட்டவணைகள் (Indices) சென்னைத் தலைமை அச்சகத்திலிருந்து மாற்றப்பட்டு, அச்சிடப்பட்டு அனுப்ப பட்டுள்ளன.

( v) திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைச் சேர்ந்த பதிவுக்கட்டு அட்டவணைகள் 1965 முதல் 1967 வரையில் உள்ள ஆண்டுகளுக் கான ஓராண்டு முடிவு, நிலையான முடிவு, குறித்த கோப்புகள் அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டன.





(vi) 1964 முதல் 1968-ஆம் ஆண்டு வரையில் கதர் கிராமத் தொழில் வாரிய பதிவுக்கட்டு அட்டவணை அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டது.

( vii) விசாரணை வழக்குகள் பற்றிய அறிக்கைகளும், 10 இனங்களைச் சார்ந்த குற்ற தண்டனை மேல்முறையீட்டு வழக்குகள் பற்றிய அறிக்கை களும் சென்னை மத்திய அச்சகத்திலிருந்து மாற்றப்பட்டு, அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன.

( viii) தமிழ் நாடு அரசிதழில் மூன்றாம் பாகத்தின் துணை வெளியீட்டில் தமிழ் நாடு நிலச் சீர்திருத்த அறிக்கைகள், நிலக்கொடை பற்றிய அறிவிப்பு அச்சிடப் பெற்று உரிய காலத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

(ix) வழக்கமான இனங்களுடன் தரப்படுத்தாத படிவங்களும் அச்சி டப்பட்டு, அனுப்பப்பட்டுள்ளன. இவை தவிர தரப்படுத்திய படிவங்களாகிய தமிழ் நாடு கணக்குத் தொகுப்பு, தமிழ் நாடு நிதி விதித் தொகுப்பு, விதிக் கோவையின் கீழ் ஓய்வூதியத் தொகுப்புப் படிவங்கள், ஓய்வூதியப் படிவங்கள் ஆகியவற்றை அச்சிடும் பணி சென்னை மத்திய அச்சகத்திலிருந்து இந்த கிளை அச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

( x) பெருந்துறை சட்டமன்றப் பேரவைத் தொகுதியின் வாக்காளர் பட்டியல்களும், திருத்தங்களின் இறுதிப் பட்டியலும் குறிப்பிட்ட நாளுக்கு முன்னர் அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன.

( xi) பயனற்றுப்போன முத்திரைத்தாள்கள் மீண்டும் அச்சிடப்பட்டு பல்வேறு கருவூலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

( xii) சென்னை எழுதுபொருள் துறை உதவி இயக்குநருக்குத் தேவைப் பட்ட உலோகத் தகட்டுப் புத்தகங்கள் (Metallic Books ) சுருக்கெழுத்து நோட்டுப் புத்தகங்கள், இணைப்புக் கோப்பு அட்டைகள் ( Hinged File Boards ) போன்ற, அச்சகத் தயாரிப்புப் பொருள்கள் :

( xiii) பால் அட்டைகளும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவும் செய்த வேலையின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | | செலவு. | செய்த பணியின் மதிப்பு. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1966-67 | .. | 4,88,318 | 4,44,252 |
| 1967-68 | .. | 4,79,362 | 4,35,811 |
| 1968-69 | .. | 5,47,467 | 4,97,895 |

7. அரசு வட்டார அச்சகம், திருசிராப்பள்ளி.— இந்த வட்டார அச்சகம், பணி உதவி மேலாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது. இங்கு மொத்தம் 129 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்த ஆண்டில் கீழ்க்கண்ட பணி இனங்கள் நிறைவேற்றப்பட்டன :—

( i ) தரப்படுத்தப்படாதவை.—அன்றாடக் குற்றம், குற்ற நிகழ்வுத்தாள் கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட வாராந்திரக் குற்றத் தாள்கள், குற்ற நிகழ் வுத் தாள்கள், திருச்சி மாவட்ட அரசு ரெயில்வே காவல் துறை, தஞ்சாவூர் காவல் துறை கண்காணிப்பாளரின் மாதாந்திர குற்ற அறிக்கை ஆகியவை இந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டன.

(ii) தரப்படுத்தப்பட்டவை.—தலைமை அலுவலகத்திலிருந்து கிடைக்கும் சாதாரண படிவங்களை அச்சிட்டு வழங்கும் பணி இந்த அச்சகத்தில் நிறைவேற்றப்படுகின்றது.

கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு, செய்த வேலையின் மதிப்பு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1966-67 | .. | 1,61,854 | 2,09,483 |
| 1967-68 | .. | 2,55,936 | 2,03,416 |
| 1968-69 | .. | 2,73,689 | 2,27,273 |

8. அரசு வட்டார அச்சகம், சேலம்.— இவ வட்டார அச்சகம், பணி உதவி மேலாளர் ஒருவரின் நேரடி மேற்பார்வையில் உள்ளது. இங்கு 110 பேர் பணியாற்றுகின்றனர்.

கீழ்க்கண்ட வேலைகள் நிறைவேற்றப்பட்டன :—

(i) அன்றாடக் குற்ற ஆய்வு, வாராந்திர குற்ற ஆய்வு, மாதாந்திர குற்ற ஆய்வு, மாதாந்திர மதுவிலக்கு ஆய்வு ஆகியவை உட்பட சேலம் சம்பந்தப்பட்ட மாவட்ட புலனாய்வுப் பணி.

(ii) வாராந்திர, மாதாந்திரக் குற்ற ஆய்வு அறிக்கை, மாதாந்திர மதுவிலக்கு ஆய்வு ஆகியவை உட்பட தருமபுரி சம்பந்தப்பட்ட மாவட்டப் புலனாய்வுப் பணி.

(iii) கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் ஆவண அட்டவணைகள்.

(iv) சேலம் அரசினர் கலைக் கல்லூரிக் குறிப்புகள், சேலம் வட்டாரப் பொறியியல் கல்லூரிக் குறிப்புகள் ஆகியவை தொடர்பான பணிகள்.

(v) பத்திரப் பதிவுத் துறையின் பதிவுக் கட்டுப் புத்தகங்கள் சுமார் 12,000 தயாரிக்கப்பட்டு, அனுப்பப்பட்டன. சென்னை மைய அச்சகத்தின் பணிச் சுமையைக் குறைப்பதற்காக அரசு வெளியிடும் 2-ஆம் வகுப்பு பாடப் புத்தகங்கள் (தமிழ்) மூன்று இலட்சம் வரையில் அச்சடிக்கப்பட்டு அனுப்பப்பட்டன.

தமிழ் நாடு மாநிலம் முழுவதும் உள்ள அதிகாரிகளினால் வேண்டப்படும், சென்னை கருவூலவிதிக் கோவையின்கீழ் வரையறுக்கப்பட்ட படிவங்களையும் பதிவேடுகளையும் அச்சடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

அச்சடிக்கப்பட்ட வெளியீடுகளின் எண்ணிக்கை 1,81,57,736 ஆகும்.

வழங்கப்பட்ட பதிவேடுகளின் எண்ணிக்கையும் படிவங்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:

| | |
|---|---|
| புத்தகங்கள், பதிவேடுகளும் | [illegible] |
| படிவங்கள் | [illegible] |



இதழ்கள், விளையாட்டுப் பொருள்கள் முதலியன வாங்குவதற்காக நல நிதியிலிருந்து ரூ. 200 அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகையும் செய்த வேலையின் மதிப்பும் பின் வருமாறு :—

| ஆண்டு. | | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1966-67 | .. | 1,99,910 | 1,59,928 |
| 1967-68 | .. | 1,79,449 | 1,43 200 |
| 1968-69 | .. | 2,34,705 | 1,87,737 |

9. வட்டார அரசு அச்சகம், விருத்தாசலம்.—இந்த அச்சகம், பணி உதவி மேலாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது. இதில் 128 பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

கீழ்க்காணும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன :—

(i) வாராந்திரக் குற்ற நிகழ்வுத் தாள்கள், மாதாந்திரக் குற்ற ஆய்வுகள், மதுவிலக்குக் குற்ற ஆய்வுகள், காவல் துறையின் கண்காணிப்பாளர்களால் அனுப்பப்பட்ட தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களுக்குத் தொடர்பான ஆண்டு குற்ற ஆய்வுகள்.

(ii) அரசினர் கலைக் கல்லூரிக்குத் தொடர்பான கல்லூரி நாட்குறிப்பேடுகள்.

( ) தமிழ் நாடு அரசிதழின் துணை வெளியீட்டில் வெளியிடுவதற்காக மைய அச்சகத்திலிருந்து பெறப்பட்ட, 'கூட்டுறவுச் சங்கங்களை மூடிவிடுவது குறித்த' அறிவிப்புகள், 92 பக்கங்களில், நான்கு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

(iv) வருவாய்த் துறைப் படிவங்கள் (தரப்படுத்தியவை) சுமார் 46 இனங்கள் அச்சடிக்கப்பட்டு பல்வேறு பிரிவு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(v) பத்திரப் பதிவுத் துறையின் II-2 வது பதிவுக் கட்டுப் புத்தகங்கள் சுமார் 22,000 அச்சடிக்கப்பட்டன.

பணியாளர்களின் கல்வித் திட்டத்தின்கீழ், வட்டார அச்சகத்தின் இரண்டு பணியாளர்கள் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர். அவர்களின் பயிற்சி முடிவடைந்தவுடன், பயிற்சி பெற்ற ஒவ்வொருவரும் 20 பணியாளர்கள் கொண்ட தொகுதிகளுக்குப் பிரிவு நிலை வகுப்புகள் (Unit level classes) நடத்துகின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகையும் செய்த வேலையின் மதிப்பும் கீழ்வருமாறு :—

| ஆண்டு. | | செலவு. | செய்த வேலையின் மதிப்பு. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1966-67 | .. | 1,94,757 | 1,55,805 |
| 1967-68 | .. | 2,74,334 | 2,19,200 |
| 1968-69 | .. | 2,83,620 | 2,26,193 |

10. அரசுப் பரிசுச் சீட்டு அச்சடித்தல்.— 1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20-ஆம் தேதி முதல் தொடங்கிய குலுக்கல்களுக்கான பரிசுச் சீட்டுகள் அச்சடிக்கும் பணி தமிழ் நாடு பரிசுத் திட்டத்தின்கீழ், பாதுகாப்பு நடவடிக்கையாக இந்த அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

1968 அக்டோபர் திங்களுக்கான முதல் குலுக்கல் 8 தொடர்களுடன் தொடங்கப்பட்டது. அதையடுத்து, பொதுமக்களிடமிருந்து பரிசுச் சீட்டுக்கான தேவை அதிகமாக இருந்ததால் தொடர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்தது. இப் பணியில் பணிச்சுமை அதிகரித்ததன் காரணமாக, இப் பணியில் கூடுதல் பணியாளர்களுடன் பல இயந்திரங்களில் பரிசுச் சீட்டு அச்சடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 1969 சனவரித் திங்களில் வழங்கப்பட்ட பேரளவுத் தொடர்கள் 16 (160 லட்சம்) ஆகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆண்டுகள் ஒவ்வொன்றின் எதிரிலும், அவ்வாண்டில் வழங்கப்பட்ட தொடர்களின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 1966 | .. .. | 3 குலுக்கல். | 33 தொடர்கள். |
| 1969 | .. .. | 12 குலுக்கல். | 86 தொடர்கள். |
| 1970 | .. .. | 2 குலுக்கல். | 16 தொடர்கள். |
| | | மொத்தம் | 135 |

இந்த 135 தொடர்கள் எல்லாவற்றிலும் சேர்த்து இதுவரை 1,350 லட்சம் பரிசுச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இந்த அலுவலகத்தின் பரிசுச் சீட்டு வழங்கும் அறைக்கு 24 மணி நேரமும் நிரந்தரமாக சிறப்புக் காவலர் பாதுகாப்பு இருக்கின்றது. இந்த அறையில்தான், மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவதற்கான பரிசுச் சீட்டுகள் பெறப்பட்டு, பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டு முத்திரையிடும் பணி நடைபெறுகின்றது.

11. தொழிலாளர்களுக்கு வசதிகளும் நலன்களும்.— பணியாற்றுகையில் ஈய நச்சு அபாயத்திற்கு உள்ளாகும் சென்னை மத்திய அச்சகப் பணியாளர்கள் 150 பேருக்கும், புதுக்கோட்டையில் உள்ள அரசு அச்சகப் பிரிவில் பணியாற்றும் 12 பேருக்கும் ஆளுக்கு ¼ லிட்டர் பாலும் வைட்டமின்கள் செறிந்த மாத்திரை ஒன்றும் நாள்தோறும் வழங்கப்படுகின்றன.

1969-70-ஆம் ஆண்டில் நல நிதியிலிருந்து தொழிலாளர் நலம் குறித்த நடவடிக்கைகளுக்கு ரூ. 1,635-ம், விளையாட்டுகள் குறித்த நடவடிக்கைகளுக்காக ரூ. 950-ம் கொடுக்கப்பட்டது.

பணிக் குழுவையும், பாதுகாப்புக் குழுவையும் மீண்டும் செயலுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சென்னை, அரசு அச்சகப் பணியாளர்களுக்கு தளர்த்தப்பட்ட ஓய்வு ஊதிய விதிகளின் நன்மைகளை நீட்டித்தல்.— அரசு ஒப்பளித்துள்ள பணியாளர்களில் ஒரே ஒரு உதவியாளர்களில் ஒரே ஒரு உதவியாளரின் பதவி வைத்துக் கொள்ளப்படுகிறது. ஓய்வூதியத்தைத் திருத்தி அமைப்பது குறித்து முடிவு முடிவுள்ள நேர்வுகளை (Cases) முடிவு செய்ய அப்பதவி வைத்துக் கொள்ளப்படுகிறது. சென்ற தடவை முடிவெடுக்கப்படாமல் இருந்த 56 நேர்வுகளில் இதுவரை 45 நேர்வுகள் முடிவு செய்யப்பட்டுள்ளன.



(i) மருத்துவ வசதிகள்.— பணியாளர்களின் நலனுக்காக, ஒரு முழு நேர மருத்துவ அதிகாரியும், இரண்டு தலைமைச் செவிலியர்களும், மருந்து கலந்து கொடுப்பவர் ஒருவரும், இரண்டு முதலுதவிக் கவனிப்பாளர்களும் கொண்ட சிறப்பு மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மருத்துவமனை சிகிச்சை, அறுவை சிகிச்சை, உடல் குறித்த சிறப்பு ஆய்வுகள், குறிப்பிட்ட நோய் சிகிச்சை, வல்லுநர்களின் சிகிச்சை ஆகியவை தேவைப்படுபவர்கள், சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர். இந்த சிறப்பு மருந்தகம் மேற்படி அரசு மருத்துவ மனையுடன் இணைக்கப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு சராசரி 200 பேர் இதில் சிகிச்சைப் பெறுகின்றனர்.

அவசரச் சிகிச்சை தேவைப்படுகிற காலத்தில் பணியாளர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்வதற்காக இந்த மருந்தகத்தில் ஒரு ஆம்புலன்ஸ் வண்டி உள்ளது. அரசு அச்சக மருத்துவப் பணியாளர்களுடன் சிறப்பு மருந்தகம் ஒவ்வொரு திங்கட்கிழமை பிற்பகலிலும், வெள்ளிக்கிழமை பிற்பகலிலும், அச்சகப் பணியாளர்களின் தேவைகளைக் கவனிப்பதற்காக "பாடப் புத்தக அச்சகப் பிரிவில்" செயல்பட்டு வருகிறது.

(ii) குழந்தைகள் காப்பகம்.— பணிபுரியும்பொழுது குழந்தைகளை விட்டுச் செல்வதற்காக இத்துறையிலுள்ள மகளிர் பணியாளர்களுக்குக் குழந்தைக் காப்பக வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைக் காப்பகத்தில் இரண்டு பெண்கள், குழந்தைகளைப் பார்த்துக்கொள்கின்றனர்.

(iii) கூட்டுறவுச் சிற்றுண்டி விடுதி.— பணியாளர்களின் நலனுக்காக ஆதாயமோ இழப்போ இன்றி கூட்டுறவு அடிப்படையில் கூட்டுறவுச் சிற்றுண்டிச்சாலை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இச்சிற்றுண்டிச்சாலையில் விற்கப்படும் பண்டங்களின் விலை பொது ஓட்டல்களிலும், சிற்றுண்டிச்சாலைகளிலும் விற்கப்படும் பண்டங்களின் விலைகளைவிட 50 சதவீதம் குறைவாக உள்ளது. இதைத் தவிர, இந்தச் சிற்றுண்டி விடுதி, பணியாளர்களுக்குத் தேநீரும் பாலும் வழங்குகிறது. இதற்காகும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும். 1968-69-ம் ஆண்டில் விற்பனையான பண்டங்களின் மதிப்பு ரூ. 1,59,764.08. 1969 ஏப்ரல் திங்கள் முதல் 1969 டிசம்பர் திங்கள்வரை விற்பனையான பண்டங்களின் மதிப்பு ரூ. 1,20,000.

(iv) கூட்டுறவு வங்கி:—தமிழ்நாடு அரசு அச்சக-எழுது பொருள் துறைப் பணியாளர்கள் கூட்டுறவு வங்கி (எண் 8580) 47 ஆண்டுகளாகச் செயலாற்றி வருகிறது. இதன் உறுப்பினர்களுக்குக் குறைந்தவீத வட்டியில் இது கடனுதவி அளிக்கிறது. 2,876 உறுப்பினர்கள் கொண்ட இந்த வங்கி ரூ. 7,23,081 செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் கொண்டது. இவ்வங்கி 1969-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் நாள் வரையில் இதன் உறுப்பினர்களுக்கு ரூ. 67,17,546 கடன் வழங்கியுள்ளது. 1969-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி முடிவில் உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ. 34,17,524.39 ஆகும். உறுப்பினர்களிடமிருந்தும் உறுப்பினர் அல்லாதவர்களிடமிருந்தும் வைப்புத் தொகையைத் திரட்டுவதோடுமட்டுமல்லாமல் இந்த வங்கி சென்னை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்தும் கடன் வாங்கும். கூட்டுறவு மத்திய வங்கிக்கு இவ்வங்கி திருப்பிக் கொடுக்கவேண்டிய கடன்தொகை ரூ. 11,42,650 ஆகும். சேமநிதி (Reserve Fund) ரூ. 1,69,500.42 ஆகும். வைப்புத் தொகை ரூ. 13,59,249.06 ஆகும். 1969-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதியன்றுள்ளபடி நடைமுறை மூலதனம் ரூ. 33,85,490.48 ஆகும்.

1968-69-ம் ஆண்டில் இந்த வங்கி ரூ. 17,142.26 நிகர ஆதாயம் ஈட்டியது. நிணிக்கை காரியங்களுக்காக 'இவ் வங்கி' "B" பிரிவின்கீழ் வகைபடுத்தப் பட்டுள்ளது.

(v) பணியாளர்கள் பயன்துய்க்கும் கூட்டுறவு பண்டகசாலை.— இன்றியமையாப் பொருள்களின் விலைகளை ஏறுமல் தடுக்கும் நோக்கத்துடன், 250 பணியாளர்களுக்குமேல் உள்ள தொழில் நிறுவனங்களில் நுய்ப்போர் கூட்டுறவுப் பண்டகசாலையை ஏற்படுத்துவதற்கான திட்டத்தின்கீழ் 1966-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் தேதியன்று இப் பண்டகசாலை பதிவு செய்யப்பட்டது. இது 1967-ம் ஆண்டு சனவரி 23-ம் தேதியன்று பணியைத் தொடங்கியது.

கூட்டுறவுப் பண்டகசாலை தொடங்கப்பட்டதிலிருந்து பண்டக சாலையின் விற்பனைத் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| கால அளவு. | விற்பனைத் தொகை ரூ. |
|---|---|
| 1967-ம் ஆண்டு சனவரி திங்கள் 23-ம் நாள் முதல் 67-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் நாள் வரை .. .. .. | 12,032 |
| 1967-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1968-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் நாள் வரை .. | 1,86,519 |
| 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1969-ம் ஆண்டுமார்ச்சு திங்கள் 31-ம் நாள் வரை | 2,56,743 |
| 1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை .. .. .. .. .. | 1,64 465 |

இங்கு ரொக்கத்தில்தான் விற்பனை செய்யப்படுகிறது. கடனுக்கு விற்பனை செய்வது அனுமதிக்கப்படுவதில்லை.

கீழே கொடுக்கப்பட்டுள்ள நிதி உதவியை அரசு அளித்துள்ளது :—

| | ரூ |
|---|---|
| 1. நடைமுறை மூலதனக் கடன் | 50,000 |
| 2. அரசு பங்கு மூலதனம் | 2,500 |
| 3. பணியாளர் மானியம் | 1,200 |

4. செயலாளராகப் பணிபுரிவதற்கு கூட்டுறவு துணைப் பதிவாளர் ஒருவரின் இலவசப் பணிகள்.

நாளது தேதி வரையில் ரூ. 4,270 செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் 427 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். உறுப்பினர்களுக்கும் அச்சகப் பணியாளர்களுக்கும் இதிலிருந்து பண்டங்கள் விற்கப்படுகின்றன.

கீழ்க்கண்ட மேம்பாடுகளைச் செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது:—

(1) துணிகள் விற்கும் பிரிவு ஒன்றைத் திறப்பது.

(2) மருத்துவப் பிரிவு ஒன்றைத் திறப்பது.

(3) காமராஜ்நகர் குடியிருப்புத் தொகுதியில் வசிக்கும் மக்களின் தேவைகளை நிறைவுசெய்ய அங்கு ஒரு பண்டகசாலைக் கிளையைத் தொடங்குதல்.

(4) [illegible] திறப்பு அல்லது [illegible].





(5) காமராஜ்நகர் குடியிருப்புத் தொகுதியில் பள்ளி.—சென்னை காமராஜ் நகரில் உள்ள பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் ஒன்று கட்டுவதற்காக ரூ. 33,250 தொகையை அரசு ஒப்பளித்தது. நிர்வாகப் பொறியாளர், இப் பணியை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொண்டுள்ளார்.

12. பாதுகாப்பு ஏற்பாடுகள்.— உற்பத்திறன் பெருக்க நிறுவனத்தில், அரசு அச்சகம் ஓர் உறுப்பினராகும். இந்த நிறுவனம் பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறிப்பிட்ட அளவு உதவி புரியும். அச்சகத்திற்காக ஒரு புதிய பாதுகாப்புக் குழுவை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

13. பொது.—(i) அரசு அச்சகம், அதன் கிளைகள் ஆகியவைகளில் உள்ள இயந்திரங்களின் இருப்பு, மாச்சாமான்கள், அச்சுகள், அச்சுப் பொருள்கள் ஆகியவை ஐந்தாண்டுக்கு ஒரு முறை ஒப்பாய்வு செய்யப்படுகின்றன. கடைசியாக 1965-ல் இருப்பு ஒப்பாய்வு நடந்தது.

(ii) மற்ற பொருள்கள் ஆண்டுக்கு ஒருமுறை, இருப்பு ஒப்பாய்வு அதிகாரியால் ஒப்பாய்வு செய்யப்படுகின்றன.

(iii) இத்துறையில் பணிபுரியும் பணியாளர்களின் நலனுக்காக அரசிதழ்ப் பதிவுபெற்ற ஒருவரும், அரசிதழ்ப் பதிவுபெறுத மற்றொருவரும் ஆக இரண்டு தொழிலாளர் நல அதிகாரிகள் உள்ளனர்.

அரசு அச்சகத்தின் பணியில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்பச் சிக்கல்கள் குறித்து ஒரு வல்லுநர் குழு மதிப்பிடு செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் அரசு அச்சகத்தின் பணிக் கூறுகளை ஆய்வு செய்வதற்காக தொழில்-வாணிகத் துறை இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், தலைமைப் பொறியாளர் (பாசனம்-பணிப் பட்டறைப் பொறுப்பு) ஆகிய தொழில் நுட்ப வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழு ஒன்றினை அண்மையில் அரசு அமைத்தது. இந்தக்குழு விரைவில் இதன் பணியைத் தொடங்கும்.

### எழுதுபொருள் பிரிவு.

14. எழுதுபொருள்-அச்சகத் துறையைச் சேர்ந்த எழுதுபொருள் பிரிவு, மாநிலத்திலுள்ள அரசு அலுவலங்களுக்கு எழுதுபொருள்கள், தட்டெழுத்து இயந்திரங்கள், படியெடுக்கும் இயந்திரங்கள் முதலியவற்றைக் கொள்முதல் செய்வதற்காகவும் வழங்குவதற்காகவும் ஆன மத்தியப் பிரிவாகும். அரசுத் தலைமைச் செயலகத் துறைகளிலும், சென்னை மாநகரிலுள்ள துறைத் தலைமை அலுவலகங்களிலும் பணியாற்றும் கடைநிலை பணியாளர்களுக்குரிய உடைகளையும் இந்தப் பிரிவே வழங்குகின்றது. சென்னை மாநகரிலும் வெளியூர்களிலும் உள்ள மருத்துவ மனைகளில் பணிபுரியும் குற்றேவலர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவலகங்களில் பணிபுரியும் தபேதார்களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் உடைகள் வழங்கும் பணியை இந்தப் பிரிவே கவனித்துக்கொள்கிறது. மலைப் பகுதிகளிலும், பிறகுளிர்ப் பகுதிகளிலும் பணியாற்றும் அரசுக் கடைநிலைப் பணியாளர்களுக்கும் குளிர்ப் பாதுகாப்பு ஆடைகளை இந்தப் பிரிவே வழங்குகிறது. வணிகத் துறையைத் தவிர மாநிலத்திலுள்ள அரசு அலுவலங்கள் அனைத்திற்கும் எழுது பொருள்கள் [illegible] வழங்கப்படுகின்றன.

15. இம் மாநிலத்தின் வணிகத்துறைகள், சில மத்திய அரசு அலுவலகங்கள், அரசுச் சார்புள்ள நிறுவனங்கள் ஆகியவை, முன்னமே தொகை செலுத்துவதன் பேரிலோ, புத்தகக் கணக்கு அடிப்படையிலோ, அவற்றிற்கு எழுதுபொருள்கள் வழங்கப்படுகின்றன. இந்த நேர்வுகள் அனைத்திலும், தட்டெழுத்து இயந்திரங்கள், படியெடுக்கும் இயந்திரங்கள் இவை குறித்து 5 சதவீதம் துறைச் செலவாகவும், கணக்கிடும் இயந்திரம் குறித்து 6 சதவீதம் துறைச் செலவாகவும், ஏனைய எழுதுபொருள் குறித்து 21 சதவீதம் துறைச் செலவாகவும் வசூலிக்கப்படுகின்றன.

16. பெரும்பாலும் இந்தியாவில் தயாரித்த எழுதுபொருள் வாங்குவதற்கும், காகிதம், அட்டைகள் வாங்குவதற்கும், தட்டெழுத்துப் பொறி, நகலெடுக்கும் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்கும் ஏற்பட்ட செலவே இந்த எழுது பொருள் பிரிவின் பெரும்பகுதிச் செலவாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரம் அறிக்கையின்மூலம் இத்துறை வழங்கிய பொருள்களின் அளவுபற்றி அறியலாம்.

| ஆண்டு. | | எழுதுபொருள் வாங்கியதன் மதிப்பு. | கேட்பு அதிகாரிகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட எழுதுபொருள்களின் மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | ரூ. | | ரூ. |
| 1966-67 | .. | 1,02,89,886 | 2,260 | 1,06,15,466 |
| 1967-68 | .. | 95,76,248 | 2,212 | 85,95,834 |
| 1968-69 | .. | 98,87,441 | 3,126 | 87,72,900 |

| ஆண்டு. | | வழங்கப்பட்ட தட்டெழுத்து இயந்திரங்கள், நகல் எடுக்கும் இயந்திரங்கள், படி பெருக்கி இயந்திரங்கள், கணக்கிடும் இயந்திரங்கள் ஆகியவைகளின் எண்ணிக்கை. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தட்டெழுத்து இயந்திரம் (ஆங்கிலம்). | தட்டெழுத்து இயந்திரம் (தமிழ்). | கையால் இயக்கப்படும் நகல் எடுக்கும் இயந்திரம். | மின்சாரத்தில் இயங்கும் நகல் எடுக்கும் இயந்திரம். | படிபெருக்கி இயந்திரம். | கணக்கிடும் இயந்திரம். |
| 1966-67 | .. | 566 | 147 | 101 | 2 | 28 | .. |
| 1967-68 | .. | 428 | 151 | 20 | 7 | 17 | 8 |
| 1968-69 | .. | 429 | 88 | 109 | 12 | .. | 3 |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1970 மார்ச் 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 429, 430 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### அரியமங்கலத்துக்கு அரசு மருத்துவமனை

*431 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சிராப்பள்ளி நகருக்கு அருகாமையிலுள்ள அரியமங்கலத்திற்கு ஒரு அரசாங்க கிளை மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் 22-6-66-ம் தேதிக் கூட்டத்தில் இதுமாதிரி ஒரு ஆஸ்பத்திரி அவசியம் என்று வலியுறுத்தி சிபார்சு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ? அதை மீண்டும் புனர்பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மருத்துவ பொதுநலத்துறை இயக்குநர் அவர்கள் அப்படிப்பட்ட வரைவுத்திட்டம் எதுவும் தன்னிடம் வந்து சேரவில்லை என்று குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் அப்படிப்பட்ட திட்டம் எதுவும் வந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை.

### *Government Hospital at Jayankondacholapuram*

*432 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) Whether the Government propose to upgrade the Government dispensary at Jayankondacholapuram into a full fledged taluk headquarters hospital; and

(b) if so, the estimated cost of construction of this new hospital?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) அரசு ஆணை எண். 2420, பொதுப்பணித்துறை நாள் 14-11-1968-ல் 40 படுக்கைகள் கொண்ட தாலுக்கா தலைமை மருத்துவமனை ஒன்றை ஜெயங்கொண்ட சோழபுரத்தில் அமைக்க ரூ. 3.70 லட்சம் செலவில் கட்ட ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வேலை தற்சமயம் நடந்தேறி வருகிறது.

15. இம் மாநிலத்தின் வணிகத்துறைகள், சில மத்திய அரசு அலுவலகங்கள், அரசுச் சார்புள்ள நிறுவனங்கள் ஆகியவை, முன்னமே தொகை செலுத்துவதன் பேரிலோ, புத்தகக் கணக்கு அடிப்படையிலோ, அவற்றிற்கு எழுதுபொருள்கள் வழங்கப்படுகின்றன. இந்த நேர்வுகள் அனைத்திலும், தட்டெழுத்து இயந்திரங்கள், படியெடுக்கும் இயந்திரங்கள் இவை குறித்து 5 சதவீதம் துறைச் செலவாகவும், கணக்கிடும் இயந்திரம் குறித்து 6 சதவீதம் துறைச் செலவாகவும், ஏனைய எழுதுபொருள் குறித்து 21 சதவீதம் துறைச் செலவாகவும் வசூலிக்கப்படுகின்றன.

16. பெரும்பாலும் இந்தியாவில் தயாரித்த எழுதுபொருள் வாங்குவதற்கும், காகிதம், அட்டைகள் வாங்குவதற்கும், தட்டெழுத்துப் பொறி, நகலெடுக்கும் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்கும் ஏற்பட்ட செலவே இந்த எழுது பொருள் பிரிவின் பெரும்பகுதிச் செலவாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரம் அறிக்கையின்மூலம் இத்துறை வழங்கிய பொருள்களின் அளவுபற்றி அறியலாம்.

| ஆண்டு. | | எழுதுபொருள் வாங்கியதன் மதிப்பு. | கேட்பு அதிகாரிகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட எழுதுபொருள்களின் மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | ரூ. | | ரூ. |
| 1966-67 | .. | 1,02,89,886 | 2,260 | 1,06,15,406 |
| 1967-68 | .. | 95,76,248 | 2,212 | 85,95,834 |
| 1968-69 | .. | 98,87,441 | 3,126 | 87,72,900 |

வழங்கப்பட்ட தட்டெழுத்து இயந்திரங்கள், நகல் எடுக்கும் இயந்திரங்கள், படி பெருக்கி இயந்திரங்கள், கணக்கிடும் இயந்திரங்கள் ஆகியவைகளின் எண்ணிக்கை.

| ஆண்டு. | | தட்டெழுத்து இயந்திரம் (ஆங்கிலம்). | தட்டெழுத்து இயந்திரம் (தமிழ்). | கையால் இயக்கப்படும் எடுக்கும் இயந் | மின்சாரத்தில் இயங்கும் நகல் எடுக்கும் நகல் இயந் திரம். திரம். | படிபெருக்கி இயந்திரம். | கணக்கிடும் இயந்திரம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1966-67 | .. | 566 | 147 | 101 | 2 | 28 | .. |
| 1967-68 | .. | 428 | 151 | 20 | 7 | 17 | 8 |
| 1968-69 | .. | 429 | 88 | 109 | 12 | .. | 3 |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1970 மார்ச் 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 429, 430 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### அரியமங்கலத்துக்கு அரசு மருத்துவமனை

*431 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சிராப்பள்ளி நகருக்கு அருகாமையிலுள்ள அரியமங்கலத்திற்கு ஒரு அரசாங்க கிளை மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் 22-6-66-ம் தேதிக் கூட்டத்தில் இதுமாதிரி ஒரு ஆஸ்பத்திரி அவசியம் என்று வலியுறுத்தி சிபார்சு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? அதை மீண்டும் புனர்பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மருத்துவ பொதுநலத்துறை இயக்குநர் அவர்கள் அப்படிப்பட்ட வரைவுத்திட்டம் எதுவும் தன்னிடம் வந்து சேரவில்லை என்று குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் அப்படிப்பட்ட திட்டம் எதுவும் வந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை.

### *Government Hospital at Jayankondacholapuram*

*432 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) Whether the Government propose to upgrade the Government dispensary at Jayankondacholapuram into a full fledged taluk headquarters hospital; and

(b) if so, the estimated cost of construction of this new hospital?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) அரசு ஆணை எண். 2430, பொதுப்பணித்துறை நாள் 14-11-1968-ல் 40 படுக்கைகள் கொண்ட தாலுக்கா தலைமை மருத்துவமனை ஒன்றை ஜெயங்கொண்ட சோழபுரத்தில் சுமார் ரூ. 3.70 லட்சம் செலவில் கட்ட ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வேலை தற்சமயம் நடந்தேறி வருகிறது.

திரு. கே. விநாயகம்: இந்த வேலை எந்தத் தேதிக்குள் பூர்த்தியாகும்? எப்போது அதற்குத் திறப்பு விழா செய்வார்கள்? அதில் சிகிச்சைபெற வருகிற நோயாளிகள் எப்போது அனுமதிக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த ஆஸ்பத்திரி 40 படுக்கைகள் கொண்டதாக, இருபது படுக்கைகள் ஆண்களுக்கும், இருபது படுக்கைகள் பெண்களுக்கும் என்று கட்டப்பட்டிருக்கிறது.

இப்போது கட்டப்பட்டிருப்பது.

Men Ward : Work is in the basement level. Grill work for plinth area is being done.

Women Ward : Work is in the basement level. Grill work for plinth area is being done.

சமையல் அறை மற்ற கட்டடங்கள் எல்லாம் கூரைபோடும் அளவிற்கு வந்திருக்கிறது. விரைவில் திறக்கப்பட்டு அது பணிபுரிய ஆரம்பிக்கும்.

திரு. ஆர். நாகசுந்தரம்: திருச்சிராப்பள்ளி தலைமை ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி காரணமாக மிகவும் அவஸ்தைப்படுகிற காரணத்தினால் அதை விஸ்தரிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி போடவும்.

### *Smallpox research work.*

* 433 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to State the details of the World Healh Organisation Aid to Infectious Diseases Hospital for smallpox research work?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: உலகச் சுகாதார நிறுவனம் பெரிய அம்மை நோய் ஆராய்ச்சிக்காகத் தொற்றுநோய் மருத்துவமனைக்கு ரொக்கமாக அல்லது பொருளாக எந்த உதவியும் நேரடியாக அளிக்கவில்லை. ஆனால் அது தற்போது மருத்துவ ஆராய்ச்சி இந்தியக் கழகம், சென்னை மாநகராட்சி மன்றச் சுகாதார அதிகாரியின் பொறுப்பில் தொற்றுநோய் மருத்துவமனையில் நடத்தி வருகின்ற பெரிய அம்மை ஆராய்ச்சிப் பணிக்கு இந்திய அரசின் மூலமும், மருத்துவ ஆராய்ச்சி இந்திய மன்றம் மூலமும் ரொக்கமாகவும், கருவிகளாகவும், உதவி வழங்கி வந்துள்ளது.

தொற்றுநோய் மருத்துவ மனையிலுள்ள ஆய்வுக் கூடத்தின் தொற்று நச்சுத் தன்மை ஆய்வுப் பிரிவுக்குத் தேவையான கருவிகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ள உலகச் சுகாதார நிறுவனம் அமெரிக்காவிலிருந்து வந்த பேராசிரியர் கெம்பிக்கும், லிவர்பூலிருந்து வந்த பேராசிரியர் டௌனிக்கும் 1962-ம் ஆண்டில் நிதி உதவி அளித்தது. இந்த நிதி உதவி அந்தப் பிரிவில் பணியாளர்களை நியமிக்கவும் பெரிய அம்மை குறித்துப் பலகோணங்களில் ஆராய்ச்சி நடத்தவும் அளிக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி 1967-ம் ஆண்டு வரை தொடர்ந்து நடந்து வந்தது.

மருத்துவ ஆராய்ச்சி இந்தியக் கழகம் 1964-ம் ஆண்டில் இதற்கிடையில் ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை தொற்றுநோய் மருத்துவ மனையில் தொடங்கியது. மருத்துவமனையில் அப்பொழுதிருந்த கண்காணிப்பாளர் (தற்போது சென்னை





மாநகராட்சிச் சுகாதார அதிகாரியாகப் பணியாற்றுபவர்) பொறுப்பின்கீழ் மேற்படிக் கழகம் நியமித்த பணியாளர் குழுவினால் நடத்தப்படுவதற்காக இந்த ஆராய்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. பேராசிரியர்கள் கெம்பி, டௌனி இவர்களின் ஆராய்ச்சி முடிந்த பின்னர் உலகச் சுகாதார நிறுவனம் மருத்துவ ஆராய்ச்சி இந்தியக் கழகத்திற்குத் தங்களால் வழங்கப்பட்ட கருவிகள் அனைத்தையும் தொற்றுநோய் மருத்துவமனையில் செயல்பட்டு வரும் மருத்துவ ஆராய்ச்சி இந்தியக் கழகத்தின் ஆராய்ச்சிக் குழுவினரால் பயன்படுத்தப்படுவதற்காகக் கொடுத்துவிட்டது. மேலும் இந்த ஆராய்ச்சிக் கழகத்திற்கு உலகச் சுகாதார நிறுவனம் 1,800 டாலர் மானியமாகவும் வழங்கியது. 1968-69-ம் ஆண்டுகளில் பெரிய அம்மை நோய் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதற்காக உலகச் சுகாதார நிறுவனம் மருத்துவ ஆராய்ச்சி இந்திய கழகத்திற்கு முறையே 8,000 டாலர்கள், 5,000 டாலர்கள் வழங்கியது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பெரியம்மை நோயின் விளைவுகள் மிகக் கடுமையாக இருப்பதாலும் அதைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் பெரிதும் உணரப்படுவதாலும் உலகச் சுகாதார நிறுவனத்தின் உதவி நீங்கலாக தமிழக அரசு அதைத் தடுப்பதற்கும் அது மேலும் பரவாமல் இருப்பதற்காகவும் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தப் பெரியம்மை நோய் ஓரளவிற்கு இப்போது கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, அதை அறவே நீக்க பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சியின் மூலம் நல்ல பலன்கள், நல்ல முடிவுகளை அது தந்த காரணத்தினால் இந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடத்தப்படுவதற்கு உலகச் சுகாதார கழகம் மானியம் அளித்து வருகிறது. 1968-69-ல் அளித்தது மட்டுமல்லாமல் 1970-லும் 3,000 டாலர் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் இந்தப் பெரியம்மை நோயை அறவே அகற்ற வேண்டுமென்று திட்டமிடப்பட்டு வருகிறது. அதற்கு ஆங்காங்கே பணியாட்கள் நியமிக்கப்பட்டு ஓரளவுக்கு கட்டுப்பாட்டின்கீழ் அந்த நோய் இருந்து வருகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி: மதுரை தத்தநேரி தொற்றுநோய் மருத்துவ மனைக்கு கட்டடம் கட்டியும் அது பயன்படுத்தப்படாமல், அதேபோல் தோப்பூர் ஆஸ்டின்பட்டியில் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து கட்டப்பட்ட கட்டடமும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. தத்தநேரியில் ஈ.எஸ். ஐ. ஆஸ்பத்திரி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றிருந்ததும் செய்யப்படவில்லை. ஆகவே, நிலைமை என்ன என்பதுபற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. அதற்காக சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் இதுபற்றிய விவரங்கள் அறிந்து தரப்படும்.

திரு. கே. விநாயகம்: இந்தப் பெரியம்மை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அது இன்னும் பரவிக் கொண்டுதான் இருக்கிறது. அதைத் தடுப்பதற்காக முந்திய அரசாங்கம் வட சென்னையில் ஒரு இன்ஃபெக்ஷியஸ் டிஸீஸ் ஹாஸ்பிட்டல் போதாது சென்னை நகரத்திற்கு என்று தென் சென்னையில் கலைஞர் அவர்கள் தொகுதியில் அசோக் நகரில் ஒரு புதிய ஜெனரல் ஆஸ்பத்திரி கட்ட வேண்டுமென்று அதோடு இந்தத் தொத்து நோய்

ஆஸ்பத்திரியையும் வைக்கவேண்டுமென்று ஒரு யோசனை இருந்ததே, அது கைவிடப்பட்டு விட்டதா? அல்லது, இப்போது அவரது தொகுதியை முன்னுக்குக் கொண்டுவர அதைத்திரும்ப அமலுக்கு கொண்டுவருவார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** யாருடைய தொகுதி, எவருடைய தொகுதி என்பதுபற்றி பிரச்னை அல்ல. தென் சென்னையில் ஒரு பெரிய மருத்துவ மனை கட்டவேண்டுமென்று ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்கான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அதுபற்றி வரைவுத் திட்டம் வரவில்லை.

**திரு. ந. தருமலிங்கம் :** பெரியம்மை நோய் ஆராய்ச்சிக்காக உலக சுகாதார நிறுவனம் செய்துவருகிற உதவிகளை பெற்றுவரும் இந்த நேரத்திலும்கூட பெரியம்மை ஏற்படக் காரணம் மாரியாத்தாளின் கோபம்தான் என்று சிலர் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியானால், அந்த மாரியாத்தாள் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பதை விளக்கவேண்டுகிறேன்.

(பதில் இல்லை.)

### திருமணமான பெண் நர்சுகளுக்கு வீட்டு வாடகைப்படி

* 434 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அரசாங்க மருத்துவ மனையில் பணிபுரியும் திருமணமான பெண் நர்சுகளுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லையெனில், என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) திருமணமான பெண் நர்சுகள் தங்கள் கணவர், குழந்தைகளுடன் வசிப்பதற்காக நர்சு விடுதிகளை விட்டு வெளியில் தங்குவதற்கு ஆஸ்பத்திரியின் தலைமை அதிகாரியின் அனுமதிபெற்று வெளியில் தங்குகிறார்கள். அவ்வாறு தங்கள் சொந்த சௌகரியத்திற்காக குடும்பத்துடன் தங்குவதற்கு அனுமதி பெறும்பொழுது வீட்டு வாடகை அலவன்ஸ கேட்கக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில்தான் அவர்கள் வெளியில் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, இதுவரை அம்மாதிரி கொடுக்கவில்லையென்றாலும்கூட இனிமேலாவது அந்த விதியைத் தளர்த்தி, கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நர்ஸுகளெல்லாம் அவர்களுக்கு என்று கட்டித்தரும் விடுதிகளில் இருக்கவேண்டுமென்றுதான் நோக்கம். திருமணமானவர்களும்கூட அந்த விடுதிகளில் எல்லா வசதிகளுடனும் இருப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் திருமணமான பிறகு, தனியாகப் போக வேண்டுமென்று விரும்பினால், அவர்கள் சௌகரியத்திற்காகப் போகிறார்கள். அப்படிப் போகும்பொழுது வீட்டு வாடகை அலவன்ஸ் கேட்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் தான் அந்த அனுமதி வழங்கப்படுகிறது. அந்த நர்ஸுகள் அந்த விடுதிகளிலிருந்து பணியாற்றவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களுடைய சௌகரியத்திற்காக வெளியில் தங்கப்போகும்பொழுது அந்த நிபந்தனையின்





பேரில்தான் போகிறார்கள். திருமணமான நர்ஸுகளின் கணவருக்கு தனியாக வீடு என்றிருக்கும் என்றும், அந்த வீட்டில் இவர்கள் தங்கிக்கொள்ள வசதி கிடைக்கும் என்றும் அந்த நிபந்தனை விதிக்கப்படுகிறது.

**ஹாஜி ப. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவரவர்களே, கணவனுக்குச் சொந்த வீடு இல்லாத பெண்கள் அவ்வாறு வெளியே தங்கும்பொழுது அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் தர முயற்சிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, திருமணமானால் வெளியிலே போய்த் தங்கவேண்டும் என்று தெரிந்துதான், எதிர்பார்த்துத்தான் திருமணம் செய்துகொள்கிறார்கள். திருமணமான பிறகும் அந்த விடுதிகளில் தங்க எல்லா வசதிகளும் செய்து தரப்படும். வெளியே செல்ல வேண்டுமானால் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும். எனவே, அந்த நிபந்தனை விதிக்கப்படுகிறது. அது தொடர்ந்து இருந்து வருகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், நர்ஸுகள் தங்குவதற்கு விடுதிகள் இருக்கக்கூடிய இடங்களில் தங்க வேண்டும். இல்லையென்றால், வீட்டு வாடகை கிடையாது என்று நிபந்தனை. அப்படி விடுதிகள் இல்லாத இடத்திலே, வெளியிலே தங்கினால், அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுமா? கொடுக்கப்படுகிறதா? எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போடவும்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், பஞ்சாயத்து யூனியன்களில், சில டிரெயினிங் பெற்ற நர்சுகள் மிட் ஒய்ஃப்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வீட்டு வாடகைப்படியில்லாமல் இருக்கிறார்கள். அந்த மிட் ஒய்ஃப்களுக்கு ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றி என்ன விதிமுறை இருக்கிறது என்ற விவரக்குறிப்புகள் இல்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்லலாம்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவரவர்களே, திருமணமான ஆண் நர்சுகளுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படுகிறது. நர்சுகள் என்றால் ஸடாஃப் நர்சு, ஆண் நர்சுகளும், பெண் நர்சுகளும் இருக்கிறார்கள். அவர்களது சர்வீஸ் அத்தியாவசிய சர்வீசாக இருக்கும் என்றும், அவர்கள் அங்கே இருக்க வேண்டுமென்றும் கருதப்படுகிறது. எனவே, திருமணமான ஆண் நர்சுகளுக்குக் கொடுக்கும்பொழுது, திருமணமான பெண் நர்சுகளுக்கு வீட்டு வாடகைப்படி இல்லாமல் இருப்பதால் போடப்பட்ட அந்த நிபந்தனையைத் தளர்த்தி, பாகுபாடு இல்லாமல் செய்ய இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றி கோரிக்கைகளைத் தந்து, வருகின்றார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது அப்படிப்பட்ட நிபந்தனைதான் நிறைவேற்றப்படுகிறது.

## இடைநிலை ஆசிரியர்கள் மாநாடு

* 435 வினு—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1969 மார்ச் மாதம் கோவை மாவட்டத்தில் நடந்த இடைநிலை ஆசிரியர்கள் ( Secondary Grade Teachers ) மாநாட்டின் முடிவை ஒட்டி அரசுக்கு ஏதாவது கோரிக்கைகள் அனுப்பப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அரசு அதன்மேல் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே இந்த இடைநிலை ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்கூடிய இன்கிரிமெண்ட்டெல்லாம் முதலிலே அதிகமாகக் கொடுத்து, பின்னர் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பின்னுல் அந்த இன்கிரிமெண்ட் குறைகின்றது. இந்த 'டிஸ்பேரிட்டி'யைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது எந்த விதத்தில் எப்படி அமைந்திருக்கிறது என்று குறிப்புகள் இல்லை. ஆசிரியர் கோரிக்கைகளை இயக்குநர் அவர்கள், டி.இ.ஓ. மூலம் வாங்கிப் பார்த்ததில், பொதுவாக எல்லா ஆசிரியர்களும் கூறுவதுதான் சொல்லப்படுகிறது. குறைகளில் பெரும்பகுதி, நிதிநிலை அறிக்கையில் இருக்கின்ற வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவ வசதி செய்வது பற்றிக் கேட்டிருந்தார்கள். அவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அத்தகைய இன்க்ரிமெண்ட் பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் திரட்டித் தரப்படும்.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, இடைநிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலே ஜுனியர் கிரேட் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறுர்கள். அவர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளம் கொடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுதான், ஏற்கெனவே செகண்டரி கிரேடு படித்துவிட்டு, ஹையர் கிரேட் பதவிகளில் வேலை பார்ப்பவர்களுக்குப் படிப்படியாகக் கொண்டு வரும் நோக்கத்தில் இந்த ஆண்டு 3,000 ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறுர்கள். அதற்குப்பிறகு 4,000, 5,000 ஆசிரியர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். படிப்படியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

## *Arrests of College teachers*

* 429 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of persons on the teaching staff of a number of colleges in Madras City have been arrested during the later part of August 1969, and

(b) if so, the details thereof?



மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) ஆம். ஆசிரியர்கள் நால்வர் உட்பட அறுவர் கைது செய்யப்பட்டனர்.

(இ) மயிலை, விவேகானந்தா கல்லூரியில் 1969, ஏப்ரல் எம்.ஏ. பட்டத் தேர்வில் ஒழுங்கீனச் செயல் நடந்ததாக 6-8-1969-ல் சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர், காவல்துறைக்கு அறிவித்தார். புலனுய்விற்குப்பின் அறுவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் நால்வர், சென்னை மாநகரக் கல்லூரிகள் சிலவற்றில் ஆசிரியர்களாகப் பணியாற்றிவந்தனர்.

திரு. கே. விநாயகம் : சார், இந்தத் தேர்வுகளிலே, போராசிரியர்கள் இம் மாதிரி தவறு செய்வது இதுதான் முதல் முறையாக நமக்கும் தெரிகிறது. இப்படி இந்தத் துறையிலே இந்த ஒழுங்கீனங்கள் புகுந்துவிட்டால் கல்வித்தரம் குறைந்துவிடும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இம்மாதிரி இனி நிகழாமல் இருக்க அந்த ஆசிரியர்களைத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கும்பொழுது either for supervision or for setting of papers or for valuation of answer papers. இந்த மூன்று துறையிலேயும் ஒரு 'Panel of names அமைத்து கொஞ்சமும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருப்பவர்களையே தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இந்த வாய்ப்பைத்தர அரசாங்கம் முன் வந்நால் இந்தத் தவறுகள், தொல்லைகளெல்லாம் ஏற்படாமல் இருக்க ஏதுவாக இருக்குமே, இதை அரசு ஆராயுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தலைவரவர்களே, தக்கவர்களைத் தேர்ந் தெடுக்கவேண்டிய அந்த முயற்சியை யூனிவர்சிட்டி எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, அதுபற்றி அவர்கள் அக்கறை செலுத்துவார்கள் என்றே கருதுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, அறுவர் கைது செய்யப்பட்டதாகச் சற்றுமுன் சொன்ஞர்கள். அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டதா ? தொடரப்பட்டிருந்தால், கோர்ட்டின் தீர்ப்பு எப்படி யிருக்கிறது ? தீர்ப்பிற்குப் பின்னுலே என்ன தண்டனை கொடுக்கப்பட்டது ? அவர்கள் இப்பொழுது பணியில் இருக்கிறுர்களா, இல்லையா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : 5-2-1970-ல் அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டது. ஐ.பி.சி. 120-பி, 419, 468, 471, 506, 106 இப்பிரிவுகளின்கீழ் குற்றப்பத்திரிகை தயார் செய்து வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

## வட்டப் போலீஸ் அதிகாரிகளுக்கு ஜீப் விநியோகம்

* 430 வினு—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்திலுள்ள எல்லா வட்டப்போலீஸ் அதிகாரி (Circle Inspectors) களுக்கு ஜீப் கொடுக்கின்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இம்மாநிலத்தில் ஏற்கெனவே ஜீப் கொடுக்கப்பட்டிராத காவல்துறை வட்டத் தலைமையிடங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு காவலர்வண்டி ( Pickup Van ) படிப்படியாகக் கொடுக்கப்படுவதற்கான, காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலின் செயற்குறிப்பை 1965-ல் அரசு ஒப்புக் கொண்டது. இத் திட்டத்தின்படி முதலில் 25 வண்டிகள் கொடுக்கப்பட்டன.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவரவர்களே, வட்டத் தலைநகரங்களில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆபீஸ் இருப்பதால் அந்த வண்டிகளைக் கொடுத்தால், கிராமப்புறங்களில் நடக்கும் குற்றங்களைக் கண்டுபிடிக்க வசதியாக இருக்கும். எனவே, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அலுவலகத்திற்கு ஜீப் கொடுக்க இனி மேலாவது அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு இந்த வண்டி கொடுக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றிக் கேள்வி, அதற்குரிய பதிலைத் தான் சொன்னேன். 146 போலீஸ் வட்டங்களில் ஏறத்தாழ 50 போலீஸ் வட்டங்களுக்கு வாகன வசதியுள்ளது. பிற இடங்களைப்பற்றித்தான் இனி மேல் கவனிக்க வேண்டும்.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, ஜீப்புகள் கொடுக்க முடியவில்லை என்றாலும், மோட்டார் சைக்கிளாவது கொடுக்க முடியுமா? அதோடு மட்டுமல்ல, இந்த போலீஸ் வண்டிகளுக்கு இன்ஷூர் செய்வதில்லை என்று பரவலாகத் தகவல் இருக்கிறது. விபத்துக்கள் ஏற்பட்டால், அதிலிருந்து அடிபட்டவர்களை, காயம் பட்டவர்களை நிவாரணம் அளிக்க அரசாங்கம் ஏற்றுச் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலை இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஜீப்புகளுக்குப் பதிலாக ஸ்கூட்டரையோ, மோட்டார் சைக்கிளையோ கொடுப்பது என்பது இயலாதா காரியம். ஏனென்றால் அவர்களின் தேவையை அது நிச்சயமாகப் பூர்த்தி செய்யாது. இன்ஷூரன்ஸ் பற்றித் தனிக்கேள்வி போட்டால் விளக்கமாகச் சொல்லலாம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, உடனடியாக இந்த ஜீப்புகளை வழங்காத நிலையில், அவசரமாகச் சில கேஸ்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால், தனியாரிடம் அந்த ஜீப்புகளை வாங்கிக்கொண்டு போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதால், அவர்களுக்குச் சலுகைகள் ஏற்படக்கூடிய நிலை ஏற்படுகிறது. அதை அரசாங்கம் அறியுமா? ஆகையால் உடனடியாக மாநிலத்திலேயிருக்கும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் எல்லோருக்கும் ஜீப்புகளை அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்களே சொந்த வண்டி வைத்திருக்கிறார்கள். அந்த நேரங்களில் அந்த வண்டிக்கு உரிய கட்டணத்தை காவல் துறை ஏற்றுக்கொள்ளுகிறது. இல்லாவிட்டால் அவசர காலத்தில், அருகாமையிலுள்ள ஏ. ஆர். கேம்பிலுள்ள வண்டியை உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். இனமாக வண்டிகளைப் பெற்று, அதற்காக சலுகைகள் வழங்கப்படுவதாக இல்லை. அப்படித் தனிப்பட்ட புகார்கள் வந்தால் அரசு கவனிக்கும்.

திரு. டி. தங்கப்பன்: தலைவர் அவர்களே, இப்பொழுது இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கெல்லாம் ஜீப்கள் கொடுக்கப்படாத காரணத்தினால் வழக்குகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது மாதிரி கேட்கப்பட்டது. ஜீப்கள் இல்லாவிட்டால் வழக்குகள் கண்டுபிடிக்க முடியாதா? ஜீப்கள் இல்லாத இடங்களில் வழக்குகள் கண்டுபிடிக்கப்படுவது இல்லையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஜீப்களுக்கும் வழக்குகள் கண்டுபிடிப்பதற்கும் தொடர்பு இல்லை. சில வேலைகள் துரிதமாக நடைபெறவேண்டுமென்பதற்காக ஜீப்கள் தேவைப்படுகின்றன. நிதிநிலை அவ்வளவு சௌகரியமாக இல்லாத காரணத்தினால் ஜீப்கள் வாங்குவதில் தாமதம் ஏற்படுகிறதே அல்லாமல் வேறு அல்ல.



THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, may I request the Hon. Chief Minister to state whether the Government are aware of the fact that on account of the non-availability of these jeeps, to a greater extent in the C.I.D. Department the work which has to be turned out by these Inspectors are affected and if so, when the Government will give more jeeps to the Inspectors in the C.I.D. Department?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிதிநிலை சரியானதும் எல்லா இலாக்காக்களுக்கும் அவர்களுக்குத் தேவையான வண்டி வாகனங்களை அளிப்பதற்கு அரசு முன்வரும். நிதிநிலை சரியாக இல்லாததுதான் அதற்குக் காரணமே தவிர, வேறு இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி: ஐயா, இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற ஜீப்கள் மேல் மட்டத்தில் இருக்கிற டிஸ்டிரிக்ட் அதிகாரிகள், டிவிஷன் அதிகாரிகளோடு நின்றுவிடுகிறது. கீழ் மட்டத்தில் இருக்கிற சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு இதுவரையில் ஒரு வண்டி கூடப் போய்ச் சேரவில்லை. ஆகவே, பழைய வண்டிகள் இருந்தால்கூட, புதிய வண்டிகளைப் பெரிய அதிகாரிகள் எடுத்துக் கொண்டு, பழைய வண்டிகளை சர்கிள் இன்ஸ்பெக்டர் லெவலில் உள்ளவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மேல்மட்ட அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிற வண்டிகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். சர்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு வண்டிகள் கொடுக்கப்படுவது பற்றி ஏற்கனவே சொன்னேன். 146 சர்கிள் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள், 50 வண்டிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இவர்களுக்கு வண்டிகள் கொடுப்பதற்கு 100 ஜீப்களுக்கு மேல் வாங்கவேண்டியிருக்கிறது. அப்படி வாங்குவதற்கு ரூ. 25 லட்சம் தேவைப்படுகிறது. அதோடுகூட ஆண்டுதோறும் இந்த வண்டிகளுடைய பராமரிப்பு செலவுக்கு ரூ. 5 லட்சம் தேவைப்படுகிறது. இந்தக் காரணத்தினால்தான் இது தடைப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 436, 437, 438 என்னுள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Supply of steel.*

*439 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state: whether there is any shortage of supply of steel in this State this year?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இப்பொழுது ஸ்டீல் குறைவாக வருவதினால், ப்ரொடக்ஷன் மிகவும் குறைந்துபோகிறது. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிறது. அதனால் ஸ்டீல் அதிகமாக சென்டிரல் கவர்மெண்டிலிருந்து வரவழைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை உடனே எடுக்கப்படுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[1970 மார்ச் 18

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரும்பு பற்றாக்குறை காரணத்தினால், தமிழ் நாட்டைப் பொறுத்த அளவுக்கும், மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரைக்கும் தொழில் பாதிக்கப்பட்டிருப்பது உண்மை. நம்முடைய அரசின் தேவைக்குக்கூட போதுமான அளவுக்கு மத்திய அரசிடமிருந்து நமக்கு ஸ்டீல் பிராடக்ட்ஸ் கொடுக்க முடியவில்லை என்பதைப்பற்றி மாநில அரசின் சார்பிலே அமைச்சரே நேரிலும், அதிகாரிகள் நேரிலும் சென்று மத்திய அரசிடம் இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இன்று நாட்டில் இருக்கும் படியான உருக்கு ஆலைகள் பூராவும் தன்னுடைய கபாசிடிக்குத் தகுந்தமாதிரி உற்பத்தி செய்யவில்லை என்ற நிலை இருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதுபற்றி நம்முடைய அரசு மத்திய அரசோடு ஆலோசனை செய்ததா? சமீப காலத்தில் உருக்கு விலை உயர்ந்திருப்பதின் காரணமாக, சிறு தொழில்கள் நிலைமையிலும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றி, அதாவது உருக்கு விலை சம்பந்தமாக, நம்முடைய அரசு மத்திய ஆட்சியோடு ஆலோசனை நடத்தியதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விலை ஒரு பக்கம் ஏறினாலும், பொருள்கள் கிடைக்காததால் இப்பொழுது தொழில்கள் பெரிதும் பாதிக்கப்படுகிற தன்மையில் இருக்கின்றது. சில இடங்களில்மட்டும் இரும்பு ஆலைகளை அமைப்பதுதான் சில மாநிலங்களில் அந்த வேலைகள் தடைபடுவதற்குக் காரணம், அதனால் உற்பத்தி குறைந்து நாம் பாதிக்கப்படுகிறோம் என்ற கருத்தை மாநில அரசின் சார்பிலே மத்திய அரசு அமைச்சோடு வற்புறுத்தி வந்திருக்கிறோம். அதற்கு அவர்களுடைய பதில் சில இடங்களில் தொழில் ஆரம்பித்தால்தான் லாபகரமாக இருக்கும் என்று அவர்கள் சொல்லி வருகிறார்கள். நம்முடைய மாநிலத்தின் சார்பிலே பரவலாக பல மாநிலங்களிலும், குறிப்பாக தென் மாநிலங்களில் உருக்குத் தொழிற்சாலைகள் ஆரம்பித்தால்தான் இந்த பிரச்னை தீர்க்கப்படும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஸார், இன்றைக்கு இருக்கிற நிலையில் நமது மாநிலத்திற்கு ஒரு ஆண்டுக்கு எவ்வளவு ஸ்டீல் தேவைப்படுகிறது? அதில் எவ்வளவு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து கிடைத்துக்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தத் தேவையைப்பற்றி என்னிடம் தகவல் இல்லாவிட்டாலும், நமக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவிலே சொல்லப்பட்ட அளவுக்குக்கூட நமக்கு சப்ளை கிடைக்கவில்லை. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், 16,933 டன் நமக்குக் கொடுக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். நமக்கு வந்து சேர்ந்திருப்பது 4,346 டன் தான். மிகவும் அதிகமான அளவுக்கு அவர்கள் கொடுக்கலாம் என்று அவர்கள் ஆணை பிறப்பித்த பின்னலும்கூட, அந்த அளவுக்குக் கொடுக்க முடியாத சூழ்நிலை மத்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றியும் நேரில் சென்று சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, உருக்குப் பற்றாக்குறை இருப்பதினால் நமது தேவைக்கு 50 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் மத்திய அரசாங்கத்தினால் கொடுக்கப்படுகிறது. நாம் 1972-க்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி செய்து தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறோம். இந்த நிலையிலே மத்திய அரசு உருக்குக் கம்பிகளை நமக்குக் கொடுக்கமுடியாவிட்டால் நாம் அவைகளை வெளி நாடுகளிலிருந்தாவது இறக்குமதி செய்துகொள்ள மத்திய அரசை வற்புறுத்தி, அந்த உரிமையைப் பெற இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1970 மார்ச் 18]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரும்புக் கனிப் பொருள்கள் ஏராளமாக இந்த நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. நம்முடைய நாட்டில் இரும்புப் பொருள்கள் கிடைக்கவில்லை. இறக்குமதி, ஏற்றுமதிக் கொள்கை மத்திய அரசில் பொறுப்பில் இருப்பதால், இதுபற்றித் தெளிவான கொள்கையை வகுக்க வேண்டும் என்று நம்முடைய மாநில அரசின் சார்பிலே மத்திய அரசிடம் அண்மையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக கனம் அங்கத்தினர் சுட்டிக்காட்டியது போல நம்முடைய மின்சாரத் துறைக்கு வேண்டிய பொருள்களைக்கூட அவர்களால் தரமுடியவில்லை. அதுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்டபொழுது, மின்சாரத் துறைக்கு உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரையில் நாம் கேட்கக்கூடிய அளவில் பெரும் பகுதி கொடுக்கப்படவில்லை என்று அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். சமீபத்தில் அவர்கள் எழுதிய பதிலில், பிரையாரிடியில், டாப் பிரையாரிடி கொடுக்கச் சொல்லியிருக்கிறோம் என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால், இதுவரைக்கும் நாம் கேட்ட அளவுக்குக் கிடைக்கவில்லை. அதனால் மின்சார இலாகாவினுடைய வேலை தடைபடும் என்ற அச்சத்தையும் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

## *Iron and Steel Advisory Council.*

* 440 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government of Tamil Nadu and the trade representatives from this State have been represented on the reconstituted Standing Committee of the Iron and Steel Advisory Council set up by the Union Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : இந்த அட்வைசரிக் கமிட்டியில் நமக்கு ஏன் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை? இந்த பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு அரசாங்கம் வற்புறுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநிலத் தேவைகளை எடுத்துச் சொல்வதற்கு மாநில அரசின் சார்பில் அதில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை மத்திய அரசிடம் தெரிவித்தோம். அவர்கள் அதற்குத் தெரிவித்த பதில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் பிரதிநிதித்துவம் இடையாது, பொதுவாக இது சம்பந்தப்பட்டவர்களுக்கு இதில் பிரதிநிதித்துவம் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். மீண்டும் மாநில அரசுக்கும் இதில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறோம்.

Thiru K. VINAYAKAM : Sir, whereas our State does not produce any steel worth the name, whereas the demands of both the public sector and the private sector are increasing day by day, whereas the Government are incapable of giving an assessment of the total requirements of our State and whereas we are always at the mercy of the Central Government as far as the steel quota

is concerned, why not this Government press the Central Government to take in our representatives in the Steel Advisory Council especially when we are not producing steel?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம்முடைய மாநிலத்தினுடைய தேவையின் மொத்த அளவு எவ்வளவு என்று சொல்வதற்கு அரசாங்கத்தினால் முடியாது என்று சொன்னார்கள். 'இன்கேபபிள்' என்று சொன்னார்கள். அது சம்பந்தமாக கேள்வி கேட்டு பதில் தெரிந்து கொண்டதற்குப் பின்னால், அவர்கள் அப்படி சொல்லியிருந்தால் அவருடைய திறமையைப் போற்றியிருக்கலாம். கேள்வி கேட்பதற்கு முன்னால், அந்தத் தகவல் என்னிடம் இல்லை என்று சொன்னதற்குப் பின்னாலே 'இன்கேபபிள்' என்று சொல்வது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு பொருத்தமுடையதாக இருக்காது. நம்முடைய மாநிலத்தில் இரும்புப் பொருள்களின் தேவை அதிகமாக மிகுந்துவருகிறது என்ற கருத்தை அவர்கள் சொன்னதுபற்றிப் பாராட்டுகிறேன். அந்த அளவுக்கு நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது என்பதை அவர்கள் மறைமுகமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மாநில அரசின் சார்பிலே இந்தக் குழுவில் அங்கம் வகிக்கவேண்டும் என்று மத்திய அரசிடம் வற்புறுத்தவேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே நான் அப்படி வற்புறுத்திவருவதாகச் சொன்ன பதிலைக்கூட கேட்காமல் அவர்கள் கேள்வி கேட்டுவிட்டார்கள் என்று வருந்துகிறேன்.

### நாசரேத் கூட்டுறவு நூற்பாலையில் தீ விபத்து

*441 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாசரேத் கூட்டுறவு நூற்பு ஆலையில் 1969-ம் ஆண்டு, ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் தீ விபத்து ஏற்பட்டதா?

(இ) ஆம் எனின், விபத்தால் ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) விபத்தால் ஏற்பட்ட இழப்பு பின் வருமாறு:

பஞ்சு அழிவினால் இழப்பு சுமார் ரூ. 78,000.

கட்டடம், மற்றும் இதர அழிவினால் இழப்பு சுமார் ரூ 29,000.

முற்பகல் 9-30

**திரு. எஸ். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, இந்த தீ விபத்துக்குக் காரணம் என்ன? இந்த இழப்பு முழுவதற்கும் இன்ஷூரன்ஸ் கம்பெனியிலிருந்து நஷ்ட ஈடு வழங்கப்பட்டதா? இந்தமாதிரி இனி நடைபெறாமல் இருக்கச் சிறப்பு ஏற்பாடு என்ன செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** Electrical spark in the tube plate fitting— அதன் காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாகத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

The Director of Handlooms and Textiles has since reported that the Fire and General Insurance Society has sanctioned a sum of Rs. 86,065 towards the settlement of the claim preferred by the Tiruchendur Co-operative Spinning Mills.
நமக்கு அதிக நஷ்டம் எதுவும் இல்லை.





### *Cigarette factory for Hosur taluk.*

* 442 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a cigarette factory in Hosur taluk; and

(*b*) if so, when it will be started?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, since F.C.V. tobacco of superior quality is grown in Hosur taluk and experts have declared it fit for the manufacture of cigarettes and since cured tobacco is taken outside the State to places like Guntur and if a factory is started in this area it will attract more men towards the cultivation of tobacco, may I request the Hon. Minister to consider the desirability of starting a factory at Hosur?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஹோசூர் பகுதியில் கிடைக்கும் புகையிலையின் அளவு ஒரு தொழிற்சாலைக்குப் போதாது என்றாலும், நம்முடைய மாநிலத்தில் கிடைக்கும் நல்ல புகையிலையை நாமே தொழிற்சாலையில் பயன்படுத்த பரிசீலனையில் உள்ளது.

THIRU K. VINAYAKAM: Sir, whereas generally speaking consumption of tobacco is injurious to the health of the human being, whereas in America they print on cigarette packets that smoking is injurious to health, and in the interest of the health of the population, will this Government take steps with the concerned department of the Central Government to see that instructions are issued as to discourage consumption of tobacco in any form not only in the form of chewing and smoking?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தக் கேள்வியே நல்ல பிரசாரம்.

### *Nationalised bus routes*

* 443 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total number of bus routes of 75 miles and above opened in each district of our State, after the announcement of nationalisation of bus routes; and

(*b*) the number of bus route permits of routes of 75 miles and above granted to the private operators and the number of routes being operated and run by the Tamil Nadu Transport Department in each district?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) நாட்டுடைமைக் கொள்கை அறிவிக்கப்பட்ட பின்னர் அதாவது 17—6—1967-க்குப் பிறகு, 75 மைல் அல்லது

அதற்கு மேற்பட்ட தொலையுள்ள 15 புதிய பேருந்து வழித் தடங்கள் மாவட்டங்களில் தொடங்கப்பட்டன. அவை குறித்த விவரங்கள் :—

| | |
|---|---|
| சென்னை | 7 |
| தஞ்சாவூர் | 2 |
| மதுரை | 2 |
| திருச்சி | 1 |
| நீலகிரி | 1 |
| கோயம்புத்தூர் | 2 |
| மொத்தம் | 15 |

(இ) புதிதாகத் தொடங்கப்பட்ட 15 பேருந்து வழித்தடங்கள் அனைத்தும் தமிழ் நாடு அரசு போக்குவரத்து துறையினாலேயே நிர்வகிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

* 444 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள, புதுக்கோட்டைப் பகுதியில் எத்தனை உந்து வழித்தடங்களை அரசு தன் கைப்படுத்தியுள்ளது?

(இ) தனியார் துறையில் எத்தனை தடங்கள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) மூன்று வழித்தடங்கள்,

(இ) 41 வழித்தடங்கள்.

THIRU T. MARTIN : When nationalisation is being attempted it is said that temporary permits are being issued to private operators indiscriminately. May I know whether the Government will take a decision either to issue permits on a long-term basis or to stop the issue of temporary permits to bus operators ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொள்கையளவான கேள்விகள் போடக் கூடாது என்று இருக்கிறது. 'பாலிசி மாட்டர்ஸ்'-லே துணைக் கேள்விகள் போடக் கூடாது.

THIRU T. MARTIN : I will modify my question. When nationalisation is being attempted, temporary permits are being issued to private bus operators. Every day they come to the court challenging the issue of temporary permits by means of writ petitions. May I request the Hon. Minister to state whether there is any proposal pending with the Government to stop the issue of temporary permits to private bus operators ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கூட பாலிசி மாட்டர்தான். சரி.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தேசியமாக்கப்பட்ட வழித்தடங்களைப் பற்றி வந்தபோது, புதிதாக சட்டம் போட்டோம். அந்தச் சட்டத்தின்படி, போதிய அதிகாரம் அரசுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னும் அதிலேயும் டெம்பரரி பெர்மிட் கொடுப்பது தவறு இல்லையா என்பது



பரிசீலிக்கப்பட வேண்டிய கருத்து ஆகும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், புதிய சட்டத்தின்படி அதிகாரம் இருக்கிறது என்று வாதம் சொல்லியிருக்கிறோம். இந்திய தலைமை நீதிமன்றமும் இந்தச் சட்டம் செல்லும் என்று அறிவித்திருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்த பஸ் ரூட்டுகளை 75 மைலுக்குள் உள்ளவைகளைத் தவிர மற்றவைகளை முதலிலே எடுப்பது என்றும், பிறகு 50 மைலுக்கு மேல் உள்ளவற்றை எடுப்பது என்றும் சொன்னார்களே. எப்பொழுது அது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விகளும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. அ். லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, அரசுத்துறை வழித் தடங்களைத் தவிர, கூட்டுறவுத் துறையில் எக்ஸ்-சர்வீஸ்மென் பஸ் சொசைடி, அரிசன் பஸ் சொசைடி என்று ஆரம்பித்தால் அவற்றை ஊக்குவிக்க எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் துறையில் நடத்தும் பஸ்களுக்கு விதிவிலக்கு வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து, இப்பொழுது அது தேவையில்லை, தேசியமாக்குவது தான் சரி என்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், உடனடியாக எல்லா பஸ்களையும் சர்க்காரே எடுக்கக்கூடிய அளவில் இல்லை என்றாலும், எப்படி நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டியிருக்கிறதோ, அதே போல், ஒரு சர்வீசுக்கு 5, 10 பஸ் என்கிற அடிப்படையில் அதற்கு உச்சவரம்பு கட்ட சட்டம் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது கொள்கைபற்றிய கேள்வி.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், 15 வழித்தடங்களை அரசு ஏற்று நடத்துகிறது என்று கூறினார்கள். மாநிலத்தில் 75 மைலுக்கு மேல் இருக்கும் வழித்தடங்கள் 15 தானா? அதிகம் என்றால், அவற்றை தேசியமாக்க முன்வராததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, 17—6—1969-க்குப் பிறகு 75 மைல்களுக்கு மேற்பட்ட 15 பேருந்து வழித் தடங்கள், அந்த ரூட் பர்மிட் முடிவடையும் காலத்தில் என்கிற அடிப்படையில் 15 தடங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அரசுப் பேருந்துகளில் திருக்குறள்.

* 445 வினா—திரு. கே. போஜன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நம் மாநில போக்குவரத்துப் பேருந்துகளில் பொறித்து வைத்திருக்கும் குறளடிகளுக்குக் கீழே அதன் பொருளையும் சுருக்கமாக எழுதி வைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

**ஹாஜி ம. மு. பீர் முகம்மது :** பேரவைத்தலைவர் அவர்களே, நமது அரசு உடைமையான பேருந்துகளில் திருக்குறள் எழுதப்பட்டு, மக்கள் உணர்வைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் எல்லோரும் புலமை பெற்றவர்களாக இல்லை. ஆகவே, புலமையில்லாத பாமர மக்களும் குறள்களைப் புரிந்து கொள்ளும் வகையில், அதன் கருத்துரையையும் கீழே எழுதும் முயற்சி பயனுடைய ஒன்றாக இருக்கும் என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது பற்றிய விவரக் குறிப்பு இப்பொழுது இல்லை. எல்லோருமே மாண்புமிகு உறுப்பினரைப் போல் புலமை பெற்றவர்களாக இல்லை என்றாலும், குறள்களைப் படிப்பதால் பொருளைப் புரிந்து கொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

*Madurai Sourashtra Co-operative Bank*

*446 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Secretary of the Madurai Sourashtra Co-operative Bank was advanced loans in 1965 concurrently;

(b) if so, whether any action was taken against him;

(c) whether a number of appointments have been made violating the by-law regarding educational qualifications, etc., and

(d) if so, the action taken to regularise future appointments ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) ஆம்.

(எ) தகுதி பெறாதவர்களின் நியமனங்களை முறைப் படுத்த, அவர்களை கூட்டுறவு பயிற்சிப் பள்ளிக்கு அனுப்ப இந்த வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

Dr. H. V. HANDE : Arising out of the answer given by the Minister, it looks as though some appointments against the rules have been made and afterwards, to regularise the irregular appointments, the persons have been sent for Co-operative training. What action have the Government taken on those persons who made the appointments against the rules and then sent the unqualified persons for training, and is it a fact that a defaulter contested the election for Directors held on 16th June 1968 by the Madurai Sourashtra Co-operative Bank ?

The Hon. Thiru SI. PA. ADITANAR : Appointments are made not in contravention of the rules, but in contravention of the by-laws. Actually twelve of the employees have since acquired the necessary qualifications. There are only four still remaining unqualified. No further action is contemplated.

Dr. H. V. HANDE : Is the Hon. Minister aware of the fact that in the audit report for 1966 it had been stated that bogus vouchers had been prepared to cover the tiffin expenses for Board





of Directors of this Madurai Co-operative Bank. If so, what was the action taken by the Deputy Registrar to recover the same? Has the auditor also objected to T. A. Advances drawn after 1963 and if so, the total amount involved in this regard and whether the amount had been recovered in full?

The Hon. Thiru SI. PA. ADITANAR : I do not have the audit report with me. Therefore I am not able to answer straightway the question about Travelling Allowance. But the main question was whether any loans were given to the Secretary and my answer was " No, no loan was given " to him. Some amounts like Rs. 150, Rs. 400, Rs. 200 and Rs. 210 were given to him on suspense account and accounted for later.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1963-ல் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இப்பொழுது கேட்டால் எப்படிப் பதில் சொல்வது?

Thiru K. VINAYAKAM : On a point of Order, Sir, whenever we ask some question regarding one society, it is the duty of the Hon. Minister to get all the literature. He must have anticipated all the questions.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கேள்வி என்னவென்று கேளுங்கள். 1963-லே தவறாக டிராவலிங் அலவன்ஸ் வாங்கப்பட்டிருக்கிறது, 1965-லே மதுரையிலுள்ள சௌராஷ்டிரா பாங்க் பல கடன்களைத் திரும்ப வசூலிக்காமல் விடப்பட்டிருக்கிறது என்றெல்லாம் கேள்விகள் கேட்டால் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

*House brothel cases*

*447 Q.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the number of decoy witnesses engaged by the present Assistant Commissioner of Police Vigilance, Madras in house brothel cases booked by him under the Suppression of Immoral Traffic Act from the date of his assuming the present post till 1st December 1969; and

(b) the particulars of amounts entrusted with each decoy witness with case number given in courts?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) 34.

(இ) பேரவையின் முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Thiru T. MARTIN : May I request the Hon. Minister to state whether the present Assistant Commissioner of Police, (Vigilance) is working under the Commissioner of Police, Inspector-General of Police or Secretary in Fort St. George attached to Home Ministry? If so, may I know whether any instructions had been issued by any of these officers regarding the booking and conducting of cases under the Suppression of Immoral Traffic Act? If there are any particulars, I request the Hon. Minister to state those particulars.

---

* 332–338-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்த அசிஸ்டென்ட் கமிஷனர் ஆஃப் போலீஸ், கமிஷனருடைய ஆளுகைக்கு உட்பட்டு வேலைசெய்கிறார் என்று நம்புகிறேன். அவருக்குக் கீழே, இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ், சப்-இன்ஸ்பெக்டர், ஹெட் கான்ஸ்டேபிள்கள் 4 பேர், போலீசார் 4 பேர், மற்றும் இரண்டு பேர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சார்ஜ் எடுத்த தேதியிலிருந்து 33 கேஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றைக் கோர்ட்டில் போட்டதில் ஒரு கேஸில் நடவடிக்கை கைவிடப்பட்டது. மற்றும் இரண்டு புலன் விசாரணையில் இருக்கிறது. மற்றும் 14 கேஸ்களில் தீர்ப்புச் சொல்லியாகிவிட்டது. பாக்கி 16 கேஸ்கள் பெண்டிங்காக இருக்கின்றன.

**திரு. வ. ஜார்ஜ் :** தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலிலே 229-230, 234-235 வரையிலுள்ள கேஸ்கள் 1969-லே பிடித்த கேஸ்கள் இன்வெஸ்டிகேஷனிலே இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது, கேஸ்களைப் பிடித்த மூன்று மாதங்கள் ஆகியும் சார்ஜ் செய்யப்படவில்லை. சாதாரணமாக கிரிமினல் கேஸ்களில் இருந்தாலும் இரண்டு மாதத்திற்குள்ளாக சார்ஜ் பண்ண வேண்டுமென்று இருக்கிறது. ஏன் இந்த காலதாமதமாகிறது? மேலும் 194-197 வரையிலுள்ள கேஸ்கள் சார்ஜ் செய்யப்படாமல் தள்ளுபடி செய்யப் பட்டிருக்கிறதே, அதற்குக் காரணம் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** தலைவர் அவர்களே, போலீசார் சிரமப்பட்டு வழக்குகளை போடுகிறார்கள். பல வழக்குகள் நிரூபிக்கப்படவில்லையென்ற காரணத்தால் குற்றவாளிகள் மேலும் குற்றங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். ஆகவே, அந்தச் சட்டங்களைத் திருத்தியாவது குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் வழக்குகள் விசாரிக்கப்படும்போது ஆதாரமான சாட்சியங்கள் தேவை. சமுதாயத்திலே இருப்பவர்கள் தைரியமாக சாட்சியம் சொல்ல முன்வந்தால் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை கொடுக்க முடியும். தைரியமாக சாட்சி சொல்லும் சாட்சிகள் தேவைப்படுகிறார்கள்.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, இந்த அறிக்கையைப் பார்த்தால் இந்தக் குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே வருகிறதே தவிர குறையவில்லை. இதைத் தடுப்பதற்காக—இப்போது இருக்கிறவர்கள் திறமைசாலிகள் அல்ல என்று அர்த்தம் அல்ல—திறமைசாலிகளையோ—அல்லது இப்போது ஒரு ஏ.சி. இருக்கிறார், அவராலே எல்லாவற்றையும் கவனிக்க முடியவில்லை—இருவர், மூவரையோ அதிகமாகப் போட்டு இந்தக் குற்றத்தை ஒடுக்கி, ஒழித்துக்கட்டி சமுதாயத்தைச் சீர்திருத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, சமுதாயத்தைச் சீர்திருத்துவது என்றால், அது போலீசாரால் மட்டும் ஆகக்கூடிய காரியம் அல்ல. சமுதாயத்திலே அப்படிப்பட்ட எண்ணத்தைப் பரப்பியாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைத்தால் இதைச் சீர்திருத்திவிடலாம். (சிரிப்பு).



THIRU T. MARTIN : In the list placed before this House only in a few instances, an amount exceeding Rs. 200 has been entrusted with decoy witnesses and in other cases only a nominal lower sum had been entrusted with decoy witnesses. May I request the Hon. Minister to state whether Government would come forward to state whether all the high-class brothels are abolished in the City?

(No answer)

*State Labour Advisory Board*

* 448 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the State Labour Advisory Board met about 11th June 1969; and

(b) if so, the details of the recommendations made by it?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) ஆம். மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டம் 1969-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10, 24-ஆம் நாட்களில் நடைபெற்றது.

(இ) இவ்வாரியத்தில் பரிவுரை விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை* ஒன்று சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, தொழிலாளர்கள், பிராவிடென்ட் நிதியிலிருந்து கடன் வாங்கும் வசதியும் மற்ற நன்மைகளும் கிடைக்கும் வகையில், தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டங்கள் அமையுமாறு அட்வைசரி போர்டு கவனித்து, தொழிலாளர்களுக்குப் பயன்படும்படிச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட பரிசிலனைக் கூட்டத்தில்கூட அதுபற்றி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மாண்புமிகு உறுப்பினருக்குத் தனியாக ஏதேனும் கருத்து இருந்தால், அதை எழுதியனுப்பினால் அது பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

DR. H. V. HANDE : In the statement placed on the table, one of the important recommendations considered by the Board was the "Report of the Special Committee on cost of living index". Is it not a fact that the cost of living has been rising up very high during the last two months and because of that the report for February due normally to be released in the first week of March has not been released till now by the Directorate of Statistics? If so, may I know the reasons why the cost of living index for February has not been released till now?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இது தொழிலாளர் ஆலோசனை வாரியத்தைப்பற்றிய விவரம் அடங்கிய அறிக்கை. தொழிலாளர் ஆலோசனை வாரியத்தைப்பற்றி கேள்வி கேட்டதற்கு இந்த விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் காஸ்ட் ஆஃப் லிவ்விங் இன்டெக்ஸ் பற்றித் தனியாகக் கேள்விக் கேட்டால் பதில் அளிக்கப்படும்.

---

*358–352-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

[1970 மார்ச் 18

திரு. எம். பூபதி: ஆன் எ பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன் என்று இல்லை. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று இருந்தால் சொல்லுங்கள்.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, அங்கத்தினர்கள் எவ்வளவு நேரம் வரைக்கும் தங்கள் கையை உயர்த்திக்கொண்டேயிருந்தால் பேரவைத் தலைவரின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை).

### இந்திய அரசுக்கு திருப்பித்தரவேண்டிய கடன்கள்

*436 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய அரசுக்குச் சேர வேண்டிய நடப்பு ஆண்டு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குக் கால அளவினை மாற்ற மாநில அரசு கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கு இந்திய அரசு தந்துள்ள பதில் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசுக்குச் சேர வேண்டிய இம் மாநிலக் கடன் தவணைத் தொகைகளை மாற்றியமைக்கும்படி மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தியுள்ளது.

(இ) மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM: Sir, will the Hon. Minister be pleased to state for the benefit of this House, the exact amount which we owe to the Centre under various categories also, when the loan was taken and when the grant was made; also, what is the total amount of interest that we have to pay them, also what exactly is the appeal made by the State Government to the Centre in regard to this matter and what exactly is the reply they have received from the Centre?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எத்தனை கேள்வி போடுவது?

திரு. கே. விநயகம்: நாலே நான்கு கேள்விகள் தான்! (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் ஒரு பெரிய அறிக்கையே வைப்பதற்கான கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். சபாநாயகர் அனுமதித்தால் முழு விவரமும் சொல்லலாம். பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் 31—1—1969 முடிய 340 கோடி கடன் நாம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்னும் அது குட்டிபோட்டால் இந்த 31-ம் தேதி முடிய 344 கோடிக்கு வரலாம்.

இந்த ஆண்டிலே 37 கோடி ரூபாய் நாம் அவர்களுக்குத் திருப்பித் தரவேண்டியதாக இருக்கிறது. பெறுகிற தொகை 36 கோடி ரூபாய்தான். இதற்காகத்தான் நாம் நிதிக் கமிஷனிடத்திலும், நவம்பர் மாதத்தில் பிரதமர் வந்திருந்தபோது அவர்களிடத்திலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் நம்முடைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.



1970 மார்ச் 18]

திரு. அ. ஆறுமுகம்: இந்திய அரசிடம் இருந்து மாநில அரசு எந்த எந்த வகையில் கடன்களைப் பெற்றிருக்கிறது? இது வறட்சி, புயல் நிவாரணமாகப் பெற்ற கடனாக இருந்தால் அதை மத்திய அரசு தள்ளிவிட வேண்டும் என்று நமது மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: புயல், வெள்ளம், வறட்சியைப் பொறுத்தவரையில் ஒரு பகுதிதான் கிராண்டாகக் கொடுக்கப்படுகிறது, பாக்கி கடனாகவேதான் கொடுக்கப்படுகிறது. இப்போது வறட்சி நிவாரணப் பணிக்கு 14 கோடி கொடுத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஏறக்குறைய 4 கோடிதான் கிராண்டாகக் கொடுத்திருக்கிறார்கள். பாக்கி எல்லாம் கடனாகத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. கொள்கை அளவில் எல்லாவற்றையும் கடனாகவே கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: மத்திய அரசு கொடுத்த கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று மாநில அரசு கேட்பதுபோலவே, மாநில அரசு உள்ளாட்சிகளுக்குக் கொடுத்த கடன்களை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு. அனுமதிக்க முடியாது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: நம்மிடம் இருந்து வசூலிக்கிற வரிப் பணத்தை நமக்கே கடனாகத் தந்து, அதற்கு வட்டியும் பெற்று, திருப்பியும் கொடுக்கவேண்டுமென்று சொல்வது மார்வாரித்தனமாகாதா?

(சில உறுப்பினர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'மார்வாரித்தனம்' என்ற வார்த்தையை உபயோகிக்கக் கூடாது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: மாநிலங்களுக்குக் கடன் சுமை, அதிகரித்து வருகிறது என்று மற்ற மாநிலங்கள் எல்லாம் நிதிக்குழுவிடம் வற்புறுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா? தேசிய அபிவிருத்திக் கவுன்சில் நிதி வழங்குகிற முறையில் மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினருக்கு மற்ற மாநிலங்கள் வற்புறுத்தி வருவது தெரிகிறது. இந்த அரசும் தான் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. அதுவும் என்னுடைய பட்ஜெட் உரையிலேயே எல்லா மாநிலங்களுக்குமாக ஒரு டெட் கமிஷன் போடவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறேன். பத்திரிகைகள் எல்லாமும் இந்தக் கருத்தை ஆதரித்து வலியுறுத்தி எழுதியிருப்பதையும் கனம் உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

### தஞ்சாவூர் மாவட்டத்திற்கு விவசாய அபிவிருத்திக் கழகம்

*437 வினு—திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், விவசாய அபிவிருத்திக் கார்ப்பரேஷன் அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால், எத்தகைய ஆராய்ச்சிகள் நடத்தப்படும்? அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு (திருமதி) டாக்டர் சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) மாநிலங்களில் வேளாண்மை வளர்ச்சிக் கழகங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஒன்று இந்திய அரசின் கருத்தில் இருந்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இத்தகைய கழகம் ஒன்றை அமைக்குமாறு மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டது. ஆனால் இந்திய அரசு இத்திட்டத்தையே பின்னர் கைவிட்டு விட்டதால் இது செயல்படுத்தப்படவில்லை.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** இந்த வேளாண்மைக் கழகத்தின் நோக்கங்கள் என்ன? இதனால் விவசாயப் பெருமக்கள் என்ன நன்மை பெறுவார்கள் என்பதை விளக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆரம்பத்தில் உருவாக இருந்த விவசாய வளர்ச்சிக் கழகத்தின் நோக்கம் கிணறுகள் வெட்டுதல், நிலங்களைப் பண்படுத்தல், கருவிகளையும், தேவையான பொருள்களையும் வாங்கிக்கொள்வதற்குப் பயிரிடுகிறவர்களுக்கு நடுத்தரக்காலக் கடன் வழங்கல், மற்றும் வாணிப முறையில் உரங்கள், விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் முதலியவற்றை நிறுவனங்களின் கீழ் வழங்குதல்.

இதைத்தவிர துளைக் கிணறுகள் எடுக்க உதவுதல், விவசாயப்பொருள்களை விற்பனை செய்ய உதவுதல் போன்ற வேளாண்மை வளர்ச்சிப் பணிகளில் கவனம் செலுத்துதல். அமெரிக்க உதவியுடன் மாநிலங்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்தில் இத்தகைய வளர்ச்சிக் கழகங்களை ஏற்படுத்த மத்திய சர்க்காரின் செயற்குறிப்பு ஒன்று இருந்தது. அதை அவர்கள் இப்போது கைவிட்டு சிறு உழவர் திட்டம் என்று ஒன்றை ஏற்படுத்த முன்வந்துள்ளனர். அதைத் தென்னாற்காடு மாவட்டத்தில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் மத்திய அரசாங்கம் 2 மாவட்டங்களுக்கு சிறு உழவர் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று கூறியிருக்கிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** விவசாய அபிவிருத்திக் கார்ப்பரேஷனுடைய நோக்கங்களைப் பற்றிக் கூறினார்கள். இவற்றையே அரசாங்க இலாக்கா செய்து கொண்டிருக்கிறதே, தனியாக இப்படிப்பட்ட ஒரு கழகம் அமைத்துச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? மேலும் அப்படி ஒரு கார்ப்பரேஷன் அமைக்கப்படுகிறது என்கிறபோது தஞ்சை மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொள்வானேன் மாநிலம் முழுவதற்கும் அதை ஏன் விஸ்தரிக்கக் கூடாது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இது இந்திய அரசாங்கம் அமெரிக்காவிடம் இருந்து உதவி பெற்றுத் தருகிற ஒன்றாகும். நம் மாநிலத்திலேயே இப்படிப்பட்ட காரியங்கள் இலாக்கா மூலமாக நடைபெறுகின்றன என்றாலும் அமெரிக்கா கொடுக்கிற உதவிகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் இது அமைக்கப்படுகிறது. இந்திய சர்க்கார் மாநிலத்திற்கு ஒரு மாவட்டம் தான் என்றார்கள். அந்த அடிப்படையில் தஞ்சைமாவட்டம் எடுக்கப்பட்டது.

## *Supply of oil engines, etc. to agriculturists*

*438 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Agro-Industries Corporation has decided to supply the needy agriculturists with oil engines and pumpsets direct; and

(*b*) if so, from which date?





**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. விநாயகம் :** அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் தாங்களே நேரிடையாக விவசாயிகளுக்குப் பம்பு செட்டு முதலியவைகளைத் தருகிறோம், அனுமதி தாருங்கள் என்று கேட்டார்களா? அப்படிக் கேட்டிருந்தால் அனுமதி கொடுப்பதற்கு என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அரசாங்கத்தில் இருக்கிற அதிகாரிகளும் கூட அதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக நேரிடையாகத் தருவதில்லை. ப்ளாக் டெவலெப்மெண்ட் அதிகாரிகள் மூலம் தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெற்று என்ன என்ன கொடுக்கப்படவேண்டும், விலை என்ன என்பது எல்லாம் பெற்று திரும்ப விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். இதில் காலதாமதம் ஏற்படுகிறது, விரைவில் உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதற்காக நேரில் அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனே கொடுக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் பரிட்சார்த்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது நல்ல முறையில் செயல்படுகிறது என்றால் இதைப் பற்றி போர்ட் ஆப் டைரெக்டர்ஸ் ஒரு முடிவு எடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

அடுத்து விதி 41-ன் கீழ் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

### 2. கவன ஈர்ப்பு

(அ) தமிழ்நாட்டை சேர்ந்த சில இடங்களை ஆந்திர மாநிலத்தோடு சேர்க்க ஆந்திர மாநில அரசு கமிஷன் நியமிப்பதாகச் சொல்லப்படுவது குறித்து முற்பகல் 10-00

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** சட்டப்பேரவை விதி 41-ன்கீழ் ஆந்திர சட்டசபையில் தனது மாநில எல்லை ஓரங்களில் ஒட்டியுள்ள அண்டை மாநிலப் பிரதேசங்களைச் சேர்த்துக்கொள்ளுவதுபற்றி நடவடிக்கையெடுக்க ஒரு கமிஷனை நியமித்ததோடு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹோசூர், கிருஷ்ணகிரி, பொம்மனபள்ளி ஆகிய இடங்களில் தெலுங்கு பேசுபவர்கள் பெரும்பான்மை என்பதைச் சுட்டிக்காட்டி அவைகளை ஆந்திர மாநிலத்தோடு சேர்க்கவேண்டுமென்று உரிமையை நிலைநாட்டுகின்ற நோக்கில் நமது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கையைப்பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலச் சட்டப் பேரவையால்—அண்டை மாநிலப் பிரதேசங்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதற்காக—கமிஷன் எதுவும் நியமிக்கப்பட்டிருப்பதாக இந்த அரசுக்குத் தெரியவரவில்லை. 1959-ம் ஆண்டு ஆந்திர மாநிலம்—தமிழ்நாடு (எல்லை மாற்றச்) சட்டத்தினையொட்டி இம்மாநிலத்திற்கும், ஆந்திர

[திரு. மு. கருணாநிதி] [1970 மார்ச் 18

மாநிலத்திற்கும் இடையேயிருந்த எல்லைத் தகராறுகள் அனைத்தும் ஏற்கனவே தீர்க்கப்பட்டுவிட்டன. இம்மாநிலத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்கும் தற்போது எல்லைத் தகராறு ஏதுவும் இல்லை. இதுகுறித்து மற்ற மாநிலங்களிலிருந்தோ— இந்திய அரசிடமிருந்தோ அதிகாரப் பூர்வமாகக் கடிதம் வரப்பெற்றாலன்றி அதிகாரப் பூர்வமாக இவ்வரசு எந்தச் செய்தியையும் கருத்தில் எடுத்துக் கொள்ள இயலாது.

**திரு. ஏ. அ. சுப்பாராஜா :** தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே அந்த மாதிரி ஒரு கமிஷனை நியமித்து இருப்பதாகவும் அதுசம்பந்தமாக ஆந்திர முதலமைச்சர் அவர்களே அதைப் பரிசீலித்து என்ன செய்யவேண்டுமென்று உறுதி கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். அவர்கள் கேட்கக்கூடிய இடங்களின் எல்லையோரங்களில் பதட்ட நிலைமை இருப்பதை உத்தேசித்து ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களை அதற்கு முன்பு சம்பிரதாயமுறைப்படி ஏதாவது கேட்டு இருக்கிறார்களா? ஏதாவது அப்படி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** என்னுடைய முதல் விளக்கத்திலே நான் கொடுத்திருக்கிறேன். அது சம்பந்தமாக அதிகாரப் பூர்வமாகவோ சம்பிரதாயப் பூர்வமாகவோ மாநில அரசிடமிருந்தோ மத்திய அரசிடமிருந்தோ எந்தத் தகவலும் வரவில்லை.

## (ஆ) அம்மூர் புதிய பேரூராட்சிக்கு நிர்வாக அதிகாரி நியமிக்கப் படாததால் ஏற்பட்டுள்ள நிலைமைகுறித்து.

**திரு. எம். அப்துல் கபூர் சாகிப் :** தலைவர் அவர்களே, சமீபத்தில் ஆறு மாத காலமாகப் புதிய பேரூராட்சி மன்றங்களில் நிர்வாக அதிகாரியை நியமிக்காமல் இருப்பதுகுறித்தும், குறிப்பாக அம்மூர் (வாலாஜா வட்டம்) புதிய பேரூராட்சிக்கு நிர்வாக அதிகாரி நியமிக்காததால் சிப்பந்திகளுக்கு ஐந்து மாதச் சம்பளம் கிடைக்காமலும், பொதுச் சுகாதாரம் பாதித்திருப்பதும் குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** 1—10—1969-லிருந்து 43 கிராமப் பஞ்சாயத்துக்களை பேரூராட்சிகளாக மறுவகைப்படுத்தி அரசாணை எண் 1658 கி.வ.உ.ஆ. நாள் 3—2—1969-இல் ஆணை பிறப்பிக்கப்பெற்றது. இந்த 43 பேரூராட்சிகளில் திருச்சி மாவட்டத்திலுள்ள கோலக்குடி பேரூராட்சியைப் பொறுத்தமட்டில் ஆணை ரத்து செய்யப்பட்டது. ஆதலின் 1—10—1969-லிருந்து 42 பேரூராட்சிகள் இடம் பெறலாயின.

தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் (1958) பிரிவு 40-ன் கீழ், ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்க வேண்டுமென்பது விதியாகும். பேரூராட்சி அதிகாரிகளை நியமிப்பதற்கென வழங்கப்பெற்றுள்ள விசேஷ விதிகளின் 4 ஆம் பிரிவின்படி, பேரூராட்சிகளில் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டிய பொறுப்பு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களுடையதாகும். ஆதலில் இந்த 42 பேரூராட்சிகளிலும் நிர்வாக அதிகாரிகளை நியமிப்பது பற்றி மாவட்ட ஆட்சியாளர்கள் தக்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். கிராம வளர்ச்சி நெறியாளரிடம் கிடைக்கப்பெற்றிருக்கும் அறிக்கைகளிலிருந்து,



1970 மார்ச் 18] [திரு. மா. முத்துசாமி]

மேலே குறிக்கப் பெற்றிருக்கும் 42 பேரூராட்சிகளில் 28 பேரூராட்சிகளில் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்களென்றும், எஞ்சிய 14 பேரூராட்சிகளில் இன்னும் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பெறவில்லை என்றும் அறியப் படுகிறது. இந்த 14 பேரூராட்சிகளிலும் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப் படாததின் காரணம், நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட தகுதி வாய்ந்தவர் போதுமானவர்கள் இல்லாத குறையெனக்கருதப்படுகிறது.

கிராம வளர்ச்சி நெறியாளர், இந்த 14 பேரூராட்சிகளிலும் நிர்வாக அதிகாரிகளை உடனடியாக நியமிக்கவேண்டுமென மாவட்ட ஆட்சியாளர்களுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார். அவ்விதம் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட தகுதிவாய்ந்தவர்கள் இல்லையென்றாலும், அந்தந்த வட்டாரங்களிலுள்ள ஊராட்சி விரிவாக்க அதிகாரிகளை அந்த பேரூராட்சியின் நிர்வாகங்களை, ஒரு தகுதி வாய்ந்த நிர்வாக அதிகாரியை நியமிக்கும்வரை, கண்காணிக்கும்படி ஏற்பாடு செய்யும்படியாகவும் கட்டளை பிறப்பித்துள்ளார்.

அம்மூர் நகர பஞ்சாயத்தைப் பொறுத்தமட்டில், பேரூராட்சியாக மறுவகைப் படுத்தபெற்ற நாள் முதலே வாலாஜா வட்டத்தைச் சேர்ந்த ஊராட்சி விரிவாக்க அதிகாரியை அம்மூர் பேரூராட்சி நிர்வாகங்களையும் தெரிவிக்குமாறு வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளர் கட்டளை விதித்துள்ளதாக அறியலாயிற்று. மேலும், மூன்று நாட்களுக்கு முன்னதாகத்தான், இந்த அம்மூர் பேரூராட்சி திரு. சாமிநாதன் என்ற பெயர் கொண்ட ஒரு கிராம பணியாளரை நிர்வாக அதிகாரியாக நியமித்தாயிற்று என்று தெரிய வந்துள்ளது.

இநத மறுவகைப்படுத்தப்பெற்ற பேரூாட்சிகளிலுள்ள பணியாளர்களுக்கு ஊதியம் கிடைக்க பெறவில்லை என்பதாகவோ அல்லது அந்த பேரூராட்சிகளின் சுகாதார கண்காணிப்பு பாதிக்கப்பட்டுள்ளது என்பதாகவோ கருதுவதற்கு போதிய காரணங்களிலே அவ்வகையில் குற்றச்சாட்டுக்களொன்றும் கிடைக்கப் பெறவுமில்லை. நிர்வாக அதிகாரிகள் இல்லாத இடங்களிலும், அந்தந்த வட்டாரங்களிலிருந்து, அந்தந்த பேரூராட்சிகளின் நிர்வாகங்களை கண்காணிக்கும்படி நியமிக்க பெற்ற ஊராட்சி விரிவாக்க அதிகாரிகள் இந்த பொறுப்புகளையும் ஏற்று செயல் படுத்தியிருப்பார்களென கருதப்படுகிறது.

**திரு. எம். அப்துல் கபூர் சாகிப்:** தலைவர் அவர்களே, அம்மூர் பேரூராட்சியைப் பொறுத்தவரையில் இதற்குமுன் நடந்த நிர்வாகத்தில் உள்ள பூசலின் காரணமாக நிர்வாக அதிகாரிகள் பொறுப்பேற்றுக்கொள்ள மறுத்துவருகிறார்கள் என்பது உண்மையா? இதற்கு முன்னால் ஏற்பட்ட கையாடல்கள், ஊழல்களால் நிர்வாக அதிகாரிகள் அங்கேவர மறுக்கிறார்கள் என்பது எந்த அளவுக்கு உண்மை? அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது கிராம சேவக்குகளைப் போடுவதாகச் சொன்னார்கள். கிராம சேவக்குகளினால் எந்த எந்த அளவுக்கு நல்லமுறையிலே நிர்வாகத்தை நடத்த முடியும்? அதைவிட பஞ்சாயத்து கிளார்க்கைப் போட்டால் நிர்வாகம் நல்ல முறையிலே நடக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அந்த ஊராட்சியிலே ஊழல் இருப்பதால் யாரும் போக மறுக்கிறார்கள் என்பது பொருந்தாத வாதமாகும். அந்தக் காரணங்களால் அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை என்று

[திரு. மா. முத்துசாமி] [1970 மார்ச் 18

எண்ணத் தேவையில்லை. கிராம சேவக்குகளை நியமிப்பதன்மூலம் எப்படி வேலை நடக்கும் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே உள்ள விதிமுறைகளின்படி அவர்களையும் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கலாம் என்று இருக்கிற முறையில் தான் நிரப்பப்படுகிறார்களே தவிர இந்த அம்மூர் பேரூராட்சிக்கு மட்டும் புதிதாக நியமிக்கப்பட்டிருப்பது என்பது அல்ல. அவர்களும் அதற்கான பயிற்சி பெற்றிருப்பார்களானால் அந்த அடிப்படையிலே பல்வேறு தகுதி பெற்றிருக்கிறவர்களை நியமிக்கிறார்கள்.

### 3. 1970-71-ஆம் ஆண்டிற்கான நிதிக்கோரிக்கை மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### (அ) நிதிக்கோரிக்கை எண் 3. பொது விற்பனை வரிக்கும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம்

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதி கோரிக்கை எண் 3-பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும்-தீர்வைகளும் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,81,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

**திரு. ரா. கனகசபை:** தலைவர் அவர்களே, விற்பனை வரிகளை ஒழுங்குமுறை செய்து வருவாயைப் பெருக்கவேண்டுமென்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 3-பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,81,97,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, விற்பனைவரி வசூலிப்பதில், பலமுனை வரியை ஒரு முனை வரியாக ஆக்குவதினால் ஏற்படுகின்ற எளிய நிர்வாக முறையைக் குறித்து விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 3-பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,81,97,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: To discuss the constitutional impropriety of imposing a surcharge of 7-1/2 per cent on the Sales Tax payable by assessees whose turnover exceeds Rs. 5 lakhs per annum, I move the following cut motion:—

"That the allotment of Rs. 1,81,97,000 under Demand No. 3—General Sales Tax and other taxes and duties administration—be reduced by Rs. 100."



1970 மார்ச் 18]

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, விற்பனை வரியின்மீது 7½ சதவிகிதம் அளவில் மேல்வரி ( Surcharge ) விதித்திருப்பதுபற்றி விவாதிக்க :—

"நிதிக்கோரிக்கை எண் 3-பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,81,97,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன்:** தலைவர் அவர்களே, வெல்லம் தேங்காய்க்கு விதித்துள்ள வரியைக் குறைக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க:—

"நிதிக்கோரிக்கை எண் 3-பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,81,97,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எல்லாவற்றையும் சேர்த்து எடுத்துக் கொள்வதில் ஆட்சேபனையில்லை. நான்கு மானியங்கள் பற்றி விவாதிக்க இருக்கிறோம். தனித்தனியாக இல்லாமல் மொத்தமாக எடுத்துக்கொண்டால் எல்லாவற்றிற்கும் குறிப்பு எடுத்துக் கொண்டு சொல்லவேண்டியிருக்கும். ஆகவே தனித்தனியாக எடுத்துக் கொள்வது நல்லது. இரண்டை சீக்கிரமாக முடித்து விட்டு மற்றவைகளை பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ்க்கு ஒரு மணி நேரம் எடுத்துக் கொள்ளலாம். பாக்கியுள்ளதை பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 3 "பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம்"-ம், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வருகின்றன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே என் சொற்பொழிவை * புத்தக வடிவில் கொடுத்திருக்கிறேன். அதை உறுப்பினர்கள் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே அதன் மீது விவாதத்தைத் தொடங்கலாம்.

* **திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, எங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை முன்மொழிந்து ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த வணிக வரி, 'காமதேனு' என்றும் 'கற்பகத் தரு' என்றும் "தங்க முட்டை இடுகிற பொன் வாத்து" என்று பலராலும் வர்ணிக்கப்படுகிறது. 1939-ம் ஆண்டில் முதல் முதலாக தமிழகத்தில் மதுவிலக்கு அமல்செய்யப்பட்

* 353-363 பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

போது அதனால் ஏற்படுகிற வரி இழப்பை சரிக்கட்டுகிற வகையில் ½ சதவிகிதம் வணிக வரி என்று தமிழகத்தில் அப்போது கொண்டுவரப்பட்டது. பின்னால் 1948, 54, 56, 57, 64, 67 ஆகிய ஆண்டுகளில் அந்த வரிவிகிதம் திருத்தப்பட்டும் உயர்த்தப்பட்டும் கடந்த பத்தாண்டுகளில் மட்டும் விற்பனை வரி நான்கு மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும் போது நமக்குச் சற்றுக் கவலையாக இருக்கிறது. 1961-62-ல் 21 கோடி ரூபாயாக இருந்தது. வணிகவரி 1966-67-ல் 48.76 கோடியா உயர்ந்திருக்கிறது. 1969-70-ம் ஆண்டு பெப்ரவரி முடிய மட்டும் 72.02 கோடி என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. திருத்தமதிப்பீட்டில் கூட 66.62 கோடி ரூபாய் ஆகத்தான் மதிப்பீடு இருந்தது. அந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது. 1970-71-ல் வணிக வரி மட்டும் ரூ. 80 கோடிக்கு மேல் போனாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1966-67-ம் வருடத்தில் மட்டும் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களையும் எடுத்துக் கொண்டால் மொத்த வருவாய் ரூ. 1,265 கோடியாக இருந்திருக்கிறது. எல்லா மாநிலங்களிலும் சேர்த்து வணிக வரி மட்டும் ரூ. 408 கோடி என்ற அளவிற்கு வந்திருக்கிறது. ஆக மொத்த வருவாயில் 33.5 சதவிகிதம் வணிக வரியில் இருந்து மட்டும் கிடைத்திருக்கிறது.

பொதுவாக இந்த விற்பனை வரிச் சட்டங்கள், அதன் விதிமுறைகள் இவற்றை வர்த்தகர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவ்வளவு சிக்கலாக இருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. வணிக வரியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாநிலத்திலும் வெவ்வேறு சட்டங்கள் வெவ்வேறு விதிகள் காணப்படுகின்றன. இதனால் வெளி மாநில வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு மாநிலமும் விற்பனை வரி சம்பந்தமான சட்டங்களை இயற்றும்போது எல்லா மாநிலங்களோடும் கலந்து பேசி கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளும் ஒரு சூழ்நிலை உருவாவதன் மூலம் இந்த வணிக வரி சம்பந்தப்பட்ட பல சிக்கல்கள் நீங்கும் என்பது என் அபிப்பிராயம். குறைந்தபட்சம் எல்லா மாநிலங்களுக்கும் இடையே வரிவிதிப்பு, வரி விலக்கு, வரம்பு, கம்பவுண்டிங் செய்வது, வரி விதிப்பிற்கான பொருள்களை வகைப்படுத்தல் இந்த நான்கு அம்சங்களில் மட்டுமாவது கருத்து பரிமாறிக் கொண்டால் நன்றாகயிருக்கும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அந்த முறையில் எல்லா மாநிலங்களுக்கும் இடையேயும் ஒரு ஆலோசனையை நடத்துவதற்கு தமிழக அரசு முன்வந்து அதைத் துவக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விற்பனை வரிச் சட்டம் ரப்பர் போன்றதொரு சட்டம் என்று சொன்னால் மிகையாகாது. அரசாங்கத்திற்கு அதிகப்படியான வருவாய் வேண்டுமா, விற்பனை வரியை உயர்த்து, மற்ற வரிகளை புகுத்து என்ற நிலைதான் இருந்துவருகிறது. எனவே வருமானம் அதிகமாக வேண்டுமென்றால் விற்பனை வரியை உயர்த்துவது அல்லது ஏனைய வரி இனங்களை உயர்த்துவது என்றில்லாமல் புதுக் தொழில்களை ஆரம்பிப்பதில் நாட்டம் செலுத்தப்படுமானால் அரசுக்கு அதிக வருமானமும் வரும். வரிகளை ஏற்றவேண்டிய நிலையோ அல்லது புது வரிகளைக் கொண்டுவரவேண்டிய நிலையோ ஏற்படாது. விற்பனை வரி விகிதத்தை மேலும் மேலும் உயர்த்துவதினால் வணிகர்கள் வரியை ஏய்ப்பதற்கான ஒரு சூழ்நிலையைத் தான் நாம் உருவாக்குகிறோம். 1959-ம் ஆண்டு பொது





ஆதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்கள் தலைமையில் வணிக வரி சம்பந்தமான பிரசினையை ஆராய்வதற்காக ஒரு குழு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் 1959-ம் ஆண்டு தமிழ்நாட்டில் பொது விற்பனை வரிச் சட்டம் உருவாகியது. டாக்டர் லோகநாதன் அவர்கள் அந்தப் பரிந்துரையில் 2 சதவிகிதம் பலமுனை விற்பனை வரி என்பது மிக அதிகமாகும் என்றும், அதை 1 சதவிகிதம் ஆகக்குறைத்தால் வணிகமும் பெருகி, விற்பனையும் பெருகி வரி மூலம் அதிக வருமானமும், அரசாங்கம் எதிர்பார்க்கிற அளவிற்கு வருமானமும் கிடைக்கும் என்ற கருத்தை அங்கு வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். ஆகவேதான் ஒரு முனை வரி விதிக்கப்பட வேண்டும், அதை 2 சதவிகிதத்தில் இருந்து 1 சதவிகிதமாக குறைக்கவேண்டும் என்றும் உள்ள கருத்து அடிக்கடி வலியுறுத்தப்பட்டு வருகிறது. எனவே பல முனை வரி நீக்கப்பட்டு எல்லாப் பொருள்களையும் ஒரு முனை வரியின் கீழ் கொண்டு வருவது சாலச் சிறந்ததாகயிருக்கும். பலமுனை வரி விதிப்பின் மூலம் பொருள்கள் தயாரிக்கப்படுகிற இடத்திலிருந்து மொத்த வியாபாரிகள் வாங்கும் போது ஒரு தடவை வரி போடுவது. சில்லறை வியாபாரிகள் வாங்கும் போது ஒரு தடவை வரி போடுவது பின்னர் அதை மக்கள் வாங்கும் போது ஒரு தடவை வரி போடுவது என்ற முறையில் இப்படி மூன்று கட்டங்களில் வரி போடப்படுகிறது. இப்படி மூன்று முறை வரி விதிப்பதன் காரணமாக பொருள்களின் விலை உயர்ந்து விடுகிறது. அதனால் ஏழை எளிய, நடுத்தர மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள்.

1939-ல் கொண்டுவரப்பட்டது இந்தச் சட்டம், இப்போது 1970-ம் ஆண்டு. 31 ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே இந்தச் சட்டத்தை, வரிக் கொள்கையை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சர்க்கார் சென்ற அக்டோபர் மாதம் 18-ம் தேதி முதல் வெல்லத்திற்கும், சர்க்கரைக்கும் 5 சதவிகிதம் ஒருமுனை வரியை விதித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு நவம்பர் 4-ம் தேதியில் இருந்து தேங்காய்க்கு 5 சதவிகித ஒருமுனை வரி விதித்திருக்கிறார்கள். இது நடுத்தர மக்களையும், ஏழை மக்களையும்தான் பாதிக்கிறது என்று இந்த மன்றத்திலும் வெளியிலும் சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே இந்தப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரியை ரத்து செய்யவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பிண்ணாக்குக்கு பலமுனை விற்பனை வரி விதிக்கப்படுகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் பிண்ணாக்கு ஒரு உரமாகவும் கால்நடைகளுக்குள்ள தீவனமாகவும் பயன்பட்டு வருகிறது. ஏனைய ரசாயன உரங்கள் மீது ஒருமுனை வரி விதித்திருப்பதைப் போல் பிண்ணாக்கின் மீதும் ஒருமுனை வரி விதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்றுமுதல் தொகை ஓர் ஆண்டில் ஐந்து லட்சம் ரூபாய்க்குமேல் இருந்தால் மேல் வரி என்று 7½ சதவிகிதம் சர்ச்சார்ஜ் விதிக்கப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது விலைவாசிகள் உயர்வதற்கும், கடுமையான விளைவுகள் ஏற்படுவதற்கும் காரணமாக இருக்கும் என்று நான் அஞ்சுகிறேன். இது வியாபாரிகள் மீது விதிக்கப்படுகிற வரிதான், இதன் காரணமாக அவர்கள் விலைகளை உயர்த்த மாட்டார்கள் என்று அரசாங்கத் தரப்பில் இருந்து சொல்லப்படுகிறது. இந்த வரி உயர்வினால் ஏற்படும் நஷ்டத்தினை வியாபாரிகள் பொருள்களின் மீது விலையை உயர்த்தி ஈடுகட்டி

விடுவார்கள் என்றுதான் பொது மக்கள் நினைக்கிறார்கள். எப்படியிருந்தாலும் விலைவாசி உயரும், பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே இந்த மேல் வரி 7½ சதவிகிதம் என்று விதிக்கயிருப்பதை மறுபரிசிலனை செய்து ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மேல் வரியினால் கிடைக்க இருப்பது ரூ 1.1 கோடிதான் என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என் கணக்கின்படி 15 கோடி ரூபாய்க்கு மேல் அரசாங்கத்திற்கு இந்த வரி மூலம் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

வியாபாரிகளிடையே கள்ளச்சந்தை செய்கிறவர்கள், கறுப்புப் பணத்தைப் பதுக்குகிறவர்கள், கலப்படம் செய்கிறவர்கள், கொள்ளை லாபம் அடிக்கிறவர்கள் போன்றவர்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். நேர்மையான முறையில் நாணயமான முறையில் வணிகம் செய்து சமுதாயத்திற்கு பணி புரிய வேண்டும் என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் எல்லா வியாபாரிகளையும் சந்தேகக் கண்களோடுதான் பார்க்கிறார்கள். 1962-63-ல் மதுரையில் அரசாங்க அதிகாரிகளும் வணிகர்களும் ஒன்று சேர்ந்து பில் போட்டுத்தான் வியாபாரம் செய்யவேண்டும் என்ற ஒரு உடன்பாட்டிற்கு வந்து வியாபாரம் நடத்தி வந்தார்கள். அதனால் வரியாகக் கிடைத்தத் தொகை முன்பிருந்ததைவிட மூன்று, நான்கு மடங்கு அதிகமாக கிடைத்தும் கூட அரசாங்க அதிகாரிகள் அந்த வியாபாரிகள் மீது சந்தேகப்பட்டு உத்தேச வரி (Best of Judgment) மூலம் அதிகமாக உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் நேர்மையாக நடந்து கொண்டதற்குப் பரிசாக அவர்களுக்கு மேலும் வரி போடுவதனால் மிகவும் மனமுடைந்திருக்கிறார்கள். அவர்கள் மறைமுகமாகத் தவறான வழியில் போவதற்கு இது ஒத்தாசையாகத்தான் இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சிறு கடைக்காரர்களுக்கு அரசாங்க அதிகாரிகள் மிகவும் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சரியாக கணக்கு வைக்கவில்லை, ஸ்டாக் வைக்கவில்லை என்று துன்புறுத்துகிறார்கள். அரசாங்க அதிகாரியாக இருப்பவர்கள் பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் உதவ வேண்டும். சரியாக வைத்துக்கொள்ளாவிட்டால் சரியாக வைப்பதற்கு உதவ வேண்டும். அதேநேரத்தில் முறைதவறித் தவறு செய்பவர்கள் யாராகயிருந்தாலும், கொள்ளை லாபம் அடிப்பவர்கள் யாராகயிருந்தாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும். அந்த வரியை ஒழிக்க வேண்டும். இந்த மன்றத்தில், குதிரைப் பந்தயத்தின் மூலம் கிடைக்கும் வரியை, குஷ்டரோகியின் கைவெண்ணெயாகக் கருத வேண்டுமென்று முன்னரே வலியுறுத்தியுள்ளேன். எனவே, குதிரைப்பந்தயத்தை ஒழிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* திரு. எம். எஸ். மணி: பேரவைத் தலைவாவர்களே, பொது விற்பனை வரி சம்பந்தமான 3-வது எண் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்தினைக் கூற விரும்புகிறேன்.

இந்த விற்பனை வரியினால் எந்த வியாபாரியும் பாதிக்கப்படுவதாக எனக்குத் [illegible]வில்லை. விற்பனை வரி போடப்படுகிறது என்றால் அந்த விற்பனை [illegible] வியாபாரிகள் வசூல் செய்து கொடுக்கிறார்கள். வரி கொடுப்பவர்கள்



பொதுமக்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, விற்பனை வரி இன்றையதினம் தனிப்பட்ட வியாபாரிகளைப் பாதிப்பது இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, விற்பனை வரிபோடும் பொழுது தாங்கக் கூடியவர்களுக்குப் போடலாம், சினிமாவிற்கு எவ்வளவு போட்டாலும் கவலையில்லை, போய்ப் பார்ப்பவர்கள் கொடுத்து விடுவார்கள். ஆகவே, கேளிக்கை உள்ள இடங்களுக்கு எத்தனை சதவிகிதம் வேண்டுமானாலும் விதிப்பதை தடுக்கவில்லை.

ஆனால், இன்று, தினசரி நாம் உபயோகப்படுத்தும் தேங்காய் இருக்கிறதே, அதன்மீது போடப்பட்ட வரியை அமைச்சரவர்கள் பெருமனது செய்து நீக்குவார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், இந்தத் தேங்காயைக் கொண்டுதான் ஏழை எளியவர்கள் தொழில் நடத்துகிறார்கள், செக்கு ஆட்டுபவர்கள் தேங்காயைக் கொண்டுதான் தொழில் நடத்துகிறார்கள். தினசரி பெரிய அளவில் பொதுமக்களுக்கு பயன் படுவது தேங்காய். ஆகவே இந்த தேங்காய் மீதான வரியை உடனடியாக நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். இன்னும் சென்னையிலே ஹோட்டல்களிலே தேங்காய்ப் பிண்ணாக்கிலே சட்டினி செய்கிறார்கள். எனவே, பிண்ணாக்கு மாட்டுக்கு மட்டுமல்லாமல் மனிதர்களுக்கும் பயன்படும் நிலைமையைப் பார்க்க முடிகிறது. ஆகவே, அந்த வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழ்நாட்டிலேயுள்ள பெரிய தொழில் விவசாயம். அந்த விவசாயத்திற்காக பலர் பெரும், பெரும் டிராக்டர்களை வைத்திருக்கிறார்கள். விவசாயக் கருவிகள் வைத்திருக்கிறார்கள். அதற்கு வரி போடுவதைப் பற்றிக் கூட நான் கவலைப்படவில்லை. ஆனால் ஏழை எளியவர்கள் விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் உபயோகப்படுத்தும் மண்வெட்டி, கடப்பாரை போன்ற சாதாரண கருவிகளுக்கு இந்த விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த வரிகளை வசூல் செய்யும் நேரத்திலே அதிகாரிகள் மிகவும் மரியாதையாக இருக்கவேண்டும். அரசாங்கம் வசூல் செய்கிறது என்று சொன்னால், கொடுக்கக் கூடியவர்களிடம் வசூல் செய்யச் சொல்லுகிறதே தவிர, சாதாரண கடலை வியாபாரிகள், கடலைக் கூறுபோட்டு வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யக் கூடியவர்களிடம் வசூல் செய்யச் சொல்லவில்லை. சில அதிகாரிகள் தவறாகப் புரிந்து கொண்டு சில தவறுகளைச் செய்வதால் பொதுமக்கள் பீதி அடையும் அளவுக்கு நடந்து கொள்வதை நாம் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

இந்த நாட்டிற்கு பர்மா அகதிகளை, தமிழர்களை அழைத்தோம். வாருங்கள், உங்களுக்கு வாய்ப்பளிக்கிறோம், நிலம் கொடுக்கிறோம் என்று அழைத்தோம். மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் ஆதரவு காட்டுகிறது. அந்தப் பர்மா அகதிகள் இந்த நாட்டிற்கு வந்துவிட்டார்கள். ஆனால், மலேயா, சிலோனுக்குச் சென்றவர்கள் திரும்பி வரும்பொழுது 1200 ரூபாய் மதிப்புள்ள சாமான்களைக் கொண்டுவரலாம் என்றிருக்கிறது. அப்படிக் கொண்டு வருபவர்கள், அவர்களுக்குச் சுமை ஏற்பட்டால் சில சாமான்களை விற்று வருகிறார்கள். மலேயாவிலிருந்து தங்கப்பல் கட்டிக்கொண்டு வருகிறார்கள், கொஞ்சநாள் கழித்து வசதியில்லாவிட்டால் அந்தப் பல்லைக்கழற்றி விற்றுவிடுகிறார்கள். அதைப் பர்மா அகதிகள் வாங்கிவிடுகிறார்கள். அவர்களிடம் சென்று தங்கப்

பல்லுக்கு பில் எங்கே என்று கேட்டால் கொடுக்க முடியுமா? அப்படி வாங்கிய சாமான்களுக்கு பில் ஏதும் இருக்காது. அந்தப் பர்மா அகதிகளிடம் பில் இல்லை என்ற காரணத்தைக் காட்டி அவர்களுக்கு அதிக வரி போடுகிறார்கள்.

நான் சட்டமன்றத்தில் பர்மா அகதிகளுக்கு காம்பவுண்ட் டாக்ஸ் போடலாம் என்று சொன்னபொழுது, வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் சொன்னார்கள், நான் வரியையே எடுத்துவிடலாம் என்று சொன்னால் மணி அவர்கள் காம்பவுண்ட் டாக்ஸ் போடலாம் என்று சொல்கிறார்களே என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு திருச்சியிலே விற்பனை வரி அதிகாரிகளை சந்தித்து, அவர்களிடம் சொன்ன பிறகு, அமைச்சரவர்கள், சொல்லப்பட்ட காரணத்தை ஏற்றுக் கொண்டு தற்காலிகமாக விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அதை நிரந்தரமாக விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால் கடன் கொடுத்திருப்பது நமது சர்க்கார்; நம்மிடம் கடனை வாங்கி, சின்ன சின்னக் கடைகளை வைத்திருக்கிறார்கள். அந்த ஏழை எளிய மக்களுக்கு விற்பனை வரியில் விதிவிலக்கு அளிக்க வேண்டும். இல்லையென்றால் ஒரு காம்பவுண்ட் டாக்ஸ் என்று 25 ரூபாய் அளவில் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

திருச்சி மாவட்டத்தில் உள்ளவர்கள் மேட்டுப்பாளையத்தில் செயற்கைத் தளம் வாங்கி, அதிலே கற்களைத் தயார் செய்து விற்கிறார்கள். அதன்மூலம் வட நாட்டிலும், பம்பாய், ஆந்திரா, மைசூர் போன்ற பகுதிகளிலும் திருச்சியிலே உற்பத்தி செய்த செயற்கை கற்கள் அனுப்பப்படுகின்றன. தற்போது இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. வியாபாரிகள் சொல்லுகிறார்கள், ஒருமுனை வரி போடலாம் என்று. தொழிலாளர்களெல்லாம் சொல்லுகிறார்கள், ஒருமுனை வரி வேண்டாம் என்று. இரண்டையும் பார்த்து, எதைப் போட்டால் நலமாக இருக்கும் என்று கணக்குப் போட, ஒருகுழு அமைத்து அந்தத் தொழில் அதிகமாக நடக்கும் திருச்சிப் பகுதியிலே விசாரித்து நல்ல முடிவுக்கு வரவேண்டுமென்று அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தவிர, முக்கியமான ஒரு கருத்தை இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டும். அதற்கு நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் கொஞ்சம் அனுமதிக்கவேண்டும். தமிழகத்திலேயுள்ள கிராமங்களிலே தொழில் பெருக வேண்டும், கிராமங்களிலுள்ள தொழிலாளர்கள் முன்னுக்கு வரவேண்டுமென்று மகாத்மா காந்தியடிகள் நினைத்தார்கள். அதன் நினைவாக, இங்கிருந்து வரி வசூல் செய்து மத்திய சர்க்காருக்கு கொடுக்கிறோம். மத்திய சர்க்கார் காதி கமிஷனை நியமித்து, ஏழை எளிய மக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏராளமாக ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். அந்தக் காதி கமிஷன் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இலட்சக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து, ஏழை எளிய மக்களைக் காப்பாற்றுகிறார்கள். தமிழகத்திலே இரண்டு நிர்வாகத்துக்கு கொடுக்கிறார்கள். ஒன்று, காதி கிராமத்யோக்பவன் இரண்டாவது காதி கிராம கைத்தொழில் வாரியம். இந்தத் தொழில் வாரியம் அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடத்தப்படுகிறது. மாண்புமிகு திரு. முத்துசாமி அவர்கள் அந்த இலாகா தலைவராக இருக்கிறார்கள். அந்தத் தொழில் வாரியத்தின் மூலம் பல தொழில்கள் நடத்தப்படுகிறது. கதர், கிராம கைத்தறித் தொழில் கைவினைப் பொருள்கள் தயார் செய்து சென்னையிலே குறளகத்தில் விற்பனை செய்கிறோம்.



திருச்சி காதி எம்போரியத்தில் வைத்திருக்கிறோம். கையாலேயே நூற்ற கதர், சிறிய பானைகள், பொம்மைகள், கையினால் செய்த அத்தனை பொருள்களையும் வைத்திருக்கிறோம். அதற்கு ஏற்கெனவே விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ஆனால் இன்று, வியாபாரம் அதிகமாக அங்கே நடைபெறுகிறது, சந்தனக் கட்டையிலே கடவுள் உருவங்களை செய்து வைத்திருக்கிறார்கள், தலைவர்களின் உருவங்கள் செய்யப்படுகின்றன, என் வரி போடக்கூடாது என்று அதிகாரிகள் 68-69-இல் 36,000 ரூபாய் வரி போட்டிருக்கிறார்கள். நாங்கள் விதிவிலக்கு கேட்டிருக்கிறோம். இரண்டு மாதமாகியும் பதில் வரவில்லை. அவைகளை மூடச் சொன்னால் தயார். ஆனால் இப்படி வரிபோடுவதனால் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலேயும், சென்னையிலும் அவைகளை மூடிவிட்டால் பதினாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அடுத்தபடியாக, செக்கு, செக்கு எண்ணெய் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எண்ணெய் ஆட்டுபவர்களுக்கு விதிவிலக்கு இருக்கிறது ஆனால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நாங்கள் கடன் கொடுக்கிறோம். எண்ணெய் ஆட்டுபவர்கள் எள்ளையோ, கடலையையோ வாங்கினால் வரி கட்ட வேண்டியிருக்கிறது. தனியார் ஒருவர் செக்கு எண்ணெய் ஆட்டினால் வரிவிலக்கு இருக்கிறது. நாங்கள் ஒரு சொஸைட்டி மூலம் லட்சக்கணக்கான ரூபாய்களுக்குக் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. 4 மூட்டைகள்தான் கொள்முதல் செய்ய வேண்டுமென்றிருக்கிறது. கடலையோ, எள்ளோ ஒவ்வொரு மாதமும் கிடைக்காது. கிடைக்கும் நேரத்தில் இலட்சக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து, எள்ளோ, கடலையோ கொள்முதல் செய்துகொள்ள வேண்டும். ஆனால் சேல்ஸ்டாக்ஸ் அதிகாரி 4 மூட்டைகளுக்கு மேலே செய்யக்கூடாது என்று சொல்கிறார் தவறு இருந்தால் கண்டுபிடிக்கட்டும். அதற்காக, மொத்தமாகக் கொள்முதல் செய்யக்கூடாது என்றால் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் அத்தனையும் பாதிக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

* திரு. எம். அப்துல் கபூர் சாகிப்: பேரவைத் தலைவர் அவர்களே, பொது முற் பகல் 10-30
விற்பனை வரி மானியக் கோரிக்கையை ஆதரித்து எனக்கு முன்பு பேசிய நண்பர் திரு. எம். எஸ். மணி அவர்களுடைய ஒவ்வொரு பாயிண்டையும் நான் முழுமனதுடன் ஆதரித்து என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன். பொது விற்பனை வரி போட்டிருப்பது ஓரளவுக்கு தெளிவாக இருந்தபோதிலும் குறிப்பாக வியாபாரிகளுக்கு இதில் பல சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன. தோல் பதனிடும் தொழில் அதிபர்கள், வியாபாரிகள் பதனிட்ட தோலை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியைக் கொண்டு வருகிறார்கள் நம்முடைய நாட்டிற்கு, மிகவும் ஏழ்மையாக வாழ்ந்து வரும் அரிசன மக்கள் இந்தத் தொழிலில் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதில் இருக்கும் சில சிக்கல்களை இங்கே எடுத்துக் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன். தோல் வியாபாரத்திற்கு போட்டிருக்கும் வரியைப்பற்றி யாரிடம் போய் வியாக்கியானம் செய்தாலும், ஒரே மாதிரியான முடிவை யாராலும் சொல்ல முடியவில்லை. இது தான் சட்டம், இது தான் விதி,

இப்படித் தான் நடக்கவேண்டும் என்று சொல்ல முடியாத அளவுக்கு அது இருந்துகொண்டிருக்கிறது. அதனுகை தோல் வியாபாரிகள் இங்கே முடிவு காண முடியாமல், நீதி மன்றங்களுக்குப் போய் அங்கே வாதாடி சில தீர்ப்புகளை பெற்றுவருகிறார்கள். அப்படி தீர்ப்புகள் இருந்தும், அதற்கு நேர்மாறாக இப்போதைய அதிகாரிகள் நடந்துகொண்டு, அஸெஸ்மெண்டு செய்துகொண்டு வருவது மிகவும் வருத்தம் தரக்கூடியதாக இருக்கிறது.

உள் மாகாணத்தில் பச்சைத் தோல் கொள்முதலின் பேரில் டாக்ஸ் போடு கிறார்கள். விற்பனையின் பேரில் வரி போடவேண்டும் என்று கோர்ட்டு தீர்ப் பளித்திருக்கிறது. அப்படியிருந்தும்கூட, உள் மாகாணத்தில் கொள்முதல் செய்யக்கூடிய சரக்குகளுக்கு கொள்முதலின் பேரில் டாக்ஸ் விதித்து, உடனே டாக்ஸை வசூல் செய்வதற்கு கடுமையாக நடவடிக்கை எடுக்கிறார்கள். இதுபற்றி அமைச்சரிடம் மகஜர் கொடுத்திருக்கிறோம். அதற்கு என்ன பதில் வருகிறது என்று பார்த்துக் கொண்டு பணம் கட்டுகிறோம் என்று சொன்னாலும், அதிகாரிகள் தொந்தரவுபடுத்தி வருகிறார்கள். சிக்கல் என்ன வென்று கேட்டால், இப்பொழுது வெளி மாகாணத்திலிருந்து ஒரு டானெர் பச்சைத் தோலைக் கொண்டு திரேஸ் செய்து வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்தால் எந்தவிதமான டாக்ஸும் விதிக்கப்படுவதில்லை. விதி அது மாதிரி இருக்கிறது. உள் மகாணத்தில் கொள்முதல் செய்து, தோல் பதனிட்டு அதை ஏற்றுமதி செய்கிற நேரத்தில் பர்சேஸ் பேரில் டாக்ஸ் போடுகிறார்கள். ஆனால் கோர்ட் தீர்ப்பின் பிரகாரம் விற்பனையின் பேரில் டாக்ஸ் போட வேணும். மாகாணத்தில் விற்றாலும் சரி, வெளி மாகாணத்தில் விற்றாலும் சரி, ஒருமுனை டாக்ஸ் இருக்கிறது, ஏற்றுமதி செய்யக்கூடிய சரக்குகளுக்கு டாக்ஸிலிருந்து விதிவிலக்கு இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து, எந்த விதத்தில் வியாபாரிகளுக்கு அதில் சிக்கல் இல்லாமல் இருக்க முடியுமோ அந்த விதத்தில், அதை உடனடியாக கூர்ந்து கவனித்து, சிக்கலை தெளிவு படுத்தவேண்டும். தோல் அழுகும் பொருள். அப்படி இல்லை என்று ஒரு முடிவு இருந்தாலும் உள்ளபடியே வியாபாரம் செய்பவர்கள் மிகவும் நஷ்டம் அடைகிறார்கள். மேலும் கொள்முதல் பேரில் டாக்ஸ் போட்டால், அதை வியாபாரிகள் கொடுத்து விட்டு நஷ்டத்தை மேற்கொள்ளக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. கொள்முதல் வரி மொத்தத்தில் பார்க்கும்பொழுது 15 சத விகிதத்திலிருந்து 20 சதவிகிதம் தான் விரி போடப்படுகிறது என்று சொல்லப் படுகிறது. அதற்கு விதிவிலக்கு தருமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, இநதப் பொது விற்பனை வரி மானியத்தின்மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்பு கிறேன். ஏற்கனவே நண்பர் சித்தன் அவர்கள் கூறியது போல் விற்பனை வரி ஆரம்பத்தில் ½ சதவிகிதத்தில் ஆரம்பித்து இன்றைக்கு 15 சதவிகித அளவுக்கு வந்திருக்கிறது. காரணம், அது ஒரு காமதேனு, விற்பனை வரி போட்டால் வியாபாரிகள் வாங்கி உபயோகிப்பவர்களிடமிருந்து வசூலித்துத் தந்துவிடுவார்கள் என்ற நிலைமை தான். அதனுல் தான் விற்பனை வரி படிப் படியாக உயர்ந்து உச்ச நிலைக்கு இப்பொழுது வந்திருக்கிறது. விற்பனை வரியால் உண்மையாகவே பாதிக்கப்படுபவர்கள் யார் என்றால், பண்டங்களை வாங்குகிற பொது மக்கள் தான். வியாபாரிகள் பாதிக்கப்படுவதில்லை.





காரணம் அவர்கள் விற்பனை செய்யும் பொருள்களின்மீது வரியைப் போட்டு, மக்களிடமிருந்து வசூல் செய்துவிடுகிறார்கள். வியாபாரிகள் சர்க்காருக்கு சம்பளம் இல்லாத ஏஜெண்டுகள் போல் இருந்து மக்களிடமிருந்து வரியை வசூலித்துக் கொடுக்கிறார்கள். அதே சமயத்தில் பொது மக்கள் இந்த வரியைத் தாங்கமுடியுமா என்பதை சர்க்கார் கவனிக்க வேண்டும். இப்பொழுது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே தாங்கக்கூடிய பெரிய பணக்காரர்களின்மீது தான் விற்பனை வரி போடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மோட்டார் வண்டிகள், டைப்ரைட்டர்கள், கை கடிகாரங்கள், ரேடியோக்கள், கிராமபோன்கள் ஆகிய பொருள்கள் சாதாரண மக்கள் உபயோகிக்கக்கூடிய பொருள்கள் தான். மோட்டார் கார் கூட ஒரு ஆடம்பரப் பொருள் அல்ல; காரணம் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் அநேக டிரைவர்கள் அவர்களே மோட்டார் வாகனங்களை வாங்கி, அவர்களுடைய வாழ்வின் முன்னேற்றத்திற்கு, அவர்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு டாக்ஸியாக ஓட்டிவருகிறார்கள். அவர்களைக்கூட இது பாதிக்கும். சாதாரணமாக கைக் கடிகாரம், டைப் ரைட்டர்கள், டிரான்சிஸ்டர் ரேடியோக்கள் எல்லாம் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் தான், அத்தியாவசியமான பொருள்கள் தான். ஆடம்பரப் பொருள்கள் என்று சொல்ல முடியாது. இவைகளெல்லாம் ஆடம்பரப் பொருள்கள் என்று நாம் கருதக்கூடாது. ஆகவே, இந்த வரிகளெல்லாம் பொது மக்களை பெரிதும் பாதிக்கும். அமைச்சரவை இதை யெல்லாம் கவனித்து, இந்தப் பொருள்களின் மீதுள்ள வரியைக் குறைக்கும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிமெண்டின் பேரில் 6 சத விகிதமாக இருந்த வரி 8 சத விகிதத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. சிமெண்டு பணக்காரர்கள் மட்டும் உபயோகிக்கும் பொருள் அல்ல. அது சிறிய வீடுகள் கட்டுவதற்கும், பெரிய மாளிகைகள் கட்டுவதற்கும், எல்லாவற்றிற்கும் உபயோகமாக இருக்கிறது. அதுவும் பொதுமக்களுக்கு அத்தியாவசியமான பொருளாகத்தான் இருக்கிறது. ஆகவே, சிமெண்டின் மீதுள்ள வரியையும் குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரப் பொருள்கள்மீதும் விற்பனை வரி 7 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. நாம் எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி செய்து கொடுக்கவேண்டும், குறிப்பாக அரிசன காலனியிலுள்ள எல்லா மக்களுக்கும் மின்வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று முற்பட்டி ருக்கிறோம். அப்படிப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு வீட்டிற்கும் மின்வசதி ஏற்படவேண்டும். இப்படி வரியை உயர்த்தினுல் அவர்கள் வீடுகளில் மின் வசதி இல்லாமல் தான் இருக்கவேண்டி வரும். உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், ஒரு டஜன் பல்புகளின் உற்பத்தி விலை ரூ. 15.73. அதன்மீது விதிக்கப்பட்டுள்ள எக்சைஸ் ட்யூடி ரூ. 1.73 அதோடுகூட இண்டர் ஸ்டேட் ஸேல்ஸ் டாக்ஸ் சென்டிரல் கவர்ன்மெண்டு விதிக்கும்படியான 3 சதவிகித ஸேல்ஸ் டாக்ஸைக் கூட்டினுல் ரூ. 18 ஆகும். இப்பொழுது நாம் விதித்திருக்கும் 9 சதவிகிதம் வரியையும் சேர்த்தால் சுமார் ரூ. 20-க்கு மேலே போகும். அப்படி நாம் கணக்குப் பார்த்தால் 100-க்கு 25 என்ற அளவில் வரியாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இது சாதாரணமாக பொது மக்களை மிகவும் பாதிக்கும். இதை அரசாங்கம் அத்தியாவசியமாக தேவைப் பொருள்,

அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருள் என்று கருதி, மின்சாரப் பொருள்கள் மீதுள்ள வரியைக் குறைப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது வியாபாரிகளுக்கு ரூ. 5 லட்சத்திற்கு மேற்பட்டு டர்னோவர் இருந்தால், அவர்களுக்கு சர்சார்ஜ் விதிக்க முன்வந்திருக்கிறோம். ஏற்கனவே வியாபாரிகள் அரசாங்கத்தின் சம்பளம் இல்லாத டில் கலெக்டர்களாக இருந்து கொண்டு, வரியை வசூலித்துக்கொடுக்கிறார்கள். இப்பொழுது மேலும் 7½ சதவிகிதம் சர்சார்ஜ் விதித்தால், பொது ஜனங்களிடமிருந்து அதை அவர்கள் வசூலிக்க முடியாது. அது அவர்களுக்கு இன்கம்டாக்ஸ் போன்று, வருமானவரி போல் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் வியாபாரிகள் அதை தங்கள் கையிலிருந்து கட்டமாட்டார்கள். ஏற்கனவே உள்ள சாமான் களின் விலையில் அந்த அளவுக்கு விலையைக் கட்டி, அதைப் பொது மக்களிட மிருந்து வசூலிக்க முற்படுவார்கள். அவர்கள் கையிலிருந்து கொடுக்க மாட்டார்கள். இதனால் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்கள் தான். இதை அரசாங்கம் கவனித்து இந்த சர்சார்ஜ் வரியை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (மணி அடிக்கப்பட்டது).

*திரு. எம். பூபதி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியைப் பொறுத்த மட்டில் 1939-ம் ஆண்டில் வந்தபோது அரை சதவிகித மாக இருந்தது; படிப்படியாக உயர்ந்து, பல கட்டங்களைத் தாண்டி சுமார் 20, 30, 40 மடங்குக்கு மேல் உயர்ந்துவிட்டது. அரை சதவிகிதத்திலிருந்து இது எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். இது குறிப்பாக யாரை அதிகமாகப் பாதிக்கிறது என்பதையும் பரிசீலிக்க வேண்டும். சாதாரணமாக பொதுமக்களைத் தான் இது அதிகம் பாதிக்கிறது. இன்றைக்கு வியாபாரிகள் இதை வசூல் செய்பவர்களாக இருந்து மக்களி டத்திலிருந்து அதிகமாக வசூல் பண்ணும் நிலை இருக்கிறது. நாம் உண்ணுகிற உணவுப் பொருட்களுக்கெல்லாம் விற்பனைவரி இருக்க வேண்டுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். உதாரணமாக, வெல்லம், தேங்காய் போன்ற பொருட் களுக்கு அரசு வரியை ரத்து செய்யவேண்டும். ஏனைய மாநிலங்களில் எல்லாம் வரி போட்டாலும்கூட, அவர்கள் போட்டு இருக்கிறார்களே என்று நாம் போட வேண்டிய அவசியம் இல்லை.

சாதாரணமாக ஏழை மக்கள் உபயோகிக்கும் பொருட்கள் பற்றிய விஷயத்தை அனுதாபத்துடன் பரிசீலிக்க வேண்டும். அதே சமயத்தில், நடுத்தர மக்கள் உபயோகிக்கிற 100 ரூபாய் விலைக்குட்பட்ட ரிஸ்ட் வாட்ச், ரேடியோ முதலியவைகளுக்கு அதிகமான விற்பனை வரி போடாமல் அதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலேயும் பரிதாபத்துக்குரியவைகள் கால்நடைகள் தான். அவைகளின் உணவான பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு, பொட்டு போன்றவைகளுக் கெல்லாம் விற்பனை வரியை ரத்து செய்துவிட வேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில், இன்றையதினம் சாதாரண பெட்டிக் கடைக்காரர்கள், சில்லரை வியாபாரிகள் இவர்கள் வாழவேண்டுமென்றால், குறைந்த பட்சம் [illegible] ரூபாய் 100 அல்லது சம்பாதிக்க வேண்டும். அப்படிப் பார்த்தால்,



ஒரு நாளைக்கு 70 அல்லது 80 ரூபாய்க்கு விற்பனை நடக்க வேண்டும். அப்படிக் கணக்கிட்டால், அவர்கள் ஒரு வருஷத்தில் சுமார் 25 அல்லது 30 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்தால் தான் வாழ முடியும். பல ஆண்டு களுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட முறையை மாற்றி, கருணையோடு பரிசீலனை செய்து, 25 அல்லது 30 ஆயிரம் ரூபாய் வரை வருஷத்துக்கு வியாபாரம் செய்கிறவர்கள் எல்லோருக்குமே வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். 30 ஆயிரத்துக்கு மேல் வியாபாரம் இருக்கிறவர்களுக்கு மட்டும் வரி விதித்தால் போதும். அரசுக்கு வருவாய் வேண்டும். அதிலே எந்தவித தடையும் சொல்லவில்லை. அந்த வருவாயை யாரிடத்திலிருந்து அதிகமாக வசூல் செய்யவேண்டும் என்பதைத் தான் அரசு பரிசீலனை செய்து நல்ல முடிவுக்கு வரவேண்டும். அதே சமயத்தில் சில குறிப்பிட்ட சாதனங்களுக்கு வெளி மாநிலத்தில் வரி குறைவாக இருக்கிறபோது நம் மாநிலத்தில் அதிக மாக வரி விதித்தால், அதை வாங்க வேண்டியவர்கள் அடுத்த மாநிலத்துக்குச் சென்று அந்தப் பொருட்களை வாங்கி வருகிறார்கள். அதன் விளைவாக நம் மாநிலத்தில் நடக்க வேண்டிய வியாபாரம் குறைந்து, நமக்கு வரவேண்டிய விற்பனை வரி வருவாய் குறைந்து விடுகிறது என்பதையும் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்த விஷயங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலனை செய்து தக்க முடிவு எடுப்பார் என்று நம்பிக்கையோடு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ம. பொ. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரியைப் பற்றி அங்கத்தினர்கள் பலர் பேசியதைக் கேட்டேன். விற்பனை வரி என்பது என்னுடைய கருத்தைப் பொறுத்தவரை எதிர்ப்புக்குரியதுதான். இந்த விற்பனை வரியை ஒரு காலத்தில் கொண்டு வந்த பெரியவர் இராசாசி அவர்களே, அது இன்று வளர்ந்திருக்கிற அளவைப் பார்த்து அதற்கு ஆதாவு அளிப்பவாக இல்லை என்பதைப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல; விற்பனை வரியின் விளைவாக விற்போர் ஒன்றும் பாதிக்கப்படுவதில்லை, வாங்கு வோர்தான் பாதிக்கப்படுகிறார்கள். அரசாங்கம் இதற்கென்று ஒரு குழு அமைத்து ஆராய்ந்து பார்த்தால் தெரியும்; சில இடங்களில் விற்பனை வரி எந்த சதவிகிதத்துக்கு வசூலிக்கப்பட வேண்டுமோ அதைவிடக் கூடுதலான சத விகிதம் ஏழை மக்களிடமிருந்து பறிக்கப்படுகிறது. இந்த அநீதிக்குப் பரிகாரம் இல்லாமல் இருக்கிறது. இன்றைக்கிருக்கிற நிலைமையில் நான் இந்த விற்பனை வரியை ஆட்சேபிக்கவில்லை; காரணம், வருவாயை அதிகமாகத் தரக்கூடிய வரி இனங்கள் எல்லாம் மத்திய அரசின் கையில் இருக்கிறது. அவைகள் மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்கு மாற்றப்படும் வரையி லாவது இது இருக்க வேண்டும் என்று நினைக்கிறவன் நான். தமிழக அரசும் அதைத் தெளிவாகச் சொல்லவேண்டும் என்பது என்விருப்பம். இது நியாய மான வரி என்றாலும்கூட, வசூலிக்கும் முறையிலுள்ள கெடுபிடிகள், வணிகர்கள் குற்றவாளிகளைப்போல் நடத்தப்படும் முறைகள்—வணிகர்களில் ஒரு கிரிமினல் பரம்பரையையே உண்டாக்கும் அளவுக்கு நடைமுறை இருப்பதைப் பார்க்கிறேன், ஏழை மக்கள்பால் அக்கறை கொண்டுள்ள தற்போதுள்ள தமிழக அரசு மாநில சுயாட்சி கிடைக்கிற நேரத்தில், இந்த வரி கைவிடப்படவேண்டிய ஒன்றுதான் என்று தெளிவாகச் சொல்லவேண்டும்

என்று நான் நினைக்கிறேன். விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்பதில் எல்லோரும் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கிறோம். ஆனால், ஒரு பக்கம் புதிய வரி விதிப்பு—மத்திய அரசு போடும் வரி, மாநில அரசு விதிக்கும் வரி, மாநகராட்சி வீட்டு வரி—பழைய வரிகளை உயர்த்திக் கொண்டே போகிற நிலையில், விலைவாசி ஒருபோதும் குறையப் போவதில்லை. விலைவாசிகள் குறையாதபடி செய்யக்கூடிய மறைமுகமான முயற்சிகள் இவை ஆகும். விற்பனை வரியைப் பொறுத்தவரை ஆட்சேபிக்கத்தக்கதாகத் தான் இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய முஸ்லிம் லீக் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், 'அழும்வரி' என்று. அழுகும் பொருட்களுக்கு போடும் வரி மட்டுமல்லாமல், விற்பனை வரியே அழும் வரி; பொருட்கள் அழுகும் பொருட்கள். அவசரமாக நான் எடுத்துச் சொல்ல வேண்டிய விஷயம், கிராமக் கைத்தொழில் வாரியத்தின் பொருட்களுக்கு வரி போட்டதாகும். அதைச் சொல்லத்தான் நான் எழுந்து நிற்கிறேன், அந்த வாரியத்தின் உறுப்பினன் என்ற முறையில் காதி, கிராமக் கைத்தொழில் வாரியத்தின் பொருட்களுக்கு இதுவரை விற்பனை வரி இல்லாமல் இருந்தது. 1968-69-ல் 36,000 ரூபாய் காதி கிராமக் கைத்தொழில் போர்டுக்கு வரி விதித்திருக்கிறார்கள். இந்த வாரியமும் அரசாங்கத்தின் ஒரு அங்கம்; விற்பனை வரி இலாகாவும் அரசாங்கத்தின் ஒரு அங்கம். இப்படியிருக்க, இந்தச் சட்டைப் பையிலிருந்து அந்தச் சட்டைப் பையில் எடுத்துப் போட்டுக் கொள்ளும் வகையில் இந்த வரி முறை ஏன் வருகிறது என்று தெரியவில்லை. இப்படி ஒரு பையிலிருந்து இன்னொரு பைக்கு மாற்றிப் போட்டுக் கொள்வதால் அரசாங்கத்துக்கு வருமானம் அதிகரித்துவிட்டது என்று எண்ணினால், இரு இலாகாக்களும் இரண்டு தனி நாடுகள்—தனி அரசுகளாக இருக்கிற மனப்பான்மையைத்தான் காட்டுகிறதே தவிர, நிர்வாகத் திறமையைக் காட்டவில்லை. இன்னொன்றையும் பார்க்கிறோம். காதி கிராமோத்யோக்பவன் மத்திய அரசாங்கத் துறையாக உள்ளது; அதற்கு விற்பனை வரி விதிக்காமல், இந்த அரசின் துறையாக உள்ள காதி கிராமக் கைத்தொழில் போர்டுக்கு மட்டும் விற்பனை வரி விதிப்பது, இலாக்காக்களிடையே இணக்கமான உறவு இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது என்பதை நினைப்பூட்டி, இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தோல் தொழிலில் அரிசன மக்கள் அதிகமாகப் பங்கு கொண்டிருக்கிறார்கள். தோல் தொழிலுக்கு வரிவிலக்கு அளித்தால், அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிற அரிசன மக்கள் பயனடைவார்கள். கிராமோத்யோக் பவனுக்குப் போனால் விற்பனை வரி இல்லாமல் தொழிலில் ஈடுபடலாம் என்று அங்கே போகிற நிலைமை ஏற்படுகிறது. கிராமக் கைத் தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என்ற இந்த அரசின் கருத்தை ஒட்டியும் கேட்டுக் கொள்கிறேன்; அவைகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரி விடைபெறுகிறேன்.

THIRU K. VINAYAKAM: Mr. Speaker, Sir, just before the Assembly met, the Government was pleased to issue an Ordinance in February 1970 seeking to levy sales tax under sections 3, 4 and 5 of the Act at the purchase point. It was done evidently to check evasion of payment of tax at the sale point. The object may be correct. But what was our intelligence wing doing in tackling the evasion? By whom was this tax evaded? Did the evasion take place by the dealers in our State or did it take place in outside



States? That must be made clear to us. If the evasion took place in other States, what propriety is there in this Government introducing such a measure? I am afraid this may become an issue before a court of law.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் எல்லாம் போகிறதே.

THIRU K. VINAYAKAM: I must point out where the Government is going through rashly. This may not stand the test of law. That is my fear. I may be wrong and the Government may be right. But they have got to examine the issue.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் சட்டம் கொண்டு வந்தபோது பேசியிருக்கலாம். சட்டமான பிறகு இப்பொழுது பேசுகிறார்கள்.

THIRU K. VINAYAKAM: I am only cautioning the Government. The amendment of the Sales Tax Act to raise the rates of Sales Tax on commodities listed as items 1 to 14 in the First Schedule is very arbitrary. So far, the Government might have thought that there was an inelastic demand for these commodities. Now they might have thought that there was an elastic demand. On certain categories they have raised the rate from 12 to 15 per cent, and on certain other categories from 7 to 9 per cent. I admit that no Government can be run with depleted coffers. But on whom exactly should we levy? That must be our concern. If, as a result of this levy, the demand becomes crippled or elastic, then the very source from which revenue is expected may be dried up. I envisage such a contingency. It all depends upon the law of supply and demand and the law of diminishing returns. The Government should take care about this.

The tax on tractors and bulldozers, component parts of tractors and bulldozers, and tyres and tubes ordinarily used for tractors and bulldozers has been raised from 7 to 9 per cent. These items fall under item 55 of the First Schedule. The Government say that they are very much interested in agriculture and they levy a tax on agriculturists. The Minister may turn round and say that the users of tractors and bulldozers are rich people and that they could afford to pay. Still, the Government are levying a tax on their activities.

I question the propriety of levying a surcharge of 7½ percent on an annual turnover exceeding Rs. 5 lakhs. The Minister may turn round and ask who exactly are the persons whose turnover exceeds Rs. 5 lakhs. With an investment of Rs. 10,000, a person with capacity and brain can show a turnover of Rs. 5 lakhs. There also the position is not clear as to whether the surcharge is on the entire turnover or on the excess over Rs. 5 lakhs. I am only cautioning the Government. A dealer with a turnover exceeding Rs. 5 lakhs will have to pay a tax of Rs. 15,000. It works out to

a surcharge of Rs. 1,150. A dealer with this amount of turnover may not make any profit. He might have even incurred a loss and what is the effect of the surcharge on him? Not only has he incurred loss, he will have to pay from out of his capital or he will have to incur debt. (Interruption.) That must be made clear. If the Minister appreciates that point, my purpose is served.

So far there has been a lacuna in the Sales Tax Act and I have been pointing this out. Works contracts now escape tax. There are several judgments on this subject and I have won many cases before the appellate tribunals. Works contracts must be brought under the purview of the Act. For that, the Constitution has to be amended and steps will have to be taken for this purpose. The Government can set their legal officers to go into this question.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஒர்க்ஸ் காண்ட்ராக்டையும் இந்த சட்டத்தில் கொண்டு வந்து, வரி போடவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே ஆர்டினன்ஸ் சட்டமாக ஆக்கப் பட்டுவிட்டது.*

THIRU K. VINAYAKAM: Coming to the list of exemption under section 17 of the Act, this is an obsolete provision. We thought that the articles required exemption in the then prevailing environment and conditions. I only give a hint to the Government to go into the list and see whether any articles exempted still required exemption and whether any articles deserved inclusion. The Government should consider this matter.

I have known merchants living in Tamil Nadu State engaged in the exploitation of minerals in the Andhra State. They are not liable to any tax there. They simply transport the materials. Here also they are not liable to any tax. In both the States they are not liable to Central Sales Tax. They export iron ore to countries like Japan and I have known merchants making a plenty of fortune. This also deserves the consideration of the Government. I am only showing ways and means for augmenting the revenues, instead of crippling the poor agriculturists or small dealers like those dealing in cement by raising the tax by two per cent. It is easy for anybody to tax. It does not require the brain of a Madhavan or Shanmugam. Any ordinary person can do it. If the Government ask the Government servants to do it they will run this business.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: You can also represent the position in a more capable way.

*திரு. கே. விநயகம்: அப்படியில்லை. நீங்கள்தானே கவர்ன்மெண்டில் இருக்கிறீர்கள். எண்ணங்களைத்தான் சொல்ல முடியும். அதற்காக நீயே செய், நீயே செய் என்றால் எப்படி (குறுக்கீடு) நான் எப்பொழுது அங்கே வருகிறேனோ அப்பொழுது பார்த்துக் கொள்கிறேன். நண்பர்களே, . . . (சிரிப்பு).*





I am sorry I was switching on to the evening meeting.

Collection of arrears of sales tax is a thing on which we should concentrate. I have known many instances where large arrears have yet to be collected. The Department should concentrate upon this.

The Government, should tackle the problem of evasion of Sales Tax. This is a branch where intelligent work will have to be done. I have read reports that about three or four years back—before the D.M.K. came to power—there were constant raids here and there and the officers detected evasion of huge amounts of tax. There was character assasination of the officers. We need not be afraid of that. The officers are straightforward people and they can protect themselves. By preventing evasion, plenty of revenue can be earned. Why should those in charge be afraid of public opinion? The Government must concentrate their attention on this also.

Regarding the best of judgment clause, this is causing head ache. The officers must have a justifiable ground for the manner in which they have used their judgment. Mr. Madhavan will appreciate my statement; I am also a lawyer. There must be justifiable ground and natural justice must be there. Some officers say in a cavalier fashion 'You can take it to the higher authorities on appeal'. Assessing authorities must use their discretion according to the environment and situation and come to some conclusions. One should not say arbitrarily this is my judgment' and drive the assessee to the Sales Tax Appellate Tribunal. He should not be driven from pillar to post.

When I moved a cut motion on a former occasion, our present Finance Minister, who was then in charge of Sales Tax, was kind enough to accede to my request for the setting up of a Sales Tax Appellate Tribunal at Tiruchirappalli. He conceded my request. At Coimbatore and Madurai, there is a Tribunal. The Minister conceded my request for a Tribunal at Tiruchirappalli, and I think he moved the file also. But I do not know where exactly it got into the rut. The Hon. Mr. Shanmugam, who is now in charge of the subject, is a man of vision and can think far ahead.

Sir, after all assurances should not go so shabbily. One Hon. Minister assures me that a tribunal would be appointed and another Hon. Minister says that he does not know about it. I request that the assurance of the Hon. Minister should be implemented. முற்பகல் 11-00

Then, Sir, regarding amenities for the assessees, I request the Hon. Minister to go to the Income-tax Office and see things for himself. There we have got a separate parlour, waiting room, fan, water cooler, etc., Legal practitioners are treated so well but

what is the arrangement you have made in your Office? They are housed in rented and rickety buildings. An assessing authority like the Deputy Commissioner for Sales Tax has got a chair which has only three legs. Ordinarily a chair has four legs. நாற்காலி அல்ல முக்காலி. So, you do not give facilities to them. The assessees are also citizens of the State. They are also paying taxes and you are derving about Rs. 80 crores under this head and what is the treatment you are giving them? They go on waiting like chaprassis in the verandahs.

"ஐயா உள்ளே இருக்கிறாரா?
டிபன் சாப்பிடுகிறார்; உள்ளே போகக்கூடாது"

An assessee who is paying about Rs. 2 lakhs per year is made to wait. Is this the way you should treat him? You must give him better treatment. You must provide him library and waiting room, facilities, parlour, etc. You must also provide canteen facilities for assessees and legal practitioners. In fact I appeared before one of the Tribunals. For hours together I had to wait before my case was taken up. I was cursing myself why I was wasting my time in the rickety office. These are the things to which the Government will have to bestow attention. (At this stage Mr. Speaker sounded the gong). If the Hon. Speaker permits me, I will be glad to pass on the paper with me to the Hon. Minister concerned as it contains some more points which will be of use to him. With these words, I wind up my speech.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியைப்பற்றி கடைசியாகப் பேசிய எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் வரி செலுத்த வருகிறவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும், கட்டடங்கள் சொந்தமாக இருக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். இவைகளை அரசாங்கம் உணர்ந்து இதற்கான பரிகாரம் தேட வேண்டுமென்ற முறையில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு எவ்வளவு சீக்கிரத்தில் அவற்றை நிறைவேற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக செயல்படுத்தப்படும்.

சேல்ஸ்டாக்ஸ் டிரிப்யூனலைத் திருச்சியில் வைக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் சென்ற முறையே கேட்டதாகவும், அவர் பெருந்தன்மையோடு ஒத்துக் கொண்டார் என்றும், இப்போது இருக்கும் அமைச்சர் என்ன செய்தாரோ தெரியவில்லை என்றும் சொன்னார். மதுரையில் இருக்கும் டிரிப்யூனல் திருச்சிக்கு வந்து வழக்குகளை நடத்த வேண்டுமென்று தாற்காலிகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அளவு வழக்குகளின் எண்ணிக்கை இருக்குமானால் அப்படிப்பட்ட ஒரு டிரிப்யூனலைத் திருச்சியிலேயே ஏற்படுத்துவது பற்றி யோசிக்கலாம்.

கனிப் பொருள் மீது வரி போடலாம். சர்சார்ஜ் போட அரசியல் சட்டத்தில் இடம் கிடையாது என்று வழக்கறிஞர் திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். சர்சார்ஜ் போட அரசியல் சட்டம் இடம் கொடுக்கிறது.



கேரளாவில் இத்தகைய சர்சார்ஜ் போடப்பட்டு, உயர்நீதி மன்றங்களில் கேள்வி எழுப்பப்பட்டு அந்த வரி போடுவது நியாயந்தான், அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பின்பற்றித்தான் அரசாங்கம் தற்போது இந்த வரியைப் போட்டிருக்கிறது.

ஆந்திராவில் இருந்து சென்னைக்கு ரயிலில் வந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு வரி போடலாம் என்று திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு நாம் வரி போட முடியாது, அதற்கு அரசியல் சட்டம் இடம் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த விவாதத்தில் முதல் முதல் பங்கேற்றுக் கொண்ட திரு. சித்தன் அவர்கள் வருமான அதிகரிப்புக்குக் காரணம் யாது என்று கேட்டார்கள். வருமானம் அதிகரித்ததற்குக் காரணம் வரியை உயர்த்தியது மட்டுமல்ல; வரியை வசூலிப்பதிலே அரசாங்க ஊழியர்கள் தீவிரமாக அக்கறை எடுத்து வரி ஏய்ப்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களிடமிருந்து வாங்க வேண்டிய காலத்தில் வரியை வசூலித்ததுதான் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வரிச் சிக்கல்கள் வியாபாரிகளுக்குப் புரியவில்லை; அதைப் புரிந்து கொள்ள வழியில்லை என்று சொன்னார்கள். நேற்று விற்பனை வரி ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதிலேகூட இதைப் பற்றிச் சொன்னார்கள். அரசாங்கம் இதைப் பற்றிக் கவனித்து வெகு சீக்கிரத்தில் விற்பனை வரிப் பற்றி விளக்கும் கெஜட்டை இந்த ஆண்டு வெளியிடுவது என்றும் எப்போது மாறுதல் ஏற்படுகிறதோ அதையும் கெஜட்டில் வெளியிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னொரு முறையையும் அரசாங்கம் கையாளலாம் என்று கருதுகிறது. எந்தெந்த வியாபாரச் சங்கங்கள் அரசாங்கத்திடம் பதிவு செய்து கொண்டு பதிவுக் கட்டணமாக அரசாங்கம் நிர்ணயிக்கின்ற தொகையை ஆண்டுதோறும் கட்டுகிறார்களோ அவர்களுக்கு அரசாங்கம் இந்த கெஜட்டுகளை இலவசமாக அனுப்புவது என்றும் வியாபாரச் சங்கத்தின் மூலம் வியாபாரிகள் அதைப் பெற்று எந்த முறையில் வரிகள் அமைந்திருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

வெல்லம், தேங்காய், பிண்ணாக்கு போன்றவற்றுக்கான வரிகளையும் ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஒவ்வொரு வரியாகத் தள்ளிக் கொண்டே போக வேண்டுமென்று ஒரு பக்கத்தில் சொல்லிவிட்டு கோரிக்கைகள் வரும்போது இந்த இனத்திலே அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்பதற்காக வாதாடுவதைப் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கிறது. தொழிலை ஆரம்பிக்கலாம்; ஆரம்பித்துக் கொண்டுதான் இருக்கிறோம். அதிலே இருக்கின்ற சங்கடங்களைப் பற்றித் தொழில் மானியத்தின்போது தொழில் அமைச்சர் அவர்கள் எடுத்து விளக்குவார்கள் என்று நம்புகிறேன். இல்லாமல் தொழில் ஆரம்பித்து, அதற்குப் பிறகு வருமானம் வந்து எப்போது ஏற்படும் என்று புரியவில்லை. ஆகவே, வரிகளைத் தள்ளுவது பரிகாரமாக இருக்க முடியாது.

திரு. எம். எஸ். மணி அவர்கள், அரசாங்கமே பணம் கொடுத்து வியாபாரம் செய்கின்ற பர்மா அகதிகளுக்கு வரி போடலாமா, அவர்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்கத்திடம் கடன் வாங்கி வியாபாரம் செய்கின்ற பர்மா அகதிகளுக்குச் சலுகை காட்டலாமா என்பதைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நாட்டு செக்குக்கு வரிவிலக்கு வேண்டுமென்று கேட்டார்கள். இவ்வளவு தான் கடலைப் பருப்பு வாங்கி ஆட்டலாம் என்று புதிய உத்திரவு போட்டிருக்கிறது. நாட்டுச் செக்குக்கு வரி இல்லை யென்று சொன்னதும் பலபேர் நாட்டுச் செக்கு என்ற பெயரால் ரோட்டரியிலோ அல்லது எக்ஸ்பெல்லர்களிலோ எண்ணெயை ஆட்டி நாட்டுச் செக்கு எண்ணெய் என்ற பெயரால் வரியை ஏமாத்தி வந்தார்கள். அதனால் யார் யார் நாட்டுச் செக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் விற்பனை வரி அலுவலகத்திற்குச் சென்று அத்தாட்சி காட்டி பதிவு பெற்று இலவசமாக சான்றிதழ் பெற வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அதைக் கொண்டு போய் மார்க்கெட்டிங் கமிட்டியில் காட்டி கடலையாக வாங்கினால் நான்கு மூட்டை என்றும், பருப்பாக வாங்கினால் ஒரு மூட்டை என்றும் நாள் ஒன்றுக்கு வாங்கலாம் என்றும், ஒரு வாரத்திற்குச் சேர்த்து வேண்டுமானாலும் வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்றும் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதற்கு மேல் தேவை இருக்காது என்று யோசித்து திர்ணயம் செய்திருக்கிறோம். ஒரு ஆளுக்கு ஐந்து நாட்டுச் செக்கு வரை வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தோல் வியாபாரத்திற்கு விதித்துள்ள வரி நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் புறம்பாக இருக்கிறது என்று திரு. அப்துல் கபூர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு எதிராக இந்த அரசு எந்த நாளும் வரி வசூலிக்கப் போகாது. உயர்நீதி மன்றத் தீர்ப்பு என்னவென்றால் பச்சைத் தோலாக இருந்தால் கொள்முதல் விலையில் வரி போடலாம் என்றும், பதனிட்ட தோலாக இருந்தால் விற்பனையின்மீது வரி போடலாம் என்றும், இந்த இரண்டில் ஏதாவது ஒரு மட்டத்தில் வரி விதிக்கலாம் என்றுதான் கூறியிருக்கிறார்கள்.

திரு. போஜன் அவர்கள் குடிசைக்கெல்லாம் சிமெண்ட் பூசுகிறார்கள். அதற்கு வரி போடுவதா என்று கேட்டார்கள். குடிசைக்கு சிமெண்ட் பூசுவதில்லை. சிமெண்டுக்கு வரி உயர்வும் 6 சதவிகிதமாக இருந்ததை 8 சதவிகிதமாகத்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. திரு. பூபதி அவர்கள் வெல்லம், தேங்காய், கடிகாரம் மற்றும் எல்லாப் பொருள்களுக்குமே வரியை எடுத்துவிட வேண்டுமென்றும், 15,000 ரூபாய் வரை வியாபாரம் செய்பவர்களுக்கு வரி இல்லை என்று இருப்பதை 30,000 ரூபாய் வரை வியாபாரம் செய்கின்றவர்களுக்கு வரி இல்லை என்று அந்த இலக்கை உயர்த்த வேண்டுமென்றும் கேட்டார்கள். அது சாத்தியமாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





அடுத்து, தமிழரசுக் கழகத் தலைவர் சிலப்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் வளமான வரிகள் எல்லாம் மத்திய சர்க்காருக்குப் போய்விடுகிறது. மாநில சுயாட்சி வந்தபிறகாவது வளமான வரிகள் மாநிலத்திற்குக் கிடைத்த பிறகாவது விற்பனை வரிகளைக் கைவிட முடியுமா என்று கேட்டார்கள். அந்நிலையில் நாம் விற்பனை வரியை முழுமையாக கைவிட முடியாது என்றால், இந்த அரசு சலுகைகள் காட்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் காதி-கிராமக் கைத்தொழில்கள் மீதுள்ள விற்பனை வரியை ரத்துசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதை, அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதற்குப் பரிகாரம் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில முக்கியமான அறிவிப்பினைச் சொல்ல விரும்புகிறேன். தேங்காய்மீது உள்ள வரியை எடுத்துவிட வேண்டுமென்று எல்லாத்தரப்பு உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டார்கள். வியாபாரிகளும் இதைக் கேட்டுக்கொண்டனர். பொதுமக்களிடத்திலிருந்தும் இதற்கான கோரிக்கைகள் நிறைய வந்திருக்கின்றன. அரசாங்கத்திற்கு இந்த வரியை எடுத்துவிடுவதனால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் 27 லட்சம் ரூபாய் ஆகிறது. இந்த நஷ்டத்தை அரசாங்கம் தள்ளுபடி செய்ய முடிவு செய்திருக்கிறது. எல்லாத் தரப்பினரின் கோரிக்கைகளையும் ஏற்று, அரசாங்கம் இந்தத், தேதியிலிருந்து தேங்காய் மீதுள்ள வரி முழுவதையும் ரத்து செய்யத் தீர்மானித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயக் கருவிகளான டிராக்டர் போன்ற கருவிகளின் மீதுள்ள விற்பனை வரியை ரத்து செய்யவேண்டுமென்று திரு. எம். எஸ். மணி அவர்கள் கேட்டார்கள். டிராக்டர் புல்டோசர் அல்லாத மற்ற விவசாயக் கருவிகள் மீதான விற்பனை வரியையும் ரத்து செய்ய அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. மேலும் சில வரிகளைப்பற்றி உறுப்பினர்கள் பேசினார்கள். நானும் சிலவற்றைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலும் கலந்து பேசினேன். உங்களுடைய விவரங்களை மாண்புமிகு நிதியமைச்சர்களிடத்தில் கொடுங்கள், அறிவியுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடுத்து நிதியமைச்சர் அவர்கள் சொல்ல இருக்கிறார். பொதுமக்களுடைய கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கும் வகையில் சில வரிச் சலுகைகளை அளியுங்கள் என்று உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள். இப்போது நாங்கள் வரிச்சலுகைகள் அளித்திருக்கிறோம். ஆகவே, கனம் உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை வற்புறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, லேபர் டாக்ஸ் அப்பலேட் ட்ரிப்யூனலிலே டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுகளைப் போட்டு அப்பீல்களைக் கேட்க வேண்டும். டெபுடி கமிஷனராக இருப்பவர்கள் லா கிராஜுவேட் அல்ல. நான் கிராஜுவேட்டையைப் போட்டிருக்கிறார்கள்...

[திரு. கே. விநாயகம்] [1970 மார்ச் 18

They are not even graduates. They may have experience in the department but there are a lot of qualified Deputy Commissioners and why don't you give them an opportunity to fill up such posts ? It is only after exhausting their list, you can go in for others.

இது அரசாங்கத்துதிற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, பட்டதாரி அல்லாதவர்கள் இதுமாதிரி வேலைக்கு அமர்த்தியிருப்பதாக கனம் உறுப்பினர் திரு. கே. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அமர்த்தப் பட்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. அப்படி அமர்த்தியிருந்தால் அதுபற்றி விசாரிக்கிறேன். சட்டம் படித்தவர்களைத்தான் நியமிக்க வேண்டு மென்பதை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளலாமே தவிர, அரசாங்கத்தில் சீனியாரிடி பிரகாரம் அமர்த்த வேண்டியிருக்கிறது. சீனியாரிடியை மீறுவதில் சட்டச் சிக்கல் இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் செலுத்து கின்ற விற்பனை வரிக்கு சர்சார்ஜ் விதிக்கப்படுகிறது. இப்படி வரிக்கு மேல் வரி வசூல் செய்வதற்கு பொது விற்பனை வரிச் சட்டத்தில் இடம் இருக் கிறதா? வர்த்தக வரி கெஜட் 1968-க்குப் பிறகு வரவேயில்லை. வியாபாரிகள் எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விற்பனை வரிச் சட்டத்தை ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிக் கொணர ஏற்பாடு செய்யப் படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நேற்று நடை பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதுபற்றி யெல்லாம் விவாதிக்கப்பட்டது. வியாபாரிகள் அவ்வப்பொழுது எழுகிற சந்தேகங்களைக் கேட்டால், அதற்கு விளக்கம் தர அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. எந்த வியாபாரி சந்தேகம் கேட்டாலும், அதை கெஜட் மூலமாக விளக்குவோம்.

4. அமைச்சரின் விளக்க உரை.

**நிதிநிலை அறிக்கை உரையில் தான் அறிவித்திருந்த கூடுதல் வாவினங்கள் பற்றிய செயற்குறிப்புகள் குறித்து சில சலுகைகள் வழங்குதல் பற்றி நிதி அமைச்சர் அளித்த விளக்க உரை.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I rise to make a statement on certain concessions in respect of the proposals for additional mobilisation of resources which I had announced on 26th February 1970, in my Budget speech.

1. The Government have fully considered the representations made in regard to the surcharge on sales tax proposed in the Budget speech. With the permission of the Hon. Chief Minister, I have pleasure in announcing a reduction of the proposed rate in respect of the additional levy on assessees with a turnover exceeding Rs. 5 lakhs, from 7-1/2 per cent to 5 per cent. The Government have also decided that the levy will be brought into force from the assessment year 1970–71 onwards. I hope that all sections of the



1970 மார்ச் 18] [Thiru K. A. Mathialagan]

House and the people will welcome these concessions and recognise our willingness to help the business community in spite of the serious financial difficulties faced by the Government.

2. Another concession which I have the privilege to announce relates to the proposed increase in sales tax rates from 12 to 15 per cent in respect of automobile tyres, batteries and automobile spare parts. Keeping in view the prevalent rates in the neighbouring States, the Government have decided to restrict the increase in respect of these items to 13 per cent only.

3. The Government have also decided to give relief to the agricultural community by exempting a'l agricultural implements (excluding tractors, bulldozers and tillers) from sales tax. This will come into force from 1st April 1970.

3. 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக்கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. ரா. கனகசபை, டாக்டர் ஹாண்டே, திரு. சி. கோவிந்தராசன் ஆகி யோர் இருப்பிடங்களில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங் கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி "நிதிக் கோரிக்கை எண். 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வை களும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,81,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(ஆ) நிதிக் கோரிக்கை எண். 8-ஏ.—பால்வழங்கு திட்டங்கள்

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர் களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

நிதிக் கோரிக்கை எண் 8-ஏ—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,87,19,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to ensure the proper supply of proper quality of cows, buffaloes and toned milk distributed by the Government Milk Depots, Madhavaram, I move—

'That the allotment of Rs. 3,87,19,600 under Demand No. 8-A—Milk Supply Schemes—be reduced by Rs. 100.'

THIRU K. VINAYAKAM : Sir, to discuss about the desirability of reforming the scheme with a view to enable the consumers to get good milk and make the scheme a viable unit, I move—

'That the allotment of Rs. 3,87,19,600 under Demand No. 8-A—Milk Supply Schemes— Be reduced by Rs. 100.'

திரு. ரா. கனகசபை : தலைவர் அவர்களே, பெரிய நகரங்களில் குறைந்த விலையில் கஷ்டமின்றி, காலத்தில் கட்டுபாடின்றி பால்கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண். 8-ஏ.—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,87,19,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பாராஜா : தலைவர் அவர்களே, பால் உற்பத்தியை அதிக மாக்குவது குறித்து விவாதிக்க,

"நிதிக்கோரிக்கை எண். 8—எ.—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,87,19,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, தரமான பால் குறைந்த விலையில் எல்லோருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டியதைப்பற்றி விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண். 8-ஏ.—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,87,19,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, மாவட்டங்கள்தோறும் (Viable Unit) ஆரம்பித்து மாடு வாங்க அதிக தொகை கடன் உதவி செய்து மேய்ச்சல் நிலம் ஒதுக்க வழிவகை செய்தல்பற்றி விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண் 8-ஏ.—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,87,19.600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) கோரிக்கை எண். 18—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,82,67,400-க்கு மேற்படாத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.



திரு. இல. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,82,67,400-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரா. கனகசபை : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கொண்டிருக்கும் ஆடு, மாடு, கோழி வளர்ப்புக் கொள்கைகளைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பகுடுகிற ரூ. 3,82,67,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : To discuss about the need to start one more Cattle Farm in Hosur taluk with a view to supply milk to our State, I move the following cut motion :

"That the allotment of Rs. 3,82,67,400 under Demand No. 18-Animal Husbandry—be reduced by Rs. 100".

திரு. ஏ. அ. சுப்பாராஜா : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பகுடுகிற ரூ. 3,82,67,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் ; பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 57,01,06,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

DR. H. V. HANDE : To discuss the hardship experienced by the residents of Madras City, who own lands in Thanjavur District, in bringing rice for their own consumption, I move the following cut motion :—

"That the allotment of Rs. 57,01,06,800 under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading—be reduced by Rs. 100."

[1970 மார்ச் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** இப்பொழுது வெட்டுத் தீர்மானங்களும், நிதிக் கோரிக்கைகளும் பேரவையின் விவாதத்திற்கு வருகின்றன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஏற்கனவே நான் இம்மானியங்கள் பற்றிய அரசாங்கக் குறிப்புகளை * அங்கத்தினர்களுக்கு அனுப்பியிருக்கிறேன். அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்த பின்னர் என் பதில் உரையை அளிக்கிறேன். நான் கொடுத்த அறிக்கையில் கீழ்க்கண்ட திருத்தங்களை மட்டும்—அச்சுப் பிழைகளைத் திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

In the printed copy on Food Demand (in both English and Tamil copies) on page 3, paragraph 7, the quantity of rice procured during the year 1969 should be read as "7.06 lakhs tonnes" and not as "6.06 lakhs tonnes".

In paragraph 20 on page 8 of the Tamil copy, the selling price of cholam should be read as 65 p. and not 64 p.

THIRU T. MARTIN : Sir, I want to move my cut-motion. The Hon. Minister has just moved a correction.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்):** தாங்கள் வெட்டுத் தீர்மானத்தை இப்போது பிரேரிக்க முடியாது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கட் மோஷன் பிரேரிக்கவில்லை என்றாலும், அங்கத்தினர் வேண்டுமென்றால் அதுபற்றித் தன்னுடைய பேச்சில் எல்லாவற்றையும் குறிப்பிடலாம்.

***திரு. ஜே. ஜேம்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்பு உணவு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற மானியக் கோரிக்கைகள்மீது என் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

உணவு அமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்திருக்கிற உணவு மானியக் கொள்கை அறிக்கையில் இந்த அரசின் உணவுக் கொள்கை சாதனைகளைப் பற்றி உரைத்திருக்கிறார்கள். இந்த அரசின் உணவுக்கொள்கையை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். இந்த மன்றத்தில் இருக்கிற அத்தனை அங்கத்தினர்களும் அறிவார்கள். இந்த அரசு இந்த நாட்டு மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும், படிப்படியாக ரூபாய்க்கு 3 படி அரிசி கிடைக்கச் செய்யும் என்பதுதான். இந்த வாக்குறுதியை இவர்கள் அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு உணவுத்துறையில் பெரிய சாதனையைக் கண்டுவிட்டதாகச் சொல்லி, கட்டுப்பாட்டை அகற்றிவிட்டோம், உணவுக் கொள்கையில் வெற்றி கண்டுவிட்டோம் என்கிறார்களே—5 லட்சம் டன் அதிகமான உணவு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்றாலும் விலைவாசி இறங்கியிருக்கிறதா? சென்னையில் ஒரு படி அரிசி என்ன விலைக்கு விற்கப்படுகிறது, மாநிலத்தில் உள்ள பல்வேறு சென்டர்களிலும் என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்திருக்கக் கூடும். எந்த ஒரு பகுதியிலாவது ரூபாய்க்கு ஒரு படி அரிசி கிடைக்கிறதா? இந்த

* 363—398-ம் பக்கங்களில் 4-ஆம், 5-ஆம், 6-ஆம், 7-ஆம் இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.



1970 மார்ச் 18] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நிலையில் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாதபோது உணவுத்துறையில் என்ன வெற்றி பெற்றிருக்கிறார்கள்? ஒரு படி அரிசி 3 ரூபாய்க்குக் குறைவான விலையில் எங்கும் விற்கப்படவில்லை என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். அப்படியிருக்க ரூபாய்க்கு 1 படி திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை என்றாவது வருத்தத்தைத் தம் அறிக்கையில் தெரிவித்திருந்தால் அமைச்சர் அவர்களைப் பாராட்டியிருப்போம். தாங்கள் செய்த தவறுகளை உணர்ந்திருக்கிறார்கள் என்பதையாவது அறிந்திருப் போம். உணவுக்கொள்கையில் வெற்றி கண்டுவிட்டோம் என்பதாகத் தமது அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

அடுத்து உணவு கண்டிரோலை எடுத்தார்கள். எனது மாவட்டத்தில் உள்ள சூழ்நிலை என்ன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 8—1—1970 முதல் கண்டிரோலை எடுத்துவிட்டோம் என்று இவர்கள் அறிவித்திருந்தாலும் எனது மாவட்டத்தில் இன்னும் போக்குவரத்துத்தடை அகற்றப்படவில்லை. அது ஒரு பார்டர் ஏரியா என்பார்கள். கேரளாவை ஒட்டிய பார்டரில் கட்டுப்பாடு வைத்திருக்கலாம். ஆனால் எனது மாவட்டத்தில் நான்கு தாலுக்காக்கள் இருக்கின்றன. 2 தாலுக்காக்களில் உணவு உற்பத்தியே கிடையாது, மொத்த நீளம் 32 மைல்கள் என்றால் இந்த இரண்டு தாலுக்காக்களின் நீளம் 15 மைல்கள். இந்த 15 மைல் தூரத்திலும் உணவு உற்பத்தி சற்றுமே இல்லாத நிலையில் உணவு உற்பத்தி செய்கிற மற்ற 2 தாலுக்காக்களில் இருந்துதான் இங்கே உணவுப்பொருள் வந்தாக வேண்டியிருக்கிறது. அந்த 2 தாலுக்காக்களில் இருந்து உணவுப் பொருள் இங்கே வரக்கூடாது என்கிற தடை இருக்குமானால் இந்தப் பகுதியில் வாழ்கிறவர்கள் எப்படி உணவுப் பொருள்களைப் பெற முடியும்? அல்லது இவர்களுக்கு உணவுப் பொருள் வழங்க என்ன மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? ஒன்றும் இல்லை. கல்குளம் விளவங்கோடு ஆகியவற்றுக்கு தோவாளை தாலுகாவிலிருந்து நெல், அரிசி வரக்கூடாது என்றால் அங்கே விளைகிற அரிசியை என்ன செய்கிறது?

அதுமட்டுமல்ல, 15 மைல் பெல்ட் ஏரியா என்று குறிப்பிட்டு விளவங்கோடு தாலுக்கா கேரளாவோடு ஒட்டியிருப்பதனால் உணவுப் பொருள் நடமாட்டத்திற்குத் தடை விதித்திருந்தால் போதும், கல்குளம் தாலுக்காவிற்கும் அந்த மாதிரி தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு பல செக் போஸ்டுகள் வைத்திருக்கிறார்கள். தாராளமாக விளைகிற இடத்தில் இருந்து விளையாத இடத்திற்கு இப்போது உணவு தானியங்கள் வர முடியவில்லை.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இந்த உணவு போக்குவரத்து கட்டுப்பாடு அமைப்பையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை போலீஸ் இலாக்காவில் ஒப்படைக்கப் போகிறோம் என்றும் கூறினார்கள். போலீஸ் துறையில் பறக்கும் படை என்று ஒன்று சுற்றி வருகிறது. வெளிச்சந்தை, ஈவினிங் மார்க்கெட்டில் திடீரென்று நுழைந்து பரிசோதனை செய்கிறார்கள்—கோழிக் குஞ்சுகளை பருந்து தூக்கிக் கொண்டு செல்லுதல்போல ஏழை எளியவர்கள் வாங்கிச் செல்லுகிற தானியங்களை பறக்கும் படையினர் பறித்துக் கொண்டுபோய் விடுகின்றனர்.

உடனே மார்க்கெட்டில் நெல், அரிசி விலை ஏறிவிடுகின்றது. ஆகவே இந்த நிலையில் ஒரு சந்தேகம் எழும்புகிறது. இந்தப் பறக்கும்படை போலீஸ் அதிகாரிகள் அங்கு இருக்கிற வியாபாரிகளோடு உடன்பாடு செய்துகொண்டு அவர்களுக்கு வசதியாக இந்த மாதிரியான சூழ்நிலையை மாவட்டத்தில் ஏற்படுத்துகிறார்களோ என்கிற ஐயப்பாடு இல்லாமல் இல்லை. ஆகவே தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் அமைச்சர் அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். முதல் முதலில் கல்குளம் தாலுகா எல்லையில் இருக்கின்ற செக் போஸ்டுகள் அத்தனையும் அகற்றப்பட வேண்டும், அடுத்து கேரளா பார்டரிலிருந்து 5 மைல் அளவோடு பெல்ட் ஏரியாவை நிறுத்திக் கொள்ளவேண்டும். மேலும் கல்குலம் தாலுகாவில் இருக்கின்ற பறக்கும் படையை அகற்றவேண்டும். பார்டர் ஏரியாக்களை நிச்சயமாகப் பாதுகாக்க வேண்டும். நம்முடைய
முற்பகல் 11-30 மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு உணவுப் பொருட்கள் கடத்திக் கொண்டு போவதை நிச்சயமாகத் தடை செய்ய வேண்டும். மக்கள் மட்டுமல்ல, மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்களும் அதற்கு ஆதரவு தருகிறோம். கேரளத்தோடு ஒட்டியிருக்கின்ற விளவங்கோடு தாலுகாவை மாத்திரம் மூன்று மைல் அல்லது ஐந்து மைல் தூரத்திற்கு பெல்ட் ஏரியா என்று வைத்துவிட்டு மற்றப் பகுதிகளைப் பொறுத்தவரையில் தடையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலத்தில் பாதி வாப்பு என்று சொல்வதைப் போல் அந்த மாவட்டத்திலே இப்பொழுது முக்கால் பகுதியும் பெல்ட் ஏரியா என்ற நிலைமையில் இருக்கிறது. விளவங்கோடு தாலுகாவை மாத்திரம் பெல்ட் ஏரியாவாக மாற்றி, கல்குளம் தாலுகாவில் உள்ள செக் போஸ்ட்டுகளை அகற்றவேண்டும். பார்டர்களைத் தீவிரமாகப் பாதுகாப்பதற்கு பறக்கும்படை மட்டுமல்ல, ஆர்ம்டு ரிசர்வ் போலீஸ் வைத்துப் பாதுகாப்பதற்கு எங்கள் ஆதரவு இருக்கிறது என்பதைக் கூறி கொள்கிறேன்.

இன்னும் ஒரு சங்கடமான நிலைமையும் இருக்கிறது. இந்த அரசாங்கம் உணவு நிலைமையிலே ஒரு நல்ல நிலைமையை அடைந்துவிட்டோம் என்று கூறுகிறார்கள். ஆனால் அங்கே இருக்கிற நிலைமை என்னவென்றால் பெரிய பெரிய ஹோல்சேல் வியாபாரிகள் பில் போட்டு வியாபாரம் பண்ணுகிறார்கள். ஒரு மூட்டை அரிசி 70 ரூபாய் என்று விலை போட்டால் அதற்கு மேல் 5 ரூபாய், 7 ரூபாய் என்று கொடுத்தால்தான் சரக்கைக் கொடுக்கிறார்கள். பில் போடாத ரூபாய் எதற்காக என்று கேட்டால் அரசாங்கம் தஞ்சாவூரில் கொள்முதல் செய்கிறது, அதற்காக வியாபாரிகள் தாங்கள் கொள்முதல் செய்யும் நெல்லில் 50 சதவிகிதம் கொடுக்க வேண்டியிருக்கிறது, அரசாங்கத்திற்கு குறைந்த விலையில் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அரசாங்கத்துக்கு வியாபாரிகள் கொடுக்கிற நெல்லில் ஏற்படுகின்ற நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக உணவுப் பொருட்களை வாங்குகிறவர்கள்மீது விலையைக் கூட்டி அந்த நஷ்டத்தை ஈடுசெய்கிறோம் என்று சொல்கிறார்கள். இதற்கும் பரிகாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்புத் துறையைப் பொறுத்தவரையில் அந்த மானியத்தின் மீது ஒருசில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இங்கே கொள்கை விளக்கக் குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே 1968-69-ஐ விட 1969-70-இல் பால் உற்பத்தி குறைந்திருப்பதாகக் கணக்குக் காட்டியிருக்கிறார்கள். 1968-69-இல் 14 லட்சத்து 43 ஆயிரம் லிட்டர் என்றும் 1969-70-இல் 9 லட்சத்து 75 ஆயிரம் லிட்டர் பால் என்றும் கணக்குக்



காட்டியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே பால் உற்பத்தி குறைந்து கொண்டேபோனால் நெருக்கடியான நிலை வரும் என்று கூறத் தேவையில்லை. மிகவும் அத்தியாவசியமான உணவு பால், அதனுடைய உற்பத்தி குறைவாகப் போகிறது என்ற காரணத்தினாலே பாலில் விலை ஏறிக்கொண்டே போகிறது என்பதைச் சக உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வார்கள். பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

கடைசியாக கால்நடை உதவியாளர்கள் பல கோரிக்கைகளை வைத்து அமைச்சர்களைப் பார்க்க வந்தபோது இடம் அளிக்கவில்லை என்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் அந்த சங்க நிர்வாகிகளை அழைத்து பொழுது அவர்கள் வரவில்லை என்றும் அறிக்கை கொடுத்தார்கள். 'எவ்வாறு இருந்தாலும் சரி முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டு அவர்கள் ஏன் வரவில்லையென்ற பிரச்னைக்கோ அல்லது அமைச்சர்களைப் பார்ப்பதற்கு வசதி கொடுக்கவில்லை என்ற பிரச்னைக்கோ நான் வரவில்லை. அமைச்சர்கள் மலிவான வாக்குறுதிகளை அரசாங்கத்திற்கு வருவதற்கு முன்னால் அவர்கள் கொடுத்ததின் விளைவாகத்தான் இம்மாதிரியான சங்கடங்கள் ஏற்படுகின்றன. விபரீதங்கள் ஏற்படாத அளவுக்கு, இந்தப் பிரச்னையை வளரவிடாமல் இருப்பது அரசாங்கத்திற்கு நல்லது, நாட்டிற்கும் நல்லது. இந்தத் துறை மிக முக்கியமான துறை என்று கருதப்படுவதால் இந்தப் பிரச்னையை உரிய காலத்தில் தீர்த்துவிட வேண்டும். தவறினால் இந்தப் பிரச்சனையில் ஈடுபடுகின்ற அரசாங்க ஊழியர்கள் அத்தனை பேர்களும் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை வளராதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, கனம் காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் பேசிய நேரத்திலே வாக்குறுதிகளை அள்ளித் தெளித்திருக்கிறீர்கள், அள்ளிக் கொடுத்திருக்கின்ற வாக்குறுதிகளைக் காப்பாற்றப் பாடுபடுங்கள் என்று எங்களுக்கு அறிவுரை சொன்னார்கள். இந்த அறிவுரையை அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சொல்லியிருந்தால் கொஞ்சமாவது உருப்பட்டிருக்கும். ஆனால் இன்றையதினம் தோல்வியைச் சந்தித்ததற்குப் பிறகு வெற்றியையே காணப் போவதில்லை என்று நன்றாக அறிந்த பிறகு அவர்கள் மற்றவர்களுக்குப் புத்தி சொல்லுகின்ற கட்டம் அரசியலிலே அதிகமாகிக்கொண்டே வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினை உருவாக்கிய நேரத்திலேயே பொது மக்களிடையே எப்படிச் சொல்கிறோமோ அப்படி நிறைவேற்ற வேண்டுமென்ற போர்வதோடுதான் வந்திருக்கிறோம். ஏதோ அள்ளித் தெளித்து விட்டோம், எப்படியோ போகட்டும் என்று அக்கறையில்லாத தன்மையிலே நாங்கள் வரவில்லை.

மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மாநகரத்திலே அரிசி கிடைக்காததினால் நாங்கள் பட்டபாடு, கிடைத்த கொஞ்ச அரிசியையும் மோந்து பார்ப்பதற்குக்கூட முடியாத நிலைமையில் உள்ள அந்த அரிசியைக் கூட பெற முடியாத நிலைமையில் நாங்கள் பட்டபாடு இதை நினைக்கும் பொழுது இப்பொழுது சென்னையிலேயும் கோயம்புத்தூரிலேயும் இன்னும்

பல இடங்களிலும் அரிசி இல்லாமல் அவதிப்படக்கூடிய நிலைமை இல்லாமல் நிம்மதியும் அமைதியும் பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறோம். அரிசி விலை 2, 2½ ரூபாய்க்கு இருக்கிறது என்று சொன்னார்கள். முதலிலே நாம் திருப்தியடையவேண்டும், நான்கு ரூபாய் விற்ற காலம் போய் இப்பொழுது இரண்டு ரூபாய்க்கு வந்திருக்கிறது. இன்றைய தினம் 1-35, 1-25, 1-40 என்ற அளவிலே விற்கிறது, உறுப்பினர்களுக்கு விவரம் வேண்டுமானால் என்னுடன் வருவார்களானால் நான் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன்.

இந்த அரசுப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்ட நேரத்திலே எவ்வளவு சிக்கலான சூழ்நிலையிலே ஏற்றுக்கொண்டோம் என்பதை நாடு அறியும். கொஞ்சம்கூட இருப்பு இல்லாத சூழ்நிலை, விவசாயம் என்ன ஆகுமோ என்ன ஆகுமோ என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் இந்த ஆட்சி 6 மாதம் என்றும் 3 மாதத்திற்குத்தான் இருக்கும் என்றும் 1 வருடத்திற்குத்தான் என்றும் பெரிய பெரிய தலைவர்கள்கூட ஜோஸ்யம் சொல்லிக்கொண்டு இருந்தார்கள், உணவே இவர்களைத் தொலைத்துவிடும் என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருந்த நேரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்திலே முதன் முதலாக உணவு உற்பத்தியிலேதான் அக்கறை காட்டினார்கள். இன்றைய தினம் தம்முடைய உணவு உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்பதை நல்லவர்கள், அறிந்தவர்கள் பாராட்டுவார்கள். எதற்கெடுத்தாலும் எங்களைத் தானா சொல்லவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்வார்கள். என்ன செய்வது, நீங்கள் இருக்கிறீர்களே, காங்கிரஸ் கட்சியில்லாவிட்டால் சொல்லாமல் இருக்கலாம் . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் உதாரணம் காட்டாமல் பேசக்கூடிய நிலைமை, அந்தக்காலம் எங்களுக்கும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்கும் காலம் வரும் என்று சொல்கிறார்கள். சருகுகள் மலர்களாவதில்லை நாங்கள் அரும்புகள் மலர்களாவோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மலர்கள் உதிர்ந்துவிடும் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : மலர்கள் உதிர்ந்துவிடலாம். அதிலே சில காட்டிலே விழுந்துவிடும். சில எருவாகப் பயன்படும். 1967-ஆம் ஆண்டிலே உணவு உற்பத்தி 57 லட்சம் டன்னாக இருந்தது இன்றைய தினம் 63 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது, இது சாதனையில்லையா? ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்திலே மிகுபயன் தரும் பயிர்த்திட்டம் கொண்டுவரப்பட்டு இரண்டு போகம் சாகுபடி செய்யும் நிலங்களை முப்போகம் சாகுபடி செய்யும் நிலங்களாக ஆக்கவும், ஒரு போகம் சாகுபடி செய்யும் நிலங்களை இருபோகம் சாகுபடி செய்யும் நிலங்களாக ஆக்கவும் திட்டமிட்டு 1967-ஆம் ஆண்டில் [illegible] ஏக்கர்கள் அதிகமாகச் செய்திருக்கிறோம்.





1968-69-ல் சுமார் 17 லட்சம் ஏக்கரில் உணவு உற்பத்தி அதிகமாக ஆக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1969-70-ல் 20 லட்சம் என்ற புள்ளி வைத்து அதற்கும் அதிகமாகச் சாகுபடி செய்வதற்கான நோக்கத்தோடு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். புதிய நெல் வகைகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு அவர்கள் பயன் பெறுகின்ற நேரத்தில் அவர்கள் அரசைப் பாராட்டும் நிலையில் இருக்கிறார்கள்.

முன்பு கூட்டுறவுத் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன்களும், குறுகிய காலக் கடன்களும் கொடுக்கப்பட்டு வந்தன. அது 1966-67-ல் 31 கோடி ரூபாயாக இருந்தது 1968-69-ல் 44 கோடியாக ஆக்கப்பட்டிருக்கிறது. 1969-70-ல் அது 63 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்து ஏழை விவசாயிகள் பயன் பெற்று வருகிறார்கள். 105 நிலவள வங்கிகளைத் தான் 15 ஆண்டுக் கால சுதந்திர ஆட்சிக் காலத்தில் நம்முடைய நாடு பெற்றிருந்தது. கடந்த மூன்றாண்டுக் காலத்தில் 105 ஆக இருந்ததை நாங்கள் 166 ஆக ஆக்கி இருக்கிறோம். அதுமட்டுமல்ல; பேரறிஞர் அண்ணா அவர்கள் 'வணிக வங்கிகள் வியாபாரத் துறைக்கு மட்டுந்தான்' பயன்படுகின்றன; உணவு இல்லையென்றால், பயிர்த் தொழில் இல்லையென்றால் நாட்டில் வியாபாரம் இருக்க முடியாது என்ற அடிப்படையை உணர்ந்த காரணத்தால் வணிக வங்கிகள் விவசாயத் துறைக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்பதற்கான வழி செய்யப்பட்டு விவசாயிகளும் வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறும் சூழ்நிலையைப் பெற்றிருக்கிறார்கள்.

முன்பு 2.9 லட்சம் என்ற அளவுக்குத்தான் மின்விசை விவசாயிகளுக்காகப் பயன்பட்டு வந்தது. இன்றையதினம் கிட்டத்தட்ட 1.7 லட்சம் அதிகப்படியான அளவுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி 72 கோடி ரூபாய்த் திட்டத்தில் வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திற்கு ஒரு திட்டத்தையும் தம்முடைய அரசு சமர்ப்பித்திருக்கிறது. அதன்படி 25,000 கிணறுகள், 14,000 குழாய்க் கிணறுகள், 15,000 வடிமுனைக் குழாய்கள், 35,000 விசையேற்றங்கள், 3,000 டிராக்டர்கள் ஆகியவை எல்லாம் பெருக வேண்டுமென்ற திட்டத்தைப் போட்டு அது அங்கீகரிக்கப்பட்டு நமக்கு நல்ல பலன் கிடைக்கும் சூழ்நிலையைப் பெற்றிருக்கிறோம். என்ன சாதனை என்று கேட்ட காரணத்தால்தான் இந்த விவரங்களைத் தருகிறேன். நம்முடைய நாடு விவசாய நாடு என்பதை மறுப்பதற்கில்லை. சாதனை என்று சொல்லும்போது விவசாயத் துறையிலே எவ்வளவு அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் கூற விரும்புகிறேன்.

ரூபாய்க்குப் படியரிசி கொடுப்போம் என்று சொன்னீர்களே, அந்தப் படியரிசித் திட்டம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். இதைப்பற்றி முன்பே நாங்கள் எடுத்து விளக்கியிருக்கிறோம். எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் ரூபாய்க்குப் படியரிசி கொடுப்போம் என்ற உறுதிமொழியைத் தரவில்லை என்று சொன்னாலும் ரூபாய்க்குப் படியரிசி கிடைக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய லட்சியம், நோக்கம். அதிலே கொஞ்சம்கூட ஐயம் கிடையாது. அந்த நோக்கத்தையும், லட்சியத்தையும் அடைவது எப்படி? ஏராளமான நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டு வந்து உணவு உற்பத்தி பெருகப் பெருக அந்த லட்சியத்தை அடைய முடியும். அந்த

[திரு. இராம. அரங்கண்ணல்] [1970 மார்ச் 18

வகையிலே நாங்கள் பதவிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் இருந்த சூழ்நிலையை ஒட்டி விளைச்சல் அதிகமாக இல்லாது இருந்த நேரத்தில் கட்டுப்பாட்டை நீடிக்க வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருந்தாலும் இன்றையதினம் நல்ல விளைச்சல் பெருகிவிட்ட காரணத்தாலே கட்டுப்பாட்டை நீக்கியிருக்கிறோம். கட்டுப்பாட்டை நீக்கியிருக்கும் அதே நேரத்தில் இந்தச் சர்க்காருடைய திட்டவட்டமான கொள்கை வசதியுள்ளவர்களுக்கு வாய்ப்பை வழங்க வேண்டுமென்பது அல்ல; வசதியற்ற ஏழை எளியவர்களுக்கு வாய்ப்பை அளிக்க வேண்டுமென்ற அரசின் கொள்கை அடிப்படையில் கோவையிலும், சென்னையிலும் முதல் திட்டத்தைக் கொண்டுவந்தோம். தற்போது விளைச்சல் பெருகிவிட்ட காரணத்தால் வசதி பெற்றவர்கள் உள்ளவிலை கொடுத்து வாங்கிக் கொள்ளட்டும்; வசதியில்லாதவர்களுக்குப் படியரிசித் திட்டத்தை நீடிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இன்றையதினம் 200 ரூபாய்க்குக் கீழே யார் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் படியரிசித் திட்டத்தை அனுமதிக்கலாம் என்ற கொள்கையை அரசு கடைப் பிடித்து வருகிறது. இதிலே ஒரு வேண்டுகோளை உணவு அமைச்சர் அவர்களுக்கு விடுக்க விரும்புகிறேன். 200 ரூபாய் என்ற இலக்கைக் கொஞ்சம் கூட்டலாம். அந்தத் தொகை குறைவானது என்ற கருத்து இன்றையதினம் மக்களிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. சென்னை மாநகரத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும் அந்தக் குறையை உணருகிறேன். வாழ்க்கைத் தரப் புள்ளி தற்போது ஏராளமான அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை அறிவோம். அதற்காக ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குபவர்களுக்கு, ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்குபவர்களுக்கு ரூபாய்க்குப் படியரிசி கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. குறைந்த பட்சம் 300 ரூபாய் வரை, கொஞ்சம் நிதி வசதி அளித்தால் 400 ரூபாய் வரைக்கும் சம்பளம் வாங்குபவர்களுக்குப் படியரிசித் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம் சென்னையிலும், கோவையிலும் அவற்றின் விளிம்பிலும் நிரம்பி இருக்கும் ஏழை எளியவர்கள், குடிசைவாழ் மக்கள் ஆகியோருக்குப் பேருதவியாக இருக்க முடியும் என்ற என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன். வணக்கம்.

* DR. H. V. HANDE : I wish to offer a few points directly with regard to the milk problem. A number of attempts were made by several Ministers to increase the quantity and quality of milk. But unfortunately today in the name of toned milk, which we are getting, the quality of milk is far from satisfactory. In spite of the fact that several representations were made to the different Ministers and different Officers in the past several years, no improvement has been made in that direction.

I have now a concrete suggestion to make. My feeling is that I.A.S. officers who go there know very little about animal husbandry and the method by which they should augment the quantity of milk and improvement of the quality of milk. Probably they are all good administrators. So the whole thing has to be re-oriented. We should give a new look to the entire department by giving a carte blanche (full authority) to an officer who knows the subject and who is trained in the subject. Why not we appoint an ' animal



1970 மார்ச் 18] [Dr. H. V. Hande]

husbandry qualified' man as the head of the department or somebody who knows the subject? That would be better. That is the important practical suggestion I want to make. I am sure the Hon. Minister will view that suggestion in the proper perspective and take necessary action to see that a qualified man in the subject is posted permanently at least for four or five years. What we now find is that an I.A.S. officer is posted and before he gains experience in that, there is change of posting and he is transferred to some other post. I.A.S. Officers who had been trained in this field had not been allowed to continue for long but had been transferred to other posts. That is one point.

Next point is with regard to cattle grazing farms. I had spoken to my distinguished collegue Thiru Kariamanicka Ambalam and he wanted me to say this. I also wanted to say that in this House. I had been to Tirunelveli. I went to a few villages. One of the most important problems is that of grazing land. The grazing land is all poramboke land and it belongs to Government. But that poramboke land is being encroached upon and people build houses on that land due to housing shortage. Housing problem is of course a serious problem. But that cannot be solved at the expense of cattle farms. That is most important and Government must bear this in mind. There are some people who put up huts in poramboke land may be they belong to D.M.K. party or Congress Party or some other Party. They put up a board with the name of party. Of course it is not material here which party they belong to. They build huts and after some time, they appeal to Government for assignment of that land to them. So "மேய்ச்சல்" land is no longer there for the cattle. The cattle do not have practically any land, any grazing land. That is why we find our cattle in a very bad shape. If one were to proceed to Gudur, we find a different type of cattle. See the Ongole breed. It is bigger in size and it is because there are lot of grazing lands there. What little headway we have made in the food front will be completely set at nought if we deprive our catt'e of grazing lands. I do hope necessary action will be taken by Government to prevent encroachment of "மேய்ச்சல்" lands.

The next point is with regard to subsidy given to rice. We have discussed this subject a number of times in this House. The Government have taken upon themselves the task of giving subsidised rice to particular parts of the State, namely Madras City and Coimbatore. Here there are a number of grievances. A number of persons, whose income was Rs. 200, gave their income as Rs. 300 for getting a higher quota of sugar. Now the sugar problem is over and there is a glut in the market. Now they want to show their reduced real income in order to secure subsidised rice. I admit it is very, very wrong to give wrong figures of income, but they must still be considered sympathetically.

[Dr. H. V. Hande] 1970 மார்ச் 18]

There is a lot of heartburning about the manner in which rice cards are distributed. I would request the Minister to appoint some officers or he can ask the departmental officers to find out what exactly has happened to cause so much dissatisfaction. A number of my constituents wanted me to express in this House their dissatisfaction at the manner in which the cards have been distributed. I would say that the income-limit may be raised to Rs. 300.

Next I come to sugar mills. I have mentioned about this a number of times. In fact I have read some statements made by the Minister that he was little anxious about the policy of the Central Government. I share his anxiety. The Central Government have imposed a high *ad valorem* duty on sugar. Now there is stock of sugar lying idle in several godowns. In reply to a question, it was said that the stocks had been cleared to a little extent. Our Government's policy also should be examined. The State can argue with the Centre that controls should be removed and that otherwise it will not be able to dispose of the accumulated stock and that there would be a serious loss.

(The time bell was rung.)

I am the only member speaking on behalf of the Swatantra Party and request the Chair to allow me a couple of minutes more.

Sir, I am quoting the view of an expert :—

" The output of this sweetening agent in the first four months of the current season amounted to 16.72 lakh tonnes against 13.26 lakh tonnes in the corresponding period in 1968-69. Despatches were 10.38 lakh tonnes against 7.16 lakh tonnes. In spite of a larger offtake, stocks were higher at 19.19 lakh tonnes against 10.59 lakh tonnes at the end of January, 1969. With the output for February and March likely to be of the order of 14 lakh tonnes and despatches being not more than 6 lakh tonnes, stocks at the end of March might rise to the phenomenal level of 27 lakh tonnes resulting in the locking up of large funds and payment of heavy interest charges by sugar producers ".

This is a very serious point and I would request the Hon. Minister to see that something is done.

Finally I have got to speak on one more point relating to my constituency. We have got a Veterinary College and that is in my constituency. The students of that College have got a grievance. A couple of days ago they met me and ventilated their grievance. Forty-six Graduates have come out of the college. Forty-five of them are Indians and one is a Malaysian. Not even one out of the forty-five Graduates has been absorbed up till now, though there are one hundred vacancies in the Animal Husbandry Department after the reorientation of that Department. That is the information that I got. I do not know whether it is correct or not. There is delay in the posting of these Graduates.



[1970 மார்ச் 18 [Dr. H. V. Hande]

I am given to understand that files do not move in the Animal Husbandry Department. Though delay is common in all departments, in this particular department the delay is all the more and the files do not move. I also understand that the Finance Ministry has no sympathy for this Department. I request the Minister in charge to see that files move fast in the Animal Husbandry Department and the Minister for Finance to see that this Department is treated on a par with the other Departments. (The Hon. Thiru K. A. Mathialagan : Animals don't move fast). The Department can make the animals move faster.

My distinguished friend Mr. K. S. Kothandaramiah wanted me to speak about fodder farms. The cattle wealth and milk production in the country depend upon the availability of fodder. In Hosur Taluk extensive ex-zamindari forests are available where fodder farms can be started. This is a suggestion which, I hope, the Government will examine.

There was a proposal to start a calf breeding centre in Hosur Taluk one year back. Some preliminary work also was done. This has to be taken up in order to increase the yield of milk. I hope that the Minister will examine this.

A proposal to start a cattle farm with the help of the Centre for breeding Jersey cows was there. This scheme be pursued and adequate land is available. If the proposal is implemented, the present cattle wealth can be doubled. I hope the Finance Minister will examine very seriously whatever I have said with regard to animal husbandry.

* திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புத் துறை மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். வேளாண்மைக்கு மிக இன்றியமையாததாக விளங்கும் கால்நடை உற்பத்தியைப் பெருக்க தமிழ் நாடு அரசு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கால்நடைகளில் முக்கியமாக மாடுகளை எடுத்துக் கொண்டால் முதலாவதாக வருவது அதன் தீவனப் பிரச்னைதான். ஒரு சிலவிடங்களில் அதிகமாக தீவனங்களை உற்பத்தி செய்கிறார்கள். அதை நல்லமுறையில் பயன்படுத்தாமல் வீணடிக்கிறார்கள். ஒரு சிலவிடங்களில் தீவனங்கள் நல்லமுறையில் உற்பத்தியாவது இல்லை. இதை நன்கு கவனிப்பதற்காக நம் அரசு இந்த தீவனங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அதைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதாகத் தெரிகிறது. இத்திட்டத்தை நல்லமுறையில் அமல்படுத்தி ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விவசாயிகளுக்கு நல்ல பயிற்சி அளிப்பதோடுகூட கால்நடை மருந்துகளையும் நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் உள்ள பர்கூர் மாடுகள் நல்ல மலைஜாதி மாடுகள். அவை வேலைக்கு நன்றாகப் போகின்றன. அவை குறைந்த அளவு தீவனம்தான் எடுத்துக்கொள்கின்றன. அந்த பர்கூர் மாடுகளின் எண்ணிக்கை இப்போது

பெரிய முதலாளிகள் ஸ்டாக் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்டாக் வைத்துக் கொண்டிருந்து பின்னால் ஏதாவது அதிக விலை வரும், விற்கலாம் என சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே அரசு அதைக் கவனித்து உடனடியாக எல்லோருக்கும் உணவு கிடைக்கும்படியும். சாதாரணமாக இந்த 200 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ள ஏழைகளுக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் பண்ணைகளைப் பற்றி ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். பால் பண்ணையில் பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், கூட்டுறவுப் பால் பண்ணைகளை ஊக்குவிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். வால்பாறையில் ஒரு பால் பண்ணை இருக்கிறது. அது கூட்டுறவு முறையில் நடந்து வருகிறது. அவர்கள் பாலை மலை மேலேயிருந்து கீழே கொண்டு வந்து விற்க வேண்டியிருக்கிறது. அப்படி விற்பதற்கு எங்களுக்கு ஒரு வேன் வேண்டும், அதற்கான பண உதவி செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தை அந்த கூட்டுறவுப் பால் பண்ணை நிர்வாகிகள் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தேவையான பணத்தைக் கொடுத்து அதன் மூலம் அவர்கள் வான் வாங்கி, பாலை கீழே கொண்டு வந்து விற்பதற்கு உதவி செய்ய வேண்டும். அதே சமயத்தில் அவர்கள் மானியமும் கேட்டிருக்கிறார்கள். அந்த மானியங்களைக் கொடுத்தால் பால் பண்ணையை ஊக்கமாக நடத்தி அதன் மூலம் அதிகப் பால் கிடைக்க முடியும். பால் வினியோகிகளும் சந்தர்ப்பத்தில் அதிகப்படியான பால் கொடுக்கும் மாடுகளைத்தான் வாங்க வேண்டும். அங்கே காலேஜ் மாடு என்ற மாடு நான்கு அல்லது ஐந்து படி என்று அதிகமாகப் பால் கறக்கும் மாடுகள் இருக்கின்றன. இப்படி அதிகமாகப் பால் கறக்கும் மாடுகளை வாங்கிக் கொடுத்தால் பால் அதிகமாகக் கிடைக்கும். இப்போது கிராமப்பகுதியில் இருக்கிற மக்களுக்கும் சரியாகப் பால் கிடைப்பதில்லை. கிராமப்பகுதியிலும் ஒரு சென்டர் ஏற்படுத்தி அங்கேயிருந்து கிராமத்தில் பால் வினியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான், கிராமப் பகுதி மக்கள் பாலின் ருசியையாவது பார்த்து அனுபவிப்பார்கள்.

விவசாயிகளுக்கு முக்கியமானது, பிரதானமானது கால்நடைகள்தான். கால்நடைகள் நல்லபடியிருந்தால்தான் விவசாயம் செய்ய முடியும். ஆகையினால் கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்கும், கால்நடைகளின் வைத்தியத்துக்காகவும் பஞ்சாயத்து யூனியன்கள், சிறு சிறு பஞ்சாயத்துக்களில் கூட ஒரு சென்டர் வைத்து கால்நடை வைத்தியசாலை வைக்க வேண்டும். சாதாரணமாக ஒவ்வொரு இடங்களில் சிறு உதவியாளர்களை வைத்து விட்டுப் போய் விடுகிறார்கள். கால்நடை வைத்தியம் செய்வதற்கு அவர்களுக்குத் திறமை போதாது. ஆகையினால் உதவியாளரை வைக்காமல், நல்ல அனுபவம் உள்ள கால்நடை வைத்தியரை அந்தப் பகுதிகளில் வைத்து கால்நடைகளைப் பராமரிப்பதற்கும் விவசாயிகளுக்கு உதவி புரிவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு-வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தை ஆதரித்து என் கருத்துக்களை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாகவும், சிறப்பாகவும், உணவுக் கட்டுப்பாட்டை நீக்கியதன் மூலம் விவசாயிகளும், மக்களும் நல்ல நிலையைப் பெறுகிற அளவுக்கு, உற்பத்தி செய்கிற விவசாயிக்கு நியாயமான விலையைத் தந்து, அதே சமயத்தில் வாங்கி உண்கிறவர்களுக்கும் குறைவான விலையில் கிடைக்கிற அளவுக்கு கிடைக்கிற நிலையை செய்து தந்த மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், இந்த முயற்சியை மேற்கொண்ட உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் விவசாயிகள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதே நேரத்தில் ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் இந்த நேரத்தில் வைக்க விரும்புகிறேன். கைக்குத்தலரிசி கூட்டுறவு சங்கங்கள் வைத்து நடத்துகிறவர்களும் அந்தத் தொழிலில் பணியாற்றுகிறவர்களும் தாழ்ந்தப்பட்ட மக்களாகவும் அதையே நம்பி வாழ்கிறவர்களாகவும் இருக்கிற காரணத்தால் அந்த மக்களுக்கு கொள்முதல் லெவியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அதே போன்று மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்கிற நேரத்தில் அவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சலுகைகள் செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடைத் துறையைப் பற்றிப் பேச விரும்புகிற நேரத்தில் இதுவரை மக்களைத்தான் மதித்து வந்தார்கள்; மக்களுக்காகத்தான் காரியம் எல்லாம் செய்து வந்தார்கள். அந்த நிலை மாறி இன்றையதினம் விவசாயத்துக்குத் தேவையான கால்நடைகள், அதிலும் குறிப்பாக மாடுகள், ஒரு உயிர் இனத்தைச் சேர்ந்தவைகள் என்ற அடிப்படையில் கால்நடைத் துறையை விரிவுபடுத்தி, நல்ல முறையில் சீரமைப்பு செய்து, கிராமத்திலுள்ள மக்களின் குறைகளை எந்த அளவுக்கு கேட்க அதிகாரிகள் செல்லுகிறார்களோ, அதே போன்று கால்நடைகளின் குறைகளையும் கேட்டு, அவைகளுக்குத் தேவையான வசதிகளையும் செய்ய அதிகாரிகள் கிராமப்புறங்களுக்குச் செல்லுகிறார்கள். இந்த நிலைமையை ஏற்படுத்தி, சீரமைப்பைச் செய்து தந்ததற்காக அமைச்சர் அவர்களை நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, கால்நடை துறையைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே இருந்த நிலைமைகளையெல்லாம் அடியோடு மாற்றி, முன்னால் என்னென்ன நடைபெற்றதோ அதையெல்லாம், அந்த நிலைமைகளெல்லாம் நடைபெறக்கூடாது என்ற நிலையில் நல்லதொரு திட்டத்தை உருவாக்கி, அந்தத் திட்டத்தை உருவாக்குவதன் மூலமாக ஏற்கெனவே மாவட்டத்திற்கு ஒரு கால்நடை அதிகாரி என்றிருந்த நிலைமை போய், இன்றைய தினம் ஏறக்குறைய ஒரு மாவட்டத்திற்கு நான்கு முதல் எட்டு வரை உண்டான மாவட்டத்தில் துணை இயக்குநர்கள் என்ற அளவில் உருவாக்கி, ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தி, அதற்குக் கீழே 10 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு சப்-சென்டர் என்று உருவாக்கி இணைக்கப்படுவதன் மூலமாக நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கருத்தோடு, செயல் முறையின் மூலம் நல்லதொரு முறை செயல்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிச் செய்திருப்பதால்தான் பல சப்-சென்டர்கள், ஏற்கெனவே ஆயிரம் என்று இருந்ததை இன்றையதினம் 2,000 (இரண்டாயிரம்) என்ற அளவுக்கு இந்தச் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் செயல்படவிருக்கிறது.

கோழிப்பண்ணைகளைப் பொறுத்தவரையில், இதே மாமன்றத்தில் 1968-இல் சொன்னேன், கோழிகளுக்கு ஏர்கண்டிஷன் செய்யப் பட்டிருக்கிறது, மனிதர்கள் மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று அன்று சொன்னேன். ஆனால் இன்றைய தினம் பொறுப்பேற்றிருக்கும் அமைச்சரவர்கள் 74 கோழி இன வளர்ச்சி நிலையங்களில் 39 நிலையங்களை மூடியிருக்கிறார்கள் என்று சொல்லும்பொழுது, எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள், எல்லாவற்றிற்கும் மூடுவிழா செய்கிறார்களே என்று சொல்கிறார்களே தவிர, அது ஏன் செய்யப்படுகிறது, எதற்காகச் செய்யப்படுகிறது. அந்தக் கோழி இன வளர்ச்சி நிலையங்கள் மூலம் லாபம் வருகிறதா அல்லது நஷ்டம்தான் ஏற்படுகிறதா என்று பார்க்கவல்லை. அவைகளினால் லாபம் இல்லை, நஷ்டம்தான் ஏற்படுகிறது. பொதுமக்கள் பணம் பாழாக்கப்படுகிறது என்ற அளவுக்குத்தான் மூடப்படுகிறதே தவிர, வருவாய் தரக்கூடிய துறையை நிச்சயமாக மூடவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்றும் உணவு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்படிப்பட்ட கோழிகளை வளர்த்தால் நல்ல பலன் கிடைக்கும் என்று 1965-க்கு முன்னாலே பல பேர்களுக்குக் கடன் தரப்பட்டிருக்கிறது. அப்படி நம்பி வாங்கியவர்கள் இன்றைக்கு மிகவும் மோசமான நிலையில், அதைக் கட்டக் கூட முடியாமல் இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன், நிச்சயமாக 1,000 ரூபாய்க்கு மேற்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்யாதீர்கள், ஆனால் ஆயிரத்திற்கும் குறைவாக வாங்கியிருக்கும் அந்தக் கடன்களை நீங்கள் நிச்சயமாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மதுராந்தகத்தைப் பொறுத்தவரையில், அது விவசாயிகள் நிரம்பிய பகுதி. மதுராந்தகத்தைப் பொறுத்தவரையில், மேய்க்கால் புறம்போக்கு நிலங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. ஆகவே, அங்கே ஒரு கால்நடைப் பண்ணைக்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நல்ல சீரமைப்புத்திட்டத்தை செயல்படுத்திய மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒருசில வார்த்தைகள் கூற விழைகிறேன். இந்த உணவு விநியோகம் சம்பந்தமாக, இன்றைக்கு இந்தக் கண்ட்ரோலை எடுத்திருக்கும் நிலையில் எப்படி இன்றையதினம் இருக்கிறது என்பதை ஆழ்ந்த சிந்தனையோடு பார்க்க வேண்டும். அறிக்கையிலே கொடுத்திருக்கின்றீர்கள்,

'It has been the objective of this Government to remove controls on foodgrains at the earliest possible opportunity if and when circumstances become favourable'. என்று. ஆனால் ஃபேவரபிலாக இருக்கிறதா இல்லையா என்பதைக் கொஞ்சம் பார்க்க வேண்டும். ஃபேவரபிலாக இல்லை. அது அமைச்சரவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எங்கு பார்த்தாலும் அரிசியின் விலை வேகமாகக் கூடிக்கொண்டேயிருக்கிறது. தஞ்சாவூரிலேயெல்லாம் இப்பொழுது பார்த்தால் 35 ரூபாய், 36 ரூபாய் என்று சின்ன மூட்டைகளிலிருந்து வேகமாக அந்த விலை ஏறிக்கொண்டிருக்கிறது.





என்றால் அதை யாரும் மறுக்க முடியாது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும்கூட, இன்றையதினம், கூட்டுறவுத்துறையின் மூலமாக, மார்க்கெட்டிங் ஃபெடரேஷன், ஃபுட் கார்ப்பொரேஷன்களில் அந்த அரிசியை வாங்கிப்போடும் பொழுது ஒரே அடிதடியாக இருக்கிறது. கண்ட்ரோலை இன்னும் எப்படியும் ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்குள் கொண்டு வரப்படும் என்பதுதான் அடித்தளத்தின் கருத்து. இல்லையென்றால் முடியாது. இன்றைக்கிருக்கும் வியாபாரிகள் எங்கு பார்த்தாலும், நெல்லை வாங்கி அடுக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களின் நோக்கம் என்ன? மக்களுக்கு நன்மை இருக்க வேண்டும், அவர்கள் நன்றாகயிருந்தால்தான் நாமும் நன்றாகயிருக்க முடியும் என்ற எண்ணத்தை வியாபாரிகளிடம் காண முடியாது. அவர்கள் அடுக்கி வைத்துவிட்டார்கள். எவ்வளவுதான் நீங்கள் போலீஸ் கெடுபிடிகளையும், மொபைல் பார்ட்டிஸ்களையும் விட்டாலும்கூட, 'கள்ளன் பெரிதா காப்பான் பெரிதா' என்று சொல்வதைப்போல், உங்களால் அது முடியாது. அதிகமான நெல் தேங்கிக்கிடக்கிறது. அதே நேரத்தில், ஒவ்வொரு இடத்திலும் இருக்கும் விவசாயிகள் கூட, இப்பொழுதே இந்த நெல்லை நாம் கொடுத்துவிட்டால், பிறகு என்ன செய்வது? விலை மிகக் குறைந்த காலத்திலே நாம் ஏன் கொடுக்க வேண்டும்? லாபம் குறையுமே, அது நம்முடைய விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாதே என்று நினைத்துக் கொடுக்கத் தயங்குகிறார்கள். ஆனால் இன்றைய தினம் அரிசி விலை ஏறிக்கொண்டு போவதைப் பார்த்தால் எந்த ஒரு காரணத்திற்காக இதற்கு முன்னாலிருந்த ஆட்சி மாற்றப்பட்டதோ, அந்தக் காரணத்திற்கு நீங்கள் உட்படக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே நேரத்தில்

'The Government considered that if the controls are continued even in the context of favourable harvest and good prospects, a situation might develop in which the disadvantages of controls would far outweigh the marginal advantage to a section of the people and decided to dispense with the controls to the extent possible'.

என்று போட்டிருக்கிறது. இரண்டையும் ஒப்புக்கொள்ளுகின்றீர்கள். ஏன் இந்த நிலை? வியாபாரிகளிலும் ஒரு சிலர் விவசாயிகளுடமிருந்து நெல்லை வாங்கி அதை வெளியிலே விற்காமல், 'ஆர்டிபிஷியல் ஸ்கேர்சிட்டி' ஏற்படுத்தி, அதைப்பதுக்கி வைத்து, ஜனங்களுக்கு மிகவும் கஷ்டமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த நேரத்தில் என்னசெய்ய வேண்டுமென்றால், ஸ்டேட் டிரேடிங்கிலே, வாங்கி வைக்கலாம் நீங்கள் பின்னாலே கண்ட்ரோலை வைத்தால் எவ்வளவு ஸ்டாக் உங்களிடம் இருக்கிறது என்பது அறிக்கையிலே இருக்கிறதா என்றால் இல்லை. எவ்வளவு ஸ்டாக் வைத்திருக்கிறோம், விலைவாசி அதிகமாகப் போய்விட்டால் என்ன பாதுகாப்பு இருக்கிறது, இவ்வளவுதான் இருப்பு இருக்கிறது என்று சொல்லக் கூட ஆதாரம் இல்லை. ஆகையால் இரண்டு மாதங்களுக்குப் பிறகு கண்ட்ரோல் கொண்டு வந்தால் அரசாங்கம் எப்படி, யாரிடம் நெல்லை வாங்கி மக்களுக்கு நீங்கள் அளிக்கப்போகின்றீர்கள் என்பதற்கான உத்தரவாதம் எங்கேயிருக்கிறது? அமைச்சரவர்கள் அதற்கு விளக்கம் கொடுத்தால் தெளிவாக இருக்கும். வியாபாரிகளிடம் இருக்கும் நெல்லைக் கொடு என்று கேட்டால், நான் இவ்வளவு விலைக்கு வாங்கினேன், அந்த விலையைக் கொடுக்க வேண்டுமென்று சொல்ல, பிறகு கோர்ட்டிற்குப் போக இப்படியாக

'ஸ்மூத் அட்மினிஸ்ட்ரேஷன்' இல்லாமல் போவதும் கஷ்டப்படுவது ஜனங்கள்தான் என்பதை மறுக்க முடியாது. ஆகவே, உடனடியாகச் செய்ய வேண்டியது என்னவென்றால், தஞ்சாவூர் மாவட்டத்தில் 50 சதவிகிதம் கொடுத்துவிடு என்பதெல்லாம் வேண்டாம், ஸ்டேட் பூராவும். இருக்கும் அத்தனை நெல்லையும் வாங்கி, ஸ்டாக் செய்தாலொழிய முடியாது, இரண்டு மாதங்களிலே ஜனங்கள் படும் கஷ்டத்தைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இப்பொழுதே விலையேறிக்கொண்டிருக்கும் நேரத்தில், கையிலே இருக்கும் நெல்லை அறைத்து, கூட்டுறவு மூலமாக ஓரளவுக்கு ஹெல்தி காம்பெடிஷன் இருக்க வேண்டும். அரிசி விநியோகம் செய்து கொண்டிருக்க வேண்டும். அதோடுகூட இதை லேசாக நினைக்காமல், உடனடியாக ஸ்டேட் டிரேடிங் மூலமாக எங்கெங்கு இருக்கிறதோ அவைகளையும், அப்படியே நெல்லையும் வாங்கி வைத்து மக்களுக்கு விநியோகம் செய்யும் நிலையை ஏற்படுத்தவேண்டும்.

கடைசியாக, அனிமெல் ஹஸ்பெண்டரியை எடுத்துக்கொண்டால், பஞ்சாயத்துக்களில் சப் செண்டர்கள் திறக்கிறார்கள். முன்பு டிபார்ட்மெண்டிலேயே வைத்திருந்தார்கள். இப்பொழுது பஞ்சாயத்து கண்ட்ரோல். முதலிலே மருந்து கொடுத்தால், வெட்டனரி அசிஸ்டெண்ட்ஸ இன்ஜெக்ஷன் போடக்கூடாது. சப் செண்டர்களைத் திறந்துவிட்டு. இன்ஜெக்ஷன் போட முடியாது என்றால் அது புரியவில்லை. விளக்கமாக ஜீ.ஓ.-விலே இல்லை. அதைப் பார்க்க வேண்டும். சப் செண்டர்களில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும். எந்த அடிப்படையில் திறக்கிறார்கள், மக்கள்தொகை அடிப்படையில் சப் செண்டர்களைத் திறக்கிறார்களா, எப்படி என்று புரியவில்லை. அந்த அடிப்படை இல்லை. ஜனத்தொகை இருக்கும் இடங்களில் விவசாயத்தை நம்பியிருப்பவர்கள்தான் 80 சதவிகிதம் இருக்கக்கூடியவர்கள். அவர்களை அண்டித்தான் இந்தக் கால்நடைகளும் இருக்கும். அந்த ஜனத்தொகை அடிப்படையிலே சப் செண்டர்களைத் திறப்பதை நீங்கள் அம்மாதிரி வைத்துக்கொள்ளவில்லை என்றால் நாம் என்ன செய்தாலும் பிரயோசனமில்லை. இராஜபாளையம் நகரசபையில் சப் செண்டர் கிடையாது. எல்லாம் பஞ்சாயத்தோடு சரி. இதுபோன்ற சின்னச்சின்ன கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உடனடியாக அரசாங்கம் அவ்வளவு நெல்லையும் அப்படியே வாங்கி வைத்து, அதை ஸ்டேட் டிரேடிங் மூலம், எவ்வளவு பணமானாலும் செய்து, சீக்கிரம் கண்ட்ரோலைக் கொண்டு வருவது நல்லது. அது சம்பந்தமாக அமைச்சரவர்கள் ஒரு தெளிவை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை.)

* திரு. ம. பொ. சிவஞானம்: தலைவர் அவர்களே, இந்த அவை முன்னுள்ள மானியத்தை ஆதரித்து, இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உணவு அமைச்சரும்—குறிப்பாக, அமைச்சர் அவைக்கு தலைமை தாங்கும் முதல் அமைச்சரும் அதிருஷ்டசாலிகள் தான் இந்த ஆண்டு பருவ மழை தப்பாமல் பெய்தது.





வேதம் ஓதியவேதியர்க்கோர் மழை

நீதி மன்னர்நெறியினர்க்கோர் மழை

கற்புடைய மாதருக்கோர் மழை

என்று சொல்லப்பட்டிருப்பதுபோல், நீதி மந்திரிக்கோர் மழை பெய்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் இலக்கியத்தில் நம்பிக்கை உடையவர், தெய்வ பக்தி உடையவர். ஆதலால் அவர் என்னுடைய கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இல்லையென்றால், இட வித்தியாசத்தினால் கருத்து வித்தியாசம் இருக்கலாம். பருவ மழை பெய்ததின் பலனை மக்கள் அனுபவிக்க, மிகுந்த துணிச்சலோடு உணவுப் பங்கீட்டை எடுத்தீர்கள். காலம் கை கொடுக்கும் நேரத்தில் காரியத்தைத் திறமையாக ஆற்றுவதற்கான ஆற்றல் தங்களுக்கு இருப்பதை இது காட்டுகிறது. நான், அதற்காக தங்களையும், முதல் அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன். வரும் ஆண்டிலும் பருவ மழை பொய்க்காமல் பெய்யவேண்டும், பெய்யும் என்ற நம்பிக்கையோடு இருந்துகொண்டிருக்கிறோம். அப்படி ஒருகால் பருவ மழை பொய்த்துவிடுமாயின் அந்த நேரத்தில் தவறுகள் நேராமல், முன்கூட்டியே உணவுப் பொருள்களைத் தேக்கிவைத்து, மக்களுக்கு வழங்குவதற்கு ஆட்சி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உணவுத் துறை அமைச்சர் இது விஷயத்தில் எச்சரிக்கையாக இருப்பார் என்று நம்புகிறேன், அவர் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பங்கீட்டை ரத்து செய்த பிறகு படி அரிசித் திட்டம் அமுலில் இருக்கிற நகரங்களில் உணவுப் பங்கீட்டுக் கார்டுகளை புதியதாக வழங்குவதிலே அனாவசியமான தாமதம் ஏற்படுகிறது. ஏழை மக்கள் எம்.எல்.ஏ. என்ற முறையில் என்னிடம் வந்து முறையிடுவதால், எப்படி அவர்கள் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுகிறார்கள், எத்தனை நாள் தாமதப்படுகிறது, அந்த நாட்களில் எப்படி படி அரிசி வாங்க முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரிகிறது. இது குறித்து பல உணவுப் பங்கீட்டு அதிகாரிகளோடு நான் கோபமாகக் கூடப் பேசி, அவர்களை எச்சரித்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் இதை விசாரித்து, இந்தக் குறையை அகற்ற வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் நிதி அமைச்சர் அவர்களும், உணவு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களும் பல சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். அது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க கதர் கிராமக் கைத்தொழிலுக்கு உரிய விற்பனை வரியை ரத்து செய்திருப்பதாக அறிவித்தார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். அதே நேரத்தில் அமைச்சர் அவர்கள் இன்னொரு சலுகையும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெறும் ஆசை காரணமாக மட்டும் அல்ல; அனுபவம் காரணமாகவும் கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் படி அரிசித் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. நகரத்தின் தொகுதி ஒன்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற முறையில் ஒரு குறையை அகற்றுமாறு கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ரூ. 200 சம்பளம் வரம்புக்குட்பட்டவர்களுக்குத் தான் படி அரிசித் திட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி அமைச்சர் அவர்கள் அறிவித்த நேரத்தில் எசசரிக்கை

யோடு, அப்போது அம்மாதிரி அறிவித்ததை நான் பாராட்டுகிறேன். உணவு பங்கீடு ரத்து செய்யப்படுகிறது. அதனால் என்ன ஆகுமோ என்ற அச்சம் இருந்தநேரத்தில் அந்தச் சலுகைகள் ஓர் வரம்புக்குட்பட்டு நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். உணவுப் பங்கீட்டு முறை எடுபட்ட பிறகு, அந்த அச்சம் இப்பொழுது பெரிய அளவுக்கு நீங்கிவிட்டது. ஆகவே, ரூ. 200 என்றிருக்கிற வரம்பை ரூ. 300 என்று உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அதிகமாக உயர்த்தினால் எனக்கு ஆட்சேபனை இல்லை. எது அனுபவ சாத்தியமோ அதைச் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். பல வரிகளில் சலுகைகள் வழங்கியுள்ள இந்த நாளில் படி அரிசி திட்டத்திற்கும் ஒரு சலுகை வழங்கவேண்டும், படியரிசி திட்டத்திற்கு சலுகை வழங்கிய நாளாக இந்த நாளைச் செய்யவேண்டும் என்று உணவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரத்தில் படி அரிசித்திட்டம் அமுலில் இருப்பதினாலும், சென்னை நகரத் தொகுதி ஒன்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற முறையில் முதல் அமைச்சர் அவர்களும் சென்னை நகரத் தொகுதி ஒன்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற முறையில் ரூ. 200 என்று சம்பள வரம்பு வைத்திருப்பதை, ரூ. 300 என்று உயர்த்தக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. விநாயகம் அவர்கள் ரூ. 500 வரை இந்த வரம்பை உயர்த்தலாம் என்று சொல்கிறார்கள். அவர்கள் கட்சி ஆட்சிபுரிந்த காலத்தில் ஆரம்பித்து வைத்திருந்தால், நான் அவரைப் பின்பற்றுங்கள் என்று கேட்டிருப்பேன். என்ன செய்வது? சரித்திரம் வேறு மாதிரியாக இருக்கிறது. எனக்குத் துணிவு இல்லை, பேராசை இல்லை அப்படிக்கேட்க நியாய ஆசையின் பேரில்தான் கேட்கிறேன்—கிடைக்கக்கூடியதைத்தான் கேட்கிறேன். கொடுக்காவிட்டால் கோபப்படுவேன். கிடைக்காததைக் கேட்டு, கேட்டேன் என்று மக்களை திருப்தி செய்யும் பழக்கம் எனக்கு இல்லை. எனக்குப் பேராசை கிடையாது. முறையாகக் கொடுக்க முடிவதைத் தான் நான் கேட்டேன். உணவு அமைச்சர் அவர்கள் அதைச் சிந்தித்துப் பார்த்துக் கொடுப்பார் என்று நம்புகிறேன். ரூ. 200-லிருந்து ரூ. 300-க்கு இந்த வரம்பை உயர்த்தவேண்டுமென்று கேட்டேன். திரு. விநாயகம் அவர்கள் சொல்லியதை அமைச்சர் அவர்கள் ஏற்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை. எது அவசியமோ, எதைக் கொடுக்க முடியுமோ அதை நான் கேட்டிருக்கிறேன். அந்தச் சலுகையை உணவு அமைச்சர் அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்காகத் தான் இரண்டாவது முறையாகப் பேச விரும்பி, அவைத் தலைவரின் அனுமதி பெற்றேன். அனுமதி தந்ததற்கு அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

***திரு. எம். கோபால்:** அவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய கால்நடைத்துறை மானியத்தின்மீது பேசவாய்ப்பு அளித்த தங்களுக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடை உணவின் ஒரு பகுதியாகும். நமது நாட்டில் தொன்றுதொட்டு கால்நடை எவ்வளவு பெருகியிருக்கிறதோ, அவ்வளவு உணவிலும் ஒரு பங்காக அது பெருகியிருக்கிறது. நமது கால்நடை ஒரு குறிப்பிட்ட பகுதியிலே வளராமல் பெருகி வந்திருக்கிறது. கால்நடைகள் நல்ல முறையில் பெருகுவதற்கும், அவைகள் ஆரோக்கியத்தோடு வளர்வதற்கும் போதுமான வசதிகள் கிடையாது. அதற்காக நான் ஒரு சிறிய யோசனையைச் சொல்கிறேன். ஒவ்வொரு தொகுதியிலும், ஒவ்வொரு வட்டத்





திலும் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டுள்ள பாரெஸ்டு இலாகாவில் உள்ள நிலங்களை செம்மைபடுத்தி, ஆங்காங்கு கிணறுகளையும் குளங்களையும் வெட்டி, அந்த இலாகாவே ஓரத்தில் முள்வேலி அமைத்து, அதற்குள்ளே எதேச்சையாக நடமாடும்படி கால்நடைகளை விட்டுவிட்டால், எப்படி காடுகளில் மிருகங்கள் திரிந்து வளருகின்றனவோ, அம்மாதிரி உற்சாகத்தோடு, ஆரோக்கியத்தோடு வளருவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, நமது நாட்டில் ஒரு காலத்தில் கால் நடைகளின், ஆடுகளின் ரோமத்தால் செய்யப்பட்ட கம்பளங்கள், சென்னை, கோடம்பாக்கம், சேலம், வாலாஜாபாத் ஆகிய இடங்களில் நெசவு மில்களில் நெய்யப்பட்ட கம்பளங்கள் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தன. அந்தக் கம்பளங்கள் இல்லாவிட்டால் அங்குள்ள மக்கள் வாழ முடியாது என்ற நிலை ஒரு காலத்தில் இருந்தது. ஆனால், இப்பொழுது நின்றுவிட்டது. காரணம், நம்முடைய கால்நடைகளிலிருந்து அதற்கு வேண்டிய ரோமம் கிடைக்கவில்லை. ஆகவே, நல்ல கால்நடைகளை, ஆடுகளை, செம்மறி ஆடுகளை நாம் வளர்த்தோமானால், இங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தினால் தவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். சர்க்காரே இதற்காக ஒரு நல்ல நெசவு ஆலை ஏற்படுத்தி, மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, உணவுக் கட்டுப்பாட்டை தளர்த்தியதற்காக நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். காரணம் என்னுடைய தொகுதி மக்கள் ஒரு படி அரிசி ரூ. 2, 2½ என்று வாங்கிக் கொண்டிருந்த மக்கள், இப்பொழுது கட்டுப்பாடு நீங்கியதால் ரூ. 1¼, 1½ போன்ற விலைக்கு நல்ல முறையில் வாங்கி உண்ணுகிறார்கள். உள்ளபடியே இதற்காக அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

மற்றொன்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னையைச் சேர்ந்தாற்போல் உள்ள தொகுதி என்னுடைய தொகுதி. மதுரைவாயல், கோயம்பேடு, அம்பத்தூர், ஆவடி ஆகிய பகுதிகளில் சென்னையைப்போல நில விவசாயம் கிடையாது. சென்னையைப் போல அங்கே கார்டுகள் கொடுத்திருந்தார்கள். இன்றுவரையில் புதுக் கார்டுகள் கொடுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து அந்தப் பகுதி மக்களுக்கும் சென்னையைப் பிற்
போல அந்தக் கார்டுகளை வழங்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் பகல் 12-30
கொள்கிறேன். காரணம், அவர்கள் எல்லாம் தொழிலாள மக்கள், உள்ளபடியே அவர்கள் இந்நாள் வரையில் உணவுக் கட்டுப்பாட்டின் பலனை அனுபவித்து வாழ்ந்து கொண்டு வந்தவர்கள். ஆகவே, சென்னை நகரத்தில் உள்ளவர்களுக்கு ஒரு படி அரிசி வழங்குவதைப்போல் அவர்களுக்கும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவுக் கட்டுப்பாடு பற்றிப் பேசினார்கள். இப்பொழுது ஏரிகளெல்லாம் நிரம்பியிருக்கின்றன. ஐ.ஆர். 8 பயிரிடப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் சென்றால் நல்ல விளைச்சல் ஏற்படக்கூடும். நல்ல விளைச்சல் ஏற்படும்போது உள்ளபடியே, ஒப்பற்ற மாபெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்த லட்சியமாகிய எல்லா மக்களும் ரூபாய்க்கு ஒரு படி

அரிசி பெற வேண்டும் என்ற நிலை வந்துவிடும் என்று நான் எண்ணுகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் நல்ல விவசாயம் நடைபெற்று வருகிறது. இன்னும் ஏரிகளையும் கால்வாய்களையும் ஒழுங்காக நல்ல முறையில் செப்பனிட்டுச் சீர்திருத்த வேண்டும். அதிலே அமைச்சரவர்கள் கொஞ்சம் பங்கெடுத்துக் கொண்டால் தண்ணீர் வீணாகாமல் விவசாயத்திற்குப் பயன் பட்டு, அடுத்த ஒரு போகமும் பயிரிடக்கூடிய வழி ஏற்படும். எனவே அமைச்சரவர்களை நான் மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்---உணவுக் கட்டுப் பாட்டை எடுத்தது நல்ல சாதனை. எடுத்த அந்தக் காரியத்தை நான் மட்டு மல்ல, நாட்டு மக்களே உங்களைப் பாராட்டுகிறார்கள். காரணம், இப்பொழுது நல்ல அரிசியாகக் கிடைக்கிறது; வாங்கிச் சாப்பிட முடிகிறது. முன்பெல்லாம் ஏதோ சர்க்கார் கொடுத்த காடு முரடான அரிசியை வாங்கிச் சாப்பிட்ட நிலை, இப்பொழுது மாறிவிட்டது. இப்பொழுது கிடைக்கும் அரிசியை வடித்துச் சாப்பிடும்போது நல்ல ருசியாக இருக்கிறது என்பதைக் குறித்து அமைச்சரை உளமாரப் பாராட்டி விடைபெறுகிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன்:** சபாநாயகர் அவர்களே, சபைமுன் மூன்று மானியக் கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றைப் பற்றியும் பேசுவதற்கு நேரம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகையால், குறிப்பாக இரண்டொன்றை மட்டும் சொல்லி, உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன் பேசிய உயர்திரு மா. பொ. சி. அவர்கள், '200 ரூபாய்' என்று வரையறை வைத்திருப்பதை '300 ரூபாய்' என்று வைத்து, அந்த வருவாய் உள்ளவர்களுக்கு உணவுப் பொருள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்ற கோரினார். இந்த உணவுப் பொருள் சம்பந்தமாக நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன். அவர் கூறுவது மிகவும் நியாயமானது, தேவையானது என்பதை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. அதிலே இன்னும் ஒரு திருத்தம்கூட நான் ஏற்கனவே கூறி யிருப்பதை இப்பொழுது ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஏதோ ஒருசில இடத்தில் இருக்கின்றவர்கள் மட்டுந்தான் ஏழ்மையானவர்கள் என்பதல்ல. இந்த ராஜ்யத்தில் இருக்கின்ற ஏழ்மையான மக்கள் அத்தனை பேருக்கும் நாம் உதவி செய்வதுதான் நீதியானது. அந்த உதவி செய்வதில் உள்ள சிரமங்களை என்றால் புரிந்து கொள்ள முடியும். இருந்தாலும்கூட ஏதோ இரண்டு இடங் களில் மட்டும் ரேஷன் இருந்தது. அதனால் அந்த இடங்களில் மட்டும் ஒரு படி அரிசி போடுகின்றோம் என்று சொல்லுவதும், அதை எடுத்துவிட்ட பிறகும் 200 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு அந்த இடங்களில் மட்டுந்தான் போடுகிறோம் என்று சொல்வதும் சரியானதாக இல்லை என்று பணிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, ராஜ்யத்தினுடைய எந்தப் பகுதியில் இருக்கின்றவர்களாக இருந்தாலும், ஒரு விதிமுறை ரூ. 200, ரூ. 300, ரூ. 500 என்று எது வைத்துக்கொண்டாலும், அந்த விதிமுறை எல்லா இடங்களுக்கும் பொருந்தக்கூடிய முறையில் இருக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒரு குறிப்பிட்ட விஷயம் இந்தக் கால்நடை உதவியாளர்கள் [illegible]பட்டது. கால்நடை உதவியாளர்கள் தங்களுடைய கோரிக்கை [illegible] பல நாட்கள் முயற்சி செய்தும், எவ்விதமான பலனும் கிடைக்





காததால் அவர்கள் ஓர் ஊர்வலமாக வந்து ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இது குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் ஒரு அறிக்கை வெளியிடுகின்ற நிலை ஏற்பட்டதை நாம் பார்த்திருக்கின்றோம். அவர்கள் அம்மாதிரி ஊர்வலமாக வந்தபோது நானும், மற்ற கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்களும், காங்கிரசைச் சார்ந்த வர்களும், இதர எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் அவர்களைச் சென்று விசாரித்தபோது, அவர்கள், 'அமைச்சர்களைப் பார்ப்பதற்குச் செல்லு கின்றோம்', என்று கூறினார்கள். 'நீங்கள் சென்று உங்களுடைய குறைகளை முறையிடுங்கள்' என்று சொல்லி நாங்கள் திரும்பிவந்து விட்டோம். அதற்குப் பின்னர் முதலமைச்சரவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். அங்கே சொல்லியனுப்பியும்கூட அவர்கள் வரவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இதன்பின் நான் சென்று அவர்களை விசாரித்தபோது அவர்கள் கூறினார்கள்; "அஸிஸ்டெண்ட் காரியதரிசி ஒருவர் எங்களிடத்தில் கேட்டார்கள், முதல் அமைச்சரிடத்தில் பேசுவதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?" என்று நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று சொன்னோம். ஆனால் எங்களை எப்போது வரவேண்டும் என்றோ, எங்கே வரவேண்டும் என்றோ எவ்வித மான தகவலும் தரவில்லை. அதோடு, அமைச்சர்களைப் பார்க்க வேண்டும் என்று முன்னதாகவே நாங்கள் எழுதியிருந்தோம்; அதற்கு எங்களுக்கு எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லை; ஆகவேதான் நாங்கள் இம்மாதிரி யான காரியங்களைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதே தவிர, அம் மாதிரி அமைச்சர் கூறியபடி பேசுவதற்குத் தயாராக இல்லை என்று சொன்னால் எங்களுடைய கோரிக்கைகளைத் தீர்த்துக்கொள்வது எப்படி? அவர்களுடன் பேசித்தானே தீர்த்துக்கொள்ள முடியும்? நாங்களும் ஏதோ எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்களாக இருக்கின்றோம். அப்படிப் புறக்கணித்து நாங்கள் காரியங்கள் செய்யக்கூடியவர்கள் அல்ல என்று அவர்கள் என்னிடத்தில் கூறினார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கோரிக்கைகளைத் தீர்த்துக்கொள்வது என்றால், எடுத்த எடுப்பிலேயே 'அறப்போர்' என்று போட்டு, சுவரொட்டிகளை ஒட்டுவது, வெளியூர்களில் இருக்கின்ற அரசு ஊழியர்கள் எந்தவிதமான உத்தரவும் யாரிடத்திலும் பெறாமல், பஸ்ஸில் ஏறிக் கொண்டு செல்வது, ஊர்வலம் நடத்துவது, ஊர்வலத்தில் அமைச்சர்களையும் அரசையும் பற்றித் தாறுமாறாகக் கோஷங்களை எழுப்புவது, அரசு ஊழியர் களுக்குப் பொருத்தந்தானா? அது விதிமுறைகளை மீறிய செயல் ஆகாதா?— என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் விளக்க வேண்டுகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** சபாநாயகர் அவர்களே, ஒழுங்கீனமாக நடப்பது எந்தவகையிலும் சரியானது என்று நான் கருதவில்லை. அப்படி நடக்கக் கூடாது என்று நான் நிச்சயமாக எண்ணுகின்றேன். ஆனால், அவர்களுடைய கோரிக்கைகளைப் பல வருஷங்களாகப் பல மாநாடுகள் கூடி, தீர்மானங்கள் போட்டு, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள், என்று அவர்கள் என்னிடத்திலே கூறினார்கள். இதையும் சேர்த்துப் பார்த்தால்தான் அவர்கள் செய்தது ஒழுங்கா, அல்லவா என்று தெரியும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அவர்கள் கூறினார்கள், அவர்கள் கூறினார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். முதல் அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே படித்த அறிக்கையில், என்னிடத்தில் அப்படி யாரும் சந்திக்கவில்லை என்ற உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் சொல்லி இருக்கின்ற அந்த உண்மையை உறுப்பினரவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? அல்லது, கால்நடை உதவியாளர்கள் சொல்வதுதான் உண்மை, முதலமைச்சரவர்கள் சொல்வது சரியல்ல என்று உறுப்பினரவர்கள் சொல்ல விரும்புகிறாரா என்பது புரியவில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** நான் ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் இதில் பிரச்சினையே இல்லை. ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அதில் கூறிய உண்மை ஒருவேளை சரியானதாக இருக்கலாம்; சரியில்லாமலும் போகலாம். ஏனென்றால், அமைச்சர்கள் சொல்லுகின்ற காரியங்களை அதிகாரிகள் சரியாகச் செய்தாரா இல்லையா என்று நிச்சயிக்கக்கூடிய நிலை சில நேரங்களில் இல்லை. ஆகவேதான், இம்மாதிரி ஓர் அறிக்கையில் கூறியிருக்கின்றார்கள். திரு. கோவிந்தசாமி அவர்கள் அமைச்சராக இருந்தபோது ஒரு மாநாடு கூடியது. அந்த மாநாட்டில், கால்நடை உதவியாளர்களுடைய கோரிக்கைகளை அனுதாபத்துடன் கவனிப்பதாக திரு. கோவிந்தசாமி அவர்கள் ஒத்துக் கொண்டிருந்தார்கள் என்று கூறியிருக்கின்றார்கள். ஆகவே, அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இவைகள் இருக்கின்றன. முதல் அமைச்சர் அவர்கள் கூறியது சரியா, சரியில்லையா என்கிற விஷயத்திற்கு நான் வரவில்லை. எப்படியிருந்தாலும் சரி, அவர்கள் ஒரு பிரசினையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதை அனுதாபத்துடன் பரிசீலிக்க வேண்டிய ஒரு காரியத்தை நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் உங்களுக்குச் சொல்லுவதற்காகத்தான் இந்த விஷயத்தைச் சொல்லுகிறேனே தவிர, வேறு காரணங்கள் இல்லை. அவர்களுடைய கோரிக்கைகளைக்கூட நான் பார்த்தவரையில், ஒன்றும் பெரிய பொருளாதாரப் பளு நமக்கு ஏற்படக்கூடிய கோரிக்கைகள் அதிகமாக இல்லை அவர்கள் படிப்பதற்கு அனுமதி வேண்டும் என்று கோருகிறார்கள். அவர்களுடைய அந்தஸ்தை சிறிது உயர்த்தவேண்டும் என்று கோருகிறார்கள். வேலையில் அளவுகளை, முறைகளை நிச்சயப்படுத்த வேண்டும் என்று கோருகிறார்கள். அவர்கள் வைத்த கோரிக்கைகளில் இவைகள் முக்கியமானவையாக இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். ஆகவே, அவர்கள் அம்மாதிரி செய்ததற்குப் பின்னால் அவர்கள் இங்கே வந்து அமைச்சர்களைப் பார்க்க வேண்டும் என்று கேட்கும்போது, அவர்கள் இப்படிச் செய்துவிட்டார்களே என்று நாமும் இருந்துவிடக்கூடாது. ஏனென்றால், அவர்கள் மிகவும் சாதாரணமானவர்கள், பலம் இல்லாதவர்கள், சக்தி இல்லாதவர்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அமைச்சரவையில் இருப்பவர்கள் பலம் உள்ளவர்கள், எல்லாவிதமான அதிகாரமும் பெற்றவர்கள்; எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் தகுதி உள்ளவர்கள். அப்படியிருக்கின்றபோது, பலஹீனமானவர்களின் பிரச்சினைகளை அனுதாபத்துடன் கவனித்து, அவர்களுக்குப் புத்திமதி கூறி, நீங்கள் இம்மாதிரி நடந்துகொள்ளக் கூடாது. நடந்துகொள்வது மிகவும் குற்றமானது என்று அறிவுறுத்தி, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் காரியங்கள் நடந்திருந்தால் மிகவும் நன்றாக



இருந்திருக்கும் என்கிற என்னுடைய சிறிய கருத்தைக் கூறிக்கொண்டு, இந்த விஷயத்தைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு உதவிகரமாகவும், அனுதாபத்துடனும், கோபம் கொள்ளாமலும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு . . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கோபம் கொள்ளுவதற்கு ஒன்றுமில்லை. நான் அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். அனுதாபம் காட்டுவது வேறு; விதியை மீறுகிறவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது வேறு. இந்த அரசு நிச்சயமாக அனுதாபமும் காட்டும்; விதியை யார் மீறினாலும் அவர்கள்மீது நடவடிக்கையும் எடுக்கும். அதிலே எந்தவிதமான பின்வாங்கலும் இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** முதலமைச்சரவர்கள் அனுதாபத்துடன் இருப்பார்கள் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. விதிகளை மீறுகிறவர்கள்மீது நடவடிக்கை எடுப்போம் என்பதும் சரியானதுதான். ஆனால், இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமையிலே மேற்கொண்டு அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அவர்கள்மீது அனுதாபத்துடன் பிரச்சினைகளைக் கவனிப்பார்கள் என்று நம்பி என்னுடைய உரையை முடிக்கின்றேன். முதலமைச்சரவர்கள் சொல்லிய விளக்கத்திற்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

* **திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு பால் வினியோகம் போன்ற பல்வேறு மானியங்கள்மீது எங்களுடைய கருத்தை அவைமுன் வைக்க ஆசைப்படுகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்க கால்நடை இன்றியமையாதது என்று அமைச்சரவர்களே கூறியுள்ளார். அது சம்பந்தமாகத் திட்டமிட்ட அறிவியல் முறையில் கால்நடை வளர்ப்பு மிக மிக அவசியம் என்றும் கூறியுள்ளார். அதையும் தவிர, தரமான கால்நடைகள், கோழிகள், பன்றிகள், எருமைகள் போன்ற இவைகளின் இனங்களை வளர்ப்பதற்கும், அதே சமயத்தில் வீரியமான தாதுவைச் சேமித்து வைத்து, அவைகளை உபயோகப்படுத்தி, அதிகமான கால்நடைகளை வளர்ப்பதற்கும் இவைகளெல்லாம் உதவிகரமாக இருக்கும். கருச் சிதைவு ஏற்படாமலிருக்க நாம் பல்வேறு நடவடிக்கைகளை அவசியம் எடுத்தாக வேண்டும். இவைகளுக்கெல்லாம் இன்றைக்கு இருக்கும் கால்நடை மருத்துவர்கள், அவர்களுக்கு உதவிகரமாக இருக்கின்ற உதவியாளர்கள் மிக மிக அவசியம் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் தற்சமயம் ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு நோய்களையும் தடுக்க நம்மிடம் இருகின்ற 35 கால் நடை மருத்துவமனைகளும், 434 கால்நடை மருந்தகங்களும், சில மருத்துவர்களும் உதவி மருத்துவர்களும், 800 கால்நடை உதவியாளர்களும் மிகக் குறைவாக இருக்கிறது. தமிழகத்தில் சுமார் 253 லட்சம் கால்நடைகளும், 112 லட்சம் கோழி வகைகளும் இருக்கின்றன. 365 லட்சம் கால்நடை, கோழிகள் இவற்றைப் பராமரிக்க உதவியாளர்கள் அவசியம். இவற்றைப் பாதுகாக்க நல்ல முறைகளில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றையதினம் கால்நடை உதவியாளர்களுடைய கோரிக்கைகள் சாதாரணமானவைதான். அவற்றைக் கருணையுடன் பரிசீலனை செய்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் கோரிக்கை

களுக்கு எல்லாம், அதிகமான நிதி வசதி தேவையில்லை; சிறப்பான முறையில் அவர்களைப் பராமரிக்க முடியும். ஆகவே, அந்த வகையில் உறுதுணையாக இருந்து அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் கோரிக்கைகள் சிகிச்சை உரிமை வேண்டும், அதாவது அவர்களை பி. பிரிவு வெடரினரி பிராக்டிஷனர்களாக அங்கீகரிக்க வேண்டும், மேற்படிப்பு படிக்க வசதி வேண்டும் என கோரியுள்ளனர்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கால்நடை உதவியாளர்கள் டாக்டர்களாக தாங்கள் பணியாற்ற வேண்டும் என்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்தக் கோரிக்கையை உறுப்பினர் அவர்கள் ஆதரிக்கிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். பூபதி :** அமைச்சரவர்கள் சொன்னார்கள், படிப்படியாகச் செய்யவேண்டும் என்று அனுபவம் பெற்றவர்கள் இருக்கின்றபோது, கிடைக்கின்ற திறமையையும் வைத்துக் கொண்டு செய்யலாம் என்பதால், நாங்கள் ஆதரிக்கின்றோம். அதே சமயத்தில் கால்நடை உதவியாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்றும் கோரியிருக்கிறார்கள். சர்தாரணமாக 240 நாட்கள் வேலை செய்தாலேயே தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கும்போது, 8 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய பின்பும்இன்னமும் நிரந்தரமாகப் படாமல் இருப்பது நியாயம் இல்லை. மேலும், அவர்கள் வரையறுக்கப்பட்ட வேலை நிர்ணயம் வேண்டும் என்கிறார்கள். பொது விடுப்பு நாட்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு ஈடுசெய்யும் விடுப்பு வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு பொது விடுமுறைகளோ, மற்ற தேசிய விடுமுறைகளோ கிடையாது. ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலை செய்கிறார்கள். ஆகவே, இந்தக் கோரிக்கையை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும்.

அடுத்து, எட்டு ஆண்டுகள் உழைப்புக் காலம் முடிந்த கால்நடை உதவியாளர்கள் இரண்டாவது கிரேடில் இருக்கிறவர்களும் முதல் கிரேடுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று அரசு ஆணை எண். 2271, வேளாண்மைத் துறை, 7--7--1969 என்ற உத்தரவுகள் இருக்கின்றன. அதை அமுல் நடத்த வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். கால்நடை உதவியாளர்கள் முதல் கிரேடில் இருப்பவர்கள் பதவி உயர்வு பெற்றவர்க்கும், நேரடியாக தேர்ந்தெடுத்த அனைவருக்கும் ஒரே சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒரே மாதிரி வேலைக்கு ஒரே மாதிரி சம்பளம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குறைந்த பட்சக் கோரிக்கைகளையாவது பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சபையில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். விசாரித்தபோது, கால்நடை உதவியாளர்கள் அவர்கள் 28--5--1967 அன்றும், 27--11--1968 அன்றும் சேலத்திலும், தஞ்சையிலும் நடைபெற்ற மாநாட்டின் போதும், நம்முடைய அமைச்சரிடம் கோரிக்கைகளைக் கூறப்பட்டதாகவும், சொல்லியிருக்கிறார்கள். முதல் அமைச்சரிடம் 10--3--1969 அன்று முறையிட்டுக் குறை தீர்க்க வேண்டும் என்று கேட்டனர். மீண்டும் 21--6--1969-ல் ஆடுதுறையில் முதல் அமைச்சரிடம்



முறையிட்டனர். 18--7--1969-ல் இன்றைய தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் அவர்கள் மூலம், கால்நடை பராமரிப்பு அமைச்சரிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பிறகு 12--8--1969 தேதியிலும், 28--10--1969 தேதியிலும் சென்னையில் கால்நடை பராமரிப்பு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்களிடம் கோரிக்கைகளை கொடுத்திருக்கிறார்கள். அதன் பிறகு 7--3--1970-ம் தேதியன்று திரு. சி. பி. சிற்றரசுடன் சங்கப் பிரதிநிதிகளும் வந்து அமைச்சர்களிடம் கோரிக்கைகளை விளக்கியிருக்கிறார்கள் இருந்தும் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறவில்லை. 8 முறைகளில் தங்கள் கோரிக்கைகளை எடுத்துக் கூறியும் தங்களுடைய காரியதரிசியை திடீரென இரவில் ட்ரான்ஸ்பர்--மாற்றம்--செய்தாலும் வேறு வகை தெரியாமல் அவர்கள் சென்னைக்கு வந்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை பேச்சு வார்த்தை நடத்த முதல்வர் அழைத்த பிறகும் வரவில்லை என்றார்கள். அழைப்பு கிடைத்திருந்தால் அவர்கள் கண்டிப்பாக வராமல் இருக்க முடியாது. காரணம், அதற்காகவேதான் வந்தவர்கள். ஆகவே, எங்கேயோ சின்னத் தவறு நடந்திருக்கிறது. ஆகவே, அமைச்சர் கருணையுடன் அவர்கள் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, தக்க பரிகாரம் காணவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். இது ஒரு சிறு விஷயம். மத்திய சர்க்கார் ஊழியர்கள் பிரதமரின் வீட்டுமுன் உண்ணாவிரதம் இருந்து போராட்டம் நடத்திய பிறகு, பிரதமரிடம் அவர்கள் அனைவரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று எல்லா முற்போக்குக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வற்புறுத்தி வேலைகளுக்கு எடுக்கும்படி செய்துள்ளோம். ஆகவே, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு ஒரு கொள்கையையும், மாநில சர்க்கார் ஊழியர்கள்பால் வேறொரு கொள்கையையும் கொள்ளக்கூடாது என்று வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்து, அருள்கூர்ந்து நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, இந்த பால் பண்ணை விஷயமாக ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பால் ஒரு இன்றியமையாத உணவு என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இந்த விஷயத்தில் சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் முறையாக காலத்தில் நடைமுறைக்கு வரவில்லை என்பதை அமைச்சருக்குத் தெரிவிக்கிறேன். குறிப்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும், 'டையரி யூனிட்' என்ற பெயரில் விரிவான பால் பண்ணை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவியோடு, தஞ்சை மாவட்டத்தில் கொள்ளிடத்தில் என்னுடைய சொந்த முயற்சியால், 400 பேர்களைக் கொண்ட டையரி யூனிட் ஒன்றை ஆரம்பித்தேன். அதற்கான பணத்தை ஒரே காலத்தில் சர்க்கார் கொடுத்து உதவியது. 200 பேர்களுக்கு பணத்தைக் கட்டி முயற்சியில் ஈடுபடும்போது, கடந்த ஆண்டு திட்டத்தில் ஒதுக்கிய பணம் இன்று வரை செலவிடப்படவில்லை என்று சொன்னால், இதற்காகப் போடும் திட்டங்கள், செயல் முறைகள் நாட்டில் மக்களுக்கு எப்படிப் பயன் அளிக்கும் என்று புரியவில்லை. குறிப்பாக டையரி யூனிட்டில் இரண்டு விஷயங்கள். அரிசன் என்று இருந்தால், டிபார்ட்மெண்டில் சப்சிடி, லோன் என்று கொடுக்கப்படுகிறது. 300 ரூபாய் என்பதை இப்பொழுது 500 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். அது பெருமைப்படத் தக்க விஷயமாக

இருக்கிறது. இருந்தாலும், திட்டப்படி ஒரு ஊரிலே 50-க்கு மேல் கொடுக்கக் கூடாது என்று செய்திருக்கிறார்கள். ஒரு வயபிள் யூனிட்டுக்கு 200-க்கு மேற்பட்டவர்கள் வேண்டும். ஆகையினால் அப்படி வெல்பேர் டிபார்ட்மெண்டில் பால் பண்ணைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு தனிச் சலுகை கொடுத்து, 100-க்கு மேற்பட்டவர்களுக்கு பணம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதே நோக்கில் வயபிள் யூனிட் டெபாசிட் கட்டி, ரெஜிஸ்ட்ரார் மூலம் சிபாரிசு செய்துவரும் அத்தனை பேர்களுக்கும் பணம் கொடுக்க உத்தரவாதம் இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அப்பொழுது அது சிறப்பாக நடக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கால்நடை சம்பந்தமாகச் சொல்லும்போது, 'கீ சென்டர்ஸ்' எங்கள் யூனியனில் 4 சென்டர்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகஸ்தர்களும் சேர்ந்துவிட்டார்கள். ஆனால் என்ன வேலைசெய்வது என்று புரியவில்லை. ஊசி போடுவது, மருந்து கொடுப்பது என்று எதுவாக இருந்தாலும் இவர்களுக்கு அனுமதியில்லை. டாக்டர் வரவேண்டும் என்கிறார்கள். படிபடியாகச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் சொன்னார்கள். ஒரு கம்பவுண்டர் டாக்டர் வேலை செய்ய முடியுமா என்றால், உண்மையிலேயே இப்பொழுது ஆசிரியர்களையும் மற்றவர்களையும் 'பர்ஸ்ட் எய்ட்' செய்யலாம் என்று சொல்லும்போது, அனுபவத்தின் மேல், இவர்களை உபயோகிக்க வேண்டும். இல்லை என்றால் கீ சென்டர்கள் வைப்பதால் பிரயோசனம் இல்லை. இவர்கள் ஊசி போடுவதிலிருந்து, எல்லா வேலைகளையும், செய்ய வேண்டும். எல்லாக் காரியத்திற்கும் டாக்டர் ஓடிவந்து, 4, 8 மைலி லிருந்து வந்து வைத்தியம் செய்வது என்பது முடியாது.

பஞ்சாயத்து யூனியன்களில் கால்நடை விஸ்தரிப்புக்கு என்று பணம் கொடுக்கிறார்கள். ஆனால், விஸ்தரிப்பு அதிகாரி எடுக்கப்பட்டு விட்டார். அவர் கீ சென்டருக்குப் போய்விட்டார். டெக்னிகல் பர்சனல் இல்லை என்றால், யூனியன்களில் ஒதுக்கப்பட்ட அலாட்மெண்டை உபயோகப்படுத்த முடியவில்லை.

இறுதியாக, ரேஷன் கட்டுப்பாட்டை சென்னையிலே எடுத்து விட்டதாகச் சொன்னாலும், அமைச்சருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன், ஆனாலும் அவ்வளவு தூரம் அவருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதோ என்னவோ தெரியாது, கடந்த ரேஷன்போது, சீனி கிடைக்க வேண்டும் என்று தொழி லாளர்கள் தங்கள் சம்பளத்தை அதிகமாகச் சொல்லி, கார்டுகளில் பதிவு செய்துகொண்டுவிட்டார்கள். இப்பொழுது 200 ரூபாய் சம்பளக்காரர்களுக்கு என்று சொல்லும்போது, அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் கஷ்டங்கள் ஏற்படட்டிருக்கின்றன. ரேஷன் அதிகாரிகளிடம் தகாறு ஏற்படு கிறது. தயவுசெய்து இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன். திரு. அரங்கண்ணல் குறிப்பிட்டதுபோல், முன்னால் தவறு செய்து விட்டதற்கு ஒரு வார்னிங் கொடுத்துவிட்டு, மறுபடியும் புதிதாக, உண்மை யாகப் பதிவு செய்துகொள்ள சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். அந்த வகையில் கார்டுகள், உண்மையான சம்பளத்தைக் காட்டும் வகையில் ஏற்பாடு செய்யப் படவேண்டும். இதையே ரூ. 300 என்ற அளவில் சம்பளம் உள்ளவர்கள்கூட ரேஷன் பெறலாம் என்றும் விதியை மாற்றியமைக்- வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



இறுதியாக ரேஷன் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது தஞ்சாவூரில் நிலைமை மிகவும் மோசமானதாக இருக்கிறது. சம்பாவில் அதிகமான அளவு கிடைக்கும் என்று எதிர்பார்த்தது, இன்றைக்கு தடைப்பட்டு, அதிகமான அளவுக்குக் கிடைக்காது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. நான் என்னுடைய ஊருக்குச் சென்றிருந் தேன். என்னுடைய சொந்த நிலமான 5 வேலியில் 25 கலம் நெல்தான் கண்டுமுதல் செய்தேன். காரணம், 90 நாட்கள் வரை மழையிலே பயிர்கள் எல்லாம் தேங்கிக் கிடந்தது. தஞ்சை மாவட்டத்தில் இப்போது முறையான பலன் கிடைக்கவில்லை. சர்க்காருடைய ரேஷன் நீக்கம் ஏற்பட்ட பிறகு கோயம்புத்தூர், சேலம், ராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களி லிருந்து வியாபாரிகள் வந்து 30 ரூபாய், 40 ரூபாய் விகிதாசாரத்தில் நெல்லைக் கொள்முதல் செய்து கொண்டுபோய் இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு மூட்டை 35 ரூபாய் என்று விற்கப்படுகிறது. இப்பொழுது தஞ்சையிலே நெல் ப்ராக்யூர்மெண்ட் ஆகவில்லை. ஆகவே, இவற்றையெல்லாம் சர்க்கார் கண்காணித்து, உணவு விநியோகத்தில் திடீர் என்று கஷ்டம் ஏற்படாமல் தடுக்க---ப்ரிவென்டிவ் ஆக்ஷன்---தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது என் கட்சியின் சார்பாகக் கொடுத்த வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். மிகவும் முக்கியமான பிரச்சினைகளிலே கொள்முதல் உணவு மானியக் கோரிக்கையும் ஒன்றாக இதில் இருக்கிறது. நம்முடைய அருமை நண்பர் பயிலை தொகுதி அங்கத்தினர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளையெல்லாம் பற்றிப் பேசினார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்ததே அரிசியால்தான். அரிசியை வைத்துக் கொண்டுதான் அரசியலுக்கு வந்தீர்கள். அதை நீங்கள் காப்பாற்ற வேண்டும். நீங்கள் எதை எதைச் சொல்லி ஆட்சிக்கு வந்தீர்களோ, அவற்றையெல்லாம் ஏன் நிறைவேற்றவில்லை என்பதைக் கேட்கத்தான் நான் இங்கே எதிர்க்கட்சித் தலைவனாக உட்கார்ந்திருக்கிறேன். 'தேர்தல் வாக்குறுதியில் இல்லை' என்று சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால் ஒவ்வொரு இடமாக நீங்கள் கொடுத்த பத்திரிகை களில் மூலமாக, 'மூன்று படி அரிசி கொடுக்கவில்லையென்றால். . . இன்னின்ன செய்யலாம்' என்று சொன்னதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால் சமயங்களில் மக்களுக்கும் மறதி ஏற்பட்டுவிடுகிறது. அரிசிப் பிரச்சினையை நாங்கள்தான் தீர்த்தோம். 17 லட்சம் டன், 20 லட்சம் டன் என்று விளைச்சலை உயர்த்தினோம் என்று இன்றைக்கு நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் இவைகள் எல்லாம் முன்னால் இருந்த அரசாங்கம் போட்ட திட்டத்தின் விஸ்தரிப்பே தவிர, எல்லாம் உங்கள் திட்டம், எல்லாம் உங்களுடைய முயற்சி என்று சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.ஆர். 8 நெல்லைப்பற்றிச் சொல்கிறார்கள். நானும் பல தடவை இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். 1966-ம் ஆண்டு கடைசியில்தான் மணிலாவி லுள்ள இன்டர்நேஷனல் ரைஸ் ரிஸர்ச் இன்ஸ்ட்டிடியூட்டில் இந்த ரகம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ரக நெல்லை உற்பத்தி செய்ய படிப்படியாகத் திட்டம் போட்டு, நல்ல ரக வித்துக்களை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு

களுக்கு எல்லாம் , அதிகமான நிதி வசதி தேவையில்லை; சிறப்பான முறையில் அவர்களைப் பராமரிக்க முடியும். ஆகவே, அந்த வகையில் உறுதுணையாக இருந்து அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் கோரிக்கைகள் சிகிச்சை உரிமை வேண்டும், அதாவது அவர்களை பி. பிரிவு வெடரினரி பிராக்டிஷனர்களாக அங்கீரிக்க வேண்டும், மேற்படிப்பு படிக்க வசதி வேண்டும் என கோரியுள்ளனர்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கால்நடை உதவியாளர்கள் டாக்டர்களாக தாங்கள் பணியாற்ற வேண்டும் என்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்தக் கோரிக்கையை உறுப்பினர் அவர்கள் ஆதரிக்கிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். பூபதி :** அமைச்சரவர்கள் சொன்னார்கள், படிப்படியாகச் செய்யவேண்டும் என்று அனுபவம் பெற்றவர்கள் இருக்கின்றபோது, கிடைக்கின்ற திறமையையும் வைத்துக் கொண்டு செய்யலாம் என்பதால், நாங்கள் ஆதரிக்கின்றோம். அதே சமயத்தில் கால்நடை உதவியாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்றும் கோரியிருக்கிறார்கள். சாதாரணமாக 240 நாட்கள் வேலை செய்தாலேயே தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கும்போது, 8 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய பின்பும்இன்னமும் நிரந்தரமாகப் படாமல் இருப்பது நியாயம் இல்லை மேலும், அவர்கள் வரையறுக்கப்பட்ட வேலை நிர்ணயம் வேண்டும் என்கிறார்கள். பொது விடுப்பு நாட்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு ஈடுசெய்யும் விடுப்பு வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு பொது விடுமுறைகளோ, மற்ற தேசிய விடுமுறைகளோ கிடையாது. ஞாயிற்றுக் கிழமைகளிலும் வேலை செய்கிறார்கள். ஆகவே, இந்தக் கோரிக்கையை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும்.

அடுத்து, எட்டு ஆண்டுகள் உழைப்புக் காலம் முடிந்த கால்நடை உதவியாளர்கள் இரண்டாவது கிரேடில் இருக்கிறவர்களும் முதல் கிரேடுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று அரசு ஆணை எண். 2271, வேளாண்மைத் துறை, 7--7--1969 என்ற உத்தரவுகள் இருக்கின்றன. அதை அமுல் நடத்த வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். கால்நடை உதவியாளர்கள் முதல் கிரேடில் இருப்பவர்கள் பதவி உயர்வு பெற்றவர்க்கும், நேரடியாக தேர்ந்தெடுத்த அனைவருக்கும் ஒரே சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒரே மாதிரி வேலைக்கு ஒரே மாதிரி சம்பளம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குறைந்த பட்சக் கோரிக்கைகளையாவது பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சபையில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். விசாரித்தபோது, கால்நடை உதவியாளர்கள் அவர்கள் 28--5--1967 அன்றும், 27--11--1968 அன்றும் சேலத்திலும், தஞ்சையிலும் நடைபெற்ற மாநாட்டின் போதும், நம்முடைய அமைச்சரிடம் கோரிக்கைகளைக் கூறப்பட்டதாகவும், சொல்லியிருக்கிறார்கள். முதல் அமைச்சரிடம் 10--3--1969 அன்று முறையிட்டுக் குறை தீர்க்க வேண்டும் என்று கேட்டனர். மீண்டும் 21--6--1969-ல் ஆடுதுறையில் முதல் அமைச்சரிடம்



முறையிட்டனர். 18--7--1969-ல் இன்றைய தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் அவர்கள் மூலம், கால்நடை பராமரிப்பு அமைச்சரிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பிறகு 12--8--1969 தேதியிலும், 28--10--1969 தேதியிலும் சென்னையில் கால்நடை பராமரிப்பு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்களிடம் கோரிக்கைகளை கொடுத்திருக்கிறார்கள். அதன் பிறகு 7--3--1970-ம் தேதியன்று திரு. சி. பி. சிற்றரசுடன் சங்கப் பிரதிநிதிகளும் வந்து அமைச்சர்களிடம் கோரிக்கைகளை விளக்கியிருக்கிறார்கள் இருந்தும் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறவில்லை. 8 முறைகளில் தங்கள் கோரிக்கைகளை எடுத்துக் கூறியும் தங்களுடைய காரிய தரிசியை திடீரென இரவில் ட்ரான்ஸ்பர்--மாற்றம்--செய்தாலும் வேறு வகை தெரியாமல் அவர்கள் சென்னைக்கு வந்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை பேச்சு வார்த்தை நடத்த முதல்வர் அழைத்த பிறகும் வர வில்லை என்றார்கள். அழைப்பு கிடைத்திருந்தால் அவர்கள் கண்டிப்பாக வராமல் இருக்க முடியாது. காரணம், அதற்காகவேதான் வந்தவர்கள். ஆகவே, எங்கேயோ சின்னத் தவறு நடந்திருக்கிறது. ஆகவே, அமைச்சர் கருணையுடன் அவர்கள் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, தக்க பரிகாரம் காணவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். இது ஒரு சிறு விஷயம். மத்திய சர்க்கார் ஊழியர்கள் பிரதமரின் வீட்டுமுன் உண்ணாவிரதம் இருந்து போராட்டம் நடத்திய பிறகு, பிரதமரிடம் அவர்கள் அனைவரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று எல்லா முற்போக்குக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வற்புறுத்தி வேலைகளுக்கு எடுக்கும்படி செய்துள்ளோம். ஆகவே, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு ஒரு கொள்கையையும், மாநில சர்க்கார் ஊழியர்கள்பால் வேறொரு கொள்கையை கொள்ளக்கூடாது என்று வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்து, அருள்கூர்ந்து நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, இந்த பால் பண்ணை விஷயமாக ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பால் ஒரு இன்றியமையாத உணவு என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இந்த விஷயத்தில் சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் முறையாக காலத்தில் நடைமுறைக்கு வரவில்லை என்பதை அமைச்சருக்குத் தெரிவிக்கிறேன். குறிப்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 'வயபிள் யூனிட்' என்ற பெயரில் விரிவான பால் பண்ணை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவியோடு, தஞ்சை மாவட்டத்தில் கொள்ளிடத்தில் என்னுடைய சொந்த முயற்சியால், 400 பேர்களைக் கொண்ட வயபிள் யூனிட் ஒன்றை ஆரம்பித்தேன். அதற்கான பணத்தை ஒரே காலத்தில் சர்க்கார் கொடுத்து உதவியது. 200 பேர்களுக்கு பணத்தைக் கட்டி முயற்சியில் ஈடுபடும்போது, கடந்த ஆண்டு திட்டத்தில் ஒதுக்கிய பணம் இன்று வரை செலவிடப்படவில்லை என்று சொன்னால், இதற்காகப் போடும் திட்டங்கள், செயல் முறைகள் நாட்டில் மக்களுக்கு எப்படிப் பயன் அளிக்கும் என்று புரியவில்லை. குறிப்பாக வயபிள் யூனிட்டில் இரண்டு விஷயங்கள். அரிசன் என்று இருந்தால், டிபார்ட்மெண்டில் சப்சிடி, லோன் என்று கொடுக்கப்படுகிறது. 300 ரூபாய் என்பதை இப்பொழுது 500 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். அது பெருமைப்படத் தக்க விஷயமாக

இருக்கிறது. இருந்தாலும், திட்டப்படி ஒரு ஊரிலே 50-க்கு மேல் கொடுக்கக் கூடாது என்று செய்திருக்கிறார்கள். ஒரு வயபிள் யூனிட்டுக்கு 200-க்கு மேற்பட்டவர்கள் வேண்டும். ஆகையினால் அப்படி வெல்பேர் டிபார்ட்மெண்டில் பால் பண்ணைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு தனிச் சலுகை கொடுத்து, 100-க்கு மேற்பட்டவர்களுக்கு பணம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதே நேரத்தில் வயபிள் யூனிட் டெபாசிட் கட்டி, ரெஜிஸ்ட்ரார் மூலம் சிபாரிசு செய்துவரும் அத்தனை பேர்களுக்கும் பணம் கொடுக்க உத்தரவாதம் இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அப்பொழுது அது சிறப்பாக நடக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கால்நடை சம்பந்தமாகச் சொல்லும்போது, 'கீ சென்டர்ஸ்' எங்கள் யூனியனில் 4 சென்டர்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகஸ்தர்களும் சேர்ந்துவிட்டார்கள். ஆனால் என்ன வேலைசெய்வது என்று புரியவில்லை. ஊசி போடுவது, மருந்து கொடுப்பது என்று எதுவாக இருந்தாலும் இவர்களுக்கு அனுமதியில்லை. டாக்டர் வரவேண்டும் என்கிறார்கள். படிபடியாகச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் சொன்னார்கள். ஒரு கம்பவுண்டர் டாக்டர் வேலை செய்ய முடியுமா என்றால், உண்மையிலேயே இப்பொழுது ஆசிரியர்களையும் மற்றவர்களையும் 'பர்ஸ்ட் எய்ட்' செய்யலாம் என்று சொல்லும்போது, அனுபவத்தின் மேல், இவர்களை உபயோகிக்க வேண்டும். இல்லை என்றால் கீ சென்டர்கள் வைப்பதால் பிரயோசனம் இல்லை. இவர்கள் ஊசி போடுவதிலிருந்து, எல்லா வேலைகளையும், செய்ய வேண்டும். எல்லாக் காரியத்திற்கும் டாக்டர் ஓடிவந்து, 4, 8 மைலிலிருந்து வந்து வைத்தியம் செய்வது என்பது முடியாது.

பஞ்சாயத்து யூனியன்களில் கால்நடை விஸ்தரிப்புக்கு என்று பணம் கொடுக்கிறார்கள். ஆனால், விஸ்தரிப்பு அதிகாரி எடுக்கப்பட்டு விட்டார். அவர் கீ சென்டருக்குப் போய்விட்டார். டெக்னிகல் பர்சனல் இல்லை என்றால், யூனியன்களில் ஒதுக்கப்பட்ட அலாட்மெண்டை உபயோகப்படுத்த முடியவில்லை.

இறுதியாக, ரேஷன் கட்டுப்பாட்டை சென்னையிலே எடுத்து விட்டதாகச் சொன்னாலும், அமைச்சருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன், ஆனாலும் அவ்வளவு தூரம் அவருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதோ என்னவோ தெரியாது, கடந்த ரேஷன்போது, சீனி கிடைக்க வேண்டும் என்று தொழிலாளர்கள் தங்கள் சம்பளத்தை அதிகமாகச் சொல்லி, கார்டுகளில் பதிவு செய்துகொண்டுவிட்டார்கள். இப்பொழுது 200 ரூபாய் சம்பளக்காரர்களுக்கு என்று சொல்லும்போது, அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ரேஷன் அதிகாரிகளிடம் தகராறு ஏற்படுகிறது. தயவுசெய்து இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். திரு. அரங்கண்ணல் குறிப்பிட்டதுபோல், முன்னால் தவறு செய்துவிட்டதற்கு ஒரு வார்னிங் கொடுத்துவிட்டு, மறுபடியும் புதிதாக, உண்மையாகப் பதிவு செய்துகொள்ள சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். அந்த வகையில் கார்டுகள், உண்மையான சம்பளத்தைக் காட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்படவேண்டும். இதையே ரூ. 300 என்ற அளவில் சம்பளம் உள்ளவர்கள்கூட ரேஷன் பெறலாம் என்றும் விதியை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



இறுதியாக ரேஷன் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது தஞ்சாவூரில் நிலைமை மிகவும் மோசமானதாக இருக்கிறது. சம்பாவில் அதிகமான அளவு கிடைக்கும் என்று எதிர்பார்த்தது, இன்றைக்கு தடைப்பட்டு, அதிகமான அளவுக்குக் கிடைக்காது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. நான் என்னுடைய ஊருக்குச் சென்றிருந்தேன். என்னுடைய சொந்த நிலமான 5 வேலியில் 25 கலம் நெல்தான் கண்டுமுதல் செய்தேன். காரணம், 90 நாட்கள் வரை மழையிலே பயிர்கள் எல்லாம் தேங்கிக் கிடந்தது. தஞ்சை மாவட்டத்தில் இப்போது முறையான பலன் கிடைக்கவில்லை. சர்க்காருடைய ரேஷன் நீக்கம் ஏற்பட்ட பிறகு கோயம்புத்தூர், சேலம், ராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களிலிருந்து வியாபாரிகள் வந்து 30 ரூபாய், 40 ரூபாய் விகிதாசாரத்தில் நெல்லைக் கொள்முதல் செய்து கொண்டுபோய் இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு மூட்டை 55 ரூபாய் என்று விற்கப்படுகிறது. இப்பொழுது தஞ்சையிலே நெல் ப்ரொக்யூர்மெண்ட் ஆகவில்லை. ஆகவே, இவற்றையெல்லாம் சர்க்கார் கண்காணித்து, உணவு விநியோகத்தில் திடீர் என்று கஷ்டம் ஏற்படாமல் தடுக்க---ப்ரிவென்டிவ் ஆக்ஷன்---தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது என் கட்சியின் சார்பாகக் கொடுத்த வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மிகவும் முக்கியமான பிரச்சினைகளிலே கொள்முதல் உணவு மானியக் கோரிக்கையும் ஒன்றாக இதில் இருக்கிறது. நம்முடைய அருமை நண்பர் மயிலை தொகுதி அங்கத்தினர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளையெல்லாம் பற்றிப் பேசினார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்ததே அரிசியால்தான். அரிசியை வைத்துக் கொண்டுதான் அரசியலுக்கு வந்தீர்கள். அதை நீங்கள் காப்பாற்ற வேண்டும். நீங்கள் எதை எதைச் சொல்லி ஆட்சிக்கு வந்தீர்களோ, அவற்றையெல்லாம் ஏன் நிறைவேற்றவில்லை என்பதைக் கேட்கத்தான் நான் இங்கே எதிர்க்கட்சித் தலைவனாக உட்கார்ந்திருக்கிறேன். 'தேர்தல் வாக்குறுதியில் இல்லை' என்று சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால் ஒவ்வொரு இடமாக நீங்கள் கொடுத்த பத்திரிகைகளில் மூலமாக, 'மூன்று படி அரிசி கொடுக்கவில்லையென்றால். . . இன்னின்ன செய்யலாம்' என்று சொன்னதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால் சமயங்களில் மக்களுக்கும் மறதி ஏற்பட்டுவிடுகிறது. அரிசிப் பிரச்சினையை நாங்கள்தான் தீர்த்தோம். 17 லட்சம் டன், 20 லட்சம் டன் என்று விளைச்சலை உயர்த்தினோம் என்று இன்றைக்கு நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் இவைகள் எல்லாம் முன்னால் இருந்த அரசாங்கம் போட்ட திட்டத்தின் விஸ்தரிப்பே தவிர, எல்லாம் உங்கள் திட்டம், எல்லாம் உங்களுடைய முயற்சி என்று சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.ஆர். 8 நெல்லைப்பற்றிச் சொல்கிறார்கள். நானும் பல தடவை இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். 1966-ம் ஆண்டு கடைசியில்தான் மணிலாவில் உள்ள இன்டர்நேஷனல் ரைஸ் ரிஸர்ச் இன்ஸ்ட்டிடியூட்டில் இந்த ரகம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ரக நெல்லை உற்பத்தி செய்ய படிப்படியாகத் திட்டம் போட்டு, நல்ல ரக வித்துக்களை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு

வழங்கி வந்தோம். மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே திட்டம் போட்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே விஸ்தரித்து வந்தோம். இது நாங்கள் போட்ட நல்ல திட்டமே தவிர, நீங்கள் போடவில்லை. நாங்கள் போட்ட திட்டத்தை நீங்கள் இன்றைக்கு விஸ்தரிக்கிறீர்கள். நாங்கள் போட்ட திட்டங்களின் விவரங்கள் எல்லாம் விவசாய இலாகா டைரக்டர் அலுவலகத்திலுள்ள குறிப்பேடுகளைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். ஆகவே, நீங்கள் செய்தவையெல்லாம் நாங்கள் போட்ட திட்டங்களின் விஸ்தரிப்புகளாகவேதான் இருந்து வருகின்றன.

இன்னொன்றையும் குறிப்பிட்டீர்கள். 'இப்பொழுது படியரிசி இரண்டு ரூபாய்க்கு, இரண்டரை ரூபாய்க்குக் கிடைக்கிறது. முன்பு உங்கள் காலத்தில் நான்கு ரூபாய்க்கு விற்றதே' என்று சொன்னீர்கள். உணவு உற்பத்தி அதிகமாகி, அதன் காரணமாக விலைவாசி குறைந்துவிட்டதா? உணவு உற்பத்தி அதிகமானதன் காரணமாகவா நீங்கள் ரேஷனை எடுத்துவிட்டீர்கள்? இதை இப்பொழுது எடுத்துவிட்டால் ஒரு நல்ல பெயராவது கிடைக்குமே என்ற எண்ணத்தினால்தான் நீங்கள் உணவுக் கட்டுப்பாட்டை எடுத்து விட்டீர்கள். நான் இதைப்பற்றி அன்றைக்கே 'பொறுத்திருந்து விளைவுகளைப் பார்ப்போம்' என்றுதான் சொன்னேன். எனக்குக் கிடைத்த தகவலின்படி முன்பு மூட்டை முப்பது, முப்பத்தைந்து ரூபாய்க்கு என்ற விலைக்கு விற்றது. இப்போது நாற்பது ரூபாய்க்கு விற்கிறது. மீண்டும் தேர்தல் வருவதற்கு முன்னால் ஏதாவது வந்தால் 'மக்கள் சொல்லித்தான் நாங்கள் மீண்டும் ரேஷனைப் புகுத்துகிறோம்' என்று சொல்வதற்குத்தான் இப்போது எடுத்து விட்டிருக்கிறார்கள். படி அரிசித் திட்டத்திற்கு கோவிந்தா போட்டாகி விட்டது.

அடுத்து மக்களின்மீது கையை வைக்க ரேஷனைக் கொண்டுவர வேண்டும். இதெல்லாம் அரசியலுக்குத்தான் லாயக்கு. இப்பொழுது உணவு உற்பத்தி அதிகமாகிவிட்டது என்று சொல்கிறீர்கள். தஞ்சாவூர் நிலைமையைப்பற்றி இதற்கு முன்பேசிய உறுப்பினர் என்ன சொல்கிறார்? அவருடைய நிலத்தில், 5 வேலியில் 25 கலம் நெல்தான் உற்பத்தியானது என்று சொல்கிறார். அவர் தன்னுடைய சொந்த பூமியில் விளைந்த கணக்கு சொல்வதை நம்புவதாக அல்லது நீங்கள் கொடுக்கும் கணக்கை நம்புவதா என்று தெரியவில்லை இது உணவுப் பிரச்சினை, சாதாரண விஷயம் அல்ல. எத்தனையோ அமைச்சர்களை யெல்லாம் ஏப்பம் விட்ட மானியம் இது. எத்தனையோ அமைச்சர்களை யெல்லாம் வீட்டிற்கு அனுப்பிய பெரும் மானியம் இது.

(மாண்புமிகு பேரவைத்தலைவர்---தலைமை)

இப்போது பஞ்சாயத்து தேர்தல்கள் வரப்போகின்றன. இதையெல்லாம் அட்ஜஸ்ட் பண்ணுவதற்காகத்தான் ரேஷனை எடுத்திருக்கிறார்கள். அடுத்த வருஷம் விலைவாசி ஏறினால் நமது முதலமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் என்ன செய் வார்கள்? "விலைவாசி ஏறிவிட்டது, மக்களுக்கு உணவு கிடைக்கவில்லை, ஆகவே மக்களின் நலனை முன்னிட்டு, யாவருக்கும் உணவு கிடைக்கும் வகையில் ரேஷனைக் கொண்டுவருகிறோம்" என்று சொல்லித்தான் கொண்டு வருவார்கள். ரேஷனைக் கொண்டுவரப்





போகிறோம் என்று அவர்கள் சொல்லத்தான் போகிறார்கள், நான் அதைப் பற்றிக் கேட்கத் தான் போகிறேன். இதில் சந்தேகமே இல்லை. அதற்கான அடித்தளத்தை நீங்கள் இப்போதே பரப்பி வருகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, உணவுக் கட்டுப்பாடு ரத்து செய்யப்பட்ட நேரத்திலே நான் விடுத்த அறிக்கையிலும், வானொலிப் பேச்சிலும் நான் இதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். வியாபாரிகளும், விவசாயிகளும், பொதுமக்களும் சரிவர ஒத்துழைக்காவிட்டால், நான் இதை கௌரவப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாமல், மக்கள் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, மறுபடியும் கொண்டு வந்தால் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆனால் கொண்டுவருவதற்கான சூழ்நிலை இல்லையென்று கருது கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இப்படிச் சொல்வார் என்று முன்பே எனக்குத் தெரியும். இது முக்கியமான பிரச்சினை. விளையாட்டான பிரச்சினை அல்ல. இதிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. உங்களால் மக்களுக்கு உணவு அளிக்க முடியவில்லை. நியாய விலைக்கடைகளை கிராமங்களில் திறந்து மக்களுக்கு உணவு கொடுக்க முடியவில்லை. 'மறுபடியும் மக்களின் நலனை முன்னிட்டே, கொண்டு வருகிறோம்' என்று சொல்லி, இதை வைத்துக்கொண்டு நீங்கள் அரசியல் நடத்துகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அரசியல் பிரச்சாரத்திற்காக நாங்கள் இதை எடுத்தோம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித்தலைவர் அவர்களுடைய கொள்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உணவுக் கட்டுப்பாடு இருந்த நேரத்தில் அதை எடுக்க வேண்டுமென்று சொன்னார். உழவர்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று சொன்னார். இப்பொழுது ரேஷனை எடுத்ததற்காக அவர் மகிழ்ச்சியடையாமல், மீண்டும் ரேஷன் வர வேண்டும் என்ற நிலைமையிலேயே பேசுகிறார். அவருடைய குறிக்கோள் என்ன? அவருடைய எண்ணம் என்ன? தெளிவாகத் தெரிவிக்க வேண்டும், உணவுக் கட்டுப்பாடு தேவையா, தேவையில்லையா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்**: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். கட்டுப்பாடு சமயத்தில் போட்ட விலை குறைந்தது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அப்போது கொள்முதல் விலை நியாயமற்ற விலை, விவசாயிகளுக்குக் கட்டுபடியாகாத விலை. விவசாயிகளுக்கு விசேஷமான விலை கொடுக்க வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டோம். கட்டுப்பாடு ஓரளவுக்கு இருக்க வேண்டும். சர்க்காரே உணவுத் தானியத்தை எடுத்து நடத்த வேண்டுமென்பது எங்கள் கொள்கை ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அமைத்து. . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பொரேஷன் அகில இந்தியக் கொள்கையா, அல்லது தமிழ்நாட்டுக் கொள்கையா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்**: அகில இந்தியக் கொள்கைதான், நாங்கள் வந்திருந்தால் அந்தக் கொள்கையை தொடர்ந்து நிறைவேற்றியிருப்போம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அகில இந்தியக் கொள்கை என்றால், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுகின்ற மைசூர் போன்ற மாநிலங்களில் ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டு இருக்கிறதா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : தலைவர் அவர்களே, நான் இதைச் சொன்னால் உடனே மைசூரைப்பற்றிச் சொல்கிறீர்களே, ஜகஜீவன்ராம் ஊரிலே குவிண்டாலுக்கு 60 ரூபாய் கொடுக்கிறார்களே, நீங்கள் 40 ரூபாய் என்றுதானே இங்கே வைத்திருக்கிறீர்கள். நியாயமற்ற, நேர்மையற்ற சில பேர் இருப்பதால்தான் இந்தத் தகராறுகள் எல்லாம். லட்சம் டன்னை வைத்துக்கொண்டு மக்களைப் பட்டினி போட்டால் எப்படி ஓட்டு போடுவார்கள்? யாராக இருந்தால் என்ன? நீங்கள் அதைவிட நன்மைகளை அதிகம் செய்தால், நல்லது தான்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : முன் யார் அப்படிச் செய்தார்கள் என்பதை விளக்க விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : உங்களுக்குத் தெரியாதா? என்னைக் கேட்கிறீர்களே, உங்களுக்கு இப்போது மிகவும் வேண்டியவராக ஆகியிருக்கலாம். இப்போது நீங்கள் உட்கார்ந்திருக்கிற இடத்தில் முன்பு உட்கார்ந்திருந்த மாஜி முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் தான்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அவர் உங்கள் கட்சி முதல்வர்தானே, திரு. காமராஜருக்கு கூட அடங்காமல் காரியங்களைச் செய்தாரா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: சில பெண்களுக்கு 32 குணங்கள் இருக்கும். ஆனாலும் இரண்டு குணங்கள் இருக்காது. சொல்புத்தியும் கேட்காது, சுய புத்தியும் இருக்காது. அந்த ரகத்தைச் சேர்ந்தவர். அதனால்தான் நாங்கள் இங்கே இருக்கிறோம். நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். நீங்கள் இப்போது அவருக்கு நண்பராகிவிட்டீர்கள். அதற்கு நன்றி.

நாங்கள் சொல்வது எல்லாம் என்ன? விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்கவேண்டும், கட்டுபடியாகக்கூடிய விலை கொடுக்கவேண்டும். ப்ரொட்யூசர்ஸ் ஓரியன்டெட் பாலிசியாக இருக்கவேண்டுமே தவிர கன்ஸ்யூமர்ஸ் ஓரியன்டெட் பாலிசியாக இருக்கக்கூடாது என்பதுதான். சபாநாயகர் அவர்களே, இதை நான் பலமுறை சொல்லிச் சொல்லி அனுபவித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சுற்றிச்சுற்றி அதற்குத்தான் வருகிறீர்கள், கேட்டிருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : இது அடிப்படைப் பிரச்சினை, வயிற்றுப் பிரச்சினை. நாட்டு மக்களுடைய வாழ்வைப் பொறுத்த பிரச்சினை. விவசாயிகளுடைய வயல்களில் விளையும் கதிர் மணிகளில் தான் நாட்டு மக்களுடைய வாழ்வு இருக்கிறதே தவிர சட்டசபையிலோ, நகரங்களில் உள்ள மாட மாளிகை, கூட கோபுரங்களிலோ இல்லை.





இன்றைக்கு அரசாங்கத்திற்குச் சரியான புள்ளிவிவரம் சேகரித்துக் கொடுக்க தனி இலாக்காவே இருக்கிறது. எங்களுக்குக் கிடைக்கிற புள்ளி விவரங்களைக் கொண்டு நாங்கள் பேசுகிறோம். ஆதாரம் இருக்கிறதா, தகவல் எப்படிக் கிடைத்தது, எப்போது கிடைத்தது என்றால் நீங்கள் பாருங்கள்.

நாங்கள் சொல்வது எல்லாம் லெவி சிஸ்டம் ஆப் ப்ரக்யூர்மெண்டு இருக்கத்தான் வேண்டும். பாக்கியிருக்கும்படியான தானியத்தை ஃப்ரீ மார்க்கெட்டில் கொண்டு வரவேண்டும். பூர்ணமான கட்டுப்பாட்டுக்கும் போவது தவறு. எடுத்து விடுவதும் இந்த நிலையில் தவறு சொல்ல விரும்புகிறேன்.

ஒரு ஏக்கராவுக்கு இத்தனை மூட்டைகள் கொடுக்கவேண்டும் என்பதாக லெவி முறையை ஏற்படுத்துங்கள். மூட்டைக்கு 40 ரூபாய், 50 ரூபாய் இல்லை. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையைக் கொடுங்கள்.

இன்றைக்கு குஜராத் மாநிலத்தில் ஒரு க்விண்டால் நெல்லுக்கு 90 ரூபாய் கொடுக்கிறார்கள். மத்திய உணவு அமைச்சராக இருந்த---இருக்கிறவர்களுடைய மாநிலத்தில் மட்டமான நெல்லுக்கே க்விண்டால் 70 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். கேரளத்தில் 75 ரூபாய் கொடுக்கிறார்கள். அது போன்றே விலையை இங்கேயும் கொடுங்கள். லெவி முறையில் ஏக்கருக்கு இவ்வளவு மூட்டை என்று நிர்ணயித்து ப்ரொக்யூர் பண்ணிக்கொள்ளுங்கள். பாக்கி தானியம் ஃப்ரீ மார்க்கெட்டுக்கு வரட்டும்.

நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். சிவில் சப்ளை டிபார்ட்மெண்டை எடுத்துக்கொண்டால் அது ஒரு வெள்ளையானை. அங்கே இருக்கும்படியான தவறுகள் கொஞ்சநஞ்சமல்ல.

1905 மூட்டைகள் துறைமுகத்தில் இருந்து கிளம்பியது வந்துசேரவில்லை; நாங்கள் கேள்வி போட்டால் அரிசியைக் காணோம், லாரியைக் காணோம், வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்கிறார்கள். அந்த லாரியைக் கண்டு பிடித்தார்களா? 1905 மூட்டை அரிசி என்ன ஆயிற்று என்று கண்டுபிடித்தார்களா? இதுபோல இன்னும் எத்தனை இடங்களில் எத்தனை தவறுகள் நடந்திருக்கின்றனவோ; நடக்கவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? ஜாக்கிரதையாக இருந்தார்களா?

இன்னும் அரிசி மில்களை எடுத்துக்கொண்டால் சொல்ல வேண்டாம், தேசியமாக்குவது என்று சொன்னால் அரிசி ஆலைகளை தேசியமாக்குவது அவசியம் என்று சொல்கிறேன். இதற்காக ஒரு தனி மசோதாவே கொண்டு வரவேண்டுமென்று சொன்னால் நானே கூட ஒரு மசோதா கொண்டுவரத் தயாராய் இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** லாரியில் கடத்தப்பட்ட மூட்டைகளைப் பற்றிச் சொன்னார்கள். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள். வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். முன்கூட்டியே ஏன் ஜாக்கிரதையாக இல்லை என்கிறார்கள். சர்க்கார் எவ்வளவோ ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறார்கள். அவர் எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தும் எட்டு பேர்களை கொண்டுபோய்விட்டார்களே, அவர்கள் ஏன் ஜாக்கிரதையாக இருக்கவில்லை என்று கேட்க முடியுமா?

[1970 மார்ச் 18

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : துறைமுகத்தில் இருந்து கிளம்பிய லாரியைக் காணோம், அரிசியைக் காணோம் என்றால்—கேஸ் போட்டிருக்கிறேன் என்று சொல்கிறார்களே, அதுபோல நான் இதற்குக் கேஸ் போடவேண்டும் என்று சொல்கிறாரா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அதற்கு எப்படி எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பாளி ஆக முடியாதோ அப்படி இதற்கும் நாங்கள் பொறுப்பாளி ஆக முடியாது. குற்றம் கண்டுபிடிக்கப்பட்டவுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஏன் பொறுப்பாளியாக முடியாது? இவர்களுடைய ஆட்சியில் இப்படி 1905 மூட்டை அரிசி கடத்தப்பட்டிருக்கிறது என்று வெளியே குற்றம்சாட்டிப்பேச எனக்கு உரிமை இல்லையா என்ன? நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்கிறார்கள். கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றுதானே நாங்கள் சொல்கிறோம்.

இந்த இலாக்காவில் 87 லட்சம் ரூபாய் இந்தச் சபையின் அனுமதியில்லாமலே வீணடிக்கப்பட்டிருக்கிறது என்று பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் சுட்டிக்காட்டிருக்கிறார்களே, திரு. அண்ணாதுரை அவர்கள் இருக்கும்போதே அவரிடம் சென்று சொன்னேன். யாராக இருந்தாலும் சரி—அவர்கள் மீது விசாரணை நடத்தப்படவேண்டும் என்று சொன்னேன். எங்கே நடவடிக்கை எடுத்தார்கள். பைலைக் கொளுத்திவிட்டார்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தார்களே, ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? உருளைக்கிழங்கு வியாபாரம்—ஆறு லட்சம் அப்படியே அபேஸ். அதற்கு யார் பொறுப்பாளியாக இருந்தால் என்ன? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : பைல் எரித்ததற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டார்கள். திரு. ஹாண்டே அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று சொன்ன நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவருடைய அபிப்பிராயம் அப்போது என்னவாக இருந்தது?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அப்போது வேண்டாம் என்று இருந்தால் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் ஏன் அதைப்பற்றி குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : நான் பைல் எரிந்ததைச் சொல்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : எல்லாவற்றையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். உருளைக்கிழங்கு வியாபாரம் 6 லட்சம் போயிற்று.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : காபந்து சர்க்காராக இருந்த நிலையில் பைலை எரித்த பழைய முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று முன்பு திரு. ஹாண்டே அவர்கள் இந்த அவையில் குறிப்பிட்டார்கள். அப்போது அண்ணா அவர்கள் 'இந்த விவாதமே அவர்களுக்குப் போதுமானது' என்று எடுத்துச் சொன்னார்கள். இப்போது பைல் எரித்ததற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்போது என்ன செய்து கொண்டிருந்தார்கள்?



1970 மார்ச் 18]

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி கணக்கு அப்போது வரவில்லை. அப்போது வந்திருந்தால் சொல்லியிருப்பேன். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் பைல் எரித்த கணக்கு வந்திருந்தால் தீர்ப்புக் கொடுத்திருப்பேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: போலீஸ் இலாக்கா சம்பந்தப்பட்ட சில பைல்களை எரித்த விஷயம் பற்றி இந்த அவையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திய நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இந்த அவையில் அப்போது இருந்தார்களே, என்ன கொள்கையைக் கொண்டிருந்தார்கள் என்று கேட்டேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நான் சும்மா இருந்தேன். சும்மா இருந்தால் ஆதரித்ததாக அர்த்தமா? உங்கள் கூட்டணியைச் சேர்ந்தவர்தானே கொண்டுவந்திருக்கிறார், நீங்கள் என்னதான் செய்யப் போகிறீர்கள பார்க்கலாம் என்று இருந்தேன்.

சிவில் சப்ளை இலாக்காவில் நடந்திருக்கும்படியான ஊழல்களை பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி வெளியே கொண்டுவருகிறபோது நீங்கள் துணிந்து நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அப்போதுதான் தவறு செய்கிறவர்களுக்குப் பயம் இருக்கும். ரிப்போர்ட் வைப்பது, அதன்மீது நடவடிக்கை எடுப்பதில்லை என்றால் எப்படி பயம் இருக்கும்? மக்களுக்கும் நன்மை செய்யாது, நமக்கும் கெட்ட பெயரை உண்டாக்குகிறவர்கள் யாராக இருந்தாலும் துணிந்து நடவடிக்கை எடுத்தால்தான் அதிகாரிகளுக்கு பயம் இருக்கும் நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு மானியக் கோரிக்கையிலே லெவி அளவைப்பற்றி சொன்னார்கள். 64 சதவிகிதம் 65 சதவிகிதம் என்று இருக்கிறதே. . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : அவர்கள் இப்பொழுது நடந்ததாகச் சொல்கிறார்களா அல்லது பழைய சம்பிரதாயத்தைச் சொல்கிறார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : 1969 மார்ச்சிலே நீங்கள் எல்லாம் கோலோச்சும்படியான நேரத்திலேதான் நான் சமர்ப்பித்து இருக்கிறேன். . .

**திரு. இராம அரங்கண்ணல்** : ஆன் எ பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் சார். இதைப்பற்றி நான் சட்டமன்றத்திலே பேசி இருக்கிறேன். . .

THIRU K. VINAYAKAM : How does it arise, Sir? I am very serious about our rules. The hon. Member's name had not been dragged. On what rule is he rising? We insist that the Hon. Speaker should not allow this. Whenever we, on this side want to rise you are not allowing. The Hon. Speaker is right and he is just and correct. When that is the case, how can you allow this? If you allow them to have a say, we must also have our say. They cannot have their own way.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : நீங்கள் எதிலே பேசிக் கொண்டிருக்கிறீர்கள் இப்பொழுது?

THIRU K. VINAYAKAM : I was on the hon. Member's raising a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இராம. அரங்கண்ணலை நான் அனுமதிக்கவில்லை. எழுந்து நின்றார், நீங்கள் அதைப்பற்றித் சொல்லிவிட்டீர்கள்.

THIRU K. VINAYAKAM : You should appreciate me for my alertness.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உருளைக் கிழங்கு விவகாரம் ரொம்ப பழைய விவகாரம் அதைப்பற்றிச் சொல்கிறார்கள். அதுவும் அழுகிப்போன உருளைக்கிழங்கு பற்றிய விவகாரம். அந்தக் காலத்திலே அப்படியொரு சம்பவம் நடந்தது. உத்திரப் பிரதேசத்திலே உருளைக்கிழங்கு ஏராளமாக வந்து விட்டது, அப்பொழுது இருந்த முதலமைச்சர் அவர்களுடைய தலையிலே எடுத்துக்கொள்ளுங்கள் என்று உத்திரப்பிரதேசக்காரன் கொடுத்துவிட்டான். வந்தபொழுதே பாதி அழுகித் தான் இருந்தது, விருதுநகர் போன்ற இடங்களிலே இருந்து எல்லாம் ல்தரியும் அந்த வியாபாரத்திலே அதிலே நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள், என்ற சம்பவங்கள் கூறப்படுகின்றன. முதலமைச்சர் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டுபோய்விட்டார் என்பதுபோலச் சொல்வது சரியல்ல. எதிர்க்கட்சித் தலைவர் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் பல ஆண்டுகளாக இருந்து இருக்கிறார்கள். பாராளுமன்றத்திலேயும் இருந்து இருக்கிறார்கள். இவையெல்லாம் முடிந்துபோன, மீண்டும் இந்த அரசாங்கம் சரிபார்க்கமுடியாத காரியங்கள் கணக்குகள். இவையெல்லாம் முறையாக இருக்கவேண்டுமென்ற நியாயத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். படிப்படியாக இந்த அரசாங்கம் அப்படி ஏற்படாமல் இனிமேல் பார்த்துக்கொள்வதற்கு முடியும். பிரேத விசாரணை நடத்தியிருப்பதிலே வெளியே 83 லட்சம் ரூபாய் தவறுதலாக வியாபாரம் செய்தார்கள் என்று கூறுவதற்கு இடமளிக்கக்கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இதைக் கூறுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, அப்படியானால் பி.ஏ.சி. வேண்டாம், அவர்கள் பிரேத விசாரணை என்று சொல்வார்களானால்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. பொதுக் கணக்காய்வுக் குழு அறிக்கைபற்றிச் சொன்னீர்கள். அது எந்த ஆண்டிலே நடந்தது என்று கேட்டார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 1963-64-லிலே நடந்தது இப்பொழுது விசாரணை நடந்திருக்கிறது. 20 வருஷமாக ஊழல் நடந்தது என்றால் நடவடிக்கை எடுங்கள் என்றுதானே சொல்கிறேன். . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த நிகழ்ச்சி 1966-லே நடந்தது. அப்பொழுது உணவு அமைச்சராக இருந்தவர் யார் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உணவு அமைச்சர் யார் என்று கேட்கிறார்கள். நான் பாராளுமன்றத்திலே அப்பொழுது இருந்தேன், எனக்குத் தெரியாது. ஆகவே, அப்படிச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று சொல்லமுடியுமா ? பைல்கள் உங்களிடத்திலே இருக்கின்றன. யாராக இருந்தாலும் எனக்கு என்ன ? உணவு மந்திரியாக இருந்தால் என்ன, முதல் மந்திரியாக இருந்தால் என்ன ?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்திலே இருந்ததால் யார் உணவு அமைச்சராக இருந்தார் என்று தெரியாது என்றார்கள். உணவு அமைச்சராக இருந்தவர் மன்றாடியார் அவர்கள். அவர் சொல்கிற நேரத்திலே அநேகமாக திரு. ராமையா அவர்கள் இருந்தார்கள். அவர்கள் அடிக்கடி பழைய ஆட்சியை பாவிகள் செய்து விட்டு போய்விட்டார்கள், என்று பேசுகிறார்கள் ,அப்படிப் பேசும்பொழுது பக்தவத்சலம், பூவராகன், மன்றாடியார் போன்ற இண்டிகேட்டைச் சேர்ந்தவர்களை மாத்திரம் பேசுவதாக நினைத்துப் பேசுகிறார்கள். அவர்களிடத்திலே கக்கன் இருக்கிறார்கள், ஜோதி வெங்கடாசலம் இருக்கிறார்கள், வெங்கட்டராமன் போன்றவர்கள் எல்லாம் உங்களிடத்திலே இருக்கிறார்கள், எனவே அதையும் மனத்திலே வைத்துப் பேச வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதையும் மனத்திலே வைத்துத்தான் பேசுகிறேன். நான் இண்டிகேட்டும் அல்ல, சிண்டிகேட்டும் அல்ல, பீப்பிள்ஸ் கேட்தான். I am "People's Gate and not Indicate or Syndicate."

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன் காங்கிரஸில் இண்டிகேட் சிண்டிகேட் மாத்திரம் அல்ல, பீப்பிள்ஸ் கேட்டும் இருக்கிறது என்று.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்த பீப்பிள்ஸ் கேட்க்கு நான் தலைவன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி சபாநாயகர் அவர்களிடம் அவர்கள் கோருவார்களானால் அவர்களுக்குத் தனி இடம் ஒதுக்குவது நல்லது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நானும் என்னுடைய பக்கத்திலே உள்ளவர்களும் பீப்பிள்ஸ் கேட்தான். நாங்கள் இருக்கிற இடத்திலேயே இருந்துகொண்டிருக்கிறோம். மிகவும் யோக்கியமான நாணயமானவர் கக்கன் ஒருவர்தான். தவறு என்று நிரூபித்தால் நான் எதற்கும் உடன்படுகிறேன். நாணயமான, யோக்யமான திறமையைப்பெற்ற— திறமை என்பது அவர்களுடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது அவர்களிலே சிறந்தவர் கக்கன்ஜி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்குள்ள மானியத்தைப்பற்றிப் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் கக்கன் அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டதைப்பற்றி நூற்றுக்கு நூறு நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் பேசும்பொழுது, அவரையும் சேர்த்து பாவிகள் செய்துவிட்டுப் போய்விட்டார்கள், பாவிகள் செய்துவிட்டுப்போய் விட்டார்கள். என்று சொல்கிறார்கள். இனிமேலாவது பிரித்துப் பேசுவது நல்லது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரு குடம் பாலில் ஒரு புறை விழுந்ததுபோல் அது. ஒரு குடம் பாலிலே ஒரு சிறு புறை விழுந்தால் அந்தப் பால் முழுவதும் கெட்டுவிடும். அதை எப்படிப் பிரிப்பது ? உங்கள் விஞ்ஞான சோஷ[illegible] பிரிக்கமுடியுமா என்னவோ எனக்கு தெரியாது. தவறு யார்

செய்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றுதான் சொல்கிறேன். நெல் அரவையிலே தவிட்டை எடுத்துக்கொண்டு அரிசியைக் கொடுக்கவேண்டுமென்ற முறையை ஏற்பாடு செய்வதால் நல்லது. அனிமல் ஹஸ்பெண்டரி, கோழிப்பண்ணை, பன்றி வளர்ப்பு, மீன் வளர்ப்பு எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய தேசத்தில் உணவு உற்பத்தியிலே மிகவும் முக்கியமாக பங்கு வகிப்பவை இவை தான்ய உற்பத்தியைவிட சத்துள்ளப் பொருள்கள் மக்கள் வளரும்படியான பொருள்கள் இன்றியமையாத உணவுப் பொருள்கள் இவையெல்லாம்தான். இதற்காக ஒதுக்கிய பணம் போதாது. பால் வழங்கும்படியான திட்டத்திற்கு அதிகமாகப் பணம் ஒதுக்கி சிறப்பாக பால் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பசுக்கள் அதிகப்படுத்தப்படவேண்டும். வேலைக்கு இருக்கும்படியான மாடுகள் அவ்வளவு அவசியமில்லை என்று சொன்னால் சில பேர்கள் கோபித்துக்கொள்வார்கள், அதை வைத்துக்கொண்டு சிலர் பிழைப்பு நடத்துகிறார்கள். அதுவும் வேண்டியதுதான். அதோடு பால் இன மாடுகளை அதிகமாக விவசாயிகளுக்கு கொடுத்தால்தான் பால்நல்ல முறையில் அதிகமாக உற்பத்தியாகி அதனால் மக்களுக்குப் பயன் ஏற்படும். அதோடு விவசாயிகளுக்கும் நன்மை ஏற்படும்.

கோழிப்பண்ணைகளைப் பொறுத்த வரையில் 39 நாங்கள் மூடிவிட்டோம். எதிர்க்கட்சித் தலைவர் அதைப் பேசவேண்டாம், அபிவிருத்திகளைப்பற்றி பேசவேண்டுமென்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் வெளிநாட்டிலேயிருந்து கிராஷ் புரோகிராம் என்ற முறையிலே வந்ததற்கு உடனடியாக அதைச் செய்யவேண்டுமென்ற முறையிலே செய்யப்பட்டது என்று நினைக்கிறேன். இப்பொழுது அந்தக் கட்டடங்களை நல்ல முறையிலே பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அனிமல் ஹஸ்பெண்டரி மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அதை பாராட்டுகிறேன். மருத்துவம் தனியாக இருக்கவேண்டும், கால்நடை அபிவிருத்தி, ரிசர்ச் என்பது தனியாக இருக்கவேண்டும். திருத்தியமைத்திருப்பதற்காக வரவேற்கிறேன். இதனால் சில பேர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சர்க்கார் உடனடியாகப் பார்த்து திறமையாக அதிகமாக நல்ல முறையில் மக்களுக்குப் பணிசெய்யக்கூடிய முறையிலே நடத்தவேண்டும். வேலைவாய்ப்புக் கிடைக்கும்படியான நிலைமையிலே சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கால்நடை துறையைச் சேர்ந்தவர்கள் சில குறைகளைக் கொடுத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வைத்துக்கொண்டு அதைத் தீர்த்தால் நல்லமுறையிலே இருக்கும்.

பால் பண்ணையிலிருந்து கொடுக்கும்படியான பால் சுத்தமான பால் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. டோன்டு மில்க் என்று என்ன பவுடரையோ போட்டுக் கொடுக்கிறார்களோ தெரியவில்லை. அசல் பாலைத்தான் கொடுக்கவேண்டும், பவுடரைப்போட்டு டோன்டு மில்க் என்று கொடுத்தால் ஆரோக்கியம் இல்லாத நிலைமை ஏற்படும். தயிராகச் செய்வதற்குக்கூட அது நல்ல பாலாக இல்லை. நான் என்னுடைய அனுபவத்தில் இருந்து சொல்லுகிறேன். நல்ல பாலாக, உயர்ந்த பாலாக, கலப்படம் இல்லாத பாலாக எல்லா மக்களுக்கும் கிடைக்கும் நிலையை ஏற்படுத்த



வேண்டும். ஆரே காலனி, ஆனந்த் காலனி என்றெல்லாம் மற்ற மாநிலங்களிலே இருக்கின்றன. அதுபோன்று சென்னையிலும் ஏற்படவேண்டும். சென்னையில் சமீபத்தில் எருமைப்பால் பண்ணை அமைக்கத் திட்டம் இருப்பதுபோல் அறிகிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் டெல்லிக்குச் செல்லும்போது அந்தத் திட்டத்தைச் சென்னையிலே பூரணமாக நிறைவேற்றுவதற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து அமருகிறேன்.

* மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பால் பண்ணை, கால்நடை, உணவு ஆகிய மூன்று மானியங்களைக் குறித்த விவாதத்தில் அங்கத்தினர் தங்களுடைய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். விவாதத்தில் பங்கேற்றுக்கொண்ட அத்தனை அங்கத்தினர்களும் அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைப் பொதுவாக வரவேற்று, அதே சமயத்தில் சில காரணங்களுக்காகச் சிலவற்றைக் கண்டித்துப் பேசினார்கள்.

பாலைப்பற்றிக் கடைசியில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுத்தமான பாலாக கொடுக்க வேண்டும். தயிராக அதுவும் அருந்தக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும்; சுகாதாரம் உள்ளதாக இருக்க வேண்டும்; உடலுக்குக் கேடு இல்லாமல் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். டோன்டு மில்க் என்று சொல்லி என்ன பவுடரைக் கலக்குகிறார்களோ என்று சொன்னார்கள். டோன்டு மில்க் என்பது பாலில் உள்ள புரதத்தில் 5 சதவிகிதமாகக் குறைத்து மக்களுக்குக் கொடுப்பதுதான். பால் பவுடர் கலக்க வேண்டிய ரேட்டில் கலக்கப்படுகிறது. அதை மக்களுக்குக் கொடுக்கின்ற நேரத்தில் சுகாதாரக்கேடு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இடையில் சில நாட்களில் பாலில் ஒருவித வாடை இருந்ததை ஒளிவு மறைவு இன்றி ஒத்துக் கொள்ளுவதில் தவறு இல்லை. அப்போது போதிய அளவு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் பாட்டிலைச் சரியாகக் கழுவ வசதியற்ற நேரத்தில் அந்த நிலை இருந்தது. அதற்குப் பிறகு கிணறுகளை வெட்டி தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்த பிறகு இப்போது அந்த வாடை நின்றுவிட்டது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே ஒப்புக் கொள்ளுவார்கள் என்று கருதுகிறேன்.

பாலைப் பொறுத்தமட்டில் அரசாங்கத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் அவர்கள் படிக்கும்போது சொன்னார்கள். கிண்டிக்குப் பக்கத்திலே இன்னொரு பால் பண்ணை அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பதைப்பற்றி, ஒப்பம் அளித்திருப்பதைப்பற்றி அங்கத்தினர்கள் குறிப்பிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். நேரம் இல்லாத காரணத்தால் குறிப்பிடாமல் இருந்திருக்கலாம். அப்படி அமைக்கக் காரணம்—வெளிநாட்டில் இருந்து உலக உணவுத் திட்டத்தின்கீழ் சென்னைக்கு 11 கோடி ரூபாய் அளவுக்கு பால் பட்டர், வெண்ணெய் பட்டர் கொடுப்பதாக ஒத்துக் கொண்டார்கள். இதிலே உள்ள ஒரு சிக்கலைச் சொல்லுவதற்காக நான் கொஞ்சம் வருத்தப்படுகிறேன். வெளிநாட்டில் இருந்து கொடுக்கப்படும் பொருள் இலவசமாகக்

[திரு. ப. உ. சண்முகம்] [1970 மார்ச் 18

கொடுக்கப்படுகிறது. மத்திய சர்க்கார் அதைக் கடனாகச் செய்து நம்முடைய தலையில் அந்தக் கடனைக் கட்டுகிறார்கள். நாம் அந்தப் பணத்தைத் திருப்பி மத்திய சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும். இலவசமாக அவர்கள் கொடுப்பதை நாம் மத்திய சர்க்காரிடத்தில் இருந்து கடனாகப்பெற வேண்டி யிருக்கிறது. 11 கோடி ரூபாய்க்கான இந்தத் திட்டத்தின் மூலம் சென்னை நகர மக்களின் பால் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் அதன்மூலம் வரக்கூடிய பணத்தை வைத்து கிராமப் புறங்களில் கடனாகக் கொடுத்து அவர்கள் மாடு வாங்கி பால் உற்பத்தியை நம்முடைய மாநிலத்தில் அதிகப் படுத்துவதற்கான திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 53,000 லிட்டர் பால் வழங்கப்பட்டு வருகிறது. 1971-ம் ஆண்டு முடிவில் ஒரு லட்சம் லிட்டராக அது அதிகரிக்கும். கடைசியில் மூன்று லட்சம் லிட்டர் அளவுக்கு சென்னையில் நல்ல பால் கொடுக்கும் அளவுக்கு அந்தத் திட்டம் வளரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கால்நடை இலாகாவைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே கால்நடை உதவியாளர்கள் ஊர்வலமாக வந்து உண்ணாவிரதம் இருந்ததைப் பற்றித்தான் எல்லோரும் பெரிதாகச் சொன்னார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திருத்தியமைக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு நன்றி. கால்நடை உதவியாளர்கள் வந்து உண்ணாவிரதம் இருந்தது, நடத்திய ஊர்வலம் அத்தனையும் எந்தவகையில் சரி, நியாயம் என்று புரிய வில்லை. அவர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். இல்லை என்று மறுக்க வில்லை. அவர்களுடைய கோரிக்கைகளைப் பற்றிக் கவனிக்கிறேன் என்று சொல்லி அனுப்பினேன். அதற்குள்ளாக உண்ணாவிரதம் என்று உட்கார்ந் திருப்பது முறைகேடானது. அதைப்பற்றி முதல்வர் அவர்கள் பதிலளித்து விட்டார்கள். நியாயமான கோரிக்கைகளை நிச்சயம் அரசாங்கம் எந்த நேரத்திலும் பரிசீலிக்கும் என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தவறான முறையில், சட்டத்திற்கு உட்படாத முறையில் நடந்து கொண்டால் அரசாங்கம் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடை இலாகாவில் சிலபேர் வேலையில்லாது போயிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது சரியல்ல. மாடு கண்காணிப்பாளர் வேலையற்று இருப்பது உண்மை. அவர்களுக்கு வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. கோவை, சேலம் போன்ற இடங்களில் கீ வில்லேஜ் சென்டர்கள் மூடப்பட்டன. அவற்றைத் திறக்க புதிய உத்தரவு போடப்பட்டு திறக்கப் பட்டு இருக்கின்றன. சப்சென்டர்களை திறப்பதுபற்றி மாவட்ட ஆட்சி தலைவர்களுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களுடன் கலந்து முடிவு எடுக்கப்படும்.

வெட்ரினரி காலேஜில் 100 இடம் காலியிருப்பதாகவும், 59 பேர் வேலையற்று இருப்பதாகவும் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். 100 இடங்கள் காலியாக இருக்கிறது என்ற தகவல் சரியல்ல. 50 அல்லது 60 இடங்கள் காலியாக இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. எவ்வளவு சீக்கிரத்தில் வேலை போட்டுக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் வேலை போட்டுக் கொடுக்க ஏற்பாடுகள் ஏற்கெனவே நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



1970 மார்ச் 18] [திரு. பா. உ. சண்முகம்]

உணவுப் பிரச்சினையைப் பற்றி பேசும்போது அதிகமாக சர்க்கரை தேங்கி யிருப்பதைப்பற்றிக் கூறினார்கள். தேங்கியிருப்பது உண்மைதான். வெளி மாநிலங்களில் குறைவாக விலை இருக்கும்போது தமிழ் மாநிலத்தில் மட்டும் அதிகமாக இருப்பது எந்த வகையிலும் நியாயம் அல்ல என்பதை உணரு கிறோம். இதிலே அங்கத்தினர்கள் சொன்ன கருத்தைத்தான் அரசாங்கமும் கொண்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்திற்கும், நம்முடைய மாநிலத்திற்கும் இடையே பார்த்தால் 10, 15 ரூபாய் வித்தியாசப்படுவதால் தமிழக மக்களுக்குப் பாதகம் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் அந்தத் தொழிலுக்கே பாதகம் ஏற்படும் நிலை இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்து, மத்திய அரசாங்கம் இதைக் கொள்கை அளவில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சர்க்கரை பொதுவாக எல்லா இடங்களிலும் மலிவாகக் கிடைக்கிறது. இந்தக் கண்ட்ரோலை நீக்க வேண்டுமென்று ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். மத்திய உணவு அமைச்சர் மாநாட்டிலே நாங்கள் இதை வற்புறுத்திக் கூறினோம். மற்ற மாநில முதல்வர்கள் அவ்வளவு பேரும் கண்ட்ரோல் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அந்தக் காரணத்தால் மத்திய உணவு அமைச்சர் அவர்கள் முடியாது என்று முடிவு எடுத்து விட்டார்கள். இது 15 ஸோன் ஆகப் பிரிக்கப்பட்டு தமிழ் நாடு தனி ஸோன் ஆகப் பிரிக்கப்பட்டு விட்டது. இது தமிழ்நாட்டுக்குப் பாதகமே தவிர, சாதகம் அல்ல. இதை மத்திய அரசாங்கந்தான் கவனிக்க வேண்டுமே தவிர, இதிலே மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஜெர்சி ஃபார்ம், காப் ப்ரீட் சென்டர் இரண்டையும் ஹொசூரில் ஆரம்பிக்க வேண்டுமென்று ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் சொன்னதும் நினைவில் இருக்கிறது. கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நியூஜிலாந்து குழுத் தலைவர் என்னைச் சந்தித்தார்கள். ஜெர்சி பசுக்களை வளர்ப்பதற்கு ஆயிரம் ஏக்கர் நிலம் கொடுத்தால் உதவி செய்வதாகச் சொன் னார்கள். இரண்டு இடங்களைப் பார்த்துவிட்டு கொடைக்கானல் அதற்கேற்ற இடமாக இருக்கிறது என்று சொல்லி அவர்களும் தேர்ந்தெடுத்துப் போயிருக் கிறார்கள். முடிவு வரவில்லை. அவர்களுடைய முடிவு வந்தபிறகு அரசாங்கம் இதிலே ஒரு முடிவு எடுக்கும்.

பிற் பகல் 1-30

அடுத்து, உணவுப் பற்றிப் பேசும்போது பொதுவாக உணவு கண்ட்ரோல் நீக்கத்தைப் பற்றி எல்லோரும் எல்லாவிதமான கருத்துக்களையும் சொன்னா ர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்: அவர் களுடைய கட்சிக் கொள்கை ஸ்டேட் டிரேடிங்தான் என்று. ஸ்டேட் டிரேடிங் என்று சொல்லிவிட்டு, விவசாயியைப்பற்றி ஞாபகம் வரும்போது சொன்னார் கள்: ப்ரொட்யூஸர் பாயிண்ட் ஆப் வியூவில் இருக்கவேண்டும்; கன்ஸ்யூமர் பாயிண்ட் ஆப் வியூவில் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே! ப்ரொடியூசர் பாயிண்ட் ஆப் வியூ என்றால்,

The fixation of the price should be on producer—oriented policy. Consumer's point of view—

இல் இருக்கக்கூடாது என்று சொல்லவில்லை. அமைச்சர் அப்படிச் சொன்னார் என்று சொல்லி, பார்த்தீர்களா, வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு எதிராக இருக்கிறார் என்று எங்கள்மீது திருப்பவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உற்பத்தி பண்ணுகிறவனுக்கு கட்டுப்படியாகும் விலையில், நியாயமான விலை கொடுக்க வேண்டும்; அதே மாதிரி சாப்பிடுகிறவர்களுக்கும் குறைந்த விலையில் கொடுக்கவேண்டும் என்றுதான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உற்பத்தி செய்கிறவர்களுக்கும் குறைத்து, வாங்கி உண்பவர்களுக்கும் குறைத்துக் கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதுதான் ஸ்டேட் டிரேடிங் பாலிஸி என்று சொல்லுகிறார்கள்; அது எனக்குப் புரிய வில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சர்க்கார் உற்பத்தி செய்கிறவர்களுக்கு நியாயமான விலை கொடுத்து, நோ பிராஃபிட், நோ லாஸ என்ற முறையில் விநியோகிக்க வேண்டும். அதுதான் ஸ்டேட் டிரேடிங் பாலிஸி.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவது மிகவும் ஆபத்தான காரியம் என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நோ லாஸ், நோ பிராபிட் என்ற முறையில் ஸ்டேட் டிரேடிங் நடக்க வேண்டுமென்றால் 75 ரூபாய்க்கு வாங்கி இப்போது என்ன விலைக்கு விற்பது? அப்போது மார்க்கெட் ரேட்டைவிட அதிகமாகிவிடும். இது எந்த வகையிலேயும் நியாயமாகாது, ஒத்து வராது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது 30, 47 என்றுதான் கொடுக்கிறோம். அதை 70 ரூபாயாக்க வேண்டும் என்று குறிப் பிட்டார்கள். அது சரியாக வராது என்பதைத்தான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கண்ட்ரோல் நீக்கியதுபற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் திடீரென்று நீக்கிவிட்டதாகவும், மீண்டும் 2 மாதத்தில் கண்ட்ரோல் கொண்டு வரப்போகிறார்கள் என்று ஆரூடம் சொல்வதைப்போல் சொன்னார்கள் . இதே மாதிரி ஒவ்வொரு முறையிலும் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், அவசியம் இருந்தால் கொண்டுவருவோம் என்றுதான் முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்; அந்தச் சூழ்நிலைவரும் என்ற நம்பிக்கை எங்களுக்கில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராஜா அவர்கள் அந்த எண்ணத்தைக் கொண்டிருப்பதற்காக நான் வருத்தப்படுகிறேன் என்றாலும், இதையே திருப்பி திருப்பி சொல்லி நாட்டில் அப்படிப்பட்ட ஒரு நிலைமையை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உணவுக் கண்ட்ரோல் நீக்கியது யாருடைய லாபத்துக்காக என்றால், இருவருடைய லாபத்துக்காகவும்தான். உற்பத்தி யாளர்கள், வாங்கி உண்பவர்கள் இருவருடைய லாபத்துக்காகவும் தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மன்ற நடவடிக்கைகளை இன்னும் சிறிது நேரத்தில் முடித்து விடலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சீக்கிரமே என் உரையை முடித்து விடுகிறேன்.



வாங்கி உண்பவர்கள், உற்பத்தியாளர்கள் இருவருடைய நன்மையையும் உத்தேசித்துத்தான் கட்டுப்பாட்டை நீக்கினோம். வேறு அரசியல் லாபத் துக்காக நீக்கினோம் என்று மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் சொல்லுவது சரியல்ல. உணவுக் கன்ட்ரோலை நீக்கிவிட்டு அதை அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்திக்கொண்டு பிரசாரம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அப்படித் தவறாகக் கருதவேண்டாம் என்று மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அனுகூலமான சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக நீக்கியிருக்கிறோம், மீண்டும் அவசியம் ஏற்பட்டு பாதகம் ஏற்பட்டால் கன்ட்ரோல் வரும் என்ற முறையில்தான் முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அரசியல் பிரச்னைகளுக்காக நீக்கவில்லை; அதே பிரச்சினைக்காக மீண்டும் கொண்டு வரப்போவதும் இல்லை. உணவு கண்ட்ரோல் இருக்கும்போதே குறிப்பிட்டேன். எந்தக் கட்சிக்கும் பயந்து கொண்டு கட்டுப்பாட்டை நீக்கவில்லை; எந்தக் கட்சிக்கும் பயந்து கொண்டு கட்டுப்பாடு திரும்ப வரும் என்று சொல்லவில்லை. தேவைப்பட்டால் கொண்டு வருவோம்; இப்போது தேவை இல்லை என்று கருதுகிறோம், நீக்கி விட்டோம் என்று அப்போதே தெளிவாகக் கூறியிருக்கிறேன்.

சென்னையில் படியரிசித் திட்டத்தைப்பற்றி பலரும் பேசினார்கள். படியரிசித் திட்டம் சென்னையில் போடுவதாகச் சொன்னீர்கள், கைவிட்டு விட்டீர்கள்; அந்தத் திட்டம் எங்கே போயிற்று என்று வாதாடினார்கள். ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது, இந்த மாநிலத்தில் இருக்கிற பெரிய கட்சித் தலைவர்கள் எல்லாம்கூட படியரிசித் திட்டம் பலனளிக்காத திட்டம் மோசமான திட்டம், கைவிட்டு விடவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அப்போது பத்திரிகையில் படித்தவர்களுக்கு நன்கு தெரியும். இந்தத் திட்டத்தால் யாருக்கும் லாபமில்லை, சென்னையிலுள்ள மக்களுக்குப் போட்டால் போதுமா, தமிழ்நாட்டில் இருக்கிற மற்ற மக்களுக்கும் போட வேண்டாமா, அவர்களுக்கும் போடவேண்டும், அல்லது இவர்களுக்கும் நிறுத்திவிடவேண்டும் என்றெல்லாம் வாதாடினார்கள். ஆனால் கட்டுப்பாட்டை நீக்கிய பிறகு, 300 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் பெறுகிறவர்களுக்கு மட்டும்தான் படியரிசி என்ற முறையில் ஒரு வரம்பு வைத்தபிறகு, எதிர் கட்சி யைச்சேர்ந்தவர்கள் மாலையில் பொதுக்கூட்ட மேடையில் ஏறியவுடன் பேசுகிற பேச்சு, 200 ரூபாய் என்ற வரம்பு வைத்திருக்கிறார்கள், மற்றவர்களுக்கு அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள் என்பதுதான். படியரிசித் திட்டம் அமுலில் இருந்தபோது இந்த அரசாங்கத்தைப் பாராட்டியிருக்கிறார்களா என்றால் அப்போதும் இல்லை. கண்டித்துக் கொண்டு தான் இருந்திருக் கிறார்கள். படிப்படியாகக் குறைக்கிறோம் என்று முடிவு எடுத்த நேரத்திலும் பாராட்டவில்லை; கண்டிக்கிறார்கள். இருந்த போதும் கண்டித்தார்கள் . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** படியரிசித் திட்டத்தைக் கொண்டு வருவோம், விவசாயிகளுக்கு அதனால் எந்த பாதகமும் ஏற்படாது, சர்க்காருக்கும் எந்த வித நஷ்டமும் வராது என்று சொன்னீர்கள், படியரிசி 2 ஆண்டு போட்டதில் 9 கோடி ரூபாய் போச்சே, அந்தப் பணம் இருந்தால் வேறு எத்தனை நல்ல திட்டங்களை நிறைவேற்றியிருக்க முடியும் என்று தான் கேட்டோம். படியரிசி

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 மார்ச் 18

திட்டத்தின் அடிப்படை நோக்கம், நாங்கள் வந்தால் திட்டம் போட்டு விவசாயிகளுக்கு கஷ்டம் இல்லாமல் அரசாங்கத்துக்கும் நஷ்டம் இல்லாமல் கொடுப்போம் என்று சொன்னீர்கள்; ஏன் கொடுக்கவில்லை என்று கேட்கிறோம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே! சென்னை, கோவை முதலிய படியரிசித் திட்டம் அமுலில் இருக்கிற பகுதிகளில் இப்போது வைத்திருக்கிற 200 ரூபாய் வருமான வரம்புக்குட்பட்டு படியரிசி அளிப்பதிலேயே அரசாங்கத்திற்கு ஒரு ஆண்டுக்கு ஏற்படும் நஷ்டம் 6 கோடி ரூபாய் என்று புள்ளி விவர அறிக்கையில் கொடுத்திருக்கின்றேன். இதை அரசாங்கம் ஏற்று கொள்ள வேண்டியதில்லை, இதை வைத்து வேறு நல்ல திட்டங்கள் நடத்தலாம், அதற்காக இதை விட்டு விடுங்கள் என்று வாதாடினால் கூட ஏற்றுக் கொள்ள முடியும். இந்தப் படியரிசித் திட்டத்தை ஏன் குறைக்கிறீர்கள், மீண்டும் கொண்டு வாருங்கள், தமிழ்நாட்டில் 5¼ அவுன்ஸ் தானே போடுகிறார்கள் என்று சொல்லும் கூட்டம் இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம் :** எங்களை 6 அவுன்ஸ் கட்சிக்காரர்கள் என்று தானே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எதிர் கட்சிக் கொறடா சிக்குவார் என்று தான் எதிர்பார்த்தேன். அவராக வந்து சிக்கிக் கொண்டார். காங்கிரஸ்காரர்கள் 6 அவுன்ஸ் போட்ட நேரத்தில் வெளி மார்கெட்டில் அரிசி கிடையாது. இப்போது நாங்கள் போடுகிறோம் என்றால், வெளி மார்க்கெட்டில் அரிசி கிடைக்கிறது. நாங்கள் 1000 கிராம் போடுகிறோம், வெளி மார்க்கெட்டில் வேண்டிய அரிசி கிடைக்கிறது கவலையில்லை. அவர்கள் சொல்கிற கணக்கு 5¼ அவுன்ஸ் என்பது கூட சரியில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்களும் சிலம்புச் செல்வர் அவர்களும் மற்ற அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். சென்னையைப் பொருத்தமட்டில் 200 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு என்று இருப்பதை அந்த வரம்பை கொஞ்சம் உயர்த்த வேண்டும் என்று சொன்னார்கள். இது பற்றி முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசினேன். முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை உங்களுக்கு தெரிவிக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். சென்னை, கோவைப் பகுதிகளில் 200 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு என்று இருக்கிற வரம்பை 300 ரூபாயாக உயர்த்தி 1.4.1970 முதல் அமுல் செய்யப்படும் என்று அறிவிக்கச் சொன்னார்கள்; நான் அறிவித்திருக்கிறேன். இனிமேல் சர்க்கரைக் கார்டுக்காக வருமானத்தைக் கூடுதலாக போட்டார்கள் என்ற பேச்சே வேண்டாம். மறுபடியும் கடை திறக்க வேண்டும், வீடு வீடாகச் சென்று 300 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்களை என்யூமேரஷன் செய்ய வேண்டும் என்று சொல்வது சரியில்லை. போய்க்கேட்டால் எல்லா வீடுகளிலும் 300 ரூபாய் என்று தான் சொல்லுவார்கள். அது பொருத்தமாக இருக்காது. சர்க்கரை அட்டைக்காகக் கொடுத்த வருமானத்தை வைத்துக் கொண்டு, அதிலே 300 ரூபாயை வரம்பாக வைத்து, 1 .4 .1970 முதல் அமுல் செய்யப்படும். இந்த திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள் திட்டமே போய் விட்டது என்றெல்லாம் சொல்கிறவர்கள், நியாயமான வரம்புக்கு உட்பட்டு கொடுக்கிறார்கள் என்ற அளவுக்கு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இதிலே கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியங்களை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1970 மார்ச் 18]

**திரு. கே. விநாயகம் :** என்னைச் சிக்கிக் கொண்டார் என்று சொன்னதால், அந்தச் சிக்கலிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ள விரும்புகிறேன். நல்ல காரணத்தோடு தான் கட்டுப்பாட்டை எடுத்து இருக்கிறீர்கள் என்று ஒத்துக் கொள்கிறேன். சென்னையில் கட்டுப்பாட்டை எடுத்த பிறகு அரிசி விலை ஏறி இருக்கிறதா இல்லையா என்று நேரிடையாக பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே எதிர்க் கட்சிக் கொறடா அவர்கள் கேட்கிறார்கள், சென்னையில் அரிசி விலை ஏறுகிறதா இல்லையா என்று. ஒளிவுமறைவின்றி ஒத்துக் கொள்கிறேன். வெளிச் சந்தையில் கட்டுப்பாடு இருந்த நேரத்தில் இருந்த விலையை விட இப்போது கட்டுப்பாடு நீக்கத்துக்கு பிறகு விலை குறைந்து தான் இருக்கிறது என்ற உண்மையை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். கட்டுப்பாடு விலையில் கொடுத்தோமே அந்த விலையை விட அல்ல. வெளிச் சந்தையில் அப்போது என்ன விலைக்குக் கிடைத்ததோ அதை விடக் குறைந்திருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** சென்னை நகரைப் பொருத்தவரை கோவையைப் பொருத்த வரை 300 ரூபாய் வருமானம் வரை உள்ளவர்களுக்கும் படியரிசி உண்டு என்று அறிவித்ததற்காக என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் சென்னை நகரத்தில் இந்தப் பங்கீட்டுக் கார்டு வாங்குகிறபோது வருமானம் 500 ரூபாயாக இருந்து இந்த சந்தர்ப்பத்தில் வேலையில்லாமல் பலர் இருக்கிறார்கள். சில பேருக்கு அதை விட குறைந்த வருமானம் இருந்து கொண்டிருக்கிறது. குடும்பமும் பிரிந்திருக்கிறது. இம்மாதிரி சூழ்நிலையில் தக்க ஆதாரத்தோடு கேட்டார்கள் என்றால் அவர்களுக்கு பங்கீட்டு அட்டை கிடைக்கும் ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதைத்தான் துவக்கத்தில் சொன்னேன். ரூ. 300 என்று யார் யார் சர்க்கரைக் கார்டுக்காகக் கொடுத்திருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும்தான். மேற்கொண்டு கடையைத் திறப்பதற்கில்லை, கேட்டை திறந்து விடுவதற்கில்லை என்று ஒளிவு மறைவின்றி தெரிவிக்கிறேன். குடும்பத்திலிருந்து பிரிந்து விட்டார்கள்; வேலையில்லாமல் இருக்கிறார்கள், பென்ஷன் வாங்கி விட்டார்கள் என்றெல்லாம் சொல்வது முறையல்ல.

நிதிக்கோரிக்கை எண் 8. A -க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த திரு. டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ரா. கனகசபை, திரு. கே; வி; எஸ்; மணி ஆகியோர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

**திரு. கே. விநாயகம் :** திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. எம். பூபதி ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி: "நிதி கோரிக்கை எண் 8—எ—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,87,19,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதி கோரிக்கை பேரவையில் நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 18-க்கு திரு. இல. பலராமன், திரு. கே. எஸ். கோதண்டராமய்யா, திரு. எ. அ. சுப்பராஜா ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டன.

திரு. ரா. கனகசபை அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவை அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள **கேள்வி :** "நிதி கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,82,67,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லாதால் கோரிக்கை எண்—46-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள **கேள்வி—**

"நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத்திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 57,01,06,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அலுவல்கள் இன்று இந்த அளவில் முடிவுற்று 20-ம் தேதி காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பிற்பகல் 1-43

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

* 164. Notification issued with G.O. Ms. No. 1326, Agriculture, dated the 25th April 1969 in regard to notification of certain areas in North Arcot district under the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 [Laid on the Table of the House under Section 44 (3) of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959).]

* **Laid on the Table of the House on 17th March 1970.**



### B. *Reports, Notifications and Other* ***papers.***

* 72. A review on the working of the Stationery and Printing Department during the year 1969–70 (Tamil).

£ 73. A review on Demand No. 5—Registration Department (Tamil).

‡ 74. Policy note under Demand No. 45—Capital Outlay on a Schemes of Government Trading (English and Tamil).

## இணைப்பு—1.

[**17**-ம் பக்கத்தில் **4·47**-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற் குறிய விடையைக் காண்க.]

**Particulars of the amounts entrusted to the decoy witnesses who were engaged by the present Assistant Commissioner of Police, Vigilance, Madras in house brothel cases booked by him from the date of his assuming charge of the post till 1st December 1969 with case numbers.—**

| *Serial number.* | *Number of decoys.* | *Amount entrusted with the decoys.* | *Station crime number.* | *Name of the court and C.C. No. given by the court.* | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | |
| | | RS. | | | |
| 1 | 1 | 200 | 98/1968 | VI Presidency Magistrate, Saidapet, in C.C. No. | 9786/1968 |
| 2 | 1 | 50 | 108/1968 | Do. | 10179/1968 |
| 3 | 1 | 300 | 155/1968 | Do. | 14191/1968 |
| 4 | 1 | 50 | 186/1968 | Do. | 13411/1968 |
| 5 | 1 | 50 | 187/1968 | Do. | 14323/1968 |
| 6 | 1 | 60 | 188/1968 | Do. | 14590/1968 |
| 7 | 1 | 50 | 197/1968 | Do. | 15458/1968 |
| 8 | 1 | 50 | 198/1968 | Do. | 14905/1968 |
| 9 | 1 | 200 | 207/1968 | Do. | 15457/1968 |
| 10 | 1 | 50 | 218/1968 | Do. | 15703/1968 |
| 11 | 1 | 50 | 221/1968 | Do. | 15734/1968 |
| 12 | 1 | 200 | 222/1968 | Do. | 14904/1968 |

* **Laid on the table of the House on 17th March 1970.**

£ **Despatched to Members on 16th March 1970.**

‡ **Despatched to Members on 17th March 1970.**

| Serial number. | Number of decoys. | Amount entrusted with the decoys. | Station crime number. | Name of the court and G.O. No. given by the court. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | | |
| 13 | 2 | 250 | 237/1968 | VII Presidency Magistrate, Egmore, in C.C. No. 5550/1969 |
| 14 | 1 | 100 | 243/1968 | V Presidency Magistrate, Egmore, in C. C. No. 4438/1969 |
| 15 | 1 | 100 | 247/1968 | Do. 4439/1969 |
| 16 | 1 | 100 | 260/1968 | VII Presidency Magistrate, Egmore, in C. C. No. 4763/1969 |
| 17 | 1 | 100 | 19220/1969 | V Presidency Magistrate, Egmore, in C. C. No. 11452/1969 |
| 18 | 1 | 100 | 31 to 33/1969 | Do. 11351/1969 |
| 19 | 1 | 100 | 252/1968 | VII Presidency Magistrate, Egmore, in C. C. No. 4440/1969 |
| 20 | 1 | 100 | 49 to 51/1969 | VII Presidency Magistrate, Egmore, in C. C. No. 10864/1969 |
| 21 | 1 | 40 | 62 and 63/1969 | V Presidency Magistrate, Egmore, in C. C. No. 13966/1969 |
| 22 | 1 | 40 | 67 and 68/1969 | Do. 19688/1969 |
| 23 | 1 | 100 | 78 to 80/1969 | Do. 17689/1969 |
| 24 | 1 | 100 | 81 to 84/1969 | VII Presidency Magistrate, Egmore, in C. C. No. 18678/1969 |



| Serial number. | Number of decoys. | Amount entrusted with the decoys. | Station crime number. | Name of the court and C.C. No. given by the court. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | Rs. | | |
| 25 | 1 | 200 | 85 and 86/1969. | VII Presidency Magistrate, Egmore, in C. C. No. 24670/1969 |
| 26 | 1 | 50 | 102/1969 | IX Presidency Magistrate, Egmore, in C. C. No. 37116/1969 |
| 27 | 1 | 100 | 138 to 141/1969. | Do. 37117/1969 |
| 28 | 1 | 100 | 158 and 159/1969. | VII Presidency Magistrate, Egmore, in C. C. No. 41935/1969 |
| 29 | 1 | 100 | 160 to 162/1969. | V Presidency Magistrate, Egmore, in C. C. No. 39110/1969 |
| 30 | 1 | 50 | 192 and 193/1969. | VII Presidency Magistrate, Egmore, in C. C. No. 41936/1969 |
| 31 | 1 | 200 | 194 to 197/1969. | Action dropped. |
| 32 | 1 | 60 | 229 and 230/1969. | Under investigation. |
| 33 | 1 | 60 | 234 and 235/1969. | Do. |
| | 34 | | | |

[1970 மார்ச் 18

சென்னை, காவல்துறை-ஒழுக்கக் கண்காணிப்பு பிரிவு உதவி ஆணையாளர் தமது தற்போதைய பதவியை ஏற்றுக்கொண்ட நாள் முதல் 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ஆம் நாள் வரை விபசாரத்தடைச் சட்டத்தின் கீழ் அவர் பதிவு செய்த வீட்டு விபசார வழக்குகளில் பொறியில் சிக்கவைப்பதற்காக அவரால் அமர்த்தப்பட்ட சாட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்ட தொகை குறித்த விவரங்கள்—

| தொடர் எண். | பொறியில் சிக்கவைப்பதற்கான சாட்சிகள் எண்ணிக்கை. | பொறியில் சிக்கவைப்பதற்கான சாட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்ட தொகை. | காவல் நிலையக் குற்றத்தாள் எண். | நீதிமன்றத்தின் பெயர், நீதிமன்றத்தால் கொடுக்கப் பட்ட வழக்கு எண். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூபாய். | | |
| 1 | 1 | 200 | 98/1968 | VI மாநகர மாஜிஸ்ட்ரேட், சைதாப் பேட்டை, சி. சி. எண் 9786/1968 |
| 2 | 1 | 50 | 108/1968 | ஷை 10179/1968 |
| 3 | 1 | 300 | 155/1968 | ஷை 14191/1968 |
| 4 | 1 | 50 | 186/1968 | ஷை 13411/1968 |
| 5 | 1 | 50 | 187/1968 | ஷை 14323/1968 |
| 6 | 1 | 60 | 188/1968 | ஷை 14590/1968 |
| 7 | 1 | 50 | 197/1968 | ஷை 15458/1968 |
| 8 | 1 | 50 | 198/1968 | ஷை 14905/1968 |
| 9 | 1 | 200 | 207/1968 | ஷை 15457/1968 |
| 10 | 1 | 50 | 218/1968 | ஷை 15703/1968 |
| 11 | 1 | 50 | 221/1968 | ஷை 15704/1968 |
| 12 | 1 | 200 | 222/1968 | ஷை 14904/1968 |
| 13 | 2 | 250 | 237/1968 | VII மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 5550/1969 |
| 14 | 1 | 100 | 243/1968 | V மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 4438/1969 |
| 15 | 1 | 100 | 247/1968 | V மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 4439/1969 |
| 16 | 1 | 100 | 260/1968 | VII மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 4763/1969 |



1970 மார்ச் 18]

| தொடர் எண். | பொறியில் சிக்கவைப்பதற்கான சாட்சிகள் எண்ணிக்கை. | பொறியில் சிக்கவைப்பதற்கான சாட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்ட தொகை. | காவல் நிலையக் குற்றத்தாள் எண். | நீதிமன்றத்தின் பெயர் நீதிமன்றத்தால் கொடுக்கப் பட்ட வழக்கு எண். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூபாய். | | |
| 17 | 1 | 100 | 19220/1969 | V மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 11452/1969 |
| 18 | 1 | 100 | 31 முதல் 33 வரை/1969. | V மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 11451/1969 |
| 19 | 1 | 100 | 252/1968 | VII மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 4440/1969 |
| 20 | 1 | 100 | 49 முதல் 51 வரை/1969. | VII மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 10864/1969 |
| 21 | 1 | 40 | 62 அண்டு 63/1969. | V மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 13966/1969 |
| 22 | 1 | 40 | 67 அண்டு 68/1969. | ஷை 19688/1969 |
| 23 | 1 | 100 | 78 முதல் 80 வரை/1969. | ஷை 17689/1969 |
| 24 | 1 | 100 | 81 முதல் 84 வரை/1969. | VII மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 18678/1969 |
| 25 | 1 | 200 | 85 அண்டு 86/1969. | ஷை 24670/1969 |
| 26 | 1 | 50 | 102/1969 | IX மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 37116/1969 |
| 27 | 1 | 100 | 138 முதல் 141 வரை/1969. | ஷை 37117/1969 |

| தொடர் எண். | பொறியில் சிக்கவைப்பதற்கான சாட்டுகள் எண்ணிக்கை. | பொறியில் சிக்கவைப்பதற்கான சாட்டுகளின் ஒப்படைக்கப்பட்ட தொகை. | காவல் நிலையக் குற்றத்தாள் எண். | நீதிமன்றத்தின் பெயர், நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட வழக்கு எண். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூபாய். | | |
| 28 | 1 | 100 | 158 அண்டு 159/1969. | VII மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 41935/1969 |
| 29 | 1 | 100 | 160 முதல் 162 வரை/1969. | V மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 39110/1969 |
| 30 | 1 | 50 | 192 அண்டு 193/1969. | VII மாநகர மாஜிஸ்ட்ரேட், எழும்பூர், சி. சி. எண் 41936/1969 |
| 31 | 1 | 200 | 194 முதல் 197 வரை/1969. | நடவடிக்கை கைவிடப்பட்டது. |
| 32 | 1 | 60 | 229 அண்டு 230/1969. | புலன் விசாரணையில் உள்ளது. |
| 33 | 1 | 60 | 234 அண்டு 235/1969. | ஷை |
| | 34 | | | |

## இணைப்பு 2.

[257-ம் பக்கத்தில் 448-ஆம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

*Statement referred to in the answer to Legislative Assembly Question (Starred) No. 2376.*

The Seventeenth meeting of the State Labour Advisory Board was held on 10th and 24th June 1969 under the Chairmanship of the Minister for Labour.

The important recommendations of the Board are as follows :—

REPORT ON THE SPECIAL COMMITTEE ON COST OF LIVING INDEX AND THE REPORT OF THE FINDINGS OF THE EXPERT DR. V. SHANMUGHA-SUNDARAM OF UNIVERSITY OF MADRAS.

It was considered that a separate meeting could be held to consider this subject in detail.



REPORT ON LITERARY AMONG INDUSTRIAL WORKERS.

The members were informed that the Director, Central Board for Workers' Education, Nagpur, who was requested to examine the feasibility of introducing the scheme among the workers employed in plantations and textile industries, has stated that it is not possible for the Board to introduce the scheme. It was agreed that the Central Board for Workers' Education should be again approached.

PROPOSALS FOR AMENDING THE MODEL STANDING ORDERS SO AS TO PROVIDE FOR SUBSISTENCE ALLOWANCE TO WORKMEN DURING THE PERIOD OF SUSPENSION.

The members were informed that the draft amendment to the Model Standing Orders will be published in the *Fort St. George Gazette* as ordered by the Government in G.O. Ms. No. 236, Department of Labour, dated 7th June 1969, and final decision will be taken after considering objections or suggestions, if any received. The copy of the Government Order was circulated among the members.

POSITION OF LEARNERS IN TEXTILE MILLS.

A view was expressed that all the workers, who had put in 240 days of work in a year should be made permanent. With reference to the specific case of a dispute in Madurai, brought to the notice of the Board by one of the members, the Commissioner of Labour agreed to instruct the Deputy Commissioner of Labour, Madurai, to look into the matter and settle amicably.

AMENDMENT TO REGULATION 98 FRAMED UNDER THE EMPLOYEES' STATE INSURANCE ACT, 1948.

This issue would be taken up at the next meeting of the Regional Board (Employees' State Insurance Corporation).

SOME MEANS MUST BE EVOLVED TO PREVENT THE MISUSE OF THE EMPLOYEES' STATE INSURANCE FACILITIES BY WORKERS DURING STRIKES/LOCK-OUTS.

The reply from the Employees' State Insurance Corporation was awaited.

AMENDMENT OF THE MADRAS INDUSTRIAL ESTABLISHMENTS (NATIONAL AND FESTIVAL HOLIDAYS) ACT TO PROVIDE MAY DAY AS AN ADDITIONAL HOLIDAY ETC.

Employers' representatives stressed the necessity to consider seriously the loss of one day's production if May Day is to be declared as an additional holiday. Employees' representatives

wanted that May Day should be a paid holiday and also that the existing holidays in the establishments should not be affected thereby. The Chairman informed the members that the Government's intention is to have May Day as a paid holiday and that Government will take a decision in the matter.

## REOPENING OF THE CLOSED TEXTILE MILLS.

The Managing Director, Tamil Nadu Textile Corporation, Limited, explained to the members the steps being taken by the Corporation to take over the closed mills under the Industries (Development and Regulation) Act of 1952.

## STRENGTHENING OF CONCILIATION MACHINERY.

Members were informed that the Commissioner of Labour had sent proposals for additional posts of conciliation officers and the proposals are under the consideration of the Government.

## NON-IMPLEMENTATION OF RECOMMENDATIONS OF THE WAGE BOARDS.

The members were informed of the progress made in the implementation of the recommendations of the Wage Boards in various industries.

Regarding the final recommendations of the Wage Board for Engineering Industries, it was explained that the Commissioner of Labouar would be convening a meeting of the emqloyers' and workers' representatives to see how the Wage Board recommendations could be implemented.

Regarding the implementation of the recommendations of the Second Wage Board for Cotton Textile Industry, it was decided to await the reaction of the Southern India Mill Owners' Association.

## PRACTISING LAWYERS APPEARING FOR MANAGEMENTS IN INDUSTRIAL DISPUTES IN THE GUISE OF BINAMI ORGANISATION OF EMPLOYERS TO BE PROHIBITED.

## ORGANISATION OF EMPLOYEES SHOULD BE REGISTERED UNDER THE TRADE UNION ACT.

A draft Labour Code was being considered by the National Commission on Labour and recommendations of the National Commission on Labour may be awaited.

## CONSTITUTION AND FUNCTIONING OF THE MINIMUM WAGES ADVISORY COMMITTEES.

It was agreed that action would be taken to expedite the work of the Minimum Wages Advisory Committees.



## PAYMENT OF WAGES WITHIN THE FIFTH DAY OF THE SUCCEEDING MONTH.

The Chairman requested the employers representatives to consider the question and try to advance the date of payment of wages wherever possible.

## EMPLOYEES' STATE INSURANCE DISPENSARIES AND LOCAL OFFICE SHOULD BE OPENED IN THE SUBURBS.

Members were informed that the possibility of increasing the Employees' State Insurance Dispensaries was being examined and the question of extension of the scheme to Minjur area would be considered, after the result of the present survey was known.

## EXEMPTION OF TRADE UNIONS FROM PAYMENT OF COURT FEES FOR PROCEEDINGS IN LABOUR COURTS, INDUSTRIAL TRIBUNALS, ETC., ON THE ANALOGY OF CO-OPERATIVE SOCIETIES.

## REMISSION OF STAMP DUTY ON SETTLEMENT UNDER THE INDUSTRAL DISPUTES ACT.

Members were informed that the Law Department would be consulted in the matter.

## GRANT OF LARGER RATION FOR MANUAL LABOUR.

It was informed that it was not possible to supply more rice but wheat could be supplied.

## REQUIRING THAT ADEQUATE QUANTITY OF SUGAR AT CONTROLLED (RATIONED) PRICES SHOULD BE SOLD TO INDUSTRIAL CANTEENS.

It was explained that supplies of sugar were adequate and that there was not much difference between the controlled price of sugar and the open market price.

## FINALISATION OF THE RULES UNDER THE BEEDI INDUSTRIAL PREMISES ACT.

The rules under the Central Act (i.e.), Beedi and Cigar Workers (Conditions of Employment) Act, 1966, had been finalised. But their enforcement had been stayed by the High Court till the disposal of the writ petitions filed by certain employers.

## NON-IMPLEMENTATION OF THE MOTOR TRANSPORT WORKERS ACT, 1961.

It was decided that a conference would be convened, if necessary to consider the difficulties and delays in the enforcement of the Act.

PROVISION TO BE MADE UNDER THE INDUSTRIAL DISPUTES ACT FOR RECOGNITION OF UNIONS.

It was decided to await the decision of the National Commission on Labour on the Draft Labour Code.

MEASURES TO BE ADOPTED BY THE STATE GOVERNMENT AND EMPLOYERS FOR ACCELERATING THE IMPLEMENTATION OF INDUSTRIAL HOUSING SCHEME.

GOVERNMENT OF INDIA TO BE ASKED TO RENEW THE SUBSIDY GRANTED TO THE INDUSTRIAL HOUSING SCHEME.

GOVERNMENT OF INDIA ALSO TO BE ASKED TO INCREASE THE CEILING ON LOAN ON PAR WITH THE CITIES IN BOMBAY AND CALCUTTA.

UNDERTAKING L]GISLATIONS MAKING IT OBLIGATORY ON THE PART OF THE EMPLOYERS TO HAVE A PHASED PROGRAMME OF CONSTRUCTION OF HOUSES ON THEa BASIS OF CERTAIN PERCENTAGE OF THEIR STRENGTH EVERY YEAR.

It was agreed that the question of moving the Central Government to release more funds for industrial housing would be examined.

APPOINTMENT OF TRIPARTITE COMMISSION TO ENQUIRE INTO THE SEVERAL STRIKES AND LOCK-OUTS IN THE MADRAS STATE SINCE JANUARY 1967.

The subject was dropped.

FAIR STANDARD LEGISLATION SHOULD BE ADOPTED IN RESPECT OF WORKERS NOT COVERED BY LABOUR LEGISLATION SUCH AS THE FACTORIES ACT, THE MADRAS SHOPS AND ESTABLISHMENTS ACT, ETC.

It was felt that a retirement benefit should be made available to employees in smaller establishments, and that the extension of the Employees' Provident Fund Scheme to such establishments should be examined.

AMENDNG THE MADRAS FACTORIES RULES REQUIRING NOTIFICATION BY AN EMPLOYER OF THE FACTORY AS TO WHO ARE ESSENTIAL SERVICE PERSONNEL AND AUTHORISING THE CHIEF INSPECTOR OF FACTORIES TO APPROVE OF SUCH NOTIFICATION AFTER CONSULTING THE TRADE UNIONS AND REQUIRING THAT PERSONNEL AS



NOTIFIED AS BELONGING TO "ESSENTIAL SERVICES" SHOULD BE PAID 10 PER CENT OF ORDINARY WAGES AS DISABILITY ALLOWANCE.

The members who sponsored the subject desired that the Chief Inspector of Factories should be authorised to determine as to who are "essential service" personnel, and that the latter should be paid disability allowance. It was pointed out that there is already such a classification, though without a special allowance and so it is not a general problem.

GOVERNMENT SHOULD APPEAL AGAINST THE ORDERS OF THE HIGH COURT OF MADRAS IN C.M.P. NO. 1261/69 IN W.P. 330/68 (VALLIAMMAL *Versus* GOVERNMENT OF MADRAS) STAYING THE OPERATION OF G.O. MS. No. 2909, LABOUR, INDUSTRIES AND HOUSING, DATED 9TH SEPTEMBER 1967.

Members wanted that action should be expedited to vacate the stay. Action is being pursued to see that the writ petition is disposed of expeditiously.

REVIEW OF THE MINIMUM RATES OF WAGES FIXED FOR THE EMPLOYMENT IN STONE BREAKING OR STONE CRUSHING CARRIED ON IN QUARRIES.

It was explained that the revision of the minimum rates of wages fixed for the employment in stone breaking, etc., is due only from 1st January 1970 and that an Advisory Committee will be constituted meanwhile and necessary action taken.

The Present position on the Amendment of section 78 of the Factories Act to include Sick leave and Festival Holidays in the 240 days minimum.

REQUIRED FOR THE ELIGIBILITY OF LEAVE.

The matter will be placed before the Indian Labour Conference.

ACCEPTING THE PRINCIPLES THAT THE TAMIL NADU GOVERNMENT SHOULD BE A MODEL EMPLOYER.

The views expressed by the member were noted, without conceding the suggestion that the Government was not a model employer.

AMENDMENT OF THE PAYMENT OF WAGES ACT.

It was felt that unions may directly collect the subscriptions.

## GRANT OF WEEKLY HOLIDAY AFTER EVERY SIX DAYS WORKING.

It was explained that if there are specific instances of hardship they may be brought to the notice of the Government for necessary action.

## NON-IMPLEMENTATION OF THE AWARDS OF LABOUR COURTS, INDUSTRIAL TRIBUNAL, PAYMENT OF WAGES AND WORKMEN'S COMPENSATION AUTHORITIES.

Members were informed that the Revenue Officials will be asked to expedite revenue recovery proceedings and that the question of any other special provisions being made for ensuring speedy recovery would be examined.

## PROSECUTION OF DEFAULTING EMPLOYERS UNDER EMPLOYEES' PROVIDENT FUND ACT.

## PROSECUTION OF DEFAULTING EMPLOYERS UNDER EMPLOYEES' STATE INSURANCE ACT.

Members were informed that the matter will be discussed at a Conference to be held on 7th July 1969.

## INDIAN TRADE UNIONS ACT—ENFORCEMENT OF.

It was agreed that forms for annual returns under the Trade Union Act could be supplied in triplicate and that the member's suggestion that the certificate of registration should be printed on quality paper with the Government emblem thereon would be considered.

## FESTIVAL BONUS.

No action was considered necessary.

## GRATUITY.

Members were informed that as far as Shops and Establishments are concerned, the Government are considering this as part of amendments to the Madras Shops and Establishments Act.

## AMENDMENT TO REGULATION 98 FRAMED UNDER THE EMPLOYEES' STATE INSURANCE ACT, 1948.

It was agreed that the management will keep lien on the post available to the Employees State Insurance beneficially up to a maximum period of 12 months, provided the substitute in his place does not claim any right of permanency.





## EXEMPTION OF PERSONS EMPLOYED IN A POSITION OF MANAGEMENT UNDER THE MADRAS SHOPS AND ESTABLISHMENTS ACT, 1947.

It was informed that amendment of the notification in that regard is under consideration of the Government.

## REPORT OF THE SPECIAL COMMITTEE ON COST OF LIVING INDEX AND THE FINDINGS OF THE EXPERT DR. V. SHANMUGHASUNDARAM OF THE UNIVERSITY OF MADRAS.

Adjourned.

## INTERNATIONAL LABOUR ORGANIZATION WEEK.

The members were informally consulted on the question of celebration of the 50th Anniversary of the International Labour Organization and it was agreed that the International Labour Week may be celebrated from 20th to 26th July 1969 instead of from 6th to 12th as already programmed.

## CLOSURE OF ESTABLISHMENTS WHEN EMINET PERSONS PASS AWAY.

Thiru K. Gopal's suggestion in this regard would be taken up at next meeting.

K. VEZHAVENDAN,
*Minister for Labour.*

### மன்றப் பேரவை முன் வைக்கப்பட்ட அறிக்கை.

திரு. கோமதி சங்கர தீட்சிதர், எம்.எல்.ஏ., விடுத்த 2376-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட சட்ட மன்றப் பேரவை வினாவிற்கான விடையின் (இ) பகுதி பகுதியைப் பார்க்கவும்.

விடை—

மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தின் 17-வது கூட்டம், தொழிலாளர் அமைச்சரின் தலைமையில் 10—6—1969 அன்றும், 24—6—1969 அன்றும் நடந்தது.

[1970 மார்ச் 18

வாரியத்தின் முக்கிய பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**வாழ்க்கைத்தர புள்ளி விவரங்கள் குறித்துச் சிறப்புக் குழுவின் அறிக்கை, சென்னைப் பல்கலைக் கழக வல்லுநராகிய டாக்டர் வி. சண்முகசுந்தரம் அவர்களின் ஆய்வு அறிக்கை.**

இது குறித்து விரிவாக ஆலோசிப்பதற்குத் தனிக் கூட்டம் ஒன்று நடத்தப் படவேண்டுமென்று கருதப்பட்டது.

**தொழிலாளர்களிடையே எழுதப்படிக்கத் தெரிந்தவர் குறித்த அறிக்கை.**

மலைத்தோட்டத் தொழிலாளர்களிடையேயும், பஞ்சாலைத் தொழிலாளர்களிடையேயும் இத்திட்டத்தைக் கொண்டு வருவதற்கான சாத்திய கூற்றினை ஆராயுமாறு நாகபுரி தொழிலாளர் கல்விக்கான மத்திய வாரிய இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார் என்றும் வாரியத்தினால் திட்டத்தைக் கொண்டுவர இயலாது என அவர் தெரிவித்துள்ளார் என்றும் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. தொழிலாளர் கல்விக்கான மத்திய வாரியத்தை மீண்டும் அணுக வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

**பதவியிலிருந்து தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் கால அளவில் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்க வகை செய்யும் பொருட்டு மாதிரிநிலை ஆணைகளைத் திருத்துவதற்கான செயற்குறிப்புகள்.**

தொழிலாளர் துறையில் 7—6—1969 நாளிட்ட 236-ம் எண்ணுள்ள ஆணையில் அரசு ஆணையிட்டபடி மாதிரி நிலை ஆணைகளுக்கான வரைவுத் திருத்தம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் என்றும், மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் பெறப்படின் அவை ஆராயப்பட்ட பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அரசு ஆணையின் நகல் உறுப்பினர்களிடையே சுற்றோட்டமாக அனுப்பட்டது.

**பஞ்சாலைகளில் பயிற்சி பெறுபவர்களின் நிலை**

ஓர் ஆண்டில் 240 நாட்கள் பணியாற்றிய தொழிலாளர்கள் அனைவரும் நிலையாக்கப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. மதுரையில் நடந்த ஒரு தகராறு பற்றிய நேர்வு உறுப்பினர்களில் ஒருவரால் வாரியத்தின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டது. இது குறித்து விசாரணை செய்து சுமுகமான முடிவு எடுக்கும்படி மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையாளருக்குக் கட்டளையிட தொழிலாளர் துறை ஆணையாளர் ஒப்புக்கொண்டார்.

**1948-ம் ஆண்டு தொழிலாளர் அரசுக் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட 98-வது விதிமுறைக்குத் திருத்தம்.**

வட்டார வாரியத்தின் (தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம்) அடுத்த கூட்டத்தில் இது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.



1970 மார்ச் 18]

**வேலை நிறுத்தத்தின்போது கதவடைப்பின்போது தொழிலாளர்கள் தொழிலாளர் மாநில காப்புறுதி வசதிகளைத் தவறாகப் பயன் படுத்துவதைத் தடுக்கும் வகையில் சில வழிவகைகள் வகுக்கப்பட வேண்டும்.**

தொழிலாளர் அரசுக் காப்புறுதிக் கழகத்திடமிருந்து பதில் எதிர்பார்க்கப் பட்டது.

**மே தினத்தைக் கூடுதல் விடுமுறையாக அறிவிக்க வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசீய, திருவிழா விடுமுறைகள்) சட்டத்தைத் திருத்துதல்.**

மே தினம், கூடுதல் விடுமுறையாக அறிவிக்கப்பட்டால், ஒரு நாள் உற்பத்தி நின்றுவிடுவதால் விரயம் ஏற்படும் என்பதை அரசு கவனிக்க வேண்டும் என்று தொழில் முனைவர்களின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர். மே தினம் சம்பளத்தோடு கூடிய விடுமுறையாக அறிவிக்கப்பட வேண்டுமென்றும் நிறுவனங்களில் தற்போது செயலில் உள்ள விடுமுறைகள் அதனால் பாதிக்கப்படக்கூடாது என்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் விரும்பினர். மே தினத்தைச் சம்பளத்தோடு கூடிய விடுமுறையாக விடுவதே அரசின் விருப்பமாகும் என்றும் இது குறித்து அரசு முடிவெடுக்கும் என்றும் தலைவர் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.

**மூடப்பட்ட பஞ்சாலைகளை மீண்டும் திறத்தல்**

மூடப்பட்ட ஆலைகளை, 1952-ம் ஆண்டு தொழில்கள் (மேம்பாடு முறைப் படுத்துதல்) சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்வதற்கு தமிழ்நாடு பஞ்சாலைக் கழக நிறுவனம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை உறுப்பினர்களுக்கு மேற்படி கழகத்தின் நிர்வாக இயக்குநர் விளக்கினார்.

**இணக்க அமைப்பை வலுப்படுத்துதல்**

இணக்க அதிகாரிகளின் பதவிகளைக் கூடுதலாக்குவதற்கான செயற் குறிப்புகளைத் தொழிலாளர் துறை ஆணையர் அனுப்பியுள்ளாரென்றும், அந்தச் செயற் குறிப்புகள் அரசின் ஆலோசனையில் உள்ளனவென்றும் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

**ஊதிய வாரியங்களில் பரிவுரைகளைச் செயல்படுத்தாமை**

பல்வேறு தொழில்கள், ஊதிய வாரியங்களின் பரிவுரைகள் நிறைவேற்றப் படுவது குறித்து உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

பொறியியல் தொழில்கள் குறித்து ஊதிய வாரியத்தின் இறுதியான பரிவுரைகளைப் பொறுத்த வரையில் ஊதிய வாரியத்தின் பரிவுரைகளை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்துக் கண்டறிவதற்காக தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரது பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றைத் தொழிலாளர் துறை ஆணையர் கூட்டுவார் என்று விளக்கம் தரப்பட்டது.

பஞ்சாலைத் தொழில் குறித்த இரண்டாவது ஊதிய வாரியத்தின் பரிவுரைகளைச் செயல்படுத்துவதைப் பொறுத்தவரையில், தென் இந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் கருத்தைப் பெறும் வரையில் காத்திருப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

[1970 மார்ச் 18

**தொழிலதிபர்களின் பிரதிநிதி நிறுவனம் என்ற பெயரில் தொழில் தகராறுகளில் நிர்வாகத்தினருக்காக வழக்குரைஞர்கள் வழக்காடுவது தடை செய்யப்படும் என்பது.**

**தொழிலதிபர்களின் அமைப்புகள் தொழிற்சங்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவேண்டும் என்பது.**

தொழிலாளர் விதிக்கோவை ஒன்று தேசியத் தொழிலாளர் ஆணைக் குழுவினால் ஆலோசிக்கப்பட்டு வந்தது. தேசியத் தொழிலாளர் ஆணைக் குழுவின் பரிவுரைகள் எதிர்பார்க்கப்படலாம்.

**குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழுக்களின் அமைப்பும் செயல்முறையும்.**

குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழுக்களின் பணியை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

**அடுத்துவரும் திங்களின் 5-ம் நாளுக்குள் ஊதியங்களை வழங்குதல்.**

இது குறித்து ஆலோசனை செய்யுமாறும், இயன்றவிடங்களில் ஊதியத்தை முன்னதாக அளிக்க முயற்சி செய்யுமாறும் தொழிலதிபர்களின் பிரதிநிதிகளை தலைவர் கேட்டுக் கொண்டார்.

**புறநகர்ப் பகுதிகளில் தொழிலாளர் மாநிலக் காப்புறுதி மருந்தகங்களையும் உள்ளூர் அலுவலகத்தையும் தொடங்குதல்.**

தொழிலாளர் மாநிலக் காப்புறுதி மருந்தகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வாய்ப்பு ஆய்வு செய்யப்பட்டு வந்தது என்றும் தற்போதைய ஆய்வின் முடிவுதெரிந்த பிறகு இத் திட்டத்தை மீஞ்சூர் பகுதி விரிவுபடுத்துவது குறித்துக் கருதிப் பார்க்கப்படும் என்றும் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

**கூட்டுறவுச் சங்களுக்கு இணையாக, தொழிலாளர் நீதி மன்றங்கள், தொழில் தலைவர் மன்றங்கள் முதலியவற்றின் நடவடிக்கைகளுக்காக நீதி மன்றக் கட்டணம் செலுத்துவதிலிருந்து தொழிற் சங்கங்களுக்கு விலக்கு.**

**தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் தீர்வு காண்பது குறித்து முத்தரைத் தீர்வைத் தள்ளுபடி.**

இது குறித்து சட்டத் துறையுடன் கலந்து ஆலோசிக்கப்படும் என்று உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

**மெய்வருத்த உழைக்கும் தொழிலாளர்களுக்கு பங்கீட்டு உணவு அளவைக் கூடுதலாக்குதல்.**

கூடுதலாக அரிசி வழங்குவது இயலாதென்றும், ஆனால் கோதுமை வழங்க இயலுமென்றும் தெரிவிக்கப்பட்டது.



1970 மார்ச் 18]

**தொழிற்சாலைகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளுக்கு கட்டுப்பாடு விலைகளில் (பங்கீட்டு விலைகளில்) போதிய அளவுக்குச் சர்க்கரை வழங்கப்பட வேண்டும் என்பது.**

சர்க்கரை வழங்குதல் போதுமான அளவு இருந்தது என்றும் சர்க்கரையின் கட்டுப்பாடு விலைக்கும் வெளிச்சந்தை விலைக்கும் இடையே அதிகமாக வேறுபாடு இல்லை என்றும் விளக்கப்பட்டது.

**பீடித் தொழிற்சாலை வளவுச் சட்டத்தின் விதிகளை இறுதியாக வகுத்தல்.**

மத்தியச் சட்டத்தின், அதாவது 1966-ம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள் சட்டத்தின்கீழ் விதிகள் இறுதியாக வகுக்கப்பட்டன. ஆனால், சில தொழிலதிபர்களால் தொடுக்கப்பட்ட ரிட் மனுக்கள் குறித்து முடிவு எடுக்கிற வரைக்கும், உயர்நீதிமன்றத்தால் இவை செயல்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**1961 ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் செயலுக்குக் கொண்டு வரப்படாமை.**

தேவையிருப்பின், இச் சட்டம் செயல்படுவதில் உள்ள இடையூறுகளையும் காலதாமதங்களையும் பரிசீலிப்பதெற்கென ஒரு மாநாடு கூட்டப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

**சட்டங்களுக்கு இசைவளிப்பதற்காக தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் வகை செய்தல்.**

தொழிலாளர் வரைவு விதிக்கோவை குறித்து தொழிலாளர் பற்றிய தேசிய ஆணைக் குழுவின் முடிவை எதிர்பார்ப்பதென முடிவு செய்யப்பட்டது.

**தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்துவதை விரைவுபடுத்துவதற்காக மாநில அரசும் தொழில் அதிபர்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்.**

தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்திற்கு வழங்கப்படும் உதவி தொகையை புதுப்பிக்கும்படி இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்படும்.

பம்பாய், கல்கத்தா நகரங்களுக்கு இணையாக கடன் மேல்வரம்பை உயர்த்துவதற்கும் இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்படும்.

**தொழிலாளர்கள் எண்ணிக்கையின் ஏதேனும் ஒரு சதவீத அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் வீடுகள் கட்டுவதற்கென படிப்படியான திட்டத்தை தொழிலதிபர்கள் மேற்கொள்ள சட்டங்கள் இயற்றுதல்.**

தொழிலாளர்களுக்காக வீடுகள் கட்டுவதற்கு மேற்கொண்டும் நிதியை அளிக்க வேண்டுமென மத்திய அரசை அணுக வேண்டியது பற்றி பரிசீலிக்கப்படும் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**1967-ம் ஆண்டு ஜனவரி திங்களிலிருந்து தமிழ்நாட்டில் நடைபெற்ற சில வேலை நிறுத்தங்களை, கதவடைப்புகள்பற்றி விசாரணை நடத்த முத்தரப்பு ஆணைக்குழு நியமித்தல்.**

இது கைவிடப்பட்டது.

[1970 மார்ச் 18

தொழிற்சாலைச் சட்டம், தமிழ்நாடு கடைகள்—நிறுவனங்கள் சட்டம் போன்று தொழிலாளர் சட்டங்கள் பொருந்தாத தொழிலாளர்கள் குறித்து நியாயமானதும், தரமானதுமான சட்டம் மேற்கொள்ளப்படவேண்டும்.

சிறு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஓய்வுகால பயன்கள் அளிக்கப்படவேண்டும் என்றும், அத்தகைய நிறுவனங்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டத்தை நீட்டிப்பதுபற்றிப் பரிசீலிக்கப்பட்ட வேண்டும் என்று கருத்துரைக்கப்பட்டது.

தொழிற்சாலையின் தொழிலதிபர் ஒருவரால் இன்றியமையாப் பணி ஆற்றுபவர் இவரென அறிவிப்பு வெளியிட வேண்டும் என்று கேட்பதற்கும தொழிற் சங்கங்களைக் கலந்தாலோசித்த பிறகு அத்தகைய அறிவிப்பை ஏற்க தொழிற்சாலைகளின் தலைமை நேருநருக்கு அதிகாரம் அளிப்பதற்கும் "இன்றியமையாப் பணிகளைச்" சேர்ந்தவர்களென அறிவிக்கபபட்ட பணியாளர்களுக்கு சாதாரண ஊதியத்தில் 10 சதவீதம் இயலாமைப் படியாக வழங்க வேண்டும் என்று விதிப்பதற்கும் வகை செய்வதற்காக 'தமிழ்நாடு தொழிற்சாலை விதிகளை' திருத்தல்.

"இன்றியமையாப் பணி" ஆற்றுவோர் யாரெனத் தீர்மானிக்க தொழிற் சாலை தலைமை ஆய்வாளருக்கு அதிகாரமளிக்க வேண்டும் என்றும், "இன்றிய மையாப் பணியைச்" சேர்ந்த பணியாளர்களுக்கு இயலாமைப் படி அளிக்கப் படவேண்டும் என்றும், இதனை கொண்டுவந்த உறுப்பினர்கள் விருப்பம் தெரி வித்தார்கள். சிறப்பு படி எதுவும் இல்லாமலிருப்பினும், ஏற்கனவே இத்தகைய வகைப்பாடு ஒன்று இருக்கிறதென்றும், எனவே இது பொதுச் சிக்கல அன்று என்றும் குறிப்பிடப்பட்டது.

தொழில் தொழிலாளர்-வீட்டு வசதித் துறையின் 9—9—1967 நாளிட்ட 2309 எண் அரசு ஆணை செயல்படுவதை நிறுத்திவைத்து (வள்ளியம்மாள் தமிழ் நாடு அரசு இவர்களுக்கு இடையிலான) 330/68 எண் ரிட் மனுவில் C.MP. 1261/69 எண்ணில் சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணை களுக்கு எதிராக அரசு மேல் முறையீடு செய்துகொள்ள வேண்டும்.

தடை ஆணையை நீக்குவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்தனர். ரிட் மனு குறித்து விரைவில் முடிவு செய்யப்படும் வகையில், நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட்டு வரு கிறது.

கற் சுரங்கங்களில் பணிபுரியும் கல் உடைக்கும் அல்லது கல் தூளாக்கும் தொழிலாளர்களுக்காக குறைந்த அளவு ஊதியம் வரையறுப்பது பற்றி மறு பரிசீலனை செய்தல்.

கல் உடைக்கும் பணி முதலியவற்றில் பணிபுரிவோருக்கு முடிவு செய்யப் பட்ட குறைந்த அளவு ஊதிய வீதங்களை மாற்றி யமைப்பது 1—1—1970 முதற் கொண்டுதான் என்றும் இதற்கிடையில் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப் படும் என்றும் அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் விளக் கப்பட்டது.



1970 மார்ச் 18]

விடுப்பு பெறத் தகுதியாக வரையறுக்கப்பட்டுள்ள குறைந்தளவு 240 நாட்களில் நோய் விடுப்பு, விழா விடுமுறைகளையும் சேர்க்க தொழிற்சாலைகள் சட்டம் 79வது பிரிவில் செய்யவேண்டிய திருத்தத்தின் தற்போதைய நிலை.

இந்திய தொழிலாளர்கள் மாநாட்டின் முன் இதுபற்றிய விவரம் வைக்கப் படும்.

தமிழ்நாடு அரசு ஒரு மாதிரி தொழிலதிபராக இருக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளுதல்.

உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கள் குறித்துக் கொள்ளப்பட்டன. அரசு முன்னோடித் தொழிலதிபராக இல்லை என்ற குறிப்பு இக்கருத்தில் தொக்கி நிற்பதை அரசு ஏற்கவில்லை.

ஊதியம் வழங்கல் சட்டத்தினைத் திருத்துதல்.

சந்தா தொகையை தொழிற் சங்கங்கள் நேரடியாகவே வசூலிக்கலாம் எனக் கருதப்பட்டது.

ஒவ்வொரு 6 வேலை நாட்களுக்குப் பிறகு வார விடுமுறையளித்தல்.

இடர்ப்பாடு நேரிட்டிருக்கக்கூடிய திட்டவட்டமான நேர்வுகள் இருப்பின், அவைகுறித்து தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக அரசின் நாட்டத் திற்குக் கொண்டு வரப்படலாமென தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர் நீதிமன்றங்கள் தொழில் நடுவர் மன்றம், ஊதியம் கொடுப்பது, தொழிலாளர் இழப்பீட்டு அதிகார மன்றங்கள், ஆகியவற்றின் தீர்ப்புகள் நிறை வேற்றப்படாமை.

வருவாய் வசூலிப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு வருவாய் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுவாரெனவும் வருவாய் வசூலிப்பதை விரைவு படுத்த பிற முக்கிய ஏற்பாடுகள் செய்வது பற்றி ஆய்வு செய்யப்படும் எனவும் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

தொழிலாளர்கள் வருங்கால வைப்பீட்டு நிதி சட்டத்தின் கீழ் கடமை தவறும் தொழிலாளர்களின்மீது வழக்கு தொடருதல், தொழிலாளர் மாநில காப் புறுதிச் சட்டத்தின்கீழ் கடமை தவறும் தொழிலாளர்களின்மீது வழக்கு தொடருதல்.

1969-ம் ஆண்டு ஜூலை திங்கள் 7-ம் நாளில் நடக்கவிருக்கும் கூட்டத்தில் இதுபற்றி விவாதிக்கப்படுமென உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டனர்.

இந்திய தொழிற் சங்கச் சட்டம்—செயல்படுதல்.

தொழிற்சங்கச் சட்டத்தின் கீழ் ஆண்டு அறிக்கையின் படிவங்கள் மூன்று பிரதிநிதிகளில் வழங்கப்படலாம் என ஒப்புக் கொள்ளப்பட்டது. பதிவுச் சான்றிதழ் அரசுச் சின்னம் கொண்ட தரமான தாள்களில் அச்சிடப்பட வேண்டுமென்று உறுப்பினர் அளித்த கருத்து பரிசீலிக்கப்படும்.

### பண்டிகை பூரிப்பூதியம்.

நடவடிக்கை ஏதும் அவசியமில்லையென கருதப்பட்டது.

### பணிக்கொடை.

கடைகள், நிறுவனங்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டத்திற்கான திருத்தத்தின் ஒரு பகுதியாக இதை அரசு கருதி வருகிறதென உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

### 1948-ம் ஆண்டு மாநிலத் தொழிலாளர் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட 98 வது விதிமுறையில் திருத்தம்.

மாநில தொழிலாளர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் நன்மை பயப்பவர்களது பதவிக்கான மீள் உரிமையை அதிக அளவு 12 திங்கள்வரை நிர்வாகம் வைத்திருக்கும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் வேறு வேலைக்குச் சென்றுப்பவரது பதவியில் அவருக்குப் பதிலாக நியமிக்கப்படுவார் தனது பணி நிலையாக்கப்படவேண்டுமென உரிமை கொண்டாடக்கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

### 1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள்-நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் நிர்வாக பதவிகளில் பணி புரிபவர்களுக்கு விலக்களித்தல்.

இதுபற்றிய அறிவிப்பினை திருத்தம் செய்வது அரசின் ஆய்விலுள்ளதென அறிவிக்கப்பட்டது.

### விலைவாசி குறியீட்டு எண் பற்றிய தனிக் குழுவின் அறிக்கை (சென்னை பல்கலைக் கழக வல்லுநர் டாக்டர் வி. சண்முகசுந்தரம் அவர்களின் கண்டுபிடிப்புகள்.

ஒத்திவைக்கப்பட்டது.

### அனைத்து நாட்டுத் தொழிலாளர் நிறுவன வாரம்.

அனைத்து நாட்டு தொழிலாளர் நிறுவனத்தின் 50-வது ஆண்டு விழா கொண்டாடுவது பற்றி உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் கலந்தாலோசிக்கப்பட்டனர். அனைத்து நாட்டு தொழிலாளர் நிறுவன வாரத்தை முன்பு திட்டமிட்டபடி 1969-ம் ஆண்டு ஜூலை 6-ம் நாளிலிருந்து 12-ம் நாள்வரை கொண்டாடுவதற்குப் பதிலாக ஜூலை 20-ம் நாளிலிருந்து 26-ம் நாள் வரை கொண்டாட இசைவளிக்கப்பட்டது.

### உயர்ந்தோர் மறையும் நேர்வுகளில் தொழில் நிறுவனங்களை மூடுதல்.

திரு. கே. கோபால் அவர்களின் கருத்துரை அடுத்த கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

கா. வேழவேந்தன்,
தொழிலாளர் நல அமைச்சர்.



## இணைப்பு 3.

[ ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 3.

### பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், "கோரிக்கை-3 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்" என்பதன்கீழ் ரூ. 1,82,04,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென நான் வேண்டுகிறேன்.

2. தமிழ் நாட்டு வரி வருவாயில் பெரும் பகுதி பல்வேறு வணிக வரிகளிலிருந்து கிடைக்கிறது. வணிக வரிகளின் வாயிலாகக்கிட்டிய வருவாய் 1939-ல் ரூ. 59.49 லட்சமாயிருக்க, 1968-69-ல் இவ்வருவாய் ரூபாய் 7,142.03 லட்சமாக உயர்ந்துள்ளது. நமது மாநிலத்தில் வணிக வளர்ச்சியையும், தொழில் மேம்பாட்டையும் இது தெளிவாகக் காட்டுகிறது. நடப்பு ஆண்டில் இம்மாநிலத்தில் வறட்சியால் பீடிக்கப்பட்டது. வறட்சி நிலை ஏற்படாதிருந்தால், இவ்வாண்டின் வணிகவரி வசூல் தற்போதைய வசூல்களைக் காட்டிலும் இன்னும் அதிகமாக இருந்திருக்கும். வரிவசூல் அமைப்பை மேலும் திறமையாக்குவதன்மூலமும், வரும் ஆண்டுகளில் பொருளாதார நிலைமைகள் மேம்படுவதன்மூலமும் இவ்வரிகள் மூலம் அதிக வருவாய் கிட்டும் என்று நம்பப்படுகிறது.

3. சென்னை உயர்நீதி மன்றமும் இந்தியத் தலைமை நீதி மன்றமும் கடந்த 30 ஆண்டுகளில் பிறப்பித்துள்ள தீர்ப்புகளின் வழியாக உருவாகியுள்ள தீர்ப்புவழிச் சட்டம், விற்பனை வரிச் சட்டத்தை முறைப்படுத்தும் கோட்பாடுகள் வணிகத்துறையினராலும், அரசினராலும் ஏற்றுக்கொள்ளப்படும்வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. வரிகளை மதிப்பிடுவதிலும், வசூலிப்பதிலும் இத்துறை திறமையாகச் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடன் சேர்ந்து ஒப்புக்கொள்வர் என்று நான் நம்புகிறேன். நிர்வாக, சட்டச்சிக்கல்கள் பலவற்றை எதிர்த்துப் போராடியே இத்துறை செயல்பட வேண்டியுள்ளது. வரிவிதிக்கப்பட்டோர் அல்லற்படாமல் இருக்குமாறும், அதேசமயத்தில் வருவாய் இழப்பு ஏற்படாமலும் அரசு கவனமாகப் பார்த்துக்கொள்கிறது. விற்பனை வரியைச் சரிவர மதிப்பிடுவதற்குத் தேவையான கணக்குப் புத்தகங்கள் வைத்து வர இயலாத சிறு வணிகர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தாம் செலுத்தவேண்டிய வரியை உடன்பட்டுத் தீர்த்துக்கொள்ள இயலும் வகையில் மேற்படி சட்டத்தில் சிறப்பான விதித்துறைகள் செய்யப்பட்டுள்ளன. கொள்முதல் பட்டிகள் ( Purchase Bills ) கொள்முதல் கணக்குகள் (Purchase Accounts ) ஆகியவற்றை மட்டும் அவர்கள் வைத்து வந்தால் போதுமானது. ஓராண்டில் ரூபாய் 50,000-க்கு மேற்படாத மொத்த வாணிகம் செய்யும் சிறிய வணிகர்களைப் பொறுத்தவரையில், கணக்குகளைக் கடுமையான சோதனைக்குட்படுத்துவது தவிர்க்கப்படுகிறது. வரி ஏய்ப்பு கண்டுபிடிக்கப்படும் போதெல்லாம் வரி விதிக்கப்பட்டவர்கள் ஏதுமிருந்த நியாயமெனத் தோன்றுகிறதோ, அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வரி விதிப்பு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

4. இத் துறையின் முக்கியக் கூறுகள் சிலவற்றை இம் மன்றத்தின் முன் வைக்க நான் விரும்புகிறேன். வணிக வரிகள் துறை நிதி சார்ந்த கீழ்க்காணும் ஆறு சட்டங்களைத் தொடர்ந்து நிர்வகித்து வருகிறது; அவையாவன :—

(1) தமிழ் நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959.

(2) மத்திய விற்பனை வரிச்சட்டம், 1956.

(3) தமிழ் நாடு மோட்டார் எண்ணெய் விற்பனை வரிச்சட்டம், 1939.

(4) தமிழ் நாடு கேளிக்கை வரிச்சட்டம், 1939.

(5) தமிழ் நாடு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச்சட்டம், 1961.

(6) தமிழ் நாடு பந்தய வரிச்சட்டம், 1935.

1969-70-ல் 1970 பிப்ரவரி வரையில் மொத்த வரி வருவாய் ரூபாய் 7,202.64 லட்சமாகும். கடந்த ஆண்டில் நிகரான இக்கால அளவுக்குரிய மொத்த வரி வருவாய் ரூபாய் 6,355.21 லட்சம் ஆகும். ரூபாய் 847.43 லட்சம் அல்லது 13.33 சத வீதம் உயர்ந்துள்ளதை இது காட்டுகிறது.

செலவினம், கீழே காட்டியுள்ளபடி 1969-70-ல் சற்று அதிகரித்துள்ளது.

| | 1967–68. | 1968–69. | 1969–70. |
|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்.) | |
| 12 விற்பனை வரிச் செலவு .. | 133·06 | 155·71 | 159·89 (திருத்த மதிப்பீடு.) |
| 13 பிற வரிகளும் தீர்வைகளும்-பந்தய வரி-குதிரைப் பந்தய கழகத்துக்குச் செலுத்தத்தக்க தரகு. | 0·26 | 0·05 | 0·31 (திருத்த மதிப்பீடு.) |
| | 133·32 | 155·76 | 160·20 (திருத்த மதிப்பீடு.) |

1969-70 ஆண்டுக்காக, செலவினத் திருத்த மதிப்பீடு ரூபாய் 160.20 லட்சமாகும். வரி வருவாயில் இது 2.1 சத வீதம் என்று கணக்கிடப்படுகிறது. இச் செலவினம் மிகவும் நியாயமானதென்று கருதப்படுகிறது.

5. தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வணிகத் தொகை பெருமளவிலுள்ள பெரிய வணிகர்கள் குறித்தும், 1939-ம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் எண்ணெய் விற்பனைமீது வரிவிதிப்பு சட்டத்தின்கீழ் எண்ணெய் நிறுவனங்களுக்குத் தொடர்பானவர் மீதும் நடவடிக்கை மேற்கொள்ள, வணிக வரி அதிகாரியின் தரத்தில் கூடுதலான வரி விதிப்பு அதிகாரிகளுடன், மத்திய வரி விதிப்பு வட்டம் ஒன்றை ஏற்படுத்த அரசு 1969-70-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.



சென்னை மாநகரில் உள்ள ஒவ்வொரு மேல் முறையீட்டு உதவி ஆணையாளர் முன்பும் துறையின் வழக்குகளைத் திறமையாகவும் முழுமையாகவும் எடுத்துக் கூறும் நோக்கத்துடன், துணைப்பணியாளர்களுடன், வணிக வரி இணையதிகாரியின் தரத்தில் துறைப் பிரதிநிதி பதவிகள் ஐந்து ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவர்கள் சென்னைக் கோட்டத்தைச் சேர்ந்தத் (வணிக வரிகள்) துணை ஆணையாளரின் நிர்வாக மேற்பார்வையில் வைக்கப்பட்டுள்ளனர். இது சோதனை நடவடிக்கையாகச் செயல்படுத்தப்பட்டது. சென்னைக் கோட்டத்தில் இதன் விளைவுகளைக் கண்காணித்தபிறகு ஏனைய கோட்டங்களிலும் இதே போன்று பணியாளர்களை நியமிப்பதே இறுதி நோக்கமாகும்.

பணிச்சுமையையொட்டி நேரிடப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்குடன், துணைப்பணியாளர்களுடன் வணிகவரி இணை அதிகாரிகள், வணிக வரி துணை அதிகாரிகள், வணிகவரி உதவி அதிகாரிகள் தரத்தில் வரிவிதிப்பு அதிகாரிகள் சம்பந்தமாகச் சில புதிய பதவிகளை ஏற்படுத்துவதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1969 ஜூன் திங்களில் உதகமண்டலத்தில் நடந்த வணிகவரித் துணை ஆணையாளர்கள்—வணிகவரி அதிகாரிகள் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், மாண்புமிகு முதலமைச்சர் “நிதி நிலையை மேம்படுத்துவதற்கான ஒரு முறை, வாணிகத்தின் பல்வேறு துறைகளிலிருந்து கிட்டும் வருவாய் பற்றியும் வாணிகத்தின் தன்மையைப் பற்றியும் அறிவியல் முறையில் பகுப்பாய்வு செய்யவேண்டும்” எனக் கூறியுள்ளார். எனவே, இதற்கென ஒரு ஆராய்ச்சிப் பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார். அதற்கேற்ப, புள்ளி விவரப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம், மத்திய விற்பனைவரிச் சட்டம் ஆகியவற்றின்கீழ் வரிவிதிப்புக்குட்பட்ட பல்வேறு பொருள்களின் உற்பத்தி, உற்பத்திமூலம் குறித்துத் தக்க புள்ளி விவரங்களை அப்பிரிவு தயாரிக்கும். அவ்வாறு செய்கையில், பல்வேறு பொருள்களின் மீதான வெவ்வேறு வரி விதங்களின் விளைவுகளை அப்பிரிவு கருதிப்பார்க்கும். மாநிலங்களுக்கிடையில் சரக்குகள் போக்குவரத்து, ஏற்றுமதிகள் முதலியனக் குறித்த புள்ளி விவரங்களையும் அது தயாரிக்கும். விற்பனை வரி குறித்த தென்சரக மன்றம் 1968 ஆகஸ்ட் 14-ம் தேதியன்று நடந்த தனது கூட்டத்தில் செய்த பரிவுரைகளையொட்டியும் தமிழ் நாடு, கேரளம், மைசூர், ஆந்திரப்பிரதேசம், புதுச்சேரி ஆகிய தென் மாநிலங்கள் கேட்டுக்கொண்டதன்மேலும் புதுடில்லியிலுள்ள தேசிய நடைமுறைப்பொருளாதார ஆய்வு மன்றம், விற்பனை வரி குறித்த தகவல்களைத் திரட்டி அளிப்பதற்காக, தென் மண்டலத்திற்கென வரி விதிப்பு (ஆராய்ச்சி-புள்ளிவிவர) பிரிவு ஒன்றின் பணியைத் தொடங்கியுள்ளது.

6. தமிழ் நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய்.

1970 பிப்ரவரியுடன் முடியும் காலத்திற்காகவும் கடந்த ஆண்டில் அதற்கு நிகரான காலத்திலும் தமிழ் நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச்

சட்டத்தின்கீழ் பெறப்பட்டுள்ள வரி வருவாய் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| காலம். | மொத்த வருவாய். | அதிகரிப்பு. |
|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்.) | |
| 1968-69 (1968 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1969 பிப்ரவரி வரை.) | 4,122·28 | .. |
| 1969-70 1969 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1970 பிப்ரவரி வரை.) | 4,714.20 | 591·92 (அல்லது 14·35 சதவீதம்.) |

### 1969-70-ல் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட மாறுதல்கள்

7. 1969-70-ல் வரிவிதிப்புத் திட்டத்தில் கொண்டுவரப்பட்ட முக்கிய மாறுதல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(i) எரி பொருளாகப் பயன்படும் வாயு (பர்ஷேன், கால்காஸ் போன்றவை), 1969 ஏப்ரல் 1-ம் தேதிமுதல், இம் மாநிலத்தில் முதல் விற்பனை முனையில் 7 சதவீத ஒருமுனை வரிவிதிப்புக்கு உட்படுத்தப்பட்டது.

(ii) (பனைவெல்லம் நீங்கலாக) வெல்லம் 1969 அக்டோபர் 18-ம் தேதி முதல் இம் மாநிலத்தின் முதல் கொள்முதல் முனையில் 5 சதவீத ஒருமுனை வரிவிதிப்புக்கு உட்படுத்தப்பட்டது.

(iii) கொப்பரை உள்ளிட்ட தேங்காய்க்கு இம் மாநிலத்தில் 1969 நவம்பர் 4-ம் தேதி முதற்கொண்டு முதல் கொள்முதல் முனையில் 5 சதவீத ஒருமுனை வரி விதிக்கப்பட்டது.

(iv) தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் மூன்றாவது விவர அட்டவணையில் 3-வது இனத்தின்கீழ் தமிழ் நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் அல்லது 1878 ஆம் ஆண்டு அபின் சட்டத்தின்கீழ் தீர்வை விதிக்கப்படுகிற அல்லது தீர்வை விதிக்கப்படத்தக்க சாக்குகள் இதற்கு முன்னர் விற்பனை வரி விதிக்கப்படுவதினின்று விலக்கு அளிக்கப்பட்டன. 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு அரசு மேற் சொன்ன விலக்கை ரத்து செய்துவிட்டது. உட்கொள்ளத்தக்க சாராயக் குடி வகைகள் அனைத்தும் (கள், சாராயம் நீங்கலாக) அந்நாள் முதற்கொண்டு இம்மாநிலத்தில் முதல் விற்பனை முனையில் 12 சதவீத ஒரு மு— வரிக்கு உட்படுத்தப்பட்டன. மேற்சொன்ன விலக்கின்கீழ் வரும் எஞ்சிய சரக்குகளுக்கு 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு 3 சதவீத பலமுனை விற்பனைவரி விதிக்கப்படுகிறது.

(v) தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தில் 7-எ என்ற புதியதொரு பிரிவு கொண்டுவரப்பட்டது. தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் விற்பனை முனையிலோ கொள் முதல் முனையிலோ இதற்கு முன்னர் எந்த வரியும் விதிக்கப்படாத சாக்குகள் இம்மாநிலத்திற்குள் கொள்முதல் செய்யப்பட்டால், அக்கொள்முதல் வரி விதிப்பது என்று செயல்பட்டுள்ளது. இத்தகைய சாக்குகளை





வணிகர் ஒருவர் பிற சரக்குகளின் உற்பத்திக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்காக அல்லது இம்மாநிலத்தில் விற்பனை செய்யாமல் பிற வகையில் அவற்றை ஒரு வகை செய்வதற்காக அல்லது மாநிலங்களிடையே நடைபெறும் வர்த்தகம் அல்லது வாணிபத்தின்போது விற்பனை அல்லது கொள் முதலின் நேர் விளைவாக அன்றி மற்றப்படி இம்மாநிலத்திற்கு வெளியே உள்ள ஓரிடத்திற்கு அவற்றை அனுப்பவதற்காக இம்மாநித்திற்குள் அச் சரக்குகளைக் கொள்முதல் செய்தால் அக்கொள்முதல்மீது வரி விதிக்க வேண்டும் என இப்புதிய பிரிவு வகை செய்கிறது. அத்தகைய கொள்முதல் மீது விதிக்கப்படத்தக்க வரி வீதம் அந்தந்த நேர்வுக்கு ஏற்ப 3, 4 அல்லது 5 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வீதமாகும். வகணிர் ஒருவர்( தற் செயலாக வணிகம் செய்பவர் இம் மாநிலத்தில் வசித்து வராத வகணிர் ஒருவது 3 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் முகவர் ஆகியோர் நீங்கலாக கீழ் வரி விதிக்கப்படதக்க சரக்குகளை கொள்முதல் செய்து அவாது ஆண்டு மொத்த வியாபாரத்தொகை ரூ. 15,000-க்கும் குறைவாக இருந்தால் அவருக்கு இந்த விதித்துறையின்கீழ் வரி விதிக்கப்படமாட்டாது. 7-எ புதிய பிரிவின் விதித்துறையினல் எந்த அளவுக்குக் கூடுதல் வருவாய் கிட்டுமென்பது 1970-71 ஆம் ஆண்டில்தான் எதிரொலிக்கும்.

(vi) மோட்டார் வண்டிகள், குளிரறைப் பெட்டிகள், தட்டச்சுப் பொறிகள், கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள் ரேடியோக்கள், கிராமபோன்கள், முதலிய ஆடம்பரப் பொருள்கள்மீது விதிக்கப்படும் ஒரு முனை வரி வீதத்தை அரசு 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி முதற்கொண்டு 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இப் பொருட்களின் பட்டியல் தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையில் 1 முதல் 14 வரை உள்ள இனங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. சிமிட்டியின்மீதான வரி 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்கருவிகள், ரத்தினக்கற்கள், பஞ்சு ரப்பர் விரிப்புகள் ( Foamed Rubber Sheets ) வாசனைத் தைலங்கள், வாசனைப் பொருள்கள், டிராக்டர்கள், பறம்புப் பொறிகள் ஆகியவற்றின் மீதான வரி 7 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

(vii) ஆண்டொன்றுக்கு ரூ. 5 லட்சத்துக்கு மேற்பட்ட வியாபாரத் தொகையுள்ள, வரி விதிக்கப்பெறுவோர்மீது கூடுதல் வரி விதிப்புச் செய்வதுகுறித்து செயற்குறிப்பும் மன்றப்பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது. 1969-70 ஆம் ஆண்டு முதற்கொண்டு ஒவ்வோர் ஆண்டிலும் விதிக்கப்படும் விற்பனைவரியின்மீது 7 1!2 சதவீதம் கூடுதல் வரி விதிக்க இச் செயற்குறிப்பு வகை செய்கின்றது.

### 8. தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள வரிவிலக்குகளும் வரிச்சலுகைகளும்

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 17-ஆவது பிரிவின்கீழ் வரி விலக்குகள் அல்லது வரிக் குறைப்புகளை அரசு

வழங்கலாம். 1969-70 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ள சில முக்கிய வரி விலக்குகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

(i) தொழில்களுக்காகச் செய்யப்படும் உப்பு விற்பனைகள்.

(ii) ஆட்டுத்தொட்டியில் அடிக்கப்படுவதற்காக விற்பனை செய்யப் படும் செம்மறியாடு, வெள்ளாடு, பிற விலங்குகள்.

(iii) வணிகர் ஒருவர் செய்யும் கோரைப் புல் விற்பனை.

(iv) இரத்தம், பிளாஸ்மா ஆகியவற்றை மருத்துவமனைகள் நோயாளிகளுக்கும், மருத்துவமனைகளுக்கும், மருத்துவமனைகளுக்கு வெளியே யுள்ள மருத்துவர்களுக்கும் செய்யப்படுகின்ற விற்பனைகள்.

(v) வணிகர் ஒருவர் செய்யும் கயிறு, நார், கயிற்றுப் பொருட்கள் விற்பனைகள்.

(vi) சல்லிக் கற்கள் தயாரிக்கும் தொழிலாளருக்காகவே அமைக்கப் பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் செய்யும் சல்லிக் கற்கள் விற்பனை.

(vii) வணிகர் ஒருவர் செய்யும் சோளம், கம்பு போன்ற சிறு தானிய வகையின் அரிசி, மாவு, நொய், தவிடுபோன்ற பொருள்களின் விற்பனை.

நாட்டுச் செக்குகள், கையினால், இயக்கப்படும் எண்ணெய்ச் செக்குகள் ஆகியவற்றின் உற்பத்திப் பொருட்கள் விற்பனையின்மீதும் அவை செய்யும் வேர்க்கடலைக் கொள்முதல் மீதும் அரசு அளித்துள்ள விலக்கத்தைத் தவறாகப் பயன்படுத்தி வரி கொடுக்காமல், ஏய்ப்பதைத் தடுக்கும்பொருட்டு, நாட்டு எண்ணெய்ச் செக்குகள், கையினால் இயக்கப்படும் செக்குகள் ஆகிய வற்றின் உரிமையாளர்களும் அவற்றில் பற்றுள்ளவர்களும் சம்பந்தப்பட்ட வரி விதிப்பு அதிகாரியிடமிருந்து இலவச அனுமதி பெறுவதற்கு வகை செய்யும் திட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது. இந்த ஏற்பாட்டின் கீழ் நாட்டு எண்ணெய்ச் செக்கு, கையினால் இயக்கப்படும் எண்ணெய்ச் செக்கு ஆகியவற்றின் உரிமையாளர், எண்ணெய் உற்பத்திக்காகப் பயன் படுத்தக்கூடிய வேர்க்கடலை அல்லது வேர்க்கடலைப் பருப்பின் அளவு நாள் ஒன்றுக்கு நான்கு மூட்டை வேர்க்கடலை அல்லது ஒரு மூட்டை வேர்க்கடலைப் பருப்பு என வரையறுக்கப்பட்டுள்ளது. அனுமதிச் சீட்டு வைத்திருப்பவர் கள் ஒரு வாரத்திற்கு மேற்படாத கால அளவிற்குத் தங்களுக்குத் தேவைப் படும் வேர்க்கடலை அல்லது வேர்க்கடலைப் பருப்பை வாங்கி இருப்பில் வைத்துக்கொள்ளலாம்.

பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள மந்த நிலையிலிருந்து மீள அத் தொழிலுக்கு உதவியளிக்கும் நோக்கத்துடன், நூலின் மீதான விற்பனை வரியில் 50 சத வீதத்தை ஐந்து ஆண்டுக் கால அளவுக்கு வட்டியில்லாக் கடனாக வைத்துக்கொள்ள நொடித்த சில பஞ்சாலைகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இத்தொகை ஆறாவது ஆண்டிலிருந்து தொடங்கி அரை ஆண்டு சமத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

புதிய தொழில்களுக்கு விற்பனை வரிச் சலுகைகளை அளிப்பதன்மூலம், அவற்றிற்குச் சில வழிகளில் ஊக்கம் அளிப்பதுகுறித்தும் அரசு ஆலோசனை செய்துவருகிறது.





## 9. 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்

1970 பிப்ரவரி இறுதி வரையில் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் கிடைத்த வருவாய் விவரங்களும், அதற்கு முந்திய ஆண்டில் அதே கால அளவில் கிடைத்த வருவாய் விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| கால அளவு. | மொத்த வசூல். | அதிகரிப்பு. |
|---|---|---|
| | (ரூ. லட்சத்தில் ) | |
| 1968-69— (1969 பிப்ரவரி முடிய) .. .. | 944·13 | 152·19 |
| 1969-70— (1970 பிப்ரவரி முடிய) .. .. | 1,096·32 | அல்லது 16 சத வீதம். |

இந்த ஆண்டில் வரி வீதத்தில் மாற்றம் ஏதுமில்லை.

மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் செயல் முறைப்படி மாநிலங்களுக் கிடையே நிகழும் விற்பனைகளின்மீது மத்தியச் சட்டத்தின் விதித் துறைகளை ஒட்டி, வரி விதிக்கப்பட வேண்டும். ஆனால், வரி விதிப்பு, வரி வசூல், மேல் முறையீடு, மறு விசாரணை முதலியவை அந்தந்த மாநில விற்பனை வரிச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறையை ஒட்டியே செய்யப்பட வேண்டும். மாநிலங்களுக்கிடையே நிகழும் விற்ப—களின் மீது வரி வதிப்பு, வரி வசூல் ஆகியவை குறித்து மாநிலச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப் பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்படுவதுமன்றி அந்தந்த மாநிலத்தில் நடை முறையிலுள்ள விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வரி விதிப்பு குறித்துப் பின் பற்றப்படும் நடைமுறையையொட்டியே மத்திய விற்பனை வரியும் விதிக்கப் பட்டு வசூலிக்கப்பட வேண்டும் என்று 1964 ஆம் ஆண்டில் யாதாளம் லக்ஷ்மி நரசிம்மய்ய செட்டி வழக்கில், இந்திய தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால், மாநிலச் சட்டத்தின்கீழ் ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்படத்தக்க பொருள்கள் குறித்து மத்திய விற்பனை வரி விதிக்கப்பட முடியவில்லை. ஏனெனில், ஒருமுனை விற்பனை வரி விதிப்புக் கோட்பாட்டினை மாநிலங்களுக் கிடையே நிகழும் விற்பனைகளுக்கும் பயன்படுத்த வேண்டியிருந்தது. மேற் சொன்ன தீர்ப்பின் அடிப்படையில் வரி விதிக்கப்பட்டவர்களில் பலர் ஒருமுனை வரி விதிப்பிற்குட்பட்ட சரக்குகளுக்காகச் செலுத்தப்பட்ட மத்திய விற்பனை வரித் தொகையைத் தங்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டு மெனக் கோரினர். இவ்வாறாக, ஒருமுனை விற்பனை வரி விதிப்புக்குட்பட்ட சரக்குகளில் நடைபெறும் பேரங்களைச் சட்டப்படி நாம் வரி விதிப்புக்குட் படுத்த இயலாது ஒரு புறமிருக்க முன்னரே வசூலிக்கப்பட்ட மத்திய விற்பனை வரித்தொகையைத் திருப்பிக் கொடுக்குமாறு அரசினை வற்புறுத்தும் ஒரு நிலையும் மற்றொருபுறம் உருவாகியது.

இத்தகைய இடர்பாடுகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன், இந்த அரசும், பிற மாநில அரசுகளும், மத்திய விற்பனை வரிச் சட்டத்தைத் தகுந்தவகை யில் திருத்துவதற்காக மத்திய அரசுக்கு ஆலோசனைகள் நல்கின. இந்த ஆலோசனைகளை ஒட்டி, இந்திய அரசு 1969-ம் ஆண்டு ஜூன் திங்களில்

மத்திய விற்பனை வரி (திருத்த) அவசரச் சட்டத்தைப் பிரகடனம் செய்தது. இந்த அவசரச் சட்டம் 1969 ஜூன் திங்கள் 9 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது.

இந்த அவசரச் சட்டம் ரத்து செய்யப்பட்டு, 1969 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி (திருத்த) சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவுக்கு வருவாய் 16 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம், மாநிலங்களுக்கிடையே நடைபெறும் விற்பனைகளின் அளவு அதிகரித்துள்ளதும், வரி ஏய்ப்பு செவ்விய முறையில் தடுக்கப்பட்டுள்ளதும், ஒப்படை விற்பனைகள், டிப்போ விற்பனைகள் என்கிற போர்வையில் கேட்கப்படும் வரி விலக்குகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதுமாகும்.

### 10. தமிழ் நாடு மோட்டார் எண்ணெய் விற்பனை வரிச் சட்டம், 1939.

1970 பிப்ரவரி வரையிலும், முந்திய ஆண்டு இதே கால அளவிலும் தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரிச் சட்டம் குறித்த ஒப்பீட்டு வருவாய்ப் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| கால அளவு. | பெரு மொத்த வருவாய். | அதிகரிப்பு. |
|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்.) | |
| 1968–69 (1969 பிப்ரவரி வரை). | 517·43 | .. |
| 1969–70. (1970 பிப்ரவரி வரை). | 598·02 | 80·59 அல்லது 15·5 சத வீதம். |

இவ்வரி, எண்ணெய்க் கம்பெனிகள் மோட்டார் எண்ணெய்யின் முதல் விற்பனை முனையில் விதித்து வாங்கும் ஒரு முனை வரியாகும். இவ் வரியில் பெரும்பகுதி, எண்ணெய்க் கம்பெனிகள் பெரும்பாலானவற்றின் தலைமை அலுவலகங்களைக் கொண்டுள்ள சென்னை மாநகரில் வசூலிக்கப்படுகிறது. சென்னை எண்ணெய்த் தூய்மை ஆலை இப்போது உற்பத்தியைத் தொடங்கி விட்டது. இந்திய எண்ணெய்க் கார்ப்பரேஷன் சில வரிச் சலுகைகளுக்காக இவ்வரசை அணுகியது. நீண்ட நாள் விவாதித்தபின்னர், இம்மாநிலத்திற்குள் செலவாகும் சென்னை எண்ணெய்த் தூய்மை ஆலையின் பொருள்கள்மீது தற்போதைய வரி வீதங்களிலேயே வரி வசூலிப்பது என்றும், தமிழ் நாட்டுக்கு வெளியே செல்லும் எண்ணெய் தூய்மை ஆலை உற்பத்திப் பொருள்களின்மீது, உள்ளூர் வரிக்கும் மத்திய விற்பனை வரிக்கும் உள்ள வேறுபாட்டைத் தள்ளுபடி செய்வது என்றும் இறுதியாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இச் சட்டத்தின்படிக்கான வரி விதிப்பு அதிகாரிகள், இப் பகுதியில் அதிகார வரம்புடைய வணிகவரி அதிகாரிகளாவர். மத்திய வரி விதிப்பு வட்டம் ஏற்படுத்தியதைத் தொடர்ந்து கணக்குகள் செவ்வையாகத் தணிக்கை செய்யப்படுவதற்காகவும், சரியான முறையில் வரி விதிக்கப்படுவதற்காகவும் சென்னை மாநகரில் உள்ள எண்ணெய்க் கம்பெனிகளின் கணக்குகளை இந்த வரி விதிப்பு வட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.





"கால்டெக்ஸ்" (இந்தியா) கம்பெனிக்கும் சென்னை வாணிகவரி அதிகாரிக்கும் இடையே நடைபெற்ற வழக்கில் (ரிட் மனு 965 முதல் 978 வரை 1966) சென்னை உயர்நீதிமன்றம், வரி விதிப்புக்குத் தப்பிய வாணிபத் தொகை முதலியவற்றிற்கு விற்பனை வரி விதிப்பது பற்றி விவரிக்கிற தமிழ் நாடு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிகளின் 26-வது விதியின் (1) துணைவிதி செல்லுபடியாகாது என்றும் அத்தகைய விதி அமைக்க தமிழ் நாடு 1939-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் வரிச் சட்டம் (தமிழ் நாடு 6/1939) இவ்வரசுக்கு அதிகாரம் அளிக்கவில்லை என்றும் தீர்ப்பளித்தது. மேற்சொன்ன தீர்ப்பின் உட்கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டன. பிறகு, அரசு ஏற்கெனவே செய்த வரி விதிப்புகளுக்குக் காப்பளிக்கவும் கடந்த ஒரு தேதியிலிருந்தே தமிழ் நாடு மோட்டார் எண்ணெய் விற்பனை வரிச் சட்டத்தின் விதித் துறைகளைத் திருத்தியமைத்தது. மேலும், வரி விதிப்புக்குத் தப்பிய பற்று-வரவுகளின்மீது கடந்த ஒரு தேதியிலிருந்தே நடவடிக்கை எடுத்து, ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட வரி விதிப்புகளுக்கும் வரி வசூலிப்புகளுக்கும் செல்திறன் அளிக்கப்பட்டுள்ளன.

பாறை எண்ணெய், விமான எரி எண்ணெய் இவற்றின் மீதான வரி வீதம் 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி முதற்கொண்டு லிட்டர் ஒன்றுக்கு 10 காசிலிருந்து 12 காசாக உயர்த்தப்பட்டுள்ளது. பாறை எண்ணெய் (Petrol), விமான எரி எண்ணெய், டீசல் எண்ணெய் நீங்கலாக ஏனைய மோட்டார் எண்ணெய்களின் மீதான வரி வீதம் லிட்டர் ஒன்றுக்கு 2 காசிலிருந்து 4 காசாக உயர்த்தப்பட்டுள்ளது. டீசல் எண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு 10 காசு வீதம் முன்போலவே தொடர்ந்து வரி விதிக்கப்பட்டு வருகிறது.

### 11. தமிழ் நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939

1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையிலும் சென்ற ஆண்டு இதே கால அளவிலும், தமிழ்நாடு, 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டம் குறித்த வருவாய் ஒப்பீட்டுப் புள்ளிவிவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| கால அளவு. | பெரு மொத்த வருவாய். | அதிகரிப்பு. |
|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்.) | |
| 1968–69 (1969 பிப்ரவரி வரை) .. .. .. | 332·50 | .. |
| 1969–70 (1970 பிப்ரவரி வரை) .. .. .. | 342·46 | 9·96 அல்லது 3 சத வீதம் |

சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டில் கிடைத்த வருவாய்களில் காணும் அதிகரிப்பு 3 சதவீதம்தான்.

[1970 மார்ச் 18

கேளிக்கை வரியாக வசூலிக்கப்பட்ட வருவாயில் 90 சதவீதம் அந்தந்த உள்ளாட்சி அதிகார மன்றங்களுக்கே ஒதுக்கப்படுகிறது. ஒவ்வொரு முறையும் காட்சியைப் பார்ப்பதற்கு அனுமதி பெற கட்டணம் செலுத்தப்படும்போது வசூலிக்கப்படுகிற கேளிக்கை வரியைத் தவிர, "காட்சி வரி" என்கிற தனி வரியொன்று திரை மாளிகையின் உரிமையாளரிடமிருந்து ஒவ்வொரு காட்சிக்காகவும் வசூலிக்கப்பட்டு, அரசு நிதிகளுக்கு வரவு வைக்கப்படுகிறது. மேற்படி சட்டத்தின் 4-எ பிரிவின் கீழ் விதிக்கப்படத்தக்க இந்த காட்சி வரியை இரட்டிப்பாக்கவும் அரசு முடிவு செய்யப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த வரியின் வாயிலாக, தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் ரூ. 14 லட்சம் கூடுதல் வருவாய் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### 12. தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார மன்ற நிதிச் சட்டம், 1961.

1970 பிப்ரவரி இறுதி வரையிலும், சென்ற ஆண்டு இதே கால அளவிலும், 1961-ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சி அதிகாரமன்ற நிதிச் சட்டத்தின்படி ஈட்டிய வருவாய் ஒப்பீட்டுப் புள்ளிவிவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| கால அளவு. | பெரு மொத்த வருவாய். (ரூ. லட்சத்தில்.) | அதிகரிப்பு. |
|---|---|---|
| 1968–69 (1969 பிப்ரவரி வரை) .. .. | 339·19 | .. |
| 1969–70 (1970 பிப்ரவரி வரை) .. .. | 350·00 | 10·81 அல்லது 3·2 சத வீதம். |

இச் சட்டம் 1961-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச் சட்டம் 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செயலுக்கு வந்தது. கேளிக்கை வரி, காட்சி வரி இவற்றின்மீது மேல்வரியாக இவ்வரி விதிக்கப்படுகிறது. உள்ளாட்சி அதிகார மன்றங்கள் தீர்மானம் கொண்டுவந்து உரிய வகையில் வெளியிட்டபின் மேல்வரி விதிக்க அதிகாரம் உடையனவாகும். விதிக்கத்தக்க பேரளவு மேல்வரி, கேளிக்கை வரியில் 100 சத வீதம்; காட்சி வரியைப் போல் 3 மடங்கு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிறைவேற்றும் தீர்மானங்களுக்கு இணங்க மேல் வரி வீதம் வேறுபடுகிறது. இவ்வரி விதிப்புமூலம் கிடைக்கும் முழு வருவாயும் உள்ளாட்சி அதிகார மன்றங்களுக்கே ஒதுக்கப்படுகிறது.

### 13. தமிழ் நாடு பந்தய வரி சட்டம், 1935.

தமிழ் நாடு 1935-ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின்படிக்கான வருவாய், கிண்டி, உதகமண்டலத்தில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களின் வாயிலாகக் கிடைக்கிறது.



1970 மார்ச் 18]

1970-ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதி வரையிலும், சென்ற ஆண்டு இதே கால அளவிலும் கிடைத்த வருவாய் ஒப்பீட்டுப் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| கால அளவு. | பெரு மொத்த வருவாய் (ரூ. லட்சத்தில்.) | அதிகரிப்பு. |
|---|---|---|
| 1968-69 (1969 பிப்ரவரி வரை) .. .. .. | 99.68 | .. |
| 1969-70 (1970 பிப்சவரி வரை) .. .. .. | 101·64 | 1·96 அல்லது 2 சதவீதம். |

நடப்பு ஆண்டில் சட்டம் நிர்வகிக்கப்படுவதில் எவ்வித மாற்றமும் இல்லை. இச் சட்டத்தின்படிக்கான வரி விதத்திலும் மாற்றம் இல்லை.

## இணைப்பு 4.

[288-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### மானியக் கோரிக்கை 8-எ பால் வழங்கும் திட்டங்கள்

**1970-71ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 3.87,19,600**

### பால் பண்ணை வளர்ச்சித்துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

1969-70-ம் நடப்பு ஆண்டில், உழவர் பெருமக்களுக்கு நம்பிக்கையான துணை வருவாய்க்கு வழிவகுத்தல், எல்லா பிரிவு மக்களுக்கும் நியாய விலையில் நல்ல பால் வழங்குதல் ஆகிய இரண்டு சீரிய குறிக்கோள்களுடன் கிராமப் பகுதிகளில் பால் உற்பத்தியைப் பெருக்க, இம் மாநிலத்தில் பால் பண்ணை வளர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இக் குறிக்கோள்கள், இம்மாநிலத்தில் சென்னையிலும் மதுரையிலும் ஏற்கனவே நிறுவப்பட்ட இரண்டு பெரிய பால் பண்ணை நிலையங்கள் மூலமாகவும் துணைப் பிரிவுகளாகச் செயற்படும் கூட்டுறவுத் துறையின்கீழ் உள்ள ஈரோடு பால் பண்ணை, பிற பால் பண்ணைகள் மூலமாகவும் எய்தப்படுகின்றன. சேகரிக்கப்படும் பால் அளவு, வழங்கப்படும் பால் அளவு, வாடிக்கையாளரின் எண்ணிக்கை, இந்த இரண்டு திட்டங்களின்கீழ் 1966-67 முதல் திறக்கப்பட்ட

பால் வழங்கும் டிப்போக்களின் எண்ணிக்கை ஆகியவை கீழ்க்காணும் விவர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன :----

| ஆண்டு. | நாளொன்றுக்குச் சேகரிக்கப்படும் சராசரி அளவு (லிட்டரில்). | நாளொன்றுக்கு வழங்கப்படும் சராசரி அளவு (லிட்டரில்). | பால்பெறும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை. | பால் வழங்கத் திறக்கப்பட்ட பால் வழங்கும் டிப்போக்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (வெண்ணெய் நீக்கப்பட்ட பால் அளவு உட்பட.) | | | | |
| சென்னை பால்பண்ணை. | | | | |
| 1966-67 .. .. | 22,730 | 24,460 | 23,250 | 73 |
| 1967-68 .. .. | 30,010 | 33,050 | 28,200 | 77 |
| 1968-69 .. .. | 39,600 | 41,000 | 46,000 | 121 |
| 1969-70 .. .. (1970, ஜனவரி வரையில்.) | 36,000 | 49,000 | 53,000 | 135 |
| மதுரை பால் பண்ணை. | | | | |
| 1967-68 .. .. | 16,000 | 10,000 | 16,900 | 34 |
| 1968-69 .. .. | 20,700 | 10,110 | 18,600 | 37 |
| 1969-70 .. .. (1970, ஜனவரி வரையில்.) | 17,550 | 10,590 | 20,300 | 53 |

ஒவ்வோராண்டும் பால் பெறும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும், வழகப்படும் பாலின் அளவும், படிப்படையாக அதிகரித்துள்ளது. மேற்சொன்ன விவர அட்டவணையிலிருந்து தெரியவரும். 1968-69-ல் பால் பண்ணை வளர்ச்சித் திட்டங்களுக்கான (திட்ட வேலைத் திட்டங்கள்) செலவும் 1969-70, 1970-71-ம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :-----

| 1968-69. | 1969-70. | 1970-71. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ரூ. 53.21 லட்சம். | ரூ. 53·64 லட்சம் (திருத்த மதிப்பீடு.) | ரூ. 44·64 லட்சம் (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.) |

1970-71-ம் ஆண்டுக்கான திட்டச் செலவு குறைந்துள்ளதற்குக் காரணம் இதில், கிண்டியில் இரண்டாவது பால் பண்ணை அமைப்பதற்கும் மதுரையில் பால் மாவுத் தயாரிப்புத் தொழிற்சாலை அமைப்பதற்கான நிதி ஒதுக்கம் சேர்க்கப்படாததேயாகும்.



இவை இரண்டிற்கும் அரசு பிற்பட்டுத்தான் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த இரண்டு பிரிவுகளுக்குமான நிதி ஒதுக்கத்தைக் கூட்டினால், 1970-71-ம் ஆண்டுக்கான திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 70 லட்சத்திற்கு அதிகப்படும். நான்காவது திட்டக் காலத்திற்கு ரூ. 534.15 லட்சம் தொகை, பால்பண்ணை வளர்ச்சிக்காக குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போதுள்ள பால் வழங்கும் முறையை ஆராயவும் தமிழ் நாடு முழுவதற்கும் பால் வழங்குதல் பற்றிய "பெருந்திட்டம்" குறித்து ஆலோசனை நல்கவும் தமிழ்நாடு அரசின் வேண்டுகோளுக்கிணங்கி 1969, மார்ச்சு மாதம் இம்மாநிலத்திற்கு வருகைதந்த தேசியப் பால் பண்ணை வளர்ச்சி வாரியம், அதன் பரிந்துரைகளை அளித்துள்ளது; இவைபற்றி அரசு ஆலோசித்து வருகிறது. டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நான்கு தலைநகரங்களிலும் அவற்றைச் சுற்றிலும் பால் விற்பனைக்கும் பால் பண்ணை வளர்ச்சிக்கும் தேசியப் பால் பண்ணை வளர்ச்சி வாரியம் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. உணவு, வேளாண்மை நிறுவனத்தின் உலக உணவுத் திட்டத்தின் மூலம் பல நன்கொடையளிக்கும் நாடுகளால் இந்தியாவிற்கு வழங்கப்படும். வெண்ணெய் நீக்கிய பால் மாவு, தூய வெண்ணெய் (Butter oil) முதலியவற்றைப் பயன்படுத்திச் செயலாற்ற மேற்சொன்னவாறு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை இந்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது; இத்திட்டம், 1970-71 முதற்கொண்டு தொடங்கி படிப்படியாகச் செயல்படும் திட்டத்தில் 5 ஆண்டுகளுக்கு 4 நகரங்களில் நிறைவேற்றப்படும். இந்த நகரங்களில் ஒவ்வொன்றுக்கும் பெருமளவில் பால் மாவு, தூய வெண்ணெய் முதலியவற்றை வழங்கி அவற்றைக்கொண்டு பால் தயாரிக்கப்படுவதற்கு வகை செய்யும் இத்திட்டம். பொதுவாக பால் வள முனைப்புத் திட்டம் (operation flood) என வழங்கப்படுகிறது. எனவே, இந்த நகரங்களுக்கு வழங்கப்படும். பாலின் அளவு பெரிதும் அதிகப்படுத்தப்படும்; இதனால் நகரிலுள்ள கால்நடை கிராமப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட நேரும். ஏனெனில் அவற்றை இனி நகரில் வைத்துப் பேணுவதில் ஆதாயமிருக்காது. அதே சமயத்தில், தயாரிப்புப் பால் வழங்கி மாநகருக்கு வழங்கப்படும் பாலின் அளவை அதிகரிப்பதுடன் படிப்படியான முறையில் கிராமப் பால் உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதனால், ஐந்து ஆண்டுகளின் இறுதியில் பால் மாவு, தூய வெண்ணெய் ஆகியவை வழங்கப்படுவது நிறுத்தப்பட்டதும், அக்கால அளவின் முடிவில் மாநகரில் வழங்கப்படும் பாலின் அளவு குறைக்கப்படாமல் இருக்கும் வகையில் அதே அளவிற்குக் கிராமப் பகுதிகளில் பால் சேகரிக்கும் திறன் அமையவேண்டும்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், தற்போது, சென்னை பால் பண்ணை, பால் வழங்கு திட்டம் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 53,000 லிட்டர் பால் சேகரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது; இது, சென்னை மாநகரின் மொத்தத் தேவையில் ஏறக்குறைய ஆறில் ஒரு பங்கு மட்டுமேயாகும். பல காரணங்களால், குறுகிய காலப் பகுதியில் இவ்வாறு பால் வழங்கும் அளவை அதிகப்படுத்துவது இடர்பாடானதென்று காணப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இத்திட்டத்தின் முதல் நிலையில், அதாவது 1970-71-ல் நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும் பாலின் அளவை 53,000 லிட்டரி

லிருந்து 1,00,000 லிட்டருக்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் ஐந்தாம் ஆண்டின் இறுதியில், இது நாள் ஒன்றுக்கு 3,00,000 லிட்டருக்குப் படிப்படியாக உயர்த்தப்படும். வெண்ணெய் நீக்கிய பால் மாவிலிருந்தும் தூய வெண்ணெயிலிருந்தும் தயாரிக்கப்படும் பால் வழங்கப்படுவதனால் இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னை மாநகருக்கு இவ்வகைப் பால் வழங்கப்படும்.

சென்னை மாநகர் சம்பந்தப்பட்டவரையில், 5 ஆண்டுகளில் பாலின் உற்பத்தியையும், விற்பனையையும் அதிகப்படுத்துவதற்கான திட்டத்தின் விவரங்கள்கீழ்க் கண்டவாறாகும் :—

| | | லிட்டர். |
|---|---|---|
| முதல் ஆண்டு .. .. | திட்டத்திற்கு முன் .. | 50,000 |
| | மாவுப் பால் .. .. | 40,000 |
| | கிராமப்புறப் பால் .. | 10,000 |
| | (கூடுதலாகச் சேகரிக்கப் பட்ட அளவு) | |
| | | 1,00,000 |
| இரண்டாவது ஆண்டு .. .. | திட்டத்திற்கு முன் .. | 50,000 |
| | மாவுப் பால் .. | 1,20,000 |
| | கிராமப்புறப் பால் .. | 20,000 |
| | (கூடுதலாகச் சேகரிக்கப் பட்ட அளவு) | |
| | | 1,90,000 |
| மூன்றாவது ஆண்டு .. .. | திட்டத்திற்கு முன் .. | 50,000 |
| | மாவுப் பால் .. .. | 1,70,000 |
| | கிராமப்புறப் பால் .. | 70,000 |
| | (கூடுதலாகச் சேகரிக்கப் பட்ட அளவு) | |
| | | 2,90,000 |
| நான்காம் ஆண்டு .. .. | திட்டத்திற்கு முன் .. | 50,000 |
| | மாவுப் பால் .. .. | 1,10,000 |
| | கிராமப்புறப் பால் .. | 1,40,000 |
| | (கூடுதலாகச் சேகரிக்கப் பட்ட அளவு) | |
| | | 3,00,000 |
| ஐந்தாம் ஆண்டு .. .. | திட்டத்திற்கு முன் .. | 50,000 |
| | மாவுப் பால் .. .. | 60,000 |
| | கிராமப்புறப் பால் .. | 1,90,000 |
| | (கூடுதலாகச் சேகரிக்கப் பட்ட அளவு) | |
| | | 3,00,000 |





முதல் மூன்றாண்டுகளில் மாவுப்பால் உற்பத்தியும் வழங்கலும் படிப் படியாக அதிகப்படுத்தப்படுமென்பதும் 4, 5-வது ஆண்டுகளில், கிராமப்புறங் களில் சேகரிக்கப்படும் பால் அளவின் அதிகரிப்பிற்கு நிகராக அது குறைக்கப் படுமென்பதும் தெரியவரும் வெண்ணெய் நீக்கிய பால் மாவையும், தூய வெண்ணெயையும் சென்னை பால் பண்ணை வாங்குவதற்கு இத் திட்டம் கருதி றுலும், விற்பனை மூலம் கிடைக்கும் தொகை, தமிழ் நாட்டில் கிராமப்புறப் பால் பண்ணை வளர்ச்சிக்காக இந்தியப் பால் பண்ணை கூட்டு நிறுவனத்தால் பயன்படுத்தப்படும். பால் மாவு விற்பனை மூலம் பெறும் நிதி, பால் பண்ணையை அவசியமான அளவிற்கு விரிவுபடுத்தவும் கருவிகள் வாங்கவும் மாநகரிலுள்ள கால்நடைகளைக் கிராமப் பகுதிகளில் அமர்த்தவும் பயன்படுத்தப்படும்.

இத் திட்டத்தின் முதல் நிலை, 1970-71 முதற்கொண்டு சென்னை மாநகரில் நிறைவேற்றப்படவிருப்பதால், அதிகரித்த பால் உற்பத்தியைக் கையாளும் பொருட்டு கிண்டிக்கு அருகில் தென் சென்னையில் இரண்டாவது பால் பண்ணையை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

பால்பெருகும் பருவத்தில், மதுரையிலும், மதுரையைச் சுற்றிலும் உபரி பால் பெருமளவு கிடைக்குமாகையால் மதுரையில் பால் மாவு தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது, இங்கு, உபரி பால், பால் மாவாக மாற்றப்படும். இதன்வாயிலாக, பால் வளமாகக் கிடைக்கும் பருவத்தில் கிராம மக்கள் கிடைக்கும் உபரிப் பாலை விற்பனை செய்ய முடிவதுடன் பால்வற்றிய பருவத்தில் பால் உற்பத்தியைப் பெருக்கப் பயன் படுத்தப்படக்கூடிய பால் மாவை இருப்பு கட்டி வைத்துக் கொள்ளவும் அரசுக்கு இயலுகிறது.

மதுரை, சென்னை ஆகிய இடங்களிலுள்ள இரண்டு முக்கிய பால் பண்ணை களின் பால் உற்பத்திப் பகுதிகளில் உலக உணவுத் திட்டத்தின் மூலம் பெறும் உணவுத் தானியங்களை வழங்குவதன் மூலம் கால்நடைக் கலவைத் தீவனத்தைத் தயாரித்து வழங்கும் திட்டம் 1968-ல் துவக்கப்பட்டது; இந்தப் பால் பண்ணைகளில் பால் வழங்கலை உயர்த்தவே இத்திட்டம் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டது.

சென்னை, மதுரை பால் உற்பத்திப் பகுதிகளில் கறவை மாடுகள் வைத்து வரும் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட கலவைத் தீவனமும் தயாரிக்கப் பட்ட கலவைத் தீவன அளவும் கீழ்க்காணும் விவர அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன :—

| ஆண்டு. | தயாரித்து, விற்பனை செய்யப்பட்ட கலவைத் தீவன அளவு. | |
|---|---|---|
| | சென்னை. | மதுரை. |
| (1) | (2) | (3) |
| | மெ.ட. | மெ.ட. |
| 1968–69 .. .. .. .. | 405·590 | 65·001 |
| 1969–70 (28-2-1970 வரை) .. | 1,135·275 | 255·177 |

128 - 240—17

[1970 மார்ச் 18

இவற்றுடன், தரம் உயர்த்திய பாலைத் (Toned Milk) தயாரித்து வழங்குவதற்காக வெண்ணெய் நீக்கிய பால் மாவு உலக உணவுத் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. 1968-69, 1969-70-ம் ஆண்டுகளில் பயன்படுத்திய உலக உணவுத் திட்டத்தின் வெண்ணெய் நீக்கிய பால் மாவின் அளவு கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | பயன்படுத்தப்பட்ட வெண்ணெய் நீக்கிய பால் மாவின் அளவு. | |
|---|---|---|
| | சென்னை. | மதுரை. |
| (1) | (2) | (3) |
| | மெ.டன். | மெ.டன். |
| 1968–69 .. .. .. .. | 45·493 | 7·052 |
| 1969–70 (28–2–1970 வரையில்) .. | 114·686 | 39·429 |

உலக உணவுத் திட்டத்தின் தானியங்கள் விற்பனை மூலமும் வெண்ணெய் நீக்கிய பால் உணவு விற்பனை மூலமும் கிடைத்த தொகையிலிருந்து ஈடுசெய் நிதி ஒன்று 28-2-1970 வரையில் உருவாக்கப்பட்டு, இதுவரையில் இந்த நிதிக்கு ரூ. 6,58,851 வரவு வைக்கப்பட்டுள்ளது. இந்த ஈடுசெய் நிதியிலிருந்து, 50 ஏக்கர் பரப்பில் ரூ. 1,88,750 தொடராச் செலவிலும் ரூ. 44,620 தொடர்ச் செலவிலும் மக்காச் சோளம் பயிரிடக் கருதப்பட்டுள்ளது. இது, கால்நடைத் தீவனமாகப் பயன்படும். பால் உற்பத்தியைப் பெருக்கக் கிராமப் பகுதிகளில் வளர்ச்சிப் பணியை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துறை மேற்கண்ட சாதாரணத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களுடன், சேர்ந்து கூடுதலாக நிறைவேற்றப்படும் வேலைத் திட்டங்களாகவே மேற்சொன்னவை அமையும்.

பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களையும் ஒன்றியங்களையும் வலுப் படுத்தும் பொருட்டு, கறவை மாடுகள் வாங்கவும் கருவிகள் வாங்கவும் பால் பண்ணைக் கட்டிடங்கள் கட்டவும் கடனாக நிதி உதவி அளிப்பது தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இச்சங்கங்கள் அவற்றின் செயல் பாடுகளை விரிவுபடுத்துவதற்கு அடிப்படையை வலுப்படுத்தும் நோக்கத்துடன், ஒன்றியங்கள் இவற்றின் பங்கு மூலதனத்தில் அரசு பங்குகொள்ளவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மைசூரிலுள்ள மத்திய உணவுத் தொழில் நுணுக்க ஆய்வு நிலையத்தில் செய்யப்பட்ட ஆய்வின் அடிப்படையில் சென்னையில் சோதனை நடவடிக்கையாக, லாக்டோன் (வேர்க்கடலைப் புரதச் சத்தையும் கறந்த பாலையும் சேர்த்துத் தயாரிக்கும் பொருள்) உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது. இப்பொருளைப் பெற மக்களிடம் உள்ள ஆதரவைப் பொறுத்து "லாக்டோன்" உற்பத்தியும் அதை வழங்குவதும் அதிகப்படுத்தப்படும்.

கிராமப் பகுதிகளில் பால் பண்ணை வளர்ச்சியின் மற்றொரு சிறப்புக் கூறு யாதெனில், கிராமப் பால் உற்பத்தியைப் பெருக்க ஊக்கமளிக்க "கேர்" நிறுவனம் அளிக்கும் உதவியாகும். மாட்டுத் தொழுவங்கள் கட்டுவதற்கும், கிணறுகள் வெட்டவும் பால் கொள்கலன்கள், பால் சோதனையிடும் கருவிகள் முதலியவற்றை வாங்கவும் 20 தேர்ந்தெடுத்த சங்கங்களுக்கு "கேர்" நிறுவனம்



1970 மார்ச் 18]

நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளது. தொடக்கத்தில், இந்த உதவி 5 சங்கங்களுக்கு அளிக்கப்படும். இத் திட்டத்திற்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது.

### சென்னை பால் பண்ணை, பால் வழங்கும் திட்டம்.

இத்திட்டத்தில் பால் பண்ணையும் பால் வழங்கும் பிரிவுடன் கூடிய மத்தியப் பால் பண்ணையும் அடங்கும். இப்பண்ணையில் நான்காயிரம் கறவை மாடுகளைப் பேணிவரவும் அவற்றின் சொந்தக்காரர்கள் உறைவதற்குமான இடவசதியும் பிற ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்பட்டிருந்தபோதிலும், 1965-ல் இப்பால் பண்ணையில் ஏற்பட்ட வெக்கை நோய் காரணமாக, இது வரை இவ்வசதிகளை ஏற்றுவந்த உரிமதாரர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. இந்நோய் காரணமாகப் பெருவாரியான கறவை மாடுகளை இழக்க நேரிட்டது; உரிமதாரர்களின் எண்ணிக்கையும் பெருமளவு குறைந்து விட்டது.

உறைவிட வசதி, குறைந்த செலவில் மாட்டுத் தொழுவ வசதி போன்ற வசதிகளும் குறைந்த விலையில் மாட்டுத் தீவனம் வழங்குதல், இலவசக் கால்நடை மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற வசதிகளும் அளித்து உரிமதாரர்களுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம் மீண்டும் அவர்கள் இப்பால் பண்ணைக்கு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், அந்த அளவிற்குப் பலன் ஏற்படவில்லை. தற்போது 58 உரிமதாரர்கள் 543 கறவை மாடுகளுடனும், 120 பால் வற்றிய மாடுகளுடனும் கன்றுகளுடனும் உள்ளனர். இந்த உரிமதாரர்களிடமிருந்து சராசரி நாள் ஒன்றுக்குச் சேகரிக்கப்படும் பால் 2,180 லிட்டர் ஆகும். 1968-69-ல் உரிமக் கட்டணங்களையும் 1—4—1968 முதல் ஓராண்டுக் காலத்திற்குக் கறவை மாடுகளுக்கான இடவசதிக் கட்டணங்களையும் வசூல் செய்வதைத் தள்ளுபடி செய்துள்ளது. ஆனால், உரிமதாரர்கள் குறைந்தது 10 கறவை மாடுகளை வைத்து வர வேண்டுமென்பதற்கும் 10 பசுக்களுக்கு நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் வீதமும் 10 எருமைகளுக்கு நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் வீதமும் பால் வழங்க வேண்டும்.

இப் பால் பண்ணையில் உரிமதாரர்கள் பேணி வந்த மாடுகளின் எண்ணிக்கை குறைந்த பின்னர், இப்பண்ணையிலுள்ள இட வசதியை முழுவதும் பயன்படுத்திக்கொள்ள 165 கறவை மாடுகளுடன் அரசு பால் பண்ணை 1966-ல் தொடங்கப்பட்டது. அரசு பால் பண்ணையில் தற்போதுள்ள மாடுகளின் எண்ணிக்கை 1,264-க்கு மேற்பட்டதாகும். இவற்றில் 518 இனக் கலப்பு மாடுகளும் 16 அயல்நாட்டு வகை ஜெர்ஸி பசுக்களும் உள்ளன. அரசு பால் பண்ணையில் நாள் ஒன்றுக்கு 2,400 லிட்டர் பால் சராசரியாகப் பெறப்படுகிறது.

பால் பண்ணையிலுள்ள உரிமதாரர்களிடமிருந்து பால் சேகரிப்பதுடன், மாதவரத்திலுள்ள அரசு பால் பண்ணையிலிருந்தும் பால் சேகரிக்கப்படுகிறது. இத்துடன், முக்கியமாக சென்னை பால் பண்ணைத் திட்டத்திற்கு, கிராமப் பகுதிகளிலிருந்தும் பால் பெறப்படுகிறது. கிராமப் பகுதிகளிலிருந்து சென்னை பால் பண்ணைக்குப் பாலைச் சேகரிக்கவும் எடுத்து வரவும் வசதியாக, பாலைக் குளிர வைக்கும் நிலையங்களும் பாலைப் பதப்படுத்தும் நிலையங்களும் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. முன்பு குறிப்

[1970 மார்ச் 18

பிட்டதைப் போன்று, சென்னை பால் பண்ணை, 135 பால் வழங்கு டிப்போக்கள் மூலம் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பாலை இப்போது வழங்கி வருகிறது. 83,000 வாடிக்கைக்காரர்களுக்குப் பால் வழங்கி வருகிறது. 1969-70-ம் ஆண்டுக்கான கணக்கு இன்னும் முடிவு செய்யப்படவில்லையெனினும் 1969-70-ல் இப் பண்ணைக்கு ரூ. 5.70 லட்சம் ஆதாயம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது; 1968-69-ல் ரூ. 60,347-ம் 1967-68-ல் ரூ. 37,910-ம் மட்டுமே ஆதாயம் கிட்டியது. முன்பு குறிப்பிட்டதைப் போல, வெண்ணெய் நீக்கிய பால் மாவு, தூயவெண்ணெய் இவற்றின் மூலம் உலக உணவுத் திட்டத்திலிருந்து பெறும் உதவியுடன் நிறைவேற்றப்படவிருக்கும் பால் விற்பனை, பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1970-71-ல் சென்னை பால் பண்ணை அதிக அளவு பாலை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1970-71-ம் ஆண்டிற்கான குறிக்கோள் அளவு நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பால் வழங்கப்பட வேண்டுமென்பதாகும்.

தனிப்பட்ட பால்காரர்கள் சென்னை மாநகரில் எருமைப் பால் லிட்டர் ஒன்று ரூ. 2.00 முதல் ரூ. 2.50 வரையிலும், பசும்பால் லிட்டர் ரூ. 1.30 முதல் ரூ. 1.70 வரையிலும் விற்பனை செய்கின்றனர்; பாலின் தரத்திற்கேற்ப விலை கூடுகிறது. ஆனால், சென்னை பால் பண்ணைத் திட்டத்தின்கீழ் 1963, நவம்பர் முதல் எருமைப் பால் லிட்டர் ஒன்று ரூ. 1.24-க்கும், பசும்பால் லிட்டர் ஒன்று ரூ. 1.04-க்கும் சீராக விற்கப்பட்டு வருகின்றன. கிராமப் பகுதியில் பால் வழங்குவோருக்குப் பாலின் விலையை அதிகரித்ததன் விளைவாக, 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் பாலின் விற்பனை விலையை ஓரளவு அதிகப்படுத்தவேண்டியதாயிற்று. இதற்கேற்ப, விற்பனை விலை எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.24-லிருந்து ரூ. 1.26 ஆகவும்; பசும்பாலுக்கு ரூ. 1.04-லிருந்து ரூ. 1.06 ஆகவும் விலை உயர்த்தப்பட்டது. என்றாலும், இரு முறை பதப்படுத்திய பாலின் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு 72 காசிலிருந்து 70 காசுக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

சென்னை பால் பண்ணையில் உள்ள தொழிலாளர்கள் தங்கள் ஊதிய நிபந்தனைகள் சீர் செய்யப்பட வேண்டுமென்று கொடுத்த கோரிக்கைகளை அரசு பரிவுடன் கவனித்து வருகிறது. எதிர்ப்பாராச் செலவு நிதியிலிருந்து சம்பளம் அளிக்கப்படும் உதவிகளை காலமுறைச் சம்பள ஏற்றப் பதவிகளாக மாற்றவேண்டுமென்பது இச் சங்கத்தின் முக்கியக் கோரிக்கையாகும். படிப்படியான திட்டத்திற்கிணங்க இதை நிறைவேற்ற அரசு கருதியுள்ளது. முதற்படியாக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து சம்பளம் பெறும் பணியாளர்களின் 80 பதவிகளை காலமுறைச் சம்பள ஏற்றப் பதவிகளாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை மக்களுக்கு நியாய விலையில் பால் வழங்கும் நோக்கத்துடன் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட பால் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று ரூ. 115 லட்சம் செலவில் மதுரையில் நிறுவப்பட்டுள்ளது. சுமார் ரூ. 33 லட்சம் பெறுமான யந்திர சாதனங்களுடன் இதற்கு "யூனிசெஃப்" நிறுவனம் உதவி செய்துள்ளது. இத்திட்டம் 1967-ல் தொடங்கப்பட்டது. இப்பால் பண்ணைக்காக பாலைச் சேகரிக்கவும், கொண்டு செல்லவும் வசதியாகப் பாலைக் குளிர வைக்கும் நிலையங்கள் மதுரையைச் சுற்றிப் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மதுரை பால்



1970 மார்ச் 18]

பண்ணையில் நாள் ஒன்றுக்குச் சராசரி கிடைக்கும் பால் சுமார் 17,500 லிட்டர்; நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் சராசரி பால் அளவு சுமார் 10,500 லிட்டர் ஆகும். 53 பால் வழங்கு டிப்போக்கள் மூலம் 20,300 வாடிக்கைக்காரர்களுக்குப் பால் வழங்கப்பட்டு வருகிறது. மதுரையில் கிடைக்கும் உபரி பால், சென்னைக்கு அனுப்பப்படுகிறது; ஓரளவு பால் உள்ளூரில் விற்பனை செய்ய வெண்ணெய், நெய் முதலிய துணைப் பொருள்களாக மாற்றப்படுகிறது. முன்னரே குறிப்பிட்டதைப் போன்று, பால் வற்றிய காலங்களில் பயன்படுத்தக்கூடிய வகையில் உபரி பாலைப் பால் மாவாக மாற்ற மதுரையில் பால் மாவு தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

"யூனிசெஃப்" நிறுவன உதவிக்கான நிபந்தனைகளில் ஒன்று, பத்தாண்டுக் காலத்திற்குக் குறைந்த வருமானத் தொகுதியினருக்கு லிட்டருக்கு 10 காசு ஈடு செய்து, ஈடுசெய்த விலையில் இப்பண்ணை பால் விற்பனை செய்ய வேண்டுமென்பதாகும். எனவே, மதுரையில் உள்ள குறைந்த வருமானத் தொகுதியினருக்கு லிட்டர் ஒன்று 64 காசு விதம் பால் வழங்கப்படுகிறது. இது வரையில் குறைந்த வருமானமுடையவர்களுக்கு 5,01,630 லிட்டர் பால் வழங்கப்பட்டுள்ளது.

1968-69-ம் ஆண்டிற்கான கணக்குப்படி, இப்பண்ணைக்கு ரூ. 13.78 லட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1969-70-ல் இந்த இழப்புத் தொகை ரூ. 4 லட்சத்திற்குக் குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### கூட்டுறவுப் பிரிவுகள்

சென்னை, மதுரையிலுள்ள பால் பண்ணைகளுக்குக் கிராமப் பகுதிகளிலிருந்தே முக்கியமாய் பால் வழங்கப்படுகிறது. உள்ளூர்த் தேவையைச் சரி செய்த பின்னர் இப் பால் பண்ணைகள் உபரி பாலை, மதுரை, சென்னை பால் பண்ணைகளுக்கு அனுப்புவதற்கு ஏதுவாகப் பல்வேறு பால் வழங்கும் திட்டங்களையும் கூட்டுறவுப் பால் பண்ணைகளையும் பால் உற்பத்தி இணைப்பு (Milkgrid) ஒன்றுடன் இணைத்தது, பால் பண்ணை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கூட்டுறவுத் துறையின் கீழ் பால் பதப்படுத்தும் எட்டு யந்திர சாலைகள் உள்ளன. இந்த யந்திர சாலைகளின் திறனளவும்

[1970 மார்ச் 18

இவை பதப்படுத்தியனுப்பும் சராசரி பாலின் அளவும் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| கூட்டு சங்கத்தின் பெயர். | யந்திர சாலையின் திறனளவு (நாளொன்றுக்கு லிட்டர் அளவு). | பதப்படுத்தும் பால் அளவு 1968-69-ல் (நாளொன்றுக்கு லிட்டர் அளவு). | 1969-70-ல் பதப்படுத்தும் சராசரி பால் அளவு (நாளொன்றுக்கு லிட்டர் அளவு.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. திருச்சி-ஸ்ரீரங்கம் கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 14,000 | 4,000 | 4,770 |
| 2. தஞ்சாவூர் கூட்டுறவு பால் உற்பத்தி, விற்பனை கூட்டு அமைப்பு. | 14,000 | 9,000 | 6,630 |
| 3. கன்னியாகுமரி கூட்டுறவுப் பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 4,000 | 4,800 | 5,360 |
| 4. சிதம்பரம் கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 7,000 | 2,800 | 1,260 |
| 5. உதகமண்டலம் கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 7,000 | 8,700 | 11,000 |
| 6. சென்னை கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 14,000 | 8,600 | 5,850 |
| 7. கோயம்புத்தூர் கூட்டுப் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கம். | 14,000 | 13,350 | 14,700 |
| 8. கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கு கூட்டுச் சங்கம். | 2,000 | 800 | 1,070 |

மேலும் அதிக அளவு பாலைக் கையாளும் வகையில் தற்போதுள்ள யந்திர சாலையை விரிவுபடுத்துவதற்காகக் கன்னியாகுமரி கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திற்குக் கடனாக ரூ. 1.35 லட்சம் வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மணி ஒன்றுக்கு 2,000 லிட்டர் திறனளவு கொண்ட பால் பதப்படுத்தும் யந்திரசாலை நிறுவுவதற்கு உதகை கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திற்கும் ரூ. 3 லட்சம் கடன் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இச் சங்கங்களின் செயல்கள் விரிவுபடுத்தப்பட்டதனால், சென்னை பால் பண்ணைக்கு இச் சங்கங்களால் அதிக அளவு பால் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.



1970 மார்ச் 18]

இம்மாநிலத்தில் 337 அரிசன பால் வழங்கும் சங்கங்கள் உள்ளன; அவற்றில் 181 சங்கங்கள் செயல்படுகின்றன; 156 சங்கங்கள் செயல்படாமல் உள்ளன. இச்சங்க உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்குவதற்குக் கடன் வழங்கப்படுகிறது. ரூ. 250 உதவித் தொகையாகவும் ரூ. 250 கடனாகவும் வழங்கப்படுகிறது. உதவித் தொகையை அரிசன நலத்துறை ஏற்றுக் கொள்கிறது; கடன் தொகையை பால் பண்ணை வளர்ச்சித் துறை வழங்குகிறது. கீழ்க்கண்ட விதங்களில் பால் பாத்திரங்கள் வாங்கவும், சைக்கிள் வாங்கவும் பணியாளர்களை அமர்த்திக்கொள்ளவும் இச் சங்கங்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது :—

பால் பாத்திரங்கள்—ரூ. 500.

சைக்கிள்—ரூ. 300.

பணியாளர்கள் அமர்த்திக்கொள்ளுதல்—ரூ. 360.

1968-69-ல் அளிக்கப்பட்ட உதவித் தொகையும், சமூக நலத் துறையால் உதவித் தொகை வழங்கப்படுவதற்கு 1969-70, 1970-71 ஆகிய ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையும் கீழ்க்கண்டவாறாகும் :—

1968-69—ரூ. 3,94,843 (வழங்கியது).

1969-70—ரூ. 4,00,000 (திருத்த மதிப்பீடு).

1970-71—ரூ. 4,00,000 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு).

### கிராமப் பால் பண்ணை வளர்ச்சிப் பணி.

சென்னை, மதுரை பால் பண்ணைகளுக்கு பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமப் பகுதிகளிலிருந்து அன்றாடம் பெருமளவில் பால் சேகரிக்கப்படுகின்றது. கிராமப் பகுதிகளிலிருந்து சேகரிக்கப்படும் பாலின் தரத்தைக் காக்கும் பொருட்டு, சென்னைக்குப் பால் அனுப்பப்படுவதற்கு முன்பு தொடக்கத்தில் சரிப்படுத்தி முக்கிய இடங்களில் பலவகையான குளிர வைக்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாட்டுத் தொழுவங்கள், பால் பண்ணைக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், பால் வண்டிகள், குளிர வைக்கும் சாதனங்கள், சோதனையிடும் கருவிகள் வாங்கவும், கறவை மாடுகள் வாங்கவும் கிராமச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் நிதி உதவியளிக்கப் படுகிறது. 1967-68, 1968-69, 1969-70 ஆகிய ஆண்டுகளில் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவியின் அளவும் 1970-71-ல் ஒதுக்கப்பட்ட தொகையும் கீழ்காணும் விவர அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளன :—

| ஆண்டு. | கறவை மாடுகள் வாங்குதல். | கிராமப் பால் பண்ணை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட நிதி உதவி. |
|---|---|---|
| | | லட்சம். |
| 1967–68 .. .. .. .. | 38,53,900 | 3·60 |
| 1968–69 .. .. .. .. | 32,73,500 | 4·11 |
| 1969–70 .. .. .. .. | 25,00,000 | 5·35 |
| 1970–71 .. .. .. .. | 20,00,000 | 6·00 |

கறவை மாடுகளுக்கு உரிய அளவில் தீவனமிடல், இனப் பெருக்கத்திற்கு வகை செய்தல், பேணிப் பாதுகாத்தல் ஆகியவை குறித்துக் கிராம மக்களுக்கு அறிவூட்டும் பொருட்டு, கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கப் பணியாளர்களுக்கும் அவற்றின் உறுப்பினர்களுக்கும் பால் பண்ணை வளர்ச்சிப் பணியாளர்கள் தொழில் நுட்ப அறிவுரை நல்கி வந்தனர். பால் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதிலும் இச் சங்கங்களுக்கு அவர்கள் துணை புரிந்தனர். சிறு சங்கங்களுக்குப் போதுமான பணபலம் அளிக்கும் கருத்துடன், அவற்றை நிலைத்து இயங்கும் வசதி பெற்ற கூட்டுறவுப் பிரிவுகளுடன் இணைத்து அமைக்கும் திட்டத்தை இத்துறை தொடங்கியது. தற்போது 23 கூட்டுறவுப் பால் வழங்கும் யூனியன்களும், 2,662 கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களும் இம்மாநிலத்தில் செயல்படுகின்றன. இவற்றில் 462 சங்கங்கள் பால் பண்ணைகளுக்குப் பால் வழங்குகின்றன.

கிராமப் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுடன், கறவை மாடுகள் வைத்துவரும் தனிப்பட்டவர்கள் சிலரும் சென்னை பால் பண்ணைக்கு பால் வழங்கி வருகிறார்கள். இவர்களுக்குக் கடனுகை வழங்கப்படும் ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்கும் அவர்கள் 25 லிட்டருக்கும் குறையாத விதத்தில் இப் பண்ணைக்கு பால் வழங்கவேண்டுமென்னும் நிபந்தனைக்கு உட்பட்டு, சோதனை நடவடிக்கையாக இத்தனிப்பட்ட பால் வியாபாரிகளுக்கும் கடன் வழங்க ரூ. 1 லட்சம் தொகையை ஒதுக்க அரசு ஒப்பளிப்புவழங்கியுள்ளது.

கிராமப் பகுதிகளில் உற்பத்தியாகும் பாலின் தரத்தை மேம்படுத்த, எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 82 காசு முதல் 94 காசு வரையிலும், பசும் பாலுக்கு 70 காசு முதல் 78 காசு வரையிலும் தரவாரியான விதங்களில் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

## இணைப்பு 5.

[288-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண் XVIII—கால்நடை வளர்ப்பு.

**1970-71-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—ரூ. 3,82,67,400.**

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களில், கால் நடை வளர்ப்பு முக்கியமான இன்றியமையாத பங்கு வகிக்கிறது. திட்டமிட்ட, அறிவியல் முறையிலமைந்த கால்நடை வளர்ப்புத்துறை மேம்பாடு மூலம்—ஆடுகள், கோழிகள், பன்றிகள், இன்றைய கால்நடைகளின் வளர்ச்சி—உணவுச் சிக்கலைத் தீர்த்து வைப்பதில் பெருமளவு உதவி புரிவதாக அமையும். அவை இத்துடன் பண்ணைக்கான அருமையான தொழு உரமும், உழவு வேலைகளுக்கான கால்நடைகளும் கிடைக்க வகை செய்யும்.

கால்நடை வளர்ப்புத் துறையின் முக்கிய நோக்கங்கள் இருவகைப்படும். (ஆடுகள், பன்றிகள், கோழிகள், பசுக்கள், எருமைகள் உட்பட) கால்நடைகளின் உற்பத்தித் திறனை உயர்த்துவது அதன் முதல் நோக்கமாகும். இனப்



பெருக்கம், தீவனம் இடுதல் இவற்றில் செய்முறை மேம்பாடுகள் செய்தும், கால் நடை நோய்த் தடுப்பிற்கும் மருத்துவத்திற்கும் ஆன வசதிகளைப் பரந்த அளவில் அளித்தும் கால்நடைகளின் உற்பத்தித் திறன் உயர்த்தப்படுவதாகும். உயரின உழவு மாடுகளை வளர்த்து உழவு மாடுகளின் திறமையை மேம்படுத்துதல் அதன் இரண்டாவது நோக்கமாகும்.

இந்த நோக்கங்களை எய்துவதற்காக, கால்நடை வளர்ப்புத்துறை முழுவதும் சீரமைக்கப்பட்டது. இத்துறையின் திறமையைப் பெருக்கி அதன் கால்நடை மருத்துவப் பணிகள் கிராமப் பகுதிகளில் மிக எளிதில் கிடைக்கச் செய்வதே இதன் முக்கிய குறிக் கோளாகும். இதை நினைவில் கொண்டு கால்நடை வளர்ப்புத் துறை இரு தனித் துறைகளாகப் பிரித்தமைக்கப்பட்டது. அவை ஒவ்வொன்றும் ஒரு தனித் துறைத் தலைவரது கட்டுப்பாட்டின்கீழ், கால்நடை வளர்ப்புத் துறை, கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை என்னும் பெயர்களுடன் முறையே அமைந்தன.

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை வளர்ப்பு மற்றும் கால் நடை மருத்துவ அறிவியல் பட்டமேற்படிப்புக் கல்விக்கான தெற்கு வட்டார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காகத் தனியாக ஒரு துறை ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. இரு தனித் துறைகளாகப் பிரித்தமைத்ததைத் தொடர்ந்து கீழ்க்கண்ட நிலையங்கள் யாவும் 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ஆம் நாள் முதல் கால்நடை வளர்ப்புத் துறையிடமிருந்து, கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை இயக்குநராகவுள்ள சென்னைக் கால் நடை மருத்துவக் கல்லூரித் தலைவரின் பொறுப்பிற்கு மாற்றப்பட்டன—

(1) கல்லூரியில் நடைபெறும் ஆராய்ச்சித் திட்ட வேலைகள் உள்பட, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி.

(2) நிலையத்தில் நடைபெறும் ஆராய்ச்சித் திட்ட வேலைகள் உட்பட, ராணிபேட்டை கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிறுவனம்.

(3) கோழி இன ஆராய்ச்சி நிலையம், தேனாம்பேட்டை.

(4) ஆடுகள் இனப் பெருக்க ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம்.

(5) காட்டுப்பாக்கத்திலுள்ள (கோழிகள் விற்பனை நிலையம் நீங்கலாக) ஆட்டுப் பண்ணை.

1970-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் நாள் முதல் கால்நடை வளர்ப்புத் துறை செயல்கூறுகள் அடிப்படையில் இயங்குவதற்குப் பதிலாக வட்டாரக் குறிப்பிடத் அடிப்படையில் செயல்படும் வண்ணம் சீரமைக்கப்பட்டது மற்றொரு குறிப்பிடத் தக்க மாறுதலாகும். அரசு, கால்நடை வளர்ப்புத் துறையின் நிர்வாக அமைப்பையும் கட்டமைப்பையும் குறித்துக் கவனமாக ஆராய்ந்தது. பொது மக்கள் ஒரே பகுதியிலுள்ள வெவ்வேறு அதிகாரிகளையும் நிலையங்களையும், வெவ் வேறு வகையான, கால்நடை மருத்துவ உதவிக்கும், கால்நடை வளர்ப்பு உதவிக்கும் அணுகவேண்டியிருந்தது. ஒரேமாதிரியான வேலைகளை வெவ்வேறு அதிகாரிகள் கவனிப்பதாக இருந்ததால் பொதுமக்கள் பெரும் இடர்ப் பாட்டிற்கு ஆளாகின்றனர் என்பதை அரசு கண்டறிந்தது. எனவே, கால்நடை

வளர்ப்புத் துறையின் அதிகாரத்தைப் பெருமளவு பரவலாக்குவதற்கும், பல்வேறு பிரிவுகள், நடைமுறைகள் மீதான பொறுப்பை ஒருங்கிணைத்து ஒருசீராக்குவதற்கும் இத் துறையை வட்டார அடிப்படையில் திருத்தியமைப்பது மிகவும் இன்றியமையாதது என்று அரசு கருதியது.

துறையைச் சீரமைத்ததன் விளைவாக கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநர், மாநில முழுமைக்கும் ஆன பொறுப்பை வகிக்கின்றார். வட்டாரத் துணை இயக்குநர்கள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களடங்கிய வட்டாரங்களின் பொறுப்பை வகிக்கின்றனர். கால்நடை வளர்ப்புத் துறை உதவி இயக்குநர்கள் ஒரு வட்டம் அல்லது வருவாய்க் கோட்டத்தின் பொறுப்பை வகிக்கின்றனர். ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரத்திற்கும் இரண்டு கால்நடை உதவி அறுவை மருத்துவர்கள் உள்ளனர். இப்போது ஆறு வட்டாரத் துணை இயக்குநர்கள், முறையே சென்னை, வேலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு அவர்கள் தத்தமக்குரிய அதிகாரப் பகுதிகளில் உள்ள, எல்லாக் கால்நடை வளர்ப்புத் துறை அதிகாரிகளையும் பிரிவுகளையும் தம் பொறுப்பில் வைத்துக் கொண்டு கால்நடை வளர்ப்புத் துறையின் நடவடிக்கைகளை முறைப்படுத்தி வருகின்றனர். சென்னை வட்டாரத் துணை இயக்குநரைத் தவிர ஒவ்வொரு வட்டாரத் துணை இயக்குநருக்கும் உதவுவதற்கென மூன்று வல்லுநர்கள் (ஒரு கோழி இன வல்லுநர், ஒரு கால்நடை வல்லுநர், நோய் ஆய்வுப் பணி வல்லுநர்) ரூ. 375—25—800 என்ற சம்பள விதத்தில் உள்ளனர். இவர்கள் வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்தவராவர். வட்டாரத் துணை இயக்குநர்களுக்குக் கீழே, கால்நடை வளர்ப்பு உதவி இயக்குநர்கள், ஒரு வருவாய்க் கோட்டத்திற்கிணையான பகுதியின், பொறுப்பை மேற்கொண்டு, அப் பகுதியில் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்று வருகின்றனர். இந்த நடவடிக்கைகளின் கீழ் நோய் மருத்துவமும் ஆய்வும் மட்டும் அல்லாமல், கோழிகள், கால்நடை, ஆடுகள், பன்றிகள் ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணி, செயற்கை முறை இனப்பெருக்கப் பணிகள், மையக் கிராமப் பணிகள், விரிவுபடுத்துதல் மற்றும் வளர்ச்சிப் பணிகள் முதலியனவும் அடங்கும். ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரத்திலும் குறைந்தது ஒரு கால்நடை மருந்தகமேனும் இருக்கும். பொதுவாக, ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரத்திலும் இரண்டு கால்நடை உதவி அறுவை மருத்துவர் இருப்பர். ஒருவர் கால்நடை நோய் மருத்துவத்தையும், மற்றொருவர் கால்நடை நேரிடைப் பயிற்சிப் பணியையும் (Extension Work) கவனித்துக் கொள்வார்.

ஊராட்சி ஒன்றிய அளவிலும், கிராம அளவிலும் கால்நடை வளர்ப்புத் துறையின் வேலைகளையும், ஊராட்சி ஒன்றியங்களின் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளையும் விரிவுப் பணி அதிகாரி (கால்நடை வளர்ப்பு) ஒருவர் கவனிப்பார். அந்தந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, ஆங்கு ஏற்கெனவே உள்ள கால்நடை வளர்ப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை, அந்தப் பகுதியில் முன்னரே மேற்கொள்ளப்பட்ட தீவிரப் பணிகள் முதலியவற்றைப் பொறுத்து, விரிவுப் பணி அதிகாரி (கால்நடை வளர்ப்பு) 6-முதல் 10 வரையிலான (அல்லது அதற்கும் அதிகமான) கிராமங்கள் அடங்கிய துணை நிலையங்களின் பொறுப்பை மேற்கொண்டு, கவனித்து வருவார். தொடர்பான ஊராட்சி ஒன்றியத் துறையையும், தொடர்பான கால்நடை வளர்ப்புத் துணை



இயக்குநர்களையும் கலந்தாலோசித்து, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அமைக்கப்படவேண்டிய ஒவ்வொரு துணை நிலையத்திற்கும் உரிய பொருத்தமான இடத்தைக் குறிப்பிடுமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்ஙனம் அமைக்கப்படும் துணை நிலையம் ஒவ்வொன்றுடனும், பொருத்தமான அளவு எண்ணிக்கையில், அடுத்தடுத்து அமைந்த ஊராட்சிகள் இணைக்கப்படுமாறு, இடங்கள் குறிப்பிடப்பெறுதல் வேண்டும். கால்நடை வளர்ப்புத் துறையின் பல்வேறு முகமையமைப்புகளால் இதுவரை செய்யப்பட்டுவந்த எல்லா வேலை இனங்களும்—மையக் கிராம நிலையங்கள், செயற்கை முறை இனப் பெருக்கக் கிளை நிலையங்கள் இன்ன பிறவும், இனி மேல், இந்தத் துணை நிலையங்களின் பொறுப்பில் உள்ள (கால்நடை வளர்ப்பு) நல விரிவுப் பணி அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும். இதுவரை தனித்தனி துறையாகக் கவனிக்கப்பட்டுவந்த கால்நடை மருத்துவப் பணிகள் மற்றும் கால்நடை வளர்ச்சி உதவி பணிகளுக்குப் பதிலாக, பரவலான அதிகார அடிப்படையில் அனைத்துமடங்கிய ஒருங்கிணைந்த கால்நடை மருத்துவப் பணியை நாம் பெற்றுள்ளோம். இவ்வாறு நிர்வாகம் சீரமைக்கப்பட்டதன் விளைவாக, கால்நடை மருத்துவப் பணி கால்நடை வளர்ப்பு மேம்பாட்டுப் பணிகளின் பயன்களை கிராமங்கள் மேலும் சிறப்பான முறையில் அடைய இயலும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

ஆனால் கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநரின் பொறுப்பின் கீழ் வரும் 9 கால்நடைப் பண்ணைகளின் பணியாளர் அமைப்பு முறையும், காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணைக் கண்காணிப்பாளர் அலுவலகப் பணியாளர் அமைப்பு முறையும், 9 தீவிரக் கோழி இன வளர்ச்சி வட்டாரங்களில் உள்ள பணியாளர் அமைப்பு முறையும் 39 கோழி இன விரிவுத் திட்ட நிலையங்களிலும் உள்ள பணியாளர் அமைப்பு முறையும் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வாரா. அவை எவ்வித மாற்றத்திற்கும் உள்ளாகாமல் அப்படியே உள்ளன.

மையக் கிராமத் திட்டம், மும்முரக் கால்நடை வளர்ப்புத் திட்டம் போன்ற சில சிறப்புத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் சிறப்பாக நாட்டஞ் செலுத்தவேண்டுமென்று கருதப்படுகிறது. இத்தகைய சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிற முக்கியமான பகுதிகளில் தங்குதடையின்றி நடைபெறுவதற்கு ஏற்றவாறு சிறப்புப் பணியாளருக்கு ஏற்பாடு செய்யவும் அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நிர்வாகச் சீரமைப்பு முறையைப் பற்றி விளக்கிய பின்னர், முக்கியமான வேலைத் திட்டங்களில் எய்திய சிறந்த சாதனைகளைப் பற்றிக் கீழே விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

### கால்நடை வளர்ப்பு.

(அ) தீவனத்தர மேம்பாடு.—கால்நடைகளின் வளர்ச்சி, மேய்கை, தீவனங்களின் வளத்தைப் பொறுத்து உள்ளது. போதிய ஊட்டச் சத்து மிக்க தீவனம் கிடைத்தாலன்றி, இனப்பெருக்கத் திட்டம் எதுவும் செவ்விய பலனை அளிக்காது. தீவனமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பண்படுத்தப்பட்ட மேய்ச்சல் நிலங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. சிறந்த கால்நடைகள் வளரவேண்டுமாயின்

வளமிக்க தீவனம் கிடைக்கவேண்டும். இதன் அவசியத்தை உழவர்கள் படிப் படியாக உணர்ந்து வரவும் இத் திட்டம் வகை செய்கிறது. எனவே, தீவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்; நவீன முறைகளில் தீவனப் பயிர்களை வளர்ப்பதற்கும், சுழல் மேய்ச்சல்' திட்டத்தின் அவசியத்தையும், சிக்கனமாகத் தீவனங்களைப் பயன்படுத்தவும், மிகுதியாகவுள்ள தீவனங்களைப் பாதுகாக்கத் தெரிந்து கொள்ளுவதற்கும் உழவர்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். மையக் கிராமப் பகுதிகளிலும் மும்முரக் கால்நடை வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலும் தீவனப் பொருட்களை உற்பத்தி செய்வதைப் பொறுத்தமட்டில், ஏற்பட்டுள்ள பெரும் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு, தீவனப் பொருட்களைப் பயிரிடுவதன் தேவையையும் முக்கியத்துவத்தைப்பற்றியும் உழவர்களிடையே ஏற்பட்டுள்ள தேவையான விழிப்புணர்ச்சியையும் கருத்திற் கொண்டும், இந்த ஆண்டு, மும்முரக் கால்நடை வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலும், மையக் கிராமப் பகுதிகளிலும் தீவனப் பொருட்கள் உற்பத்திக்கான உதவித் தொகையை தொடர்ந்து கொடுப்பது அவசியமில்லை என்று அரசு கருதியது. கால்நடை வளர்ப்புத் துறையை சீரமைப்பின் ஒருபகுதியாக, தீவன வளர்ச்சிப்பணியை வேளாண்மைத் திட்டங்களில் அடங்கிய ஒரு பணியாகக் கொள்வதாயின் மிகவும் அனுகூலமாகயிருக்கும் என்று அரசு கருதிற்று. எனவே, தீவன மேம்பாட்டுப் பணி, வேளாண்மைத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

**மையக் கிராமத் திட்டம்.**—தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் கால்நடை வளர்ச்சிக்காக, கால்நடைத் தீவனம், நிர்வாக முறைகள், நோய்க்கட்டுப்பாடு, விற்பனை வசதி போன்றவற்றை அறிவியல் முறையில் மேற்கொண்டு, மும்முரக் கால்நடை வளர்ச்சிக்கு வழிகோலுவதே, மையக் கிராமத் திட்டத்தின் நோக்கமாகும்.

மையக் கிராம வளர்ச்சி வட்டாரங்களை ஏற்படுத்தி விரிவு படுத்துவதற்காக 1968-69-ல் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 6.33 லட்சம் ஒதுக்கியிருக்கையில், ரூ. 7.25 லட்சம் இத் திட்டத்திற்காக செலவாகியது. இத்தலைப்பின்கீழ் 1969-70 திட்ட மதிப்பீடு ரூ. 2.32 லட்சமாகும்.

1968-69-ஆம் ஆண்டில், 472,744 ஆவினங்களுக்கு செயற்கைக் கருத்தரிப்பு செய்யப்பட்டது. இத்தகைய நிலையங்களில் 5,025 முறை இனப்பெருக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை தவிர, இத்தகைய நிலையங்களில் 3,52,473 ஆவினங்கள் கவனிக்கப்பட்டன; 18,45,560 ஆவினங்களுக்கு நோய்த் தடுப்பு ஊசிகள் குத்தப்பட்டது. 76,401 காளைகளுக்குக் காயடிக்கப்பட்டது.

### மும்முரக்கால்நடை மேம்பாட்டுத் திட்டம்

கால்நடை வளர்ப்பு, தீவனம், நோய்க் கட்டுப்பாடு, பாற்பண்ணை வளர்ச்சிப் பணியை அனைத்துத் துறைகளிலும் ஒருங்கிணைத்து மும்முரப் படுத்துவது செங்கற்பட்டு, மதுரை, கோவை ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்ட மூன்று மும்முரக் கால்நடை வளர்ப்புத் திட்டங்களின் நோக்கமாகும். வேளாண்மை உற்பத்தி விரைவுத் திட்டங்களின் அடிப்படையில் அமைந்த இத்தகைய கால் நடை வளர்ப்புத் திட்டங்கள், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நல்ல தரம் வாய்ந்த கறவை மாடுகளை வளர்க்கும் இடங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும், இனப்பெருக் [illegible] ஒரு லட்சம் ஆவினங்கள், எருமைகள் வளர்க்கப்படுகின்றன.



1968-69 நிதி ஆண்டில் ரூ. 33.53 லட்சம் வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கையில், ஏற்பட்ட செலவினம் ரூ. 32.59 லட்சமாகும். 1969-70-ஆம் ஆண்டில் இந்தப் பணித் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு ரூ. 9 லட்சமாகும். இப் பகுதிகளில் தீவன மேம்பாட்டுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையை நிறுத்தி ஆணை பிறபிக்கப்பட்டதால், 1969-70 ஆண்டுத் திருத்த மதிப்பீடு ரூ. 3.62 லட்சத்திற்குக் குறைக்கப்பட்டது. 1970-71 ஆண்டுத் திட்ட மதிப்பீடு ரூ. 3.62 லட்சமாகும்.

திட்ட முன்னேற்றத்தை எடுத்துக் கொள்வோமானால், 1968-69-ஆம் ஆண்டில், இந்தத் திட்டப் பகுதியில் 30,594 உயரினக் கன்றுகள் சினப்பட்டன. 1,47,994 ஆவினங்கள் செயற்கை முறையில் சினைப்படுத்தப்பட்டன. 36,641 காளைகளுக்குக் காயடிக்கப்பட்டன. 7,40,451 ஆவினங்களுக்கு அம்மைப்பால் குத்தப்பட்டன. இந்தத் திட்டப் பகுதிகளில் 1,35,765 ஆவினங்களுக்கு மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்டது. நடப்பாண்டில் (1969-70) திட்ட முன்னேற்றம் பற்றிப் புள்ளி விவரம் 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ஆம் நாள் வரையில் கிடைத்துள்ளது. இந்தக்காலத்தில் 55,095 ஆவினங்கள் செயற்கை முறையில் சினைப்படுத்தப்பட்டன. திட்டப் பகுதியில் 10,497 கன்றுகள் சினப்பட்டன.

### கால்நடைப் பண்ணைகள்.

ஒசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, அபிஷேகப்பட்டி, செட்டிநாடு, உதகமண்டலம் ஆகிய இடங்களில் ஆறு கால்நடைப் பண்ணைகள் உள்ளன. கால் நடை வளர்ப்புத் துறை சீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து சாத்தூரில் உள்ள செம்மறியாட்டுப் பிரிவு, செம்மறியாட்டுப் பண்ணையாகவும், சின்னசேலத்தில் உள்ள செம்மறியாடு இனப் பெருக்க ஆராய்ச்சி நிலையம், செம்மறியாட்டுப் பண்ணையாகவும், காட்டுப்பாக்கத்தில் உள்ள கோழி விற்பனை நிலையம், கோழிப் பண்ணையாகவும் 1970-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் முதல் மாற்றப் பட்டுள்ளன. சித்தி, முர்ரா, ஜெர்சி, தார்பார்கார், கிர் ஆகிய புகழ்பெற்ற கறவை இனங்களும், காங்கேயம், புலிக்குளம், அம்பளாச்சேரி, அலிகார், ஆலம்பாடி போன்ற பாரமிழுக்கும் மாடுகளும் இந்தப் பண்ணைகளில் நல்ல முறையில் வளர்த்துப் பேணி வரப்பட்டு, தனியார் பண்ணைகளுக்கும், உழவர்களுக்கும், அரசினர்—தனியார் நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன. இம் மாநிலத்தின் கால் நடையின் தரத்தை உயர்த்துவதற்குத் தேவைப்படும் அடிப்படைக் கால் நடையினத்தை மேம்படுத்துவதற்காக, சிறந்த இன முறையிலும் கலப்பின முறையிலும் இனப் பெருக்கப்பணி இந்தப் பண்ணைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

[1970 மார்ச் 18

1968-69, 1969-70-ஆம் ஆண்டு (1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை) இந்த 6 கால்நடைப் பண்ணைகள் குறித்த செலவும், வரவும், கீழ்க்கண்ட விவர அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.—

| பண்ணையின் பெயர். | 1968–69. | | 1969–70. | |
|---|---|---|---|---|
| | செலவு. | வருவாய். | செலவு. | வருவாய். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| மாவட்டக் கால் நடைப் பண்ணை, ஒசூர். | 11,04,368 | 3,44,511 | 6,94,802 | 1,82,666 |
| மாவட்டக் கால் நடைப் பண்ணை, புதுக்கோட்டை. | 8,93,124 | 2,48,934 | 6,08,237 | 1,23,053 |
| மாவட்டக் கால் நடைப் பண்ணை, ஒரத்தநாடு. | 10,76,311 | 3,33,420 | 6,90,086 | 2,39,254 |
| மாவட்டக் கால் நடைப் பண்ணை, செட்டிநாடு. | 5,53,379 | 1,47,813 | 4,37,767 | 91,993 |
| மாவட்டக் கால் நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி. | 3,75,791 | 1,07,834 | 2,35,804 | 76,474 |
| மாவட்டக் கால் நடைப் பண்ணை, உதகமண்டலம். | 2,98,994 | 1,09,355 | 2,04,494 | 72,000 |
| மொத்தம் .. | 43,01,967 | 12,91,867 | 28,71,190 | 7,86,003 |

மேற்சொன்ன விவர அறிக்கையிலிருந்து, முந்திய ஆண்டைவிட 1969-70-ல் செலவினத்தில் கணிசமான அளவிற்குச் சேமிப்பு கிட்டியுள்ளது என்பதைக் காணலாம். இதற்கு நிகராக, 1969-70-க்கான வரவினங்களும் பெரிதும் மனநிறைவளிப்பவையாகவுள்ளன.



1970 மார்ச் 18]

1968-69, 1969-70-ஆம் ஆண்டு (1969 டிசம்பர் வரை) இந்த கால்நடைப் பண்ணைகளில் உற்பத்தியான பாலின் அளவு கீழ்க்கண்ட விவர அறிக்கையில் பார்க்க :—

| பண்ணை பெயர். | 1968–69. கிலோ கிராம். | 1969–70. கிலோ கிராம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| மாவட்டக் கால் நடைப் பண்ணை, ஒசூர். | 3,74,957·5 | 2,44,514·2 |
| 2 மாவட்டக் கால் நடைப் பண்ணை, புதுக்கோட்டை. | 2,53,787·8 | 1,67,234·1 |
| 3 மாவட்டக் கால நடைப் பண்ணை, ஒரத்தநாடு. | 4,29,569·0 | 2,91,942·9 |
| 4 மாவட்டக் கால் நடைப் பண்ணை, செட்டிநாடு. | 1,25,406·9 | 1,00,933·3 |
| 5 மாவட்டக் கால் நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி. | 84,474·5 | 67,734·2 |
| 6 மாவட்டக் கால் நடைப் பண்ணை, உதகமண்டலம். | 1,75,473·3 | 1,03,603·0 |
| மொத்தம் .. | 14,43,669·0 | 9,75,961·7 |

1968-69, 1969-70-ஆம் ஆண்டு (1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை) இந்தப் பண்ணைகளில் இனப் பெருக்கத்திற்காக, விற்பனையான காளைகளின் எண்ணிக்கையை பின்வரும் விவர அறிக்கை காட்டுகிறது :—

| பண்ணையின் பெயர். | 1968–69. | 1969–70. |
|---|---|---|
| 1 மாவட்டக் கால் நடைப் பண்ணை, ஒசூர். | 40 | 4 |
| 2 மாவட்டக் கால் நடைப் பண்ணை, ஒரத்தநாடு. | 20 | 7 |
| 3 மாவட்டக் கால் நடைப் பண்ணை, புதுக்கோட்டை. | 28 | 11 |
| 4 மாவட்டக் கால் நடைப் பண்ணை, செட்டிநாடு. | 2 | இல்லை. |
| 5 மாவட்டக் கால் நடைப் பண்ணை. அபிஷேகப்பட்டி. | 7 | 8 |
| 6 மாவட்டக் கால் நடைப் பண்ணை, உதகமண்டலம். | இல்லை. | 6 |
| மொத்தம் .. | 97 | 36 |

இம் மாநிலத்தில் உள்ள கால்நடைப் பண்ணைகள் செயல்படும் முறையை அரசு ஆய்வு செய்தது. பண்ணைகளில் கிடைக்கக் கூடிய வளங்களை குறிப்பாக, கால்நடைத் தீவனம், தழை இவற்றை வழங்குதலில் ஏற்படும் கணிசமான சேதத்தைக் கண்ணுற்ற பிறகு இங்கு கிட்டும் வளங்களை சீராகப் பயன்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்போது வெளியிடங்களிலிருந்து தீவனங்கள் வாங்கப்படுவதால் பண்ணை களில் கால்நடைத் தீவனம் வாங்குவதில் கணிசமான செலவைக் குறைக்கும். தீவனப்பயிர் வளர்ப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத் திட்டத் தின்கீழ் மண்வளப் பாதுகாப்பு வேலை, புதிய கிணறுகள், துளைக் கிணறுகளை வெட்டுதல், எல்லாக் கால்நடைப் பண்ணைகளிலும் விசையேற்றங்கள் நிறுவுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. சிறந்த நிர்வாகத் திற்கான அறிகுறிகள் ஏற்கெனவே தென்படுகின்றன. இன்னும் இவ்வகையில் பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது. கால்நடைப் பண்ணைகள் தனித்தியங்கும் பிரிவுகளாகச் செயல்படுவதன் பொருட்டு, நிர்வாகச் சீரமைப்பிற்கும், கணக் கிடும் முறையைச் சீர்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட ஆறு கால்நடைப் பண்ணைகள், மூன்று செம்மறியாட்டுப் பண்ணைகள் ஆகியவை தவிர, பால்வற்றிய ஆவினங்களைப் பேணுவதற்காக அண்மையில் அலமாதியில் பண்ணையொன்றுள்ளது. அலமாதியில் முதற்கண் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்து, மத்திய எருமை வளர்ப்பு பண்ணையொன்றை ஏற்படுத்துவதென மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. அந்த மத்தியப் பண்ணையைத் தொடங்குவதற்காக தற்போதுள்ள நிலத்தையும் கட்டிடங்களையும் இந்திய அரசிற்குக் கொடுப்பதென இந்த மாநில அரசு ஏற்றுக் கொண்டது. மத்தியப் பண்ணையானது அலமாதியில் ஏற்படுத்தப்படும்பொழுது பால் வற்றிய ஆவினங்களைப் பேணும் தற்போதைய பண்ணை மற்றோரிடத்திற்கு மாற்றப்படும். தற்போதைய பண்ணைக்கு மாற்றிடம் தேடுவது குறித்த சிக்கல் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது.

## செம்மறியாடு இனப் பெருக்கம்.

உதகமண்டலத்தில் உள்ள செம்மறியாடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், சாத்தூர், சின்னசேலம், காட்டுப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள செம்மறி யாட்டுப் பண்ணைகள் ஆகியவற்றைத்தவிர, ஓசூரில் உள்ள மாவட்டக் கால் நடைப் பண்ணையிலும், செட்டி நாட்டில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணை யிலும் செம்மறியாட்டுக்கான பிரிவுகள் உள்ளன. 1968-69-ஆம் ஆண்டில், 5,243 ஆட்டுக்குட்டிகள் வளர்க்கப்பட்டன; 4,249 ஆடுகள் இனப்பெருக்கத்திற் காக அனுப்பப்பட்டன. 2,122 ஆடுகள் இறைச்சிக்காக விற்கப்பட்டன. 4,67,367 ஆடுகளுக்கு ஒட்டுண்ணி போன்ற ஈவகைகள் அகற்றப்பட்டன.

துறை சீரமைக்கப்படுவதற்கு முன்பாக, இம் மாநிலத்தில் உள்ள 83 செம்மறியாடு ஆட்டு ரோம வளர்ச்சிப் பண்ணைகளில் செய்த பணிகள், புதிதாக ஏற்படுத்தப்பட்ட துணை நிலையங்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள 16 செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்



தொடர்ந்து நிதானமாக முன்னேறி வருகின்றன. 1968-69-ல் இத்தகைய சங்கங்களுக்கு ரூ. 6.67 லட்சம் வரை கடன்களும், உதவித்தொகைகளும் கொடுக்கப்பட்டன. வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று இன்னும் சில செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதற்குரிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## கோழி இன வளர்ப்பு.

இம் மாநிலத்தில் உள்ள 74 கோழி இன வளர்ச்சி நிலையங்கள் செயல்படும் முறையை இந்த ஆண்டு அரசு மறுபரிசீலனை செய்தது. பெரும் இழப்பில் செயல்பட்டு வருவனவும், பணிகள் மேம்படுத்தப்பட இயலாதவையுமான 35 கோழி இன வளர்ச்சி நிலையங்கள், 1969 நவம்பரில் மூடப்பட்டன. எஞ்சிய 39 கோழி இன வளர்ச்சி நிலையங்களைத் திருத்தியமைப்பதற்கும், தனித்தியங்கும் பிரிவுக ளாகச் செயல்படுவதற்குரிய செயற் குறிப்புகள் ஆராயப்பட்டு வருகின்றன. இந்த நிலையங்களில், 1968-69-ஆம் ஆண்டில் 3,11,719 குஞ்சுகள் வளர்க்கப்பட் டன. 32,56,158 முட்டைகள் கிடைத்தன. 1969-70-ஆம் ஆண்டில், 2,70,108 கோழிகள் வளர்க்கப்பட்டன; 1969 டிசம்பர் வரையில் 15,70,256 முட்டைகள் கிடைத்தன.

விரைவுத் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட முட்டை, கோழி முழுமூர உற்பத் திக்கான ஆறு விற்பனை நிலையங்களுள், சேஷன்சாவடி, அரசூர், தருமத்துப் பட்டி, கோட்டப்பட்டி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள ஐந்து நிலையங் கள் 1969-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் மூடிவிடுமாறு ஆணையிடப் பட்டது. கோழி விற்பனை குறித்த அதிகாரிகளுக்கு போதுமான பணி இல்லாததால், கோழி விற்பனை நிலையங்களை மூடிவிடுவது அவசியமாயிற்று.

கோழி வளர்ப்பவர்களுக்கு நல்ல தரமான கோழிக் குஞ்சுகள் கொடுப்பதற் காக, ஓசூர், காட்டுப்பாக்கம், கப்பலூர் ஆகிய இடங்களில் கோழிக் குஞ்சுகள் வளர்ப்புத் திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. 1968-69-ம் ஆண்டில், இந்தப் பிரிவுகளில் 1,39,147 குஞ்சுகள் வளர்க்கப்பட்டன. இனப் பெருக்கத்திற்காக, 1,08,224 கோழிகளும், இறைச்சிக்காக 25,800 கோழிகளும் விற்கப்பட்டன. கோழி வளர்ப்புக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையின் பேரில், ஓசூரில் உள்ள கால்நடைப் பண்ணையில் கோழிக் குஞ்சுகள் வளர்ப்பதற் கான திட்டம் 1970-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் விரிவாக்கப்பட்டுள் ளது. மாதமொன்றுக்கு குறைந்தது 20,000 கோழிக் குஞ்சுகளாவது பொரிப் பதற்காக, பெருமளவில் கோழிக் குஞ்சு பொரிக்கும் இயந்திரம் ஒன்றை ஏற் படுத்துவதற்கு அரசு ரூ. 50,000 வழங்கியுள்ளது.

முட்டை உற்பத்திக்கான இன்றியமையாத சத்துக்களடங்கிய இரை கோழி வளர்ப்புக்கு மிக முக்கிய முன் தேவையாகும். சென்னை, அரசூர் ஆகிய இடங் களிலுள்ள பிரிவுகளில் வெந்தகூலம், தவிடு முதலியவற்றின் கலவை உடனடி உணவாக தயாரிக்கப்பட்டு, கோழி வளர்ப்பவர்களுக்கும், கோழி வளர்ப்பு அரசு பண்ணைகளின் பிரிவுகளுக்கும் வழங்கப்படுகின்றது. உலக உணவுத் திட்ட நிர்வாகிகள் மற்ற நாடுகளிலிருந்து இலவசமாக மக்காச்சோளம் வழங்குவதன்

மூலமாக, தீனிக்கலவைப் பிரிவுகளுக்கு உதவியளிக்கின்றனர். 1968-69-ஆம் ஆண்டில், 2,106 டன் கோழி இரை தயாரிக்கப்பட்டு, கோழி வளர்க்கும் 2,200 பேருக்கு ரூ. 12,07,892-க்கு விற்கப்பட்டன.

1969-70-ஆம் ஆண்டில் (1970-ம் ஆண்டு பெப்ரவரி வரை) 2,057 டன் கோழி இரை தயாரிக்கப்பட்டு, 2,015 கோழி வளர்ப்போர்களுக்கு ரூ. 13,09,912-க்கு விற்பனை செய்யப்பட்டது.

### பன்றி வளர்ப்பு.

ஒசூர் கால்நடை ஆராய்ச்சி நிலையத்திலும், காட்டுப்பாக்கத்திலுள்ள செம்மறி யாட்டுப் பண்ணையிலும், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, செட்டி நாடு ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலும், பன்றி வளர்ப்பு பிரிவுகள் உள்ளன.

கலப்பு இனப்பெருக்கம் செய்வதன் மூலமாக உள்நாட்டுப் பன்றிகளின் தரத்தை உயர்த்துவதற்கு, "யார்க்ஷயர்" பன்றிகள் பெருவாரியாக இந்தப் பண்ணைகளில் பேணப்பட்டு வருகின்றன. 1968-69-ல் இனப் பெருக்கக் காரியங்களுக்காக 1,595 வெளிநாட்டு "யார்க்ஷயர்" பன்றிகள் விற்பனை செய்யப் பட்டன.

### கால்நடை மருத்துவக் கல்வி.

கால்நடை மருத்துவக் கல்வித்துறை மேம்பாட்டுப் பணி, நடவடிக்கைகள் இவற்றுடன் நெருக்கமான தொடர்பு கொண்டது கால்நடை மருத்துவக் கல்லூரிப் பணியாகும். இத்தகைய பணிகளுக்கு அவசியமான தொழில்நுட்பப் பணியாளர்களை இக்கல்லூரி உருவாக்குகிறது. சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்வியையும், ஆராய்ச்சி வசதியையும் அளிக்கின்றது. இந்தியாவிலேயே முதன்மை வாய்ந்த நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பி. வி. எஸசி. பட்டப் படிப்பில் தகுதிபெற இக் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. பண்ணையில் தங்கிப் பணிப் பயிற்சி பெறுவது உட்பட பட்டப்படிப்பின் கால அளவு சுமார் ஆறு ஆண்டுகளாகும். இந்த வகுப்பில் ஒவ்வோர் ஆண்டும் 136 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

விலங்கின் சடலத்தின் தோலை உரிப்பதைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்களுக்கு, நவீன முறையில் தோலுரிக்கும் உத்தியிலும், சடலங்களைத் தொழில் முறையில் பயன்படுத்துவதிலும், ஐந்து மாதக் காலப் பயிற்சி வகுப்பு ஒன்று இந்தக் கல்லூரியில் நடத்தப்படுகிறது.

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பல்வேறு துறைகளில் எம்.வி.எஸ்சி., பிஎச்.டி. பட்டங்கள் பெற, பட்ட மேற்படிப்பு பயிற்சி அளிக்கப் படுகிறது. பட்ட மேற்படிப்புக்காக மொத்தம் 71 மாணவர்கள் தற்போது இப்பயிற்சி வகுப்பில் பயில்கின்றனர். இவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 பேர், எஞ்சியவர்கள் இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.



தற்போது இந்தத் துறையில் 25 துறைகள் உள்ளன. இறைச்சி உணவுக்காக, கால்நடைகளைச் சுத்தப்படுத்துவதற்கும், விற்பனைக்காகக் காட்டிவைப்பதற்கும், நவீன முறையுடனும், செயல் பண்பாடுடைய தொழிலுத்தியைக் கற்றுக் கொடுப்பதற்கு வகை செய்ய இறைச்சி ஆய்வுத்துறை மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக ரூ. 8 லட்சம் செலவில் நவீன இறைச்சி ஆய்வுக் கூடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

இக் கல்லூரி, முழு வசதிகளைக் கொண்ட புதுமுறைக் கால்நடை மருத்துவமனையை நடத்திவருகிறது. இந்த மருத்துவமனை, மருத்துவப் பயிற்சி பெறுவதற்கான ஆய்வுக்கூடமாகவும் விளங்குகிறது. எல்லாவகையான விலங்கினங்களுக்கும் மிகச் சிறந்த மருத்துவ சிகிச்சையளிப்பதில், சென்னையிலும், சென்னையைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் உள்ள மக்களிடையே இந்த மருத்துவமனை புகழ்பெற்று விளங்குகிறது. ஓராண்டில் சராசரி 50,000 விலங்கினங்களுக்கு இக் கல்லூரி மருத்துவமனை மருத்துவச் சிகிச்சை அளிக்கிறது. இந்த மருத்துவமனையைச் சேர்ந்த ஆய்வுக்கூடம் நோய்க்கூறுகளைக் கண்டறிவதற்கான உதவியும், இதே மருத்துவமனையைச் சேர்ந்த பல்வேறு துறைகளுக்கு கதிரியக்கஞ் சார்ந்த உதவிகளையும் அளிக்கிறது. இந்த ஆய்வுக்கூடம் ஆண்டு தோறும் 20,000 மாதிரிகள்மீது ஆய்வு நடத்துகிறது. காச நோய் கண்டறிய 1,771 ஆவினங்கள் சோதிக்கப்பட்டன. நோய்த்தடுப்பு மருத்துவத்துறையில் மனிதர்களுக்கு ஏற்பட்ட காச நோய் உமைநீர் 200 ஆவினங்களுக்குச் செலுத்தப்பட்டு ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. கோமாரி, அம்மை, நோய்களினின்றும் 84,995 கோழிகள் பாதுகாக்கப்பட்டன. 156 நாய்வெறி நோய் பீடிக்கப் பட்ட விலங்கினங்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. நாய்வெறி நோயினின்றும் 400 கால்நடைகள் பாதுகாக்கப்பட்டன. செயற்கை கருத்தரிப்பு நிலையத்தில் கல்லூரியின் ஜெர்சி, சிந்தி முர்ரா எருமை விந்துச் சேமிப்புமூலம் முறையில் 7,663 கால் நடைகள் இனப்பெருக்கம் செய்து வளர்க்கப்பபட்டன.

ஆராய்ச்சியின் முடிவுகள் நடைமுறையில் பயன்படுத்துவதற்காக, அவற்றை உழவர்களுக்கு எடுத்துச் சொல்வது மிகவும் அவசியமானதாகும். பொருளாதார வளர்ச்சியில் விரைவாக முன்னேற்றம் அடைந்து வரும் நமது மாநிலத்தைப் போன்ற மாநிலம் ஒன்றில், பொருளாதார வளர்ச்சி இதே வேகத்தில் செல்வதற்கு ஆராய்ச்சிக்கும், ஆராய்ச்சி நேரிடப் பயிற்சிப்பணிக்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பை பேணி வருவது முக்கியமானதாகும். அவ்வாறு செய்வதால் ஆராய்ச்சியின் பலன்களை எல்லோரும் அடைகின்றனர். எனவே, பட்டதாரிகள் புதிய அறிவியல் கருத்துக்களை உழவர்களிடம் எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு வசதியளிக்கும் வகையில் கால்நடை வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சி, நேரிடப் பயிற்சி முறைகளில் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளிக்க சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நேரிடப் பயிற்சித் துறை ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. 1970-71-ஆம் ஆண்டில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நேரிடப் பயிற்சித் துறையில் துணைத் தலைமைப் பேராசிரியர் ஒருவரையும். சமுதாய ஆய்வியல் விரிவுரையாளர் ஒருவரையும் கூடுதலாக நியமிக்கத் திட்டமிட்டுள்ளது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சி நேரிடப் பயிற்சி முறைகளை செவ்வையாகப் பயிற்றுவிப்பதோடு மட்டுமல்லாமல், நேரிடப் பயிற்சித் துறையில் பட்ட மேற்படிப்பை ஏற்படுத்த சென்னை பல்கலைக் கழகத்திடமிருந்து ஏற்பளிப்பு பெறவும், இவ்வாறு செய்யப்பட்டு வருகிறது.

[1970 மார்ச் 18

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சி வசதிகளைப் பெருக்கவும், சிறந்த முறையில் கற்பிக்கவுமான நடவடிக்கைகள் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அடிப்படை மரபியல் உயிர் ஆய்வியல், நாளமில்லா உட்சுரப்பியல் போன்ற பல புதுப் பிரிவுகளை ஏற்படுத்த வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

1970-71-ஆம் ஆண்டில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியிலுள்ள ஆராய்ச்சி மன்றத்தை மேலும் வளர்ச்சி செய்ய சிறப்புப் பணியாளர்களை அமைக்க அரசு கருதியுள்ளது. ஆராய்ச்சி மன்றம் உயர்ரக பன்றி, கோழி, கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்காக முயற்சி செய்து வருகிறது.

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியிலுள்ள கோழி வளர்ச்சி ஆய்வுக் கூடத்தில் நடந்த ஆராய்ச்சிகளின் பலனாக அதிக முட்டையிடும், நீடித்து வாழும் "மெயர்" என்ற வெள்ளை "லெகான்" கோழி புதிதாக செயற்கை முறையில் உருவாக்கப் பட்டுள்ளது.

### கால்நடை நோய்த்தடுப்பு நிலையம், இராணிப்பேட்டை.

இந் நிலையம், 1932-ல் நிறுவப்பட்டு, கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய்த்தடுப்பு மருந்தும், கோமாரி நச்சும் தயாரிக்க ஆரம்பித்து கடந்த 54 ஆண்டுகளாக இந்நிலையம் படிப்படியாக மேம்பாடு அடைந்து தனது பணிகளை விரிவுபடுத்தியுள்ளது. இந்நிறுவனத்தின் பணிகள் கணிசமான அளவில் பெருகி வருவதோடு, இப்பொழுது 21 வகையான அம்மைப் பால்கள், சீரங்கள், நோய்க்கூறு அறியும் மருந்துகள் இவற்றை இப்போது தயாரித்துவருகிறது. பற்பல கால்நடை நோய்கள் பற்றி ஆராய்ச்சி பணியை மேற்கொள்ளவும், புதுமை முறைகளில் ஏற்ற உயிரியல் பொருள்களைப் பெருவாரியாகத் தயாரிப்பதற்கும் இந்நிறுவனம் இப்போது சிறந்த வசதிகள் படைத்த நிறுவனமாக விளங்குகிறது.

இந்த நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகள் வருமாறு :—

(1) வெள்ளாட்டுக் கோமாரி நச்சு நோய்க் கிருமியின் சென்னை ரகத்தைத் தோற்றுவித்தல்.

(2) குருதிப்போக்கினை விளைவிக்கும் குருதி நச்சூட்டைக் கட்டுப்படுத்த மேம்படுத்தப்பட்ட திறம் வாய்ந்த ஊசி மருந்து (அதாவது படிக்கார வீழ் படிவ ஊசி மருந்து) ஒன்றைக் கண்டுபிடித்தல்.

(3) கோழிக் குஞ்சுக் கருக்களில் புரு அம்மை நோயைச் செலுத்தி நோய் விளைவுகளை ஆராய்தல்.

(4) ஆடுகளில் குருதி நச்சு அடைவதைத் தடுக்கும் பொருட்டுச் சிறந்த ஊசி மருந்து தயாரித்தல்.

(5) வெக்கை நோய்த் தடுப்புக்காக, உறைய வைக்கப்பட்டு உலர்த்தப் பட்ட நோய்த் தடுப்பு மருந்தை உற்பத்தி செய்தல்.



1970 மார்ச் 18]

இந்த நிறுவனத்தில் உற்பத்தியான உயிரினப் பொருள்கள், தமிழ் நாடு, ஆந்திர மாநிலங்களில் உள்ள கால்நடை வளர்ப்புத் துறைப் பணியாளர்களின் தேவையை நிறைவு செய்வதோடு, இந்திய அரசில் உள்ள, மகாராட்டிரம், உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், மைசூர், கேரளம், புதுச்சேரி ஆகிய பிற மாநிலங்களுக்கும், இலங்கைபோன்ற அயல் நாடுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 1968-69-இல் உற்பத்தியான பொருள்களின் மதிப்பு ரூ. 5,25,062 ஆகும்.

இறுதியாக, இந்த மாநிலத்தில் பயன் படுத்தத் தேவையான பொருள்கள் எல்லாம் இங்கேயே, சிக்கனமாகவும், இந் நாட்டில் உள்ள பிற நிறுவனங்களில் நிலவிவரும் விலை வீதங்களைக் காட்டிலும் குறைந்த விலையிலும் உற்பத்தி செய்யப் படுவதால், இந்த நிறுவனம் நிறுவப்பட்டது மிகப் பயனுள்ளதாயிருக்கிறது.

வெவ்வேறு வகையான நோய்த் தடுப்பாற்றலுடைய பல்வேறு வகை, பல்வேறு இனக் கால்நடைகளைப் பாதுகாப்பதற்காக இந்த நிறுவனத்தில் மூன்று வகையான வெக்கை நோய்த் தடுப்பு மருந்துகள், அதாவது ஆட்டினம், நாயினம், நாயினமும், பறவையினமும் கலந்த இனங்களிலிருந்து எடுக்கப்பட்ட கோமாரி நோய்த்தடுப்பு அம்மைப்பால் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதற்காகப் பெருவாரியான வெள்ளாடுகள், முயல்கள், எருமைக் கன்றுகள் கொல்லப்படவேண்டியிருப்பதாலும் இத்தகைய ஊசி மருந்துகள் எதிரான விளைவுகளை அடிக்கடி ஏற்படுத்துவதாலும், உண்மை வளர்ச்சி நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது கொடூரமான விளைவு ஏற்படுவதை நீக்குகிறது. மேலும் பெருவாரியான விலங்கினங்களைக் கொல்லுவதும் தேவையில்லை. இத்தகைய உண்மை வளர்ச்சி நோய்த் தடுப்பு ஊசி மருந்து மிகவும் சிறந்ததாகவும் மலிவாகவும் மிக உயரிய நிலையில் மந்தைகளை நோயினின்றும் காப்பதாகவும் விளங்கும். இந்தக் காரணத்தைக் கொண்டே நவீன உண்மை வளர்ச்சி ஆய்வுக்கூடமொன்று இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு நிறுவனத்தில் கட்டுவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. நவீன முறைகளில் நோய்த் தடுப்பு ஊசி மருந்துகளைத் தயாரிப்பதற்கும், மத்திய ஆய்வுக்கூடத்தை இந்த நிறுவனத்தில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

### புதிய கால்நடை மருந்தகங்கள் திறத்தல்.

கால்நடை மேம்பாடு தொடர்பான எந்தவொரு விரிவான திட்டத்திற்கும் கால் நடை மருத்துவ உதவி மிகவும் முக்கியம் வாய்ததாகும். இத் தலைப்பின் கீழ் 1968-69-ஆம் ஆண்டு திட்ட மதிப்பீடு ரூ. 9.51 லட்சம் ஆகும். அந்த ஆண்டில் ஆன செலவு ரூ. 9.82 லட்சம் ஆகும். 1969-70- ஆம் ஆண்டின் இப் பணித் திட்டத்திற்கு ஆகும் செலவு இலக்கு ரூ. 5.24 லட்சம் ஆகும். இந்த ஆண்டில் ஆகும் செலவினம் ரூ. 19.49 லட்சமாக இருக்கக்கூடும். திருத்தியமைத்தல் ஏற்பாட்டின் ஒரு பகுதியாக குறிக்கப்பட்ட முதல் இலக்குக்கு மேலாகப் பல புதிய மருந்தகங்கள் திறக்கப்படுவது, திட்ட மதிப்பீட்டுக்கு மேலாகச் செலவினம் கூடுதலானதற்குரிய காரணங்களில் ஒன்றாகும். திருத்தியமைத்தல் ஏற்பாட்டின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரத்திலும் குறைந்த அளவு ஒரு கால்நடை மருந்தகமாவது இருக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

1968-69-இல் 50 புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டதற்கு மாறாக 1969-70-இல் 44 புதிய கால்நடை மருந்தகங்களே ஏற்படுத்தப்பட்டன. திருத்தியமைத்தபின் பின்னர், 49 சிறு கால்நடை மருந்தகங்களும், இயங்கும் கால்நடை மருத்துவப்பிரிவு ஒன்றும் முழு கால்நடை மருந்தகங்களாக மாற்றப்பட்டன. திருத்தியமைக்கப்பட்ட ஏற்பாட்டின்படி 35 கால்நடை மருத்துவ மனைகளும், 434 கால்நடை மருந்தகங்களும் உள்ளன.

1968-69-இல் இந்தக் கால்நடை மருத்துவ நிறுவனங்களில் 1,581,508 தேர்வுகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது; 5,504,830 தடுப்பு ஊசிகள் போடப்பட்டன; 268,521 கால்நடைகளுக்குக் காயடிப்புச் செய்யப்பட்டது. 1969-70-இல் (1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் வரை) 615,129 தேர்வுகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டது; 83,167 காயடிப்பும், 893,333 தடுப்பு ஊசி போடுதலும் இந்தக் கால்நடை மருத்துவ நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டன.

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

நான்காம் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன; பால், பால் தயாரிப்புகள் இறைச்சி, முட்டை போன்ற உணவுப் பொருள்கள் பெரும் அளவில் கிடைக்கச் செய்வது; கம்பளி, தோல், உரோமங்கள், பன்றி மயிர், எலும்புப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவது; நிலமில்லாத உழவுத் தொழிலாளர்களும் சிறு குடியானவர்களும் கால்நடை வேலைகளை மேற்கொள்ளச்செய்து அவர்களது குடும்பப் பொருளாதாரத்தை மாற்றியமைத்தல் ஆகியவையாகும். கால்நடைத் துறையில் பொதுத் துறை முதலீடுகளுக்கு வகை செய்வதோடுமட்டுமன்றி, நிறுவன முகமையினம் படிகளும் முதலீடு செய்வதைக் கவனிக்க ஆவன முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேற்சொல்லியவை யாவும், கோழிவளர்ப்பு, கால்நடை பராமரிப்புத் துறை வர்த்தகத் துறையில் வளர்ந்து வருவதற்கான அறிகுறிகளேயாகும்.

1970-71-ஆம் ஆண்டுக்கான திட்டம், தயாரிக்கப்பட்டு வருகிறது. 1970-71-ஆம் ஆண்டுச் செலவுக்காக ரூ. 49.06 லட்சம் தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவக்கல்வி ஆராய்ச்சி என்பதன்கீழ் இவ்வாண்டில் நிறைவேற்றக் கருதியுள்ள முக்கியமான பணித் திட்டங்கள், கோழி வளர்ப்பு இயல், நச்சு நோய் இயல், ஆய்வுக்கூட விலங்கின மருத்து, நாளமிலா உட்சுரப்பியல் ஆகியவற்றுக்கான புதிய துறைகளை ஏற்படுத்துவதாகும். இந்தக் கல்லூரியின் பெரும்பாலான துறைகளில், பூதக் கண்ணாடிகள், வெப்பமானிகள், கணக்கிடு கருவிகள், நோய்க்குறியறியும் கருவிகள் போன்ற நவீனக் கருவிகளுடன் வசதியளிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்புத் திட்டங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த முறையில் நிறைவேற்றவும், மாடுகளுக்குத் தேவையான தீவனங்களும், பொருட்களும் வாங்கக்கூடிய வேலைகளைக் கவனிக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் ஒரு குழு அமைக்கவும் அரசு கருதியுள்ளது. கால்நடை வளர்ப்பு வட்டாரத் துணை இயக்குநர், அக் குழுவின் உறுப்பினர் ஆவார். மாவட்டத்தில் உள்ள கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர், உறுப்பினராகவும், செயலாளராகவும் அக் குழுவில் இருப்பார். திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இக்குழு ஆராய்வதுடன், ஒப்பந்தக் குறிப்புகள் மீதும் முடிவெடுக்கும். மாவட்ட ஆட்சித் தலைவர், கால்நடைப் பராமரிப்புத் துறையில் பங்கு கொள்வதால் ஒவ்வொரு மாவட்டத்திலும், சிறந்த முறையில் கால்நடைத் திட்டத்தை நிறைவேற்ற ஏதுவாக இருக்கும் என்று அரசு எண்ணியுள்ளது.



இம் மாநிலம், கால்நடை பராமரிப்புத் துறையில் நிலையான வளர்ச்சிக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டுள்ளது. திறன் மெய்ப்பிக்கப்பட்ட காளைகளைப் பெருக்க வேண்டும் என்ற சிறந்த கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம், கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதால் சமுதாயத்தின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். இந் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## இணைப்பு 6.

[258-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே!

"கோரிக்கை எண் 46—அரசு வர்த்தகத் (உணவு) திட்டங்களின்மீதான மூலதனச் செலவு"

என்பதன்கீழ், ரூ. 48,63,50,400 மானியம் வழங்க வேண்டுமென்கிற கோரிக்கை ஒன்றை முன்னுரைக்க அனுமதி கோருகிறேன். இத்தருணத்தில், உணவுத் துறையில் அரசு ஆற்றியுள்ள சாதனைப்பற்றி உங்களுக்கு நினைவூட்ட வரும் அண்மைக் காலத்தில் நமது பொதுவான உணவு நிலைமை எவ்வாறிருக்கும் என்பதையும் இம் மன்றத்தின் முன்னர் சொல்ல விழைகின்றேன்.

2. சூழ்நிலைகள் சாதகமாக அமையும்போது இயன்றளவு விரைந்து உணவுத் தானியங்கள் கட்டுப்பாட்டை நீக்குவது இந்த அரசின் குறிக்கோளாக இருந்து வந்துள்ளதை உறுப்பினர்கள் அறிவார்கள். கட்டுப்பாடுகள் அலுப்பூட்டும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஆனால் அரிய பொருள்களையும் இன்றியமையாப் பொருள்களையும் தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் வழங்குதல் தனிப்பட்ட வியாபாரிகளின் ஒவ்வாத போக்கு இவை காரணமாக குறிப்பாக ஓரளவு பற்றாக் குறையுள்ள நிலைமையில் துய்ப்போர்க்கு இடர்பாடுகள் விளையா வண்ணம் பார்த்துக் கொள்ள இக் கட்டுப்பாடுகளை நாம் சில வேளைகளில் கடைபிடிக்க வேண்டியுள்ளது. பற்றாக்குறைக்காலங்களில் ஏழை எளிய மக்களுக்கு நியாய விலையில் இன்றியமையாப் பொருள்கள் குறைந்தளவு உறுதியாக வழங்கப்படும் என்பதே கட்டுப்பாடு நீடிக்க வேண்டுவதன் நியாயமாகும். குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் தடையில்லாத வர்த்தகத்தின்மீது கட்டுபாடுகளை விதிப்பது எல்லா வகையிலும் நியாயமேயெனினும் அத்தகைய கட்டுப்பாடுகள் வர்த்தகத்தின் தன்னிச்சையை கட்டுப்படுத்துகின்றன என்பதையும், உற்பத்தியாளர்கள் வெளிச்சந்தை நிலைமைகளின் முழுப் பயனை அடைய வொட்டாமல் தடுக்கின்றன வென்பதையும் மறந்து விடலாகாது. எனவே வாய்ப்புக்கிட்டிய உடனே உற்பத்தியாளர்களும் துய்ப்போரும் நேரிடையாக வாணிபத்தில் ஈடுபடும் வண்ணம் அவர்களுக்கு சுதந்திரம் அளிப்பது நியாயமாகும்.

1968-69-இல் 50 புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டதற்கு மாறாக 1969-70-இல் 44 புதிய கால்நடை மருந்தகங்களே ஏற்படுத்தப்பட்டன. திருத்தியமைத்தபின் பின்னர், 49 சிறு கால்நடை மருந்தகங்களும், இயங்கும் கால்நடை மருத்துவப்பிரிவு ஒன்றும் முழு கால்நடை மருந்தகங்களாக மாற்றப்பட்டன. திருத்தியமைக்கப்பட்ட ஏற்பாட்டின்படி 35 கால்நடை மருத்துவ மனைகளும், 434 கால்நடை மருந்தகங்களும் உள்ளன.

1968-69-இல் இந்தக் கால்நடை மருத்துவ நிறுவனங்களில் 1,581,508 தேர்வுகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது; 5,504,630 தடுப்பு ஊசிகள் போடப்பட்டன; 208,521 கால்நடைகளுக்குக் காயடிப்புச் செய்யப்பட்டது. 1969-70-இல் (1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் வரை) 615,120 தேர்வுகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டது; 83,167 காயடிப்பும், 893,333 தடுப்பு ஊசி போடுதலும் இந்தக் கால்நடை மருத்துவ நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டன.

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

நான்காம் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன; பால், பால் தயாரிப்புகள் இறைச்சி, முட்டை போன்ற உணவுப் பொருள்கள் பெரும் அளவில் கிடைக்கச் செய்வது; கம்பளி, தோல், உரோமங்கள், பன்றி மயிர், எலும்புப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவது; நிலமில்லாத உழவுத் தொழிலாளர்களும் சிறு குடியானவர்களும் கால்நடை வேலைகளை மேற்கொள்ளச்செய்து அவர்களது குடும்பப் பொருளாதாரத்தை மாற்றியமைத்தல் ஆகியவையாகும். கால்நடைத் துறையில் பொதுத் துறை முதலீடுகளுக்கு வகை செய்வதோடுமட்டுமன்றி, நிறுவன முகமையினம் படிகளும் முதலீடு செய்வதைக் கவனிக்க ஆவன முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேற்சொல்லியவை யாவும், கோழிவளர்ப்பு, கால்நடை பாராமரிப்புத் துறை வர்த்தகத் துறையில் வளர்ந்து வருவதற்கான அறிகுறிகளேயாகும்.

1970-71-ஆம் ஆண்டுக்கான திட்டம், தயாரிக்கப்பட்டு வருகிறது. 1970-71-ஆம் ஆண்டுச் செலவுக்காக ரூ. 49.06 லட்சம் தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவக்கல்வி ஆராய்ச்சி என்பதன்கீழ் இவ்வாண்டில் நிறைவேற்றக் கருதியுள்ள முக்கியமான பணித் திட்டங்கள், கோழி வளர்ப்பு இயல், நச்சு நோய் இயல், ஆய்வுக்கூட விலங்கின மருந்து, நாளமிலா உட்சுரப்பியல் ஆகியவற்றுக்கான புதிய துறைகளை ஏற்படுத்துவதாகும். இந்தக் கல்லூரியின் பெரும்பாலான துறைகளில், நுண் கண்ணாடிகள், வெப்பமானிகள், கணக்கிடு கருவிகள், நோய்க்குறியறியும் கருவிகள் போன்ற நவீனக் கருவிகளுடன் வசதியளிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்புத் திட்டங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த முறையில் நிறைவேற்றவும், மாடுகளுக்குத் தேவையான தீவனங்களும், பொருட்களும் வாங்கக்கூடிய வேலைகளைக் கவனிக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் ஒரு குழு அமைக்கவும் அரசு கருதியுள்ளது. கால்நடை வளர்ப்பு வட்டாரத் துணை இயக்குநர், அக் குழுவின் உறுப்பினர் ஆவார். மாவட்டத்தில் உள்ள கால்நடை பாராமரிப்புத் துறை உதவி இயக்கு



நர், உறுப்பினராகவும், செயலாளராகவும் அக் குழுவில் இருப்பார். திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இக்குழு ஆராய்வதுடன், ஒப்பந்தக் குறிப்புகள் மீதும் முடிவெடுக்கும். மாவட்ட ஆட்சித் தலைவர், கால்நடைப் பராமரிப்புத் துறையில் பங்கு கொள்வதால் ஒவ்வொரு மாவட்டத்திலும், சிறந்த முறையில் கால்நடைத் திட்டத்தை நிறைவேற்ற வதுவாக இருக்கும் என்று அரசு எண்ணியுள்ளது.

இம் மாநிலம், கால்நடை பராமரிப்புத் துறையில் நிலையான வளர்ச்சிக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டுள்ளது. திறன் மெய்ப்பிக்கப்பட்ட காளைகளைப் பெருக்க வேண்டும் என்ற சிறந்த கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம், கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதால் சமுதாயத்தின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். இந் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## இணைப்பு 6.

[258-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே!

"கோரிக்கை எண் 46—அரசு வர்த்தகத் (உணவு) திட்டங்களின்மீதான மூலதனச் செலவு"

என்பதன்கீழ், ரூ. 48,63,50,400 மானியம் வழங்க வேண்டுமென்கிற கோரிக்கை ஒன்றை முன்னுரைக்க அனுமதி கோருகிறேன். இத்தருணத்தில், உணவுத் துறையில் அரசு ஆற்றியுள்ள சாதனைப்பற்றி உங்களுக்கு நினைவூட்ட வரும் அண்மைக் காலத்தில் நமது பொதுவான உணவு நிலைமை எவ்வாறிருக்கும் என்பதையும் இம் மன்றத்தின் முன்னர் சொல்ல விழைகின்றேன்.

2. சூழ்நிலைகள் சாதகமாக அமையும்போது இயன்றளவு விரைந்து உணவுத் தானியங்கள் கட்டுப்பாட்டை நீக்குவது இந்த அரசின் குறிக்கோளாக இருந்து வந்துள்ளதை உறுப்பினர்கள் அறிவார்கள். கட்டுப்பாடுகள் அலுப்பூட்டும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஆனால் அரிய பொருள்களையும் இன்றியமையாப் பொருள்களையும் தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் வழங்குதல் தனிப்பட்ட வியாபாரிகளின் ஒவ்வாத போக்கு இவை காரணமாக குறிப்பாக ஓரளவு பற்றாக் குறையுள்ள நிலைமையில் துய்ப்போக்கு இடர்பாடுகள் விளையா வண்ணம் பார்த்துக் கொள்ள இக் கட்டுப்பாடுகளை நாம் சில வேளைகளில் கடைபிடிக்க வேண்டியுள்ளது. பற்றாக்குறைக்காலங்களில் ஏழை எளிய மக்களுக்கு நியாய விலையில் இன்றியமையாப் பொருள்கள் குறைந்தளவு உறுதியாக வழங்கப்படும் என்பதே கட்டுப்பாடு நீடிக்க வேண்டுவதன் நியாயமாகும். குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் தடையில்லாத வர்த்தகத்தின்மீது கட்டுபாடுகளை விதிப்பது எல்லா வகையிலும் நியாயமேயெனினும் அத்தகைய கட்டுப்பாடுகள் வர்த்தகத்தின் தன்னிச்சையை கட்டுப்படுத்துகின்றன என்பதையும், உற்பத்தியாளர்கள் வெளிச்சந்தை நிலைமைகளின் முழுப் பயனை அடைய வொட்டாமல் தடுக்கின்றன வென்பதையும் மறந்து விடலாகாது. எனவே வாய்ப்புக்கிட்டிய உடனே உற்பத்தியாளர்களும் துய்ப்போரும் நேரிடையாக வாணிபத்தில் ஈடுபடும் வண்ணம் அவர்களுக்கு சுதந்திரம் அளிப்பது நியாயமாகும்.

3. உணவு உற்பத்தியைப் பெருக்க இந்த அரசு மேற்கொண்ட சலியாத, முனைப்பான நடவடிக்கைகளின் விளைவாகவும் இம் மாநிலத்தின் பெரும் பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட சாதகமான பருவ நிலைமைகளின் காரணமாகவும் இம் மாநிலத்தில் உணவு உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவிற்குப் பெருகியுள்ளது. வரும் பயிர்ப் பருவத்திலிருந்து நல்ல விளைச்சல் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. நிறை விளைச்சலும், நல்ல வாய்ப்புகளும் கிட்டுமென்கிற நம்பிக்கை உள்ள சூழ்நிலையிலும் கட்டுப்பாடுகள் நீடிக்குமானால், மக்களுக்குக் கட்டுப்பாடுகளினால் ஏற்படும் நன்மையை விட அவற்றின் தீமைகளே மிகைப்படும் என்று அரசு கருதி முடிந்த அளவிற்குக் கட்டுப்பாடுகளை நீக்கிவிடுவதென்று முடிவு செய்தது. 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதியில் முக்கியக் கொள்கை மாற்றங்கள் முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டன.

4. அதற்கேற்ப, கோயம்புத்தூர், சென்னை, அதன் எல்லையோரப் பகுதிகளில் சட்டப்படிக்கான பங்கீட்டு முறை முற்றிலும் நீக்கப்பட்டது. இம்மாநிலத்தின் பல பகுதிகளில் நிலவி வந்த நியாய விலைக் கடைகள்மூலம் நடந்து வந்த உணவு தானிய வழங்கல் நிறுத்தப்பட்டது. ரூபாய்க்குப் படி அரிசித் திட்டம், கோயம்புத்தூர் நகரம், சென்னை மாநகரம், இவற்றின் எல்லையோரப் பகுதிகளில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. ஆனால், இதன் நன்மைகள், மாத வருமானம் ரூ. 200-ம், அதற்குக் குறைவாகவும் பெறும் பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே கிடைக்குமாறு வரையறுக்கப்பட்டுள்ளது. குறைந்த விலையில் அரிசியை வழங்கும் நன்மைகள் சென்னை மாநகரிலும், கோயம்புத்தூரிலும் உள்ள அனாதை இல்லங்கள், அற நிலையங்கள், அரிசன மாணவர் விடுதிகள் ஆகியவற்றிற்கும் கிட்டும். நெல், அரிசி கொள்முதலை அரசு தொடர்ந்து நடத்தும். ஆனால், இக் கொள்முதல் மூலம் வர்த்தகர் மீது விதி முறை கொள்முதல் மூலம் செயல்படுத்தப்படும். இக்கொள்முதல் திட்டத்தின் விவரங்களைப் பின்னால் நான் குறிப்பிடுகிறேன்.

5. இப்புதிய கொள்கை 8—1—1970-ல் அறிவிக்கப்பட்டாலும் இப்புதிய நிலைமைக்கு ஏற்றவாறு தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளப் போதுமான காலம், மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் கொடுக்கப்பட்டது. மாற்றம் எதுமின்றி 1970 ஜனவரி இறுதிவரையில் பொது வழங்கல் முறை, மாநிலம் முழுவதிலும் செயலில் இருந்தது. பிப்ரவரி இறுதி வரையில் நீலகிரி மாவட்டத்தில் இது செயலில் இருந்தது. இந்திய அரசின் இசைவைப்பெற்ற பின்னர் தமிழ் நாடு (அரிசி) பங்கீட்டு முறை ஆணை 12—1—1970 முதல் ரத்து செய்யப்பட்டது; பின்னர், புதிய கொள்கையையொட்டி முக்கியச் சட்டப்படிக்கான ஆணைகளில் பிற அவசியமான மாற்றங்கள் செய்யப்பட்டன.

கட்டுப்பாடு நீக்கத்திற்குமுன்.

6. உற்பத்தியாளர்கள்மீது தரம் வகுத்த விதிப்புக் கொள்முதல் மூலம் கொள்முதல் செய்வதும், சென்னை மாநகரம், கோயம்புத்தூர் நகர் ஆகிய சட்டப்படி பங்கீட்டு முறை செயலில் இருந்த பகுதிகளிலுள்ள 42 லட்சம் பேருக்கும் நகராட்சிகளிலும், நகர்ப்பகுதிகளிலும், தொழிற்சாலைப் பகுதிகளிலும் சட்ட முறைப் படியில்லாத பங்கீட்டின் அடிப்படையில் சுமார் 133 லட்சம் பேருக்கும் அரிசி வழங்குவதும் முன்பு பின்பற்றப்பட்டு வந்த கோட்பாடாகும். ஒரு ஏக்கருக்குக் குறைந்த நிலம் வைத்திருப்பவர்கள் இந்த விதி முறைக் கொள்முதல் முறையிலிருந்து விலக்களிக்கப்பட்டனர். பத்து ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களிலிருந்து கிடைக்கும் விற்பனைக்குரிய உபரி முழுவதும் கொள்முதல் செய்யப்பட்டது. அந்தந்த மாவட்டத்தின் உபரி அல்லது பற்றுக்குறை நிலைமையைப் பொறுத்தும், நில உடைமையாளரின் குடும்பத் தேவைக்கு வேண்டும் உணவு தானிய அளவு, விதை, கூலி முதலியவற்றுக்குத் தேவைப்படும் உணவு தானிய அளவு இவற்றைக் கருத்தில் கொண்டு, இடைப்பட்ட நிலங்களுக்கு படிப்படியான விதி முறைக் கொள்முதல் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் வரையறுக்கப்பட்டது.





7. 1968-ல் 1,20,904 டன் அரிசி இருந்ததற்கு மாறாக 1969-ம் ஆண்டின் தொடக்கத்தில் 1,18,316 டன் அரிசி இருப்பு இருந்தது. 3.01 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய வேண்டுமென்பது குறிக்கோள் அளவாயிருக்க, இந்த ஆண்டில் 7.06 லட்சம் டன் அரிசியே கொள்முதல் செய்யப்பட்டது. 1969-ம் ஆண்டில் மாநிலத்தின் பல பகுதிகளில் நிலவிய கடும் வறட்சி நிலைமைகளின் விளைவாக, உணவுத் தானிய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது; இதனால் இவ்வாண்டு இடர்பாடுகள் மிகுந்த ஆண்டாக இருந்தது. அரசு, பல துயர்த் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டது; இம் மாநிலம் முழுவதிலுமுள்ள ஏழை, எளிய மக்களுக்கு நியாய விலையில் உணவுத் தானியம் கிடைக்கச் செய்ய பொதுப் பங்கீட்டு முறையை நீட்டித்ததும் ஒரு நடவடிக்கையாகும்.

8. இந்த இடர்ப்பாடான நிலைமையைச் சரிப்படுத்த இந்திய அரசு நமக்கு தாராளமாக உதவியளித்தது; 1969-ல் தமிழ் நாடு அரசுக்கு 80,000 டன் அரிசியை இந்திய அரசு ஒதுக்கியது. 1969-ல் பொதுப் பங்கீட்டு முறைமூலம் 6.3 லட்சம் டன் அரிசி வழங்கப்பட்டது; இதில் 2,58,277 டன் அரிசி, சட்டப்படி பங்கீட்டுக் கட்டுப்பாடுள்ள பகுதிகளில் வழங்கப்பட்டது. இந்த ஆண்டில் இந்திய அரசிடமிருந்து 1,48,442 டன் கோதுமையும், 4,008 டன் சோளமும், 34,500 டன் மைலோவும் பெற்று வழங்கப்பட்டன. 2,24,524 டன் கோதுமை, கோதுமைப் பொருள்கள் தயாரிப்பிற்காக ஆலைகளுக்கு ஒதுக்கப்பட்டது. இக் கோதுமைப் பொருள்களில் பெரும் பகுதி இம்மாநிலத்திலேயே விற்பனை செய்யப்பட்டன.

கட்டுப்பாடு நீக்கமும் அதற்குப் பின்னரும்.

9. சென்னை மாநகர், கோயம்புத்தூர், சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகள் ஆகியவற்றில் சட்டப்படிக்கான பங்கீட்டுக் கட்டுப்பாட்டை நீக்கிய பின் தஞ்சாவூர் மாவட்டம் தவிர இம் மாநிலத்தின் மற்றெல்லாப் பகுதியிலும் அரிசி, நெல் வர்த்தகம் தடையின்றி நடைபெற அனுமதிக்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் அம் மாவட்டத்திற்கு வெளியிலும் இம் மாநிலத்தின் எல்லைப் புறங்களின் 15 மைல் சுற்றுப் பகுதிகளிலும் நெல் அரிசி எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் தொடர்ந்து இருக்கும்.

10. இம் மாநிலத்திற்குள், தஞ்சாவூர் மாவட்டம் தவிர, பிற இடங்களில் நெல், அரிசியை எடுத்துச் செல்வதற்கான தடைகள் அனைத்தையும் 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் தேதியில் அரசு நீக்கிவிட்டது. தஞ்சாவூர் மாவட்ட எல்லைகளில் சோதனைச் சாவடிகள் தொடர்ந்து—நீடிக்கப்பட்டுள்ளன. இம் மாநிலம் முழுவதிலும் உணவு தானியங்கள் தடையின்றி எடுத்துச்செல்லப்படுவது இப்போதும் தொடர்ந்து நடக்கிறது. ஆனால் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வெளியே உணவு தானியங்கள் கொண்டு செல்லப்படுவது மட்டும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில், அம் மாவட்டத்திற்குள் நெல்.

அரிசி கொண்டு செல்லப்படுவதற்கு தடை எதுவுமில்லை. ஆனால், அம் மாவட்டத்திற்கு வெளியே அரிசி நெல்லை அனுமதிச் சீட்டின்றி எடுத்துச் செல்லுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த மாவட்டத்தில் நிலம் வைத்திருப்பதற்கான சான்றின் மீது குடும்பத்தின் பயனுக்காக அம் மாவட்டத்திற்கு வெளியே குறிப்பிட்ட அளவு அரிசி, நெல் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறது. அந்த மாவட்டத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்படும் உணவு தானிய இருப்புகளின் விதிமுறைக் கொள்முதல் முறைமூலம் கொள்முதல் செய்யும் புதிய முறையை செயல்படுத்த வசதியாயிருக்கும் பொருட்டு இத்தகைய கட்டுப்பாடுகள் நீடிக்கப்பட்டுள்ளன. மாநில எல்லைகளிலுள்ள சோதனைச் சாவடிகள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. இந்த எல்லைகளுக்கு அப்பால் உணவு தானியங்கள் கள்ளக் கடத்தல் செய்யப்படாமலிருக்க விழிப்புடன் கண்காணிக்கப்படும். இதற்கேற்ற வகையில், மாநில எல்லைப்புறங்களில் 15 மைல் சுற்றுப் பகுதியில் கட்டுப்பாடுகள் செயலில் உள்ளன. வெளியிலிருந்து அப் பகுதிக்கு நெல் அரிசி எடுத்துச் செல்லப்படுவதும் அப்பகுதிக்குள்ளேயே உணவு தானியப் போக்குவரத்து நடைபெறுவதும் அனுமதிச் சீட்டு வழங்குவதன்மூலம் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

## கொள்முதல்.

11. ரூ. 300-ம் அதற்குக் குறைந்தும் மாத வருமானம் பெறுவோருக்கு ரூபாய்க்குப் படி அரிசி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிற சென்னை மாநகரம், கோயம்புத்தூர், சென்னை மாநகரின் விளிம்புப் பகுதிகள் ஆகியவற்றின் தேவையைச் சரிகட்ட நெல், அரிசியைக் கொள்முதல் செய்வதும் எதிர்காலத்தில் ஏற்படும் எதிர்பாராத குறைபாடுகளைச் சரிகட்ட முடை இருப்பு கட்டி வைப்பதும் அரசிற்கு அவசியமாகியுள்ளது. குறைந்த விலையில் உணவு தானியங்களை வழங்கும் திட்டத்தின்கீழ் ஏற்படும் தேவையைச் சரிகட்ட வேண்டி 2 லட்சம் டன் அரிசியும், முடை இருப்பாக 2 லட்சம் டன் அரிசியும் இருப்புக் கட்டி வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. முன்பு குறிப்பிட்டதைப்போல், வர்த்தகர்கள்மீது விதிப்புக் கொள்முதல் விதிப்பதன்மூலமே இந்த இருப்பைச் சேமிக்க வேண்டியுள்ளது.

12. தஞ்சாவூர் மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்களிலுள்ள வர்த்தகர்கள், அவர்கள் வாங்கும் அளவில் 15 சத விதம், அரசு வரையறுக்கும் விதத்தில் அரசுக்கு விற்பனை செய்ய வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் வேறுவகை முறை பின்பற்றப்படுகிறது. வர்த்தகர்கள் வாங்கி, அம் மாவட்டத்திற்கு வெளியே கொண்டு செல்லப்படவிருக்கும் நெல் அல்லது அரிசி அளவில் 50 சத விதம் அரசு முடிவு செய்துள்ள விலை விகிதங்களில் அரசுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்திற்கு வெளியே பெருமளவு விற்பனை செய்யப்படக் கூடிய உபரி நெல்லும், அரிசியும் அம் மாவட்டத்தில் கிடைப்பதென்பதனாலேயே தஞ்சாவூர் மாவட்டத்திற்கும் மற்ற மாவட்டங்களுக்கும் வெவ்வேறான கொள்முதல் முறைகள் பின்பற்றப்படுகின்றன. எனவே, அம் மாவட்டத்திற்குள் உள்ளூர்த் தேவைகளுக்கான வர்த்தகத்திற்கு இந்த விதி முறைக் கொள்முதல் முறையிலிருந்து விலக்களிப்பதும், அம் மாவட்டத்திற்கு வெளியே கொண்டு செல்லப்படும் நெல், அரிசியின்மீது உயரிய அளவில் விதி முறைக் கொள்முதல் செய்வதும் ஏற்புடைத்ததென்று கருதப்பட்டது ; ஆனால், மற்ற மாவட்டங்களில், அந்தந்த மாவட்டத்திற்குள் வர்த்தகம் செய்வதற்காக வாங்கப்படும் அரிசி



நெல்லுக்கும் 15 சத விதம் விதி முறைக் கொள்முதல் செய்வது பொருந்தும். எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தில் 50 சத விதம் விதி முறைக் கொள்முதல் செய்வது உற்பத்தியாளர்களின் குடும்பத் தேவையுடன் அந்த மாவட்டத்தின் தேவை போக விற்பனைக்குக் கிடைக்கும் உபரியைக் கணக்கில் கொண்டு பார்த்தால், அது பெரும் சுமையாக இருப்பதற்கில்லை. திருத்தியமைத்தவாறுள்ள 1963-ம் ஆண்டு தமிழ் நாடு நெல், அரிசி வணிகர்கள் உரிமம் வழங்குதல், முறைப்படுத்தல், இருப்புகளை விற்பனை செய்தல் ஆணையின் விதித் துறைகளின்படி வர்த்தகர்கள் விதி முறைக் கொள்முதல் அளவினை அரசு நியமிக்கும் செயலிகளிடம் ஒப்படைக்கவேண்டும். தங்கள் விளை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்காதென்னும் அச்சத்தைப் போக்க, வரையறுக்கப்பட்ட விதிப்புக் கொள்முதல் சத விதம் எதுவாயிருப்பினும் கொள்முதலுக்காக அரசு அறிக்கையிட்ட விதங்களில் உழவர்கள் வழங்கும் எல்லா தானியங்களையும் வாங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. உழவர்கள் வழங்கும் அத்தகைய இருப்பைப் பெற்றுக் கொள்ள இந்திய உணவுக்கார்ப்பரேஷன் ஏற்பாடுகள் செய்துள்ளது. ஆனால், விலை உதவித் திட்டத்தைச் செயல்படுத்தும் அவசியம் இதுவரையில் ஏற்படவில்லை. இந்த விலைக்கு அளிக்கப்படும் எல்லா உணவு தானியங்களையும் வாங்க அரசு ஆயத்தமாக உள்ளதென்பதை இங்கு நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

### நெல் அல்லது அரிசி பதுக்கலைத் தடுக்க நடவடிக்கை

13. தற்போதுள்ள சட்டங்களின்படி, 40 குவிண்டால் அளவு நெல்லுக்கு அல்லது 25 குவிண்டால் அளவு அரிசிக்கு மேற்பட்டு இருப்பு வைத்திருக்கும் ஒருவர், அவரது இருப்பினை, உணவுப் பொருள் வழங்கல் துறையினருக்கு அறிவிக்க வேண்டும். அவர்கள் வைத்திருக்கும் இருப்பு பற்றிய அறிக்கைகளைப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வர்த்தகர்கள் அனுப்ப வேண்டும். இந்த அறிவிப்புகளை அரசு நன்கு கவனித்து, அறிவிக்கப்படாத இருப்புகள் சம்பந்தமாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும். உணவுத் தானியப் போக்குவரத்து, இருப்பு சேர்த்தல் உட்பட உணவுத் தானியக் கட்டுபாடுகள் குறித்த எல்லா விதித்துறைகளையும் செயற்படுத்தும் காரியத்திற்காக காவல் துறைத் துணைத் தலைமை அதிகாரியின்கீழ் சிறப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### விலைவாசிகள்.

14. 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ம் தேதி முதற்கொண்டு கீழ்க்கண்டவாறு கொள்முதல் விலைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன :—

| | குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய். |
|---|---|
| சிறந்த ரகம் | 50 |
| நடுத்தர ரகம் | 47 |
| பரு ரகம் | 45 |

மிகச் சிறந்த ரகமாகிய கிச்சடி போன்றவற்றுக்கு ரூ. 1 கூடுதலாகக் கொடுக்கப்படும். உழவர்களுக்குப் போதுமான ஊக்கம் அளிப்பது அவசியமென்பதை உணர்ந்து கொள் முதல் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. தற்போது

வரையறுக்கப்பட்டுள்ள விலைகள், உற்பத்தியாளர்களுக்கும்—பயன் துய்ப்போருக்கும் நியாயமானதென்று அரசு கருதுகிறது. உயர் விளைச்சல் தரும் ரகங்களையும் முனைப்பான வளர்ச்சிப் பணிகளையும் செயல்படுத்திய பின்னர் சிறந்த உழவர்களுக்குக் கிடைக்கும் விளைச்சலும் அதன் வாயிலாகக் கிட்டும் ஆதாயமும் பெருமளவு அதிகரித்துள்ளது.

## பணியாளர்.

15. 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு செய்யப்பட்ட மாறுதல்களையடுத்து, அரிசி வழங்கப்படும் அளவு குறைந்து விட்டாலும், உணவு தானியங்களை இருப்பு கட்டும் தேவை நீடிக்கிறது. இதற்கு முன் இருப்பிலிருந்து மூட்டைகள் இடைவிடாமல் வெளியில் அனுப்பப்பட்டு வந்ததால், முன்பு இருந்ததைவிட இப்போது எந்தச் சமயத்திலும் இருப்பு அதிகமாகவே இருக்கவேண்டும். விற்பனைக்காக இருப்பை எடுப்பதற்கான அவசியம் எழும் வரையிலும் முடை இருப்புகளைச் சேமிப்பதற்கு உள்ள இருப்பை வைத்திருப்பது அவசியமாகும். மேலும், குறைந்த விலையில் அரிசி வழங்குவது சம்பந்தமாக, முறையாக இருப்பு கட்டும் பணியும் இருப்பை வெளியில் எடுக்கும் பணியும் நீடிக்கும். எனவே, தானியங்களை இருப்புக் கட்டுதல், வழங்குதல் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களைப் பெருமளவு குறைப்பது பற்றி உடனடியாக ஆலோசிக்க இயலாது. சென்னை மாநகரிலும், கோயம்புத்தூர் நகரத்திலும் பெரும்பாலான மக்கள் பயனடையும் நிலையில் பங்கீட்டு முறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. திருத்தியமைத்த முறையின்கீழ்க் கொள்முதல் செய்வதில் அவர்கள் கையாளும் எல்லா இருப்புகளுக்கும் கணக்கு உள்ளதா என்பதையும், அரசு 15 சதவீதம் அல்லது 50 சதவீதம் விதிமுறைக் கொள்முதலை சோதனையிடுவது அவசியமாகிறது. அம் மாவட்டத்திற்கு வெளியே கொண்டு செல்லும் எல்லா இருப்பின்மீதும் 50 சதவீதம் விதிமுறைக் கொள்முதல் அரசுக்கு அளிக்கப்படுகிறதா என்பதைக் காண, தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்படவேண்டும். இதுபோன்றே, மாநிலத்திற்கு வெளியே தானியங்கள் கள்ளக்கடத்தல் செய்யப்படாமலிருக்க, இம் மாநிலத்தின் எல்லைகளில் எப்போதும் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. உரிய அலுவலங்களில் உள்ள பணியளவினையொட்டி உடனடியாக ஆட்குறைப்பு செய்வது இயலாது; ஏனெனில், எஞ்சிய பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளன. பொதுவாக, ஆண்டு முடிவடைந்த பின் அந்த ஆண்டில் 9 மாதங்களுக்கான கணக்குகளே இறுதி செய்யப்பட முடிகிறது. இத் தேவைகள் அனைத்தையும் கருதி, சோதனைச் சாவடிகளிலும் உற்பத்தியாளர்கள்மீது விதிமுறைக் கொள்முதல் முறையைச் செயல்படுத்துவதிலும் அமர்த்தப்பட்ட பணியாளர்கள் தவிர, பிற பணியாளர்களைப் பெருமளவு குறைப்பது பற்றி ஆலோசிக்கப்படவில்லை. சோதனைச் சாவடிகளில் உள்ள பணியாளரும் முன்பிருந்த விதி முறைக் கொள்முதல் முறையின்கீழ், உற்பத்தியாளர்களிடம் கொள்முதல் செய்ய அமர்த்தப்பட்ட பணியாளரும், அறுவடைக் காலங்களில் சிறிது காலத்திற்கே வேலைக்கமர்த்தப்படுவதால், அவர்களின் பணி தற்காலிகமாகவே அமைய வேண்டியிருந்தது. வேலைக்குறைப்பு செய்யப்படவிருப்போரின் இடர்ப்பாட்டைக் குறைக்க, வேலை தேடித்தரும் நிறுவனங்களைக் கேட்காமல், தகுதியும், காலி இடங்களும் இருக்குமானால் பிற துறைகளில் இவர்களை எடுத்துக் கொள்ள ஆணைகள் பிறப்பித்துள்ளது.



## உதவித் தொகை.

16. ரூபாய்க்குப் படி அரிசி வழங்கும் திட்டத்தின்கீழ்க் குறைந்த விலையில் அரிசி வழங்கும் திட்டம் தவிர, அரசு மேற்கொண்ட அரிசிப் பங்கீட்டுத் திட்டத்தினால் பெருமளவு செலவை ஏற்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டது; 1969 ஆகஸ்ட் திங்களில் இந்த விலைகளில் ஓரளவு மாற்றம் செய்யப்பட்ட போதிலும், உற்பத்தியாளர் விலைகளில் அவ்வப்போது செய்யப்படும் அதிகரிப்பு, பயன் துய்ப்போருக்கு முழுதும் செல்லாமையால், இம் மாநிலத்தில் துய்ப்போரிடமிருந்து வசூலிக்கப்படும் பொது விலை அடக்க விலையை விட ஓரளவு குறைவாக உள்ளதே அரசுக்கு ஏற்படும் பெரும் செலவிற்கு முக்கிய காரணமாகும். 1969-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ம் தேதி முதல் கீழ்க்கண்டவாறு விற்பனை விலைகள் திருத்தியமைக்கப்பட்டன :—

| | | | |
|---|---|---|---|
| புழுங்கல் அரிசி .. . | முதல் ரகம் | 92 | காசு |
| | இரண்டாம் ரகம் | 82 | காசு |
| பச்சரிசி .. .. .. .. | முதல் ரகம் | 95 | காசு |
| | இரண்டாம் ரகம் | 85 | காசு |

17. 1969-70-ம் ஆண்டில் அரிசி வழங்கப்பட்டதனால் ஏற்படும் உதவித் தொகை ரூ. 7.50 கோடியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது; இதில், ரூபாய்க்குப் படி அரிசி வழங்கும் திட்டத்தினால் ஏற்படும் இழப்பு ரூ. 6 கோடி அளவில் நிற்கும். படி அரிசித் திட்டத்தின்கீழ் ஏற்படும் இழப்பு, அடக்க விலைக்கும் இத் திட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்படும் விலைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை யொட்டிக் கணக்கிடப்படுகிறது. 1970-71ல் இந்த உதவித் தொகைக்கென வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

18. அரசு விலைகள்படி கொள்முதல் செய்த நெல்லிலிருந்து பெறப்படும் அரிசிக்கான விலையையொட்டி, இந்த உதவித் திட்டத்தின் கீழ் 1970-71ல் வழங்கப்படவிருக்கும் ஒரு டன் அரிசியின் சராசரி உதவித் தொகை ரூ. 300 என மதிப்பிடப்படுகிறது. முந்தைய ஆண்டுகளில் இருந்ததைப்போல் இத் திட்டத்தின்கீழ், சுமார் 40 சதவீத நேர்த்தியான ரகமும், 60 சதவீத நடுத்தர ரகமும் வழங்கப்படுமென்ற ஊகத்தின் அடிப்படையில், இவ்வாறு கணக்கிடப்பட்டுள்ளது. நேர்த்தியான ரக அரிசியை வழங்குவதனால் டன் ஒன்றுக்குச் சராசரியாக ரூ. 50 கூடுதல் உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும்.

## சர்க்கரை

19. "லெவி" சர்க்கரை, முந்தைய ஆண்டை விட 1969-ல் அதிக அளவில் ஒதுக்கப்பட்டது. 1968-ல் 76,104 டன் ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, 1969-ல் 104,869 டன் ஒதுக்கப்பட்டது. கோதுமைக்கு உதவித் தொகையளிப்பதனால் ஏற்பட்ட இழப்பைச் சரிப்படுத்த 1969-ம் ஆண்டு மே மாதம் 17-ம் தேதி முதல் சர்க்கரையின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.90 ஆக மாற்றியமைக்கப்பட்டது. 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ம் தேதி முதல் இந்த விலை கி. கிராமுக்கு ரூ.1.76 ஆக குறைக்கப்பட்டது. சர்க்கரை தாராளமாகக் கிடைப்பதால் வெளிச் சந்தையில் கிடைக்கும் சர்க்கரை விலை பெரிதும் சரிந்துவிட்டது.

தேங்கியுள்ள சர்க்கரை இருப்பை எவ்வாறு விற்பனை செய்வதென்பதுதான் இப்போதுள்ள சிக்கல். சர்க்கரை ஆலைகள் உட்படக் கூடுதல் மொத்த வணிகர்களை நியமித்து, தேங்கியுள்ள "லெவி" சர்க்கரை இருப்பை விற்பனை செய்ய அரசு ஏற்பாடுகள் செய்துள்ளது.

### பருப்பு ரக தானியங்கள்.

20. 1969-ல் இம் மாநிலத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடான உணவு நிலைமையைச் சரிப்படுத்த, 2,000 டன் மத்தியப் பிரதேசச் சோளம் இந்திய உணவுக் கார்ப்பொரேஷனிடமிருந்து வாங்கப்பட்டு, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், தர்மபுரி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது. இச் சோளத்தின் சில்லறை விலை, ஒரு கிலோ 65 காசு ஆக நிச்சயிக்கப்பட்டது. மேலும், மத்திய பிரதேசத்திலிருந்து 2,000 டன் சோளம், தேசிய வேளாண்மை விற்பனைக் கூட்டுறவு நிறுவனத்தின்மூலம் வாங்கப்பட்டு செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது. இந்தச் சோளத்தின் சில்லறை விலை கிலோ ஒன்று 95 காசு விதம் நிச்சயிக்கப்பட்டது. இந்திய அரசு ஒதுக்கிய 34,500 டன் "மைலோ", கிலோ ஒன்று 65 காசு விதம் வழங்கப்பட்டது.

### கோதுமை.

21. இம் மாநிலத்தில் பயன் துய்ப்போருக்கும் ரொட்டித் தயாரிப்பாளர்களுக்கும், உருளை மாவு ஆலைகளுக்கும் வழங்கப்படுவதற்காக, இந்திய அரசு இம்மாநிலத்திற்குக் கோதுமை ஒதுக்கியுள்ளது. 1969-ல் 3.37 லட்சம் டன் ஒதுக்கப்பட்டது.

22. 1969-ம் ஆண்டு மே 4-ம் தேதி முதல் ஒரு குவிண்டால் கோதுமையின் இந்திய அரசு விற்பனை விலை ரூ. 78 ஆகும்; இந்த விலை, சிவப்பு, வெள்ளைக் கோதுமைக்குப் பொதுவானதாகும். கோதுமை அதிக அளவில் பயன்படுத்தப்படுவதற்காகவும், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள் கோதுமையைப் பெரிதும் பயன்படுத்துவதற்கும் கோதுமையைப் பயன்படுத்துவோருக்கு கோதுமை வழங்கும் உதவித் திட்டம் 1969-ம் ஆண்டு மே 11-ம் தேதி முதல் நிறைவேற்றப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் வீட்டில் கோதுமையைப் பயன்படுத்துவோருக்கும், மாணவர் இல்லங்கள், மருத்துவமனைகள் போன்ற நிலையங்களுக்கும், கிலோ ஒன்று 75 காசுக்கு கோதுமை விற்பனை செய்யப்பட்டது; இதன் அடக்க விலை கிலோ ஒன்று 31 காசு ஆகும். இம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட கோதுமையில் ஒரு பகுதி, இம் மாநிலத்திலுள்ள உருளை மாவு ஆலைகள் மூலம் கோதுமை நொய்யாக (wheat brokens) மாற்றப்பட்டு கிலோ ஒன்று 75 காசு விதம் பயன் துய்ப்போருக்கு வழங்கப்பட மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன. கோதுமைக்கு அளிக்கப்பட்டு வந்த இந்த உதவித் தொகை, அறுவடையைத் தொடர்ந்து ஏற்பட்ட மேம்பாடுற்ற உணவு நிலையின் காரணமாக 1970 பிப்ரவரி 1-ம் தேதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

23. இம் மாநிலத்திலுள்ள உருளை மாவு ஆலைகள், மாநில அரசால் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட இருப்புகளை, அவற்றைக் கோதுமைப் பொருள்களாகச் செய்வதற்கு இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் மூலம் எடுத்துக் கொள்கின்றன,



வெளிக் கடைகளில் கோதுமைப் பொருள்களைத் தடையின்றி விற்பனை செய்ய இந்த ஆலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1969-ல் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட கோதுமையின் மொத்த அளவு 224,514 டன் ஆகும்.

### அரிசி அரைவை.

24. 1969-ம் ஆண்டில் இம் மாநிலத்தில் புதிய அரிசி ஆலைகளை நிறுவுவதற்கு 725 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. திருவாரூரில் உள்ள ஆலையுடன் கூட்டுறவுத் துறையில் ஆறு நவீன அரிசி ஆலைகள் ஏற்கெனவே நிறுவப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளன. ஆறு ஆலைகளிலும் பணி நடந்து வருகிறது. தஞ்சாவூர், செம்பனார்கோயில், மன்னார்குடி ஆகிய இடங்களில் நவீன அரிசி ஆலைகளை, இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் நிறுவியுள்ளது; சிதம்பரத்தில் ஓர் அரிசி ஆலை நிறுவப்பட்டு வருகிறது. இக் கார்ப்பொரேஷன் தஞ்சாவூர் மாவட்டத்தில் 30 நெல் உலர்த்திக் கருவிகளை நிறுவியுள்ளனர். இவை அரைவு திறனை அதிகப்படுத்துவதுடன் கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளதனால் நெல்லும் அரிசியும் மிகத் திறம்படக் கையாளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, குறுகிய காலத்தில் அதிக அளவு நெல் கையாளப்படவேண்டி வரும் குறுவைப் பருவத்தில் இது நன்கு பயன்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பொது.

25. சட்டமுறையான பங்கீட்டுத் திட்டத்தின்கீழ் அல்லது சாதாரண முறையிலாப் பங்கீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு வழங்கி வரும் அரிசியின் விலை விதங்களை விடத் தற்போது வெளிச் சந்தையில் விற்கப்படும் அரிசி விலை விதங்கள் அதிகமென்பதை அரசு உணர்ந்துள்ளது. பற்றாக் குறை நிலைமைகளிலும், அரசு ஒழுங்கு முறை ஏற்பாடுகளிலும் பழகிப்போன உற்பத்தியாளர்கள் இவற்றின் விலைகள் மேலும் உயருமென்று அதிக அளவில் எதிர்பார்ப்பதே இதற்குக் காரணமென்று உணரப்படுகிறது. உற்பத்தியாளர்களுக்கு உரிய ஆதாயம் கிடைக்க வேண்டுமென்பது அரசின் நோக்கமென்பதில் ஐயமில்லை; ஆனால், அதே நேரத்தில் இருப்புகளைப் பதுக்கி வைப்பதன்மூலம் பெரும் உற்பத்தியாளர்களோ அல்லது வர்த்தகர்களோ தவறான முறைகளைக் கையாண்டு விலைவாசிகளைச் செயற்கையாகப் பெருமளவிற்கு உயர்த்திவிடக் கூடாது. பற்றாக்குறையும், உயர் விலைகளும் கடந்த காலத்தைச் சார்ந்த நிகழ்ச்சிகள் என்பதை உற்பத்தியாளர்கள் உணர்வதால் விலைகள் குறையுமென அரசு எதிர்பார்க்கிறது. இம் மாநிலத்திலுள்ள பெருமளவு பரப்புகளில் (IR-8) போன்ற மிகு விளைச்சல் தரும் நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. அடுத்த சில மாதங்களில் இவை வெளிச்சந்தையில் விற்பனைக்கு வரும். இது விலையை நிலைப்படுத்துமெனவும், ஏழை, நடுத்தர வகுப்பினருக்கு இடர்பாடின்றி அரிசி கிடைக்க வகை செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. போதுமான அளவுக்கு அரிசி கிடைக்குமென்னும் நிலையை எதிர்பார்த்துதான், கட்டுபாடில்லா வாணிபத்தை அனுமதிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டது. அதே நோக்கில் பதுக்கல்காரர்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் செயற்கைப் பற்றாக்குறை நிலை உருவாக்கப்படாதவாறு பார்த்துக் கொள்ள, முனை இருப்பு (Buffer Stock) கட்டி வைத்தல் மூலம் அவசியமான முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டுப்பாடு நீக்கம் பற்றி

முதலமைச்சர் குறிப்பிட்டது போன்று, "உழவர், மேலும் உற்பத்தி செய்பவும், வர்த்தகர், தடையிலா நேர்மையான வாணிபம் செய்யவும், பயன் துய்ப்போர் தங்கள் விருப்பப்படியும் முழுத்தேவையை நிறைவு செய்து கொள்ளும் வகையில் வாங்கிக்கொள்ளவும் அளிக்கப் பட்ட பொன்னான வாய்ப்பு இது. இந்த மூன்று வகைப்பட்ட பிரிவினரும் பொறுப்புணர்ச்சியுடனும் நல்லெண்ணத்துடனும் செயல்படுவர் என்ற நம்பிக்கை யில்தான் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது".

26. தேவையின் பெரும் பகுதியைச் சரிக்கட்டுவதன்மூலம் விலையை நிலைப் படுத்தியும், அதே நேரத்தில் ஏழை, எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் முறையாக அரிசி வழங்கியும் வருகிற இவ்விரண்டு குறிக்கோள்கள் குறைந்த விலையில் அரிசி வழங்கும் திட்டத்தில் அடங்கியுள்ளன. மக்களுக்குத் தடை யில்லா வாணிபத்தினால் ஏற்படும் நலன்களும் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் மன நிறைவும் கருத்தில் கொள்ளப்படவேண்டும். பெருமளவில் அரிசி தாராள மாகக் கிடைத்து தடையற்ற வாணிபம் இருக்க வேண்டுமென்னும் முடிவான குறிக்கோள் கொண்ட ஒரு கட்டுக்கோப்பிற்குள், மக்களின் நலனிற்காக விதிக் கப்படும் கட்டுப்பாடு எதுவும் மக்களில் பெரும்பகுதியினருக்குப் போனவு நன்மைகளை அளிக்கும் பல்வேறு கூறுகளைக் கருத்தில் கொண்டு அமைந்த அடிப்படையிலேயே அமைவது அவசியம். உழவர், வர்த்தகர், துய்ப்போர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்த அரசின் கொள்கை வெற்றியுடன் நிறை வேற்றப்படுமெனவும், வளங்கொழிக்கும் ஒரு நிலைமை உருவாகுமெனவும் இந்த மாநிலம் கட்டுப்பாடுகள், பற்றாக்குறை, பஞ்சம், உயர்விலைகள் என்ற நினைவுகளி லிருந்து விடுபட்ட ஒரு மேனிலையை அடையுமெனவும் இந்த அரசு உறுதியாக நம்புகிறது.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

### வெள்ளிக்கிழமை, 1970 மார்ச் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. பி. வீரப்ப கவுண்டர் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1957-ல் இருந்து 1962-வது ஆண்டுவரை திண்டிவனம் பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. வீரப்ப கவுண்டர் அவர்கள் 28—1—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தி னருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

### 2. வினாக்கள்—விடைகள்.

* வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 449, 450, 451 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும். கேள்வி 452 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

### *Ghero by workers of Fisheries Department*

*452 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether Thiru Vijayaraghavan, Tamil Nadu Director of Fishries was gherod on 19th August 1969 for over two hours by about 150 workers of the Indo-Norwegian boat building project at Mandapam, Ramanathapuram district; and

(b) if so, the reasons therefor and the action taken by the Government to prevent such gheroes in future?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

[1970 மார்ச் 20

(இ) தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு மீனளத் துறை இணங்காத தால் தொழிலாளர்கள் எரிச்சலுற்று இந் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று சொல்லப்படுகிறது. அவசியமான நேர்வுகளில் அவர்களுடைய கோரிக்கைகளை பரிவுடன் கவனிக்க நடவடிக்கை முன்னரே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, மீனளத் துறைத் தொழிலாளர்கள் என்னென்ன கோரிக்கைகளை விடுத்தார்கள் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அவர்கள் கிட்டதட்ட இருபது கோரிக்கைகளைக் கொடுத்திருக்கின்றார்கள். அவற்றில் மிக மிக முக்கியமானது, தினக் கூலி இருக்கக் கூடாது, மாதச் சம்பளம் வரவேண்டும் என்பது. பிறகு, பயிற்சி பெற்றவர்கள், பயிற்சி பெறாதவர்கள் ஆகியவர்களுக்கு அதிகப்படியான சலுகை தரவேண்டும் என்பது ஒரு கோரிக்கை. மருத்துவ வசதி தேவை என்பது ஒன்று. சில பேர்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டும் என்பது ஒரு கோரிக்கை. இப்படிப்பட்ட கோரிக்கைகளைத்தான் அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

திரு. கே. விநாயகம்: பெரிய அதிகாரிகள் அல்லது உயர்மட்டத்தில் இருப்பவர்கள், அவர்களுக்குக் கீழே இருப்பவர்கள் சொல்லுகிற கோரிக்கைகளுக்கு இணங்கவில்லை யென்றால், இதுமாதிரி 'கேரோ' செய்வது என்பது, அதிகாரபூர்வமாக அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஓர் ஆயுதமா? அப்படியென்றால், இந்த நாட்டில் அமைதி குலையும். யார் வேண்டுமானாலும் 'கேரோ' செய்வதற்குச் சட்டபூர்வமான அனுமதியை அரசாங்கம் தருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எந்தக் கிளர்ச்சியையும், எந்த அரசாங்கமும் நிச்சயமாக அனுமதிக்காது. தொழிலாளர்களுக்கேற்பட்ட வெறுப்பின் காரணமாக அவர்கள் கேட்பதெல்லாம் கிடைக்கவில்லை, அவர்களுடைய கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவர்களாகவே இட்டுக்கட்டி எடுத்துக் கொண்டு, உண்டான எரிச்சல் காரணமாக ஏற்பட்ட விளைவுதான் இது. நிச்சயமாக அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ளாது. இதுபோல் எந்தக் கிளர்ச்சியையும் அரசாங்கம் ஒத்துக் கொள்ளாது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: அவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்றாகிய தினக்கூலியை மாதக் கூலியாக்கவேண்டும் என்பதை அரசு ஏற்றுக் கொண்டதா? ஏற்றுக்கொண்டு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதைச் செயல்படுத்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. திங்கள்வாரியாகச் சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு அகவிலைப் படி விதத்தை அதிகப்படுத்தும்பொழுது, எல்லாப் பணியாளர்களுக்கும் முன்னதாகச் சம்பள உயர்வைக் கொடுப்பதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனினும், அன்றாட ஊதிய விதத்தைத் திருத்தியமைப்பது இப்பொழுது பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் எவ்வளவு காலமாக அரசாங்கத்தின் முன் இருந்து வந்தது? அவற்றினை வேளாவேளையில் பரிசீலித்து, அவற்றுக்குப் பரிகாரம் தேடாத காரணத்தினால்தான் இந்தச் [illegible]?



1970 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எப்பொழுதிருந்து இந்தக் கோரிக்கை இருந்து வருகிறது என்பதற்கான விவரம் தற்சமயம் என்னிடத்தில் இல்லை. எப்போதுமே சில கோரிக்கைகளைச் சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள். கூடுமானவரையில் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியவற்றை ஏற்றுக்கொண்டு உடனே பதிலளிக்கிறது. ஏற்றுக்கொள்ள முடியாத பல சிக்கல்கள் உள்ளன. ஊதிய உயர்வு, அதிகப்படியான பதவிகளை ஏற்படுத்தல் போன்றவற்றை ஏற்றுக் கொண்டு உடனே பதிலளிக்கிறது. ஏற்றுக்கொள்ள முடியாத பரிசீலனை செய்துதான் பதில் தரவேண்டும். இதனால் ஏற்படுகிற காலதாமதத்தினால் எரிச்சல் உண்டாகி அவர்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

## இறால் மீன் ஏற்றுமதி.

*483 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இறால் என்னும் மீன்வகையினை வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தனியார் துறையைச் சார்ந்த நிறுவனங்களே தமிழ் நாட்டிலிருந்து இறால் மீன்களை ஏற்றுமதி செய்கின்றன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அதிராம்பட்டணம்-நாகைப்பட்டினம் பகுதிகளிலிருந்து இறால் ஏற்றுமதி செய்யப்படுவதால் அங்கே அவற்றைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலையொன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா? தமிழ்நாட்டிலிருந்து இறால் ஏற்றுமதி செய்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு கிடைக்கும் அன்னியச் செலாவணி எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மூன்று தனியார்த் துறையினரின் மூலமாக 1968-69-ஆம் ஆண்டில் 241 டன் உறையவைத்த இறால்களை அனுப்பி அதன்மூலம் ரூ. 40,68,416 பெறப்பட்டிருக்கின்றது. 1—1—1969 லிருந்து 31—10—1969 வரையில் 358.236 டன் உறையவைத்த இறால்களை அனுப்பி அதன்மூலம் ரூ. 72,15,438.91 பெறப்பட்டிருக்கிறது. இதன்மூலம் தமிழக அரசுக்கு கிடைத்த வருமானத்தைக் குறிப்பிட்டேன்.

தஞ்சையில் இப்படி உறையவைக்கும் நிலையத்தை உண்டாக்குகின்ற செயற் குறிப்பு தற்போது எதும் இல்லை.

திரு. எம். வேதாசலம்: தலைவர் அவர்களே, இந்த இறால் ஏற்றுமதி செலவில் அதிகமாக இருப்பதால் அரசாங்கமே இறால் ஏற்றுமதி செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எண்ணூரில் இருக்கும் இண்டோ-மெரைன் ஏஜென்சி (தமிழ்நாடு) லிமிடெட், அரசாங்கத்திற்குச் சொந்தமானது. ஆனால் குத்தகை இந்தக் கம்பெனிக்கு விடப்பட்டிருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, இரால் மீன்களை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்த பிறகு, தமிழகத்தில் எந்த இடத்திலும் இரால் மீன் கிடைப்பதில்லை. குறிப்பிட்ட அளவு ஏற்றுமதி செய்து, மீதியை நம் நாட்டிலுள்ள மக்கள் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இரால் நிறையக் கிடைக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில், நிறைய இரால் மார்க்கெட்டில் கிடைக்கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, தூத்துக்குடித் துறைமுகம் விரிவுபடுத்தப்பட இருக்கிறது. அதில் மீன்பிடித் துறைமுகத்திற்கு வழிவகை செய்வதாகக் கூறப்படுகிறது. தூத்துக்குடியில் இந்த இரால் மீன் ஏற்றுமதி செய்ய ஒரு நல்ல ஃபேஸ்டு ப்ரோக்ராம் போடப்பட்டதா? அப்படிச் செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அரசாங்கத்தின் சார்பில் மண்டபத்திலும் தூத்துக்குடியிலும் இந்த உறையவைக்கக்கூடிய ஃப்ரீஸிங் ப்ளாண்ட்ஸ் இரண்டு வைப்பதற்கு இப்பொழுது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. வெகு விரைவில் அவை செயல்பட இருக்கின்றன.

திரு. டி. மார்டின்: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நம் மாநிலத்தில் கடந்த சில வருடங்களாக இந்த இரால் மீன் என்பது மார்க்கெட்டில் அதிகம் வரவில்லையென்றும் அதனால் நம் மாநில மக்கள் அதை வாங்கிச் சாப்பிட முடியாத நிலை இருக்கிறது என்றும் பரவலான கருத்து நிலவி வருகிற காரணத்தால், அரசாங்கமே எல்லா இடங்களிலும் தம்முடைய படகுகளை வைத்து இரால் மீன்களைப் பிடித்துப் பாதுகாத்து வைத்து, அதை மக்கள் வாங்கி உபயோகிக்கும் அளவில் செய்ய ஏதாவது செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: உள்நாட்டு பொதுமக்களுக்கு இரால் மீன் கிடைக்கவில்லை என்ற புகார் வந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனாலும், இவைகளையெல்லாம் பிடிப்பதற்கு எல்லா வகையான முன்னேற்றமான முறைகளையெல்லாம் அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது. மீனவர்கள் இயக்குகிற படகுகளை அவர்களுக்கு அதிகமான அளவில் அளித்து, அதிகமாக இரால் மீன்களைப் பிடிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. இதுவன்றி, இரால் மீன்களை உறையவைக்கும் ஃப்ரீஸிங் ப்ளான்ட், ஐஸ் ப்ளான்ட் ஆகியவைகளை அரசாங்கம் பல இடங்களில் வைத்திருக்கிறது. தமிழ்நாட்டில் இரால் மீன்களை உறைய வைத்து ஏற்றுமதி செய்யும் பணியை மூன்று தனியார் நிறுவனங்கள் செய்து வருகின்றன. அரசாங்கத்தின் சார்பில் மீனவர்கள் பிடிக்கின்ற இரால் மீன்களை நமது மாநிலத்திலேயே உறையவைத்து, ஐஸ் ப்ளான்ட், ஃப்ரீஸிங் ப்ளான்ட் இவைகளிலே வைத்துத்தான் மார்க்கெட்டுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. குறைவு என்ற புகார் இதுவரைக்கும் வரவில்லை என்று நான் திரும்பவும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



## கரும்பு விலை.

*454 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சர்க்கார், கரும்பு விலை டன் ஒன்று 100 ரூபாய்க்கும் குறைவாக இருக்கக் கூடாதென்று உத்தரவிட்டுள்ளார்களா?

(இ) ஆம், என்றால் எப்போது அமுல் படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், பாராளுமன்றத்திலே ஒரு கேள்விக்கு, உணவு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களே 100 ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடாது என்று தமிழ்நாட்டு சர்க்காருக்கு தெரிவித்ததாகவும், அந்த அளவுக்கு முடியாது என்று இந்தச் சர்க்கார் சொன்னதாகவும் ஒரு பதில் அளித்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி ஏதாவது பதில் வந்திருக்கிறதா? அப்படிக் குறைவாகக் கொடுக்க முடியும் என்ற அளவுக்கு இந்தச் சர்க்காரின் மதிப்பீடு இருக்கக் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதில் நமது அரசாங்கத்தின் ஒப்புதலோ அல்லது ஆணையோ கிடையாது, மத்திய அரசாங்கம்தான் இந்த விலையை நிர்ணயிக்கிறது. மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலை ரூ. 73.70 டன் ஒன்றுக்கு இந்த விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். அதிலும்கூட 9.4 சதவிகிதத்திற்கு இனிப்பு சத்தின் அளவு கொடுத்தால் இந்த விலை கொடுக்கலாம். 9.4 சதவிகிதத்திற்கு மேற்கொண்டு கொடுக்கின்ற ஒவ்வொரு புள்ளி சதவிகிதத்திற்கும் 53.6 காசு உயர்த்தி கொடுக்கலாம். மத்திய சர்க்கார்தான் நிர்ணயிக்கிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதுபோல, இப்படிப்பட்ட கேள்வியோ, அதற்குரிய பதிலையோ பற்றி நம் அரசாங்கத்திற்கு எந்த விதமான தகவலும் கிடையாது, ஒப்புதலும் கிடையாது.

திரு. ஆர். கருப்பையா: தலைவரவர்களே, கூட்டுறவு சங்க சர்க்கரை ஆலைகளில் 8.2 சதவிகிதம் வருகிறது என்று கணக்கிடுகிறார்கள். ஆனால் தனியார் சர்க்கரை ஆலைகளில் 7 சொச்சம், 6 சொச்சம் வருகிறது என்று கணக்குக் காட்டுகிறார்கள். எனவே, கூட்டுறவு சங்க ஆலைகளில் 75 ரூபாய், 80 ரூபாய் கொடுத்தால், தனியார் சர்க்கரை ஆலைகளில் 73 ரூபாய்தான் ஒரு டன்னுக்குக் கொடுத்துவருவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, சராசரியாக எல்லா ஆலைகளிலும் ஒரேவிதமாக விலை நிர்ணயிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: 73.70-க்கு மேலே 80 ரூபாய் வரையிலும், மேற்கொண்டு 5 ரூபாய் வரையிலும், பெண்ணாடம் அருணா சுகர்ஸ் கம்பெனியார் தர ஒத்துக்கொண்டு வருகிறார்கள். குறைந்த விலைக்கு கரும்பை எடுத்துக்கொள்வதெல்லாம், விவசாயப் பெருமக்களைச் சார்ந்தது. சில விவசாயிகள் அவர்களாகவே குறைந்த விலைக்குத் தருவதாக அரசாங்கத்திற்கு தகவல் வருகிறதே தவிர, தொழிற்சாலையினரோ யாருமே அப்படி எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் கூற விரும்புகிறேன்.

[1970 மார்ச் 20

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, கரும்பு உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால், விவசாயிகளிடமிருந்து, தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கு மேலும் உயர்த்திக் கொடுக்கும்படி கோரி மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யும்படி ஏதாகிலும் மனு வந்ததா? அதுகுறித்து அமைச்சரவர்கள் என்ன முடிவெடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நான் அதைத்தான் சொல்லுகிறேன். எந்தவித சிபார்சும் நாம் செய்தால் கூட மத்திய அரசாங்கம்தான் இதுபோன்ற விலைகளைத் திட்டவட்டமாகக் கூறுகிறது. இந்த விலையை உயர்த்துவதோ அல்லது குறைப்பதோ மத்திய அரசாங்கத்தின் பொறுப்பே தவிர, மாநில அரசாங்கத்தின் பொறுப்பு அல்ல.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, கரும்பு உற்பத்தி அதிகமாக இருப்பதால் விவசாயிகள் இப்பொழுது 40 ரூபாய், 50 ரூபாய் கொடுத்தால் கூட கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்த அளவுக்கு இருக்கும் அதை மாற்றி, சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு இல்லாவிட்டாலும், ஓரளவுக்குக் கட்டுப்படியாகக்கூடிய அளவுக்குக் கொடுக்கும் விலையில் அந்தக் கரும்பை வாங்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைப்பற்றி ஆலோசனை செய்யலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, இப்பொழுது கரும்பின் விலை 73 ரூபாய், 74 ரூபாய் இருக்கின்றது டன் ஒன்றுக்கு. ஆனால் ஆலைக்குப் போகும்பொழுது கரும்பின் விலை 40 ரூபாய்தான் என்று ஒரு விவசாயியின் கையிலே கிடைக்கிறது. அதை மாற்றி ஸ்பாட்டிலே எடுக்கக்கூடிய அதே 73 ரூபாய் விலை கிடைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்வார்களா? இதற்கு அமைச்சரவர்கள் வஞ்சனை இல்லாமல் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கரும்பின் விலையை நிர்ணயித்திருப்பது எக்ஸ்ஃபீல்ட் ரேட்தானே தவிர, எக்ஸ்மில் ரேட் அல்ல, 73.7 என்று நிர்ணயித்திருப்பது. 73.7-க்குக் குறைந்து கொடுக்கக்கூடாது என்று இந்த அரசாங்கம் உத்தரவு பிறப்பித்த காரணத்தால் பெருத்த நஷ்டம் வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. 40, 45 ரூபாய்க்கு வாங்குகிறார்கள் என்று சொன்னால் அப்படி வாங்குவது சட்டப்படி குற்றம். 73.7-க்குக் குறைந்து வாங்கக்கூடாது, ஆனால் பொதுமக்கள் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அது பொதுமக்களுக்குத் தெரிந்த விஷயமாக இருக்கும், அரசாங்கத்திற்கு இது பற்றி தகவல் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மக்களாகவே கொடுக்கிறார்கள் என்று சொன்னால், யாரும் பணத்தை இழக்கத் தயாராக இருக்க மாட்டார்கள். கொடுக்க முடியாது என்ற நிலையிலும், அந்த நேரத்திலே கரும்பு உலர்ந்து பாதிக்கக்கூடாது என்ற அளவிலே கொடுக்கலாம். ஆகவே, குறைந்த ரேட்டிற்கு யார் வாங்கினாலும் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?



1970 மார்ச் 20]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, குறைந்த விலை கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சர்க்காரே அறிக்கை விட்டிருக்கிறார்கள். அப்படி ஏதாவது புகார் இருந்து, நிரூபித்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து. விவசாயிகள் தாங்களாகவே வந்து குறைந்த விலைக்குத் தொழிற்சாலையில் கொடுக்கிறார்களே தவிர, யாரும் கட்டாயப்படுத்தி அவர்களை அப்படிச் செய்யச் சொல்லவில்லை. குறைந்த விலை இருக்கக்கூடாது என்று மத்திய அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. அப்படி ஏதேனும் புகார்கள் இருந்தால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள்.

## சமூகநல ஊழியர்கள் சம்பளம்.

*455 வினா----திரு. எஸ். சிவசுப்ரமணியன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரிசனநல இலாக்காவில் சமூக நல ஊழியர்களாக (Social Workers Male and Female) பணியாற்றுபவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் அதிகாரத்தைப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்! நிருவாக வசதியை முன்னிட்டுத் தென்னாற்காடு, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் அரிசன நலத் துறையில் சமூக நல ஊழியர்களாகப் பணிபுரிபவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சபாநாயகரவர்களே, எல்லா வேலைகளையும் மேற்பார்வையிடுவது ஹரிஜன இலாக்கா ஆபீசர்களாக இருப்பதால் சம்பளம் மட்டும் ஏன் அங்கு கொடுக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல, சோஷியல் ஒர்க்கர்ஸ்களில் அதிக அதிகாரம் உள்ள ஆண்களுக்கு 100 ரூபாய் என்று குறிப்பிட்டும், பெண்களாக இருக்கக்கூடியவர்களுக்கு அதிகமான ரூபாயும் வைத்திருக்கிறார்களே, எனவே பெண்களுக்குக் கொடுப்பதைப்போல், ஆண்களுக்கும் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தச் சமூகப் பணியாளர்கள் ஏற்கெனவேயிருந்த அரசாங்கத்தால் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வதிலே சமூக நல ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பணிகளிலே சற்று மாறுதல் செய்யவேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது. அதற்குப்பிறகு தான் ஊதிய உயர்வு பற்றியெல்லாம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறது.

திரு. கி. துரைராஜ் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் இந்தகைய ஆண், பெண் சோஷியல் ஒர்க்கர்ஸ் எத்தனைபேர்கள் வேலை செய்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

[1970 மார்ச் 20

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, கரும்பு உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால், விவசாயிகளிடமிருந்து, தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கு மேலும் உயர்த்திக் கொடுக்கும்படி கோரி மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யும்படி ஏதாகிலும் மனு வந்ததா? அதுகுறித்து அமைச்சரவர்கள் என்ன முடிவெடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நான் அதைத்தான் சொல்லுகிறேன். எந்தவித சிபார்சும் நாம் செய்தால் கூட மத்திய அரசாங்கம்தான் இதுபோன்ற விலைகளைத் திட்டவட்டமாகக் கூறுகிறது. இந்த விலையை உயர்த்துவதோ அல்லது குறைப்பதோ மத்திய அரசாங்கத்தின் பொறுப்பே தவிர, மாநில அரசாங்கத்தின் பொறுப்பு அல்ல.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, கரும்பு உற்பத்தி அதிகமாக இருப்பதால் விவசாயிகள் இப்பொழுது 40 ரூபாய், 50 ரூபாய் கொடுத்தால் கூட கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்த அளவுக்கு இருக்கும் அதை மாற்றி, சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு இல்லாவிட்டாலும், ஓரளவுக்குக் கட்டுப் படியாகக்கூடிய அளவுக்குக் கொடுக்கும் விலையில் அந்தக் கரும்பை வாங்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைப்பற்றி ஆலோசனை செய்யலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, இப்பொழுது கரும்பின் விலை 73 ரூபாய், 74 ரூபாய் இருக்கின்றது டன் ஒன்றுக்கு. ஆனால் ஆலைக்குப் போகும்பொழுது கரும்பின் விலை 40 ரூபாய்தான் என்று ஒரு விவசாயியின் கையிலே கிடைக்கிறது. அதை மாற்றி ஃபாட்டிலே எடுக்கக்கூடிய அதே 73 ரூபாய் விலை கிடைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்வார்களா? இதற்கு அமைச்சரவர்கள் வஞ்சனை இல்லாமல் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கரும்பின் விலையை நிர்ணயித்திருப்பது எக்ஸ்ஃபீல்ட் ரேட்தானே தவிர, எக்ஸ்மில் ரேட் அல்ல, 73.7 என்று நிர்ணயித்திருப்பது. 73.7-க்குக் குறைந்து கொடுக்கக்கூடாது என்று இந்த அரசாங்கம் உத்தரவு பிறப்பித்த காரணத்தால் பெருத்த நஷ்டம் வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. 40, 45 ரூபாய்க்கு வாங்குகிறார்கள் என்று சொன்னால் அப்படி வாங்குவது சட்டப்படி குற்றம். 73.7-க்குக் குறைந்து வாங்கக்கூடாது. ஆனால் பொதுமக்கள் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அது பொதுமக்களுக்குத் தெரிந்த விஷயமாக இருக்கும். அரசாங்கத்திற்கு இது பற்றி தகவல் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மக்களாகவே கொடுக்கிறார்கள் என்று சொன்னால், யாரும் பணத்தை இழக்கத் தயாராக இருக்க மாட்டார்கள். கொடுக்க முடியாது என்ற நிலையிலும், அந்த நேரத்திலே கரும்பு உலர்ந்து பாதிக்கக்கூடாது என்ற அளவிலே கொடுக்கலாம். ஆகவே, குறைந்த ரேட்டிற்கு யார் வாங்கினாலும் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?



1970 மார்ச் 20]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, குறைந்த விலை கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சர்க்காரே அறிக்கை விட்டிருக்கிறார்கள். அப்படி ஏதாவது புகார் இருந்து, நிரூபித்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விவசாயிகள் தாங்களாகவே வந்து குறைந்த விலைக்குத் தொழிற்சாலையில் கொடுக்கிறார்களே தவிர, யாரும் கட்டாயப்படுத்தி அவர்களை அப்படிச் செய்யச் சொல்லவில்லை. குறைந்த விலை இருக்கக்கூடாது என்று மத்திய அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. அப்படி ஏதேனும் புகார்கள் இருந்தால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள்.

## சமூகநல ஊழியர்கள் சம்பளம்.

*455 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரிசனநல இலாக்காவில் சமூக நல ஊழியர்களாக (Social Workers Male and Female) பணியாற்றுபவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் அதிகாரத்தைப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்! நிருவாக வசதியை முன்னிட்டுத் தென்னாற்காடு, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் அரிசன நலத் துறையில் சமூக நல ஊழியர்களாகப் பணிபுரிபவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சபாநாயகரவர்களே, எல்லா வேலைகளையும் மேற்பார்வையிடுவது ஹரிஜன இலாக்கா ஆபீசர்களாக இருப்பதால் சம்பளம் மட்டும் ஏன் அங்கு கொடுக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல, சோஷியல் ஒர்க்கர்ஸ்களில் அதிக அதிகாரம் உள்ள ஆண்களுக்கு 100 ரூபாய் என்று குறிப்பிட்டும், பெண்களாக இருக்கக்கூடியவர்களுக்கு அதிகமான ரூபாயும் வைத்திருக்கிறார்களே, எனவே பெண்களுக்குக் கொடுப்பதைப்போல், ஆண்களுக்கும் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தச் சமூகப் பணியாளர்கள் ஏற்கெனவேயிருந்த அரசாங்கத்தால் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வதிலே சமூக நல ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பணிகளிலே சற்று மாறுதல் செய்யவேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது. அதற்குப்பிறகு தான் ஊதிய உயர்வு பற்றியெல்லாம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறது.

திரு. வி. துரைராஜ் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் இந்தகைய ஆண், பெண் சோஷியல் ஒர்க்கர்ஸில் எத்தனைபேர்கள் வேலை செய்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விவரங்கள் தற்சமயம் இல்லை, தனிக்கேள்வி போடவும்.

திரு. கே. சகாதேவக் கவுண்டர் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, சமூக நலப் பணிபுரியும் ஊழியர்களுக்கு 2 மாதம், 3 மாதங்களாகச் சம்பளம் கொடுக்காமல், அவர்கள் பட்டினி கிடந்து சாவதைப்பற்றி அரசாங்கத்திற்கு தெரியுமா? அதுபற்றி அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனைபேர் செத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பட்டினி கிடந்து சாகக்கூடிய அளவிற்குக் குறைபாடுகள் இருந்தால், சட்டமன்றம் நடக்க முடியாத அளவிற்குக் கேரோ செய்து கொண்டிருப்பார்கள். அதிலிருந்து அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லை என்றே தெரிகிறது. யாரும் பட்டினி கிடந்து செத்ததாக அதைப்பற்றி புகார்கள் அரசாங்கத்திற்கு வரவில்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது, தமிழகத்திலே இரண்டு, மூன்று மாவட்டங்களில் தான் சோஷியல் ஒர்க்கர்ஸ் இருப்பதாகச் சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்பின் கீழ் அந்த இரண்டு மூன்று மாவட்டங்களில் மட்டும்தான் வேலை இருக்கிறதா? மற்ற மாவட்டங்களில் இல்லையா? அப்படியானால் மற்ற மாவட்டங்களில் அதை விரிவுபடுத்தத் தாமதம் ஏற்படுவது ஏன்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான், மூன்று மாவட்டங்களில் சம்பளம் கொடுக்கும் அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியன் களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத்தான் சொன்னேன். மற்ற மாவட்டங் களிலும் சோஷியல் ஒர்க்கர்கள் இருக்கிறார்கள். ஆனால், அரிசன நல இலாக்கா மூலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

### படிப்பு உதவித்தொகை வழங்குவதற்கான விதிகள்

* 456 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனநல துறையில் மாணவர்கள் உதவித் தொகை பெறும் வகையில் தற்போது கடைபிடித்து வரும் மதிப்பெண்களை முன்பு இருந்ததைவிட குறைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரிசன நலத்துறை யினரால் உதவித்தொகை வருமானத்தின்பேரில் அளிக்கப்படுகிறது. ஆகையால் மேற்படி வினாவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, முன்பொருசமயம், அமைச்சர வர்கள் இந்த மார்க் விகிதத்தைக் குறைப்பதாக உத்தேசம் இருப்பதாக ஒரு விடத்தில் பேசியதாகக் கேள்விப்பட்டேன். எனவே, அம்மாதிரி செய்ய உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்பொழுது நான் பின்தங்கிய மக்கள் நலனுக்காகப் பொறுப்பேற்றிருந்தேன். அப்பொழுது பின்தங்கிய மக்களுக்குத்தான், வருகின்ற பணங்கள் மூலம் ஸ்காலர்ஷிப் கொடுக் கலாம் என்று அதற்காகத்தான் சொல்லியிருப்பேனே தவிர, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அல்ல.

திரு. வி. எஸ். எஸ். மணி : தலைவரவர்களே, பின்தங்கிய மாணவர்களின் பெற்றோர்களின் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் இருக்க வேண்டு மென்று விதி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அரிசன நல இலாக்கா பற்றி இருக் கிறது.

THIRU V.S.S. MANI : Rules for grant of scholarship. என்று போட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் வேறு இருக்கிறார்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆண் மாணவர்களுக்கும், பெண் மாணவர் களுக்கும் ஒரே விதமான ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவது உண்மையா? பெண் களுக்கு கொஞ்சம் அதிகப்படியான செலவு இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, ஆண்களைவிட பெண் மாணவர்களுக்கு அதிகப்படியான தொகை கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : உபகாரச்சம்பளம் ட்யூஷன் பீஸ் இவைகளெல்லாம் இருவர்களுக்கும் பொதுவாகத் தான் தரப்படு கிறது. போர்டிங் கிராண்டைப் பொறுத்தவரையில், பள்ளி மாணவர்களில், ஆண்களுக்கு ரூ. 20-ம், பெண்களுக்கு ரூ. 21-ம், பெண்களுக்கு ஒரு ரூபாய் அதிகமாக, சோப்பு, சீப்பு இவைகள் வாங்கிக்கொள்வதற்காக கொடுக்கப்படு கிறது. அதைக் கூட இப்பொழுது சமீபத்தில் ரூ. 2 ஆக உயர்த்தியிருக்கிறோம். ஆண் மாணவர்களுக்கு ரூ. 1 கொடுத்திருக்கிறோம் மாதம் ஒரு முறை கிராப் வெட்டிக்கொள்வதற்காக, பெண் மாணவியர்களுக்கு அதிகப்படியாகத் தருவது நான் ஏற்கனவே சொன்ன அப்படிப்பட்ட செலவுகளுக்காக. எனவே, ஆண் களுக்கு ரூ. 1-ம், பெண்களுக்கு ரூ. 2-ம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது.

### *Re-organisation of Agriculture Department.*

* 457 *Q.*—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to re-organise the Agriculture Department as recommended by the Committee on Estimates (1968–69); and

(*b*) if so, the stage at which the matter stands?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) வேளாண்மைத் துறை இயக்குநர் அரசுக்கு திட்டம் ஒன்றை அனுப்பியுள்ளார். இத் திட்டத்தை மதிப்பீட்டுக்குழு ஆதரித்துள்ளது.

(இ) இது அரசின் ஆராய்வில் உள்ளது.

**திரு. கரு. சீமைச்சாமி :** வேளாண்மைத் துறையை சீரமைக்கவேண்டும் என்று பரிந்துரைத்த மதிப்பீட்டுக் கமிட்டியின் சீரமைப்பு யோசனைகளில் ஏதாவது இப்பொழுது அமுல் நடத்தப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஏற்கனவே இயக்குநர் அதற்கு ஒரு திட்டம் வரையறுத்து அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் ஆய்வில் இருக்கிறது. பரிசீலனை செய்துவிட்ட பிறகு, ஏற்றுக்கொள்ளக் கூடிய திட்டமாக இருந்தால் எவைஎவையை ஏற்றுக்கொள்வது, எவைஎவையை நீக்கிவிடுவது, எந்த வகையில், என்று பரிசீலித்த பிறகுதான் ஏற்றுக்கொள்ளப் படும்.

**திரு. இல. பலராமன் :** சீரமைப்பு பற்றி என்ன செய்யப்போகிறோம் என்று அரசு ஆணையிடுவதற்கு முன்னால், அதனுடைய நகலை மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்க முற்படுவார்களா ? டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பதை மாற்றி அதே படிப்பு படித்தவரை நியமிப்பது பற்றி ஏதாகிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இயக்குநர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகத்தான் இருப்பார். அதை மாற்றுவது குறித்து இப்பொழுது எந்த விதமான பரிசீலனையும் இல்லை. இவைகளையெல்லாம் பற்றி முடிவு எடுத்ததற்குப் பின்னால் தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதைப்பற்றி அறிவிக்க முடியுமே தவிர, இன்னும் அரசாங்கமே அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை இல்லை, அவைகளெல்லாம் பரிசீலனையில் தான் இருக்கிறது என்று நான் சொன்னேன்.

### *Arrests of Naxalites in Thanjavur district*

*449 *Q.*—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any persons were arrested in Thanjavur district (Nannilam) during May 1969 for canvassing membership for Naxalite Communists; and

(*b*) if so, action taken against them?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.**

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தக் கேள்வி போட்டு கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிறது. நக்ஸலைட்ஸ் நடமாட்டம் இப்பொழுது நாடு பூராவும் பரவி வருகிறது. நேற்று கூட தென் ஆற்காடு மாவட்டத்தில் அவர்களுடைய நடவடிக்கை இருந்திருக்கிறது. சவ்வாது மலை, கோவை, மதுரையில் கம்பம் பகுதி, ஆகிய இடங்களில் இவர்களுடைய நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. இவர்களைக் கண்காணிப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் தனிப் போலீஸ் பிரிவு ஒன்றை எற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் பல முறை இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை வருகிற நேரத்தில் அதற்காக தனிக் கவனம் செலுத்துவதற்காக காவல் இலாகாவின் தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் தயங்காது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நக்ஸலைட் கம்யூனிஸ்டுகள் எத்தனை பேர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள் ? சென்னையைச் சேர்ந்த ஒரு பிரபல வழக்கறிஞர் அரசாங்கத்தினால் தேடப்பட்டு தலைமறைவாக இருக்கிறாரா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எத்தனை பேர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள் என்கின்ற விவரம் எதுவும் இல்லை. சென்னையைச் சேர்ந்த வக்கீலைப் பற்றிச் சொல்கிறார்கள். அதைப்பற்றிய விவரங்களும் இன்றைய தகவல்களில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதைப்பற்றி விவரங்கள் தரலாம்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** வன்முறை நடவடிக்கைகளில் இறங்குபவர் எந்தக் கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தனி நபர்களாக இருந்தாலும் சரி, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு. ஆனால் மார்க்ஸிஸ்டு லெனினிஸ்டு என்று அமைத்திருக்கக்கூடிய நக்ஸலைட் கம்யூனிஸ்டு கட்சி தமிழ் நாட்டிலும் சரி, இந்தியா பூராவிலும் சரி, தடை செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியில்லை என்று சொன்னால், அவர்களுக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு அனுமதி உண்டா, இல்லையா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தடை செய்யப்படாத காரணத்தினால் அவர்கள் வன்முறைச் செயலில் ஈடுபடுவது அனுமதிக்கப்படவேண்டும் என்பதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், இது தடை செய்யப்படவேண்டிய ஒன்று என்பதை அரசு உணர்கிறது. மத்திய அரசு அதற்கான நடவடிக்கையை விரைவிலே மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, நக்ஸலைட் என்ற பெயரால் மட்டும் அல்ல. இன்னும் தஞ்சாவூர் ஜில்லாவில் மட்டுமல்ல, மற்றும் ஒரு சில கிராமங்களில் கூட வைக்கோல் போருக்கு தீ வைத்தல், கொள்ளையிடல் போன்ற காரியங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, இதுபற்றியெல்லாம் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்து, கிராமப் பகுதி மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கும், காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கவும், தக்கபடி கண்காணிக்கவும் அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதை நக்ஸலைட்டுகளும் செய்வார்கள். இப்படிச் செய்பவர்களை நக்ஸலைட்ஸ் என்றும் சொல்வார்கள். எப்படி என்றால், ரௌடிகள் என்று நாம் அழைக்கிறோம். அதைப்போல ரௌடிகள் செய்யும் காரியங்களைச் செய்பவர்களும் ரௌடிகள் பட்டியலில் வருகிறார்கள். அதைப் போலவே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்பவர்கள் நக்ஸலைட்ஸ் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஸார், தஞ்சை மாவட்டத்தில் 44 பேர்களைக் கொலை செய்துவிட்டு, அவர்களுக்குச் சாதகமாக வக்காலத்து வாங்கி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நக்ஸலைட்டைப் பற்றியது. அதைப் பற்றி கேள்வி கேளுங்கள். வேறு எந்த நிகழ்ச்சியைப்பற்றியும் இங்கே இப்பொழுது கேட்கவேண்டாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அதைப்போன்ற காரியங்களில் ஈடுபட்டிருப்பவர்களை, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தனி நபர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வக்காலத்து வாங்கி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தஞ்சையில் வெண்மணியில் நடைபெற்ற சம்பவம் பற்றி உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை உண்டோ அதையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், நக்ஸலைட்களுக்காக இங்கே கேள்வி கேட்கப்படுகிற நேரத்தில் அவர்களுக்குச் சாதகமான முறையில் இங்கே கேள்வி அமைவது கூட நாம் வருந்துகிற ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால், இந்த மன்றத்தில் அனைவரும் சேர்ந்து நக்ஸலைட்களை எதிர்க்கவேண்டும், அவர்களுடைய நடவடிக்கைகளை எதிர்த்தாகவேண்டும் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## விசாரணை ஆணைக்குழுக்கள்

*450 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967 மார்ச் திங்கள் முதல் அரசு அமைத்துள்ள விசாரணை ஆணைக் குழுக்கள் எத்தனை ?

(இ) எப்பாங்குகளைக் கொண்டும், எக்காரணங்களுக்காகவும் இந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன ?

(உ) எத்தனை ஆணைக்குழுக்கள் தங்கள் பணியை முடித்து அதற்கான அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளன ? அவற்றில் எத்தனை அறிக்கைகள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) எட்டு.

(இ) பின்வரும் நிகழ்ச்சிகளைப் பற்றி விசாரணை நடத்தி (மத்தியச்சட்டம் 60/1952) 1952-ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 3-வது பிரிவின்படி விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன :—

(1) கோயம்புத்தூர் மாவட்டத்தில் வேட்டைக்காரன் புதூர் நிகழ்ச்சி.

(2) நீலகிரி மாவட்டத்தில் அரவங்காடு காவலர் துப்பாக்கிச் சூடு

(3) சென்னையில் பேருந்து ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் நடந்த மோதல்.

(4) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உடையார்பாளையத்தில் நடைபெற்ற காவலர் துப்பாக்கிச் சூடு.

(5) கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் பண்ணைத் தொழிலாளர் சிக்கல்.

(6) சென்னையில் பேருந்து விபத்து.





(7) திருச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட கோர படகு விபத்து.

(உ) விசாரணை ஆணைக்குழுக்கள் யாவும் வேலை முடித்துத் தங்கள் அறிக்கைகளை அனுப்பியுள்ளனர்.

பின்வரும் நிகழ்ச்சிகளைப் பற்றிய விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் பேரவை முன் வைக்கப்பட்டன :—

1. வேட்டைக்காரன் புதூர் நிகழ்ச்சி.

2. அரவங்காடு காவலர் துப்பாக்கிச் சூடு.

3. சென்னை மாநகரில் பேருந்து ஊழியர்கள் மாணவர்கள் மோதல்.

4. கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் பண்ணைத் தொழிலாளர் சிக்கல்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த விசாரணைக்குழு, ஆணைக் குழுக்களின் அறிக்கைகளில் எத்தனை குழுவின் அறிக்கைகள் அரசாங்கத்திற்கு சாதகமாக இருந்தன, எத்தனை குழுக்களின் அறிக்கைகள் பாதகமாக இருந்தன ? பாதகமாக இருந்தால், அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இங்கு வெளியிடப்பட்ட அறிக்கைகளைப் பார்த்தே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாதகம் எது, பாதகம் எது என்பதை உணர்ந்திருக்கக்கூடும்.

திரு. கே. விநாயகம் : இந்த அறிக்கைகளையெல்லாம் மேஜை மீது வைத்தால் மாத்திரம் போதாது, அவைகளை சட்டசபையில் விவாதிக்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை நாங்கள் தெரிவித்தோமே அதற்கு ஏன் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களோ, அல்லது மற்றவர்களோ இசையவில்லை. குறிப்பாக மாணவர்கள்-பஸ்தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு இடையே நடந்த தகராறு குறித்து, இனிமேல் அந்த மாதிரி வரக்கூடாது என்கின்ற நோக்கதோடு அதை விவாதிக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டோம். அதற்கு ஏன் முதல் அமைச்சர் அவர்கள் இசையவில்லை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கேள்வி நேரத்தில் கோரிக்கை பற்றி கேட்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுமானால் தனி நபர் தீர்மானம் கொண்டுவாருங்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, I want you to give a ruling. The Chief Minister was pleased to say that I am making a request. I have put a question. My question was a definite question as to why the Chief Minister refuses to oblige the request of the Members of the Opposition. 'Yes' or 'No' he can say

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் சொன்ன பதிலில் கேள்வி நேரத்தில் கோரிக்கை எழுப்பக்கூடாது என்று சொல்லவில்லை. கேள்வி நேரத்தில் கோரிக்கை பற்றி கேட்கக்கூடாது என்றுதான் சொன்னேன். கோரிக்கை பற்றி அந்த அறிக்கை வைக்கப்பட்ட நேரத்தில் அதை விவாதிக்க வேண்டும் என்று சொல்லி, அதற்கான விளக்கங்கள் தரப்பட்ட காரணத்தினால், அதைப் பற்றி விவாதம் எழுப்பக்கூடாது என்றுதான் சொன்னேன்.

[1970 மார்ச் 20

## மத்திய அரசிடமிருந்து பெற்ற கோதுமை

* 459 வினா----திரு. என். கிட்டப்பா :

திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா--

1969-70-ம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து நமது அரசுக்குக் கிடைத்த கோதுமையின் அளவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 1969-ம் ஆண்டில் மத்திய அரசு 3,73,551 டன்கள் கோதுமையை நமது மாநிலத்திற்கு ஒதுக்கியது. 1970-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கும் சேர்த்து மாநில அரசிற்கு 1,00,550 டன்கள் கோதுமையை மத்திய அரசு ஒதுக்கியது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, அரிசியை முக்கிய உணவாகக் கொண்டுள்ள தமிழகத்தில் கோதுமையை அதிக அளவில் பரப்ப சிறப்பு மானியம், சப்சிடி வழங்குமாறு மாநில அரசு கேட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேட்டதற்கு அவர்கள் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். கொடுக்கவில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருந்த கோதுமை நம்முடைய அரசின் முயற்சியின் காரணமாக கிராமப் புறங்களில் நிரம்ப விரும்பிச் சாப்பிடுகிறார்கள். தேவைக்கு தக்க அளவு இந்த ஆண்டு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தற்சமயம் கோதுமை கையிருப்பு செலவுக்குத் தக்க அளவிற்கு மேல் இருக்கிறது. அதுவே செலவானால் போதும் என்கிற நிலை இருக்கிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமைப் பண்டங்களை சாப்பிடவேண்டும், நன்மையிருக்கிறது என்று அரசு பிரசாரம் செய்ததன் மேல், பரவலாக கோதுமையை விரும்பிச் சாப்பிடும் நிலை இருக்கிறது. அரிசிக் கட்டுப்பாடு நீக்கம் காரணமாக கோதுமை விலை ஏறியிருக்கிறதே, அந்த விலை ஏற்றத்தை இறக்க முயற்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கோதுமை விலை ஏறவில்லை. கோதுமைக்கு இருந்த மானியத்தை திரும்பப் பெறுவிட்டதால், அதை விற்கவேண்டிய விலையில் விற்கப்படுகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள கோதுமை மாவுக் கோதுமை, மாவு செய்ய பயன்படுகிறது. இது தவிர சம்பா கோதுமை என்று ஒன்று இருக்கிறது, அதைப் பெற முயற்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இரண்டு கோதுமை [illegible] இருக்கிறது.



1970 மார்ச் 20]

**திரு. கே. விநாயகம் :** தமிழர்களுடைய உணவு நம்முடைய நாட்டிலே *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நோ, நோ. . .

**திரு. கே. விநாயகம் :** நான் கேள்விக்கு வருகிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது சரியில்லை. நீங்கள் சொன்னதையெல்லாம் எழுதமாட்டார்கள், எழுதவேண்டாம் . .

**திரு. கே. விநாயகம் :** அதையே வேறு விதமாகப் போடுகிறேன். கோதுமை உணவு தமிழர்கள் உட்கொள்ள வேண்டும் என்று கொள்கை மாற்றம் இப்பொழுது வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கோதுமையை உட்கொள்ளக் கூடாது என்று எப்பொழுதும் நாங்கள் சொல்லவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சினை எழவில்லை.

## திருமயம் தொகுதியில் நடப்பட்ட தென்னைகள்

* 460 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள திருமயம், பொன்னமராவதி, அரிமழம் ஊராட்சி ஒன்றியங்களுக்குள் அடங்கிய ஒவ்வொரு ஊராட்சி மன்றத்தின் சார்பிலும் 1962 முதல் 1966 முடிய நடப்பட்ட தென்னங்கன்றுகளுக்கான செலவு எவ்வளவு?

(இ) எத்தனை தென்னைகள் உயிரோடு இருக்கின்றன?

(உ) எத்தனை ஊராட்சி மன்றங்களில் வெறுங்கணக்கு எழுதப்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :**

| | | | |
|---|---|---|---|
| (அ) | திருமயம் ஊராட்சி ஒன்றியம் .. | ரூ. | 85,360·35 |
| | பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம் .. | ரூ. | 18,919·36 |
| | அரிமழம் ஊராட்சி ஒன்றியம் .. | ரூ. | 30,876·62 |
| | மொத்தம் .. | ரூ. | 135,156·33 |

| | | |
|---|---|---|
| (இ) | திருமயம் ஊராட்சி ஒன்றியம் .. | 2,742 மரங்கள் |
| | பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம் | 1,065 ,, |
| | அரிமழம் ஊராட்சி ஒன்றியம் .. | 1,764 ,, |
| | மொத்தம் .. | 5,571 ,, |

(உ) வினாவிற்கு இடமில்லை.

## Municipal services

*461 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHDAR :
Thiru K. VINAYAKAM :
Thiru N. MARUDACHALAM :
Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether the provincialisation of municipal services has been decided upon; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) இல்லை. எனினும் ரூபாய் 90-ம் அதற்கு மேற்பட்டும் குறைந்த சம்பள விகிதத்தைப் பெறும் நகராட்சி உயர்தர ஊழியர்களைப் பொறுத்தவரை ஓய்வு காலத் திட்டம் அடங்கிய நகராட்சிப் பணித்திட்டம் மாநில அளவில் வகுக்கப்பட்டுள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** தலைவர் அவர்களே, உள்ளாட்சி ஸ்தாபனங்களில் பணி செய்யும் உத்தியோகஸ்தர்களுடைய நிலைமை நன்கு ஏற்படாமல் இருப்பதால், அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த விதி முறைகளை நன்கு அமைத்து, ஒரே மாதிரியான சம்பள வாய்ப்பு, மற்றும் வேலை உயர்வு இவைகளை அளிக்க இந்த அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஏற்கெனவே 1920-ம் ஆண்டு தமிழக மாவட்ட கழகங்கள் சட்டத்தின் 77-ஏ பிரிவின் அடிப்படையில் இதற்கான வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாநில முழுதிற்கும் நகராட்சிப்பணி களைச் செய்ய, பணியாளர்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. விதி முறைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அமுல் நடத்தும்போது, இந்தக் குறைகள் நீங்கும்.

Thiru K. VINAYAKAM: May I know whether the Government propose to constitute a separate Municipal Service Commission with regard to the personnel whose minimum scale of pay is Rs. 90 and above?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நகராட்சி களினுடைய சட்ட திட்டங்களையெல்லாம் திருத்துவதற்கான அடங்கல் மசோதா பரிசீலனையில் இருக்கிறது. அவற்றையெல்லாம் பரிசீலனை செய்யும்பொழுது ஒரு சிவில் பணிக் குழு அமைக்கப்பட வேண்டுமென்ற அவசியமிருந்தால் செய்யப்படும்.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, நகராட்சிகளிலுள்ள பணி யாளர்களுக்கு இப்போதுள்ள புள்ளிவிவரப்படி சம்பள விகிதம் தர உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு [illegible] புள்ளிவிவரம் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் ஏற்றபடி அடிப்படைச் [illegible] மாற்றம் உத்தேசம் இல்லை.



## Salaries of Aided School Teachers in Udangudi Panchayat Union

*462 Q.—Thiru T. MARTIN: Will the Hon Minister for Local Administration be pleased to state—

(a) whether the teachers working in private aided elementary schools within the jurisdiction of the Udangudi Panchayat Union Council in Tiruchendur taluk, Tirunelveli district were paid their salaries for the month of October 1969; and

(b) if not, when will they be paid their salary?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) ஆம், மானியம் பெறும் தனியார் தொடக்கப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் 1969 ஆண்டு அக்டோபர் திங்களுக்கான சம்பளம் (21—9—1969 முதல் 20—10—1969 வரையிலான கால அளவுக்குரியது) 6—11—1969 அன்று கொடுக்கப்பட்டது.

(இ) இவ்வினா எழவில்லை.

Thiru T. MARTIN: Sir, teachers working in these private-aided institutions within the jurisdiction of the Udangudi Panchayat Union, Sathankulam Panchayat Union and the Radhapuram Panchayat Union which are all situated in the backward areas, are not regularly paid their salaries every month and every time the Panchayat Union has to approach the Government for special loans. So, may I reuest the Hon. Minister to state whether the Government have taken any definite step to ease the situation and see that the teachers are paid their salaries every month?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் ஏற்கனவே இதுபற்றி மன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக கல்வி நிதியிலிருந்து நிதியை எடுத்து ஊராட்சி ஒன்றியங்கள் வேறு காரியங்களுக்காகப் பயன்படுத்துகிறது என்ற சில குறைபாடுகள் நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதன் பேரில், கல்வி நிதிக்காக ஒதுக்கப் படுகிற தொகைக்கு தனிக் கணக்கு வைத்துவர வேண்டுமென்று ஆணை பிறப் பித்திருக்கிறோம். பணம் போதாத நேரத்தில் பொது நிதியிலிருந்து கல்வி நிதிக்குக் கொடுக்கக்கூடிய உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. என்றாலும், சில குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியங்கள் பொதுநிதியைப் பெற முடியாத அளவிற்கு மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. அப்படி எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, எந்த வகையிலே அவற்றை அபிவிருத்தி செய்யலாம் என்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கை விரைவிலே கிடைக் கும். அப்படிக் கிடைத்தவுடன் முறையாக சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றாலும்கூட, அவ்வப்போது சங்கடங்கள் எழுகின்ற நேரத் தில் உடனுக்குடன் தந்தியின் மூலமாக சம்பளம் வழங்க தேவையான ஆணை கள் வழங்கப்படுகின்றன. நவம்பர், டிசம்பர் திங்களுக்கான சம்பளத்தை 1—12—1969-லும், 8—1—1970-லும் முறையே வழங்கப்பட்டிருக்கிறது. இந்த [illegible] குறைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இதைப் போக்க எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தஞ்சை மாவட்டம், திருவாரூரில், தவிட்டு எண்ணெய் ஆலை ஒன்று 19,75,000 ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப் பட்டிருக்கிறது. இந்த ஆலை நாள் ஒன்றுக்கு முப்பது டன், தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் சக்தியுள்ளது. இந்த ஆலையை அமைப்பதற்கு 4,93,750 ரூபாய், பங்குத் தொகையாகவும், 9,87,500 ரூபாய், நீண்டகாலக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** தலைவர் அவர்களே, இந்த தவிட்டு எண்ணெய் ஆலை வேலை தொடங்கி, அதிகமாக எண்ணெயை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, இந்த ஆலை கட்டி முடிக்கப்பட்டு, 8--12---1968-ம் தேதியிலிருந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

**திரு. வி. டி. அண்ணாமலை:** வடஆற்காடு மாவட்டத்திலும் நெல் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. செய்யாரில் ஒரு நவீன அரிசி ஆலை ஒன்றும் நிறுவப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே தவிட்டில் இருந்து எண்ணெ எடுக்கும் ஆலை ஒன்றை ஏற்படுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தவிட்டில் இருந்து எண்ணெ எடுப்பதற்கு பத்து நவீன அரிசி ஆலைகளில் கிடைக்கும் தவிடு தேவைப் படுகிறது. செய்யாரில் இப்போதுதான் ஒரு நவீன அரிசி ஆலை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இன்னும் இதுபோல பல நவீன அரிசி ஆலைகள் அந்த மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும். அவைகள் ஏற்பட்ட பிறகு தவிட்டு எண்ணெ ஆலை ஒன்றும் அங்கே துவங்கப்படும். அது கூட்டுறவுத் துறையில் தான் துவங்கப்படவேண்டும் என்று இல்லை. ஒரு டன் எண்ணெ மூவாயிரம், மூவாயிரத்து ஐநூறுவரை விற்கிறது. நூறு டன் தவிட்டில் மூன்று, நான்கு டன் எண்ணெ வரக்கூடும். இது தனியார் துறையில் துவங்கப்படுவ தற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டாலும், அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

**திரு. கே. போஜன்:** இந்த அரிசித் தவிட்டில் இருந்து கிடைக்கிற எண்ணெய் எந்த எந்த வகையில் உபயோகப்படுத்தப்படலாம்? மனிதர்கள் உண்பதற்கு நல்ல சக்தி உடையதாக இருக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இந்த எண்ணெய் சுத்தப்படுத்தப் படாமலேயே சோப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. சுத்தப் படுத்தினால் மனிதர்களுக்கு நல்ல சக்தி தரும் உணவாக இருக்கும். சுத்தப் படுத்தி தேங்காய் எண்ணெயைப்போல பயன்படுத்துவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

### பச்சபனட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கம்

*** 466 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஓசூர் தாலுக்கா, பச்சபனட்டி என்ற ஊரில், பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில், சுமார் மூன்று லட்சம் ரூபாய் வரை மோசடி நடந் [illegible] கொடுக்கப்பட்டனவா?



(இ) ஆம் எனில், எத்தனை பேர்கள் மீது?

(உ) எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

(எ) எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரையில் இந்த மோசடி நடந்துள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பச்சபனட்டி கூட்டுறவு நாணய சங்கத்தில் ரூ. 19,070 வரை கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அது பற்றி புலன் விசாரணை, காவல்துறை நடத்துகிறது. புலன் விசாரணை முழுவதும் முடியவில்லை. முடிந்தபின் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இந்தச் சங்கத்தில் எந்த ஆண்டு முதல் இந்த ஊழல் ஏற்பட்டுள்ளது? இப்படித் தொடர்ந்து ஊழல் நடைபெறா திருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இதுபோன்ற மற்ற சங்கங்களிலும் நடைபெறாதிருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்கிற விவரம் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 24---12---1964 முதல் 30---3---1967 வரை ஊழல் நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு இது கண்டுபிடிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. எட்டுப் பேர்கள் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டிருக் கிறார்கள். வழக்கு இருக்கிறது.

இதைத்தவிர, மற்றச் சங்கங்களைப் பொறுத்தவரையில், என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்பது கொள்கையைப் பொறுத்த விஷயம். அதற்கு ஏப்ரல் 2-ஆம் தேதிதான் பதில் சொல்ல முடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Has this kind of misappropriation happened only in this particular co-operative society or is it happening in other societies in Hosur taluk?

THE HON. THIRU SI. PA. ADITANAR: I do not have with me, at the moment, statistics regarding misappropriaton, which has happened in other co-operative societies in Hosur taluk. I have given the facts and figures regarding this particular society on which this question was raised.

### *Chit funds in Tiruchirappalli district*

*** 467 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR:** Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(a) whether the Government are aware of a large increase of chit funds in Tiruchirappalli district in recent months; and

(b) if so, the steps taken thereon?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்டுநிதிகள் சட்டம், 1--12--1969 முதல் இம்மாவட்டத்திற்கும் இதற்குமுன் இச்சட்டம் செயலில் இராத பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் நடைபெறும் சீட்டுக்கள் இனி இச்சட்டத்தின் விதித்துறைகளால் முறைப்படுத்தப்படும்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்** : இம்மாதிரி சிட்டு பண்டு ஸ்தாபனங்கள் என்ற பெயரால் பொதுமக்களுடைய பணம் பாழடிக்கப்பட்டு மோசமான முறையில் பலர் ஏமாற்றப்படுகிறார்கள். ஆகவே, சரியான முறையில் சிட் பண்டு ஆக்டைக் கொண்டுவந்து, ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : 1961-ஆம் ஆண்டு சிட்பண்டு ஆக்ட் கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், சென்னை நகரம் ஆகிய இடங்களுக்குத்தான் இருந்தது. மற்ற இடங்களில் இந்தச் சட்டம் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் சிட்டுக் கம்பெனிகளின் பெயரால் ஏமாற்றப்பட்டிருப்பது தெரியவந்தது. அதற்குப் பிறகு இந்தச் சட்டத்தை தமிழ் நாடு முழுவதற்கும் இப்போது அமுல்படுத்தியிருக்கிறோம். இந்த ஆண்டில் மட்டும் 32 வழக்குகள் தொடரப்பட்டு, 28 வழக்குகளில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். நான்கு வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன.

**திரு. எஸ். ஜே. இராமசாமி** : இப்போது அநேக இடங்களில் சிட்பண்டு கம்பெனி இரண்டு, மூன்று மாதம் நடைபெறுகிறது. உடனே மக்களை மோசம் செய்துவிட்டுப்போய்விடுகிறார்கள். சிட் பண்டு சட்டம் நகரத்திற்கு மட்டும் தான் இருக்கிறது. மொஃபசல் பகுதிகளுக்கும் இதைக் கொண்டுவருவார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : நமது மாநிலம் முழுவதற்கும் அந்த சிட் பண்டு சட்டத்தை 1----12----1969 முதல் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறோம். எங்கு தவறு நடந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM : Are the Government aware of the fact that in spite of the Act being in existence, there are many unofficial chits which do not possess licence? They do not register themselves. Are the Government aware that this is because there is a lacuna in the Act with the result the chit amount does not go to the one who bids highest in the bidding? Will the Government come forward to bring in a comprehensive legislation to avoid this lacuna in the Act?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்** : இப்போதே என்ன என்ன குறைகள் இருக்கின்றனவோ அவற்றுக்கு இடமளிக்காத முறையில் விதிமுறைகள் இருக்கின்றன. சிட்டுபண்டு கம்பெனிகள் முன்கூட்டியே பணம் டெபாசிட் பண்ணவேண்டும் என்பது பொதுமக்கள் போடுகிற பணத்திற்கு உத்தரவாதம் அளிப்பதற்குத்தான். இதுபற்றி வேறு எந்தவிதமான புகாரும் இல்லை. இருந்தால் அதுபற்றி யோசிக்கலாம்.

### சென்னை நகரில் வாழ்க்கைத்தரப்புள்ளி

*468 வினா.—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்னை நகரத்தில் வாழ்க்கைத் தரப்புள்ளி எண் குறைந்துள்ளதா?

(இ) ஆம் எனில், கடந்த ஆறு மாதங்களில் எவ்வளவு புள்ளி இறங்கி





**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்** : (அ) சென்னை மாநகரில் தொழிலாளர் வகுப்பினருக்கான வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண் குறையவில்லை. ஆனால் சிறிது உயர்ந்துள்ளது. 1969-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 729-லிருந்து ஜூலை மாதத்தில் 730 ஆகவும், ஆகஸ்டு மாதத்தில் 737 ஆகவும் உயர்ந்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் 732-ஆக இறங்கி உள்ளது. அக்டோபர் மாதத்தில் 739 ஆகவும், நவம்பர் மாதத்தில் 747 ஆகவும் உயர்ந்துள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : A few days ago I had asked a question why the cost of living index had not been released for February which is normally due in the first week of March? May I know the reasons for the delay in the release of cost of living report? Is it because it has increased further by a few points? Why has it not been released in the first week of March? Will the Hon. Minister be able to tell us the reasons?

**மமாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்**: எங்கள் துறை புள்ளிவிவாம் தான் தயாரிக்கிறது. அதை வெளியிடுவது நாங்கள் அல்ல. ஆகவே இம்மாதம் வெளிவராதது எங்கள் குற்றம் அல்ல. இதுபற்றி நாங்கள் எழுதிக்கேட்டிருக்கிறோம். ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்கிற கணக்கை எடுத்துக்கொள்வதா கூடாதா என்பது 'பிரச்சினை. தொழிலதிபர்கள் அதைக் கணக்கிட வேண்டுமென்று கூறி இருந்தார்கள். அதுபற்றி எல்லாத்துறை அதிகாரிகளையும் கலந்துபேசியிருக்கிறார்கள். அதன் காரணமாக ஒரு முடிவுக்கு வர வேண்டியிருப்பதால்தான் காலதாமதமோ என்று நினைக்கிறேன். இதுபற்றி புள்ளிவிவர இயக்குநரிடம் கேட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்--விடைகள் முடிவடைந்தன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 3. அறிவிப்பு

### கோவை மாவட்டத்தில் பேரவை உறுப்பினர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டது—குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 144-வது பிரிவின்கீழ் விதிக்கப்பட்டிருந்த தடையை மீறியதற்காக, இ.பி.கோ. 143, 186 ஆகிய பிரிவுகளின்கீழ் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இப்பேரவையின் உறுப்பினர்கள் திருவாளர்கள்

1. க. ர. நல்லசிவன்
2. பி. வேலுச்சாமி
3. டி. டி. எஸ். திப்பையா
4. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்.

5. கே. என். குமாரசாமி

6. அ. சேனாபதி

ஆகியோர் 18—3—1970 அன்று கைது செய்யப்பட்டு பின் 19—3—1970 அன்று விடுதலை செய்யப்பட்டனர் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்ட விவரம் 18—3—1970 அன்று மாலையும் அவர்கள் விடுவிக்கப்பட்ட விவரம் 19—3—1970 அன்று இரவும் எனக்கு அறிவிக்கப்பட்டது.

THIRU K. VINAYAKAM : On a point of information, Sir, May I know whether any cases were registered against them and, if so, under what section of what law?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அந்த இன்பர்மேஷன் எல்லாம் பேரவைத் தலைவர் கொடுக்கிறதா?

THIRU K. VINAYAKAM : You refer to the rule. When you get information, you make a statement to the House. On that information, I have got the liberty to ask whether any cases have been registered.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நோ, நோ, பேரவைத் தலைவர் இந்த அவைக்கு எந்தவிதமான அறிக்கையும் கொடுக்கவில்லை. எனக்குக் கொடுத்த தகவலை—எந்த அளவுக்குக் கிடைத்து இருக்கிறதோ அந்த அளவுக்கு—அறிவிக்கமுடியுமே தவிர அதற்கு மேலும் பேரவைத் தலைவர் இதிலே விவரம் அளிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு நம்முடைய சட்டப்பேரவை விதிகளிலேயும் இடம் இல்லை.

### 4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### கோவை மாவட்டத்தில் பேரவை உறுப்பினர் சிலரும் விவசாயிகளும் கைது செய்யப்பட்டது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரும், திரு. பூவராகன் அவர்களும், திரு. சித்தன் அவர்களும் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், —

**Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I hereby give notice of the following adjournment motion : "That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, namely, the arrest of Legislators, leading agriculturists and farmers numbering several hundreds for holding peaceful agitation to protest against the rise in agricultural electricity power tariff at various centres in Coimbatore District on 18th March 1970"**

**என்று கொடுத்து இருக்கிறார்கள்.**



திரு. பூவராகன் அவர்கள்,

Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I move that the business of the House be adjourned to discuss the following matter of urgent public importance :—

"That a grave situation has arisen as a result of the arrest of about five hundred persons in Coimbatore District where the ryots were peacefully protesting against the unwarranted rise in the charges for electricity supplied for agricultural purposes"

என்று கொடுத்திருக்கிறார்கள். —

அடுத்து திரு. சித்தன் அவர்கள்,

Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I give notice of the followig adjournment motion :—

"To adjourn the proceedings of this House to discuss a matter of urgent public importance, namely, the failure of the Government to avert the peaceful agitation of the agriculturists in Coimbatore District against the enhanced power rates for them and the arrest of about five thousand picketers including the hon. Members of the House Messrs. T.T.S. Thippiah, K. R. Nallasivam, R. Krishnaswamy Gounder, P. Velusamy, K. N. Kumaraswamy and A. Senapathy". என்று கொடுத்திருக்கிறார்கள்.

இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. பூவராகன் அவர்களும் இந்தப் பேரவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்கக் கூடிய அளவிற்கு இந்த ஒத்திவைப்புத் தீர்ப்புத் தீர்மானங்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தவைதானா என்பதைப்பற்றிச் சுருக்கமாக விளக்கவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : சபாநாயகர் அவர்களே, கோவை ஜில்லாவிலே விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் சேர்ந்து விவசாயிகள் உபயோகிக்கும்படியான மின்சாரத்திற்கான கட்டணத்தை எட்டேகால் பைசாவிலிருந்து பத்து பைசாவாக உயர்த்தியிருப்பதற்காக அதைக் குறைக்க வேண்டுமென்று கூட்டம்போட்டு சர்க்காருக்கு விண்ணப்பம் கொடுப்பதற்காகவும் கலெக்டர் ஆபீஸிற்குச் சென்று முறையிடுவதாகவும் கூறியிருக்கிறார்கள். அவர்கள் ஒரு கூட்டத்தைப் போட்டு கலெக்டரிடத்திலே விண்ணப்பம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். திடீரென்று 144 அங்கே பிறப்பித்திருக்கிறார்கள். குறையானவர்கள், விவசாயிகள் கூட்டத்தைப்போட்டுக் குறையைத் தீர்ப்பதற்காக சர்க்காரிடத்திலே அதைப்பற்றிச் சொல்வதற்காக செய்திருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு உரிமையில்லை என்றால் என்ன நிலைமை? இங்கே சட்டமன்றத்திலே இந்தத் தொடர் கூட்டத்திலே எத்தனையோ வரிகளைப் போட்டிருக்கிறார்கள், பிறகு சலுகைகளை அறிவித்து இருக்கிறார்கள். விற்பனை வரியை அதிகமாக்கி பிறகு சலுகைகளை அறிவித்தார்கள். தேங்காய்க்கு வரிபோட்டு பிறகு நீக்கியிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அந்த நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் வராதீர்கள். உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற அந்த விஷயத்தைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அதே நிகழ்ச்சியைத்தான் சொல்கிறேன். அதற்கான காரணங்களைச் சொல்கிறேன். மின்சாரக் கட்டணம் உயர்த்தியிருப்பதற்கு விவசாயிகள் ஆட்சேபனை தெரிவிப்பதற்கு உரிமை இருக்கிறது. கூட்டம்போட்டு அவர்கள் குறைகளைத் தெரிவிப்பதற்கு உரிமை இருக்கிறது. அதற்காக 144 உத்திரவைப் பிறப்பித்து விவசாயிகளையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் கைதுசெய்து அவர்களுக்கு அங்கே குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் வைத்திருக்கிறார்கள். இதைப்பற்றிப் பெருமைப் படுவதாக இருந்தால் பெருமைப்பட்டுக்கொள்ளுங்கள். எனக்கு ஆட்சேபனை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவர்களை கைதுசெய்தது பற்றி விவாதிப்பது எப்படி இந்த அவையை ஒத்திவைக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சொல்லவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : விவசாயி உற்பத்தி செய்யவேண்டிய பிரச்னை, அவனுக்கு வரிப்போடுகின்ற பிரச்னை, அதை ஆட்சேபிப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதற்காக 144 தடை உத்திரவு போட்டு நூற்றுக் கணக்கான பேர்களைக் கைதுசெய்து காவலில் வைத்து இருக்கிறார்கள். சௌகரியம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. புகார்கள் வந்து இருக்கின்றன. 144 தடை உத்திரவு போடுவது என்பது ஜாக்கிரதையாக கிளர்ச்சி நடக்கின்ற நிலையில்தான் செய்யவேண்டும். 144 தடை உத்தரவு அங்கே ஏன் போட்டார்கள்? விவசாயிகளா வன்முறையிலே ஈடுபடக்கூடியவர்கள்? எத்தனையோ வன்முறைச் செயலிலே ஈடுபட்டிருக்கிற நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. கரன்ட் சார்ஜ் அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் விண்ணப்பம் கொடுப்பதற்காக இருந்திருக்கிறார்கள், இதற்காக 144 தடை உத்தரவு போட வேண்டியதில்லை. விவசாயிகள் குறைகளைச் சொல்வதற்காகத்தான் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறான அடிப்படையிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள். திருத்திக்கொள்ள வேண்டும். அவர்கள் விண்ணப்பம் கொடுப்பதற்காகக் கூட்டம் போடவில்லை. கலெக்டர் அலுவலகம், தாலுகா அலுவலகத்திலே மறியல் செய்யவேண்டுமென்று கூட்டம்போட்டிருக்கிறார்கள். பிக்கெட்டிங் செய்வதற்காக.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : சமாதான முறையிலே சொல்வதற்காக தான் கூட்டம்போட்டிருந்தார்கள். சர்க்கார் கொஞ்சம் பொறுமையாக இருந்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்த்திருக்கலாம். எத்தனையோ வரிகளுக்கு எல்லாம் சலுகைகளை அளித்துவிட்டு விவசாயிகளுக்குமட்டும் அளிக்காமல் இருப்பது என்ன காரணம் என்று அவர்கள் கடினமாக வற்புறுத்திச் சொல்லக்கூடாதா? விவசாயிகள் வன்முறையிலே ஒன்றும் இறங்கிச் செய்துவிட மாட்டார்கள். எத்தனையோ வேறு வன்முறைகள் நடந்தன, போலீஸை திவைத்தார்கள், போலீஸை அடித்தார்கள், உதைத்தார்கள். அஜிட்டேஷனை நிறுத்திவைக்கிறோம் என்று பத்திரிகையின் வாயிலாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சர்க்காருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்து நிறுத்திவைக்கிறோம் என்று வேறு சொல்லியிருக்கிறார்கள்.





அப்படியெல்லாம் விவசாயிகள் வன்முறையில் ஈடுபடமாட்டார்கள். எனவே உடனடியாக இதைப்பற்றி கவனிப்பதற்கு இந்தச் சபையை ஒத்திவைக்க வேண்டுமென்றும் இதைப்பற்றி விவாதிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன்** : கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருப்பதை இந்த மன்றத்திலே பொதுவாக எல்லா உறுப்பினர்களும் அதைக் குறைக்கவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். கோயம்புத்தூரிலே விவசாயிகள் சங்கம் சார்பாகவும், விவசாயிகள் சார்பாகவும் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கோரிக்கைகளை முன்பே வைத்திருக்கிறார்கள். கோயம்பத்தூர் மாவட்டம் மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களிலிருந்தும் அதிகப்படுத்தி இருக்கின்ற மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டுமென்ற கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மன்றத்திலேயும் அந்தக் கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. முன்கூட்டியே குறைக்கவேண்டுமென்று கோரியும் அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தாத காரணத்தினாலே அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கின்ற முறையிலே அமைதியான முறையிலே கலெக்டர் அலுவலகத்திலும், தாலுகா அலுவலகத்திலும் குறைகளைக் கூறுவதற்காக கூடியிருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களை கைதுசெய்து ஒரு நாள் வைத்திருந்து அடுத்த நாள் வெளியில் விட்டிருக்கிறார்கள். அமைதியாக அவர்கள் சொல்லவில்லை, வேறு வழியிலே சென்றிருக்கிறார்கள் என்று சொல்வதற்கு அரசாங்கத்திடம் ஆதாரம் இல்லை. முன்னாள் அமைச்சராக இருந்தவர்கள், சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சுருக்கமாகச் சொல்லவேண்டும், அந்த டீடெய்ல்ஸ்க்குள் எல்லாம் போக வேண்டாம்.

**திரு. கோ. பூவராகன்** : அன்றாட நடவடிக்கையிலே இது வரும் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. கோயம்பத்தூர் மாவட்டத்திலே நடந்தது அடுத்து இன்னொரு மாவட்டத்திற்கு தொடர்ந்து போய் இப்படிப்பட்ட கோரிக்கைகள் எழுப்பப்பட்டு மறியல் செய்கின்ற சூழ்நிலை உருவாகிவிடும். அதற்காக இந்த மன்றத்திலே உள்ள நடவடிக்கைகளை ஒத்திவைத்து மேலும் இதைப்பற்றி விவாதம் செய்து விவசாயிகளுடைய குறைகளைப் போக்கி நல்ல முறையிலே சூழ்நிலையை உருவாக்குவதற்காக இந்த மன்றத்தின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : செயலாளரைக் கேட்டால், தங்கள் தீர்மானம், வரவில்லை என்று சொல்லுகிறார்கள் . . .

**Dr. H. V. HANDE** : Sir I gave notice of a similar adjournment motion and handed it over to the Assistant Secretary to be passed on to the Secretary. I took it for granted that he would have brought it to your attention. Now I request you to give me an opportunity, on behalf of my party, to express briefly. . . .

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல் விவசாயிகள் ஏதோ கூட்டம் போட்டு அதன் மூலமாக மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்து தங்களுடைய நிலையை விளக்கி மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ மனுக் கொடுப்பது என்ற அளவில் எந்த முடிவையும் எடுக்கவில்லை. அவர்கள் மூன்று கட்டங்களை முன்கூட்டியே அறிவித்திருக்கிறார்கள். முதல் கட்டந்தான் அவர்கள் கூட்டம் போட்டதும் அடையாளமாக ஒருநாள் உண்ணாவிரதம் இருந்ததும், இரண்டாவது கட்டம் மாநில அரசின் அலுவலகங்கள், கலெக்டர் ஆபீஸ் போன்றவற்றின்முன் மறியல் நடத்துவது என்று துண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். மூன்றாவது கட்டமாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாமல் வரிகொடா இயக்கம் நடத்துவது என்று தீர்மானித்து பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இந்த மூன்று கட்டங்களும் எந்த நிலைக்குக் கொண்டு போய்விடும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணருவார்கள் ஆனாலும் இதிலே என்ன வன்முறை வந்துவிடும் என்று கேட்டார்கள்.

இதிலே கைது செய்யப்பட்டிருப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால் குறிப்பிட்ட சில எம்.எல்.ஏ-க்களைத் தவிர, சில முற்போக்குக் கட்சிக்காரர்களைத் தவிர பெரும்பாலான மற்றவர்கள் இந்த மின் கட்டணத்தால் பாதிக்கப்பட்டவர்களா என்று பார்க்கும்போது மன்றாடியார், சமத்தூர் ஜமீன்தார், வேட்டைக்காரன் புதூர் ஜமீன்தார், பாலை ஜமீன்தார் ஆகிய இவர்கள்தான் பாவம், இந்த ஏழைகள் இந்த மின் கட்டண உயர்வால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக உள்ளபடியே நான் வருந்துகிறேன். (ஆரவாரம்). கம்யூனிஸ்ட் கட்சி அங்கே இணையவில்லை. பி.எஸ்.பி-யும் மற்ற சில முற்போக்குக் கட்சிகளும் அங்கே இணைந்திருக்கின்றன என்றாலும் இதிலே மற்றவர்களும் கலந்து கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் உச்ச வரம்புச் சட்டம். இதை முதல் ஆரம்பமாக வைத்துக் கொண்டு உச்ச வரம்புச் சட்டத்தை எதிர்ப்பதற்கான முயற்சியைத் தூண்டி விவசாயிகளுடைய படையைத் தயாரிப்பது என்று திட்டம் திட்டியிருக்கிறார்கள். அந்தக் காரணத்தாலேதான் மன்றாடியார் அவர்களுடைய இல்லத்திலே மிராசுதாரர்கள் கூட்டம் நடைபெற்று அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் கட்சியின் தலைவரிடத்தில் இதை எடுத்துச் சொல்ல அந்தக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் இன்னும்கூட உச்ச வரம்பின் அளவைக் குறைக்க வேண்டுமென்று கூறியதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் ஆத்திரப்பட, இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் அங்கே உருவாகியிருக்கின்றன என்ற செய்தி கோவை மாவட்டம் முழுவதும் அனைவருக்கும் தெரியும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவருடைய புன்னகைக்குப் பொருள் எனக்கு நன்றாகப் புரிகிறது. இதை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் சிலபேர் இந்தக் காரியத்தில் ஈடுபட்டார்கள். கோவை மாவட்ட விவசாயிகள் சங்கம் என்ற பெயரிலேதான் அவர்கள் இந்த நோட்டீஸைப் போட்டிருக்கிறார்கள். மாவட்ட தாலுகா அலுவலகங்களுக்கு முன்னால் மறியல் போராட்டம் நடத்துவது என்பதாக நோட்டீஸ் போடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. லாரிகளிலும், கார்களிலும் கொண்டு போய் விவசாயப் பெருங்குடி மக்களை நூற்றுக்கணக்கில் எந்த எந்த இடங்களை குறிப்பிட்டார்களோ அந்த இடங்களில் குவிக்கவும் தொடங்கினார்கள். இதில்



வன்முறை ஏற்படும் என்று அரசு கருதியதா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். இதில் வன்முறை ஏற்படக்கூடும் என்பதற்கு ஒரு சிறிய உதாரணம் தர விரும்புகிறேன். பல்லடத்திலிருந்து 30 பேர்களை கைது செய்து கோவை மத்திய சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும்போது அப்படி வந்த போலீசாரை, 300 பேர்கள் வளைத்துக் கொண்டு எங்களையும் வேண்டுமானால் அழைத்துக் கொண்டு போங்கள், இல்லாவிட்டால் அவர்களை விட்டு விட்டுப் போங்கள் என்று அவர்களைக் கைது செய்த சில மணி நேரத்திற்குள் இப்படிப்பட்ட அசம்பாவிதமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், காவல் துறையினரும் மிகச் சாதுர்யமாகச் சமாளித்து, மிகவும் அமைதியான முறையில் நடந்து கொண்டு இன்னும் ஒரு பத்துப் பேர்களை கைது செய்து அழைத்துச் செல்லும் அளவிற்கு அதற்குக்கூட இடம் அளித்து அந்த அளவிற்கு வளைந்து கொடுத்து அந்த நிலையைச் சமாளித்திருக்கிறார்கள். ஆகவே வன்முறை எந்த நேரத்திலும் தோன்றக்கூடும் என்பதற்கான அடையாளங்கள், அறிகுறிகள் ஏற்பட்டதன் காரணத்தினால்தான் 144 தடை உத்தரவு அங்கு போடப்பட்டது. 144 தடை உத்தரவின் மூலம் விவசாயிகளை எல்லாம் அடக்கி ஒடுக்கி மிரட்ட வேண்டும் அல்லது அவர்களை எல்லாம் தண்டிக்க வேண்டுமென்ற நிலையில் இந்த அரசோ அல்லது அங்கிருக்கிற காவல் துறையினரோ அல்லது மாவட்ட அதிகாரிகளோ எண்ணியிருப்பார்களேயானால் கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதை இந்த மன்றத்தில் உள்ள அனைவரும் அறிவார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் 10,000, 13,000, 5,000 என்றெல்லாம் அறிக்கைகள் வந்தன. கோவையில் 39 பேர்கள் கைதானார்கள். அவினாசியில் 20 பேர்கள் கைதானார்கள். திருப்பூரில் 32 பேர்கள் கைதானார்கள். பெருந்துறையில் 25 பேர்கள் கைதானார்கள். தாராபுரத்தில் 31 பேர்கள் கைதானார்கள். பொள்ளாச்சியில் 41 பேர்கள் கைதானார்கள். காங்கேயத்தில் 71 பேர்கள் கைதானார்கள். மொத்தத்தில் 265 பேர்கள் கைது செய்யப்பட்டு கோவை மத்தியச் சிறையில் வைக்கப்பட்டார்கள். 19—3—1970 மாலை ஆறரை மணிக்கு அந்த 265 பேர்களும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

முக்கியமாக வைத்து எழுப்பப்பட்டிருக்கிற பிரச்னை, விவசாயிகள் சங்கத்தின் பிரச்னை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் கூறியதுபோல் மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்ததாகும். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு விளக்கத்தை இந்த மன்றத்திற்கு அளிப்பது என் கடமை என்று நான் கருதுகிறேன். மின்சாரக் கட்டணம் 8¼ பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் நமக்கு ஒரு யூனிட்டுக்கு ஆகும் உற்பத்திச் செலவு 16 பைசாவாகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த 16 பைசா உற்பத்திச்—செலவில் இதுவரையில் 8¼ பைசா என்ற அளவில் யூனிட் சார்ஜ் வசூலித்தபோது நமக்குக் கிட்டத்தட்ட ஒன்பது கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு இருந்தது. அதை ஸப்ஸிடியாக மானியமாகக் கொடுத்து வந்திருக்கிறோம். இப்போது பத்து பைசா என்றாக்கிவிட்டாலும் ஆறு பைசா அளவிற்கு இப்போதும் இந்த அரசு மானியமாக ஆறு கோடி ரூபாய் தருகிறது என்றால்

து விவசாயிகளின் நன்மைக்காகத்தான் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் 12 பைசா என்றிருக்கிறது. அஸாமில் 14 பைசா என்றிருக்கிறது. பீஹாரில் 15 பைசா என்றிருக்கிறது. குஜராத்தில் 14 பைசா என்றிருக்கிறது. ஹரியாணாவில் 16.22 பைசா என்றிருக்கிறது. மத்திய பிரதேசத்தில் 11.5 பைசா என்றிருக்கிறது. மாராட்டியத்தில் 13.87 பைசா என்றிருக்கிறது. ஒரிஸாவில் 12 பைசா என்றிருக்கிறது. இராஜஸ்தானில் 14.3 பைசா என்றிருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் 15 பைசா என்றிருக்கிறது. மேற்கு வங்கத்தில் 12 பைசா என்றிருக்கிறது. மைசூரில் 10 பைசா என்றிருக்கிறது. கேரளத்தில் 8 பைசா என்றிருக்கிறது. கேரளத்தில் எட்டு பைசா என்றிருப்பதற்குக் காரணம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களில் குறைந்த பரப்பளவிற்கு குறைந்த தூரத்திற்குத்தான் மின்சாரம் எடுத்துச் செல்லப்படுவதால் விலை குறைவாக இருக்கிறது. மேலும் அங்கே நீர் மின் நிலையங்களிலிருந்து மட்டும்தான் உற்பத்தி செய்யப்படுவதாலும், மற்ற மாநிலங்களுக்கு அவர்கள் மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலைமை இருப்பதினாலும் யூனிட்டின் விலை அங்கு குறைவாக இருக்கிறது. நமக்கும் அவர்கள் மின்சாரம் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். மைசூரிலிருந்தும் கேரளாவிலிருந்தும் நாம் மின்சாரத்தை விலை கொடுத்து வாங்கி பிறகு அந்த மின்சாரம் செல்வதற்கான பரந்த அளவிற்கான போக்குவரத்துச் செலவை எல்லாம் மேற் கொண்டு அதற்காகிற செலவு, விவசாயிகளைப் போய் எட்டிப்பிடிப்பதற்கான செலவு ஆகிய எல்லாம் சேர்ந்து 16 பைசா என்றளவிற்கு வருகிறது. ஆக 8¼ பைசா என்றிருந்ததை பத்து பைசா என்று ஆக்கியிருக்கிறோம். இதில்கூட இப்போதும் நாம் ஆறு பைசா அளவில் சப்ஸிடி கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதில் நமக்கு ஆறு கோடி ரூபாய் என்ற அளவில் இழப்பு ஏற்படுகிறது.

திரு. பூவராகன் அவர்கள் சொன்னார்கள், இங்குமட்டுமல்ல மற்ற மாவட்டங்களிலும் இதற்கான கிளர்ச்சிகள் தொடங்கப்பட இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய புதுக் கட்சியை வலுப் படுத்துவதற்கு அந்தக் கிளர்ச்சிகள் பயன்படுமானால் அவர்கள் அதைப் பயன் படுத்திக்கொள்ளட்டும். ஆனால் உண்மை நிலையை உணர வேண்டும். இதைப் பற்றித் தமிழ் நாட்டிலுள்ள தலைசிறந்த பத்திரிகைகள் எல்லாம் இந்த மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்ற அளவில்கூட தலையங் கங்கள் எழுதியிருக்கின்றன. ஆகவே இதில் விவசாயிகள் யாரும் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. சர்க்கார் இன்னும் ஆறு கோடி ரூபாய் இழப்பில்தான் விவசாயிகளுக்கான நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். இது ஒன்றே விவசாயிகளிடத்திலும் கைது செய்யப்பட்டவர்களிடத்திலும் இந்த அரசுக்குள்ள அனுதாபத்தைக் காட்டும். இந்த விஷயத்தில் மட்டுமல்ல, தொடர்ந்து பல்வேறு கிளர்ச்சிகளிலும் அரசு, நமது சபாநாயகர் அவர்கள் ஒரு நேரத்தில் சுட்டிக்காட்டியதைப்போல், திருவள்ளுவர் அவர்கள் கூறியிருப்பதுபோல்

" கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர் "



என்ற நிலையை அரசு மேற்கொண்டிருக்கிறது. நேற்றோடு இந்தக் கிளர்ச்சியும் நடைபெறவில்லை. இன்று அதாவது 20-ம் தேதி யாரும் கைது செய்யப்படவில்லை. ஆகவே இதற்காக அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற என் கருத்தினைக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 144 தடை உத்தரவை மீறி கைது செய்வது பற்றி விவாதிப்பது இந்த 42-வது விதியின்கீழ் வராது என்பதைப் பற்றி பலமுறை இந்த அவையில் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு பெரிய தலைவர்கள் கைதானபோது வழங்கப்பட்ட தீர்ப்பினை நான் இங்கு குறிப்பிடுவது நலம் என்று நினைக்கிறேன்.

1953ல் " I have received a number of adjournment motions to discuss matters of urgent public importance. There is a motion given notice of by the Hon. Member Sri P. Rangasamy Reddiar The motion is :-

* That the business of the House be adjourned to discuss a matter of urgent public importance, namely—

" the arrest of Sri C. N. Annadurai and four others belonging to the Dravidian Progressive Federation on 13th July 1953 without any justifiable cause." என்று கொடுத்திருக்கிறார்கள். அதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் கொடுத்த தீர்ப்பை படிக்கிறேன்—

MR. SPEAKER: " This comes under 'day-to-day administration'. The gentleman who has been arrested has a remedy; he can go to the Court. It cannot become the subject matter of an adjournment motion in this House. I rule it out of order. " என்று கொடுத்திருக்கிறார்கள். பிறகு 1957-ல் இன்னொரு பெரிய தலைவர் இதே முறையில் கைதான போது கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு தலைவர் கொடுத்த தீர்ப்பையும் படிக்கிறேன்.

" I have received notice of an adjournment motion from the Hon. Member Sri S. B. Adityan to discuss a matter of urgent public importance, viz., the arrest of Sri E. V. Ramaswami Periyar. Under rule 49, sub-rule (viii) the matter to be discussed must involve more than the ordinary administration of the law. I am, however, satisfied that the arrest of E.V.R. Periyar is in the normal course of the maintenance of law and order and, I, therefore rule the adjournment motion out of order ". என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இது அரசின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உட்பட்டது என்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(5) கவன ஈர்ப்பு

அரசுப் போக்குவரத்து வழித்தடங்களை சிக்கன சீரமைப்பு செய்ததால் ஏற்பட்ட வசதிக் குறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 41-வது விதியின்கீழ் திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்களும், டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அவசர உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த நிகழ்வைக் கொண்டு வருவார்கள்.

THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely the rationalisation of bus routes of the State Transport Service in Madras City and the consequent inconvenience to the public.

*டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் அரசுப் போக்குவரத்து வழித்தடங்களை சிக்கன சீரமைப்பு செய்ததன்*
மு. ப. 10-30 *விளைவாக பொது மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியம் குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை விவாதிக்க பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். —*

THIRU N. S. V. CHITHAN : Sir, under Rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, the Nationalisation of bus routes of the State Transport Service in Madras City and the consequent inconvenience to the public.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir,

The High Power Committee on Tamil Nadu State Transport Department has observed in its report that new routes were opened by the department in the City of Madras without proper traffic planning and resulting in heavy sectors not getting adequate number of buses while light sectors having buses running practically empty most of the day. The Committee has recommended that there is need to rationalise the routes by a merger of the routes with necessary modifications regarding cut-trips, which according to the committee would not only get rid of the evil of bunching, but also improve the economics of operation. The committee has observed that rationalisation of routes is the sine quo non for efficient transport operation. A survey of the pattern of travel of the passengers and of routes in Mylapore, Mandavelli and Adyar areas, which has been conducted by the department, reverted that certain routes were long and circuitous resulting in tedious travel for passengers, that some of the routes operated across areas without adequate traffic leading to under utilisation of buses and low earnings and that the observations of the High Power Committee were correct.

The department, therefore, addressed itself to the problem of rectifying the defects noticed in its survey with the twin purpose of providing better transport facilities to the travelling public and to increasing its earnings. At first, rationalisation of the routes in Mylapore-Mandavalli and later in Saidapet-St. Thomas Mount areas was taken up. The traffic poenial during rush hours was also taken into consideration in rationalising the routes and cut trips besides regular trips were introduced for providing increased services to the public. The buses saved by the rationalisation were put on the roads where traffic potential was on the increase. Consequent on the rationalisation, the number





of single journeys performed by the buses has increased. To cite some examples, in route No. 12-E (Ashok Nagar to Foreshore Estate) the number of single journeys increased by 80 per cent, while in route No. 12-B (Vadapalani to Mandavalli) the number of singles increased by 50 per cent besides a reduction in the direct fare from 35 paise to 25 paise. The rationalisation introduced by the department in the above areas was well received and appreciated by the public.

The department, next took up rationalisation of the routes in the sectors of Adyar, Indira Nagar, Shastri Nagar and Besant Nagar. The traffic in these areas was restricted to certain hours only. Except during peak hours the number of passengers in these areas was few. Further the buses were carrying mostly sector traffic beyond Adyar. Hence, rationalisation of the routes in these areas was done with the idea of developing Gandhinagar terminus as a major local point connecting it to all the important places in the city with increased number of buses at frequent intervals and connecting it to the three colonies of Indira Nagar, Shastri Nagar and Besant Nagar with a circular route (route No. 21-E). The rationalisation made increased the number of singles from 33 per cent to 100 per cent in some of the routes where the traffic potential was high. However, some of the changes made by the department have been objected to by the travelling public of Indira Nagar, Shastri Nagar and Besant Nagar. The residents of these areas felt that their areas were being neglected by the rationalisation of the routes. Though the traffic from and to these areas do not warrant running of the buses as before, the residents of these areas were pressing to revive some of the important routes, viz., route No. 21-A (Indira Nagar to Seethakadhi Nagar) and route No. 23-A (Indira Nagar to Egmore). The department has examined their representations and has introduced the following changes :—

(1) A new route is being operated with effect from 14th January 1970 having the following course :—

Route No. 21-A : Adyar to Seethakadhi Nagar :
(via) Indira Nagar, Venkata Ratnam Nagar, Shastri Nagar, Besant Nagar, Mandavalli, South Beach Road, Mount Road, Central and Parrys.

The operation of this route is being watched.

(2) The buses of route No. 23-A (Adyar to Egmore) have been ordered to ply-via-Indira Nagar, Shastri Nagar and Besant Nagar from Adyar.

(3) Route Nos. 19-M and 19-S (High Court to Thiruvanmiyur-via-Mylapore and Saidapet) respectively :—

These routes have been ordered to be operated again through Shastri Nagar and Indira Nagar with the same complement of buses and trips prevailing before rationalisation.

(4) Consequent on the above changes, the need for the circular route No. 21-E ceased and hence, it has been cancelled.

[1970 மார்ச் 20

DR. H. V. HANDE: While we are thankful to the Minister for the restoration of the old routes, may I know whether the Routes 19-M and 19-S, which touch Indira Nagar and Shastri Nagar, does not touch Besant Nagar? As the residents of Besant Nagar feel that it will be useful if the buses on these routes touch Besant Nagar also, will the Minister be pleased to consider this suggestion and will he be pleased to tell us the position with reference to cut services?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: I am told by the Director of State Transport that no written representation has been received. If any written representation is received, it will be considered.

திரு. என். எஸ், வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு போக்குவரத்து வழித்தடங்கள் சிக்கனச் சீரமைப்பின் காரணமாகக் கட்டண உயர்வு ஏற்பட்டிருக்கிறதா? ஆமெனில் அதன் விவரம் என்ன? புறநகர்ப் பகுதிகளிலிருந்து நேரடியாகச் சென்னைக்கு வர முன்போல் நேரடியாக பஸ் விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, கட்டண உயர்வுபற்றிய குறிப்பில்லை. ஆனால் பத்திரிகைச் செய்தியிலே கட்டணம் அதிகரித்திருப்பதாக வந்திருக்கிறது. அதுபற்றி நான் இயக்குநரிடம் விளக்கம் கேட்டிருக்கிறேன். விளக்கம் கிடைத்தபிறகு, நாளைக்கு என்னுடைய மானியக்கோரிக்கையின்போது பதில் சொல்லுகிறேன்.

(6) அறிக்கை அளித்தல்.

மகளிர் நலந்துறைபற்றிய பரிந்துரைகளின்மேல் அரசு, எடுத்த நடவடிக்கை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: தலைவரவர்களே, மகளிர் நலத்துறை பற்றிய அறிக்கையில் அடங்கியுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய அக்குழுவின் அறிக்கையை (13-வது அறிக்கை) பேரவைக்கு அளிக்கிறேன்.

(7) 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 20—தொழில்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் * என்ற தலைப்பின்கீழ் ரூ.3,85,00,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

* [illegible] கொள்கை விளக்கக் குறிப்பு அச்சிடப்பட்டுள்ளது.



1970 மார்ச் 20]

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,85,00,400-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மிகப்பின்தங்கிய சங்கரன் கோயில், கோவில்பட்டி போன்ற தாலுகாக்களில், கிராமங்களிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கிராமப் பகுதிகளில் சிறு தொழில்களை ஆரம்பிக்க ஒரு ஆய்வுக்குழு அமைக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,85,00,400-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, சிறு தொழில்கள் ஆரம்பிப்பதில் பிற்பட்ட கிராமங்களுக்கு முதல் சலுகையளிப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,85,00,400-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம் இருக்கின்ற நிலையில் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், கிராமங்கள் தோறும், சிறு தொழில்கள் ஆரம்பிப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,85,00,400-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவரவர்களே, சிறு தொழில்களுக்கு போதுமான பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,85,00,400-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரா. கனகசபை: தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், திருவண்ணைநல்லூரில் சர்க்கரை ஆலை ஏற்படுத்தவேண்டும் என விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,85,00,400-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss the need to press the Centre to further liberalise the Industrial Licensing Policy so that efforts of State Government will have more success in increasing the industrial growth, I move the cut motion standing in my name, viz.,

"That the allotment of Rs. 3,85,00,400 under Demand No. 20 Industries be reduced by Rs. 100".

**(ஆ) நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,70,38,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE: Sir, to discuss the need to pressurise the Central Government to include the Pelletisation Plant for steel and iron at Salem in the Fourth Five-Year Plan itself, I move the cut motion standing in my name, viz.

"That the allotment of Rs. 8,70,38,700 under Demand No. 40—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100".

THIRU K. VINAYAKAM: Sir, to discuss the policy and the desirability of implementing immediately the Salem Steel Plant and the desirability of starting small-scale industries in Tiruthani taluk, I move the cut motion standing in my name, viz.—

"That the allotment of Rs. 8,70,38,700 under Demand No. 40—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100".

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, கோவையில் தோல் பதனிடும் தொழிற்சாலை நிறுவவேண்டும் என்று விவாதிக்க "நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,70,38,700-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, எட்டயபுரத்தில் சிமெண்ட் ஆலை பொதுத் துறையில் எற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள், தேவைகள் பற்றி விவாதிக்க "நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,70,38,700-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. வ. ஜார்ஜ்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்று எங்கள் கட்சி சார்பாக மானியக் கோரிக்கையின்மீது கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகின்றேன். இது வரையிலும் இன்று ஆளுகின்ற கட்சியினர் வடக்கு வாழ்கின்றது, தெற்கு தேய்கின்றது என்று வாய் கிழியப் பேசி வந்தார்கள். ஆனால் இன்று பகிரங்கமாகவே ஆய்வு அறிக்கையிலே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், தெற்கு தேயவில்லை, தமிழ்நாடு பல துறைகளிலே உண்மையிலேயே பாராட்டப்படுகிற





நிலையிலே முன்னேறி இருக்கிறது கடந்த 20 வருட கால ஆட்சியின் செயல் திறனால் என்று கூறுகிறார்கள். எனவே அந்த உண்மையை ஒத்துக் கொண்டதற்காக இந்த அரசினரை நான் முதலாவதாகப் பாராட்டுகின்றேன்.

அடுத்தபடியாக, இங்கு தமிழகத்திலே கனிவளங்கள் இல்லையா, தட்டினால் தங்கம், வெட்டினால் வெள்ளி, இடித்தால் இரும்பு என்று எல்லாமே இருக்க, எந்தவித தொழிற்சாலையும் இங்கு இல்லையே என்று அங்கலாய்த்துக் கொண்டவர்கள், இன்று அந்த மாதிரி கனிவளங்கள் இல்லை என்றும், எனவேதான் மணலியிலே ஆரம்பித்திருக்கிற எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை போன்று பெட்ரோ-கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பித்து நமது தொழில் துறையை விஸ்தரிக்கவேண்டும் என்ற உண்மையை உணர்ந்த நிலையை நான் பாராட்டுகின்றேன்:

அடுத்தபடியாக, தொழில் துறையிலே கடந்த தடவைகூட அமைச்சர் அவர்கள் பேசும்போது, எதிர்க்கட்சியினர்கள் தங்கள் உரையிலே ஆக்க பூர்வமான கருத்துக்களை வழங்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் அவர்கள் காங்கிரஸ் கட்சியினர் செய்துவந்த கொள்கைகளையே, திட்டங்களையே தொடர்ந்து செய்து வருவதால் காங்கிரஸ் காரர்களுக்கு வேறு விசேஷமான ஆக்கபூர்வமான கொள்கைகள் இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இந்த ஆய்வுரையிலே 1967-68-ல் தொழில் மந்த நிலைமைக்குப் பின்னர் 1969-லே தொழில் வளர்ச்சி விரைவாக நடந்துகொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் உண்மையில் அவ்வாறு தொழில் வளர்ச்சி முன்னேறி இருக்கிறது என்று குறிப்பிட்டாலும் 1967-68-ல் இருந்த சிக்கலான பிரச்னைகள் இன்னும் சமாளிக்கப்படவில்லை. நூல் ஆலை மில்கள் பலவும் மூடப்பட்டன. நாம் தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் என்று நிறுவி, மூடிய எல்லா மில்களையுமே நடத்தவேண்டும் என்று இருந்தாலும் ஒருசில ஆலைகளைத்தான் எடுத்து நடத்த முடிகிறது. இன்னும் பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இன்றி வாடி வதங்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமை இன்னும் மாற்றப்படவில்லை.

அடுத்தபடியாக, தொழில் உற்பத்தியிலே வளர்ந்துகொண்டிருக்கிறது என்றாலும் அக்ரிகல்சுரல் டிராக்டர்ஸ் 1964-ல் 3,400 உற்பத்தி செய்யப் பட்டது. 1969-லே அதைவிடக் குறைவாக 3,344 தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். இப்போது பசுமைப் புரட்சி நடந்துகொண்டிருக்கிற இந்தக் காலத்திலே இந்த டிராக்டர் உற்பத்தி குறைந்து இருப்பதன் மர்மம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே ரேடியோ ரிசீவர்ஸ் 1966-லே 9,618 என்பது 1969-லே சரி பாதியாகக் குறைந்திருக்கிறது. அதன் காரணம் என்ன என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

அதேபோல பவர் டிரான்ஸ்பார்மர்கள் 1964-லே ஒன்பது லட்சத்து 46 ஆயிரம் கே.வி.ஏ. உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் 1969-லே ஆறு லட்சத்து 92 ஆயிரம் கே.வி.ஏ. உற்பத்தி செய்யப்பட்டது. பவர் டிரான்ஸ்பார்மர்கள் தேவையான அளவு இல்லாத காரணத்தால் தமிழகத்திலே பல இடங்களிலே

பம்ப் செட்டுகளுக்கும் அரிசி ஆலைகளுக்கும் மின்சாரத் தொடர்பு கொடுக்க முடியாமல் நாள் கடத்திக் கொண்டு வருகிற நிலை இருக்கிறது. அந்த நிலையில் 1964-லே இருந்த உற்பத்தியைவிட மூன்றில் ஒரு பாகம் குறைந்து இருக்கிறது என்றால் உண்மையிலேயே இதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. ஆகவே அந்த உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது அறிக்கையிலே மத்திய அரசின் பங்கை நமது மாநிலத்தில் உள்ள தொழில் துறையில் எடுத்தியம்பி இருக்கிறார்கள். ஆனால் அவை அனைத்தையும் பார்க்கும்போது சென்னையைச் சேர்ந்த மணலியிலே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை போன்றவைகளைப் பார்க்கிறோம். இடத்திலே வந்து குவிந்துகொண்டிருக்கிற நிலைமைதான் இருக்கிறது. தொழிற்சாலைகள் பரவலாக அமைவதற்குப் பதிலாக குவிந்துகொண்டிருக்கிற நிலைமை வளர்ந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, தொழிற்சாலைகளைப் பரவலாக்குவதற்கும், மற்றபடி வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்காகவும் கன ரகத் தொழில்களை விட்டுவிட்டு, சிறு ரகத் தொழில்களிலே அதிகக் கவனம் செலுத்தி பல மாவட்டங்களிலும் பகிர்ந்து வைப்போமானால் அது அந்தந்த இடங்களில் முன்னேற்றத்திற்கும், அங்குள்ளவர்களின் வேலைவாய்ப்புக்கும், அதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வசதியாக அமையும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சேலத்து இரும்பாலை பற்றி எழுச்சி நாள் கொண்டாடியும் அது செயல்படத் துவங்கவில்லை. அமைச்சர் அவர்கள் கடந்த தடவை எழுச்சி நாள் கொண்டாடுவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்று எழுச்சி நாள் என்ன ஆனது என்று தெரியவில்லை. அவர்களுக்கு மத்திய அரசுடன் உள்ள நல்லுறவு காரணமாக எழுச்சி நாள் தேவையில்லை என்றாலும், அந்த உறவைப் பயன்படுத்தியாவது உடனடியாக சேலம் உருக்காலையைக் கொண்டு வரவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இதுவரை 753 தொழில் உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 135 உரிமங்கள் செயல்படவில்லை என்று அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆறில் ஒரு பகுதி உரிமங்கள் பயன்படவில்லை என்பது புலனாகின்றது. தனியார் துறையில் கொடுக்கப்பட்டுள்ள உரிமங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்குக் காரணங்கள் என்ன என்பதை அரசு ஆராய்ந்து அதற்கான குறையை நிவர்த்திக்கத் தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

இப்பொழுது ஸ்டேட் இண்டஸ்ட்டிரீஸ் டெவலப்மெண்ட் கமிட்டி என்று அமைத்து நமது மாநிலத்திலே இருக்கிற ஒவ்வொரு இடத்திலேயும் உள்ள தொழில் வாய்ப்புக்களைப்பற்றி ஆலோசித்து பிராஜக்ட் ரிபோர்ட் தயாரிக்கின்ற திட்டம் இருக்கிறது. அது உண்மையிலேயே நல்ல திட்டம். அந்தத் திட்டத்தின்படி தமிழகம் எங்கிலும் இருக்கிற தொழில் வாய்ப்புகளை ஆலோசித்து சிறு ரகத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கான பிராஜக்ட் ரிப்போர்ட் விரைவிலேயே தயாரித்து தொழிற்சாலைகளைப் பரவலாக்குவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.



எங்கள் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், தமிழகத்திலேயே ஜனத்தொகை நெருங்கிய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். தொழிற்சாலைகள் இல்லாத மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். அங்கே ரப்பர், ஃபைபர் போன்ற கச்சாப் பொருள்க்ள் நிறையக் கிடைக்கின்றன. ஆகவே, ஃபைபர்க் ரப்பர் போன்றவற்றைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய பல தொழிற்சாலைகளை அங்கே நிறுவ வேண்டியது பற்றி இந்த அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்திலே இப்போது இலுமனைட் போன்ற மணல்கள் கிடைக்கின்றன. அந்த மணல் தொழிற்சாலை இப்போது சென்ட்ரல் கவர்ன்மெண்ட் திட்டத்தில் இருந்தால்கூட, அதிலே முன்னாலே இரண்டு ஷிப்ட் இருந்தது, இப்பொழுது ஒரு ஷிப்ட் வேலைதான் இருக்கிறது. அங்கே மணல் ஏராளமாகக் கிடைக்கின்றது. எனவே அதைச் சேர்ந்த தொழிற்சாலைகள் ஏற்படுத்தி வேலைவாய்ப்புகள் அதிகம் ஏற்படுத்துவதற்குப் பதிலாக முன்பு இருந்த நிலையிலே இருந்து கீழ் நிலைக்குப் போய்க்கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலையை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தோல் பதனிடும் நிலையம் ஒன்று நமது மாநிலத்தில் நிறுவுவதாக இருக்கிறது. ஓமலூர் என்ற இடத்திலே நல்ல தோல் மார்க்கட் இருக்கிறது. பல மாவட்டங்களிலேயிருந்தும், வேறு மாநிலங்களிலேயிருந்தும் தோல் மார்க்கட்டுக்கு மக்கள் வருகிறார்கள். எனவே அந்த ஓமலூரில் தோல் பதனிடும் தொழிற்சாலையை நிறுவவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் மாண்புமிகு திரு. ஜார்ஜ் அவர்கள் இங்கே ஒரு கருத்தை வெளியிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் சேலத்திலே இரும்பாலைக்காக எழுச்சி நாள் கொண்டாடிற்றே, அது என்ன ஆயிற்று என்றுகேட்டார்கள். உள்ளபடியே நான் அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன்.

ஒரு நேரத்தில், நாங்கள் சேலம் இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்ன நேரத்தில், சேலமாவது, இரும்பாவது என்று பேசியவர்கள், சேலத்து இரும்பு நல்ல முறையில் இருக்கிறது என்று வெளி நாட்டவர்கள் சொல்கிறார்கள், அதைக் கவனிக்கவேண்டும் என்று சொல்லிய நேரத்தில், அது தமிழ் நாட்டில் உள்ள சேலம் அல்ல, அமெரிக்காவில் இருக்கிற சேலம் என்று சொல்லியவர்கள், இன்று 'எழுச்சி நாள் கொண்டாடினீர்களே, அந்தக் கொண்டுவரவேண்டும்' என்று சொல்லுவதை உள்ளபடியே நாம் பாராட்டவேண்டும். இந்த அரசாங்கம் அந்தத் தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை எந்த அளவுக்கு மேற்கொண்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சியினர் உணர்வார்கள். சேலம் இரும்பாலைக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல

நேரங்களில் இந்த மன்றத்தில் இதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது விரைவிலே வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்களும் இம் மன்றத்திலே உறுதி கொடுத்திருக்கிறார்கள்.

தி. மு. க. ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், தொழில்கள் வளர்வதற்கான வாய்ப்பு எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது, அதற்கான திட்டங்கள் என்ன இருக்கின்றன, அதற்கான நடவடிக்கைகளில் எப்படி ஈடுபட்டிருக்கிறோம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். காங்கிரஸ்காரர்கள் ஆட்சியிலே இருந்தபோது 6,993 தொழிற்சாலைகள் இருந்தன. 1968 வரையில் தி. மு. க. ஆட்சிக்கு வந்த இரண்டு காலத்தில் இது 7,394 ஆக உயர்ந்திருக்கிறது. ஆகவே, தி.மு.க. அரசாங்கம் எந்த அளவுக்குத் தொழில் துறையில் அக்கறை காட்டுகிறது என்பதை எதிர்க்கட்சியினர் உணர்ந்து கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், ஏதோ தமிழகத்தில் தொழில்களே நடக்காதது போலவும், தொழில்கள் மந்தமாகி விட்டது போலவும், இருக்கிற தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டது போலவும் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மை நிலை என்ன என்பதைக் கொஞ்சம் அவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் தூத்துக்குடி உரத்தொழிற்சாலையைக் கூட்டுத்துறையிலே Joint Enterprise ஆரம்பிக்க வழி வகைகள் செய்திருக்கிறோம். அதற்கு ஆகப் போகிற செலவு 52 கோடி ரூபாய். நாக்பால் பெட்ரோ-கெமிகல் ரிபைனிங் ப்ராஜெக்ட், அதற்காக ரூ.5 கோடியில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. மெட்ராஸ் ஆயில் ரிபைனரீஸ்க்காக நாம் 44.79 கோடியில் திட்டம் தீட்டியிருக்கிறோம். இதையெல்லாம் சொல்கிற நேரத்தில் 47 கோடி, 52 கோடி என்று சொல்கிற நேரத்தில் இத்தகைய நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்பதை மாற்றுக் கட்சியினர்கள் நிச்சயம் பாராட்டவேண்டும். அது மட்டுமல்ல. தனியார் துறையில் பிளாஸ்டிக் பொருள்கள், ரெசின், ரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கான புதிய திட்டப் பணிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. அதைப்போல சென்னை உரத் தொழிற்சாலை 1971-ல் இயங்கும் என்ற அளவுக்கு ரூ. 63 கோடியில் ஒரு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து இருக்கிறார்கள். சென்னையில் பெட்ரோ-கெமிகல் பல்வகைப் பொருள்கள், உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காக ரூ. 90 கோடியில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது, இதையெல்லாம் நாம் பார்க்கவேண்டும். எதிர்க்கட்சியினர் அரசுக்குத் தொழிற்சாலைகளில் அக்கறை இல்லை என்று சொன்னார்கள். ஜார்ஜ் அவர்கள் சென்னையில்தானே தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறார்கள், சென்னையைச் சுற்றித்தான் ஆரம்பிக்கிறார்கள் என்று குறைபட்டுக்கொண்டார்கள். ஆனால் கோவையில் தொழிற்சாலைகள் பெருகியிருப்பதை நாம் பார்க்கிறோம். தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ரூ. 57 கோடி, ரூ.5 கோடி என்று திட்டம் தீட்டியிருக்கிறோம். தூத்துக்குடி, சென்னையில்தான் இருக்கிறது என்று உறுப்பினர் ஜார்ஜ் அவர்கள் சொல்கிறார்களா என்று எனக்குப் புரியவில்லை. அது மட்டுமல்ல. அரக்கோணத்தில் உருக்குத் தொடர் வார்ப்படத் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறோம். அதுவும் சென்னையில் இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆலங்குளத்தில் சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பித்திருக்கிறோம், ரூ. 627 லட்சம் செலவில் அதுவும் சென்னையில் இருக்கிறதா என்று [illegible] சொல்லவேண்டும் என்று சொல்கிறார்கள்.



சென்னையில் ஆரம்பிக்கிறார்கள் என்று சொல்வது வெளியில் இருப்பவர்களுக்கு, சென்னைக்கு அப்பால் இருப்பவர்களுக்கு ஒரு கருத்து வேறுபாடு வரவேண்டும் என்ற பொருள்பட சொல்வது எதிர்க்கட்சிக்கு அவ்வளவு நல்லது அல்ல என்பதைமட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஹிந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிக்கும் தொழிற்சாலை 1967-ல் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய தினம் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. மேலும் நல்ல முறையில் இயங்குவதற்கான வாய்ப்புகள் இருந்துகொண்டிருக்கின்றன. நாம் ஒன்றைப் பொதுவாக பார்க்கவேண்டும். தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று இந்த அரசாங்கம் திட்டவட்டமாக இருக்கிறது. அந்த இலாகா பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு எல்லா வசதிகளையும் யாருக்கு வேண்டுமானாலும் செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மின்சார வசதி நல்ல முறையில் செய்து தருகிறோம், சலுகைகள் தரப்படும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஒரு கட்டத்திற்கு அப்பாற்பட்டுச் சென்று வட நாட்டில் இருக்கக்கூடியவர்கள்கூட இங்கே வந்து தொழில்களை ஆரம்பிப்பதற்கு எல்லாவித வாய்ப்புகளையும் இந்த அரசாங்கம் நிச்சயமாக உண்டாக்கிக் கொடுக்கும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நாம் ஒன்றை மனதில் கொள்ளவேண்டும்.

எந்தத் தொழிலை ஆரம்பிப்பதாயிருந்தாலும் சரி மத்திய சர்க்காரை நோக்கியிருக்க வேண்டியிருக்கிறது. இந்த நாட்டில் ஒரு பக்கம் விலைவாசி ஏறுகிறது என்று சொன்னால் குறிப்பிட்ட தொழில்கள் குறிப்பிட்ட இடங்களில் இல்லாமல் பல மைல்களுக்கப்பால் இருந்து பொருள்கள் வருகின்ற காரணத்தினால்தான் இந்த நிலை உருவாகி இருக்கிறது. தவிர்ப்பதற்குப் பரவலாக எல்லா இடங்களிலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டால், விலைவாசி குறையும். சிறு தொழில்கள் ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னாலும் சரி, பெரிய தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னாலும் சரி எந்த தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்றாலும், மத்திய சர்க்கார் அந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு, மாநில அரசு ஒன்றுமே செய்ய முடியாத நிலை இருக்கிறது. இந்த நிலையில் தமிழக அரசாங்கமும் சரி அல்லது வேறு எந்த மாநில அரசாங்கமும் சரி என்ன நடவடிக்கையில் ஈடுபட முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய மாநிலத்திற்கு இருக்கிற அதிகாரங்கள் போதுமானதாக இல்லை. தொழில்கள் நன்றாகப் பெருகவேண்டும், விரிவடையவேண்டும், பரவலாக நல்ல முறையில் தொழில்கள் வளர்ச்சி அடையவேண்டும் என்று சொன்னால் அந்த அதிகாரங்கள் மாநிலத்திற்குக் கிடைத்தாகவேண்டும். நாம் எப்படி தூத்துக்குடி துறைமுகத்துக்காகவும் சேலம் இரும்புத் தொழிற்சாலைக்காகவும் எழுச்சி நாள் கொண்டாடினோமோ மாநில சுயாட்சி கேட்பது எந்த அளவுக்கு முக்கியம் என்று கருதுகிறோமோ, அதைப்போல் தொழில் துறையில் உரிமங்கள் வழங்கப்படும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருக்கக் கூடாது, அந்த உரிமை அதிகாரம் மாநிலத்திற்கு வந்தாக வேண்டும். அதற்காக இந்த அரசாங்கம் உள்ளபடியே ஒரு பெரிய போராட்டத்தையே கூட நடத்தியாக வேண்டும் அல்லது எழுச்சி நாளாவது கொண்டாடவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் அந்த அளவுக்கு அங்கே அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. எந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, உரிமம் வழங்கும் அதிகாரம்

மத்திய அரசின் கையில் இருக்கிறது. தனியார் துறையில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதாக இருந்தாலும்கூட, பல தடவை டெல்லிக்குச் சென்று வருவதற்குள் திட்டத்திற்கான பாதி அளவுக்குச் செலவு முடிந்து விடுகிறது. இப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கு இந்த அதிகாரத்தைப் பெறுவதற்கு போராடவேண்டும் என்று இந்த நேரத்தில் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, 1963-ம் ஆண்டு பட்ஜெட் கூட்டத்தில் மாண்புமிகு ஆர். வெங்கட்டராமன் அவர்கள் பேசியதைப் பார்த்தால், ஏதோ அவர்கள் ஆட்சியில் ஆண்டு ஒன்றுக்கு 687 புது பாக்டரிகள் தொடங்கிவிட்டதாகச் சொன்னார்கள். ஆனால், அப்படி எந்த பாக்டரிகள் என்று பார்த்தால், எஸ்.எஸ்.ஐ. என்று சொல்லப்படுகிற ரிஜிஸ்டிரேஷன் செய்து ஆரம்பிக்கிற அந்தத் தொழிற்சாலைகளை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசில், தி.மு.க. ஆட்சியில் ஆச்சரியப்படக்கூடிய அளவுக்கு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட இது உண்மையா என்று பிரமிக்கத்தக்க அளவுக்கு இந்த ஆட்சியில் காரியம் நடைபெற்றிருக்கிறது. இண்டென்சிவ் கம்பைன் என்று இந்த அரசு ஆரம்பித்திருக்கிறது. இந்தக் கம்பைன் என்ன செய்கிறது என்றால், சிறு சிறு அளவில் மூலதனம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் நாட்டில் பரவலாக இருக்கிறார்கள். அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற மூலப் பொருள்களை வைத்துக்கொண்டு தொழில் செய்ய முடியும் என்று நம்பிக்கொண்டிருப்பவர்களுக்கு, அப்படிப்பட்டவர்களுக்குத் தொழில் செய்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கும் வகையில். சேலம், தஞ்சாவூர், ராமநாதபுரம் மாவட்டங்களில் இண்டென்சிவ கம்பைன் போய் இருக்கிறது. அங்கே அதிகாரிகள் சென்றிருக்கிறார்கள். பாங்கு முதலாளிகள் சென்றிருக்கிறார்கள். இயந்திரங்கள் செய்யக்கூடியவர்கள் சென்றிருக்கிறார்கள். அத்தனை பேர்களும் ஒரே இடத்தில் ஒரே நாளில் சென்ற காரணத்தினால் ஒரே நாளில் சேலத்திற்குச் சென்றபொழுது 499 ரிஜிஸ்டிரேஷன் விண்ணப்பங்கள் வரவழைக்கப்பட்டன ஒரேநாளில். 307 பேர்கள் தங்களுக்கு இயந்திரங்கள் வேண்டும் என்று கேட்டார்கள். இப்படிப் பெற்றவர்களுக்கான செலவு ரூ. 36,70,000. அதே போல் தஞ்சாவூரில் 510 பேர்கள் விண்ணப்பங்கள் கொடுத்தார்கள். 308 பேர்கள் இயந்திரங்கள் வேண்டும் என்று சொன்னார்கள். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், இண்டென்சிவ் கம்பைன் அங்கே சென்ற காரணத்தினால், தொழில்கள் துவக்குவதில் அக்கறை இல்லாமல் இருந்தவர்கள், தொழில்களை ஆரம்பிக்கமுடியுமா என்று கற்பனை செய்து கொண்டிருந்தவர்கள், இப்படி அதிகாரிகளெல்லாம் ஒரே நாளில் வந்திருக்கிறார்கள் என்று தெரிந்த உடனேயே, தம்மிடத்திலுள்ள சிறு மூலதனத்தை வைத்துத் தொழில் துவக்கலாம் என்ற எண்ணத்தில் அவர்கள் விண்ணப்பங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த இலாகாவினர் அந்த விண்ணப்பங்களைப் பரிசிலனை செய்து, உடனே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இப்போது அங்கு அந்தத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கான வேலைகள் உடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், சேலம் தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு இண்டென்சிவ் கம்பைன் சென்றது போல் எல்லா மாவட்டங்களுக்கும் இண்டென்சிவ் கம்பைன் செல்லவேண்டும். அதிலும் குறிப்பாக. வட ஆற்காடு மாவட்டம் விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய மாவட்டம், இன்று பரவலாக எந்தத் தொழிலும் செய்ய முடியாத மாவட்டம், அப்படிப்பட்ட மாவட்டத்தில் பல கனிப் பொருள்கள் [illegible] அங்கு இண்டென்சிவ் கம்பைன்



செல்லவேண்டும். சிறு சிறு மூலதனம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்புகளை இந்த அரசாங்கம் செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. தி.மு.க ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் இங்கே கூட்டுறவுத் துறையில் வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகளை ஆரம்பித்திருக்கிறோம். 20 ஆண்டு காலமாக எங்களுடைய ஆட்சியில் பார்த்தீர்களாக என்று சொன்னார்கள். அவர்கள் ஆட்சியில் 6 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் திறக்கப்பட்டிருக்கிறது. இன்றையதினம் வடஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலைகளை அம்பலூர், பிரும்மபுரம் ஆகிய இடங்களில் ஆரம்பிப்பதற்கான ஆக்க வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொழில் நடக்காததைப் போல், தொழில்கள் வராததைப்போல் பேசுகிறார்களே என்றுதான்.

கோயம்புத்தூரில் பஞ்சாலைகள்பற்றிக் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே நிலைமை என்ன என்று எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு 13 ஆலைகள் திறந்திருக்கிறோம். எவ்வளவோ சிரமத்திற்குப் பிறகு மாண்புமிகு முதல் அமைச்சர் மத்திய சர்க்காரிடம் முறையிட்டு, 13 ஆலைகளைத் திறந்திருக்கிறார்கள். ஆயிரக்கணக் 11-00 p.m.
கான தொழிலாளர்களுக்கு வேலைபோய் விட்டது என்றார்கள். ஆனால், 13,000 பேர்கள் வேலையிழந்தவர்கள் என்றால், அதில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் முயற்சியால் 9 ஆயிரம் பேர்களுக்குத் தற்போது வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 4 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கைத்தறித் தொழிலுக்கு இந்த அரசாங்கம் கழிவுத் தொகை என்ற அளவில் 90 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இப்படிப் பரவலாக எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், தொழில்களில் கவனம் செலுத்தியிருக்கிறது.

ஒரே ஒரு விளக்கத்தைச் சொல்லி அமைச்சரவர்களைப் பாராட்டிவிட்டு, முடிக்க விரும்புகிறேன். 1967-க்கு முன்னால் தொழில் துறையில் சில அக்கிரமங்கள் நடைபெற்றிருக்கின்றன. காங்கிரஸ்காரர்கள் காலத்தில் வட நாட்டவர் ஒரே ஒரு அறையில், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர்கள் இருப்பார்கள். அந்தப் பத்து பேர்கள் பெயரிலே போர்டுகள் இருக்கும், பத்துப் பேர்கள் பேரிலும் பர்மிட்டுகள் வாங்கிக் கொண்டு, எவர்சில்வர் கோட்டா வாங்கிக் கொண்டு, அதை வைத்துக் கொண்டு தொழில் நடத்தினாலும் பரவாயில்லை. ஆனால், அவர்கள் அங்கே தொழில்கள் நடத்துவதில்லை, ஒரே அறையில் 10 பேர்கள் பேரில், 10 லைசென்ஸ், 10 பர்மிட்டு வாங்கி, அந்த பர்மிட் காகிதத்தைத் தாங்கள் வைத்துக்கொண்டு வெளிச்சந்தையில், கொள்ளை லாபம் அடிக்க ப்ளாக் மார்க்கெட்டில் விற்றார்கள். ஒரு டன் எவர்சில்வர் 10,000 ரூபாய் என்றால், 30,000 ரூபாய்க்கு விற்றுக்கொண்டு இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, அதையெல்லாம் பரிசிலனை செய்து, அங்கேயிருக்கக்கூடிய கொள்ளை லாபக்காரர்களைக் கண்டுபிடித்து, அதைத் தடுப்பதற்கான உத்தரவுகள் போட்டு, தவறுகளைத் திருத்தும்வகையில் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பர்மிட்டுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பர்மிடுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. உண்மையாகத் தொழில் செய்கிறவர்களைத் தவிர, கொள்ளை லாபம்

அடிக்கிறவர்களுக்கு பர்மிட் இல்லை என்று சொல்லும் அளவிற்கு இப்போதுள்ள மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்ததைப் பாராட்டி முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 20—தொழில்கள், மானியக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு, இவற்றைப் பற்றிய எனது கருத்துக்கள் சிலவற்றை சபைமுன் வைக்க விரும்புகிறேன். நாம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள், மூன்று ஆண்டு திட்டங்கள் ஆக, 18 வருஷத்திட்டங்களுக்குப்பிறகு, நமது தொழில் வளர்ச்சியைப்பற்றி ஆராயப் போகிறோம். தொழில் வளர்ச்சி மூலதனச் செலவுக்காக 12 கோடிக்குமேல் அமைச்சர் கோரியிருக்கிறார்கள். இவ்வளவு இருந்தும்கூட, நமது மாநிலத்தில் தொழில் அதிகம் வரவில்லை, தொழிலுக்கான வாய்ப்புக்கள் இன்னும் பரவலாக இருக்க வில்லை. அதற்கு முக்கியமான காரணம், இந்தத் திட்டங்கள் மேலேயிருந்து மக்கள்மேல் திணிக்கப்பட்டிருக்கின்றன. நாட்டு நிலை, மக்களுடைய நிலை, கிராமங்களுடைய நிலை இவற்றைப்பற்றி ஆராய்ந்து, அடித்தளத்திலிருந்து திட்டங்கள் கிளம்பவில்லை என்பதுதான். ஹக்ஸார் (இம்பீரியல் டுபேகோ கம்பெனியில் சேர்மென்) அசோசியேடட் சேம்பர் ஆப் காமர்ஸ் கோல்டன் ஜூபிலி மாநாட்டில் சென்ற டிசம்பரில் நிகழ்த்திய உரையில் சில புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார். அவை வருமாறு

'For the last eighteen years our savings have persistently fallen short of investment and the gap has been financed by foreign aid. . .'

'In 1967–68, for instance, net investment in our economy was Rs. 3,250 crores whereas domestic saving was only Rs. 2,470 crores. There was thus a deficit of Rs. 780 crores. Now the Planning Commission has set a target of doubling the net domestic product at the end of 1980–81. At the same time the Planning Commission aims at a saving surplus of Rs. 300 crores. From a deficit of Rs. 780 crores to a surplus of Rs. 300 crores. That is the challenge of the seventies'.

சற்றேறக் குறைய 20 ஆண்டுகள் திட்டமிட்ட வேலையும், பற்றுக் குறையை நீக்க இயலாது இருக்கிறது. நமது திட்டங்கள் மனித சக்தியை அடிப்படையாகக் கொண்டு திட்டப்படவில்லை. இன்னும் பத்தாண்டுகள் கழிந்து இன்று இருக்கின்ற 780 கோடி பற்றுக்குறை சரிகட்டப்பட்டு 300 கோடி மீதப்படுத்தப்பட்டாலும்கூட 1960-61-லிருந்து விலைவாசி நிலவரத்தை வைத்துக் கொண்டால், நம்முடைய 'per capita income per mensem' நபர் ஒன்றுக்கு 15 ரூபாய்க்கு மேல் வராது. காரணம் இன்னும் நாம் human factor, human capital and human whalte என்பதை அதிகமாக கணக்கில் எடுப்பதில்லை. நாட்டின் நிலை என்ன ? நாட்டு மக்களுக்கு எந்த எந்த இடங்களில், என்ன என்ன தொழில்கள் கொடுக்க முடியும் என்பதையெல்லாம் நன்கு ஆராய்ந்து, திட்டங்கள் வகுக்கப்படவில்லை. எப்படி நமக்கு வேளாண்மை ஒரு கண்ணோ அஃதே போல் தொழிலும் ஒரு கண். 'உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றார் பாரதி.



வேகமான தொழில் வளர்ச்சி இன்று பட்டணங்களில் இருக்கின்றன. சென்னை இன்றையதினம் ஒன்றுக்கு மூன்றாகப் பெருகியிருக்கிறது. 20 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். கோயம்புத்தூரும் அப்படித்தான். ஒன்றுக்கு மூன்றாகப் பெருகியிருக்கிறது. 2 லட்சம் மக்கள் இன்று 6 லட்சமாக ஆகியிருக்கலாம். இந்த மக்களெல்லாம், கிராமங்களிலிருந்து பல்வேறு காலங்களில் வந்தவர்கள். கெட்டும் பட்டணம் போ" என்ற பொற்படி, பட்டணங்களுக்குப்படையெடுத்தார்கள் நாட்டுப்புறங்களிலிருந்து. ஆதலின் பட்டணங்களில் குடிசை வாழ் மக்களின் பிரச்சினை தீராத பிரச்சினையாக இருக்கிறது. காதி, கிராமத் தொழில் இவைகளுக்கு ஒரு தனி வாரியம், ஒரு தனி இலாகா ஏற்பட்டும் ஆண்டுகள் சில ஓடிவிட்டன. கிராம மக்கள் கிராமங்களிலிருந்து கொண்டே, ஜப்பான் போல, குடிசைத் தொழில்களைச் செய்யவேண்டும். இன்றைக்கு எலெக்ட்ரிசிட்டி அபரிமிதமாகக் கிடைக்கும்போது, வீட்டுக்கு ஒரு தொழில் ஏற்பட வேண்டும். கிராமங்கள் அபிவிருத்தி அடையவேண்டும் என்றால், முன்னேற வேண்டும் என்றால், அங்கே அங்கே கிடைக்கும் மூலப் பொருள்களைக்கொண்டு கிராமத் தொழில்களை அங்கே அங்கே, அந்த அந்த ஊரிலேயே அமைக்க வேண்டும். அதைப்பற்றி அரசு ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஓர் ஆய்வுக் குழுவை ஏற்படுத்தி, மூலப் பொருள்களைக்கொண்டு எங்கெங்கே முடியுமோ அங்கேயெல்லாம் தொழில்களை ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டும். ஸ்விட்ஸர்லாந்தில் (வாச் இண்டஸ்ட்ரி) கடிகாரத் தொழில் இப்படித்தான் குடிசைத் தொழிலாகச் செய்யப்படுகிறது. பங்களூரில் இருக்கும் எச்.எம்.டி. நிறுவனமும், பங்களூரில் உள்ள மக்களுக்கு, சிறு சிறு உருப்புக்களை அவரவர்கள் வீட்டில் இருந்தபடியே செய்ய வசதி அளித்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி என்னென்ன தொழில்களை அவரவர்கள் வீட்டிலேயே செய்ய முடியும் என்பதைக் கண்டறிய வேண்டும். காதி-கிராமக் கைத்தொழில்கள் என்று குறிப்பிட்ட ஒரு சில தொழில்களோடு விடாமல், பல தொழில்களும் வளருவதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. கி. ஜயராமன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன், தொழில் மானியத்தைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய அமைச்சரவை மக்களுடைய நலனில் இதயசுத்தமான நம்பிக்கையையும் அக்கறையையும் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். 1967-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் அமைதியான முறையில் புரட்சிக்கு வித்திட்டு, இன்றையதினத்தில் நம்முடைய கலைஞர் அவர்கள் அதிக தானிய உற்பத்தியின் மூலம் பசுமைப் புரட்சியையும், தொழிற் புரட்சியையும் செய்திருக்கிறார்கள். இந்திய அரசியல் அரங்கிலேயே நம்முடைய மாநிலம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. முதலில் பசுமைப் புரட்சி, அதையடுத்து வருவது தொழிற்புரட்சி. தொழிற்புரட்சியை நடைமுறையிலே காணவேண்டுமென்பதற்காக தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் வளர்ச்சிக்காக மொத்தமாக சென்ற ஆண்டில் ஒதுக்கப்பட்டது 372 லட்சம் ரூபாய். ஆனால் தற்போது இந்தத் தொகை 385 லட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு ஆங்காங்கே தொழிற்சாலைகள் மூடப்படும், எங்கு பார்த்தாலும் மூடுவிழாக்கள்தான் நடைபெறும், திறப்பு விழாவே இருக்காது என்றெல்லாம் கனவு கண்டார்கள், பேசினார்கள். அவர்களுடைய எண்ணங்களையெல்லாம் குலைக்கும் வகையில் நாம் சென்ற ஆண்டில் பொதுத் துறையில் நான்கு நிறுவனங்களையும், தனியார் துறையில் 91 தொழில் நிறுவனங்களையும் ஏற்படுத்தியிருக்கிறோம்.

1966-67-ல் காங்கிரஸ்காரர்கள் இந்த மாநிலத்தை ஆண்டபோது தொழில் துறையில் வருவாய் மாநில மொத்த வருவாயில் 20.15 சதவிகிதமாகும். ஆனால் நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, 1968-69-லே தொழில் துறையில் மட்டும் வருவாய் மாநில மொத்த வருவாயில் 21.93 சதவிகிதம். ஆக, இவைகளையெல்லாம் செய்து, நாம் இந்த மாநில மக்களின் இதயசுத்தமான நம்பிக்கையைக் கொண்டவர்களாக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மத்திய அரசுகூட தங்களுடைய தொழில் முதலீட்டை அதிகமாகச் செய்திருக்கிறது. இரண்டு வருடத்திற்கு முன்னால் மத்திய அரசு தொழில் துறையில் செய்த முதலீடு 357 கோடியாக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இரண்டு ஆண்டுகளிலே தொழில் துறையில் மத்திய அரசு 20 கோடி ரூபாய் அளவில் அதிகமாக முதலீடு செய்திருக்கிறது. அதாவது 377 கோடிக்கு முதலீடு செய்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சிறுதொழில்கள் கழக நிறுவனம் உற்பத்தி செய்கின்ற அளவு 1967-68-ல் 562 லட்சம் ரூபாய் மதிப்புள்ளதாக இருந்தது. அந்தக் கழகத்தின் உற்பத்திப் பொருள்களின் மதிப்பு 1968-69-ல் 726 லட்சம் ரூபாயாக மாறியுள்ளது. காங்கிரஸ் உறுப்பினர்கள், நாங்கள் 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்று சொல்லி பதவிக்கு வந்ததாகச் சொன்னார்கள். அந்த நேரத்தில் நிலைமை அப்படியிருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, வடக்கு வாழ்ந்தது நிறுத்தப்பட்டு, மத்திய அரசும், மாநில அரசும் தொழில் துறையிலே அதிக முதலீடு செய்யும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். தொழில் துறையிலே அதிக முதலீடு செய்யும் நிலைமையை நடைமுறையில் காண்கிறோம்.

மற்றும் சில நண்பர்கள், இந்த மாநிலத்தில் சட்டம், அமைதி கெட்டுவிட்டது, தொழில் அமைதி கெட்டு, தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். தொழில் அமைதி கெட்டுவிட்டது என்று பெருந்தலைவர்கள் எல்லாம் சொன்னார்கள். கடைசியில் 'சட்டி சுட்டதடா, கைவிட்டதடா' என்று சொல்லும் அளவுக்கு அவர்கள் பேச்சை மாற்றிக்கொண்டு, மொழி, மொழி என்று அங்கலாய்த்துக் கொண்டு, நம் தொழில் வளர்ச்சியைப் பார்க்கிறார்கள். நம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியினைப் பாராட்டி இண்டியன் என்ஜினீரிங் அசோசியேஷன் தலைவர் திரு. பாலாக் அவர்கள் மனமுவந்து பாராட்டியிருக்கிறார்கள். மத்திய அரசும் தொழில்களில் அதிக அளவில் முதலீடு செய்திருக்கிறார்கள், மாநில அரசும் இரண்டு ஆண்டுகளில் தொழில் துறையில் 20 சதவீதம் வளர்ச்சியடைய உறுதி எடுத்து வந்திருக்கிறது. இவ்வாறாக பல வழிகளிலும் தொழில் வளர்ச்சியடைந்து வருகிறது.



சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சேலம் இரும்பாலைக்கு முன்னோடியாக சேலம் உருக்கு உருள்கள் தயாரிப்பு தொழிற்சாலை உண்மையிலேயே வேகமாக வேலைசெய்வதைப் பார்க்கின்றோம். சேலம் இரும்பாலை இங்கே இல்லையென்று காங்கிரஸ் உறுப்பினர்கள் சொன்னார்கள். தமிழகத்தில்தான் அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டு வருகிறது. மேலும் தொழில்கள் சரியாக நடைபெற மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து பல்வேறு தொழில்கள் நசியாமல் பராமரித்து வருகின்றது என்பதைப் பார்க்க வேண்டும்.

அந்நியநாட்டுச் செலாவணி கிடைக்க வேண்டுமானால் ஏற்றுமதி செய்ய வேண்டும். நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து செய்கிறோம். கூட்டுறவு நூற்பு ஆலைகள் நூல் ஏற்றுமதி செய்த புதிய நிகழ்ச்சியை நாம் பாராட்ட வேண்டும். ஏற்றுமதியின் மூலமாக அந்நிய நாட்டுச் செலாவணிக்கு வழிவகை செய்திருக்கிறோம்.

மேலும், பஞ்சாலைகள் விடப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். மூடியிருந்தவைகளில் 13 ஆலைகளைத் திறந்தோம். சர்க்கார் துறையில் நான்கு ஆலைகளை மேற்கொண்டிருக்கிறோம். நாம் இந்த நூலையே நம்பியிருந்தால் வெளி மாநிலத்திலிருந்து துணிகள் வந்து மிகவும் பாதிக்கப்பட்டுவிடும் என்ற காரணத்தினால் மின்விசைத் தறிகளையும் ஆரம்பித்திருக்கிறோம். மின்விசைத் தறியை தனிப்பட்ட முதலாளிகளுக்குக் கொடுக்கக் கூடாது என்றும், தனிப்பட்ட நெசவாளருக்கும் கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் போதிய முயற்சிகளைச் செய்து வருகிறோம். இக்கொள்கை கைத்தறி நெசவாளர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. நம் தமிழகத்தை தொழில்மயமாக, சுவர்க்க பூமியாக அமைப்பதற்கு இந்த அரசு பாடுபடுகிறது என்று சொல்லிக்கொண்டு, மானியக் கோரிக்கையை ஆதரித்து அமர்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டிலே மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலே நடைபெற்றுவரும் சில கேந்திரத் தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதேபோல மாநில அரசாங்கத்தின் கீழ் நடைபெறக்கூடிய தொழில்களும் முக்கியமாக வரா வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது. இன்றைக்கு அரசாங்கத்தின் முடிவு, தூத்துக்குடி திட்டம், இரும்பாலை, உருக்காலை போன்றவைகளை கூட்டுத் துறையில் செய்யவேண்டும் என்றிருக்கிறது. சதர்ன் இண்டியா கார்ப்பொரேஷன் என்ற நிறுவனத்துடன் சேர்ந்து கூட்டுத் துறையில் ஆரம்பிக்கலாம் என்று முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இது சரியான முடிவாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 12 கோடி ரூபாய் முதலீடு போட்டு செய்வதாக அரசாங்கத்தினுடைய தொழில் இலாகா குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 2 கோடி ரூபாய் அளவிற்கு அரசு முதலீடு செய்வதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் உதவியை நாம் பெறக்கூடிய இந்த நேரத்தில் இது முக்கியமான தொழிலாக இருக்கிற காரணத்தால், யாருடைய குறுக்கீடும் இல்லாமல் அரசே இதை ஏற்று நடத்துவதற்குத் தேவை

யான கடன்களை மத்திய அரசிடமிருந்து பெற வேண்டும். அப்படிச் செய்தால் அதனுடைய வருமானம் நம் மாநிலத்திற்கே சேரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அரசாங்கத்தினுடைய கூட்டுத் தொழில் கொள்கையைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்வது அவசியம்.

அடுத்தபடியாக, மேட்டூரிலே உள்ள அலுமினியத் தொழிற்சாலையைப் பற்றி நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஒரு கோடி ரூபாய் அளவிற்கு தமிழக அரசு மின்சார மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மின்சாரம் என்பது அலுமினியத் தொழிலுக்கு மூலப்பொருள் என்று சொல்லப்பட்டது. நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இன்றைக்கு இவ்வளவு பெரிய அளவிற்கு மானியம் கொடுக்கின்ற நிலவரத்தில், அரசே இந்தத் தொழிலை எடுத்துக்கொண்டால் நமது மாநில அரசாங்கத்திற்கு வருமானம் அதிகம் சேரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே நம்முடைய அரசுக்கு ஒரு பங்கு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர அது எந்த அளவுக்குப் பங்கு என்று சொல்லப்படவில்லை. அலுமினியத் தொழில் மிக முக்கியமான தொழிலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கும் மிகப் பெரிய அளவில் நாம் மானியம் கொடுத்து வரக்கூடிய நேரத்தில் லாபம் மட்டும் தனியார் துறைக்கு, இழப்பு மட்டும் மாநில அரசுக்கு என்ற நிலை சரியல்ல. அரசாங்கத்துறையிலேயே அது ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

பொதுவாக, பொதுத்துறையில் ஒரு தொழிலை ஏற்படுத்துவது என்றால் முக்கியமாக தொழிலதிபர்கள்—முதலாளிகள் சொல்வார்கள்--பொதுத்துறையில் ஏற்படுத்தினால் நஷ்டம் தான் வரும் என்பார்கள். அதே சமயத்தில் அவர்களே சொல்வார்கள் தமிழ் நாட்டில் தான் அரசாங்க நிர்வாக இயந்திரம் மிகவும் செம்மையாக நடைபெறுகிறது என்பதாக. நிர்வாக இயந்திரம் துறையில் எடுத்தால் நஷ்டம் தான் வரும் என்று சொல்கிறார்கள் என்றால் திறமையாகச் செயல்படுகிறது என்கிறவர்கள்—தொழில்களை மட்டும் பொதுத் இதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டில் மேலும் மேலும் தொழில்கள் வளர்ந்தாகவேண்டும். அது முக்கியம். பெரிய முதலாளிகள் வளர்ந்தாகவேண்டும் என்பது அல்ல. நம்முடைய தொழில் கொள்கை தனிப்பட்ட அயல்நாட்டு முதலாளிகள், உள்நாட்டு முதலாளிகளின் வளர்ச்சிக்கு வகை செய்வதாக இருக்கக் கூடாது.

இன்றைக்கு அகில இந்திய அரசாங்கம் நம்முடைய தொழில்கள் எல்லாம் பொதுத்துறையில்தான் வளர்ந்தாகவேண்டும் என்பதை கொள்கை அளவில் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நடைமுறைக்கு வருகிறபோது பல சிரமங்களை எடுத்துரைக்கிறார்கள்.

சென்னையிலே மணலியில் பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையை மத்திய அரசு ஏற்படுத்தியது. அதேநேரத்தில் பாறை எண்ணெயைப் பயன்படுத்தி ரசாயன உரம் தயாரிக்க 'மெட்ராஸ் பர்டிலைசர்' என்ற கம்பெனியை மத்திய அரசாங்கம் ஏற்படுத்துகிறார்கள். மணலியிலே பாறை எண்ணெ, உரத் தொழிற்சாலை ஏற்படக்கூடிய நேரத்திலே--மாநில அரசு கூடுமான வரையில் அந்நியநாட்டு முதலாளிகளின் ஒத்துழைப்பு இல்லாமலேயே பலபல சிறுசிறு தொழில்களை அந்தந்த பகுதியில் ஏற்படுத்த முன்வருவது நலமாக இருக்கும்.



தொழில் துறையில் அந்நியநாட்டு முதலீடுகளின் காரணமாக நம்முடைய நாட்டின் பொருளாதார சுதந்திரத்திற்கே ஆபத்து வளர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். தொழில் வளர்ச்சி என்ற பெயரால் மேலும் மேலும் அந்நியநாட்டு முதலாளிகளுக்கு ஊக்கம் அளிப்பதும், நம்முடைய நாட்டு தனிப்பட்ட முதலாளிகளுக்கு ஊக்கம் அளிப்பதும் சரியான கொள்கையாக இருக்காது.

திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் கூட பெரும் முதலாளிகளின் பிடிப்பில் இருந்து நம்முடைய நாட்டுத் தொழில்களை படிப்படியாக விடுவிப்பது என்கிற கொள்கையைக் கூறியிருந்தார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும்போது நமது மாநிலத்தில் புதியதாக ஆரம்பிக்கிற எல்லா முக்கிய தொழில்களையும் அரசாங்கப் பொறுப்பில் நடத்துவதுதான் பலன் அளிக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணமாக, சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொண்டால் உத்திரபிரதேசில் அரசாங்கமே அவைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. பிகார் மாநிலத்திலும் அப்படியே முடிவு செய்திருக்கிறார்கள். அதுபோல இங்கும் செய்வதற்கு நம்முடைய அரசும் பரிசீலனை செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. அந்நியர்களுக்குச் சொந்தமான தேயிலை, ரப்பர் தோட்டங்களையும் தேசிய உடைமையாக்கவேண்டும்.

ஒரு நாடு சுதந்திரமான முறையில் வளர்ச்சி அடையவேண்டுமென்று சொன்னால் அது தன் சொந்த முதலீட்டையே பெரிதும் நம்பியிருக்கவேண்டும். அந்நிய ஆதிக்கம் நம் தொழில்துறையில் அதிகரிக்க அதிகரிக்க அது நம்முடைய தொழில் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிழக்கு நாடுகளின் அனுபவம் நமக்கு அதைத்தான் காட்டுகிறது.

நம்முடைய மாநிலத்தில் சிறுதொழில் கார்ப்பரேஷன் செயல்படுகிற தன்மையைப் பார்க்கிறபோது பெரும் தொழில்களையும் எடுத்து நடத்தலாம் என்றே தோன்றுகிறது. விருத்தாசலத்தில் இருக்கிற பீங்கான் தொழிற்சாலை உள்பட—சிறுதொழில் கார்ப்பரேஷன் மூலமாக நடைபெறுகிற தொழில்கள் நல்லமுறையில் நடக்கின்றன. அவைபற்றி பொதுக் கணக்குக் குழு ஆராய்ந்தது. உற்பத்தியைப் பலதுறைகளில் மாற்றியிருக்கிறார்கள். வருமானம் உயரத் தொடங்கி இருக்கிறது. உற்பத்தியும் அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்த நிலையில் மேலும் மேலும் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்.

மேலும் சிறு தொழில் கார்ப்பரேஷன் கீழ் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்யப்படவேண்டும். அதன் அவசியத்தை தொழில் அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நல இலாக்கா அமைச்சராக இருந்தபோதே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் இன்றைக்கும் அது செய்யப்படவில்லை. அதைச் செய்து, சிறு தொழில் கார்ப்பரேஷனுக்கு ஊக்கம் அளிக்கக் கூடிய வகையில் ஒரு ஏற்பாட்டைச் செய்து அது நல்லமுறையில் வளர்வதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறிகளை எடுத்துக்கொண்டால் இன்றையதினம் 5 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இருபத்தையாயிரம் விசைத்தறிகளைப் புகுத்தும் திட்டம் இருக்கிறது. கூட்டுறவு சொஸைட்டிகளுக்குத்தான் தரப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்றாலும் கூட்டுறவு சொஸைட்டிகள் உற்பத்தி செய்திருக்கிற துணிகளே தேங்கிக் கிடக்கிறபோது அவர்கள் விசைத்தறிகளை ஏற்றுக் கொள்ள முன்வருவார்களா என்பது சந்தேகம். நான் அறிந்த வரையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். அதன்காரணமாக என்ன ஆகும்? வசதி படைத்த மற்றவர்களுக்கு இவை கொடுக்கப்படும். இந்த விசைத்தறிகளின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிற துணிகள் இந்த 5 லட்சம் நெசவாளர்களுக்குப் போட்டியாகத்தான் வந்து அமைவதாக இருக்கும். கைத்தறியாளர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் மாற்று ஏற்பாடுகள் செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். ஆயினும் நடைமுறையில் விசைத்தறிகளைப் புகுத்துவது கைத்தறியாளர்களைப் பாதிப்பதாகத்தான் இருக்கும். நாம் விசைத்தறிகளை இந்த நேரத்தில் புகுத்துவது என்பதை புனர் பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு காஞ்சிபுரம், ஆரணி போன்ற இடங்களில் உள்ள பட்டுத் தறியாளர்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் மைசூரில் இருந்து கோரா வந்துகொண்டிருந்தது. இப்போது அவர்களுடைய ராஜ்யத்திலேயே பட்டு நெய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அதிகமாகச் செய்திருப்பதனால் இங்கே வருவது இல்லை. ஆகவே ஓசூர் போன்ற இடங்களில் கோரா தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுடன், திடீரென்று அனுப்புவதை நிறுத்திவிடாமல் படிப்படியாக நிறுத்தவேண்டுமென்று மைசூர் அரசாங்கத்தையும் நமது அரசு கேட்டுக்கொள்ள வேண்டும்.

அதுபோலத்தான் நாம் பஞ்சாலைக் கழகம் ஒன்றை நிறுவி—கோவையில் மூடப்பட்ட 4 மில்களை எடுத்து நடத்துகிறோம். துயர் தணிப்பு நடவடிக்கையாக இதை மேற்கொண்டபோது நாங்கள் அப்போதே—தனியார் துறையில் இன்றைக்கு இருக்கிற ஊதியம், பஞ்சப்படிக்குக் குறைவாக இங்கே ஏற்படுத்தக் கூடாது என்று வற்புறுத்தினோம். ஆனால் இன்றைக்கு இந்தக் கழகம் எடுத்து நடத்துகிற 4 மில்களிலும் தனியார் மில்களில் கொடுக்கக்கூடிய சம்பளத்தை விடக் குறைவாக, பஞ்சப்படியைவிடக் குறைவாக கொடுக்கிறார்கள். ஆகவே, அரசு உடனே இதைக் கவனித்து மற்ற மில் தொழிலாளர்களுக்குக் குறையாத அளவுக்காவது கூலி நிர்ணயம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் இதுவே நம் அரசாங்கத்திற்குக் களங்கம் ஏற்படுத்துவதாக இருக்கும்.

அடுத்தபடியாக, பல இண்டஸ்ட்ரியல் சொஸைட்டிகள் நடத்தப்படுகின்றன. அரிசன இலாக்கா நடத்துகிறது. தொழில் இலாக்கா நடத்துகிறது. பொதுக் கணக்குக் குழு இவற்றைப் பரிசீலித்தது. இங்கெல்லாம் மூலப்பொருள் கிடைக்காத தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப்படுகிற பண்டங்களும் தேங்கிக்கிடக்கிறது. இதைக் கவனித்து இவர்களுக்கு வேண்டிய மூலப் பொருள், மார்க்கெட்டிங் பெசிலிடி போன்ற உதவிகளை எல்லாம் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மற்றொரு பெரிய பிரச்சினை உலகம் பூராவிலும், நாடு பூராவிலும் ஏற்பட்டு வருவது—இண்டஸ்ட்ரியல் பொல்யூஷன். புதியதாக தொழில்கள் அமைகிற போதே அவை பொதுமக்களுடைய சுகாதாரத்திற்குப் பாதகம் இல்லாத முறையில் திட்டமிட்ட இடங்களில் அமைய வேண்டும். மக்களது குடிக்கும் தண்ணீருக்கும், காற்றுக்கும் கேடுவிளைவிக்கக்கூடியதாக ஆகிவிடக் கூடாது. மேட்டூரில் ஆர். ஸி. கெமிகல் ப்ளாண்ட் காரணமாக இன்றைக்குப் பல கிராமங்களில் உள்ள மக்கள் வாழ்வதற்கு சங்கடமாக, விவசாயம் செய்வதற்குச் சங்கடமாக கிணறுகள் பாதிக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் தவிப்பதைப் பார்க்கிறோம். ஆகவே இதை ஒரு பெரிய பிரச்சினையாகவே கருதி நாட்டுமக்களுடைய சுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்காத முறையில் ஆங்காங்கே புதுத்தொழில்கள் அமைய வகை செய்யவேண்டும்.

மேலும் மெஷின் டூல் ப்ளான்ட் போன்றவைகளை தமிழ்நாட்டில் ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னார்கள். நல்ல முயற்சி பாரின் கொலாபரேஷனோடு இவற்றை ஆரம்பிக்கவேண்டும் என்பது இல்லை. தனிப்பட்ட முதலாளிகள் யாருடைய உதவியும் இல்லாது மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கத்தின் சார்பிலேயே ஆரம்பிக்கலாம். நம்முடைய சொந்தப்பொறுப்பில் எடுத்து நடத்துவதையே நாட்டு மக்கள் வரவேற்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தொழில் கொள்கையில் புதுத்திருப்பம்—பொதுத்துறையிலே எடுத்து நடத்தவேண்டும் என்பது. இந்த நேரத்தில் விசைத்தறிகளைப் புகுத்தாது இருப்பது, பட்டு நெசவாளர்களுக்கு வேண்டிய கோரா கிடைக்கச் செய்வது, சிறுதொழில்களுக்கு ஊக்கம் அளிப்பது ஆகியவையாக அமையவேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். கந்தசாமி:** சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது சில கருத்துக்களை நான் இந்த மன்றத்திலே முன்வைக்க விரும்புகிறேன். பொதுவாக தொழில்கள் பெருகவேண்டும், தொழிற்சாலைகள் வளரவேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் குறையவேண்டும் என்று இந்தியாவிலே உள்ள அத்தனை கட்சிகளும் சொல்லிக் கொண்டிருந்தாலும் கடந்த நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றாததின் விளைவாக தமிழகம் மட்டுமல்ல, பல மாநிலங்களில் தொழில்கள் பெருகவில்லை.

அது மட்டுமல்ல, வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் அதிகமாகிக் கொண்டே வந்திருக்கிறது. என்றாலும் கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தில் ஆளுங்கட்சியாக வந்த பிறகு முன்பு இருந்த நிலைமைகள் மாறி இன்றைய தினம் மத்திய அரசின் உதவிகூட அதிகமாகிவருகிறது என்பதை காங்கிரஸ்காரர்களே ஒத்துக்கொள்வார்கள். மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆளுங்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் வருவதற்கு முன்பே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம்----மத்திய அரசு போராட்டத்தை வைத்துக்கொண்டு நல்ல சலுகைகளை, திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசுக்கு விடுகின்ற கண்டனங்களைப் பயன்படுத்திக்கொண்டு தமிழகத்திலே தொழில் முன்னேற்றத்தை ஏற்படுத்துங்கள் என்று அப்பொழுது சொன்னார்கள்.

சிந்திரி சிரிக்கிறது வடக்கே, முந்திரி சிரிக்கிறது தெற்கே என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய நேரத்தில் அவர்கள் சிரித்தார்கள். அதன் காரணமாக அன்றைக்கு அவர்கள் சொன்னதன் காரணமாக சென்னையிலே உரத் தொழிற்சாலை, தூத்துக்குடியிலே ஒரு உரத்தொழிற்சாலை இன்னும் பல தொழிற்சாலைகள் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தபிறகு அத்தனை எதிர்ப்புகளைத் தெரிவித்ததன் விளைவாக இன்றைக்கு அங்கே காங்கிரஸ் ஆளுங்கட்சியாக இருந்தாலும் இப்படிப்பட்ட பல நல்ல காரியங்களைச் செய்யமுடிகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இருந்தும்கூட—மத்திய அரசினைக் கேட்டு சேலம் உருக்காலை, தூத்துக்குடி உரத் தொழிற்சாலை இவற்றை ஏற்படுத்த வேண்டுமென்று எதிர்க்கட்சியாக இருந்தபொழுது எழுச்சி நாளைக் கொண்டாடியதுபோல—இன்றைக்கும் எழுச்சிநாளைக் கொண்டாடவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

காங்கிரஸ்காரர்கள் சென்ற ஆண்டு எப்படி இருந்தார்களோ இந்த ஆண்டு மத்திய அரசை ஆதரிக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை, மௌனமாக இருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் ஆளுங்கட்சியாக இருந்தாலும்சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும்சரி, தமிழகத்திலே தொழில்கள் பெருகவேண்டும், தொழில் வளர்ச்சி பெருகவேண்டும், பெரும்பாலும் வேலைவாய்ப்புகள் பெருகவேண்டும் என்று மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களானாலும்சரி, அவர்கள் வழிநடக்கும் கலைஞர் அவர்களானாலும்சரி, நம்முடைய தொழில் அமைச்சராக இருக்கின்ற திரு. மாதவன் அவர்களானாலும் சரி டெல்லியுடன் வாதாடுவோம், இல்லாவிட்டால் போராடியே தீருவோம் என்ற முறையிலே யாருக்கும் பயப்படாத முறையிலே உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம் என்ற முறையிலே கலைஞர் அவர்கள் "மத்தியிலே கூட்டாட்சி மாநிலத்திலே சுயாட்சி" என்று சொன்னார்களே அந்த முறையிலே நடந்து வருகிறோம். அவர்கள் சுயாட்சியென்றால் புரியவில்லை என்று சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் முடிந்த அளவிலே மாநில தொழில் வளர்ச்சியிலே அக்கறை காட்டி அரக்கோணத்திலே உருக்கு தொடர்பு வார்ப்படத் தொழிற்சாலை, அருங்குளத்திலே ஒரு சிமிண்ட் தொழிற்சாலை, திருச்சியிலே ஒரு சிமிண்ட் தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மத்திய அரசு பாங்குகளைத் தேசியமயமாக்கி இருக்கிறார்கள். பூராவும் ஆக்காவிட்டாலும் 14 பாங்குகளை ஆக்கி இருக்கிறார்கள். பெரிய பெரிய தொழிலதிபர்கள் பணம் பெறுவதைவிட சாதாரணமாக உள்ள சிறு தொழில் செய்யக்கூடியவர்களுக்குக் கடன் வசதிகள் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. மத்திய அரசு நிர்வாகத்திற்கு உட்பட்டதானாலும் சரி, மாநில தொழில் வளர்ச்சி நிறுவனமானாலும் சரி, சிறுதொழில் வளர்ச்சி நிறுவனமானாலும் சரி மத்திய அரசின் மூலமாக, மாநில அரசின் மூலமாக, சிறு தொழில்கள் மூலமாக பல நல்ல காரியங்கள்களை திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்து வருகிறது என்பதை மாற்றுக் கட்சிக்காரர்கள் கூடப் பாராட்டுகிறார்கள்.

கோயம்புத்தூரிலே ஆலைகள் மூடப்பட்டன என்று சொல்கிறார்கள். மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இரவு பகல் பாராமல் தொழிற்சங்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேசி, கடுமையான வரையில் ஆலைகளைத் திறந்துவைத்தார்கள். ஆலை



களை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று சொல்லி தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் என்ற ஒன்று சென்ற ஆண்டு நிறுவப்பட்டு, ஏறத்தாழ நான்கு ஆலைகளைத் திறக்க வேண்டுமென்ற முறையில் 2 ஆலைகளைக் கோயம்புத்தூரிலே திறந்து, பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. இதையெல்லாம் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், காங்கிரஸ்காரர்கள் தமிழகத்திலே உள்ள ஆளுங்கட்சி ஏற்படுத்தி வருகின்ற சாதனைகளைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான்.

திருச்சி மாவட்டத்திலே உள்ள பாயிலர் பிளான்டை விரிவுபடுத்துவதற்காக மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாக இந்த ஆய்வுரையில் கண்டேன். நாளை மறுநாள் திரு. சவான் அவர்களும் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களும் அந்த இடத்தைப் பார்வையிட்டு, ஹெவி பாய்லர் பிளாண்ட் இன்னும் விரிவுபடுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது இந்த அரசை நாம் நிச்சயம் பாராட்டித்தான் ஆக வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தவர்கள் எப்படியிருந்தாலும் சரி, மத்திய அரசு தொழிற்சாலைகளானாலும் சரி மாநில தொழிற்சாலைகளானாலும் சரி, முடிந்த அளவிலே அமைதியோடு நல்லமுறையிலே எல்லோரும் ஒன்றுபட்டு சிறப்பாக நடத்தக்கூடிய முறையிலே வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்தக்கூடிய முறையிலே செய்யக்கூடிய இந்த அரசை பாராட்டிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஆர். கருப்பையா: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியினர் கொடுத்திருக்கின்ற வெட்டுத்தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக இந்த ஆட்சி ஏற்பட்டு மூன்று ஆண்டுகளாக ஆகியும் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்ற நிலைமையினை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். சில தொழிற்சாலைகளை திறந்தாலும் பெரும்பாலான தொழிற்சாலைகளை மூடுவதென்பது வாடிக்கையாகவே இருக்கிறது. தொழிற்சாலைகள் கிராமப்புறங்களிலே வளர்ந்தால்தான் தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி நாட்டிலே வெகுவாக பெருக முடியும்.

குறிப்பாக பின்தங்கியுள்ள பகுதிகளாக இருக்கின்ற அரியலூர், உடையார்பாளையம் போன்ற பகுதிகளிலே தொழில்வாய்ப்பு ஏற்படுத்தினால் அந்தப் பகுதி முற்போக்கு அடையும். அந்தப் பகுதிகளிலே தொழில்கள் ஏற்படுத்துவதற்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்று அமைச்சர் அவர்கள் கேட்கலாம். விளாங்குடிப் பகுதியிலே அதிகமான அளவிலே சிமிண்ட் செய்வதற்கான மூலப் பொருள்கள் கிடைக்கிறது. அங்கே இருக்கின்ற மூலப்பொருள்களை குறிப்பாக சுண்ணாம்புக்கல்லை லாரியிலே கொண்டுபோய் டால்மியாபுரத்தில் சேர்த்து சிமிண்ட் தயாரிக்கிறார்கள். விளாங்குடிக்கு அருகில் தொழிற்சாலை ஆரம்பிக்க முன்னால் இருந்த அரசாங்கம் யோசனை செய்தது. இந்த யோசனையை இந்த அரசாங்கம் கைவிட்டுவிட்டது என்று அறிகிறேன். விளாங்குடிப் பகுதியிலே ஒரு சிமிண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படி அமைத்தால் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் விவசாயி மக்கள் ஆறு மாதத்திற்குத்தான் விவசாயம் செய்ய முடிகிறது; மீதியுள்ள நாட்களில் அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு முடியும். அந்தப் பின்தங்கிய பகுதி பொருளாதார வளர்ச்சியால் முற்போக்கு அடைய முடியும்.

திருமானூர் பகுதியில் ஏலாக்குறிச்சியிலே ஓடு செய்வதற்கு சிறந்த மண் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். கள்ளிக்கோட்டை ஓடுகளை கேரளாவிலிருந்து நாம் அதிகமாக வரவழைத்து, இப்பொழுது அதனுடைய விலை கூட 40 சதவீதம் அதிகமாகியிருக்கிறது. ஏலாக்குறிச்சியில் ஒரு ஓட்டுத் தொழிற்சாலை அமைத்தால் போக்குவரத்துச் செலவும் குறையும், நம்முடைய மாநிலத்திலே ஓடு செய்யும் தொழிற்சாலை இருப்பதற்கு வாய்ப்பும் கிட்டும். எனவே கள்ளிக்கோட்டை ஓடு தொழிற்சாலை அங்கே அமைக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

புள்ளம்பாடியில் காட்டூர் பகுதியில் சர்க்கரை ஆலை இருப்பதால் காகிதம் செய்வதற்கான மூலப்பொருட்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. அங்கே காகிதம் செய்யக்கூடிய அளவிற்கு சருகுகள், சக்கைகள் இன்னும் பல பொருட்கள் கிடைக்கின்றன. எனவே அங்கே காகிதம் செய்யக்கூடிய தொழிற்சாலை நிறுவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும்.

கூட்டுறவு நூற்பாலைகளிலே கட்சிக்காரர்களை அதிகமாகப் போடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. திருச்சி மாவட்டத்திலே கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது, அங்கே மாவட்டச் செயலாளர் அதற்குத் தலைவராக போடப்பட்டிருக்கிறார்.

குறிப்பாக ஒரு ஆலை இருக்கிறது என்றால், அதற்கு அந்தப்பகுதி சட்டமன்ற உறுப்பினரைத் தலைவராக நியமிக்கலாம். ஆனால் அதற்கு அங்குள்ள அவர்களுடைய கட்சிச் செயலாளரைத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். எங்களுடைய வட்டாரத்தில் ஒரு அரிசன செங்கல் சூளை இருக்கிறது. அதற்கு அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர்தான் தலைவராக வருவது முறை. அதை மாற்றி அவர்களுடைய கட்சிக்காரரையே தலைவராகப் போட்டிருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

பின்தங்கிய பகுதிகளாக உள்ள பெரம்பலூர், அரியலூர் ஆகிய பகுதிகளில் கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்று கூட்டம் கூட்டி, கலெக்டரைக் கேட்டு அவர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று ஆர்.டி.ஓ.விடம் அனுப்பினார்கள். விவசாயிகள் எல்லாம் சேர்ந்து கூடிப் பேசி வேண்டிய உறுப்பினர்களை எல்லாம் தேர்ந்தெடுத்து கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்று சர்க்காருக்கு மனு அனுப்பினோம். அதற்கு இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. காட்டூர் சர்க்கரை ஆலைக்கு ஏரியா எது என்றும் நிர்ணயிக்க வேண்டும். ஏரியாவை நிர்ணயிக்காத காரணத்தால் எட்டியிருக்கும் கரும்பை எடுக்கிறார்கள், பக்கத்தில் உள்ள கரும்பை எடுக்க மறுக்கிறார்கள். இன்றுள்ள நிலைமையில் சர்க்கரை ஆலைகள், சிமெண்ட் தொழிற்சாலைகள் ஆகியவற்றை நாட்டுடைமை பாக்கினால்தான் நாடு நல்ல முறையில் வாழ வாய்ப்பு இருக்கும்.

தொழில் இலாகாவில் சிறு தொழில் கார்ப்பரேஷன் பணியாளர்களை வேலைக்கு மாற்றும்போது 1965-ல் அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று சட்டம் இருந்தது. 1969-ல் அந்தச் சட்டத்தை மாற்றி அந்தத் தொழிலாளர்களை இரு பிரிவாகப் பிரித்து, நிரந்தரமானவர்களுக்குச் சலுகை உண்டு,





நிரந்தரமற்றவர்களுக்குச் சலுகை இல்லை என்று ஏற்படுத்தியதன் காரணமாக, அந்தத் தொழிலாளர்கள் வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள் நிரந்தரமற்றவர்களுக்கும் முன்போல் அந்தச் சலுகையைக் கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. சி. நரசிம்மன் : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தொழில் மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிக்காக அந்த மாவட்டத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அரக்கோணத்தில் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காகவும் நன்றி. இன்று தொழிலில் மந்த நிலை இந்தியா பூராவும் இருக்கிறது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வராதபோதே தொழிற்துறையிலே ஆண்டுத் திட்டங்கள் வாயிலாக தொழில்களை ஏற்படுத்தி வருகிறது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை சுமார் 20,000 கோடி ரூபாய் செலவு செய்து நிறைவேற்றிய பிறகு 1960-61-ல் தொழிற்துறையில் வந்த வருமானம் ஏறத்தாழ 16.9 சதவிகிதமாகும். ஆனால் 1968-69-ல் 21.93 சதவிகித வருமானம் வந்திருக்கிறது. 1960-61-ல் தொழிற்சாலையில் நிகர உற்பத்தி 181 கோடி மதிப்பாகும். ஆனால் 1968-69-ல் அது 317 கோடி மதிப்பாகும். மேலும் 1969-ல் நாம் பல பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பித்து வைத்திருக்கிறோம். தொழில்களைத் துவங்க இதற்கு முன்பு மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் எவ்வளவு மனுக்களை அனுப்பினாலும் ஒன்றிரண்டு மனுக்களைத்தான் அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்கள். மகாராஷ்டிராவுக்கு 16, 20 என்று கொடுப்பார்கள்; குஜராத்துக்கு 10, 15 என்று கொடுப்பார்கள். சென்னைக்கு ஒன்றிரண்டுதான் கொடுப்பார்கள். ஆனால் எட்டு பெரிய தொழிற்சாலைகளை 1969-ல் ஆரம்பித்திருக்கிறோம் என்பது பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும்.

மத்திய சர்க்கார் துறையிலே சென்னையிலே பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையை 45 கோடி ரூபாயில் துவக்கியும், சென்னை உரத்தொழிற்சாலையை 63 கோடி ரூபாயிலும் ஆரம்பிக்கவும் இருக்கிறார்கள். அதை 1971-ம் ஆண்டுக்குள்ளாக முடிக்க இருப்பது இந்தச் சர்க்கார் எந்த அளவுக்குத் தொழிற்துறையில் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. மாநிலத் துறையில் அரக்கோணத்தில் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலையும், ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலையும் டால்மியாபுரத்தில் மூன்றாவது சிமெண்ட் தொழிற்சாலையும் ஆரம்பித்து நடத்த இருக்கிறார்கள். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும், தென்னிந்திய கார்ப்பரேஷனும் சேர்ந்து 'தென் பகுதி பெட்ரோ கெமிகல் தொழில் கழகம்' என்ற புதிய அமைப்பின் கீழ் தூத்துக்குடி உரத் தொழிற்சாலையை ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்று அரசு அறிவித்திருப்பது எந்த அளவுக்கு தொழிற்துறையில் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

[திரு. ஏ. சி. நரசிம்மன்] [1970 மார்ச் 20

சேலம் உருக்குத்தொழிற்சாலைத் திட்டத்திற்காக முன்னோடி சுரங்கத்தை வெட்ட 3.5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டத்திற்கு மத்திய அரசு விரைவில் ஆதரவு கொடுக்க இருக்கிறது என்பதையும் இந்த அரசு அறிவித்திருக்கிறது. இயந்திர துணைக் கருவிகள் செயல் திட்டம், இயந்திரக் கருவித்தொழிற்சாலை, துணுக்கு இரும்புத் தொழிற்சாலை, சோடியம் ஹைட்ரோ சல்பைட் தொழிற்சாலை, துணைக் கருவிகள் தொழிற்சாலை ஆகியவற்றையும் ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

அதே மாதிரி கூட்டுறவுத் துறையிலே உள்ள நூற்பாலைகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். மூன்று புதிய சர்க்கரை ஆலைகளைத் திறக்க திட்டமிட்டிருப்பதுடன் ஏற்கனவே உள்ள ஆலைகளின் உற்பத்தித் திறனையும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரிடத்தில் இருந்து நிதி உதவி பெறுவதில் கூட தமிழகம் மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியான நிலையில் இருக்கிறது. தமிழகம் பூராவும் நல்ல முறையில் தொழில் வளர்ச்சியைச் சீராக்க தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் கனி வள ஆராய்ச்சியை நடத்தி வருகிறார்கள்.

வட ஆற்காடு மாவட்டம் கடந்த 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. பெரிய அளவு தொழில்கள் எதுவும் அங்கு இல்லை. அங்கே உள்ள பெரிய தொழில் பீடித் தொழில் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்கும் வாரத்தில் மூன்று நாட்கள்தான் வேலை கிடைக்கும் நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் வகையில் பல தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். தஞ்சைக்கு அடுத்தபடியாக வட ஆற்காடு மாவட்டத்தில் நெல் உற்பத்தி அதிகம். அங்குள்ள விவசாயிகளுக்கு நல்ல பயன்தரக் கூடிய வகையில் அக்ரோ இண்டஸ்ட்ரிசை ஏற்படுத்த வேண்டும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் மூங்கில் காடுகள் அதிகம். அங்கு ஒரு பேப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. வாலாஜாவில் சோடியம் டைக்ரோமைட் அதிகமாகக் கிடைப்பதால் அங்கு ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மருந்து விலைகள் அதிகமாக விற்கின்றன. மருந்துத் தொழிற்சாலை மிக மிகக் குறைவு. 25 பைசாவில் தயாரிக்கப்படக்கூடிய Tetracycline Hydrochloride மருந்துகள் எல்லாம் 1¼ ரூபாய் விலையில் விற்கிறது. இந்த மருந்துகளின் தயாரிப்பு அதிக அளவில் வட நாட்டுப் பகுதியில்தான் இருக்கிறது. அவற்றை இங்கே தயாரிப்பதற்கு வேண்டிய அளவுக்குப் பொருள்களை இறக்குமதி செய்ய வழி செய்யவேண்டுமென்று சர்க்காரை வலியுறுத்தி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். வட ஆற்காட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்று வைத்திருக்கிறார்கள். அது நல்லமுறையில் செயல்படவில்லை. அது நல்லமுறையில் செயல்பட தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(மணியடிக்கப்பட்டு திரு. பூவராகன் அவர்கள் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்)



1970 மார்ச் 20]

**திரு. கோ. பூவராகன்:** கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக் கப்பட்டிருக்கிற மானியக்கோரிக்கை மீது என் கட்சி சார்பாகக் கொடுக்கப் பட்டுள்ள வெட்டுப் பிரேரணையையொட்டி ஒருசில கருத்துக்கள் சொல்ல விழைகிறேன்.

தொழில் வளம் பெருகவேண்டுமென்றால் தொழிலுக்கு உண்டான ரா மெட்டீரியல்ஸ் கிடைக்க வேண்டும். நல்லமுறையில் தொழில் நுணுக்கம் தெரிந்த பயிற்சி பெற்ற ஆட்கள் கிடைக்கவேண்டும். போதுமான அளவிற்கு மின்சார வசதி இருத்தல் வேண்டும். இதற்கு மேல் பொருளாதாரம் இருக்க வேண்டும். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் முன்னால் சொன்ன மூன்றும் இருக்கின்றன. பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள், மின்சார வசதி இருக் கிறது. மாவட்டங்களையொட்டி சிறு சிறு தொழில்கள் ஆரம்பிக்கக்கூடிய அளவிற்கு ரா மெட்டீரியல்ஸ் கிடைக்கும் அளவிற்கு நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் இவற்றிற்காகப் போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கு கிறோமா என்று பார்த்தால் 1967 தேர்தலுக்கு முன்னால் எந்த அளவிற்கு சொல்லிக் கொண்டிருந்தோமோ அந்த அளவிற்குத்தான் மூன்று ஆண்டுகள் கழிந்த பிறகும் அதையேதான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். மூன்று ஆண்டு களில் நம் நிதி நிலை எவ்வளவோ வளர்ந்திருக்கிறது. அந்த வளர்ச்சிக்குத் தக்கவாறு தொழில்களுக்கு வேண்டிய மூலதனத்தை நாம் போட்டிருக் கிறோமா, தொழில்கள் வளர்ந்துள்ளனவா, அந்த வளர்ச்சிக்கான காரண காரியங்கள் காட்டப்பட்டிருக்கிறதா என்று பார்க்கும்போது அவ்வளவாக இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

தொழில் வளர்ச்சிக்கான மூலதனச்செலவுக்கு என்று 1967-68-ல் 9 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தோம். 1968-69-ல் ரூ. 11 கோடி, 1969-70-ல் 12 கோடி ரூபாய் ஒதுக்கி அதில் எட்டு கோடி ரூபாய்தான் செலவிட்டிருக்கிறோம். நான்கு கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. நாம் ஒதுக்கிய பணத்திற்குக் குறைவாகவேதான் செலவிட்டிருக்கிறோம். ஆகவே நாம் தொழில் வளர்ச்சியில் அவ்வளவு கவனம் காட்டியிருக்கிறோமா என்றால் அப்படி நாம் கொள்ளமுடியாது என்றுதான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1970-71-ல் நாம் எட்டு கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். இது போதுமா என்று பார்க்கவேண்டும். போதாது என்றுதான் நான் சொல்கிறேன்.

தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள், பயிற்சிபெற்றவர்கள் இன்றையதினம் ஏராளமான பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அப்படி வேலையில்லாமல் இருப்பதன் காரணமாகச் சென்ற ஆண்டு தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந் திருக்கிற மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்திருக்கிறது. இன்று என்ஜினியரிங் கல்லூரிகளில் படிக்கிற மாணவர்கள் உற்சாகம் குறைந்த நிலையில் இருப்பதைக் காண்கிறோம். இதற்குக் காரணம் என்ன என்று பார்க்க வேண்டும். குறிப்பாக பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு வேலை கொடுத்தே தீர வேண்டும். தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களோடு தொடர்பு கொண்டு நாம் தொழில்களை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ஏற்கனவே மாவட்டங்கள்தோறும் தொழில் சம்பந்தமாக ஒரு கருத்தரங்கு வைத்தார்கள். எல்லா மாவட்டங்களிலும் கருத்தரங்குகள் வைக்கப்பட்டு அந்த அந்த மாவட்டங்களில் என்னென்ன தொழில்களை ஆரம்பிக்க முடியும் என்பது

அச்சடித்த புத்தகங்கள் வாயிலாக அந்தந்த மாவட்ட அலுவலகங்களில் இருப்பதைப் பார்க்கிறோம். இது எந்தஅளவிற்கு நடைமுறைக்கு வந்திருக்கிறது, தொழில் தொடங்குவது சம்பந்தமாகச் சொல்லப்பட்ட ஆக்க பூர்வமான யோசனைகளைக் கவனத்தில் எடுத்து அரசாங்கம் புதுத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்களா என்று பார்த்தால் மிகக் குறைவாகவே இருக்கிறது.

தொழில் வளர்ச்சிக்காக அரசாங்கம் செலவிட்டிருக்கிற தொகை மிகக் குறைவாகவே இருக்கிறது. சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை கூட சரியான முறையில் செலவு செய்யப்படவில்லை. சென்ற ஆண்டு 12 கோடி ரூபாய் கேட்கப்பட்டு எட்டு கோடி ரூபாய்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நான்கு கோடி ரூபாய்தான் கோரியிருக்கிறார்கள். இப்படி நாம் ஒதுக்கப்பட்ட தொகையைக் கூடச் சரியாக செலவு செய்யாமல் இருந்தால் நம் நாட்டில் தொழில் வளம் எப்படிப் பெருகும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

மீனளத்தை எடுத்துக்கொண்டால் 1967-68-ல் 34 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். 1968-69-ல் 22 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். 1969-70-ல் 20 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது ஆண்டுக்கு ஆண்டு ஒதுக்கப்படும் தொகை குறைந்துகொண்டே வந்திருக்கிறது. 1970-71-க்கு ஒரு ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். என் மீனளம் அவ்வளவு வளர்ந்திருக்கிறதா? மீனள அபிவிருத்தியில் நாம் செய்யவேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. மீனளத்துறையில் நாம் எவ்வளவோ அபிவிருத்திகள் செய்யவேண்டியிருக்கிறது நமக்குள்ளே வாய்ப்புக்கூறுகள் எல்லாம் விவசாயத்தையொட்டியும், கடற்கரையையொட்டியும்தான் இருக்கின்றன. நமக்குச் சிறு சிறு தொழில்களை ஆரம்பிக்க நல்ல—வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றன. அதை நாம் எந்தஅளவிற்கு பயன்படுத்துகிறோம் என்று பார்த்தால் அதில் அதிகக் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை.

1967-68-ல் தொழில்கள் ஆரம்பிக்க 20 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள், ஆனால் 1968-69-ல் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1969-70-ல் 4 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு மூன்று லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு இடத்திலும் ஆண்டுக்கு ஆண்டு குறைத்துக் கொண்டே வந்தால் அவ்வளவு சரியாக இருக்காது.

அரசாங்கம் அறிவிக்கப்பட்ட மூன்றுதொழில்கள், ஒவ்வொரு ஆண்டும் இவை வரப்போகின்றன, வரப்போகின்றன என்று சொல்லிவருகிறார்கள் மூன்று ஆண்டுகளாக. அவையாவன, அரக்கோணத்தில் இரும்பு வார்ப்படத் தொழிற்சாலை, ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலை, டால்மியாபுரத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை இவையாகும். இப்படி இந்தத் தொழிற்சாலைகள் வரப்போவதாக மூன்று ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டே வருகிறார்கள். இவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு? எந்த ஆண்டுக்குள் இவை தொடங்கப்படவிருக்கிறது எந்த ஆண்டில் இவை தொடங்கப்படவிருக்கின்றன என்பதைத் தெளிவாகச் சொல்லவேண்டும்.

நூற்று பதினொன்று லட்சம் ரூபாய் அளவிற்குள்ள உள்நாட்டுக் கருவிகளை வாங்கவேண்டியிருக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறோம். ஆனால் 14 லட்சம் ரூபாய் அளவிற்குள்ள கருவிகள்தான் வாங்கப்பட்டிருக்கிறது. ஏன் இந்தத் தாமதம் என்று தெரியவில்லை. வெளி நாட்டுச் சாமான்கள் வாங்குவதில்





காலதாமதம் ஏற்படுகிறது என்றால், வரப் போக பல சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னால் ஓரளவிற்குப் புரிந்துகொள்ளலாம். ஆனால் உள்நாட்டுச் சாமான்களை வாங்குவதில் ஏன் இந்தத் தாமதம் என்பது எனக்குப் புரியவில்லை. இன்னொரு வேடிக்கை என்னவென்றால் அந்தத் தொழிற்சாலைகளுக்கு நில ஆர்ஜிதம் செய்வதிலும் தாமதம் ஏற்படுகிறது. இப்படி நாம் நிறுவ இருக்கின்ற தொழில்களை, நாம் முழுக்க முழுக்க அர்ப்பணித்துக் கொண்டுள்ள தொழில்களைத் துவக்குவதில் ஏன் இவ்வளவு காலதாமதம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த வருடம் ஒரு கோடி மூலதனம் போடுவது, அடுத்த ஆண்டு ஒரு கோடி மூலதனம் போடுவது என்றும், அதற்கடுத்த ஆண்டு மூலதனம் ஒன்றும் இல்லை, அடுத்த வருடம் இவ்வளவு என்று இப்படிச் சென்று கொண்டிருந்தால் நாம் போடுகிற முதலையும் அதற்காகிற வட்டியையும் சேர்த்துகணக்கிடுகிறபோது அதை லாபகரமாக நடத்தமுடியவில்லை என்ற நிலைதான் ஏற்படுகிறது. ஆகவே அரசாங்கம் நடத்துகிற தொழில்கள் எல்லாம் நஷ்டத்திலேயே அமைகின்றன என்ற ஒரு சூழ்நிலையை நாம் ஏற்படுத்தக்கூடாது.

டால்மியாபுரத்தில் அமைக்க இருக்கிற சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுவதில் ஏன் இவ்வளவு காலதாமதம்? இவற்றையெல்லாம் உடனடியாக ஏற்படுத்த அரசாங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

நெய்வேலியை எடுத்துக்கொண்டால் மின்சார உற்பத்தி செய்கிறோம், உர உற்பத்தியையும் செய்கிறோம். ப்ரிக்கட் உற்பத்தி செய்கிறோம். சிறு சிறு தொழில்கள் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கூறுகள் நம் மாநிலத்தில் இருக்கின்றன. அவற்றைச் செயல்படுத்தவேண்டும். அவற்றை ஏன் அரசாங்கமே ஏற்றெடுத்து நடத்தக்கூடாது? 100 கோடி ரூபாய்க்கு ஒரு பெரிய தொழில் ஆரம்பித்து நடத்துவதைவிட, ஐந்து கோடி, பத்து கோடி ரூபாய் என்ற அளவில் சிறு சிறு தொழில்களை ஆரம்பிப்பது சாலச் சிறந்ததாகும்.

சேலம் இரும்பாலைத் திட்டம் வரவேண்டும், அது வருவதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. மத்திய அரசு எங்கெங்கெல்லாம் கேட்கிறார்களோ அங்கெல்லாம் கொடுப்பது என்ற முடிவிற்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அது வரட்டும், வரவேண்டாமென்று சொல்லவில்லை. வரவேண்டியதுதான். நூறு கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஒரு தொழில் நடத்தும்போது அது லாபகரமாக அமையுமா என்று பார்க்கவேண்டும். முன்னாலேயே அறிவித்து விட்டோம் இரும்புத் தொழிற்சாலை வந்தே தீரும் என்று. ஆகவே அது வந்துதான் ஆகவேண்டும் என்று அப்பிரச்னையை ஒரு கௌரவப்பிரச்சினையாக எடுத்து நாம் அதில் பணம் போடுவதற்கு முன்னால் அது எந்தஅளவிற்கு பயனுள்ளதாக அமையும், எந்த அளவிற்கு அதன் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று பலவகைகளிலும் நாம் கவனம் செலுத்தி ஆராய்ந்து பார்க்க வேண்டும். சேலம் இரும்பாலை வேண்டியதுதான், வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.

அதேபோல் படி அரிசித் திட்டம். ஆண்டுதோறும் எட்டு கோடி, பத்து கோடி ரூபாய் என்று செலவுசெய்தோம். இப்போது அதை நிறுத்தியிருக்கிறோம். முன்கூட்டியே இதைச் செய்திருந்தால் அந்த எட்டு அல்லது பத்து கோடி ரூபாயைத்தொழில் துறையில் செலவு செய்து ஆங்காங்கு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தியிருந்தால் நம் மாநிலத்தில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைத்திருக்கும், அதோடு தொழில் நுட்பம் தெரிந்தவர்களுக்கு ஒரு சந்தர்ப்பமும் கொடுத்திருக்க முடியும். அவர்களே செய்திருக்கவேண்டும்.

அதேபோன்றுதான் இன்றையத் தினம் பல தொழில்களுக்கு லைசன்ஸ் வழங்கப்படுகிறது. லைசென்ஸ் கொடுக்கிறோம். லைசன்ஸ்கொடுத்துவிட்டு ஓராண்டு பார்க்கலாம். அடுத்த ஆண்டு அந்த தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவில்லை என்றால் அடுத்தாற்போல் இருக்கிற அப்ளிகேஷனை கன்சிடர் செய்ய வேண்டும். லைசென்ஸ் வாங்கி வைத்துவிட்டு, உரிமை வந்துவிட்டது, எப்போது வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறார்கள். ஏன் ஆரம்பிக்கவில்லை என்று அரசாங்கம் கேட்டால் கடன் தாருங்கள் என்று கேட்கிறார்கள். கடனைக் கொடுத்தால் அதை வைத்துக்கொண்டு புழக்கத்தை ஏற்பாடு செய்து கொண்டு கடன் வசதி மேலும் இல்லை என்று சொல்கிறார்கள். இந்த முறையை ஓரளவுக்குக் கட்டுப்பாடு செய்யவேண்டும். குறித்த காலத்துக்குள் அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படாவிட்டால் அந்த லைசென்ஸ் ரத்து செய்யப்படும் என்று அரசாங்கமே அறிக்கைவிடவேண்டும். தொழிலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும் புதியதொழில்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்புக் கூறுகளை அறிவிக்க வேண்டும். அதற்கு ஒரு சர்வே இருக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தில் ஜியாலஜிகல் சர்வே இருக்கிறது. நமது அரசாங்கத்திலும் அதுமாதிரி இணையான சர்வே இருந்து ஆங்காங்கே எந்த எந்த ரா மெட்டீரியல்ஸ் கிடைக்கின்றன, எந்த எந்தத் தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து அந்த அந்த தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்பவர்களுக்கு வாய்ப்புக்கூறுகள் தரவேண்டும்.

தொழில் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். தொழில் ஆரம்பிப்பவர்கள் இருக்கிறார்கள். இவ்விருவர்களும் இணைந்து செயல்பட அதிகாரிகளும் இணைந்து இருக்க ஏதாவது நிறுவனம் வைக்கமுடியுமா என்று நாம் பார்க்க வேண்டும். தொழிற்சாலைகளிலே செய்யப்படுகிற பொருள்களை வெளி மார்க்கெட்டிலே விற்பனை செய்ய அரசாங்கம்தான் முயற்சி செய்யவேண்டும். உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் தவக்கப்படுகின்றன.

நந்தம்பாக்கத்திலே இருக்கிற அறுவை சிகிச்சைக் கருவி தொழிற்சாலை மத்திய அரசாங்கத்தாலே நடத்தப்படுகிறது. என்றாலும் அங்கே உற்பத்தி செய்யப்படுகிற கருவிகள் வரவேற்கப்படத்தக்க அளவிலே இல்லாத காரணத்தால், அவைகளுக்கு விற்பனை இல்லாத காரணத்தாலே உற்பத்தி குறைக்கப்படுகிறது. இதுமாதிரி இடர்ப்பாடுகள் ஏற்படுகிறபோது, ஆராய்ச்சி செய்து மாற்று ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் விற்பனை ஆகாத காரணத்தால் உற்பத்தியை சிறிது சிறிதாகக் குறைத்து கடைசியிலே அவை தேவையில்லை என்று மூடுகின்ற அளவுக்குப் போகக்கூடாது. அந்தஅளவுக்கு வந்துவிடாமல் நடைமுறையிலே மாற்று ஏதாவது செய்யவேண்டுமா என்று பார்க்கவேண்டும்.

இப்பொழுது தென்னாற்காடு பகுதியில் மாமண்டூர் பகுதியில் செம்பு கிடைக்கிறது என்று அறிக்கையிலே காணப்படுகிறது. தென்னாற்காடு மாவட்டம் பின் தங்கிய மாவட்டம். வெளிநாட்டின் உதவியோடு அந்த செம்பை எடுத்து நல்ல தொழிற்சாலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும்.



செஞ்சியிலே நூற்பு ஆலைக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது. அந்த லைசென்ஸ் வாங்கியவர் இறந்துவிட்டார். அதற்குப் பிறகு அடுத்தது யார், ஏன் ஆரம்பிக்கப்படவில்லை. ஆரம்பிக்காததற்கு என்ன காரணம்? பின் தங்கிய பகுதியிலே தொழிற்சாலைக்கு லைசன்ஸ் வழங்கப்பட்டு அது ஆரம்பிக்கப்படாமல் இருந்தால் அந்தப் பகுதி எப்படி வளரும் என்றே தெரியவில்லை.

திண்டிவனம் தாலுகாவிலே சிமென்ட் செய்வதற்கு வேண்டிய ராமெட்டீரியல்ஸ் கிடைக்கின்றன. எனவே, அங்கே ஒரு சிறிய தொழிற்சாலையை, டால்மியாபுரத்திலே துவங்குவது போன்ற சிறிய தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் இப்பொழுது முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது அரசாங்கம் மூன்று சர்க்கரை ஆலைகள் வைக்கவேண்டும் என்று யோசனை செய்திருக்கிறது. அவற்றிலே ஒன்றை திருவெண்ணெய்நல்லூரிலே வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே அதிக சர்க்கரை சத்து வாய்ந்த கரும்பு உற்பத்தியாகிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே இரண்டு சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அங்கே கொடுக்கப்போவதைக் கொடுக்கவேண்டும் என்று கேட்கவில்லை. அதுவும் பின்தங்கிய மாவட்டந்தான். தென் ஆற்காடு மாவட்டத்திலேயும் ஒரு சர்க்கரை ஆலை நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலத்திலே உள்ள பீங்கான் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் தேங்கிக்கிடக்கின்றன. என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பொருள்கள் தேங்கி இருப்பதற்கு பல காரணங்கள் உண்டு. அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் வடலூரிலே இதேபோன்று ஒரு தொழிற்சாலை தனியார் துறையிலே ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. இந்ததொழிற்சாலை அந்த அளவுக்கு தரத்திலும் சிக்கனத்திலும் ஒப்பிட முடியாத அளவுக்கு இருப்பதால் பொருள்களின் விலை அதிகமாக இருக்கிறது. ஆகவே தரத்தையும் சிக்கனத்தையும் ஏற்படுத்தி அந்த தொழிற்சாலை நன்றாக செயல்படச் செய்ய வேண்டும். அப்படி இல்லை என்றால் வீட்டிலே பயன்படுகிற பொருள்கள் செய்வதற்கு மாற்று முயற்சி ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும்.

நெய்வேலியிலே கழிவு சாம்பல் அதிகமாகக் கிடைக்கிறது. இந்தக்கழிவு சாம்பலைப் பயன்படுத்தி தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டும். நெல் உமியிலே யிருந்து எண்ணெய் எடுக்கவேண்டும் என்று நடைமுறையிலே ஒரு தொழிற்சாலை தொடங்கி இருக்கிறார்கள் என்று பார்க்கும்போது அது பாராட்டப்பட வேண்டியதொன்று, அதேமாதிரி கழிவுச் சாம்பலிலே இருந்து சிமென்ட் தயாரிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கழிவுச் சாம்பல் அனாவசியமாக பயன்படாமல் இருக்கிற நிலையைப்பார்க்கிறோம்.

அதேபோன்று கரும்பிலே இருந்து சக்கை இன்றைய தினம் வீணாகப் போகிறது. அதைக் கார்டு போர்டாகச் செய்யலாம், வேறு விதமாகப் பயன்படுத்தலாம் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே ஒரு ஆலைதான் இருக்கிறது செய்ய முடியவில்லை என்று சொல்லலாம். இன்றைக்கு பதின்மூன்று ஆலைகள் இருக்கின்றன. ஆகவே, அவைகளிலே கிடைக்கிற கரும்பு சக்கையிலே பொருள்கள் செய்ய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டும். அதேபோல் மணிலா தோலிலேயிருந்தும் பொருள்கள் தயாரிக்கவும், தொழிற்சாலை

அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும். முந்திரிக் கொட்டை இருக்கிறது. அது இன்றைக்கு அரசாங்க உடமையாக இருப்பதாலே அதற்காகவும் தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மன்றத்திலே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் விசைத் தறியைப் புகுத்துவதால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப் படுவார்கள் என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் உள்ளபடியே அந்தக் கருத்தை மறுக்க விரும்புகிறேன். நமது தமிழ்நாட்டிலே தயாரிக்கப்படுகின்ற நூல், இங்கே இருக்கின்ற கைத்தறிகளுக்கு தேவைப் பட்டதுபோக மீதம் இருக்கிற நூல் எல்லாம் வடக்கே இருக்கிற பம்பாய்க்கும் அகமதாபாத்துக்கும் சென்று அங்கு துணியாக நெய்யப்பட்டு இங்கே வியாபாரப் பொருள்களாக வருவதை பார்க்கிறோம். அப்படி நம்முடைய பகுதியிலே உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூலுக்கு அதிகமான நூல் வேறொரு மாநிலத்திற்குச் சென்று துணியாக நெய்யப்பட்டு மீண்டும் வியாபாரப் பொருளாக வருகிறபோது, இங்கே நமக்குத்தான் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படுகிறதே தவிர இதனால் கைத்தறியாளர்கள் யாருக்கும் பாதிப்புவர நியாயம் இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல முன்னாள் அமைச்சர் மாண்புமிகு உறுப்பினர் பூவராகன் அவர்கள் இந்த அரசாங்கம் பொதுத் துறைக்கு குறைவாக ஒதுக்குகிறார்கள் என்று சொன்னார்கள். உள்ளபடியே நமது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தொழில் துறையை விரிவு படுத்துவதற்கு பணம் ஒதுக்கவேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் நமக்கு வருகின்ற வருமானத்தை வைத்துத்தான் அந்த காரியத்தைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்ற அவசியத்திலே இருக்கிற காரணத்தாலேதான் குறைவாக ஒதுக்குகிறோமே தவிர வேறு —காரணம் கிடையாது. இன்றைக்கு அவர்களைச் சார்ந்த மத்திய அரசாங்கம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏறத்தாழ 3,500 கோடி ரூபாய் தொழில் துறைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். நியாயமாக நமது தமிழ்நாட்டின் மக்கள் தொகைக்கு 250 கோடி ரூபாய் தொழிற் துறைக்காக ஒதுக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டுக்கு ஒரு கோடி ரூபாய்கூட பணம் ஒதுக்க வில்லை இந்தக் கருத்தை அவர்களெல்லாம் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதே நோக்கில் இன்னும் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். நமது தொழிலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திலேயிருந்து பல்வேறு தொழில்களை தொடங்குவதற்காக இடங்களையெல்லாம் ஒதுக்கி, நான்காவது ஐந்தாண்டுத்திட்ட டிராப்ட் புத்தகத்தில் 254-ஆவது பக்கத்தில் 3 புதிய தொழிற்சாலை பற்றி குறிப்பிடுகிறார்கள். (1) 45-வது தொழில், அக்ரிகல்சுரல் டிராக்டர்ஸ் என்று குறிப்பிடுகிறார்கள். அதற்கு எந்தவிதமான இடமும் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படவில்லை. அதேபோல பம்ப்ஸ் கம்பரசர்ஸ் பிராஜக்ட் என்ற தொழிற்சாலை ஒதுக்கியிருக்கிறார்கள். அதே போல மூன்றாவதாக காஸ் சிலின்



டாஸ் பிராஜக்ட் என்ற தொழிற்சாலை ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த மூன்று தொழிற்சாலைகளுக்கும் ஏறத்தாழ 14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூன்று தொழிற்சாலைகளுக்கும் மத்திய அரசாங்கத்திலே எந்த இடங்கள் என்று முடிவு செய்யப்படாமல் இருப்பதைப் பார்க்கிறோம். அதன் காரணமாக நமது தொழிலமைச்சர் அவர்கள் மத்திய அரசை வற்புறுத்தி இந்தத் தொழிற்சாலைகளை தமிழ்நாட்டிலே எடுக்க வேண்டும் என்று பணிவன்போடுக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கோவை மாவட்டத்தில் இன்ஜினியரிங் தொழிற்சாலைகள் செழிப்புற்று இருப்பதைப் பார்க்கிறோம். அங்கே திறமையான தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட தொழிற்சாலையை அந்தப் பகுதியிலே துவங்குவோமேயானால் அங்கே தொழில்கள் வளர்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும். அதற்கான வாய்ப்பை நமது அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பாதுகாப்புத் துறையின் மூலமாக ஜூப்பல்பூரிலே ஒரு டிராக் பாக்டரி இருக்கிறது. இனி டிராக் பேக்டரியை மத்திய அரசு கோவை போன்ற நகரத்திலே ஆரம்பிக்கவேண்டும். நமது நாட்டுக்கே பாதுகாப்புத் துறைக்கு கோவை நகரம் மையமானது. எந்தக் கடலோரப் பகுதியும் இல்லாத மையப்பகுதியிலே இருக்கிற காரணத்தால் அந்த தொழிற்சாலை அங்கே அமைவது கூட மிகச் சிறப்பாக இருக்கும். அதற்கும் அமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கோவையில் டீசல் என்ஜின்கள் ஏராளமாகத் தயாரிக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்திற்கு பூனாவிலிருந்து டீசல் என்ஜின்கள் வந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட டீசல் என்ஜின்களை நம்முடைய மாநிலத்திலே தயாரிப்பதற்கான முயற்சிகளிலே, ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இதைத் தெரிவிக்கும் அதே நேரத்தில், நம்முடைய தமிழ்நாட்டில் இரண்டு தொழில்கள் சிறந்து விளங்குகின்றன. ஒன்று பஞ்சாலைத்தொழில், இரண்டாவது இன்ஜினியரிங் தொழிற்சாலை பஞ்சாலைத்தொழிலில் இன்றையதினம் நெருக்கடியான நிலைமை நிலவிக் கொண்டிருக்கிறது. நம்முடைய நாட்டில் பஞ்சாலைத்தொழில் சிறந்தோங்க வேண்டுமென்றால், அந்தத் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருளாகிய பஞ்சு நிறைய கிடைக்கவேண்டும். பஞ்சாலைக்குத் தேவைப்படும் பஞ்சு 10 இலட்சம் பேல் ஆகும். ஆனால் நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகும் பஞ்சின் அளவு 3½ இலட்சம் பேல்தான். ஏறக்குறைய 6 இலட்சம் பேல் பஞ்சு வெளி இடங்களிலிருந்து நமக்கு வரவேண்டும். பஞ்சு அங்கிருந்து வந்து போகக் கூடியதற்கான போக்குவரத்துச் செலவு பஞ்சாலைகளுக்கு ஒரு சுமையாக இருக்கிறது. எனவே இந்தப் பஞ்சை இங்கேயே உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். காட்டன் 'ஃபெடரேஷன்' என்ற அமைப்பைக்கொண்டுவந்து அதிகமான உற்பத்தியைப் பெருக்கவும், நல்ல தரமுள்ள பஞ்சை உற்பத்தி செய்யவுமான முயற்சியில் ஈடுபட்டார்கள். இன்றையதினம் கோவை மாவட்டத்திலே சில இடங்களில் அந்த முயற்சி கையாளப்பட்டு நல்ல விளைச்சல் ஏற்படுவதைப் பார்க்கிறோம், தரமுள்ள பஞ்சு

கிடைக்கிறது. அப்படிப்பட்ட ஒரு முயற்சியை விவசாயத்துறையின் மூலம் எடுத்தால் தொழில் வளர்ச்சி பாதிக்காது. எனவே, விவசாயத்துறையிலே அந்த முயற்சிக்கான முறையிலே ஈடுபட்டு, ஒரு புதிய திட்டத்தை வகுத்து பஞ்சு உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

காட்டன் சீட்ஸ் நல்ல தாமுள்ளதாக இருக்க வேண்டும். அதைக் கிடைக்க அமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். (மணியடிக்கப்பட்டது) தலைவரவர்களே, இன்னும் 5 நிமிடங்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வளர்ந்திருக்கும் தொழில்கள் உள்ள இடம் கோவைதான் என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறது. எனவே, அவைகளுக்குள்ள இடர்பாடுகளைப்போக்க வேண்டும்.

என்ஜினியரிங் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் 200, 250 பிரிவுகள் இருக்கின்றன. அவைகளுக்குத் தேவையான இரும்பு மட்டும் 4,000 டன். ஆனால் கிடைக்கும் இரும்போ ஏறக்குறைய 20 சதவீதத்திற்கு குறைவாக இருக்கிறது. அங்கேயிருக்கும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இரும்பு கிடைக்காத காரணத்தால் பல தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல, தொழில்துறை முன்னேற்றத்திற்கும் அது முட்டுக்கட்டையாக இருக்கிறது. எனவே, நம்முடைய அமைச்சரவர்கள் ஜாயின்ட் பிளானிங் கமிட்டியைக் கலந்து, தமிழ்நாட்டிற்குத் தேவையான இரும்பு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கோவையிலே இன்று இரும்பு ஸ்டாக் வைக்கும் முறையிலே, இந்துஸ்தான் ஸ்டீல் யார்ட் என்ற முறையிலே ஒரு அமைப்பு உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். சென்னை, எர்ணாகுளம், பங்களூரில் அப்படி இருக்கிறது. அந்த அமைப்பை விஸ்தரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எல்க்ட்ரிக்கல் ஸ்டீலைப் பொறுத்தவரையில், மேட்டூர் அணைக்குத் தேவையான ஸ்டீல் ஷீட்ஸ் கிடைக்கவில்லை. அது கிடைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னும் ஒரேயொரு கருத்தைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். திருப்பூர் தொழில் வளர்ச்சி பெற்றுவரும் ஒரு நகரமாகும். அதை இன்டஸ்ட்ரியல் நோட்டிஃபைட் ஏரியா என்று குறிப்பிட்டு, சிறு தொழில்களுக்கு அதாவது பனியன் ஃபேக்டரி மற்றும் வேறுபல தொழில்களுக்கு ஸ்டேட் பேங்கின் மூலம் கடன் வாங்க வேண்டுமென்றால் கோயம்புத்தூர் சென்று செக்யூரிட்டி முறையில் பத்திரம் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதை மாற்றி, திருப்பூர் ஸ்டேட் பேங்கிலேயே தருவதற்கு ஏற்பாடு செய்து தந்தால் சிறு தொழில் வளர்ச்சிக்கு அது உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மக்கா சோளம் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் ஏராளமாக விளைகிறது, அங்கு ஒரு ஃபேக்டரி ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE: Hon. Chairman, Sir, in support of my cut motion I wish to offer a few remarks. We are a little alarmed at the serious unemployment problem that is facing our





State in spite of the efforts of the Government. Sir, the most important point that I wish to stress is unless we improve our industries, the employment problem or the unemployment problem can never be solved and that is why we have been saying in season and out of season that the permit licence quota business should be completely put an end to. I am glad that the present State Government are also veering round to that view. I am happy to find that the Hon. Minister for Industries has also stated that so far as the present Central licence quota method is concerned, it is very, very harmful to Tamil Nadu and to that extent I am glad that he agrees with us.

Sir, with regard to the industrial development of our State I wish to state that licences for certain industries which were available before have been revoked recently. I wish to know from the Hon. Minister for Industries why they were revoked. This will set in industrial stagnation in our State. I wish to point out a few examples. The industrial licence given to the Stainless Steel Project of Rs. 15 crores at Katpadi has been revoked. The licence given for the Rs. 4 crore Tyre Project at Madras has been revoked. The Rs. 15 crore Terylene Project for which an industrial licence was given five years ago has not started functioning. The Letter of Intent was given for it by the Government of India long, long ago. This is a serious matter which I want to bring to the attention of the Hon. Minister.

Next I come to the crisis in the Handloom industry which has reached new heights. In the recent All-India Handloom Board Meeting held on 25th March 1968 under the chairmanship of the Textile Commissioner, the President of the Madras State Handloom Weavers' Co-operative Society represented that out of the twelve Co-operative Spinning Mills, eight are on the verge of closure on account of huge accumulation of yarn. This is a very serious matter, which I want to bring to the notice of the Hon. Minister.

Then I come to the other point viz., the Continuous Casting Plant. I referred to that point when our late revered Anna was here and now I would like to point out some more facts to the Hon. Minister for analysis and necessary action in the matter. With regard to scrap, I have been told—I do not know how far it is correct and I am speaking subject to correction—that there is non-availability of scrap in Tamil Nadu. Even the entire Southern India will not be able to supply the requirements of scrap and that is the information that I have got. This is a project to manufacture 50,000 tonnes and what is the investment per tonne and that is the point. In this connection, I wish to point out the cost per tonne in the case of the Mukund Iron Works in the Maharashtra State is less and I hope the Hon. Minister would have gone there. That Iron Works was undertaken by a Swiss Company. Our project was undertaken by the Russian Government. By mentioning this, I should not be misunderstood as being anti-Russian. Let us forget our politics.

[Dr. H. V. Hande] 

The Russian equipment was available even for the Bhilai Steel Plant and also for the Bokaro Steel Plant at a less cost on a rupee-payment basis. In the case of the Swiss equipment, the cost is less than half. But in the case of our Plant supplied by the Russians the cost is double that of the Maharastrian Project and perhaps devaluation has affected it. I request the Hon. Minister to examine this matter.

Then with regard to the availability of scrap, I do not know whether Tamil Nadu and other Southern States put together can supply the necessary scrap to the continuous casting plant. Recently a report has appeared in the 'Financial Times' of Bombay that the production in the Iron and Steel Works at Bhadravati has been affected due to difficulties in regard to the availability of steel scrap. So, I request the Hon. Minister to look into this aspect of this matter.

Then I come to the Southern Petro-Chemical Industries Corporation which proposed to manufacture urea fertilisers. It is proposed to invest a capital of about Rs. 45 crores on this Project and the equity share capital is Rs. 14 crores. Half of the amount is to be financed by the Government institutions like the Industrial Finance Corporation, Madras Industrial Financial Corporation and the Madras Investment Corporation. I want to know, how much money the State Government are going to invest in this project. As the financing institutions of both the State and the Central Governments are investing 80 or 90 per cent of the capital for this project, what is the control that the Government are going to have on this project? According to our Party theory whenever a private company starts a particular organisation, they should have some stakes and fears with regard to it. It is not as if that they should try to borrow somebody's money and start it and then do not bother about it. They must have stakes and fears. Otherwise, there is a great risk of the money being wasted. That is why we have been pressing for competition amongst the promising entrepreneurs. In this connection, I would like to know from the Government, what exactly is the project, whether the Government have a hand in it, whether they have any control over it and whether it is in the joint sector or public sector or private sector. I would like the Hon. Minister to clarify the position. My theory is unless private entrepreneurs or private companies have a stake in them, the money is wasted.

(Mr. Chairman sounded the gong)

I shall touch upon only one or two points and then I will finish. I have a number of points but due to lack of time, I shall just briefly explain one or two points.

I shall bring one particular point to the attention of the Hon. Minister for Industries, with regard to small-scale industry; we have been crying in season and out of season about small-scale



[Dr. H. V. Hande]

industry. Here is a letter written by one S. Balakrishnan, Hon. Secretary, Coimbatore District Small Scale Industries Association. I shall read, not his full letter but only an extract :—

'To start a small-scale industry in a region like Coimbatore, the entrepreneur has to obtain more than eight licences or approvals from the Department of Panchayat Board, the Factory Inspector, the District Health Officer, the Town Planning Officer, the Excise Duty Officer, the Sales-Tax Officer, the Assistant Director of Industries, the National Small Industries Corporation Limited, the Electricity Board etc. One can understand the frustrations of the entrepreneur when he shuttles from one office to another to get the licences and approvals. Is it necessary to compel the entrepreneur to get so many licences to start his industry? Our humble suggestion is that the Assistant Director of Industries at district level can issue one complete licence, which may be sufficient to start an industry. Otherwise only an experienced industrialist can start now Industries.

This is the position. When such is the case, there is no point in saying that we should advance like the Punjab. In the Punjab, it is slightly different. I am sure the Hon. Minister for Industries knows the details. It is much easier to start a small industry in the Punjab. Unless we give these people incentive, how can we expect small industries to come up?

Finally a word about administration of Industries Department. The Tamil Nadu Small Industries Corporation has incurred a loss of Rs. 58.40 lakhs in two years, Rs. 33.88 lakhs in 1968 and Rs. 24.52 lakhs in 1969. That has been the practice since a number of years. But the people manning it do not bother since they have no stake and they are not going to pay for the losses from their pockets.

I shall read a few lines from the Audit Report. It is very important. It is as follows:—

The Report disclosed that physical verification conducted in 37 units during the year brought to light shortages of Rs. 26.78 lakhs and excess of Rs. 4.16 lakhs of which shortages of Rs. 23.52 lakhs pertain to three units alone'.

The verification itself shows that there has been a lot of discrepancy. I would request the Hon. Minister to take note of this. The matter is very serious.

In spite of all the assurances, have we solved the unemployment problem? Have we increased production to the extent we wanted to increase? Have we achieved the target which we originally set for ourselves? These are the questions which I want the Hon. Minister to put to himself and see that the alarm that I am expressing is ill-founded. I wish he will prove that it is not well-founded. Thank you.

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில்துறை அமைச்சரால் கோரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப் படுகிறேன். தொழில் துறையிலே முன்னேற்றம் காணவேண்டும் என்ற நோக்கத் தோடும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடும், தமிழக அரசு மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் பலனை இந்த நாட்டில் பல்வேறு புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். 1966-ம் ஆண்டில் சுமார் 6,939-ஆக இருந்த தொழிற்சாலைகள், 1969 முடிய 7,725 ஆக தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது. இன்னும் மத்திய சர்க்காருடைய துணையோடும், தனியாருடைய துணையோடும், தமிழக அரசின் இண்டஸ்டிரியல் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் துணையோடும், பல்வேறு புதிய தொழிற்சாலைகளைத் திறந்தும், புதிய தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு திட்டமிட்டும் இந்த நாட்டின் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு இந்த அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் பெருமை அளிக்கின்ற வகையில் சேலத்தில் உருக்காலை தொடங்கும் பிரச்னை குறித்து தமிழக அரசு மிகவும் உறுதியாக இருக்கிறது என்பதை தமிழக மக்கள் நல்ல முறையில் அறிவார்கள்.

சேலம் உருக்காலைப் பிரச்னை சுமார் 13 ஆண்டு காலமாக இந்த மாமன்றத்தில் ஒலிக்கப்பட்டு வருகிறது என்பதும், சேலம் இரும்பாலை நியாயத்தைப்பற்றி புதிய விளக்கங்கள் கொடுக்கப்பட தேவையில்லை என்பதும் நாடறிந்த உண்மையாகும். ஆனால், மத்திய சர்க்கார் என்ன காரணத்தினாலோ சேலம் என்று சொன்னவுடன், புதிய காரணங்களைச் சொல்லி, தேவையில்லாமல் காலத்தை கடத்தி வருவது தமிழக மக்களை ஏமாற்றிவருவதாகும் என்பதை இந்த சந்தர்ப் பத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். சேலம் உருக்காலை என்று சொன்ன நேரத்தில், சேலத்தில் இரும்பு இருக்கிறதா என்று கேட்டார்கள். இரும்பு இருக்கிறது என்று உறுதிப் படுத்தப்பட்டது. இரும்பு தரமான இரும்பா என்று கேட்டார்கள். அதுவும் உறுதிப்படுத்தப்பட்டது. அப்படி துவக்கப்படுகிற தொழிற்சாலை ஒரு வயபிள் யூனிட்டாக இருக்குமா என்று கேட்டார்கள். அதுவும் உறுதிப்படுத்தப்பட்டது. அதன்பின்னர் விசாகப்பட்டணத்தில் துவக்குவதா, ஹாஸ்பெட்டில் துவக்குவதா, சேலத்தில் துவக்குவதா அந்த இரும்புத் தொழிற்சாலையை என்று தென்னகத்திற்குள்ளே மோதவிட்டு, அதிலும் கொஞ்சம் காலத்தைக் கடத்தினார்கள். இன்றையதினம் வரையில் அவர்கள் முடிவு சொல்லாமல் இருப்பது, தமிழக மக்களை வஞ்சிக்கின்ற நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது என்பதை நம்மால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இன்றையதினம் சேலம் இரும்புத் தொழிற்சாலை துவக்கப்படுமானால், எதிர்காலத்தில் தமிழகத்தினுடைய வளர்ச்சி எப்படி பலனடையும் என்பதை நாம் அதிகமாக விளக்கத் தேவையில்லை. எனக்கு முன்னால் பேசிய பெருமதிப்பிற்குரிய பூவராகன் அவர்கள் அதைப்பற்றி மீண்டும் பரிசீலிக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில் தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள்.

இந்த மன்றத்தில் விளக்க ஆசைப்படுகிறேன். 1973-74-ல் இந்திய துணைக் கண்டத்தில் இரும்புத் தேவை எப்படி இருக்கும் என்பதைப்பற்றி அரசாங்கத் தால் வெளியிடப்பட்ட புள்ளி விவரங்கள் இருக்கின்றன. அந்தப் புள்ளிவிவரங் களின் அடிப்படையில் பார்த்தால், சேலம் இரும்புத் தொழிற்சாலை கோடிக் கணக்கான ரூபாய் நமக்கு ஆதாயம் தரக்கூடிய அளவுக்கு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கக் கூடிய அளவுக்கு பயனுள்ள ஒரு தொழிற்சாலையாக அமையும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. இந்திய துணைக்கண்டத்தில் இருக்கிற அத்தனை இரும்பாலைகளை எடுத்துக்கொண்டு, அவைகளுடைய உற்பத்தியை கணக்கெடுத்துப் பார்த்து, 1973-74-ம் தேவைகளைக் கணித்து மத்திய சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில் அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள். பார்ஸ் அண்டு ராட்ஸ் 1974-ல் தேவைப்படுகிற அளவு 22,36,000 டன்களாக இருக்கும், இன்றைக்கு இருக்கிற உற்பத்தித் திறன் 19,18,000 டன்களாக இருக்கிறது. ஸிம்லஸ் டியூப்ஸ் 27,000 டன்கள் தான் நமக்கு இன்றைக்கு உற்பத்தி திறன் இருப்பது. ஆனால் தேவை, 1973-74-ல் ஒரு லட்சம் டன்களாக உயரும், டிராக் மெடீரியல்ஸ் இப்பொழுது உற்பத்திக்கான எந்த வாய்ப்பும் இன்றைக்கு இந்த துணைக்கண்டத்தில் இல்லை. 1973-74-ல் இதனுடைய தேவை 84,000 டன்னாக இருக்கும். ஆனால், எந்த இரும்புத் தொழிற்சாலையும் ஒரு டன் டிராக் மெடீரியல் கூட உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையில் இன்றையதினம் இல்லை. இப்படி ஒவ்வொரு துறையாக எடுத்துக்கொண்டாலும், காலத்தினுடைய வேகமும், தொழிலுடைய முன்னேற்றமும் எதிர்காலத்தில் இரும்புக்கு பெரிய தேவை இருக்கிறது என்பதை நமக்கு வெளியிடுகிறது. எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தும், மிகவும் வாய்ப்பான நிலை இருந்தும், மத்திய சர்க்கார் காலம் கடத்துவது நியாயத்திற்கு விரோதமானது, தர்மத்திற்கு எதிரானது என்பதை நான் மிக விளக்கமாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் அதிபர்கள் கூட இந்தக் கருத்தை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். இண்டியன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் தலைவர் இதை மிகத் தெளிவாகச் சொல்கிறார்கள்

The revival of industry, particularly the consumer goods sector, created a large demand for products like steel, paper, etc., the production of which did not rise fast enough to catch up with the demand. As a result there has been acute shortage of steel which has not only led to a decline in exports of steel but also of other steel-based industries. The market prices of a number of items are nearly fifty per cent higher than the J.P.C. prices.

இந்தியன் சேம்பர்ஸ் ஆஃப் காமர்ஸ் சங்கத்தின் தலைவரே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். எனவே நியாயங்களைச் சொல்லுகிறோம். நெஞ்சைத் திறக்கும் மார்க்கம் ஏற்படவில்லை.

முன்னாலே காங்கிரஸ் நண்பர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தொழில் களில் முன்னேற்றம் காணவில்லை, அதிகமான வளர்ச்சி ஏற்படவில்லை என்று சொன்னார்கள். ஏதோ அவர்கள் காலத்தில் பெரிய பெரிய வளர்ச்சிகள் ஏற் பட்டது போலவும், இப்பொழுது இல்லை என்பது போலவும் ஒரு கருத்தைச் சொன்னார்கள் இந்த மன்றத்திலே. ஆனால் இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். எதிர்பார்த்த அளவு நாம் ஆசைப்படும் அளவு, திட்டம் தீட்டிய அளவு தமிழ் நாட்டில் தொழில் முன்னேறவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், கடந்த காலத்தில் புள்ளிவிவரப்படி பார்த்தால், தொழில்கள் மூலம் சர்க்காருக்கு கிடைத்த வருமானம் பளிச்சிட்டுக் காட்டு கிறது. 1961-ல் நமக்குத் தொழில்கள் மூலம் கிடைத்த வருவாயின் சதவிகிதம் 16.03. அதுவே 1962-ல் 17.13, 1963-ல் 17.30 இப்படி ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு சதவிகிதம் தான் உயர்ந்திருக்கிறது. எந்தச் சந்தர்ப்பத்திலும்

[திரு. ஆலடி அருணா] [1970 மார்ச் 30

3 சதவிகிதம், 4 சதவிகிதம் என்று உயர்ந்துவிடவில்லை. அப்படி உயர்ந்ததாக புள்ளிவிவரம் தெரிவிக்கவில்லை. மாநில சர்க்கார் எவ்வளவு தான் முயற்சித்தாலும், எவ்வளவு தான் முதலீடு செய்தாலும், எவ்வளவு தீவிரமான நடவடிக்கைகள் எடுத்தாலும், எதிர்பார்த்த அளவு தொழில் முன்னேற்றம் அடையமுடியவில்லை. அதன் அடிப்படைக் காரணத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குக் காரணம் மத்திய சர்க்காரிலிருக்கிற ஏற்றுமதி, இறக்குமதி சம்பந்தப்பட்ட கொள்கை, உரிமம் வழங்கும் அதிகாரம் இவற்றின் காரணமாக புதிய தொழிற்சாலைகளை உருவாக்க முடியவில்லை. இந்த மாநிலத்திற்கு என்னென்ன தொழில்கள் வேண்டும் என்பதை இந்த மாநில சர்க்கார்தான் தெரிந்திருக்க முடியுமேயல்லாது, அதை நிர்ணயிக்கும் அதிகாரமும், உரிமம் வழங்கும் அதிகாரமும் மத்திய சர்க்கார் வைத்துக் கொண்டிருந்தால், தொழில்கள் எப்படி முன்னேற முடியும். ஆகவே, அந்த அதிகாரத்தை மத்திய சர்க்கார் தன் கையில் வைத்திருப்பது, நாடெங்கும் சீராக தொழில் வளரவும், மந்த நிலை ஏற்படாமல் தடுக்கவும், இது தேவை என்று சொல்லுகிறார்கள். இது வரையில் நடந்த காலத்தில் மத்திய சர்க்கார் இந்த வகையில் வெற்றி பெற்றிருக்கிறதா என்று கேட்டால் இல்லை.

இந்தியத் துணைக்கண்டத்தில் நெசவாளர்கள் தொழில்கள் 650 மில்கள் இருக்கின்றன. நூற்பாலைகள், காம்போசிட் மில்கள், பம்பாய் மில்கள், குஜராத், தமிழ் நாடு ஆக மூன்று மாநிலங்களில்தான் இருக்கின்றன. எனவே, கடந்த காலத்தில் மத்திய சர்க்காரால் கைக்கொள்ளப்பட்ட கொள்கை எந்த நோக்கத்திற்காக வைத்திருக்கிறார்களோ, அந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியவில்லை. அந்த அதிகாரம் மாநில சர்க்காருக்கு வரவேண்டும். நான்காவது திட்டத்தில் தொழில்களுக்கு 178 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கியிருக்கிறார்கள். கன ரக தொழில்கள் நீங்கலாக. இந்த 178 கோடியை வைத்துக்கொண்டு எப்படி தொழில்களை பெருக்க முடியும்?

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். பாங்கிகளின் வட்டியளவு உச்சம் 9½% என்று இருந்தது. ரிசர்வ் பாங்கி அதை ரத்து செய்துவிட்டு, பாங்கிகள் சந்தர்ப்பத்திற்கு தக்கமுறையில் வட்டியை வாங்கலாம் என்கிற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. இது தொழில்களுக்கு ஊக்கம் ஊட்டாது. இதில் மாற்றம் கண்டாகவேண்டும்.

மற்றபடி, பல்க் இண்டஸ்ட்ரிஸ்களுக்கு இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் ஆரம்பிக்க வேண்டும். பீடித் தொழிலுக்கு, சிறு சிறு தொழில்களுக்கு உதவி கொடுக்க வேண்டும். மேலும் மேலும் தொழிற்சாலைகளை இந்த மாநிலத்திற்கு கொண்டு வரவேண்டும், அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும், அந்த வகையில் தொழில் வளர்ச்சிக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, இன்று இந்த மானியத்தின் மீது பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன்.

தொழில் மானியத்தின் மேல் பேசும்போது, சென்ற ஆண்டு 16 ஆலைகள் மூடி இருந்தன. இன்றைக்கு தொழில் கார்ப்பொரேஷன் ஏற்படுத்தி அதன் மூலமாக சில மில்களை ஓட்டியிருக்கிறார்கள். அப்படி ஓட்டினாலும், இந்த



[திரு. என் மருதாசலம்]

கார்ப்பொரேஷன் மூலமாக திறக்கப்பட்ட கமலா மில் மூடப்பட்டு விட்டது. என்ன காரணத்திற்காக மூடப்பட்டது என்று விசாரணை செய்து, கார்ப்பொரேஷன் கொடுத்த பணத்தை என்ன செய்தது என்று பார்க்க வேண்டும். மூடியிருக்கிற பல மில்களின் முதலாளிகள் இப்படிச் செய்வது உண்டு. அதே மாதிரித்தான் காளேச்வரா மில்லில் ஒரு சில பகுதிகளை மூடிக் கொண்டு வருகிறார்கள். ஏனென்றால் பஞ்சு இல்லை, மற்ற மற்ற சாதனங்கள் இல்லை என்று படிப்படியாக மூடிக்கொண்டு வருகிறார்கள். இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து கார்ப்பொரேஷன் மூலமாக எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைக் கொண்டு உடனடியாக மில்லை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும், அதற்கான தக்க நடவடிக்கைகளை முதலாளிகள் மேல் எடுக்கவும், அரசாங்கம் முற்படவேண்டும்.

அதோடு கூட, இந்த நகரத்தில் இரண்டு மில்கள் மூன்று வருஷமாக மூடியிருக்கின்றன. ஒன்று பங்கஜா மில், இன்னொன்று முருகன் மில். இந்த இரண்டு மில்களையும் அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு மத்திய சர்க்காரை நிர்ப்பந்தம் செய்ய வேண்டும். அப்படி மத்திய சர்க்காரை நிர்ப்பந்தம் செய்து, அரசாங்கம் பண உதவி செய்து இரண்டு மில்களை நடத்தவும், தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு தொழில்களை ஏற்படுத்துவது நகர்ப் பகுதிகளில்தான் ஏற்பாடு செய்கிறார்கள். நகர பகுதியில் ஏற்படுத்தும்போது; அதிகமான விலைவாசிகள் இவற்றால் பாதிக்கப்படுகிறது. அதே நேரத்தில் கிராமப் பகுதிகளில் தொழில்களை ஏற்படுத்தினால், நாடு முன்னேறுவதற்கும், வேலையில்லாத மக்களுக்கு வேலை கொடுக்கவும் உதவியாக இருக்கும். அது தனியார் துறையிலானாலும்சரி, அரசுத் துறையில் ஆனாலும்சரி, ஆரம்பிக்கும் தொழில்கள் கிராமப்புறங்களில் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பீடித் தொழில் சம்பந்தமாக 1966-லேயே பீடித் தொழிலாளர்களுடைய சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டமானது இதுவரையில் அமுல் படுத்தப்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. காங்கிரஸ் ஆட்சியில்கொண்டு வந்த அந்தச் சட்டத்தை. இன்றைக்கு தமிழக அரசாங்கம் தொழிலாளர்களின் நன்மையைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, அதை அமுலாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் பற்றிச் சொல்லும்போது, விசைத்தறியை அதிகரிப்பதால், கைத்தறி நெசவாளர்களுக்கு தொல்லையாக இருக்கும். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. கைத்தறி நெசவாளர்கள் மில்லில் இருந்து நூலை வாங்கி நெய்ய வேண்டியிருக்கிறது. மில் நூலின் விலை ஏறியிருக்கிறது. மில் நூலை வாங்கி துணி நெய்து வெளிச்சந்தையில் விற்கவேண்டிய நிலையில் அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கைத்தறித் துணிகளை அரசாங்கமே எடுத்துக்கொண்டு, அந்நிய நாடுகளுக்கோ, அல்லது மற்ற மற்ற தேசங்களுக்கோ, அனுப்பி, கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கைத்தறித் துணிக்கு ரிபேட் கொடுப்பதைக் கூட இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்தால் நலமாக இருக்கும். எல்லோரும் வாங்க வசதியாக இருக்கும்....

இன்றைக்கு இருக்கிற நிலையில் அநேகமாக தொழில் கேஸ்களை சீக்கிரத்தில் முடிப்பதில்லை. அதற்குக் காரணம், லேபர் டிபார்ட்மெண்டில் லேபர் கமிஷனர், அவருக்குக் கீழ் படிப்படியாக அதிகாரிகள் இருக்கிறார்கள். இன்றைக்கு கமிஷனரை எடுத்துக் கொண்டால், ஒரு கேஸ் விசாரணைக்கு எடுத்துக் கொண்டால், 6, 7 மாதங்கள் ஆகின்றன. தொழிலாளர்கள் அதைச் சமாளிக்க முடியவில்லை. முதலாளிகள் லேபர் கமிஷனர், லேபர் போர்டு, அட்ஜுடிகேஷன், ஹைகோர்ட்டு வரையில் கூட போகிறார்கள். அவர்களால் முடியும். ஆனால் தொழிலாளியால் அப்படிச் செய்ய முடிவதில்லை. ஒரு கேஸ் முடிவதற்குள்ளாக அவன் இறந்துவிடுகிறான். ஆகவே, உடனடியாக கேசுகளை முடிக்க, குறைந்த பட்சம் 3 மாதங்களில் முடிக்க, அதிக பட்சம் 6 மாதங்களுக்கு மேல் போகாமல் இருக்கத் தக்க வகையில் அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அப்படியில்லையென்றால், தொழிலாளர்கள் அவதிக்குள்ளாவார்கள். 1962-ல் தொடங்கிய கேஸ இன்றைக்கும் முடியவில்லை.

இன்றைக்கு லேபர் கமிஷனர், கோர்ட்டு இவைகளெல்லாம் முதலாளிகளைச் சார்ந்திருக்கின்றவே யன்றி, தொழிலாளர்களுக்கு சாதகமாக இயங்கவில்லை. இதை நான் என் அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். ஆகையினால், இந்த மாதிரி இருக்கக் கூடிய நிலைமைகளையெல்லாம் மாற்றி, சட்டங்களை தொழிலாளர்களுக்கு சாதகமாக இருக்கும் வகையில் அரசாங்கம் கொண்டு வருவதோடு, தொழிலாளர்களுக்கு அபிவிருத்தி ஏற்பட, படிப்படியாக இன்றைக்கு இருக்கிற கிராமப் பகுதிகளில் தொழில்களைக் கொண்டு வந்து, அந்த வகையில் தொழிலாளர்களுடைய நிலைமையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. சி. **வீரமணி**: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, "தமிழன் என்றொரு இனம் உண்டு; தனியே அவர்க்கொரு குணம் உண்டு" என்று நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் அவர்கள் பாடியிருக்கிறார்கள். அந்தத் தனிக் குணத்தின் அடிப்படையில்தான், தனிச் சிறப்பின் அடிப்படையில்தான் இந்த ஆட்சி மக்களுக்கு நன்மை செய்து வந்திருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுக் காலமாக நாங்கள் செய்த திட்டங்கள், விரைந்து செய்த முயற்சிகள், எடுத்துக்கொண்ட சுறுசுறுப்பான வேலைகள் இவைகளையெல்லாம் தெள்ளத் தெளிவாக சுட்டிக்காட்டும் முகத்தான் இன்றைக்கு தொழில் அமைச்சர் அவர்கள், தொழில் மானியத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழன் என்ற தனிக் குணத்தோடு, தனிச் சிறப்போடு எப்படி எப்படி பணியாற்றினார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். அவர் ஆற்றிய தொண்டுக்கு ஆதாரமாக, அவர் செய்த பணிகளுக்கு ஆதாரமாக இரண்டொரு புள்ளிவிவரங்களை மட்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த மூன்றாண்டுகளாக நாம் திறமையாக வேலை செய்து உற்பத்திப் பொருள்களைச் செய்திருக்கிறோம். 1966-ல் சிமெண்ட் உற்பத்தி 18,79,181 டன்களாக இருந்தவை 1969-ல் 22,39,085 டன்கள் என்ற அளவில் உயர்ந்திருக்கின்றன. அதேபோல மிதிவண்டிகள் 1966-ல் 2,76,514 ஆக இருந்தவை, 1969-ல் 3,76,947 என்ற அளவில் உயர்ந்திருக்கின்றன. மற்றும் டீசல் என்ஜின்கள் 1966-ல் 8,859 என்று இருந்தன. அவை 1962-ல் 13,042 என்ற அளவில் உயர்ந்திருக்கின்றன. ரசாயன உரங்கள் 1966-ல் 2,49,442 டன்கள், 1969-ல் 2,55,950 [illegible] என்ற அளவில் உயர்ந்திருக்கின்றன. மோட்டார் சைக்கிள்கள்,



ஸ்கூட்டர்கள் 1966-ல் 8,298 ஆக இருந்தன. 1969-ல் 10,149 என்ற அளவில் உயர்ந்திருக்கின்றன. சர்க்கரை 1966-ல் 2,25,907 டன்கள் என்ற அளவில் இருந்தது 1969-ல் 3,35,829 டன்கள் என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. மோட்டார் வண்டி டயர்கள் 1966-ல் 4,23,123 ஆக இருந்தவை 1969-ல் 6,33,360 ஆக உயர்ந்திருக்கின்றன. 1966-ல் மோட்டார் வண்டி டியூப் 22,306 ஆக இருந்தது 1969-ல் 3,45,434 ஆக உயர்ந்திருக்கிறது. சைக்கிள் டயர்கள் 1966-ல் 3,94,606 ஆக இருந்தது 1969-ல் 51,63,235 ஆக உயர்ந்திருக்கிறது. இவைகள் எல்லாம் நாங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடன் எப்படி திட்டமிட்டுச் செயல்பட்டோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

தொழில்துறையிலே எப்படி வேலைவாய்ப்புக்களை பெற்றிருக்கிறது என்பதை இந்த மானியம் குறிப்பிடுகிறது. 1969-ல் பல்வேறு தொழில்களுக்கு 12 உரிமங்கள வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கான செலவு 12.63 கோடி. இதனால் 2500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இனி வருங்காலத்தில் 60 கோடி ரூபாய்க்கான மூலதனத்தில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு 22 உரிமங்கள் வழங்கப்பட்டு, அதனால் 5000 பேர் வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது. 1969-ல் 8 பெருந்தொழில்கள், செயற்கை கிரை யோலைட், கருவிகளுக்கு உறையிடுதல், கரையும் கூழ், கோதுமைப் பொருள் உற்பத்தி, எண்ணெய் தூய்மை மருந்து தயாரிக்கும் தொழில்கள் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது பாராட்டுதற்குரியது.

அடுத்து, சிறுதொழில்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு சிறு தொழில்கள் கழக நிறுவனத்தின்கீழ் பொறியியல் துறையில் உற்பத்தி செய்யப்பட்டது 1967-68-ல் 562 லட்சம் ரூபாய் மதிப்புடையது, 1968-69-ல் 626 லட்சம் ரூபாய் மதிப்புள்ளது. 64 லட்சம் ரூபாய் அதிக மதிப்புள்ளதை அதிகப்படுத்தியிருக்கிறோம். பொதுநோக்குப் பொறியியல் பட்டறையில் 1967-68-ல் 56 லட்சம் ரூபாய் உற்பத்தி செய்யப்பட்டது. 1968-69-ல் 76 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த ஆண்டு 20 லட்சம் ரூபாய் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறாக பல்வேறு வகைகளிலும் அபிவிருத்தி செய்தும், நாம் இன்னும் பின்னடைந்த நிலையிலேயே இருக்கிறோமே இதற்குக் காரணம் என்ன? உலகில் பல நாடுகள் தொழில் வளர்ச்சி பெற்றிருக்கும்போது இந்தியாவில் ஏன் வளர்ச்சி குன்றி இருக்கிறது என்பதன் காரணத்தை அறிய வேண்டும்? மேலை நாடுகளுடன் போட்டி போட்டுக் கொண்டு நாம் உற்பத்தி செய்யவில்லையென்பதை நாம் உணர வேண்டும்.

சின்னஞ்சிறு நாடுகளெல்லாம் பொருளாதாரத் துறையில் முன்னேறி இருக்கும்போது, இந்தியா மட்டும் ஏன் இவ்வளவு பின்தங்கி இருக்கிறது? அதற்கு என்ன காரணம்? நம்மிடம் என்ன குறை? எப்படி அந்தக் குறையைப் போக்கிக் கொள்வது என்பதில் நாம் கவனம்செலுத்த வேண்டும். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நாம் விஞ்ஞானிகளுக்குப் போதிய ஊக்கம் காட்டவில்லை, உற்சாகம் தரவில்லை. நாம் இன்றைக்கு கலைஞர்களுக்கு, அரசியல்வாதிகளுக்குத் தருகின்ற முக்கியத்துவத்தை விஞ்ஞானிகளுக்குக் காட்டவில்லை என்பதுதான். விஞ்ஞானிகளுக்கு நல்ல வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர வேண்டும். விஞ்ஞானிகளுக்கு தடையாக இருக்கின்றவைகளை அகற்றி, விஞ்ஞான வளர்ச்சிக்கு வழி செய்ய வேண்டும். விஞ்ஞானிகளின் பணிகளில் நாட்டம் செலுத்த வேண்டும். விஞ்ஞானிகளின் சேவையை, நாம் நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்றதாக அமைத்துக் கொள்ள வேண்டும். இந்த விஞ்ஞான

வளர்ச்சிக்குக் குறுக்கே இருப்பவைகளை ஒதுக்கித் தீர வேண்டும். நாம் இன்னும் பழைய முறையிலேயே 'ரூல்களின்' பிடிப்பிலும், செக்ஷன் சிக்கலிலும், சிவப்பு நாடாவின் கட்டிலும் வாழ்கிறோம். ஒரு குறிப்பு ஒரு செக்ஷனில் அகப்பட்டுக்கொண்டு படாத பாடு படுவதை நாம் பார்த்திருக்கிறோம். விஞ்ஞானக் குறிப்பு ஒன்றைப்பற்றி ஒரு துறைக்கு அனுப்பினால், அந்தத் துறை அதிகாரி செக்ஷனுக்கு அனுப்புவார். நாம் ஐ.ஏ.எஸ். அதிகாரியை அதைப் பற்றிக் கேட்கிற நேரத்தில், அவர் செக்ஷனிலுள்ள கிளார்க்கைப் பார்த்து அந்தக் காகிதம் என்ன ஆனது என்று பார்த்துச் சொல்வார். விஞ்ஞானி தன் அறிவையெல்லாம் உபயோகித்து, கண்டெடுத்த குறிப்பை ஒரு காகிதம் என்று சொல்வதைக் கேட்டால் அந்த விஞ்ஞானி மிக்க வேதனைப்படுவார். ஆகவே, விஞ்ஞானம் நல்ல முறையில் வளருவதற்கு, விஞ்ஞானிகளுக்கு வேண்டிய மதிப்பு கொடுத்து விஞ்ஞானிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுடைய சேவையை பெறுவதில் நாட்டம் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாடு முழுவதிலும் 55 லட்சத்திற்கு மேற்பட்ட அருந்ததியர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் செருப்பு தைக்கும் தொழிலிலும், பரி தைக்கும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தவர்கள். தற்போது பம்புசெட் வந்த காரணத்தினால் அவர்கள் வேலை போய்விட்டது. அவர்கள் போதிய வேலைவாய்ப்பு இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கடந்த இருபது ஆண்டுக்காலமாக இந்த இனமக்கள் புறக்கணிக்கப்பட்டு வந்தார்கள். இந்த அரசாங்கமாவது கருணையோடு இவர்களுடைய குறைகளைக் கண்டறிந்து அவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு பொற்கொல்லர்களுக்கு நிவாரணம் கொடுத்து உதவியதைப்போல இந்த அருந்ததியர்கள், மாதாரிகள், சக்கிலியர்கள், பகடைகள் என்ற பெயரில் உள்ள 55 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கும் அரசு உதவி செய்ய வேண்டும். தோல்பதனிடும் தொழில்களிலும், மிதியடிகள் செய்யும் தொழிலிலும் இவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கருணையோடு, தர்மத்தின் அடிப்படையில் இவர்களுடைய குறைகள் பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஏ. அ. சுப்பராஜா: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது அரசாங்கம், முதலிலே மக்கள் ஒவ்வொருவருக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதிலே அக்கறை காட்டவேண்டுமென்பது அதன் கடமையாகும். இன்றைக்கு நாட்டிலே கிராமப்புறத்திலே வாழ்கின்ற மக்கள் 75 சதவிகிதத்தினர் விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய மக்கள் என்பதை நாம் மறக்க முடியாது. அந்த வகையிலே என்னென்ன முறைகளில் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்பதைப் பார்க்காமல் மத்திய அரசும் மாநில அரசும் திட்டங்களைப் போடுவதால் ஏற்படக்கூடிய குறைபாடுகளை நாம் பார்க்கிறோம். இந்த அறிக்கையிலே சென்ட்ரல் செக்டார் என்றும், ஸ்டேட் செக்டார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. டெலிவிஷன் செய்யக் [illegible]டிய, [illegible] என்ஜின்கள் செய்யக்கூடிய பெரிய இண்டஸ்ட்ரீஸ்களை [illegible] அவற்றிலே பெரிய அளவில் இன்வெஸ்ட்மெண்ட் செய்தாலும்கூட



மக்களுக்கு வேலைவாய்ப்பு எல்லோருக்கும் அளிக்க முடியுமா என்றால் முடியாது. அந்தப் பெரும் தொழில்களிலே லாபம் வருகிறதா என்றால், நஷ்டம்தான் ஏற்படுகிறது. ஏன் நஷ்டம் வருகிறது என்பதை உற்று நோக்கினால், மத்திய சர்க்காரானாலும் சரி, மாநில சர்க்காரானாலும் சரி, திட்டம் போடுவதில் "பாலன்ஸ் பிளானில்" போடுவதில்லை. அக்ரிகல்ச்சரல் இம்ப்ரூப்மெண்ட் செய்வதற்கு பணத்தை ஒதுக்காமல் திட்டம் போடுவது தான் குறைபாடு. மேலும் நாம் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை 75 சதவிகித பெரும்பான்மையான விவசாய மக்கள் வாங்கக்கூடிய சக்தியில்லாமல் இருக்கிறார்கள். உற்பத்தியான பொருள்களை யார் தலையில் கட்டுவது என்ற நிலையில், எங்கு பார்த்தாலும் ரிசஷன் இருக்கிறது. பெரிய நகரங்களிலே இன்பிளேஷன் வருகிறது. வேலை கிடைக்கும் என்ற வகையில் நகரங்களுக்கு வரப் பார்க்கிறார்கள். ஆனால் சர்க்காருக்கும் தலைவலி வருகிறது. தொழிற்சாலையை எந்த முறையில் ஆரம்பிக்க வேண்டுமென்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். ரூரல் இண்டஸ்ட்ரீஸ ப்ராஜக்ட் ப்ரோகிராம் என்பதைப்பற்றி இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

With a view to encourage the growth of Village and Small-Scale Industries in the Rural Areas and in small towns, Government of India sanctioned in 1962. Pilot Projects for the incentive development of small scale industries in rural areas in 40 selected areas in the whole of India, out of which 3 Projects were allotted for Tamil Nadu.

As the primary objective is to bring about a Co-operative Agro-Industrial Economy by an all-round development of Agriculture, Irrigation, communications, etc., industries will have to be stimulated and mobilised to the fullest extent for raising the level of living and productivity, for providing larger employment opportunities to the landless and weaker sections of village communities.

அருமையான வாசகம், அதற்கு மேலான வாசகம் ஒன்றும் இல்லை. ஆனால் இந்த வாசகத்தில் கண்டுள்ளபடி செயலாற்ற போட்டியிருக்கிற திட்டங்களில் என்ன திட்டம் இருக்கிறது? ஒன்றுமே கிடையாது.

மனிதாபிமானத்தோடு பார்க்க வேண்டிய ஒன்றாகும் இது. கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு நாம் என்ன செய்திருக்கிறோம்?

கைத்தறிகளை எடுத்துக்கொண்டால் நாம் இப்போது விசைத்தறிகளைப் புகுத்த இருக்கிறோம். அதையும் புகுத்தினால் எத்தனை அன்எம்பிளாய்மெண்டு வரும் என்பதை ஊகித்துக்கொள்ளலாம். நாம் விசைத்தறிகளை கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் கொடுப்பது, இரண்டாவது நெசவாளர்களுக்கும் கொடுப்பது, மூன்றாவதாகத் தான் தனியார்களுக்குக் கொடுப்பது என்று வரையறுத்திருக்கிறோம். ஆனால் எத்தனை கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள், சம்பந்தப்பட்ட நெசவாளர்கள் எக்கனாமிகலி சவுண்டாக இருக்கிறார்கள்? பணத்திற்கு அவர்கள் எங்கே போவார்கள்? அவர்களால் வாங்க முடியவில்லை என்று சொன்னால் தனிப்பட்டவர்களுக்குத்தான் கொடுக்கப் போகிறோம். ஆக வருகிற விசைத்தறிகள் எல்லாம் வெளியார்களுக்கே செல்லும். அப்பேர்ப்பட்ட நிலை காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் என்ற

[திரு. ஏ. அ. சுப்பராஜா]

அளவுக்குப்பெருகும் என்பதை சர்க்கார் சிந்திக்கவேண்டும். ஆகவே இந்த நேரத்தில் விசைத்தறிகளை புகுத்த வேண்டுமா என்பதை சர்க்கார் சிந்திக்க வேண்டும்.

கிராமப்புறங்களில் சிறுசிறு தொழில்களை ஏற்படுத்த சர்க்கார் அதிகமாகப் பணம் ஒதுக்கவேண்டும். விவசாயக் கருவிகள், டிராக்டர் சர்வீஸ் சென்டர், பம்பு செட்டுகள் சர்வீஸ் சென்டர் என்பன போல பலபல சிறு தொழில்களை ஏற்படுத்தி பெரும்பான்மையான விவசாய மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தினால்தான் சர்க்காருடைய உண்மையான நலவழி தீரும். இப்பேர்ப் பட்ட பெரிய அறிக்கை கொடுத்திருந்தாலும் ரூரல் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரி பற்றி எதுவுமே கவனம் செலுத்தப்படாததற்காக வருந்துகிறேன். இன்றைக்கு கிராமப் புறங்களில் தான்—கூட்டுறவு முறையிலோ, தனிப்பட்ட முறையிலோ சிறுசிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டாகவேண்டும். வேலையில்லாத பட்ட தாரிகள், டிப்ளமோ ஹோல்டர்ஸ், என்ஜினியர்கள்—இவர்களுக்கு எல்லாம் ஆங்காங்கே வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த மானியக் கோரிக்கையின் மீது என் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து எனது கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலம் தொழில்துறையில் இதுவரை கண்டிருக்கிற முன்னேற் றம் கடந்த காலத்துடன் தொடர்புடையது. கடந்த காலத்தில் எந்த எந்த வகையில் தொழில்களுக்குத் திட்டமிட்டார்கள், என்ன என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதனை எல்லாம் தெளிவாக அமைச்சர் அவர்கள் தம் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியில்---தமிழகத்தைத் தொழில் மயமாக்குவது என்கிற திட்டம் வகுக்கப் பட்டு பல்வேறுவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் நாங்களே சொல்லிக்கொள்வதற்குப் பதிலாக, நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் இப்போது உட்கார்ந்திருக்கிற நீங்கள் சொல்வது பெருமைப்படக்கூடியதாகும். அதனை அமைச்சர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பாராட்டு கிறேன். அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைத் தொழில் மயமாக்குவதற்கு அடிப்படையாக மின்விசை அதிகப்படுத்தல், போக்குவரத்து சாலைகள், சாதனங்களை அபிவிருத்தி செய்தல் ஆகியவை ஆகும். இந்த இரண்டு துறைகளிலும் முந்தைய காங்கிரஸ் அரசாங்கம் திட்டமிட்டு நல்லமுறையில் செயல்பட்டு மாபெரும் வெற்றியைக் கண்டிருக் கிறது. அவர்களது வழியிலேயே தொடர்ந்து செயல்பட்டு இந்த அரசும் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது என்றாலும் இன்றையதினம் நாட்டை எதிர் நோக்கியுள்ள பெரிய பிரச்சினைகளைச் சிந்தித்தாகவேண்டும்.

விவசாயத்துறையை எடுத்துக்கொண்டால் மிக வேகமாக இயந்திரமயமாகிக் கொண்டு வருகிறது. விவசாயத்துறையில் எத்தனையோ கோடி மக்களுக்கு வேலை வாய்ப்பு இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த வாய்ப்பு வேகமாகக் குறைக்கப்பட்டு வருகிறது. விவசாயத்துறை இயந்திரமயமாக்கப்படுவது தேவை என்றாலும் வேலை இழக்கிறவர்களுக்கு மாற்று வேலைத் திட்டம் சரியான





முறையில் அமையவில்லை என்றால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தான் பெரும் அளவுக்குப் பெருகிவிடும். படித்து வேலையில்லாமல் இருக்கிறவர்கள், வேலை இழக்கக்கூடிய நிலையில் இருக்கிறவர்கள் இவர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க இந்த அரசு எந்தவிதத்தில் செயல் பட இருக்கிறது என்பதைப் பொறுத்தே எதிர்கால வாழ்வு அமையக்கூடும்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

இன்றையதினம் இந்த அரசு வந்தபிறகு புதியதாகத் திட்டமிட்டு என்ன தொழிற்சாலையை ஏற்படுத்தியிருக்கிறது? வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில் வடக்கே சித்தரஞ்சன், தெற்கே ரயில் பெட்டித் தொழிற்சாலை என்று பேசியவர்கள் இன்றையதினம் 750 ரயில் பெட்டிகளை இங்கே கட்டுகிறோம் என்று சொல்கிறார்களே தவிர புதிய தாக என்ன பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்த வகை செய்திருக்கிறார்கள் ; ஒன்றும் இல்லை என்பதை வருத்தத்துடன், வேதனையுடன் தெரிவித்துக்கொள் கிறேன். செய்திருப்பது எல்லாம் காங்கிரஸ் ஆட்சியில் திட்டமிட்டிருந்தவைகள் தான்.

அதோடு கடந்த காலத்தில் இருந்த ரிசஷன் இப்போது குறைந்திருக்கிறது. தொழில்துறையில் இருந்த மந்த நிலை அகற்றப்பட்டிருக்கிறது, பொருளாதார நீதியில் நிலைமை சீர்திருந்தியிருக்கிறது என்றாலும் கூட இந்த நிலைமையை எந்த அளவுக்கு இந்த அரசு பயன்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

இவற்றை எந்த அளவிற்குப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பார்க்கிற நேரத்திலே புதியதாகச் செயல்படுகின்ற தொழிற்சாலைகளைப்பற்றி இந்தத் துறையினர் ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் அளவிற்கு மூலதனம் போட்டு நடத்தக்கூடிய புதிய தொழிற்சாலை களுக்குச் சர்க்கார் எந்தவிதமான நிபந்தனையுமின்றி உடனடியாக லைசென்ஸ்கள் வழங்கும் என்றும் 10 சதவீதத்திற்கு மேற்படாத அளவிற்கு அன்னியச் செலா வணி தேவையில்லை என்ற நிலைமை இருக்குமானால் 5 கோடி ரூபாய் அளவிற்குக் கூட தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ்கள் தரப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்பட்டால் லைசென்ஸ் தேவை என்று முன்பு இருந்த நிலைமை மாற்றப்பட்டு அரசு தாராள மாக லைசென்ஸ்கள் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க தென்றாலும்கூட புதியதாக துவங்கப்பட இருக்கின்ற, தொழிற்சாலைகளுக்கு எப்படிச் சலுகைகள், பாதுகாப்பு இவையெல்லாம் தரப்போகிறார்கள் என்ப தையும் பார்க்கவேண்டும். புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு அன்னிய மூலதனம் கூடாது, கூடாது என்று சொன்னாலும்கூட அன்னிய மூலதனம் இல்லாவிட்டாலும் வடநாட்டு மூலதனம் என்ற பெயரிலே டாட்டாக்கள் பிர்லாக்கள் இவர்களை வலுவிலே அழைத்துப் புதிய தொழிற்சாலைகளை எங்கள் மாநிலத்திலே ஆரம்பியுங்கள் அதற்கான சலுகைகளையும் பாதுகாப்பையும் நிச்சயம் தருகிறோம் என்று சொல்கிற அளவிலே அரசு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. தொழிற்துறையிலே இப்படிச் செய்தால் தொழில் துறை யில் மாநிலம் முன்னேற்றமடையும் என்பது மட்டுமல்ல, மற்ற மாநிலங்களோடு நம்முடைய மாநிலம் போட்டியிடவும் முடியும்.

தொழிற்சாலைகளுக்கு மின்விசைக் கட்டணத்தில் சலுகைகள் காட்டுகிறோம். மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை இப்பொழுது பெரும் அளவிலே லாபத்திலே நடந்துகொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலை லாபத்திலே நடக்கவேண்மென்ற அளவிலே தான் குறைந்த அளவிலே மின்விசைக் கட்டணம் விதிப்போம் என்று நாம் ஒப்புக்கொண்டிருந்தோம். இன்றைய தினம் லாபம் பெருவாரியாக வருகிற காரணத்தினாலே அந்த அளவுக்கு மின்விசைக் கட்டணத்தைக் குறைத்துத் தரவேண்டுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். மின்விசைக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் தொழிற் கூடங்களுக்குக் குறைந்த அளவுக்குத் தரவேண்டுமென்று சிபாரிசு செய்கிற நோக்கிலே விவசாயத்திற்கு மின் கட்டணத்தை உயர்த்தி விட்டு தொழிற்சாலைக்குக் குறைத்துக்கொடுக்கலாமா என்ற வாதம் எழுப்பப்படும். தொழிற் துறையை முன்னேற்றுவதற்கு அதிலேயிருந்து வருகின்ற வருவாய் அதிகமாகின்ற வரையிலே சில நஷ்டங்கள் ஏற்பட்டாலும் குறைந்த கட்டணத்தை விதிப்பதிலே தவறு இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே அரசு நல்ல முறையிலே மின்விசைக் கட்டணத்தை நிர்ணயிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூடப்பட்டிருக்கின்ற நூற்பாலைகளைப் பொறுத்தவரையில் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலமாகத் திறந்திருக்கிறார்கள் என்றாலும் திறப்பதற்கான முயற்சிகளைப் பாராட்டுகின்ற அதே நோக்கிலே இன்னும் மூடப்பட்டிருக்கின்ற ஆலைகளைத் துரிதமாக திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த நடவடிக்கைகளை யாரோ செய்வது என்ற முறையிலே இல்லாமல் செய்வதை மற்றவர்கள் பாராட்டவேண்டுமென்ற காரணத்திற்காகக் காத்திராமல் துரிதமாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கூட்டுறவு துறையிலே 12 நூற்பாலைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. சர்க்கரை ஆலைகள் 7 இருக்கின்றன, இன்னும் மூன்று புதிய ஆலைகள் நிறுவ இருக்கின்றார்கள். நூற்பாலைகளானாலும்சரி, சர்க்கரை ஆலைகளானாலும்சரி, இந்த இரண்டுமே தேசியமயமாக்குகின்ற கொள்கையின் அடிப்படையிலே தொழிலை விருத்தி செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே இன்றைய தினம் நிர்வாகம் அமைந்திருக்கின்றதா என்று பார்த்தால் ஏமாற்றம் தருகின்ற நிலைமைதான் இருக்கின்றது. பெருவாரியான நூற்பாலைகளைப் பொறுத்தவரையில் ஆளுங்கட்சியோடு தொடர்புடையவர்கள் அல்லது அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களிடத்திலே விடப்பட்டிருக்கின்றன. இப்படிச் சொல்கின்ற நேரத்திலே கடந்த காலத்திலே உள்ளதைச் சுட்டிக் காட்டுவதெல்லாம் தொழிற் முன்னேற்றத்திற்குச் சாதகமாக எந்தவிதத்திலும் இருக்காது. நாம் செய்து கொண்டிருப்பது நல்ல சூழ்நிலையை உண்டாக்குமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தவரையில் அமல்படுத்துகின்ற நிர்வாக முறை பொதுமக்களுக்கு அதிலே இருக்கிற நம்பிக்கையைக் குறைத்துவிடும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே தூத்துக்குடித் துறைமுக விஸ்தரிப்பு, உரத் தொழிற்சாலை இவைபற்றி பெருமை கொள்ளுகின்ற அளவிலே அமைந்து இருக்கின்றது. இருந்தாலும் நம்முடைய மாநிலத்திற்குப் பயன் உண்டாக்க வேண்டுமானால் போக்குவரத்து விஸ்தரிக்கப்பட வேண்டும். அதற்காக ஆக்கப்பூர்வமாக திட்டமொன்றை கடந்த கால காங்கிரஸ் சர்க்கார் சொல்லிச் சொல்லி வந்தது. இந்த அரசு அதனைச் செய்துமுடிக்க வேண்டும். தூத்துக்குடியிலிருந்து கோவைக்குப் போக்குவரத்து விஸ்தரிக்கப்பட வேண்டும். கோவையிலிருந்து ஈரோடு, திருச்சி வழியாக தூத்துக்குடிக்கு ஒரு பிராட்கேஜ் ரயில் பாதை அமைத்தாக வேண்டும். தூத்துக்குடி வரையிலும் அப்படியொரு பிராட்கேஜ் ரயில்பாதை அமைந்தால் அங்கே விஸ்தரிக்கப்பட இருக்கின்ற துறைமுகம், ஏற்படுத்த இருக்கின்ற உரத் தொழிற்சாலை இவற்றின் மூலமாகத் தமிழகம் முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே முதல்படியாக இந்தப் பாதையைப் போடவேண்டும். அப்படிச் செய்தால் தூத்துக்குடியிலிருந்து திருவனந்தபுரத்திற்கும் பிராட்கேஜ் அமைப்பதைச் சுலபமாகச் செய்துவிடலாம், இதன்மூலம் நாட்டினுடைய வியாபாரம் சிறப்பாக இருக்கும். தூத்துக்குடியில் முன்பே விமானக் கூட்டம் இருந்திருக்கிறது. அருகிலே கயத்தாறு என்ற இடத்திலே விமான நிலையம் ஒன்று இருந்தது. அங்கே புதியதாக ஒரு விமான நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். அல்லது விரிவுபடுத்த வேண்டும்.



தென் ஆற்காடு மாவட்டத்திலே நான்கு சர்க்கரை ஆலைகள் பெரிய ஆலைகள் இருக்கின்றன. அங்கே காகிதத் தொழிற்சாலை துவங்குவதற்கு எல்லாச்சாதகமான நிலைமைகளும் இருந்து கொண்டிருக்கின்றன. காகிதத் தொழிற்சாலை துவக்குவது மட்டுமல்ல, மாநிலத்திலே ஆங்காங்க சர்க்கரை ஆலைகள் உண்டாக்கப் போகிறோமோ அதையும் கணக்கில் எடுத்து அப்படிப்பட்ட இடங்களில் காகிதத் தொழிற்சாலையும் தோற்றுவிக்க வேண்டும்.

ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸைப் பொறுத்தவரையில் அதுபற்றி தெளிவாக அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். பெரும்பாலும் இவையெல்லாம் தரப்படுகின்ற வேலைகளை எதிர்பார்த்தே இயங்க வேண்டியிருக்கிறது. தேவைக்குப் போதுமான அளவிற்கு புதிய ஆர்டர்கள் கொடுத்தால்தான் தொழிற்கூடங்கள் இயங்க முடியும், இல்லாவிட்டால் இயங்க முடியாது என்ற நிலைமைதான் இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றியமைக்கவேண்டும். இந்தத் தொழிற்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்ட நேரத்திலே இருந்த நிலைமை வேறு, இப்பொழுதுள்ள சூழ்நிலை வேறு. எனவே சிறு தொழில்களைப் புதிய முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையிலும் வேறு ஒரு முறையிலே செயல்படுத்துவது நல்லது என்று நினைக்கிறேன்.

இன்றைய தினம் பெருமளவிலே எஞ்சினியரிங் படித்தவர்கள் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, எஞ்சினியரிங் பட்டம், டிப்ளமா படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தொழில் நுட்பக் கல்விக்கு முன்னால் இருந்த ஆர்வமும், வேகமும் குறைந்துவிட்டது. இன்றைய தினம் படித்தவர்களுக்கு வேலை கிடைக்காததன் காரணமாக உள்ள ஏமாற்றமும் இதற்குக் காரணம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையிலும் சில இடங்களிலே தொழிற்சாலைகளை ஆரம்பித்து நடத்தி வருகின்ற தொழிற்சாலைகளை அந்த எஞ்சினியரிங் படித்தவர்களிடம் ஒப்படைப்பது நல்லது என்று நினைக்கிறேன். அப்படிச் செய்தால் எஞ்சினியர்கள் கூட்டுறவு முறையிலோ அல்லது ரிஜிஸ்டர்டு கம்பெனியாகப் பதிவு செய்து கொண்டோ அப்படிப்பட்ட லாபத்தில் நடக்கக்கூடிய அரசாங்கத் தொழிற்சாலைகள் ஏற்று நடத்த முன்வந்தால் அவர்களிடம் அரசாங்கத் தொழிற்சாலைகள் ஏற்று நடத்த முன்வந்தால் அவர்களிடம் தொழிற்சாலைகளைத் துவங்குவதில் தப்பில்லை. புதியதாக முதலீடு அவர்கள் செய்து ஆரம்பிக்கலாமா வேண்டாமா என்று யோசித்து ஆரம்பித்தால் லாபம் வருமா வராதா என்று தயங்கிய நிலையில் ஆரம்பித்தால் வரவேற்பு

இருக்குமா இருக்காதா என்ற எண்ணத்தில் இருப்பதால் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட முடியவில்லை. எனவே ஏற்கனவே நல்லமுறையிலே வரவேற்கப் பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு அரசு நல்ல முறையிலே புதிய தொழிற்சாலைகளை ஆரம்பித்து நடத்துவது தொழில் தேசியமயக் கொள்கைக்கும் தொழில் வளர்ச்சிக்கும் உதவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே புதிய ஒரு வரி விதிப்பைச் செய்திருக்கிறார்கள். டர்ன் ஓவர் பேரில் சர்சார்ஜ் விதித்திருக்கிறார்கள். இந்த வரி நம்முடைய தொழிற் கொள்கையை முறியடித்துவிடும். வியாபார ரீதியாகப் பார்க்கும்போது பொருள்களின் விலையை அண்டை மாநிலங்களில் தயாராகும் பொருள்களின் விலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய விலை கூடியிருக்கும் நிலைமை ஏற்படும்.

பல்புகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதில் சிக்கல் இருந்து கொண்டிருக்கிறது. இதை மின்சார வாரியம் ஆரம்பிப்பதா அல்லது இண்டஸ்ட்ரிஸ் டிப்பார்ட்மெண்ட் ஆரம்பிப்பதா என்பதிலே இவர்களுக்குள்ளே உள்ள போட்டியில் இந்தத் தொழில் துவங்கப்படாத நிலையில் இருப்பதாக அறிகிறேன். இந்த நிலை மாற வேண்டும். இதை உடனடியாக அமைக்க வேண்டும். மின்சார வாரியம் மின்விசையைப் பெருக்கியிருக்கிறது. இங்கு மின்சாரப்பொருள்களைத் தயாரிக்கும் நிலைமை ஏற்படுமானால் அதற்கான மார்க்கெட் நம்முடைய மாநிலத்திலேயே இருந்தும் இன்னமும் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்காமல் இருப்பது ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கிறது. அதை அமைப்பதன் மூலம் தமிழகத்தில் வேலை வாய்ப்பு ஏற்படும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரை அவர்கள் நாங்கள் விட்டுச் சென்றதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற அளவில் வரவேற்கிறேன் என்றாலும் கூட புதிய தொழில்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் காட்டவில்லை என்பதைச் சொல்லாது இருக்க முடியவில்லை. மாறி வருகின்ற சூழ்நிலைக்கேற்ப, புதிய சமுதாயத்திற்கு புதிய உலகத்திற்கு வழி காட்டுபவர்களாக அவர்கள் இருக்க வேண்டுமென்று சொல்லி, தொழிற்துறையில் அதற்கான முன்னேற்றத்தைக் காண வேண்டுமென்று சொல்லி வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

* மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தொழிற் துறை மானியத்திலே சட்டமன்றத்திலே உள்ள பலத்தரப்பில் உள்ள அங்கத்தினர்கள் எல்லாம் நல்ல ஆலோசனைகளை, தமிழகத்தில் தொழில் வளம் பெருகவேண்டும், தொழில் வாய்ப்புகள் பெருக வேண்டும், வேலைவாய்ப்புகள் பெருகவேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் குறைய வேண்டும் என்ற எண்ணங்களை எல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பல்வேறு துறைகளைப் பற்றி அவர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் நம்முடைய தொழிற் துறையினர், அதிலே பணியாற்றக்கூடிய அலுவலர்கள் கவனமாகக் குறிப்பெடுத்து குறைகளை எல்லாம் போக்கக்கூடிய முயற்சியை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தமிழ்நாட்டுத் தொழில் வளத்தைப் பெருக்குவதற்காகத் தொழிற் துறையினர் மிக [illegible] முறையில் ஆர்வத்தோடு பணியாற்றுகிறார்கள் என்பதை நான்



பெருமையோடு எடுத்துச் சொல்லலாம். அவர்களுக்கெல்லாம் இந்த மன்றம் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளது. கனம் அங்கத்தினர்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் மேலும் கவனத்தில் எடுத்துக் கொண்டு தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற திட்டங்களை அவர்கள் உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கடைசியாக, காங்கிரஸ் கட்சித் தரப்பில் பேசிய அங்கத்தினர் அவர்கள் இதுவரை அவர்கள் ஆற்றி வந்த பணியை நல்ல முறையில் நாங்கள் தொடர்ந்து ஆற்றுவதாகவும், இன்னும் நல்ல முறையில் புதிய தொழில்களைத் தொடங்க வேண்டுமென்றும் சொன்னார்கள். அவர்கள் மிக அமைதியாகச் சொன்னார்கள். ஒருவேளை கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தொழிற்துறை மானியத்திலே ஆர்வம் இல்லாது இருக்கிறாரோ என்று அவர் பேசியதில் இருந்து ஊகித்தேன். ஆனால் அப்படி இருக்காது என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. சென்ற வருஷம் இருந்த காரம் இந்த வருஷம் இல்லை என்பதால் நானே ஊகித்துக் கொண்டேன்—இந்த ஆண்டு நடைபெற்றிருக்கும் அருமையான முயற்சிகளையும், திட்டங்களையும் பேசினால் வரவேற்றுப் பேச வேண்டியிருக்குமே என்று நினைத்துத்தான் அவர்கள் பேசாது விட்டு விட்டார்களோ என்று எனக்குத் தோன்றியது. இன்னும் புதிய முறையில் தொழில் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் வரவேற்கிறது. இந்த முயற்சிகளில் கொஞ்சம் கூடப் பின்வாங்காது நடத்துவோம் என்பதை உறுதியோடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை பொதுத் துறை, தனியார் துறை, கூட்டுறவுத் துறை, இரண்டும் சேர்ந்த கூட்டுத் துறை என்ற கொள்கைப் பிரச்சினைகள் நாட்டிலே இருக்கின்றன. நம்முடைய அரசாங்கத்தைப் பொருத்தவரை எல்லாத் துறைகளும் வளர வேண்டுமென்பதுதான் கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையில் பல துறைகளும் வளர்ச்சியடைய ஆக்கபூர்வமான நல்ல உதவிகளைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் முயற்சி எடுக்கிறது. தனியார் துறையே இருக்கக் கூடாது, எல்லாமே பொதுத் துறையில் இருக்க வேண்டுமென்பதைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தக் காலத்திலும் ஒப்புக் கொண்டதில்லை. எல்லாத் துறைகளுக்கும் ஊக்கம் தர வேண்டுமென்பதுதான் ஜனநாயக ஆட்சி முறையில் தேவை என்று கருதுகிறோம்.

புதிதாக எடுக்கப்படக்கூடிய முயற்சிகளில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி யெல்லாம் சொன்னார்கள். தூத்துக்குடியில் 52 கோடி ரூபாயில் தொடங்க இருக்கின்ற உரத் தொழிற்சாலையை முழுக்க பொதுத் துறையிலேதான் தொடங்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினர் சொன்னார். சுதந்திராக் கட்சி அங்கத்தினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் 'இதைத் தொடங்கியிருக்கிறீர்களே, ஏராளமான முதலைப் போட்டிருக்கிறீர்களே, எந்த அளவுக்குக் கண்ட்ரோலை, கட்டுப்பாட்டைச் செலுத்தப் போகிறீர்கள்?' என்று கேட்டார்கள். எனக்கு அதிலே மகிழ்ச்சி. சுதந்திராக் கட்சி அங்கத்தினர் அவர்கள் அரசாங்கம் போடுகின்ற முதலுக்குத் தேவையான அளவுக்குத் தனியார் துறையில் கட்டுப்பாட்டை வைத்துக் கொள்ள வேண்டுமென்று வெளிப்படையாகச் சொன்னதில் மகிழ்ச்சி. அப்படிப்பட்ட முறைகளைத்தான் இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. முழுக்க முழுக்க

உபத் தொழிற்சாலை அரசுத் துறையில் நடைபெற வேண்டுமென்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. இதிலே ஆழ்ந்து சிந்தித்த பிறகுதான் அந்த முடிவு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. 52 கோடி ரூபாயில் தொடங்கப்பட இருக்கக்கூடிய தொழிற்சாலையில் முழுவதும் நம்முடைய அரசாங்கமே பணம் போடாமல், இந்தத் துறையில் ஈடுபடக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டுமென்ற முடிவுக்கு அரசாங்கம் வந்தது. இதிலே நம்முடைய முதலையும் போட்டிருக்கக் கூடிய நிலையில் தனியார் துறையினர் இடையில் ஓடிவிட்டால் என்னுவது என்ற அருமையான கேள்வியை டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். அதற்காகத்தான் போர்டு ஆப் டைரக்டர்ஸ் குழுவில் அரசாங்கத்தின் சார்பில் இடம் கொடுத்திருக்கிறோம்; கூட்டுறவுத் துறையில் போடப்படுகின்ற பணத்திற்கு அவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறோம்; தனியார் துறையில் நிபுணர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறோம்; தனியார் துறையில் முதல் போடக் கூடியவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறோம். இவ்வளவு பேரும் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயலபடுத்த முடியுமென்ற நம்பிக்கையோடு திட்டமிட்டிருக்கிறோம். இதிலே ஏதாவது தடையேற்படுமானுல் உடனடியாக அரசாங்கமே இதிலே தலையிட்டு நடத்த முயற்சிக்கும் என்ற திட்டத்தின் அடிப்படையிலே தான் அரசாங்கம் இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. தூத்துக்குடி உரத் தொழிற்சாலை ஏற்படுவதன் மூலம் அதைச் சுற்றி ஏராளமான உப தொழில்கள்— பெட்ரோ காம்பௌகஸ், பெட்ரோ கெமிகல் காம்ப்ளெக்ஸ் என்ற முறையில் வளருவதற்கும் நல்ல திட்டங்களைப் பற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

தொழிற் துறை, தனியார் துறை என்று சொல்லிக் கொண்டே நம்முடைய நாட்டில் தொழில் வளராமல் போய்விடுமோ என்ற அச்சத்தை அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன். எந்தத் துறை என்ற சித்தாந்தப் போராட்டங்களினுல் நம்முடைய நாட்டுக்குத் தொழில் வளம் வராது போய்விடக் கூடாது என்ற அச்சத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுகிறோம். அதே சமயத்தில் நாட்டினுடைய சமுதாய அமைப்புக்கு, சமதர்ம எண்ணங்களுக்கு அடிப்படையாக அமைய வேண்டுமென்ற கருத்தை எல்லாத் தரப்பினரும் ஒத்துக் கொண்டார்கள். அந்த அமைப்பில் தனியார் துறை பெரும் ஆதிக்கத் துறையாக வளர்ந்து விடாமல் இருக்க வேண்டு விடும் என்ற கருத்தை இன்று நாட்டில் இருக்கும் பெரும்பாலானவர்கள் மென்றும் அப்படி ஏற்பட்டுவிடுமானுல் அதனுல் சமுதாய அமைப்பு சீர்கெட்டு
எல்லன்ற கருத்தை இன்று நாட்டில் இருக்கும் பெரும்பாலனவர்கள்
தொழில் தொடங்கி விட்டார்கள்.

வேலையில்லாதால் நம் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கை, தனியார்
எல்லாம் சொன்துறையும் இணைந்து செயல்படவேண்டும். கூட்டுறவுத்
கொள்ளுகிறேன். டவர்களை ஒன்ருகச் சேர்த்துத் தொடங்கவேண்டும்.
களை எல்லாம் நம் ரவேண்டும். சிறு சிறு தொழில்களைத் தொடங்கக் கூடிய
அலுவலர்கள் கவனக்குப் போதிய வாய்ப்புகளை அரசு கொடுக்கவேண்டும்
முயற்சியை எடுப்ட ஏற்றுக்கொண்டிருக்கிறோம், அந்த அடிப்படையில்
தொழில் வளத்தைகை அரசு சார்பில் அமைக்கப்பட்டிருக்கிறது. தேசியமய
உன்னதமான முகொள்கையை இங்கு சிலர் சொன்னுர்கள். கம்யூனிஸ்ட்



கட்சிக் கொள்கையை இங்கு எடுத்துச் சொல்லுர்கள். அது அவர்களுடைய கட்சிக் கொள்கை. எந்தக் காலத்திலும் கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. ஆனுல் இருக்கிற சர்க்கரை ஆலைகளை எல்லாம் தேசியமயமாக்கவேண்டுமென்று காங்கிரஸ் கட்சித் தரப்பிலிருந்து ஒரு குரல் கேட்கப்பட்டது. நல்லவேளையாக அப்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கு இல்லை. இருந்திருந்தால் என்ன சொல்லியிருப்பாரோ தெரியாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அப்படி சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்பவர்களில் நானும் ஒருவன். எனக்கு சர்க்கரை ஆலையோடு தொடர்பு இருந்தாலும் விவசாயிகளின் நன்மைக்காக அது தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற என் கருத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இவ்வளவு தைரியமாக சொல்ல முன்வந்தது பாராட்டுதற்குரிய செய்தியாகும். வேறு ஒரு இடத்தில் சர்க்கரை ஆலைகளை எல்லாம் தேசியமயமாக்கவேண்டுமென்று சொன்னபோது ஐயகோ, இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக, இந்த ஸிண்டிகேட் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக இப்படி ஒரு தத்துவத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது, இப்படி ஒரு பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்த உருவாக்கியிருக்கிறது மத்திய அரசு என்று சொன்னதாக நினைவு. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இப்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல முன்வந்தது பாராட்டத் தக்கது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதை தேசம் பூராவிற்கும் பிரதம மந்திரி அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அங்கே ஒன்று, இங்கே ஒன்று என்று இருக்கக்கூடாது. நாட்டில் உள்ள எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு தைரியம் கிடையாதே. பாராளுமன்றத்தில் உள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இதை வலியுறுத்துவார்கள் என்று தங்கள் மூலம் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழக அரசு சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்குவதை குற்றம் சொல்லவில்லை. ஆனுல் இந்திய அரசு இந்தியா முழுமையுமாகச் செய்தால்தான் இந்த அரசும் செய்யவேண்டுமென்ற ஆலோசனையைத் தந்திருக்கிறுர்கள். நல்லவேளை இப்படி ஒரு பாதுகாப்பையும் அருமையான கருத்தையும் சொன்னதற்காக என் பாராட்டுக்கள். தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கையில் எங்களது கொள்கை, எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்கினுல்தான் நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட முடியும், அப்போதுதான் பொருளாதார வளர்ச்சி அடையமுடியும் என்பதை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. மாருக, எந்தெந்தத் தொழில்களை கூட்டுறவுத் துறையில் அல்லது அரசுத் துறையில் தொடங்கினுல் சமதர்ம சமுதாயத்தை உருவாக்க முடியுமோ அந்தத் தொழில்களை தேசியமயமாக்குவதில் இந்த அரசு அந்தக் கொள்கையை உருவாக்கும்போது தயக்கம் இல்லாமல் அதை ஏற்று நடத்தும் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வெளிநாட்டு முதல் வேண்டுமா வேண்டாமா. இது ஒரு சித்தாந்தப் போராட்டம். ஒருபக்கம் வெளிநாட்டு உதவி இல்லாமல் புதுத் தொழிற்சாலைகளை புது "டெக்னிக்கல் நோ ஹௌ"வைப் பெற்றுக்கொண்டு தொடங்க

முடியாது என்று ஒரு வாதம் இருக்கிறது. ஆனால் வெளிநாட்டுக்காரர்கள் இந்த நாட்டை சந்தையாக்கிவிட்டால் இந்த நாட்டின் பொருளாதார வளம் சுரண்டிச் செல்லப்படும் என்ற வாதமும் இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் திட்டவட்டமாக நாம் தெரிவித்திருக்கிறோம். இந்த அரசாங்கத்தோடு சேர்ந்து செய்வதற்கு, இங்குள்ள தனியார் துறையோடு சேர்ந்து செய்வதற்கு எந்த வெளிநாட்டுக்காரர்கள் வந்தாலும் இந்த நாட்டின் பொருளாதார நிலைக்கு குந்தகம ஏற்படாத வகையில் கொள்கைகளை அல்லது திட்டங்களை வைத்து அவர்கள் ஒத்துழைப்போடு தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்வோம் என்று உறுதி கூற விரும்புகிறேன். இந்த நாடு அந்த நாடு என்று பிரிப்பதற்கு நான் விரும்பவில்லை. பக்கத்திலுள்ள அரக்கோணத்தில் ரஷ்ய நாட்டு உதவியுடன் நடக்கிறது. ரஷ்ய நாட்டுக்காரர்களே, இந்த நாட்டின் பொருளாதாரத்தை சுரண்டி சென்று விட்டவர்களே என்று சொல்ல மாட்டோம். எந்த அரசு உதவி செய்ய முன்வந்தாலும் அதை வரவேற்போம். ஹங்கேரி நாடு கம்யூனிஸ்ட் நாடு. அவர்கள் இங்கு கெமிக்கல் தொழிற்சாலைகள் தொடங்குவதற்குத் தயாராயிருக்கிறார்கள். அவர்கள் இங்கு வந்தார்கள். அவர்களிடம் நான் பேசிக் கொண்டிருந்தேன். உங்கள் நாட்டில், பொதுவுடமை சமுதாயத்தை உருவாக்கியிருக்கிற உங்கள் நாட்டில் தனியார் துறைக்கு உதவி செய்வதுண்டா என்று அந்தக் குழுத் தலைவர் அவர்களிடம் கேட்டேன். அவர்கள் தயக்கம் இல்லாது பதில் சொன்னார்கள். எங்கள் நாட்டு பொருளாதார வளர்ச்சிக்காக வெளி நாட்டு தனியார் துறையினர் உதவ முன்வருவார்களேயானால் அதை ஏற்றுக் கொள்வோம் என்று சொன்னார்.

எனக்கு கம்யூனிஸ்ட் தத்துவங்கள் அதிகமாகத் தெரியாது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த யார் உதவி செய்தாலும் நம்முடைய பொருளாதார வாழ்விற்கு குந்தகம் ஏற்படாத வகையில் நாம் அதைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை அப்போது நான் உணர்ந்தேன். அதை இந்த அரசு தொடர்ந்து செய்யும் என்பதை இந்த சமயத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த பொருளாதார அடிப்படையில்தான் கொள் கைகளை வகுப்பதற்கு ஆசைபட்டுக் கொண்டிருக்கிறோம்.

இங்கு பேசிய ஒரு உறுப்பினர் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு பகுதியிலும் புதுப்பித்துத் தொழிற்சாலைகள தொடங்கப்பட வேண்டுமென்று தொகுதி மக்களுக்காக வாதாடினார்கள். அவர்கள் காட்டிய ஆர்வத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அவர்கள் காட்டிய ஆர்வத்திற்கு தகுந்தவாறு அந்தப் பக்கங்களில் வசதி இருக்கிறதா என்று சொல்வதற்கு சிறிது தயக்கமாக இருக்கிறது.

இராஜபாளயம் தொகுதி உறுப்பினர் அரசுச் சார்பில் சிறுசிறு தொழில்களை இராமப்புறங்களில் தொடங்கக் கூடிய வகையில், ரூரல் இன்டஸ்ட்ரீஸ், தொடங்குவதற்கு இந்த அரசு அதிக உற்சாகம் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். எனக்குக்கூட அந்தச் சந்தேகம் உண்டு அந்த உறுப்பினர் மீது. இராஜபாளயத்திற்கு, அந்தப் பகுதிகளில் தொழில்கள் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று சென்றிருந்தபோது உறுப்பினர் அவர்களை அங்கே காணோம். ஆனால் அங்கே ஆயிரக்கணக்கானவர்கள் கூடியிருந்தார்கள். நான் சந்தேகப் பட்டேன். அந்த உறுப்பினர் அதில் ஆர்வம் இல்லாதிருக்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் அது பொய், அது தவறு என்று அங்குள்ள



வர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் அங்கு செல்வதற்கு முதல் நாளே மிகுந்த ஆர்வத்தோடு அந்தப் பகுதி மக்களை ஒன்றாகத் திரட்டி ஏராளமான தொழில்கள் அந்தப் பகுதிகளில் தொடங்குவதற்கான பணியில் அவர்கள் பங்கு பெற்றுள்ளார்கள் என்ற செய்தியை நான் கேட்டபோது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. சட்டமன்றத்தில் சொல்வதற்காக என்று சொன்னால் நான் கவலைப்படவில்லை. அவர்கள் தொழில்கள் ஏற்படுவதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய மகிழ்ச்சி. நம் நாட்டின் தேவைகள் ஏராளம். அதைப் பூர்த்தி செய்யவேண்டும், இன்னும் முன்னேற்றம் அடையவேண்டும் என்ற கருத்தினை பின்னணியாகக் கொண்டுதான் சொல்லியிருக்க வேண்டும் அவர்கள். சில சமயங்களில் கொஞ்சம் சுவையூட்டிச் சொல்ல வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சியில் இருப்பதால் இந்த அரசின் மீது குறை இருப்பதாகச் சொல்வது வாடிக்கை. நானும் அப்படிச் சொல்லியிருக்கிறேன், எதிர்தரப்பில் இருந்தபோது.

இந்த அரசாங்கத்தின் கொள்கைகளில், திட்ட வளர்ச்சியில் சிறிதுகூட குறை இல்லை என்பதை நாடு உணருகிறது. உலகமே இன்று தமிழ்நாட்டை நோக்கி வருகிற காட்சியைப் பார்க்கிறோம். கடந்த ஒரு ஆண்டுகாலத்திற்குள்ளாக உலகத்திலுள்ள பல நாடுகளிலிருந்து அரசு சார்பில், தனியார் துறை சார்பில் ஏராளமான குழுக்கள் சென்னையை நோக்கி, தமிழ் நாட்டை நோக்கி வந்த வண்ணமிருக்கிறார்கள். அவர்கள் எண்ணம் எல்லாம் தமிழ்நாடு தான் இந்திய துணைக் கண்டத்திலேயே தொழில்வளத்தைப் பெருக்குவதற்கான ஏற்ற இடம் என்று அவர்கள் உள்ளம் கருதுகிறது. அதன் காரணத்தினால்தான் இங்கு வருகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று சொன்னால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோபப்படுவார்கள். ஆகவே நான் அப்படிக் கூடச் சொல்ல மாட்டேன். தமிழக மக்கள்மீது உலக மக்களுக்கு அப்படி ஒரு நம்பிக்கை. உலகத்தில் உள்ள பல நாட்டு மக்களுக்கு, நம் நாட்டிலுள்ள பல பகுதி மக்களுக்கு அப்படி ஒரு நம்பிக்கை. அதை வளர்க்கவும், தொழில் வளத்தைப் பெருக்கவும் பல்வேறு அரசியல் கட்சிகளும் முன்வரவேண்டும். இப்படி நாம் எடுக்கிற முயற்சிகளில் சில தவறுகள் ஏற்படலாம்.

அரக்கோணத்தில் ஏன் இவ்வளவு காலதாமதம் என்று முன்னாள் அமைச்சர் பூவராகன் அவர்கள் கேட்டார்கள். நான் பொறுப்பேற்றவுடன், இந்த கால தாமதத்திற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தேன். புள்ளி விவரங்களைச் சேகரித்துப் பார்த்தேன். அவர்கள் சொன்ன காரணத்தை, அவர்கள் சொன்ன கருத்தைச் சொன்னால் கோபித்துக்கொள்வார்கள் என்று சொல்ல விரும்பாமல் விட்டு விடவில்லை. அதற்கு மாறாக அவர்களுடைய உதவி கிடைக்கும் என்ற காரணத்தினால் அதைச் சொல்ல விரும்புகிறேன். கிட்டதட்ட 90 சத விகிதம் இயந்திரங்கள் நமக்கு வந்து சேர்ந்துவிட்டன. நூற்றுக்கணக்கானவர்கள் ரஷ்யா நாட்டிலிருந்து வந்து வேலை செய்கிறார்கள். காலதாதமம் எல்லாம் கட்டடம் கட்டுவதற்கு இரும்பு கிடைக்கவில்லை. இரும்பு கிடைப்பதில் மத்திய அரசினிடம் போதுமான இரும்பு இல்லை. இரும்பு இருக்கிறதா, மனம் இருக்கிறதா என்ற சந்தேகமும் இருக்கிறது. இதைத் தவிர அந்த அரக்கோணம் தொழிற்சாலையைத் தொடங்குவதில் தயக்கம் காட்டுவதற்கு வேறு காரணம் இல்லை. விரைவாக அதைத் தொடங்க வேண்டும் என்பதில் முயற்சிகள் எடுத்துவருகிறோம். அதிகாரிகள் எல்லாம் சென்றார்கள்.

[திரு. செ. மாதவன்] [1970 மார்ச் 20

நான் கூடச் சென்றேன் டெல்லிக்கு. அப்படி அடிக்கடி செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை மாநில அரசுகளுக்கு. அங்கு சென்று வேறு யாருக்குக் கொடுக்காவிட்டாலும் அரசுத் துறையில் தொடங்க இருக்கிற தொழிற்சாலைகளுக்காவது கொடுக்கக்கூடாதா என்று வாதாடினேன். நமக்கு வேண்டியது 2400 டன். இது மிக மிகக் குறைவாகும். கொடுத்தது 1600 டன் அளவில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகம் கொடுக்கவேண்டு மென்று அதற்கான முயற்சிகள் எடுத்து வருகிறோம். அதில் வெற்றி பெற்றால்
பி.ப. 1–30 நிச்சயம் அந்தத் தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ஆனால் இப்படி பல கோடி ரூபாயிலே தொழிற்சாலையைத் தொடங்குகிறீர்களே, அதற்கு மூலப் பொருள்கள், ஸ்கிராப், கிடைக்கிறதா என்று ஆராய்ந்தீர்களா என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். இதை அவர் எங்களுக்கு சுட்டிக்காட்டியதிலே எனக்கு மகிழ்ச்சி. ஆனால் அதிலேகூட நாங்களும் சும்மா இருந்துவிடவில்லை. எங்கெல்லாம் ஸ்கிராப், தள்ளப்பட்ட இரும்புப் பொருள்கள், கிடைக்கின்றனவோ அதையெல்லாம் பெறுவதற்கு பெரு முயற்சி எடுக்கின்றோம். ஸ்கிராப்பை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதை முழுமையாக, எந்தப் பெயரிலே மறைமுகமாக அனுப்பினாலும் அதைத் தடை செய்யவேண்டும் என்ற கருத்தை மத்திய அரசாங்கத்திடத்திலே வலியுறுத்தி வருகின்றோம். நமக்கு மூலப் பொருளை பெரிய அளவிலே கொடுக்கக்கூடியது ரயில்வே துறைதான். இந்த ரயில்வே துறையோடு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி அவர்களுக்கு கிடைக்கிற பெரும் பகுதி ஸ்கிராப்பை நம்முடைய அரசு தொடங்கி நடத்த இருக்கின்ற இந்த அரக்கோணம் தொழிற்சாலைக்கு தரவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம். நமது கனம் அங்கத்தினர்களெல்லாம் எடுத்துச் சொன்ன கவலையான உணர்ச்சிகளை மத்திய அரசாங்கம் மதித்து ஸ்கிராப்பை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதை முழுக்க முழுக்க தடுக்கட்டும். ரயில்வே துறை போன்ற பொதுத்துறையிலே கிடைக்கக்கூடிய ஸ்கிராப்பையெல்லாம் இந்தத் தொழிற்சாலைக்கு கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இப்படியெல்லாம் இரும்பு இல்லாத காரணத்தால் தொழிற்சாலை தொடங்க முடியாத சூழ்நிலையை, கவலையைத் தெரிவித்தார்கள். அதற்கான காரணங்களை இங்கே எடுத்துச் சொன்னேன்.

இவ்வளவையும் சொன்னதற்குப் பின்னாலே நமது மாண்புமிகு பூவராகன் அவர்கள் சேலத்து உருக்காலை வேண்டுமா என்ற சந்தேகத்தைக் கிளப்பினார்கள். முன்னாலே பீடிகை போட்டார்கள். சேலத்துக்கும் கொடுக்கப் போகிறார்கள்; மூன்று மாநிலங்களுக்கும் கொடுக்கப்போகிறார்கள் என்று பீடிகை போட்டு தமிழ்நாட்டு மக்களிடத்திலே தகுந்த முறையிலே நடந்து கொண்டு, கடைசியிலே இந்தத் தொழிற்சாலையை பொருளாதார அளவுக்கு லாபம் தரக்கூடிய அளவிலே நடத்த முடியுமா என்ற சந்தேகத்தை 5 ஆண்டுகள் இங்கே அமைச்சரவையிலே பணியாற்றி, அந்த அமைச்சரவையின் சார்பிலே நாங்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்தபோதெல்லாம், சேலத்துக்கு உருக்காலை கொண்டுவராவிட்டால் நாங்களே தொடங்குவோம் என்றெல்லாம் சொல்லிவிட்டு இன்றைக்கு அது வேண்டுமா, சரியாக நடக்குமா என்று கூறுவது ஒருவேளை இதிலேதான் சேர்ந்திருக்கிற கட்சி மத்திய அரசிலே இருக்கிற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகம் ஏதாவது போராட்டத்



1970 மார்ச் 20] [திரு. செ. மாதவன்]

தைத் தொடங்கிவிட்டால் அவர்களுக்கு சங்கடமான நிலைமை ஏற்பட்டுவிடும், ஆகவே இப்படி ஒரு கருத்தை சொல்லிவைப்போம் என்று சொல்லி இருக்கலாம். நான் அதைக் குறித்து வருத்தப்படவில்லை. ஆனால் இப்படிச் சொன்ன காரணத்தாலே இதே காரணத்தைச் சொல்லி வாதாடி வருகின்றார்களே வடநாட்டிலே சில பேர், அவர்கள் இதைத் தவறாகப் புரிந்து கொண்டு, பார்த்தீர்களா, தமிழ்நாட்டுத் தலைவர்கள் சேலத்து உருக்காலை பொருளாதார அளவுக்கு எக்கனாமிகல் பிராபிட் கிடைக்கக்கூடிய அளவுக்கு நடத்த முடியாது என்ற கருத்தை தமிழ்நாட்டு சட்ட மன்றத்திலே சொல்லிட்டார்களே, இனி மேல் இதற்காக வாதாடுவதற்கு தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று கேட்டுவிடுவார்களோ என்ற அச்சத்தால் தான் இந்தக் கருத்தைச் சொன்னேன். ஆனால் நிச்சயம் இப்படியெல்லாம் இந்தச் சட்ட மன்றத்திலே சொன்னாலும் நமது கனம் அங்கத்தினர் பூவராகன் அவர்கள் டெல்லிக்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் சேலத்துக்கு உருக்காலை கொண்டுவருவேன் என்று சொல்கிறவர்களையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு நிச்சயம் அங்கே இந்தத் தொழிற்சாலையை வாங்கித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. தமிழ்நாட்டுக்கு விரோதமாக அவர்கள் சொல்லி இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை உண்டு. ஆனால் இப்போது அந்தக் கருத்தைச் சொன்னது மறைமுகமாக மக்கள் கருதுவதற்கு வாய்ப்பு ஏற்படும், நிச்சயம் அப்படிச் சொல்லி இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஒரு விளக்கம் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டால் கிடைக்கும். தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் ஒரு சமயம் கிடைக்காமல் போய்விடுமோ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அவர்களைக் கேட்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இவர்கள் கேட்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். ஆனால் இந்த அரசு யாரையும் நம்பிக்கொண்டிருக்கவில்லை. தமிழ்நாட்டு மக்களை நம்பி இருக்கிறது. தமிழ்நாட்டு அரசு சேலத்து உருக்காலை போன்ற பல உருக்காலைகளை பெற்றுத் தரும் என்ற உணர்ச்சியோடு இருக்கிறது. ஆனால் போகாவிட்டால் வராதா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சந்தேகம் கேட்டார்கள். வரவேண்டும் என்று எழுச்சிநாள் கொண்டாடச் சொன்னபோது தூங்கச் சொன்னார்கள். அப்படித் தூங்கச் சொன்னவர்களும் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, தூங்கச் சொன்னார்கள் என்றால் வேண்டாம் என்று பொருள் அல்ல. சிலபேர் யோகத்திலே இருந்து வருவதற்கும் இருக்கலாம் அல்லவா. தூங்குவது என்றால் சிலபேர் இப்படிச் செய்வார்கள். சிலபேர் அப்படி இருந்து வருவதற்காக யோகம் செய்யும்படியான நிலையிலே இருப்பார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இருபது ஆண்டுகால ஆட்சிக்குப் பின்னாலே, 1967-க்குப் பின்னாலே யோகந்தான் செய்துவருகிறார்கள். (சிரிப்பு). இந்த நாட்டு மக்களுக்கு திட்டங்களைத் தீட்டுவதையெல்லாம் எங்களுக்கு பொறுப்பாகக் கொடுத்துவிட்டு அவர்கள் யோகம் செய்கிறார்கள். தொடர்ந்து

தவம் இருக்கட்டும். பல ஆண்டுகள் தவம் இருக்கட்டும். அவர்கள் தவத்தின் பலனாக நாங்கள் சென்று இந்தத் தொழிற்சாலைகளைப் பெற்றுத் தருவோம் என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் சேலத்து உருக்காலையைப் பொறுத்த அளவுக்கு தமிழ்நாடு முழுவதும் ஒரே கருத்தைச் சொல்ல வேண்டும் என்று வற்புறுத்துவதற்காகத் தான் கோடிட்டுக் காண்பிக்கிறேன். பல ஆண்டுகள் தொழில் துறை அமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் மிகுந்த முயற்சி எடுத்து ஏராளமான புள்ளிவிவரங்களை சேகரித்து, எதிர் வாதங்களை முறியடித்து தொழிற்சாலை தொடங்கினால்தான் தமிழ்நாட்டுக்கு வளம் கூடும் என்பதை எடுத்துக் காட்டினார்கள். நாங்கள் எதிர் தரப்பிலே இருந்தபோது செல்வாக்கு பெற்றவர்களும், பின்னணியிலே இருந்து எதைச் செய்யச் சொன்னாலும் செய்கிறோம் என்று அன்று சொன்னவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடன் சேர்ந்து சொல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால் இதைச் செய்வதிலே ஒரு பொருளாதாரக் கொள்கையை சிலபேர் வலியுறுத்தி வருகிறார்கள் வடபுலத்திலே. அதற்கும் நாம் துணைபோய்விடக்கூடாது. சில மாநிலங்களிலே குறிப்பிட்ட இடங்களிலே ஏராளமான இரும்புக் கனிப் பொருட்கள் கிடைக்கின்ற காரணத்தால் அங்கேதான் உருக்குத் தொழிற்சாலை அமையவேண்டும், சிறிய சிறிய அளவிலே கிடைக்கிற தென் மாநிலங்களிலே பொருளாதார அளவுக்கு இதை நடத்த முடியாது என்ற வாதத்தை நிபுணர்கள் என்ற போர்வையிலே சிலபேர் சொல்லி வருகிறார்கள். அவர்களுடைய வாதத்திற்கு நாம் துணைபோய்விடக்கூடாது. நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே நாங்கள் எடுத்துவைத்தோம் சில வாதங்களை. உண்மைதான். ஓரளவிற்கு பெரும் அளவிலே இரும்புக் கனிகள் கிடைக்கக் கூடிய இடத்திலே தொழிற்சாலை அமைவது நியாயந்தான் என்றாலும் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி சமமான முறையிலே எல்லாப் பகுதியிலேயும் வளரவேண்டும். தொழில் வாய்ப்புகள் பெருகுவதற்கு சிறிய அளவிலே கிடைத்தாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். ஆகவேதான் சேலத்து உருக்காலை கிடைத்துவிட்டால், சேலம் மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலை அடிப்படையிலே பல உப தொழில்கள் ஏற்பட மிகுந்த வாய்ப்பு இருக்கிறது. அதற்காக கிட்டத்தட்ட 7,000 ஏக்கரா நிலங்களை தமிழ்நாட்டு விவசாயிகள் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் தொழிற்சாலை தொடங்குகிறது. இதை நமது கொறடா அவர்கள் என்னிடத்திலே கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் இதற்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். எப்படியாவது உருக்காலை வரும் என்று அறிவித்துவிடுங்கள் என்கிறார்கள். அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்திலே வரும் என்று அறிவிப்பதிலே எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஆனால் அறிவிக்கின்ற அதிகாரம் தொலைதூரத்திலே மத்திய ஆட்சியிலே இருக்கிறது. அவர்கள் எங்களுக்குச் சுட்டிக்காண்பித்து இருப்பதெல்லாம் மிக விரைவாக சேலத்துக்கு உருக்காலை வரும். அதற்கான முயற்சிகளிலே நீங்கள் ஈடுபடுங்கள். அதைக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் சேலத்து உருக்காலைக்கு பச்சைக் கொடி காட்டிவிட்டேன், தொடர்ந்து நடக்கட்டும் உங்கள் வேலை என்கிறார்கள். அந்தப் பச்சைக் கொடியை நம்பி நாங்கள் இன்றைக்கு வேலை தொடங்கிவிட்டோம். நாங்கள் எடுக்கக் கூடிய முயற்சிகளுக்கு இந்த ஆண்டு பணம் ஒதுக்கி அதன் வேலையும் [illegible]விட்டது. இருவேளை பச்சைக் கொடி காட்டிய அமைச்சர்



இன்றைக்கு வெளியே சென்றுவிட்டார்களே என்ற அச்சம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஏற்படலாம். ஆனால் நிச்சயம் வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அதற்குரிய நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமது மாநிலத்திற்குத் தருவார்கள் என்ற நம்பிக்கையும், பிற மாநிலங்களுக்குக் கொடுக்கக் கூடாது என்ற கொள்கை எங்களுக்கு இல்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைப்பற்றி எல்லோரும் அக்கறை காட்டினார்கள். ஆனால் போடக்கூடிய முதல், கேபிடல் எக்ஸ்பெண்டிசா குறைந்து வருகிறது, ஒதுக்கப்பட்ட பணமும் செலவழிக்கப்படவில்லை என்று குறையாகச் சொன்னார்கள். அதை வளர்க்கவேண்டும், அதிகப் பணம் ஒதுக்க வேண்டும் என்பதிலே எனக்கு ஒத்த கருத்து உண்டு. ஆனால் அரசாங்கத்தின் சார்பிலே அமைத்தால்தான் தொழில் வளர்ச்சி, இல்லாவிட்டால் தொழில் வளர்ச்சி இல்லை என்ற வாதத்திலே சொல்வார்களேயானால், அப்படிச் சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன், அப்படிச் சொல்வார்களேயானால், அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, நமது மாநிலத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய அனுமதி, லைசென்ஸ் 38. இதனுடைய முதலீடு 28 கோடி ரூபாய். அனுமதி கொடுப்பதற்கு, லைசென்சுக்கு முன்பாக ஆரம்பக்கட்டத்திலே கொடுக்கக்கூடிய அனுமதி, லெட்டர் ஆஃப் இன்டென்ட், மூன்று ஆண்டு காலத்திலே 39, அதற்கு போடப்பட்டிருக்கக்கூடிய முதல் 81 கோடி ரூபாய். ஆனால் இத்தனையும் அரசு தரப்பிலே மட்டுமல்ல. எல்லாத் தரப்பிலேயும் போடுகின்ற காரணத்தாலே, அரசாங்கத்தினுடைய அறிக்கையிலே அதிகம் ஒதுக்காவிட்டால் தொழில் வளர்ச்சி இல்லை என்று வாதம் அவ்வளவு சரியில்லை என்று மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சில தொழில்கள் வளர்க்கப்படவேண்டும் என்ற கருத்தை எல்லோருமே மிக அழகாக வலியுறுத்தினார்கள். பெரிய தொழில்களிலேகூட 1968-69-லே பொதுத் துறையிலே (பப்ளிக் லிமிடெட் கம்பெனீஸ்), தனியார் துறையிலே (பிரைவேட் லிமிடெட் கம்பனீஸ்) 99 கம்பெனிகள் நமது மாநிலத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதனுடைய மொத்த முதல் 4½ கோடி ரூபாய்வரை போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்பொழுது, ஏராளமான முதல் தமிழ்நாட்டை நோக்கி வந்துகொண்டிருக்கிறது என்பது தெரிகிறது. அப்படி வந்ததாலே தமிழ்நாட்டு மக்கள் பயனடைகிறார்கள். சிறுதொழில் வளர்ச்சி இல்லாமைதான் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம் என்ற அருமையான கருத்தை அங்கத்தினர்கள் சொன்னார்கள். அதை நான் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ளுகிறேன். ஜப்பானிய நாட்டை எடுத்துப் பார்த்தால், அது தொழில் வளம் மிகுந்த நாடு, அந்நாடு உலகச் சந்தையில் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் நாடு. அந்த தொழில் வளர்ச்சியில் ஜப்பானிய நிபுணர்கள் எதிர்பார்க்கும் நிலையைப் பார்க்கிறோம். அங்கு 93.4 சத விகிதம் தொழில் வளர்ச்சியை சிறு தொழில் வளர்ச்சியாகவே உருவாக்கியிருக்கிறார்கள். அதை நாம் பின்னணியாகக் கொண்டு நம்முடைய நாடு முழுவதும் சிறுதொழில் வளர்க்கப்பட்டு, ஒவ்வொரு கிராமத்திலும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலே நம்முடைய அரசாங்கம் மிகுந்த அக்கறை காட்டுகிறது. அதை எப்படிச் செய்ய முடியும் என்பதிலே நம்முடைய சிந்தையெல்லாம் சென்று கொண்டிருக்கிறது.

ஆனால் இங்கு அருமையான கருத்தை திரு. பூவராகன் அவர்கள் மிகவும் அழகாகச் சொன்னார்கள். தொழில் செய்யத் தயாராக இருக்கிறார்கள், ஆனால் அதற்குத் தேவையான மூலப் பொருள் எங்கே என்று தேடுகிறார்கள். மூலப்பொருள் கிடைத்துவிடுகிறது என்று சொன்னால், உற்பத்தி செய்த பொருள்களை எங்கே விற்பது என்ற பிரச்சினை ஏற்படுகிறது. அப்படி விற்பனை செய்வதற்கும் சந்தை கண்டு பிடிக்கிறோம் என்று சொன்னாலும், உற்பத்தி தொடங்க, ஏராளமாக அதிகப்படுத்த வேண்டிய நிபுணத்துவத்தை யார் கொடுக்கப்போகிறார்கள் என்ற கவலையிலே சிறுதொழில் வளர்ச்சி நம்முடைய நாட்டிலே குன்றி இருக்கிறது. இதை எப்படியாவது தவிர்க்க வேண்டும், இதற்கு வழி காட்ட வேண்டுமென்று, நம்முடைய அரசு இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஒரு திட்டத்தை ஒப்புக்கொண்டு, கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் முதலீடு போட்டு சிறுதொழில் வளர்ச்சி வாரியம் ஒன்றை அமைக்க முடிவுக்கு வந்திருக்கிறது. அதிலே தனியார் துறையும், அரசுத் துறையும் இணையலாம் என்ற கருத்தும் சொல்லப்படுகிறது. அரசுத் துறையில் எல்லா உதவிகளும் செய்யப்படும், தொழில் தொடங்கத் தயாராக இருப்பவர்களுக்கு ஆலோசனை சொல்லப்படும், நிதி உதவியும் தரப்படும், தேவையான மூலப்பொருட்களை இந்த நாட்டின் பல பாகங்களிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் இறக்குமதி செய்ய இந்த வாரியம் பொறுப்பேற்கும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வெளிநாட்டுச் சந்தையிலும், இந்த நாட்டின் மற்ற மாநிலச் சந்தைகளிலும் விற்பனை செய்ய அந்த வாரியம் பொறுப்பு ஏற்கப் போகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சிறுதொழில் வளர்ச்சி வாரியம் எந்த அளவுக்குச் செயல்பட முற்படுகிறதோ அந்த அளவுக்கு தமிழ்நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்து, தொழில் வளர்ச்சி பெருகும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

திரு. பூவராகன் அவர்கள் கேட்டார்கள், டால்மியாபுரத்தில் ஏன் இன்னும் தொடங்கவில்லை என்று கேட்டார்கள். தவறான தகவலை யாரோ அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** ஏன் தொடங்கவில்லை என்று கேட்கவில்லை. வேலை சீக்கிரம் முடியவில்லை என்று சொன்னேன். மூன்று ஆண்டுகளாகியும், 1967-ஆம் ஆண்டு, 1968-ஆம் ஆண்டு, 1969-ஆம் ஆண்டும் ஆகியும் இந்த மூன்று ஆண்டுகளிலேயும் முடிவுபெறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மீண்டும் அதைத்தான் சொல்லுகிறார்கள். பல மாதங்களுக்கு முன்னால் அது ஓடிக்கொண்டிருப்பதை நான் பார்த்தேன். எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்தத் தொழிற்சாலைகூட சிமெண்ட் உற்பத்திக்காகத் தொடங்கப்படவில்லை. சிமெண்ட் உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்கள், மூலப்பொருள்களைக் கொண்டு ஆராய்ச்சி நடத்தி, அதில் தமிழ்நாடு நிபுணர்கள் மிகச் சிறந்த வெற்றி பெற்றிருக்கிறார்கள். பல நாட்டு அதிபர்களெல்லாம் எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிறார்கள். இந்தோனேசிய நாட்டுக்குக்கூட நாம் கொண்டுபோய் பயிற்றுவித்துக் கொடுக்கப்போகிறோம். அதனால் பெரும் லாபம் வரப்போகிறது என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.



இந்தத் தொழில் வளர்ச்சி தமிழ்நாட்டில் ஏற்படுவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று அங்கத்தினர்கள் கேட்டார்கள். அது முக்கியமான பிரச்னை. மூலப்பொருள்கள் ஏராளமாக இல்லை தமிழ்நாட்டிலே. அப்படி யில்லாத பொருளுக்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்ற அந்த ஆராய்ச்சியிலே நாம் ஈடுபட்டாக வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பெருமுயற்சி எடுக்கிறது. இன்றைக்கு நம் முன் இருப்பதெல்லாம், இராசயனத் தொழிற்சாலை எங்கே, மருந்து தொழிற்சாலை எங்கே என்று கேட்டால் தமிழகத்தில் அது மிகமிகக் குறைவு. அந்த நிலைமையை மாற்றிக் கொண்டுவர நாம் முயற்சியெடுத்திருக்கிறோம். அண்மையிலே அதற்காக ஒரு பெரிய மாநாடு கூட்டப்பட்டது. பல பகுதிகளிலிருந்தும் ஏராளமாக நிபுணர்கள் வந்து, பெரிய பெரிய தொழிற்சாலைகள் தொடங்க, ஆராய்ந்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே, கெமிகல் தொழிற்சாலை, மருந்து தொழிற்சாலை தமிழ் நாட்டிலே வரும் என்று நம்பிக்கை இருக்கிறது. சென்னைக்குப் பக்கத்தில் பெட்ரோ-கெமிகல் காம்ப்ளெக்ஸ் புதிய முறையிலே உருவாக்க அரசாங்கம் முனைந்து, நிபுணர்கள் ஆராய்ந்து, கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் அளவில் பெரும் தொழிற்சாலையைச் சென்னைக்குப் பக்கத்திலே தொடங்க வாய்ப்பிருக்கிறது என்பதை நாம் எடுத்துக் கூறியிருக்கிறோம். சேலம் பக்கத்திலே உள்ள நிலைமை பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

அரக்கோணத்தில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொழிற்சாலையைக் கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் அளவில் உருவாக்க முயற்சி செய்யப்படுகிறது.

கடல் வளத்திலுள்ள உப்பின் அடிப்படையிலே சால்ட் பேஸ்ட் இன்டஸ்ட்ரிஸ் ஏராளமாகக் கொண்டுவர அந்த முயற்சிகளை அரசாங்கம் எடுத்து வருகிறது. இதுபோன்ற முயற்சிகளெல்லாம் வெற்றிபெற வேண்டுமென்பதால், புதிய புதிய முயற்சிகளை நிபுணர்களின் துணையோடு செய்து வருகிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷனைப்பற்றி நண்பர்கள் சொன்னார்கள். நூற் பாலைகள் மூடப்பட்டுவிட்டன, ஒன்றுமே செய்யவில்லை என்று கொஞ்ச நாளைக்கு முன்னால் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது, செய்தது போதுமா என்று கேட்கிறார்கள். அந்த அளவுக்குச் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். எங்கள் அரசாங்கத்தின் கொள்கையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். மூடப்பட்ட ஆலைகளை யெல்லாம் அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டுமென்ற கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மூடப்பட்ட எந்தத் தொழிற்சாலையும், லாபத்தோடு அல்லது லாபமில்லாவிட்டாலும் நஷ்டமில்லாமல் நடந்ததோ அதைத்தான் நாங்கள் எடுத்து நடத்துவோம் என்பதுதான் எங்கள் கொள்கை. இதிலே வெற்றியும் பெற்றிருக்கிறோம். மூடப்பட்ட 29 தொழிற் சாலைகளில் 15 தொழிற்சாலைகள் அரசாங்கத்தின் சார்பிலும், அரசாங்கத்தின் உதவியைக் கொண்டும் திறக்கப்பட்டிருக்கின்றன.

மேற்கொண்டு இரண்டு தொழிற்சாலைகள் விரைவில் தொடங்கிவிடலாம். ஒரு தொழிற்சாலை தனியார் மூலம் விரைவிலே தொடங்கவிருக்கிறது என்ற செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அவர்களுக்குக்

கொடுக்கும் கூலி குறையலாமா என்று கேட்டார்கள். முன்புகூட அது குறைக்கப்பட்டது. இப்பொழுதும் நான் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்தின் தரப்பிலே தொடங்கினுல் எந்தச் சலுகையும் கிடையாது, தொழிலாளர்களின் சார்பில் தொடங்கினுல் தருவதற்கு உறுதி தருகிறோம். இப்பொழுதுகூட எந்தவிதமான கட்டாயமும் செய்யவில்லை, இலாப நஷ்டமில்லாமல் இருக்கும் நேரத்தில் ஒத்துழைப்பு தாருங்கள், பஞ்சப்படியைக் குறைத்துக் கொள்ளுங்கள், ஆண்டு முடிந்தவுடன் லாபம் காட்டினுல் கொடுக்கப்படாத பஞ்சப்படியையும் திருப்பித் தருகிறோம் என்று அறிவிப்பு கொடுத்த பிறகு தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது. அவர்களின் உணர்வுகளைத் தூண்டிவிடுவது மட்டும் கடமையல்ல, அரசாங்கத்திற்குத் துணை இருக்கும் கடமையும் உண்டு, அதற்கு மக்கள் பிரதிநிதிகள் ஒத்துழைப்பு தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இப்படியெல்லாம் முயற்சியெடுக்கிறீர்களே, தொழில் வளம் ஏற்பட்டதா என்று பல அங்கத்தினர்கள் உற்சாகத்தோடு கேட்டார்கள். அதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். ஏராளமான தொழில்கள் தொடங்கினுலும், தொழில் வளம் பெருகவேண்டும், தொழில் வாய்ப்பு பெருக வேண்டும் என்று ஒவ்வொருவரும் சொல்லுகிறோம். ஆனுல் முயற்சிகள் எடுக்கும்பொழுது எங்கு செல்ல வேண்டியதாயிருக்கிறது, டெல்லிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டார்கள், மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு தொழிற்சாலைகூட இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசிலே தொடங்கப்படவில்லையே என்று கேட்டார்கள். வெளியிலேகூட அப்படி ஒரு பெரியவர் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அதையே நண்பர் இராமமூர்த்தி அவர்களும் சொன்னுர்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் என்ன சொல்வார்களோ எனக்குத் தெரியவில்லை. எங்களுடைய கட்சியின் கொள்கை, மத்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்டு இந்த மாநிலத்தில் தொழிற்சாலைகள் இருக்க வேண்டுமென்பது எங்கள் கொள்கை அல்ல. அது காங்கிரஸ் கட்சியின் கொள்கையாக வேண்டுமானுல் இருக்கலாம். எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் எங்களுக்குக் கட்டுப்பட்டு இருக்கவேண்டும். காங்கிரஸ் கட்சியின் வாதத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. சேலத்திலே மத்திய சர்க்கார் 100 கோடி ரூபாய் முதலீடு செய்தாலும்கூட, நாங்களும் கொஞ்சமாவது அதிலே போடுவோம், அதனுடைய நடைமுறையிலே எங்களுக்குப் பங்கு வேண்டுமென்று வலியுறுத்துகின்ற கொள்கைதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. மத்திய சர்க்கார் இங்கு வரவேண்டுமென்பது எங்கள் கொள்கை அல்ல. ஒருவேளை, பார்த்தீர்களா, யார் பக்கமோ நீங்கள் இருப்பதாகச் சொல்கிருர்கள், அவர்கள் உங்கள் மாநிலத்திலே தொடங்கவில்லையே என்று கேட்பது சுவையாக இருந்து கேட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. எங்களைப் பொறுத்தவரையில் அதில் கொஞ்சமும் சுவையில்லை. நாங்கள் தொடங்க வேண்டுமென்பதைத்தான் விரும்புகிறோம்.

ஆனுல் தொடங்குவதில் மத்திய அரசாங்கத்தின் கொள்கை தடைக்கல்லாக, இடையூருக இருக்கிறது. மாநில அரசாங்கத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கிறது. ஒரு மாநிலத்திற்குரிய வளர்ச்சியில் மத்திய சர்க்காரின் குறுக்கீடு இருக்கிறது என்பதுதான் அரசாங்கத்தின் தத்துவம், கொள்கை ஆகும்.



இதற்கு நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். நாளையதினம் டெல்லியிலே, மீண்டும் முதலமைச்சரவர்கள் வலியுறுத்தப் போகிருர்கள், திருப்பித் திருப்பிச் சொல்கிறீர்களே பயன் கிடைத்ததா என்ருல், பயன் கிடைத்தது என்பதைக் கனம் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் வாசித்துக் காட்டினுர்கள். யார் வேண்டுமானுலும் தொடங்கலாம் என்று மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிருர்கள் என்று மகிழ்ச்சியோடு சொன்னுர்கள் நானும் அதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நானும் முதலமைச்சரவர்களும், தொழிலமைச்சரை டெல்லியில் சந்தித்தபொழுது நாங்கள் சொன்ன கருத்துக்களை முழுவதையும் ஏற்றுக்கொண்டார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்கள் விரும்பிய தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கு உரிமை தரவேண்டுமென்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. ஆனுல் வெளிநாட்டுச் செலாவணி, மூலப்பொருள்கள் பற்றாக்குறை ஆகியவற்றை பற்றி தேசீய அபிவிருத்தி மன்றத்திலே, என்.டி.சி-யிலே அங்கேதான் பரிசீலிக்க வேண்டும். மத்திய அரசாங்கம் தன்னிடத்திலே, அனுமதி கொடுக்கக்கூடிய குழு ஒன்றை, 'லைசென்ஸிங் கமிட்டி' என்ற கடிவாளத்தை வைத்துக் கொண்டு செய்வதை இந்த மாநில அரசு ஒருக்காலும் ஏற்காது என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

இதிலே ஓரளவுக்கு வெற்றிபெற்றுவிட்டோம். இன்றைக்கு அறிவித்திருக்கக்கூடிய கொள்கைகூட மகிழ்ச்சியைத் தரக்கூடிய அளவில் இருந்தாலும், அதற்குப் பின்னுலே போட்டிருக்கக்கூடிய ப்ரொவிஸோஸ் அண்டு கண்டிஷன்ஸ், அவைகளைப் படித்துப் பார்த்தால், அனுமதி கொடுக்கவும் கொடுப்போம், நாமும் கொஞ்சம் கட்டுப்பாடு வைத்துக்கொள்வோம் என்று சொல்வது போல் இருக்கிறது. அதுகூட தவறு. மாநிலங்களுக்குத்தான் தொழில் தொடங்கக்கூடிய முழுப்பொறுப்பும் இருக்க வேண்டும் என்று நாம் முழுமூச்சாக மத்திய அரசிடம் எடுத்துக் கூறி வருகிறோம். பெருத்த அளவுக்கு எல்லா மாநில அரசுகளும் நம்முடைய கருத்தை ஆதரிக்கின்றன. அப்படி ஆதரிக்கின்ற நிலை வளர்ந்து வருகிற காரணத்தினுல், மத்திய அரசு நம் பக்கத்துக்கு வரும் என்ற சூழ்நிலை தமிழ் நாட்டில் இருக்கிறது. அந்தச் சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாடு அரசாங்கம் இன்னும் ஏராளமான தொழிற்சாலைகளைப் பலதுறைகளிலும் இந்த நாட்டில் தொடங்கும். இந்த நாட்டில் ஏழை பணக்காரர்கள் என்ற ஏற்றத்தாழ்வு இல்லாத அளவுக்கு தொழில் கொள்கை அமையவேண்டும். பலதுறைகளிலும் தொழிற்சாலைகள் துவங்கப்படவேண்டும். மொத்த பொருளாதார வளர்ச்சி ஏற்படவேண்டும் என்ற நம்பிக்கையை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதே கருத்தைத்தான் வலியுறுத்தினுர்கள் எல்லா தரப்பு மாண்புமிகு அங்கத்தினர்களெல்லாம் அவர்களுடைய கருத்துகளை அரசு ஏற்றுக்கொண்டு, அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிற காரணத்தினுல், அங்கத்தினர்கள் எல்லோரும் அவர்களுடைய வெட்டுப்பிரேரணைகளை வற்புறுத்தமாட்டார்கள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும், அவர்கள் அப்படிச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடிக்கிறேன்.

(Thiru K. Vinayakam rose and the Hon. Speaker sounded the gong).

**Thiru K. Vinayakam**: Sir, I have got to withdraw my cut motion and therefore. . . .

கொடுக்கும் கூலி குறையலாமா என்று கேட்டார்கள். முன்புகூட அது குறைக்கப்பட்டது. இப்பொழுதும் நான் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்தின் தரப்பிலே தொடங்கினால் எந்தச் சலுகையும் கிடையாது, தொழிலாளர்களின் சார்பில் தொடங்கினால் தருவதற்கு உறுதி தருகிறோம். இப்பொழுதுகூட எந்தவிதமான கட்டாயமும் செய்யவில்லை, இலாப நஷ்டமில்லாமல் இருக்கும் நேரத்தில் ஒத்துழைப்பு தாருங்கள், பஞ்சப்படியைக் குறைத்துக் கொள்ளுங்கள், ஆண்டு முடிந்தவுடன் லாபம் காட்டினால் கொடுக்கப்படாத பஞ்சப்படியையும் திருப்பித் தருகிறோம் என்று அறிவிப்பு கொடுத்த பிறகு தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது. அவர்களின் உணர்வுகளைத் தூண்டிவிடுவது மட்டும் கடமையல்ல, அரசாங்கத்திற்குத் துணை இருக்கும் கடமையும் உண்டு, அதற்கு மக்கள் பிரதிநிதிகள் ஒத்துழைப்பு தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இப்படியெல்லாம் முயற்சியெடுக்கிறீர்களே, தொழில் வளம் ஏற்பட்டதா என்று பல அங்கத்தினர்கள் உற்சாகத்தோடு கேட்டார்கள். அதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். ஏராளமான தொழில்கள் தொடங்கினாலும், தொழில் வளம் பெருகவேண்டும், தொழில் வாய்ப்பு பெருக வேண்டும் என்று ஒவ்வொருவரும் சொல்லுகிறோம். ஆனால் முயற்சிகள் எடுக்கும்பொழுது எங்கு செல்ல வேண்டியதாயிருக்கிறது, டெல்லிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டார்கள், மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு தொழிற்சாலைகூட இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசிலே தொடங்கப்படவில்லையே என்று கேட்டார்கள். வெளியிலேகூட அப்படி ஒரு பெரியவர் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அதையே நண்பர் இராமமூர்த்தி அவர்களும் சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் என்ன சொல்வார்களோ எனக்குத் தெரியவில்லை. எங்களுடைய கட்சியின் கொள்கை, மத்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்டு இந்த மாநிலத்தில் தொழிற்சாலைகள் இருக்க வேண்டுமென்பது எங்கள் கொள்கை அல்ல. அது காங்கிரஸ் கட்சியின் கொள்கையாக வேண்டுமானால் இருக்கலாம். எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் எங்களுக்குக் கட்டுப்பட்டு இருக்கவேண்டும். காங்கிரஸ் கட்சியின் வாதத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. சேலத்திலே மத்திய சர்க்கார் 100 கோடி ரூபாய் முதலீடு செய்தாலும்கூட, நாங்களும் கொஞ்சமாவது அதிலே போடுவோம், அதனுடைய நடைமுறையிலே எங்களுக்குப் பங்கு வேண்டுமென்று வலியுறுத்துகின்ற கொள்கைதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. மத்திய சர்க்கார் இங்கு வரவேண்டுமென்பது எங்கள் கொள்கை அல்ல. ஒருவேளை, பார்த்தீர்களா, யார் பக்கமோ நீங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள், அவர்கள் உங்கள் மாநிலத்திலே தொடங்கவில்லையே என்று கேட்பது சுவையாக இருந்து கேட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. எங்களைப் பொறுத்தவரையில் அதில் கொஞ்சமும் சுவையில்லை. நாங்கள் தொடங்க வேண்டுமென்பதைத்தான் விரும்புகிறோம்.

ஆனால் தொடங்குவதில் மத்திய அரசாங்கத்தின் கொள்கை தடைக் கல்லாக, இடையூறாக இருக்கிறது. மாநில அரசாங்கத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கிறது. ஒரு மாநிலத்திற்குரிய வளர்ச்சியில் மத்திய சர்க்காரின் குறுக்கீடு இருக்கிறது என்பதுதான் அரசாங்கத்தின் தத்துவம், கொள்கை ஆகும்.





இதற்கு நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். நாளையதினம் டெல்லியிலே, மீண்டும் முதலமைச்சரவர்கள் வலியுறுத்தப் போகிறார்கள், திருப்பித் திருப்பிச் சொல்கிறீர்களே பயன் கிடைத்ததா என்றால், பயன் கிடைத்தது என்பதைக் கனம் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் வாசித்துக் காட்டினார்கள். யார் வேண்டுமானாலும் தொடங்கலாம் என்று மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியோடு சொன்னார்கள் நானும் அதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நானும் முதலமைச்சரவர்களும், தொழிலமைச்சரை டெல்லியில் சந்தித்தபொழுது நாங்கள் சொன்ன கருத்துக்களை முழுவதையும் ஏற்றுக்கொண்டார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்கள் விரும்பிய தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கு உரிமை தரவேண்டுமென்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. ஆனால் வெளிநாட்டுச் செலாவணி, மூலப்பொருள்கள் பற்றாக்குறை ஆகியவற்றை பற்றி தேசீய அபிவிருத்தி மன்றத்திலே, என்.டி.சி-யிலே அங்கேதான் பரிசீலிக்க வேண்டும். மத்திய அரசாங்கம் தன்னிடத்திலே, அனுமதி கொடுக்கக்கூடிய குழு ஒன்றை, 'லைசென்ஸிங் கமிட்டி' என்ற கடிவாளத்தை வைத்துக் கொண்டு செய்வதை இந்த மாநில அரசு ஒருக்காலும் ஏற்காது என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

இதிலே ஓரளவுக்கு வெற்றிபெற்றுவிட்டோம். இன்றைக்கு அறிவித்திருக்கக்கூடிய கொள்கைகூட மகிழ்ச்சியைத் தரக்கூடிய அளவில் இருந்தாலும், அதற்குப் பின்னாலே போட்டிருக்கக்கூடிய ப்ரொவிஸோஸ் அண்டு கண்டிஷன்ஸ், அவைகளைப் படித்துப் பார்த்தால், அனுமதி கொடுக்கவும் கொடுப்போம், நாமும் கொஞ்சம் கட்டுப்பாடு வைத்துக்கொள்வோம் என்று சொல்வது போல் இருக்கிறது. அதுகூட தவறு. மாநிலங்களுக்குத்தான் தொழில் தொடங்கக்கூடிய முழுப்பொறுப்பும் இருக்க வேண்டும் என்று நாம் முழுமூச்சாக மத்திய அரசிடம் எடுத்துக் கூறி வருகிறோம். பெருத்த அளவுக்கு எல்லா மாநில அரசுகளும் நம்முடைய கருத்தை ஆதரிக்கின்றன. அப்படி ஆதரிக்கின்ற நிலை வளர்ந்து வருகிற காரணத்தினால், மத்திய அரசு நம் பக்கத்துக்கு வரும் என்ற சூழ்நிலை தமிழ் நாட்டில் இருக்கிறது. அந்தச் சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாடு அரசாங்கம் இன்னும் ஏராளமான தொழிற்சாலைகளைப் பலதுறைகளிலும் இந்த நாட்டில் தொடங்கும். இந்த நாட்டில் ஏழை பணக்காரர்கள் என்ற ஏற்றத்தாழ்வு இல்லாத அளவுக்கு தொழில் கொள்கை அமையவேண்டும். பலதுறைகளிலும் தொழிற்சாலைகள் துவங்கப்படவேண்டும். மொத்த பொருளாதார வளர்ச்சி ஏற்படவேண்டும் என்ற நம்பிக்கையை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதே கருத்தைத்தான் வலியுறுத்தினார்கள் எல்லா தரப்பு மாண்புமிகு அங்கத்தினர்களெல்லாம் அவர்களுடைய கருத்துகளை அரசு ஏற்றுக்கொண்டு, அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிற காரணத்தினால், அங்கத்தினர்கள் எல்லோரும் அவர்களுடைய வெட்டுப்பிரேரணைகளை வற்புறுத்தமாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும், அவர்கள் அப்படிச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடிக்கிறேன்.

(Thiru K. Vinayakam rose and the Hon. Speaker sonnded the gong).

THIRU K. VINAYAKAM : Sir, I have got to withdraw my cut motion and therefore. . . .

MR. SPEAKER: 'Conditional withdrawal' கிடையாது.

THIRU K. VINAYAKAM: As the Hon. Speaker has pertinently pointed out, even at the risk of repetition, may I ask once again the Hon. Minister for Industry one thing? The Central Government has almost given you a green signal for the starting of Salem Steel Plant. I am sure of it. But supposing something happens. Let us assume for a moment, that for some reason, they do not include this in the Five Year Plan. What is your stand? You state it unequivocally here today whether you are prepared to risk it and take it in the State sector even though they do not give you permission?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதே கேள்விக்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் மிகத் தெளிவாக, திட்டவட்டமாக பதில் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் சேலம் உருக்காலை வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிடும் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படாது என்பது எங்களுடைய நம்பிக்கை. எங்களுடைய நம்பிக்கையில் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், 'எதிர்க்கட்சித் தலைவர்களை அழைப்போம், மக்கள் மன்றத்திற்குச் செல்வோம், அவர்களுடைய தீர்ப்பை ஏற்போம்' என்று முதல் அமைச்சர் அவர்கள் உறுதி தந்திருக்கிறார்கள். எங்களுக்கு நம்பிக்கை இருக்கிற காரணத்தினால் தான் நாங்கள் இன்றைக்கு வேலையைத் தொடங்கிவிட்டோம். சேலம் உருக்காலை வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

நிதிக்கோரிக்கை எண் 20-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. இல. பலராமன், திரு. எம். சுரேந்திரன், திரு. ஜி. கோவிந்தராசன், திரு. ரா. கனகசபை, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர்கள் அவர்களது இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாக கருதப்பட்டன.

திரு. சோ. அழகர்சாமி: திரு. சுப்பராஜா ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக்கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,35,00,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மானியக் கோரிக்கை எண் 40-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

THIRU K. VINAYKAM: In view of the self-confidence expressed by the Hon. Minister and in view of his assurance, I do not press my cut motion.



திரு. கே. விநாயகம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. எம். பூபதி, திரு. சோ. அழகர்சாமி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,70,38,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்றன. நாளைக் காலை 9 மணிக்கு மீண்டும் பேரவை கூடும். பி.ப. 1–55

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### (8) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

'Nil'

### B. *Reports, Notifications and Other Papers.*

@ 75. Policy note on the Demand No. XVIII—Animal Husbandry 1970–71 (Tamil).

@ 76. Policy note on Dairy Development Department 1970–71 (Tamil).

@ 77. Speech on Demand No. 3—General Sales Tax and other Taxes and Duties Administration (English).

\+ 78. Speech on Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration (Tamil).

79. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Women's Welfare Department (Thirteenth Report).

---

\+ Placed on the Table of the House on 18th March 1970

@ Despatched to Members on 17th March 1970.

## இணைப்பு

### 436-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

### பெருந் தொழில்களும் நடுத்தரத் தொழில்களும்.

### முன்னுரை.

இந்தியாவின் மற்ற மாநிலங்களைப் போலவே, தமிழ்நாடும் சிறப்பாக வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது ; இருப்பினும், கடந்த இருபது ஆண்டுகளில் பாராட்டத்தக்க அளவிற்குத் தொழில் வளர்ச்சியடைந்துள்ள வரலாற்றை இம்மாநிலம் பெற்றுள்ளது. அரசு நிலையில், அரசின் அறுதியிட்ட, பயன் நோக்கிய கொள்கையும், இம்மாநிலத்தின் முன்னேற்றத் தொழில் முனையும் போக்கும், இயற்கை வளம் போதிய அளவிற்கு இல்லையென்ற போதிலும், எவ்வாறு விரைந்து தொழில் வளர்ச்சியை உருவாக்கிட முடியுமென்பதை ஆர்வமுடன் ஆராயத்தக்கதாக கடந்த கால வரலாறு அமைகிறது. தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகுவதற்கும் தொழில் துறையில் முன்னேற்றம் காண்பதற்கும் உகந்த சில கூறுகள் உள்ளன. புதிய தொழில்கள் தொடங்கப்படுவதற்கு ஏற்றவகையில் நிலவும் பொருத்தமான பொருளாதாரச் சூழல், செவ்விய நிர்வாக அமைப்பு, சிறந்த பொறியாளர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும், தொழிலாளர்களும் திட்டமிட்ட அளவிற்கு கிடைக்கும் வாய்ப்பு ஆகியவையே இச்சிறப்புக் கூறுகள் ஆகும். போதிய மின்சக்தி, நீர்வளம், போக்குவரத்து வசதி இவற்றுடன் கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் கடன் உதவி பெறத் துணை செய்தல், தொழில் நுட்பப் பணியாளர், சுகாதார, கல்வி வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல் முதலிய பணிகளைச் செய்ய மாநில அரசு பெரும் பங்கு கொண்டதே இம் மாநிலத்தின் தொழில் வள முன்னேற்றத்துக்குத் தலையாய காரணமாகும். தொடக்கத்தில் பஞ்சாலைகளை நிறுவுவதில் மேற்கொள்ளப்பட்ட தொழில் மேம்பாட்டு முயற்சியிலிருந்து இப்போது பலதரப்பட்ட தொழில்கள் பெருமளவில் வளர்ச்சியடையுமளவிற்கு எய்திய மாறுதல், மாநில அரசு தொழில்வள முன்னேற்றத்தில் பெரும் பங்கு கொண்டுள்ளதற்குப் , பாராட்டுரையாக அமைகிறது. தமிழ்நாடு, பலதரப்பட்ட தொழில் வளர்ச்சியில் சிறந்து விளங்குவதால் இந்தியாவின் தொழில் முன்னேற்றத்தில் தலையாய இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. மின்சார வசதி, போக்குவரத்து வசதியளித்தல், தொழில்களுக்கு நிதி உதவி செய்தல், தொழில் நுட்ப, பயிற்சி பெற்ற தொழிலாளர்களை அமர்த்துவதற்குப் பயிற்சி வசதிகள் ஏற்படுத்துதல் சம்பந்தமாக அரசு மேற்கொண்ட சீரிய கோட்பாடுகளின் காரணமாக, இம் மாநிலம் தொழில் வளர்ச்சி பெற்றதுடன் மாநிலம் முழுவதிலும் தொழில்கள் பரந்த அளவில் முன்னேற்றமடைந்து வருகின்றன.

பொதுவான பல குறியீடுகளை ஆராய்ந்தால், நாடு உரிமை பெற்றதிலிருந்து எந்த அளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளதென்பது விளங்கும். தொழில் நோக்கங்களுக்கு மின்சாரம் பயன்படுத்தப்படும் அளவு, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, மூலதன முதலீட்டு அளவு, தொழில்நுட்பப் பணியாளர்கள் பயிற்சி பெற்றுப் பணிக்குவரும் எண்ணிக்கை ஆகியவற்றைக் காட்டும் புள்ளி விவரம், தொழில்கள் விரிவடைவதனால் எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதென்பதை மறைமுகமாகக் காட்டும் குறியீடாக அமைகிறது. தொழில் உரிமங்கள் வழங்கப்படுதல், அவற்றை நிறைவேற்றுதல், சிறு தொழில்கள் பதிவு செய்யப்படுதல், மாநிலத்தின் வருவாயில் தொழில் துறை மூலம் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு முதலியவை சம்பந்தப்பட்ட புள்ளி விவரம் போன்ற நேர்வகைக் குறியீடுகளை ஆராய்ந்தால், தொழில் வளர்ச்சி எந்த அளவு சீரிய வகையில் அடையப்பெற்றுள்ளது என்பது குறித்து மறைமுகக் குறியீடுகளை ஆராய்ந்ததிலிருந்து ஊகிக்கப்படும் உண்மை நிலை எவ்வளவு சரியானதென்பது உறுதியாகும்.

எடுத்துக் காட்டாக, 1956–57-ல் தொழில் காரியங்களுக்கு 560 மில்லியன் யூனிட் பயன்படுத்தப்பட்டது. 1968–69-ல் 2,230 மில்லியன் யூனிட்டுக்கு உயர்ந்துள்ளது. இது, அளிக்கப்பட்ட மின்சக்தியின் மொத்த அளவில்



52 : 48 விகிதாசாரமாகும் ; அதாவது, 4,282 மில்லியன் யூனிட்டாகும். கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியின் மொத்த அளவும் (அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கிய மின்சக்தி உட்பட), தொழிற்சாலைகள் பயன்படுத்திய மின்சக்தி அளவும் விளக்கப் படத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம். 1968–69-ம் ஆண்டில், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்கள் நான்கும், வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள் 91-ம் இம்மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டன. ஏற்புப் பெற்ற மூலதனம் ரூ. 443.93 லட்சமும், செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 12.87 லட்சமும் கொண்டு இவைகள் பதிவு செய்யப்பட்டன.

மூலதன முதலீட்டுக் கட்டுப்பாடு அதிகாரி 1969-ல் இந்தியா முழுமைக்கும், தமிழ்நாட்டுக்கும் பல முதலீடுகளுக்கு இசைவளித்தார் ; இவற்றில் அரசு சார்பில்லாத நிறுவனங்களின் மூலதன முதலீட்டுக்கு அவர் அளித்த இசைவு பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | இசைவுபெற்ற முதலீடுகள். | | ஏற்பளிக்கப்பட்ட தொகை. | |
|---|---|---|---|---|
| | இந்தியா. | தமிழ்நாடு மட்டும். | இந்தியா. (ரூ. லட்சத்தில்.) | தமிழ்நாடு மட்டும். (ரூ. லட்சத்தில்.) |
| அரசுச் சார்பில்லாத நிறுவனங்கள். (தனியார் நிறுவனங்களும் பொது நிறுவனங்களும்) | | | | |
| தொடக்க முதலீடு .. .. | 7 | 2 | 15,31.24 | 7,91.24 |
| மேற்கொண்ட முதலீடு .. | 40 | 2 | 26,07.93 | 65.00 |
| பூரிப்பூதிய முதலீடு .. | 266 | 20 | 41,12.30 | 5,52.01 |
| ஈட்டுறுதி ஆவணங்கள் .. | 14 | 2 | 45,04.64 | 3,75.64 |
| கடன்கள் முதலியவை .. | 11 | .. | 5,98·00 | .. |
| மொத்தம் .. | 338 | 261 | 33,54.11 | 17,83.89 |

1969-ம் ஆண்டில் 331 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத் தொழிற்சாலைகளில் 9,690 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டனர். 1969-ல் பொறியியல் பட்டதாரிகள் 1,450 பேரும் பொறியியல் தகுதிப் பட்டயம் (டிப்ளொமா) பெற்றவர்கள் 3,350 பேரும், படித்து வெளி வந்தனர் ; 1970–71-ல் பொறியியல் பட்டதாரிகள் 1,300 பேரும், தகுதிப் பட்டயம் பெறுவோர் 3,200 பேரும் படித்து வெளிவருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகள் உற்பத்தி செய்த நிகர அளவு குறித்த விவரமும், மாநில வருமானத்திற்கு அவைகள் அளித்த தொகையின் சதவீதமும் குறித்த புள்ளி விவரமும், அட்டவணையும் கடந்த காலத்தில் தமிழ்நாட்டில் தொழில்கள் எந்த வீதத்தில் வளர்ந்தன வென்று காட்டுகிறது. 1960–61-ல் தொழில் துறையின் நிகர உற்பத்தி ரூ. 181.02 கோடி மதிப்பாகும் ; தொழில் துறையிலிருந்து மாநில வருவாய்க்கு 16.03 சதவீதம் வருமானம் கிடைத்தது. 1968–69-ல் தொழில் துறையின் நிகர உற்பத்தி ரூ. 317.08 கோடி அளவுக்கு (1960–61-ம் ஆண்டு விலைவாசி அடிப்படையில்) உயர்ந்தது ; தற்போது, தொழில் துறை, அதாவது தொழில்கள், ரூ. 21.93 சதவீத அளவுக்கு மாநில வருவாய்க்கு வருவாய் அளிக்குமென மதிப்பிடப்படுகிறது. தொழில்துறையிலிருந்து பெறப்படும் வருவாய் அதிகரித்துள்ளதனால் மாநில வருவாய் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளதென்பது கீழ்க்காணும் விவர அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

தொழில் துறை வழியாக மாநிலத்திற்குக் கிடைத்த வருவாய்.
(1960–61-ம் ஆண்டு விலை நிலவரப்படி.)

| ஆண்டு. | | மாநிலத்தின் வருவாய். | தொழில்துறை மூலம் கிடைத்த தொகை (பெரிய அளவில் [illegible] தயாரித்தல், சிறு அளவில் தொழில் முனைதல், கனி வளம் வெட்டிஎடுத்தல், சுரங்கம், மின் சாரம், கட்டுமானம்.) | தொழில் துறையிலிருந்து மாநிலத்தின் மொத்த வருவாய்க்குக் கிடைத்த வருவாயின் சத வீதம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | (ரூ. லட்சத்தில்.) | |
| 1950–51 | .. | 77,492 | 9,805 | 12·65 |
| 1955–56 | .. | 96,354 | 13,608 | 14·12 |
| 1960–61 | .. | 112,956 | 18,102 | 16·03 |
| 1961–62 | .. | 118,453 | 20,294 | 17·13 |
| 1962–63 | .. | 121,277 | 20,976 | 17·30 |
| 1963–64 | .. | 124,517 | 22,520 | 18·09 |
| 1964–65 | .. | 127,557 | 24,954 | 19·56 |
| 1965–66 | .. | 129,157 | 27,094 | 20·98 |
| 1966–67 | .. | 138,735 | 27,950 | 20·15 |
| 1967–68 | .. | 144,894 | 30,462 | 21·02 |
| 1968–69 | .. | 144,604 | 31,708 | 21·93 |

1969-ம் ஆண்டில் மத்தியத் துறையில் ஏற்பட்ட மிகவும் குறிப்பிடத் தக்க வளர்ச்சி, சென்னை, பாறையெண்ணைத் தூய்மைத் தொழிற் சாலையை மணலியில் தொடங்குவதாகும்; இது, வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறந்ததொரு மாற்றத்தை உருவாக்கும். இந்தத் தூய்மைத் தொழிற்சாலையால் உருவாக்கப்பட்ட வாய்ப்புகளை அரசு நன்கறியும். தொழில் துறையில் நிலயெண்ணெய் சார்ந்த ரசாயனத் தொழில்முறை வளர்ச்சியைத் திட்டமிடும் பொருட்டு, மணலியில் அத்தகைய தொழில்களைத் துவங்குவது பற்றிப் பொறியாளர்கள் இந்திய நிறுவனம் மூலம் திட்ட அறிக்கை ஒன்றை இந்த அரசு தயார் செய்துள்ளது. இந்த அறிக்கை ஆராயப்பட்டு வருகிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திலிருந்து ரசாயனத் துணைப் பொருள்கள் இடைப்பதை அடிப்படையாகக் கொண்டு நெய்வேலியில் ரசாயனத் தொழிற்சாலையை ஏற்படுத்துவது பற்றிய மற்றொரு அறிக்கையும் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கைபற்றி முனைப்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

உப்பு உற்பத்தித் தொழிலின் தக்க வளர்ச்சிக்காக இம் மாநிலத்தில் உள்ள வாய்ப்புக் கூறுகளை ஆராய்வது குறித்த அறிக்கை, ஆலோசகரிடமிருந்து வரப்பெற்றுள்ளது; இது ஆய்வில் உள்ளது.

தூத்துக்குடி துறைமுகத்தின் நாட்டுப் பகுதியை மேம்படுத்துவது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (தனியார்த் துறையுடன் கூடிய கூட்டு முயற்சியாகும்) உரத் தொழிற்சாலை, உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் முதலியன போன்ற பல பெரிய, நடுத்தரத் தொழில்களை நிறுவுவதற்கு வழிவகுக்கும்.

தமிழ்நாட்டிலிருந்து என்னென்ன பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியுமென்னும் வாய்ப்புகள் குறித்து ஆய்வு நடத்தக் கடந்த ஆண்டில் அரசு தொடங்கிய அயல்நாட்டு வர்த்தக இந்திய நிலையத்தின் அறிக்கை வரப்பெற்றுள்ளது. தொழில், வேளாண்மைப் பொருள்களின் ஏற்றுமதியைப் பெருக்க அதில் பல அரிய கருத்துரைகள் அடங்கியுள்ளன. பரிவுரைகள் ஆராயப்பட்டு வருகின்றன; இது சம்பந்தமாக, முக்கியமான வர்த்தகக் கழகங்களின் கருத்துரைகள் கேட்கப்பட்டுள்ளன.

இம் மாநிலத்தின் பொருளாதார வாயில்கள்பற்றி விரிவான ஆய்வை மேற்கொள்ளும் கருத்தில் மாநிலத் தொழில்கள் வளர்ச்சிக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது; அதே நேரத்தில், இம் மாநிலத்தில் நிறுவப்



படக்கூடிய பல்வேறு தொழில்கள் குறித்துத் திட்ட அறிக்கை தயாரிப்பதற்குத் தேவையான புள்ளிவிவரத்தைச் சேகரிப்பதில் அரசுக்கு உதவும் நோக்கத்திலும் இக்குழுவை அமைத்துள்ளது. இக்குழு இப்போது செயல் படத் தொடங்கியுள்ளது.

தொழில் முனைபவர்களை ஈர்க்கும் பொருட்டு, தொழில்கள் துவங்குவதற்குப் பலபடியான ஊக்கத்தை அரசு அளித்து வருகிறது. மின்சார வரிச் சலுகை ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஊக்கம் அளிப்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

தொழில்துறையில் நிலவிய மந்தநிலை முடிந்துவிட்டது; வழக்கம் போல் சிறப்பான செயலாற்றும் நல்ல சூழ்நிலையில் வரும் ஆண்டுகளில் தொழில் வளர்ச்சித் துறையில் முன்னேற்றம் காணத் தமிழ் நாட்டில் நான்காவது திட்டக் காலப்பகுதி தொடங்கியுள்ளது. இம் மாநிலத்தில் புதிய தொழிற்சாலைகளை நிறுவ முன்வருவதில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தொழில் முனைபவர்கள் ஆர்வமுடன் ஆதரவு காட்டுகின்றனர்.

பொருளாதார மறுமலர்ச்சியின் விளைவாகவும் தொழில் ஈடுபாடுகளின் அதிகரித்த செயலாலும் ஆய்விலுள்ள ஆண்டில், இம்மாநிலத்தில் தொழில்கள் வளர்வதற்கான முன்னேற்றப் [illegible] உருவாகியுள்ளது. இந்த முன்னேற்றத்தின் விவரங்களைக் குறி[illegible] [illegible] பக்கங்களில் விளக்கம் தரப்பட்டுள்ளது. இந்த மா[illegible]த்தின் தொழி[illegible] [illegible]ர்ச்சியில் இதுவரை எய்திய முன்னேற்றம், [illegible]த்துவரும் பக்கங்க[illegible] துறை வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இறுதியில் "நிறுவன[illegible] நிதி" குறித்தும் "சுரங்கங்களும் கனிவளங்களும்" குறித்தும் இரண்டு [illegible]தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

மத்திய[illegible] துறை.

இம் மாநிலம் தொழில் வளர்ச்சி[illegible]ந்துவரும் தருணத்தில் [illegible]துத் துறை ஆற்றும் பணி மிகப் பெரும் சிறப்பிற்குரியதாகும். பெ[illegible]வில் தொழில்களுக்கான மூலப் பொருள்கள் கிடைக்காத நிலையில், இங்கு கிடைக்கும் மூலப்பொருள்களுடன் தொடர்பு படுத்தப்பட வேண்டாத அவற்றை அடிப்படையாகக் கொள்ளாத பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலையைத் தொடங்க அரசு முயன்று வந்தது. இந்த அரசின் விடா முயற்சியின் விளைவாக, 1969-ல் மணலியில் பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையை இந்திய அரசு நிறுவியது; இதன் மூலம் ரசாயனத் தொழில்கள் பல ஏற்பட வழியமையும். சென்னை, பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலைக்கருகில், பாறை எண்ணெயைப் பயன்படுத்தி சென்னை உரத்தொழிற்சாலை என்னும் பெரிய உரத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டு வருகிறது; 1971-ம் ஆண்டுத் தொடக்கத்தில் முறையாக உற்பத்தி செய்யத் தொடங்கும்.

அண்மையில் தண்டையார்பேட்டையில் இந்திய எண்ணெய்க் கார்ப்பரேஷன் சோதனை அடிப்படையில் பணிகளைத் தொடங்கி இருப்பதும், தொழில் வளர்ச்சித் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு மற்றொரு சான்றாகும். ரூ. 1.50 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள எண்ணெய் கலவைத் தொழிற்சாலை, மோட்டார்கள் இரசாயனத் தொழிற்சாலைகள் பிற தொழிற்சாலைகளுக்கான பல்வகை உயர்வு எண்ணெயைத் தயாரிக்கும் பணியில் ஈடுபடும். மணலியில் அமைந்துள்ள எண்ணெய் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் அடிப்படை பொருட்களை பயன் படுத்தி பல்வகை உயர்வு எண்ணெயைத் தயாரிக்கவிருக்கும் இத் தொழிற்சாலை விரைவில் வணிக முறையில் செயல்படத் தொடங்கும். இந்திய எண்ணெய்க் கூட்டு நிறுவனமும் தங்களுக்குத் தேவைப்படும் பீப்பாய்கள் முதலியவற்றைத் தயாரிப்பதற்காகத் தொழில் உரிமம் ஒன்றைப் பெற்றுள்ளனர்.

இம்மாநிலத்திலுள்ள பல்வேறு பொதுத்துறைத் திட்டங்களில் மத்திய அரசு போட்டுள்ள முதலீடு, ரூ. 377 கோடிக்கு மேற்பட்டதாகும். ஆண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் அளவு ரூ. 90 கோடி மதிப்புடையதாகும் (தற்காலிகமானது). இந்தத் தொழிற்சாலைகளால் சுமார் 50,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. கீழே காட்டப்பட்டுள்ள விவர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் காண்பதற்குரிய பலகூறுகளில் இது பெரிய காரணமாகும்.

| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயரும்* | நிறுவப் பட்ட ஆண்டு. | மூலதன முதலீடு (ரூபாய லட்சத்தில்.) | உற்பத்திப் பொருள்கள். ஆண்டு உற்பத்தி திறன். | உற்பத்தி. | மதிப்பு (ரூபாய லட்சத்தில்.) | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 நெய்வேலி பழுப்பு நிலக்கரி கூட்டு நிறுவனம், நெய்வேலி. | 1962 | 16,884 | பழுப்பு நிலக்கரி 6,000,000 டன், வெடியம் 46 சத வீதம் அடங்கிய யூரியா உரம் 152,000 டன். | 4,186,000 டன் உள்ளூர்த் தேவைக்காகப் பயன் படுத்தப்பட்டது. | 750·00 | 17,268 |
| | | | | 98,718 டன். | 691·68 | |
| | | | சுட்ட அச்சுக்கரி 327,000 டன். | 149,197 டன். | 266·11 | |
| | | | சார்பைன்ஸ் 109,000 டன் | சுட்ட அச்சுக் கரியுடன் ரூ. 52·03 லட்சம் மதிப் புள்ள துணைப்பொருள் கள் அச்சுக்கரி தயாரிப்பு தொழிற்சாலையில் உற் பத்தி செய்யப்பட்டது. | | |
| | | | தார்—49,100 டன், நியூட் ரல் எண்ணெய்—4,820 டன், கிலெண்ணெய் வடிப்பு அமிலம்—1,470 டன், பாலி வேலன்ட் பினேல்—480—டன், ஆர்த்தோ கிரீசால்—200 டன். | | | |
| | | | | மின்சாரம்—2,202 மில்லி யன் யூனிட்டுகள் (1969) | 1,299·16 | |
| | | | மெடா-பாராகிரீசால்—990 டன். சிலிஞல்ப்ஸ்—220 டன். வெள்ளைக்களிமண்—6,000 டன். | | | |
| 2 இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை, பெரம்பூர், சென்னை. | 1965 | 2,506 | 620 பெட்டிகள் (700 பெட் டிகள், அகலப்பாதை மூன்றும் வகுப்பு யூனிட்டுகளில்). | வசதி செய்து முடிக்கப் பெறுத பெட்டிகள் 640. வசதிசெய்து முடிக்கப் பட்ட பெட்டிகள் 635 (1968–69). | 1,319 | 10,700 |
| 3 அறுவை சிகிச்சைக் கருவி கள் தயாரிப்பு தொழிற் சாலை, நந்தம்பாக்கம், சென்னை. | 1965 | 468 | அறுவை சிகிச்சைக் கருவி கள்—2·5 மில்லியன் கருவிகள். | 193,782 கருவிகள். | 14·77 | 1,051 |
| 4 இந்துஸ்தான் டெலிபிரிண் டர்ஸ், நிறுவனம், கிண்டி, சென்னை. | 1964 | 82 | டெலிபிரிண்டர்களும் அவற்றுடன் இணைந்த கருவிகளும்—8,500 யூனிட்டுகள் டெலிபிரிண் டர்கள். இரண்டு முறை மாற்றுவேலை அடிப் படையில். | 2,873 யூனிட்டுகள் (30–11–60 வரையில்). | 161·00 | 1,202 |
| 5 இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறு வனம், உதகமண்டலம். | 1967 | 1,296·67 | திரைப்படச் சுருள் பாசிடிவ் (வண்ணம் அல்லாதது) 2,450,000 சதுர மீட்டர். | 1,165·121 சதுர மீட்டர். | 162·91 | 1,669 |
| | | | திரைப்பட ஒலிப்படம்—300,000 சதுர மீட்டர். | 17,533 சதுர மீட்டர். | 2,89 | .. |

| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | நிறுவப் பட்ட ஆண்டு. | மூலதன முதலீடு (ரூபாய லட்சத்தில்.] | உற்பத்திப் பொருள்கள். ஆண்டு உற்பத்தி திறன். | உற்பத்தி. | மதிப்பு (ரூபாய லட்சத்தில்). | வேலை வாய்ப்பு |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | திரைப்படச் சுருள் நெகடிவ்—250,000 சதுர மீட்டர். | | | |
| | | | மருத்துவ எக்ஸ்ரே சுருள்—1,000,000 சதுர மீட்டர். | 283,666 சதுர மீட்டர். | 96·98 | |
| | | | உருவப்படமெடுக்கும் சுருள்—50,000 சதுர மீட்டர். அச்சுருவப் படம்—50,000 சதுர மீட்டர். | | | |
| | | | சுருள் பிலிம்ஸ் 540,000 சதுர மீட்டர். | 326 சதுர மீட்டர். | 0·18 | |
| | | | ஏரியல் படச்சுருள் 10,000 சதுர மீட்டர். | | | |
| | | | 35 மி.மீ. நெகட்டிவ் படச் சுருள்—100,000 சதுர மீட்டர். | 284 சதுர மீட்டர். | 0·34 | |
| | | | புகைப்படக் காகிதம்—1,500,000 சதுர மீட்டர். | 71,707 சதுர மீட்டர். | 7·82 | |
| 6 உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை, திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி. | 1965 | 2,570 | அனல் மின் நிலையங்களுக்கான உயர் அழுத்தக் கொதிகலன்கள்—750 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டது. | கொதிகலனும் 16,540 டன் துணைக்கருவிகளும். | 1,763 | 6,000 |
| | | | வால்வுகளும் பொருத்துக் கருவிகளும், 2,500 டன். | வால்வுகள் 391. | 121 | .... |
| | | | அழுத்தவால்வுகள் 1,100 டன். பேக்கேஜ் கொதிகலன்கள் 10. | | | |
| 7 சென்னை பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, மணலி, சென்னை. | 1969 | 4,479 | குறைந்த அழுத்த காசலின்—1,666 டன், காசலின்—9,416 டன். | 1969 ஏப்ரல் திங்களில் செயல் தொடங்கியது. | 439 | |
| | | | பாறை எண்ணெய்—25,000 டன். | | | |
| | | | உயர்ந்த மண்ணெண்ணெய்—33,666 டன். | | | |
| | | | கடுவேக டீசல் எண்ணெய்—42,833 டன். | | | |

| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | நிறுவப் பட்ட ஆண்டு. | மூலதன முதலீடு (ரூபாய் லட்சத்தில்). | உற்பத்திப் பொருள்கள். ஆண்டு உற்பத்தி திறன். | உற்பத்தி. | மதிப்பு (ரூபாய் லட்சத்தில்). | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | உயவு எண்ணெய்—16,666 டன். எரி எண்ணெய்—2,500 டன். தார்—6,666 டன். கந்தகம்—1,166 டன். | | | |
| 8 சென்னை உரத் தொழிற்சாலை. | .. | 6,300 (தோராயமாக) | திரவ அமோனியா கலப்பு உரம்— 36,500 டன், யூரியா உரம் 200,000 டன், என்.பி.கே. உரம்—3,63,000 டன். | கட்டப்பட்டு வருகின்றது. | .. | 650 |
| 9 கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி, சென்னை. | 1965 | 1,727 | நடுத்தர டாங்குகள். | தயார் செய்யப்படுகின்றன. | 1,500 (1968-69) | 4,834 |
| 10 படைக்கலன் தொழிற்சாலை, திருச்சி ராப்பள்ளி. | 1966 | 1,350 (தோராயமாக) | .. | ஷை | .. | (தோராயமாக) 1,500 |
| 11 இந்திய எண்ணெய் கூட்டு நிறுவனம் தண்டையார்பேட்டை சென்னை. | | 178 | மோட்டார் இரசாயன எண்ணெய் கலவை 170,000 டன், பீப்பாய்கள்-1,500,000 எண். | சோதனை அடிப்படையில் சமீபத்தில் பணிகளைத் தொடங்கியுள்ளது. | | 100 |



1969-ல், மத்தியத் துறையிலுள்ள எல்லாத் தொழிற்சாலைகளும், கீழே குறிப்பிடப்பட்டவாறு திட்டமிட்டபடி செயல்படத் தொடங்கின:—

**நெய்வேலி பழுப்பு நிலக்கரி கூட்டுநிறுவனம்.**—(மூலதன முதலீடு ரூ. 168·84 கோடி.)

ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரித் திட்டம் இம்மாநிலத்தில் மத்திய அரசின் கீழுள்ள மிகச் சிறந்த பெரியதொரு நிறுவனமாகும்; இத் திட்டத்தின்கீழ் நான்கு பெரும் வேலைத் திட்டங்கள் அடங்கி யுள்ளன :—

(1) சுரங்கப் பணி.

(2) மின்சக்தி உற்பத்தித் திட்டம்.

(3) உர உற்பத்தி தொழிற்சாலை.

(4) சுட்ட அச்சுக்கரித் தொழில் பிரிவு.

மின்சக்தி உற்பத்திக்கும் பயிரிடும் நிலங்களுக்கான யூரியா உரம் தயாரிப்பதற்கும், விறகாக வீட்டுக்காரியத்திற்குப் பயன்படவும் சிறுதொழில்களுக்குப் பயன்படவும் 4·1 மில்லியன் டன் அளவுக்கு மேல் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யப்படுகிறது. இது ஆண்டுக்கு 6 மில்லியன் டன் அளவுக்கு அதிகரிக்கப்படும். மின் சக்தி உற்பத்தி செய்தல், யூரியா உரம் தயாரித்தல், சுட்ட அச்சுக்கரி தயாரித்தல் ஆகிய தொழில்களுடன், சார்பைன்ஸ், தார், எரி எண்ணெய், கார்பாலிக் அமிலம், பாலி வேலண்ட் பீனல், ஆர்தோ கிரிசால் மெடா, பாரா-கிரிசால், சைலினால் முதலிய துணைப் பொருள்கள் தயாரிப்பதற்கும் பழுப்பு நிலக்கரி பயன்படுத்தப் படுகிறது. இத்துடன், ஆண்டு ஒன்றுக்கு 6,000 டன் வெள்ளைக் களி மண் தயாரிப்பதற்கும் இத்திட்டம் வகைசெய்கிறது.

எல்லாத் திட்டங்களும் இக்கால அளவில் செயல்படத் தொடங்கி விட்டன. அனல் மின் நிலையத்தின் எட்டாவது பிரிவு (இரண்டாவது 100 மெகாவாட் பிரிவு) 1969, ஏப்ரலில் செயல்படத் தொடங்கியதும், இந்தப் பிரிவின் உற்பத்தித்திறன் 500 மெகா வாட் அளவிற்கு உயர்ந்தது. 1970, மார்ச்-ஏப்ரலில் 9-வது பிரிவு (மூன்றாவது 100 மெகா வாட் பிரிவு) தொடங்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. இதனால், அனல் மின் நிலையத்தின் விரிவுபடுத்தும் மூன்றாவதும் இறுதியானதுமான நிலை முடிவுபெறும்; அதாவது இதனால் 400 மெகா வாட் அளவிலிருந்து 600 மெகா வாட் அளவிற்கு உயர்த்தப்படும். விரிவுபடுத்தும் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 32·17 கோடி ஆகும்.

**இணைப்பு ரயில்பெட்டித் தொழிற்சாலை.**—(மூலதன முதலீடு ரூ. 25·06 கோடி.)

தமிழ்நாட்டிலுள்ள பொதுத் துறைத் தொழிற்சாலைகளில் இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை மிகப் பழையதாகும். இதில் சுமார் 10,700 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இது அதன் முழு தயாரிப்புத் திறனை எய்தியுள்ளது. இந்த ஆண்டில், இத்தொழிற் சாலை பல விதமான பெட்டிகளையும் தொடர்ந்து தயாரித்து வருகிறது; அகலப்பாதை குறுகிய பாதை ரயில் பெட்டிகளையும், குளிர்சாதன வசதிகளுடன் கூடிய பெட்டிகளையும் தானே இயங்கிச் செயல்படும் வண்டிகளையும் இத்தொழிற்சாலை தயாரித்து வருகிறது. ஆண்டுக்குத் தயாரிக்கப்படும் பெட்டிகளின் எண்ணிக்கையை 620 பெட்டி களிலிருந்து 750-க்கு அதிகரிக்கும் செயற்குறிப்புகளை ரயில் வாரியம் ஏற்றுக்கொண்டுள்ளது. இது, 1970-71 முதல் நிறைவேற்றப்படும். பெட்டி அமைக்கும் திட்டம் ஒவ்வோர் ஆண்டும் விரைவு படுத்தப்படும்; 1973-74-ல் ஆண்டு தோறும் 750 பெட்டிகள் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரிவுபடுத்தும் செயற்குறிப்புகளுக்குத் தோராய மாக ரூ. 51·5 லட்சங்கள் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது; இதில் பணியாளர் குடியிருப்புகளுக்காகும் செலவும் அடங்கும்.

ஏற்றுமதியைப் பொறுத்த வரையில் ரூ. 22 லட்சம் மதிப்புக்கான மேற்கொண்ட இரண்டு கேட்பு ஆணைகள் இத்தொழிற்சாலைக்கு அண்மையில் வரப்பெற்றுள்ளன. இந்த இரண்டு ஆணைகளுக்கும் ஏற்ற வகையில் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

**அறுவை சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலை.**—(மூலதன முதலீடு ரூ. 4·68 கோடி.)

இந்திய மருந்துகள், மருந்துத் தாயரிப்பாளர்கள் நிறுவனம் இத் தொழிற்சாலையைச் சென்னையில் நிறுவியுள்ளது. இதற்கு மூல முதலீடு ரூ. 4·68 கோடி ஆகும். இத்தொழிற்சாலை, சுமார் 1,051 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்; ஆண்டுக்கு 2½ மில்லியன் அறுவைச் சிகிச்சைக் கருவிகளைத் தயாரிக்கும். 1969-ல் ரூ. 14·77 லட்சம் மதிப்புள்ள கருவிகளை இத் தொழிற்சாலை தயாரித்துள்ளது. தற்போது, விற்பனை நிலவரத்தையொட்டியே உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தித் திறன் அளவைப் பயன்படுத்த பெரிய, மொத்த அளவில் தேவை ஆணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மயக்க மருந்து ஊசிகளும் பிரிக்கக்கூடிய சிறு கத்திகளும் தயாரிக்கப்படுவதற்கான செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

**இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம்.**—(மூலதன முதலீடு ரூ. 0·82 கோடி.)

1970-71-க்குள் ஒரு முறை மாற்று வேலையில் 5,400 டெலிபிரிண்டர்களையும் இரு முறை மாற்று வேலையில் 8,500 டெலிபிரிண்டர்களையும் தயாரிக்கும் திறனுள்ளது இத்தொழிற்சாலை. 1969-70-ம் ஆண்டுக்கு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது. 6,500 யூனிட் டெலிபிரிண்டர்கள் ஆகும்; இதில், 1,000 யூனிட் சமமான உதிரிப் பகுதிகள் தயாரிப்பும் அடங்கும்.

பல்வேறு வகையான டெலிபிரிண்டர்களுக்குத் தேவையான தயாரிக்கப்பட்ட இணைப்புக் கருவிகளைத் தயார் செய்வதில் இந்த நிறுவனம் தன்னிறைவு அடைந்துள்ளது. 1968-ம் ஆண்டின் துவக்கத்தில் 100 ஆக இருந்த இறக்குமதி செய்த இணைப்புக் கருவிகளின் எண்ணிக்கை, இப்போது 22 ஆகக் குறைந்துள்ளது; இறக்குமதி செய்யப்படுவதற்குப் பதிலாக இங்கு தயாரிக்கும் நிலைமையினால் இக்குறைப்பு ஏற்பட்டுள்ளது. இயந்திரங்களில் மேம்பாடு காணும் வகையில் டெலிபிரிண்டர் இணைப்புக் கருவிகளில் திருத்தம் செய்யப்படுவதுடன் டெலிபிரிண்டர் சம்பந்தப்பட்ட புதிய கருவிகள் பல தயாரிக்கப்படுகின்றன. இந்த நிறுவனம் ஏற்றுமதி செய்யத் தொடங்கி, இலங்கை, குவாயிட் ஆகிய நாடுகளிலிருந்து தேவை ஆணைகளைப் பெற்றுள்ளது. ஈரான், ஏமேன் ஆகிய நாடுகளிடமிருந்து விவரம் கேட்டுக் கடிதங்கள் வந்துள்ளன. நான்காவது திட்டக் காலத்தில், மின்சாரத் தட்டெழுத்துப் பொறிகள், கணக்கிடும் இயந்திரங்கள், டெலெக்ஸ், தொலைபேசி இயக்கும் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கான மின் சக்தி இயந்திரங்கள் முதலிய பலதரப்பட்ட கருவிகளைத் தயாரித்து மேம்படுத்த ஆராய்ச்சி, மேம்பாட்டுத் துறையை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலே சொல்லப்பட்ட பலதரப்பட்ட கருவிகளுடன், நான்காவது திட்டக் காலத்தில் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. எல்லா வகையான முக்கிய இணைப்புக் கருவிகளையும் தயாரித்து, இத் தொழிற்சாலை தன்னிறைவு காணும் வகையில், தற்போது வெளியிலிருந்து பெறப்படும் சில இணைப்புக் கருவிகளை உற்பத்தி செய்யும் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. மோட்டார் பிரிவு.
2. “ இஞ்செக்ஷன் ” வார்ப்படப் பிரிவு.
3. அழுத்த “ டை-கேஸ்டிங் ” பிரிவு.
4. “ [illegible] ” பிரிவு.



பலதரப்பட்ட கருவிகளைத் தயாரித்தல், புதிய தொழிற் பிரிவுகளை நிறுவுதல், கூடுதல் இயந்திரங்களை அமைத்தல், கூடுதலாகக் கட்டிடம் கட்டுதல் ஆகியவற்றுக்காக நான்காவது திட்டக் காலத்தில் மேற்கொண்டு மூலதன முதலீடு ரூ. 160 லட்சம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இலக்கிடப்பட்டத் திறன் அளவான 8,500 யூனிட் டெலிபிரிண்டர்கள், நான்காவது திட்டக் காலத்தில் பலரதப்பட்ட கருவிகள் தயாரிப்புடன் கூடத் தொடர்ந்து தயாரித்து வரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை.**—(மூலதன முதலீடு ரூ. 12·96 கோடி.)

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் 1967, ஜனவரியில் துவக்கப்பட்டது; இதன் முதலாவது பெரிய தயாரிப்பு பொருளான திரைப் படங்களுக்கான நிழற்பட நேர்படிகள் தயாரிக்கும் இலக்கை இந்த ஆண்டின் இறுதிக்குள் எய்திவிடும்; இனி இத்தகைய நேர்படிகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் தேவை இராது. இந்த நிறுவனம் உற்பத்தி செய்த திரைப்பட, நிழற்பட நேர்படிகள் இப்போது நல்ல முறையில் வரவேற்று வாங்கப்படுகின்றன. நிழற்படமெடுக்கத் தேவைப்படும் தாள் விற்பனைக்கு உற்பத்தி செய்யப்படுவது அடுத்து நிறுவப்பட்டது. இத்துடன், மருத்துவத்திற்குத் தேவைப்படும் எக்ஸ்-கதிர் சுருள்கள் உற்பத்தியும், முதலாண்டு உற்பத்தியின் போதே மேற்கொள்ளப்பட்டது. இவற்றுடன் திரை ஒலி, படச் சுருள், 35 மி. மீட்டர் நெகடிவ் படச் சுருள் ஆகிய மூன்று துணைப் பொருள்கள் தயாரிக்கப்படுவதும் ஆய்வில் உள்ள ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

அதன் மூலப் பொருள்களை வழங்குவதற்குத் துணைப் பொருள்கள் தயாரிப்புப் பிரிவை நிறுவியது, இத்தொழிற்சாலையின் பிற பெரும் சாதனைகளில் ஒன்றாகும். வெண் உப்புத் தயாரிப்புத் தொழிற்சாலையை இந்துஸ்தான் புகைப்படச் சுருள் பொறியாளர்கள் முழுவதும் திட்டமிட்டு, நிறுவினர். இன்றியமையாத மூலப் பொருளாகிய இதனை வழங்குவது சம்பந்தப்பட்ட வரையில் இத் தொழிற்சாலை பொறுப்பு ஏற்கிறது. மற்றொரு முக்கிய மூலப் பொருளாகிய நிழற்படத் தகடு தயாரிப்பதற்கான தொழிற்சாலை, உதகமண்டலத்துக்கு அருகில் உள்ள ஓரிடத்தில் விரைவில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1968-ல் ஏற்பட்ட ஒத்துழைப்பு ஒப்பந்தம் முடிவானதும் உற்பத்தி நடவடிக்கைகள் இப்போது முழுவதும் இந்தியர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தொழிற்சாலை அதன் உற்பத்தியைப் படிப்படியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1971-72-ம் ஆண்டில், தற்போது மதிப்பிடப்பட்டுள்ள திறனின் 93 சதவீதமாகிய 5·70 மி. சது. மீ. அளவை உற்பத்தி செய்யும். அடுத்த ஆண்டில் முழுத் திறனளவு எய்தப்படும். விரிவுபடுத்தும் இந்த நிறுவனத்தின் திட்டம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது; இதில் வண்ணப் படச் சுருள் தயாரிப்பும் அடங்கும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தேவை அதிகப்படுமென்பதை எதிர்பார்த்து, அதன் உரிமம் பெற்ற திறன் அளவை 8·71 மில்லியன் சதுர மீட்டரிலிருந்து 11 மி. சதுர மீட்டருக்கு அதிகப்படுத்தத் தொழில் உரிமம் வழங்க வேண்டி இந்திய அரசுக்கு இந்த நிறுவனம் அண்மையில் விண்ணப்பித்துள்ளது.

**உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை.**—(மூலதன முதலீடு ரூ. 25·70 கோடி.)

இத் தொழிற்சாலை பாரத கனரக மின் கருவிகள் நிறுவனத்தின் நான்கு தொழிற்பிரிவுகளில் ஒன்றாகும். இது இந்திய அரசின் நிறுவனமாகும். அனல் மின்சார நிலையத்திற்கான உயர் அழுத்தக் கொதிகலன்களையும், தொழிற்சாலைப் பயனுக்கான கொதிகலன்களையும் உயர் அழுத்த வால்வுகளையும் தயாரிப்பதற்காக இது நிறுவப்பட்டுள்ளது. தொழிற்சாலை கட்டி முடிக்கும் எல்லாப் பணிகளும் முடிவுற்றுள்ளன.

எல்லாவற்றிலும் முழு உற்பத்திச் செயல் தொடங்கப்பட்டுள்ளது. நான்காவது திட்டத்தில் இத் தொழிற்சாலையை விரிவுபடுத்துவது பற்றி இந்திய அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது; இதன் விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**சென்னை, பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை**—(மூலதன முதலீடு ரூ. 44·79 கோடி.)

குறைந்த அழுத்தக் கல் எண்ணெய், கல் எண்ணெய், நாப்தா, உயர் தர மண்ணெண்ணெய், கடுவேக டீசல் எண்ணெய், உய்வு எண்ணெய், எரி எண்ணெய், ஆஸ்பால்ட், கந்தகம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு அமைக்கப்பட்ட சென்னை, பாறை எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை நிறுவப்பட்டு, 1969 ஏப்ரல் திங்கள் செயல்படத் தொடங்கியது.

**சென்னை உரத் தொழிற்சாலை.**—(மூலதன முதலீடு ரூ. 63 கோடி.)

இந்தியாவின் பெரிய உரத் தொழிற்சாலையாகிய சென்னை உரத் தொழிற்சாலை, பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலைக்கு அருகில் மணலியில் நிறுவப்பட்டு வருகிறது. இத் தொழிற்சாலை ஆண்டுக்கு, 36,500 டன் திரவ அமோனியாவையும், 2,00,000 டன் யூரியா உரத்தையும் 3,63,000 டன் என்.பி.கே. உரத்தையும் தயாரிக்கும் திறனுடையதாகும். சென்னையைச் சுற்றி 300 மைல் சுற்றளவில் உள்ள இடங்களின் வேளாண்மைத் தேவையை இது நிறுவப்பட்டபின் பூர்த்தி செய்யும். இந்த உரத் தொழிற்சாலை, சென்னையின் ரசாயனத் தேவையினைப் பூர்த்தி செய்யும் ஒரு பகுதியாக அமையும். சாலைப்போக்குவரத்து, ரயில் பாதைபோன்ற துணைத் தொழில்களைத் துவக்க உதவுவதுடன், இது பெருமளவில் வேலை வாய்ப்பினை அளிக்கும். இத்தொழிற்சாலை 1971-ல் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நாட்டுப் பாதுகாப்புத் தொழில்கள்.**

கனரக வண்டிகள் தொழிற்சாலை, டாங்கிகளுக்குத் தேவையான எல்லாப் பெரிய பகுதிகளையும் தயாரிப்பதற்கான ஒருங்கிணைப்புப் பிரிவாக நிறுவப்பட்டுள்ளது. இதில், இயந்திரத் துணைக் கருவிப் பெட்டி, நிறுத்தப் பிரிவுகள் உட்பட அமையும்.

திட்டமிட்டபடி, திருச்சிராப்பள்ளியிலுள்ள படைக்கலத் தொழிற்சாலையும் முன்னேற்றமடைந்து வருகிறது.

## மாநிலத் துறை.

நூல், சர்க்கரை, சிமிட்டி, செங்கல் முதலிய சில இன்றியமையாப் பொருள்கள் சம்பந்தமாகவும் தொழிற் பகுதிகளை ஏற்படுத்தியும் இம் மாநில அரசு, நேரடியாகவோ அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமோ, உற்பத்திப் பிரிவுகளை நிறுவி சிறப்பான பங்கினை ஆற்றியுள்ளது.

**1. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனம்.**

அரசால் உரிமைப்படுத்தப்படும் தொழில்கள் நிறுவுவதில் இனி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனம் செயல்படவிருக்கிறது. மத்திய நிறுவன நிதி உதவி நிலையங்களிடமிருந்தும் பொது முதலீடுகளிலிருந்தும் கூடுதல் நிதி வசதியைப் பெற்றுப் பெருமளவில் மூலதனம் செய்யும் நிறுவனமாக இக்கூட்டு நிறுவனம் இப்போது செயல்படத் தொடங்கியுள்ளது. புதிய தொழில்களைத் தொடங்கத் தொழில் முனைபவர்களை ஈர்த்தும் செயலுக்குக் கொண்டு வந்தும் அவர்கள் பங்கு கொள்வதை அதிகப்படுத்தியும் தொழில் வளர்ச்சி காணும் முகவராக இக்கூட்டு நிறுவனம் உள்ளது; வழக்கமான



மிருந்து அவசியமான முதலீட்டைப் பெறவும் உதவுகிறது. அரசால் முழுவதும் நிர்வகிக்கப்படும் பொதுத் துறைத் தொழில்களை மேம்படுத்தவும் நிறுவவும் இக்கூட்டு நிறுவனத்திற்குள்ள தனிப் பொறுப்புடன் இப்பணி கூடுதலான பொறுப்பாகவும் அமைகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனத்தின் பிரிவுகளாகக் கீழ்க்காணும் தொழிற்சாலைகளை இக்கூட்டு நிறுவனம் நிறுவுகிறது :—

1. அரக்கோணத்தில் உருக்குத் தொடர் வார்ப்படச்சாலை.
2. ஆலங்குளத்தில் சிமிட்டித் தொழிற்சாலை.
3. டால்மியாபுரத்தில், முன்னோடி சிமிட்டித் தொழிற்சாலை.

இக்கூட்டு நிறுவனம் மேற்கொண்ட இத்தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**உருக்கு தொடர் வார்ப்படசாலை, அரக்கோணம்.**

மாஸ்கோவைச் சேர்ந்த மெஷினோ எக்ஸ்போர்டாரின் ஒத்துழைப்புடன் அரக்கோணத்தில் நிறுவப்பட்டு வரும் உருக்குத் தொடர் வார்ப்படச் சாலை, ஆண்டுக்கு முதற்கண் 50,000 டன் உருக்குப் பாளங்களை தயாரிக்கும். பின்னர் இந்த உற்பத்தி, ஆண்டுக்கு 1,00,000 டன் அளவிற்கு அதிகரிக்கப்படும். இத்திட்டத்தின் செலவு ரூ. 705 லட்சம்; இதில் நடைமுறை மூலதனம் ரூ. 51 லட்சம் அடங்கும்.

பொதுப்பணிகள் பெரும்பாலும், நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சில இனப்பணிகளை மேற்கொள்ளப்பட விருக்கின்றன; இதற்கான மதிப்பீடுகளும் ஒப்பந்தப் புள்ளிகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 1,000 டன் அளவு வாங்கப்பட விருக்க, 31—12—1969 வரையில் சுமார் 616 டன் இறக்குமதி செய்யப்பட்ட கருவிகள் வந்துள்ளன; ரூ. 14 லட்சம் மதிப்புள்ள உள்நாட்டுக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன; ரூ. 111 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரக்கோணம் நகராட்சிக்கும் தொடர் வார்ப்படச் சாலைக்கும் தேவையான இணைந்த நீர் வழங்கும் திட்டம் ஓரளவு முடிவு பெற்றுள்ளது. தொழிற்சாலையுள்ள இடத்தின் நீர்த் தேக்கத் தொட்டி வரையில் 12 அங்குலமுள்ள குழாய் அமைக்கப்பட்டுள்ளது. ரயில்பாதை 75 சதவீதம் போடப்பட்டுள்ளது. மற்ற பகுதிகளில் பணி நடந்தேறி வருகிறது. இயந்திர அமைப்பு மேற்பார்வை செய்வதற்கு முதல் தொகுதி ரஷ்ய நாட்டுப் பொறியாளர்கள் வந்துள்ளனர். நமது பொறியாளர்களில் 15 பேர், ருஷ்யாவில் உருக்குத் தொழிற்சாலை சம்பந்தமான பயிற்சியை முடித்துள்ளனர்; தற்போது இத்தொழிற்சாலையை நிறுவும் இடத்தில் இப்பணியை முனைப்புடன் கவனித்து வருகின்றனர். இத் தொழிற்சாலை, 1971-ம் ஆண்டின் மத்தியில் செயல் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு சிமிட்டித் தொழிற்சாலை, ஆலங்குளம்**—பொதுப்பணிகள் முடிவு பெற்றுள்ளன; முதல் காளவாய்க்கான இயந்திரத்தை கே. சி. பி. நிறுவனம் வழங்கி, நிறுவும் பணி முடிந்துள்ளது. இரண்டாவது காளவாய் விரைவில் நிறுவி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. திட்ட மதிப்பீட்டுச் செலவாகிய ரூ. 677 லட்சத்தில் ரூ. 461 லட்சம் 31-12-1969 வரையில் செலவிடப்பட்டுள்ளது.

**நிலம் கையகப்படுத்தல்**—தொழிற்சாலைக்கும் குடியிருப்புக்கும் தேவைப்படும் நிலங்களும் (287·01 ஏக்கர்) கற்கள் எடுக்கத் தேவையான (1,415·93 ஏக்கர்) நிலமும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. ரயில் பாதைக்குத் தேவையான 155·23 ஏக்கரில் எல்லாப் பகுதியும் வசப்படுத்தப்பட்டுள்ளது; ஆனால் 9·57 ஏக்கர் இன்னும் கையகப்படுத்தப்படவில்லை. தொழிற்சாலை, குடியிருப்பு, ரயில் பாதை இவற்றுக்கான புறம்போக்கு நிலங்களை (சுமார் 29 ஏக்கர்) மாற்றம் செய்யும் பணி நடந்தேறி வருகிறது. கனிக்கல் உள்ள நிலத்தைக்

**மூலப் பொருள்கள்**—ஒப்பந்தக்காரர் மூலம் தொடங்கப்பட்டு செயல்பட்ட இரண்டு முன்னோடிகல் எடுப்பு இடங்களிலிருந்து 1,85,954 டன் சுண்ணும்புக்கல் எடுக்கப்பட்டுள்ளது. ஒரு மாதத்திற்கு 40,000 டன் அளவு சுண்ணும்புக் கற்களை எடுத்து வழங்குவதற்கு ஓராண்டுக்கான ஒப்பந்தத்திற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன.

இக்காளவாய்க்குத் தேவையான நிலக்கரியும், களிமண், மஞ்சள் காவி மண், செவ்வண்ண இரும்பக களிமண் ஆகியவை வாங்கப்பட்டு இத் தொழிற்சாலையை செயல்படுத்தத் தொடங்குவதற்காக சேகரிக்கப்பட்டுள்ளன. பாக்ஸைடு, களிக்கல், கோணிப்பைகள் ஆகியவற்றை வாங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

**நீர் வழங்கல்.**—தொழிற்சாலையிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் வட கரையில், தேவியாறு ஆற்றில் உள்ள படுகையில் 1,000 அடிக்கு ஊடுருவிச் செல்லும்மேடை ஒன்றை (Infiltration Gallery) அமைக்க வகைசெய்துள்ள திட்டத்தில் 200 அடி கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. தலைப்பணிகளும் விசையேற்றத் தலைமை நிலையமும் முடிவுற்றதன் மேல் தொழிற்சாலைக்கு நீர் கொண்டுவரப்பட்டுள்ளது. அடுத்த 200 அடி கால்வாய் அமைக்கும் பணி நடந்தேறி வருகிறது. தொழிற்சாலை, குடியிருப்புத் தொகுதி, சுரங்கம் வெட்டுமிடம் ஆகிய இடங்களில் நீரைச் சேகரித்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் முடிவுற்றுள்ளன.

**இணைப்பு இருப்புப் பாதை.**—சிவகாசி ரயில் நிலையத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் மீட்டர் கேஜ் அளவில், இணைப்பு இருப்புப் பாதை ஒன்றை அமைக்கும் பணி முடிவுற்றது. நிலக்கரி ஏற்றிவரும் சரக்குப் பெட்டிகளை ஏற்றி வருவதற்காக இந்த இருப்புப் பாதை 18—1—1970 அன்று தயாராகிவிட்டது.

முதல் காளவாய் 1970-ம் ஆண்டு பிப்ரவரி 5-ம் நாளன்று தொடங்கியது. இரண்டாவது காளவாய் 1970-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில், செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப் பிரிவு 1970-ம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.—

**டால்மியாபுரம், முன்னோடி சிமிட்டித் தொழிற்சாலை.**—நாளொன்றுக்கு 75/150 டன் உற்பத்தித் திறன் உள்ள, உற்பத்திப் பிரிவுகளினால் தயாரிக்கப்படும், சிமிட்டி விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு டால்மியாபுரத்தில் நிறுவப்பட்டுள்ள முன்னோடி சிமிட்டித் தொழிற்சாலை தொடர்ந்து தனது ஆராய்ச்சிப் பணிகளை நடத்தி வருகிறது. தங்கள் நாட்டிலும் இத்தகைய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டுமென ஆர்வம் கொண்டுள்ள இந்தோனேசிய அரசும், இந்நாட்டு வல்லுநர் ஒருவரின் பணியைத் தங்கள் நாட்டிற்கு நல்குமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளனர். இது பற்றி இக் கூட்டு நிறுவனம் ஆய்ந்து வருகிறது.

இத்தகைய தொழில் பிரிவு ஏற்படுத்தப்படுவது இதுவே முதற் முறை ஆதலால் இத் தொழில் பிரிவை நடத்துவதில் முன்னோடி சிமிட்டித் தொழிற்சாலைக்குப் பல சிக்கல்கள் எழுந்தன. எனவே, இத் தொழில் பிரிவைத் தொடர்ந்து இயக்க இயலவில்லை. பரிசோதனைகள் பல நடத்திய பின்னர் இப்போது 24 மணி நேரமும் இத் தொழிற் பிரிவை இயக்க இயன்றுள்ளது.

இத் தொழிற் பிரிவின் உற்பத்தித் திறன் நாள் ஒன்றுக்கு 25 முதல் 30 டன் சிமிட்டி தயாரிப்பதாகும். இப்போது நாள் ஒன்றுக்கு பத்து டன் சிமிட்டி உற்பத்தி செய்யப்படுகின்றது. இத் தொழிற் பிரிவின் செயல் முறையை ஆய்ந்த பின்னரும் மேற்கொண்டும் மேம்பாடுகளைச் செய்த பின்னரும், உற்பத்தி குறித்த குறிக்கோள் அளவு எய்தப்படும்.





சுண்ணும்புக்கல் சிறு அளவில் கிடைக்கும் பகுதிகளில் சிறு அளவுச் சிமிட்டித் தொழிற்சாலைகளை நிறுவ தொழில் உரிமையாளர்களுக்கு ஊக்கமளிப்பதே இத்தகைய சிறு அளவுத் தொழிற்சாலைகளை அமைப்பதன் நோக்கமாகும். இந்த இடங்களில் எல்லாம் பெரிய அளவு சிமிட்டித் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது இயலாது. இத் தொழிற் பிரிவுக்கென தனி உரிமை பெறுவதற்காக இக் கூட்டு நிறுவனம் வணிக அடையாளக் குறி கட்டுப்பாடு அதிகாரிக்கு மனுச் செய்துள்ளது.

இத்தொழிற் பிரிவை நடத்துவதற்கான சுண்ணும்புக் கல்லை வெட்டியெடுப்பதற்காக மேலரசூர் கிராமத்தில் 46 எக்கர் பரப்பளவுள்ள நிலம் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. சுண்ணும்புக்கல் வெட்டி எடுக்கும் பணி 1970-ம் ஆண்டு ஏப்ரலில் மேற்கொள்ளப்படும்.

தூத்துக்குடி உரத் தொழிற்சாலை.—தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக இந்திய அரசிடமிருந்து அனுமதிக் கடிதம் ஒன்றை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பெற்றுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம், தென் இந்தியக் கார்ப்பரேஷன் ஆகிய இரண்டின் கூட்டு முயற்சியுடன் இத் தொழிற்சாலை நிறுவப்படுகிறது. "தென் பகுதி பெட்ரோ கெமிகல் தொழில் கழகம்" என்ற பெயரில் ஒரு புதிய நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மூலதன அமைப்பு, உடலுழைப்பு ஏற்பாடுகள் முதலியவற்றுக்கான தொடக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

நெய்வேலி-சேலம் உருக்காலைத் திட்டம், சேலம்.—சேலம் உருக்காலையின் முதல் நிலையை, அதாவது, அயச் செறிவுள்ள உருக்கு உருளைகள் தயாரிப்புத் தொழிற்சாலையை அமைப்பது, சுரங்கங்களை மேம்படுத்துவது குறித்த பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு அரசு பொது ஒப்புதலளித்துள்ளது. கல்கத்தாவிலுள்ள திருவாளர்கள் எம். என். தஸ்தூர் தனியார் நிறுவனத்திடமிருந்து விரிவான திட்ட அறிக்கை விரைவிலேயே அரசுக்குக் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1969–70-ல் திட்ட அறிக்கை தயாரிப்பதற்கென ஆலோசனைப் பொறியாளர்களுக்குத் தேவைப்பட்ட புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டன. பாறைகளை உடைக்கும்போது கனிப் பொருள்களின் தன்மையையும், மிகச் சிறந்த முறையில் இரும்புக் கனியைப் பெறும் முறையையும், இதற்கெனத் தேவைப்படும் சாதனங்களையும் பற்றி முடிவு செய்வதற்கென கஞ்சமலைக் குன்றுகளில், மாக்னடைட் குவார்ட்டைட் படிவங்களின் தெற்குப் பகுதிகளில் முன்னோடியாக ஒரு திறந்த சுரங்கம் வெட்டப்பட்டுள்ளது. முன்னோடிச் சுரங்கத்திற்கு சுமார் ரூ. 3·50 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. முன்னோடிச் சுரங்கத்தை வெட்டும் பணி நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள், விளைவுகளை மதிப்பிடுவதற்கு தங்களது விரிவான திட்ட அறிக்கையில் சேர்த்துக்கொள்ளவும் ஆலோசனைப் பொறியாளர்களுக்கு அனுப்பப்படும்.

சேலம் உருக்காலைத் திட்டப் பணி, அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்துக்கு 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி முதல் மாற்றப்பட்டுள்ளது. அயச் செறிவுள்ள உருக்கு உருள்கள் தயாரிப்புத் தொழிற்சாலை, திரு எம். என். தஸ்தூர் நிறுவனத்திடமிருந்து விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் இக்கழகத்தால் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்படும். இத் திட்டத்தை நிறைவேற்றக் கழகத்துக்குப் போதிய நிதி வாயில்களை அரசு வழங்கும்.

சேலம் உருக்காலைத் திட்டத்திற்குத் தேவையான நிலங்களை இந்த ஆண்டில் அரசு மீண்டும் மதிப்பிட்டு தேவைகளை 16,964 எக்கருக்கு வரையறுப்பதென முடிவு செய்துள்ளது. கையகப்படுத்தப்படுவதற்கென முதற்கண் அறிவிக்கப்பட்ட பரப்பளவு 24,446 எக்கராகும். கையகப்

படுத்தும் திட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில், அதிகமான கட்டிடங்கள் உள்ள பகுதிகள் வளர்ச்சியுற்ற வேளாண்மை நிலங்கள், விசைத் தறிகள், நெசவு போன்ற தொழில்கள் உள்ள பகுதிகள் ஆகியன அடங்கும்.

சேலம் உருக்காலைத் திட்டம் முழுவதையும் நான்காவது திட்டத்தில் மத்திய அரசுத் துறையில் சேர்ப்பது குறித்து, திட்ட ஆணைக் குழுவுடன் இந்திய அரசின் உருக்கு கன ரகப் பொறியியல் அமைச்சகத்துடனும் விவாதங்கள் நடத்தப்பட்டன. இந்த உரையாடல்கள் மூலம், திட்டத்தின் பல்வேறு கூறுகள் குறித்த பல ஐயப்பாடுகள் தீர்க்கப்பட்டதுடன், நான்காவது திட்டத்தில் இச் செயல் திட்டத்தைச் சேர்ப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

கீழ்க்கண்ட ஏனைய திட்டங்கள் இக் கழகத்தின் ஆலோசனையில் உள்ளன :—

(i) இயந்திரத் துணைக் கருவிகள் செயல் திட்டம்.—இச் செயல் திட்டம் பற்றிய வாய்ப்புக் கூறு அறிக்கையைத் தயாரிக்கும் பணி பெங்களூரில் உள்ள ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நிறுவனம் தொடக்க அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது. ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனம் கொடுத்துள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், அரக்கோணத்தில் இயந்திரக் துணைக் கருவிகள் தொழிற்சாலை ஒன்றை ரூ. 96 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறுவ அனுமதிக் கடிதம் ஒன்றுக்கு இந்திய அரசிடம் விண்ணப்பித்துள்ளது. இந்திய அரசின் ஆணைகள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன.

(ii) இயந்திரக் கருவித் தொழிற்சாலை.—டோக்கியோ, டோஷியா இயந்திரக் கம்பெனி லிமிடெட், இந்துஸ்தான் இயந்திரக் கருவிக் கம்பெனி இவற்றின் திட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரு சீராக தொழில் மூலதன முதலீடு செய்யவும் யந்திரங்கள் தருவித்தல், யந்திர முறை அறிவு முதலியவை பெறுதல் ஆகியவை குறித்து அந்நிய நாட்டு ஒத்துழைப்புப் பெறுவதில் உள்ள சாத்தியக் கூறுகள் பற்றித் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆராய்ந்து வருகிறது. இத் திட்டம் பற்றி இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. இந்தியக் கம்பெனி ஒன்றின் கூட்டு முயற்சியுடன் இத் திட்டம் தொடங்குவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(iii) துணுக்கு இரும்புத் தொழிற்சாலை.—அரக்கோணத்தில் உள்ள தொடர் வார்ப்படச் சாலையில் பாளங்கள் தயாரிப்பதற்காக இரும்புத் திருவல்கள் வழங்குவது நிலையாக இருக்காது என்று எதிர்ப்பார்க்கப் படுவதால், தொடர் வார்ப்படச் சாலைக்கும், துணுக்கு இரும்பு தேவைப்படும் ஏனைய தொழிற்சாலைகளுக்கும் வழங்குவதற்காக துணுக்கு இரும்பு உற்பத்தி செய்யும் பொருட்டு தொழிற்சாலை ஒன்றை நிறுவத் திட்டமிடப் பட்டுள்ளது.

துணுக்கு இரும்புத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றிய அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பு, கல்கத்தாவிலுள்ள திரு தஸ்தூர் அண்ட் கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கு ஜெர்மனியில் லூர்கி பொறியியல் நிறுவனம் நாம் அனுப்பிய இரும்புக் கனி, நிலக்கரி குறித்து ஆய்வு கூட சோதனைகள் நடத்தியுள்ளது. ஆய்வு கூடச் சோதனைகளின் அடிப்படையில் பெரிய அளவு முன்னோடித் தொழில் திட்ட ஆய்வுகள் வெளிநாட்டு நிறுவனத்தால் நடத்தப்படவிருக்கின்றன. பெரிய அளவு முன்னோடித் தொழில் திட்ட ஆய்வுகளுக்காக பெருமொத்தமான இரும்புக் கனியும், நிலக்கரியும் மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டுள்ளன. பெரிய அளவு முன்னோடித் தொழில் திட்ட ஆய்வுகளின் விளைவுகள் கிடைத்த பிறகு திரு தஸ்தூர் அண்ட் கம்பெனி வாய்ப்பு அறிக்கையை அனுப்பும்.



(iv) வெடியம், நீரக கந்தகியம் (சோடியம் ஹைட்ரோ சல்பைட்).—பஞ்சாலைத் தொழிலில் சோடியம் ஹைடிரோ சல்பைட்டின் தேவை மிகுந்து விடுவதால், இக்கழகம் இது பற்றி ஆய்வு செய்வதற்கும் தொடக்க அறிக்கை அளிக்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்தது. தொழில் வல்லுநர் திரு. எஸ். நல்லபெருமாள் அளித்த அறிக்கையின் அடிப்படையில், ரூ. 140 லட்சம் செலவில் எண்ணூரில் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த இணக்க ஆணை வழங்க இந்திய அரசுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளப் பட்டது. இந்த இணக்க ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் விளிம்பற்ற குழாய்கள் தயாரிப்புத் தொழிற்சாலை (Seamless Tube Mill) ஆகியவற்றை பாரத் கனரக மின்சார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு குறித்தும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக லிமிடெட் ஆலோசனை செய்து வருகிறது.

(v) உப்புத் தொழில்.—தமிழ்நாட்டில் உப்புத் தொழிலை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பை திரு குருநாத் அண்ட் சன்ஸ் என்ற நிறுவனத்திடம் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒப்படைத்தது. தமிழ்நாட்டில் தற்போதுள்ள உப்புத் தொழிற்சாலைகளை நேரிடையாகவும், அந்தந்த நேர்வுக் கேற்பவும் ஆய்வு செய்ததன் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள உப்புத் தொழிற்சாலைகளின் தற்போதைய நிலைமையையும் மேம்பாட்டுக்கான வாய்ப்புகளையும் குறிப்பிடும் விரிவான அறிக்கை ஒன்றை, தொழில்நுட்ப வல்லுநர்கள் தயாரித்துள்ளனர். (1) தற்போதுள்ள உப்புத் தொழிற்சாலைகள் செயல்படுவதை மேம்படுத்துதல், (2) புதிய உப்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அவற்றைச் செயல்படுவதற்கான தகுந்த திட்டங்களை வகுத்தல், (3) உப்புத் தொழிற்சாலையை விரும்பத்தக்க அளவுக்கும், இயன்ற அளவுக்கும் நவீனமாக்கி, இயந்திரமாக்குதல், (4) உப்பு உற்பத்தியையும், தொழிற்சாலைகளில் தயாராகும் உப்பின் தரத்தையும் மேம்படுத்துதல் ஆகியவை குறித்த நடைமுறைகள், (5) பொதுவாக உப்பளங்கள் குறிப்பாக உப்பு படிகங்கள் தயாரிக்கும் கருவிகளை நன்கு பேணி வருவதற்கான நடைமுறைகளையும், நடவடிக்கைகளையும் கொண்டு வருதல் ஆகியவை குறித்தும் தொழில் நுட்ப வல்லுநர்கள் பரிவுரை வழங்கியுள்ளனர்.

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் உப்பு தயாரிப்பதற்காக மொத்தம் ரூ. 5 கோடி முதலீட்டில் 40,000 ஏக்கர் புதிய நிலத்தை மேம்படுத்துவதற்கான 15 ஆண்டுத் திட்டம் ஒன்றையும் தொழில் நுட்ப வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இத்திட்டத்தினால், ரூ. 4 கோடி மதிப்பீட்டுச் செலவில் 16 லட்சம் டன்கள் உப்பும், 60,000 டன்கள் களிக்கல்லும் (Gypsum) தயாரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அறிக்கை அரசின் ஆலோசனையில் உள்ளது.

(vi) துணைக்கருவிகள் தொழிற்சாலை.—தரமான பொருள்களை கொள்முதல் செய்வதில் திருச்சிராப்பள்ளி பாரத் கனரக மின்கருவிகள் நிறுவனத்திற்குக் கணிசமான சிரமம் இருந்து வந்துள்ளது. எனவே தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம், இரும்பு வார்ப்படங்கள், வட்டில் முனைகள், மிகு உயர் அழுத்தம் சரி செய்யும் மின் கருவி, கியர் பாக்ஸ் (பொறிஇயக்கம் மாற்றும் அமைப்பு) மின் மாற்றுப் பொறிகள் பொறி வளையங்கள், மின் விசையேற்றங்கள், குழாய்ப் பொறிகள், அழுத்த மானிகள், "சொவோ" மோட்டார்கள், பாதி நிறைவேற்ற உதிரி பாகங்கள் போன்ற பல்வேறு பாகங்களின் தேவை பற்றி ஆராய்வதற்கு பொறியாளர்கள், வல்லுநர்களைக் கொண்ட தனிக்குழு ஒன்றை அமைத்தது. இந்தக் குழு, இத்தகைய பொருள்கள் தயாரிப்புக்கான தொழிற்சாலை ஒன்றைத் திருச்சியில் ஏற்படுத்துவது குறித்த சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கும்.

நிதி உதவி.

I. கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு கழகம் நிதி மற்றும் ஏனைய உதவிகள் வழங்கியுள்ளது :—

(i) திரு. லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர், ரூ. 2·5 லட்சம் கடன் ;

(ii) சென்னையிலுள்ள திரு. இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்டிற்கு, சிண்டிகேட் வங்கி ரூ. 7·5 லட்சம் கடன் வழங்கியதற்காக, அந்த வங்கிக்கு வழங்கப்பட்ட (மூன்றாண்டுக் கால செல்திறனுள்ள) கடன் உத்தரவாதம் ;

(iii) திரு. உம்மிடியார்ஸ் (தயாரிப்பாளர்கள்) தனியார் நிறுவனத்திற்கு, சிண்டிகேட் வங்கி ரூ. 1·5 லட்சம் கடன் வழங்கியதற்காக, அந்த வங்கிக்கு அளிக்கப்பட்ட (ஓராண்டுக்கால செல்திறனுள்ள) கடன் உத்தரவாதம் ;

(iv) திரு. பிளாஸ்டிக்ஸ் ரெசின்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட், சாகுபுரம்.

உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை—ரூ. 1·5 லட்சம் பங்கு மூலதனம்.

II. கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. ஆனால் உதவி இன்னும் வழங்கப்படவில்லை.

(i) திரு. சென்னை ஆக்ஸிஜன் அண்ட் அஸிடிலின் கம்பெனி லிமிடெட்.

நேர்மையான பங்கு—ரூ. 2·5 லட்சம்.

உத்தரவாதம்—ரூ. 1·0 லட்சம்.

(ii) திரு. W. S. இன்சுலேட்டர்ஸ் ஆப் இந்தியா (த) லிமிடெட், சென்னை.

பங்கு மூலதனம்— ரூ. 10 லட்சம்.

கடன் உத்தரவாதம்—ரூ. 15 லட்சம்.

III. கீழ்க்கண்ட செயற்குறிப்புகள் ஆலோசனையில் உள்ளன :—

(i) கோயம்பத்தூரிலுள்ள, திரு. லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட்டின் பங்கு மூலதனத்தில் பெருமளவுக்கு பங்கு கொள்ளுதல் ;

(ii) சென்னை அல்லாய் அண்ட் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் லிமிடெட்டின் பங்கு மூலதனத்தில் 51 சதவீதம் பங்கு மூலதன முதலீடு செய்தல் ;

(iii) தூத்துக்குடியில் தொடங்கப்படவிருக்கும் உரத் தொழிற்சாலை சாலையின் மூலதனத்தில் ரூ. 2 கோடி முதலீடு செய்தல்.

2. தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம்.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், 1969 எப்ரல் 24–ஆம் நாளன்று அமைக்கப்பட்டது. இதற்கான அனுமதித்த மூலதனம் ரூ. 5 கோடியாகும். இக் கழகத்தில் இதுவரை தமிழ்நாடு அரசு, பங்கு மூலதனமாக ரூ. 40 லட்சம் செலுத்தியுள்ளது.

இந்திய அரசு, இக்கழகத்தின் பொறுப்பில் விடக்கூடிய பஞ்சாலைகளை நடத்துவதற்காகவே இக்கழகம் முக்கியமாக அமைக்கப்பட்டுள்ளது. இது வரை நான்கு பஞ்சாலைகள் குறித்து, அனுமதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அதிகாரிகளாக தமிழ் நாடு பஞ்சாலை கழகத்தை இந்திய அரசு நியமித்துள்ளது. கோயம்பத்தூரிலுள்ள ஓம் பராசக்தி ஆலை, கிருஷ்ணவேணி பஞ்சாலை, நிறுவனம், கம்போடியா ஆலை, ஸ்ரீரங்க விலாஸ் விதையெடுப்பு நூற்பு நெசவு ஆலை ஆகியவையே அந்த ...கு ஆலைகளாகும்.



ஓம் பராசக்தி ஆலை.

ஓம் பராசக்தி ஆலை செயல்படுவதில் ஏற்படும் விரயம் அதிகரித்ததன் காரணமாக அந்த ஆலை 2—5—1968 முதல் மூடப்பட்டது. 1951–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்படுத்துதல்—முறைப்படுத்துதல்) சட்டத்தின் 18–எ-வது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட 25—6—1969 நாளிட்ட 2622/18-எ/IDRA/69-ஆம் எண் அறிவிப்பில் இந்திய அரசு அந்த ஆலை குறித்து அனுமதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அதிகாரியாக தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்தை நியமித்தது. அக்கழகம் 15—9—1969 நாளன்று அந்த ஆலையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. தொழிலாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர், ஆலை 14—11—1969 முதல் செயல்படத் தொடங்கியது.

உடனடியாகத் தேவைப்படும் நடைமுறை மூலதனம் குறித்து ஓம் பராசக்தி ஆலைக்குக் கழகம் இதுவரை 4·20 லட்சம் அளித்துள்ளது. இப்பிரிவிற்கு ரூ. 4·81 இலட்சம் முன் பணமாக வழங்க தேசீயப் பஞ்சாலைக் கழகத்துக்கு எழுதப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அதிகாரியாகிய கழகம், ஆலையில் தேவையான நிர்வாகப் பணியாளர்களையும், தொழிலாளர்களையும் நியமித்துள்ளது. பஞ்சு கொள்முதல் செய்துள்ளது. விற்பனைக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. ஓம் பராசக்தி ஆலைக்கு ரூ. 20 லட்சம் அளவுக்கு ரொக்க கடன் வழங்க இந்திய வங்கியிடம் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

கம்போடியா ஆலை, கிருஷ்ணவேணி ஆலை.

இந்தியஅரசின் 22—10—1969 நாளிட்ட 4320, 4321–18எ/IDRA/69 ஆம் எண் அறிவிப்புகளையொட்டி, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் 14—12—1969 அன்று கோயம்புத்தூரிலுள்ள கம்போடியா ஆலையையும் 17—12—1969 அன்று கிருஷ்ணவேணி பஞ்சாலை நிறுவனத்தையும் எடுத்துக்கொண்டுள்ளது. கம்போடியா ஆலையும் கிருஷ்ணவேணி ஆலையும் பிப்ரவரி 4-ஆம் நாளளவில் மீண்டும் தொடங்கின. ஆனால் கிருஷ்ணவேணி ஆலை 24–2–1970 முதல் கதவடைப்பின் காரணமாக மூடப்பட்டுள்ளது.

கம்போடியா ஆலைக்கு ரூ. 46 லட்சம் அளவுக்கு ரொக்கக் கடன் வழங்கவும் கிருஷ்ணவேணி பஞ்சாலைக்கு ரூ. 23 லட்சம் அளவுக்கு ரொக்கக் கடன் வழங்கவும் இக்கழகம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிடம் ஏற்பாடு செய்துள்ளது. பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பருத்தியை இறக்குமதி செய்வதற்கான எல்லா ஏற்பாடுகளும் முடிவடைந்துள்ளன.

ஆலைகளை மீண்டும் தொடங்குவது குறித்த தொடக்கச் செலவைச் சரிக்கட்ட கழகம், கம்போடியா ஆலைக்கு ரூ. 7·50 லட்சமும் கிருஷ்ணவேணி பஞ்சாலைக்கு ரூ. 2 லட்சமும் முன் பணம் வழங்கியுள்ளது. எல்லா ஆலைகளுக்கும் கழகம், தனது விருப்பத்திற்கேற்ப பொது மேலாளர், தொழில் நுட்பப்பணியாளர்கள் ஆகியோரை நியமித்துள்ளது. அவை திறம்படச் செயல்படச் செய்வதே இதன் நோக்கமாகும்.

கழகத்தின் வேண்டுகோளின்படி, மாநில அரசு, நான்கு பிரிவுகளையும் "துயர் நீக்கு நிறுவனங்களாக" அறிவித்தும் அவற்றின் வங்கிக் கடன்களைத் தவிர பிற பொறுப்புக்களை ஓராண்டுக்கு நிறுத்திவைத்தும் தமிழ் நாடு துயர்தணிப்பு நடவடிக்கைகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 3, 4 பிரிவுகளின்கீழ் அறிவிப்புகளைக் கொடுத்துள்ளது.

1970 மார்ச் 20]

ஸ்ரீரங்கவிலாஸ் விதையெடுப்பு—நூற்பு—நெசவு ஆலை.

1970 ஜனவரி 7-ஆம் நாளிட்ட S.O. 140/18A IDRA/70-ஆம் எண் அறிவிப்பில் இந்திய அரசு, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தை ஸ்ரீரங்க விலாஸ் விதையெடுப்பு-நூற்பு-நெசவு ஆலை நிறுவனத்தின் அனுமதிக்கப் பட்ட கட்டுப்பாட்டு அதிகாரியாக நியமித்துள்ளது. 16—1—1970 அன்று அந்த ஆலையின் பொறுப்பை கழகம் ஏற்றுக்கொண்டது. ஆலையைத் தூய்மைப்படுத்தும்பணி நடந்தேறி வருகிறது. ஆலை, விரைவில் மீண்டும் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நூல் விலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளினால் பாதிக்கப்படாத வகை யிலும் தனது கட்டுப்பாட்டின்கீழுள்ள ஆலையிலிருந்து உற்பத்தி செய்யப் படும் நூலைப் பயன்படுத்தும் நோக்கத்துடனும், பல ஆலைகள் மூடப்பட்டதன் காரணமாக வேலையிழந்த தொழிலாளர்கள் பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், நமது மாநிலத்தில் விசைத்தறிகளைக் கொண்டுவருவதன் விளைவாக வேலை வாய்ப்பற்றுப் போகக்கூடிய கைத்தறி நெசவாளர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் இக்கழகம் 1,000 விசைத்தறிகளை அமைப்பதற்கு முடிவு செய்து அவற்றை அளிக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

3. இயந்திரச் செங்கற் சூளை, திருமழிசை

இயந்திரச் செங்கற் சூளை, 1—4—1968 அன்று செயல்படத் தொடங் கியது. இச்சூளை நாள் ஒன்றுக்கு 66,000 செங்கற்கள் உற்பத்தி செய்யும் திறனுடையது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு சுமார் ரூ. 70 லட்ச மாகும் சுமார் ரூ. 10 லட்சம் மதிப்புடைய எல்லா இயந்திரங்களும் யூகாஸ்லேவியா நாட்டிலிருந்து அந்நாட்டைச் சேர்ந்த திரு இங்க்கரா நிறுவனத்தின் முகவரான பம்பாயிலுள்ள திரு பர்பெக்ட் மெஷின் டூல்ஸ் நிறுவனத்தின் மூலமாக இறக்குமதி செய்யப்பட்டதாகும். இயந் திரங்களை நிறுவுதல், செங்கற்களைக் காயவைக்கும் பொறிகள் சூளைகளைக் கட்டுதல், தொழிற்சாலையைச் செயல்படுத்துதல் ஆகியவை யூகோஸ் லேவியா வல்லுநர்கள் மேற்பார்வையின்கீழ் முடிக்கப்பட்டன. இப்பிரிவு, கீழ்க்கண்ட வகைச் செங்கற்களைத் தற்போது தயாரித்து வருகிறது.

| | | அளவு. |
|---|---|---|
| 1. | கடினமான செங்கற்கள் .. .. .. | 9″ × 4½″ × X3″ |
| 2. | துளையிடப்பட்ட செங்கற்கள் .. .. .. | 9″ × 4½″ × 3″ |
| 3. | மெட்ரிக் அளவுகளில் செங்கற்கள் .. .. | 190m.m. 90m.m. |

துளையுள்ள சதுர செங்கற்கள் (Hollow blocks), ஓட்டுச் செங்கற்கள் (Ceiling Blocks), (14″×12″×4½″) அளவுடையது. 4 துவாரங்கள் உடை யது. தடுப்புச் சுவருக்கான செங்கற்கள் (Partitioned Blocks) முகப்புச் செங்கற்கள் (Facing Bricks), மெருகிட்ட செங்கற்கள் (Glazed trellies) ஆகியவற்றையும் இந்தப் பிரிவு தயாரிக்க இயலும். அண்மையில், ஓட்டுச் செங்கற்கள் கல்பாக்கத்திலுள்ள அணுமின்சக்தித் திட்டத்திற்கு வழங்கப் பட்டன.

இப்பிரிவு, தற்போது அன்றுடம் சராசரியாக சுமார் 40,000 செங்கற் களை உற்பத்தி செய்கிறது. இச் செங்கற்களுக்கு தேவை அதிகமாக உள்ளது. ஏனெனில், இயந்திர சூளையில் தயாரிக்கப்படும் கற்கள், நன்கு உறுதியுடனும் நல்லமைப்புடனும் நல்வடிவத்துடனு இருப்ப தோடு, அக்கற்களில் துளைகள் குறைவாக இருப்பதும் கட்டுவது குறித்து இச்செங்கற்களால் அதிகச் செலவின்மையுமே அதற்குக் காரணமாகும். தனிப்பட்டவர்களுக்கே இக்கற்கள் பெரும்பாலும் விற்கப்படுகின்றன. செங் கற்கள் குறித்து 2 முதல் 3 திங்களுக்கான தேவைப் பட்டியல்கள் இப்பிரி விடம் உள்ளது. அதற்காக சிலரிடமிருந்து முன்பணம் கூட வாங்கப்பட் டுள்ளது.



1970 மார்ச் 20]

இந்த வகையான இயந்திரச் செங்கல் சூளைப் பிரிவு தங்களது பேரளவுத் திறனை எய்துவதற்கு 4 முதல் 5 வருடங்கள் வரை ஆகும் 1970-ஆம் ஆண்டில் இந்தப்பிரிவின் உற்பத்தித் திறன் முழு அளவுக்கும் பெருகும் என்று இதுவரை இந்தப் பிரிவு எய்தியுள்ள முன்னேற்றத்தி லிருந்து எதிர் பார்க்கப்படுகிறது.

4. கூட்டுறவு நூற்பு ஆலைகள்.

இம்மாநிலத்தில் 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகள் ஆய்வு ஆண்டிலும் தொடர்ந்து செயல்பட்டன.

1969-ஆம் ஆண்டில் இந்த 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளின் உற்பத்தி யளவைக் காட்டும் விவர அறிக்கை I-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 1,73,256 கதிர்கள் திறனளவுள்ள, இந்த ஆலைகள் 20-லிருந்து 100 வரையுள்ள பருத்தி நூலை உற்பத்தி செய்தன. முந்தைய ஆண்டில் இந்த ஆலைகளின் உற்பத்தித் திறனுடன் ஒப்பிட்டுப் பார்க்கை யில் 1969–ஆம் ஆண்டில் இந்த ஆலைகளின் உற்பத்தித் திறன் அதிகரித் துள்ளது என்பது கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது.

| | 1968. | 1969. |
|---|---|---|
| உற்பத்தி (கிலோ லட்சத்தில்) .. .. .. | 88·25 | 105· 70 |
| விற்பனை (ரூ. லட்சத்தில்) .. .. .. | 743·06 | 899·36 |

கூட்டுறவுச் சங்கங்களில் தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ. 184·08 லட்சம் பங்கு மூலதன முதலீடு செய்துள்ளது. கடன் வழங்கும் நிறுவனங் களிடமிருந்து ரூ. 668·13 லட்சம் அளவில் ஆலைகள் வாங்கியக் கடனை அவை திருப்பிக் கொடுப்பது குறித்த உத்தரவாதத்தை அரசு அளித்துள்ளது. தொகையைப் பின்னர் கொடுக்கும் அடிப்படையில் இந்த ஆலைகள் ரூ. 39·85 லட்சம் அளவில் வாங்கிய நூற்பு இயந்திரங்களின் விலை குறித்த தவணைத் தொகைகள், குறித்த காலத்தில் செலுத்தப்படுவது பற்றி அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. இது தவிர, தற்காலிகமாக ஏற்பட்டுள்ள நிதிப் பற்றுக்குறையை தவிர்க்கும் பொருட்டு, ரூ. 35·65 லட்சம் வரை இந்த ஆலைகளுக்கு அரசு நேரடியாக கடன் வழங்கியுள்ளது.

ஸ்ரீ வில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை, திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை தமது உற்பத்தித் திறனை 25,000 கதிர்கள் திறனளவு கொண்டதாக விரிவுபடுத்துவதற்கான திட்டத்தைச் செயல்படுத்தி வரு கின்றன. விரிவுத் திட்டத்தின் கீழ் நிறுவ எண்ணியுள்ள 30 கூடுதல் வட்டச் சட்டங்கள், திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை இதுவரை 8 சட் டங்களை வாங்கி நிறுவியுள்ளது. விரிவுத் திட்டத்தின் கீழ் நிறுவ எண்ணி யுள்ள 28 சட்டங்களுள் ஸ்ரீ வில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்புஆலை 8½கூடுதல் சட்டங்களை நிறுவியுள்ளது. விரைவுத் திட்டத்தை விரைவாக முடிப் பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த இரண்டு ஆலைகளுக்கும் எடுத்து வருகின்றன. ஆய்வு ஆண்டில், ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை, தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்திடமிருந்து நீண்ட காலக் கடனாக ரூ. 4.75 லட்சம் பெற்றுள்ளது. தொகை பின்னர் கொடுக்கப்படும் அடிப்படையில் இயந்திரங்கள் வாங்குவதற்காக ரூ. 19·41 லட்சம் அளவிற்கும் உத்திர வாதம் அளித்துள்ளது. மேலும் அது அரசிடமிருந்து ரூ. 10 லட்சம் மதிப்புள்ள தற்காலிகமான இடத்தையும் பெற்றுள்ளது. வரிவுத் திட் டத்திற்கு வகை, செய்வதற்காக திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை தொழில் நிதிக் கழகத்திடமிருந்து ரூ. 30 லட்சம் கடனாகப் பெற்றுள்ளது. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலைகளின் பங்கு மூலதனத்தில் அரசு கூடுதலாக ரூ. 5 லட்சம் முதலீடு செய்துள்ளது.

1969-ஆம் காலண்டர் ஆண்டில், சேலம் கூட்டுறவு நூற்பு ஆலைகள், மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை ஆகியவை ஒவ்வொன்றும் கூடுதலாக சில சட்டங்களை அதிகரித்தன. மூலம் தங்களது கதிர்களை விரிவுபடுத்தும் திட்டத்தை செயல் படுத்தியது. கூம்புநூல் (Cone yarn) இரட்டை நூல் (Double yarn) ஆகியவற்றின் வளர்ந்து வரும் தேவையைச் சரிக்கட்டவும் வருவாயைப் பெருக்கவும், சில ஆலைகள் உற்பத்தியைப் பல கூருக்கியது மற்றொரு குறிப்பிட்ட சாதனையாகும்.

மதுரை கூட்டுறவு நூற்பு ஆலை, தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு ஆலை ஆகிய ஒவ்வொன்றும் தங்களது திறனளவை 25,000 கதிர்கள் வரை கணிசமான அளவிற்கு உயர்த்துவதற்குத் திட்டமிட்டுள்ளன. மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலையைப் பொறுத்த வரையில், வெளி நாடுகளிலிருந்து வரும் இந்திய அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய விரிவுத் திட்டதை நிறைவேற்றும் வகையில் ரூ. 35 லட்சம் நிதி உதவிக்கு ஒப்பளிப்பு வழங்குமாறு தமிழ்நாடு அரசு இந்திய அரசு மறுவாழ்வு அமைச்சகத்திற்கு பரிந்துரைத்துள்ளது. தங்களது திறனளவை 25,000 கதிர்கள் வரை உயர்த்துவதற்காக, தஞ்சாவூர் மாவட்ட நூற்பு ஆலை அண்மையில் தொழில் உரிமம் ஒன்றை பெற்றுள்ளது. இத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை இந்த ஆலை எடுத்து வருகிறது.

ஆய்வு ஆண்டில், நாசரத்திலுள்ள திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை நீங்கலாக மற்ற எல்லா ஆலைகளும் வாரமுழுவதும் வேலை செய்யும் முறையைக் கொண்டு வந்தன. இது உற்பத்தியைப் பெருக்கவும். மொத்தச் செலவை குறைக்கவும் உதவியுள்ளது.

1969-ஆம் ஆண்டில், கீழ்க்காணும் கூட்டுறவ ஆலைகள் ஏற்பளிக்கப் பட்ட ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி செய்த நூலின் அளவு குறித்த விவரங்களைக் கீழே காணலாம் :—

| தொடர். எண். | ஆலைகள். | ஏற்றுமதி செய்த பேல்களின் எண்ணிக்கை. | ஏற்றுமதி செய்த நாடுகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை | 50 | பர்மா. |
| 2 | மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை | 400 | பர்மா. |
| 3 | கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 486 | பர்மா-இலங்கை |
| 4 | திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை. | 400 | பர்மா. |
| 5 | வடஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை. | 670 | பர்மா. |
| | மொத்தம் .. | 2,006 | |



## 5. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்.

1—11—1968 முதல் 31—10—1969 வரையிலான சர்க்கரை உற்பத்தி ஆண்டில் அன்றுடம் மொத்தம் 6,500 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட 6 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் செயல் பட்டன. தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடுக்கு அருகில் நாளொன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட மற்றொரு புதிய ஆலை நிறுவப்பட்டு வருகிறது. இந்தச் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1970–71 முதல் கரும்பு பிழியும் பருவக்காலத்தில் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வாணியம்பாடி வட்டத்தில் ஆம்பூர்க்கருகில் ஒன்றும் குடியாத்தம் வட்டத்தில் பிரம்மபுரத்திற்கு அருகில் ஒன்றும் ஆக இரண்டு சர்க்கரை ஆலைகளை வட ஆர்க்காடு மாவட்டத்தில் நிறுவுவதற்கு இந்திய அரசு, தேவைக்குறிப்புப் பட்டியல்களை கொடுத்துள்ளது. இவை ஒவ்வொன்றும், அன்றுடம் 1,250 டன் கரும்பு பிழியும் திறன் கொண்டதாகும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் பேரூர் அருகில் அன்றுடம் 2,000 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட சர்க்கரை ஆலை குறித்து உரிமம் வழங்குவது பற்றி இந்திய அரசு இன்னும் பரிசீலித்து வருகிறது. அன்றுடம் கரும்பு பிழியும் திறனை 2,250 டன் அளவுக்கு உயர்த்துவதற்காக ஐந்து சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளன. ஆம்பூர், மூங்கில்துறைப் பட்டு, மோகனூர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கரும்பு பிழியும் திறன் அதிகமாக்கப்பட்டு வருகிறது. படாளம், அமராவதி ஆகிய இடங்களிலுள்ள ஆலைகளில் கரும்பு பிழியும் திறன் விரைவில் அதிகப்படுத்தப்படும்.

ஏழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் கரும்பு பயிரிடுவோர் 41,017 உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இவர்கள் செலுத்திய மொத்தப் பங்கு மூலதனம் ரூ. 2,63,29,635 ஆகும். 32 கூட்டுறவு நிறுவனங்கள் ரூ. 28,26,000 பங்கு மூலதனமாகக் கொடுத்துள்ளன. தமிழ்நாடு அரசும், ஒரே மாதிரியான அளவில் எல்லாக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும் ரூ. 2,03,93,000 அளவுக்குப் பங்கு மூலதனமாகக் கொடுத்துள்ளது. ஆறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கிய ஆண்டில் கரும்பு பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பளவு 44,274 ஏக்கராகும். ஒவ்வொரு கரும்பு பயிரிடுவோருக்கும் உள்ள சராசரி பரப்பளவு சுமார் 1·16 ஏக்கராகும்.

1967–68-ல் வெல்லத்தின் அதிகவிலை காரணமாகவும், கட்டுப்பாடு நீக்கப்பட்டு சர்க்கரை வெளிச் சந்தைகளில் விற்கப்படுவதன் காரணமாகவும், கரும்பு பயிரிடும் பகுதிகளில் உடனடி விரைவு ஏற்பட்டது. எல்லாக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும், கரும்பு பயிரிடும் பெருமளவுப் பகுதிகள் பதிவாயின. எல்லாக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் சராசரியாக 245 நாட்களில் கரும்புப் பயிர் நிலத்தில் இருக்கும், அவற்றைப் பிழியும் சராசரி நாட்கள் 215 ஆகும். சர்க்கரை அதிகமாக உற்பத்தி செய்ததை முன்னிட்டும் சந்தையில் சர்க்கரை அதிக அளவில் கிடைப்பதை முன்னிட்டும் வெளிச் சந்தையில் பருவம் தொடங்கிய காலத்து ஒரே சீரான நிலையிலிருந்த சர்க்கரையின் விலை, அப்பருவ காலத்தின் பிற்பகுதியில் குறையத் தொடங்கியது. மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் நிலவிய வறட்டு நிலைமை காரணமாக, கரும்பு உற்பத்தியும் தரமும் கணிசமான அளவுக்குக் குறைந்தது. அதன் விளைவாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பெரும்பாலானவற்றில் சர்க்கரை குறைந்த அளவிலேயே உற்பத்தி செய்யப்பட்டது. எல்லா ஆலைகளிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் சராசரி அளவு 8·20 டன் ஆகும். கரும்பு அதிகமாகக் கிடைத்ததன் காரணமாக கரும்பு பிழிவது கோடைத் திங்கள் வரையிலும் நீட்டிக்கப்படுவதால் சர்க்கரை உற்பத்தி மேலும் குறைந்தது.

ஆண்டிபட்டி(?), படாளம், ஆம்பூர், மோகனூர், கள்ளக்குறிச்சி, அமராவதி, அரங்கநல்லூர் ஆகிய இடங்களிலுள்ள ஆறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 124,2,142 டன் கரும்பு பிழியப்பட்டு 102,312 டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. கரும்பு வழங்கியது குறித்து கரும்பு பயிரிடுவோர்க்கு ரூ. 10·18 கோடி வழங்கப்பட்டது. இதோடு போக்குவரத்துக் கட்டணம் குறித்து, ரூ. 50·17 லட்சமும், முன்னதாகவே முதிர்ச்சியடையும் கரும்பு வகைகளை நடுவதற்கான உதவித் தொகை குறித்து ரூ. 50·17 லட்சமும் கரும்பு பயிரிடுவோர்க்குக் கொடுக்கப்பட்டன. எனவே, கூட்டுறவுத் துறையில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஒரு டன் கரும்புக்கு சராசரியாக ரூ. 87 கொடுக்கப்பட்டது. இது குறித்து இந்திய அரசு தொழிற்சாலைகள் பலவற்றிற்கு முடிவு செய்த குறைந்த அளவு தொகை டன் ஒன்றுக்கு ரூ. 73·70 ஆகும். குறைந்த அளவு உற்பத்தி செய்தமையாலும், வெளிச் சந்தையில் சர்க்கரை குறைந்த அளவு விற்கப்பட்டமையாலும், ஆண்டு இறுதியில் இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு விரயம் ஏற்பட்டது. எஞ்சிய நான்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஆதாயத்தை ஈட்டின. 1-11-1968 முதல் 31-10-1969 வரை ஏழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் வேலை நடைமுறைகளை II-ஆம் இணைப்பில் காணலாம்.

## தனியார் துறை.

நாட்டைத் தொழில் மயமாக்கும் பணியில் நம் மாநிலத்தில் தனியார் துறை சிறப்பிடம் வகிக்கின்றது. மாநில அரசும், மத்திய அரசும் மனமுவந்து அளித்துள்ள பல்வேறு வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டும், இம் மாநிலத்தில் வலுவான தொழில் அடித்தளம் நிறுவப்பட்டுள்ளதைப் பயன்படுத்திக்கொண்டும், இத்துறை பல்வேறு உற்பத்தித் துறைகளில் கணிசமான முன்னேற்றம் எய்தியுள்ளது.

1951-ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்துதல்), சட்டத்தின் கீழ் நெசவாலைகள் நீங்கலாக, 753 உரிமங்கள் 1969- டிசம்பர் 31-ஆம் நாள் முடிய பெரிய அளவு தொழில்களுக்காக வழங்கப்பட்டன. இவற்றில் 521 உரிமங்கள் குறித்த தொழில்கள் முழுவதும் செயல்படுத்தப்பட்டு உற்பத்தி நடந்து வருகிறது. 97 உரிமங்கள் குறித்த தொழில்கள் நிறைவேற்றும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது. இவை இன்னும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் முழுவதும் நிறைவேற்றப்படும். முதல், இரண்டாவது, மூன்றுவது திட்டக்கால அளவுகளிலும், 1969-ஆம் ஆண்டு வரையிலும் இம் மாநிலத்தில் அளிக்கப்பட்ட தொழில் உரிமங்களின் எண்ணிக்கையைக் கீழ்க்காணும் விவர அறிக்கையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பல்வேறு வகைகளின்கீழ் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையையும் அது குறிப்பிடுகிறது.



1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் (நெசவாலைகள் நீங்கலாக) வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையைக்காட்டும் விவர அறிக்கை.

| தொழில்கள். | வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை. முதல் திட்டம். | இரண்டாம் திட்டம். | மூன்றும் திட்டம். | 1969 டிசம்பர் வரை | மொத்தம். | செயல்படுத்தப்பட்டுள்ள உரிமங்கள் (உற்பத்தி தொடங்கியவை). | முன்னேற்றத்தில் உள்ள உரிமங்கள். | ரத்து செய்யப்பட்டவை திருப்பிக் கொடுக்கப் பட்டவை முதலியன. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| உலோகவியல் .. .. .. | 9 | 59 | 45 | 7 | 120 | 70 | 21 | 29 |
| பொறியியல் (இயந்திரம்) .. .. | 16 | 130 | 73 | 10 | 229 | 168 | 29 | 32 |
| பொறியியல் (மின்சாரம்) .. .. | 4 | 45 | 25 | 8 | 82 | 61 | 10 | 11 |
| ரசாயனம்— | | | | | | | | |
| ரசாயன உரம் .. .. .. | 19 | 48 | 31 | 5 | 103 | 73 | 10 | 20 |
| கடின ரசாயனக் கலவைகள், PVC பூச்சு வண்ணங்கள், வெடி மருந்துகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், பல்வகை இரசாயனக் கலவைகள். | | | | | | | | |
| உணவுச் சர்க்கரை, சாராயம், மாவு, காய்கறி எண்ணெய், தாவர எண்ணெய் முதலியன. | 11 | 33 | 43 | 5 | 92 | 57 | 12 | 23 |
| பலவகை— | | | | | | | | |
| காகிதம், சோப்பு, அழகு சாதனங்கள், ரப்பர், தோல், கண்ணாடித் தகடுகள், மட்பாண்டங்கள், சிமிட்டி, மரப்பொருள்கள் முதலியன. | 9 | 66 | 37 | 15 | 127 | 92 | 15 | 20 |
| மொத்தம் .. | 68 | 381 | 254 | 50 | 753 | 521 | 97 | 135 |

பஞ்சாலையில், கடந்த பதிமூன்றுண்டுகளில் எண்ணிக்கையிலும் அளவிலும் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கீழ்கண்ட புள்ளி விவரங்கள் காட்டுகின்றன:—

| ஆண்டு. | நெசவாலைகளின் எண்ணிக்கை. | அடங்கல் ஆலைகளின் எண்ணிக்கை. | ஆலைகளின் மொத்த எண்ணிக்கை. | கதிர்கள். | தறிகள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1956, சனவரி 1 .. | 58 | 24 | 82 | 21,71,276 | 6,016 |
| 1961, சனவரி 1 .. | 109 | 25 | 134 | 31,41,841 | 7,346 |
| 1967, சனவரி 1 .. | 158 | 25 | 183 | 37,87,860 | 9,404 |
| 1968, சனவரி 1 .. | 175 | 24 | 199 | 39,79,524 | 9,349 |
| 1969, செப்டம்பர் 1. | 176 | 24 | 200 | 40,49,952 | 9,890 |

1968-ஆம் ஆண்டில் பருத்தி நூல் உற்பத்தி, நெட்டிழைப் பருத்தி நூல் உற்பத்தி, ஆலைகளில் நெய்யப்பட்ட துணி அளவு குறித்த புள்ளி விவரங்களைக் காணலாம்.

1. பருத்தி நூல்—166·54 மில்லியன் கிலோ கிராம்.
2. நெட்டிழைப் பருத்தி நூல்—21·83 மில்லியன் கிலோ கிராம்.
3. ஆலைகளில் நெய்யப்பட்ட துணி—165·27 மில்லியன் மீட்டர்.

விசைத் தறி விசாரணைக் குழுவின் பரிவுரையின் மேல் நான்காவது திட்டத்தில் நிறைவேற்றப்படுவதற்காக 1969-ஆம் ஆண்டில் இம்மாநிலத்திற்கு 12,500 விசைத் தறிகள் இந்திய அரசு ஒதுக்கியது. இந்த 12,500 விசைத்தறிகளும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனிப்பட்ட நெசவாளர்களுக்கும் அளிக்கப்படுவதன் மூலம் இத்திட்டத்தினைப் படிப்படியாகச் செயல்படுத்துவது என்று அரசு கொள்கையளவில் அண்மையில் முடிவு செய்துள்ளது. விசைத்தறிகள் செயலுக்கு வருவதால், வேலை இழக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டங்களை வகுப்பதற்கு உள்ள அவசியத்தைக் கருத்தில் கொண்டே மேற்குறிப்பிட்டுள்ள திட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழ்நாட்டில் தொழில் உற்பத்தி பெருகிக்கொண்டே வந்துள்ளது என்பது தொழில் உற்பத்தி குறித்த புள்ளி விவரங்களிலிருந்து 1960-ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு பார்த்தால் புலனாகும். இம்மாநிலத்தின் தொழில் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த 23 பெருந் தொழில்களின் குறியீட்டு எண் 100 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது. பக்கத்திலுள்ள குறி வரைவுக்குரிய வரை படம் இம்மாநிலத்திலும், இந்தியா முழுவதிலுமான தொழில் உற்பத்திக் குறியீட்டெண்ணைக் காட்டுகிறது.

1956, 1961, 1966, 1969-ஆம் ஆண்டுகளில் பல்வேறு தொழில் துறைகளில் செயல்பட்டு வந்த தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கையும் அவற்றின் உற்பத்தி குறித்த புள்ளி விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களைப் பார்த்தாலே இம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் முன்னேற்றம் நன்கு விளங்கும். எனவே நமது சாதனைகளை விளக்கத் தேவையில்லை.



1956, 1961, 1966, 1969 ஆகிய ஆண்டுகளின்போது பல்வேறு தொழில் துறைகளில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை உற்பத்தி அளவு ஆகியவற்றின் ஒப்பீடான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்டுள்ள இலக்குகளே நமது சாதனைகளுக்குச் சான்றாகும்.

| பொருள்கள். | 1956. | | 1961. | | 1966. | | 1969. | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி. | பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி. | பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி. | பிரிவுகளின் எண்ணிக்கை. | உற்பத்தி. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 வேளாண்மை இயந்திரக் கலப்பைகள் .. | .. | .. | .. | .. | 1 | 3,400 எண். | 1 | 3,344 எண் |
| 2 சுண்ணக் கரியகை .. .. .. .. | .. | .. | 1 | 5,057 டன். | 1 | 9,200 டன். | 1 | 8,738 டன் |
| 3 கார்கள் .. .. .. .. .. | 1 | 2,251 எண். | 1 | 3,364 எண். | 1 | 1,008 எண். | 1 | 2,345 எண் |
| 4 கரியிருதியதை .. .. .. .. | 3 | 851 டன். | 3 | 2,060 டன். | 4 | 1,741 டன். (3 பிரிவுகள் மட்டும்). | 3 | 1,512 டன் |
| 5 வார்ப்படங்கள் (எஃகு, வார்ப்பட இரும்பு) .. | .. | .. | 1 | .. | 7 | 22,039 டன். | 7 | 22,903 டன்* |
| 6 எரி உவர்க்காரம் (Caustic Soda) .. .. | 1 | 3,729 டன். | 2 | 25,191 எண். | 2 | 62,232 டன். | 2 | 78,215 டன் |
| 7 சிமிட்டி .. .. .. .. .. | 3 | 692,820 டன். | 4 | 115,123 டன். | 5 | 18,79,181 டன். | 6 | 2,239,085 டன் |
| 8 வணிக ஊர்திகள் .. .. .. .. | 1 | 1,009 எண். | 1 | 2,071 எண். | 1 | 3,615 எண். | 1 | 4,735 டன் |
| 9 மிதி வண்டிகள் .. .. .. .. | 1 | 129,922 எண். | 1 | 207,535 எண். | 1 | 276,514 எண். | 1 | 376,947 எண் |
| 10 டீசல் என்ஜின்கள் .. .. .. .. | 2 | 3,715 எண். | 2 | 11,766 எண். | 3 | 8,859 எண். | 3 | 18,042 எண் |
| 11 ரசாயன உரங்கள் .. .. .. .. | 2 | 40,829 டன். | 3 | 119,312 டன். | 8 | 249,442 டன். | 8 | 255,950 டன் |
| 12 உலையிலிட்டு காய்ச்சி அடித்தல் .. .. | .. | .. | .. | .. | 5 | 5,975 மெ. டன். | 5 | 7,372 டன் |
| 13 மாவு .. .. .. .. .. .. | 2 | 22,846 டன். | 6 | 112,119 டன். (ஐந்து பிரிவுகள் மட்டும்). | 14 | 201,269 டன். | 15 | 150,986 டன் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14 மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் .. .. | 1 | 1,130 எண். | 1 | 3,901 எண். | 1 | 8,298 எண். | 1 | 10,149 எண் |
| 15 உயிர்வளி .. .. .. .. .. | 1 | 3,14,000 (கன மீட்டர்). | 1 | 11,02,000 (கன மீட்டர்). | 2 | 1,673,300 (கன மீட்டர்). | 2 | 25,95,430 கனமீட்டர் |
| 16 பூச்சு வண்ணங்கள் .. .. .. .. | 1 | 337,249 (காலன் கள்). | 1 | 490,697 (காலன் கள்). | 1 | 3,475,395 லிட்டர். | 1 | 28,30,152 லிட்டர் |
| 17 காகிதம் .. .. .. .. .. .. | .. | .. | .. | .. | 3 | 24,042 டன். | 3 | 31,450 டன் |
| 18 குழாய்களும், குழல்களும் (Pipes and Tubes) .. | | .. | .. | .. | 1 | 13,247,855 மீட்டர். | 1 | 1,18,25,682 மீட்டர் |
| 19 வானொலிப் பெட்டிகள் .. .. .. | 2 | 1,685 எண். | .. | .. | 2 | 9,358 எண் | 2 | 4,495 எண் |
| 20 வானொலியின் அழுத்தமாற்றிகள் (Radio Transformers). | .. | .. | .. | .. | 1 | 19,500 எண். | 1 | 9,000 எண் |
| 21 சர்க்கரை .. .. .. .. .. | 6 | 64,227 டன். | 7 | 129,306 டன். | 14 | 225,907 டன். | 15 | 3,35,829 டன் |
| 22 கந்தக அமிலம் .. .. .. .. | 1 | 14,891 டன். | 1 | 24,175 டன். | 6 | 87,492 டன். | 6 | 71,198 டன்* |
| 23 மின் அழுத்த மாற்றிகள் .. .. .. | 2 | 12,009 கே.வி.எ. | 3 | 183,160 கே.வி.எ. | 3 | 946,275 கே.வி.எ. | 3 | 6,92,123 கே.வி.எ.* |
| 24 தட்டச்சு யந்திரங்கள் .. .. .. .. | 1 | 977 எண். | 1 | 3,755 எண். | 1 | 8,660 எண். | 1 | 8,718 டன் |
| 25 மோட்டார் வண்டி டயர்கள் .. .. .. .. | | .. | 1 | 104,700 எண். | 2 | 423,123 எண். | 2 | 6,33,360 எண்* |
| 26 மோட்டார் வண்டி டியூப் .. .. .. .. | | .. | .. | .. | 1 | 22,306 எண். | 1 | 3,45,434 எண் |
| 27 சைக்கிள் டயர்கள் .. .. .. .. .. | | .. | 1 | 1,534,360 எண். | 1 | 3,946,066 எண். | 1 | 51,63,235 எண்* |
| 28 தரவர எண்ணெய் (வனஸ்பதி) .. .. | 4 | 8,453 டன். | 4 | 12,714 டன். | 4 | 13,320 டன். | 4 | 17,277 டன் |

* 1968ம் ஆண்டு உற்பத்தியின் அளவுகள்.



1969-ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் பல்வேறு தொழில்களை நிறுவுவதற்காக 12 உரிமங்கள் வழங்கப்பட்டன. இவற்றிற்கு ரூ. 12·63 கோடி மூலதன முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இத் தொழில்களினால் 2,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு நேரடியாகக் கிடைக்கும். இதைத் தவிர, ரூ. 60 கோடி மூலதன முதலீடு அவசியமாகின்ற 22 அதிகாரப் பத்திரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இதனால் 5,000 பேர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பு கிடைக்கும். இந்த உரிமங்களில் அதிகாரப் பத்திரங்களில் ஒன்று கூட்டுத் துறையிலும், 3 கூட்டுறவுத் துறையிலும் (வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த அம்பலூரிலும், பிரும்மபுறத்திலும் இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளைப் புதிதாகத் தொடங்கவும் படாளத்தில் உள்ள மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை விரிவுபடுத்தவும் வகை செய்யும் திட்டம்), எஞ்சிய திட்டங்கள் தனியார் துறையிலும் உள்ளன. 1969-ஆம் ஆண்டில் 1951-ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி—முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட அதிகாரப் பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் போன்ற விவரங்கள் III, IV இணைப்புகளில் காணலாம்.

1969-ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் நான்கு நடுத்தரத் தொழில்கள் புதுடில்லியிலுள்ள தொழில் நுட்பத் தொழில் வளர்ச்சி தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டன. இதுவரையில் 50 மொத்தம் தொழில்கள் இந்த அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்காக இம்மாநிலத்திலுள்ள தொழில் வல்லுநர்கள் ஜப்பான், ஐஸ்லாந்து, பிரிட்டன், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, இத்தாலி ஆகிய நாடுகளின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் நிதி உதவி ஒத்துழைப்புடன் தொழில்கள் தொடங்கச் செய்துகொண்டுள்ள 7 விண்ணப்பங்களுக்கு இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்பத் தொழில் தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்களையும் 1969-ஆம் ஆண்டில் அந்நிய நாட்டு நிறுவனங்கள் தொழில் நுட்ப ஒத்துழைப்பு நிதி உதவி ஒத்துழைப்பு நல்க முன்வந்துள்ளது, குறித்த விவரங்களையும் முறையே V, VI இணைப்புகளில் காணலாம்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த திரு இத்தாலி விஸ்கோஸ் ஈஸ்டர்ன் டிரேடிங் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தென் இந்தியா விஸ்கோ நிறுவனத்தின் மரக்கூழ் தயாரிப்புத் தொழிற்சாலை 1969 டிசம்பர் திங்களில் சிறுமுகையில் நிறுவப்பட்டது. இம்மாநிலத்தின் தொழில் முன்னேற்றத்தில் மற்றொரு மைல் கல்லாகும். ரூ. 12 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள இத்தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 60 டன் உற்பத்தித் திறன் கொ டதாகும். நீலகிரி, கோடைக்கானல் மலைகளில் ஏராளமான அளவில் காணப்படும் சற்பூர தைலம் வகை மரங்களிலிருந்தும் வாட்டில் மரங்களிலிருந்தும் கூழ் தயாரிக்கும் நோக்கத்துடன் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. தரமான ரயான் நூல், நெட்டிழை நூல் தயாரிப்புக்காக தென் இந்திய விஸ்கோஸ் நிறுவனத்தின் இந்த முக்கிய மூலப் பொருள் தேவையை இத்தொழிற்சாலை நிறைவு செய்வதுமன்றி, தென் இந்தியாவிலுள்ள பருத்தி கதிர்களுக்கு மாற்று மூலப் பொருளை வழங்குவதன் மூலம், நொடித்துப் போன பல ஆலைகளுக்கு உயிரூட்டவும் உதவுகிறது. இப்புதிய தொழிற்சாலை ஓராயிரம் பேர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பு அளிக்கும். இத் தொழிற்சாலைகள் தொடர்பான பணிகளில் மேற்கொண்டும் மூன்றுயிரம் அல்லது நான்காயிரம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். இவ்வாறாக இப்புதியத் தொழிற்சாலையினால் நேரடியாகவும், மறைமுகமாகவும் 5,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். மேலும் இத்தொழிற்சாலையினால் கணிசமான அளவிற்கு அந்நியச் செலாவணி மிச்சமாவதுமன்றி, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களையே நம்பி இருக்கும் நிலைமையும் குறைகின்றது.

1969-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் பெரிய அளவுத் தொழிற்சாலைகள் இரண்டு நிறுவப்பட்டன. கருவிகளுக்கு ரப்பர் உறை தயாரிப்பதற்காக அம்பத்தூரில் நிறுவப்பட்டுள்ள தமிழ் நாடு இண்டஸ்ட்ரியல் லைனிங்ஸ் நிறுவனம் இதில் ஒன்றாகும். கோதுமை மாவு தயாரிப்பதற்காக ஆரோ

வில்லியில் நிறுவப்பட்டுள்ள ஆரோஃபுட் நிறுவனம் மற்றொன்றாகும். பிரிமீயர் ஃபெர்ட்டிலைசர் நிறுவனம் கடலூரில் நிறுவப்பட்டுள்ளது. இது செயற்கை முறையில் கிரியோலைட் (Cryolite) என்னும் கனரக ரசாயனப் பொருளைத் தயாரிக்கின்றது. மேட்டூரிலுள்ள மைக்கோயாம் கெமிக்கல் நிறுவனம் புதிதாக நிறுவப்பட்ட மற்றொரு நிறுவன மாகும். பூச்சிக்கொல்லி மருந்துகளை வணிக முறையில் தயாரிக்கும் பணியில் இந்த நிறுவனம் ஈடுபட்டுள்ளது. பள்ளிப் பாளையத்தில் செயல் பட்டு வரும் சேஷசாயி பேப்பர் போர்டு தயாரிப்பு நிறுவனம் தனது தொழிலை விரிவுபடுத்தும் திட்டத்தின் முதல் நிலையை முடித்துள்ளது. டூப்ளக்ஸ் போர்டுகள், கிராப்டு லைனர்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கானப் பொறிகளையும், சாதனங்களையும் நிறுவி, அவற்றை 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதக் கடைசி வாரத்தில் செயல்படச் செய்ததன் மூலமாக, மேற் படி நிறுவனம் தனது விரிவுபடுத்தும் திட்டத்தின் முதல் நிலையை வெற்றிகரமாக முடித்தது. இதனால் இந்த நிறுவனத்தின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 20,000 டன் என்று இருந்ததிலிருந்து ஆண் டொன்றுக்கு 30,000 டன்களாக அதிகரித்துள்ளது. உற்பத்தி தொடங்கி யுள்ள பெரிய அளவு தொழிற்பிரிவுகளின் பட்டியலை 7-வது இணைப்பில் காணலாம்.

உரிமங்களை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், பாராட்டத் தக்கதாக அமைந்துள்ளது. தற்போதுள்ள பிரிவுகள் தங்களது உற்பத்தி யைப் பெருக்கி வருவதுமன்றி, பொறியியல் தொழிற்சாலைகள் பல்வேறு திசைகளில் தங்கள் உற்பத்தியை விரிவுபடுத்த முனைந்து செயல்பட்டு வரு கின்றன.

## நிறுவனக் கடன்.

விரைவான தொழில் வளர்ச்சி ஏற்பட்டு வரும் இச்சூழலில் நிறுவன நிதியுதவியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தத் தேவையில்லை. குறிப் பாக, நமது மாநிலத்தில் முதலீடு செய்வதற்கான மூலதனம் குறைவாக இருப்பதால், நிறுவனக் கடனுதவியின் தேவை இன்னும் அதிகமாகிறது. மத்திய, மாநில நிறுவன நிதி உதவும் முகவர்கள் அளித்த கடன் வசதிகளின் பேரளவுப் பயனை நம் மாநிலத்தில் உள்ள தொழில்கள் தொடர்ந்து பெற்று வந்தன. இம்மாநிலத்தில் தொழில் களுக்குக் கிடைத்த நிறுவன நிதி வசதிகள் குறித்த புள்ளி விவரங்கள், இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை அதிகரித்து வருவதைத் தெளி வாக உணர்த்துகின்றன.

இந்தியத் தொழில் நிதிக் கழகம், அதன் துவக்கத்திலிருந்து தமிழ் நாட்டிலுள்ள தொழிற் பிரிவுகளுக்கு 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் 46·46 கோடி ரூபாய் அளவிற்கு நிதியுதவி வழங்கியுள்ளது. இந்தியா முழுவதற்குமாக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 327·59 கோடியாகும். 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியில் உள்ளபடி இக்கழகத்தால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மாநில வாரியான நிதியுதவியைப் பொருத்த வரையில், மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ் நாட்டிலுள்ள தொழில் பிரிவு களுக்கே அதிகப்படியான நிதியுதவி அளிக்கப்பட்டது என்பது, கீழே கண்டுள்ள புள்ளி விவரங்களினின்று தெரிய வருகிறது.

| மாநிலம். | தொழிற் பிரிவு களின் எண்ணிக்கை. | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட நிதியுதவி (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆந்திரப் பிரதேசம் .. .. .. .. | 31 | 2,342·30 |
| அஸ்ஸாம் .. .. .. .. .. | 7 | 746·79 |
| [illegible] .. .. .. .. .. | 23 | 1,702·07 |



| மாநிலம். | தொழிற் பிரிவு களின் எண்ணிக்கை. | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட நிதியுதவி (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| குஜராத் .. .. .. .. .. | 38 | 2,202·39 |
| ஹரியானா .. .. .. .. .. | 19 | 850·83 |
| கேரளா .. .. .. .. .. | 15 | 1,132·33 |
| மத்திய பிரதேசம் .. .. .. .. | 13 | 808·42 |
| தமிழ்நாடு .. .. .. .. .. | 58 | 4,646·72 |
| மகாராஷ்டிரம் .. .. .. .. | 107 | 6,490·69 |
| மைசூர் .. .. .. .. .. | 35 | 1,944·32 |
| ஒரிசா .. .. .. .. .. | 14 | 946·71 |
| பஞ்சாப் .. .. .. .. .. | 11 | 669·07 |
| ராஜஸ்தான் .. .. .. .. .. | 14 | 1,530·76 |
| உத்திரப் பிரதேசம் .. .. .. .. | 34 | 2,374·79 |
| மேற்கு வங்காளம் .. .. .. .. | 72 | 4,036·67 |
| டெல்லி .. .. .. .. .. | 4 | 263·17 |
| அந்தமான், நிக்கோபார் தீவுகள் .. .. | 1 | 11·00 |
| புதுச்சேரி .. .. .. .. .. | 1 | 60·15 |
| மொத்தம் .. | 497 | 32,759·19 |

1969-ம் ஆண்டு ஆங்கில ஆண்டில், இந்தியத் தொழில் நிதிக் கழகம் ரூ. 27·27 கோடி அளவிற்கு நிதியுதவிக்கு ஒப்பளிப்பு வழங்கியது. அதில் ரூ. 2·83 கோடி தமிழ்நாட்டுத் தொழிற்பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டது.

1969-ல் இந்தியத் தொழிற் கடன், முதலீட்டுக் கழகம், நிகரத்தில் ரூ. 30 24 கோடி நிதியுதவிக்கு ஒப்பளித்துள்ளது. இதில் ரூ. 4·28 கோடி தமிழ்நாட்டுக்குத் தொழிற் பிரிவுகளுக்கு ஒப்பளிக்கப்பட்டது. இக் கழகம் துவக்கப்பட்டதிலிருந்து 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் நிகரத்தில் ரூ. 261·76 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இதில் ரூ. 28·07 கோடி தமிழ்நாட்டிற்கு ஒப்பளிக்கப்பட்டது. இந்தியத் தொழிற் கடன், முதலீட்டுக் கழகம் இந்தியா முழுவதிலும் உள்ள தொழில்களுக் கென ஒப்பளித்த மொத்த உதவியில் 10·7 சத வீதத்தை இந்தத் தொகைகள் குறிப்பிடுகின்றன.

1968–69-ல் தமிழ்நாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு இந்தியத்— தொழில் வளர்ச்சி வங்கி ரூ. 5·83 கோடி நிதியுதவிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மொத்த ஒப்பளிப்புகள் ரூ. 63·62 கோடியாகும்.

1968–69-ம் ஆண்டிலும், 1964 ஜூலை முதல் 1969 ஜூன் வரையிலும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மாநில வாரியாக நிதியுதவி அளிப்ப தற்கு ஒப்பளிப்பு வழங்கியதையும் நிதி உதவி கொடுத்ததையும் குறித்து மற்ற மாநிலங்களைத் தமிழ் நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அதன் நிலை கீழ்க்கண்டவாறாகும்:—

(ரூபாய் லட்சத்தில்).

| மாநிலம். | 1968–69. ஒப்பளிக்கப் பட்ட நிதி உதவி. | 1968–69. அளிக்கப் பட்ட நிதி உதவி. | ஜூலை 1964—ஜூன் 1969. ஒப்பளிக்கப் பட்ட நிதி உதவி. | ஜூலை 1964—ஜூன் 1969. அளிக்கப் பட்ட நிதி உதவி. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 ஆந்திரப் பிரதேசம் .. | 154·4 | 159·9 | 1,773·7 | 1,637·2 |
| 2 அசாம் .. .. .. | .. | .. | 12·4 | 24·4 |
| 3 பீகார் .. .. .. | 159·9 | 266·6 | 965·2 | 441·7 |
| 4 குஜராத் .. .. .. | 328·8 | 301·8 | 3,724·6 | 3,148·9 |
| 5 ஹரியானா .. .. | 58·1 | 53·6 | 262·1 | 249·8 |
| 6 ஜம்மு காஷ்மீர் .. .. | .. | .. | .. | 30·0 |
| 7 கேரளா .. .. .. | 133·0 | 68·3 | 440·0 | 342·3 |
| 8 மத்தியப் பிரதேசம் .. | 171·3 | 143·7 | 543·0 | 517·9 |
| 9 மகாராஷ்டிரம் .. .. | 2,217·7 | 1,100·1 | 9,612·2 | 8,212·9 |
| 10 மைசூர் .. .. .. | 489·7 | 263·6 | 1,052·7 | 859·7 |
| 11 நாகலாந்து .. .. | .. | .. | .. | .. |
| 12 ஒரிசா .. .. .. | 348·6 | 46·2 | 504·1 | 223·4 |
| 13 பஞ்சாப் .. .. .. | 18·6 | 14·5 | 111·7 | 134·9 |
| 14 ராஜஸ்தான் .. .. | 308·3 | 181·7 | 1,028·2 | 692·7 |
| 15 தமிழ்நாடு .. .. .. | 583·1 | 801·7 | 3,541·4 | 2,933·4 |
| 16 உத்திரப் பிரதேசம் .. | 106·0 | 342·5 | 1,158·9 | 1,006·2 |
| 17 மேற்கு வங்காளம் .. | 1,241·2 | 655·6 | 3,191·2 | 1,986·7 |
| 18 மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகள். | 44·3 | 28·0 | 359·4 | 266·8 |
| மொத்தம் .. .. | 6,362·9 | 4,427·8 | 28,280·8 | 22,708·9 |

1968–69 (1–10–68 முதல் 30–9–69 வரையில்) இந்திய ஸ்டேட் வங்கி 404 சிறு தொழிற் பிரிவுகளுக்கு ரூ. 8·79 கோடி அளவிற்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

1969 செப்டம்பர் 30-ம் தேதி அன்றுள்ளபடி 2,315 தொழிற் பிரிவுகளுக்கு இந்திய ஸ்டேட் வங்கி ரூ. 2,340 கோடி அளவிற்கு நிதியுதவி வழங்கியுள்ளது. ஷெட்யூல்டு வங்கிகளும் நடைமுதல் மூலதனக் கடன் வகையிலும் நடுத்தரக் காலக்கடன் வகையிலும் நிதியுதவி வழங்குவதன் மூலம் இம்மாநிலத்தொழில் வளர்ச்சிக்கு உதவி வந்துள்ளன. 1968 ஜூன் நிலவரப்படி தமிழ் நாட்டில் கிடைத்த மொத்தவங்கிக் கடன் ரூ. 149·78 கோடி அளவிற்கு இருந்தது. 1969 ஜூன் நிலவரப்படிக் கிடைத்த மொத்த வங்கிக் கடன் ரூ. 187·78 கோடியளவிற்கு இருந்தது. தயாரிப்புப் பணிகள் உண்மையில் வளர்ச்சியடைந்துள்ளதை இந்த வங்கிக் கடன் அதிகரிப்பு காட்டுகிறது.

### (a) தமிழ் நாட்டுத் தொழில் முதலீட்டுக் கழகம்.

தமிழ் நாட்டிலுள்ள தொழிற் பிரிவுகளுக்கு நிதி உதவும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு இக்கழகத்தை ஏற்படுத்தியது. 1969 ஆங்கில ஆண்டிலும், தமிழ் நாட்டு தொழில் முதலீட்டுக் கழகம் துவக்கப்பட்டதிலிருந்து 1969- டிசம்பர் 31-ஆம் தேதி வரையில் அக்கழகத்தால் வழங்கப்பட்ட நிதியுதவி (நிகரம்) எதிர்ப் பக்கத்தில் கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.



### (b) தமிழ் நாடு கூட்டுறவு-தொழில் வங்கி.

இம் மாநிலத்தில் உள்ள தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கும், சிறு தொழில் பிரிவுகளுக்கும் நிதி அளிப்பது இதன் நோக்கமாகும். செல் திறன் கால அளவு முடிகிற முன் பணங்களைப் புதுப்பிப்பதைத் தவிர தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்தத்தில் ரூபாய் 16·39 லட்சம் அளவிற்குப் புதிய கடன்களுக்கும் ரொக்கக்கடன்களுக்கும் இந்த வங்கி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது .

### (c) தமிழ் நாடு கூட்டுறவு வங்கி.

கூட்டுறவு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் போன்ற பெரிய அளவுத் தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு இந்த வங்கி நிதி வழங்குகிறது. 1969 ஆங்கில ஆண்டில் ரூ. 192 லட்சம் அளவிற்குக் குறிப்பிட்ட கால அளவிற்கான கடனுக்கும் ரொக்கக் கடனுக்கும் இந்த வங்கி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## சுரங்கங்களும் கனி வளங்களும்

1969-70-ஆம் ஆண்டில் மாநிலப் புவியியல் பிரிவு கீழ்க்கண்ட கனி வளம், ஊற்று நீர் ஆய்வுகளை நடத்தியது. 1969-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகளில் முக்கியமானவற்றின் பட்டியல் VIII-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### சுண்ணாம்புக்கல்.

எட்டிமடை கிராமத்தின் வடக்குப் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல் படிவங்கள் குறித்தும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள அசோஸியேட்டட் சிமிட்டி கம்பெனி சொத்தினை அடுத்துள்ள சுண்ணாம்புக்கல் படிவம் குறித்து துளையிடுதல், பள்ளம் வெட்டுதல் மாதிரி எடுத்தல் உள்ளிட்ட விரிவான ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டது.

| தொடர் எண். | கடன்களின் வகை. | ஒப்பளிக்கப்பட்டது — 1969 ஆங்கில ஆண்டு. | ஒப்பளிக்கப்பட்டது — தொடங்கிய தேதியிலிருந்து 31-12-1969. வரை. | கொடுக்கப்பட்டது — 1969 ஆங்கில ஆண்டு. | கொடுக்கப்பட்டது — தொடங்கிய தேதியிலிருந்து 31-12-1969 வரை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | ரொக்கம் கடன்கள் | 1,85,51,000 | 26,82,02,311 | 1,74,66,507 | 21,50,16,535 |
| 2 | கூட்டுக்கடன்கள் | 4,00,000@ | 1,66,65,000 | 20,002 | 11,18,770 |
| 3 | உத்தரவாதக் கடன்கள் | .... | 6,36,15,084 | .... | 4,59,16,554 |
| 4 | பின்னிட்டுப்பணம் கொடுப்பது பற்றிய உத்ரவாதம் | 21,68,437 | 15,83,36,273 | 24,49,245* | 7,65,65,933* |
| 5 | பங்குகளைக் காப்பீடு செய்தல் | 42,00,000 | 13,16,02,500 | 13,94,000** | 7,96,60,350** |
| 6 | கடன் ஈட்டுறுதி ஆவணங்களைக் காப்பீடு செய்தல். | .... | 15,00,000 | .... | 14,30,000 |
| | மொத்தம் .. | 2,53,19,437 | 63,99,28,168 | 2,13,29,752 | 41,97,08,142 |

@ கடனில் கழகத்தின் பங்கு ரூ. 3,10,000.

* உத்தரவாதம் நிறைவேற்றப்பட்டது.

** செலுத்தப்பட்ட பங்குகளே அன்றி உண்மையாகச் செலுத்தப்பட்ட தொகைகள் அல்ல.



சிற்சில மூடிய பகுதிகளுடன் 2 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுண்ணாம்புக் கல் படிவங்கள் கிடைக்கும்பகுதி அமைந்துள்ளது. பள்ளங்கள், இயந்திர ஆழ்துளை மாதிரிகளின் மூலம்,இதன்தரம் மிகவும் உயர்ந்ததெனவும்,ஆனால் ஓரளவு மணற் சத்தடங்கிய ( Silliceous ) தெனவும் கண்டறியப் பட்டது. மொத்தத்தில் 5 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் படிவங்கள் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கொனலியல் சுண்ணாம்புக்கல் படிவங்கள் கிடைப்பது குறித்து ஏற்கனவே மேற்சொல்லப்பட்ட பணிக்குத் தொடர்ச்சியாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தச்சங்குறிச்சி ஒதுக்கக் காடுகளில் சுண்ணாம்புக்கல் பற்றிய விரிவான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. இப்பணியில் சுண்ணாம்புக்கல் இருக்கும் படிவத்தின் ஆழம் பரப்பளவு, தரம் முதலியவற்றைக் கண்டறிவது அடங்கும். புழைகற்களைத் தொழிற்சாலைக்கு மாநில வீட்டு வசதி வாரியத்தால் இவை பயன் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. இப்பகுதியிலிருந்து கிடைக்கக்கூடிய சுண்ணாம்புக்கல் நல்ல தரமானதாகும். 4·5 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் இப் பகுதியில் கிடைக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. முடிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பகுதிக்கு தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஏற்பு தெரிவித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன் விளைப்பகுதியில் உள்ள கிளிஞ்சல் சுண்ணாம்புக் கற்கள் தோண்டிப் பார்க்கும் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. 1200×800 சதுர மீட்டர் பரப்பளவில் கிளிஞ்சல் சுண்ணாம்புக் கல் கிடைக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. சுண்ணாம்புக்கல் சராசரி 4·5 மீட்டர் கனத்தை கொண்டதாகும். மையப் பகுதியில் இது மிகவும் நல்ல தரமானதாவும் சொரசொரப்பாகவுமுள்ளது. ஆனால், வடக்கு கிழக்கு பகுதிகளில் இதன் தரம் குறைந்து காணப்படுகிறது. இப்பகுதியில் சுமார் 2 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், விரைவில் எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள விரிவான பாகுபாட்டு பணி துளையிடுதல் பணிக்குப் பின்னரே முடிவான புள்ளி விவரங்கள் வெளியாகும்.

ஏரிகளின் உப்பங்கழிப்பகுதிகளில் உயர்தரச் சுண்ணம் ஆதாரமான கிளிஞ்சல்கள் கிடைக்கின்றன. தென் ஆற்காடு மாவட்டம், மரக்காணத்தில் உள்ள கீழ்வெளியிலும் கந்தாடு பகுதிகளிலும் உள்ள உப்பங்கழிப் பகுதிகளில் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியில் சுமார் 1 மீட்டர் கனத்தில் சுண்ணாம்புக் கிளிஞ்சல் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சிற்சில பகுதிகளில் உள்ளபடிவங்கள் ஏற்கனவே அரித்துச் செல்லப்பட்டுவிட்டன. மற்றொரு உப்பங்கழிப் பகுதியில் இந்த ஆய்வை நீட்டிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 5 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுண்ணாம்புக்கிளிஞ்சல் அடுக்குகள் 25 சத வீதமெனத் தொடக்கத்தில் வரையறுக்கப்பட்டது. கடும் மழை காரணமாகப் பணி நிறுத்தப்பட்டது. ஆனால், மறுபடியும் இப் பணி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## காரியகப் படிவங்கள் (Graphite)

மேற்கூறிய கால அளவில் மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் பகுதியில் துளையிடுதல், பள்ளம் வெட்டுதல் மூலம் காரியகப் படிவங்களாக விரிவான ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றது. இப்பகுதியில் மூன்று மண்டலங்களில் தொடர்ச்சியாக இல்லாது காரியகப் படிவங்கள் அடுக்கடுக்காக படிந்துள்ளது கண்டு பிடிக்கப்பட்டது. ராஜமகேந்திரபுரத்தி லுள்ள காரியகப் படிவங்கள் உலோகங்கள் உருக்கும் அரசு தொழிற்சாலையில் (Government graphite crucible plant) நடத்தப்பட்ட உலோக உருக்குச் சோதனைகளின் மூலம், சில தோண்டப்பட்ட ஆழ்துளைகளிலிருந்தும் பள்ளங்களிலிருந்தும் கிடைத்துள்ள காரியகப்படிவங்கள் சரியான விகிதத்தில் (10 சதவீதம்) உள்ள தெனத் தெரிய வருகிறது. மொத்தத்தில் உரப்பனூர் கிராமப்பகுதியில் சுமார் 20,000 டன் காரியகப் படிவப் பாறைகள் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதியின் நீளம் 1,300 மீட்டர் வரை இருக்குமென (காரியகப்படிவங்கள் கொண்ட மூன்று மண்டலங்கள் இதில் அடங்கும்) ஆய்வுப் பணியின் மூலம் தெரிய வந்தது.

சோசியர் ஆலங்குளத்திற்கும் மேற்குப் பகுதியிலுள்ள பொன்ன மங்கலம் பகுதியில் பள்ளம் வெட்டுதல், துளையிடுதல் பணிகள் தொடங் கப்பட்டன. தொடக்கப்பலன்கள் ஊக்கமளிப்பதாயில்லை. தற்பொழுது இப்பகுதியிலுள்ள ஒழுங்கற்ற நிலவியல் மண்டலத்தில் பள்ளம் வெட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இப்பகுதியில் மேற்கொண்டும் பணி நடந்தேறி வருகின்றன.

உலோகம் உருக்கு மட் பாத்திரம் தயாரித்தலில் உலோகம் உருக்குதல், ரசாயனப பாகுப்பாய்வு, வாய்ப்புக்கூறு குறித்த பெருமளவு சோதனை களை, ராஜமகேந்திரபுரம் தொழிற்சாலையில் மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளது. ராஜமகேந்திரபுரத்தில் உலோகம் உருக்கு மட் பாத்திரம் தயா ரிக்கும் தொழிற்சாலை சோதனை முடிவுகளிலிருந்து, இப்பகுதியில் வரையறுத்த கார்பன் அளவு 70-லிருந்து 80 சதவீதம் வரை இருக்கு மெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கை அரசனூர் பகுதியில் கோமாரிப் பட்டிக்கும் மீனாட்சிபுரத்திற்கும் இடையில் சுமார் 5 கிலோ மீட்டர் நீளத்திற் குக் காரியகப் படிவங்கள் உள்ள பாறைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப்பகுதியில் காரியகத்தின் சதவீதம் 25 சதவீதத்துக்கு மேல் உள்ளது.

ராஜமகேந்திரபுரத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சோதனை முடிவுகள் வாயிலாக காரியகச் சதவீதம் சுமார் 35 சதவீதம் வரை உள்ளதாக அறி யப்பட்டது. காரியகப் படிவங்களுள்ள பாறைகள் உள்ளதாக கருதப்படும் இடம் "வடக்கு 70°, கிழக்கு-தெற்கு 70°, மேற்கு-தெற்கு நோக்கிநடுத்தர ஆழத்தில் (50-லிருந்து 70).

இப்பகுதியிலிருந்து கிடைக்கும் காரியகப் படிவங்களில் சாம்பல் அதிகம் கலந்திருக்கிறது. அதன் விளைவாக திருமங்கலம் பகுதியில் கிடைக்கும் காரியகப் படிவங்களைக் காட்டிலும் மிகவும் குறைந்த அளவு கார்பகன் உள்ளது. ஆனால், இப்பாறைகளில் காரியகப் படிவங்கள் சுமார் 60 சதவீதத்திற்கு மேல் கிடைக்கிறது.

திருமங்கலத்தில் கிடைக்கும் காரியகப் படிவங்கள் குறித்து மேற் கொள்ளப்படும் நடைமுறையைப் போலவே, "காரியகத்தை உருக்கவைக்கும் மட்பாத்திரங்கள்" செய்வதில் பெருமளவு சோதனைகளுக்குட்படுத்தப் படும்பொருட்டு பெருமளவில் மாதிரிகள் ராஜமகேந்திரபுரத்துக்கு அனுப் பப்பட்டுள்ளன.

ராஜமகேந்திரபுரத்தில் பயன்படுத்தப்பட்ட உத்திகளை ஆய்வு செய்த பின்னர் சிவகெங்கையில் வலம்வரும் கனிப்பொருள் தூய்மைப்படுத்தும் ஆய்வுக்கூடம் அமைப்பது பொருத்தமெனக் கருதப்பட்டது. முன்பே சில மாதிரிகளை உருக்கி ஆய்வு செய்யப்பட்டது.

மேற்கொண்டும் பணி நடந்தேறி வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பூவாணி கிராமத்தில் காரியகப் படிவங் கள் அதிக அளவு கிடைப்பது குறிப்பிடத்தக்கது. 75 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு மேல் முறைப்படியான வரைபடம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இது குறிப்பிடத்தக்க நல்ல பலனை அளிக்கவில்லை. எனவே, இப்பகுதி நிலவியல் அளவைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதுபோலவே "பிக்மடைட் நாளங்களில்" காரியகப் படிவங்கள் (கன்னியா குமரி மாவட்டத்தில் குழித்துறைக்கு அருகில் ஒரே காலத்திய நாளங் கள்) பட்டணங்கால்-சித்தாறு கால்வாய்ப் பகுதியின் கருகால் கிளை நதி அருகில் கிடைப்பதாகத் தெரியவந்துள்ளது. ஆனால், அவை கிடைக்கிற சரியான பரப்பளவு தெரியவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் காரியகப் படிவங்கள் கிடைக்கும் பகுதிகள் இருப்பதற்கான தேர்வுகள் ஒரு சில பதியப்பட்டுள்ளன.



## சிலிமனேட் (Sillimanite)

காதாலூர் ஜமீன்தாரி பகுதியில் கனிவளம் குறித்த பொது ஆய்வின் போது, குளித்தலை வட்டம், கீரனூர் பகுதியில் சுண்ணாம்புப் படிவங்களுடன் சிலிமனேட் கிடைப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தென்னிலை, கீரனூர் கிராமங்களில் சிலிம னேட் திரட்சியாக அல்லது சிலிமனேட் படிவங்களாக (10·30 சதவீதம் சிலிமனேட்) கிடைப்பது கண்டறியப்பட்டன. தென்னிலையில் கிடைக்கும் சிலிமனேட் நல்ல தரமுள்ளதாக இருக்குமெனத் தோன்றுகிறது. ஆறு துளை கள், பெரும்பாலும் ஆழமற்றவையாகத் தோண்டப்பட்டன. ஆனால், அவை அவ்வளவாக பலனளிக்கவில்லை. இதனால் சிலிமனேட் ஆழமான பகுதியில்தான் கிடைக்குமெனக் கண்டறியப்பட்டது.

இதைப்போலவே, கீரனூர் பகுதியிலும் ஆழ் துளைகள் போட்டதில் சிலிமனேட் கிடைக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது.

பள்ளம், துளைகள் குறித்த புள்ளி விவரங்களிலிருந்து, இப்பகுதியில் சுமார் 4,000 டன் சிலிமனேட் மொத்தமாகக் கிடைக்கலாமென மதிப்பிடப் பட்டுள்ளது.

வரவானை, சத்திரப்பட்டி, குள்ளம்பட்டி முதலிய ஊர்களுக்கு அருகில் ஒரு சில பகுதிகளில் சிலிமனேட் படிவங்களுள்ள பாறைகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அவ்விடங்களில் கிடைக்கும் சிலிமனேட்டின் வகை, தன்மை முதலியவை பற்றிய ஆய்வுகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. வரை படம் தயாரிக்கும் பணி நடந்தேறி வருகிறது.

## களிக்கல் (Gypsum)

மெய்ப்பாறை, வரகனூர், சுப்பிரமணியபுரம், பொதுரெட்டிப்பட்டி சின்னோதாசல்பட்டி, எஸ். குமாரபுரம் கழுக்கு சாலை கிராமங்களில் களிக்கல் படிவங்கள் கிடைப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. களிக்கல் மண்ணுடன் கலந்து ½ மீட்டர் கனத்தில் ஊசி வடிவில் உள்ளன என்றும், 3 மீட்டர் வரை கனம் கொண்ட மான்-சுக்கான்கள் அடுக்குகளாக அவை காணப்படுகின்றன என்றும் தெரிகிறது. இவை யாவும் படிவப் பாறைகள் மீது உள்ளன.

இப்பகுதியில் சுமார் 40,000 டன் களிக்கல் கிடைக்குமென மதிப்பிடப் பட்டுள்ளது.

## அபடைட்டு (Apatite)

மதுரை மாவட்டம், போடிநாயக்கனூர் குன்றுப் பகுதிகளில் பழனி தெற்கு மலைச் சரிவுகளில் சில பகுதிகளில் நடத்திய ஆய்வுகளிலிருந்து அபடைட்டு படிவங்கள் இருப்பது தெரியவந்தது. சுமார் 30 சதுர கிலோ மீட்டர் பகுதி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

முக்கியமாக கொட்டகுடி கிராமத்தைச் சுற்றிலும் அபடைட்டு படிவங் கள் இருப்பது அறியப்பட்டது. ஆனால், குளித்தளவு முதலிய பகுதிகளி லும் அதே போன்று அபடைட்டு கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இப்பகுதிகள், அபடைட்டு முக்கியமாகக் கிடைக்கும் பகுதியினின்றும் பல கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ளன.

பொதுவாக, அபடைட் பச்சை வண்ணமாக இருக்கும். ஆனால், சில சமயங்களில் இளஞ்சிவப்பு நிறத்துடனும் காணப்படுகிறது. பெரிய படிவங் களாக ஆனால் சிதறிய நிலையில் இது காணப்படுகிறது. சுண்ணமடுக்கல் பெக்மடைட்டுடன் நரம்போடிய நிலையில் அது காணப்படுகின்றது. இது அதிக அளவு இருக்குமெனத் தோன்றவில்லை.

## களிமண்.

மேற்கூறியதைத் தவிர, விருத்தாசலத்தில் உள்ள மட்பாண்டம் தயா ரிக்கும் பிரிவுகளில் பயன்படுத்துவதற்கான களிமண், படிகக்கல் (Quartz) களிமம் (feldspar) ஆகியவை கிடைப்பது குறித்து, விருத்தாசலத்தில் உள்ள புவியியல் உதவி வல்லுநர் முறையான புலனாய்வு நடத்தினார்

கரிசங்கால், புலியூர், பணிக்குப்பம், காரை, தேர்ணி கிராமங்கள், தென் ஆர்க்காடு, திருச்சி மாவட்டங்களில் கிடைக்கப்பெற்ற பொருள்கள் ஆய்வு செய்யப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை அருகில் செல்வமண்டூர் கிராமத்தில் காணப்படும் நல்ல தரமுள்ள களிமண் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. சுமார் 1·5 மிலியன் டன் களிமண் இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அதன் தரம் குறித்து மதிப்பிடப்பட வேண்டும்.

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் கிளை நதியான கருங்கல் ஆற்றிலும் காணப்படும் சிறிதளவு மைக்காவும் ஆய்வு செய்யப்பட்டது. முன்னதாகச் சொல்லப்பட்டது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக அளவு மைக்கா கிடைப்பதாக கண்டறியப்பட்டதால் அப்பகுதியில் விரிவான ஆய்வு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள முசிறி வட்டத்தில கந்தகியம் (sulphide) கிடைப்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. இது ஒரு குறிப்பிட்ட பகுதியில் சிறிதளவுதான் காணப்பட்டது. இதில் செம்பும் நிக்கலும் இருப்பதைக் கண்டறிய இதன் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. எனினும், அவை சிக்கனமாயிராது என்று தெரியவந்தது.

கனிவள ஆய்வுக்குக் கூடுதலாக ஊற்று நீர் ஆய்வுகள் பல நடத்தப்பட்டன. நாமக்கல்லில் உள்ளத் தொழில் பயிற்சி நிலையம், அடையாறு சுற்றுவளவுக்குள் உள்ள மத்திய தொழில் நுட்ப நிறுவனம், தாளவாடியிலுள்ள பட்டுப்பூச்சி வளர்ச்சிப் பண்ணை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கெனத் தகுந்த இடங்களை தெரிந்தெடுக்கும்பொருட்டு அந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. மேலும், ஆய்வாண்டில் வேளாண்மை மறு நிதிக் கழகத்துக்கென தருமபுரி மாவட்டத்தில் ஆய்வு ஒன்றும் நடத்தப்பட்டது.

## தமிழ் நாட்டுக் கனிவள மேம்பாட்டுத் திட்டம்.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உடனுழைப்புடன ஏற்படுத்தப்பட்ட தமிழ் நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி மாவட்டப் பகுதிகளில் சுமார் 20,000 சதுர கிலோ மீட்டர் பகுதிகளில் கனிவள ஆராய்ச்சிப் பணி மும்முரமாகத் தொடர்ந்து நடந்துவருகிறது. இததிட்டத்திறகான ஐக்கிய நாடுகள் நிறுவனம், வல்லுநர்கள் பணி, எந்த இடத்தில் கனிவளமுள்ளதோ அந்த இடத்தில் சாதனங்களைக் கொண்டு ஆய்வு வேலை நடத்துதல், ஆய்வுக்கூடக் கருவிகள், விமானத்திலிருந்து நில இயற்கை அமைப்பு ஆய்வு ஆகிய வடிவில் பத்து லட்சம் டாலருக்கு மேல் உதவியளிக்கிறது. இதனால் இங்கு இரும்புக் கனிகளும் கரியுடு சார்ந்த உலோக வகைகளும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. கரியஞ் சார்ந்த இத்தகைய உலோக வகைகளில் அபிரகம், "அபடைட்" எனப்படும் கனியும் மற்றும் நியோபியம், டாண்டலும், யுரேனியம், தோரியம் போன்ற அரியவகை உலோகங்கள் அடங்கிய கனிகளும் இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

கடுமையான கோடையின் காரணமாகவும் வறட்சியினால் ஏற்பட்ட நீர் பற்றுக்குறையின் காரணமாகவும் 1967–70-ம் ஆண்டில் நேரடிப் பணியும் துளையிடும் பணியும் ஓரளவுக்குத் தடைப்பட்டன. எனினும், முன்னேற்றம் கணிசமான அளவாக இருந்துவருகிறது.

**நிழற்பட நிலவியல்.**—ஐக்கிய நாட்டு நிழற்பட நிலவியல் வல்லுநரும், நம் நாட்டு நிலவியல் வல்லுநர்களும், திட்டப்பகுதி முழுவதும் அடங்கிய நிழற்பட நிலவியல் வரைப்படங்கள் தயாரிக்கும் வேலையை முடித்துள்ளனர். பாறை அமைப்பில் பல அடுக்குகளையும் தவறுன அமைப்புகளையும் கனிவளம் உள்ள இடங்களையும் இந்த வரைப்படம் விளக்கிக் காட்டுகிறது. வேலூரிலிருந்து சேலம் வரை இருப்புப்பாதை நெடுகவும் உள்ள ஒரு மண்டலப் பகுதி குறிப்பிடத்தக்க நாட்டம் செலுத்தக்கூடியதாக உள்ளது. இங்கு பாறையின் உட்சறுக்கிடுகளில் "டியூனைட்ஸ்", "கிளேடிஸ்", "கார்



போனடைட்ஸ்" படிக "பாரைட்ஸ்" போன்ற கனிவளங்கள் காணப்படுகின்றன. இந்த மண்டலப் பகுதி 150 கிலோ மீட்டர் நீளமும், 15 கிலோ மீட்டர் அகலமும் உடையது. இங்கு அபிரக, பாரியக்கந்தகைகள் உள்ளன.

**நிலப் பௌதிகம்.**—விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட நிலப் பௌதிக ஆய்வுப் படங்கள் மூலம் தெரியவந்த சில குறைபாடுகளை நிலத்தில் சரிபார்க்கிற வேலைகளை, ஐக்கிய நாட்டு நிலப் பௌதிக வல்லுநரும், இந்நாட்டைச் சேர்ந்த நிலப் பௌதிக வல்லுநர்களும் நில அளவையாளர்களும் நிறைவேற்றினர்.

ஜோகிப்பட்டியில் நடத்திய நில ஆய்வில் கார்போனடைட் படிவங்கள் கதிரியக்கம் ஊடுருவக்கூடியத் தன்மை வாய்ந்தவை எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

**நிலவியல் வரைப்படம் வரைதல்.**—இந்திய நில அளவை, நில அமைப்புத் தாள்களில் 1"=1 மைல் என்ற அளவில், கிருஷ்ணகிரியைச் சுற்றிலும் விரிவாக்கப்பட்ட திட்டப்பகுதியில் நிலவியல் படம் வரைவதற்கான வேலை முடிவடைந்துவிட்டது. தர்மபுரிக்கு வடமேற்கில் பிக்கிலி என்னும் இடத்துக்கருகில் 'நெஃபெலைன்' கொண்ட களிமப்பாறை(சீயனைட்) இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

**இரும்புக்கனி.**—திருவண்ணாமலைக்கு வடக்கே சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் கவுதிமலை, வேதியப்பன்மலை ஆகிய இருமலைகளிலும் இரும்புக் கனிப் படிமங்கள் இருப்பதாகக் காணப்பட்டன. திருவண்ணாமலை—காஞ்சி சாலையின் இருபக்கத்திலும் அரசின் ஒதுக்கக் காடுகளில் இந்த மலைகள் உள்ளன.

இக்கனி, இந்த மலைகளில் செறிந்தக் கட்டுகளின் அயக் காந்தப் படிகக் கற்களாகக் கிடைக்கின்றன. பொதுவாக, இவை நடுத்தரமாகப் பொடியாக உள்ளன. வேதியப்பன் மலைக்கு தென்மேற்கிலிருந்து கிடைத்த கனியைப் பாகுபடுத்தி சராசரி ஆய்வு செய்ததில் கீழ்க்காணும் தகவல்கள் கிடைத்துள்ளன :—

இரும்பு—44 சத வீதம்.
மணல்—36 சத வீதம்.
கந்தகம்—0·03 சத வீதம்.
இரும்பு எரியகி—0·02 சத வீதம்.

இந்தக்கட்டுகள் அமையப்பெற்ற இடங்களின் வரைப்படங்களை விரிவாகத் தயாரித்தல், மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்தல் ஆகியவை நடைபெறுகின்றன. இந்த வேலை முடிந்ததும் கனிவள இருப்பு மதிப்பிடப்படும். இங்கு சுமார் 5 கோடி டன் இரும்புக் கனி இருப்பதாகத் தொடக்க அறிக்கை எடுத்துக்கூறுகிறது.

## கொறட்டியில் அபிரகம்.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட ஆலோசகரான "டாக்டர் எல். எஸ். போரோடின்", இந்தப் பாறைகளைக் குறித்து ஆய்வு நடத்தி, அந்தப் பாறைகளை கீழ்க்காணும் வகைகளாக வகைப்படுத்தினர் : அவை முறையே (எ) பழங்காலத்து "கால்சிடிக்" வகை, (பி) பின்னர் ஏற்பட்ட "கால்சிடிக்" வகை, (சி) "கால்சைட் டோலமைட்" வகைகள், (டி) "ஆங்கரைட்" வகைகள் ஆகும். இவற்றில் (சி) வகை, அதாவது கால்சைட் டோலமைட் வகையில் "பைரோகிலோர்" மற்றும் மித அரிய கனிகள் இருக்கின்றன. இவை விரிவான ஆய்வில் உள்ளன.

கொறட்டியில் அபிரகப் படிமங்களுக்காக மூன்று துளைகள் போடப்பட்டன. இவற்றில், "அபடைட்" உள்ள ஹாரிஜோன், "பைரோக்ஸினைட்ஸ் தொடர்புள்ள வெர்மிகுலேட்டும் இருக்கின்றன. 1,100 அடி ஆழத்திற்குத் துளைபோட்டுப் பார்த்ததில் மேலே "வெர்மிகுலேட்டும்' இடையில் "அபடைட்டும்" ஆழத்தில் இரும்பும் செப்புக் கந்தகியங்களும் கிடைக்கின்றன. மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

**ஆய்வுக்கூட வேலை.**—நிலவியல் வல்லுநர் சேகரித்த நில இரசாயன ஆய்வு மாதிரிகள் அணு வண்ணப் பட்டைப் பதிவு நிழற்படக் கருவி (அடாமிக் அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோ போடோமீட்டர்) துணைக்கொண்டு

ஆய்வு செய்யப்படுகின்றன. இரும்புக் கனிகள், அபடைட் போன்ற கனிப்பொருள்கள் மீது ரசாயன பாகுபாட்டாய்வு முறையாக நடத்தப்பட்டு வருகிறது.

**கனிப்பொருள்கள் தூய்மைப்படுத்தும் ஆய்வுக்கூடம்.**—கனிப்பொருள் தூய்மைப்படுத்தும் இயந்திர சாதனங்களில் ஒரு பகுதி பெறப்பட்டு, ஆய்வுக் கூடத்தில் நிறுவப்பட்டது. சில பொறிகள் தற்போது செயல் பட்டு வருகின்றன. ஒரு சிறிய கல்லாய்வியல் ஆய்வுக் கூடம் அமைக்கப் பட்டுள்ளது. கற்பாறைகளையும் கனிப்பொருள்களையும் இனங்கண்டறியும் பணி இவ்வாய்வுக்கூடத்தில் செய்யப்படுகிறது.

## பொது.

ஏற்கெனவே நடைபெற்றுவரும் பஞ்சாலைத் தொழில்களும் சர்க்கரை ஆலைகளும், பொறியியல் தொழில்களும் தங்களது உற்பத்தியைப் பன்மைப்படுத்தியுள்ளன. இரசாயனத் தொழில்கள், குறிப்பாக, பெட்ரோல் —இரசாயனத் தொழில் விரைவாக வளர்ச்சியடையாததற்கான வாய்ப்புக் கூறுகள் உள்ளதாக உணரப்பட்டுள்ளது. காரசோடா, குளோரின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள இருதொழிற் பிரிவுகளும், PVC BHC மற்றும் குளோரின் சார்ந்த இரசாயன அடிப்படைத் தொழிற் பிரிவுகள் ஒரு சிலவும் நீங்கலாக, இம்மாநிலத்தில் இரசாயன தொழில்கள் விரைவாக வளர்ச்சியுற வில்லை. ஆனால், மணலி எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை, தன்னைச்சுற்றிலும் பல பெட்ரோ-கெமிகல் தொழில்களை மேம்படுத்துவதற்கு காரணமாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது. "நாப்தா" வை மூலப் பொருளாகக்கொண்ட உரத் தொழிற்சாலை ஒன்று ஏற்கெனவே உருவாகி வருகின்றது. 1971-ம் ஆண்டில் முற்பகுதிக்குள் அது முறையாக உற்பத்தியைத் தொடங்கும்.

எண்ணெய்த் தூய்மைப்படுத்துகிற தொழிற்சாலையின் மூலம் ஏற்பட் டுள்ள வாய்ப்புகள் குறித்து மாநில அரசு அறியும். பெட்ரோலியத் துணைப் பொருள்களை அடிப்படையாகக்கொண்ட பல தொழில்களையும் உப்பை அடிப்படையாகக் கொண்ட பல தொழில்களையும் பொதுத்துறை யிலும் தனியார் துறையிலும் துவக்குவதற்கான வாய்ப்புக் கூறுகளை மதிப்பிட மாநில அரசு ஏற்கெனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இம்மாநிலத்தில் புதிய தொழில்களைத் துவக்குவது குறித்து வாய்ப்புகள் பற்றி இரண்டு ஆய்வுகளை நடத்த "எஞ்ஜீனியர்ஸ் லிமிடெட் நிறுவனத்தை" அரசு நியமித்துள்ளது. அவர்களது அறிக்கைகள் பெறப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. சென்னை எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலையைச் சுற்றிலும், "பெட்ரோ கெமிகல் கூட்டுத் தொகுதி" ஒன்றை அமைப்பதற்கென சுமார் 1,700 எக்கர் நிலங்களை அரசு ஏற்கெனவே கையகப்படுத்தியுள்ளது. சென்னை எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலையிலிருந்து மூலப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு, ட்ரான்ஸ்பார்மர் எண்ணெய், மசகு எண்ணெய், வொயிட் ஆயில் முதலியன, கருப்பு கார்பன், நைலான் டயர் கார்டு, நைலான் நூல், மருந்து இரசாயனப் பொருள்கள், ரப்பர் இரசாயனப் பொருள்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கென ஒரு சில தொழிற் பிரிவுகள் மணலி பகுதியில் நிறுவப்பட்டு வருகின்றன.

ரூ 1 கோடி மூலதனத்தை உடையவையும், மூலதனத்தில் மதிப்பில் 10 சத வீதத்திற்கு மேர்படாமல் அன்னியச் செலாவணி தேவைப்படுகிறவை யுமான தொழிற் பிரிவுகளுக்கும், அன்னியச் செலாவணி தேவைப்படா விடத்து ரூ. 5 கோடி வரையில் மூலதனம் கொண்டுள்ள தொழில் பிரிவுகளுக்கும் தாராளமாக உரிமங்கள் வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது. உரிமம் வழங்கும் காரியங்களுக்காக முதலீடு குறித்த மேல் வரம்பு இதுவரை ரூ. 25 லட்சமாக இருந்தது. கொள்கை முடிவில் முக்கிய மாறுதல் ஏற்பட்டுள்ளது. மந்த நிலை நீங்கியுள்ளது. உள் ளமைப்பு வசதிகள் கிடைக்கின்றன. தமிழ் நாட்டில் தொழில் துறையில் சுமூகமான ஒரு சூழ்நிலை நிலவுகிறது. தொழில் வளர்ச்சிக்காக இந்த அரசு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இத்தகைய தொடர் சூழ்நிலையில் தமிழ் நாட்டில் தொழில்கள் விரைவாக மேற் கொண்டும் வளர்ச்சியடையும் என்பது திண்ணம்.



## இணைப்பு 1

### 1969-ம் ஆண்டில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் செயல்பட்ட விவரங்கள்

| | தொடர் எண்ணும், கூட்டுறவு ஆலைகளின் பெயர்கள். | உரிமம் அளிக்கப்பட்ட திறன் அளவு (கதிர்கள்). | நிறுவனத் திறனளவு கதிர்கள். | 1969-ஆம் ஆண்டில் ஒரு நாளில் முறை மாற்று பணி ஒன்றில் இயங்கிய கதிர்களின் சராசரி எண்ணிக்கை. | 1969-ஆம் ஆண்டில் வேலைசெய்த நாட்களின் எண்ணிக்கை. | 1969-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட நூலின் மொத்த அளவு. | 1969-ஆம் ஆண்டில் விற்பனை செய்த நூலின் அளவு. | 1969-ஆம் ஆண்டில் விற்பனை செய்த நூலின் மதிப்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலைபேட்டை. | | | | | | | |
| | " எ " பிரிவு .. .. | 17,600 | 17,600 | 15,984 | 317 | 12,27,223 | 11,99,194 | 92,82,239 |
| | " பி " பிரிவு .. .. | 12,096 | 12,096 | 11,882 | 317 | 3,16,302 | 3,08,811 | 48,24,105 |
| 2 | ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை, ஸ்ரீவில்லி புத்தூர். | 25,088 | 12,544 | 11,601 | 308 | 5,94,761 | 6,46,858 | 85,09,856 |
| 3 | திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை, நாசரத். | 25,200 | 16,400 | 12.547 | 300 | 7,46,235 | 7,24,377 | 62,50,117 |
| 4 | சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை, சேலம். | 14,080 | 14,080 | 12,845 | 306 | 4,09,986 | 4,43,583 | 51,77,727 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை, மேலூர். | 12,420 | 12,420 | 10,603 | 304 | 12,92,990 | 11,08,538 | 84,55,661 |
| 6 கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, தாராபுரம். | 12,420 | 12,420 | 10,962 | 334 | 14,58,269 | 14,42,766 | 1,04,02,699 |
| 7 திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, கரூர். | 12,000 | 12,000 | 11,238 | 327 | 12,23,975 | 11,47,028 | 81,14,418 |
| 8 கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, ஆரல்வாய்மொழி. | 12,000 | 12,000 | 10,807 | 321 | 14,99,599 | 12,69,225 | 85,61,374 |
| 9 காஞ்சீபுரம் காமாட்சியம்மன் நூற்பு ஆலை, காஞ்சீபுரம். | 13,680 | 13,680 | 12,036 | 310 | 3,53,964 | 3,36,868 | 38,96,575 |
| 10 தென் ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, திண்டிவனம். | 12,096 | 12,096 | 10,676 | 309 | 3,57,092 | 3,63,218 | 37,95,750 |
| 11 வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, வேலூர். | 13,824 | 13,824 | 12,183 | 353 | 6,34,564 | 6,11,201 | 68,78,538 |
| 12 தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, மணல்மேடு. | 12,096 | 12,096 | 11,098 | 349 | 4,55,237 | 4,43,355 | 57,87,097 |
| | 1,94,600 | 1,73,256 | 1,54,462 | | 1.0570,197 | 1,0045,022 | 8,99,36,156 |



## இணைப்பு II

**1968-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ஆம் நாள் முதல் 1969-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் வரையுள்ள கால அளவில் ஏழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் செயலாற்றியதைக் குறித்த விவரங்கள்.**

| தொடர் எண்ணும், சர்க்கரை ஆலையின் இருப்பிடமும். (1) | உரிமம் அளிக்கப்பட்ட திறனளவு நாள் ஒன்றுக்கு (மெ. டன்). (2) | கரும்பு பிழியும் கால அளவு கூட்டுறவு நாட்களில் கரும்பு பிழியும் நாட்கள் எண்ணிக்கை. / கரும்பு பிழியும் நாட்கள். (3) | பிழிந்த கரும்பின் மொத்த அளவு (மெ. டன்.) (4) | உற்பத்தி செய்த சர்க்கரையின் மொத்த அளவு (மெ. டன்). (5) | மதிப்பு ரூபாயில். (6) | இடைத்த சர்க்கரை சதவீதம். (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, வடபுதுப்பட்டு. | 1,250 | 223/206 | 1,92,242·475 | 16,284·000 | 2,40,49,600·00 | 8·47 |
| 2 மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, படாளம். | 1,000 | 215/204 | 1,88,745·000 | 14,628·000 | 2,14,44,209·00 | 7·75 |
| 3 கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மூங்கில் துறைப்பட்டு. | 1,250 | 245/232 | 2,15,705·606 | 19,361·800 | 2,82,56,610·92 | 8·97 |
| 4 அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, கிருஷ்ணாபுரம். | 1,000 | 194/167 | 1,49,351·740 | 11,156·000 | 1,26,46,372·00 | 7·48 |
| 5 சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மோகனூர். | 1,000 | 308/263 | 2,93,254·455 | 26,115·500 | 4,49,36,000·00 | 9·01 |
| 6 தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, அலங்காநல்லூர். | 1,000 | 285/219 | 2,02,843·000 | 14,766·500 | 2,34,86,301·37 | 7·50 |
| 7 தருமபுரி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, தருமபுரி. | இந்த ஆலை இன்னும் அமைக்கும் நிலையிலுள்ளது. | | | | | |
| மொத்தம் .. | 7,750 | 1470/1291 | 12,42,142·276 | 1,02,311·800 | 15,48,19,093·29 | சராசரி 8·20 |

# இணைப்பு III

1951ஆம் ஆண்டு தொழில் (வளர்ச்சி, முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் 1969-ம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட உரிமைகளின் பட்டியல்.

| நிறுவனத்தின் பெயரும், முழு முகவரியும் (அமைப்பிடம்). | உற்பத்தி செய்யும் பொருள்களும், திறனளவும் (உரிமத்தின் வகை என்.யு./எஸ்.இ./என்.பி./சி.ஒ.பி. முறைப்பணி). | உரிம எண் தேதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 பின்னி கம்பெனி, அஞ்சல் பெட்டி எண் 1111, மீனம்பாக்கம், சென்னை-61 (மீனம்பாக்கம்). | அரிசி ஆலை இயந்திரம் சாபேட் அரிசி ஆலைப் பிரிவுகளின் திறனளவு (மணி ஒன்றுக்கு 1 டன், 2 டன், 4 டன்) (என்.எ.) ரூ. 240 லட்சம் மதிப்புள்ள 240 எண்கள். | 2/8/பி-3/10/69 — எம். சி. ஐ., 1969-ம் வருடம் ஜனவரி மாதம் 10-ம் தேதி. |
| 2 சங்கர சுப்பையா கம்பெனி, ராஜபாளையம் (இராமநாதபுரம் மாவட்டம்). | மின் விசைத் தறியால் நெய்யப்பட்ட பருத்தித் துணி – ஆண்டொன்றுக்கு 3 முறை மாற்றுப் பணியின் அடிப்படையில் மின்விசைத் தறியால் 190,000 மீட்டர் பருத்தித் துணி உற்பத்தி செய்வதற்காக 40 மின் விசைத் தறிகள். | உ/23/1 (3)—டெக்ஸ் (சி)/68, நாள் 22-1-1969. |
| 3 சுந்தரம் ஃபேஸனர்ஸ் (தனியார்) நிறுவனம், 37, மலைச் சாலை, சென்னை (அம்பத்தூர்). | அதிக இழு சக்தியுள்ள முளை ஆணிகள், மரைகள் ஆகியவை ஆண்டொன்றுக்கு 1,990 டன் திருகு மரையாணி அமைப்பு, குழி-தலைத் திருகு மரையாணி ஆண்டொன்றுக்கு 400 டன் (இறுக்கு ஆணிகள் ஆண்டொன்றுக்கு 10 டன்) (என் 44). | 2/1 (எ)/7 (1) எல்.ஈ. 2 (பி)/69 நாள் 14-2-1969. |
| 4 சென்னை ரப்பர் தொழிற்சாலை, சென்னை "தன் கட்டிடம்", 175/1, மலைச் சாலை, சென்னை-2 (திருவொற்றியூர்). | மோட்டார் வண்டிகள் டயர்கள், ட்யூப்கள் ஆண்டொன்றுக்கு 250,000 (எஸ்.இ.). | 2/30 (1)/19/69/21 (11), 27-8-1969. |
| 5 "ஸ்கின்ஸ் லெதர்ஸ்" (தனியார்) நிறுவனம் 13/72, பொன்னுரெங்கம் சாலை, ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர், கூடலூர் கிராமம், பெரியநாயக்கன்பாளையம். | கன்றின் தோல், ஆண்டொன்றுக்கு 8,75,000 சதுரஅடி தோல் மேலங்கிகள், காலணிகள் ஆண்டொன்றுக்கு 1,250,000 ; ஆண்டொன்றுக்கு 125,000 ஜோடிகள் (சி.ஒ.பி.). | எல்/31-7/21 (11), நாள் 26-8-1969. |



| | | |
|---|---|---|
| 6 இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் (அங்காடிக்கோட்டம்), 254/சி, டாக்டர் அன்னிபெஸன்ட் சாலை, பிரபா தேவி, பம்பாய்-25, டீ. டீ. (தண்டையார் பேட்டை.) | மோட்டார், தொழில் உயவெண்ணை ஆண்டொன்றுக்கு 1,70,000 (என்.யூ.). | L/2/(2) என்.டி. 68, எல்.சி. நாள் 25-9-1969. |
| 7 ஈஸ்வரன் அண்ட் சன்ஸ், பொறியியல் (தனியார்), நிறுவனம் 5–7, இரண்டாவது கடற்கரைச் சாலை, அஞ்சல் பெட்டி எண் 1912, சென்னை-1 (திருவொற்றியூர்-செங்கற்பட்டு மாவட்டம்). | "ஆயில் சர்க்கியூட்ஸ் பிரேக்கர்ஸ்" ஆண்டொன்றுக்கு 644 "ப்யூஸ் ஸ்விட்சஸ்" ஆண்டொன்றுக்கு 609. ஐசலேட்டர்ஸ் ஆண்டொன்றுக்கு 58, மின்விசை ஸ்வம்பிங்ஸ் ஆகியவை. (சி.ஒ.பி.). | L/5 (1)-154/இ.இ.ஐ./69, நாள் 8–10–1969. |
| 8 தமிழ்நாடு தோல் பதனிடு சாலை, 9, டேவிட்சன் தெரு, சென்னை-1, செம்பட்டூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | செம்மறியாடு வெள்ளாடு தோல்களைப் பதனிடுதல் 3 பிரிவுகளில் ஆண்டொன்றுக்கு 8,10,000 சி.ஒ.பி.). | L/31–0/69/2 தொழில் (11), 24–10–1969. |
| 9 மதுரை-திண்டுக்கல் தோல் வணிக சிண்டிகேட், 9, டேவிட்சன் தெரு, சென்னை-1, திம்மையூர்புரம் (திண்டுக்கல்-மதுரை மாவட்டம்). | பதனிட்ட வெள்ளாட்டு-செம்மறியாட்டுத் தோல், 4,42,000 (சி.ஒ.பி.). | L/31-11/69/2 தொழில் (11), நாள் 24–10–1969. |
| 10 ஈஸ்ட் இந்தியா தோல் பதனிடுக் கழகம், 9. டேவிட்சன் தெரு, சென்னை-1 (மாதவரம், செங்கற்பட்டு மாவட்டம்). | பதனிட்ட செம்மறியாட்டு வெள்ளாட்டுத் தோல் "எ", "பி" தோல் பதனிடுவதற்கு ஆண்டொன்றுக்கு 16,90,000 துண்டுகள். | L/31/12/69-2/ தொழில் (11)' நாள் 24–10–1969. |
| 11 இந்திய எண்ணெய் கம்பெனி, (விற்பனைப் பிரிவு,) 254-சி, டாக்டர் அன்னிபெஸன்ட் சாலை, பிரபா தேவி, பம்பாய்-25 (தண்டையார்பேட்டை, சென்னை). | 24-லி நிலக்கீல் தொட்டிகள் ஆண்டொன்றுக்கு 5,00,000 எண்ணிக்கை, 18லி, ஓப், ஏனைய தனிப் பீப்பாய்கள் ஆண்டொன்றுக்கு 10,00,000 எண்ணிக்கை (எஸ்.இ.). | L/1/எ/(7) (4)/எஸ். இ 2 (பி)/69, நாள் 31–10–1969. |
| 12 "டன்லப் இந்தியா" நிறுவனம், 57–பி, பிரீ ஸ்கூல் தெரு, கல்கத்தா-16 (அம்பத்தூர், செங்கற்பட்டு மாட்டம்). | மோட்டார் வண்டிகள் டயர்ஸ், ட்யூப்கள் ஆண்டொன்றுக்கு 2,50,000 (எஸ்.இ.). | L/30 (1)/23/69-2 ஐ/(11), நாள் 4–12–1969. |

## இணைப்பு IV.

### 1951-ம் ஆண்டுத் தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ் 1969-ம் ஆண்டில் பிறப்பித்த தேவை குறிப்பு கடிதங்கள் பட்டியல்.

| தொழிற்சாலை நிறுவனத்தின் பெயரும் அமைப்பிடமும். (1) | உற்பத்தியாகும் பொருள்களும் உற்பத்தித் திறனும். (2) | தேவைக்குறிப்புக் கடிதத்தின் எண்/நாள். (3) |
|---|---|---|
| 1 ஆரோஃபுட் நிறுவனம், அஞ்சற்பெட்டி எண் 50, பாண்டிச்சேரி-1 (ஆரோவில்). | பிஸ்கட்—ஆண்டுக்கு 3,000 டன்கள் (2 முறை) மாற்று அடிப்படையில். (N. A.) | 2 (16)/68-ல் LI (I) 20-2-1969. |
| 2 "ஆல்கலி அண்டு கெமிகல்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா" நிறுவனம், ஐ. சி. ஐ. இல்லம், 34, சௌரிங்கி, கல்கத்தா-16 (சென்னை). | ஸைமசோலின் பிரிப்டோன் (NU) .. .. | 1 (29)/68 CH II I 8-ச். 28-5-1969. |
| 3 அல்ட்ராமரைன் அண்டு பிக்மென்ட்ஸ் நிறுவனம் பாஸ்தோதா பவன் 5-வது மாடி, 117, க்வீன்ஸ் சாலை, பம்பாய்-1 (தமிழ் நாடு). | சிட்ரிக் அமிலம் ஆண்டுக்கு—3,000 டன்கள் (N.V.). | 1 (4)/68/LI (III) 18-4-1969 |
| 4 தமிழ் நாடு அரசுச் செயலாளர், தொழில், தொழிலாளர் மற்றும் வீட்டு வசதித் துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9. (கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, பிரம்மபுரம், வட ஆற்காடு மாவட்டம்). | சர்க்கரை, கரும்பு பிழியும் திறன் நாளொன்றுக்கு 1,250 டன்கள்—(N.U). | 25/(811) LC 66, 23-7-1969 |
| 5 தமிழ் நாடு அரசுச் செயலாளர் தொழில், தொழிலாளர் மற்றும் வீட்டு வசதித் துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9, (கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்). | சர்க்கரை-கரும்பு பிழியும் திறன்—நாளொன்றுக்கு 1,250 டன்கள்—(N.U.). | 25 (810) 66-LC. 23-7-1969. |



| | | |
|---|---|---|
| 6 திரு. கிருஷ்ண நாராயணன், 4, ரங்கநாதன் செட்டி சாலை, சென்னை-34. (தமிழ்நாடு.) | உயர் அழுத்தப் பாலிதீன் சாக்குகள் ஆண்டுக்கு 40 லட்சம் உயர் அழுத்த பி. யு. சி. சாக்குகள் ஆண்டுக்கு 18 டன்கள் பி. வி. சி. ஷீட்டுகள் ஆண்டுக்கு 600 டன்கள் (N.U.). | 11.8-69 ch. I 28-7-1969. |
| 7 எஸ்ஸெல்லாம் அண்ட் கம்பெனி, அருணா சர்க்கரை நிறுவனத்தின் நிர்வாக முகவர்கள், "நூன் பில்டிங்ஸ்" 175/1, மவுண்ட் சாலை, சென்னை. (பெண்ணாடம்.) | சர்க்கரை-கரும்பு பிழியும் திறன் நாள் ஒன்றுக்கு 1,250 டன்னிலிருந்து 2,000 டன்னுக்கு உயர்த்தப்பட்டது. (S.E.). | 25 (768) L.C./.65, 25-7-1969. |
| 8 திரு. ஆரூரான் சர்க்கரை நிறுவனம், எக்ஸ்பிரஸ் எஸ்டேட், மவுண்ட்சாலை, (வடபாதிமங்கலம்.) | சர்க்கரை-கரும்பு பிழியும் திறன் நாள் ஒன்றுக்கு 1,260 டன்னிலிருந்து 2,000 டன்னுக்கு உயர்த்தப்பட்டது. (S.E.). | 25 (420) L.C./65, 28-7-1969. |
| 9 மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம், படாளம், செங்கல்பட்டு மாவட்டம் (படாளம்). | சர்க்கரை-கரும்பு பிழியும் திறன் நாள் ஒன்றுக்கு 1,000 டன்னிலிருந்து 1,500 டன்னுக்கு உயர்த்தப்பட்டது. (S.E.) | 25 (775) L.C./63, 31-7-1969. |
| 10 "தி டெக்கான் சுகர் அண்ட் அப்காரி கம்பெனி நிறுவனம், நிர்வாக முகவர்கள், பாரி அண்ட் கம்பெனி நிறுவனம், அஞ்சல் பெட்டி எண். 12, சென்னை-1, (புகலூர்.) | சர்க்கரை-கரும்பு பிழியும் திறன் நாள் ஒன்றுக்கு 1,000 டன்னிலிருந்து 1,500 டன்னுக்கு உயர்த்தப்பட்டது. (S.E.). | 25 (762) L.C./63, 31-7-1969. |
| 11 காவிரி சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் நிறுவனம், செயலாளர் மற்றும் பொருளாளர்கள், பாரி அண்ட் கம்பெனி நிறுவனம், அஞ்சல் பெட்டி எண். 12, சென்னை-1 (பேட்டைவாய்த்தலை). | சர்க்கரை-கரும்பு பிழியும் திறன் நாள் ஒன்றுக்கு 1,900 டன்னிலிருந்து 1,500 டன்னுக்கு உயர்த்தப்பட்டது. (S.E.). | 25 (764) L.C./65, 1-8-1969. |
| 12 தென் இந்தியா உருக்கு மற்றும் சர்க்கரை நிறுவனம், 99, அண்ணாபிள்ளைத் தெரு, சென்னை-1. (முண்டியம்பாக்கம், தெ. ஆ. மாவட்டம்.) | சர்க்கரை-கரும்பு பிழியும் திறன் நாள் ஒன்றுக்கு 1,250 டன்னிலிருந்து 1,500 டன்னுக்கு உயர்த்தப்பட்டது. (S.E.). | 25 (761) L.C./65, 8-8-1969. |

| | | | |
|---|---|---|---|
| 13 | நான்கோ ரப்பர் அண்ட் பிளாஸ்டிக்ஸ் நிறுவனம், அஞ்சல் பெட்டி எண் 1661, ஏ.டி.டி. குடியிருப்பு, கோயம்புத்தூர், (கோயம்புத்தூர்). | ரப்பர் பரப்ன் கச்சைகள்—ஆண்டுக்கு 45,000 மீட்டர்கள் நீளம் (S.E.). | 30 (A)/68- Ind. (II), 11-8-1969 |
| 14 | எல். ஜி. வரதராஜுலு, இந்தியா இல்லம் திருச்சிச் சாலை, கோயம்புத்தூர். | பண்படுத்திய ரப்பர்—ஆண்டு ஒன்றுக்கு 2,500 மெட்ரிக் டன்கள் (N.A.). | 30 (8)/(69-L Ind. (II), 6-8-1969. |
| 15 | தி ஜெய்ப்பூர் சுகர் கம்பெனி நிறுவனம், 38, மவுண்ட் சாலை, சென்னை (தமிழ் நாடு). | மாவுப்பொருள்/குளுகோஸ்/டெக்ஸ் டரோஸ் நாளொன்றுக்கு 50 டன்கள் (N.U.). | 16 (1) 69/ LI (1), 28-8-1969. |
| 16 | இந்தியா பிஸ்டன்ஸ்-ரெப்கோ நிறுவனம், ஹாசூர் தோட்டம், செம்பியம், சென்னை-11. | சுழல் அரவை எந்திரம் (Crant shaft grinders) RG ) 8 மாதிரிகள் 1 அண்ட் 2.—ஆண்டொன்றுக்கு 15 எண்ணிக்கை. தானியங்கு நிலைமட்ட அரவை எந்திரம் (Automotive surface grinders) மாதிரிகள் RGC2/ RGC 2A- ஆண்டொன்றுக்கு 40 எண்ணிக்கை, துளையிடும் உருளை எந்திரங்கள்—மாதிரிகள் R—100 மற்றும் R—200 (எளிதில் எடுத்துச் செல்லக் கூடியன)—ஆண்டொன்றுக்கு 100 எண்ணிக்கை (N.A.). | 4-35/68- M.I, 8-9-1969. |
| 17 | ஈஸ்வரன் அண்ட் சன்ஸ் எஞ்சினியரிங் நிறுவனம், 5-7, 2-ம் லைன் பீச் அ. பெ. எண். 1912, சென்னை-1. | துறைந்த அழுத்த வார்ப்பு அமைப்பு மின்னோட்டத் தடைகள் 1,000 ஆம்பியர்கள் வரை அளவீடு ஆண்டு ஒன்றுக்கு 5,000 எண்ணிக்கை (N.A.) நிலைத்த மற்றும் சுழலும் மின்னியக்க எந்திரங்களுக்கு மின்னியக்க முத்திரைப்பொறிகள், ஆண்டுக்கு 2,000 டன்கள் வரை. | EEI 13 (1)/69, 8-10-1969. |
| 18 | தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் 150-A, மவுண்ட்சாலை, சென்னை-2 (தூத்துக்குடி). | உரத் தொழிற்சாலை (N.U.) .. .. .. | உரங்கள், 1/6(2)/69, 7-10-69. |
| 19 | அல்ட்ராமரைன் அண்ட் பிக்மெண்ட்ஸ் நிறுவனம், பால்தோதஸ் பவன், 5-ஆம் மாடி 117, க்வீன்சாலை, பம்பாய்-1. (தமிழ்நாடு.) | இரசாயனக்கலவை முறையிற் செய்த மாசு நீக்கும் பொருள்கள், ஆண்டுக்கு 1,000 டன்கள். (N.U.). | 12(16)/68/C.M. II, 10-10-69 |
| 20 | எல். ஜி. பாலகிருஷ்ணன் அண்ட் பிரதர்ஸ் நிறுவனம், அ. பெ. எண். 254, இந்தியா இல்லம், திருச்சிச் சாலை, கோயம்புத்தூர்-1. | குளிர்வித்த, உருட்டு உருக்குப் பாளங்கள், (M.S. தரங்கள், உலோகக் கூட்டுத்தரங்கள், Deep Drawing தன்மைத் தரங்கள், ஆண்டுக்கு 6,000 டன்கள். (N.U.). | 1A (7) (1979)L.C./68 8-12-69. |
| 21 | ஈஸ்வரன் அண்ட் சன்ஸ் எஞ்சினியர்ஸ் நிறுவனம், அ. பெ. எண். 1912, சென்னை-1. | காற்றுமின்னோட்டத் தடைகள்—0·800 ஆம்பியர்கள், 900 எண்ணிக்கை, காற்று மின்னோட்டத் தடைகள்—4,000 ஆம்பியர்கள் 300 எண்ணிக்கை. (N.A.). | AI-13 (1)69, 24—12—1969 |
| 22 | எஸ்.எஸ்.எம். பினிசிங் சென்டர் : குமாரபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். | 1. துணி வெளுப்பாக்குதல்—12,00,000 கிலோ. 2. துணிக்குப் பளபளப்பும் உறுதியும் ஏற்றுதல்—12,00,000 கிலோ. 3. துணி இறுதிக் கட்டவேலை (Cloth finishing)—12,00,000 கிலோ. 4. துணிக்குச் சாயம் தோய்த்தல்—3,50,000 கிலோ. 5 துணியில் அச்சிடுதல்—36,00,000 மீட்டர்கள். (N.A.). | 10 (42) Tex. (H)//66, dated 18-11-1969. |

என். யு. புதிய தொழில்.
என். ஏ. புதிய பொருள்.
எஸ். இ. விரிவாக்கம்.

## இணைப்பு V.

1969-ம் ஆண்டில் தொழில் நுட்ப வளர்ச்சித் தலைமை இயகுநரால் பதிவு செய்யப்பட்ட நடுத்தரத் தொழிற்சாலைகளின் பட்டியல்.

| | தொழிற்சாலை நிறுவனத்தின் பெயரும் அமைந்துள்ள இடமும். (1) | உற்பத்தியாகும் பொருளும், ஆண்டு உற்பத்தித் திறனும். (2) | பதிவு எண்/நாள். (3) |
|---|---|---|---|
| 1 | திரு. இந்துஸ்தான் லீவர் நிறுவனம், 165—68, பின்குடாச் சீரமைப்புப் பகுதி, பம்பாய்—(திருச்சிராப்பள்ளி). | கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு உணவு—10,000 டன்கள். | DGT/R 565/C 29 (ii) S/16/69 |
| 2 | சாஃப்ட் பீவரேஜஸ் நிறுவனம், விளாங்குடி பரவை அஞ்சல், மதுரை. | 3,45·60 லட்சம் சீசாக்கள் .. .. .. | DGTD/R/569-26 (ii) S/16/69 |
| 3 | திரு. எஸ். ஜி. பாலகிருஷ்ணன் மற்றும் சகோதரர்கள்—நிறுவனம், கிருஷ்ணராயபுரம், சாலை, கணபதி அஞ்சல், கோயம்புத்தூர்-6. | பண்படுத்திய ரப்பர் 1,200 டன்கள் (அதாவது விரிவுபடுத்திய பின் பண்படுத்திய ரப்பர் உற்பத்தித் திறன் 1,800 டன்னாகும்.) | DGTD/R/569/C-24 (ii) S/16/69 |
| 4 | திரு. ஆட்கோ இந்தியா நிறுவனம், எல். அண்டு டி. அண்டு இல்லம், டவுகால் சாலை, பல்லார்ட் எஸ்டேட், பம்பாய்-1 (சென்னை). | உலையில் அடித்து அமைக்கப்பெற்ற, மற்றும் வட்டக்கல் வடிவுடைய, துருப்பிடிக்காத மற்றும் கரிய உருக்கு இவற்றால் அமைந்த திருகு அடைப்பான்கள் (gate valves) —9,000 எண்ணிக்கை. | DGTD/R/613/E 13 (iii) S/30/69 |



## இணைப்பு VI.

1969-ஆம் ஆண்டில் இந்திய அரசால் ஏற்பளிக்கப்பட்டு, வெளிநாட்டுத் தொழிலுத்தியுடன் ஒத்துழைப்புடன் தொடங்கிய நிறுவனங்களின் பட்டியல்.

(F என்பது நிதியில் பங்கு கொண்டுள்ளதையும் குறிப்பிடுகிறது.)

| | தொடர் எண்ணும் இந்திய நிறுவனத்தின் பெயரும். (1) | ஒத்துழைப்பு தரும் வெளிநாட்டு நிறுவனத்தின் பெயர். (2) | தயாரிக்கப்படும் பொருள்கள். (3) |
|---|---|---|---|
| 1 | திரு. கே.டி.பி. மேனன், கீதா மாளிகை, குரோம்பேட்டை, சென்னை 44. | திரு. டோஷிபா நிறுவனம், ஜப்பான் .. | மின் கம்பிக் காப்புப் பொருள் E"இ" வகை. |
| 2 | திரு. இன்தோ ஐஸ்லான்டிக் மீனள நிறுவனம், தூத்துக்குடி. | திரு. ஐஸ்லாந்து வெளிநாட்டு மீனளநிறுவனம், ஐஸ்லாந்து | ஆழ்கடல் மீன் பிடிப்பு, மீன் கடல் இருல் மீன் பக்குவ படுத்துதல்|| |
| 3 | திரு. சிம்சன் அண்டு நிறுவனம், அஞ்சல் பெட்டி, 303, 202- 203, மவுண்டு சாலை, சென்னை-2. | திரு. லேன்டால் பொறியியல் .. .. இங்கிலாந்து. | "குரோமார்டு லைனர் "கள், ஸ்லீவ்வால்வ்லைனர்." |
| 4 | திரு. வரோமெமைன் இண்டஸ்டிரீஸ் நிறுவனம், 19, கணபதி நகர், சென்னை-18. | திரு. வி.இ.பி. ஸ்போர்ட் பூட், குரோஸ் சொனவ், மேற்கு ஜெர்மனி. | காற்றூட்டப்பட்ட மிதவைகள். |
| 5 | திரு. கே. டி.பி. மேனன், கீதா மாளிகை, குரோம்பேட்டை, சென்னை-44 . | திரு. டோகுஷீ தாள் தயாரிப்பு நிறுவனம், ஜப்பான். | "EEG" ஆசிலோஸ்கோப்புகள்" போன்ற இதயத் துடிப்புகளைப் பதிவு செய்யும் கருவிகளுக்காக பதிவுத் தாள்கள். |

| | | | |
|---|---|---|---|
| 6 | திரு. எ. சுப்பிரமணியன், சீனிவாசன் நிறுவனத்தின் பங்குதாரர், தோல் பதனிடுவோர்—ஏற்றுமதி செய்வோர்கள், 10, சைதன்ஹாம்ஸ் சாலை, சென்னை. | திரு. ஜி. பியாக்கோனி ஏற்றுமதி நிறுவனம், இத்தாலி. | தோல் பூட்சுகள், செருப்புகள் |
| 7 | திரு. பெஸ்ட் அண்டு கம்பெனி நிறுவனம்,13/15, வடக்கு கடற்கரை சாலை, சென்னை-2. | ஹிடாச்சி நிறுவனம், ஜப்பான் .. .. | கடுவிசை ஏற்றப் பொறிகள் (Lifts), "லிப்டுகள்", |



## இணைப்பு VII

### 1969-ல் உற்பத்தி தொடங்கப்பட்ட பெருந்தொழில் நிறுவனங்களின் பட்டியல்.

| தொடர் எண். (1) | நிறுவனத்தின் பெயர். (2) | தயாரிக்கப்படும் பொருட்களும் திறனளவும். (3) | உரிமம் எண்ணும் தேதியும். (4) | யந்திரம் நிறுவிய தேதியும், உற்பத்தி தொடங்கிய தேதியும். (5) |
|---|---|---|---|---|
| 1 | பிரிமியர் பெர்டிலைசர்ஸ், 151, மவுண்டு சாலை, அஞ்சல் பெட்டி எண் 2712, சென்னை-2 (கடலூர்). | செயற்கைக் கிரையோலைட் (cryolite) ஆண்டொன்றுக்கு 540 டன். | L/19 (1) (97) என்.எ./சி.எச். (1)/63, நாள் 7-9-1963 (என்.எ.). | தேவையான கருவிகள் அனைத்தும் நிறுவப்பட்டு, தொழில் நிறுவனம் வேலை தொடங்கியது. |
| 2 | மெட்ராஸ் இன்டஸ்டிரியல் லைனிங் நிறுவனம் 42/19, ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை-31 (அம்பத்தூர்). | கருவிகளுக்கு ரப்பர் உறையிடுதல் ஆண்டொன்றுக்கு 20,000 சதுர மீட்டர். | L/30 (4)/39/67—இந்தியா II-நாள் 24-4-1967 (என்.யு.). | 1-10-1969. |
| 3 | தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனம், அஞ்சல் பெட்டி எண் 1396, குதிரைப் பந்தய மைதானம், கோயம்புத்தூர்-18 (சிறுமுகை). | கரையும் கூழ் ஆண்டொன்றுக்கு 21,600 டன். | L/24/5/11/61—சி.எச். (I), நாள் 25-5-1961 (என்.யு.). | 21-12-1969. |
| 4 | ஆரோபுட் (தனியார்) நிறுவனம், ஆரோவில் அஞ்சல் புதுச்சேரி (வழி) (ஆரோவில்). | கோதுமைப் பொருட்கள் ஆண்டொன்றுக்கு 30,000 டன். | L/27 (4) 16/68 எல். ஐ. (I) நாள் 21-12-1966 (என்.யு.). | டிசம்பர் 1969. |
| 5 | மைகோ பார்ம் கெமிகல்ஸ், 6, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1 (மேட்டூர் அணை). | பி. எச். சி. (தொழில் நுட்பம்) ஆண்டொன்றுக்கு 3,000 டன். | L/19 (11) /40/ எ. சி. ஐ. நாள் 29-11-1966 (என்.யு.). | ஜூன் 1969. |

## இணைப்பு VII—தொடர்ச்சி.

### 1969-ல் உற்பத்தி தொடங்கப்பட்ட பெருந்தொழில் நிறுவனங்களின் பட்டியல்.

| தொடர் எண். | நிறுவனத்தின் பெயர். | தயாரிக்கப்படும் பொருட்களும் திறனளவும். | உரிமம் எண்ணும் தேதியும். | யந்திரம் நிறுவிய தேதியும், உற்பத்தி தொடங்கிய தேதியும். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 6 | சேஷசாயி தாள், அட்டைத் தாள் நிறுவனம், பள்ளிப் பாளையம், சேலம் மாவட்டம் (பள்ளிப்பாளையம்). | "இராப்டு" தாள்— அட்டைகள் ஆண்டொன்றுக்கு டன். 8,600 | எண் LI (III)—17 (150) / 65 நாள் 29-11-1966. (எஸ்.இ.) | மார்ச் 1969. |
| 7 | சென்னை எண்ணெய் தூய்மை நிறுவனம், அஞ்சல் பெட்டி எண் 454, மவுண்டு சாலை, சென்னை-6 (மணலி). | ஆண்டொன்றுக்கு டன்கள்<br>எல்.பி.ஜி. 1,666<br>காசோலின் 9,416<br>நாப்தா 25,000<br>உயர்தர மண்ணெண்ணெய். 33,666<br>உயர்தர டீசல் எண்ணெய். 42,833<br>உயர்வு எண்ணெய் 16,666<br>எரி எண்ணெய் 2,500<br>ஆஸ்பால்ட் .. 6,666<br>கந்தகம் .. 1,166 | L/2 (2)/ என் 17/66 நாள் 21-6-1966. (என். வ.) | ஏப்ரல் 1969. |
| 8 | "இன்ட்ராக்" மருந்து தயாரிப்பகம், அம்பத்தூர். | பென்சிலினும் ஸ்டெரப்டோமைசினும். | L/22/என் 7/ 59 நாள், 6-4-1959. (என். வ.) | ஏப்ரல் 1969. |

என். யு. புதிய தொழில்
என். வ. புதிய பொருள்
எஸ். இ. விரிவாக்கம்.



## இணைப்பு VIII

### 1969-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தாதுப்பொருள்கள் ஆய்வு, நிலநீர் ஆய்வுப் பணிகள் பட்டியல்.

| | | |
|---|---|---|
| 1 | மதுரை மாவட்டம், ஜோஷியார் ஆலங்குளம் அருகில் காரீயம் படிந்துள்ளதாவென (Graphite) விரிவாக ஆய்தல். | நடைபெற்று வருகிறது. |
| 2 | சிவகங்கையைச் சுற்றி காரீயம் உள்ளதாவென (Graphite) விரிவாக ஆய்தல். | ஷெ |
| 3 | திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டத்தில் உள்ள சீரனூர் அருகில் "சிலிமெனைட்" (Silimanite) படிந்துள்ளதாவென விரிவாக ஆய்தல். | முடிந்துவிட்டது. அறிக்கை பணிந்தனுப்பப்பட்டுள்ளது. மேலும், அருகில் உள்ள பகுதிகளில் முறையான பணி நடந்து வருகின்றது. |
| 4 | கோயம்புத்தூர் மாவட்டம் எட்டிமடை அருகில் சுண்ணும்புப் படிகங்கள் படிந்துள்ளதாவென விரிவாக ஆய்தல். | ஏப்ரல் திங்களில் முடிந்துவிட்டது. அறிக்கை பணிந்தனுப்பட்டுள்ளது. |
| 5 | தென்னுர்க்காடு மாவட்டம், விருத்தாச்சலம் வட்டத்தில் களிமண் படிந்துள்ளதாவென விரிவாக ஆய்தல். | |
| 6 | திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டியிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சாத்தூர் வட்டத்திலும் களிக்கல் உள்ளதாவென விரிவாக ஆய்தல். | பிப்ரவரியில் முடிவுற்றது. அறிக்கை பணிந்தனுப்பப்பட்டுள்ளது. |
| 7 | திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் உள்ள தச்சன்குறிச்சி சுண்ணும்புப் படிகங்கள் படிந்துள்ளனவாயென விரிவாக ஆய்தல். | அக்டோபரில் முடிவுற்றது அறிக்கை பணிந்தனுப்பப்பட்டுள்ளது. |
| 8 | திருநெல்வேலி மாவட்டம், திசையன் விளை அருகில் களிமண், கிளிஞ்சல் சுண்ணும்புக்கல் ஆகியவை உள்ளதாவென ஆய்தல். | நடைபெற்று வருகிறது. |
| 9 | மதுரை மாவட்டம், போடிநாய்க்கனூரில் "அபடைட்" (apatite) படிந்து உள்ளதாவென ஆய்தல். | நவம்பரில் முற்றுப்பெற்றது. அறிக்கை தயாரிக்கப்படுகிறது. |
| 10 | தென்னுர்க்காடு மாவட்டம் மரக்காணம் அருகில் கிளிஞ்சல் சுண்ணும்பு உள்ளதாவென ஆய்தல். | நடைபெற்று வருகிறது. |
| 11 | திருச்சி மாவட்டம், மொருப்பட்டி கிராமத்தை சுற்றி கந்தகக் கனிகள் உள்ளதாவென ஆய்தல். | |
| 12 | திருநெல்வேலி மாவட்டம், பூவாணி, மணியாச்சியின் அருகில் காரீயம் படிந்துள்ளதென அறிந்ததன்பேரில் ஆய்தல். | முற்றுப்பெற்றது. அறிக்கை பணிந்தனுப்பப்பட்டுள்ளது. |

## இணைப்பு VIII—தொடர்ச்சி

### 1969-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தாதுப்பொருள்கள் ஆய்வு, நிலநீர் ஆய்வுப் பணிகள் பட்டியல்—தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 13 | தென் ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில் உள்ள மல்லியப்பட்டு அருகில் மணிக்கற்களும், மணிக்கல் போன்ற கற்களும் படிந்துள்ளனவாக அறிந்ததன் பேரில் ஆய்தல். | முற்றுப்பெற்றது. அறி கை பணிந்து அனுப்பட் பட்டுள்ளது. |
| 14 | கன்னியாகுமரி மாவட்டத்தின் கருங்கல் ஆறில் மைகா (Mica) படிந்துள்ளதென அறிந்ததன் பேரில் ஆய்தல். | ஷை |
| 15 | தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி கிராமத்தின் சிறு குன்றுகளில் "மைகா" படிந்துள்ளதென அறிந்ததன் பேரில் ஆய்தல். | ஷை |
| 16 | ஒகேனக்கலில் உள்ள பெண்ணுகரத்தைச் சுற்றி கனிவள ஆய்வு. | நடைபெற்று வருகிறது |
| 17 | சேலம் மாவட்டம், நாமக்கல் அருகில் உள்ள தொழிற்பேட்டை கட்டுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள நிலங்களில் ஊற்று நீர் ஆய்வு. | |
| 18 | கோயம்புத்தூர் மாவட்டம் தாளவாடி அருகில் உள்ள பெருமளவில் பட்டுப் புழு வளர்க்கும் பண்ணையில் கிணறுகள் வெட்டுவதற்காக தகுந்த நிலங்களைத் தெரிந்தெடுப்பதற்கான ஊற்று நீர் ஆய்வு. | |
| 19 | சென்னைக்கருகில் நந்தம்பாக்கத்தில் உள்ள அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு நிலையத்திற்கு அதிகமான அளவில் நீர் வழங்குவதற்கான தகுதியான இடங்களைக் கருத்துரைப்பதற்கு ஊற்று நீர் வள ஆய்வு. | |
| 20 | அடையாறு, சென்னை-20-ல் உள்ள மத்திய தொழில் நுட்ப நிறுவனத்தில் உள்ள நீர் வளத்தை அறுதியிடுவதற்காக ஊற்று நீர் வள ஆய்வு. | |
| 21 | வேளாண்மை மனு கடனுதவிக் கழகத்திற்கு சென்னை, ஊற்று நீர் வள மேம்பாட்டுத் திட்டத்தின் தொடர்பாக, தர்மபுரியின் பல பகுதிகளில், [ஊற்று நீர் வள ஆய்வு. | |
| 22 | வட ஆர்க்காடு மாவட்டம், வாலாஜா பேட்டையில் உள்ள சோடியம் டைகுரோமைட் தொழிற்சாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஊற்று நீர் வள ஆய்வு. | |





## சிறு தொழில்கள்.

இம்மாநிலத்தில், சிறு தொழில்கள் வளர்ச்சிக்குத் தேவையான அடித்தளத்தை உருவாக்கும் தலையாய நோக்கத்துடன், முதல் மூன்று திட்டக்காலங்களில் துறை—தொழில் பிரிவுகள் பல, அரசினால் அமைக்க பட்டன. இந்தப் பிரிவுகள் பெரும்பாலானவற்றின் உற்பத்தி இடைவிடாமல் அதிகரித்து வந்துள்ளது. இந்தப் பிரிவுகளை முழுவதும் வணிக முறையில் நடத்தும் கருத்துடன், தொழில்-வாணிகத் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து 65 பிரிவுகளை தனியே பிரித்து சென்னை மாநில சிறு தொழில்கள் கழக நிறுவனம் என்ற தன்னாட்சி உரிமையுள்ள நிறுவனமொன்றை 10-9-1965 அன்று அரசு ஏற்படுத்தியது. துறையைக் சேர்ந்த எஞ்சிய சிறுதொழில் பிரிவுகள், பயிற்சிப் பிரிவுகளாகவும், பணிப் பிரிவுகளாகவும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இவை இயக்குநர் அலுவலகத்தினால் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் நாடு சிறுதொழில்கள் கழக நிறுவனம் 1965, டிசம்பர் 1-ம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது. இதன் பெயர் தற்போது "தமிழ்நாடு சிறு தொழில்கள் கழக நிறுவனம்" என்று மாற்றப்பட்டுள்ளது தற்போது 60 பிரிவுகள் இந்த நிறுவனத்தின் ஆளுகையில் உள்ளன.

தற்போது நிறுவனத்தின் கீழுள்ள பிரிவுகள் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்குதல், கைவினைஞர்களுக்குப் பயிற்சியளித்தல், நவீன முறைகளைக் கையாளுதல் முதலிய, வணிக நோக்கில்லாத காரியங்களுக்காக முதற்கண் ஏற்படுத்தப்பட்டன.

இதில் பாதிப்பிரிவுகள் முழுமைபெற்ற பொருள்களையும் தயாரிப்பதில்லை. வெளியிலிருந்து வரும் வேலைகளையே அவை முழுமையாக நம்பியுள்ளன. இந்த பிரிவுகள் முக்கியமாக பணி நிலையங்களாகவே செயல்படவேண்டும் என்ற கருத்துடன் தொடங்கப்பட்டமையால் இந்தப் பிரிவுகளின் மூலதன அமைப்புக்கும், அவை வணிக முறையில் செயல்படுவதற்கும் தொடர்பெதுவும் இல்லை.

1968-69-ம் ஆண்டின் பொருளாதார நிலையில் பொதுவாக வளர்ச்சிக்கான அறிகுறிகள் காணப்பட்டாலும், பொறியியல் தொழில் எதிர்ப்பார்த்த அளவுக்கு மீட்சிபெறவில்லை. இந்த நிறுவனம் பெரும்பாலும் பணி நிலையமாகவே செயல்பட்டு பொறியியல் துறையில் ஈடுபட்டிருப்பினும் உற்பத்தியைக் கணிசமான அளவில் பெருக்குவதில் அது வெற்றி கண்டது. 1967-68-ம் ஆண்டில் இந்த நிறுவனம் ரூ. 562 லட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்தது. கடந்த ஆண்டு உற்பத்தி மதிப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், உற்பத்தி மதிப்பு கடந்த ஆண்டைவிட ரூ. 64 லட்சம் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மூலப் பொருள்கள் கிடைப்பது அரிதாக இருந்ததால் குறிப்பாக இருப்புத்தகடுகள் கிடைப்பது அரிதாக இருந்ததால், உற்பத்தியை இன்னும் அதிகமாகப் பெருக்க முடியவில்லை. இந்த மூலப்பொருள்கள் கிடைத்திருப்பின் உற்பத்தியின் மதிப்பு மேலும் அதிகரித்திருக்கக்கூடும்.

1968-69-ம் ஆண்டில் விசாகப்பட்டினத்திலுள்ள இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம், சென்னைத் துறைமுகப் பொறுப்பாண்மைக் கழகம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றிலிருந்து கணிசமான அளவு இந்த நிறுவனத்திற்கு வேலைகிடைத்ததுடன், தனுஷ்கோடி அலையிடைக்கரையை மீண்டும் சீர் செய்வதற்காக மாநில நெடுஞ்சாலைத் துறையிடமிருந்தும் இதற்குக் கணிசமான அளவுக்கு வேலை கிடைத்தது. விசாகப்பட்டினத்திலும் ராமேஸ்வரத்திலும் இந்நிறுவனம் பட்டறைகளை அமைத்துப் பணிகளை நிறைவேற்றியது. இந்த நிறுவனம் விசாகப் பட்டினத்தில் திறமையாகத் தனது பணியை நிறைவேற்றியதன் காரணமாக இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம் இந்த நிறுவனத்திற்கு 790 டன் அளவுள்ள கட்டுமான வேலைகளை மேலும் அனுப்பியது. தனுஷ்கோடி அலைதாங்கியை மீண்டும் சீர்செய்யும்பணி கடுமையான அறைகூவலாக இருந்தாலும் இந்த நிறுவனம் உரிய காலத்தில் இப்பணியை நிறைவேற்றி முடித்தது.

உற்பத்தியிலும் விற்பனையிலும் ஏற்பட்ட விரைவுக்குக் காரணம் இப் பிரிவுகளில் முடங்கிக்கிடந்த திறனைத் திறம்படப் பயன்படுத்தத் திட்டமிட்டு முயன்றதேயாகும். இதன் விளைவாக, பொது நோக்குப் பொறியியல் பட்டறையில், உற்பத்தி மதிப்பு 1967–68-ல் ரூ. 56 லட்சமாக இருக்க, 1968–69-ல் ரூ. 76 லட்சமாக அதிகரித்தது. இத்தொகுதியில் உள்ள சில பிரிவுகளில் 60 முதல் 100 சத வீதம் வரையில்கூட உற்பத்தி அதிகரித்தது. பிளாக் பிளெயின் தகடுகள் கிடைக்காத காரணத்தினால் ஏனைய பணிக்களரிகளில் இவ்வாறு உற்பத்தியை அதிகரிப்பதற்கு இயலவில்லை.

புதிய பொருள்களின் உற்பத்தியை மேற்கொள்ளும் வகையில் இந் நிறுவனத்தின் தொழிற் பிரிவுகள் பலவகையாகத் திருப்பிவிடப்பட்டன. திருச்சிராப்பள்ளியிலுள்ள பண்ணைக்கருவிகள் பிரிவு டிராக்டர் தொடர் வண்டிகள் உற்பத்தியைத் திறம்பட மேற்கொண்டு வெற்றிகண்டது. இதன் மூலம் பெற்ற அனுபவத்தினால், இந்தப்பிரிவு டிராக்டர் டிரெய்லர் வண்டிகள் உற்பத்தி செய்வதை நிலைப்படுத்திக்கொள்ள முடிந்தது. வேளாண்மைத் துறையும் தனியாரும் கணிசமான அளவில் இந்த வகையான டிராக்டர் டிரெய்லர் வண்டிகளை உற்பத்தி செய்து தரும் படிக் கேட்ட தன்மேல் அவற்றின் தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

திண்டுக்கல்லிலுள்ள பூட்டு தயாரிக்கும் பிரிவு, பால்வழங்குவதற்கான நேர்த்தியான சாலைக்கடைகளைத் ( Kisoks ) தயாரித்து வழங்கியது. அத்தகைய கடைகள் பல உள்ளாட்சி மன்றங்களுக்குச் செய்து தரப் பட்டன. அதுபோலவே, ஏனைய பிரிவுகளும், நகராட்சிகளுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கடைகளைத் தயாரித்து வழங்கி வந்துள்ளது. பஞ்சாலைக் கமிஷனரிடம் உரிமம் பெற்று 56 அங்குல பாவுக்கட்டைகளுடன் கூடிய விசைத்தறிகளைத் தயாரிக்கும் பணியை இந்நிறுவனம் மேற் கொண்டுள்ளது. இப்பிரிவின் உரிமத் திறனளவை திங்களொன்றுக்கு 100 விசைத்தறிகளாக அதிகரிக்கும்படி பஞ்சாலை கமிஷனருக்கு தமிழ்நாடு அரசு பரிவுரை வழங்கியுள்ளது.

கிண்டியிலுள்ள கண்ணாடித் தொழிற்சாலையில் B.T. பாட்டில்கள் தயாரிக்கும் பணி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. திங்கள் ஒன்றுக்கு 20,000 பாட்டில்கள் வீதம் வழங்குவதற்காக ரூ. 2·16 லட்சம் மதிப்புள்ள பெரிய வேலை ஒன்று பெறப்பட்டு நிறைவேறி வருகிறது. திங்கள் ஒன்றுக்கு 20,000 பாட்டில்கள் வழங்குவதற்கான மற்றொரு வேலையும் பெறப்பட்டுள்ளது. பாட்டில்கள் உற்பத்தியை, திங்கள் ஒன்றுக்கு 40,000 ஆக உயர்த்தவும் அதே சமயம் விற்பனையாகாத பொருள்களின் உற்பத்தியைக் குறைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கிண்டியில், குறைந்த குதிரைத் திறனுள்ள மோட்டார்கள் தயாரிக்கும் பிரிவு, அவசரகால விளக்குகள் (Emergency lamps) புதிதாகத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. இத்தகைய விளக்குகளுக்கு நல்ல தேவை உள்ளது என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

தோல்பெட்டிகள், கைப்பைகள் முதலியவற்றை மட்டுமே தயாரித்து வந்த, மாதவரத்திலுள்ள தோல் தொழில் பொது வசதி நிலையம் டிரான்ஸிஸ்டர் உறைகளுக்கான பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்ற இயன்றுள்ளது. டிரான்ஸிஸ்டர் உறைகள், கருவிப் பெட்டிகள், கடிகாரப் பட்டைகள் ஆகியவற்றைத் தயாரித்து விற்பனை செய்வதற்கு ஏராளமாக வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிகிறது.

மட்பாண்டத் தொழிலில், மட்பாண்டங்களின் வண்ணம், வடிவமைப்பு ஆகியவற்றின் தரம் மிகவும் மேம்பட்டுள்ளது. மட்பாண்டங்கள் உற்பத்தி நிலையாக அதிகரித்து வருகிறது. கழிவுப் பொருள் நீக்கத்துக்குரிய சாதனங்களின் உற்பத்தி இதுகாறும் கடுமையாகக் குறைக்கப்பட்டிருந்தது. இத்தொழில் இப்பொழுது புதிய வேகத்துடன் விரைந்து வளர்ந்து வருவதுடன் பல்வேறு அளவுகளில் புதிய வடிவமைப்புகளுடன் உற்பத்திப் பணி நிறைவேறிவருகிறது. தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேச மின் வாரியங் கள் ஏராளமான அளவில் மின்காப்புகள் தயாரித்து அனுப்புமாறு மற்றைய நிறுவனங்களின் போட்டியிருந்தும் இந்தப் பிரிவைக் கேட்டுள்ளன.



மின்சார வாரியம், விசாகப்பட்டினத்தில் கப்பல் கட்டும் இடம், மதுரை, அண்ணாமலை பல்கலைக்கழகங்கள், அமராவதியிலுள்ள சைனிக் பள்ளி, இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனம், பாரத் எலக்ட்ரானிக் நிறுவனம் முதலிய பல்வேறு நிறுவனங்களிடமிருந்து வேலை பெறுவதற் காக இந்த நிறுவனம் அவற்றுடன் தொடர்பு கொண்டது.

அதிகாரிகள் நிலையில் மும்முரமாகத் தொடர்பு கொண்டதன் விளைவாக மின்சார வாரியத்திடமிருந்து, மின் கம்பிச் சாதனங்களுக்காக ரூ. 33 லட்சம் மதிப்புள்ள வேலைகளை இந் நிறுவனம் பெற இயன்றது.

இந்த நிறுவனம், ஆவடியிலுள்ள கனரக வண்டிகள் தொழிற்சாலை யுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. அத்தொழிற்சாலை, அம்பத்தூரிலும், கிண்டியிலும் உள்ள அழுத்துப்பட்டறை, கருவி அறைப் பட்டறை, பொதுவேலை நிறைவுப் பட்டறை ஆகியவற்றிடம் ரூ. 10 லட்சம் மதிப்பிற்கு வேலைகள் அனுப்பியுள்ளது. இந்த ஒப்பந்தங்களின் முக்கியத்துவம் வேலைகளின் அளவை ஒட்டி அமையவில்லை. மாறாக, அவ்வேலைகள் தொடர்ந்து கிடைப்பதைத்தான் பொறுத்துள்ளது.

விற்பனையைப் பொறுத்தவரையில், மெருகிட்ட குழாய்களுக்கு ஏராள மான விற்பனையாளர்கள் ஏற்பட்டுள்ளனர். விண்ணமங்கலத்திலுள்ள தோல் பதனிடுதல்—நிறை செய்தல் பிரிவில் தயாரிக்கப்படும் தோல் பொருட்களுக்காகக் குறைந்த தரகு வீதங்களில் புதிய முகவர்கள் நியமிக்க பட்டுள்ளனர். இந்தப் பிரிவிலிருந்து பொருள்கள் அயல்நாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதுவரையில் இப்பிரிவு ரூ. 10 லட்சம் மதிப்புள்ள ஏற்றுமதி தோற்பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளது. இந்தப் பிரிவின் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்குச் சிறந்த வாய்ப்புகள் உள்ளதாகத் தோன்றுகிறது. சென்னையில் வாணிகம் அதிகமாக நடைபெறும் பகுதியில் காட்சியறை-விற்பனை நிலையம் ஒன்று திறக்கபட்டுள்ளது. பொதுமக்கள் அறிவதற்கு இது உதவியுள்ளது.

இந்த நடவடிக்கைகள் நிறுவனத்தின் நிலையை வலுப்படுத்துவதுடன அது செயல்படுவதை மேலும் மேம்படுத்தும்.

இந்த நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகள் 1968–69-ம் ஆண்டில் மேலும் அதிகரித்துள்ளன. சம்பளங்கள், ஊதியங்கள் வழங்கியதால் ஏற்பட்ட செலவுகள் 1968–69-ல் ஆண்டில் மேலும் ரூ. 13·16 லட்சம் அதிகரித்தது. அவ்வாறு அதிகரித்ததற்குக் காரணம் பணியாளர் எண்ணிக்கையை அதிகரித்தது அல்ல. ஆனால் சம்பள வீதங்கள் உயர்த்தப்பட்டதும், கூடுதல் படிகள் முதலியவை வழங்கப்பட்டதுமே இதற்குக் காரணமாகும்.

கடந்த ஆண்டு உற்பத்தியிலும், விற்பனையிலும் ஏற்பட்ட அதிகரிப்பு கணிசமான அளவு இருந்த போதிலும் அது நிறுவனத்திற்கு ஆதாயம் தரும் வகையில் போதுமானதாக இல்லை. எனினும் நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பு குறைந்துள்ளது. முந்திய ஆண்டில் ரூ. 30·34 லட்சம் இழப்பு ஏற்பட்டிருக்க, கடந்த ஆண்டில் ஏற்பட்ட இழப்பு ரூ. 22·41 லட்சம் என்பது செயல்முறை பலன்களிலிருந்து தெரியவந்துள்ளது. தேய்மானத்திற்கு ரூ. 26·37 லட்சமும், அரசிடமிருந்து பெற்ற கடனுக் கான வட்டிக்காக ரூ. 29·87 லட்சமும் அளித்த பின்னர் இழப்புத்தொகை ரூ 22·41 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பல்வேறு பிரிவுகளில் 1968–69-ம் ஆண்டில் செய்த உற்பத்தியின் மதிப்பைப் காட்டும் விவர அறிக்கை ஒன்று VIII-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பப் பணியாளர்கள், ஏனைய பணியாளர்கள் தவிர, சுமார் 5,300 தொழிலாளர்களுக்கு கழகம் வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

1968–69-ம் ஆண்டில் திட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்காக அரசிட மிருந்து, ரூ. 30 லட்சம் கடன் பெறப்பட்டுள்ளது. 1969–70-ம் ஆண்டில் இதே நோக்கத்திற்காக ரூ. 11 லட்சம் நிதி உதவி அரசு அளித்துள்ளது. 1970–71-ம் ஆண்டுத் திட்ட வரைவில் ரூ. 25 லட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

தொழில்-வாணிகத் துறை இயக்குநர் அலுவலகத்தின்கீழ் தொடர்ந்து செயல்பட்டு வரும் சிறு தொழில் திட்டங்களில் தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள், பணிக் கழகம், மூலப்பொருள் கிடங்குகள், தொழில்நுட்பத் தகவல் பிரிவுகள், புள்ளிவிவரப் பிரிவு, பொதுக் குத்தகைப் பட்டறை முதலியவை அடங்கும்.

கிண்டியிலுள்ள பணிக்கழகமும், மதுரை, போத்தனூரில் உள்ள மூலப் பொருள் கிடங்குகளும், அரசுப்பிரிவுகளுக்கும், தனியார் துறையில் உள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கும் மூலப்பொருள்கள் வழங்குவதற்காகவே முக்கியமாக ஏற்படுத்தப்பட்டன. இவை, 1965 டிசம்பர் 1-ம் நாளன்று சென்னையிலுள்ள தமிழ்நாடு சிறு தொழில் கழகம் அமைக்கப்பட்ட பொழுது அதற்கு மாற்றப்பட்டு, 1967 ஜூன் 1-ம் நாள் முதல் தொழில் துறையின் பொறுப்புக்கு மீண்டும் மாற்றப்பட்டன. இரும்பு-உருக்கு மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த காலத்தில் அவ்வாறு கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட இரும்பு-உருக்குப் பொருள்களை வழங்குவதற்காக இந்தப் பிரிவுகள் பதிவுபெற்ற கிடங்குகளாகவும் செயலாற்றி வந்தன. 1967-ம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதி முதல் இரும்பு-உருக்குப் பொருள்கள் மீதுள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட போதிலும், சிலவகை இரும்பு-உருக்குப் பொருள்கள் போதிய அளவு கிடைக்காத நிலைமை இன்னும் நீடிப்பதால் அவற்றைத் தனிப்பட்ட சிறு தொழில் உரிமையாளர்களுக்கும் அரசுத் தொழில் பிரிவுகளுக்கும் வாங்கி வழங்கும் பணியினை இப் பிரிவுகள் மேற்கொண்டுள்ளன. 1968–69-ம் ஆண்டில் இந்த மூன்று பிரிவுகளின் ஆண்டு விற்றுமுதல் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

பணிக்கழகம், கிண்டி—ரூ. 102 லட்சம்.

மூலப்பொருள் கிடங்கு, மதுரை—ரூ. 7·37 லட்சம்.

மூலப்பொருள் கிடங்கு, போத்தனூர்—ரூ. 6·27 லட்சம்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஆய்வு-புள்ளிவிவரப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. இம்மாநிலத்தில் தொழில் ஆய்வுகளை மேற்கொள்ளவும், சிறு தொழில் குறித்த விரிவான புள்ளிவிவரங்களைத் தொகுத்துப் பேணி வரவும் இப்பிரிவு அமைக்கப்பட்டது.

கீழ்க்கண்ட பணிகள் இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன :—

(1) இம்மாநிலத்தில் சிறு தொழில் பிரிவுகள் அனைத்தையும் பதிவு செய்தலும், பதிவுச் சான்றுகள் அளித்தலும்.

(2) பதிவு செய்த பிரிவுகள் உற்பத்திப் புள்ளி விவரங்களைத் திரட்டுவதும், தொழில் வாரியாக அவற்றைத் தொகுத்தலும்.

(3) சிறு தொழில்களைப் பதிவு செய்யும்போது சேகரித்த விவரங்களின் அடிப்படையில் இம்மாநிலத்தின் சிறு தொழில் பிரிவுகளைப்பற்றி விவர விளக்க நூல் ஒன்றை வெளியிடுதல்.

(4) தமிழ் நாட்டிலுள்ள சிறு தொழில் பணி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஆய்வு அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுதல்.

(5) மாநில அரசு உத்தரவிடும் தனிப்பட்ட அல்லது சிறப்பு ஆய்வு எதையும் நடத்துதல்.

(6) டாக்டர் லோகநாதன் குழு பரிவுரைத்தபடி சிறு தொழில்களின் திறனை மதிப்பிடுதல்.

(7) உள்நாட்டுத் தயாரிப்புப் பொருள் பற்றிய சிறு நூல் வெளியிடுவதற்கு விவரங்களைத் திரட்டுதல்.

(8) இம்மாநிலத்திலே சிறு தொழில் பிரிவுகள் பற்றிய புள்ளி விவரங்களை எளிதில் பெறும் பொருட்டு, புள்ளிவிவரங்களைப் பேணி வரும் கார்டெக்ஸ் முறை (Kardex System) அண்மையில் மேற்கொள்ளப் பட்டு, தேவையான புள்ளி விவரம் திரட்டப்பட்டுவருகிறது.





(9) இந்த நாட்டில், திட்டமிட்டு அமைக்கப்படாத துறையில் உள்ள சிறு தொழில்களிலிருந்து புள்ளிவிவரம் சேகரிப்பதற்கான மத்திய அரசுத் திட்டம் ஒன்று இந்திய அரசினால் கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழ் நாட்டைப் பொறுத்த ஆய்வுப் பணி, இத் துறையின் ஆய்வு-புள்ளிவிவரப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுக் கால அளவில் படிப்படியாக நிறைவேற்றும் நடைமுறையில் தமிழ்நாட்டில் உள்ள தொழில்கள் அனைத்தையும் இதன்கீழ்க் கொண்டுவருவதற்கு இது ஒரு முயற்சியாகும்.

இது தவிர, இம்மாநிலத்தில் ஏற்றுமதி வாய்ப்பு குறித்த ஆய்வை, புதுடில்லியில் உள்ள இந்திய அயல்நாட்டு வர்த்தக நிறுவனத்திடம் இந்த மாநில அரசு ஒப்படைப்பதில் இப்பிரிவு முக்கியமான பங்கு எடுத்துக்கொண்டதுடன் அந்த ஆய்வு வெற்றிகரமாக நடத்தப்படுவதில் நிறுவனத்திற்கு உதவி புரிந்தது. இந்த ஆய்வை நடத்துவதற்கு மாநில அரசின் பாதிப் பங்காகிய ரூ. 1 லட்சம் செலவிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஆய்வின் முடிவுகள் கிடைத்துள்ளன.

இம்மாநிலத்தில் சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்யும் பணி 1960 நவம்பரிலிருந்து இப்பிரிவினால் செய்யப்பட்டுவருகிறது. உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளவையும் ரூ. 7·5 லட்சத்திற்கு மேற்படாமல் நிலையான மூலதன முதலீடு (இயந்திரங்கள், கருவிகள் மட்டும்) உள்ளவையுமான தொழில் நிறுவனங்கள் சிறு தொழில்கள் ஆகும். இவை சிறு தொழில்கள் எனப் பதிவு பெறுவதற்கு உரிமையுள்ளவையாகும். சிறு தொழில் பிரிவுகள் மத்திய மாநில அரசுகளிடமிருந்து தொழில் நுட்ப, விற்பனை, நிதி, மற்றும் ஏனைய உதவி பெற உரிமை உள்ளவையாகும். சிறு தொழில்கள் இந்த உதவியைப் பெறுவதற்காகத் தங்களை இந்த இயக்குநர் அலுவலகத்திடம் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்றும், அவசியச் சான்றிதழ், அரசு அளிக்கும் கடன், இறக்குமதி உரிமம், முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி வசதி, தவணைக் கொள்முதல் அடிப்படையில் இயந்திரங்களை வாங்குதல், கட்டுப்பாட்டுப் பொருள்கள் வழங்கப் பெறல், தொழிற்பேட்டைகளில் தொழிற்சாலை இடவசதி முதலானவற்றிற்கு விண்ணப்பிக்கும்போது பதிவு எண்ணைக் குறிப்பிடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

பதிவுச் சான்றுகள் தொழிற்சாலைகளின் தன்மைக்கேற்ப நிலையானவையாகவோ தாற்காலிகமானவையாகவோ வகைப்படுத்தப்படுகின்றன. அதாவது, இப்போதுள்ள தொழிற்சாலைகளுக்கு நிலையான சான்றுகளும் தொடக்கத் திட்டமிட்டுள்ள தொழில்களுக்குத் தாற்காலிகச் சான்றுகளும் வழங்கப்படுகின்றன. சிறு தொழில்களைப் பதிவு செய்யும் பணி மாவட்ட நிலையில் உதவி இயக்குநர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரிகள் தத்தம் அதிகார வரம்புப் பகுதிகளிலுள்ள பிரிவுகளைப் பதிவு செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர். 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் நாளன்று உள்ளவாறு 18,069 தொழிற் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டு பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

உற்பத்தி, வேலை வாய்ப்பு, மூலதன அமைப்பு முதலிய புள்ளி விவரங்களைப் பேணிவருவதற்காக, இந்தப் பிரிவு, பதிவு பெற்ற தொழிற் பிரிவுகள் அனைத்திடமிருந்தும் ஆண்டுப் புள்ளிவிவர அறிக்கைகளைச் சேகரிக்கிறது. அவ்வாறு சேகரிக்கப்படும் விவரங்கள் புள்ளிவிவரங்கள் வைத்து வரும் கார்டெக்ஸ் முறைக்காக பேணிவரப்படும் குறிப்பு அட்டைகளில் எடுத்து எழுதப்படுகின்றன. சேகரிக்கப்படும் விவரங்கள் மாவட்ட வாரியாகவும், தொழில் வாரியாகவும் தொகுக்கப்படுகின்றன. ஆண்டு கார்டெக்ஸ் விவரங்கள் மூலமும் புதிய பதிவுகள் மூலமும் சேகரிக்கப்படும் புள்ளி விவரங்களின் அடிப்படையில், ஓர் ஆண்டில் பதிவு செய்யப்படும் சிறுதொழில் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன், இம்மாநிலத்தில் சிறு தொழில் வளர்ச்சிப் போக்கு குறித்து வலியுறுத்திப் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இந்திய அரசு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிப் போக்கைக் கண்டறிவதற்கென சிறு தொழில் துறையில் இன்றியமையாப் பொருள்களை உற்பத்தி செய்கிற பிரிவுகள் பற்றிய தகவலைத் திரட்டுவதற்காக திங்கள் விவர அறிக்கை ஒன்று செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சிறு தொழில் பிரிவுகள் பற்றிய விவர விளக்க நூல் இரண்டினை இந்தப் பிரிவு வெளியிட்டுள்ளது. முதல் நூல் 1962-ம் ஆண்டில் வெளி யிடப்பட்டது. 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் நாள்வரை பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் பிரிவுகள் (3,000) பற்றிய விவரங்கள் இதில் உள்ளன. 1965-ல் வெளியிடப்பட்ட 2-வது நூலில் 1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் நாள்வரையில் பதிவு செய்யப்பட்ட (6,135) தொழில் பிரிவுகள் பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் நாள்வரை பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் பிரிவுகள் (4,913) அனைத்தையும் கொண்ட பிற்சேர்க்கை ஒன்று இரண்டாவது வெளியீட்டிற்குத் தயாரிக்கப்பட்டு, அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இது போன்று தமிழ்நாட்டில், 1967-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்கள் குறித்த ஆய்வு ஒன்று இந்த ஆண்டில் மேற்கொள்ளப் பட்டது. புதிய தொழில் துறைகளில் இறங்க விரும்பும் தொழில் உரிமை யாளர்களுக்கும் தொழில் முனைவர்களுக்கும் இந்த விளக்க நூல் பய னுள்ள தகவல்களை அளிக்கின்றது.

கிண்டி, மதுரை, பேட்டையிலுள்ள தொழிற்பேட்டைகளில் இடத்துக்கு ஒன்ருக மூன்று தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் தற்போது செயல் பட்டுவருகின்றன.

கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவில் நூலகம், வெளி யீடுகள், மொழிபெயர்ப்பு, திரைப்படக்கலை, நிழற்படக்கலை, பொருட்காட்சிப் பிரிவுகள் ஆகியவை அடங்கியுள்ளன.

நூலகத்தில், பொறியியல், தொழில் நுட்பப் பிரிவுகள், தொழில் நிர்வாகம், தொழில் நிறுவனச் செலவினக் கணக்கியல் (Cost Accounting), செய்தித் தாள்கள், திட்ட அறிக்கைகள் முதலியவை குறித்து ஏராளமான நூல்கள் உள்ளன. இவை பெரும்பாலும் வெளி நாட்டிலிருந்து தருவிக்கப்படுபவையாகும். இத்துறைகளில் அண்மையில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகள் குறித்து இன்றைய நாள் வரையிலான தகவல் களை இவை அளிக்கின்றன. மேலும், இந் நூல்கள் கிண்டி தொழிற் பேட்டையிலுள்ள தொழில் உரிமையாளர்களுக்கும் தொழில் துறை அதி காரிகளுக்கும் படிப்பதற்கு அளிக்கப்படுகின்றன.

ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள சிறுதொழில் வழிகாட்டி நூல் தற்போதுள்ளவையும், இனி ஏற்படக் கூடியவையுமான சிறு தொழில்கள், தொழில்களின் தகுதிப்பட்டியல், சிறு தொழில்கள், பெருந்தொழில்கள் பற்றிய விவர விளக்க நூல்கள் போன்ற பயனுள்ள வெளியீடுகள் பல வெளியிடப்பட்டுள்ளன. " தொழில்வாணிபம் " (Indcom) என்னும் பெயர் கொண்ட காலாண்டுப் பத்திரிகை ஒன்றும் இப்பிரிவினால் வெளியிடப் படுகின்றது. அதன் மூலம் துறையின் நடவடிக்கைகளும், சிறுதொழில் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய வசதிகளும், தொழில் நுட்பத் தொழில் குறித்த பொருள்கள் முதலியவை பொதுமக்களின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.

சிறு தொழில் மாதிரித் திட்டங்கள், வாய்ப்பு அறிக்கை, பல்வேறு படிவங்கள், பதிவேடுகள் ஆகியவை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.

தொழிற்சாலைப் பணியாளர்கள் பயன்பெறுவதற்காக, நமது நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற்பட்டுள்ள தொழில் முன்னேற்றம் குறித்தும், பாது காப்பு நடவடிக்கைகள் குறித்தும் திரைப்படங்கள் வாரத்திற்கு இருமுறை காட்டப்படுகின்றன.

கிண்டியிலுள்ள தொழிற்பேட்டையில் நிலையான பொருட்காட்சி ஒன்று உள்ளது. மாநிலம் முழுவதிலும் உள்ள சிறு தொழில் உற்பத்திப் பொருள்கள் அங்கு காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புதிய தொழில் உரிமையாளர்களும் பொதுமக்களும் அவற்றைப் பற்றி அறிந்து கொள்ள இயலுவதுடன் அவர்களுக்கு அதில் ஊக்கமும் ஏற்படுகின்றது.





தொழில் நுட்பத் தகவல் பிரிவை விரிவு படுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்தில் (1) இப் பிரிவின் பல்வேறு கிளைகளை ஒரே இடத்தில் அமைப்பதற்காக கிண்டியிலுள்ள தொழிற்பேட்டை யில் புதிய கட்டிடம் கட்டுதல் (2) நூலகத்தில், தகவல்-செய்திப் படங்கள் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல். இதன் கீழ் செய்திப்படங்கள், நுண்படப் பிரிவுகளுக்கான வசதிகள் ஏற்படுத்தப்படும். தகுந்த மனை ஒன்று தேர்ந் தெடுக்கப்பட்டு கட்டிடம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இதுபோன்று நூலகத்துடன் கூடிய, சிறு தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் இரண்டு மதுரையிலும், பேட்டையிலும் உள்ள தொழிற்பேட்டை களில் செயல்பட்டு வருகின்றன. அப்பகுதியிலும், அதைச் சுற்றியும் உள்ள தொழிலதிபர்களுக்கும், பொதுமக்களுக்கும் தொழில் நுட்ப அறிவூட்டும் பணி நிலையங்களாக அவை செயல்பட்டு வருகின்றன.

விலை உயர்ந்த இயந்திரங்களை வாங்கப் பெருந்தொகை முதலீடு செய்ய இயலாத சிறு தொழிலதிபர்களுக்குப் பணி வசதி செய்து கொடுக்கும் நோக்கத்துடன் பேட்டை (திருநெல்வேலி மாவட்டம்), திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, அம்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பேட்டைகளில் பொதுக் குத்தகைப் பட்டறைகள் ஏற்படுத்தப்பட்டன.

கிண்டியிலுள்ள தொழில் நுட்ப பயிற்சிப் பள்ளி மூன்ருவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டது. பொறியியல் பட்டதாரிகளுக்கும், தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும் (Diploma holders) தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்களுக்கும், அச்சு வடிவமைப்பு, அச்சு வார்த்தல், கருவிகள் செய்தல், உலையில் காய்ச்சி அடித்துப் பக்குவப் படுத்தல் (Forge and heat treatment), இயந்திரங்களை இயக்கு தல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி வசதிகளை இப்பயிற்சிப் பள்ளி அளித்து வருகிறது. இப்போது 62 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பட்டதாரி களுக்குத் திங்கள் தோறும் 200 ரூபாய் பயிற்சி உதவித் தொகை அளிக்கப் படுகிறது. தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும், தொழில் பயிற்சிப் பள்ளி யில் பயிற்சி பெற்றவர்களுக்கும் முறையே ரூ. 125 வீதமும், ரூ. 75 வீதமும் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இப்பிரிவு கிண்டியில் மூன்று வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளது. இந்த நிலையத்துக்குக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 3·19 லட்சம் செலவு செய்ய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கட்டிடப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். அறிவியல் தொழில் நுட்பத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களையொட்டி இருக்கும் வகையில், மின் அணுக் கருவிகள், குளிர் வசதி இயந்திரம், ரப்பர் தொழில் நுட்பவியல் போன்ற புதிய பாட முறைகளில் பயிற்சி அளிப்பதற் காக நான்காவது திட்டத்தில் ரூ. 22·35 லட்சம் செலவில் விரிவுத் திட்டம் ஒன்றிற்கு இந்த ஆண்டு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் பொறியியல் பணியாளர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதுடன் தொழிற்சாலைகளின் நவீனத் தேவைகளை நிறைவு செய்யும்.

மூன்ருவது திட்டக் காலத்தில் திண்டுக்கல்லில் அமைக்கப்பட்ட கருவி கள் அச்சு மாதிரி அமைப்புப் பயிற்சி நிலையம், பற்பல பொறியியல் பிரிவுகளுக்கும், குறிப்பாக பூட்டு தயாரிப்பதற்கும் வேண்டிய கருவிகளையும் அச்சுக்களையும் வடிவமைத்து தயாரிப்பதில் நூலறிவிலும், செயலறிவிலும் சிறப்புப் பயிற்சி அளித்து வருகிறது. இந்த நிலையத்தில் தற்போது 31 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மின் மருத்துவப் பணிகளுக்கான மத்தியப் பணி—செப்பனிடு பிரிவு 1967-ம் ஆண்டு கிண்டியில் ஏற்படுத்தப்பட்டது. இதன் துணைப் பிரிவு மதுரையில் ஏற்படுத்தப்பட்டது. மிக நுண்ணிய கருவிகளைக் கொண்ட இப் பிரிவுகள் கால்நடை வளர்ப்பு, பொதுச் சுகாதாரத் துறைகளைச் சேர்ந்த தனி மருத்துவ மனையைச் சேர்ந்த கருவிகளைச் செப்பனிடும் பணியை மேற் கொள்ளுகின்றன. கிண்டியில் உள்ள மத்தியப் பிரிவில் பணி பல்குவதை குறைக்கவும், செப்பனிடு பணிகளை விரைவுபடுத்தவும், நான்காவது திட்டக் காலத்தில் தஞ்சாவூரில் துணைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுவதற்காக தஞ்சாவூர் தொழிற்பேட்டை யில் மனை ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும்.

1967-ம் ஆண்டு டிசம்பர் 21-ம் நாள் முதல் அரக்கோணத்தில் செயல் பட்டு வரும் கருமார்–தச்சுப் பிரிவு, அரக்கோணத்திலும், சுற்றுப்புறங் களிலும், குறிப்பாக வேளாண்மைக் கருவிகளுக்கு வேண்டிய பணி வசதி களைச் செய்து தருவதுடன், கருவிகளைத் தயாரிக்கவும் வசதி அளிக்கிறது.

விசையில் இயங்கும் அடிப்படை இயந்திரங்களை இயக்குவதில் வேளாண் மைக் குடும்பத்தினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக திருநெல்வேலி மாவட் டத்தில் தென்காசியில் ஒன்றும், அம்பாசமுத்திரத்தில் இரண்டும் ஆக மூன்று ஆதாரக்கிராமப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தென்காசியில் உள்ள நிலையத்தில் நான்காவது தொகுதியான 12 மாணவர்களும், அம்பாசமுத்திரத்தில் உள்ள இரண்டு நிலையங்களில், ஒவ்வொன்றிலும் மூன்றுவது தொகுதியான 12 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ரசாயனச் சோதனை-பகுப்பாய்வுக்கூடம் ஒன்று கிண்டியில் செயல்பட்டு வருகிறது. இது பொதுத் துறைக்கும், தனியார் துறைக்கும் பயன்பட்டு வருகிறது. இதனுடன் இணைந்துள்ள இயந்திர உலோகத் தொழில் பிரிவில் இயந்திர, உலோகத் தொழில், இரும்பு சார்ந்த, இரும்பல்லாத பிற உலோகங்கள், பிளாஸ்டிக், ரப்பர் முதலியவற்றைப் பரிசோதனை செய்வதற்கான வசதிகள் உள்ளன. 1-1-1969 முதல் 31-10-1969 வரையிலான கால அளவில் அரசுத் துறைகளிலிருந்தும், தனியார் தொழில் உரிமையாளர்களிடமிருந்தும் பெறப்பட்ட 900 மாதிரிகள் இயந்திர – உலோகத் தொழில் ஆய்வுக் கூடத்தில் பரிசோதிக்கப்பட்டன. ரசாயனச் சோதனை – பகுப்பாய்வுக் கூடத்தை விரிவுபடுத்துவதற்கான திட்டம் 1966–67-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இதன் கீழ், ரசாயனப் பொறியியல் பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு, ரசாயனத் தொழில்கள், அதனுடன் தொடர்புள்ள தொழில்கள் குறித்த சிக்கல்கள் சம்பந்தமாய் முன்னோடி இயந்திர சாலைகளை இயக்குவது பற்றிய ஆய்வுப் பணியை மேற்கொண்டு வருகிறது.

கடல் தாவரங்களிலிருந்து மக்னீஷியம் கார்பனேட் தயாரிப்பதற்கான பிரிவு ஒன்று தூத்துக்குடியில் செயல்பட்டு வருகிறது. இந்தப் பிரிவு 1,300 கிலோ மக்னீஷியம் கார்பனேட் உற்பத்தி செய்துள்ளது.

பொட்டாசியம் குளோரைடு, பாரிஸ் உறை மாவு தயாரிப்பதற்கான தொழில் பிரிவுகள் தூத்துக்குடியில் செயல்படத் தொடங்கியுள்ளன. சோதனை ஓட்டங்கள் விரைவில் முடிக்கப்பட்டு முறையான உற்பத்தி 1970–71 தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்கப்படும்.

கிண்டியில், வெல்லப் பாகிலிருந்து நுரைமம் தயாரிப்பதற்கான தொழில் பிரிவும், வாலாஜாபேட்டையில் சோடியம் டைகுரோமேட் தயாரிப் பதற்கான தொழில் பிரிவும் 1969–70 இறுதிக்கு முன்னர் செயல்படத் தொடங்கும்.

வடலூரில் செயலூக்கக் கரியம் (Active carbon) தயாரிப்பதற்கான பிரிவு, புதிய உலைக்கூட இயந்திரம் தயாரிக்கப்படாத வரையில் செயல்பட இயலாது. உலைக்கூட இயந்திரம் தயாரிப்பதற்காக திருவாளர்கள் கிரீவ்ஸ் காட்டன் கம்பெனியினால் கேட்கப்பட்ட விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப் பட்டு, இதற்காகத் தேவைப்படும் சிறப்பு வகை உருக்கு இறக்குமதி செய் வதற்காக அந்நியச் செலாவணி அளிக்கும்படி இந்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

மின்சாரத் தொழிலுக்கு உற்பத்திப் பரிசோதனை வசதிகளை அளிப் பதற்கும், பகுதிப் பொருட்களுக்கும், பணி நிறைவுற்ற பொருள்களுக்கும் புதிய வடிவமைப்புகளை வகுப்பதற்கும் திருவள்ளூருக்கு அருகில் காக்க ளூரில் மத்திய மின் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

விருத்தாசலத்தில் 1964-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் மட்பாண்டப் பயிற்சிப் பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் 25 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, மூன்றாண்டுப் பயிற்சிக்கு முனைப்பான பயிற்சி அளிக்கப்





படுகிறது. அதன் பிறகு வாணிகப் பிரிவுகளில் செயல் முறைப் பயிற்சி ஓராண்டு அளிக்கப்படுகிறது. இரண்டாம் தொகுதிப் பயிற்சி பெறுவோர் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பள்ளியில், பளபளப்பான எனாமல் குறித்த பாட வகுப்பு ஒன்று கொண்டு வரும் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பள்ளியில் பயிற்சி பெறுபவர்களுக்காக விடுதி ஒன்று கட்டப்பட்டுள்ளது. இப்பள்ளிப் பணியாளர்களுக்காக குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு 1969 ஏப்ரல் திங்களில் ஒப்பளிப்பு வழங்கியது.

மட்பாண்டப் பயிற்சிப் பள்ளியுடன் இணைந்த, வேலைப்பாடுகள் அமைந்த மட்பாண்டத் தொழில் பிரிவு, வேலைப்பாடுகள் அமைந்த — பயன்படுத்தத் தக்க மட்பாண்டங்களை உற்பத்தி செய்வதில், ஓராண்டுப் பயிற்சியை 15 மாணவர்களுக்கு ஆண்டுதோறும் அளித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 10 மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக இதுபோன்ற பயிற்சி நிலையம் ஒன்று சென்னை மாநகரில், பெரம்பூரில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சிறு தொழில் கழகத்தின் மேற்பார்வையில் விருத்தாசலத் தில் செயல்பட்டு வந்த மட்பாண்டத் தொழிற்சாலைக்கு இணைந்ததாகத் தெழில் பட்டு வந்த மட்பாண்டத் தொழில், பொது வசதிப் பணி நிலையம் 1–5–1969 முதற்கொண்டு மேற்குறிப்பிட்ட கழகத்தின் மேற்பார்வையி லிருந்து தொழில் – வணிகத் துறை இயக்குநரின் ஆளுகையின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. இப்பணி நிலையம், விருத்தாசலத்தில் அமைந்துள்ள மட்பாண்டத் தொழிற் பேட்டையிலுள்ள பிரிவுகளுக்கும் வெளியே அமைக் கப்பட்டுள்ள பிரிவுகளுக்கும் வேண்டிய கட்டுகளையும், பளபளப்புச் சாதனங் களையும் தயாராகச் செய்து அனுப்புகின்றது. இப் பிரிவுகளிலிருந்து அனுப்பப்படும் பொருள்கள் இப் பணி நிலையத்தினால் இயக்கப்படும் பொதுச் சூளைகளில் சுடப்படுவதற்கும் அது ஏற்பாடு செய்கிறது. ஸ்டிரிங் பிச்ஸ் முதலியவற்றை வாங்குவது இப் பிரிவுக்கு இயலும் பொருட்டு இந் நிலையத்தை விரிவுபடுத்தும் வகையில் 1969 ஆகஸ்ட் திங்களில் அரசு ஒரு திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியது. மின் கருவித் தயாரிப்புத் தொழில் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் உயர்தரமான நுண்ணிய, மட்பாண்டப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக மேற் குறிப்பிட்ட ஸ்டிரிங் பிரஸ் முதலியவற்றைச் சிறு பிரிவுகளுக்கு வாடகைக்கு விடுவதே இதன் நோக்கமாகும்.

விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகளைத் தரமுள்ள வகையில் தயாரிப் பதற்காக கிண்டியில் 1949-ம் ஆண்டில் நிறுவப்பட்ட பயிற்சி நிலையம், தரமான விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பதில் மாணவர்களுக் குப் பயிற்சியளித்து வருகிறது. கண்ணாடி ஊதித் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் இது முக்கியமான முன்னோடி நிலையமாகும். இந்தப் பிரிவில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளதன் காரணமாக, இப் பிரிவை விரிவுபடுத்துவதற்கான திட்டம் ஒன்றிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்தகைய தொழில் பிரிவு ஒன்றைக் கோயம்புத்தூரில் ஏற்படுத்தும் திட்டம் ஒன்றிற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

கண்ணாடிப் பொம்மைகள், கண்கவர் பொருள்கள் தயாரிப்பதற்கான பயிற்சி நிலையம் ஒன்று சென்னை மாநகரில் நடந்து வருகின்றது. இரண்டு ஆண்டுக் காலப் படிப்பில் அது 10 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கிறது.

1969–70-ல் ஒப்பளிக்கப்பட்ட கீழ்க்கண்ட பிரிவுகளைத் தொடங்குவதற் கான தொடக்க வேலைகள் நடந்தேறி வருகின்றன. கிண்டியில் உள்ள இரசாயனப் பரிசோதனை, பகுப்பு ஆய்வுச் சோதனைச் சாலையைப் போன்று மதுரையில் வட்டார ஆய்வுச் சோதனைச் சாலை ஒன்றை அமைப்பதற்கான திட்டம், சர்க்கரை, தோல் தொழில்களில் பயன்படுத்துவதற்காக கிளிஞ்சல் களிலிருந்து இரசாயனச் சுண்ணாம்பு தயாரிப்பதற்காக மரக்காணத்தில் ஒரு பிரிவை அமைப்பதற்கான திட்டம்.

பெருநகரப் பகுதிகளில் இயல்பாகவே உள்ள சாதகமான சூழ்நிலையின் விளைவாக, கடந்த பத்தாண்டுகளில் சிறப்பாகப் பெரு நகரப் பகுதிகளில் சிறு தொழில்கள் விரைவாக வளர்ச்சி பெற்றன. இதர சிறு நகர்ப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் இத்தகைய தொழில்களை மேம்படுத்துவதற்கான சிறப்பு முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ளுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. சிறு தொழில்களின் வளர்ச்சிக்காகவுள்ள வாய்ப்புக்களையும், அரசும் மற்ற முகவர் நிறுவனங்களும் அளிக்கும் வசதிகளையும் பற்றிக் குறைவாக அறிந்ததன் காரணமாக. இத்தகைய பகுதிகள் வெளிப்படையாகவே வளர்ச்சியுரு நிலையில் உள்ளன, தொழில் வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வான ஒரு நிலையையே இது இயல்பாக ஏற்படுத்தியது. இத்தகைய ஏற்றத் தாழ்வைப் போக்கவும், சிறு தொழில் வளர்ச்சிக்கான திட்டத்தை, உள்ளூர்த் தொழில் முனைவர்களுக்குத் தெரிவிக்கவும், புதிய தொழில்களைத் துவக்கத் துணிகர முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்கும், சிறு தெழில் பணி நிறுவனம், தேசீய சிறு தொழிற் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மாவட்டங்களில் சிறு தொழில் வளர்ச்சிக்காக "மும்முர இயக்கங்கள் (Intensive campaigns)" நடத்தப்பெற்று வருகின்றன.

1969-ம் ஆண்டில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் சிறு தொழில் வளர்ச்சிக்கான மும்முர இயக்கங்கள் நடத்தப்பட்டன:—

(1) சேலம்.

(2) தஞ்சாவூர்.

(3) இராமநாதபுரம்.

அந்த இயக்கம் நடைபெறும்பொழுது, சிறு தொழில்களைப் பதிவு செய்வதற்கும், தேசீய சிறு தொழிற் கழகத்திடமிருந்து தவணைக் கொள்முதல் அடிப்படையில் இயந்திரம் வழங்குவதற்குமாக, தொழில் அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவை முறைப்படுத்தப்பட்டு, அந்த இடத்திலேயே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

**மும்முர இயக்கம் நடந்த இடங்கள்.**

(நடந்த தேதி அடைப்புக் குறிகளில்.)

| விவரங்கள். | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் (1969 ஜூன் 5 முதல் 12-ம் நாள் வரை). | சேலம் மாவட்டம் (1969 ஆகஸ்டு 19 முதல் 25-ம் நாள் வரை). | இராமநாதபுரம் மாவட்டம் ராஜபாளையம் (1969 நவம்பர் 20 முதல் 22-ம் நாள் வரை). | சிவகங்கை (1969 நவம்பர் 24 முதல் 26-ம் நாள் வரை). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சிறு தொழில்கள் பதிவுக்காக வந்த சிறு தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கையும், இயக்கம் நடந்த தேதியிலே அளிக்கப்பட்ட சிறு தொழில்களுக்கான சான்றிதழின் எண்ணிக்கையும். | 510 | 489 | 412 | 776 |
| 2 இயந்திரங்களை தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குவதற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 308 | 307 | 91 | 153 |
| 3 விண்ணப்பங்களின மதிப்பளவு. | ரூ. 36,71,277 | 1,09,25,484 | 53,43,532 | 45,48,690 |
| 4 தேசீய சிறு தொழில் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நேர்வுகள். | 218 | 176 | * | * |
| 5 ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மதிப்பளவு. | 2,874,101 | 6,140,602 | .. | .. |
| 6 தேசீய சிறு தொழிற் கழகத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. | 74 | 102 | * | * |



(Table continued on this page with heading: **மும்முர இயக்கம் நடந்த இடங்கள்—தொடர்ச்சி.** (நடந்த தேதி அடைப்புக் குறிகளில்.))

* புதுடில்லியில் உள்ள தேசீய சிறு தொழிற் கழகத்திலிருந்து விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அதைத் தொடர்ந்து, மேற்கண்ட நேர்வுகளில் செவ்விய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தர்மபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இது போன்ற இயக்கங்கள் அண்மையில் நடத்துவதெனவும், அதன் பின் ஏனைய மாவட்டங்களில் நடத்துவதெனவும் கருதப்பட்டுள்ளது.

**பிளாஸ்டிக் பொறியியல்—கருவிகள், மத்திய நிறுவனம், கிண்டி.**

அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனத்தின் உடனுழைப்புடன் பிளாஸ்டிக் பொறியியல்—கருவிகள் மத்திய நிறுவனம் ஒன்றை இந்திய அரசு அமைத்தது. இந்த நிறுவனத்திற்குத் தேவையான கட்டிடங்கள் கட்டும்வரை இதற்குத் தேவைப்படும் நிலத்தையும், கட்டிடத்தையும் தமிழ் நாடு அரசு வழங்கியுள்ளது. தொழில் துறையின் முன்னாள் பொதுக் குத்தகைப் பட்டறைக் கட்டிடத்திலும், கிண்டியில் உள்ள மத்திய பயிற்சி நிறுவனத்தின் வளவுகளுக்குள்ளும் இது செயல்படத் தொடங்கி

யுள்ளது. பல்வேறு வகையான வார்ப்புகளை வடிவமைத்துத் தயாரிப்பது குறித்து பிளாஸ்டிக் தொழிலுக்கான பயிற்சி ஆலோசனை வசதிகளையும் அளிப்பதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நிறுவனம் 1968 மார்ச்சில் செயல்படத் தொடங்கியது. வார்ப்பு அமைப்பாளர்களுக்கான முதற் பயிற்சியை அது ஏற்கனவே தொடங்கி விட்டது. அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனத்திலிருந்து வார்ப்பு வடிவமைப்பது குறித்த மூன்று வல்லுநர்கள் இங்கு வந்தனர். அவர்களின் உதவியுடன் முழு மூச்சுடன் பயிற்சி நடைபெற்று வருகிறது. இந்த நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்காக நாடு முழுவதிலும் பிளாஸ்டிக் தொழிலில் ஈடுபட்டுள்ள 23 தனிப்பட்ட பிரிவுகள் தங்களுடைய வார்ப்பு வடிவமைப்பாளர்களை அனுப்பியுள்ளன. தயாரிப்பிலும் வடிவமைப்பிலும் உள்ள முக்கிய இனங்கள், P. V. C. குழாய் இணைப்புகள், P. V. C. குழாய்களின் வார்ப்புகள், "பட்டர் டிஷஸ்" மின் விசிறிக்கான பகுதி, நீர் ஜாடி, செவிடர்களுக்கு துணை செய் கருவிகள் முதலியன ஆகும்.

வார்ப்பு தயாரிப்பதற்கும் வடிவமைப்பதற்குமாக 40 பணித்துறைப் பணிகள் இந் நிறுவனத்தால் பெறப்பட்டு, அவை தயாரிக்கப்பட்டும் வடிவமைக்கப்பட்டும் வருகின்றன. நாடு முழுவதிலும் உள்ள 12 நிறுவனங்கள், வடிவமைப்புப் பணிகளுக்காக இந் நிறுவனத்தை அணுகியுள்ளன. நாடு முழுமைக்கும் 53 நிறுவனங்களுக்கு, இந்நிறுவனம் ஆலோசனையளித்தது. இந்நிறுவனம் சொந்தக் கட்டிடங்கள் கட்டிவருகிறது. மேலும், 60 மாணவர்களுக்கான விடுதி ஒன்றையும் கட்டிவருகிறது. பணியாளர்களுக்குப் பயிற்சி யளிப்பதையும் இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

### தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டம்.

தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின்கீழ் 1968-69-ல் 1,344 தொழிலதிபர்களுக்கு ரூ. 26·21 லட்சம் கடன் வழங்கப்பட்டது. 1969-70-ல் இவ்வகையில் ரூ. 30 லட்சம் இவ்வகை உதவியாக செலவிடப்படும். 4-வது திட்டக் காலத்தில் ரூ. 200 லட்சம் கடன் வழங்கத் திட்டமிட்டுள்ளது. இதற்காக நான்காவது திட்டத்தில் இரண்டாம் ஆண்டான 1970-71 திட்ட மதிப்பீட்டில் ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### தொழில்பேட்டைகளும் செப்பனிட்ட நிலங்களும்.

நீர், மின் சக்தி, போக்குவரத்து வசதி, சாலைகள் முதலிய வசதிகளுடன் சிறு தொழிலதிபர்களுக்கு நன்கு திட்டமிட்ட இடவசதியை அளிப்பதன் மூலம், இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து விரைவு படுத்துவதே தொழிற் பேட்டைகளை நிறுவுவதன் முக்கிய குறிக்கோள் ஆகும்.

தொழிற்பேட்டைகள், கீழ்க்கண்ட வகைகளாக உள்ளன: 1. பல்வேறு வகையான தொழிற்சாலைகள் உள்ள பலதொழில்களுக்கான தொழிற்பேட்டைகள். 2. தோல், மண்பாண்டத் தொழிற்சாலை போன்ற சில சிறப்புத் தொழிற்சாலைகள் உள்ள அவ்வத் தொழிலுக்கான தொழிற்பேட்டை. 3. பெருந் தொழில்களுக்கான துணைப் பிரிவுகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் துணைத் தொழிற்பேட்டைகள். 4. கூட்டுறவுத்துறையிலான தொழிற் பேட்டைகள்.



### பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள்.

முந்தைய திட்டக் காலங்களில் பல்வேறு அளவுகளில் தொழிற் பிரிவுகளுக்கு வேண்டிய இடவசதியுடன் பல தொழில்களுக்கான 26 தொழிற் பேட்டைகளை அரசு நிறுவியது. இத் தொழிற்பேட்டைகளில் கட்டப்பட்ட, ஒதுக்கப்பட்ட தொழிற் பிரிவுகள் எண்ணிக்கை விவரம், வாடகை வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

### இரண்டாம் திட்டத் தொழிற்பேட்டைகள்.

| தொழிற்பேட்டையின் பெயர். | கட்டப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை. | சதுர அடிக்கு திங்கள் ஒன்றுக்கு 1969 சனவரி 1-ம் நாள் முதல் 1970 மார்ச் 31-ம் நாள் வரை செயலிலுள்ள திருத்த வாடகை வீதம். (காசுகளில்.) |
|---|---|---|---|
| 1 கிண்டி .. .. .. | 129 | 129 | 15 |
| 2 மதுரை .. .. .. | 36 | 36 | 11 |
| 3 விருதுநகர் .. .. | 15 | 8 | 10 |
| 4 பேட்டை .. .. | 12 | 11 | 11 |
| 5 ஈரோடு .. .. .. | 11 | 11 | 10 |
| 6 காட்பாடி .. .. .. | 16 | 14 | 8 |
| 7 தஞ்சாவூர் .. .. | 6 | 6 | 9 |
| 8 திருச்சி .. .. .. | 29 | 29 | 11 |
| 9 மார்த்தாண்டம் .. .. | 5 | 3 | 8 |
| மொத்தம் .. | 257 | 249 | |

## மூன்றுவது திட்டத் தொழிற்பேட்டைகள்

| தொழிற் பேட்டையின் பெயர். | கட்டப்பட்ட தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை. | சதுரஅடிக்குத் திங்கள் ஒன்றுக்கு 1969 சனவரி 1-ம் நாள் முதல் 1970 மார்ச் 31-ம் நாள் வரை செயலிலுள்ள திருத்த வாடகை வீதம் (காசுகளில்). |
|---|---|---|---|
| 1 அம்பத்தூர் .. .. | 117 | 117 | 10 |
| 2 தேனி .. .. .. | 7 | 6 | 5 |
| 3 திண்டுக்கல் .. .. | 18 | 14 | 7 |
| 4 காரைக்குடி .. .. | 12 | 12 | 5 |
| 5 கோவில்பட்டி .. .. | 11 | 7 | 5 |
| 6 கிருஷ்ணகிரி .. .. | 12 | 11 | 7 |
| 7 புதுக்கோட்டை .. .. | 12 | 9 | 5 |
| 8 அரக்கோணம் .. .. | 6 | 6 | 7 |
| 9 சிவகங்கை .. .. .. | 6 | 5 | 5 |
| 10 நாகர்கோயில் .. .. | 6 | 6 | 7 |
| 11 கும்பகோணம் .. .. | 4 | 4 | 7 |
| மொத்தம் .. | 211 | 197 | |

## தொழிற்பேட்டைகளுக்கான ஆண்டுத் திட்டம் (1966-69)

| தொழிற்பேட்டையின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | திங்களொன்றுக்கு சதுர அடிக்கு வாடகை வீதம். (காசுகளில்) |
|---|---|---|---|---|
| 1 மேட்டூர் .. | 4 | 4 | 2 | 6 |
| 2 காஞ்சிபுரம் .. | 4 | 4 | 4 | 5 |
| 3 கரூர் .. | 4 | 4 | .. | 5 |
| 4 நாகப்பட்டினம் | 6 | 4 | .. | 5 |
| 5 ஓசூர் .. | 6 | .. | .. | .. |
| 6 கடலூர் .. | 6 | .. | .. | .. |
| மொததம் .. | 30 | 16 | 6 | |

நான்காம் திட்டக் காலத்தில், 10 வருவாய் வட்டங்களில் பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள் ப தினைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருவாய் வட்டத்திலும் ஒரு தொழிற்பேட்டை இருக்கவேண்டும் என்ற கருத்தை எய்துவதற்கு இது ஒரு முக்கியமான நடவடிக்கையாக இருக்கும். நான்காவது திட்டத்தின் முதலாம் ஆண்டான 1969–70-ல், நாமக்கல்லில் ரூ. 6·22 லட்சம் செலவில் 6 பிரிவுகள் கொண்ட தொழிற்பேட்டை ஒன்றைத் தொடங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.





## அவ்வத் தொழில்களுக்குரிய தொழிற்பேட்டைகள்.

சிறப்பு வசதிகள் வேண்டியுள்ள தோல் தொழில், மட்பாண்டத்தொழில், மின் தொழில், உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில், கருவிகள் தொழில், மருந்துகள்-மருந்துக் கலவைத் தொழில், மின் அணுத் தொழில் போன்ற நுண்மை வாய்ந்த சிறப்பு வகைத் தொழில்களை வளர்ப்பதற்காக, இத் தொழில்களுக்கென்றே சிறப்பான தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்தகைய தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டால், அத்தொழிலைத் திட்டமிட்ட வகையில் வளர்ப்பதும், தக்க தொழில் நுட்பப் பணியாளர், பணிவசதிகள், திறமைமிக்க தொழில் நுட்பவினைஞர் கிடைக்காத சிக்கல்களைத் தீர்ப்பதும் இயலக் கூடிய வகையில் அந்தந்தத் தொழிற்களைத் தனித்தனியே ஒரே இடத்தில் தொகுதியாக அமைக்க முடியும். இத் தொழிற்பேட்டைகளால் உற்பத்தியும் விற்பனையும் பெருகுவதுடன் அனைத்து நாட்டுத் தரத்திற்கு ஏற்ப தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உணர்வினையும் ஊட்டும். இதனால் வெளி நாடுகளுக்கு இப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு கிட்டும். இந்த நோக்கங்களை எய்தவே இத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

மூன்றுவது திட்டக் காலத்தில், விருத்தாசலத்தில் மட்பாண்டத் தொழிலுக்காக ஒன்றும், மாதவரத்தில் தோல் தொழிலுக்காக ஒன்றும் ஆக, அவ்வத் தொழில்களுக்கான இரண்டு தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, கட்டி முடிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| தொழிற்பேட்டையின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின். எண்ணிக்கை. | கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | சதுர அடிக்குத் திங்கள் ஒன்றுக்கு செயலிலுள்ள வாடகை வீதம். (காசுகளில்.) |
|---|---|---|---|---|
| விருத்தாசலம் .. | 29 | 8 | 8 | 7 |
| மாதவரம் .. | 21 | 14 | 14 | 10 |

1966–67, 1967–68 ஆண்டு திட்டக் கால அளவுகளில், இத்தகைய 5 தொழிற்பேட்டைகள் ஒப்பளிப்பு வழங்கப்பெற்றன. இப்பேட்டைகளில் ...ட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை இதுவரை கட்டி முடிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை, ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தொழிற்பேட்டையின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | திங்களொன்றுக்கு சதுர அடிக்கு வாடகை வீதம் (காசுகளில்). |
|---|---|---|---|---|
| 1 மின் தொழில், காகளூர் .. | 16 | 10 | 10 | 10 |
| 2 உணவு-பழ அடிப்படையின் அமைந்த தொழில்கள், வத்தலகுண்டு. | 20 | .. | .. | .. |
| 3 கருவிகள் தொழில், அடையாறு. | 15 | .. | .. | .. |
| 4 மருந்துகள்-மருந்து கலவைப் பொருள் தொழில்கள், அம்பத்தூர். | 25 | .. | .. | .. |
| 5 சென்னைக்கருகே மின் அணு தொழில். | 30 | .. | .. | .. |

## துணைத் தொழிற்பேட்டைகள்.

இம் மாநிலத்தில் முக்கியமான இடங்களில் பெருந் தொழில்கள் பல அமைந்த பின்னர், அவற்றிற்கு வேண்டிய தேவைகளை நிறைவு செய்ய அப் பகுதிகளில் துணைத் தொழிற்பேட்டைகளை நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தகைய தொழிற்பேட்டைகளை நிறுவுவதன் வாய்ப்புகளை அரசு பரிசீலனை செய்த பின்னர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூரில் ஒரு தொழிற்பேட்டையும் வடலூரில் மற்றொன்றுமாக இரண்டு தொழிற்பேட்டைகளை நிறுவ ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திருச்சி கனரக அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலைக்கான பல்வேறு பொருள்கள், உதிரிப் பகுதிகள் ஆகியவற்றைச் சிறு தொழில் துறையில் தயாரிப்பதற்காகத் திருவெறும்பூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டும் பணி முடிவடைந்துவிட்டது. ஏற்புடைய தொழில் முனைவர்களுக்கு இப் பிரிவுகள் ஏற்கெனவே ஒதுக்கிக்கொடுக்கப்பட்டுள்ளன. (மட்பாண்டங்களுக்காக) வடலூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்று, மட்பாண்ட, தூய்மைக் கருவிகள் தயாரிக்கும் திருவாளர்கள் சேஷசாயி தொழில்கள் தனியார் நிறுவனம், நெய்வேலி மட்பாண்ட அதிகச் சூடு தாங்கும் கற்கள் தயாரிப்பு நிறுவனம் (Ceramics and Refractories, Ltd.) ஆகிய இரண்டு பெருந் தொழில்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக நிறுவப்பட 1967-68-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்துஸ்தான் நிழற்பட பிலிம் நிறுவனத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உதகமண்டலத்தில் துணைத் தொழிற்பேட்டை நிறுவவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தொழிற்பேட்டைகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, கட்டி முடிக்கப்பட்ட, ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| தொழிற்பேட்டையின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப் பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டிமுடிந்த பிரிவு களின் எண் ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவு களின் எண் ணிக்கை. | இங்கொன்றுக்கு ஒதுக்கு சதுர அடிக்கு வாடகை (காசுகளில்). |
|---|---|---|---|---|
| வடலூர் துணைத் தொழிற் பேட்டை. | 6 | 4 | 3 | 5 |
| உதகமண்டலத் துணைத் தொழிற்பேட்டை. | 6 | .. | .. | .. |
| திருவெறும்பூர் துணைத் தொழிற்பேட்டை. | 10 | 10 | 10 | 8 |

## தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்.

அடியிற்கண்ட தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு, 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை ரூ. 108·79 லட்சம் அளவுக்கு அரசு கடன் உதவி அளித்துள்ளது.

| தொழிற்பேட்டையின் பெயர். | அளித்த கடன் உதவி (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1 கே. ஆர். சுந்திரம் (தனியார்) தொழிற்பேட்டை, திருவொற்றியூர். | 13·46 |
| 2 கோயம்புத்தூர் (தனியார்) தொழிற்பேட்டை, கோயம்புத்தூர். | 32·00 |
| 3 தூத்துக்குடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, தூத்துக்குடி | 12·61 |





| தொழிற்பேட்டையின் பெயர். | அளித்த கடன் உதவி (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| 4 சக்தி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, பொள்ளாச்சி .. | 16·00 |
| 5 சிவகாசி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, சிவகாசி .. | 8·00 |
| 6 வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, வியாசர்பாடி. | 24·50 |
| 7 சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டை .. .. .. | 2·22 |
| மொத்தம் .. | 108·79 |

மேற்கண்ட தொழிற்பேட்டைகளில், இதுகாறும் 149 தொழிற்சாலைப் பிரிவுகள் கட்டப்பட்டுள்ளன. மாநில அரசின் உத்தரவாதத்தின் மேல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாக திட்டச் செலவில் 60 சதவீதம் வரை இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. சில நிபந்தனைகளின்கீழ், தொழிற்பேட்டைகள் அமைப்பதற்காக, தனியார் துறையில் பங்கு முதலீட்டு நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. 1968-69-ல் சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூ. 6.66 லட்சமும், வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூ. 8·69 லட்சமும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனுதவி அளித்துள்ளது.

## செப்பனிட்ட நிலங்கள்.

இம் மாநிலத்தின் தொழிற் பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களில் பெற்ற மனைகளை குறைந்த செலவில் கையகப்படுத்தி, சாலைகள், மின்வசதி, நீர் வசதி, கழிவு நீர் அகற்று வசதி, பொருள்களை அனுப்பிவைக்க இருப்புப் பாதை வசதி முதலியவற்றுடன் அவற்றை மேம்படுத்தி, பெரிய, நடுத்தர, சிறு தொழிலதிபர்களுக்கு வழங்க வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதுவரை, இத்திட்டத்திற்காக சுமார் ரூ. 110 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் எளிதில் அங்கு தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தி தொடங்கப் பெரிதும் உதவும் இத்திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறதென்பது கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

31-10-1969

| செப்பனிட்ட நிலங்கள் அமைந்துள்ள இடம். | கையகப்படுத்த எண்ணியுள்ள நிலப்பரப்பு. (ஏக்கரில்.) | கையகப்படுத்தப் பட்ட நிலப் பரப்பு. (ஏக்கரில்.) | அன்றுள்ள படி ஒதுக்கப் பட்டுள்ள நிலங்கள். |
|---|---|---|---|
| 1 அம்பத்தூர் .. .. | 1,005 | 983 | 343.50 |
| 2 மேட்டூர் .. .. .. | 209 | 209 | 13·00 |
| 3 மதுரை .. .. .. | 540 | 527 | 17·00 |
| 4 திருச்சி .. .. .. | 476 | 476 | .. |
| 5 இராணிப்பேட்டை .. .. | 727 | 727 | .. |
| 6 திருவள்ளூர் .. .. | 393 | .. | .. |
| 7 கிண்டி .. .. .. | 159 | 159 | 8·00 |

மேற்சொன்ன திட்டங்களைத் தவிர, இம் மாநிலத்தில் சேலம், அரக்கோணம், தூத்துக்குடி, மணலி, கத்திவாக்கம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் செப்பனிட்ட நிலங்கள் கொண்ட பேட்டைகளை நான்காம் திட்டக் காலத்தில் அமைக்கக் கருதியுள்ளது.

## துணைத் தொழிற்பேட்டைகள்.

இம் மாநிலத்தில் முக்கியமான இடங்களில் பெருந் தொழில்கள் பல அமைந்த பின்னர், அவற்றிற்கு வேண்டிய தேவைகளை நிறைவு செய்ய அப் பகுதிகளில் துணைத் தொழிற்பேட்டைகளை நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தகைய தொழிற்பேட்டைகளை நிறுவுவதன் வாய்ப்புகளை அரசு பரிசீலனை செய்த பின்னர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூரில் ஒரு தொழிற்பேட்டையும் வடலூரில் மற்றொன்றுமாக இரண்டு தொழிற்பேட்டைகளை நிறுவ ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திருச்சி கனரக அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலைக்கான பல்வேறு பொருள்கள், உதிரிப் பகுதிகள் ஆகியவற்றைச் சிறு தொழில் துறையில் தயாரிப்பதற்காகத் திருவெறும்பூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டும் பணி முடிவடைந்துவிட்டது. ஏற்புடைய தொழில் முனைவர்களுக்கு இப் பிரிவுகள் ஏற்கெனவே ஒதுக்கிக்கொடுக்கப்பட்டுள்ளன. (மட்பாண்டங்களுக்காக) வடலூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்று, மட்பாண்ட, தூய்மைக் கருவிகள் தயாரிக்கும் திருவாளர்கள் சேஷசாயி தொழில்கள் தனியார் நிறுவனம், நெய்வேலி மட்பாண்ட அதிகச் சூடு தாங்கும் கற்கள் தயாரிப்பு நிறுவனம் (Ceramics and Refractories, Ltd.) ஆகிய இரண்டு பெருந் தொழில்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக நிறுவப்பட 1967–68-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்துஸ்தான் நிழற்பட பிலிம் நிறுவனத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உதகமண்டலத்தில் துணைத் தொழிற்பேட்டை நிறுவவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தொழிற்பேட்டைகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, கட்டி முடிக்கப்பட்ட, ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| தொழிற்பேட்டையின் பெயர். | ஒப்பளிப்பு வழங்கப் பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | கட்டிமுடிந்த பிரிவு களின் எண் ணிக்கை. | ஒதுக்கப்பட்ட பிரிவு களின் எண் ணிக்கை. | இங்கொன்றுக்கு சதுர அடிக்கு வாடகை (காசுகளில்). |
|---|---|---|---|---|
| வடலூர் துணைத் தொழிற்பேட்டை. | 6 | 4 | 3 | 5 |
| உதகமண்டலத் துணைத் தொழிற்பேட்டை. | 6 | .. | .. | .. |
| திருவெறும்பூர் துணைத் தொழிற்பேட்டை. | 10 | 10 | 10 | 8 |

## தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்.

அடியிற்கண்ட தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு, 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை ரூ. 108·79 லட்சம் அளவுக்கு அரசு கடன் உதவி அளித்துள்ளது.

| தொழிற்பேட்டையின் பெயர். | அளித்த கடன் உதவி (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1 கே. ஆர். சுந்திரம் (தனியார்) தொழிற்பேட்டை, திருவொற்றியூர். | 13·46 |
| 2 கோயம்புத்தூர் (தனியார்) தொழிற்பேட்டை, கோயம்புத்தூர். | 32·00 |
| 3 தூத்துக்குடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, தூத்துக்குடி | 12·61 |



| தொழிற்பேட்டையின் பெயர். | அளித்த கடன் உதவி (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| 4 சக்தி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, பொள்ளாச்சி .. | 16 00 |
| 5 சிவகாசி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, சிவகாசி .. | 8·00 |
| 6 வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, வியாசர்பாடி | 24·50 |
| 7 சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டை .. .. .. | 2·22 |
| மொத்தம் .. | 108·79 |

மேற்கண்ட தொழிற்பேட்டைகளில், இதுகாறும் 149 தொழிற்சாலைப் பிரிவுகள் கட்டப்பட்டுள்ளன. மாநில அரசின் உத்தரவாதத்தின் மேல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாக திட்டச் செலவில் 60 சதவீதம் வரை இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. சில நிபந்தனைகளின்கீழ், தொழிற்பேட்டைகள் அமைப்பதற்காக, தனியார் துறையில் பங்கு முதலீட்டு நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. 1968–69-ல் சேலம் கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூ. 6.66 லட்சமும், வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூ. 8 69 லட்சமும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனுதவி அளித்துள்ளது.

## செப்பனிட்ட நிலங்கள்.

இம் மாநிலத்தின் தொழிற் பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களில் பெற்ற மனைகளை குறைந்த செலவில் கையகப்படுத்தி, சாலைகள், மின்வசதி, நீர் வசதி, கழிவு நீர் அகற்று வசதி, பொருள்களை அனுப்பிவைக்க இருப்புப் பாதை வசதி முதலியவற்றுடன் அவற்றை மேம்படுத்தி, பெரிய, நடுத்தர, சிறு தொழிலதிபர்களுக்கு வழங்க வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதுவரை, இத்திட்டத்திற்காக சுமார் ரூ. 110 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் எளிதில் அங்கு தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தி தொடங்கப் பெரிதும் உதவும் இத்திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறதென்பது கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

| செப்பனிட்ட நிலங்கள் அமைந்துள்ள இடம். | கையகப்படுத்த எண்ணியுள்ள நிலப்பரப்பு. (ஏக்கரில்.) | கையகப்படுத்த பட்ட நிலப் பரப்பு. (ஏக்கரில்.) | 31–10–1969 அன்றுள்ள படி ஒதுக்கப் பட்டுள்ள நிலங்கள். |
|---|---|---|---|
| 1 அம்பத்தூர் .. .. | 1,005 | 983 | 343.50 |
| 2 மேட்டூர் .. .. .. | 209 | 209 | 13·00 |
| 3 மதுரை .. .. .. | 540 | 527 | 17·00 |
| 4 திருச்சி .. .. .. | 476 | 476 | .. |
| 5 இராணிப்பேட்டை ... .. | 727 | 727 | .. |
| 6 திருவள்ளூர் .. .. | 393 | .. | .. |
| 7 இண்டி .. .. .. | 159 | 159 | 8·00 |

மேற்சொன்ன திட்டங்களைத் தவிர, இம் மாநிலத்தில் சேலம், அரக்கோணம், தூத்துக்குடி, மணலி, கத்திவாக்கம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் செப்பனிட்ட நிலங்கள் கொண்ட பேட்டைகளை நான்காம் திட்டக் காலத்தில் அமைக்கக் கருதியுள்ளது.

மனைக்கான செலவுகள், மூன்று தவணைகளில் வசூலிக்கப்பட்டு வந்தன. மனையைப்பெறும் நேரத்தில், முதல் தவணையாக 50 சதவீதமும், மனையைப் பெற்றுக் கொண்ட பின்னர் இரண்டாண்டுகளுக்குள்ளாக 25 சதவீதமும், இரண்டாம் தவணை செலுத்திய தேதியிலிருந்து ஓராண்டிற் குள்ளாக 25 சதவீதமும வசூலிக்கப்பட்டன.

செப்பனிட்ட நிலங்களின் விலையைச் செலுத்துவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்தும் நோக்கத்துடனும், தொழில் அதிபர்களை அதிகமாக ஈர்க்கும் கருத்துடனும், 1969 நவம்பரில் அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிட்டது;—

(1) அம்பத்தூரில் உள்ள செப்பனிட்ட நிலங்களை பொறுதத மட்டில், ஏக்கர் ஒன்றுக்கான செலவு 30,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(2) கிண்டியில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்த வரையில், அந்த நிலத்திற்கான செலவை ஆறு தவணைகளில் செலுத்தலாம்.

(3) தலைநகருக்கு தொலை தூரத்தில் இருக்கின்ற மதுரை, திருச்சி, மேட்டூர் ஆகிய பகுதிகளில் உள்ள செப்பனிட்ட நிலங்களை பொறுத்த வரையில், செலவை மூன்று தவணைகளில் வசூலிக்கலாம் என்ற தற்போதைய நடைமுறைக்கும் கூடுதலாக, செலவை ஆறு ஆண்டுத் தவணைகளாக வசூலிக்கலாம் என்றும் அரசு இசைவளித்து, தலைநகருக்குத் தொலை தூரத்தில் உள்ள மனைகளைப் பொறுத்த வரையில், 95 ஆண்டுகால நீண்ட கால அளவுக் குத்தகை அடிப்படையில் தொழில் அதிபர்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்படலாமென்கிற வகையில் புதிய தூண்டுகோல் இப்போது அளிக்கப்படுகிறது. செப்பனிட்ட நிலங்களின் செலவில் 6 சதவீதம் தான் ஆண்டுக் குத்தகைத் தொகையாகிறது. எனினும் குத்தகைதாரர், குத்தகைக்கால அளவின் முதல் பத்தாண்டுகளுக்குள்ளாக, அந்த மனையை ஒரேயடியாக வாங்கிக் கொள்வது அவருடைய விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

## கைவினைப் பணிகள்.

இதற்கு முந்திய திட்டக் காலத்தில், பல்வேறு கைவினைப் பணிகளில் பயிற்சி-உற்பத்தி நிலையங்கள் பலவற்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இம்மாநிலத்தின் தொன்மை வாய்ந்த கைவினைகளுக்குப் புத்துயிரூட்டி, அவை தழைத்தோங்க வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கைவினைப் பணி வளர்ச்சிக்காக நான்காம் ஐந்தாண்டு திட்டக்காலத்தில் ரூ. 60,00,000 நிதி தற்காலிகமாக ஒதுக்கப்பட்டது. 1969-70 (திட்டத்தின் முதலாண்டு) ஆம் ஆண்டில் இத்திட்டம் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 12·93 லட்சமாகும். கடந்த திட்டங்களில் தொடங்கப்பட்ட பிரிவுகளில் பெரும்பாலானவை திட்டத்தின்கீழ் வராத வேலைத் திட்டங்களாகத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கீழ்க்கண்ட கைவினைப் பணிகளுக்காக அரசு தற்போது பயிற்சி நிலையங்களை நடத்தி வருகின்றது:—

மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம், சுவாமிமலை, தாம்பரம், சேலம் ஆகிய இடங்களில் வேலைப்பாடுகள் அமைந்த உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நாகர்கோயிலில் ரதத் தயாரிப்பு பயிற்சி நிலையம், நாச்சியார்கோயில், வாகைக்குளம், காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் உள்ள வெண்கலப் பாத்திரத் தயாரிப்புப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி மாவட்டம், கோபாலசமுத்திரம், ஆயிக்குடி ஆகிய இடங்களில் உள்ள சணல் இரட்டுகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம் புதுக்கோட்டையிலும், இராமேஸ்வரத்திலும் உள்ள பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், கோலக்குடியில் உள்ள கம்பளி இரட்டுகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நெடுவயலில் உள்ள கற்றுழை நார்ப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், சேரன்மாதேவியில் உள்ள மெருகு எண்ணெ பூசப்பட்ட மரச்சாமான்கள் குறித்த பயிற்சி நிலையம் ஆகியவற்றைத் தற்போது அரசு நடத்தி வருகின்றது.





1969-70-ல் இப்பயிற்சி நிலையங்கள் பலவற்றில் 243 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சிக்கால அளவு அந்தந்த கைவினைப்பணிகளைப் பொறுத்து ஓர் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகள் வரை பரந்துள்ளது. 1968-69-ம் ஆண்டில் கைவினைப் பொருள்கள் உற்பத்தியின் மதிப்பும் விற்பனைத் தொகையும் முறையே ரூ.3,79,644·35, ரூ. 3,17,921·70 ஆகும். 1969-70-ல் 1969-ம் ஆண்டு எப்ரல் 1-ம் தேதியிலிருந்து 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி வரை உற்பத்தியின்மதிப்பும் விற்பனைத் தொகையயும் முறையே ரூ. 2,87,568·24, ரூ. 2,71,566·73 ஆகவும் இருந்தன.

மேற்சொன்ன பயிற்சி நிலையங்களைத் தவிர, கலைகள்—கைவினைப்பணிகள் கல்லூரி ஒன்றைச் சென்னையிலும், கலைகள்-கைவினைப்பணிகள் பள்ளி ஒன்றைக் கும்பகோணத்திலும் துறை நடத்தி வருகின்றது. இந்த இரண்டு நிலையங்களில் இரண்டாண்டு ஒருங்கிணைக்கப்பட்ட படிப்பும், அதன்பின் மூன்றுண்டு டிப்ளமா படிப்பும் நடத்தப்படுகிறது. வண்ணம் தீட்டுதல, சிறப வேலை, வணிக ஓவியம் ஆகியவை இப்பாடமுறைகளில் அடங்கும். இந்த அரசினால் தகுதி வாய்ந்த மட்டங்களில் உள்ள பணிகளுக்காக தெரிந்தெடுக்கப்படும் காரியங்களுக்காக, அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகம் அளிக்கும் கலைக்கான தேசியப் பட்டயத்திற்கிணையாக சென்னை, கலை-கைவினைப்பணிகள் கல்லூரியினால் கொடுக்கப்படும் தகுதிப்பட்டயங்கள் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சென்னையிலுள்ள கலைகள்—கைவினைப்பணிகள் கல்லூரியில் 1968 ஜூலை முதல் தொழில் வடிவ அமைப்புககலையில் பட்டமேற்படிப்புப் பாடமுறை ஒன்று தொடங்கப்பட்டு உள்ளது.

நாச்சியார் கோயிலில் உலோகக் கைவினைப் பணிப் பொருள்கள் உற்பத்திக்கான பொது வசதிகள் பெற்ற நிலையம் இந்த ஆண்டில் செயல்படத் தொடங்கியது. இந்நிலையம் உள்ளூர் கைவினைஞர்களுக்கு நியாயமான கட்டண வீதங்களில் வசதிகளையளிக்கவேயுள்ளது.

கிருஷ்ணகிரியில் கருங்கற்களைப் பளபளப்பாக்குவதற்கான உற்பத்தி நிலையமும் செயல்படத் தொடங்கியுள்ளது. ஏற்றுமதியைப் பெருக்கும் நோக்கத்துடன், லிபஜிக் (Leipzig East Germany) காட்சியில் வைப்பதற்காக பளபளப்பாகிய கருங்கற்களின் மாதிரிகளை இந்த நிலையம் அனுப்பியுள்ளது.

தமிழ்நாடு கைவினைப் பணி பொருட்களின் தரம், உற்பத்தி, விற்பனை ஆகியவைப்பற்றி ஆலோசனை கூறுவதற்காக மாநில அரசினால் அமைக்கப்பட்ட மாநிலக் கைவினைப் பணிப் பொருள்கள் வாரியம், பயனுள்ள கருத்துரைகளைக் கூறியுள்ளது. அவை தற்போது பின்பற்றப் பட்டு வருகின்றன. அந்தப் பரிந்துரைகளைத்தொடர்ந்து, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்ட கடைகளில் கைவினைப் பணிப் பொருட்கள் விற்கப்படுகின்றன. மீனம்பாக்கம் விமான நிலைய நுழைவு வாயிலின் முன்பு கல்லில் செதுக்கப்பட்ட இரண்டு துவார பாலகர்களையும், இரண்டு தீப லட்சுமிகளையும் நிறுவுவதற்கும் இந்திய அரசு முடிவு செய்துள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள சிற்பப்பயிற்சி நிலையத்தினால் இந்த கற் சிற்பங்கள் செதுக்கப்படும்.

தமிழ்நாட்டுக் கைவினைப்பணி பொருட்கள் சிட்னி (தொழில்) சந்தையில் வைக்கப்பட்டு, மக்களால் பாராட்டப்பெற்றன. சில வகைப்பொருள்கள் குறித்த விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. பிராங்பர்ட் (Frankfurt) (மேற்கு ஜெர்மனி) சந்தையில் கைவினைப் பணிப் பொருட்களைக் காட்சியில் வைப்பதற்குக் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாடு கைவினைப் பணிப் பொருட்களுக்குப் பணித் துறைச் செயற் கட்டளைப் பெறுவதற்காக, கைவினைப் பணிப் பொருட்கள் வாஷிங்டன், ரோம் ஆகிய நகரங்களில் உள்ள இந்திய வர்த்தகக் கமிஷனர்களுக்கு அவர்களது அலுவலகங்களிலும் ஏனைய

பொருட்காட்சிகளிலும் வைக்கப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன. நாகர்கோயில் ரதம் தயாரிப்புப் பயிற்சி நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ரதமும், மாமல்லபுர கடற்கரை ஆலயத்தின் மாக்கல் மாதிரியும், ஜப்பான், ஒசாகாவில் நடைபெறப்போகும் எக்ஸ்போ-70 பொருட்காட்சியில் வைப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளன. கோபாலசமுத்திரம், ஆயிக்குடி (திருநெல்வேலி மாவட்டம்) ஆகியவற்றில் உள்ள துறைப் பிரிவுகளில் தயாரிக்கப்படும் சணல் இரட்டுகளையும், இராமநாதபுரம், பழவேற்காடு (செங்கற்பட்டு மாவட்டம்), மணப்பாடு (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இடங்களில் தயாராகும் பனை ஓலைப் பொருட்களையும் இந்தத் துறை முறையாக ஏற்றுமதி செய்து வருகின்றது. ஏற்றுமதிக்கென உற்பத்தி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு துறைப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு கைவினைப் பணிப்பொருள்கள் தயாரிப்பாளர்களை ஆதரிக்கவும். அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதற்கும், சென்னை மாநகரில் 1969 ஆகஸ்டில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. இதைத் தொழில் அமைச்சர் தொடங்கி வைத்தார். கைவினைப் பணியாளர்களுக்காக நல்ல கருவிகளைப் பாதி விலையில் வழங்குவதற்கான திட்டம், நிறைவேறி வருகின்றது.

சென்னை, மாமல்லபுரம், நெய்வேலி, தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல் திருநெல்வேலி, சேலம், கோவை ஆகிய இடங்களில் கைத்தறித் துறையும், கூட்டுறவுத் தொழில் பிரிவுகளும் தனியார் கைவினைஞர்களும், கைவினைப் பணியாளர்களும் தயாரிக்கின்ற கைவினைப் பணிப் பொருள்களை விற்பனை செய்வதற்கு வசதியாயிருக்கும் பொருட்டு, மொத்தம் ஒன்பது கைவினைப் பணிப் பொருள் விற்பனை நிலையங்களை துறை நடத்தி வருகிறது. 1968–69-ல் இம்மாநிலத்தில் நடத்தப்பட்ட பெரிய பொருட்காட்சிகள் அனைத்திலும் இந்த விற்பனை நிலையங்கள் பங்கு கொண்டன. 1968–69-ம் ஆண்டில, மேற்குறிப்பிட்ட பொருட்காட்சிகளில் ரூ. 31·81 லட்சத்திற்கு விற்பனையானது. 1968–69-க்கான லாபம் ரூ. 45,464 ஆகும். மேற்சொன்ன துறை விற்பனை நிலையங்களைத் தவிர தமிழ்நாடு கைப்பணிகள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், வேலூர், ஈரோடு, உதகமண்டலம், கடலூர், கரூர், மதுரை, தூத்துக்குடி, சென்னை, புது டில்லி ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களை நடத்தி வருகின்றது. இந்த விற்பனை நிலையங்களில் மொத்த விற்பனைத் தொகை 1968–69-ல் ரூ. 12,54,895 ஆகும்.

## கயிறு.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒப்பளிப்புப் பெற்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஈத்தமொழியில் அரசு கயிற்றுத் தொழில் பள்ளி 1961-ம் ஆண்டு நவம்பர் 15-ம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. இங்கு மாணவர்களுக்கு இரண்டாண்டுக் காலத்தில் கயிறு திரித்தல, பாய் முடைதல், ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சி வகுப்பில் 1969–70-ல் 40 மாணவர்கள் முதலாண்டிலும், இரண்டாவது ஆண்டில் இரண்டு மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். நவீன உற்பத்தி முறையில் கயிற்றுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காகப் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் கயிற்றுப் பள்ளியை விரிவுபடுத்தும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம் மாநிலத்தில் பாய்களையும், முரட்டு நார்களையும் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை விளக்குவதன் பொருட்டு, திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில், முன்னோடி தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து ஆஸ்திரேலியா ஆகியவற்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட யந்திரங்கள் யாவும் நிறுவப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலை 1968-ம் ஆண்டு ஜூன் 13-ஆம் தேதியிலிருந்து உற்பத்தியைத் தொடங்கின. இந்தப் பிரிவில் ஓரளவு உற்பத்தி நடைபெற்று வருகிறது. மட்டை ஊறும் குட்டைகள் நான்கு கட்டி முடித்து, முறையாக நீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்த பின்னரே, இந்தப் பிரிவு முழுமையான உற்பத்தியைத் தொடங்கும். கிணற்றுடன் கூடிய அடுத்துள்ள நிலத்தைக்



கையகப்படுத்தி, அந்தக் கிணற்றிலிருந்து குழாய் மூலம் முறையாகத் தண்ணீர் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவில் தயாராகும் கலப்பு இழை மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

தென்னைமரம் வளர்க்கப்படும் பரப்பளவில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தையும், தேங்காய்க் காய்ப்பில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. பெரும்பாலும் தஞ்சாவூர் மாவட்டம் மற்றுமுள்ள மாவட்டங்களில் தேங்காய் நார் பெரும்பாலும் எரி பொருளாகவே பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், அதிலிருந்து நார் எடுத்து அதை ஆதாய முறையில் பயன்படுத்த முடியும். வெளிநாடுகளில் கயிற்று நாருக்கு மிகுந்த தேவையிருந்து வருகிறது. இம்மாநிலத்தில் கயிற்றுத் தொழிலை மேம்படுத்தும் பொருட்டும், பதப்படுத்தப்படாத தென்னை மட்டையிலிருந்து இயந்திர முறையில் கயிற்று நார் உரிப்பதன் மூலம் தென்னை பயிரிடுவோர்க்குக் கூடுதல் வருவாய் கிடைப்பதற்கு வகை செய்யும் பொருட்டும், திருத்த அடங்கல் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கீழ்க்கண்டவை அடங்கும்:—

1. தஞ்சாவூர், திருச்சி, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தென்னை மரங்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் ஆறு கட்புல விளக்கப் பிரிவுகள் அமைக்கப்படவிருக்கின்றன. அத்தகைய பிரிவை அமைப்பது குறித்த சாத்தியக் கூற்றையும், அவ்வாறு அமைப்பதன் மூலம் ஏற்படும் பொருளாதார வளம் பற்றியும், தொழில் முனைவர்களுக்கு உணர்த்துவதோடு, கயிற்று நார்ப் பிரிவுகளைத் தொடங்குவதில், அவர்களுக்குள்ள ஆர்வத்தைத் தூண்டவுமே மேற்படி ஆறு கட்புல விளக்கப் பிரிவுகள் அமைக்கப்படுவதாகும்.

2. தொழில்கள் குறித்து வழங்கப்படும் மாநில உதவியின் கீழ் ஆலைகளை அமைப்பதற்காகவும், நிலத்திற்காகவும், கட்டடப் பொறிகளுக்கும் நடைமுறை மூலதனத்திற்காகவும், தொழில் முனைவர்களுக்கு நிதி உதவி அளித்தல்.

3. இப்பிரிவுகள் தயாரித்துள்ள நார் விற்பனை குறித்து மத்தியப் பணி தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்தல்.

தனியார் தொழில் முனைவர்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் ரூ. 15·45 லட்சமும், மத்தியச் சங்கத்திற்கு மானியம் அளிப்பதன் மூலம் ரூ. 0·05 லட்சமும், ஏற்பளிக்கப்பட்ட உதவியையொட்டி பணியாளர் சம்பளமின்றிப் பணியாற்றுவது தவிர, மத்தியச் சங்கத்தின் மூலதனத்தில் பங்கேற்பதன் மூலம் ரூ. 0·10 லட்சமும், துறையைச் சார்ந்த ஆறு கட்புல விளக்கப் பிரிவுகள் குறித்துத் தொடரா இனச் செலவாக ரூ. 3·60 லட்சமும், தொடர் இனச் செலவாக ரூ. 0·76 லட்சமும், இத்திட்டத்தின் மூலம் ஏற்படும் செலவாகும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

## கிராமப் பணி நிலையங்கள்.

இத்துறையில் தற்போது செய்யப்பட்டு வரும் ஒரே தொழிற்சாலை கையினால் தயாரிக்கப்படும் காகிதத் தொழிற்சாலையாகும். இது மாமண்டூரிலுள்ளது. 1962-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ஆம் நாளன்று தொடங்கப்பட்ட இந்தப் பிரிவு சென்னையிலுள்ள எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநருக்கு, தட்டையான கோப்பு அட்டைகளை வழங்கி வருகின்றது. உயர்தர வரைப்படத் தாள்களையும், புகைப்படத் தொகுப்பு ஏட்டுத் தாள்கள் (Album mounts) முதலியவற்றைத் தயாரிப்பதன் மூலம் இத்தொழிற்சாலையின் பணிகளை பரவலாகக் கருதும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. இதற்கென, கனரக யந்திரத் தொட்டி ஒன்றை வாங்க வேண்டுமென்ற செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

ஆத்தூரில் மட்பாண்டத்திற்கான பணி நிலையம் ஒன்றை அமைப்பது குறித்த திட்டத்திற்கு அரசு 1962 ஜூலைத் திங்களில் ஒப்பளிப்பு வழங்கியது. ஆத்தூரில் அத்தகைய நிலையம் அமைப்பது குறித்த பொருத்த

மான மனை இல்லாமல் போகவே இத்திட்டம் செயல்படுத்தபட முடிய வில்லை. ஓமலூர் திட்டப் பகுதியில் அந்தப் பிரிவை அமைப்பதற்கு அரசு முடிவு செய்ததோடு நிலையான கட்டிடம் ஒன்றைக் கட்டுவது குறித்த கூடுதல் தொடரா இனச் செலவுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது.

## பட்டுத் தொழில்.

மாநிலங்கள் சீரமைப்புக்காரணமாக பெரும்பாலான பட்டுத் தொழில் பகுதிகள் மைசூர் மாநிலத்துடன் சேர்க்கப்பட்டுவிட்டன. இம்மாநிலத்தில் இத்தொழிலை விரிவுபடுத்துவதன் பொருட்டு, துறைவாரியான தொழிற்பிரிவுகள் பல பட்டு வளர்ப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டன. இத் தொழில் பிரிவுகளில் முதன்மையானவை நோய் நீங்கிய முட்டைகள் வழங்குவதற் காகவும் பட்டு வளர்ப்பவர்கள் உற்பத்தி செய்த பட்டுப் புழுக்களிலிருந்து நூல் எடுப்பதற்காகவும், அமைக்கப்பட்ட தொழிற் பிரிவுகளாகும். இத் தொழிலின் மேன்மையை விளக்குவதன் பொருட்டு 1967–68-ல் எரு மேடு, அசனூர் ஆகிய இடங்களில் புதிய கட்புலன் விளக்கப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும் ஒரு பண்ணை உத்தனப்பள்ளியில் நிறுவப் படவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1969–70-ல் ஜெர்மாலம் என்ற இடத்தில் பண்ணை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. முசுக்கட்டைச் செடி நடுவதற்காக பதியங்கள் வழங்குதல், பாதிவிலையில் கருவிகள் நீங்கலாக, கடனுகை நிதி உதவி செய்தல், கிணறுகள் தோண்டுவதற்காக உதவித் தொகை வழங்குதல், டட்டுப்புழு வளர்ப்புகூடாரங்கள் கட்டுதல் ஆகியவற்றின் மூலம் பட்டு வளர்ப்பவர்களுக்குச் செய்யப்பட்டு வருகிற உதவி தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. 1969–70-ல் கடனுகவும் உதவித் தொகை யாகவும் ரூ. 1,21,500 வழங்கப்பட்டது. ஒசூர் வட்டம் கோலட்டியிலும் (நீலகிரி மாவட்டம்) மசினிக்குடியிலும் (தளவாடி பிர்க்கா) மாதஹள்ளி யிலும் பட்டு வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த மூன்று பெரும் அளவு பட்டுப் பண்ணைகளில் இங்கிருந்து பெறும் பதிகங்கள் மிகவும் பயன்படுத்தப்பட்டன.

கோலட்டியிலும், மசினிக்குடியிலும், மாதஹள்ளியிலும் ஏற்படுத்தப் பட்ட பெரிய அளவு பட்டுப்பண்ணைகள் முசுக்கட்டைச் செடி, முறையே 450,40,120 எக்கர் பரப்பளவில் உற்பத்தியைத் தொடங்கின. தளவாடி பிர்க்காவில் பெரிய அளவு பட்டுப்பண்ணைக்காக 250 எக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. நிலம் பண்படுத்தப்பட்ட பிறகு 120 எக்கர் பரப்பளவில் முசுக்கட்டைச் செடி நடப்பட்டது. தனியார் துறையில் ஓசூர் வட்டத்திலுள்ள 13,974 எக்கர் அரசு தரிசு நிலம் அரசு ஏற்பு பெற்று முசுக்கட்டைப் பயிரிடுவதற்கு வெளியவர்களுக்கு, குத்தகைக்கு விட முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒசூரில் பட்டு நூல் முறுக்கேற்றும் பிரிவு ஒன்றுக்கான கட்டிடம் கட்டும் வேலை முடிக்கப்பட்டு யந்திரமும் நிறுவப்பட்டு பணித் தொடங்கப் பட்டது. 1969–70-ஆம் ஆண்டில் 200 கிலோகிராம் அளவுள்ள பட்டு முறுக் கேற்றப்பட்டது.

1969–70-ஆம் ஆண்டிலும் கடந்த ஆண்டிலும் ஒப்பளிப்புப் பெற்ற வேலைத் திட்டங்களும் 1970–71-ல் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்த மூன்று பெரிய அளவு பட்டுப்பண்ணைகளில் முசுக்கட்டை மரங்கள் வைத்து 300 எக்கர் அளவிற்கு விரிவுபடுத்தப்படும். இத் தொழிலில் நவீன வளர்ச்சிகளைப்பற்றி ஆய்வு நடத்த அதிகாரி ஒருவரையும் ஜப்பானுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. குன்னூரிலுள்ள பட்டு நூல் பிரிவு 1969–70-ல் ஆராய்ச்சிப் பிரிவாக மாற்றப்பட்டது.

பட்டுவளர்ப்புத் திட்டங்களைப்பற்றிய பட்டியல் இந்த ஆய்வுரையின் V-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.



## தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

1967–68-ஆம் ஆண்டில் தொழில் கூட்டுறவு இயக்கத்தின் பணி குறித்து நடத்தப்பட்ட ஆய்விலிருந்து பணியாளர்களுக்கான பல சங்கங்கள் தொடர்ந்து விரயத்தில் செயல்பட்டு வருவது தெரியவந்தது. அவற்றில் சில பொருளாதார முறையில் சிக்கனமாயில்லை. ஆய்விற்குப் பிறகு 58 சங்கங்களை மூடிவிடும்படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 31—3—1969 அன்று முடிவடைந்த ஆண்டில் 34 சங்கங்களை மூடி விடுவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. 1968–69-ஆம் ஆண்டில் ஆறு புதிய சங்கங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டன.

31—3—1969 அன்றுள்ளபடி 367 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல் பட்டு வந்தன விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| (1) சிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. | 204 |
| (2) கைவினைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 128 |
| (3) கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. .. | 34 |
| (4) பட்டுப்புழு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 1 |
| மொத்தம் .. | 367 |

தொழில் கூட்டுறவுத் திட்டங்களுக்காக (கூட்டுறவுத் தொழிற் பண்ணைகளுக்கான செலவு நீங்கலாக) அரசினால் 1968–69-ஆம் ஆண்டில் ரூ. 19·66 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் எல்லாச் சங்கங்களின் மொத்த உற்பத்தியின் மதிப்பு ரூ. 319 லட்சமாகும். விற்பனைத் தொகை ரூ. 344 லட்சமாகும். 1969–70-ஆம் ஆண்டில் தொழில்-கூட்டுறவுத் திட்டங்களுக்கு ரூ. 20·07 லட்சம் செலவு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் நீலகிரியிலுள்ள எட்டு கூட்டுறவு தேயிலைத் தொழிற் சாலைகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. தோராயமாக 9,000 எக்கர் தேயிலைத் தோட்டங்களை சொந்தமாக வைத்திருக்கும் சிறு அளவில் தேயிலைப் பயிரிடும் 3,433 பேர் இந்த எட்டு தொழிற்சாலைகளினால் பயனடைந்தனர். தேயிலை தொழிற்சாலை களில் கடந்த ஆண்டின் 1967–68 மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 94 லட்சமாக இருக்க, 1968–69-ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 129 லட்சமாகும். சிறு அளவில் தேயிலைப் பயிர் செய்பவர்களின் நலனுக்காக ரூ. 165 லட்சம் மொத்த செலவில் தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளின் மேம்பாட்டிற்காக ஒருங் கிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு தேயிலை வாரியத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இத்திட்டம் தேயிலை வாரியத்திடம் முடிவு பெறுமல் இருக்கிறது. இத்திட்டத்தின்கீழ், சிறு அளவில் தேயிலைப்பயிர் செய்பவர்களின் நலனுக்காக மேற்கொண்டும் எட்டு கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கும், தற்போதுள்ள கூட்டுறவுத் தேயிலைச் தொழிற்சாலைகளின் வாணிபத்தை விரிவு படுத்துவதற்கான உதவி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. ரசாயன உரம் முதலியவைகளைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் தற் போதுள்ள தொழிற்சாலைகளுக்கு மத்திய சங்கம் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றது. இந்த சங்கம் ரூ. 30·107 லட்சம் ஆதாயம் அடைந்தது.

ஆண்டின் தொடக்கத்தில் தீக்குச்சி தயாரிக்கும் மூன்று சிறிய கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வந்தன. சிவகாசியில் இதுபோன்ற இன்னுமொரு சங்கத்தை இந்த ஆண்டில் பதிவு செய்வதற்கான ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது. இந்த மூன்று சிறிய தீக்குச்சி தயாரிக்கும் சங்கங்கள் ரூ. 97·42 லட்சம் மதிப்புள்ள தீக்குச்சிகளை விற்பனை செய்தது. தரமான தீக்குச்சிகளைத் தயாரிப்பவை என்ற பெயரை இச்சங்கங்கள் ஈட்டியுள்ளன.

மதுரையிலுள்ள அலுமினிய பாத்திரங்கள் தயாரிக்கும் தொழிலாளர்களுக்காக, தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளது. உற்பத்தி எதும் தானே செய்யாது பணி நிலையமாகவே இச்சங்கம் செயல்படும். மூலப்பொருட்களையும் பிறவற்றையும் வழங்குவது போன்ற பணி வசதிகளை இச்சங்கம் வழங்கும். இச்சங்கம் விரைவில் செயல்படத் தொடங்கும்.

ஆவடியிலுள்ள நான்காவது படைப்பிரிவு சிறப்புப் படைக்கலம் தாங்கிய காவலர்களுக்கு கம்பளிக்கால் உறை முதலியன தயாரிப்பதற்காக பெண் தொழிலாளர்களுக்கான தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் முந்திய R. I. P. திட்டத்தின்கீழ் செயல்படும் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களாவார்கள்.

சென்னையில் ஒலிபெருக்கிகள், பேப்பர் கண்டென்ஸர் (paper condensers) தயாரிப்பதற்கு ஒன்றும் கோவில்பட்டியிலுள்ள தீக்குச்சி தொழிலாளர்களுக்கு ஒன்றுமாக, இரண்டு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னாள் இராணுவ வீரர்கள் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ளன முன்னாள் இராணுவ வீரர்களின் மறுவாழ்வு, சீரமைப்புக்கான சிறப் நிதி நிர்வாகத்திற்குரிய மாநில நிர்வாகக் குழு இந்த இரண் சங்கத்திற்கும் முறையே ரூ. 3·05, ரூ. 0·15 லட்சம் கடனாக வழங்கியது

அரசாலும், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியாலும், இத்தகைய சங்கங்களுக்கு கணிசமான நிதி உதவி அளிக்கப்பட்டது.

நிதி உதவியின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | 1961–62 முதல் 1968–69 வரையில். | | 1-4-1969 முதல் 31-12-69 வரையில். | |
|---|---|---|---|---|
| | சங்கங்களின் எண்ணிக்கை. | ரூபாய் லட்சத்தில். | சங்கங்களின் எண்ணிக்கை. | ரூபாய் லட்சத்தில். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 தொழில்களுக்கு அரசு உதவி அளிப்புச் சட்டம். | 312 | 18·75 | 2 | 0·10 |
| 2 தமிழ்நாட்டுத் தொழிலியல் கூட்டுறவு வங்கி— | | | | |
| (a) தொழில் கூட்டுறவுச் சங்கங்கள். | 236 | 121·79 | 17 | 6 00 |
| (b) சிறு தொழிலதிபர்கள் .. | 51 | 15·20 | .. | .. |

1968–69-ம் ஆண்டு தமிழ்நாட்டில், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுள்ளதன் முடிவுகள் பின்வருமாறு :—

1 31—3—1969-ல் உள்ள நிலவரப்படி செயல்பட்டு வந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. — 367

2 மூன்றாண்டுக் காலத்திற்கு மேலாகச் செயல்பட்டு வரும் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை. — 35 2



| | 1961–62 முதல் 1968–69 வரையில். | | 1-4-1969 முதல் 31-12-69 வரையில். | |
|---|---|---|---|---|
| | சங்கங்களின் எண்ணிக்கை. | ரூபாய் லட்சத்தில். | சங்கங்களின் எண்ணிக்கை. | ரூபாய் லட்சத்தில். |
| (1) | (2) | (3) | (4) | (5) |

3 (a). இரண்டாம் இனத்தில் ஆதாயத்துடன் செயல்பட்டு வருகின்ற சங்கங்களின் எண்ணிக்கை. — 106

(b). இரண்டாம் இனத்தில் விரயத்தில் செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை—

(1) கைப்பணிச் சங்கங்கள் (ஹரிஜனங்கள், பெண்டிர், கயிற்றுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் நலனுக்கான சங்கங்கள் உட்பட). — 169

(2) மற்றவை .. .. .. .. .. — 77

4 (a). 3(a) இனத்திலுள்ள சங்கங்களுக்கு 1968–69-ல் முடிவடைந்த ஆண்டில் கிடைத்த ஆதாயம். — ரூ. 9·32 லட்சம்.

(b). 3(b) இனத்தில் உள்ள சங்கங்களுக்கு 1968–69 ஆண்டில் ஏற்பட்ட விரயம். — ரூ. 12·23 லட்சம்

(c). இரண்டாம் இனத்தில் 31–3–1969-ல் உள்ள நிலவரப்படி மொத்த விரயம். — ரூ. 36·12 லட்சம்.

5 மூன்றாண்டுகளுக்கு மேலாகச் செயல்படும் சங்கங்களுக்குக் கிடைத்த ஆதாயம். — இல்லை.

6 (a) 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்களில் 1968–69-ல் ஆதாயத்துடன் செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை. — 107

(b) 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்களில், 31–3–1969-ல் ஆதாயத்தில் செயல்பட்டு வரும் சங்கங்களின் எண்ணிக்கை. — 63

(c) 1-வது இனத்தில் 1968–69-ல் குறிப்பிட்டுள்ள சங்கங்களில் விரயத்தில் செயல்பட்டு வரும் சங்கங்களின் எண்ணிக்கை. — 260

(d) 31–3–1969-ம் தேதி நிலவரப்படி 1-வது இனத்தின் விரயத்தில் செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை. — 304

7 (a) சங்கங்களுக்கு 31–3–1969-ல் முடிவடைந்த ஆண்டில் கிடைத்த ஆதாயம். — ரூ.9·46 லட்சம்.

(b) சங்கங்களுக்கு 1968–69 ஆண்டில் ஏற்பட்ட விரயம். — ரூ. 12·97 லட்சம்.

(c) 1-வது இனத்தில் எல்லா சங்கங்களுக்கும் ஏற்பட்ட மொத்த விரயம். — ரூ. 36·26 லட்சம்.

8 இரண்டாம் இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. — 29,194

முதல் இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. — 302,54

கீழ்க்காணும் திட்டங்களை 1970–71-ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கான செயற்குறிப்பு உள்ளது.

1. கைவினை தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு மானியம் வழங்குவதற்கானத் திட்டம்.

2. தஞ்சாவூரிலுள்ள இசைக்கருவிகள் கூட்டுறவுச்சங்கம் கலை நுணுக்கத் தட்டுக்கள் தயாரிக்கும் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கான பட்டறை அலுவலகத்திற்கு வகை செய்வதற்குரியத் திட்டம்.

3. இராமேஸ்வரம் கிளிஞ்சல்-சங்கு தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு பட்டறைக்கு வகை செய்வதற்கான திட்டம்.

4. தஞ்சாவூர் அழகு வேலைப் பாட்டுத் தட்டுக்கள் தயாரிக்கும் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அழகு வேலைப் பாட்டுத் தட்டுக்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம் நிறுவுவதற்கானத் திட்டம். இம்மாநிலத்தில் மாவட்ட வாரியாக உள்ள தொழில்–கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் தொழில் கூட்டுறவுகள் குறித்த வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த விவரங்கள் ஆகியவை இந்த ஆய்வுரையின் VI & VII-வது இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

**பொருட்காட்சிப் பிரிவு.**

1969–70-ஆம் ஆண்டில் (1969 டிசம்பர் வரை) தொழில், வாணிக இயக்குநர் அலுவலகம் பின்வரும் பொருட்காட்சிகளில் பங்கு கொண்டது.

| பொருட் காட்சி. | கால அளவு. |
|---|---|
| (1) 15-வது அனைத்திந்திய கைத்தறி வாரப் பொருட் காட்சி, கடலூர். | 30–3–1969 முதல் 6–4–1969 வரை. |
| (2) குடும்ப நல இயக்கப் பொருட்காட்சி, உடுமலைப் பேட்டை. | 30–3–1969 முதல் 6–4–1969 வரை. |
| (3) சித்திரைப் பொருட்காட்சி, மதுரை .. .. | 28–4–1969 முதல் 16–6–1969 வரை. |
| (4) அனைத்திந்திய கலை, தொழில் பொருட் காட்சி, திருச்சி. | 30–5–1969 முதல் 27–7–1969 வரை. |
| (5) அங்காளம்மன் திருவிழாப் பொருட் காட்சி, மேல் மலையனூர், தென் ஆர்க்காடு மாவட்டம். | 15–2–1969 முதல் 25–2–1969 வரை. |
| (6) கிராமநலக் கண்காட்சி, நெய்வேலி .. .. | 2–7–1969 முதல் 20–7–1969 வரை. |
| (7) 14-வது சுகாதாரத் தேசிய விழா, திருநெல்வேலி. | 20–6–1969 முதல் 20–7–1969 வரை. |
| (8) வாவுபலிப் பொருட்காட்சி, திருநெல்வேலி .. | 5–8–1969 முதல் 15–8–1969 வரை. |
| (9) பூக்காட்சிப் பொருட்காட்சி, உதகமண்டலம் .. | 17–5–1969. |
| (10) வேளாண்மைக் கருத்தரங்குப் பொருட்காட்சி, லால்குடி. .. | 27–9–1969 முதல் 28–9–1969 வரை |
| (11) அலங்காரப் படகுகளின் அணிவகுப்பு, கோடைக் கானல். | 28–5–1969. |



| பொருட் காட்சி. | கால அளவு. |
|---|---|
| (12) அன்றும், இன்றும் பொருட்காட்சி, குறளகம் .. | 8–9–1969 முதல் 30–11–1969 வரை. |
| (13) பார்க்பேர் பொருட்காட்சி .. .. .. .. | டிசம்பர் 1969— ஜனவரி 1970. |
| (14) தேசியச் சுற்றுலா, கேளிக்கை பொருட்காட்சி. .. | டிசம்பர் 1969– ஜனவரி 1970. |

மதுரை, திருச்சிராப்பள்ளிப் பொருட்காட்சிகளில் துறையைச் சார்ந்த நிலையங்கள் பரிசு பெற்றன.

இப்பொருட்காட்சிகள் தொழில் துறை மேற்கொண்டுள்ள பணிகளையும் பொது மக்களை வாங்குவதற்குக் கிடைக்கும் பலவகைக் கைவினைத் தொழில் பொருள்களையும், சிறு பொருட்களையும் பற்றிப் பொது மக்கள் அறிய உதவுகின்றன.

இப் பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் இத்துறை வெளிநாட்டுச் சந்தைகளிலும், பொருட்காட்சிகளிலும் பங்கு கொள்ளவும் திட்டமிட்டுள்ளது. 1969–70-ஆம் ஆண்டில் மே 19 முதல் 25 வரை ஹாங்காங்கில் நடந்த "இந்திய விற்பனை வாரம்", 1969 அக்டோபரில் நடந்த சிட்னி விற்பனைப் பொருட்காட்சி ஆகியவற்றில் கலந்து கொண்டதுடன், தூதரகங்களில் வைத்து வருவதற்காகவும் சந்தைகளிலும் பொருட்காட்சிகளிலும் காட்சியாக வைப்பதற்காகவும் கைவினைத் தொழில் பொருள்களை வாஷிங்டனிலும், ரோமிலும் உள்ள இந்தியத் தூதரகங்களுக்கு அனுப்பி வைத்தது.

1969 அக்டோபரில் நடந்த சிட்னி விற்பனைக் கண்காட்சியில் இத்துறை நம் மாநிலத் தனியார் துறையோடு இணைந்து கலந்து கொண்டது.

வெளி நாட்டில் நடந்த பொருட்காட்சி ஒன்றில் பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து கலந்து கொண்டது இதுவரை காணாத அரிய காட்சியாகும். இம் முயற்சியில் இத்துறை வெற்றிகண்டது பாராட்டத் தக்கதாகும்.

மிக அழகு வேலைப்பாடமைந்த நுண்ணிய கைவினைத் தொழில் பொருட்களை ஜப்பானிலுள்ள ஒசாகாவிற்கு அனுப்ப இத்துறை ஏற்பாடு செய்கிறது. 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் திங்களில் திரிபோலி, லீப்சிக் ஆகிய இடங்களில் நடக்கவிருக்கும் அனைத்து நாடுகள் கண்காட்சியில் மேலும் சிறந்த முறையில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

சுருலாப் பயணிகளைக் கவரும் வகையில் 28–5–1969-அன்று கோடைக் கானல் ஏரியில் நடந்த அலங்காரப் படகுகள் அணி வகுப்பில் இத்துறையும் கலந்து கொண்டது.

**வேலையிழந்த பொற்கொல்லர்களுக்கு மறு வாழ்வளித்தல்.**

1963 ஜூன் 1-ஆம் நாள் முதல் 1969 மார்ச் 31-ஆம் நாள் வரையுள்ள காலத்தில் வேலையிழந்த 25,197 பொற்கொல்லர்களுக்கு ரூ. 230·26 லட்சம் வரை கடன் தொகை, அவர்கள் மாற்று வாணிபம் அல்லது தொழிலில் மறு வாழ்வு பெற வழங்கப்பட்டது.

1968 செப்டம்பர் 1-ம் தேதியன்று செயலுக்கு வந்த 1968-ம் ஆண்டு தங்க (கட்டுப்பாடு) சட்டத்தில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு பொன் வேலை செய்வதற்குக் கடன் வாங்கும் பொற்கொல்லர்களுக்கும் சான்றுகள் வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இச் சட்டம் செயல்படத் தொடங்கிய தேதியிலிருந்து அதாவது, 1968 செப்டம்பர் 1-ம் தேதி

யிலிருந்து ஆறு திங்களுக்குள் இத்தகைய சான்றுகளுக்கான விண்ணப்பங்கள் மத்திய ஆயத்துறை அதிகாரிகளுக்குச் செய்து கொள்ளப்பட வேண்டும். சான்று வழங்கப் பெற்ற தேதியிலிருந்து இரண்டு ஆண்டு களுக்குள், இதற்காக கடன் வழங்கும் அதிகாரி குறிப்பிடக்கூடிய தவணைகளில் கடன் திருப்பிச் செலுத்தப்படாவிட்டால் அவ்வாறு வழங்கப்பெற்ற சான்றுகள் ரத்து செய்யப்படும்.

சென்னை மத்திய ஆயத்துறைக் கலெக்டர் அளித்துள்ள தகவலின்படி இந்த மாவட்டத்தில் 1969 செப்டம்பர் 30 அன்றுள்ளபடி சான்றிதழ் பெற்ற பொற்கொல்லர்கள் எண்ணிக்கை 42,050 ஆகும்.

## கிராமத் தொழில் திட்டங்கள்

கிராமப்புறப் பகுதிகளிலும், சிறு நகரங்களிலும் கிராம, சிறு தொழில்கள் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இந்தியா முழுவதும் தெரிந்தெடுக்கப்பட்ட 40 கிராமப் புறப் பகுதிகளில் சிறு தொழில் முழ்முர வளர்ச்சிக்கு முன்னோடித் திட்டங்களை 1962-ம் ஆண்டில் இந்திய அரசு கொண்டு வந்தது. இதில் 3 திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டன.

முன்னோடித் திட்டங்களுக்காக இடங்களைத் தெரிந்தெடுப்பது குறித்து திட்ட ஆணைக் குழு குறிப்பிடும் கூறுகளின் அடிப்படையில், தொழில் மிகவும் பின்தங்கியவையும், நிலம் பெருமளவுக்குப் பயன்படுத்தப்படுபவையும், வேலையின்மையும் வேலைவாய்ப்புக் குறைந்த நிலையும் மலிந்திருப்பதாக எளிதில் உணரக்கூடியவையுமான கீழ்க்காணும் மூன்று திட்டங்களை மாநில அரசு தெரிந்தெடுத்தது:—

(1) செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்பூதூர், திருவள்ளூர் வட்டங்கள், பென்னலூர்பேட்டை துணை வட்டம்.

(2) சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டம், தற்பொழுது ஓமலூர் வட்டம், ஓமலூர், மேட்டூர் வட்டங்கள் என்றும் இரு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

(3) திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி வட்டம்.

வேளாண்மை, பாசனம், போக்குவரத்து முதலியவற்றை எல்லா வகைகளிலும் மேம்படுத்துவதன் வாயிலாக, கூட்டுறவு வேளாண்மைத் தொழில் பொருளாதாரம் கொண்டு வருவதே முதன்மையான நோக்கமாக இருப்பதால், வாழ்க்கை நிலையையும், உற்பத்தி நிலையையும் உயர்த்துவதற்காகவும், கிராமச் சமூகத்தினரில் நிலமற்றோருக்கும் பொருளில்லாருக்கும் வேலை வாய்ப்புகளைப் பெருவாரியாக நல்குவதற்காகவும் தொழில்கள் வளர்ச்சியை முழு அளவில் தூண்டியும் வளம் பெறும் வாய்ப்புகளைத் திரட்டவும் வேண்டும். எனவே, தொழில்களின் வளர்ச்சியை முக்கியமாகச் செரிவு படுத்துவதே இத் திட்டங்களின் நோக்கமாகும். கிராமப் பகுதிகளில் இத் தொழில்களையும் அவற்றிற்குத் துணையான நடவடிக்கைகளையும் வளர்க்க வேண்டும். இதற்கென இத் திட்டப் பகுதிகளில் நியமிக்கப்பட்ட திட்ட அதிகாரிகளால் திட்டப் பகுதிகள் ஆய்வு வேலை நடத்தப்பட்டது.

இதுவரை அனுமதித்து செயல்படுத்தப்பட்ட இவ் வேலைத் திட்டங்களில் பயிற்சித் திட்டமாக பொது வசதிப் பணி நிலையங்கள், மூன்று பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள், பளபளப்பு ஓடுகள் தொழில் பிரிவு, காலணி தொழில் பிரிவு, மரவேலைப் பிரிவு, காகித உரைகள், காகிதப் பைகள் தயாரிப்புப் பிரிவு, சாக்குக் கட்டிகள் உற்பத்திப் பிரிவு, பாலிதீன் தட்டைக் குழாய்கள் உற்பத்திப் பிரிவு, துறைப் பிரிவுகள், மற்ற வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

**1969–70-ஆம் ஆண்டில் (திருத்த மதிப்பீடு) இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ. 21·62 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டுக்காக ரூ. 17 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.**



குறிப்பிட்ட பயிற்சிக் காலம் முடிவடைந்த பிறகு, கீழ்க் காண்பனவற்றைத் தவிர திட்டப் பகுதிகளில் தொடங்கிய மூன்று பயிற்சித் திட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டன:—

(i) திருப்பாச்சூர் செம்பரம்பாக்கம் பொது நோக்குப் பொறியியல் பட்டறைகளில் பயிற்சி.

(ii) ஓமலூர், நாங்குனேரி திட்டப் பகுதிகளிலிருந்து சேலத்திலும், திருநெல்வேலியிலும் உள்ள கூட்டுறவு அச்சகங்களில் நியமிக்கப்படுபவர்களின் பயிற்சி.

ஸ்ரீபெரும்பூதூர் திட்டத்தில் நான்கு பொது வசதி நிலையங்கள் உள்ளன. முதன் முதலில் தொடங்கிய இரு பொது வசதி நிலையங்கள் செயல்படுவதை கவனித்துப் பார்த்த பிறகு, மற்றும் இரு நிலையங்கள் துவங்குவது அவசியமில்லை எனக் கருதப்பட்டது. நாங்குனேரி திட்டத்தில் பத்துப் பொது வசதி நிலையங்களும், ஓமலூர் திட்டத்தில் நான்கு பொது வசதி நிலையங்களும் யாவும் செயல்பட்டு வருகின்றன.

ஸ்ரீபெரும்பூதூரில் இரண்டு பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள் செயல்பட்டு வருகின்றன. காலணித் தொழில் பிரிவு, மாப்பேடு காகித உறைத் தயாரிப்புப் பிரிவு, ஊத்துக்கோட்டை ஆகியவை ஸ்ரீபெரும்பூதூர், திட்டப் பகுதியில் செயல்பட்டு வருகின்றன. பளபளப்பான ஓடுகள் தயாரிப்புப் பிரிவு, மரவேலைப் பிரிவு, பாலிதீன் தட்டைக் குழாய்கள் உற்பத்திப் பிரிவு ஆகியவை ஓமலூர் திட்டப் பகுதியில் செயல்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. ஓமலூர் பாலிதீன் தட்டைக் குழாய்கள் தயாரிப்பதற்கான தொழில் பிரிவு நிறைவேற்றப்படவிருக்கின்றது. இந்தத் தொழில் விரைவில் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வள்ளியூர், பொது நோக்குப் பொறியியல் பட்டறையும், நாங்குனேரித் திட்டத்தில் வடக்கு விஜயநாராயணம், சாக்குக் கட்டித் தயாரிப்புப் பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

பட்டுத் தொழில் வளர்ப்புக்காக நாங்குனேரித் திட்டப் பகுதியில் பனகுடி என்னுமிடத்தில் கட்புலன் விளக்கப் பட்டுப் பண்ணை ஒன்று செயல்படுகின்றது. கிராமத் தொழில் திட்டப் பணியின் கீழ் வாத்து வளர்ப்பும் ஊக்குவிக்கப்படுகிறது. வாத்து வளர்ப்பவர்கள் இருபது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஓமலூர், ஸ்ரீபெரும்பூதூர் திட்டப் பகுதிகளொன்றிலும் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 வரை கடன் கொடுக்கப்பட்டது. ஸ்ரீபெரும்பூதூர் திட்டப் பகுதியில் கோரைப் பயிரிடும் திட்டமும் நிறைவேற்றுவதற்கு உள்ளது.

கிராமத் தொழில் திட்ட நிதிகளிலிருந்து, தொழில்களுக்கு அரசுதவிச் சட்டத்தின் கீழ் (ஆண்டுக்கு 3 சத வீதம்) மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தனியார் தொழிலதிபர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இது வரை வழங்கப்பட்ட கடன் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடன் தொகை. |
| --- | --- |
| | ரூ. |
| 1964–65 .. .. .. .. .. | 4,04,100 |
| 1965–66 .. .. .. .. .. | 6,02,850 |
| 1966–67 .. .. .. .. .. | 5,38,700 |
| 1967–68 .. .. .. .. .. | 2,29,000 |
| 1968–69 .. .. .. .. .. | 2,00,000 |

29–11–1969-இல் உள்ளபடி 'கிராமத் தொழில் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் உற்பத்திப் பிரிவுகள் பற்றிய விவரங்கள் இந்த ஆய்வுரையில் இணைந்துள்ள IX-ஆவது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

யிலிருந்து ஆறு திங்களுக்குள் இத்தகைய சான்றுகளுக்கான விண்ணப்பங்கள் மத்திய ஆயத்துறை அதிகாரிகளுக்குச் செய்து கொள்ளப்பட வேண்டும். சான்று வழங்கப் பெற்ற தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள், இதற்காக கடன் வழங்கும் அதிகாரி குறிப்பிடக்கூடிய தவணைகளில் கடன் திருப்பிச் செலுத்தப்படாவிட்டால் அவ்வாறு வழங்கப்பெற்ற சான்றுகள் ரத்து செய்யப்படும்.

சென்னை மத்திய ஆயத்துறைக் கலெக்டர் அளித்துள்ள தகவலின்படி இந்த மாவட்டத்தில் 1969 செப்டம்பர் 30 அன்றுள்ளபடி சான்றிதழ் பெற்ற பொற்கொல்லர்கள் எண்ணிக்கை 42,050 ஆகும்.

## கிராமத் தொழில் திட்டங்கள்

கிராமப்புறப் பகுதிகளிலும், சிறு நகரங்களிலும் கிராம, சிறு தொழில்கள் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இந்தியா முழுவதும் தெரிந்தெடுக்கப்பட்ட 40 கிராமப் புறப் பகுதிகளில் சிறு தொழில் மும்முர வளர்ச்சிக்கு முன்னோடித் திட்டங்களை 1962-ம் ஆண்டில் இந்திய அரசு கொண்டு வந்தது. இதில் 3 திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டன.

முன்னோடித் திட்டங்களுக்காக இடங்களைத் தெரிந்தெடுப்பது குறித்து திட்ட ஆணைக் குழு குறிப்பிடும் கூறுகளின் அடிப்படையில், தொழில் மிகவும் பின்தங்கியவையும், நிலம் பெருமளவுக்குப் பயன்படுத்தப்படுபவையும், வேலையின்மையும் வேலைவாய்ப்புக் குறைந்த நிலையும் மலிந்திருப்பதாக எளிதில் உணரக்கூடியவையுமான கீழ்க்காணும் மூன்று திட்டங்களை மாநில அரசு தெரிந்தெடுத்தது:—

(1) செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்பூதூர், திருவள்ளூர் வட்டங்கள், பென்னலூர்பேட்டை துணை வட்டம்.

(2) சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டம், தற்பொழுது ஓமலூர் வட்டம், ஓமலூர், மேட்டூர் வட்டங்கள் என்றும் இரு வட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

(3) திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி வட்டம்.

வேளாண்மை, பாசனம், போக்குவரத்து முதலியவற்றை எல்லா வகைகளிலும் மேம்படுத்துவதன் வாயிலாக, கூட்டுறவு வேளாண்மைத் தொழில் பொருளாதாரம் கொண்டு வருவதே முதன்மையான நோக்கமாக இருப்பதால், வாழ்க்கை நிலையையும், உற்பத்தி நிலையையும் உயர்த்துவதற்காகவும், கிராமச் சமூகத்தினரில் நிலமற்றோருக்கும் பொருளில்லாருக்கும் வேலை வாய்ப்புகளைப் பெருவாரியாக நல்குவதற்காகவும் தொழில்கள் வளர்ச்சியை முழு அளவில் தூண்டியும் வளம் பெறும் வாய்ப்புகளைத் திரட்டவும் வேண்டும். எனவே, தொழில்களின் வளர்ச்சியை முக்கியமாகச் செரிவு படுத்துவதே இத் திட்டங்களின் நோக்கமாகும். கிராமப் பகுதிகளில் இத் தொழில்களையும் அவற்றிற்குத் துணையான நடவடிக்கைகளையும் வளர்க்க வேண்டும். இதற்கென இத் திட்டப் பகுதிகளில் நியமிக்கப்பட்ட திட்ட அதிகாரிகளால் திட்டப் பகுதிகள் ஆய்வு வேலை நடத்தப்பட்டது.

இதுவரை அனுமதித்து செயல்படுத்தப்பட்ட இவ் வேலைத் திட்டங்களில் பயிற்சித் திட்டமாக பொது வசதிப் பணி நிலையங்கள், மூன்று பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள், பளபளப்பு ஓடுகள் தொழில் பிரிவு, காலணி தொழில் பிரிவு, மரவேலைப் பிரிவு, காகித உரைகள், காகிதப் பைகள் தயாரிப்புப் பிரிவு, சாக்குக் கட்டிகள் உற்பத்திப் பிரிவு, பாலிதீன் தட்டைக் குழாய்கள் உற்பத்திப் பிரிவு, துறைப் பிரிவுகள், மற்ற வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

1969–70-ஆம் ஆண்டில் (திருத்த மதிப்பீடு) இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ. 21·62 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. [illegible] ஆண்டுக்காக ரூ. 17 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



குறிப்பிட்ட பயிற்சிக் காலம் முடிவடைந்த பிறகு, கீழ்க் காண்பனவற்றைத் தவிர திட்டப் பகுதிகளில் தொடங்கிய மூன்று பயிற்சித் திட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டன:—

(i) திருப்பாச்சூர் செம்பரம்பாக்கம் பொது நோக்குப் பொறியியல் பட்டறைகளில் பயிற்சி.

(ii) ஓமலூர், நாங்குனேரி திட்டப் பகுதிகளிலிருந்து சேலத்திலும், திருநெல்வேலியிலும் உள்ள கூட்டுறவு அச்சகங்களில் நியமிக்கப்படுபவர்களின் பயிற்சி.

ஸ்ரீபெரும்பூதூர் திட்டத்தில் நான்கு பொது வசதி நிலையங்கள் உள்ளன. முதன் முதலில் தொடங்கிய இரு பொது வசதி நிலையங்கள் செயல்படுவதை கவனித்துப் பார்த்த பிறகு, மற்றும் இரு நிலையங்கள் துவங்குவது அவசியமில்லை எனக் கருதப்பட்டது. நாங்குனேரி திட்டத்தில் பத்துப் பொது வசதி நிலையங்களும், ஓமலூர் திட்டத்தில் நான்கு பொது வசதி நிலையங்களும் யாவும் செயல்பட்டு வருகின்றன.

ஸ்ரீபெரும்பூதூரில் இரண்டு பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள் செயல்பட்டு வருகின்றன. காலணித் தொழில் பிரிவு, மாப்பேடு காகித உறைத் தயாரிப்புப் பிரிவு, ஊத்துக்கோட்டை ஆகியவை ஸ்ரீபெரும்பூதூர், திட்டப் பகுதியில் செயல்பட்டு வருகின்றன. பளபளப்பான ஓடுகள் தயாரிப்புப் பிரிவு, மரவேலைப் பிரிவு, பாலிதீன் தட்டைக் குழாய்கள் உற்பத்திப் பிரிவு ஆகியவை ஓமலூர் திட்டப் பகுதியில் செயல்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. ஓமலூர் பாலிதீன் தட்டைக் குழாய்கள் தயாரிப்பதற்கான தொழில் பிரிவு நிறைவேற்றப்படவிருக்கின்றது. இந்தத் தொழில் விரைவில் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வள்ளியூர், பொது நோக்குப் பொறியியல் பட்டறையும், நாங்குனேரித் திட்டத்தில் வடக்கு விஜயநாராயணம், சாக்குக் கட்டித் தயாரிப்புப் பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

பட்டுத் தொழில் வளர்ப்புக்காக நாங்குனேரித் திட்டப் பகுதியில் பணகுடி என்னுமிடத்தில் கட்புலன் விளக்கப் பட்டுப் பண்ணை ஒன்று செயல்படுகின்றது. கிராமத் தொழில் திட்டப் பணியின் கீழ் வாத்து வளர்ப்பும் ஊக்குவிக்கப்படுகிறது. வாத்து வளர்ப்பவர்கள் இருபது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஓமலூர், ஸ்ரீபெரும்பூதூர் திட்டப் பகுதிகளொன்றிலும் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 வரை கடன் கொடுக்கப்பட்டது. ஸ்ரீபெரும்பூதூர் திட்டப் பகுதியில் கோஸ்ரப் பயிரிடும் திட்டமும் நிறைவேற்றுவதற்கு உள்ளது.

கிராமத் தொழில் திட்ட நிதிகளிலிருந்து, தொழில்களுக்கு அரசுதவிச் சட்டத்தின் கீழ் (ஆண்டுக்கு 3 சத வீதம்) மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தனியார் தொழிலதிபர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இது வரை வழங்கப்பட்ட கடன் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடன் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1964–65 .. .. .. .. .. | 4,04,100 |
| 1965–66 .. .. .. .. .. | 6,02,850 |
| 1966–67 .. .. .. .. .. | 5,38,700 |
| 1967–68 .. .. .. .. .. | 2,29,000 |
| 1968–69 .. .. .. .. .. | 2,00,000 |

29–11–1969-இல் உள்ளபடி 'கிராமத் தொழில் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் உற்பத்திப் பிரிவுகள் பற்றிய விவரங்கள் இந்த ஆய்வுரையில் இணைந்துள்ள IX-ஆவது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

[1970 மார்ச் 20

# இணைப்பு I.

## தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள்.

| ஆண்டு. | உதவியளிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட மொத்தத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. பை. |
| இரண்டாவது திட்டக்கால அளவு— | | |
| 1956–57 .. .. .. .. | 201 | 11,27,865·00 |
| 1957–58 .. .. .. .. | 3,401 | 24,88,962·00 |
| 1958–59 .. .. .. .. | 4,057 | 24,56,687·00 |
| 1959–60 .. .. .. .. | 3,952 | 22,26,558·00 |
| 1960–61 .. .. .. .. | 4,148 | 26,31,976·10 |
| மொத்தம் .. | 15,759 | 1,09,32,048·10 |
| மூன்றாவது திட்டக்கால அளவு— | | |
| 1961–62 .. .. .. .. | 4,061 | 33,92,474·65 |
| 1962–63 .. .. .. .. | 4,811 | 28,82,813·19 |
| 1963–64 .. .. .. .. | 2,889 | 25,02,617·06 |
| 1964–65 .. .. .. .. | 2,082 | 30,00,289·00 |
| 1965–66 .. .. .. .. | 1,797 | 29,90,760·00 |
| மொத்தம் .. | 15,640 | 1,47,68,953·90 |
| ஆண்டுத் திட்டக் கால அளவு— | | |
| 1966–67 .. .. .. .. | 2,543 | 34,97,249·25 |
| 1967–68 .. .. .. .. | 2,884 | 29,70,564·00 |
| 1968–69 .. .. .. .. | 1,344 | 26,21,308·00 |
| நான்காவது திட்டக்கால அளவு 1969–70 (31–10–69 வரை) | 455 | 7,71,620·00 |
| மொத்தம் .. | 7,226 | 98,60,741·[illegible] |



1970 மார்ச் 20]

1968–69-ல் கடன் தொகை வழங்கப்பட்ட தொழில்கள் பற்றிய விவரங்கள்.

| தொடரிலக்கமும் உதவி பெற்ற தொழிலின் பெயரும். | உதவி பெற்ற பிரிவுகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட கடன் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1 உணவுப் பொருள்கள் .. .. | 59 | 77,700 |
| 2 பலவகைத் துணிகள் .. .. | 47 | 61,400 |
| 3 மரக்கட்டை, மரப் பொருள்கள் .. | 201 | 3,47,250 |
| 4 தோல், தோல் பொருள்கள் .. | 103 | 1,06,095 |
| 5 ரப்பர், பெட்ரோலியம், நிலக்கரிப் பொருள்கள். | 26 | 42,000 |
| 6 இரசாயனம், இரசாயனப் பொருள்கள். | 38 | 89,000 |
| 7 உலோகமற்ற கனிப் பொருள்கள் (பெட்ரோலியம் நீங்கலாக.) | 30 | 35,000 |
| 8 மூல உலோகங்களும், ஏனைய பொருள்களும். | 101 | 2,89,100 |
| 9 போக்குவரத்துச் சாதனம் நீங்கலாக மற்றெல்லா இயந்திரங்கள். | 39 | 2,43,400 |
| 10 போக்குவரத்துச் சாதனங்களும், கருவிகளும். | 41 | 1,02,963 |
| 11 பலவகைத் தயாரிப்புத் தொழில்கள் | 659 | 12,16,400 |
| 12 பங்கு மூலதனக் கடன்கள் .. | .. | 11,000 |
| மொத்தம் .. | 1,344 | 26,21,308 |

தமிழ் நாடு 1956-ம் ஆண்டு சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும், கடன்களும், உதவித் தொகைகளும், வழங்குவது குறித்த விதிகளைச் சேர்ந்த 19-வது விதியின்கீழ், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் சேம நிதிக்கு வழங்கப்பட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் :—

| ஆண்டு. | தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | அளிக்கப்பட்ட உதவித் தொகை. | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| | | ரூ. | பை. |
| 1957–58 .. .. .. .. | 43 | 65,000 | 00 |
| 1958–59 .. .. .. .. | 178 | 1,91,770 | 00 |
| 1959–60 .. .. .. .. | 198 | 1,79,925 | 60 |
| 1960–61 .. .. .. .. | 80 | 1,18,059 | 80 |
| 1961–62 .. .. .. .. | 71 | 1,25,000 | 00 |
| 1962–63 .. .. .. .. | 111 | 1,49,980 | 00 |
| 1963–64 .. .. .. .. | 83 | 1,21,047 | 00 |
| 1964–65 .. .. .. .. | 79 | 1,22,526 | 00 |
| 1965–66 .. .. .. .. | 92 | 1,22,941 | 00 |
| 1966–67 .. .. .. .. | 70 | 1,20,980 | 00 |
| 1967–68 .. .. .. .. | 3 | 10,000 | 00 |
| 1968–69 .. .. .. .. | 1 | 3,000 | 00 |
| 1969–70 (31–12–69 வரை) .. .. | 1 | 3,000 | 00 |

## இணைப்பு II.

ஐந்தாண்டுத் திட்ட வேலைகளுக்குச் செய்த செலவைக் காட்டும் புள்ளி விவர அறிக்கை.

| வளர்ச்சித் திட்டத்தின் தலைப்பு. | நான்காவது திட்டத்தின் கீழ் முதலீடு. | 1968–69-ம் ஆண்டுச் செலவு. | 1969–70 செலவு (எதிர் பார்ப்பது). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| தொழில்களுக்கு நிதி வழங்கல் .. | 275·00 | 31·24 | 30·00 |
| கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும்— | | | |
| சிறு தொழில்கள் .. .. | 555·19 | 41·73 | 46·55 |
| தொழிற்பேட்டைகள் .. | 474·00 | 22·33 | 34·25 |
| சீர் செய்த மனைகள் .. | 400·00 | 13·57 | 15·890 |
| கைப்பணிகள் .. .. | 54·99 | 1·43 | 9·450 |
| பட்டு வளர்ப்பு .. .. | 76·11 | 12·28 | 13·800 |
| கயிற்றுத் தொழில் .. | .. | .. | .. |
| கிராமப் பணி நிலையங்கள் .. | 2·25 | 0·46 | 0·62 |
| கிராமத் தொழில் திட்டங்கள் .. | 290·00 | .. | 21·62 |

**குறிப்பு.**—(1) தொழில் கூட்டுறவுத் திட்டங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் VII-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(2 1970-71க்கான ஆண்டு திட்ட வரைவின் அடிப்படையில் திட்டச் செலவுக்கான புள்ளி விவரங்கள் உள்ளன.

## இணைப்பு III.

தொழில்துறையின் சிறு தொழில் பிரிவுகளின் விவரங்கள்—மாவட்ட வாரியாக.

| சிறு தொழில்கள். | திட்டச் செலவு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் லட்சத்தில்.) |
| **கன்னியாகுமரி மாவட்டம்.** | |
| 1 தொழில் பண்ணை, மார்த்தாண்டம் .. .. .. | 7·92 |
| 2 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, நாகர்கோயில் . | 5·49 |
| 3 தொழில் காலனி, நாகர்கோயில் .. .. . | 7·31 |
| 4 ரப்பர் ஆலை, நாகர்கோயில் * .. .. .. .. | 2·33 |

* சென்னையிலுள்ள தமிழ் நாடு சிறு தொழில்கள் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகள்.



| சிறு தொழில்கள். | திட்டச் செலவு |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் லட்சத்தில்.) |
| **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| 1 தச்சுப் பட்டறை, பத்தமடை * .. .. . | 0·77 |
| 2 தச்சுப் பட்டறை, கருமான் பட்டறை, பேட்டை* .. .. | 8·10 |
| 3 தொழில் பண்ணை, பேட்டை .. .. .. .. | 6·16 |
| 4 கருவி அறை மாதிரி பட்டறை, பேட்டை* .. .. .. | 8·20 |
| 5 பொதுக் குத்தகைப் பட்டறை, பேட்டை .. .. .. | 5·62 |
| 6 தொழிற்பேட்டை, கோவில்பட்டி .. .. .. | 6·69 |
| 7 தொழில் நுட்பத் தகவல் பிரிவு, பேட்டை .. .. | 0·49 |
| 8 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, மிதி வண்டி இணைப்புப் பிரிவு, தூத்துக்குடி. | 8·85 |
| 9 அடிப்படைக் கிராமப் பணி நிலையங்கள் .. .. .. | 3·08 |
| 10 மக்னீசியம் கார்பனேட் உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி .. | 2·76 |
| 11 கடல் தாவரங்களிலிருந்து பொட்டாசியம் குளோரைடு உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி. | 7·60 |
| 12 பாரிஸ் உறை மாவு உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி .. | 1·97 |
| **இராமநாதபுரம் மாவட்டம்.** | |
| 1 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, ராஜபாளையம்* .. | 4·50 |
| 2 தொழிற் பேட்டை, விருதுநகர் .. .. .. .. | 28·49 |
| 3 கருவி அறை பட்டறை, விருதுநகர்* .. .. .. | 4·78 |
| 4 தொழிற் பேட்டை, காரைக்குடி .. .. .. .. | 9·69 |
| 5 தொழிற் பேட்டை, சிவகங்கை .. .. .. .. | 8·08 |
| **மதுரை மாவட்டம்.** | |
| 1 மூலப் பொருள்கள் கிடங்கு, மதுரை .. .. .. | 2·16 |
| 2 துணி ஆலைப் பகுதிகளுக்குரிய பிரிவு, மதுரை * .. | 4·56 |
| 3 அழுத்த உலோகப் பொருள்கள், பழனி * .. .. | 3·55 |
| 4 பூட்டுத் தயாரிப்புப் பிரிவு, திண்டுக்கல்* .. .. | 14·59 |
| 5 தொழில் பண்ணை, மதுரை .. .. .. .. | 24·45 |
| 6 தொழிற் பேட்டை, தேனி .. .. .. .. .. | 5·38 |
| 7 பொதுக் குத்தகைப் பட்டறை, மதுரை .. | 7·52 |

* சென்னையிலுள்ள தமிழ் நாடு சிறு தொழில்கள் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகள்.

[1970 மார்ச் 20

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.) |
| --- | --- |
| **மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 8 தொழிற்பேட்டை, திண்டுக்கல் .. .. .. .. | 15·91 |
| 9 தொழில் நுட்பத் தகவல் பிரிவு, மதுரை .. .. | 0·49 |
| 10 கருவி அறைப் பட்டறை, மதுரை † .. .. .. | 11·54 |
| 11 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, கோடைக்கானல்* | 4·40 |
| 12 சீர் செய்த மனைகள், மதுரை .. .. .. .. | 76·00 |
| 13 மின் மருத்துவக் கருவிகள் பணி—செப்பனிடுவதற்கான துணை நிலையம், மதுரை‡ | மதுரை மாவட்ட வரிசையில் 20-ஆவது எண்ணில் உள்ளது. |
| 14 உணவு-பழ அடிப்படையில் அமைந்த தனித் தொழில் பேட்டை, வத்தலக்குண்டு. | 15·43 |
| 15 மண்டல சோதனை ஆய்வுக் கூடம், மதுரை .. .. | 15·00 |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | |
| 1 வேளாண்மைப் பண்ணைக் கருவிகள் பிரிவு, திருச்சிராப் பள்ளி.† | 4·07 |
| 2 தொழில் பேட்டை, திருச்சிராப்பள்ளி .. .. .. | 11·86 |
| 3 கருவி அறை பட்டறை, திருச்சிராப்பள்ளி .. .. .. | 5·78 |
| 4 தொழிற் பேட்டை, புதுக்கோட்டை .. .. .. | 9·69 |
| 5 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, கரூர்* .. .. | 5·49 |
| 6 பொதுக் குத்தகைப்* பட்டறை, திருச்சிராப்பள்ளி .. | 5·62 |
| 7 சீர் செய்த மனைகள், திருச்சிராப்பள்ளி .. .. .. | 16·68 |
| 8 துணைத் தொழிற் பேட்டை, திருச்சிராப்பள்ளி .. .. | 39·65 |
| 9 தொழிற்பேட்டை, கரூர் .. .. .. .. .. | 6·15 |

* தமிழ் நாடு சிறு தொழில்கள் லிமிடெட் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகள்.

† தமிழ் நாடு சிறு தொழில்கள் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகள்

‡ சென்னை மாவட்டத்திற்குரிய பட்டியலில் 21-வது இனத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.



1970 மார்ச் 20]

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.) |
| --- | --- |
| 1 மிதி வண்டி இணைப்புப் பிரிவு, தஞ்சாவூர்* .. .. | 7·50 |
| 2 தொழிற்பேட்டை, தஞ்சாவூர் .. .. .. .. | 6·61 |
| 3 பித்தளைச் சாமான்கள், வெட்டுக் கருவிகள் தயாரிப்புப் பணி நிலையம், கும்பகோணம்.* | 7·83 |
| 4 தச்சு-கருமார் பட்டறை, மன்னார்குடி* .. .. .. | 4·80 |
| 5 மாதிரி வார்ப்படச் சாலை கருவி அறைப் பட்டறை, தஞ்சாவூர் * | 8·93 |
| 6 பொதுநோக்குப் பொறியல் பட்டறை, மாயூரம்* .. | 5·12 |
| 7 தொழிற்பேட்டை, கும்பகோணம் .. .. .. | 8·59 |
| 8 தொழிற்பேட்டை, நாகப்பட்டினம் .. .. .. | 3·2 |
| **தென் ஆர்க்காடு மாவட்டம்.** | |
| 1 தச்சு-கருமார் வேலைப்பட்டறை, கடலூர்* .. .. .. | 4·8 |
| 2 மட்பாண்டத் தயாரிப்பு நிலையம், விருத்தாசலம் .. | 34·8 |
| 3 மெருகிட்ட குழாய்த் தயாரிப்புச் சாலை, விருத்தாசலம் .. | 8·0 |
| 4 மட்பாண்டத் தொழில் பயிற்சிப்பள்ளி, விருத்தாசலம் .. | 8·2 |
| 5 தொழிற்பேட்டை, விருத்தாசலம் .. .. .. .. | 32·78 |
| 6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, விழுப்புரம்* .. | 5·49 |
| 7 நின்று எரியும் கரி தயாரிப்புப் பிரிவு, வடலூர் .. .. | 3·86 |
| 8 துணைத் தொழிற்பேட்டை, வடலூர் .. .. .. | 3·84 |
| 9 தொழிற்பேட்டை, கடலூர் .. .. .. .. | 6·01 |
| 10 சுண்ணாம்பு இரசாயனப் பிரிவு, மரக்காணம் .. .. | 1·50 |
| **செங்கற்பட்டு மாவட்டம்.** | |
| 1 காலணிப்பிரிவு, பல்லாவரம்* .. .. .. .. | 1·59 |
| 2 தொழிற்பேட்டை, அம்பத்தூர் சீர் செய்த மனைகள், அம் பத்தூர். | 418·00 |
| 3 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, காஞ்சீபுரம் .. | 5·35 |
| 4 கட்டுமானப் பொருள்கள் பட்டறை, அம்பத்தூர் .. | 29·25 |
| 5 பொதுக் குத்தகைப் பட்டறை, அம்பத்தூர் .. .. | 5·71 |
| 6 கருவி அறைப்பட்டறை, அம்பத்தூர்* .. .. .. | 11·30 |
| 7 தோல் பொருள் தயாரிப்புத் தொழிற்பேட்டை, மாதவரம். (விரிவுத்திட்டம் உட்பட.) | 22·14 |

* தமிழ் நாடு சிறு தொழில்கள் லிமிடெட் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகள்.

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| **செங்கற்பட்டு மாவட்டம்— தொடர்ச்சி.** | |
| 8 தோல் தொழில் பொது வசதி நிலையம், மாதவரம் .. | 3·40 |
| 9 சீர்செய்த மனைகள், திருவள்ளூர் .. .. .. | 201·50 |
| 10 தொழிற்பேட்டை, காஞ்சீபுரம் .. .. .. .. | 6·15 |
| 11 மின்சாரக் கருவிகள் தனித் தொழிற்பேட்டை, திருவள்ளூர். | 23·17 |
| 12 மருந்து, மருந்து கலவைத் தொழிற்பேட்டை .. .. | 15·18 |
| 13 பொது மின் சோதனை ஆய்வுக்கூடம், காக்கலூர் .. | 11·14 |
| **வட ஆர்க்காடு மாவட்டம்.** | |
| 1 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, வேலூர்* .. | 7·30 |
| 2 தோல் பதனிடும், வேலை நிறைவு செய்யும் பிரிவு, விண்ணமங்கலம். | 14·83 |
| 3 மாதிரி வார்ப்படச் சாலை, காட்பாடி* .. .. .. | 2·45 |
| 4 தொழிற்பேட்டை, காட்பாடி .. .. .. .. | 16·28 |
| 5 தொழிற்பேட்டை, அரக்கோணம் .. .. .. .. | 13·69 |
| 6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, திருவண்ணாமலை*. | 5·90 |
| 7 தச்சு-கருமான் வேலைப் பிரிவு, அரக்கோணம் .. | 3·48 |
| 8 சீர்செய்த மனைகள், இராணிப்பேட்டை .. .. .. | 35·43 |
| 9 சோடியம் டை-குரோமேட் உற்பத்திப் பிரிவு, வாலாஜா பேட்டை. | 7·55 |
| **சேலம் மாவட்டம்.** | |
| 1 மின் முலாம் பூசும் பிரிவு, மேட்டூர் அணை* .. .. | 9·73 |
| 2 கைத்தறி பாகங்கள் பிரிவு, சேலம்* .. .. .. | 12·53 |
| 3 படிகக்கல் பொடி செய்யும் சாலை, சேலம்* .. .. | 3·85 |
| 4 தொழிற் பேட்டை, சேலம் .. .. .. .. | 8·59 |
| 5 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, நாமக்கல்* .. | 5·49 |
| 6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, ஓமலூர் .. | 5·35 |
| 7 தொழிற்பேட்டை, மேட்டூர் .. .. .. .. | 6·15 |
| 8 சீர்செய்த மனைகள், மேட்டூர் .. .. .. .. | 31·00 |
| 9 தொழிற்பேட்டை, நாமக்கல் .. .. .. .. | 6·22 |
| **தர்மபுரி மாவட்டம்.** | |
| 1 தச்சுப்பட்டறை, கிருஷ்ணகிரி* .. .. .. .. | 0·77 |
| 2 மிதிவண்டி இணைக்கும் பிரிவு, கிருஷ்ணகிரி* .. .. | 3·73 |
| 3 தொழிற்பேட்டை, ஓசூர் .. .. .. .. .. | 6·01 |
| 4 தொழிற்பேட்டை, கிருஷ்ணகிரி .. .. .. .. | 9·69 |

* தமிழ் நாடு சிறு தொழில்கள் லிமிடெட் கழகத்தின்கீழ் உள்ள [illegible]



| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| **கோயம்புத்தூர் மாவட்டம்.** | |
| 1 மர வேலைப் பிரிவு, பொள்ளாச்சி* .. .. .. .. | 5·73 |
| 2 கருவி அறைப் பட்டறை, ஈரோடு* .. .. .. | 5·36 |
| 3 மரை ஆணிகள், திருகு மரைகள் தயாரிக்கும் பிரிவு, ஈரோடு.* | 1·72 |
| 4 தொழிற்பேட்டை, ஈரோடு .. .. .. .. .. | 11·25 |
| 5 கருவி அறைப் பட்டறை, கோயம்புத்தூர்* .. .. | 10·09 |
| 6 உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உருவாக்கும் தொழிற் பட்டறை, கோயம்புத்தூர்.* | 6·98 |
| 7 மூலப் பொருள்கள் கிடங்கு, கோயம்புத்தூர் .. .. | 2·16 |
| 8 பொதுக் குத்தகைப் பட்டறை, கோயம்புத்தூர் .. .. | 7·52 |
| 9 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, திருப்பூர்* .. | 5·49 |
| **நீலகிரி மாவட்டம்.** | |
| 1 துணைத் தொழிற்பேட்டை., உதகமண்டலம் .. .. | 8·73 |
| **சென்னை மாவட்டம்.** | |
| 1 காலணிப் பிரிவு, பெரம்பூர்* .. .. .. .. | 6·69 |
| 2 திருவல்லிக்கேணி காலணிப்பிரிவு, பெரம்பூர்* .. .. | 1·17 |
| 3 அழுத்தப்பட்ட உலோகப் பொருள்கள் தயாரிப்புக்கான பிரிவு, சென்னை* | 12·94 |
| 4 மின்சாரப் பொருள்கள் பிரிவு, கிண்டி.* .. .. .. | 17·71 |
| 5 மரவேலைப் பிரிவு, கிண்டி* .. .. .. .. | 7·42 |
| 6 கருவி அறைப் பட்டறை, கிண்டி* .. .. .. .. | 25·64 |
| 7 பொது வேலை நிறைவுப் பட்டறை, கிண்டி* .. .. | 2·68 |
| 8 உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உருவாக்கும் தொழிற்பட்டறை, கிண்டி.* | 11·61 |
| 9 பணிக் கழகம், கிண்டி .. .. .. .. .. | 4·48 |
| 10 கண்ணாடி தொழிற்சாலை, கிண்டி* .. .. .. | 10·66 |
| 11 அழுக்க வகையில் சூடுறுத்தி, அச்சு வார்ப்படப் பிரிவு, கிண்டி.* | 9·69 |
| 12 மாதிரி வார்ப்படச் சாலை, கிண்டி* .. .. .. .. | 16·92 |
| 13 தொழில் நுட்பத் தகவல் பிரிவு, கிண்டி .. .. | 3·51 |
| 14 தொழிற்பேட்டை, கிண்டி .. .. .. .. | 133·66 |
| 15 அச்சுக்கருவி வடிவ அமைப்புப் பிரிவு, கிண்டி* .. .. | 7·39 |
| 16 தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி .. .. | 20·50 |
| 17 சீர்படுத்திய மனைகள், கிண்டி .. .. .. .. | 53·48 |
| 18 குறைந்த குதிரைத் திறனுள்ள மோட்டார்கள் தயாரிப்புப் பிரிவு, கிண்டி.* | 7·89 |
| 19 யந்திர-உலோக ஆய்வுக்கூடம் .. .. .. .. | 20·73 |

* தமிழ் நாடு சிறு தொழில்கள் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகள்,

| சிறு தொழில்கள். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| **சென்னை மாவட்டம்—தொடர்ச்சி** | |
| 20 மின் மருத்துவக் கருவிகள் பணிமனை—செப்பனிடும் மத்தியப் பிரிவு, கிண்டி. | 7·56 |
| 21 மின் அணுத் தொழில்களுக்கான தொழிற்பேட்டை, அடையாறு. | 40·26 |
| 22 கருவிகள் தயாரிப்புக்கான தொழிற்பேட்டை, அடையாறு. | 16·18 |
| 23 நுரைமம் உற்பத்திப் பிரிவு, கிண்டி, .. .. .. | 4·46 |
| 24 எலுமிச்சை மணத்தை மலத்திலிருந்து மின்தகள்கள் தயாரிப்புப் பிரிவு, கிண்டி. | 0·27 |

## இணைப்பு IV

### கைப்பணி நிலையங்களின் பட்டியல்.

| திட்டத்தின்/பிரிவின் பெயர். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| **சென்னை மாவட்டம்.** | |
| 1 கலை-கைப்பணிக் கல்லூரி, சென்னை .. .. .. | 4·73 |
| 2 வடிவமைப்பு செய்முறை விளக்க நிலையம், எழும்பூர் .. | 4·00 |
| 3 பளப்பளப்பான களிமண் பொம்மைகள் தயாரிப்பு நிலையம், பெரம்பூர். .. | 1·76 |
| 4 விற்பனை பெருநிலையம், சென்னை .. .. .. | 0·25 |
| 5 கண்ணாடி விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், சென்னை. | 0·25 |
| **செங்கற்பட்டு மாவட்டம்.** | |
| 1 சிற்பப் பயிற்சி நிலையம், மாமல்லபுரம் .. .. | 0·63 |
| 2 சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், தாம்பரம். | 0·49 |
| 3 சித்திர வேலைப்பாடுகள் கொண்ட தட்டுகள் தயாரிப்பு பயிற்சி நிலையம், தாம்பரம். | 0·52 |
| 4 பித்தளை, வெண்கலப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், காஞ்சீபுரம். | 0·69 |
| 5 விற்பனை பெரு நிலையம், மாமல்லபுரம் .. .. | 1·56 |
| 6* கைத்தொழில் காகிதப் பிரிவு, மாமண்டூர் .. .. | 0·61 |

* தமிழ்நாடு சிறு தொழில்கள் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகள்.



| திட்டத்தின்/பிரிவின் பெயர். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| **தென் ஆற்காடு மாவட்டம்.** | |
| விற்பனை பெரு நிலையம், நெய்வேலி .. .. | 0·98 |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| 1 சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப்பொருட்கள் தயாரிப்பு நிலையம், சுவாமிமலை. | 0·37 |
| 2 சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நாச்சியார்கோவில் | 0·49 |
| 3 வெண்கல விக்கிரகங்கள் தயாரிப்பு நிலையம், சுவாமிமலை. | 0·30 |
| 4 விற்பனை கொள்முதல் கிடங்கு. தஞ்சாவூர் .. .. | 1·84 |
| 5 உலோகத் தொழிலுக்கு பொதுவசதி நிலையம், நாச்சியார்கோவில். | 2·60 |
| 6 கலை-கைப்பணிப்பள்ளி, கும்பகோணம் .. .. | 6·26 |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | |
| 1 கம்பளங்கள், விரிப்புகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம். கோலக்குடி. | 0·41 |
| 2 விற்பனை கொள்முதல் கிடங்கு, திருச்சிராப்பள்ளி .. | 1·01 |
| 3 பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், புதுக்கோட்டை. | 0·56 |
| **மதுரை மாவட்டம்.** | |
| 1 வேலைப்பாடமைந்த பித்தளைப் பொருள் தயாரிப்பு பிரிவு நிலையம், மதுரை. | 0·87 |
| 2 விற்பனை பெரு நிலையம், திண்டுக்கல் .. .. | 0·08 |
| 3 கண்ணாடிப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், மதுரை. | 2·07 |
| **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| 1 வெண்கலப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், வாகைக்குளம். | 1·85 |
| 2 சணல் நாரைக்கொண்டு விரிப்புகள், இரட்டுகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம், கோபாலசமுத்திரம். | 1·40 |
| 3 கற்றுழைநார் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம். நெடுவயல். | 1·26 |
| 4 அரக்குப் பூசிய பொம்மை தயாரிப்பு-பயிற்சி நிலையம் சேரன்மாதேவி. | 0·28 |
| 5 விற்பனை கொள்முதல் கிடங்கு, திருநெல்வேலி .. | 1·84 |
| 6 சணல் நாரைக்கொண்டு விரிப்புகள், இரட்டுகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம், ஆயக்குடி. | 0·84 |

| திட்டத்தின்/பிரிவின் பெயர். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|

**கன்னியாகுமரி மாவட்டம்.**

| | |
|---|---|
| கோயில் தேர்கள் (ரதங்கள்) செய்வதற்கான பயிற்சி நிலையம், நாகர்கோயில். | 0·48 |

**வட ஆர்க்காடு மாவட்டம்.**

| | |
|---|---|
| கம்பளி உற்பத்தி நிலையம், விண்ணமங்கலம் .. .. | 13·10 |

**சேலம் மாவட்டம்.**

| | |
|---|---|
| 1 சித்திர வேலைப்பாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்புப்பயிற்சி நிலையம், சேலம். | 0·56 |
| 2 விற்பனை கொள்முதல் கிடங்கு, சேலம் .. .. | 1·01 |

**தர்மபுரி மாவட்டம்.**

| | |
|---|---|
| கருங்கல் மெருகிடு நிலையம், கிருஷ்ணகிரி .. .. | 0·65 |

**கோயம்புத்தூர் மாவட்டம்.**

| | |
|---|---|
| விற்பனை கொள்முதல் கிடங்கு, கோயம்புத்தூர் .. .. | 1·01 |

**இராமநாதபுரம் மாவட்டம்**

| | |
|---|---|
| பனை ஓலை உற்பத்திப் பொருள் பயிற்சி நிலையம், இராமேஸ்வரம். | 0·53 |

## இணைப்பு V.

### பட்டுப்புழு வளர்ப்புத் திட்டங்களின் பட்டியல்.

| திட்டத்தின் பெயர் (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|

**திருநெல்வேலி மாவட்டம்.**

| | |
|---|---|
| 1 செய்முறை விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, தென்காசி. | 1·47 |
| 2 அரசாங்க பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, செங்கோட்டை. | 2·15 |

**வட ஆர்க்காடு மாவட்டம்.**

| | |
|---|---|
| [illegible] விளக்கப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, [illegible] | 0·[illegible]0 |



| திட்டத்தின் பெயர். (1) | திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|

**தர்மபுரி மாவட்டம்.**

| | |
|---|---|
| 1 சௌக்கி பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணை, ஓசூர் .. | 0·82 |
| 2 முசுக்கட்டை ஒட்டுச் செடி வளர்ப்புப் பண்ணை, ஓசூர். | 1·75 |
| 3 பட்டுப் புழு வளர்ப்புப் பிரிவுகள், வேப்பனப்பள்ளி, ராயக்கோட்டை பிர்காக்கள். | 0·23 |
| 4 பட்டு நூல் எடுக்கும் அரசு நிலையம், ஓசூர் .. .. | 3·06 |
| 5 பட்டுப்புழு கலப்பின் அரசுக் களஞ்சியம், பேரிகை .. | 2·15 |
| 6 பட்டுப் புழு வளர்ப் போருக்கு ஓசூர் பாப்பாரபட்டி ஆகிய இடங்களில் பட்டுப் புழு விற்பனை வசதி. | 1·40 |
| 7 தேங்கனிக்கோட்டையில் அடிப்படைப் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணையும் களஞ்சியமும். | 0·58 |
| 8 அரசு பட்டு வளர்ப்புப் பண்ணை, ஓசூர் .. .. | 4·74 |
| 9 செய்முறை விளக்க பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, கிருஷ்ணகிரி. | 0·80 |
| 10 பட்டுப் பரிசோதனை நிலையம், ஓசூர் .. .. .... | 0·15 |
| 11 பட்டு நூல் முறுக்கும் பிரிவு, ஓசூர் .. .. .. | 1·50 |
| 12 பட்டு வளர்ப்புப் பண்ணை ஒன்றை பெரிய அளவில் நிறுவுதல், கோலட்டி. | 2·47 |

**சேலம் மாவட்டம்.**

| | |
|---|---|
| 1 அரசு பட்டு வளர்ப்புப் பண்ணை, ஏர்க்காடு .. .. | 0·80 |
| 2 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, கொல்லிமலை. | 1·41 |

**கோயம்புத்தூர் மாவட்டம்.**

| | |
|---|---|
| 1 சௌக்கி பட்டுப் புழு வளர்ப்புப் பிரிவு, தாளவாடி .. | 0·27 |
| 2 முசுக்கட்டை ஒட்டு வளர்ப்புப் பெரும் பண்ணை, தாளவாடி. | 0·55 |
| 3 பெரிய அளவு பட்டு புழு வளர்ப்புப் பெரும்பண்ணை, மதனஹள்ளி. | 1·77 |
| 4 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, ஹாசனூர். | 0·20 |
| 5 பொது பட்டுப் புழு வளர்ப்பு நிலையம், ஹாசனூர் .. | 0·20 |
| 6 சௌக்கி பட்டுப் புழு வளர்ப்புப் பிரிவு, ஜெர்மலம் .. | 0·47 |
| 7 பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணையும் களஞ்சியமும், தாளவாடி. | 0·48 |

**நீலகிரி மாவட்டம்.**

| | |
|---|---|
| 1 பிரச்சார நடவடிக்கைகள் மசினகுடி .. .. .. | 0·46 |
| 2 கெட்டி நரம்பு தயாரிக்கும் பிரிவு, குன்னூர் .. | 4·00 |
| 3 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, மசினகுடி. | 2·33 |
| 4 பெரிய அளவுப் பட்டுப்புழு வளர்ப்புப் பெரும்பண்ணை, மசினகுடி. | 0·40 |
| 5 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, எருமடு. | 0·20 |
| 6 விரிவு ஆராய்ச்சி நிலையம், குன்னூர் .. .. .. | 0·79 |

## இணைப்பு VI.

### மாநிலத்திலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட வாரியாக காட்டும் புள்ளி விவர அறிக்கை.

| தொடர் எண். | சங்கங்களின் வகைகள். | சென்னை. | செங்கற்பட்டு. | வட ஆர்க்காடு. | தென் ஆர்க்காடு. | தஞ்சாவூர். | திருச்சிராப்பள்ளி | சேலம். | தர்மபுரி. | கோயம்புத்தூர். | மதுரை. | இராமநாதபுரம் | திருநெல்வேலி | கன்னியாகுமரி. | நீலகிரி. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| A. | சிறு அளவுத் தொழில்கள்— | | | | | | | | | | | | | | | |
| 1 | மாநில சங்கங்கள் | 1 | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 |
| 2 | தொழிற்பேட்டைகள் | 1 | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | .. | 1 | 1 | .. | .. | 5 |
| 3 | முன்னுள் படையினர் சங்கங்கள் | .. | 1 | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | 4 |
| 4 | தீப்பெட்டித் தொழில் | .. | 1 | 1 | .. | 2 | .. | .. | .. | .. | 1 | 7 | 3 | .. | .. | 15 |
| 5 | செங்கல், ஓடு | .. | 3 | .. | 1 | 1 | 2 | .. | .. | .. | 2 | 1 | 2 | .. | .. | 12 |
| 6 | தோல் தொழில் | I | .. | 1 | .. | 1 | 1 | 1 | .. | 1 | 1 | .. | 1 | .. | 1 | 9 |
| 7 | உலோகத் தொழிலாளர் சங்கங்கள் | .. | 1 | 1 | 2 | 2 | 2 | 3 | .. | 1 | 3 | 5 | 3 | .. | .. | 23 |
| 8 | பஞ்சலோகம் | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 9 | தச்சுத் தொழிலாளர் | .. | 3 | 1 | 3 | 3 | 3 | 2 | .. | 4 | 2 | 5 | 2 | 1 | .. | 29 |
| 10 | கைவினைக் கலைஞர்கள் | .. | .. | 2 | 1 | .. | 4 | 5 | .. | 3 | 2 | 4 | 1 | .. | .. | 22 |
| 11 | மகளிர் | 17 | 5 | 2 | 3 | 2 | 3 | 2 | .. | 3 | 1 | 2 | 2 | 2 | 4 | 48 |
| 12 | தேயிலைத் தொழிற்சாலைகள் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 9 | 9 |
| 13 | சிறப்புவகை சங்கங்கள் | 4 | 4 | .. | .. | 1 | 3 | 1 | .. | 3 | 2 | 3 | .. | .. | 2 | 23 |
| 14 | பீடி | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 2 |
| 15 | தொழில் கூட்டுறவு வங்கி | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| B. | கைப்பணிகள்— | | | | | | | | | | | | | | | |
| 16 | பாய் முடைவோர் சங்கங்கள் | .. | 5 | 3 | 3 | 8 | 5 | 7 | 2 | 5 | 5 | 1 | 13 | 3 | .. | 60 |
| 17 | வெண்கலம் | .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 | .. | 4 |
| 18 | சரிகை, பூ வேலைப்பாடு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 3 | .. | 3 |
| 19 | பிரம்பு, மூங்கில் கூடை | .. | .. | 2 | 1 | 3 | 3 | 2 | .. | 6 | 1 | 1 | 6 | 2 | 1 | 28 |
| 20 | விலை மதிப்புள்ள கற்கள் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 21 | இசைக் கருவிகள் | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 22 | சிற்பம் செதுக்குதல் | .. | .. | 1 | .. | .. | 1 | 1 | .. | .. | .. | .. | .. | 1 | .. | 4 |
| 23 | கம்பள நெசவு | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 2 |
| 24 | நார் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 25 | மட்பாண்டத் தொழில் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 26 | விளையாட்டுப் பொம்மைகள் | 1 | .. | .. | 1 | 1 | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | 4 |
| 27 | நாடா, நூல் | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | 2 |
| 28 | பனை ஓலை | .. | 1 | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. | 7 | 1 | .. | .. | 11 |
| 29 | மாநிலச் சங்கம் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| 30 | பல்வகை | .. | .. | 1 | .. | 4 | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 6 |
| 31 | கயிற்றுத் தொழில் | .. | 1 | 1 | 1 | 3 | 1 | 12 | 1 | 3 | .. | 2 | .. | 9 | .. | 34 |
| 32 | பட்டுப் புழு வளர்ப்பு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| | மொத்தம் .. | 28 | 25 | 18 | 16 | 36 | 31 | 37 | 3 | 3 | 21 | 40 | 38 | 23 | 17 | 367 |

# இணைப்பு VII

## ஐந்தாண்டு வேலைத் திட்டங்களின் கீழ் தொழிற் கூட்டுறவு சங்கங்களின்முன்னேற்றம்

| தொடரிலக்கமும் திட்டத்தின் பெயரும். | நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 1968–69 கணக்குகள். | 1969–70 கணக்குகள் (எதிர்பார்க்கப் படுவது). | நான்காவது திட்டத்தின் எய்தின சாதனை. 1968–69. | 1969–70 (எதிர்பார்க்கப் படுவது). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1 கூட்டுறவு-தனியார் தொழிற்பேட்டைகள் .. .. | 34·00 | .. | — | 145 | 32 |
| 2 சிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. .. | 78·38 | 0·39 | 2·28 | 3 | |
| 3 கைப்பணி தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 12·06 | — | 1·38 | 1 | 2 |
| 4 கயிற்றுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 8·81 | 0·42 | 0·93 | .. | 2 |
| 5 பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .. | .. | | .. | .. | .. |
| மொத்தம் .. | 133·25 | 0·81 | 4·59 | 149 | 38 |



# இணைப்பு VIII

## தமிழ்நாட்டு சிறு தொழில் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகளின் உற்பத்தி அளவின் மதிப்பைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண். | பிரிவின் பெயர். | 1968–69-ல் உற்பத்தி. | செப்டம்பர் 1969 வரையில் உற்பத்தி. | எதிர்படக்கூடிய உற்பத்தி. | 1969–70 எதிர்பார்க்கப்படும் மொத்த உற்பத்தி. | 1970–71 குறிக்கோள் அளவு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, ராஜபாளையம். | 8·16 | 2·43 | 6·06 | 7·50 | 8·00 |
| 2 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, வேலூர் | 15.78 | 5·08 | 6·92 | 12·00 | 13·00 |
| 3 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, கரூர் | 3·01 | 1·86 | 1·89 | 3·75 | 5·00 |
| 4 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, திருப்பூர் | 3·96 | 2·21 | 4·29 | 6·50 | 7·00 |
| 5 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, நாமக்கல் | 11·05 | 5·00 | 7·00 | 12·00 | 13·00 |
| 6 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, தூத்துக்குடி. | 3·10 | 1·73 | 4·77 | 6·50 | 7·00 |
| 7 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, மாயூரம் | 3·23 | 1·42 | 1·58 | 3·00 | 4·00 |
| 8 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, விழுப்புரம் | 6·49 | 2·72 | 5·28 | 3·00 | 7·50 |
| 9 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, திருவண்ணாமலை | 3·92 | 1·50 | 3·50 | 5·00 | 6·00 |
| 10 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, நாகர்கோயில். | 2·67 | 1·19 | 1·81 | 3·00 | 4·00 |
| 11 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை,கோடைக்கானல், | 0·44 | 0·44 | 0·06 | 0·50 | 0·50 |
| 12 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, காஞ்சீபுரம் | 2·21 | 1·20 | 2·30 | 3·50 | 4·00 |
| 13 | பொது நோக்குப் பொறியியல் பட்டறை, ஓமலூர் | 1·85 | 3·30 | 2·70 | 6·00 | 6·00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 அழுத்த உலோகப் பொருள்கள் உற்பத்திப் பிரிவு, சென்னை. | 6·49 | 2·82 | 3·09 | 5·53 | 6·00 |
| 15 அழுத்த உலோகப் பொருள்கள் உற்பத்திப் பிரிவு, பழனி. | 8·22 | 3·62 | 6·98 | 10·00 | 10·00 |
| 16 உலோக அழுத்தப் பட்டறை, கிண்டி .. .. | 3·95 | 2·32 | 2·21 | 4·53 | 7·00 |
| 17 கருவி அறைப் பட்டறை, கிண்டி .. .. .. | 5·04 | 1·94 | 1·95 | 3·89 | 5·00 |
| 18 கருவி அறைப் பட்டறை, ஈரோடு .. .. .. | 7·99 | 2·78 | 3·65 | 6·43 | 8·00 |
| 19 கருவி அறைப் பட்டறை, திருச்சிராப்பள்ளி .. .. | 4·36 | 1·41 | 1·35 | 2·76 | 3·00 |
| 20 கருவி அறைப் பட்டறை, விருதுநகர் .. .. .. | 2·31 | 1·14 | 2·36 | 3·50 | 4·00 |
| 21 கருவி அறைப் பட்டறை, மதுரை .. .. .. | 1·96 | 1·25 | 3·74 | 5·00 | 5·50 |
| 22 கருவி அறை அச்சு வார்ப்புப்பட்டறை, கோயம்புத்தூர் | 6·24 | 2·53 | 2·47 | 5·00 | 6·00 |
| 23 கருவி அறைப் பட்டறை, அம்பத்தூர் .. .. .. | 3·49 | 1·39 | 1·28 | 2·67 | 5·00 |
| 24 பொதுவேலை நிறைவுப் பட்டறை, கிண்டி .. .. | 7·90 | 3·24 | 3·71 | 6·95 | 3·00 |
| 25 அச்சு வார்ப்புப் பிரிவு, கிண்டி .. .. .. .. | 4·71 | 2·15 | 2·26 | 4·41 | 6·00 |
| 26 அழுத்த வார்ப்பு அச்சுப் பிரிவு, கிண்டி .. .. | 11·78 | 5·64 | 5·49 | 11·13 | 12·00 |
| 27 மிதிவண்டிப் பகுதிகளை இணைக்கும் பிரிவு, தஞ்சாவூர். | 3·85 | 1·92 | 3·58 | 5·50 | 6·00 |
| 28 மிதிவண்டிப் பகுதிகளை இணைக்கும் பிரிவு, கிருஷ்ணகிரி. | 3·68 | 1·48 | 2·85 | 4·25 | 5·00 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29 மர வேலைப் பிரிவு, கிண்டி .. .. .. .. | 11·27 | 5·13 | 7·87 | 13·00 | 14·00 |
| 30 தச்சு-கொல்லுப் பட்டறை, கடலூர் .. .. .. | 6·59 | 2·10 | 4·90 | 7·00 | 8·00 |
| 31 தச்சு-கொல்லுப் பட்டறை, மன்னார்குடி .. .. | 6·37 | 2·05 | 3·95 | 6·00 | 7·00 |
| 32 தச்சு-கொல்லுப் பட்டறை, பேட்டை .. .. .. | 9.29 | 2,42 | 5·58 | 8·00 | 9·00 |
| 33 தச்சு வேலைப் பட்டறை, பத்தமடை .. .. .. | 2·52 | 1,43 | 2·07 | 3.50 | 4·00 |
| 34 தச்சு வேலைப் பட்டறை, கிருஷ்ணகிரி .. .. | 2,54 | 1·69 | 1 81 | 3·50 | 4.00 |
| 35 மர வேலைப் பிரிவு, பொள்ளாச்சி .. .. .. | 5.94 | 3.96 | 5·04 | 9.00 | 9.50 |
| 36 மரம் அறுக்கும் பிரிவு, நாகர்கோவில் .. .. | 8.80 | 4.69 | 5·31 | 1 00 | 10·50 |
| 37 காலணி தயாரிப்புப் பிரிவு, பெரம்பூர் .. .. | 14.59 | 4·91 | 7·09 | 12·00 | 12·00 |
| 38 காலணி தயாரிப்புப் பிரிவு, திருவல்லிக்கேணி .. | 1.97 | 1·77 | 1·73 | 3·50 | 4·00 |
| 39 காலணி தயாரிப்புப் பிரிவு, பல்லாவரம் .. .. | 3.56 | 1 23 | 3·27 | 4·50 | 5·00 |
| 40 தோல் பொருள்கள் பொதுவசதி நிலையம், மாதவரம். | 2.35 | 1·03 | 2·47 | 3·50 | 4·00 |
| 41 தோல் பதனிடுதல்-தோல் வேலை நிறைவுப் பிரிவு, வின்னமங்கலம். | 66.70 | 31·80 | 43·2 | 75·00 | 75·00 |
| 42 கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, கிண்டி. | 5.33 | 3·36 | 4·74 | 8·00 | 9·00 |
| 43 படிக்கல் பொடி செய்யும் சாலை, சேலம் — — | 0,96 | 0·67 | 1·08 | 1·75 | 2·50 |
| 44 மட்பாண்டத் தொழிற்சாலை, விருத்தாசலம் — | 6.32 | 4·53 | 4·47 | 9·00 | 10·00 |
| 45 மெருகிட்ட குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை, விருத்தாசலம் | 4.85 | 3·14 | 3·36 | 6·00 | 8·00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 46 மின்முலாம் பூசும் பிரிவு, மேட்டூர் அணைக்கட்டு .. .. | 82·98 | 36·47 | 43·53 | 80·00 | 80·00 |
| 47 கட்டுமானப் பட்டறை, அம்பத்தூர். | 74·71 | 44·69 | 35·31 | 80·00 | 80·00 |
| 48 துணி ஆலை பகுதிகளுக்குரிய தொழிற் பிரிவு, மதுரை. | 5·83 | 2·13 | 2·87 | 5·00 | 5·50 |
| 49 கைத்தறிக்குத் தேவையான பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை, சேலம். | 13·34 | 5·50 | 8·50 | 14·00 | 14·00 |
| 50 பண்ணைக் கருவிகள் தயாரிப்புப் பிரிவு, திருச்சிராப் பள்ளி. | 10·64 | 6·10 | 5·90 | 12·00 | 12·00 |
| 51 பித்தளைச் சாமான்கள் தயாரிக்கும் பிரிவு, கும்ப கோணம். | 10·52 | 3·92 | 6·08 | 10·00 | 11·00 |
| 52 பூட்டு தயாரிக்கும் பிரிவு, திண்டுக்கல் .. .. | 5·14 | 2·85 | 3·14 | 6·00 | 7·00 |
| 53 மின்சாரப் பொருட்கள் தயாரிக்கும் நிலையம், கிண்டி .. | 19·43 | 14·72 | 9·28 | 24·00 | 24·00 |
| 54 மரை ஆணிகள், திருகு மரைகள் தயாரிக்கும் பிரிவு, ஈரோடு. | 3·41 | 1·44 | 1·56 | 3·00 | .. |
| 55 குறைந்த குதிரைத்திறனுள்ள மோட்டார்கள் தயாரிப்புப் பிரிவு, கிண்டி. | 1·96 | 1·15 | 4·85 | 6·00 | 6·00 |
| 56 உலோக அழுத்துப் பிரிவு, கிண்டி .. .. .. | 1·91 | 1·08 | 0·92 | 2·00 | 2·00 |
| 57 அச்சு மற்றும் கருவி வடிவமைப்புப் பகுதி, கிண்டி .. | .. | .. | .. | .. | .. |
| 58 மாதிரி வார்ப்படச் சாலை, கிண்டி .. .. .. | 8·09 | 4·03 | 5·97 | 10·00 | 10·00 |
| 59 மாதிரி வார்ப்படச் சாலை, காட்பாடி .. .. .. | 5·14 | 2·19 | 3·31 | 5·50 | 6·00 |
| 60 மாதிரி வார்ப்படச் சாலை, தஞ்சாவூர் .. .. .. | 6·28 | 3·21 | 4·97 | 8·00 | 9 00 |
| 61 மாதிரி வார்ப்படசசாலை, பேட்டை .. .. .. | 4·37 | 3·16 | 3·84 | 7·00 | 8·00 |
| மொத்தம் .. | 562·06 | 273·20 | 341·85 | 615·05 | 650·50 |

* 1968 ஏப்ரல் 1 முதல் மட்டுமே கழகப் பொறுப்பின் கீழுள்ளது.



## இணைப்பு IX.

### கிராமத் தொழிற் திட்டத்தின் கீழுள்ள தொழிற் பிரிவுகளின் பட்டியல்

| தொடரிலக்கமும், திட்டத்தின் பெயரும். (1) | திட்டச் செலவு. (2) |
|---|---|
| | ரூ. |
| **செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் திட்டம்.** | |
| 1 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, செம்பரம்பாக்கம். | 6,01,600 |
| 2 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, திருப்பாச்சூர் .. | 6,05,500 |
| 3 அஞ்சலுறை, காகிதப்பைகள் தயாரிக்கும் பிரிவு, ஊத்துக் கோட்டை. | 1,44,320 |
| 4 காலணி தயாரிப்புப் பிரிவு, மேப்பேடு .. .. | 1,44,000 |
| 5 பொது வசதிகள் நிலையம், சுங்குவார்ச் சத்திரம் .. | 67,150 |
| 6 பொது வசதிகள் நிலையம், ஈக்காடு .. .. .. | 59,700 |
| **சேலம் மாவட்டத்தில் ஓமலூர் திட்டம்.** | |
| 1 பளபளப்பான தரை ஓடுகள் தயாரிப்புப் பிரிவு, ஓமலூர் .. | 2,00 000 |
| 2 மரவேலைப் பிரிவு, ஓமலூர் .. .. .. .. .. | 1,16,000 |
| 3 பாலிதீன் குழாய் தயாரிக்கும் பிரிவு, ஓமலூர் .. .. | 2,87 000 |
| 4 பொது வசதிகள் நிலையம், ஜலகண்டபுரம் .. | 40,000 |
| 5 பொது வசதிகள் நிலையம், தாரமங்கலம் .. .. | 40,000 |
| 6 பொது வசதிகள் நிலையம், மேச்சேரி .. .. .. | 40,000 |
| 7 பொது வசதிகள் நிலையம், திவட்டிப்பட்டி .. .. | 40,000 |
| **திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி திட்டம்.** | |
| 1 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, வள்ளியூர் .. | 3,15,700 |
| 2 கரும்பலகைச் சாக்குகள் தயாரிக்கும் பிரிவு, வடக்கு விஜய நாராயணம். | 39,100 |
| 3 பொது வசதிகள் நிலையம், தளபதிசமுத்திரம் .. .. | 30,800 |
| 4 டிட்டோ மீனவன்குளம் .. .. | 30,800 |
| 5 டிட்டோ மூலைக்கரைப்பட்டி .. .. | 30,800 |
| 6 டிட்டோ ஈத்தமொழி .. .. .. | 37,200 |
| 7 டிட்டோ பருத்திப்பாடு .. .. .. | 37,200 |
| 8 டிட்டோ களக்காடு .. .. .. | 37,200 |
| 9 டிட்டோ கோயிலம்மாள்புரம் .. .. | 37,200 |
| 10 டிட்டோ தேவநல்லூர் .. .. .. | 37,200 |
| 11 டிட்டோ கண்ணநல்லூர் .. .. | 37,200 |
| 12 டிட்டோ திசயன்விளை .. .. .. | 37,200 |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

Seventh Session of the Fourth Legislative Assembly under the Constitution of India.

*16th to 18th and 20th March 1970.*

(Volume XXVIII Nos. 1 to 4.)

PAGES

A.


ABDUL GHAFFOOR SAHIB, THIRU M.:

Authur—Kayalpattinam Road ... ... ... 143

Budget, 1970–71, Voting:

General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... 271–272

Non-appointment of Executive Officer at Ammur (C.A.) ... ... ... ... ... ... 262

ACCIDENT(S):

Fire, Ennore Thermal Power Station ... ... 19

Fire, Nazarath Co-operative Spinning Mills ... 250

ADMINISTRATION:

Agriculture department, reorganisation ... ... 407–408

Office of Deputy Inspector of Schools, Cuddalore, shifting ... ... ... ... ... ... 3–4

AGRICULTURE:

Agricultural Development Corporation for Thanjavur ... ... ... ... ... ... ... 259–260

AGRO-INDUSTRIES CORPORATION:

Supply of oil engines and pumpsets to agriculturists. 260–261

PAGES

A—*cont.*

**ALADI ARUNA, THIRU :**
Budget, 1970–71, Voting :
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 470–472

ALAGARSAMY, THIRU S.—
Budget, 1970–71, Voting :
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 437, 438

ANDI ALIAS GURUSAMI, THIRU K. :
Budget, 1970–71, Voting :
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 59–60

ARANGANNAL, THIRU RAMA :
Budget, 1970–71, Voting :
State Legislature ... ... ... ... ... 189–192

ARUMUGAM, THIRU S. :
Budget, 1970–71, Voting :
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 54–57

ASAITHAMBI, THIRU A. V. P. :
Budget, 1970–71, Voting :
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 331
Estimates Committee, report on Stationery and Printing, presentation ... ... ... ... 25
Report on Women's Welfare Department, presentation ... ... ... ... ... ... ... ... 436

B.

BALARAMAN, THIRU L. :
Budget, 1970–71, Voting :
Industries, Capital Outlay on Industrial development ... ... ... ... ... ... 437



PAGES

B.—*cont.*

BALARAMAN, THIRU L.—*cont.*
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading 287
Registration Department, Stationery and Printing. 157, 170–172

BALASUBRAMANIAM, THIRU A. :
Budget, 1970–71, Voting :
Registration Department, Stationery and Printing ... ... ... ... ... 155, 167–170

BEGGAR HOMES : 19–20

BHARATHI MOHAN, THIRU G. :
Budget, 1970–71, Voting :
State Legislature ... ... ... ... ... 193–195

BHUPATHY, THIRU M. :
Budget, 1970–71, Voting :
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... 274–275
Industries, Capital Outlay on Industrial development ... ... ... ... ... ... 438
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 286, 311–313

BHUVARAHAN, THIRU G. :
Arrest of Members and agriculturists in Coimbatore district (A.M.) ... ... ... ... ... 425–427
Budget, 1970–71, Voting :
Industries, Capital Outlay on Industrial development ... ... ... ... ... ... 459–464

B—*cont.*

BOJAN, THIRU K.:
Budget, 1970–71, Voting:
General Sales Tax and Other Taxes and Duties—
Administration ... ... ... ... ... 272–274
Meaning for Kural couplets in buses ... ... 253–254

BORDER AREAS:
Appointment of Commission by Andhra Government for annexing Tamil Nadu areas (C.A.) ... 261–262

BUSES:
Meaning for Kural couplets ... ... ... ... 253–254
Tamil Nadu tourist bus, damages caused in Mysore State (C.A.) ... ... ... ... ... 154

C.

CALLING ATTENTION:
Appointment of Commission by Andhra Government for annexing certain areas of Tamil Nadu ... 261–262
Attack on Madurai farmers at Malleswaram ... 153–154
Damages caused to Tamil Nadu Tourist Bus in Mysore State ... ... ... ... ... 154
Rationalisation of bus routes, inconvenience ... 433–436
Situation due to non-appointment of Executive Officer at Ammur ... ... ... ... ... 262–264

CHAIR:
Announcement:
Arrest of Members in Coimbatore district ... 423–424
Rulings and Observations:
*Adjournment Motions*:
Arrest of Legislators and agriculturists in Coimbatore:
Consent was withheld in the light of previous rulings to the effect that arrests made in the normal course of maintenance of law and order could not form the subject matter of an adjournment motion and on the ground that the matter came under the day-to-day administration of the Government ... ... 424–433



C.—*cont.*

CHAIR—*cont.*
*Adjournment Motions*—cont.
Member's right to speak:
On 20th March 1970, after two Members had spoken on the adjournment motion given notice of by them another Member stated that he too had given notice of a motion on the same subject. When the Speaker said that the notice said to have been given had not been brought to his notice, another Member stated that inasmuch as notice of the motion had not been received by the Speaker the Member should not be allowed to speak. However, after ascertaining the position the Speaker observed that though the notice of his motion had been received in time, due to some mistake in the office, for which he felt sorry, the same was not brought to his notice. As he did not want the member to suffer vicariously, he allowed the Member to speak on his motion ... ... ... ... ... 427–429
*Announcement*:
Arrest of Members:
On 20th March 1970, after the Chair made an announcement of the arrest of some Members, a Member sought further information in the matter. The Chair observed that he had not made any 'statement'; he had just made an announcement of an information given to him. Neither could he be expected to furnish further information nor was there any provision in the rules to seek further information from the Chair in such instances ... ... ... 423–424
*Bills*:
Introduction:
There could be no discussion at the stage of introduction of a Bill ... ... ... ... 197
*Catching the eye of the Chair*:
With reference to a complaint by a Member that they were not able to catch the eye of the Chair, the Speaker observed that the number of questions put by a Member belonging to his party would itself disprove the complaint ... ... 181

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

***Debate*:**

*Allegation made by the Leader of the Opposition against the Minister for Co-operation*:

On 17th March 1970, the Leader of the Opposition made a reference under Rule 81 to certain allegations made by him against the Minister for Co-operation that a case was pending in the High Court about non-payment of Income-tax by the Minister. The Chair observed that the Leader of the Opposition had only made a personal explanation and it could not be considered as a statement in support of the allegation made by him. The Chair added that in spite of the several opportunities given to him, the Leader of the Opposition was not able to substantiate his allegation with authenticated documents. While in the first instance he stated that a case was pending in the High Court against the Minister for Co-operation, later he stated that the case was against the Minister's son. From the sheet of paper produced by him, it was found that the case was alleged to be with reference to a Trust. The Leader of the Opposition had failed to prove his allegation with authenticated documents that the Minister was connected with the Trust. Members including the Leader of the Opposition should realise that the freedom of expression was not unlimited freedom and it was subject to certain rules. Laying baseless accusations against others was breach of privilege.

There were instances in the Mother of Parliaments in which those who were found to make baseless charges were punished, were jailed and were also suspended.

Recalling the action taken against a Member of the Assam Legislative Assembly, the Chair observed that though the punishment to be meted out for making baseless allegations had to be deterrent or severe, in keeping with the guide-lines enjoined by the poet Tiruvalluvar, namely,



CHAIR.—*cont.*

Rulings and Observations—*cont.*

*Debate*—cont.

*Allegation made by the Leader of the Opposition against the Minister for Co-operation—cont.*

" Upraise the rod of punishment high,
But let it gently fall "
he warned the Leader of the Opposition against making such baseless allegations and dropped the matter ... ... ... ... 149-152

*Relevancy*:

Members' should confine their remarks to the subject under discussion ... ... ... 323

When a Member referred to the Report of the Backward Classes Commission appointed by the Central Government, the Speaker observed that his remarks should be confined to the State Budget which was under discussion ... ... 75

*Demands for Grants*:

*Cut Motions* :

There was no conditional withdrawal of a cut motion ... ... ... ... ... ... 496

When a Member wanted to move a cut motion after certain Demands and cut motions thereto had been moved and the Hon. Minister also had made his introductory remarks and the Chair had also announced that the Demands and cut motions were before the House for its consideration, the Chair observed that the cut motion cou.d not be moved at that stage. ... ... ... 288

*Expressions used in the House*:

" ......when it becomes inconvenient to the ruling party, the rules are applied and when it does not become inconvenient to them the rules are not applied." Remarks addressed to the Chair—Deprecated and were ordered to be withdrawn 428

*[டார்வாரித்தனம்]* 'Usurious money-lending' in the sentence—" Will it not amount to usurious money-lending if they (Central Government) granted to us as loan the amount that hey collected from us as tax and demand its repayment with interest "—Deprecated ... ... 259

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Point of clarification:*

After the Chair had announced that the discussion on a Demand for Grant was over, no point of clarification could be raised ... ... ... 97

*Questions and Answers:*

*Supplementary Questions:*

A Minister could not be expected to answer supplementary questions about incidents which took place years ago ... ... ... 255

*Chair's direction not to record:*

On 20th March 1970, the Speaker directed that a Member's supplementary question need not be recorded ... ... ... ... ... ... 415

*Relevancy:*

A Supplementary which did not relate to a main question was disallowed ... ... ... ... 259

Even if a Minister was prepared to answer a supplementary question which did not relate to the main question, the Chair was not bound to allow it. If the Chair disallowed a supplementary question, it meant that it was not in order. 413

Should not relate to policy matters ... ... ... 252

Supplementary questions should relate to the main question ... ... ... ... ... 409, 410, 413

CHEEMAICHAMY, THIRU K.:

Agriculture Department, reorganisation ... ... 407–408

Entertainment tax evasion, detection ... ... ... 137–139

Naxalites, Thanjavur District ... ... ... 408–410

CHIT FUNDS:

Tiruchirappalli district ... ... ... ... 421–422

CHITHAN, THIRU N. S. V.:

Arrest of farmers and agriculturists in Coimbatore district (A.M.) ... ... ... ... ... 425

Budget, 1970-71, Voting:



C.—*cont.*

PAGES

CHITHAN, THIRU N. S. V.—cont.

General Sales Tax and other Taxes and Duties Administration ... ... ... ... ... 265–268, 284

By-pass road to Austinpatti ... ... ... ... ...

Dye-heads ... ... ... ... ... ... ... 135

Fire, Nazarath Co-operative Spinning Mills ... 250

H.R.A. to married female nurses ... ... ... 242–243

Inquiry Commissions ... ... ... ... ... 410–411

Obscene posters, removal ... ... ... ... 126–128

Rationalisation of bus routes, inconvenience (C.A.) 433–436

Revenue Staff in Coimbatore, Demands Day observance ... ... ... ... ... ... ... 20–22

Small-pox research work, W.H.O.'s aid ... ... 240–242

Tuberculosis hospital, Austinpatti ... ... 7–8

COLLEGES:

Avinashilingam Home Science College, allotment of land ... ... ... ... ... ... ... 22–24

COMMISSIONS AND CONFERENCES:

Inquiry Commission ... ... ... ... ... 410–411

Secondary Grade Teachers Conference decisions ... 244

COMMITTEES:

Estimates:

Report on Stationery and Printing, presentation ... 25

Report on Women's Welfare Department presentation ... ... ... ... ... ... 436

CO-OPERATION:

Central Co-operative Printing Works Ltd., irregularities ... ... ... ... ... ... ... 146–148

Madurai Sourashtra Co-operative Bank, appointments ... ... ... ... ... ... 254–255

Multi-purpose Co-operative Socity, Pachapanapatti, misappropriation ... ... ... ... ... 420–421

Primary Land Development Banks, share capital ... 418

CORPORATION:

Ways and Means advance to ... ... ... ... 144–146

COURT(S):

Sub-Magistrate Court for Nannilam ... ... 140–141

Tenkasi Sub-Magistrate Court, shifting ... ... 140

PAGES

D

DANUSHKODI, THIRU P. S. :
Budget, 1970-71, Voting :
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 39-42
DISEASES :
Small-pox research work, W.H.O.'s aid ... ... 240-242
DRINKING WATER :
Siruvani Scheme ... ... ... ... ... 14
DURAISAMI, THIRU S. :
Budget, 1970-71, Voting :
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 464-466
Drinking Water, Siruvani Scheme ... ... ... 14
Loans repayable to Centre ... ... ... ... 258-259

E

EDUCATION :
Nationalised Text-books ... ... ... ... 1-3
EMPLOYEES :
Revenue Staff in Coimbatore, 'Demands Day' observance ... ... ... ... ... ... 20-22
EXPORT :
Prawns ... ... ... ... ... ... 401-402

F

FACTORIES :
Cigarette factory, starting in Hosur Taluk ... 251
FINANCIAL BUSINESS :
Budget, 1970-71, Voting :
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... ... 264-284 283
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 436-497
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading 285-332



PAGES

F—*cont.*

FINANCIAL BUSINESS—*cont.*
Budget, 1970-71, Voting—*cont.*
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 285-332
Registration Department ... ... ... ...
Stationery and Printing ... ... ... ... 155-178
State Legislature ... ... ... ... ... 178-217
Welfare of Schedule Tribes, Castes and other Backward Classes ... ... ... ... ... 26-98
FISH.
Prawn, export ... ... ... ... ... 401-402

G

GANESAN, THIRU S.—
Bus service to Pumpuhar ... ... ... ... 14-15
GEORGE, THIRU V.—
Budget, 1970-71, Voting :
Industries, Capital Outlay on Industrial development ... ... ... ... ... ... 438-441
GHERO—
Fisheries Department workers, Mandapam ... ... 390-401
GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.—
Artificial Limb Centres ... ... ... ... 8-9
Cement Plant in Indonesia, technical assistance ... 10-11
Ceramic Factory, Vridhachalam, production of sanitarywares ... ... ... ... ... 139-104
Chit funds, Tiruchirappalli district ... ... ... 421-422
College Teachers, arrest ... ... ... ... 244-245
Iron and Steel Advisory Council, constitution ... 249-250
Labour Advisory Board, recommendations ... 257-258
Municipal Services, provincialisation ... ... 416
Nationalised Text-books ... ... ... ... 1-3
Polyester Fibre Factory ... ... ... ... 9
Rationalisation of bus routes, inconvenience (C.A.)... 433-436
Rice Bran Oil Mill, Thanjavur District ... 419-420
Steel shortage ... ... ... ... ... ... 247-249
Udayarpalayam Police firing ... ... ... ... 125-126

PAGES

G—*cont.*

GOPAL, THIRU M.—
Budget, 1970-71, Voting:
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading 306–308

GOVINDARAJAN, THIRU C.—
Budget, 1970-71, Voting:..
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... ... 265
Industries, Capital Outlay on Industrial development ... ... ... ... ... 437
Office of Deputy Inspector of Schools, Cuddalore, shifting ... ... ... ... ... ... 3–4

H

HANDE, DR. H. V.—
Arrest of Members and agriculturists in Coimbatore district (A.M.) ... ... ... ... 429
Attack on Madurai farmers at Malleswaram (C.A.) 153
Beggar Homes ... ... ... ... ... ... 19–20
Budget, 1970–71, Voting:
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... ... 264
Industries, Capital Outlay on Industrial development ... ... ... ... 437, 438, 466–469
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... 285–287, 294–297
Registration Department ... ... ... 156
Stationery and Printing ... ... ...
State Legislature ... ... ... ... 178
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... 27
Central Co-operative Printing Works Limited, irregularities ... ... ... 146–148
Fire accident, Ennore Thermal Power Station 19



PAGES

H—*cont.*

HANDE, DR. H. V.—*cont.*
Ghero by Fisheries department Workers, Mandapam ... ... ... ... ... ... ... 399–401
Madurai Sourashtra Co-operative Bank, appointments ... ... ... ... ... ... 254–255
Rationalisation of Bus routes, inconvenience (C.A.) ... ... ... ... ... ... 433–436
Students, confidential records ... ... ... 4–7

HARIJAN WELFARE –
Scholarships ... ... ... ... ... ... 406–407

HOSPITALS AND DISPENSARIES:
Ariamangalam, starting ... ... ... ... 239
Artificial Limb centres ... ... ... ... 8–9
Jayankondancholapuram, upgrading ... ... 239–240
Siddha Medical Wings ... ... ... ... 128–129
Tuberculosis Hospital, Austinpatti ... ... 7–8

HOSTELS:
Women students at Nannilam ... ... ... 137

I

INDUSTRIES:
Cement Plant in Indonesia, technical assistance 10–11
Coir Industrial Centres ... ... ... ... 11–13
Dye-heads of Japanese make ... ... ... 139
Polyster Fibre Factory ... ... ... ... 9
Vridhachalam Ceramic Factory, production of sanitary wares ... ... ... ... ... ... 139–140

INQUIRY COMMISSIONS:
Constitution ... ... ... ... ... 410–412

INSTITUTIONS:
Siddha System ... ... ... ... ... 129

IRON AND STEEL:
Advisory Council, constitution ... ... ... 249–250

IRRIGATION:
Hosur taluk ... ... ... ... ... 143–144

PAGES.

J

JAMES, THIRU J.:
Budget, 1970-71, Voting:
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 288-291
JAYARAJ, THIRU P.:
Hostel for Women students at Nannilam ... ... 137
Sub-Magistrate Court for Nannilam ... ... 140-141
JAYARAMAN, THIRU K.:
Budget, 1970-71, Voting: ...
Industries, Capital Outlay on Industrial development ... ... ... ... ... ... 447-449
JAYARAMAN, THIRU P.:
Budget, 1970-71, voting:
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 48-51

K

KANAKASABAI, THIRU R.:
Budget 1970-71, Voting:
General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ... ... 264
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 437
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 286-287
Registration Department, ... ... ... 156
Stationery and Printing, ... ... ... ... 179
State Legislature ... ... ... ... ... 195-198
KANDASWAMY, THIRU M.:
Budget, 1970-71, Voting:
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 453-455
KARIAMANICKAM AMBALAM, THIRU KR. RM.:
Budget, 1970-71, Voting:
State Legislature ... ... ... ... ... 184-186
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 35-37



PAGES.

K—*cont.*

KARUNANIDHI, THIRU M.:
Appointment of Commission by Andhra Government for annexing certain Tamil Nadu areas (C.A. St.) ... ... ... ... ... ... 261-262
Arrest of Members and agriculturists in Coimbatore district (A.M.) ... ... ... ... 426, 430-432
Attack on Madurai farmers at Malleswaram (C.A. St.) ... ... ... ... ... ... 153-154
Budget, 1970-71, Voting:
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 309, 311, 317, 318, 319, 320, 321, 322, 323
Damages caused to Tamil Nadu Tourist Bus in Mysore State (C.A. St.) ... ... ... ... 154
Hunger strike by Livestock Assistants (St.) ... 99
KARUPPIAH, THIRU R.—
Budget, 1970-71, Voting:
Indusries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 455-457
KARUTHIRUMAN, THIRU P. G.—
Arrest of Members and agriculturists in Coimbatore district (A.M.) ... ... ... ... 424, 425, 426, 427, 429
Budget, 1970-71, voting:
General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ... 265
Industries, Capital Outlay on Industrial, Development ... ... ... ... ... 485-489
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 292, 315, 325, 327, 328, 329

PAGES

K—*cont.*

KARUNANIDHI, THIRU M.—*cont.*
State Legislature ... ... ... ... ... 201–207
Personal explanation *re* allegation against Co-operation Minister (St.) ... ... ... ... 149

KASIRAMAN, THIRU N.—
Nationalised bus routes ... ... ... ... 251–254

KITTAIPA, THIRU N.—
Budget, 1970–71, Voting:
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 31–35
Prawns, export ... ... ... ... ... 401–402
Rice, supply from Centre ... ... ... ... 412–413
Teachers' training, Selection Committee Members. 133–135
Wheat, supply from Centre ... ... ... 414–415

KOLATHUR KOTHANDAM, THIRU—
Budget, 1970–71, voting:
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 300–302
State Legislature ... ... ... ... ... 183–184
Jeeps to Circle Inspectors ... ... ... ... 245–247
State Transport, tyre shortage ... ... ... 141–143
Wheat, supply from Centre ... ... ... ... 414–415

KOTHANDARAMAN, THIRU V. K.—
Budget, 1970–71, Voting:
Stationery and Printing ... ... ... ... 157
Multi-purpose Co-operative Society, Pachapanapatti, misappropriation ... ... ... ... 420–421
Sugarcane price ... ... ... ... ... 403–405
Tyres of State buses, retreading ... ... ... 141

KOTHANDARAMIAH, THIRU K. S.—
Budget, 1970–71, Voting:
Milk Supply Schemes ... ... ... ... } 287
Animal Husbandry ... ... ... ... ... }
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... }
Malur-Hosur railway line ... ... ... 15–16



K—*cont.*

PAGES

KRISHNASAMY GOUNDER, THIRU R.—
Arrest (Ann.) ... ... ... ... ... ... 423–424

KUMARASAMI, THIRU K. N.—
Arrest (Ann) ... ... ... ... ... 423–424

L

LABOUR—
Labour Advisory Board, recommendations ... 257–258

LANDS—
Avinasilingam Home Science College, allotment ... 22–24
Poramboke lands for mulberry, plantation, Hosur taluk ... ... ... ... ... ... 13–14

LIVESTOCK ASSISTANTS—
Hunger strike (St.) ... ... ... ... ... 99

LOANS—
Repayable to Centre ... ... ... ... ... 258–259

M

MADHAVAN, THIRU S.—
Budget, 1970–71, Voting:
Industries, Capital Outlay on Industral Development ... ... ... ... ... ... 436, 438, 482–493, 496

MAHADEVAN, THIRU B.—
Budget, 1970–71, Voting:
State Legislature ... ... ... ... ... 180–183

MALAICHAMY, THIRU P.:
Damages caused to Tamil Nadu Tourist Bus in Mysore State (C.A.) ... ... ... ... 154
Siddha Medicos, utilisation ... ... ... ... 130–132

MANI, THIRU M. S.—
Budget, 1970–71, voting:
General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ... 268–271

PAGES

M—*cont.*

MANI, THIRU K. B. S.—
Budget, 1970–71, voting:
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 286, 313–315
State Legislature ... ... ... ... ... 179, 198–201

MANICKAVASAGAM, THIRU R.—
Avinasilingam Home Science College, allotment of land ... ... ... ... ... ... 22–24

MARTIN, THIRU T.—
Brothel cases ... ... ... ... ... ... 255–257
Salary to teachers, Udangudi panchayat union ... 417
Sub-Magistrate Court in Tenkasi, shifting ... 140

MARUDACHALAM, THIRU N.:
Budget, 1970–71, Voting:
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 472–474
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 299–300
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 27
Municipal Services, provincialisation ... ... 416

MATHIALAGAN, THIRU K. A.—
Concessions on tax proposals (St.) ... ... 284–285
Special Welfare Fund, constitution out of income from Raffle Scheme (St.) ... ... ... ... 24

MILLS—
Rice Bran Oil Mill, Thanjavur district ... ... 419–420

MOTIONS:
Ad. Motions:
Arrest of Members and Agriculturists in Coimbatore district ... ... ... ... ... 424–433



PAGES

M—*cont.*

MUTHIAH, THIRU M.—
Budget, 1970–71, Voting:
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 57–59

MUTHULINGAM, THIRU S.—
Budget, 1970–71, Voting:
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 37–39

MUTHUSAMY, THIRU M.—
Non-appointment of Executive Officer at Ammur (C.A.) ... ... ... ... ... ... 262–264
President, Wallajah Panchayat Union, action on alleged misappropriation (St.) ... ... ... 25

N

NAGASUNDARAM, THIRU R.—
Budget, 1970–71, Voting:
Registration Department, Stationery and Printing 162–164

NALLASIVAM, THIRU K. R.—
Arrest (Ann.) ... ... ... ... ... ... 423–424

NARASIMHAN, THIRU A. C.—
Budget, 1970–71, Voting:
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 457–458

NATARAJAN, THIRU N. V.—
Budget, 1970–71, Voting:
Registration Department ... ... ... ... 156–169
Stationery and Printing ... ... ... ... 172–177
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... ... 79–83

NAXALITES—
*See* 'Police'.

NEDUNCHEEZHIYAN, THIRU V. R.—
Budget, 1970–71, Voting:
State Legislature ... ... ... ... ... 178, 181, 195, 204, 207–216

PAGES

O

OBITUARY REFERENCE—

Veerappa Gounder, Thiru P. ... ... ... 399

P

PALANIAMMAL, THIRUMATHI V. P.—

Budget, 1970–71, Voting:
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Scheme of Government Trading ... ... ... ... ... ... 297–299

PANCHAYATS—

Aranthangi Town Panchayat, upgrading ... ... 18–19
President, Wallajah Panchayat Union, action on alleged misappropriation (St.) ... ... ... 25
Town Panchayats, non-appointment of Executive Officers (C.A.) ... ... ... ... ... 262–264

PAPERS LAID ON THE TABLE—

Animal Husbandry Demand, Policy Note ... ... 497
Capital Outlay on Schemes of Government Trading, policy note ... ... ... ... ... ... 333
Dairy Development Department, policy note ... 497
Estimates Committee Report, Stationery and Printing ... ... ... ... ... ... 100
Women's Welfare Department ... ... ... 497
General Sales Tax and other taxes and duties Administration Demand, Speech ... ... 497
Land Improvement Schemes Act, 1959, notification. 332
Payment of Salaries Act, 1951, notification ... 217
Registration Department, review ... ... ... 333
Stationery and Printing department, review ... 333
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes Policy note ... ... ... 100

PATTABI NAIDU, THIRU E.—

Budget, 1970-71, Voting:
Registration Department
Stationery and Printing ... ... ... ... 166–167



PAGES

P—*cont.*

POLICE—

Brothel cases ... ... ... ... ... 255–257
Firing at Udayarpalayam ... ... ... ... 125–126
Jeeps to Circle Inspectors ... ... ... ... 245–247
Naxalites, Thanjavur district ... ... ... ... 408–410
Obscene posters, removal ... ... ... ... 126–128
Special Police—Special Armed Police, merger ... 412

PONNAMBALAM PULAVAR, P.—

Cocoanut trees, Tirumayam ... ... ... 415
Nationalised bus routes, Pudukkottai area ... 252–253
Office of Deputy Inspector of Schools, Cuddalore, shifting ... ... ... ... ... ... 3–4
Siddha Medicos, registration ... ... ... 129
Siddha System, institutions ... ... ... 129

POSTERS—

Obscene posters, removal ... ... ... ... 126–128

PORTS—

Southern back water at Cuddalore, construction ... 419

R

RAFFLES—

Special Welfare Fund, constitution out of income from (St.) ... ... ... ... ... ... 21

RAILWAYS—

Malur-Hosur railway line ... ... ... ... 15–16

RAJA, THIRU A. M.—

Cost of living Index. Madras City ... ... 422–423
Secondary Grade Teachers' conference, decisions 244

RAMA ARANGANNAL, THIRU—

Budget, 1970–71, Voting:
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... ... 291–294

RAMALINGAM, THIRU S.—

Budget, 1970-71, Voting:
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 44–48

PAGES

R—*cont.*

RAMAMOORTHI, THIRU K.—
Budget, 1970-71, Voting:
Industries, Capital, Outlay on Industrial Development ... ... ... ... ... ... 478-482
Registration Department,
Registration Department ... ... ... ... 156
Stationery and Printing ... ... ... ... 157-159
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 27-31
Inquiry Commissions ... ... ... ... 410-411

RAMAN, THIRU M.—
Budget, 1970-71, Voting:
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 61-62

RAMASAMY GOUNDER, THIRU K. M.—
Budget, 1970-71, Voting:
Industries, Capital, Outlay on Industrial Development ... ... ... ... ... ... 446-447
Registration Department ... ... ...
Stationery and Printing ... ... ... ... 161-162

RICE—
Supply from centre ... ... ... ... ... 412-413

ROAD(S)—
Authur-Kayalpattinam Road ... ... ... 143
Bypass road to Austinpatti ... ... ... ... 16
Tiruthani-Podaturpet road ... ... ... 16-18

S

SADIQ PASHA, THIRU S. J.—
Nationalisation of bus routes, inconvenience (C.A. St.) ... ... ... ... ... ... ... 433-436

SAHADEVA KANDAR, THIRU K.—
Special Police—Special Armed Police, merger ... 412
Southern back water at Cuddalore Port, construction ... ... ... ... ... ... ... 419

SANKARIAH, THIRU N.—
Budget, 1970-71, Voting:
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 449-453



PAGES

S—*cont.*

SANTHANAM, THIRU P. S.—
Budget, 1970-71, Voting:
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 42-44

SARATHY, THIRU M. P.—
Siddha Medical wing in hospitals ... ... 128-129

SATYAVANIMUTHU, DR. (THIRUMATHI):
Budget, 1970-71, Voting:
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 26, 83-97

SCHOOL(S)—
Agricultural School, Mettur, strength ... ... 135-137

SERVICES—
H.R.A. to married female nurses ... ... ... 242-243
Municipal Services, provincialisation ... ... 416
Siddha medicos, registration ... ... ... 129
Siddha medicos, utilization ... ... ... ... 129-132
Social Workers, pay disbursement ... ... ... 405-406

SENAPATHI, THIRU A.—
Arrest (Ann.) ... ... ... ... ... 423-424

SHANMUGAM, THIRU P. U.—
Budget, 1970-71, Voting:
General Sales Tax and other taxes and duties—
Administration ... ... ... ... ... ... 264, 265, 277, 278, 280-283, 284,
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading 285, 286, 287, 288, 310, 312, 317, 325-331
Correction to answer to a supplementary (St.) ... 155

S—*cont.*

SIVAGNANAM, THIRU M. P.—
Budget, 1970-71, Voting :
General Sales Tax and other Taxes and Duties—
Administration ... ... ... ... ... 275–270
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... ...
Capital outlay on Schemes of Government Trading. 304–306

SIVASUBRAMANIAN, THIRU S.—
Budget, 1970-71, Voting :
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 51–54
Social Workers, pay disbursement ... ... 405–406

SPECIAL WELFARE FUND—
Constitution out of income from Raffle Scheme (St.) 24

STATISTICS—
Cost of living index, Madras City ... ... ... 422–423

STEEL—
Shortage ... ... ... ... ... ... ... 248–249

STUDENTS—
Confidential records ... ... ... ... ... 4–7

SUBBARAJA, THIRU A. A.—
Appointment of Commission by Andhra Government for annexing Tamil Nadu areas (C.A.) ... ... 261–262
Budget, 1970-71, Voting :
General Sales Tax and other Taxes and Duties—
Administration ... ... ... ... ... 264
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 437, 476–478
Milk Supply Schemes ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading 286, 287, 302–304
Registration Department, Stationery and Printing ... ... ... ... ... ... ... 156–157
State Legislature ... ... ... ... ... 179





S—*cont.*

SUBBIAH, THIRU A. K.—
Agricultural Development Corporation for Thanjavur ... ... ... ... ... ... ... 259–260
Budget, 1970-71, Voting :
Registration Department, Stationery and Printing. 164–166
State Legislature ... ... ... ... ... 179, 186–188
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... ... 62–67

SUBRAMANIAM, THIRU A. L.—
Budget, 1970-71, Voting :
Registration Department ... ... ...
Stationery and Printing ... ... ... 159–161

SUGARCANE—
Price ... ... ... ... ... ... ... 403–405

SURENDRAN, THIRU M.—
Budget, 1970-71, Voting :
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... ... 437
Milk Supply Schemes ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... ...
Capital outlay on Schemes of Government Trading 308–311
State Legislature ... ... ... ... ... 179
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 26, 67–70
Mettur Agricultural School, strength ... ... 135–137

SWAMINATHAN, THIRU V.—
Aranthangi Town Panchayat, upgrading ... ... 18–19
Hospital for Ariamangalam ... ... ... ... 239
Scholarships ... ... ... ... ... ... 406–407

## T

TAXES—
Concessions (St.). ... ... ... ... ... 284–285
Entertainment tax, evasion, detection ... ... 137–139

TEACHERS—
College Teachers, arrest ... ... ... ... 244–245
Training Course, Selection Committee Members ... 133–135
Udangudi Panchayat Union, salary ... ... ... 417

PAGES

T—*cont.*

THIPPAYYA, THIRU T. T. S.—
Arrest (Ann) ... ... ... ... ... ... 423–424

TOURISM—
Attack on Madurai farmers at Malleswaram (C.A.) 153–154

TRANSPORT—
Bus service to Pumpuhar ... ... ... ... ... 14–15
Nationalised bus routes ... ... ... ... ... 251–252
Nationalised bus routes, Pudukkottai area ... ... 252–253
Rationalisation of bus routes, inconvenience (C.A.) 433–436
State Transport, Tyre shortage ... ... ... 141–143
Tyres of State buses, retreading ... ... ... 141

TREES—
Cocoanut, Tirumayam constituency ... ... 415

V

VARADARAJAN, THIRU N.—
Budget, 1970-71, Voting:
State Legislature ... ... ... ... ... ... 179
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 26

VEERAMANI, THIRU C.—
Budget, 1970-71, Voting:
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... 474–476

VEERASAMY, THIRU N.—
Budget, 1970-71, Voting:
Industries, Capital Outlay on Industrial Development ... ... ... ... ... 441–446

VELUSAMY, THIRU P.—
Arrest (Ann) ... ... ... ... ... 423–424

VENKATASWAMY, THIRU B.—
Cigarette factory, starting in Hosur taluk ... 251
Irrigation Projects, Hosur taluk ... ... ... 143–144
Lands for Mulberry plantation, Hosur taluk ... 13–14



PAGES

V—*cont.*

VINAYAKAM, THIRU K.—
Artificial Limb Centres ... ... ... ... 8–9
Budget, 1970-71, Voting:
General Sales Tax and Other Taxes and Duties—
Administration ... ... ... ... ... 276–280, 283–284
Industries, capital outlay on industrial development 438, 495, 496
Milk Supply Schemes ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ... ...
Capital Outlay on Schemes of Government Trading 286, 321, 322, 330, 331
State Legislature ... ... ... ... ... 178, 188–189, 192, 216
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... ... 26, 70–79
Coir Industrial Centres ... ... ... ... 11–13
Jayankondancholapuram Hospital, upgrading ... 239–240
Madras Corporation, Ways and Means advance ... 144–146
Municipal services, provincialisation ... ... 416
Primary Land Development Banks, share capital ... 418
Supply of oil engines and pumpsets to agriculturists 260–261
Tiruthani-Podaturpet road ... ... ... 16–18

W

WATER-SUPPLY—
Drinking water, Siruvani ... ... ... ... 14

WHEAT—
Supply from Centre ... ... 414–415

D
V211,31 N70
31N71.2852
61482

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

பு. எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 14/1/2[illegible] | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.